வழங்கும் பணிகளையும் அவரே பெரும்பாலான இடங்களில் செய்து கொண்டிருக்கிறார். அவரோடு நாங்கள் தினமும் பேசிக் கொண்டிருக்கிறோம். எனவே, விரைந்து முடிப்பதற்குரிய நடவடிக்கையை நிச்சயமாக எடுப்போம். Road போடுவது மாதிரி, கட்டடம் கட்டுவது மாதிரி, வெள்ளை அடிப்பது மாதிரி, இப்பணிகள் இல்லை. தரையைத் தோண்டி கொண்டு சென்று மேடு, பள்ளங்கள் பார்க்க வேண்டியிருப்பதால், கொஞ்சம் தாமதமாகிறது. எனவே, விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 113, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

113—

வணிக வளாகம்

***44980—முனைவர் T.R.B. ராஜா:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி நகரத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வணிக வளாகம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மன்னார்குடியில் வணிக வளாகம் கட்டுவதற்கென்று வீட்டு வசதி வாரியத்திலே தனியாக இடமில்லை. எனவே, அந்தத் திட்டத்தை தற்போது நிறைவேற்றுவதென்பது சிரமம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா அவர்கள்.*

முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட நாயகன், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில்தான் மன்னார்குடி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான புதிய பேருந்து நிலையத்தை அங்கே*

கட்டுவதற்கான பணி மின்னல் வேகத்தில் நடந்து கொண்டு வருகிறது. அடுத்து, நகராட்சிக்குச் சொந்தமான வேறொரு இடம், பேருந்து நிலையத்திற்கு அருகாமையிலேயே உள்ளது. அங்கே, புதிய வணிக வளாகம் கட்டப்பட்டால், நிச்சயமாக நகராட்சிக்கும், நகர்ப்புர வளர்ச்சித் துறைக்கும் நல்ல வருமானம் கிட்டும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே ஒரு புதிய வணிக வளாகத்தைக் கட்டித்தர முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே நகராட்சி நிருவாகம், வீட்டு வசதி வாரியத்தோடு இணைந்து அந்தப் பணியைச் செய்வதற்கு விருப்பப்பட்டால், நிச்சயமாக வீட்டு வசதி வாரியத்தினுடைய சார்பாக நாம் செய்து கொடுக்கலாம். அது நகராட்சியினுடைய முடிவைப் பொறுத்தது. கண்டிப்பாக வீட்டு வசதி வாரியம் செய்ய முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா அவர்கள்.

முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களும், நிச்சயமாக இதற்கு ஒத்துழைப்பார்கள் என்ற முழு நம்பிக்கை எங்களுக்கும் உண்டு. 35 வருடங்களுக்கு முன்னர், பெருமைவாய்ந்த எங்கள் மன்னார்குடி நகராட்சியின் மையப் பகுதியில் கட்டப்பட்ட 132 பழைய வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் மிகவும் மோசமாக, இடிந்து விழும் நிலையிலுள்ளன. எனவே, புதிய குடியிருப்புகள் அங்கே அமைவது மிகவும் அவசியமானது. துறை அங்கே ஆய்வு செய்துள்ளது. பழமைவாய்ந்த அந்தக் குடியிருப்புகளை அகற்ற வேண்டுமென்று அவர்களும் recommend செய்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். எனவே, விரைந்து நிதி ஒதுக்கி, குடிசையில்லா மன்னார்குடியை உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவிடுவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2023 ஏப்ரல் 6]

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு 5 ஏக்கர் பரப்பளவிலே, 132 வீடுகள், 70 ஆயிரம் sq.ft.–ல் இருக்கின்றன. அந்த 132 வீடுகளும் மிக மோசமான நிலையில் இருக்கின்ற காரணத்தினால், அவற்றை இடிப்பதற்கான உத்தரவுகள் கொடுக்கப்பட்டு, அந்தப் பணிகள் தொடங்கப்படவிருக்கின்றன. அவற்றை இடித்த பின்னால், அங்கே புதிய வளாகம், அது வீடாகவோ அல்லது வணிக வளாகமாகவோ கட்டுவதற்கான நடவடிக்கையை நாம் மேற்கொள்ளலாம். இப்பொழுது நான் சொன்னதைப்போல ஏறத்தாழ 70 ஆயிரம் சதுர அடிதான் இருக்கிறது. புதிதாகக் கட்டுகிறபொழுது, இன்றைக்கு இருக்கின்ற விதிமுறைப்படி 5 இலட்சம் சதுர அடியில்தான் நாம் வீடுகளை கட்ட முடியும். எனவே, வீட்டு வசதி வாரியத்திற்கும், அங்கிருக்கின்ற பொதுமக்களுக்கும் அது மிகப் பெரிய அளவிலே பயன்படும் என்று கருதுகிறேன். எனவே, அதைப் பெரிய திட்டமாக, சிறப்பாக நம்மால் கொண்டு வரமுடியும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.*

டாக்டர் வை. முத்துராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை நகர்ப் பகுதியில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட சத்தியமூர்த்தி* Housing unit *அடுக்குமாடி வீடுகள் கஜா புயலால் முழுமையாகச் சேதமடைந்து, மிகவும் மோசமாக உள்ளன. அதில் குடியிருந்த அரசு ஊழியர்கள் வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டனர். தற்பொழுது அந்தக் கட்டடங்கள் அனைத்தும் பராமரிப்பின்றி, இடிந்துவிழும் சூழ்நிலையில் உள்ளன. இந்தக் குடியிருப்புகளுக்கு மேற்குப்புறம் அரசு இராணியார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியும், தென்புறம் அரசு அலுவலகங்களும், கிழக்குப்புறம் புதிய பேருந்து நிலையமும் செயல்பட்டு வருகின்றன. ஆகவே, முற்றிலும் சேதமடைந்துள்ள இந்தப் பழைய குடியிருப்புக் கட்டடங்களை அகற்றிவிட்டு, வீட்டு வசதி வாரியத்தின்மூலம் புதிதாக கட்டடங்கள் அமைத்து, அரசு ஊழியர்கள் குடியிருக்கும் பகுதியாக மாற்றித் தரவும், அதேபோல பூங்கா நகர் பகுதியில் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான*

இடத்தில் குடியிருப்புகள் கட்டித்தரவும், மாண்புமிகு அமைச்சர் அவர்களை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 130 இடங்களிலே இது போன்று வாடகைக் குடியிருப்புகள் இருக்கின்றன. அதிலே 61 இடங்களில் மிக மோசமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கேயிருப்பவர்களை உடனடியாகக் காலி செய்ய வேண்டுமென்று சொல்லிவிட்டு, 61 இடங்களில் உள்ள கட்டடங்களை இடிப்பதற்கான உத்தரவினை அரசாங்கம் கொடுத்திருக்கிறது. அந்தக் கட்டடங்களை இடித்த பின்பு புதிய திட்டங்கள் அங்கே கொண்டுவரப்படும். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, இப்போது இருப்பதைப்போன்ற பல மடங்கு கட்டடங்களை அங்கே கட்டுவதற்கான வாய்ப்பு தற்பொழுதுள்ள விதிப்படி இருக்கின்ற காரணத்தினால், மிகச் சிறப்பாகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற இந்தப் பணியை நம்மால் செய்ய முடியும். கண்டிப்பாக அரசாங்கம் அதை விரைவாகச் செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன் அவர்கள்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். கோவை 20–வது வட்டத்தில், அறிவிக்கப்பட்ட வீட்டு வசதி வாரியத்தில் பாரத ரத்னா எம்.ஜி.ஆர். அவர்களால் மிக அதிகமான இடங்கள் வணிக வளாகத்திற்கு ஒதுக்கப்பட்டன. ஆனால், அவை இதுவரை எந்தப் பயன்பாட்டிற்கும் வரவில்லை. ஒரு வாரத்திற்கு முன்பு அந்த இடத்தை விற்பதற்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக முயற்சி செய்கிறார்கள். பாரத ரத்னா எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கப்பட்ட வீட்டு வசதி வாரிய இடத்தில் தயவுசெய்து, மீண்டும் வணிக வளாகம் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு*

2023 ஏப்ரல் 6]

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்தையும் நேரடியாக விற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. அப்படி ஏதேனும் நடவடிக்கை எடுத்திருந்தால், கண்டிப்பாக அதை ஆய்வு செய்து, நாமே கட்ட முடியும் என்றால் வீட்டு வசதி வாரியமே கட்டும். எது வீட்டு வசதி வாரியத்திற்கு இலாபகரமாக இருக்குமோ அந்தவகையிலே அந்தப் பணியை நாம் துவங்கலாம். கண்டிப்பாக, அதை ஆய்வு செய்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

114—

மின்மாற்றி

***22822—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, 74–வது வார்டு, சேமாத்தம்மன் நியூ காலனி மூன்றாவது தெருவில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி, வார்டு எண் 74, சேமாத்தம்மன் நியூ காலனி, மூன்றாவது தெருவிற்கு, அதிகரித்து வரும் மின் தேவையினைக் கருத்தில்கொண்டு, கூடுதலாக புதிய 100 KVA மின்மாற்றி நிறுவப்பட்டு, 30–7–2022 அன்று முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டு, சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி, சேமாத்தம்மன் நியூ காலனி, மூன்றாவது தெருவில் மின்மாற்றி அமைத்ததற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தங்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், அமைக்கப்படுகின்ற மின்மாற்றி RMU என்று சொல்லக்கூடிய மின்மாற்றியாக இருந்தால் நன்றாக இருக்கும். காரணம், நவீன மின்மாற்றிகள் மூலம் 99 சதவிகித மின் துண்டிப்பு தவிர்க்கப்படுகிறது. மேலும், அதனைப் பராமரிப்பதில் சிரமம் இல்லை. காக்கைகளால் ஏற்படும் மின் துண்டிப்பும் தவிர்க்கப்படுகிறது. மேலும், மழைக் காலங்களில் சிரமமின்றி, மின் துண்டிப்பைச் சரிசெய்யக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, RMU என்று சொல்லக்கூடிய அந்த மின்மாற்றியை அமைத்துத் தர வேண்டும். என்னுடைய, திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில், புளியந்தோப்பு மின்வாரிய அலுவலகத்தின் எல்லைக்குட்பட்ட தர்கா தெரு, பென்சனர் லேன், அலெக்சாண்டர் லேன் இரண்டாவது தெரு, கிரே நகர், 2–வது தெரு, தேசிய காலனி, ஐதர் கார்டன் 2–வது தெரு, Karnatic Mills Quarters, அதேபோன்று, ஏகாங்கிபுரம் 3–வது தெரு, ஏகாங்கிபுரம் 4–வது தெரு, Tank Bund Road ஆகியவற்றில் RMU என்று சொல்லக்கூடிய அந்த மின்மாற்றிகளை அமைத்துத் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதியிலுள்ள எல்லா பெயர்களையும் சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று, கடந்த இரண்டு ஆண்டுகளில் 40,020 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அதில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் சட்டமன்றத் தொகுதியான திரு.வி.க. நகர் தொகுதியில் 25 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற பகுதிகளில் துறையின் சார்பாக ஆய்வு செய்து, தேவை ஏற்படின், புதிய* RMU *அமைப்பதற்கு துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் நிறைய இடங்களில் பழைய வடிவிலான மின்மாற்றிகள் இருக்கின்றன. அந்தப் பழைய மின்மாற்றியில் பழுது ஏற்படுகின்றபோது, அதைக் கண்டுபிடிப்பதற்கே சில மணி நேரங்கள் ஆகின்றன. அப்படியே பழுது கண்டுபிடிக்கப்பட்டாலும், அதைச் சரி செய்வதற்குப் பல மணி நேரம் ஆகின்ற சூழ்நிலையும் இருக்கின்றது. எனவே, அந்தப் பழைய வடிவிலான மின் மாற்றியை மாற்றிவிட்டு, புதிய வடிவிலான* RMU *என்ற நவீன மின்மாற்றியை அமைத்துத் தர வேண்டும். புளியந்தோப்பு மின்வாரிய அலுவலக எல்லைக்குள் உள்ள கோவிந்தன் ரோடு, அம்பேத்கர் காலேஜ், ஜெயின் டெம்பிள், திரு.வி.க. நகர், எம்.எஸ். முத்து நகர், தாஸ் நகர், நாச்சியார் அம்மாள் லேன், ராமசாமி தெரு, மன்னார்சாமி தெரு ஆகியவற்றில் இருக்கின்ற பழைய வடிவிலான மின்மாற்றிகளை மாற்றிவிட்டு, புதிய வடிவிலான மின்மாற்றிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2023 ஏப்ரல் 6

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சருடைய அனுமதியைப் பெற்று, இந்த ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்தப் பகுதிகளில் புதிய RMU அமைப்பதற்கு துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். மாநகராட்சிப் பகுதிகளில் புதியதாகக் கட்டடம் கட்டும்போது ஒருசில பகுதிகளைச் சேர்த்து கட்டிவிட்டால், அதற்கு completion certificate வேண்டுமென்று கேட்கிறார்கள். EB connection கேட்கும்போது, கிடைப்பதில்லை. இதிலிருக்கும் சிரமத்தை மாற்றி, அந்தக் கட்டட உரிமையாளரின் சிரமத்தைக் குறைப்பதற்காக, மாநகராட்சியில் NOC அல்லது மாற்றாக ஏதாவது ஒரு நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்து மின்சார இணைப்பை வழங்க முடியுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய மின் இணைப்புகள் வழங்குவதற்கு, மின்சார வாரியம் பல வழிமுறைகளை வைத்திருக்கின்றது. அந்த வழிமுறைகளுக்கேற்பதான் மின் இணைப்புகளை வழங்க முடியும். சிலநேரங்களில் விதிமுறைகளை மீறி மின் இணைப்பு கொடுக்கப்பட்டால், அருகாமையில் இருக்கக்கூடியவர்கள்கூட நீதிமன்றத்திற்குச் செல்லக்கூடிய ஒரு சூழல் ஏற்படுகின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியிருக்கிற பிரச்சினை, இரண்டு துறைகள் சம்பந்தப்பட்டது. எனக்கு முன்னால் இருக்கின்ற நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுடைய துறையையும் சேர்த்து, இரண்டு துறைகளைச் சார்ந்தது. இங்கிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள் உள்ளிட்ட அனைவரும்

2023 ஏப்ரல் 6]

அந்தக் கோரிக்கையை ஏற்கெனவே முன்வைத்திருக்கிறார்கள். எனவே, இப்பிரச்சினை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, இரண்டு துறைகளுடைய மாண்புமிகு மூத்த அமைச்சர்களோடு பேசி, அதற்கான தீர்வு காணப்படும். ஏற்கெனவே, அதுகுறித்து நகர்ப்புர வளர்ச்சித் துறை மூலமாக ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்குரிய பகுதிகளில் இருந்தாலும்கூட, மின் இணைப்புகள் வழங்கப்படலாம் என்று சுற்றறிக்கை அவர்கள்மூலம் அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அதைப்போன்று ஏதேனும் குறிப்பிட்டுச் சொன்னால், துறை அது குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதியை மீறி கட்டடம் கட்டப்பட்டுள்ளது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்கிறார். கொஞ்சம்* extension *ஆகியிருக்கிறது. அதற்கு* exemption *கொடுத்து நீங்கள் மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று கேட்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுமாதிரி விதிமுறைகளை மீறி கட்டப்பட்ட கட்டடங்கள் மட்டுமல்ல, ஏற்கெனவே, எந்தவிதமான விதிகளுக்கும் உட்படாமல், தன்னிச்சையாக கட்டப்பட்ட கட்டடங்களுக்கும்கூட வரி வசூல் செய்ய முடியாமல் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, அனைத்து உறுப்பினர்களும், அனைத்து அமைச்சர்களும், சேர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பேசி, ஒரு முடிவு எடுக்க வேண்டும். அப்படி ஒரு முடிவு எடுத்து, நாங்கள் கேட்டோம்; 'இது போல் விதியை மீறி கட்டிவிட்டார்கள், அவர்களுக்கு* fine *போடுகிறோம்' என்றும், '*fine *போட்டுவிட்டு அவர்களை* regularization *செய்கிறோம்' என்றும் நீதிமன்றத்தில் கேட்டோம். அதற்கு நீதிமன்றத்தில் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், 'ஏன் இப்படி ஒரு சட்டம் வைத்திருக்கிறீர்கள்? அந்தச் சட்டத்தையே எடுத்து விடுங்களேன்' என்கின்றனர். 'ஒவ்வொன்றுக்கும்* exemption *கொடுக்கவேண்டுமென்றால், நீங்கள் அந்தச் சட்டத்தையே*

எடுத்து விடுங்கள்' என்று நீதிமன்றத்தில் சொல்கிறார்கள். எனவே, இது ஓர் இடியாப்பச் சிக்கலாக உள்ள பிரச்சினையாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று, நீதிமன்றத்திற்குச் சென்று, நீதிமன்றத்தின் மூலமாக தீர்வு பெற்று, ஒரு முடிவு எடுக்கப்படும்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.

திரு. ஒய். பிரகாஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஓசூர் சட்டமன்றத் தொகுதியில், நெல்லூர் ஊராட்சி, சேவுகனபள்ளி ஊராட்சி, ஈச்சங்கூர் ஊராட்சி ஆகிய பகுதிகளில் மின்னழுத்தம் அதிகமாக இருக்கின்றது. அதிலும், குறிப்பாக நெல்லூர் ஊராட்சி, ஓசூர் மாநகராட்சியை ஒட்டியுள்ள காரணத்தினாலும், குடியிருப்புகள் அதிகமாக இருக்கக்கூடிய காரணத்தினாலும், அங்கு ஒரு துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மற்றும் பொது மக்களிடமிருந்து 80–க்கும் மேற்பட்ட கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. அந்தக் கோரிக்கைகள் அனைத்தும் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்தப் பகுதியையும் சேர்த்து துறைக்கு அனுப்பி, தேவை ஏற்படின், இந்த ஆண்டு அறிவிப்பில் சேர்க்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. M. ராஜமுத்து, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

115—

ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம்

***6907—திரு. M. ராஜமுத்து:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சேலம் மாவட்டம், ஆத்தூர் சுகாதார மாவட்டத்திற்குட்பட்ட பனமரத்துப்பட்டி, மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில், 1986 ஆம் ஆண்டு கட்டப்பட்ட புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம் ஒன்று பழுதடைந்து இருந்தது. அந்தக் கட்டடத்தின் பயன்பாட்டை அறிந்திருந்த காரணத்தினால், மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலைப் பெற்று, 2021–2022 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்படி, 15–வது நிதிக் குழுவின்மூலம் 60 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, புதிய கட்டடம் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தற்போது கூரை அளவில் அக்கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. வெகு விரைவில் அக்கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு வரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. M. ராஜமுத்து அவர்கள்.*

திரு. M. ராஜமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகப் பொதுச் செயலாளர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல 15-வது நிதிக் குழு நிதியின்மூலம் அந்தக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அந்தக் கட்டடத்தை விரைவாகக் கட்டி முடித்து, விரைந்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட வீரபாண்டி ஊராட்சியில், புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அந்த ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் மிகவும் பழுதடைந்திருக்கிறது. அதற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டும். அந்தக் கட்டடத்தினுள்ளே ஆடு, மாடுகள் வருவதனால், அக்கட்டடத்திற்கு சுற்றுச்சுவருடன்கூடிய புதிய கட்டடம் கட்டித் தருவாரா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனமரத்துப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டப்பட்டு வருகின்ற கட்டடம் மிக விரைவில் பயன்பாட்டிற்கு வரவிருக்கிறது. அதோடு, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லியிருப்பதுபோல், அவர் தொகுதியில் மட்டும், கடந்த ஓராண்டில் மட்டுமே 2022 ஜூன் திங்கள் 22 ஆம் தேதியன்று, மல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ.48 இலட்சம் செலவில் ஒரு கட்டடமும்; இளம்பிள்ளை ஆரம்ப சுகாதார நிலைய புற நோயாளிகள் பிரிவுக் கட்டடம் ரூ.48 இலட்சம் மதிப்பீட்டிலும்; அதேபோல், வேடுகாத்தான்பட்டி, ஆரம்ப சுகாதார நிலைய புற நோயாளிகள் பிரிவுக் கட்டடம் ரூ.48 இலட்சம் மதிப்பீட்டிலும்; முருங்கம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன.

அதோடுமட்டுமல்லாமல், மாரமங்கலப்பட்டியில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு துணை சுகாதார நிலையம் கட்டும் பணியும்; பெருமாள்கவுண்டம்பட்டியில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு

2023 ஏப்ரல் 6]

துணை சுகாதார நிலையக் கட்டடமும்; வேடுகாத்தான்பட்டியில் ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் ஓர் உள் நோயாளிகள் மற்றும் பிரசவக்கூடக் கட்டடமும்; நயினாம்பட்டியில் ரூ.20 இலட்சம் செலவில் ஒரு நலவாழ்வு மையக் கட்டடமும்; இளம்பிள்ளையில் ரூ.50 இலட்சம் செலவில் ஒரு வட்டார பொதுச் சுகாதார நிலையக் கட்டடமும் ஆக, ரூபாய் ஒரு கோடியே 85 இலட்சம் மதிப்பீட்டில் ஐந்து கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவைமட்டுமல்லாது, கல்பாறைப்பட்டி துணை சுகாதார நிலையத்திற்கு ரூ.25 இலட்சம் மதிப்பீட்டிலும், நாட்டார்மங்கலம் துணை சுகாதார நிலையத்திற்கு ரூ.25 இலட்சம் செலவிலும் கட்டடம் கட்டும் பணிகள் விரைவில் தொடங்கப்படவிருக்கின்றன.

எனவே, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருப்பதைப்போல, கட்டி முடிக்கப்பட்ட, கட்டிக் கொண்டிருக்கிற, கட்டப்படவிருக்கின்ற கட்டடங்களின் பட்டியல்களைத் தந்திருக்கிறோம். ஒரு தொகுதியில் மட்டும் இவ்வளவு கட்டடங்கள் என்பது அசாத்தியமான சாதனை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாகவே உணர்வார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. M. ராஜமுத்து அவர்கள்.

திரு. M. ராஜமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட அமானிகொண்டலாம்பட்டி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு என்று தனியாகக் கட்டடம் இல்லை. அருகில் உள்ள நெய்காரப்பட்டி ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தம்மநாயக்கன்பட்டி ஊராட்சி, நெய்க்காரப்பட்டி ஊராட்சி, அமானிகொண்டலாம்பட்டி ஆகிய ஊராட்சிகளில் கிட்டத்தட்ட 35,000 மக்கள் வசிக்கின்றார்கள். அமானிகொண்டலாம்பட்டி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கான இடம் இருக்கிறது. அமானிகொண்டலாம்பட்டி ஊராட்சியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தைக் கட்டிக் கொடுத்தால், அந்தப் பகுதி மக்கள் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்து, அந்தக் கட்டடத்தையும்

கட்டிக் கொடுக்க வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்வரும் நிதியாண்டில், நிதி ஆதாரத்திற்கேற்ப, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலைப் பெற்று, அக்கட்டடத்தையும் கட்டித் தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம் அவர்கள்.*

திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியத்திற்குட்பட்ட அ.உடையாப்பட்டி-கள்ளை, கீழவெளியூர், பாதிரிப்பட்டி, ஆர்.டி.மலை ஆகிய பகுதிகளிலுள்ள துணை சுகாதார நிலையக் கட்டடங்கள் மூடப்பட்டு, தற்போது அவையெல்லாம் ஒரு பஞ்சாயத்துக்குச் சொந்தமான இடங்களிலே, வசதியற்ற நிலைமையிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நான் மேலே கூறிய அந்த இடங்களுக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 8,713 துணை சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அதில் 20 சதவீதத்திற்கும் மேற்பட்டவை வாடகைக் கட்டடங்களில்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்றாலும், அவற்றையெல்லாம் படிப்படியாக சொந்தக் கட்டடங்களில் இயக்குவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் எடுத்து வருகிறார்கள். அந்த வகையில் எதிர்வரும் நிதியாண்டில், அவர் சொன்ன கட்டடங்களில், ஏதாவது ஒன்றிரண்டை முன்னுரிமை*

2023 ஏப்ரல் 6]

அடிப்படையில் எடுத்து கட்டுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது அவர்கள்.*

திரு. ப. அப்துல் சமது: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மணப்பாறை தொகுதியில் புத்தாநத்தம் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அந்த ஆரம்ப சுகாதார நிலையம் 1973–ல், பேராசிரியர் திரு. அன்பழகனார் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைத்தான் 100 சுற்று வட்டார கிராம மக்களும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மருத்துவ மேல் சிகிச்சைக்காக 13 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள மணப்பாறைக்குத்தான் வர வேண்டியிருக்கிறது. எனவே, புத்தாநத்தம் ஆரம்ப சுகாதார நிலையம், வட்டார மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித்தரப்படுமா, புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படுமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறையில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையே இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே, பல கட்டடங்களைத் திறந்து வைப்பதற்கு நானும், நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களும், அவருடைய தொகுதிக்குச் சென்று கட்டடங்களைத் திறந்து வைத்திருக்கின்றோம் என்றாலும்கூட, அவர் சொன்னதைப் போல, புத்தாநத்தம் ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்டார மருத்துவமனையாக ஆக்குவதைக் காட்டிலும், அவர் சொன்ன கட்டடங்களை கூடுதலாகக் கட்டித் தருவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.*

[2023 ஏப்ரல் 6

திரு. மு. ஜெகன் மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கே.வி. குப்பம் தொகுதியில், கே.வி. குப்பம் ஆரம்ப சுகாதார நிலையத்தை, வட்டார மருத்துவமனையாக மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றோம். இந்த அவையிலும் அதைப்பற்றி பேசியிருக்கின்றோம். அதைப்போல, குடியாத்தம் ஒன்றியத்தில், கூடாநகரம் பகுதியிலே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையம் நூற்றுக்கணக்கான நோயாளிகள் தினசரி வருகை புரிகின்ற ஆரம்ப சுகாதார நிலையமாக உள்ளதோடு, *பழுதடைந்துள்ள கட்டடமாக இருக்கின்றது; பழைய கட்டடமாக இருக்கின்றது. கொஞ்சம் கொஞ்சமாக நோயாளிகள் மேல் இடிந்து விழுகின்ற ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கின்றது. அந்தக் கட்டடத்தை அகற்றி புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *** கட்டடம் என்பதை பழுதடைந்துள்ள கட்டடம் என மாற்றிவிடுங்கள். மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, துணை சுகாதார நிலையங்களாக இருந்தாலும், ஆரம்ப சுகாதார நிலையங்களாக இருந்தாலும், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக இருந்தாலும், வட்டார மருத்துவமனைகளாக இருந்தாலும் தேவைக்கேற்ப இருக்கின்றன என்கின்ற வகையில், ஒன்றிய அரசு புள்ளிவிவரங்களை தெரிவிக்கின்றது. எனவே, ஒன்றையொன்று மேம்படுத்துவது தற்போது இயலாத காரியமாக இருந்து கொண்டிருக்கிறது என்றாலும்கூட, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலைப் பெற்று, 100 ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளுக்கு கடிதம் தந்து இருக்கிறோம். அப்படிப்பட்ட வாய்ப்பு கிடைக்கப்பெறும்போது, நிச்சயம் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும். அதோடுமட்டுமல்லாது, அவர், புதிய கட்டடம் ஒன்றும் கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். எதிர்வரும் ஆண்டில், பதினைந்தாவது நிதி ஆணையத்தின்கீழ், நிதி நிலையின்*

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2023 ஏப்ரல் 6]

இருப்புக்கு ஏற்ப முன்னுரிமை தந்து, அந்தக் கட்டடம் கட்டுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.*

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகூர் ஆண்டவர் அரசு மருத்துவமனையை மேம்படுத்த வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் வந்து, அதைப் பார்வையிட்டார்கள். பதினைந்தாவது நிதி ஆணையத்தின்கீழ் அது செயல்படுத்தப்படும் என்று அறிவிப்பு செய்யப்பட்டது. அதற்கு எப்போது நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். திருக்கண்ணபுரம், திருப்பயத்தான்குடி மற்றும் கணபதிபுரம் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்களும் பழுதடைந்துள்ளன. அவற்றையும் புதிதாகக் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகூர் ஆண்டவர் அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரை, அங்கு கட்டடம் கட்டும் பணிகளுக்கு இன்றைக்கு உத்தரவிடப்பட்டு, அதற்கான அரசாணைகள் எல்லாம் பெறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மிக விரைவில் அந்தப் பணிகள் தொடங்கப்படும். அதோடுமட்டுமல்லாமல், நாகப்பட்டினத்தில் 500 படுக்கை வசதிகளுடன்கூடிய மருத்துவமனைக்கான கட்டடப் பணிகள் விரைந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் நன்கு அறிவார்கள். வருகின்ற மே மாதம் 15, 16, 17 ஆகிய 3 நாட்களில் அல்லது இரண்டாவது வாரத்தில் அந்த மருத்துவமனை பயன்பாட்டிற்கு வரவிருக்கிறது. அப்படி பயன்பாட்டிற்கு வரும்போது, நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் பகுதி மக்களுக்கு 500 படுக்கை வசதிகளுடனான புதிய மருத்துவ சேவை மிகப் பெரிய அளவில்*

பலனளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்களைக் கட்டுகின்ற பணிகள் முன்னுரிமை அடிப்படையில் செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி, முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், ஆறுதேசம் பகுதியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் 1958-ல் கட்டப்பட்ட பழமைவாய்ந்த கட்டடம் ஆகும். ஏற்கெனவே அந்தக் கட்டடம் பொதுப் பணித் துறையால் முழுமையாக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் அறுவை சிகிச்சை அரங்கம், வெளி நோயாளிகள் அரங்கம் மற்றும் உள் நோயாளிகள் அரங்கம் என அனைத்துக் கட்டடங்களும் கட்டப்பட வேண்டும். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கு வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை எழில் கொஞ்சும் ஆறுதேசம் ஆரம்ப சுகாதார நிலையத்தை நானும், சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் நேரில் சென்று பார்த்தோம். அங்குள்ள பழுதடைந்த கட்டடங்கள் நிச்சயமாக மாற்றியமைக்கப்பட்டு, புனரமைத்து கட்டப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை உணர்ந்து, நிதிநிலைமைக்கேற்ப இந்த ஆண்டே அதற்கான பணிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு அந்தக் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெறும் என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 116, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 ஏப்ரல் 6]

116—

போக்குவரத்துப் பணிமனை

***11725—திருமதி க. சிவகாமசுந்தரி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியம், தரகம்பட்டியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு) முன்வரிசையில் இருக்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) துணைக் கேள்வி கேட்பதற்கு யாருக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்பதெல்லாம் எனக்குத் தெரியும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. வேல்முருகன், சத்தத்தை raise செய்யக் கூடாது. (குறுக்கீடு) இதுபோன்று உட்கார்ந்துகொண்டு, இதுபோன்ற வார்த்தைகளையெல்லாம், மிரட்டலெல்லாம் விடக்கூடாது. உட்காருங்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. தி. வேல்முருகன், நீங்கள் பேசுவது எதுவுமே அவைக்குறிப்பில் ஏறாது.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, தரகம்பட்டியில் புதிய பேருந்து பணிமனை அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை. காரணம், தரகம்பட்டியைச் சுற்றி ஏற்கெனவே பல பணிமனைகள் இருக்கின்றன. கரூர்–I, கரூர்–II, குளித்தலை, அரவக்குறிச்சி, மணப்பாறை, துவரங்குறிச்சி என்று பல்வேறு பணிமனைகளிலிருந்து கிட்டத்தட்ட 24 பேருந்துகள் தரகம்பட்டி வழியாக இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே, தரகம்பட்டியில் புதிய பேருந்து பணிமனை அமைப்பதற்கான தேவை எழவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி அவர்கள் பேசுவதற்கு முன்னால் நான் ஒரு விஷயத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள் கடந்த 24, 28, 30 மற்றும் 31 ஆகிய 4 தேதிகளில் துணைக் கேள்விகள் கேட்பதற்கு மட்டும் 4 முறை வாய்ப்பு தந்திருக்கிறேன். இது தவிர, முன்வரிசை உறுப்பினர்களுக்கு வரக்கூடிய பல அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களிலெல்லாம் அவரைப் பேச அனுமதித்திருக்கிறேன். "தினமும் எங்களுக்குத்தான் கேள்வி கேட்கவும், துணைக் கேள்வி கேட்கவும் வாய்ப்புத் தர வேண்டுமென்ற" வரம்பு கிடையாது. பல உறுப்பினர்கள், ஒரு முறையோ அல்லது இரண்டு முறையோகூட கேள்விகள் கேட்காமல் இருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் அவர்களுக்கு வாய்ப்புத் தரப்படுகிறதே தவிர கட்சி சார்பாகவோ அல்லது வேறு எந்த நோக்கத்துடனோ வாய்ப்புத் தரப்படுவதில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். தேவையில்லாமல் கேள்வி நேரத்தில்— நீங்கள் வாய்ப்பு கேட்கிற இந்தக் கேள்வியில் இன்னும் 20 பேர் துணைக் கேள்வி கேட்க வாய்ப்புக் கேட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். நான் பேசுவதைக் கேட்டுக்கொள்ளுங்கள். என்னுடைய அறையில் வந்து வாய்ப்பு தரும்படி கோரியவர்கள் 20 பேருக்குமேல் இருக்கிறார்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இதில் debate மாதிரி பேசாதீர்கள் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) 4 துணைக் கேள்விகள் கேட்க வாய்ப்புத் தந்திருக்கிறேன். இதற்கு மேலும் வாய்ப்பு கேட்கக் கூடாது. யார், யாருக்கு எப்போது வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று எனக்குத் தெரியும். பாகுபாடு இல்லாமல் எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். பெரியதாக சத்தம்போட்டு இந்த அவையில் பேசக் கூடாது, பார்த்துக்கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி அவர்கள்.

திருமதி க. சிவகாமசுந்தரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடவூர் தாலுகா 2010 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டு, தரகம்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இங்கே பல்வேறு அரசு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. கரூர் மாவட்டத்தில் செயல்படும்

2023 ஏப்ரல் 6]

கரூர் மற்றும் குளித்தலை பணிமனைகள் கடவூரிலிருந்து சுமார் 50 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளன. ஆகவே, கரூரிலிருந்தும், குளித்தலையிலிருந்தும் நேரடியாகக் கடவூருக்கு நகரப் பேருந்துகளை இயக்க இயலவில்லை. அதனால், இப்பகுதியிலுள்ள மகளிர் கட்டணமில்லா பேருந்து சேவையை முழுமையாகப் பயன்படுத்த இயலவில்லை. கடவூர் தாலுகாவைத் தலைமையிடமாகக் கொண்டு தரகம்பட்டியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்கப்பட்டால், அங்கிருந்து கிராமங்களுக்குப் பேருந்து இயக்க வழிவகை ஏற்படும். ஆகவே, தரகம்பட்டியில் போக்குவரத்துப் பணிமனை அமைத்துத் தர வேண்டுமென்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி சிவகாமசுந்தரி அவர்கள் ஒரு நல்ல வழக்கறிஞர். எனவே, தன்னுடைய தொகுதிப் பிரச்சினைகளை நல்லமுறையில் விவாதமாக எடுத்து வைத்திருக்கின்றார். அவருடைய தொகுதிக்கு பணிமனை வேண்டுமென்று, ஏற்கெனவே 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழ் மனு அளித்திருப்பதாகவும் சொல்லியிருக்கிறார். ஏற்கெனவே தரகம்பட்டிக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கேட்டு, 'இல்லை' என்று சொல்லியிருக்கின்றோம். கூடுதல் பேருந்து வசதிகள் கேட்டார். இருந்தாலும் மனம் தளராத விக்கிரமாதித்தன்போல, இன்றைக்கும் பணிமனை கேட்டிருக்கின்றார். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழ் நிதி பெறுவதற்கு முயற்சி எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி அவர்கள்.

திருமதி க. சிவகாமசுந்தரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நிறைவேற்றித்

தருவேன் என்று கூறியதற்கு நன்றி கூறுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறையிலிருந்து தரகம்பட்டி வழியாக சென்னைக்கு இயக்கப்பட்டு வந்த பேருந்து, கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. நாளது தேதிவரை பேருந்து இயக்கப்படாமல் உள்ளது. இப்பேருந்தை மீண்டும் இயக்குவதற்கோ அல்லது தரகம்பட்டி, கிருஷ்ணராயபுரம் வழியாக சென்னைக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கவோ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் அவையில் கூறியதுபோல, கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்ட பேருந்துகள் என்பது கொரோனாவால் நிறுத்தப்பட்டது அல்ல, கடந்த ஆட்சிக் காலத்தில் புதிய ஓட்டுநர், நடத்துநர்களை எடுக்காத காரணத்தால் நிறுத்தப்பட்டவை. இப்போது ஓட்டுநர், நடத்துநர்களை புதிதாகப் பணிக்கு எடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள், அரசாணையும் வெளியிடப்பட்டிருக்கிறது. அவர்கள் புதிதாக நியமனம் பெற்றபிறகு, அந்தப் பேருந்துகள் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. கருமாணிக்கம் அவர்கள்.*

திரு. இராம. கருமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், தொண்டி பேரூராட்சியில் போக்குவரத்துப் பணிமனை அமைத்துத் தர வேண்டுமென்பது மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக உள்ளது. அதற்கு இடமெல்லாம் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றது. அந்தப் பணியை விரைந்து செய்து தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும். தமிழகத்தின் நிதிநிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். எனவே, நிதிநிலைக்கேற்ப, தேவையான நேரத்தில் நல்ல முடிவெடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி அவர்கள்.

திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள வள்ளலார் நகர் பேருந்து நிலையம் 53–வது வார்டில் அமைந்துள்ளது. இந்தப் பேருந்து நிலையத்தின் compound–க்கு அருகாமையில் மெட்ரோ இரயில் நிலையமும் அமைந்துள்ளது. எனவே, அதிகளவில் மக்கள் பயன்படுத்தக்கூடிய ஒரு பேருந்து நிலையமாக அந்தப் பேருந்து நிலையம் உள்ளது. எனவே, அங்கே parking வசதி, கழிவுநீர் வசதி, குடிநீர் வசதி மற்றும் பொதுமக்கள் அமர இருக்கைகள் உள்ளிட்ட மற்ற வசதிகளையெல்லாம் செய்து தரவேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதி, சென்னை மாநகராட்சிப் பகுதியில் அமைந்திருக்கிறது. எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியுடன் ஆலோசித்து, முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஏற்கெனவே, ஆசிரியர் என்ற பணியை மேற்கொண்டிருக்கிறார். இன்று இந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த சட்டமன்றத்தை நடத்துவதிலிருந்து நாங்கள் புரிந்துகொண்டது, அவர் கனிவான ஆசிரியராகவும் இருக்கிறார்; கண்டிப்பான ஆசிரியராகவும் இருக்கிறார் என்பதை நாங்கள் இன்றைக்கு அறிகிறோம்.

[2023 ஏப்ரல் 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியென்றால், துணைக்கேள்வி இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ் அவர்கள்.

திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டம் தொகுதி, சாத்தான்குளத்தில் இருக்கும் போக்குவரத்துப் பணிமனைக்கு சுற்றுச்சுவர் இல்லை. அதேபோல, drivers and conductors ஆகியோரின் தேவைக்கு restroom இல்லை. இதனால், அங்கேயிருந்து பேருந்துகள் இயக்கப்படுவதில்லை. சாத்தான்குளம் என்பது வியாபாரிகள் மிகவும் அதிகமாக இருக்கின்ற இடம், எனவே, இந்த வசதிகள் செய்து தரப்படுமா? அதேபோல, drivers and conductors-க்கான vacancies அதிகமாக இருக்கின்றன. யாராவது ஒருவர் leave எடுத்தாலும் அதற்கான மாற்று drivers இல்லை என்ற செய்தி வந்துகொண்டிருக்கிறது. இது நிவர்த்தி செய்யப்படுமா என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ், அவர்களுடைய கோரிக்கை முக்கியமான கோரிக்கைதான். பணிமனை பாதுகாப்புக்கு சுற்றுச்சுவர் அவசியம். சுற்றுச்சுவர் அமைப்பதற்கு 25 இலட்சம் ரூபாய்தான் தேவைப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பெருந்தன்மையோடு அவர் அந்த நிதியை வழங்க வேண்டும். அதேபோல, பணியாளர்களுடைய ஓய்வறை, கழிவறை இதுபோன்ற வசதிகளை சட்டமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலும் அவர்களுடைய நிதியிலே செய்து கொடுக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அண்ணன் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்கூட சைதை பணிமனையிலே, இதுபோன்று வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார். நிதிநிலைக்கேற்ப நாங்களும் தெரிவிக்கிறோம், சட்டமன்ற உறுப்பினரும் அன்போடு உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள்.*

திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி அதிகமான கிராமப்புறங்கள் இருக்கின்ற பகுதியாகும். கிராமப்புறங்களிலிருந்து பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும், மருத்துவமனைகளுக்கும் மற்றும் பணிக்கும் செல்வோர்கள் தூத்துக்குடி, திருநெல்வேலி, கோவில்பட்டி ஆகிய பகுதிகளுக்கும் செல்லவேண்டி இருப்பதால், பஸ் போக்குவரத்து வசதி மிகவும் குறைவாக உள்ளது. எல்லா சட்டமன்றத் தொகுதிகளிலும் தலைமையிடத்தில் அரசுப் போக்குவரத்துப் பணிமனைகள் அமைந்துள்ளன. அதனால், 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழும் கோரிக்கையாக நான் இதனைக் கொடுத்துள்ளேன். போதுமான அரசு நிலமும் உள்ளது. தொகுதி மக்களின் நலன் கருதி முன்னுரிமை அடிப்படையில், ஒட்டப்பிடாரத்தை மையமாக வைத்து அரசு போக்குவரத்துப் பணிமனை அமைத்துத் தருவார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே 234 தொகுதிகள் இருக்கின்றன. 315 பணிமனைகள் இருக்கின்றன. எனவே, கிட்டத்தட்ட ஒரு தொகுதிக்கு ஒரு பணிமனை என்பதைத் தாண்டித்தான் இருக்கின்றன. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள், அவருடைய தொகுதி தலைமையிடத்திற்கு தேவை என்று கேட்டிருக்கின்றார். நம்முடைய மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், எப்படி நமக்கு நாமே திட்டத்தின்கீழ், அவரே ஒரு பணிமனை அமைப்பதற்கான நிதி ஏற்பாடு செய்து தருகிறேன் என்று சொன்னாரோ, அதுபோல் உறுப்பினரும் முயற்சி எடுக்க அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

117—

குடமுழுக்கு

***15217—திரு. ஆர். கணேஷ்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலம் தொகுதி, உதகமண்டலம் நகராட்சி, காந்தல் பகுதியில் உள்ள அருள்மிகு மூவுலகரசியம்மன் திருக்கோயிலின் இராஜகோபுரத்தைச் சீரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஊட்டியிலே அமைந்திருக்கின்ற மூவுலகரசியம்மன் கோயில் இராஜகோபுரத்தைச் சீரமைக்கவும், குடமுழுக்கு செய்வதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்டிருக்கிறார். அந்தப் பகுதியில் சால கோபுரம் அமைந்திருப்பதால், இராஜகோபுரம் கட்டுவதற்குண்டான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு, சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் வாய்ப்பு இருந்தால் இராஜகோபுரம் கட்டுகின்ற பணிக்கு துறை முயற்சிக்கும்.

அதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடமுழுக்கு நடத்தப்படுமா என்ற ஒரு கேள்வியையும் கேட்டிருந்தார். 16 பணிகள், ரூபாய் 39 இலட்சம் செலவிலே குடமுழுக்கு செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு, 25 சதவீத பணிகள் நிறைவுற்று இருக்கின்றன. மீதம் இருக்கின்ற 75 சதவீத பணிகளும் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவு செய்யப்பட்டு குடமுழுக்கு நடத்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய சீரிய வழிகாட்டுதலின்படி, இன்றையதினம் வரையில் 620 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்திய பெருமை, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சியினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சாரும் என்பதை மாண்புமிகு

2023 ஏப்ரல் 6]

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, உறுப்பினர் இருக்கையில் இல்லை என்றாலும் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. மாங்குடி அவர்கள்.*

திரு. சா. மாங்குடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதகை சட்டமன்றத் தொகுதி, கேத்தி பேரூராட்சி,* Lovedale shortcut *பகுதியில் ஆதி திராவிடர் மக்களின் கோயிலாக இருக்கக்கூடிய மாரியம்மன் கோயிலைப் புனரமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒரு இலட்சம் ரூபாய் இதுவரை கொடுக்கப்படவில்லை. அது உடனடியாகக் கிடைக்கப்பெறுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மேலும், எனது காரைக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொப்புடையம்மன் திருக்கோயில் வாரச் சந்தையை புதிதாகப் புனரமைப்பதற்கு, சென்ற நிதியாண்டில் ஒன்றரை கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ததற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்து, அந்த வளாகத்திலே ஒரு திருமண மண்டபம் அமைத்துத் தரப்படுமா என்பதையும் கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் எனது தொகுதிக்குட்பட்ட தேவகோட்டை நகராட்சியில் உள்ள சிலம்பணி சிதம்பர விநாயகர் திருக்கோயில் தேவஸ்தான வெள்ளையூரணி பிள்ளையார் கோயிலைச் சுற்றி, நமது அறநிலையத் துறைக்குச் சொந்தமான கட்டடங்கள் சிதலமடைந்து, இடிந்த நிலையில் உள்ளன. எனவே, அறநிலையத் துறைக்கு வருவாய் வரும் வகையிலும், அந்தப் பகுதி மக்களுக்குப் பயன்படும் வகையிலும், அந்தக் கட்டடத்தைப் புதிதாகக் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள், கிராமப்புறத் திருக்கோயிலான அந்தத் திருக்கோயிலுக்கு ஒரு இலட்சம் ரூபாய்*

நிதி ஒதுக்கிட வேண்டுமென்று கேட்டார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்பதற்கு முன்பு, கடந்த காலங்களில் கிராமப்புறக் கோயில்கள் மற்றும் ஆதி திராவிட மக்கள் வசிக்கின்ற பகுதிகளிலுள்ள திருக்கோயில்களுக்கு 1 இலட்சம் ரூபாய் நிதி மற்றும் 1,000 திருக்கோயில்களுக்கு திருப்பணியும் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. கடந்த 2016 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை, அவர்களது ஆட்சிக்காலம் முடிகின்ற வரை ஒட்டுமொத்தமாக சுமார் 2,000 திருக்கோயில்களில்தான் திருப்பணிகள் செய்யப்பட்டிருந்தன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, அந்தக் கிராமப்புற கோயில்கள் மற்றும் ஆதி திராவிட மக்கள் வசிக்கின்ற பகுதிகளிலுள்ள திருக்கோயில்களுக்கு 1 இலட்சம் ரூபாய் நிதி போதாது என்பதைக் கருத்திற்கொண்டு, 2 இலட்சம் ரூபாயாக வழங்க உத்தரவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடுமட்டுமல்லாமல், 1,000 திருக்கோயில்கள் என்றிருந்ததை, 1,250 திருக்கோயில்கள் என்று உயர்த்தி உத்தரவிட்டார்கள். மேலும், ஒட்டுமொத்தமாக இருக்கின்ற 2,500 திருக்கோயில்களுக்கும், அந்தத் திருக்கோயில்களில் இருக்கின்ற பூசாரிகளையும் நேரில் வரவழைத்து, அவரது திருக்கரங்களாலேயே, அந்த 50 கோடி ரூபாய் நிதியை வழங்கிய பெருமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வாரச் சந்தைப் பணி, ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற 1½ கோடி ரூபாய் நிதியின்மூலம் முழுமையாக இந்த ஆண்டிற்குள் நிறைவு செய்யப்படும். கூடுதலாக திருமண மண்டபம் கோரினார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, இதுவரை 50 திருமண மண்டபங்களுக்கு 141 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அந்தப் பணிகள் நிறைவுற்றவுடன், வருங்காலங்களில் நிதிநிலையைப் பொறுத்து, அந்தத் திருக்கோயிலுக்கு, நிதி இல்லையென்றாலும், ஆணையர் பொது நல நிதியைப் பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.

2023 ஏப்ரல் 6]

திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட, கூவனூர் ஊராட்சியில் தென்பெண்ணை ஆற்றங்கரையின் தென்புறத்தில் அமைந்திருக்கின்ற அகத்தீஸ்வரர் திருக்கோயில், 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பழமையான திருக்கோயில். இத்திருக்கோயில் புனரமைக்கப்பட்டு, இராஜகோபுரம் கட்டித் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிட்டுக் கூறிய அந்த அகத்தீஸ்வரர் திருக்கோயில் என்பது, சட்டப் பிரிவு 46 (1)–ன்கீழ் வருகின்ற திருக்கோயில். ஆண்டு வருமானம் ரூ.10,000/–க்கும் மேல் உள்ள திருக்கோயில். அந்தத் திருக்கோயிலுக்கு, கடைசியாக 1994 ஆம் ஆண்டில் குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறது. கிட்டத்தட்ட 28 ஆண்டுகளுக்குப் பிறகு, தற்போதுதான் அந்தத் திருப்பணிகள் எடுத்துக்கொள்ளப்படுவதற்காக, பொது நல நிதி வேண்டி கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. ரூபாய் 75 இலட்சம் செலவில் பொது நல நிதியில், அந்தத் திருக்கோயிலின் திருப்பணி, ஓரிரு மாதங்களில் மேற்கொள்ளப்படும். மேலும், இராஜகோபுரப் பணிகளுக்கான தொல்லியல் துறை வல்லுநர் குழுவை அனுப்பி ஆய்வு செய்து, அதற்குண்டான சாத்தியக்கூறுகள் இருக்குமாயின், மாவட்ட அளவிலான வல்லுநர் குழு, மாநில அளவிலான வல்லுநர் குழு ஆகியவற்றின் ஒப்புதல் பெறப்பட்டு, இராஜகோபுரம் அமைப்பதற்குண்டான நடவடிக்கைகளை இந்து சமய அறநிலையத் துறை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தம் கார்த்திகேயன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள்.*

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போர்க்குணம் கொண்ட இனிய தலைவர்,*

இறையுணர்வு மிக்க கழகப் பொதுச் செயலாளர் மாண்புமிகு திரு. எடப்பாடியார் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் சார்ந்திருக்கும் முதல் படை வீடான திருப்பரங்குன்றம் தொகுதியில் அருள்மிகு திருமுருகன் கோயில் குன்றில் அமைந்திருக்கின்றது. அங்கிருக்கின்ற காசி விஸ்வநாதர் கோயிலுக்கு பங்குனித் தேரோட்டம் மற்றும் பங்குனித் திருவிழா நடைபெறுகின்ற நாட்களில், பக்தர்களும், ஏனைய மக்களும் மிகவும் இறையுணர்வோடு படியேறிச் சென்று ஆண்டவனை வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் குன்றின்மேல் அமைந்திருக்கின்ற காசி விஸ்வநாதர் கோயிலுக்கு rope car வசதி ஏற்படுத்தித் தருகின்ற ஒரு நல்ல செய்தியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்குச் சொல்வாரா என்று எதிர்பார்க்கிறேன். மேலும், சரவணப்பொய்கை, இலட்சுமிதீர்த்தம் போன்ற இடங்களில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்வதாக உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசின் அறநிலையத் துறையால், அப்பணிகள் பாதுகாப்பான முறையில் விரைவாக முடிக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'உங்கள் தொகுதியில் முதல்வர்' திட்டத்தின்கீழ், 10 பணிகளில் ஒரு பணியாக, காசி விஸ்வநாதர் கோயில் பணியையும் குறிப்பிட்டுத் தந்திருந்தார். அதற்கு சாத்தியக்கூறு இருக்கின்றதா என வல்லுநர் குழு சென்று, ஆய்வு செய்து வந்திருக்கின்றது.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்னார் இனியவர் என்று பார்ப்பவர் அல்ல; சொன்னதையும் செய்பவர்; சொல்லாததையும் செய்பவர். ஆகவே, சாத்தியக்கூறுகள் இருப்பின், நிச்சயம் அந்த மலைக்கு ரோப் கார் அமைத்துத்

2023 ஏப்ரல் 6]

தருவார். ஏற்கெனவே அந்த மலையேறி தரிசனம் செய்வதற்கு 650 படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வயது முதிர்ந்தவர்கள்; படி ஏற முடியாதவர்களுக்கு இந்த ரோப் கார் என்பது அவசியம் என்பதை ஆட்சியும் உணர்ந்திருப்பதால், சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டபிறகு, அரசு ஒரு நல்ல முடிவிற்கு நிச்சயம் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருப்பரங்குன்றத்தில் சரவணப்பொய்கையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான், 8 பணிகளை மேற்கொள்ள, ரூபாய் 13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. அதில் சரவணப்பொய்கையும் ஒரு பணி. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, மீண்டும் ஒருமுறை கள ஆய்வு செய்து, உறுப்பினர் அவர்களின் எண்ணத்தின்படி, அந்த சரவணப்பொய்கை அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பான் என்பது முதுமொழி. அதைப்போல, பொள்ளாச்சி–கிணத்துக்கடவு பிரதான தேசிய நெடுஞ்சாலையிலே, கிணத்துக்கடவு பேரூராட்சியிலே, அமைந்திருக்கிற பொன்மலை வேலாயுதசுவாமி கோயிலுக்கு, முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் உதவியோடு நிதியொதுக்கப்பட்டு, compound wall அமைக்கின்ற பணி, கொரோனா வந்ததன் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், உபயதாரருடைய பணிகள் அனைத்தும் ஓரளவுக்கு முடிந்துவிட்டன. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பொன்மலை வேலாயுதசுவாமி கோயில், திருப்பணியை மீண்டும் தொடங்கி, கும்பாபிஷேகம் நடத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தருவார்களா என்பதை உங்கள் மூலமாகக் கேட்டறிய விரும்புகிறேன்.

அதேபோல, அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில் கும்பாபிஷேகம் 2010 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம்

தேதி நடைபெற்றது. இப்போது 14 ஆண்டுகளாகிவிட்டன. அந்த மாசாணியம்மன் கோயில் திருப்பணிக்கும் உரிய கும்பாபிஷேகப் பணியைத் தொடங்கி, சிறப்பாக நடத்தித் தருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலாயுதசுவாமி திருக்கோயிலுக்கு உபயதாரர்கள் மற்றும் ஆணையர் பொதுநல நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உபயதாரர்கள் நிதியில் மேற்கொள்ளப்படுகிற பணிகள் 80 சதவிகிதம் அளவிற்கு நிறைவுற்றிருக்கின்றன. அதேபோல, சுற்றுச்சுவர் அமைக்கின்ற பணிகள் தொடங்கப்பட்டு, பணிகள் எவ்வளவு முடிவுறுகிறதோ, அதற்கேற்றாற்போல், பொதுநல நிதியில் வழங்கப்பட்ட அந்தத் தொகைக்கு, ஒப்பந்ததாரர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றது. இன்னும் போர்க்கால அடிப்படையில் விரைவாக நடவடிக்கை எடுத்து, மாண்புமிகு உறுப்பினர் விரும்புகின்ற அந்தச் சுற்றுச்சுவர் பணியை வேகப்படுத்துவோம். மாசாணியம்மன் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்து 14 ஆண்டுகள் ஆகிவிட்டன. திருப்பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டார். அவர்கள் விட்டுவிட்டதை, இப்போது இந்த ஆட்சி ஏற்பட்டபிறகு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆகம விதிப்படி, 12 ஆண்டுகளுக்கு மேலான, எந்தெந்த திருக்கோயில்களிலெல்லாம் திருப்பணிகள் தொடங்கப்பட வேண்டுமோ, அவற்றையெல்லாம் கணக்கெடுத்து, இந்த ஆண்டு மாத்திரம் 668 திருக்கோயில்களுக்கு திருப்பணிகளைத் தொடங்க உத்தரவிட்டிருக்கின்றார். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கோரிய மாசாணியம்மன் திருக்கோயிலுக்கு, மண்டலக் குழு, தொல்லியல் குழு, அதேபோல், மாநிலக் குழு ஆகிய மூன்று குழுக்களுடைய ஒப்புதல் பெறப்பட்டு, 17 கோடி ரூபாய் செலவிலே திருப்பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

118—

பால் குளிரூட்டும் நிலையம்

***53115—திரு. S. சந்திரன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டத்தில் ஆவின் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரன் அவர்கள் கேட்டிருக்கின்றார். ஓரிடத்தில் பால் கொள்முதல் செய்ய குறைந்தபட்சம் 3,000 லிட்டருக்குக் குறையாமல் இருக்கும்போது மட்டுமே அங்கு தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டத்தில் சராசரியாக நாளொன்றுக்கு 200 லிட்டர் என்ற அளவில்தான் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. எனவே, அங்கு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன் அவர்கள்*

திரு. S. சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கிக் கடன் அட்டைகள் வழங்குதல், அதன்மூலம் அரசு மானியத்தில் கறவை மாடுகள் பெற்றுத் தருதல், சங்கத்திற்குக்*

கட்டடம் கட்டித் தருதல் ஆகியவற்றின்மூலம் எதிர்காலத்திலே பால் உற்பத்தி கூடும் வாய்ப்புள்ளது. எனவே, இதனை நிறைவேற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட முதல் கேள்விக்கு பதில் அளிக்கிறேன். திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள 188 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து உற்பத்தியாகும் பாலை கையாள காக்களூரில் ஒரு இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன்கொண்ட பால்பண்ணை செயல்பட்டு வருகிறது. கே.ஜி. கண்டிகையில் 8,000 லிட்டர் பால் கையாளும் திறன்கொண்ட தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையமும், ஊத்துக்கோட்டையில் 5,000 லிட்டர் பால் கையாளும் திறன்கொண்ட தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையமும், திருத்தணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாலாபுரத்தில் 5,000 லிட்டர் பால் கையாளும் திறன்கொண்ட தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையமும், பட்டரைபெரும்புதூரில் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையமும் செயல்பட்டு வருகின்றன.*

திருத்தணி தொகுதிக்குட்பட்ட பள்ளிப்பட்டு வட்டத்தில் தற்போது 5 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக சராசரியாக நாளொன்றுக்கு 200 லிட்டர் பால் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டு, அருகிலுள்ள கே.ஜி. கண்டிகை தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. எனவே, தற்போதைய நிலையில், பள்ளிப்பட்டு வட்டத்தில் பால் உற்பத்தி குறைவாக உள்ளதாலும், அதனருகில் கே.ஜி. கண்டிகையில் 8,000 லிட்டர் தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருவதாலும், பள்ளிப்பட்டு வட்டத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டிய சூழ்நிலை எழவில்லை. பள்ளிப்பட்டு வட்டத்தில் பால் உற்பத்தி அதிகரிக்கும்பட்சத்தில், அங்கு தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்

2023 ஏப்ரல் 6]

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன் அவர்கள்.*

திரு. S. சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பதி–திருத்தணி-சென்னை நெடுஞ்சாலை ஆயிரக்கணக்கான பயணிகள் பயன்படுத்தக்கூடிய சாலையாகும். அந்த நெடுஞ்சாலையில் நவீன வசதிகளுடன்கூடிய* Aavin Hi-Tech Parlour *அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பொறுத்தவரையில், அவர் இடத்தை அடையாளம்காட்டும்பட்சத்தில், அவருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தே நாம் செய்து தருவோம். அதற்கான ஏற்பாடுகளை நிச்சயம் செய்து தருவோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. அம்பேத்குமார், மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

119—

தொழிற்பயிற்சி நிலையம்

***60381—திரு. S. அம்பேத்குமார்:**

மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வந்தவாசி சட்டமன்றத் தொகுதியில் புதியதாக அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. அம்பேத்குமார் அவர்கள்.*

திரு. S. அம்பேத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த இளைஞர்களுக்கு வேலைத் தட்டுப்பாடு இருக்கும் இந்தக் காலக்கட்டத்தில் கழக ஆட்சி மலர்ந்தவுடன், கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் 1,43,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கிய (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசியை அடுத்த செய்யாறு பகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைந்துள்ளது. அந்த SIPCOT-ல், தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றவர்கள் அதிகமாகத் தேவைப்படுகின்ற காரணத்தினால் வந்தவாசியில் படித்த இளைஞர்களுக்கு ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தால், செய்யாறு தொழிற்பேட்டையில் நேரடியாக வேலைவாய்ப்பு பெற்று சிறந்து விளங்குவார்கள். ஆகவே, வந்தவாசி இளைஞர்களைக் கருத்தில்கொண்டு, அங்கே ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதி அமைந்துள்ள திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏற்கெனவே 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 22 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 2,468 இடங்களில், 1,635 இடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன; 833 இடங்கள் காலியாக உள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்களே போதுமானதாக உள்ளதால், திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதியில் புதிய*

2023 ஏப்ரல் 6]

அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. அம்பேத்குமார் அவர்கள்.*

திரு. S. அம்பேத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசியிலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் போதுமான பயிற்சியாளர்களும், ஆசிரியர்களும் இல்லாத காரணத்தினாலும், போதுமான பாடப் பிரிவுகள் இல்லாத காரணத்தினாலும், அங்கே மாணவர்களின் சேர்க்கை குறைவாக உள்ளது. வந்தவாசியைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிகளவில் காலணி தயாரிப்பு தொழில் சார்ந்தவர்களும், மோட்டார் தொழில் சார்ந்தவர்களும் இருப்பதால், அத்தகைய பாடப் பிரிவுகளை ஆராய்ந்து, அவற்றை உள்ளடக்கி வந்தவாசியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தர நமது அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.*

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, மொத்தமாக 90 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்தான் துவக்கப்பட்டன. ஆனால், நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் தளபதி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் மட்டும் 12 தொழிற்பயிற்சி நிலையங்கள் புதிதாகத் துவக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 102 தொழிற்பயிற்சி நிலையங்களில், 53 தொழிற்பயிற்சி நிலையங்களில் இந்த ஆண்டு நூற்றுக்கு நூறு சதவிகிதம் மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். மீதமுள்ள 49 தொழிற்பயிற்சி நிலையங்களில் 93 சதவிகிதம்* admission *நடைபெற்றிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த 102 தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்ற மாணவர்களில், இந்த ஆண்டு 76 சதவிகித மாணவர்கள், அங்கேயே* campus selection *மூலம்*

பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல, இதுபோன்ற படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை முழுமையாக வழங்க வேண்டும் என்ற தொலைநோக்குத் திட்டத்தோடு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் கடந்த ஆண்டு TATA நிறுவனத்தோடு ஒப்பந்தம் போடப்பட்டு, ரூ.2,877 கோடி ஒதுக்கீடு செய்து, தொழிற்பயிற்சி நிலையங்களை 4.0 தரத்திற்கு உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், பல்வேறு புதிய பயிற்சிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, Robotics and Digital Manufacturing, Electric Vehicle, Advanced CNC Machining, Manufacturing Process Control and Automation, Internet of Things, Advanced Additive Manufacturing, Advanced Welding, Advanced Painting Technology, Advanced Plumbing என இதுபோன்ற புதிய பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு தொழில் நிறுவனங்களைக் கொண்டு வருகின்ற நேரத்தில், அதற்கேற்ப தகுதி படைத்த, திறன் படைத்த இளைஞர்களை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இத்தகைய பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை இருக்கிறது. நிறைய பயிற்சிகளைக் கொடுக்க வேண்டும்; வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்ற காரணத்தினால், அவர்களின் கருத்துகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிதிநிலைமைக்கேற்ப எதிர்காலத்தில் புதிய தொழிற்பயிற்சி நிலையம் துவங்குவது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 120, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

120—

மாணவியர் விடுதி

***3822—திரு. சு. ரவி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 ஏப்ரல் 6]

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், ஆட்டுப்பாக்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் ஆதி திராவிட மாணவிகளுக்கு ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் சட்டமன்றத் தொகுதி, நெமிலி ஊராட்சி ஒன்றியம், ஆட்டுப்பாக்கம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மொத்தம் 1,480 மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். இதில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த 337 மாணவர்கள், 271 மாணவியர்கள் என மொத்தம் 608 மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். இக்கல்லூரிக்கு அருகிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின்கீழ் செயல்படும் கல்லூரி மாணவ/மாணவியர் விடுதியில் அனுமதிக்கப்பட்ட 100 இடங்களில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சார்ந்த 24 மாணவியர்கள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். எனவே, கல்லூரி மாணவியர் விடுதி கட்டுவது குறித்து உரிய ஆய்வு செய்து, தேவையின் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத்தினுடைய பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட அரக்கோணம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சுமார் 300-க்கும் மேற்பட்ட ஆதி திராவிட மாணவிகள் பயின்று வருகிறார்கள். அவர்களெல்லாம் தொலைதூரத்திலிருந்து வருகிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு*

அம்மா அவர்களுடைய ஆட்சியிலும், அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சியிலும் அங்கே மூன்று விடுதிகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், ஆதி திராவிட மாணவியர் விடுதி இதுவரை துவங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆதி திராவிட மாணவியர்களுடைய நலன் கருதி, இந்த ஆண்டிலேயே அவர்களுக்கு விடுதி துவங்குவதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–15

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். இருந்தபோதிலும், நம்முடைய ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு, 6 கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகள் கட்டப்படும் என்று சென்ற நிதியாண்டில் அறிவிக்கப்பட்டு, அந்தப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும், M.C. ராஜா வளாகத்தில் ரூ.44 கோடி மதிப்பீட்டில் 10 தளங்களைக் கொண்ட கல்லூரி மாணவர் விடுதியும் கட்டப்படும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவித்து, அதற்கான பணிகள் விரைவில் தொடங்கவிருக்கின்றன. மேலும், இந்த நிதியாண்டில் கோவை, நீலகிரி, திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் புதிய கல்லூரி மாணவர் விடுதிகள் கட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள் என்பதை இந்த அவைக்குப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பள்ளி மாணவ விடுதிகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தால், அந்தப் பள்ளி மாணவ, மாணவியர் விடுதிகளை கல்லூரி மாணவர் விடுதிகளாக மாற்றுவதற்கும் நாங்கள் பரிசீலித்து வருகிறோம். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை கண்டிப்பாக விரைந்து நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அரசுப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பிலிருந்து பன்னிரெண்டாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள் அரசால் இலவசமாகத் தரப்படுகின்றன. அதே மாணவர்கள்தான் அரசுக் கல்லூரிகளில் சென்று சேருகிறார்கள்; படிக்கிறார்கள். குறிப்பாக, ஆதி திராவிட மாணவர்கள் பாடப் புத்தகங்கள் வாங்க முடியாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். பல மாணவர்கள் பாடப் புத்தகம் இல்லாமலேயே படித்து வருகின்றார்கள். எனவே, அரசுக் கல்லூரியிலே படிக்கக்கூடிய ஆதி திராவிட மாணவ, மாணவியர்களுக்கு இந்த அரசு இலவச பாடப் புத்தகம் வழங்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பள்ளிக்கூடத்தில் படிக்கக்கூடிய அனைத்து ஆதி திராவிட மாணவ, மாணவிகளுக்கும் பள்ளிப் பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள் ஆகியவை கொடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடனும் கலந்துபேசி, இதற்கு உரிய தீர்வு காண்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு**: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) செங்கல்பட்டு மாவட்டம், மூவரசம்பட்டு கிராமம், தர்மலிங்கேஸ்வரர் கோயில் தீர்த்தவாரி குளத்தில் மூழ்கி ஐந்து பேர் உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் பங்குனி உத்திரத்தை முன்னிட்டு, தமிழ்நாடெங்கும் முருகன் திருக்கோயில்களில் சிறப்புப் பூஜைகள், தேரோட்டம் மற்றும் தீர்த்தவாரி உற்சவ நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சென்னை, நங்கநல்லூரில் வரலாற்றுப் பெருமை வாய்ந்த அருள்மிகு தர்மலிங்கேஸ்வரர் திருக்கோயிலிலும் பங்குனி உத்திரத் திருவிழா காலை முதலே சிறப்பாக நடைபெற்றது. அதில் ஒரு நிகழ்ச்சியாக தீர்த்தவாரி நிகழ்ச்சி, அக்கோயிலிலிருந்து 500 மீட்டர் தூரமுள்ள மூவரசம்பட்டு என்ற இடத்தில் உள்ள குளத்தில் நடைபெறுவது வழக்கம். அக்குளம் 20 அடி ஆழம் கொண்டது, ஓரளவு தண்ணீர் உள்ளது. குளத்தின் அடிப்பகுதியில் சேரும், சகதியும் இருந்ததாகக் கூறப்படுகிறது.*

நேற்று காலை 9-30 மணியளவில் வழக்கம்போல் சுமார் 20 அர்ச்சகர்கள் சாமி சிலைகளை பல்லக்கில் தீர்த்தவாரி நிகழ்ச்சிக்காக அக்குளத்திற்கு எடுத்து வந்தனர். அக்குளத்தில் அர்ச்சகர்கள் இறங்கி சாமி சிலைகளை தண்ணீரில் நீராட்ட முயன்றபோது, நீச்சல் தெரியாததால், ஒருவர் தண்ணீரில் மூழ்கத் தொடங்கியதை பார்த்த மற்ற அர்ச்சகர்கள், ஒருவர் பின் ஒருவராக அவரைக் காப்பாற்ற முயன்றனர். ஆனால், காப்பாற்ற முயன்றவர்களும் ஒருவர் பின் ஒருவராக குளத்தில் மூழ்கத் தொடங்கியதைத் தொடர்ந்து, அங்கிருந்த மற்றவர்கள், அருகில் இருந்த நீச்சல் தெரிந்தவர்களை உதவிக்கு அழைத்தனர், ஆனால், அவர்களது முயற்சி பலனளிக்கவில்லை. நீரில் மூழ்கிய ஐவரும் இறந்துவிட்டனர். அதைத் தொடர்ந்து தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை அழைக்கப்பட்டு, அவர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இறுதியாக இறந்தவர்களின் உடல்கள் மீட்கப்பட்டன. 1. சூர்யா, நங்கநல்லூர்; 2. ராகவ், மடிப்பாக்கம்;

3. யோகேஷ்வரன், கீழ்க்கட்டளை; 4. ராகவ், நங்கநல்லூர்; 5. வானேஷ், நங்கநல்லூர்.

மேற்கண்ட ஐந்து நபர்களும் 24 வயதிற்குட்பட்டவர்கள் என்று தெரிய வருகிறது. திருக்கோயில்களுக்குச் சொந்தமான குளங்களையும், திருக்கோயில் நிகழ்ச்சிகள் நடைபெறும் குளங்களையும் தூர்வாரும் பணிகளை உடனடியாக இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். மேலும், இளம் வயதிலே இறந்த அந்த ஐவருக்கும் அரசு அறிவித்த நிவாரணம் போதாது. நிவாரணத் தொகையை ரூ.10 இலட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும் என்று இந்த அரசை வலியுறுத்துகிறேன்.

இதுபோலவே, விழுப்புரம் மாவட்டம், மயிலம், அருள்மிகு முருகன் திருக்கோயிலில் நாராயணன் என்ற 45 வயதுள்ள பக்தர் ஒருவர் அங்குள்ள குளத்தில் குளித்தபோது, குளத்தில் மூழ்கி இறந்துள்ளார் என்ற செய்தி வந்துள்ளது. இவரது குடும்பத்தாருக்கும் அரசு தகுந்த நிவாரணம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

நீரில் மூழ்கி உயிரிழந்தவர்களை இழந்து வாடும் அவர்களது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையிலும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து விட்டோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த நங்கநல்லூரில் நடைபெற்ற இந்த நிகழ்வு குறித்து ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ச. சிவகுமார், திரு. ஜி.கே. மணி, திரு. இரா. அருள், திரு. தி. வேல்முருகன், திரு. ஈ.ஆர். ஈஸ்வரன், திரு. மு. ஜெகன் மூர்த்தி, திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. கு. செல்வபெருந்தகை, திரு. ஜே.ஜி. பிரின்ஸ், திரு. செ. ராஜேஷ் குமார், திரு. இராம. கருமாணிக்கம், திரு. S.S. பாலாஜி, திரு. ம. சிந்தனை செல்வன், திரு. ட்டி. இராமச்சந்திரன், திரு. K. மாரிமுத்து, திரு. வி.பி. நாகைமாலி ஆகியோர் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள்.

இதுகுறித்து சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் அரசின் கவனத்தை ஈர்க்கிறேன் என்று ஒரு நிமிடத்தில் பேசி முடிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நங்கநல்லூர்,மூவரசம்பட்டு அருகில் தர்மலிங்கேஸ்வரர் கோயிலில் தீர்த்தவாரி நிகழ்ச்சியின்போது 5 நபர்கள் அகால மரணமடைந்திருக்கிறார்கள். இறைவனுக்கு தினமும் ஆலயத்தில் அபிஷேகம் செய்பவர்கள், அர்ச்சனை செய்பவர்கள், நாளை மறுநாள் தர்மலிங்கேஸ்வரருக்கு நடக்க இருக்கிற வழிபாட்டிற்கு அனுமதி கேட்டுவிட்டு, நேற்று முருகனுடைய சிலையை எடுத்து, அங்கே தீர்த்தவாரியில் ஈடுபட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே ஆழ்ந்த இரங்கலை காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக அந்தக் குடும்பங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதோடுமட்டுமல்லாமல், ஆன்மிகத்தில் அரசியல் கலக்காமல், ஆன்மிகம் வேறு, அரசியல் வேறு, ஆட்சி வேறு என்று உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களை அனுப்பியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அவரும், உடல் உடற்கூறு ஆய்வு முடியும்வரை அங்கேயிருந்து, அவர்களுடைய வீடுகளில் அந்த உடல்களையெல்லாம் ஒப்படைத்து, மாலை அணிவித்துவிட்டு, அங்கேயேயிருந்து உடல்களை அடக்கம் செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார். இரண்டு இலட்சம் ரூபாய் தருவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இன்று அரசியலிலே புற ஆரவாரத்திற்கு மாறாக, அகநாகரிகத்தோடு ஆன்மிகம் வேறு, அரசியல் வேறு என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மணியடிக்கப்பெற்றது) எடுத்த நடவடிக்கைகளை நாங்கள் பாராட்டுகிறோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடம். (குறுக்கீடு)

திரு. கு. செல்வபெருந்தகை: இனிவரும் காலங்களில் தீயணைப்புப் படை, Ambulance வண்டிகள் இல்லாமல் இப்படிப்பட்ட நிகழ்வுகளை நடத்தக்கூடாது என்று அறிவுறுத்தி

2023 ஏப்ரல் 6] *[திரு. கு. செல்வபெருந்தகை]*

மக்களைப் பாதுகாப்பதற்கு நீங்கள் உத்தரவிட வேண்டுமென்று தங்கள் வாயிலாக அறிவுறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையை அடுத்துள்ள நங்கநல்லூரை ஒட்டியிருக்கின்ற தர்மலிங்கேஸ்வரர் திருக்கோயிலில் நேற்று பங்குனி உத்திரத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் பக்தர்கள் ஏராளமாகக் கூடி, நாளை சிவபெருமானுக்கு வழிபாடு செய்யயிருக்கக்கூடிய அந்தச் சூழலில், அங்கே ஐந்து நபர்கள் தீர்த்தவாரிக் குளத்தில் உயிரிழந்தார்கள் என்ற செய்தி மிகுந்த அதிர்ச்சியையும், வேதனையையும் அளிக்கிறது. அவர்களுக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் இந்த மாமன்றத்தின் வாயிலாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். செய்தி அறிந்தவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக உத்தரவிட்டு, மாவட்ட அமைச்சர் மரியாதைக்குரிய திரு. தா.மோ. அன்பரசன் அவர்களை அனுப்பிவைத்து, உரிய பணிகளையெல்லாம் மேற்கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது. ஆகவே, இதையெல்லாம் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்ற அதேவேளையில், இப்படி குளங்களில் மூழ்குவது, ஆற்றில் மூழ்குவது போன்ற இடங்களில் காவல் துறையை அதிகளவில் ஈடுபடச் செய்து, இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடைபெறாவண்ணம் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி, அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விபத்து நடைபெற்றவுடனேயே அந்த மாவட்டத்திற்கான நிர்வாக அமைச்சர் அண்ணன் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களை அனுப்பி, தொடர்ச்சியாக மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு உரிய இழப்பீட்டையும் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே, இதுபோன்று ஆன்மிக நிகழ்வுகள் தொடர்பாக பல விபத்துகள் நடைபெற்றிருக்கின்றன. இதிலே இரண்டு விஷயங்களை நாம் பார்க்க வேண்டியிருக்கின்றது. ஒன்று, இது*

TRUTH ALONE TRIUMPHS

குளத்திலே மூழ்கிய விபத்து. மற்றொன்று, இது திருக்கோயில் சம்பந்தப்பட்ட நிகழ்வு. இது மத நம்பிக்கை சம்பந்தப்பட்டது என்றாலும்கூட, அவர்கள் முறையாக அனுமதியைப் பெறுகின்ற வகையிலே, இதுபோன்ற நிகழ்வுகளை கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, உரிய வழிகாட்டுதல் வழங்கக்கூடிய அளவிற்கு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை விதிமுறைகளை வகுக்க வேண்டும். மேலும், இது ஒரு தனியார் கோயில் என அறிகிறேன். இதுபோன்று நிறைய கோயில்கள் மத நம்பிக்கையின் அடிப்படையில், அவர்கள் நிகழ்த்தக்கூடிய நிகழ்வுகளுக்கு உரிய அனுமதியைப் பெறுவதில்லை. எனவே, கூடுமானவரை இதுபோன்ற திருக்கோயில்களை முடிந்தால், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலே கொண்டு வர வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையை அடுத்த நங்கநல்லூர் MMTC Colony, தர்மலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற தீர்த்தவாரி நிகழ்ச்சியில், அதன் அருகிலுள்ள மூவரசம்பட்டு பகுதியிலுள்ள குளத்தில் ஐந்து இளைஞர்கள் மூழ்கி பரிதாபமாக இறந்துள்ளனர். இது சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெரும் பதற்றத்தையும், அனுதாபத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது. இதை அறிந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களை அரசின் சார்பில் அங்கு அனுப்பி, அஞ்சலி செலுத்தியிருக்கிறார்கள். இதுகுறித்து இந்த அவையினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, பல்லாவரத்தை அடுத்த எம்.எம்.டி.சி. காலனியில் அமைந்துள்ள தர்மலிங்கேஸ்வரர் கோயில்

பங்குனி உத்திரத் திருவிழா தீர்த்தவாரி நிகழ்ச்சியின்போது மூவரசம்பட்டு பகுதியிலுள்ள குளத்தில் 5 அர்ச்சகர்கள் மூழ்கி உயிரிழந்திருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் இளம் வயதைச் சார்ந்தவர்கள். இதை அறிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உடனடியாக, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களை அங்கு அனுப்பி, அரசின் சார்பிலே அஞ்சலி செலுத்தி, அவர்களுடைய குடும்பத்தினருக்கு உதவித் தொகையையும் வழங்கியிருக்கிறார்கள். அந்த உதவித் தொகையை ரூ.10 இலட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும். குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும். இனிவருங்காலங்களில், இத்தகைய நிகழ்வுகள் நடைபெறாதவாறு அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, நங்கநல்லூர் அருகே நேற்று நடந்த இந்தத் துயரச் சம்பவத்தைக் கேள்விப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், காவல் துறை ஆணையர், கூடுதல் ஆணையர் மற்றும் வருவாய்த் துறை உயரதிகாரிகளையும் அங்கு அனுப்பி, உடனடியாக, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டமைக்காகவும், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.2 இலட்சம் நிதியுதவி அளித்தமைக்காகவும், இதுபோன்ற சம்பவங்கள் இனி நடைபெறாதவண்ணம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தியமைக்காகவும், என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இறந்தவர்கள் ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்தவர்கள். அந்தக் கோயிலில் உள்ள சுவாமி சிலைகளை உற்சவம் செய்கின்ற அந்தத் தொழிலை மட்டும் செய்கின்ற அந்தக் குடும்பத்தாருக்கு வேறு எந்தவிதமான வருமானமும் இல்லை. எனவே, கருணை அடிப்படையில், அந்தக் குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு அரசு வேலை வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்கிற அளவில் அரசின் கவனத்தை ஈர்த்து, உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கு தமிழக வாழ்வுரிமைக்

கட்சியின் சார்பாக என்னுடைய ஆழ்ந்த இரங்கலைப் பதிவு செய்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம், சென்னை, நங்கநல்லூர் அருகே எம்.எம்.டி.சி. காலனியில் அமைந்துள்ள புகழ்பெற்ற தர்மலிங்கேஸ்வரர் பங்குனி உத்திர தீர்த்தவாரி திருவிழா விமரிசையாக நடைபெற்றது. இதில், புகழ்பெற்ற தர்மலிங்கேஸ்வரர் கோயிலுக்குக் குளம் கிடையாது. கோயில் நிர்வாகம் ஒவ்வொரு முறையும் அருகே உள்ள மூவரசம்பட்டு ஊராட்சி, கங்கையம்மன் கோயில் குளத்தில்தான் தீர்த்தவாரி நடத்துவார்கள். அதிகம் தண்ணீர் உள்ள குளத்தில் அர்ச்சகர்கள் இறங்கி பாராயணம் செய்யும்போது, கடைசியாக இறங்கியவர் எதிர்பாராத விதமாக ஆழமான பகுதிக்குச் சென்றிருக்கிறார். இதில், 5 அர்ச்சகர்களுக்கு நீச்சல் தெரியாத காரணத்தினால், நீரில் மூழ்கி இறந்துள்ளார்கள் என்பது பெரும் அதிர்ச்சியாகவும், வேதனையாகவும் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: இதில், கோயில் நிருவாக அர்ச்சகர்கள் குளத்தில் இறங்கும்போது, எவ்வளவு தூரம் தண்ணீர் உள்ளது; நீரில் நின்று இவர்கள் பாராயணம் செய்யலாமா என்று எந்த ஆய்வும் செய்யாமல் இருந்த காரணத்தினால், நேற்று, 5 உயிர்கள் பலியாகி இருக்கின்றன. இதனால் அந்தப் பகுதி முழுவதிலும் பெரும் பரபரப்பும், வேதனையும் நிலவிக் கொண்டிருக்கிறது. பலியானவர்கள் இளம் அர்ச்சகர்கள். புழுதிவாக்கம், முத்து முகமது தெருவைச் சேர்ந்த ராகவ், வயது 18, நங்கநல்லூர், எம்.எம்.டி.சி. காலனியைச் சேர்ந்த வானேஷ், வயது 22 மற்றும் சூர்யா, வயது 21, புழுதிவாக்கம், ராஜேஸ்வரி நகரைச் சேர்ந்த ராகவன், வயது 22, மடிப்பாக்கம், பாலையா தோட்டம் பகுதியைச் சேர்ந்த யோகேஸ்வரன், வயது 21. இதில், ராகவ், வானேஷ், ராகவன் ஆகிய 3 பேரும் கல்லூரி ஒன்றில் சி.ஏ. படித்துக் கொண்டிருந்தார்கள். சூர்யாவும், யோகேஸ்வரனும் தனியார் துறையில் வேலை பார்த்தவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.*

திரு. மு. ஜெகன் மூர்த்தி: *கோயிலிலுள்ள மூத்த அர்ச்சகர்களுக்கு உதவியாக இவர்கள் அர்ச்சகர் பணி செய்து வந்திருக்கிறார்கள். இவர்களுடைய மறைவால் வாடும் பெற்றோர்கள், நண்பர்கள், உறவினர்கள், பக்தர்கள் என அனைவருக்கும் புரட்சி பாரதம் கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும், இச்சம்பவம் குறித்து விசாரணைக் குழு அமைத்து, விசாரணை நடத்த அரசு முன்வருமா எனக் கேட்டு, அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நங்கநல்லூர் அருள்மிகு தர்மலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நேற்று காலை, இதயம் இருப்பவர்கள் அனைவரும் இரக்கப்படுகின்ற அளவிற்கு நடந்த துயர சம்பவத்தைக் குறித்து, சபையிலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்களும், கம்யூனிஸ்ட் இயக்கங்களைச் சார்ந்த சட்டமன்றக் குழுத் தலைவர்களான திரு. வி.பி. நாகைமாலி அவர்களும், திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்களும், திரு. தி. வேல்முருகன் அவர்களும், விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த திரு. S.S. பாலாஜி அவர்களும், திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்களும், அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்களும் இன்றைக்கு அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமர்ந்திருக்கிறார்கள்.*

முற்பகல் 11–30

இந்த விபத்து நடந்த அந்தக் குளம் திருக்கோயிலின் குளம் அல்ல. அது பஞ்சாயத்தால் நிருவகிக்கப்படுகின்ற குளம். இந்தக் குளத்தில் கடந்த நான்கு ஆண்டுக் காலமாகத்தான் தீர்த்தவாரி வைபவம் நடந்துகொண்டிருக்கிறது. சுவாமியினுடைய பிரம்மோற்சவத் திருவிழாவை முன்னிட்டு தீர்த்தவாரி நிகழ்வு நடைபெறும். இந்தக் குளத்திற்கு 2021 ஆம் ஆண்டு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர், அந்த மாவட்டத்தின் இன்றைய மாண்புமிகு அமைச்சர் அருமை அண்ணன் திரு. தா.மோ. அன்பரசன்

[திரு. பி.கே. சேகர்பாபு] [2023 ஏப்ரல் 6

அவர்கள்தான் 50 இலட்சம் ரூபாய் செலவிலே நடைபாதை மற்றும் சுற்றுச்சுவர் போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தந்துள்ளார். சர்வமங்கல சேவா சங்க டிரஸ்ட் என்ற ஒரு சங்கத்தை ஏற்படுத்தி, அதில் 5 பேர் நிருவாகிகளாக இருந்து, இந்தத் திருக்கோயிலை நிருவகித்து வருகின்றார்கள்.

கடந்த ஆண்டு 8–9–2022 அன்று, தொல்லியல் துறை அனுமதி, மண்டலக் குழு அனுமதி, அதேபோல், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் உயர்மட்டக் குழுவான மாநிலக் குழு அனுமதியில்லாமல், இத்திருக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்ய முற்பட்டார்கள். உடனடியாக இணை ஆணையர் அவர்கள், 6–9–2022 அன்று பக்தஆஞ்சநேயர் திருக்கோயிலில் இருக்கின்ற செயல் அலுவலரை இந்தத் திருக்கோயிலின் தக்காராக நியமித்தார்கள். உடனடியாக அந்தத் திருக்கோயிலைச் சார்ந்த அந்த டிரஸ்டியினர், மேல்முறையீடு செய்து, ஆணையர் அலுவலகத்திலே மனு செய்திருந்தார்கள். அந்த மனு வருகின்ற 12–4–2023 அன்று விசாரணைக்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இதை விலாவாரியாக சொல்வதற்குக் காரணம், தானாக முன்வந்து, இந்த டிரஸ்டியினர் எடுத்துக்கொள்கின்ற இந்தப் பணிகளின் காரணமாக, இப்படிப்பட்ட விபத்துகள் நடைபெறுகின்றன. எது எப்படியிருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியது விலைமதிக்க முடியாத மனித உயிர்கள். அதில் ராகவ், சூர்யா, வானேஷ், யோகேஸ்வரன் மற்றும் ராகவன் ஆகிய 5 விலைமதிப்பில்லாத உயிர்கள் பறிபோய், அவர்களுடைய தாய், தந்தைகளின் கனவுகள் நேற்றைக்கு சிதைந்தபோது, முதல்வர் அவர்கள் படுகின்ற துயரத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உணராதவர் அல்ல. இரக்கத்தின் இதயத்தை தன்னுள்ளே வைத்திருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தச் சம்பவம் நடந்தவுடன், உடனடியாக அந்த மாவட்டத்தின் அமைச்சரை அழைத்து, அந்தச் சம்பவத்திற்குக் காரணம் யாரென்று கண்டறிந்து, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றார்.

அந்தக் குளம், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்குச் சொந்தமானது என்றவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னை அழைத்து இப்படி தீர்த்தவாரி வைபவம் நடக்கின்றபோது, குளத்தை தூய்மையில்லாமலும், தூர்வாராத நிலையிலும் ஏன் வைத்திருந்தீர்கள் என்று கண்டித்தார்கள்.

நிச்சயமாக, இப்படி ஒரு நிகழ்ச்சி நடத்தப்படுவதை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்கு அவர்கள் தெரிவிக்கவில்லை. இருந்தாலும், இந்த நேரத்தில் இவ்வளவு பெரிய இழப்பில், அதை ஒரு குற்றமாகச் சொல்ல நான் விரும்பவில்லை. இந்த அளவில், உடனடியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அனைவரையும் அழைத்துப் பேசினார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள், அவர்களின் இல்லங்களுக்கு நேரடியாகச் சென்று, ஆறுதல் தெரிவித்து, அவர்களின் இறுதி ஊர்வலம்வரை உடனிருந்து அடக்கம் செய்துவிட்டு வந்ததோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தலா இரண்டு இலட்சம் ரூபாய், அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு நிவாரண நிதியாக வழங்கியிருக்கின்றார்கள். இங்கே, பேசிய உறுப்பினர்கள் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். கடந்த காலங்களில் என்ன நடைமுறைகள் இப்படிப்பட்ட விபத்துகளின்போது பின்பற்றப்பட்டனவோ, அதே நடைமுறையை மாண்புமிகு முதல்வரவர்கள் பின்பற்றியிருக்கின்றார்கள். மேலும், இதுபோன்ற சம்பவங்கள் இனி நடக்கக்கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கண்டிப்பான உத்தரவிட்டிருக்கின்றார்கள். அந்தப் பிள்ளைகளை இழந்துவாடும் அந்தக் குடும்பத்தாருக்கும், அந்தப் பிள்ளைகள் மறைவால் அந்தப் பகுதியில் நிலவுகின்ற ஒரு துக்ககரமான நிகழ்வுக்கும், ஒட்டுமொத்தமாக எந்தத் துறையாக இருந்தாலும், இந்த ஆட்சிக்கு பங்கிருக்கிறது என்பதால், வருகின்ற காலங்களில் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் இருப்பதற்கும், அதேபோல் இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடத்துகின்றபோது, சம்பந்தப்பட்ட டிரஸ்டுகள், அமைப்புகள் துறைக்கு தகவலைத் தெரிவிக்க வேண்டுமென்ற அன்பான வேண்டுகோளையும் இந்த மாமன்றத்தில் வைத்து, ஆழ்ந்த இரங்கலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பாக இந்த அவையிலே பதிவிடுகிறேன். அந்தக் குடும்பத்தாருக்கு அவர்கள் கோருகின்ற உதவிகளில் எதையெல்லாம் செய்து தரமுடியுமோ, அதையெல்லாம் செய்து தருவதற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் முன்வருவார்கள் என்பதையும் தெரிவித்து, அந்த ஐந்து இளைஞர்களை இழந்துவாடும் அந்தக் குடும்பத்தாருக்கும், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி.

[2023 ஏப்ரல் 6

முற்பகல் 11–35

(ஆ) கோவில்பட்டி நகராட்சி, தினசரி காய்கறி சந்தை, கட்டடம் புதுப்பிப்பு, மாற்று இடத்தில் புதிய கடைகள் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நகராட்சி, தினசரி சந்தை, புதிய கட்டடம் கட்டுவது தொடர்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள், விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு ஒன்று கொடுத்துள்ளார். அதில் ஒரே ஒரு கேள்வியை மட்டும் நீங்கள் கேட்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், நான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள். ஒரு நிமிடத்தில் ஒரு கேள்வியை கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.*

திரு. கடம்பூர் ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி நகராட்சியில் சுமார் 60 ஆண்டு காலமாக பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் பெயரில் தினசரி காய்கறி சந்தை செயல்பட்டு வருகிறது. கோவில்பட்டி தொகுதி மட்டுமல்லாமல், கோவில்பட்டி, சாத்தூர், விளாத்திகுளம், சங்கரன்கோவில், ஒட்டப்பிடாரம் ஆகிய ஐந்து தொகுதிகளைச் சேர்ந்த சுமார் 10,000–க்கும் மேற்பட்ட வியாபாரிகள், விவசாயிகள் அதைப் பயன்படுத்தி வருகிறார்கள். இப்போது அரசின் சார்பாக நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் புதிய கடைகள் கட்டுவதற்குத் திட்டம் தயாரிக்கப்பட்டு, 250 கடைகள் கட்டுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, அந்த தினசரி காய்கறி சந்தையில் 396 கடைகள் செயல்பட்டு வருகின்றன. மாற்று இடத்தில் புதிய கட்டடம் கட்டுவதால், 146 வியாபாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. இது அந்த வியாபாரிகளிடத்தில் பதற்றத்தையும், அச்சத்தையும் உருவாக்கியிருக்கின்றது. சந்தையில் செயல்பட்டு வரும் தினசரி காய்கறி கடை கட்டடங்களெல்லாம் கொரோனா காலத்தில் மூடியிருந்த நேரத்தில், தங்களது சொந்த நிதியில் அவர்கள் பராமரிப்புப் பணிகள் செய்து தற்போது கடைகளை நல்ல நிலையில் வைத்திருக்கின்றார்கள். இந்நிலையில், நகருக்கு மிக அருகில் ஏற்கெனவே நகராட்சி குப்பைகள் கொட்டப்பட்டு,*

2023 ஏப்ரல் 6] [திரு. கடம்பூர் ராஜூ]

இப்போது குப்பைகள் எல்லாம் அப்புறப்படுத்தப்பட்ட ஒரு இடத்தில், 5 ஏக்கர் நிலம் பயன்பாட்டிற்கு உகந்ததாக இருக்கின்றது. எனவே, அந்த இடத்தில் மாற்று ஏற்பாடாக புதியதாக கடைகளைக் கட்டி, அரசிற்கு வருவாய் கிடைக்கின்ற வகையில் அங்கே உள்ள வியாபாரிகளும், பொதுமக்களும் அவற்றைப் பயன்படுத்துகின்ற நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தரவேண்டுமென அரசின் கவனத்தை ஈர்த்து அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியில் ஏற்கெனவே, 396 கடைகள் இருந்ததாகவும், இப்போது புதியதாக 250 கடைகள் மட்டுமே கட்டப்படுவதாகவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல அருகில் இருக்கின்ற 10, 15 ஊர்களில் இருந்து பொதுமக்கள் வரவும், 400-க்கும் மேற்பட்ட கனரக வாகனங்கள் உள்ளே சென்று வரவும், அங்கு அதிக வசதி செய்யப்படவேண்டும் என்பதற்காகத்தான் கடைகளைக் குறைத்து, இடங்களை அகலப்படுத்திக் கொடுப்பதாக, நம்முடைய அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே, இருந்த கடைக்காரர்களுக்கு மீண்டும் அந்தக் கடைகளைத் தரவேண்டுமென்று சொன்னால்— பக்கத்தில் குப்பைகள் அகற்றப்பட்டு 5 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். குப்பைகள் அகற்றப்பட்ட இடத்தை உடனடியாக மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு,* Pollution Control Board *அனுமதியைப் பெறவேண்டும். ஏனென்றால், அந்த இடத்தில் கடைகளை அமைத்தால் எந்தவிதமான பாதிப்பு ஏற்படும் என்று தெரியாது. இருந்தாலும் அதை ஆய்வு செய்து, அத்தனை பேருக்கும் கடைகளை கட்டித்தருகின்ற பணி மேற்கொள்ளப்படும். மேலும்,* ESI *மருத்துவமனை அருகில் வேறு ஓர் இடம் இருப்பதாகவும் சொல்லியிருக்கிறீர்கள். அதையும் தொழிலாளர் நலத் துறையிடம் கேட்டு, அவர்கள் இடம் அளித்தார்கள் என்றால் அத்தனை பேருக்கும் கடைகள் கட்டித்தர ஆவன செய்யப்படும்.*

4. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 27	–	**தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை**
(ஆ) கோரிக்கை எண் 46	–	**தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)**
(இ) கோரிக்கை எண் 44	–	**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை**

(அ) கோரிக்கை எண் 27- தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 27–தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) ஒரு நிமிடம் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள், நான் சொல்கிறேன். விதி 55–ன்கீழ், நிறையபேர் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அதைத் துறைக்கு அனுப்பி, அதற்கு பதில் வந்து, மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்வதற்கு தயார் நிலையில் இருந்தால், மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜூ அவர்களுக்கு வழங்கியதுபோல அந்த வாய்ப்பு வழங்கப்படும். நீங்கள் கொடுத்தது எல்லாம் என்னுடைய கவனத்தில் இருக்கிறது. பதில் வந்தபிறகு நடவடிக்கை எடுக்கலாம். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

*__மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2023 ஏப்ரல் 6] [திரு. தங்கம் தென்னரசு]

"தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,063,78,84,000/–, மூலதனக் கணக்கில் ரூ.504,30,06,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.700,23,34,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 168, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 244, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,063,78,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.504,30,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,23,34,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 262, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 325, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன்.

திரு. R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,063,78,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.504,30,06,000/– மற்றும் கடன்

கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1744, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன்.

திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,063,78,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.504,30,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3397, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4038, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,063,78,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.504,30,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,23,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4811, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6713, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,063,78,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.504,30,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,23,34,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 359, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,063,78,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.504,30,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,23,34,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 736, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

***திரு. S. சதாசிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,063,78,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.504,30,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,23,34,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2514, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,063,78,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.504,30,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,23,34,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6347, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,063,78,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.504,30,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,23,34,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7000, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,063,78,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.504,30,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,23,34,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 684, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி.

திரு. அ. பண்ணாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,063,78,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.504,30,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,23,34,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 932, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,063,78,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.504,30,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,23,34,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1405, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,063,78,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.504,30,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,23,34,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2380, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,063,78,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.504,30,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,23,34,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2606, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன்.

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,063,78,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.504,30,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,23,34,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2662, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.

செல்ல விரும்பவில்லை. இப்போது அதேபோன்ற ஒரு சூழ்நிலை மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களும் இருக்கின்றபோது கொண்டுவந்த Amway தொழிற்சாலைக்கும் ஏற்பட்டிருக்கிறது. தொழிற்சாலைகள், தென் தமிழகத்தில் வருவது என்பது மிகவும் கடினமாக இருக்கிறது. அந்தத் தொழிற்சாலை சிறப்பாக அழகுசாதனப் பொருட்கள் தயாரிக்கின்ற தொழிற்சாலை; Multi-level Marketing Company ஆக இருக்கின்ற காரணத்தினால், அமலாக்கத் துறை, அந்த நிறுவனத்தை முழுமையாக முடக்கியிருக்கிறது என்கின்ற செய்தி கிட்டத்தட்ட 6 மாதத்திற்கு முன்பாக ஒரு செய்தித்தாளில் வந்தது. அது உண்மையாக இருந்தால், உடனடியாக தமிழக அரசு, மத்திய அரசிடம்பேசி, அந்த நிறுவனத்தைக் காப்பாற்ற வேண்டும். இல்லையென்றால், நோக்கியாவைப் போல, மீண்டும் சுமார் 5 ஆயிரம் நபர்கள் வேலை இழக்கின்ற நிலைமை ஏற்பட்டுவிடும். அதுவும், தென் தமிழகத்தில் இருக்கின்ற தொழிற்சாலை. அதைப் பாதுகாக்க வேண்டிய கடமை இந்த அரசுக்கு இருக்கின்றது என்பதை நான் இந்தநேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2015 ஆம் ஆண்டு செப்டம்பர் 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் மாண்புமிகு அம்மா அவர்கள் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தினார்கள். அப்போது நான் தொழில் துறை அமைச்சராக இருந்தேன். நான் இந்த நேரத்தில் அவர்களை நினைவுகூர்வது சரியாக இருக்குமென்று நினைக்கிறேன். நான் ஒரு சாதாரண கிராமத்திலிருந்து வந்தவன். என்னுடைய வீடு, கிராமத்திலே கடைசி வீடு, கார்கூட செல்ல முடியாத வீடு. ஆனால், அவ்வளவு பெரிய தொழில் மாநாட்டை நடத்தும் பொறுப்பை என்னிடத்திலே கொடுத்து, அந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்த எனக்கு வாய்ப்பைக் கொடுத்தவர் மரியாதைக்குரிய எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை நான் எப்போதும் நெஞ்சிலே நிறுத்தி இருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, அண்ணன் எடப்பாடியார் அவர்களும் ஒரு சாமானியர். ஒரு கிராமத்திலேயிருந்து வந்தவர். அவரும் தொழில்கள் அதிகரிக்க வேண்டும் என்பதற்காக இரண்டாவது உலக தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தி இருக்கிறார். இந்த இருபெரும் தலைவர்களும் தமிழகத்தில் அந்த அளவுக்கு தொழில்கள் வளரவேண்டும் என்பதற்காக உலக முதலீட்டாளர்கள் மாநாடுகளை சிறப்பாக நடத்தியிருக்கின்றார்கள். கடந்த முறை,

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே கூட, 'நீங்கள், MoUs போட்டீர்கள், சிலவற்றிற்கு மட்டும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்டீர்கள், நிறைய தொழில்கள் வரவில்லை' என்று சொன்னார்கள். இல்லையென்று சொல்லவில்லை; அதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. என்ன காரணம் என்று சொன்னால், நாங்கள் ஒப்பந்தம் போடுகின்றபோது, மின்சாரக் கொள்கை மாற்றப்பட்ட காரணத்தினால், அந்த மின் துறையில் ஒப்பந்தம் போட்டவர்களெல்லாம், அன்றையதினம், தொழில் தொடங்காமல் போய் விட்டார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது இல்லை. எப்போதுமே ஒரு தொழில் துவங்குவதற்கு, ஓராண்டு காலத்திலிருந்து, Ultra, Mega திட்டங்களாக இருந்தால் ஏழாண்டு காலம் வரை ஆகும். ஆக, குறிப்பிட்ட காலத்திற்குள், பல்வேறு மாநிலங்களிலிருந்து அழைப்பு கொடுக்கின்றார்கள். 'நாங்கள் பல்வேறு சலுகைகளைக் கொடுக்கின்றோம், இவ்வளவு நிலங்கள் தருகின்றோம்' என்று அழைப்பு கொடுக்கின்றார்கள். இதனால் அவர்கள் வேறு மாநிலங்களுக்குச் சென்றுவிடுகிறார்கள்.

நண்பகல் 12–00

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மரியாதைக்குரிய அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்த போதும், மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த போதும், டெல்டா நிறுவனம் ஓசூரிலே துவங்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் முதன்முதலாக கர்நாடகா மாநிலத்திற்குத்தான் சென்றார்கள். அவர்கள் இடம் கேட்பது எப்படி என்று சொன்னால், அவர்களுக்கு National highways–ல்தான் இடம் இருக்க வேண்டும்; அந்த இடம் 1 கி.மீ. அகலம் இருக்க வேண்டும் என்று அவர்கள் நம்மிடம் கோரிக்கை வைத்திருந்தார்கள். அப்போது நம்மால் அந்த இடத்தைக் கொடுக்க முடியாத காரணத்தினால், அந்த நிறுவனம் கர்நாடக மாநிலத்திற்குச் சென்றுவிட்டது. அண்ணன் எடப்பாடியார் அவர்கள் மீண்டும் முயற்சி எடுத்து, அந்த நிறுவனத்தை மீண்டும் ஓசூருக்குக் கொண்டு வந்து, இன்றையதினம் அங்கு 5,000 பேருக்கு வேலைவாய்ப்பை நாம் உருவாக்கித் தந்திருக்கிறோம். அன்றையதினம் அந்த Delta Company வருகின்றபோது, நான் விமான நிலையத்திற்கே அவர்களை அழைக்கச் சென்றேன். கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் அன்றையதினம் அங்கே வந்திருந்தார்கள்.

'எங்களுடைய மாநிலத்தில் இந்த நிறுவனத்தை அமைத்தால் நாங்கள் அதிக சலுகைகளைச் செய்து தருகிறோம்; எங்கள் மாநிலத்திற்கு வாருங்கள்' என்று போட்டி போடுகிறார்கள். நாம் தனிப்பட்ட முறையில் தொழில் செய்தால்கூட, மற்றவர்களிடம் இந்த அளவிற்குப் போட்டி போட முடியாது. ஆனால், மாநிலங்களுக்கிடையே இந்த அளவிற்குப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலைமைதான் இன்றைக்கு இந்தியா முழுவதிலும் இருக்கிறது.

மின் கட்டணத்தைப் பற்றி நான் மீண்டும் சொல்ல வரவில்லை. ஏனென்றால், இருக்கின்ற நிலைமையைப் பற்றித்தான் சொல்கின்றேன். கடந்த ஜனவரி மாதம் இந்த அரசு தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தியிருக்கிறது. Ultra, Mega Power Project என்று சொன்னால் 7 ஆண்டுக் காலம் ஆகும். அண்டை மாநிலத்தில், 'Ultra, Mega Power Project என்றால், மின்சாரக் கட்டணத்தில் ஒரு யூனிட்டுக்கு 2 ரூபாய் குறைத்துக் கொடுக்கின்றோம்; எங்கள் மாநிலத்திற்கு வாருங்கள்' என்று கேட்கின்றார்கள். இன்னும் 4, 5 ஆண்டுகளுக்குள் மின் கட்டணம் 3 ரூபாய் அதிகரிக்கும் என்றால், தொழிற்சாலைகள் இந்த மாநிலத்திற்கு எப்படி வரும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும். இல்லையென்றால், நிச்சயமாக எதிர்காலத்தில் தமிழகத்தில் தொழில் தொடங்குவதற்கு. . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எப்படி எதிர்காலத்தில் தொழில்கள் வர வேண்டுமென்று நினைவுபடுத்தினீர்களோ அதேபோன்று உங்களுக்கும் நேரத்தை நினைவுபடுத்துகிறேன்.

திரு. பி. தங்கமணி: ஆந்திர மாநிலத்தில் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால், சிறு தொழிலுக்கும் உற்பத்தி தொடங்கியதிலிருந்து 5 ஆண்டு காலத்திற்கு அவர்களுக்கு ஒரு யூனிட்டிற்கு ஒரு ரூபாய் concession கொடுக்கிறார்கள். ஆனால், இங்கு வருடத்திற்கு 6 சதவீதம் ஏற்றிக்கொண்டிருக்கிறீர்கள். நிலத்தின் விலையும் ஏறிக்கொண்டிருக்கிறது. தென் தமிழகத்தில் தொழில் தொடங்குவதற்குத் தயங்கிக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தி எந்த அளவிற்கு நாம் வெற்றி பெறுவோம் என்பதை

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, இதற்குத் தீர்வு காணவில்லை என்று சொன்னால், எதிர்காலத்தில் தொழில் துறையில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பது என்பது கேள்விக்குறியாகிவிடும் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நான் தவறாகச் சொல்லவில்லை; நேற்றையதினம், கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திற்காக இரவு 1-00 மணி வரை நாங்கள் காத்திருந்தோம். அதுவரை வரவில்லை. அதற்குப் பின்னால், நான் வீட்டிற்குச் சென்றுவிட்டு, காலையில் வந்துதான் அந்தப் புத்தகத்தைப் பார்த்தோம். அதனால், அந்தப் புத்தகத்தை முழுமையாகப் படிக்க முடியவில்லை. இருந்தாலும்கூட, அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில், இந்த ஆண்டினுடைய வளர்ச்சியை ஒப்பிட்டுக் குறிப்பிட்டிருப்பதில், 2015 முதல் 2019 வரை இருக்கின்ற நிலைமையை நாங்கள் இப்பொழுது கொண்டு வந்திருக்கிறோம் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. எங்களுடைய ஆட்சிக் காலத்தில் தொழில் துறை நன்றாக இருந்தது என்பதை இந்த அரசின் கொள்கை விளக்கக் குறிப்பின்மூலம் சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அண்டை மாநிலங்களைப் பொறுத்தவரையில், அதுவும் குஜராத் மாநிலத்தைப் பொறுத்தவரையில், 'பெரிய தொழில் நிறுவனங்களாக இருந்தால் 5 ரூபாய் மின் கட்டணத்திற்கு அனுமதி தருகிறோம்' என்று சொல்கிறார்கள். அங்கு இயற்கை வளங்களும் அதிகமாக இருக்கின்றன. குறிப்பாக, பல நூற்பாலைகள் அந்த மாநிலத்திற்குச் சென்றுகொண்டிருக்கின்றன. காரணம், பருத்தி உற்பத்தி அங்கு அதிகமாக இருக்கிறது. விவசாயத்திற்கு அடுத்தபடியாக இங்கு எந்தத் தொழில் நிறுவனங்கள் அதிகமாக இருக்கின்றன என்றால் Spinning Mills-தான் 45 சதவீதம் இருக்கின்றன. அதற்கான ஏற்பாடுகள் எதையும் இந்த மாநிலத்தில் செய்யவில்லை என்று சொன்னால், எதிர்காலத்தில் எல்லா தொழில்களுமே வெளிமாநிலங்களுக்குச் சென்றுவிட்டால் என்ன செய்வது? இப்பொழுதே நாம் வடமாநிலங்களிலிருந்துதான் தொழிலாளர்களை அழைத்து வந்துகொண்டிருக்கிறோம். இங்கு தற்போது இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு குறைவாக இருக்கிறது. மேலும் இதுபோன்ற சூழ்நிலைகளும் ஏற்பட்டதென்று சொன்னால்,

எதிர்காலத்தில் நம் மாநிலத்தின் நிலைமை என்னவாகும் என்பதை இந்த அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் உங்களிடத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த 2 ஆண்டு காலத்தில், 221 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு, 2 இலட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாயில், 3 இலட்சத்து 89 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இது தொடர்ச்சியாக வருகின்ற நிகழ்வுதான். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதிலுரையில், இதில் எத்தனை நிறுவனங்கள் இந்த மாநிலத்தில் தொழில் தொடங்க முன்வந்திருக்கின்றன? எவ்வளவு பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது? இதில் Fortune 500 companies எத்தனை வந்திருக்கின்றன? கடந்த காலத்தில் 130 நிறுவனங்கள் இருப்பதாகச் சொல்லியிருக்கின்றீர்கள்; ஆனால், கடந்த 2 ஆண்டுக்காலத்தில் எத்தனை Fortune 500 companies வந்திருக்கின்றன என்ற விவரங்கள் இந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்படவில்லை; அந்த 130 நிறுவனங்களுள் இதுவும் சேர்ந்திருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது; இவையனைத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) உரையை முடித்துவிடுகிறேன். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, பொதுவாக சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டும். அப்போதுதான் இங்கே தொழில் தொடங்க முன்வருவார்கள். எனவே, அதை இந்த அரசு முழுமையாகப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான், அடுத்த துறையைப் பற்றிப் பேசுகிறேன். IT துறையைப் பொறுத்தவரையில், கடந்த 2, 3 நாட்களுக்கு முன்பாக ஒரு செய்தித் தாளில் வந்திருந்த செய்தியைப் படித்தேன். பொதுவாக, IT நிறுவனங்கள் இப்போது கர்நாடகா மாநிலத்தையும், தெலுங்கானா மாநிலத்தையும் நோக்கிச் செல்கின்றன; நம் மாநிலத்திற்கு வருவதில்லை என்று அந்த பத்திரிக்கைச் செய்தியில் இருந்தது. அது எந்த அளவிற்கு உண்மை என்று எனக்குத் தெரியாது. ஆனாலும்கூட, இந்த அரசு மதுரையில் 600 கோடி ரூபாய் செலவில் IT Park அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறது. ஏற்கெனவே, ஆவடியில் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களால் 350 கோடி ரூபாயில் ஒரு IT Park ஆரம்பிக்கப்பட்டு, 90 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இந்த 2 ஆண்டுக் காலமாக இருந்த தொய்வின் காரணமாக, இப்போது அந்தப் பணியை ஆரம்பித்திருக்கின்றீர்கள். ஆனால், தற்போது 3–வது IT park என்று சொல்லியிருக்கிறீர்கள். ஏற்கெனவே 3–வது IT park ஆவடியில் இருக்கின்றபோது, அதெப்படி 3–வது IT park ஆக இது இருக்கும் என்பதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பிற்பகல் 12–05

அதேபோல் Mini Tidel Park என்று சொல்லியிருக்கிறீர்கள். ஏற்கெனவே Tidel Park இருக்கின்றது. Mini Tidel Park என்றால் அதற்குரிய நிதியை, எந்தளவிற்கு, எப்படி செய்யப் போகிறீர்கள் என்ற எந்த கொள்கை விளக்கமும் அதில் இல்லை என்பதையும், அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் விளக்கம் சொல்ல வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் துறைக்கு வந்துவிடுகிறேன். மின் கட்டண உயர்வினால் முழுமையாக பாதிக்கப்படுவது சிறுதொழில்கள்தான். நீங்கள் என்ன காரணம் சொன்னாலும் சரி, சிறு தொழில்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், கோயம்புத்தூர் மாவட்டத்திற்குப் பொறுப்பாளராக இருக்கின்றார். அவர் அங்கிருக்கின்ற தொழிலதிபர்களை எந்தளவிற்கு சிறு தொழில்கள் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்று அழைத்துக் கேட்கட்டும். அதற்கு, நீங்கள் விரைந்து முடிவெடுக்க வேண்டும். சிறுதொழில்கள்தான் பெரிய தொழில் துவங்குவதற்கு ஆதாரமாக இருக்கும். ஆக, எதிர்காலத்தில் நீங்கள் சரியான நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், நம்முடைய இளைஞர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல, Mines–ஐப் பொறுத்தவரையில்—எனக்கு இங்கே வந்துதான், இன்று அந்தத் துறையும் இருக்கிறது என்பதே தெரியும், Agenda–லும் விவரம் இல்லை. அதனால், அதை ஒரே வார்த்தையில் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சம்பந்தப்பட்டது என்பதால், suspense.

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Mines-ஐப் பொறுத்தவரையில், விவசாயிகள் வண்டல் மண்ணை இலவசமாக எடுத்துச் செல்ல அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அனுமதி கொடுத்தார்கள். இப்போது பல சட்டங்களைப் போட்டு, அதை எடுக்க முடியாத நிலை இருக்கின்றது. அதனை விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, செங்கல் சூளைகளுக்குக்கூட மண் எடுக்க முடியவில்லை. இந்த அவையில் பலமுறை நாம் பேசியிருக்கின்றோம். (குறுக்கீடு) அவர் தட்டமாட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களிடம் சொல்லுங்கள்.

திரு. பி. தங்கமணி: செங்கல் சூளைகூட இன்று கைத்தொழிலைப்போல் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. செங்கல் சூளைக்கு மண் எடுப்பதிலேயும் பல சிரமங்கள் இருக்கின்றன. இந்த அரசிடம் பலமுறை கோரிக்கை வைத்திருக்கின்றோம். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிமெண்ட்டைப் பொறுத்தவரையில், மக்களுக்கு எளிதாகக் கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான், அரியலூரில் 800 கோடி ரூபாய் செலவில் சிமெண்ட் ஆலை அமைக்க, மாண்புமிகு அம்மா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது திறந்து வைத்தார்கள். இப்போது 10 இலட்சம் டன் அளவிற்கு உற்பத்தி உயர்ந்து கொண்டிருக்கின்றது.

நீங்கள், 'Valimai Cement' என்ற சிமெண்ட்டை அறிமுகப்படுத்தியிருக்கிறீர்கள். மூட்டை 345 ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்கள். Cement-ஐ விலையேற்றத்தின்போது, அம்மா அவர்கள் 'Amma Cement-ஐ 190 ரூபாய்க்கு கொடுத்தார்கள். கடைசியாக, 216 ரூபாய்க்குக் கொடுத்தோம். அதன் விற்பனையைக் குறைத்துவிட்டு, இப்போது நீங்கள் 'Valimai Cement' என்று கொண்டு வந்திருக்கிறீர்கள், அரசு சிமெண்ட் எல்லாமே வலிமையான சிமெண்ட்தான். அதற்கு நீங்கள் வேறு பெயர் வைத்திருந்தால்கூட பரவாயில்லை, 'Valimai Cement' என்றால், அந்த சிமெண்ட்டைவிட இந்த சிமெண்ட் அதிகமாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், போதும். 20 நிமிடங்கள் எந்தக் குறுக்கீடும் இல்லாமல் பேசி முடித்தாகிவிட்டது. நன்றி சொல்லி, உட்காருங்கள். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. பி. தங்கமணி: ஏழைகளுக்கு எளிதாகக் கிடைக்கின்ற வகையில், அம்மா சிமென்ட்டை விரைந்து, நீங்கள் கொஞ்சம் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, TNPL–ஐப் பொறுத்தவரையில், மாண்புமிகு அண்ணன் அவர்களும், அம்மா அவர்களும் அந்தத் தொழிற்சாலையை எந்தளவுக்குக் கொண்டு வந்தார்கள் என்றால், கடந்த காலத்தில் 500 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளது. இப்போதுகூட 450 கோடி ரூபாய் இலாபம் என்று சொல்லியிருக்கிறீர்கள். உற்பத்தி அதிகமாகியிருக்கிறது, எனவே இலாபத்தையும் அதிகரித்திருக்க வேண்டும்.

அதேபோல, மொண்டிப்பட்டியில் அந்தத் தொழிற்சாலையைக் கொண்டு வருவதற்கு முதன்முதலில் மாண்புமிகு அம்மா அவர்களே அடிக்கல் நாட்டி, அம்மா அவர்களே அதைக் கட்டி முடித்து, குறித்த காலத்திற்குள் அந்தத் தொழிற்சாலையை திறந்தும் வைத்திருக்கின்றார்கள். அதற்குப் பின்னர், அண்ணன் எடப்பாடியார் அவர்களும், மீண்டும் அங்கு மரக்கூழ் தயாரிக்கின்ற தொழிற்சாலைக்கு அனுமதித்து, அதுவும் இப்போது கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல, Captive power plant பணியையும் முடித்திருக்கிறோம். அதில் ஒன்றை மட்டும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக, மரம் வைக்கின்றோம் என்று சொன்னால், ஏதோ பெயருக்காகவோ, பத்திரிகை விளம்பரத்திற்காகவோ வைப்பது கிடையாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேண்டுமென்றால் அங்கே சென்று பார்க்கலாம். (மணியடிக்கப்பெற்றது). உரையை முடித்துவிடுகிறேன், அவ்வளவுதான், வேறொன்றுமில்லை.

6,50,000 மரக்கன்றுகள். 1 ஆம் நம்பரிலிருந்து 6,50,000 மரக்கன்றுகள் வரைக்கும், மாண்புமிகு அம்மா அவர்களால் கடைசியாக 6,50,000–மாவது மரக்கன்று வைக்கப்பட்டிருக்கின்றது. இன்று ஒரு பெரிய வனம்போல் வந்திருக்கின்றது என்று சொன்னால், இதுபோன்று, ஒவ்வொரு பகுதியிலும் பேப்பர்

தொழிற்சாலையை ஆரம்பிக்கின்றபோது, முழுமையாக சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படவேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன். இறுதியாக. . . *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், உரையை முடியுங்கள்.

திரு. பி. தங்கமணி: முடித்துவிடுகிறேன். இறுதியாக ஒரு கோரிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, இறுதியாகச் சொல்லி உரையை முடியுங்கள்.

பிற்பகல் 12—10

திரு. பி. தங்கமணி: இறுதியாக, பொதுவான ஒரு கோரிக்கை. கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், கரூர் ஆகிய மாவட்டங்களில் இருப்பவை நிறைய சாயப்பட்டறைகளும் textiles தொழிற்சாலைகளும்தான். Textiles என்பது தவிர்க்க முடியாத தொழில். இதுபோன்ற கோடைக் காலங்களில் அந்தச் சாயப்பட்டறைகளின் கழிவுநீர், ஆற்றில் கலப்பதால் மாசு படிகின்றது. அதற்காக மாண்புமிகு அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள், ஈரோடு, நாமக்கல், சேலம் உள்ளிட்ட மாவட்டங்களிலுள்ள மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரைக் கொடுக்க வேண்டுமென்று, பல்வேறு குடிநீர்த் திட்டங்களைக் கொண்டு வந்தார்கள். ஆனால், என்னுடைய கோரிக்கை என்னவென்றால், 'பத்தாண்டுக்காலம் நீங்கள் அமைச்சராக இருந்தீர்கள், உங்கள் ஆட்சிதானே இருந்தது', என்றுகூட என்னிடம் நீங்கள் திருப்பிக் கேட்கலாம். நான் அதற்குள் செல்லவில்லை. அந்தப் பகுதிகளிலுள்ள பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஏனெனில், தற்போது, ஈரோடு, நாமக்கல், திருச்செங்கோடு பகுதிகளில் cancer நோயினால் அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதிலும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், 15 நாட்களுக்கு முன்பாக எனது சகோதரியைக்கூட அதனால் இழந்திருக்கின்றேன். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், தயவுசெய்து அங்கு ஒரு Common Treatment Plant-ஐ அரசே ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான். எந்தவொரு தொழிற்சாலையாக

இருந்தாலும், முழுமையான Common Treatment Plant அமைக்கின்றபோது, மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, வெளிநாடுகளுடன் ஒப்பிடும்போது அவர்களுக்குக் கட்டுப்படியாகாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நல்ல ஆலோசனை. (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. பி. தங்கமணி: இதோ முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நல்ல ஆலோசனைதானே!

திரு. பி. தங்கமணி: உரையை முடித்துவிடுகிறேன். எங்களுடைய கஷ்டத்தைத்தான் சொல்கிறேன். வேறொன்றையும் சொல்லவில்லை. நாங்கள் ஏற்கெனவே பல்வேறுகட்ட நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றோம். குமாரபாளையம் பகுதியில்கூட அதற்கான இடத்தைத் தேர்வு செய்து, மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பினோம். ஆட்சி மாற்றத்தின் காரணமாக அதைச் செய்ய முடியாமல் போய்விட்டது. பொதுவாக, நாங்கள் 10 இறப்புகளுக்குச் செல்கிறோம் என்றால், அதில் ஒரு இறப்பு cancer காரணமாக ஏற்பட்டதாக இருக்கிறது. ஆகையால், இந்த அரசு உடனடியாக அதில் தலையிட வேண்டும். Common Treatment Plant–ஐ அரசே ஏற்று நடத்தினால்தான் மற்ற தொழில்முனைவோர்களும் அங்கே வருவார்கள். அதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

எனது தொகுதி சார்ந்த இரண்டே இரண்டு கோரிக்கைகள். முதலாவது, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் தனது பதிலுரையின்போது அனைத்து மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர்களுக்கும் Tata Safari car வாங்கிக் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள், மிகவும் சந்தோஷம். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரை நாங்கள் ஆட்சியில் இருந்தவரை Innova car இருந்தது. ஆட்சி மாற்றத்திற்குப்பின், அதை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின்மூலம் எடுத்துச் சென்றுவிட்டார்கள். அதற்குப் பின்னர், Tata Sumo என்ற வாகனத்தை வாடகைக்கு

எடுத்துக் கொடுத்திருந்தார்கள். நானும் 4, 5 முறை மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் கேட்டேன். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவ்வாறு நடந்திருப்பதாக நீங்கள் என்னிடம் சொல்லவில்லை. (குறுக்கீடு)*

திரு. பி. தங்கமணி: *இல்லையில்லை, நான் கோரிக்கைதான் வைக்கிறேன். கோரிக்கைதான் வைக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குற்றச்சாட்டோடுகூடிய கோரிக்கையை நீக்கிவிடலாம். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

திரு. பி. தங்கமணி: *அதேபோன்று, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரேயொரு கோரிக்கை. உங்கள் தொகுதிக்கு அருகிலுள்ள பள்ளிபபாளையம், தாஜ் நகரில் ஆஞ்சநேயர் கோயில் இருக்கின்றது. ஆயிரக்கணக்கானோர் வழிபட்டுக் கொண்டிருக்கிறார்கள். 2 வாரங்களுக்கு முன்பாக, அந்தக் கோயில் இருக்கும் இடம் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமானது, அதை உடனடியாகக் காலி செய்ய வேண்டுமென்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்வது. . . (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் எழுதிக் கொடுத்துவிடுங்கள். நன்றி சொல்லுங்கள்.*

திரு. பி. தங்கமணி: *அவ்வளவுதான், உரையை முடித்துவிடுகிறேன். ஒரேயொரு கோரிக்கைதான். முக்கியமான கோரிக்கை. நான் எதையும் குறையாகச் சொல்லவில்லை. ஆகையால், அந்தக் கோயிலை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகிறார்கள். அது அரசினுடைய இடம்தான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், உரையை முடியுங்கள்.*

திரு. பி. தங்கமணி: *அந்தக் கட்டடம் கட்டப்பட்டு, தினந்தோறும் ஆயிரக்கணக்கானோர் வந்து செல்கிறார்கள்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *25 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். போதும். நன்றி, நன்றி.*

திரு. பி. தங்கமணி: *எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதன்மீது கவனம் செலுத்தி, அந்தக் கோயிலை அரசே ஏற்று நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, எனக்கு இந்த வாய்ப்பைக் கொடுத்த மரியாதைக்குரிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுக்கும், கொறடா அவர்களுக்கும், தங்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் தற்போது உரையாற்றினார். இன்னும் சொல்லப்போனால், இன்றைய இலாகாக்களைத் தவிர, கோயில்கள் சம்பந்தப்பட்ட விவகாரத்திற்குள்ளும் பேசினார். இவ்வளவு நேரம் பேசினாரே, ஒரு மந்திரிகூட குறுக்கிடவில்லை. ஆனால், மாண்புமிகு அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் வார்த்தைக்கு வார்த்தைப் பதில் கொடுக்கிற தைரியம் படைத்தவர். ஆனால், எதிர்க்கட்சி பேசட்டும் என்று நாகரிகத்தோடு அமர்ந்திருந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் இவ்வாறு இருந்திருக்கிறீர்களா? என்றைக்காவது எங்களுடைய பேச்சை முழுவதும் பேசி முடிக்க விட்டிருக்கிறீர்களா? (குறுக்கீடு) மனசாட்சியோடு பார்த்தால் போதும். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஆட்சிக் காலத்தில், சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கிட்டத்தட்ட ஒரு மணிநேரம்கூட பேசியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் அவைக் குறிப்புகளை எடுத்துப் பாருங்கள். தற்போது கொடுக்கப்படுவது 10 நிமிடங்கள். அதிலும், மூன்று துறைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் இரவு 1 மணிக்குக் கொடுக்கப்படுகின்றன. அப்படிக் கொடுத்தால், அவற்றை எப்படி படித்துவிட்டு வந்து பேச முடியும்?*

ஆகவே, கொடுக்கப்பட்ட நேரத்தில் எங்களுடைய உறுப்பினர் குறுக்கீடு இல்லாமல் அழகாகப் பேசியிருக்கிறார். அதை வரவேற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அப்பகுதியிலுள்ள சுமார் 4, 5 மாவட்டங்கள் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டங்கள். அவற்றிலிருந்து வெளியேறுகின்ற கழிவுநீர் காவிரி நதியில் கலந்து மாசு ஏற்படுகிறது. இதற்காக, 'நடந்தாய் வாழி காவேரி' என்கிற ஒரு திட்டத்தை உருவாக்கி, அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடத்தில் நாங்கள் கடிதம் கொடுத்தோம். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், அத்திட்டத்தை மேதகு குடியரசுத் தலைவர் அவர்களின் உரையில் இடம்பெறச் செய்து, அத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம் என்று உறுதியளித்தார்கள். இந்த அரசாங்கத்தால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஏனென்றால், மேட்டூர் அணையிலிருந்து வெளியேறுகின்ற காவிரி நீர், கடலிலே கலக்கின்ற வரை நகரத்திலிருந்து வெளியேறுகின்ற கழிவுநீர், அங்கேயிருக்கின்ற Baby canal அமைத்து, sump கட்டி, சுத்திகரித்து காவிரியில் விடப்படுகிறது. அதேபோல, பவானி சாகர் அணை மற்றும் அமராவதி, நொய்யல் ஆகிய நகரப் பகுதியில் இருக்கின்ற கழிவுநீரையெல்லாம் சுத்திகரித்து நதியிலே விடுகின்றபோது cancer போன்ற நோய்களெல்லாம் வராது. பயிர்களும் செழிப்பாக வளருவதற்கு ஒரு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, இந்த அரசு, மத்திய. . . (குறுக்கீடு)

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிரதமர் அவர்கள் தருவதாக உறுதியாகச் சொல்கிறீர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: 'நடந்தாய் வாழி காவேரி' திட்டத்தை இந்த அரசு நடைமுறைப்படுத்த வேண்டுமென்று தங்கள் வாயிலாக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிரதமர் அவர்களைப் பார்க்கும்போது இதை வற்புறுத்தி வாங்கிக் கொண்டு வாருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.

TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 6]

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் நம் உயிரனைய தலைவர் அவர்களை வணங்குகிறேன். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் இளம் தலைவர் அவர்களை, வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களுக்கும், அண்ணன் திரு. கே.என். நேரு அவர்களுக்கும், அண்ணன் திரு. எ.வ. வேலு அவர்களுக்கும் வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'A leader inspires, initiates and creates infinite trust in his followers' என்கிறார் General Colin Powell என்கிற அறிஞர். இந்த அறிஞரின் பொன்மொழிக்கேற்ப, தலைசிறந்த தலைவராகவும், தன்னைத் தொடரும் தொண்டர்களின் வாழ்வில் முனைப்புமிக்க தூண்டுகோலாகவும், செயலாக்கமுள்ள தலைவராகவும், அளவற்ற நம்பிக்கை நட்சத்திரமாகவும் இருக்கிறார் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்பவர் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். மகாகவி பாரதி அவர்கள் 'காசியில் பேசுவதை காஞ்சியில்' கேட்பதற்கு ஒரு கருவி செய்வோம்' என்றார். மேலும் சொல்கிறார்; 'ஆயுதம் செய்து, நல்ல காகிதம் செய்து, ஆலைகள் வைத்து, கல்விச் சாலைகள் வைத்து, ஞாலம் நடுங்கிடக் கப்பல்கள் செய்து, காடு வளர்த்து, கலை வளர்த்து, உலகத் தொழில் அனைத்தும் உவந்து செய்வோம்' என பாரதி தொழில் வளர பாடியுள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளில், முந்தைய அரசு தொழில் துறை மீது போதிய கவனம் செலுத்தாமல் விட்ட காரணத்தினால், பல நிறுவனங்கள் வெளிமாநிலங்களுக்குச் சென்றுவிட்டன. அதனைச்சீர்செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொழில் துறையில் வளர்ச்சியை எட்டிட துறைசார்ந்த 10 புதிய கொள்கைகளை வெளியிட்டுள்ளார். நிதிநுட்பக் கொள்கை, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக் கொள்கை, உயிரியல் கொள்கை, ஏற்றுமதிக் கொள்கை, வான்வெளி மற்றும் பாதுகாப்புக் கொள்கை, காலணி மற்றும் தோல் கொள்கை, மின்சார வாகனங்கள் கொள்கை, தளவாடக் கொள்கை, நகர எரிவாயு வழங்கல் கொள்கை, எத்தனால் கொள்கை என 10 கொள்கைகளை வெளியிட்டுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முயற்சியினால் தொழில் துறையில் தமிழ்நாட்டில் இமாலய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டில், கழக ஆட்சி, தொழில் துறைக்கு பொற்காலமாகத் திகழ்கிற ஒரு நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். 2030 ஆம் ஆண்டிற்குள்

தமிழ்நாட்டினை one trillion அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்றிட வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தொலைநோக்குப் பார்வையுடன் செய்கிற முயற்சிகள் மாபெரும் வெற்றியைத் தரும்.

அகில இந்திய அளவில் இரண்டாவது பெரிய பொருளாதார வளர்ச்சி பெற்றுள்ள தமிழ்நாடு, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு அரணாக விளங்குகிறது. 38,837 தொழிற்சாலைகளைப் பெற்றுள்ள தமிழ்நாடு, இந்திய அளவில் முதலிடம் வகிக்கிறது. தமிழ்நாட்டில் உலகத்தரம் வாய்ந்த துறைமுக உட்கட்டமைப்புகள் இருப்பதன் காரணமாக, அகில இந்திய அளவில் மூன்றாவது ஏற்றுமதியாளராகத் திகழ்கிறது. அனைத்துத் துறைகளுடனும் இணைந்து பணியாற்றி ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொண்டதன் பயனாக, கடந்த ஆண்டு 14 ஆம் இடத்தில் இருந்த தமிழ்நாடு, 2022 ஆம் ஆண்டு பெரிய அளவில் தொழில் முன்னேற்றம் கண்டு 3 ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளது.

Startup India தர வரிசைப் பட்டியலில் தமிழ்நாடு, ‘Leader’ அங்கீகாரம் பெற்றுள்ளது. மாபெரும் முன்னெடுப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தொழில் புரட்சி 4.0 என்கிற, நான்காவது தொழில் புரட்சியைத் தொடங்கியுள்ளார்கள். 3,89,651 பேர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய 221 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை உருவாக்கி, இவற்றின் வாயிலாக ரூபாய் 2,70,020 கோடி மதிப்பிலான முதலீடுகளைப் பெறுவதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கியுள்ள ‘நான் முதல்வன்’ திட்டம் பணியாளர்களை உருவாக்குவதற்கான ஒரு பாதையை அமைத்துக் கொடுத்துள்ளது. இத்திட்டத்தினால் சுமார் 120–க்கும் மேற்பட்ட தொழிலகங்கள் இணைந்துள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு என்பது உற்பத்தித் துறையில் ரூ.23 இலட்சம் கோடி முதலீட்டை ஈர்த்திடவும், 46 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும், தேவைப்படும் கட்டமைப்புகளை அளித்து வருகிறது.

இந்தியாவின், மின் வாகன தலைநகரம் என்கிற பெருமையை தமிழ்நாடு பெற்றுள்ளது. Ola Electric, Ather Energy, Simple Energy, Switch Mobility போன்ற மிகப் பெரும் மின் வாகன உற்பத்தி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உற்பத்தி மையங்களைத் தொடங்கியுள்ளன. Projects Today நிறுவனம் தெரிவித்துள்ளவாறு,

2022–2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் 265 திட்டங்கள் வாயிலாக 1.06 கோடி ரூபாய் முதலீடுகளைத் தமிழ்நாடு ஈர்த்துள்ளது என்பது பாராட்டுக்குரியது. India Today பத்திரிகை, 2022 ஆம் ஆண்டிற்கான மாநிலங்களுக்கான தரவரிசைப் பட்டியலில் மிகச் சிறப்பாகச் செயல்படும் மாநிலமாக தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளது.

பிற்பகல் 12–20

"CARE Ratings" நிறுவனத்தின் ஓர் அங்கமான "CareEdge" நிறுவனம், அதைப்போல "Projects Today" நிறுவனம் மற்றும் "Public Affairs Centre" நிறுவனம், இந்த மூன்று நிறுவனங்களும் தமிழ்நாடு தொழில் துறையில் முன்னணியில் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளன.

"Avtar" என்கிற தனியார் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட ஆய்வின்படி, பெண்கள் பணிபுரிவதற்கு உகந்த நகரங்களுக்கான தரவரிசையில் சென்னை, திருச்சி, வேலூர், ஈரோடு, சேலம், திருப்பூர் ஆகிய ஊர்கள் இந்திய அளவில், முதல் 5 இடங்களில் இடம் பெற்றுள்ளன. கோவையும், மதுரையும் 9 மற்றும் 10–வது இடங்களைப் பிடித்துள்ளன. 2021–ல் NITI Aayog–ன் SDG India குறியீட்டில், தமிழ்நாடு, இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. தொழில் உட்கட்டமைப்பு மற்றும் கண்டுபிடிப்பில் தமிழ்நாடு 2–வது இடத்தைப் பெற்றுள்ளது.

"முதலீட்டாளர்களின் முகவரி" என்கிற மாநாட்டை நடத்தி, ஏராளமான தொழில் நிறுவனங்கள் வருவதற்குக் காரணமாக இருந்தவர் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். திருச்சி மாவட்டம், மணப்பாறையிலுள்ள செய்தித்தாள் காகித நிறுவனத்தின் வன்மரக்கூழ் தயாரிக்கும் நிறுவனம் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பெரும் நட்டத்தில் இயங்கி வந்ததை மாற்றி, கழக ஆட்சியில் தற்போது ரூ.400 கோடி இலாபத்தில் இயங்குகிற நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறார், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆட்சிக் காலத்தில் பல்வேறு கார் தொழிற்சாலைகள், வேறு மாநிலங்களுக்குச் சென்றுவிட்டன. ஆனால், இன்றைக்கு அந்த நிலை மாறிவிட்டது. தமிழ்நாட்டில் Hyundai car company தொடங்க காரணமாக இருந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். அண்மையில், திருப்பெரும்புதூர் Hyundai ஆலைக்கு நேரில் சென்ற மாண்புமிகு முதலமைச்சர், தலைவர் அவர்கள்,

ஆலையில் உற்பத்தி செய்யப்பட்ட பத்து மில்லியன் அதாவது ஒரு கோடி-ஆவது car-ஐ அறிமுகம் செய்தார்கள். Ford, Nissan car தொழிற்சாலைகளை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்தது கழக ஆட்சிதான். "India's Detroit is Tamil Nadu" என்ற பெருமைக்கு காரணம், கழக ஆட்சிதான். தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு சிறப்பாக இருப்பதால்தான், தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க முன்வந்துள்ளன. சென்னை–திருப்பெரும்புதூர் தடம், வாகன உற்பத்தியில் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது. பசுமை மின் வாகனங்கள் உற்பத்தியிலும் தமிழ்நாடு முதன்மை இடத்தை வகித்து வருகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வளர்ச்சி. பெருந்தொழில்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வரும் நிலையில் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கும் முக்கியத்துவம் அளித்து வருகிறார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். பல்வேறு ஊர்களில் தொழில் பூங்காக்கள் மற்றும் சிறுதொழில் குழுமங்கள் உருவாக்க அயராது பணியாற்றி வருகிறார் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

திராவிட மாடல் அரசின் தொழில் கொள்கையால் இந்திய அளவில் மட்டுமல்ல, உலகளவில் தமிழ்நாட்டை முதலிடத்திற்குக் கொண்டு செல்ல முடியும் என தொழில் துறையினர் பாராட்டுகின்றனர். தனி நபர் வருமானத்தை ரூ.4 இலட்சமாக உயர்த்தி, ஆண்டுக்கு 10 இலட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் முயற்சி பாராட்டுதலுக்குரியது.

சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் செய்ய தமிழ்நாட்டில் உத்யம் பதிவுகள் என்பது 2021 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 3,10,610 என்று இருந்தது. 2023–ல் கழக ஆட்சியில் 14,92,933 என்று பதிவுகள் அதிகரிக்க, கழக அரசின் முயற்சியே காரணம். கடந்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 25,000–க்கும் மேற்பட்ட சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு, முதலீட்டு மானியம், சுய தொழில் செய்வதற்கான மானியம், குறைந்த அழுத்த மின் மானியம், ஊதியப் பட்டியல் மானியம், பின் முனை வட்டி மானியம் எனத் தொழில் நிறுவனங்களுக்கு மானியங்கள்

2023 ஏப்ரல் 6] [திரு. இரா. இராஜேந்திரன்]

வழங்கியதால், பெரும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளதை தொழில் முனைவோர் பாராட்டுகின்றனர். சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கான நிதி ஒதுக்கீடு கடந்த ஆண்டைவிட ரூ.598 கோடி அதிகரிக்கப்பட்டிருப்பதிலிருந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்த அளவிற்கு தொழில் வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தருகிறார்கள் என்பதை உணர முடியும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கீழடியில் மிகப் பெரிய முயற்சி எடுத்து, அகழாய்வுப் பணிகளை மேற்கொண்டு முடித்து இருக்கிறார்கள். அதைப்போல, மேலும், 7 இடங்களில் அகழாய்வுப் பணிகள்; அதுமட்டுமல்ல, கடல் வழி வாணிபத்தில் சிறந்து விளங்கிய சங்க கால துறைமுகங்களான பூம்புகார், கொற்கை, அழகன் குளம், வசவசமுத்திரம் ஆகிய இடங்களிலும் ஆய்வுப் பணிகளைத் தொடங்கிய அரசு கழக அரசு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பண்டைய தமிழர்களின் காலத்தில் ஏற்றுமதி, இறக்குமதி குறித்து பட்டினப்பாலையில் புலவர் உருத்திரங்கண்ணனார் எழுதிய ஒரு பாடல் இருக்கிறது. இதனை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஒருமுறை குறிப்பிட்டுக்காட்டியிருக்கிறார்கள்.

“நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும், பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குண கடல் துகிரும்,
கங்கை வாரிதியும், காவிரிப் பயனும்
ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்
அரியவும், பெரியவும் நெரிய ஈண்டி,
வளம் தலை மயங்கிய நனந்தலை மறுகு”

என்கிற பாடலில் காவிரிப்பூம்பட்டின துறைமுகத்தில் வெளிநாட்டுக் குதிரைகள் வந்து இறங்கும்; மிளகு, மயில் துத்தம் ஆகியவை கொண்டு வரப்படும் என்று இந்தப் பாடல் விளக்குகிறது.

பிற்பகல் 12–25

தொழில் துறையிலும், குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் முன்னேற்றத்திலும் இமாலய வளர்ச்சி பெற உழைத்து வரும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், தலைவர் அவர்கள் குறித்து "செய்தொழிலுக்கு உரமூட்டிய செங்கதிரே நீ எழுக!" என ஒரு கவிஞர் பாடியுள்ளார்.

ஐயாவும், அண்ணாவும், ஆருயிர் கலைஞரும்
இவ்வையகத்தில், நம் முதல்வர் வடிவத்தில்
வாழ்கின்றார்!
உய்வோம்! வளம் பெற்றே உயர்வோம்! எனும் தமிழர்
செய்தொழிலுக்கு உரமூட்டிய செங்கதிரே! நீ எழுக!
மக்கள் பணிக்கே, தன் வாழ்நாளை அர்ப்பணித்த
மக்கள் பெருந்தலைவர்! மனிதருக்குள் மாமனிதர்!
தக்கார் மனம் போற்றும்,
தமிழக முதல்வர் வாழ்கவெனச்
செக்கவர்வான் ஒளிபரவச் செங்கதிரே! நீ எழுக!

என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வாழ்த்தி வணங்குகிறேன்.

மாண்புமிகு முன்னாள் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் அமைச்சராக இருந்தபோது, இதே அவையிலே, கடந்த முறை, 'தமிழ்நாட்டிலிருந்து நிறைய தொழிற்சாலைகள் வெளியே போவதற்குக் காரணம் என்னவென்றால், இங்கிருந்து பொருட்களை transit *செய்வதற்கு 15 சதவிகிதம் செலவாகிறது. எனவேதான், வேறு மாநிலங்களுக்கு இந்தத் தொழிற்சாலைகளெல்லாம் போகின்றன' என்று சொன்னது அவைக் குறிப்பிலும் இடம் பெற்றிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களும் மிகுந்த பொறுப்போடு, தொழில் வளர்ச்சியில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாகக் கொண்டு வருவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைக் கூறி, எனது உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. வெற்றிஅழகன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. வெற்றிஅழகன் அவர்கள்.*

திரு. அ. வெற்றிஅழகன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,* "Industry is the soul of business and the keystone of prosperity" quotes Charles Dickens. You don't build a business. You build people, then people build the business;

Winston Churchill quotes "My tastes are simple; I am easily satisfied with the best". Tamil Nadu's new age CEO, தமிழகத்தின் நிர்வாக இயக்குநர் illustrious industrialist என்பன போன்ற வரிகளுக்கு உரிய நம் மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்கி, என் உரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த மாபெரும் சபைதனில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களோடு இணைந்து மக்கள் தொண்டாற்றிய நம் இனமான பேராசிரியர் தாத்தா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை அரசு விழாவாகவும், கழக விழாவாகவும் கொண்டாடி நம்மையெல்லாம் மகிழ்வித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், எனது பள்ளிக் கால தோழர், "செங்கல் நாயகர் வெகு விரைவில் கோட்டை நாயகராக மாறும் நாள் வெகு தொலைவில் இல்லை" என்று என்னுடைய கடந்த சட்டமன்ற உரையில்கூட சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) 'செங்கல் நாயகர்' கழக இளைஞரணிச் செயலாளர், சகோதரர், நண்பர், அண்ணன் உதயநிதி அவர்களுக்கும், மரியாதைக்குரிய அவை முன்னவர் அவர்களுக்கும், மாண்புமிகு அரசுக் கொறடா அவர்களுக்கும், எனது அரசியல் பயணத்திற்கு உறுதுணையாக விளங்கும் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சருமான அண்ணன் திரு. பி.கே.எஸ். அவர்களுக்கும், அன்புச் சகோதரர் நண்பர், மாண்புமிகு அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கும், அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், கழகத்தின் மாவட்டச் செயலாளர்களுக்கும், கழக நிர்வாகிகளுக்கும், கோடிக்கணக்கான தொண்டர்களுக்கும் என் தந்தை சார்பாகவும், பேராசிரியர் இல்லத்தின் சார்பாகவும் நன்றிகளை இந்த அவையில் பதிவிடுகிறேன்.

எனது தந்தை திரு. அன்புச்செல்வன் அவர்கள் தலைவருடன் பங்கேற்ற அனைத்து நிகழ்ச்சிகளிலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள், என் தந்தையைப் பெயரிட்டு அழைப்பது, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு பேராசிரியர் மீதுள்ள அன்பையும், பாசத்தையும் காட்டுகிறது என்றும், எனது தாத்தா பெருந்தகை பேராசிரியர் அவர்கள் உடல் நலிவுற்று வீட்டில் இருந்தபோது, 50 முதல் 60 முறைக்கு மேலாக வீட்டிற்கு நேரில் வந்து,

தலைவர் அவர்கள் பார்த்து ஆறுதல் கூறியது இவை யாவும் வாழ்நாளில் மறக்க முடியாதவை என்று எனது தந்தை என்னிடம் அடிக்கடி சொல்வார்கள்.

பிற்பகல் 12–30

எனது தாத்தா பெருந்தகை பேராசிரியர் பெயரால், பேராசிரியர் அன்பழகன் கல்வி மேம்பாட்டுத் திட்டம் அறிவித்து, அத்திட்டத்திற்கு ரூ.7,000 கோடி நிதி ஒதுக்கிய தலைவர், தளபதி அண்ணன் அவர்களுக்கு எங்களது சிரம் தாழ்ந்த நன்றிகள். (மேசையைத் தட்டும் ஒலி) பேராசிரியர் தாத்தா, கலைஞர் தாத்தா வகுத்துத் தந்த கொள்கையில் எங்களது பயணம் தொடரும் என்பதை சபைதனில் உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டினை முதன்மை மாநிலமாக மாற்றிட முதல்வர் அவர்களின் அறிவுரையின் பேரில் பல்வேறு முதலீடுகளை ஈர்த்து, இந்தியாவிலேயே முதல் மாநிலமாகவும், உலகளவில் சிறந்த இடத்தைப் பெற்றிடவும் பணியாற்றிவரும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அண்ணன் தங்கம் தென்னரசு அவர்களுக்கு மனம் திறந்த பாராட்டுகள். 1970 ஆம் ஆண்டே சிறு தொழில் வளர்ச்சிக்காக SIPCOT நிறுவனத்தை நிறுவியவர் டாக்டர் கலைஞர் அவர்கள். அந்த நிறுவனத்தை 35,000 ஏக்கரில் விரிவடையச் செய்து, தொழில் வளச்சியில் முக்கியப் பங்கு வகித்திட வைத்தது நமது மாண்புமிகு முதல்வரின் சாதனையாகும். திராவிட மாடல் ஆட்சியினைச் சிறப்பாக வழிநடத்திட நம் முதல்வர் அறிவித்த திட்டங்கள், மின் வாகன உற்பத்தி (Electric Vehicles Manufacturing), சூரிய மின்சக்தி கலன்கள் (Solar Electrical Batteries), காற்றாலை கலன்கள் (Windmill Batteries), Information Technology and Information Data Centre, மின்னணு வன்பொருட்கள் உற்பத்தி ஆகிய துறைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, Fourth Industrial Revolution என்றழைக்கப்படும் நான்காவது தொழிற்புரட்சியை நமது மாநிலத்தில் ஏற்படச் செய்தது மாபெரும் சாதனையாகும். Hands-on approach மற்றும் களத்தில் ஆய்வு–இவை மிக முக்கியம். Need of the Hour-for a company or an organization of any size, this strategic approach matters. நம் தலைவர், தளபதி அண்ணன் அவர்களுடைய இந்த அணுகுமுறையைப் பார்க்கும் உலக முதலீட்டாளர்கள்-investors definitely will make our one trillion dollar economy happen. (மேசையைத் தட்டும் ஒலி)

தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு சிற்றுண்டி, மகளிருக்கு உரிமைத் தொகை, இளைஞர்கள் திறன் மேம்பாடு போன்றவை தமிழர்களின் நலன் காக்க செய்யப்பட்டிருக்கும் மாபெரும் அறிவிப்புகள். 2030 ஆம் ஆண்டுக்குள் பொருளாதாரத்தை one trillion American dollar உயரத்திற்கு எடுத்துச் செல்ல எடுக்கப்படும் தீவிர முயற்சிகளால் 30 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாகும் என்பது தெள்ளத்தெளிவு. இளைஞர்களின் வேலை வாய்ப்பைப் பெருக்க, தொழில் துறை எடுத்த சிறப்பான நடவடிக்கைகளால் மீண்டும் பெருந்தொழில்களும், சேவைத் துறையும், புதியதாகத் தொழில் வாய்ப்புகளைப் பெருக்கி வருவதால், தமிழ்நாட்டை தங்களின் favourable destination ஆகத் தேர்ந்தெடுத்து வருகின்றனர். பல்வேறு நாடுகளின் தொழில் துறையினர் மற்றும் சேவைத் துறையினர் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை தமிழகத் தொழில் துறையுடன் நிறைவேற்றி வருகின்றனர். அதன்விளைவாக, இளைஞர்களின் வேலைவாய்ப்பு பெருகிவருகின்றது. தொழில் கொள்கைகள், சேவைகள் துறைக்கு தற்கால நிலைமைக்கேற்ப வரைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றுள் சில–மின்னணுவியல், மின்னணு வன்பொருள் கொள்கை, மின் வாகனக் கொள்கை, வான்வெளி பாதுகாப்புக் கொள்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்நாடு நகர எரிவாயு விநியோகக் கொள்கை, தமிழ்நாடு தொழில்நுட்ப ஜவுளிக் கொள்கை, மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்களிலிருந்து செயற்கை இழை நூல் (Tamil Nadu Textile Policy, 2023, Fibre from recycled products), செயற்கை இழை துணி கொள்கை, ஆடை தயாரிப்புகளுக்கான சிறப்புத் திட்டம் (artificial fibre and cloth manufacturing policy) ஆகியவற்றையும் நம் முதல்வர் அவர்கள் வெளியிட்டார்கள். உயிர் அறிவியல் வளர்ச்சிக் கொள்கை, ஆராய்ச்சி மேம்பாட்டுக் கொள்கை, தோல், காலணி கொள்கை மற்றும் மின் வாகன கொள்கைக்கான மேம்பாடுகள் போன்றவற்றை வழிகாட்டி நிறுவனம் வடிவமைத்துத் தந்துள்ளது. இவையெல்லாம் மாநிலத்தில் பல்வேறு துறைகளின் வளர்ச்சியினை விரைவுபடுத்திட அறிவிக்கப்பட்ட கொள்கைகள்.

சீரான மற்றும் பரவலான வளர்ச்சியை ஏற்படுத்திட புதிய SIPCOT தொழிற்பூங்காக்கள் அமைத்து, இவ்வளாகங்களால் தொழில் திறனை மேம்படுத்துவதோடு, வேலைவாய்ப்பையும் பெருக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள், எதிர்வரும் தை திங்களில் சென்னையில் "World Global Investors Meet"–ஐ பிரம்மாண்டமான முறையில்

நடத்தவிருக்கிறார்கள். Definitely, it is an accelerating effort for Tamil Nadu's economy. சிறு தொழில்களை ஊக்குவிக்கும் வகையில் மதுரை, விளாச்சேரி பொம்மை குழுமம், தூத்துக்குடி ஆகாய தாமரை குழுமம், விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் மகளிர் நெசவு குழுமம் ஆகியவற்றை 9 கோடியே 5 இலட்சம் ரூபாய் அரசு மானியத்துடன் அமைப்பதற்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

தொழில்புரிவதை எளிதாக்க ஒற்றைச் சாளர இணையதளம்–2–ஐத் தொடங்கி வைத்துள்ளார் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். தொழில்நுட்பத்தில் முக்கிய நகரமாக மதுரையை மாற்றிட TIDEL Park அமைக்கப்படுகிறது. அவ்வாறு அமைக்கப்படும் TIDEL Park-ஐ மதுரை மாட்டுத் தாவணியில் இரண்டு கட்டங்களாக கட்ட அறிவுறுத்தப்பட்டு, முதற்கட்டமாக 600 கோடி ரூபாயில் 5 ஏக்கரில் நிறுவப்படுகிறது. இரண்டாவது கட்டமும் உண்டு. (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 12–35

எனது வில்லிவாக்கம் தொகுதியில் ஒரு extraordinary project-ஐ மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்கு முதற்கட்டமாக, எனது வில்லிவாக்கம் தொகுதியில் உள்ள கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவமனையை Bangalore NIMHANS போல மாற்றிட ரூ.40 கோடி நிதியை அறிவித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நிறைவாக, எனக்குக் கிடைத்திட்ட இந்த நல்ல வாய்ப்பை நழுவவிடாமல் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சமீபத்திய ஓர் அரசியல் நிகழ்வுக்காக, கழகத் தலைவரை, அருமை முதல்வரை பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசின் பலம் என்பது, எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையின்மைதான். அதை முழுவதுமாக உணர்ந்துள்ள நம் முதல்வர் அவர்கள் சமூக நீதி என்ற ஒற்றைப் புள்ளியில் பலவிதமான வேறுபாடுகளால் பிரிந்து நிற்கும் அனைத்துக் கட்சியினரையும் சமூக நீதிக் கொள்கைகளால் இணைக்க முடியும் என்ற அதிசயத்தை சமீபத்தில் நடத்தினார். அந்நிகழ்வில் பல்வேறு கட்சியினரும் சமூக நீதிக் கொள்கையின் அவசியத்தை உணர்ந்து இணைந்துள்ளனர். இது எதிர்வரும் நாட்களில் பல்வேறு நிகழ்வுகளுக்கு வழிகாட்டியாக

அமையும். கடந்த இரு நாட்களாக தேசிய ஊடகங்களில், குறிப்பாக வட இந்திய ஊடகங்களில், தலைவரைப் பாராட்டி, கொண்டாடி வருகின்றனர். நாமும் அவரைக் கொண்டாடுவோம். வாழ்க! வெல்க! நம் தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், எனது தொகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய கோரிக்கைகளை இத்துடன் இணைத்துள்ளேன். அதனை நான் படித்ததாக ஏற்று, அவைக் குறிப்பில் பதிவு செய்து நிறைவேற்றித் தர வேண்டுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நீதி காவலர், எங்களுடைய குல தெய்வம் மருத்துவர் அய்யா அவர்களை வணங்கி, இந்தியத் துணைக் கண்டமே பாராட்டும்வகையில் மருத்துவத் துறையில் மாற்றத்தைக் கொண்டு வந்த பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர், எங்களுடைய வழிகாட்டி அண்ணன் திரு. அன்புமணி அவர்களை வணங்கி, பெண்ணாகரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்றக் குழுத் தலைவர் அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர், அண்ணன் தளபதியார் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, சேலம் மாவட்டத்தினுடைய பொறுப்பு அமைச்சர், அனைவரையும் சம நோக்கத்தோடு அரவணைத்துச் செல்லக்கூடிய அண்ணன் திரு. கே.என். நேரு அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, இந்த அவையில் சிறப்பாகப் பணியாற்றுகின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், சக சட்டமன்ற உறுப்பினர்களையும் வணங்கி, நான் எனது உரையைத் தொடங்குகிறேன்.

வாழ்க தமிழ், வளர்க தமிழ்நாடு. ஒருவரின் அடையாளம், ஓர் இனத்தின் அடையாளம் மொழிதான். மொழி வளர்ந்தால் இனத்திற்குப் பெருமை; மொழி சிதைந்தால் அந்த இனம் சிதைந்துவிடும். இது உலக அளவில், உலகின் மூத்த மொழியாக இருக்கின்ற பிற மொழிகளுக்குத் தாயாக இருக்கின்ற நம்முடைய அன்னைத் தமிழின் பெருமையைக் கூறுகிறது. எந்த மொழிக்கும்

இல்லாத இலக்கண, இலக்கிய வளங்களைக் கொண்டது, பழமையானது, பழம் பெருமையானது தமிழ்மொழி. ஆகவே, தமிழுக்கு உலகில் மூத்த மொழி என்ற சிறப்பு உண்டு. இப்படிப்பட்ட தாய் மொழி, அன்னைத் தமிழ் இப்போது கலப்பு மொழியாகச் சிதைந்து வருகிறது. இது மிகுந்த வேதனையளிக்கின்றது. இதைப் பார்த்துதான் எங்களுடைய மருத்துவர் அய்யா அவர்கள்-பொங்கு தமிழ் வளர்ச்சி அறக்கட்டளையின் நிறுவனர் மருத்துவர் அய்யா– அவர்களும், அதன் தலைவர் அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்களும், 'தமிழைத் தேடி' என்ற பொருளில், பொங்கு தமிழ் வளர்ச்சி அறக்கட்டளை சார்பில் தலைநகர் சென்னையிலிருந்து மதுரை வரை எட்டு நாட்கள் பரப்புரை விழிப்புணர்வுப் பயணம் மேற்கொண்டு, சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரை மண்ணில் உலகத் தமிழ்ச் சங்க அரங்கத்தில் நிறைவு செய்தார்கள். பேசும் மொழியில் ஆங்கிலம் உள்ளிட்ட பிற மொழி கலப்பு இல்லாமல் பேச வேண்டும்; வணிக நிறுவனங்கள், கடைகள், பெயர் பலகைகள், விளம்பரங்கள் அரசாணையின்படி தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட வேண்டும்; தனியார் கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து கல்வி நிறுவனங்களிலும் தமிழைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும்; தமிழ், ஆட்சி மொழி என்பதை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். உயர் நீதிமன்றத்தில், தமிழ் அலுவல் மொழியாக இருக்க வேண்டும்; நம்முடைய ஆலய நிகழ்வுகள், திருமண நிகழ்வுகள் போன்றவை தமிழில் வேண்டும்; தமிழ் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்கிற சட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முழுமையாக நிறைவேற்ற வேண்டும்; தமிழில் படித்தவர்களுக்கு உயர் கல்வியில் 30 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கிட வேண்டும்; இதை அரசு மட்டும் செய்தால் போதாது, மக்களிடத்திலும் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அன்னைத் தமிழை வளர்க்க ஒன்றுபட்டு முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய விருப்பம். 'தாய் வளர்த்து, நாம் வளர்ந்தோம்; தமிழ் வளர்த்து, நாம் வாழ்வோம்' என்ற மருத்துவர் அய்யா அவர்களின் முழக்கத்தை எடுத்துச்சொல்வதில், தமிழர்கள் அனைவருக்கும் பெருமை. எனவே, தமிழை வளர்க்க அனைவரும் உறுதி ஏற்போம்.

பிற்பகல் 12–40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டில் பள்ளியிலிருந்து கல்லூரி வரை

உள்ள தமிழ் பேராசிரியர்கள் முழுமையாகத் தமிழில் பாடம் நடத்துவது இல்லை. பிற மொழி, ஆங்கில மொழி கலந்துதான் பேசுகிறார்கள். ஆகவே, நம்முடைய தமிழ்நாட்டினுடைய தாய் மொழி முக்கியத்துவத்தை உணர்ந்து, ஆசிரியர் பெருமக்கள் பாடம் நடத்துகின்றபோது தமிழில் ஒரு வார்த்தைகூட ஆங்கிலம் கலக்காமல் பாடம் நடத்துவதை தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாக மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கட்டாயம் உறுதி செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் சிறு தொழில் நலிந்து வருகின்றது. உற்பத்திச் செலவு, மின்சாரச் செலவு, வரிச் சுமை போன்றவற்றால் அவர்களால் தொழிலை நடத்த இயலவில்லை. ஆகவே, அதற்கு ஒரே தீர்வு, சிறு தொழில்களுக்கான மின்சாரக் கட்டணம், கட்டட வரி, தொழிலாளர்களுக்கு சலுகை, தமிழ்நாடு சிறு முதலீட்டுக் கழகத்தினுடைய மானியம் உயர்வு, வட்டிக் குறைப்பு போன்றவற்றை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு தமிழ்நாடு அரசு கூடுதலாக வழங்கினால் நலிவடைந்த அந்தத் தொழில்கள் கட்டாயம் வளரும். ஆகவே, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கட்டாயம் இதைச் செய்ய வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சாரக் கட்டண ஏற்றத்தினால் MSME நிறுவனங்கள் மிகுந்த அளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்கிற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், MSME நிறுவனங்களுக்கான peak hour கட்டணத்தை 25 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், குறுந்தொழில் நிறுவனங்களுக்கு மூன்றாண்டுகளுக்கு 20 சதவிகித மின்சார மானியம் அரசின் மூலமாக வழங்கப்படுகிறது. கடந்த இரண்டாண்டுகளில் மட்டும், நம்முடைய அரசு பொறுப்பேற்றது முதல் இதுவரை, 1,882 நிறுவனங்களுக்கு

17.08 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.

திரு. S. சதாசிவம்: சிறு தொழில் தொடங்குவதற்கு, பல்வேறு உரிமைகளைப் பெறுவதற்கு, அதாவது, Licence, Pollution Certificate, மின்சார இணைப்பு போன்றவற்றை தொழிலாளர் நலத் துறையிடமிருந்து பெறுவதற்கு காலதாமதம் ஆகின்றது. ஆகவே, அனைத்திலும் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கின்ற வகையில், ஒரே இடத்தில், ஒரே குடையின்கீழ் அனைத்தையும் பெறுவதற்கு வழிவகை செய்ய வேண்டும். ஒரு தொழில் செய்வதற்குத் தேவையான அனைத்துவிதமான Licence-களைப் பெறுவதற்கு ஒரே குடையின்கீழ். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, MSME நிறுவனங்கள் தொழில் உரிமைகளைப் பெறுவதற்கு சிரமமாக இருக்கிறது, அதை எளிமைப்படுத்திட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், Single Window Portal 2.0 என்ற ஓர் அற்புதமான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த Portal-ல் 164 உரிமங்களைப் பெறுவதற்கு நீங்கள் மனு போட்டீர்களென்று சொன்னால், உடனடியாக, அனைத்து உரிமங்களும் அந்த MSME நிறுவனங்களுக்கு வழங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கூடுதல் மானியம் வழங்குவதுடன், குறைந்த வட்டியில் கடன்

வழங்க வேண்டும். இதனால், குறு, சிறு தொழில்கள் வளர்ச்சியடையும். மேலும், பெண்கள் நடத்தும் குறு, சிறு தொழில்களுக்கு முழுமையாக வட்டியில்லாத கடன் வழங்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் மூலம் சேலத்தில் TIDEL Park அமைப்பதற்கான எல்லா நடவடிக்கைகளையும் உருவாக்கிவிட்டு, இன்னும் தகவல் தொழில்நுட்பத் தொழில் தொடங்கப்படாமல் இருப்பது ஏமாற்றம் அளிக்கிறது. எனவே, உடனடியாக, அங்கு தொழில் தொடங்கி, வேலைவாய்ப்பினை உருவாக்க வேண்டும்.

பிற்பகல் 12–45

எங்களுடைய சேலம் பகுதியிலே ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு 880 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. அதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பின்தங்கிய மாவட்டங்களான தருமபுரி, விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், அரியலூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, தென்காசி போன்ற மாவட்டங்களில் தொழில் தொடங்க முன்னுரிமை அடிப்படையில் கட்டாய மானியம் வழங்கி நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்கள் ஊக்குவிப்பார்களா என்று நான் அறிய விரும்புகின்றேன்.

தமிழ்நாட்டில் பெரிய நிறுவனங்களில், அந்த மண்ணில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்களை அந்த மாவட்டத்திற்குக் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். ஆனால், உற்பத்தி செய்து போதும் என்கிற அளவிற்கு வெளி மாவட்டங்களுக்குக் கொடுக்கிறார்கள். சேலம் மாவட்டத்தில், குறிப்பாக, இரும்பு தொழிற்சாலை இருக்கிறது. ஒரு மாதத்திற்குக் கிட்டத்தட்ட 12 ஆயிரம் டன் இரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் யாருக்கும் அந்த Dealership-ஐ கொடுப்பதில்லை. எங்களுடைய மண், காவேரி தண்ணீர், நம்முடைய லைசன்ஸ், அரசு மானியம் இவற்றைப் பயன்படுத்தி எங்கள் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், இந்த மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுப்பதில்லை. (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் நிச்சயம்

இதன்மீது நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் மட்டுமே நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேரமுடியும் என்ற விதியால் ஏறக்குறைய 90 சதவிகித பத்திரிகையாளர்கள் உறுப்பினராகச் சேர முடியாத நிலை உருவாகியிருக்கிறது. இதனால், வாரியம் உருவாக்கப்பட்ட நோக்கமே நிறைவேறாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, அலுவலகங்களில் பல்வேறு பிரிவுகளில் பணியாற்றும் பத்திரிகையாளர்கள் தொடங்கி, மாவட்டங்கள், தாலுகா அளவில் பணியாற்றும் செய்தியாளர்கள் வரை அனைவரையும் வாரியத்தில் இணைக்கும்படி, விதிகளைத் திருத்தியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் நான் கோரியவாறு மேச்சேரி ஒன்றியத்தில், உழவர் சந்தை அமைத்துக் கொடுத்த நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேட்டூரில் புதிய பேருந்து நிலையம் அமைத்ததற்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொப்பூர்-பவானி நெடுஞ்சாலை விரிவாக்கத்திற்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். பாலமலையைச் சார்ந்த மலைவாழ் மக்களுக்கு 75 ஆண்டுக்காலமாக சாலை வசதி இல்லாத நிலையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்திய சுற்றுச்சூழல் துறையின் அனுமதி பெற்று, மேட்டூர் தொகுதியில், எனது கோரிக்கையையும் ஏற்று . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தொகுதிக் கோரிக்கைகளை கொடுத்துவிடுங்கள். அவை படித்ததாகக் கருதி பதிவு செய்துகொள்ளப்படும்.

திரு. S. சதாசிவம்: தொகுதி மக்கள் கோரிக்கைகளையும் ஏற்று பாலமலைக்கு 28.4 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, இந்திய வரலாற்றில், எனது தொகுதியில் சாலை வசதி செய்து மலைவாழ் மக்களை வாழவைத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலும் மேட்டூர் தொகுதி மக்களின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உபரி நீர் திட்டத்தைப் பொறுத்தவரையில், உபரி நீர் திட்டத்திற்கு 524 கோடி ரூபாயை மாண்புமிகு முன்னாள்

முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருந்தார்கள். அந்தத் திட்டத்தை நிறுத்தாமல், தற்போது இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தாய் உள்ளத்தோடு, மூத்த அமைச்சர் அவர்களை அனுப்பி, உபரி நீர் திட்டத்தைத் திறந்துவைத்த வரலாறு நம்முடைய மூத்த அமைச்சர் அண்ணன் மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்களுக்கு உண்டு. ஆகவே, அந்தத் திட்டத்தில் மேட்டூர் தொகுதியில் சந்ததானப்பட்டி ஏரி விடுபட்டிருக்கிறது. அதை உபரி நீர் திட்டத்தில் சேர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய காளிப்பட்டி ஏரியைத் தூர் வாருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன் அவர்கள். (குறுக்கீடு) கோரிக்கைகள் படித்ததாகப் பதிவு செய்துகொள்ளப்படும். (குறுக்கீடு) நான்கைந்து கோரிக்கைகளைச் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) சரி, உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

திரு. S. சதாசிவம்: மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியத்தில் அண்டை மாநிலமான கர்நாடகாவின் எல்லை இருக்கிறது. அங்கே திரு. ராஜா என்கிற நம்முடைய மீனவரை, கர்நாடகாவின் வனத் துறை ** நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வனத் துறை Check post, காவல் துறையின் Check post-களை நம்முடைய எல்லையில் அமைத்து, கொளத்தூர் ஒன்றியத்தில் மக்களைப் பாதுகாக்க. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன் அவர்கள். (குறுக்கீடு)

திரு. S. சதாசிவம்: கட்டாயம் Check post அமைக்க வேண்டுமென்று அன்போடும், பண்போடும், பாசத்தோடும் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் இந்தியாவின் இரண்டாவது பெரிய அணையான மேட்டூர் அணை இருக்கிறது. 93.47 டி.எம்.சி. அடி தண்ணீர் தேக்கி வைக்கப்படுகிறது. ஆகவே, மேட்டூர் தொகுதி மக்களுக்கு உபரிநீர் திட்டத்தில் 2 டி.எம்.சி. தண்ணீரை வழங்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தொகுதிக் கோரிக்கைகள்:

தொழில் நிறுவனங்களில் உள்ளூர் மக்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

மேச்சேரி ஒன்றியத்தில் சிட்கோ தொழிற்சாலை அமைக்க வேண்டும்.

மேட்டூர் காவிரிப் பாலம் அருகே புதிய பாலம் கட்டித்தர வேண்டும்.

கொளத்தூர் ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிராம வீடுகளுக்கும் JJM திட்டத்தில் குடிநீர் வழங்க வேண்டும்.

மேச்சேரி ஒன்றியத்தில் கூனாண்டியூரில் காவிரி ஆற்றில் இருந்து கூட்டுக் குடிநீர் திட்டம்மூலம் அனைத்து ஏரிகளுக்கும், விவசாய நிலங்களுக்கும், அனைத்து கிராமங்களுக்கும் குடிநீர் வசதி ஏற்படுத்த வேண்டும்.

மேட்டூர், காவிரி ஆற்றில் 10 மாவட்டங்களுக்கு குடிநீர் அனுப்புகின்ற சுத்திகரிப்பு நிலையம் அருகில் மேட்டூர் நகராட்சி, வீரக்கல் புதூர் மற்றும் பி.என்.பட்டி பேரூராட்சிப் பகுதியில் இருந்து வருகின்ற கழிவுநீர் மற்றும் இரசாயன கழிவுகள் குடிநீரிலும் மற்றும் காவிரி ஆற்றிலும் கலந்து மாசுபடுகிறது. அதனால் நோய் அதிகமாகப் பரவும் அபாயம் உள்ளது. இதைத் தடுக்க அந்தப் பகுதியில் நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டும்.

ஒகேனக்கல்லில் ஒரு நாளைக்கு ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் குளிக்கும்போது சோப்பு, ஷாம்பு, எண்ணெய்யை பயன்படுத்துவதால், ஒகேனக்கலில் இருந்து மேட்டூர் காவிரி ஆற்றிற்கு வரும் தண்ணீர் மாசடைகிறது. எனவே, மக்கள் இந்த மூன்று பொருட்களை வைத்து, குளிப்பதற்குத் தடை செய்ய வேண்டும்.

மேச்சேரி ஒன்றியம், காமனேரியில் புதிய காவல் நிலையம் உருவாக்கித் தர வேண்டும். மேட்டூர் தொகுதி, மேச்சேரி ஒன்றியத்தை தனி தாலுகாவாகப் பிரித்துத் தர வேண்டும்.

மேட்டூர் தொகுதி, மேச்சேரி, கொளத்தூர் ஒன்றியங்களில் சுமார் 50 ஆண்டுக் காலமாக வீடு கட்டி மக்கள் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு பட்டா வழங்க வேண்டும்.

கோனூர் காமராஜ் சிலை அருகில் இருந்து சந்ததானம்பட்டி வழியாக மேச்சேரி செல்லும் சாலை பழுதடைந்துள்ளது. இதனை விரிவுபடுத்தி, சீரமைத்துத் தர வேண்டும்.

சேலம் மாவட்டம், மேட்டூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, 5 உயர்நிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்தி மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றித் தர வேண்டும்.

பல பள்ளிகளில் சுற்றுச்சுவர் மற்றும் கழிவறை இல்லாத நிலையில் உள்ளது குறித்து கொடுத்த மனுமீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேட்டூர் ஒர்க்ஷாப் மின்வாரியப் பணிமனை பகுதியில் கடந்த 50 ஆண்டு காலமாக பழுதடைந்த நிலையில் உள்ள 450 குடியிருப்புகளை இடித்து விட்டு, அந்தப் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக புதிய குடியிருப்புகளை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

பெண்கள் பின்னலாடை, உணவு சம்பந்தமான தொழில் செய்வதற்கு இடம் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

கொளத்தூர் ஒன்றியம், நீரேற்றும் இயந்திரம்மூலம் 10 ஏரிகளுக்கும் விவசாயத்திற்கும் மற்றும் மேல்நிலைத் தொட்டிக்கும் குடிநீர் நிரப்ப திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்.

மேட்டூர் நகரத்தில், சுமார் 80 ஏக்கர் நிலம் அரசுக்குச் சொந்தமாக உள்ளது. அதில் டி.எஸ்.பி அலுவலகம், சப்-கலெக்டர் அலுவலகம், தலைமை அரசு மருத்துவமனை ஆகிய அனைத்து அரசுத் துறை அலுவலகமும் உள்ளன. எனவே, சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து அந்தியூர், எடப்பாடி, மேட்டூர், பெண்ணாகரம் ஆகிய தொகுதிகளை உள்ளடக்கி மேட்டூரை மாவட்டமாக அறிவிக்க வேண்டும்.

மேட்டூர் அணையிலிருந்து உபரிநீர் திட்டத்தின் மூலமாக மேட்டூரில் இருக்கும் அனைத்து ஏரிகளுக்கும், விவசாய பயன்பாட்டிற்கு 1 டி.எம்.சி. அடி தண்ணீர் மற்றும் சேலம் மாவட்டம் முழுவதும் 4 டி.எம்.சி. அடி தண்ணீரைத் திறந்து விட காவிரி நடுவர் நீதிமன்றம் மூலமாக அனுமதி பெற்றுக் கொடுக்க வேண்டும்.

மேட்டூர் தொகுதிக்கு 2 விரைவுப் பேருந்துகள் மற்றும் 10 நகரப் பேருந்துகள் ஒதுக்கப்பட வேண்டும்.

மேட்டூர் தொகுதிக்கு கூடுதலாக 108 ஆம்புலன்ஸ் சேவை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும். துணை சுகாதார நிலையத்தைச் சீரமைத்துத் தரவேண்டும்.

மேட்டூர் அணையை ஒட்டியுள்ள ஆக்கிரமிப்பு இடங்கள் மற்றும் மேட்டூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அருகில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றித் தர வேண்டும்.

மேட்டூர் அணையை ஒட்டியுள்ள பூங்காவை, அணையின் பாதுகாப்பு கருதி, தடை செய்ய வேண்டும். பூங்கா எதிரில் உள்ள ஆக்கிரமிப்புகளையும் முனியப்பன் கோயில் அருகில் உள்ள இரண்டு ஆக்கிரமிப்புகளையும் மற்றும் மேட்டூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அருகில் உள்ள ஆக்கிரமிப்புகளையும் அகற்றிட வேண்டும்.

கடந்த 40 ஆண்டுகளுக்குமேல் சேலம் இரும்பாலை வளாகத்தில் கையகப்படுத்தப்பட்ட 4,000 ஏக்கர் நிலத்தில், காலியாக பயன்படுத்தாமல் இருக்கும் சுமார் 2,000 ஏக்கர் நிலத்தை ஒரு தொழிற்பேட்டையை அமைப்பதற்கு தமிழக அரசு பெற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன் அவர்கள்.

பிற்பகல் 12–50

திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க, நாளும் பாடுபடுகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் தளபதி அவர்களை வணங்குகிறேன். தன் மாறுபட்ட சிந்தனையினால், செயலால் அனைவரையும் கவரக்கூடிய நமது பாசமிகு இளம் தலைவர், இளைஞரணிச் செயலாளர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

அதேபோல எனக்கு என்றும் உறுதுணையாக இருந்துகொண்டிருக்கின்ற கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர், மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை

அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தங்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் துறை மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை மானியக் கோரிக்கைகளில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான், எப்போதும் தொழில் துறைக்கு ஒரு பொற்காலமாக விளங்கிக்கொண்டிருக்கிறது. எனவே, அந்த அடிப்படையில் பார்த்தோமென்று சொன்னால், 1970-ல் முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் SIDCO-வை ஆரம்பித்தார்கள். அது இன்று 135 தொழிற்பேட்டைகளாக வளர்ந்து இருக்கிறது. அதேபோல 1971-ல், SIPCOT தொழிற்பேட்டையை உருவாக்கினார்கள். இன்று 28 இடங்களில் SIPCOT தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், அது தொழில் வளர்ச்சிக்கு மிகப் பெரிய ஆதரவாக இருந்துகொண்டிருக்கிறது.

அண்ணன் தளபதி அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற, இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் மொத்தம் 36 SIPCOT தொழில் வளாகங்களுக்கு அதற்கான முன்னெடுப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. நிலம் கையகப்படுத்தும் பணி மற்றும் முடிவடையும் தருவாயில் உள்ளவை 7, நில எடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருபவை 11, நிலம் தேர்வு செய்யப்பட்டிருப்பவை 18, ஆகமொத்தம் 36 SIPCOT வளாகங்கள் புதியதாகத் தொடங்கப்படவிருக்கின்றன என்று சொன்னால், வருங்காலத்தில், இந்தத் தொழில் வளாகங்கள் எல்லாம் செயல்பாட்டிற்கு வருகின்றபொழுது தமிழகம் தொழில் வளர்ச்சியிலே, ஒரு பெரிய முன்னேற்றம் அடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதிகாக்கவும்.

திரு. சபா. இராசேந்திரன்: *முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தீர்க்க தரிசனத்தோடு,* IT Policy *உருவாக்கி,* TIDEL Park*–ஐ 1996–ல் ஆரம்பித்தார்கள். 2006–2011 இல் பல முன்னணி நிறுவனங்கள்,* Automobile *துறையில்* Nissan, Hyundai, Caterpillar, Mitsubishi, Daimler *போன்ற நிறுவனங்களும், அதேபோல* software *துறையில்,* Tata Consultancy Services, Wipro, Cognizant Technology Solutions Corp, Infosys *போன்ற நிறுவனங்களும் துவக்கப்பட்டன. அதேவழியில் நடைபோட்டுக்கொண்டிருக்கின்ற நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தொழில் துறை முன்னேற்றத்திற்காக பத்து புதிய கொள்கைகளை உருவாக்கியிருக்கிறார்கள். பத்து புதிய கொள்கைகளை ஏன் உருவாக்க வேண்டுமென்று சிந்திக்கின்றபொழுது, ஆங்கிலத்தில்,* 'Eating an Elephant' *என்று சொல்வார்கள். அந்தவகையில் ஒரு பெரும் துறையை, பெரும் முன்னேற்றத்திற்கு, பெரிய தொழில் துறையை முன்னேற்றத்திற்கு உட்படுத்தவேண்டுமென்று சொன்னால், அந்தத் துறையை சிறு கூறுகளாகப் பிரித்து, அதில் ஒவ்வொன்றிலும்,* micro level management*–ஐ செய்தால்தான், அந்தத் துறையில் நாம் எதிர்பார்க்கின்ற வளர்ச்சியைப் பெறமுடியும் என்பதைச் சிந்தித்துச் செயல்பட்டிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும். . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் உங்கள் இருக்கையில் அமரவும். நீங்கள் பேசுவது மாண்புமிகு அமைச்சருக்குக் கேட்கவில்லை.*

திரு. சபா. இராசேந்திரன்: *அதேபோல, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.* Fintech *நிறுவனங்களுக்கு உலகளாவிய மையமாக சென்னையை உருவாக்க உதவும் புதிய* fintech *கொள்கையை தி.மு.க. அரசு 2021 ஆம் ஆண்டு வெளியிட்டது. அதையடுத்து* TIDCO, *உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் மற்றும்* Fintech*–கை ஈர்க்கும் வகையில், சென்னைக்கு அருகில் நந்தம்பாக்கத்தில் 260 ஏக்கர் பரப்பளவில் 5 இலட்சம் சதுர அடியில், இந்த* Fintech *நகரத்தை உருவாக்கி வருகிறது. மும்பையில் இருந்து வெளிவரும் நிதி நிறுவனங்கள் பெங்களூரு நோக்கி செல்கின்றன. இதைத் தவிர்க்க விரைவான நடவடிக்கை எடுத்து, சென்னைக்கு அவர்களை அழைத்து வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இந்த ஆண்டு ஜனவரி மாதம். . .*

2023 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கொஞ்சம் mike-க்கு அருகில் வந்து பேசுங்கள்.*

திரு. சபா. இராசேந்திரன்: *ரூ.15,610.43 கோடி மதிப்பிலான தொழில் திட்டங்களுக்கு தமிழக அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டங்களில், மின்சார வாகனத் தயாரிப்பு,* Cellphone *உற்பத்தி ஆலை,* Automobiles, Wireless *தொழில்நுட்பம்,* Oxygen *ஆலை மற்றும் ஜவுளி ஆகியவை அடங்கும்.*

பிற்பகல் 12–55

காலணி மற்றும் தோல் சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்களில் ரூ.20,000 கோடி முதலீட்டை ஈர்க்கும்பொருட்டு, கடந்த மாதம் Taiwan *காலணி உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் தமிழ்நாடு வழிகாட்டி,* Guidance Tamil Nadu *இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியிருக்கிறது.*

தொழில் துறையில், தொழிற்சாலைகளால், பொருளாதாரம் மட்டும் வளர்ச்சியடைந்தால் போதாது; அது சமூக நீதியுடன், சமச்சீர் வளர்ச்சியாக இருக்க வேண்டுமென்று நினைக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியிலே, தொழில் முனைவில் அனைத்து சமூகத்தினரையும் உள்ளடக்கிய வளர்ச்சியினை அடைவதற்கு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில்முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க 'அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள்' திட்டத்தை 2023–2024 ஆம் நிதியாண்டில் தமிழக அரசு அறிவித்துள்ளது. இதற்கென ரூ.100 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1 இலட்சம் பேரை 10 படி முன்னேற்றுவதைவிட, 7 கோடி பேரை 1 படி முன்னேற்றினால்தான் அது சிறந்த வளர்ச்சியாகக் கருதப்படும். அதுதான் ஒருங்கிணைந்த வளர்ச்சியாகக் கருதப்படும். அதுதான் திராவிட மாடல் வளர்ச்சி. சிலரை 10 படிகள் முன்னேற்றுவது என்பது Gujarat Model *வளர்ச்சி.*

திருச்சி, மதுரை, சேலம் ஆகிய இரண்டாம் கட்ட நகரங்களில் உலகப் புகழ்பெற்ற மருத்துவர்கள் மற்றும் Airport *வசதி இருப்பதனால்,* Medical Tourism *வளர்வதற்குத் தேவையான முன்னெடுப்புகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, கடந்த 2021–2022 ஆம் ஆண்டில் ரூ.70,000 கோடி முதலீடு பெறப்பட்டுள்ளது. அதேபோல, 2022–2023 ஆம் ஆண்டில் ரூ.1,25,000 கோடி முதலீடு பெறப்பட்டுள்ளது. இது, கடந்த காலத்தில் பெறப்பட்ட முதலீட்டைவிட 41.5 சதவிகிதம் அதிகம். அதேபோல, 2023–2024 ஆம் ஆண்டில் ரூ.2,70,000 கோடி முதலீடு பெற 146 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வருகிற ஜனவரி 10 மற்றும் 11 ஆம் தேதிகளில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறவிருக்கிறது. தீர்க்க தரிசனத்தோடு எதையும் திட்டமிடுகின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை நடத்தி, நிச்சயமாக மிகப் பெரிய தொகையை முதலீடாகப் பெறுவார்கள். அதனடிப்படையில் நல்லதொரு எதிர்காலம் தமிழ்நாட்டுக்குக் காத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, பல்வேறு காரணிகளை உள்ளடக்கி ஆய்வுகளை நடத்தி, Ease of doing business என்று அழைக்கப்படுகிற நிலையில், கடந்த கால ஆட்சியில், 2021 ஆம் ஆண்டு 14–வது இடத்தில் இருந்த தமிழ்நாடு, தற்போது தலைவர் தளபதி அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு, மூன்றாவது இடத்திற்கு முன்னேறியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

1 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் நாம் ஆட்சிக்கு வந்தபோது, ரூ.19.40 இலட்சம் கோடியாக தமிழ்நாட்டின் பொருளாதாரம் இருந்தது. 2021–2022 ஆம் ஆண்டில் ரூ.21.79 இலட்சம் கோடியாக வளர்ந்து, 13.9 சதவிகித வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) 2022–2023 ஆம் ஆண்டில் 13.74 சதவிகித வளர்ச்சிப் பெற்று நிலையான நீடித்த வளர்ச்சியைத் தமிழ்நாடு கண்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்கிற தொலைநோக்குப் பார்வையை நனவாக்க, தமிழ்நாட்டிற்கான ஒட்டுமொத்த உத்திகளைக் கண்டறியவும், முக்கியத் தேவைகளை அடையாளம் காணவும், இயற்கை வளங்கள் மற்றும் காலநிலை மீதான தாக்கத்தை அளவிடவும் Boston Consulting Group–ஐ தமிழக அரசு தேர்ந்தெடுத்துள்ளது.

2023 ஏப்ரல் 6] [திரு. சபா. இராசேந்திரன்]

1 டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை அடைவதற்குத் தேவையான strategy & road map-ஐ ஆறு மாதங்களில் தயாரிக்க கால நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை 2030 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக எட்டிப் பிடிப்பார்கள். அப்பொழுதும் அவர்கள்தான் முதலமைச்சராக இருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நேரத்தில் முதலமைச்சராக இருந்துகொண்டு, அடுத்த இலக்கை அவர்கள் நிர்ணயித்து, அதை நோக்கி செயல்பட்டுக் கொண்டிருப்பார்கள்.

அடுத்ததாக, நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தைப் பொறுத்தவரையில், நிலமெடுக்கிற பிரச்சினையிலே சில சந்தேகங்கள் மற்றும் கோரிக்கைகள் எழுப்பப்பட்டு வருகின்றன. எப்பொழுதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வருகிறதோ, அப்பொழுதெல்லாம் சுமூகமான சூழ்நிலை உருவாக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. சபா. இராசேந்திரன்: இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். பிரச்சினைகள் சுமூகமாகத் தீர்க்கப்பட்டு, நிறுவனம் சுமூகமாக இயங்கிட வழிவகை செய்யப்படுகிறது. முன்னாள் முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள், கடந்த கால காங்கிரஸ் ஆட்சியின்போது, 2005 ஆம் ஆண்டு NLC பங்குகளைத் தனியாருக்கு விற்கப் போவதாக அறிவிக்கப்பட்டவுடன், NLC பங்குகளைத் தனியாருக்கு விற்கக்கூடாது என்று சொன்னவர் தலைவர் கலைஞர் அவர்கள். 'அதை மீறி விற்றால் நாங்கள் கூட்டணியிலிருந்து வெளிவருவோம்' என்று உறுதியாக இருந்தார். எனவே, அப்போது, NLC பங்குகளைத் தனியாருக்கு விற்கும் முடிவு கைவிடப்பட்டது. அதேபோல், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது 2006 முதல் 2011 வரையிலான ஆட்சியில், நிலம் கொடுக்கும் விவசாயிகளுக்கு அதுவரை ஏக்கர் ஒன்றுக்கு 1 இலட்சம் ரூபாய் என்றிருந்த இழப்பீட்டுத் தொகை 6 இலட்சம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்பட்டது. தற்போது ஒரு ஏக்கருக்கு இழப்பீடு ரூ.25 இலட்சமாக உயர்த்தி அறிவிக்கப்பட்டிருப்பதற்கு மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்கள்தான் காரணம்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஜெயங்கொண்டம் நிலக்கரித் திட்டத்திற்கு 8,000 ஏக்கர் அளவிற்கு விவசாயிகளுக்கான இழப்பீட்டுத் தொகையை வழங்கிய பிறகும், அந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு சாத்தியம் இல்லையென்று தெரிந்ததும், எந்தவித நிபந்தனையுமின்றி அவர்களுக்கு நிலத்தைத் திருப்பிக் கொடுத்தவர், நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள். அப்படிப்பட்ட முதல்வர், நெய்வேலி பகுதி விவசாயிகளின் நலன்களை நிச்சயம் பாதுகாப்பார். (மேசையைத் தட்டும் ஒலி)

தேர்தல் நேரத்தில் பிரச்சாரப் பயணம் வந்த நம் இளம் தலைவர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கோரிக்கையை ஏற்று, விவசாய நிலங்களை திருப்பிக் கொடுக்க உறுதியளித்தார்கள். அதனடிப்படையில், அவை வழங்கப்பட்டன. அப்படிப்பட்ட முதல்வர் நெய்வேலி பகுதி விவசாயிகளின் நலன்களை நிச்சயம் பாதுகாப்பார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

திரு. சபா. இராசேந்திரன்: நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு மற்றும் இழப்பீட்டுத் தொகையை ஒரே தவணையில் கொடுப்பது, கடந்த காலங்களில் எடுத்த நிலங்களுக்கு கூடுதல் இழப்பீடு, மாற்று மனை போன்றவை அவர்களுடைய எதிர்பார்ப்பாக இருக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அப்படிப்பட்ட நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் மொத்த மின்சார உற்பத்தி 6,600 மெகா வாட். அதில் தமிழ்நாட்டின் பங்கு 3,266 மெகா வாட். எனவே, அதை அனுசரித்து, சாதக, பாதகங்களை ஆராய்ந்து செயல்படும் பொறுப்புள்ளவர், நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள். கடந்த கால ஆட்சிபோன்று கண்டுகொள்ளாமல் இருக்க முடியாது. விவசாயிகளின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதியாக இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட முதல்வர் அவர்களின் அரசில் இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு உறுப்பினர்கள்,

மாவட்ட நிர்வாகம், NLCIL நிறுவனம் உட்பட ஒரு குழு அமைத்து, இந்தப் பிரச்சினைக்கு சுமூக தீர்வு காணலாம் என்பது அனைவரின் கருத்தாக இருக்கிறது. தேவைப்பட்டால் ஒரு senior I.A.S. அதிகாரியை Nodal அதிகாரியாக நியமிக்கலாம். எனவே 40,000 கோடி ரூபாய் முதலீடு செய்யும் NLCIL நிறுவனத்திற்கு, 4,000 பேருக்கு வேலை கொடுப்பது சிரமமான காரியம் இல்லை. பல துறைகளில் Outsourcing செய்வதை நிறுத்திவிட்டு, நிலம் கொடுப்பவர்களுக்கு அந்த வேலையை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 27-6-2022 அன்று 5 புதிய SIDCO வளாகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. புதிதாகத் துவக்கப்படவுள்ள வளாகங்கள்-8, அவற்றில் ஒன்று நெய்வேலி தொகுதி, காடாம்புலியூரில் 35 ஏக்கர் பரப்பளவில், 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. நெய்வேலி தொகுதிக்கு SIDCO வளாகம் வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தொகுதி சார்ந்த கோரிக்கைகளை என்னிடம் கொடுத்துவிடுங்கள், பதிவு செய்துகொள்கிறேன்.

திரு. சபா. இராசேந்திரன்: மேலும், இரண்டே இரண்டு பொருட்கள் குறித்துப் பேசி உரையை முடித்துவிடுகிறேன். மேலும், 25,000 சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு முதலீட்டு மானியம், வேலைவாய்ப்பு மானியம் போன்ற பல்வேறு மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும். உங்கள் தொகுதி சார்ந்த கோரிக்கைகளை என்னிடம் கொடுத்துவிடுங்கள், பதிவு செய்துகொள்கிறேன்.

திரு. சபா. இராசேந்திரன்: விருத்தாசலம் தொகுதியை தலைமையிடமாகக் கொண்டு அதனைத் தனி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்பது எங்கள் பகுதி மக்களின் கோரிக்கை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்கு வந்திருந்தபோது, அந்த உறுதியைக் கொடுத்துள்ளார்கள். நேற்றுகூட, விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்

இந்தக் கோரிக்கையை எழுப்பியிருக்கிறார்கள். தற்போதுள்ள கடலூர் மாவட்டம், விருத்தாசலத்திலிருந்து 70 கி.மீ–ம், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களின் திட்டக்குடி தொகுதியிலிருந்து 120 கி.மீ–ம் இருக்கின்ற காரணத்தினால், இதனைத் தனி மாவட்டமாக அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும்.

திரு. சபா. இராசேந்திரன்: அதேபோன்று, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் நெய்வேலிக்குத் தனி வட்டம் கேட்டிருந்தேன்—கடந்த முறை சொன்னார்கள்— தொழில் துறையின்மீது ஒரு முக்கியமான கோரிக்கையான சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் போன்ற வளர்ந்த மாவட்டங்கள் போன்று இல்லாமலும், தென் மாவட்டங்கள்போன்று தொழில் மானியம் பெறுகின்ற இடத்தில் இல்லாமலும் இருக்கின்ற கடலூர் போன்ற வட மாவட்டங்களுக்கு “சிறப்புத் தொழில் கொள்கைகள்” உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகப் புகழ்பெற்ற பண்ருட்டி பலாப்பழத்தை வைத்து பலாப்பழ ஜூஸ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க வேண்டும். அதேபோன்று, முந்திரி 80,000 ஏக்கரில் பயிரிடப்படுகிறது. 40 இலட்சம் டன் முந்திரிக்கொட்டை வெளிநாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்படுவதால் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்த விலையில், பாதி விலைதான் தற்போது கிடைக்கின்றது. பண வீக்கத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால், கால் பங்கு விலைதான் வரும். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், எங்கள் மேற்கு மாவட்ட மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும், குறைந்தபட்ச விலை கிடைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடைசிப் பக்கத்தை எடுங்கள். (குறுக்கீடு) கடைசிப் பக்கத்திற்கு வாருங்கள்.

பிற்பகல் 1–05

திரு. சபா. இராசேந்திரன்: எடுத்துவிடுகிறேன். நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் உபயோகப்படுத்தப்படாத சுமார் 1,000 ஏக்கர் நிலத்தை, Mining செய்ய முடியாத இடத்தை. . .

2023 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். நன்றி சொல்லுங்கள். போதும் திரு. சபா., மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள். (குறுக்கீடு) கண்டுபிடித்து எடுங்கள். பிறகு நான் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. சபா. இராசேந்திரன்: SIPCOT மூலமாகவோ அல்லது SIDCO மூலமாகவோ NLC நிர்வாகத்தோடு ஒரு joint venture ஏற்படுத்தி, பெரிய தொழில் வளாகத்தை உருவாக்கக்கூடிய வாய்ப்பிருக்கிறது. அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும்.

திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்லிவிடுகிறேன். நெய்வேலி தொகுதிக் கோரிக்கைகள் நிறைய இருக்கின்றன. அவற்றை இந்த மாமன்றத்தில் சமர்ப்பித்ததாகக் கருதி, அவைக்குறிப்பில் பதிவு செய்து கொண்டு, அதனை உரிய அமைச்சர்களுக்கு அனுப்பி வைத்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த வாய்ப்பினை அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தங்களுக்கும் நன்றியைச் சொல்லி, அமைகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சதாசிவம் அவர்கள் பேசும்போது, ** அந்த வார்த்தைகளைப் பயன்படுத்தினார். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை, தமிழ் வளர்ச்சி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கான வாய்ப்பு தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நன்றியினையும், வணக்கத்தினையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவசரக் கோலத்தில் அமல்படுத்தப்பட்ட ஜி.எஸ்.டி. வரியும்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. வி.பி. நாகைமாலி] [2023 ஏப்ரல் 6

அதைத் தொடர்ந்து வந்த கொரோனா பாதிப்பும், தொழில் துறையை மிகவும் பாதித்துள்ளது. பெரிய தொழில்கள் இவற்றை சமாளிக்க முடிந்தது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் ஏற்கெனவே நலிவடைந்துள்ள நிலையில், இவை மேலும் மோசமாகி வருகின்றன. இதை மனதில்கொண்டு அரசு இந்தத் துறையை அணுக வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இத்தொழிலுக்கான முக்கியப் பிரச்சினை முதலீடு மற்றும் நடைமுறை செலவுகளுக்கான பணம்; வங்கிகளில் இவர்களுக்குச் சரியான கடன் வசதியில்லை. தேவையற்ற ஆவணங்களைக் கேட்டு, கடன் தராமல் வங்கிகள் இவர்களை அலைக்கழித்து, திருப்பி அனுப்புகின்ற நிலை உள்ளது. இதனால், வட்டிக்கும், கந்து வட்டிக்கும் கடனை வாங்கி சிக்கிக்கொள்கிறார்கள். குறு, சிறு தொழில் நிறுவனங்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களை பெரிய நிறுவனங்களுக்குத் தருகிறார்கள். அவை, காலத்தில் இவர்களுக்கான பணத்தைக் கொடுப்பதில்லை. 6 மாதம், 1 வருடம் என அலைக்கழிக்கிறார்கள். இதனால், குறு, சிறு தொழில்கள் மிகவும் பாதிப்படைகின்றன. 45 நாட்களுக்குள் பணத்தைத் தர வேண்டுமென சட்டம் சொல்கிறது. ஆனால், அவ்வாறு கொடுப்பதில்லை. இதைக் கறாராக அமலாக்கிட வேண்டும்.

குறு, சிறு நிறுவனங்களில் உற்பத்தியாகும் பொருட்களை அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் கொள்முதல் செய்ய வேண்டும். சில உற்பத்திப் பொருட்களை குறு, சிறு தொழில்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். குறு, சிறு தொழில்கள் மற்றும் விசைத்தறி போன்றவற்றிற்கு நாம் குறிப்பிட்ட அளவு மின்சாரம் வழங்க வேண்டும். தற்போது வழங்குவது போதாது என்பதையும், சமீபத்திய மின் கட்டண உயர்வு அந்தத் தொழில்முனைவோருக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பதையும் அரசு கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். குறு, சிறு தொழில்களுக்கு மின் கட்டணத்தில் நிலைக் கட்டணம் என்ற கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறது. சமீபத்தில் அந்த நிலைக் கட்டணம் கடுமையாக உயர்ந்துள்ளது. இதைப் பழைய கட்டண முறையிலேயே வசூலிக்க வேண்டும். சிறிய micro தொழில்களுக்கு தனியான தொழிற்பேட்டை அமைத்து, கட்டமைப்பு வசதிகளைச் செய்து தர வேண்டும். நமது மாநிலத்தில் கிடைக்கின்ற மூலப்பொருட்களைக் கொண்டு, குறு, சிறு தொழில்கள் உருவாக நாம் ஊக்கப்படுத்த வேண்டும்.

2023 ஏப்ரல் 6]	[திரு. வி.பி. நாகைமாலி]

தமிழ்நாடு, இந்தியாவின் ஜவுளித் தேவையில் 50 சதவிகிதத்தைப் பூர்த்தி செய்கிறது. ஆனால், இதன் மூலப்பொருட்களான பஞ்சுக்கு, வெளி மாநிலத்தை நம்பியுள்ளோம். பஞ்சு, நூல் விலை தாறுமாறாக உயர்வதால், இத்தொழிலில் பாதிப்பு ஏற்படுகிறது. 10 இலட்சத்திற்கும் மேலானோருக்கு வேலை தரக்கூடிய இத்தொழில், பெரும் சிரமத்தில் உள்ளது என்பதை இந்த அவையின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். விசைத்தறித் தொழிலில் ஈடுபடக்கூடியவர்கள் சமீப காலங்களில் சொல்ல முடியாத துயரத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் நூல் விலையைக் கட்டுக்குள் கொண்டுவர வேண்டும். பருத்தி உற்பத்திக்குக் கூடுதல் கவனம் செலுத்திட வேண்டும்.

தமிழ்நாட்டில் தென்னை விவசாயம் பெருந்தொழிலாக உள்ளது. இந்தியா தென்னை உற்பத்தியில் முதலாவது இடத்தைப் பிடித்துள்ளது. வருடத்திற்கு 4,000 கோடி ரூபாய் வரை தமிழ்நாட்டில் நார் தொழிலில் வருமானம் ஈட்டப்படுகிறது. இந்தத் தொழிலை ஒட்டி, நிறைய சிறு தொழில்களையும், தென்னை நார் கயிறு போன்ற தொழில்களையும், மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டும். நமது அரசு இதில் கூடுதல் கவனம் செலுத்திட வேண்டும்.

பிற்பகல் 1–10

தமிழ்நாட்டில் 68 வகையான பாரம்பரியத் தொழில்கள் உள்ளன. இவற்றைக் கண்டறிந்து வளர்த்தெடுக்கவும், ஊக்கப்படுத்தவும் வேண்டும். மாலை 6 மணியிலிருந்து இரவு 10 மணி வரை peak hours என்று சொல்கிறார்கள். இதற்கு வழக்கமான கட்டணத்தைவிட 15 சதவிகிதம் மின் கட்டணம் கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. இது சிறு, குறு தொழில்களை மிகவும் பாதிக்கிறது. தனியார் தொழிற்பேட்டைகளுக்கு, தொழிற்பேட்டை என்ற ஒப்புதல் தரப்பட வேண்டும். இதனுடைய கட்டமைப்பு வசதிக்கு அரசு உதவ வேண்டும். விவசாயத்திற்கு அடுத்தபடியாக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் துறை சிறு தொழில்கள் துறை. சுமார் 50 இலட்சம் சிறு, குறு தொழில்கள் இயங்குகின்றன. இதில் சுமார் ஒன்றரை கோடி பேர் தமிழகத்தில் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர். 2000 ஆம் ஆண்டுக்குப் பிந்தைய தொழில் மந்தத்தை வெற்றிகரமாகச் சமாளித்த நாடுகள், சிறு, குறு தொழில்களின் பங்களிப்பைப் பிரதான காரணமாகக் கூறுகின்றன. பெரும் முதலீட்டுத் தொழில்

நிறுவனங்களைவிட வேலைவாய்ப்பு அளிப்பதில் சிறு, குறு தொழில்கள் முன்னணியில் இருக்கின்றன. சிறு, குறு தொழில்கள் அடர்த்தியாக உள்ள மாவட்டங்களில் அவர்கள் தயாரிக்கும் பொருட்களைக் காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யவும் வளாகங்களை ஏற்படுத்தித் தர வேண்டும்.

ஒன்றிய அரசின் Cotton Corporation, தான் அமைக்கப்பட்ட நோக்கத்திலிருந்து விலகிச் சென்று கொண்டிருக்கிறது. எனவே, தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு பருத்திக் கழகம் ஒன்றை அமைத்து, கைத்தறி, விசைத்தறி, பின்னலாடை மற்றும் ஜவுளித் தொழிலையும், தொழிலாளர்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அலுமினியம், தாமிரம், இரும்பு உள்ளிட்ட மூலப்பொருட்களின் நிலையற்ற ஏற்ற, இறக்க விலைகளைச் சமாளிக்கும் வகையில், அரசு தொழிற்பேட்டை உள்ள மாவட்டங்களில் மூலப் பொருட்களை தமிழ்நாடு அரசே நிலையான விலையில் விநியோகிப்பதற்கு முன்வர வேண்டும்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்ட ஆங்கிலம்–தமிழ் அகராதியை இருமொழி வல்லுநர் குழு அமைத்து தற்காலப்படுத்த வேண்டும். மாவட்டந்தோறும் வழக்குச் சொல் அகராதியை உருவாக்கத் திட்டமிட வேண்டும். வட்டார மொழி இலக்கியத்திற்கான ஆய்வு மையங்களை உருவாக்க வேண்டும். வாய்மொழி இலக்கியத்தை பதிவு செய்ய குழு அமைக்க வேண்டும். பாரம்பரியக் கலை வடிவங்களை மக்களிடம் கொண்டு செல்லும் நிகழ்வுகளுக்கும், கலை, இலக்கிய விழாக்களுக்கும் நேரக் கட்டுப்பாடின்றி முழு இரவும் அனுமதியளிக்க வேண்டும். இசைப் பல்கலைக்கழகம் போல், நாடகம் மற்றும் நாட்டுப்புறக் கலைகளுக்கு, பல்கலைக்கழகம் உருவாக்கப்பட வேண்டும்.

தமிழை ஒரு மொழிப் பாடமாக கற்றுத் தருகின்ற புதிய காணொலிப் பாடங்கள் வேண்டும். மழலையர் கல்வியிலிருந்து இதனைத் தொடங்கலாம். எழுதுவது, உச்சரிப்பது இவற்றைக் கற்றுத் தருகிற வகையில் இவை அமைய வேண்டும். ஆங்கில மொழியைக் கற்றுத் தருகிற எண்ணற்ற காணொளிகள் நமக்கு இணைய வழியில் காணக் கிடைக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) அவற்றை முன்னுதாரணமாகக் கொண்டு, நாம் இக்காணொளிகளை உருவாக்கலாம். வாய்ப்பு தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன்.

2023 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள்தான் எல்லோருக்கும் முன்மாதிரிபோல, நேரத்திற்கு முடிக்கின்ற நபர். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னப்பா அவர்கள்.*

*திரு. கு. சின்னப்பா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். அறிஞர் அண்ணாவின் உன்னத இலட்சியங்களை வென்றெடுக்க, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் செயல்பட்டுக் கொண்டுவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கும் எனது அன்பான வணக்கம். தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை, தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை), குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தலைமைக் கொறடா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

தமிழகத்தை முதல் மாநிலமாக்கும் தமிழக அரசின் பல்வேறு முயற்சிகளில் 2023–2024 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும், தொழில் கொள்கை அறிக்கையிலும் குறிப்பிட்டபடி, கடந்த இரண்டு ஆண்டுகளில் அதிக அளவிலான முதலீடுகளை ஈர்த்து, 4 இலட்சத்திற்கும் அதிகமான நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளதற்கு எனது மனமார்ந்த நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். கொரோனா முடக்கக் காலத்திலும் தொழில் துறை எவ்விதத் தேக்கமும் இல்லாமல், முன்னேறி வருவதற்குக் காரணமான மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் மக்கள் நல அரசு மற்றும் அதற்கு உறுதுணையாகச் செயல்பட்டுவரும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் ஆகியோருக்கு எனது வணக்கத்தினையும், நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

இன்றைக்கு ஒட்டுமொத்த இந்தியாவே தமிழகத்தின் முன்னேற்றத்தை, குறிப்பாக தொழில் துறையில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தைப் பாராட்டுகிறது.

தமிழ்நாட்டில் புதிதாக சிப்காட் தொழிற்பூங்காக்களை ஏற்படுத்துவதும், அதன்மூலம் பல்லாயிரக்கணக்கான நபர்களுக்கு வேலைவாய்ப்பை உண்டாக்குவதும் மிகவும் பாராட்டத்தக்கது.

முத்தாய்ப்பாக, 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னையில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்படவுள்ளது என்னும் செய்தி, தமிழக அரசு தொலைநோக்குப் பார்வையுடன் செயல்படுவதை எடுத்துக்காட்டுகிறது. இவ்வாறு திட்டமிட்ட வளர்ச்சிக் கொள்கையின் எதிர்கால பலன்கள் என்ன என்பதை இந்த நிதிநிலை அறிக்கையிலும், தொழில் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் மூலமும் அறிய முடிகிறது.

இவற்றோடு ஓர் அன்புக் கோரிக்கையாக, அரியலூர் மாவட்டத்தில், எனது தொகுதியான அரியலூர் நகரத்தின் அருகாமையில் உள்ள மல்லூர் கிராமத்தில், 30 ஏக்கர் நிலத்தில், குறு, சிறு தொழில் தொடங்க முத்தமிழறிஞர் அவர்கள் ஆட்சியில் சிப்காட்மூலம் நிலம் பெறப்பட்டு, தொழிற்பூங்காவிற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. எனினும், இதுநாள் வரை அங்கு புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்படவில்லை. எனவே, குறு, சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின்மூலம் மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் தொழிற்சாலைகளை அமைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொரு கோரிக்கையாக, அரியலூர் அரசு சிமெண்ட் ஆலைக்கு நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு, 1996-ல் விவசாயிகளிடமிருந்து கட்டாயப்படுத்தி நிலம் எடுக்கப்பட்டதற்கு இதுவரையில் நிவாரணம் வழங்காமல், நீதிமன்றத்தில் இருப்பதாகச் சொல்லி நிர்வாகம் காலம் கடத்தி வருகிறது. கீழமை நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பின்படி, ஏக்கருக்கு ரூ.1,50,000/– எனும் market விலையை வழங்காமல் காலம் கடத்தி வருகிறது. மேல்முறையீடு என்கிற அடிப்படையில் உயர் நீதிமன்றத்தில் அவர்கள் காலம் கடத்தி வருகிறார்கள். அதனால், நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு உடனடியாக market விலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிலம் கொடுத்த விவசாயிகள் வாழ்வாதாரத்தை இழந்திருக்கிற காரணத்தினால், அவர்களுக்கு வேலைவாய்ப்பும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோன்று தொழில் துறைக்கு உதவும் மற்றொரு கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். ஐந்து தனியார் சிமெண்ட் ஆலைகள் மற்றும் ஓர் அரசு சிமெண்ட் ஆலை ஆகியவற்றை உள்ளடக்கிய அரியலூர் தொகுதியில், சிமெண்ட்டிற்கான மூலப் பொருட்களை எடுத்து வருவதாலும், சிமெண்ட் மூட்டைகளை வெளி மாவட்டங்களுக்கு

எடுத்துச்செல்வதாலும், வாகனப் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, அதிக விபத்துகள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. அதனைத் தவிர்க்கும் வகையில், அரியலூர்-செந்துறை இடையே சாலையை அகலப்படுத்தித் தந்தமைக்காக மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதன் தொடர்ச்சியாக சுரங்கங்கள் அதிகமிருக்கின்ற அரியலூர்-ரெட்டிபாளையம் இடையே உள்ள சாலையை அகலப்படுத்தி, திருச்சி-சிதம்பரம் நெடுஞ்சாலையுடன் இணைக்கும்பட்சத்தில், சாலை விபத்துகள் தவிர்க்கப்படும். இன்ன பிற தொழில்களும் வளர்ச்சியடையும். எனவே, இதற்கு உரிய ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் துறைக்கு அடுத்த முக்கியமான துறையான தமிழ் வளர்ச்சித் துறைக்கு வருகிறேன். "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்று மகாகவி பாரதி அவர்கள் சொன்னார். "தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாரதிதாசன் அவர்கள் சொன்னார். இவ்வாறு நமது தொன்மையான தமிழின் இனிமையும், சிறப்பும் சொல்லப்பட்டுள்ளது. அத்தகைய உயர்ந்த தமிழ் மொழியை வளர்க்கும் பல்வேறு செயல்களை தற்போது திராவிட மாடல் அரசு முன்னெடுத்து வருகிறது. கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகத்தில், எந்தெந்த அடிப்படையில் அது செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும், தமிழ் அந்த உன்னத நிலையை அடைந்து விட்டதா என்பதுதான் நமது கேள்விக் குறியாகும்.

25-1-1964-இல் தற்போதைய அரியலூர் மாவட்டம், கீழப்பழூரைச் சார்ந்த, தியாகி சின்னசாமி, தனது இன்னுயிரை ஹிந்தி திணிப்பிற்கு எதிராக அர்ப்பணித்தார். கடந்த நிதிநிலை அறிக்கையில் அவருக்கு நினைவகம் அமைக்கப்படும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த நிலையில், கடந்த நவம்பர் 2022-ல், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரியலூர் வந்தபோது, அவரின் குடும்பத்திற்கு வீட்டுமனை ஒன்றை அளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒன்றிய அரசு, மாநில அரசுக்குள்ள அதிகாரங்கள் பலவற்றைப் பகிர்ந்து வருகிறது. அதில் ஒன்று கல்வி. 1976–ல், 42–வது அரசியல் சட்டத் திருத்தம்மூலம் கல்வி மாநிலப் பட்டியலிலிருந்து, பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டது. இன்றைக்கு நீட் போன்ற தேர்வுகளை ஒன்றிய அரசு ஏற்படுத்தியிருப்பதும், கட்டாய புதிய கல்விக் கொள்கை திணிப்பு போன்றவற்றிற்கும் 42–வது சட்டத் திருத்தமே காரணம். இதனைக் கருத்தில்கொண்டு, கல்வியை மாநில பட்டியலுக்குக் கொண்டுவர சட்டத் திருத்தம் கொண்டுவர, ஒரு தீர்மானத்தை இந்த அவையில் ஒருமனதாக நிறைவேற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நல்ல ஆலோசனை. நன்றி சொல்லி, உங்கள் உரையை முடித்துவிடுங்கள்.*

பிற்பகல் 1–20

திரு. கு. சின்னப்பா: *இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். முக்கியமான கட்டம். அன்னைத் தமிழுக்கு விலங்கிட்டதற்கான அரசியல் சட்டம்; அதற்கு என்னுடைய கருத்தைப் பதிவு செய்ய வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லி, உரையை முடித்துவிடுங்கள்.*

திரு. கு. சின்னப்பா: NEET *தேர்வை எதிர்த்து அரியலூர் மாவட்டம், குழுமூர் கிராமத்தில், ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த அனிதா என்ற மாணவி உயிரிழந்ததன் நினைவாக, அரியலூர் மருத்துவக் கல்லூரிக்கு அவரது பெயர் வைக்கப்பட வேண்டுமென்று தனது கன்னிப் பேச்சில், இளைஞர்களின் எழுச்சி நாயகன், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்கள். 23–8–2021 இல் இம்மன்றத்தில், எனது கன்னிப் பேச்சில் அவரது கோரிக்கையை வழிமொழிந்து நன்றி தெரிவித்தேன். அந்தக் கோரிக்கையின் அடிப்படையில், அரியலூரில் அமைந்துள்ள மருத்துவக் கல்லூரியில், ரூ.25 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள அரங்கத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனிதாவின் பெயரை வைத்ததற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி. கடந்த 14–3–2023 அன்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்*

விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் அதைத் திறந்து வைத்துள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி. (குறுக்கீடு) தொகுதிக் கோரிக்கைகளையெல்லாம் என்னிடம் கொடுத்துவிடுங்கள்.

திரு. கு. சின்னப்பா: அடுத்து, நான் முக்கியமான issue-ஐப் பற்றிப் பேச வேண்டும். அடுத்த issue-தான் முக்கியமான issue. இது தமிழ் மொழி சம்பந்தமானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 3 மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். நேரமில்லை. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. கு. சின்னப்பா: 1938-ல், சென்னை மாகாணத்தில் அப்போது மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தலைமையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. கு. சின்னப்பா: பள்ளிக்கூடங்களில் இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடி, முதல் களப் பணியாற்றிய மறைந்த தியாகி தாளமுத்து நடராசன் அவர்களுக்கு சென்னையில் நினைவிடம் ஏற்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தந்தை பெரியார் தலைமையில் 1937-லிருந்து 1967 வரை தொடர்ந்து போராடி, பேரறிஞர் அண்ணா அவர்கள் 1968-ல் வழிவகுத்த இரு மொழி சட்டத்தைக் கொண்டு வந்து, இந்தித் திணிப்பைத் தடுத்து நிறுத்தியிருக்கிறோம். அது சாதாரண இடைக்காலத் திட்டம்தான். ஆனால், பேரறிஞர் அண்ணா அவர்கள் Rajya Sabha-ல் சொன்னது என்னவென்றால், 'இந்தியாவில் என்னுடைய உன்னதமான தமிழ் மொழி என்றைக்கு ஆட்சி மொழியாகின்றதோ அன்றைக்குத்தான் நான் திருப்தியடைவேன்' என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதனடிப்படையில், அரசமைப்புச் சட்டத்தில் ஒரு திருத்தத்தை ஒன்றிய அரசு கொண்டுவர வேண்டும். இதுவரை அரசமைப்புச் சட்டம், 110 முறை திருத்தப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையாற்றியது போதும்.

திரு. கு. சின்னப்பா: எனவே, அரசமைப்புச் சட்டத்தில் இதற்கு ஒரு திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று இந்த அவையில் என்னுடைய கோரிக்கையாக வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். இதெல்லாம் பாராளுமன்றத்தில் பேச வேண்டிய விஷயம். உங்கள் இருக்கைக்கு அருகில் திருமதி வானதி சீனிவாசன் அவர்களுடைய இருக்கை இருக்கிறது. அவர்களிடம் எழுதிக் கொடுத்து, அதை செய்யச் சொல்லுங்கள். இருப்பதைப் பாதுகாத்துக்கொண்டால் போதும்; அது மாநிலத்திற்கு உள்ள உரிமை. நீங்கள், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. கு. சின்னப்பா: 110 முறை திருத்தப்பட்ட அரசமைப்புச் சட்டத்தை நம்முடைய தாய்மொழி தமிழுக்காக ஒரு முறை திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். நன்றி, நன்றி.

திரு. கு. சின்னப்பா: அரசமைப்புச் சட்டத்தின் முகப்பில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், equality of status. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம் அவர்கள். (குறுக்கீடு) நன்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு. கு. சின்னப்பா: நான் அதைத்தான் சொல்ல வருகிறேன். திராவிட மாடல் ஆட்சியை நடத்திவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி. நம்முடைய வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் சிறப்பாக இருந்தாலும், தமிழில் நாம் உன்னதமான நிலையை அடைய முடியவில்லை. அந்த நிலையை அடைவதற்கு, அண்ணாவின் இலட்சியத்தை வென்றெடுப்பதற்கு கட்டாயம் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் தேவை என்று சொல்லி, தமிழ் வாழ்க என்று கூறி, என் உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம் அவர்கள். தற்போது மணி 1–23 ஆகிறது. சரியாக 1–30 மணிக்கு உரையை முடித்துவிடுங்கள்.

2023 ஏப்ரல் 6]

திரு. கே.ஆர். ஜெயராம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். எல்லாம் வல்ல ஈசனை வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன். 'மக்களிடம் செல்லுங்கள், மக்களிடம் நில்லுங்கள், மக்களிடம் கற்றுக்கொள்ளுங்கள், மக்களுக்காக சேவை செய்யுங்கள்' என்று கூறிய நம்மையெல்லாம் என்றென்றும் வழிநடத்தும் திராவிட இயக்கத்தின் முன்னோடி, பேரறிஞர் அண்ணா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

அண்ணாவின் இதயக் கனியாய், தமிழக மக்களின் இரத்தத்தின் இரத்தமாய், கொடுத்துக் கொடுத்து சிவந்த கரத்திற்குச் சொந்தக்காரராய், (மேசையைத் தட்டும் ஒலி) சத்துணவு தந்த சரித்திர நாயகராய், மனிதருள் புனிதராய் வாழ்ந்த, கழக நிறுவனர், முன்னாள் முதல்வர், பாரத ரத்னா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் கண்ட பாதையில் வளமான தமிழகத்தை உருவாக்க தென்னகம் வென்றெடுத்த சிங்கநிகர் தலைவி, தன்னம்பிக்கை, துணிவு என்கிற பேராற்றலின் மறுவுருவம், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக வரலாற்றில் சமூக நீதி காத்த வீராங்கனை, எதிர்க்கட்சியினரே கேள்வி கேட்க அஞ்சுகிற அறிவுப் பெட்டகம், (மேசையைத் தட்டும் ஒலி) எனக்குப் பின்னாலும், இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மக்களுக்காக இன்னும் சாதனை படைக்கும் என சூளுரைத்து, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு எங்களை வழிநடத்திய மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், குடிமராமத்துத் திட்டம், 50 ஆண்டுக் கால கனவுத் திட்டமான அத்திக்கடவு-அவிநாசி திட்டம், அரசுப் பள்ளி மாணவர்கள் மருத்துவம் பயில 7.5 சதவீத இட ஒதுக்கீடு, காவிரி டெல்டா மாவட்டங்கள் வேளாண் பாதுகாப்பு மண்டலமாக அறிவிப்பு என சாதனைத் திட்டங்களைத் தந்து, விவசாயிகளின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய, எங்கள் பாசத்திற்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு கழகப் பொதுச் செயலாளர், முன்னாள் முதல்வர், சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–25

கோவை மாவட்டத்திற்கு 50 ஆண்டுக்கால வளர்ச்சியை 5 ஆண்டுகளில் தந்த வெற்றி நாயகன், துடிப்புடனும், எழுச்சியுடனும் மக்கள் பணியாற்றி, உள்ளாட்சியில் நல்லாட்சி தந்து, மத்திய அரசின் 143 விருதுகளைப் பெற்று சரித்திரம் படைத்த, மாண்புமிகு முன்னாள் அமைச்சர், சட்டமன்றத்தின் எதிர்க்கட்சிக் கொறடா, கழகத் தலைமை நிலையச் செயலாளர், பாசமிகு அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) சபையின் நாயகர், சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். ஆற்றல்மிகு சான்றோர்கள் இடம்பெற்ற அறிவுசார் விவாதங்கள் நடத்திய இந்தச் சிறப்புமிகு அவையில் எனது பேச்சைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் இது எனது முதல் கன்னிப் பேச்சாக இருப்பதால், கூடுதல் நேரம் வழங்குமாறு கேட்டுக்கொண்டு, 16–வது சட்டப் பேரவையை அலங்கரிக்கின்ற அறிவுசார் சட்டமன்ற உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் எனது முதற்கண் வாழ்த்துகளையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

“இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்”

என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப, எனது உயிரிலே கலந்து, என் உணர்விலே நிறைந்து, எனது சகோதர, சகோதரிகளாக இருக்கும் பெருமைமிகு சிங்காநல்லூர் தொகுதி மக்களுக்கும், என்னை வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும், கழக செயல் வீரர்களுக்கும், கூட்டணிக் கட்சியினருக்கும், என்னைப் பெற்றெடுத்து ஆளாக்கிய பெருமைமிகு பெற்றோர்கள் திரு. ரங்கசாமி, திருமதி லட்சுமி அவர்களுக்கும், என்னுடன் களப் பணியாற்றி வெற்றிக்காக உழைத்த உறவுகளுக்கும், நண்பர்களுக்கும் இத்தருணத்தில் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கண் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய மானியக் கோரிக்கையில் எனது கருத்துகளை இந்தப் பேரவையில் பகிர விரும்புகின்றேன்.

தமிழகத்தில் சுமார் 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. குறிப்பாக, கோவை மாவட்டம், நூற்பாலைகள், விசைத்தறிகள், Engineering தொழிற்சாலைகள், motor pump உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், wet grinders, foundry–கள், Automobile மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை உட்பட சுமார் 6.89 இலட்சம் குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் பெருமளவில் உள்ள மாவட்டம் ஆகும்.

கோவை மாவட்டத்தில், எந்த ஒரு பெரிய பொதுத் துறை தொழிற்சாலையும் இல்லாத நிலையில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் களஞ்சியமாக கோவை, உலக அளவில் பிரசித்தி பெற்ற தொழில் நகரமாக விளங்கி வருகிறது. கோவை மாவட்டம் மட்டுமின்றி, தமிழகத்தின் பிற மாவட்டங்களிலிருந்தும், வட மாநிலங்களிலிருந்தும் வேலைவாய்ப்புகள் தேடி வருவோர்க்கு வாழ்விடமாக இருந்து வருகிறது. ஆனால், இன்று பல குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நலிவடைந்த நிலையில் உள்ளன. வேலைக்கு ஆட்கள் தேவை என்று எழுதிய பலகைகளைக் கண்டு பல மாதங்கள் ஆகிவிட்டன. தொழில் நிறுவன உரிமையாளர்கள் பணியாளர்களுக்குப் பணி வழங்க முடியாமல், சரித்திரத்தில் முதன்முறையாக இந்த ஆண்டு வாரத்தில் 3, 4 நாட்கள் விடுமுறை அளிக்கின்றனர். பணியாளர்கள் நெருக்கமாக இருக்கும் தொழில் பகுதிகளாக அறியப்பட்ட பீளமேடு, தண்ணீர்பந்தல், கணபதி, ஆவாரம்பாளையம், பாப்பநாயக்கன்பாளையம் போன்ற பகுதிகள் தற்பொழுது வெறிச்சோடிய பகுதிகளாக மாறிவிட்டன.

இதற்கான காரணங்களில் முக்கியமானது மூலப் பொருள்களின் விலை உயர்வை மையப்படுத்தி ஏற்படுத்தப்பட்ட செயற்கைத் தட்டுப்பாடு ஆகும். குஜராத்தில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் துறையினருக்கு நமக்குக் கிடைப்பதைவிட 10% குறைவான விலையில் மூலப்பொருட்கள் கிடைக்கின்றன. அதனால், அவர்களது உற்பத்தி விலை குறைவாக உள்ளது. அவர்களுடன் போட்டியிட நம்மால் முடியவில்லை. நம்மிடம் கொள்முதல் செய்து வந்தவர்கள் விலைக் குறைவு என்பதால், அங்கு சென்றுவிட்டனர்.

இந்த நிலையில், பல்வேறு சிரமங்களுக்கு இடையே தொழில் நடத்தி வரும் குறு, சிறு, நடுத்தரத் தொழில் துறையினருக்கு வணிக வரித் துறையினரும் பல்வேறு வகையில் சிரமங்களைக்

கொடுக்கின்றனர். 10 வருடங்களுக்கும் மேலான கோப்புகளை எடுத்து, அதில் வரி பாக்கி உள்ளது என வணிக வரித் துறை notice வழங்குகிறது. 7 ஆண்டுகளுக்கு மேலான கோப்புகளை நிறுவனங்கள் வைத்துக்கொள்ள வேண்டியதில்லை என்று அறிவிப்புகள் இருந்தும், வணிக வரித் துறை அதைப் பொருட்படுத்தாமல் notice வழங்கி வருகிறது.

வாகனச் சோதனை என்கின்ற பெயரில் சிறு பிழைகளையும் பெரிதாக்கி, வரித் தொகையில் 2 மடங்கு அபராதம் விதிக்கின்றனர்; வாகனத்தையும் பறிமுதல் செய்கின்றனர். இதனால் தேவையற்ற அபராதம் செலுத்தப்படுவது மட்டுமல்லாமல், குறித்த நேரத்திற்கு சரக்கு சென்றடையாமல், தொழில் துறையினர் பெரும் துன்பத்திற்குத் தள்ளப்படுகின்றனர்.

வணிக வரித் துறை அமலாக்கப் பிரிவில் புதிதாக 1,000 ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு GST வரி விதிப்புகள் பற்றிய பயிற்சி அளிக்கப்படவில்லை. விதிமுறைகள் பற்றி தெரியாததால் தொழில் துறையினருக்கு அதிக தொல்லைகளைக் கொடுக்கின்றனர். மிரட்டும் தொனியிலேயே பேசி அபராதம் மற்றும் வரி வசூலிக்கின்றனர்.

வரி வசூலித்தால் தவறில்லை. ஆனால் ** அளவுக்கு கட்டாய வரி செலுத்த வற்புறுத்துகின்றனர். இதனால், தொழில் துறையினர் கடும் அவதிக்கு ஆளாவதோடு தொழிலை விட்டுவிடலாம் என்கின்ற மனநிலைக்குத் தள்ளப்படுகின்றனர். மாநில அரசு, வணிக வரித் துறை அதிகாரிகளுக்குப் போதிய பயிற்சி அளித்து, தக்க அறிவுரைகளை வழங்கி இந்த நிலையைக் கட்டுப்படுத்த வேண்டும்.

தமிழக தொழில் துறையுடன் போட்டியிடும் மாநிலங்களான மகாராஷ்டிரம், குஜராத், கர்நாடகா போன்ற மாநிலங்களில் வணிக வரித் துறையினர் ஆலோசகர்களாகத் திகழ்கின்றனர். சிறு குறைகளை திருத்தி வரி செலுத்துவோருக்கு நண்பர்களாகத் திகழ்கின்றனர்.

மத்திய வணிக வரித் துறை அதிகாரிகள், தமிழக வணிக வரித் துறை எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் விதிமுறைகளை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

2023 ஏப்ரல் 6] [திரு. கே.ஆர். ஜெயராம்]

வகுத்துள்ளனர் என்றும், இந்த விதிமுறைகளைப் பின்பற்றுவது இயலாத ஒன்று எனவும் தெரிவிக்கின்றனர். கோவை மட்டுமின்றி, தமிழகத்தில் குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் தொடர்ந்து சிறப்பாக நடைபெற அரசு ஒத்துழைப்பு வழங்கி, மேற்கண்ட இடர்பாடுகளைக் களைய சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும். இல்லையெனில், அரசுக்கு பெருமளவில் வரி வருவாய் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

தொழில் நிறுவனங்கள் வங்கிகளில் கடன் பெறுவதற்கு சார் பதிவாளர் அலுவலகத்தில் சுமார் 30,000 ரூபாய் MOD கட்டணமாக செலுத்த வேண்டியுள்ளது. முன்பு இது 5,000 ரூபாயாக இருந்தது. எனவே, சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு பழைய கட்டணமான 5,000 ரூபாயாக மீண்டும் குறைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

SIDCO மற்றும் SIPCOT தொழிற்பூங்காக்களைப் போலவே முழுமையான வசதிகளைக் கொண்ட அனைத்துத் தொழிற்பூங்காக்களுக்கும் அரசு அனைத்து சலுகைகள் மற்றும் மானியங்களை அளிக்க வேண்டும். தமிழக அரசால் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்காக ஒரு தனி online marketing portal உருவாக்கப்பட வேண்டும்.

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் குறித்த கோரிக்கைகள்.

2023–2024 ஆம் ஆண்டு தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் தொழில் துறைக்கு ரூபாய் 3,268 கோடியும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைக்கு ரூபாய் 1,509 கோடியும் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம், 4,777 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கியுள்ளீர்கள். ஆனால், விவசாயத்திற்கு அடுத்தபடியாக, உற்பத்தி, வேலைவாய்ப்பு மற்றும் அரசுக்கு வருவாய் அளிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்ற தொழில் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைக்கு இத்தொகை போதுமானதாக இல்லை. மொத்தத் தொகையில் குறைந்தபட்சம் 15,000 கோடி ரூபாயாவது ஒதுக்கப்பட வேண்டும். அதாவது, மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GSDP) மதிப்பில், அரை சதவிகிதமாவது

ஒதுக்கப்பட வேண்டும். GST வரி விதிப்பிற்கு முன்னர் இருந்த VAT வரி விதிப்பு காலத்திற்கான கணக்குகளை முடிப்பது தொடர்பாகவும், 'C' படிவம் சமர்ப்பிக்க முடியாமல் போனதற்காகவும் தற்போது தமிழக வணிக வரித் துறையால் அபராதங்கள் விதிக்கப்படுகின்றன. VAT வரி காலத்திய பூசல்களை முடிவிற்குக் கொண்டு வருவதற்காக 'சமாதான் திட்டம்' ஒன்றை தமிழக அரசு அறிவிக்க வேண்டும்.

முதற்கட்டமாக, குறைந்தபட்சம் 100 தொழிற்பேட்டைகள் அமைக்க, குறு, சிறு தொழில் நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். அந்தத் தொழிற்பேட்டைகளின் அருகிலேயே தொழிலாளர்களுக்கான தங்கும் விடுதிகள் கட்டப்பட வேண்டும். அடுத்த முறை, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை கோவையில் நடத்த வேண்டுமென்பது கோவை தொழிலதிபர்களின் கோரிக்கையாக இருக்கிறது. தற்போது மூலதன மானியம் (capital subsidy) அனைத்து குறுந்தொழில்களுக்கும் (Micro Units) குறிப்பிட்ட 24 துறைகள் (Thrust sector) மற்றும் தொழிற்பேட்டைகளிலுள்ள குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. தொழில் வளர்ச்சியை விரிவுபடுத்தவும், பரவலாக்கவும், அடுத்த ஐந்தாண்டுகளுக்கு அனைத்து சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் விரிவாக்க நடவடிக்கைகளுக்கும் மூலதன மானியம் வழங்கப்பட வேண்டும்.

தற்போது, தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் ஒரு kilo watt-க்கு ரூபாய் 35-லிருந்து 150 வரை உயர்த்தப்பட்டு, 4 சதவிகித வரியுடன் ரூ.156 ஆக வசூலிக்கப்படுகிறது. மேலும், peak hours இல் பயன்படுத்தும் மின்சாரத்திற்குக் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஒரே மீட்டரில் கூடுதல் கட்டணம் எவ்வாறு அளவீடு செய்யப்படுகிறது என்பது குறித்து இதுவரை மின் வாரிய அதிகாரிகளுக்கும், மின் நுகர்வோரான தொழில் துறையினருக்கும் தெளிவுபடுத்தாத நிலையில், பல மடங்குக் கட்டணம் வசூலிப்பது நியாயம்தானா? ஆகவே, ஒரு kilo watt-க்கு ரூ.156/- கட்டணமாக வசூலிப்பதை ரூ.50/-ஆகக் குறைத்தும், peak hours இல் வசூலிக்கும் கூடுதல் மின் கட்டணத்தை இரத்து செய்தும், தமிழகத்தில் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களைப் பாதுகாக்க வேண்டும். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் கட்டடங்களுக்கு சொத்து

வரி உயர்வில் சலுகை அளித்து, பாதியாகக் குறைக்க வேண்டும். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்த ஏதுவாக உழவர் சந்தை போன்று தொழில் நகரங்களில் தொழிற்சந்தைகள்–Industrial Marketing Centres அமைத்துத் தர வேண்டும். Job work பணிகளுக்கு முன்பு போலவே, GST வரி விதிப்பிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று மத்திய அரசிற்குப் பரிந்துரைக்க வேண்டும். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணம் மிக முக்கியமானது. அந்த வகையில், தொழிலகக் கட்டடங்கள் உட்பட, எரிபொருள் கட்டணத்தை input tax credit திட்டத்தின்கீழ் கொண்டுவர மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பாதுகாப்பு சார்ந்த தொழில் வழித் தடத்தில் சுமார் 400 கோடி ரூபாய் செலவில் பாதுகாப்புத் துறைக்கான உட்கட்டமைப்பு மற்றும் சோதனை மையம் ஒன்றை ஏற்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இந்த மையத்தை கோவை நகரில் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். 24X7 அடிப்படையில் தடையில்லா மின்சாரம் வழங்கப்பட வேண்டும்.

Foundry மணலை மறுசுழற்சி செய்து சாலை கட்டுமானப் பணிகளுக்கு பயன்படுத்த வேண்டும். அந்த மணலின்மூலம் தரையில் பதிக்கக்கூடிய ஓடுகளை உருவாக்குவதற்கான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இதை ஊக்கப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நமது மாநில அரசின், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். (குறுக்கீடுகள்) போதும்.

திரு. கே.ஆர். ஜெயராம்: ஐயா, மூன்று முறை எனக்கு வாய்ப்பு miss ஆகிவிட்டது. முடித்துவிடுகிறேன் ஐயா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) உரையை முடித்துவிடுங்கள்.

திரு. கே.ஆர். ஜெயராம்: நமது மாநிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து தொழில் நிறுவனங்களுக்கும் அடிப்படைத் தொழில்களில் ஒன்றாக

Foundry தொழில் கருதப்படுகிறது. கோவையில் உள்ள foundry–களின் திறன் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்கேற்ப தரம் வாய்ந்த ஒரு தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் பணியாளர் பயிற்சி மையத்தை உருவாக்க வேண்டும்.

கோவை மாவட்டம், மோப்பிரிபாளையம் பகுதியில் 240 ஏக்கர் பரப்பளவிலும், கள்ளப்பாளையம் பகுதியில் 120 ஏக்கர் பரப்பளவிலும், CODISSIA சார்பில் தொழிற்பூங்கா அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் மற்றும் திரு. எடப்பாடியார் அவர்களின் அரசு தொழிற்பூங்காக்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தலா 10 கோடி ரூபாய் வீதம் 20 கோடி ரூபாய் மானியம் வழங்க அரசாணை வெளியிட்டது. தனியார் தொழிற்பூங்காக்களுக்கு மிகவும் உறுதுணையாக இருந்து தொழில் துறைக்கு ஊக்கமளித்தது மாண்புமிகு திரு. எடப்பாடியார் அவர்களின் அரசு.

கள்ளப்பாளையம், CODISSIA தொழிற்பூங்காவில், மத்திய அரசு–கொடிசியாவுடன் இணைந்து இராணுவத் தளவாட பூங்கா அமைய, அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு உறுதுணையாக இருந்தது. முதற்கட்டமாக ரூபாய் 20 கோடி மத்திய அரசு நிதி ஒதுக்கீடு வழங்கியது.

மாண்புமிகு அம்மா அவர்கள், சென்னையில் 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 மற்றும் 10 ஆம் தேதிகளில் 'உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு 2015' நடத்தி தமிழகத்திற்கு தொழில் முதலீட்டாளர்களை ஈர்த்து, வேலைவாய்ப்புகளை உருவாக்கினார். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களும் உலக தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தியும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், போதும். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. கே.ஆர். ஜெயராம்: இரண்டு நிமிடங்கள் மட்டும் தாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லி முடியுங்கள்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களும் உலக

தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தியும், அமெரிக்க ஐக்கிய அரபு நாடுகள் மற்றும் இங்கிலாந்து ஆகிய வெளிநாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டும் முதலீட்டாளர்களை ஈர்த்து, வேலைவாய்ப்புகளை உருவாக்கினார்.

இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் தலைமையில் நடந்த நல்லாட்சியின்போது 2019 ஆம் ஆண்டு ஒரு மாபெரும் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்பட்டது. இந்த மாநாட்டின் வாயிலாக 304 ஒப்பந்தங்கள் பெருந்தொழில்களுக்கும், 12,360 ஒப்பந்தங்கள் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கும் கையெழுத்திடப்பட்டு, 3,00,501 கோடி ரூபாய் அந்நிய முதலீடுகள் நம் தாய்த் தமிழ்நாட்டிற்கு ஈர்க்கப்பட்டு, சுமார் 10.5 இலட்சம் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. கடந்த 10 ஆண்டுகளில் 6,85,071 கோடி ரூபாய் அளவில் தொழில் முதலீடுகளை தமிழகத்திற்கு ஈர்த்தது எத்தகைய சரித்திரம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

பிற்பகல் 1–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும்.

திரு. கே.ஆர். ஜெயராம்: நகர ஊரமைப்பு இயக்குநர், உள்ளூர் திட்டக் குழுமம் மற்றும் வீட்டு வசதித் துறை ஆகியோரிடம் தொழிற்சாலைக் கட்டடங்களுக்கான முறையான அனுமதி பெறுவதை விரைவுபடுத்தும்வகையில், தகுந்த மென்பொருளுடன் ஒற்றைச் சாளர அனுமதி வழங்கும் முறையில் தற்போது சுணக்கம் ஏற்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. போதும். நீங்கள் பதிவு செய்தது போதும். உங்கள் தொகுதி சார்ந்த கோரிக்கைகளைக் கொடுங்கள்.

திரு. கே.ஆர். ஜெயராம்: *அதில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். GST-ன்கீழ் பதிவு செய்வதற்கும், வரி செலுத்துவதற்கும் இருந்த வரைமுறை விற்பனை பொருட்களுக்கு 40 இலட்சம் ரூபாய். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *GST எல்லாம் ஒன்றிய அரசிடம்தான் நாம் கேட்க வேண்டும்.*

திரு. கே.ஆர். ஜெயராம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அமைச்சர் அவர்களின் தனிக் கவனத்திற்கு, சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் குறு, சிறு. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இவ்வளவு பேப்பரை கையில் வைத்திருக்கிறார். ஒரு நிமிடத்தில் எப்படி முடிக்க முடியும்? கடைசி பக்கத்தை எடுக்கச் சொல்லுங்கள். நன்றி என்றால், கடைசி பக்கத்தை எடுங்கள்.*

திரு. கே.ஆர். ஜெயராம்: *சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள பகுதிகள் GST வருவாயை ஈட்டிக் கொடுப்பதில் முதலிடம் வகிக்கின்றன. கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளுக்கு கோவை மாவட்டத்தில் பன்னடுக்கு தொழிற்பேட்டை அமைத்துத் தரப்படுமென்று, திமுக வாக்குறுதி கொடுத்திருக்கிறது. அதை நிறைவேற்றித்தர வலியுறுத்துகிறேன். பன்னாட்டு மற்றும். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். இனிமேல் நீங்கள் வைத்திருப்பதை, உங்கள் தொகுதி சார்ந்ததை எல்லாம் தாருங்கள். நான் அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன்.*

பதிலுரை. மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

திரு. கே.ஆர். ஜெயராம்: *விசைத்தறி உரிமையாளர்களுக்குத் தேவையான Tariff-III (A)-ல் 10 HP வரை பயன்படுத்துவோருக்கு 1,000 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்குவதுபோல, குறு, சிறு*

மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும் 10 HP வரை 1,000 யூனிட் இலவச மின்சாரத்தை அரசு வழங்கி, தொழில் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த முன்வர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. கே.ஆர். ஜெயராம்: தொகுதிக் கோரிக்கைகளை இந்த மாமன்றத்தில் படித்ததாகக் கருதி பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் பிரதிநிதியாகிய நாம், மக்களோடு மக்களாய், மக்களின் தொண்டர்களாய் வாழ்ந்து காட்ட வேண்டும் என்பதே பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய அரசியல் நீதியாகும். சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து மக்களின் குறைகளைத் தீர்க்கப் பாடுபடுவோம் எனக் கூறி, உலகமே வியக்கும் வகையில் ஜனநாயகத்தின் மாண்புகளைக் கட்டிக் காத்த மாபெரும் தலைவர்களும், தன்னிகரில்லா சொல்லேர் உழவர்களும் அமர்ந்திருந்த இந்த மாபெரும் சிறப்புமிகு சட்டமன்றத்தில் என்னுடைய கன்னிப் பேச்சினைப் பதிவு செய்ய எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட ஒண்டிபுதூர் SIHS காலனி LC-4 இரயில்வே பாதையில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்.

அவினாசி சாலை, சரவணம்பட்டி, உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு நிலம் கொடுத்த நில உரிமையாளர்களுக்கு உரிய இழப்பீட்டை உடனடியாக அளிக்க வேண்டும்.

சிங்காநல்லூர் தொகுதியில், பாதாளச் சாக்கடை மற்றும் குடிநீர் திட்டப் பணிகளுக்காகத் தோண்டப்பட்ட சாலைகளில் இரத்து செய்யப்பட்டுள்ள பணிகளுக்கு முன்னுரிமை அளித்து, விரைந்து நிறைவேற்றித் தர வேண்டும்.

சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட உப்பிலிபாளையம் உழவர் சந்தைக்கு பின்புறம் ஆபத்தான நிலையில் உள்ள குடியிருப்புகளை

அகற்றிவிட்டு, புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டித் தர வேண்டும்.

கோவை மாவட்டம், திருச்சி சாலை, உழவர் சந்தை முதல் சாந்தி கியர்ஸ் வரை மேம்பாலம் போடும் பணியை உடனடியாகத் துவங்க ஆவன செய்ய வேண்டும்.

அவினாசி சாலையில், பீளமேடு பகுதியில் அமைந்துள்ள கோவை அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் 200 படுக்கை வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த மருத்துவமனை கட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கோவை அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைக்க வேண்டும்.

சிங்காநல்லூர் தொகுதியில் அரசு நூலகம் அமைத்துத் தர வேண்டும். அவினாசி சாலையில் உள்ள ஜென்னிஸ் கிளப் அருகில் உள்ள அரசுக்குச் சொந்தமான இடத்தில் சர்வதேச தரத்துடன்கூடிய விளையாட்டு தடகள பயிற்சி மைதானம் ஒன்றை அமைக்க வேண்டும்.

சிங்காநல்லூர் பேருந்து நிலையம் அருகில் காமராஜர் சாலை குறுக்கிலும் மற்றும் திருச்சி சாலை குறுக்கிலும் உயர்மட்ட நடைபாலம் அல்லது சுரங்க நடைபாதை அமைத்துத் தர வேண்டும்.

கோவை மாவட்டத்தில், வடவள்ளி, வீரகேரளம், கவுண்டம்பாளையம், வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி, கணபதி, கிருஷ்ணராயபுரம், சரவணம்பட்டி, விளாங்குறிச்சி, காளப்பட்டி, உப்பிலிபாளையம், சௌரிபாளையம் உள்ளிட்ட 12 வருவாய் கிராமங்களில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய நில ஆர்ஜித நடவடிக்கைகளை முற்றிலும் கைவிட அரசு முன்வர வேண்டும்.

கோவை உள்ளூர் திட்டக் குழுமம் மாஸ்டர் பிளான் தயாரிக்கும் பணியை விரைவுபடுத்தி செயல்படுத்த வேண்டும்.

சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட சௌரிபாளையம், ஹட்கோ காலனியில் 1984-ல் கட்டப்பட்ட 528 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் குடிசை மாற்று வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட கிருஷ்ணராயபுரம் கிராமம், L.M.L. காலனி, பாரதிபுரம் திட்டப் பகுதியிலுள்ள புல எண் 1068/2, 345/2A,

345/3–ல் வசிக்கும் 48 மனைதாரர்களுக்கும் சௌரிபாளையம், காந்தி நகர் மற்றும் அண்ணா நகரில் வசிக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட மனைதாரர்களுக்கும் உடனடியாக பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிங்காநல்லூர் தொகுதி உட்பட கோவை மாநகராட்சிப் பகுதியில் தடையில்லா குடிநீர் திட்டத்தை விரைந்து முடித்து, 24 மணிநேரமும் குடிநீரை விநியோகம் செய்ய வேண்டும்.

திருச்சி செல்லும் பிரதான சாலையில் எஞ்சியுள்ள 2 கி.மீ. பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளை முடிக்க வேண்டும்.

ஹோப் காலேஜ்–விளாங்குறிச்சி சாலையில் ‘S’ bend தண்ணீர் பந்தல் அருகில் அமைந்துள்ள 13 வீடுகளின் நில உரிமையாளர்கள் அரசாங்கத்திற்கு வீட்டைக் கொடுக்க முன்வந்துள்ள நிலையில், அவர்களுக்கு இழப்பீடு வழங்கி, ரவுண்டானா அமைத்து தற்போது உள்ள கடும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வேண்டும்.

கோவை மாநகர் சிங்காநல்லூர் குளம் அருகே Smart City திட்டத்தின்கீழ் நடைபாதை, பூங்கா அமைத்துக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது பொத்தாம்பொதுவாக ** கஷ்டப்படுகிறார்கள் என்று சொன்னார். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. பதிலுரை. மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு என்று போதித்த சுயமரியாதைச் சூரியன், கருப்புச்சட்டை அணிந்த நெருப்புத் தலைவன் தந்தை பெரியாரை வணங்குகிறேன். எண்ணமெல்லாம் தமிழாய் வாழ்ந்த தென்னாட்டு காந்தி கழகம் வளர்த்த காஞ்சித் தலைவன், பேரறிஞர் அண்ணாவை வணங்குகிறேன். அஞ்சுகத் தாய் பெற்றெடுத்த அறிவாலயம்; கொஞ்சு தமிழால் குவலயம் ஆண்ட கோபாலபுரத்துச் சோழன்; வங்கக் கடலோரம் துயில்கொள்ளும்; துயில் கொண்டாலும் எங்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இதயமெல்லாம் நிறைந்திருக்கும் முத்தமிழறிஞர் கலைஞருக்கு என் உயிர் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

வரலாறு படிக்கிற தலைவர்களுக்கு மத்தியில், வரலாறு படைக்கிற தலைவர் நம் மாண்புமிகு முதல்வர். உயர் கல்வி மாணவர்களுக்கு ஓராயிரம் அறிவித்தபோது ஒரு பொறுப்புள்ள தந்தையாகவும், குடும்பத் தலைவிக்கு உரிமைத் தொகை அறிவித்தபோது பாசமிகு அண்ணனாகவும், முதியோர் உதவித் தொகை பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்தபோது பெரியோரை மதிக்கும் பிள்ளையாகவும் ஒட்டுமொத்த இந்தியாவுக்கே பாடம் எடுக்கும் எங்கள் உயிரில் கலந்த உறவே! எங்கள் குடும்பத் தலைவரே! வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

உங்கள் சாதனைகளைச் சொல்ல வேண்டுமென்றால், சட்டசபைக் கூட்டத் தொடர் முழுவதும் போதாது. தயிரிலே இந்தியைப் புகுத்த நினைப்பவர்களைக் கண்டித்து, நம் உயிரிலே தமிழ் இருக்கிறது என உணர்த்தியவர்கள் நீங்கள். தமிழ்நாட்டின் உரிமை கீதமே! உயிர் நாதமே! மாநில சுயாட்சியின் இந்திய அடையாளமே! உங்களை வணங்குகிறேன். தங்களின் செயலால் ஒட்டுமொத்தத் தொண்டர்களின் உள்ளங்களையும் கவர்ந்த மன்னரே! பெரியார்போல் கொள்கைத் தடம்! அண்ணாபோல் அர்ப்பணிப்பு; கலைஞர்போல் சாதுர்யம்; தளபதிபோல் உழைப்பு; இவையெல்லாம் ஒன்று சேர்ந்தால் அவர் பெயர்தான் உதயநிதி! (மேசையைத் தட்டும் ஒலி) வாராது வந்த மாமணியே! எதிர்கால இயக்கத்தின் தலைமையே! உங்களுக்கும் என் வணக்கம். மாண்புமிகு அண்ணன் நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2023–2024 ஆம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையினுடைய மானியக் கோரிக்கையில் உரையாற்றுகிற நல்ல வாய்ப்பை வழங்கிய நாங்கள் உயிராகப் போற்றுகிற நம்முடைய ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து என் உரையை நான் ஆற்றுகிறேன்.

[திரு. தா.மோ. அன்பரசன்]

பிற்பகல் 1–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, MSME துறை தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் சமச்சீரான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தி, புதிய தொழில் முனைவோர்களை உருவாக்கி, அதிக வேலைவாய்ப்புகளை வழங்குவதிலே இன்றைக்கு முக்கியப் பங்கு வகித்து வருகிறது. இன்றைக்கு இந்தியாவில், தமிழ்நாட்டை MSME துறையிலே முதன்மை மாநிலமாக மாற்றிக் காட்டிட வேண்டுமென்பதற்காக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அவற்றைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிற அரசாக நம்முடைய அரசு திகழ்ந்து கொண்டிருக்கிறது.

குறிப்பாக, புதிய தொழில் முனைவோர்களை உருவாக்க வேண்டுமென்பதற்காக இந்தத் துறையின் மூலமாக 4 சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கிற, இந்தக் குறுகிய இரண்டு ஆண்டுகளில், ரூ.656 கோடியே 27 இலட்சம் மானியத்தில் ரூ.1,817 கோடி வங்கிக் கடன் வழங்கி, இதுவரை, இந்த இரண்டு வருடங்களில் தமிழ்நாடு முழுவதும் 22,425 புதிய இளைஞர்களை தொழில் முனைவோர்களாக உருவாக்கியிருக்கிற அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதில், ஓர் அற்புதமான திட்டம் NEEDS. அது, முன்னர் சரியாக செயல்படுத்தப்படவில்லை. நமது ஆட்சி வந்ததற்குப் பிறகு, கடந்த ஒரு வருடத்தில் மட்டும் 163 கோடி ரூபாய்க்கு மேல் மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது, இந்தத் துறையினுடைய ஒரு மைல்கல் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் உள்ள டெல்டா மாவட்டங்கள், தென் மாவட்டங்கள், அதைப்போல பின்தங்கிய மாவட்டங்களில் சமச்சீரான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்திட வேண்டுமென்பதற்காக ரூபாய் 199 கோடியே 44 இலட்சம் மானியத்துடன் ரூ.604 கோடியே 4 இலட்சம் வங்கிக் கடனுதவி வழங்கி, பின்தங்கிய பகுதிகளில் மட்டும் 7,910 புதிய தொழில் முனைவோர்களை (மேசையைத் தட்டும்

ஒலி) உருவாக்கியிருக்கிற அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு. அதுமட்டுமல்ல, பொருளாதாரத்தில் சமூக நீதியை ஏற்படுத்திட வேண்டுமென்பதற்காக 6,938 பெண்கள், 2,344 பட்டியலினத்தவர்கள் மற்றும் பழங்குடியினர்கள், 1,619 சிறுபான்மையினர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு ரூபாய் 320 கோடியே 11 இலட்சம் மானியத்துடன் ரூ.993 கோடி வங்கிக் கடன் வழங்கி, 10,901 புதிய தொழில் முனைவோர்களை உருவாக்கித் தந்திருக்கிற ஆட்சி, தி.மு.க. ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) இதுவும், இந்தத் துறையினுடைய ஒரு மைல்கல் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களுக்குப் பாதுகாவலராக இருக்கிற ஒரு தலைவர். அந்த மக்களின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்திட வேண்டுமென்பதற்காக இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் என்ற புதிய திட்டத்தை அறிவித்தார்கள். அதில், தொழில் முனைவோர்களுக்கு 35 சதவிகிதம் முதலீட்டு மானியம்; 6 சதவிகிதம் வட்டி மானியம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், 2001 ஆம் ஆண்டு, அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் MSME நிறுவனங்களுக்கு வழங்கிய மானியங்களையெல்லாம் முழுவதுமாக நிறுத்திவிட்டார்கள். அந்தச் சூழ்நிலையில் மிகப் பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டதை நாடறிந்தது. 2006 ஆம் ஆண்டு நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தார். MSME தொழில் நிறுவனங்களுக்கு தனியாக ஒரு கொள்கையை வகுத்துத் தந்து (மேசையைத் தட்டும் ஒலி), மீண்டும் அந்த மானியங்கள் எல்லாம் வழங்கப்படும் என்று அறிவித்து, 2006 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து MSME நிறுவனங்களுக்கு மானியம் வழங்குகிற நிலையை ஏற்படுத்திய தலைவர் நம்முடைய கலைஞர் அவர்கள். இந்த இரண்டு வருடங்களில் மட்டும் சிறு தொழில்களுக்கு மின் மானியம், முதலீட்டு மானியம், வட்டி மானியம் போன்ற 10 வகை மானியங்கள் வழங்கப்படுகின்றன. இந்த 10 வகை மானியங்களில் மட்டும் இந்த இரண்டு ஆண்டுகளில், 10,509 தொழில் முனைவோர்களுக்கு ரூ.645 கோடியே 80 இலட்சம் மானியம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இரண்டு வருடங்களில், நம்முடைய MSME துறையில் சில சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறோம். இதில் பார்த்தீர்களென்றால், NEEDS திட்டத்தின்கீழ் பயன்பெற, முன்பு பட்டப் படிப்பு, பட்டயப் படிப்புப் பெற வேண்டுமென்று விதி இருந்தது. இப்போது, +2 படித்தால் போதும் என்று விதியைத் தளர்த்தியிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், அப்போது மானியம் 50 இலட்சம் ரூபாய் என்று இருந்தது; இப்போது அதனை ரூ.75 இலட்சமாக உயர்த்தியிருக்கிறோம். மாற்றுத் திறனாளிகள், பட்டியலின தொழில் முனைவோர்களுக்குக் கூடுதலாக 10 சதவிகிதம் மானியம் வழங்கப்படுகிறது. மானியம் வழங்குவதற்கான பட்டியலில் சில தொழில்கள் எல்லாம் சேர்க்கப்படாமல் இருந்தன. அதுகுறித்து, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு வந்ததற்குப் பிறகு பாரம்பரிய தொழில்கள், வீட்டு உபயோக, ஜவுளித் தொழில்கள் எல்லாம் சேர்க்கப்பட்டு, அந்தத் தொழில்களுக்கும் முதலீட்டு மானியம் வழங்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டு, இப்போது அதனை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிற ஆட்சி, நம்முடைய ஆட்சி.

பிற்பகல் 1–45

இதற்குமுன்பு அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் வருடாவருடம் சிட்கோவிலுள்ள மனைகளின் guideline value–ஐ ஏற்றியதால், கிட்டத்தட்ட 1,341 மனைகள் விற்பனையாகாமல், அப்படியே கிடப்பில் இருந்தன. MSME நிறுவனங்களுடைய நலனுக்காக, இதனை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, 5 சதவிகிதம் முதல் 75 சதவிகிதம் வரை அந்த மனைகளின் விலையைக் குறைத்ததற்குப் பிறகு, தற்போது கிட்டத்தட்ட 1,100 மனைகள் விற்கப்பட்டிருக்கின்றன. விற்கப்பட்ட அந்த மனைகளிலே தற்போது தொழில் தொடங்குகின்ற ஒரு நிலையை இந்த நாட்டில் உருவாக்கித் தந்திருக்கிற ஆட்சி, தி.மு.க. ஆட்சி என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள், GST பற்றியெல்லாம் சொன்னார்கள். ஒன்றிய அரசினுடைய பண மதிப்பிழப்பு, GST, கொரோனா பேரிடர் போன்றவற்றால் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்ட MSME தொழிலுக்கு, பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து, அதனைத் தொடர்ந்து செயல்படுத்தி,

தற்போது MSME நிறுவனங்களைத் தூக்கி நிறுத்தியிருக்கிற தலைவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், MSME நிறுவனங்களுக்கு தொழில் உரிமங்கள் உட்பட பல்வேறு உரிமங்களைப் பெறுவதில் சிரமங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் Single Window Portal 2.0 என்கிற ஒரு தளத்தை ஆரம்பித்து, தொழில் உரிமங்கள் கேட்கிற நிறுவனங்கள் இதில் பதிவு செய்து விண்ணப்பித்தால், அவர்களுக்கு உரிமங்கள் வாங்கிக் கொடுக்கப்படும் என்று கூறியதற்குப் பிறகு, இந்தத் தளத்தின் மூலமாக இதுவரை 17,600 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 15,441 தொழில் உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதில், ஒரு சாதனை என்னவென்றால், கடந்த ஓராண்டில் மட்டும் 9,603 உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வங்கியிலிருந்து கடன் பெறுவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், 100 கோடி ரூபாய் நிதியில் கடன் உத்தரவாதத் திட்டம் ஒன்றை ஆரம்பித்திருக்கிறார்கள். அதையெல்லாம் நீங்கள் பார்த்திருப்பீர்கள். இந்தியாவிலேயே 90 சதவிகிதம் வரை பிணையில்லாமல் வங்கியில் கடன் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு, அதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிற ஆட்சி, தி.மு.க. ஆட்சி. இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து இதுவரை குறுகிய காலத்திலேயே கடன் உத்தரவாதத் திட்டத்தின்கீழ் 20 கோடி ரூபாயை அரசே கொடுத்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, TN TReDS திட்டம் ஒரு நல்ல திட்டமாகும். பெரிய தொழில் நிறுவனங்களுக்கு, சிறிய தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்து தருகின்ற பொருள்களுக்கு அவர்கள் bill கொடுத்துவிடுவார்கள். அவர்கள் 4 மாதங்கள், 5 மாதங்களுக்கு சேர்த்து cheque கொடுத்துவிடுவார்கள். சிறிய தொழில் நிறுவனங்கள் பணம் இல்லாமல் சிரமப்படாமலிருக்க

இந்த cheque-ஐ எடுத்துக்கொண்டுபோய் வங்கியில் காண்பித்துவிட்டார்கள் என்றால், வங்கியானது குறைந்த வட்டியில் பணம் கொடுக்கும். அதுதான் TN TReDS திட்டம். தமிழ்நாடு வர்த்தக வரவுகள் மற்றும் தள்ளுபடித் தளம்–TN TReDS என்ற புதுமையான திட்டம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ், இதுவரை 82 MSME நிறுவனங்கள் 238 கோடியே 12 இலட்சம் ரூபாயை வங்கிக் கடனாகப் பெற்றிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுமட்டுமல்லாமல், இந்த TN TReDS திட்டத்தில், அனைத்து பொதுத் துறை நிறுவனங்களையும் சேர்க்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறோம். இந்தத் தளத்தில் இணைந்திருக்கிற 14 வங்கிகள், இதுபோன்ற தொழில் நிறுவனங்களுக்கு 2,120 கோடி ரூபாய் அளவிற்குக் கடன் வழங்க இலக்கு நிர்ணயித்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. நாகைமாலி அவர்கள் பேசியபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, MSME நிறுவனங்கள், தொழில் நிறுவனங்களுக்கு வழங்கிய பொருட்களுக்கான தொகையைத் தராமல் சில நிறுவனங்கள் ஏமாற்றிக் கொண்டிருக்கும். சிறிய நிறுவனங்கள் உற்பத்தி செய்து கொடுக்கின்ற பொருட்களை வாங்கிக் கொண்டு, ‘அப்புறம் வாருங்கள்; அப்புறம் வாருங்கள்’ என 1 வருடம், 2 வருடங்கள் வரை ஏமாற்றிக் கொண்டிருக்கும். இதைக் கட்டுப்படுத்தி, அந்த சிறு நிறுவனங்களுக்கு அந்த பெரு நிறுவனங்கள் தர வேண்டிய பணத்தை வாங்கித் தருவதற்காக. சென்னை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய 4 மண்டலங்களில் சட்டபூர்வமாக்கப்பட்ட வசதியாக்கல் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, இந்த மன்றங்கள் மூலமாக 430 நிறுவனங்களுக்கு நிலுவைத் தொகையாக இருந்த 84 கோடியே 62 இலட்சம் ரூபாயை திருப்பி வாங்கித் தந்திருக்கிற ஆட்சி தி.மு.க. ஆட்சி என்பதை நான்பெருமையோடுசொல்லிக்கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், கடந்த நிதிநிலை அறிக்கையில், 20 micro cluster, குறுந்தொழில் குழுமங்கள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அவ்வாறு அறிவிக்கப்பட்டதற்கும்

மேலாக ஒரு புதிய சாதனையாக ஒரேயாண்டில் 113 கோடி ரூபாய் அரசு மானியத்துடன் 25 குறுந்தொழில் குழுமங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் காஞ்சிபுரம் மாவட்டம் நரிக்குறவர் பாசிமணிக் குழுமம், தூத்துக்குடி மாவட்டம் மகளிர் ஆகாயத்தாமரை குழுமம், கோவில்பட்டி பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் வீட்டு உபயோக சுகாதாரப் பொருட்கள் தயாரிப்புக் குழுமம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பெரும் குழுமங்கள்–mega clusters தமிழ்நாட்டினுடைய தொழில் நிறுவனங்களின் தரத்தினை உலகளவில் உயர்த்திடும் வகையில் பெரும் குழும திட்டம் நமது கழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கத்தில் ரூபாய் 33 கோடியே 33 இலட்சம் அரசு மானியத்துடன் ரூபாய் 47 கோடியே 62 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் துல்லிய உற்பத்தி பெரும் குழுமம்; விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் 71 கோடியே 56 இலட்சம் ரூபாய் அரசு மானியத்துடன் 155 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மருந்தியல் பெரும் குழுமம் அமைக்க ஆணைகள் வழங்கப்பட்டு, தற்போது பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல், மாவட்ட ஏற்றுமதி ஊக்குவிப்பு மையங்கள்–MSME தொழில் நிறுவனங்களில் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி செய்வதற்காக ஆலோசனைகளும், உதவிகளும் வழங்குவதற்கு, அனைத்து மாவட்டத் தொழில் மையங்களிலும் மாவட்ட ஏற்றுமதி ஊக்குவிப்பு மையங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்டிருக்கின்றன. இந்த மையங்களில் மத்திய ரிசர்வ் வங்கி, பன்னாட்டு நிதி சேவை ஆணையம், இந்திய ஏற்றுமதி நிறுவனங்களின் கூட்டமைப்பு ஆகியவற்றின்மூலம் பயிற்சியளிக்கப்பட்ட மாவட்டத் தொழில் மைய அலுவலர்கள் இன்றைக்கு மாவட்டம் முழுவதும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

FaMe என்றொரு திட்டம். MSME-யினுடைய புதுமைத் திட்டங்களான கடன் உத்தரவாதத் திட்டம், TNTReDS ஆகிய திட்டங்களை FaMe Tamil Nadu செயல்படுத்தி வருகிறது.

2023 ஏப்ரல் 6] [திரு. தா.மோ. அன்பரசன்]

மேலும், MSME நிறுவனங்களுக்கு நிதி பெறுவதற்கான கருத்தரங்குகள், உள்நாட்டு விற்பனை மற்றும் ஏற்றுமதி e-commerce, மின்சாரம் மற்றும் எரிபொருள் சேமிப்பு பற்றிய விழிப்புணர்வுகளை தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறது.

TANCOIR திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். கயிறு தொழில் மேம்பாட்டிற்காகவும், உலகளவில் தென்னை நார் கயிறு பொருட்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்தவும், கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்புகளை அளிப்பதற்காகவும், மாண்புமிகு முதல்வர் அவர்களால் கோயம்புத்தூர் மாவட்டத்தில் தமிழ்நாடு கயிறு நிறுவனம் தொடங்கப்பட்டது. 42 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பில் தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி, கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, கரூர் மாவட்டம், K.பரமத்தி, திருப்பூர் மாவட்டம், குண்டடம் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய 5 இடங்களில் கயிறு குழுமங்கள் அமைக்க ஆணைகள் வழங்கப்பட்டு, பணிகள் தொடங்கப்படவுள்ளன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், SIDCO, குறு, சிறு குழுமங்களாக ஒன்றிய அரசால் ஒப்புதல் பெறப்பட்ட 43 பொது வசதி மையங்களுக்கு 28 பொது வசதி மையங்கள் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

SIDCO நிறுவனம் தனது வரலாற்றிலேயே இதுவரை இல்லாத அளவிற்கு கடந்த ஆண்டில், தொழில் மனை மற்றும் மூலப் பொருள் விற்பனையில் ரூபாய் 100 கோடியைக் கடந்து சாதனை படைத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த காலங்களில் அரசுப் புறம்போக்கு நிலங்களின் வகைப்பாடுகளை மாற்றாமல், 60 SIDCO தொழிற்பேட்டைகளில் 3,702 ஏக்கர் நிலங்கள் யாருக்கும் பட்டா கொடுக்கப்படாமல் அப்படியே வைக்கப்பட்டிருந்தன. இதனை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்ற பிறகு, நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்களுடைய தலைமையில் ஒரு Empowered

Committee அமைக்கப்பட்டு, தற்போது முதற்கட்டமாக 32 தொழிற்பேட்டைகளில் உள்ள 1,542 ஏக்கருக்கு பட்டா வழங்க ஆணையிட்டு, 28-3-2023 அன்று நம்முடைய தலைவர் அவர்கள் இந்த பட்டா வழங்கும் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள். இந்தச் சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடர் முடிந்ததற்குப் பிறகு 1,542 ஏக்கர் பட்டா உரிமையாளர்களுக்கு அந்தப் பட்டா வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், MSME தொழில் வளர்ச்சிக்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 173 கோடி ரூபாய் மதிப்பில் 255 ஏக்கர் பரப்பில் 5 புதிய தொழிற்பேட்டைகளைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 1,143 தொழில் மனைகள், தொழில்முனைவோர்களுக்கு ஒதுக்கப்பட்டு, இன்றைக்கு தொழில்கள் தொடங்கப்படவிருக்கின்றன. 537.72 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 263 கோடியே 82 இலட்சம் மதிப்பில் 8 புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கின்ற பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுந்தொழில் நிறுவனங்களுக்கு புதிய தொழிற்பேட்டை அமைக்க நகர்ப்புறங்களில் போதிய நிலம் இல்லாத காரணத்தினால், நிலத்திற்கான முதலீட்டை குறைக்கும் வகையிலும், உடனடியாகத் தொழில் தொடங்கவும் புதிய அடுக்குமாடி தொழிலகங்கள் அமைக்கும் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டம், கொலுசு உற்பத்தியாளர்களுக்கு ரூபாய் 24 கோடியே 50 இலட்சம் மதிப்பில் 100 தொழில்மனை கூடங்கள் கொண்ட அடுக்குமாடி தொழில் வளாகக் கட்டடத்திற்கு, கடந்த ஆகஸ்ட் மாதம் நம்முடைய தலைவர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டது. இது மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கோரிக்கைதான். மேலும், கிண்டி, அம்பத்தூர் தொழிற்பேட்டைகளில் ரூபாய் 150 கோடியே 68 இலட்சம் மதிப்பீட்டில், 264 தொழிற்கூடங்கள் கொண்ட புதிய அடுக்குமாடி தொழில் வளாகங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களால் விரைவிலே தொடங்கப்படவிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-55

அதேமாதிரி, MSME நிறுவனங்களில் வேலை பார்க்கின்ற தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், இரண்டு, மூன்று

மாவட்டங்களிலிருந்து திருப்பூர் மாவட்டத்திற்கு வேலைக்கு வருவார்கள். அவர்களுக்குத் தங்குவதற்கு இட வசதி கிடையாது. இதை தாய் உள்ளத்தோடு உணர்ந்த நம்முடைய தலைவர் அவர்கள், குறைந்த வாடகையில் தங்கும் வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று உத்தரவிட்டு, அதனை நிறைவேற்றுகின்றவகையில் சென்னை, அம்பத்தூர் தொழிற்பேட்டை மற்றும் கோயம்புத்தூர், குறிச்சி தொழிற்பேட்டைகளில் ரூபாய் 51 கோடியே 47 இலட்சம் மதிப்பில், 1,300 தொழிலாளர்கள் தங்குகின்றவகையில் விடுதிகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்—TANSI, கடந்த 13 ஆண்டுகளில் முதல் முறையாக, சென்ற நிதியாண்டில் 138 கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்களை உற்பத்தி செய்து சாதனை படைத்தது. 2021–2022 ஆம் ஆண்டு 45 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்த TANSI நிறுவனம், இதுவரை எந்த ஆண்டிலும் இல்லாத அளவிற்கு 155 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்து, புதிய சாதனை படைத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், TANSI-யின் விற்பனையினை அதிகரிக்க கிண்டியில் ரூ.70 இலட்சம் மதிப்பில் ஒரு பிரத்யேக கண்காட்சி விற்பனைக் கூடம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் மூடப்பட்ட ஓமலூர், ராணிப்பேட்டை, ஈரோடு தொழிற்கூடங்கள் மீண்டும் திறந்து வைக்கப்பட்டு, உற்பத்தியைத் தொடங்கியிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ்நாடு சிறு தேயிலை உற்பத்தியாளர்களுக்கான INDCOSERVE நிறுவனம், கடந்த ஆண்டு மட்டும் 11,300 மெட்ரிக் டன் தேயிலை தயாரித்து, தேயிலை விவசாயிகளுக்கு 57 கோடியே 29 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறது. மேலும், NABARD வங்கி நிதியுதவியுடன் 15 தேயிலைத் தொழிற்சாலைகளை ரூபாய் 67 கோடியே 74 இலட்சம் மதிப்பில் நவீனப்படுத்தும் பணி இப்போது நடைபெற்று வருகிறது.

அதேபோல, Sagoserve. மரவள்ளிக் கிழங்கு பயிரிடும் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைத்திடவும், ஜவ்வரிசி மற்றும் starch உற்பத்தியாளர்களின் பொருட்களை இடைத்தரகர்களின்

தலையீடின்றி நேரடியாக விற்பனை செய்திடவும் தொடங்கப்பட்ட sagoserve கூட்டுறவுச் சங்கம், கடந்த ஆண்டு மட்டும் 557 கோடியே 48 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்து, 4 கோடியே 20 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, MSME நிறுவனங்களுக்கு கடன் உதவிகள் வழங்குகிற TAICO வங்கி, கடந்த ஆண்டில் 1,069 கோடியே 70 இலட்சம் ரூபாய் வைப்பு நிதி திரட்டி, 8 கோடியே 58 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

Startup என்றால் என்ன என்பது தெரியாது. சென்ற ஆட்சியில் தெரியவே தெரியாது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் Startup-க்கு தனி முக்கியத்துவம் தர வேண்டுமென்பதற்காக, கழக அரசு பொறுப்பேற்றது முதல் தமிழ்நாட்டில் Startup தொழில்களை ஊக்கப்படுத்த உகந்த சூழ்நிலைகளை உருவாக்கியதால், Startup தர வரிசையில், இந்திய அளவில் கடைசி இடத்திலிருந்த தமிழ்நாடு, மூன்றாம் இடத்திற்கு முன்னேறி Leader தகுதியைப் பெற்றிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கழக அரசு பொறுப்பேற்றபோது 2,513 ஆக இருந்த Startup நிறுவனங்களின் எண்ணிக்கை, தற்போது 5,740 ஆக உயர்ந்து, இரு மடங்கு வளர்ச்சியடைந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையில் Startup நிறுவனங்களை உருவாக்க புத்தொழில் முனைவோருக்கு 10 இலட்சம் ரூபாய் ஆதார நிதி வழங்கும் திட்டத்தின்கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினரின் Startup நிறுவனங்கள் உள்ளிட்ட 80 Startup நிறுவனங்களுக்கு, 11 கோடியே 90 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் முனைவோர் புத்தாக்கப் பயிற்சி நிறுவனத்தின் மூலமாக மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 4,356 பள்ளிகளில் உள்ள 4 இலட்சத்து 78 ஆயிரம் மாணவ, மாணவிகளுக்கும், கல்லூரிகளில் பயிலும் 2 இலட்சத்து 85 ஆயிரம் மாணவர்களுக்கும் தொழில் முனைவோர்

விழிப்புணர்வுப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. புதிய கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்திடும்வகையில் புத்தாக்க பட்டுச் சீட்டுத் திட்டத்தின்கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் 242 புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு ரூபாய் 6 கோடியே 4 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது. ஆக, இப்பேர்ப்பட்ட பணிகளையெல்லாம் செய்து நம்முடைய துறை இன்றைக்கு வேகமாக வளர்ந்திருக்கிறது. MSME துறையில் தொழில் முனைவோர்கள், தொழில் நடத்துபவர்களெல்லாம் நிம்மதியாகத் தொழில் நடத்திட வேண்டுமென்பதற்காக இப்பேர்ப்பட்ட திட்டங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு, இன்றைக்கு தொழில்கள் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: கடந்த வாரம் இந்த அவையிலே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. முனுசாமி அவர்கள், 50 ஆண்டுக்காலம் தமிழ்நாட்டை திராவிட இயக்கங்கள் ஆண்டாலும், 30 வருடங்கள் நாங்கள் ஆட்சியில் இருந்தபோதுதான் பெரிய வளர்ச்சி ஏற்பட்டது, உங்களுடைய ஆட்சியில் இல்லையென்று சொன்னார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், 1996–2001 வரை தி.மு.க. ஆட்சி. தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, சென்னை புறநகர்ப் பகுதியில் மிகப் பெரிய தொழிற்சாலைகளைக் கொண்டுவர வேண்டுமென்பதற்காக, 15 ஆயிரம் ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தினார். அதற்கான ஆதாரத்தை நான் வைத்திருக்கிறேன். அவை எந்தெந்த இடங்கள் என்று சொன்னால், ஸ்ரீபெரும்புதூர், சுங்குவார்சத்திரம், மாம்பாக்கம், பிள்ளைப்பாக்கம், ஒரகடம், மறைமலை நகர் மற்றும் சிறுசேரி உள்ளிட்ட 50–க்கும் மேற்பட்ட கிராமங்களில் 15 ஆயிரம் ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தினார். பின்னர், 2001–ல் அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. 2001 முதல் 2006 வரைக்கும் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தது. ஆனால், ஒரு சென்ட் நிலத்தில்கூட ஒரு தொழிற்சாலையைக்கூட கொண்டுவரவில்லை. 2006–ல், மீண்டும் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்போது,

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், மாண்புமிகு துணை முதல்வர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒன்றரை இலட்சம் கோடி ரூபாய்க்கு அந்நிய முதலீடுகளை தமிழ்நாட்டுக்குக் கொண்டுவந்து ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகளை, சென்னை புறநகர்ப் பகுதியில் ஏற்படுத்தியதால், (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு 8 இலட்சம் பேர் நேரடியாகவும், 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மறைமுகமாகவும் தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்கெல்லாம் காரணம் தி.மு.க. ஆட்சி; கலைஞர் மற்றும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இதை யாரும் மறுக்கவே முடியாது.

19 வருடங்கள்தான் ஆட்சியில் இருந்தார். ஆக, கலைஞர் தலைமையில் தி.மு.க. ஆட்சியில் இருந்தபோதெல்லாம் ஐம்பது ஆண்டுகளில் செய்ய வேண்டிய பணிகளை ஐந்தே ஆண்டுகளில் செய்து தமிழ்நாட்டை மிகப் பெரிய ஒரு வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு சென்றார். தமிழ்நாட்டில் இருக்கின்ற ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் மற்றும் பின்தங்கிய மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்திட வேண்டுமென்பதற்காக, பல்வேறு திட்டங்களைக் கொண்டுவந்து, அந்தத் திட்டங்களையெல்லாம் செயல்படுத்தி, இலட்சக்கணக்கான குடும்பங்களை ஏழ்மை நிலையிலிருந்து உயர்த்தியிருக்கின்ற அரசு தி.மு.க. அரசு; கலைஞர் மற்றும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

இன்றைக்கு பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் MSME துறையில் இருக்கிற சிறிய பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் இங்கே சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து 134 வெட்டுத் தீர்மானங்கள் வரப்பெற்றிருக்கின்றன. அதிலே முக்கியமாக தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்று பல்வேறு உறுப்பினர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதற்கு அரசு நிலம் இருக்கிறதா என்று ஆய்வு செய்து, நிலம் இல்லையென்று சொன்னால், தனியாரிடமிருந்து நிலங்களைப் பெற்று, பின்தங்கிய பகுதிகள் எங்கெங்கு இருக்கின்றதோ, அவற்றையெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அங்கெல்லாம் தொழிற்பேட்டை அமைக்கின்ற பணியை நிச்சயமாக இந்த அரசு செய்து தரும் என்ற உத்தரவாதத்தை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இங்கே உரையாற்றிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. பி. தங்கமணி, திரு. இரா. இராஜேந்திரன், திரு. அ. வெற்றிஅழகன், திரு. S. சதாசிவம், திரு. சபா. இராசேந்திரன், அண்ணன் திரு. வி.பி. நாகைமாலி, திரு. கு. சின்னப்பா, திரு. கே.ஆர். ஜெயராம் ஆகியோருடைய கோரிக்கைகளையெல்லாம் நான் குறிப்பெடுத்து வைத்திருக்கிறேன். வருகின்ற காலங்களில் படிப்படியாக அவற்றைச் சரிசெய்து, MSME நிறுவனங்கள், நம்முடைய தமிழகத்திலே சிறந்த முறையிலே இயங்கி, இந்தியாவிலே சிறந்த மாநிலம் தமிழ்நாடு என்ற பெயரை பெறக்கூடிய அளவில் நிச்சயமாக பணிகளை நாங்கள் செய்வோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை தொடர்பான மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் உங்களையெல்லாம் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், துறையின் அறிவிப்புகளை அறிவித்துவிடுங்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையின் சார்பில் புதிய அறிவிப்புகளை இப்பேரவையில் அறிவிக்கிறேன். அறிவிப்புகளின் தலைப்புகளை மட்டும் நான் வாசிக்கிறேன். மற்றவற்றை நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

1. சென்னை, கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டையில் டான்சிக்குச் சொந்தமான 3.08 ஏக்கர் நிலத்தில் தமிழ்நாடு சிட்கோ கூட்டு முயற்சியில் சுமார் 200 தொழில்முனைவோர்களுக்கு உடன் பயன்படத்தக்க (Plug and Play) அடுக்குமாடி தொழில் வளாகம் ரூ.175 கோடி செலவில் உருவாக்கப்படும். இதன்மூலம் சுமார் 2,200 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்

சென்னை, கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டையில் டான்சிக்குச் சொந்தமான 3.08 ஏக்கர் நிலத்தில் சுமார் 2 இலட்சம் சதுர அடி

கட்டட பரப்பளவில் தமிழ்நாடு சிட்கோ கூட்டு முயற்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோர்களுக்கு உடன் பயன்படத்தக்க வகையில் (Plug and Play) கீழ்தளம் மற்றும் மூன்றடுக்கு தளங்களுடன், உரிய வசதிகளுடன்கூடிய அடுக்குமாடி தொழில் வளாகம் சுமார் 200 தொழிற்கூடங்களுடன் ரூ.175 கோடி செலவில் உருவாக்கப்படும். இதன்மூலம் சுமார் 2,200 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இத்திட்டம் டான்சியின் நிதியிலிருந்து செயல்படுத்தப்படும்.

2. தமிழ்நாடு சிட்கோமூலம், குறுந்தொழில் முனைவோர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய 48,000 சதுர அடி பரப்பளவில் சுமார் 350 நபர்களுக்கு நேரடியாகவும், 200 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் வழங்கக்கூடிய வகையில், ரூ.26.24 கோடி திட்ட மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் (ஜூஜுவாடி) தொழிற்பேட்டையில் பல அடுக்குகள் கொண்ட அடுக்குமாடி தொழில் வளாகம் கட்டப்படும்

குறுந்தொழில் முனைவோர்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில், கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் (ஜூஜுவாடி) தொழிற்பேட்டையில் 48,000 சதுர அடி பரப்பளவில் ரூ.26.24 கோடி திட்ட மதிப்பீட்டில் தரைதளம் மற்றும் 3 அடுக்குகள் கொண்ட அடுக்குமாடி தொழில் வளாகம் தமிழ்நாடு சிட்கோமூலம் கட்டப்படும். இத்தொழில் வளாகத்தின்மூலம் 60 குறுந்தொழில் முனைவோர்கள் ஒதுக்கீடு பெற்று பயன்பெறுவர். இதன்மூலம் 350 நபர்களுக்கு நேரடியாகவும், 200 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

3. தமிழ்நாடு சிட்கோமூலம் குறுந்தொழில் முனைவோர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய 35,000 சதுர அடி பரப்பளவில் சுமார் 250 நபர்களுக்கு நேரடியாகவும், 150 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் வழங்கக்கூடிய வகையில், ரூ.22.64 கோடி திட்ட மதிப்பீட்டில் மதுரை மாவட்டம், கே.புதூர் தொழிற்பேட்டையில் பல அடுக்குகள் கொண்ட அடுக்குமாடி தொழில் வளாகம் கட்டப்படும்

குறுந்தொழில் முனைவோர்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் மதுரை மாவட்டம், கே.புதூர் தொழிற்பேட்டையில் 35,000 சதுர அடி பரப்பளவில் ரூ.22.64 கோடி திட்ட மதிப்பீட்டில் தரைதளம் மற்றும் 3 அடுக்குகள் கொண்ட அடுக்குமாடி தொழில் வளாகம் தமிழ்நாடு சிட்கோமூலம்

கட்டப்படும். இத்தொழில் வளாகத்தின்மூலம் 45 குறுந்தொழில் முனைவோர்கள் ஒதுக்கீடு பெற்று பயன்பெறுவர். இதன்மூலம் 250 நபர்களுக்கு நேரடியாகவும், 150 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

4. புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கொத்தக்கோட்டையில் 55 ஏக்கரில் சுமார் 2,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கக்கூடிய வகையில், ரூ.25.50 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய தொழிற்பேட்டை தமிழ்நாடு சிட்கோமூலம் அமைக்கப்படும்

புதுக்கோட்டை மாவட்டத்தில், வளர்ந்துவரும் தொழில் பகுதியான ஆலங்குடி வட்டம், கொத்தக்கோட்டையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோர்களுக்காக 55 ஏக்கரில் ரூ.25.50 கோடி திட்ட மதிப்பில் புதிய தொழிற்பேட்டை தமிழ்நாடு சிட்கோமூலம் அமைக்கப்படும். இதன்மூலம் சுமார் 2,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

5. செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், முள்ளிக்கொளத்தூரில் 28 ஏக்கரில் சுமார் 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கக்கூடிய வகையில், ரூ.14 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய தொழிற்பேட்டை தமிழ்நாடு சிட்கோமூலம் அமைக்கப்படும்

சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலுள்ள தொழில்முனைவோர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், செங்கல்பட்டு மாவட்டம், முள்ளிக்கொளத்தூரில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோர்களுக்காக 28 ஏக்கரில் ரூ.14 கோடி திட்ட மதிப்பில் புதிய தொழிற்பேட்டை தமிழ்நாடு சிட்கோமூலம் அமைக்கப்படும். இதன்மூலம் சுமார் 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

பிற்பகல் 2–05

6. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், முத்தூரில் 34 ஏக்கரில் சுமார் 1,400 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கக்கூடிய வகையில், ரூ.15 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய தொழிற்பேட்டை தமிழ்நாடு சிட்கோமூலம் அமைக்கப்படும்

திருநெல்வேலி மாவட்டத்தில் வளர்ந்து வரும் தொழில் பகுதியான பாளையங்கோட்டை வட்டம், முத்தூரில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்களுக்காக 34 ஏக்கரில்

ரூ.15 கோடி திட்ட மதிப்பில் புதிய தொழிற்பேட்டை தமிழ்நாடு சிட்கோமூலம் அமைக்கப்படும். இதன் மூலம் சுமார் 1,400 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

7. காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம், வையாவூரில் நலிவடைந்த காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கூட்டுறவு நூற்பாலைக்குச் சொந்தமான 43 ஏக்கர் நிலத்தில் சுமார் 1,800 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கக்கூடிய வகையில், ரூ.38.70 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய தொழிற்பேட்டை தமிழ்நாடு சிட்கோமூலம் அமைக்கப்படும்

தொழில் வளர்ச்சியில் சிறந்து விளங்கும் காஞ்சிபுரம் மாவட்டத்தில், தொழில்முனைவோர்களின் தேவையான தொழில் மனைகளை அளிக்கும் வகையில், காஞ்சிபுரம் வட்டம், வையாவூரில் நலிவடைந்த காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கூட்டுறவு நூற்பாலைக்குச் சொந்தமான நிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோர்களுக்காக 43 ஏக்கரில் ரூ.38.70 கோடி திட்ட மதிப்பில் புதிய தொழிற்பேட்டை தமிழ்நாடு சிட்கோமூலம் அமைக்கப்படும்.

8. விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், அயன்கொல்லங்கொண்டானில் 25 ஏக்கரில் சுமார் 800 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கக்கூடிய வகையில் ரூ.15 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய தொழிற்பேட்டை தமிழ்நாடு சிட்கோமூலம் அமைக்கப்படும்

விருதுநகர் மாவட்டத்தில், வளர்ந்து வரும் தொழில் பகுதியான இராஜபாளையம் வட்டம், அயன்கொல்லங்கொண்டானில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோர்களுக்காக 25 ஏக்கரில் ரூ.15 கோடி திட்ட மதிப்பில் புதிய தொழிற்பேட்டை தமிழ்நாடு சிட்கோமூலம் அமைக்கப்படும். இதன்மூலம் சுமார் 800 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

9. சாதாரண விசைத்தறி கொண்டு இயங்கும் குறு மற்றும் சிறு விசைத்தறித் தொழில் நிறுவனங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்த உயர் தொழில்நுட்பம் சார்ந்த நாடா இல்லாத நெய்தலுக்கான பொருத்திகள் (Retrofitting), ஜக்கார்ட் உள்ளிட்டவை நிறுவுவதற்கு 25 விழுக்காடு முதலீட்டு மானியம் வழங்கப்படும்

உலகளாவிய வர்த்தகச் சூழலில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்களுடைய உற்பத்தித் திறனை

*அவ்வப்போது மேம்படுத்துவது இன்றியமையாததாகும். இதனை ஊக்கப்படுத்தும்விதமாக சாதாரண விசைத்தறி கொண்டு இயங்கும் குறு மற்றும் சிறு விசைத்தறித் தொழில் நிறுவனங்கள் தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக நிறுவும் நாடா இல்லாத நெய்தலுக்கான பொருத்திகள் (*Retrofitting*) ஜக்கார்ட் உள்ளிட்ட பொருத்திகளுக்கு 25 விழுக்காடு முதலீட்டு மானியம் வழங்கப்படும். இதற்கான நிதி தற்போதுள்ள முதலீட்டு மானியத்திற்கான ஒதுக்கீட்டிலிருந்து செலவிடப்படும்.*

10. கிடங்குகள், குளிர்பதன கிடங்குகள், குளிர்பதன போக்குவரத்து மற்றும் சோதனைக் கூடங்கள் உள்ளிட்ட தொழில் துறை சார்ந்த சேவைத் தொழில்களை ஊக்குவிப்பதற்காக 15 விழுக்காடு முதலீட்டு மானியம் அதிகபட்சமாக ரூ.25 இலட்சம் வரை வழங்கப்படும்

நீடித்த நிலையான வளர்ச்சிக்கு தொழில் துறை சார்ந்த சேவைத் தொழில்களான குளிர்பதன கிடங்குகள், குளிர்பதன போக்குவரத்து, சோதனைக் கூடங்கள் மற்றும் 10,000 சதுர அடிக்கு மேற்பட்ட கிடங்குகள் உள்ளிட்ட சேவைத் தொழில்களை ஊக்குவிப்பது முக்கியமானதாகும். அத்தகைய தொழில் துறை சார்ந்த சேவைத் தொழில்களை ஊக்குவிப்பதற்காக 15 விழுக்காடு முதலீட்டு மானியம், அதிகபட்சமாக ரூ.25 இலட்சம் வரை வழங்கப்படும். இதற்கான நிதி தற்போதுள்ள முதலீட்டு மானியத்திற்கான ஒதுக்கீட்டிலிருந்து செலவிடப்படும்.

11. அதிக எண்ணிக்கையிலான படித்த இளைஞர்கள் பயன்பெறும் வகையில் வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் (UYEGP) கீழ் வியாபாரம் சார்ந்த தொழில்கள் தொடங்கிட தற்போதைய திட்ட மதிப்பின் உச்சவரம்பு ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.15 இலட்சமாக உயர்த்தப்படும். இதற்கான மானியமும் ரூ.1.25 இலட்சத்திலிருந்து ரூ.3.75 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்

*வேலையின்மை நெருக்கடியைத் தணிக்கவும், உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்யும் நோக்கத்துடனும் தமிழ்நாடு அரசு, வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (*UYEGP*) என்ற சுயவேலைவாய்ப்பு திட்டத்தினை தொழில் ஆணையரகம்மூலம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், வியாபாரம் சார்ந்த தொழில்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டு,*

இத்தொழில்களுக்கு தற்போதைய திட்ட மதிப்பின் உச்சவரம்பு ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.15 இலட்சமாக உயர்த்தப்படும். இதற்கான மானியமும் ரூ.1.25 இலட்சத்திலிருந்து ரூ.3.75 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

12. தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் சுயவேலைவாய்ப்புத் திட்டங்களான புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) மற்றும் வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) ஆகிய திட்டங்களின்மூலம் அதிக எண்ணிக்கையிலான படித்த இளைஞர்கள் பயன்பெறும் வகையில் உச்ச வயது வரம்பு பொதுப் பிரிவினருக்கு 35 வயதிலிருந்து 45 வயதாகவும், சிறப்புப் பிரிவினருக்கு 45 வயதிலிருந்து 55 வயதாகவும் உயர்த்தப்படும்

வேலையின்மை நெருக்கடியைத் தணிக்கவும், உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்யும் நோக்கத்துடனும் புதிய முதல் தலைமுறை தொழில்முனைவோர்களை உருவாக்கிடவும், தமிழ்நாடு அரசு சுயவேலைவாய்ப்புத் திட்டங்களான புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) மற்றும் வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) ஆகியவற்றை செயல்படுத்தி வருகிறது.

இவ்விரண்டு திட்டங்களின்கீழ் அதிக எண்ணிக்கையிலான படித்த இளைஞர்கள் பயன்பெறும் வகையில் உச்ச வயதுவரம்பு பொதுப் பிரிவினருக்கு 35 வயதிலிருந்து 45 வயதாகவும், சிறப்புப் பிரிவினருக்கு 45 வயதிலிருந்து 55 வயதாகவும் 10 ஆண்டுகள் உயர்த்தப்படும்.

13. கடந்த நிதியாண்டில் ரூ.30 கோடியாக இருந்த "தமிழ்நாடு பழங்குடியினர்/பட்டியலினத்தவர் புத்தொழில் நிதி", இந்த நிதியாண்டில் ரூ.50 கோடியாக உயர்த்தப்படும்

தமிழ்நாட்டில் அனைத்துத் தளங்களிலும் சமூக நீதியினை உறுதிப்படுத்தும் நோக்கத்தில் தமிழ்நாடு அரசால் 2022–2023 ஆம் நிதியாண்டில் 30 கோடி ரூபாய் நிதியுடன் "தமிழ்நாடு பட்டியலினத்தவர்/பழங்குடியினர் புத்தொழில் நிதியம்" தொடங்கப்பட்டது. தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் வழியாக நடைமுறைப்படுத்தப்படும் இந்த சிறப்பு நிதியமானது, பட்டியலினத்தவர் அல்லது பழங்குடியினரால்

தொடங்கி நடத்தப்பட்டு வரும் புத்தாக்க செயல் திட்டங்களுடன் இயங்கும் புத்தொழில் நிறுவனங்களுக்கு பங்கு முதலீடு அல்லது பிணையில்லா கடனாக நிதி வழங்குவதற்காகத் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் சிறப்பான வெற்றியைக் கருத்தில்கொண்டு, 2023–2024 ஆம் நிதியாண்டில் இந்த நிதியானது 50 கோடி ரூபாயாக உயர்த்தப்படுகிறது.

14. பட்டியலின மற்றும் மாற்றுத்திறனாளி தொழில்முனைவோர்களுக்கு எளிதாக கடன் பெறுவதற்கு ஆலோசனை வழங்கி வழிகாட்ட அனைத்து மாவட்ட தொழில் மையங்களிலும் சிறப்பு வழிகாட்டி அலுவலர்கள் நியமிக்கப்படுவார்கள்

பட்டியலின மற்றும் மாற்றுத்திறனாளி தொழில்முனைவோர்கள் எளிதாகக் கடன் பெறுவதற்கும், வெற்றிகரமாக தொழில் நடத்துவதற்கும் வழிகாட்டி, ஆலோசனை வழங்க அனைத்து மாவட்டத் தொழில் மையங்களிலும் சிறப்பு வழிகாட்டி அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். இவ்வலுவலர்கள் கடன் விண்ணப்பங்கள் மற்றும் திட்ட அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் நிதி மேலாண்மை உள்ளிட்ட வழிகாட்டுதல்களை வழங்குவார்கள்.

15. நகர்ப்புற குடியிருப்புப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்கூடங்கள் மற்றும் தொழிற்குழுமங்களை, அப்பகுதியில் ஏற்படும் நெரிசலைக் குறைப்பதற்காக நகருக்கு வெளியே மாற்றி அமைக்க முன்வரும் தனியார் தொழிற்குழுமங்கள் மற்றும் தனியார் தொழில்முனைவோர் அமைப்புகளை ஊக்குவிக்க 75% அரசு நிதியுதவி/மானியம் வழங்கும் திட்டத்திற்கான குறைந்தபட்ச நிலப்பரப்புத் தேவையானது பத்து ஏக்கரில் இருந்து இரண்டு ஏக்கராகக் குறைக்கப்படும்

தொழிற்கூட்டமைப்பினர் நகர்ப்புறத்தில் இயங்கிவரும் தொழிற்கூடங்கள்/தொழிற்குழுமங்களை நகருக்கு வெளியே மாற்றியமைக்க, திட்ட மதிப்பில் 75% மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான குறைந்தபட்ச நிலப்பரப்புத் தேவையானது பத்து ஏக்கராகும். தொழிற் கூட்டமைப்பினரால் நகருக்கு அருகே நிலம் பெறுவது பெரும் சிரமமாக இருப்பதனைக் கருத்தில்கொண்டு தேவையான குறைந்தபட்ச நிலப்பரப்பு, பத்து ஏக்கரில் இருந்து இரண்டு ஏக்கராகக் குறைக்கப்படும். இதன்மூலம் தொழில்முனைவோர் அமைப்புகள் தங்களது தொழிற்கூடங்கள்/

தொழிற்குழுமங்களை நகருக்கு வெளியே மாற்றி அமைப்பது எளிதாக்கப்படும்.

16. தொழில்முனைவோர் அமைப்புகள்மூலம் உருவாக்கப்படும் தனியார் தொழிற்பேட்டைகளை ஊக்குவிப்பதற்காக வழங்கப்படும் 50% அரசு நிதியுதவி/மானியம் பெறுவதற்கான குறைந்தபட்ச நிலத் தேவையானது 50 ஏக்கரில் இருந்து 10 ஏக்கராக மாற்றியமைக்கப்படும்

தொழில்முனைவோர் அமைப்புகள்மூலம் திட்ட மதிப்பில் 50% அரசு நிதியுதவி/மானியத்துடன் தனியார் தொழிற்பேட்டை அமைப்பதற்கு அரசு உதவி வருகிறது. இதற்கான குறைந்தபட்ச நிலப்பரப்பானது 50 ஏக்கர் ஆகும்.

தொழில்முனைவோர் அமைப்பினரால் நிலம் பெறுவது பெரும் சிரமமாக இருப்பதனைக் கருத்தில்கொண்டு, அவர்கள் இத்திட்டத்தில் எளிதில் பயன்பெறும் வகையில் தொழில்முனைவோர் அமைப்புகள்மூலம் உருவாக்கப்படும் தனியார் தொழிற்பேட்டைகளை ஊக்குவிப்பதற்காக குறைந்தபட்ச நிலத் தேவையானது 50 ஏக்கரில் இருந்து 10 ஏக்கராக மாற்றியமைக்கப்படும். இதன்மூலம் தொழில்முனைவோர் அமைப்புகள் புதிய தனியார் தொழிற்பேட்டை அமைப்பது எளிதாக்கப்படும்.

17. அதிகரித்துவரும் தொழில்முனைவோர்களின் தேவைக்கேற்ப புதிய தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்கு குறைந்துவரும் அரசு நிலத்தைச் சார்ந்து இருக்காமல், தமிழ்நாடு சிட்கோவே குறைந்த விலையில் தனியார் நிலத்தை விரைவாக வாங்குவதற்கு வசதியாக வரும் ஆண்டில் புதிய தனியார் நில கொள்முதல் கொள்கை (Private Land Purchase Policy) உருவாக்கப்படும்

தொழிற்பேட்டை அமைக்க தகுதியான அரசு நிலங்கள் கிடைப்பது அரிதாக இருப்பதால், அதிகரித்து வரும் தொழில்முனைவோர்களின் தேவைக்கேற்ப புதிய தொழிற்பேட்டைகளை தமிழ்நாடு சிட்கோமூலம் நிறுவுவதற்காக குறைந்த விலையில் தனியார் நிலத்தை விரைவாக வாங்குவதற்கு வசதியாக, வரும் ஆண்டில் புதிய தனியார் நில கொள்முதல் கொள்கை (Private Land Purchase Policy) உருவாக்கப்படும். இதன்மூலம் தொழில்முனைவோர்களின் தேவையின் அடிப்படையில் தமிழ்நாடு சிட்கோமூலம் புதிய தொழிற்பேட்டை அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

18. தருமபுரி மாவட்டம், தருமபுரி அன்னசாகரத்தில் ரூ.2.25 கோடி மாநில அரசு பங்களிப்புடன் ரூ.3 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒரு விசைத்தறி குழுமம் அமைக்கப்படும்

தருமபுரி மாவட்டம், அன்னசாகரம் பகுதியில் சுமார் 200 குறு விசைத்தறி நிறுவனங்கள் 1,000 தொழிலாளர்களுடன் இயங்கி வருகின்றன. இதில் 20 நிறுவனங்கள் பயன்பெறும்வகையில் விசைத்தறிகளில் பயன்படுத்தப்படும் மூலப்பொருளான நூலினை sizing *மற்றும்* warping *செய்வதற்கான பொது வசதி மையம், ரூ.2.25 கோடி மாநில அரசு பங்களிப்புடன் ரூ.3 கோடி திட்ட மதிப்பீட்டில் குறுந்தொழில் குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிறுவப்படும்.*

19. கோயம்புத்தூர் நகரத்தில் மாநில அரசு மானியத்துடன் ரூ.7.33 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒரு பாக்கு மட்டை பொருட்கள் குழுமம் அமைக்கப்படும்

பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினைக் குறைத்து, இயற்கையான மாற்றுப் பொருட்களின் உற்பத்தியினை ஊக்குவிக்கும் வகையில் கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் நகரத்தில் சுமார் 2,000 தொழிலாளர்களுடன் இயங்கிவரும் 100 பாக்கு மட்டை பொருட்கள் உற்பத்தி செய்யும் குறுந்தொழில் நிறுவனங்களில் 20-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் ஒரு பொது வசதி மையம், மாநில அரசு மானியத்துடன் ரூ.7.33 கோடி திட்ட மதிப்பீட்டில் குறுந்தொழில் குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிறுவப்படும்.

20. வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், அப்துல்லாபுரத்தில் ரூ.94.39 இலட்சம் மாநில அரசு மானியத்துடன் ரூ.1 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒரு தேன் பதப்படுத்தும் குழுமம் அமைக்கப்படும்.

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், அப்துல்லாபுரத்தில் உள்ள சுமார் 500 விவசாயிகள் பயன்பெறும் வகையில், மாநில அரசின் ரூ.94.39 இலட்சம் மானியத்துடன் ரூ.1 கோடி திட்ட மதிப்பீட்டில் தேன் உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் குழுமம், குறுந்தொழில் குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அமைக்கப்படும்.

21. தென்காசி மாவட்டம், ஆலங்குளம் நகரில் ரூ.1 கோடி மாநில அரசு மானியத்துடன் ரூ.1.15 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒரு மகளிர் எம்பிராய்டரிங் குழுமம் அமைக்கப்படும்

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் நகரில் 50 ஆயத்த ஆடை உற்பத்தி செய்யும் குறு நிறுவனங்கள் சுமார் 200 தொழிலாளர்களுடன் இயங்கி வருகின்றன. இதில் 25 மகளிர் தொழில்முனைவோர் பயன்பெறும் வகையில் ஆலங்குளம் நகரில் ரூ.1 கோடி மாநில அரசு மானியத்துடன் ரூ.1.15 கோடி திட்ட மதிப்பீட்டில் குறுந்தொழில் குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஓர் எம்பிராய்டரிங் குழுமம் அமைக்கப்படும்.

22. வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், கரசமங்கலம் கிராமத்தில் மாநில அரசு மானியத்துடன் ரூ.3.39 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒரு மண்பாண்ட குழுமம் அமைக்கப்படும்

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், கரசமங்கலம் கிராமத்தில் சுமார் 100 தொழில்முனைவோர்கள் மண்பாண்டங்கள் மற்றும் களிமண் பொருட்கள் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் 20 தொழில்முனைவோர்கள் பயன்பெறும் வகையில் மாநில அரசு மானியத்துடன் ரூ.3.39 கோடி திட்ட மதிப்பீட்டில் குறுந்தொழில் குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு மண்பாண்ட குழுமம் அமைக்கப்படும்.

23. மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், செக்கானூரணியில், மரவேலைப்பாடு செய்யும் மகளிர் குறுங்குழுமத்திற்கான பொது வசதி மையம் மாநில அரசு மானியத்துடன் ரூ.4.20 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்

வீட்டு உபயோகத்திற்கான மரச்சாமான்கள் மற்றும் மரப்பொம்மைகள் செய்யும் மகளிர் குறுங்குழுமத்திற்கு நவீன தொழில்நுட்ப இயந்திரங்கள் கொண்டு உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், செக்கானூரணியில் மாநில அரசு மானியத்துடன் ரூ.4.20 கோடி திட்ட மதிப்பீட்டில் குறுங்குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பொது வசதி மையம் அமைக்கப்படும்.

24. திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு வட்டம், பன்றிமலையில் காபித்தூள் தயாரிக்கும் குறுங்குழுமத்திற்கான பொது வசதி மையம் மாநில அரசு மானியத்துடன் ரூ.6.65 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்

காபிக் கொட்டைகள் அதிக அளவில் விளையும் திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு வட்டம், பன்றிமலையில் உள்ள தொழில்முனைவோர்கள் காபிக் கொட்டைகளை அதிநவீன இயந்திரங்கள்மூலம் உலர்த்தவும், பதப்படுத்தவும் மற்றும் தூளாக்குவதற்கும் மாநில அரசு மானியத்துடன் ரூ.6.65 கோடி திட்ட மதிப்பீட்டில் குறுங்குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் காபித்தூள் தயாரிக்கும் குறுங்குழுமத்திற்கான பொது வசதி மையம் அமைக்கப்படும்.

25. தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில், செயற்கைப் பட்டு ஆடை தயாரிக்கும் குறுங்குழுமத்திற்கான பொது வசதி மையம் மாநில அரசு மானியத்துடன் ரூ.7.50 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்

செயற்கைப் பட்டு நூலில் இருந்து குறைந்த விலை பட்டாடைகள் தயாரிக்கும் குறுந்தொழில்முனைவோர்கள் பயன்பெறும் வகையில், தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில், மாநில அரசு மானியத்துடன் ரூ.7.50 கோடி திட்ட மதிப்பீட்டில் குறுங்குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பொது வசதி மையம் அமைக்கப்படும்.

26. சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், S.மாத்தூரில் ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் மகளிர் குறுங்குழுமத்திற்கான பொது வசதி மையம் மாநில அரசு மானியத்துடன் ரூ.1.20 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்

குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் மகளிர் குறுந்தொழில்முனைவோர்கள் பயன்பெறும் வகையில் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், S.மாத்தூரில், மாநில அரசு மானியத்துடன் ரூ.1.20 கோடி திட்ட மதிப்பீட்டில் குறுங்குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பொது வசதி மையம் அமைக்கப்படும்.

27. சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், நெடுமரத்தில் பனை ஓலை பொருட்கள் தயாரிக்கும் குறுங்குழுமத்திற்கான பொது

வசதி மையம் மாநில அரசு மானியத்துடன் ரூ.50 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்

மதிப்புக் கூட்டப்பட்ட பனை ஓலைப் பொருட்கள் தயாரிக்கும் குறுந்தொழில்முனைவோர்கள் பயன்பெறும் வகையில் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், நெடுமரத்தில் மாநில அரசு மானியத்துடன் ரூ.50 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் குறுங்குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பொது வசதி மையம் அமைக்கப்படும்.

பிற்பகல் 2–10

28. கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மரச் சிற்பம் செதுக்கும் கலைஞர்கள் பயனடையும் வகையில் ரூ.50 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் அரசு மானியத்துடன் குறுங்குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (MCDP) ஒரு பொது வசதி மையம் அமைக்கப்படும்

குறுங்குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள மரச் சிற்பம் செதுக்கும் கலைஞர்களுக்கு அவர்களின் செயல்திறனை அதிகரிக்க ரூ.50 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் அரசு மானியத்துடன் நவீன தொழில்நுட்ப இயந்திரங்களைக் கொண்டு ஒரு பொது வசதி மையம் அமைக்கப்படும்.

29. புத்தொழில் செயல்பாடுகளை மாநிலம் முழுவதும் பரவலாக்கும் நோக்கத்தில் சேலம், கடலூர் மற்றும் ஓசூரில் வட்டார புத்தொழில் மையங்கள் அமைக்கப்படும்

2022–2023 ஆம் ஆண்டு நிதிநிலை அறிவிப்பில் தெரிவித்தபடி மதுரை, திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் வட்டார புத்தொழில் மையங்கள் அமைக்கப்பட்டதன் வாயிலாக, அப்பகுதிகளில் புத்தொழில் சார்ந்த விழிப்புணர்வும் செயல்பாடுகளும் அதிகரித்துள்ளன. இதனைத் தொடர்ந்து, வேளாண் தொழில்நுட்ப புத்தொழில்களை வளர்ப்பதற்காக தஞ்சாவூரில் வட்டார புத்தொழில் மையம் அமைக்கப்படும் என இவ்வாண்டு வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. மேலும், சேலம், கடலூர், ஓசூரில் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் வட்டார புத்தொழில் மையங்கள் அமைக்கப்படும்.

30. சென்னை, கிண்டி தொழிற்பேட்டையில் புத்தொழில் (Startup) முனைவோர்கள் தங்களது உற்பத்தி நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும் வகையில் ஒரு புத்தொழில் உற்பத்தி மையம் (Startup manufacturing centre) நிறுவப்படும். இதில் தகுதியானவர்களுக்கு மூன்று வருட காலத்திற்கு வாடகையில் இடம் வழங்கப்படும்

புத்தொழில் (Startup) முனைவோர்களை ஊக்குவிக்கும்பொருட்டு இடத்திற்கான முதலீடு இல்லாமல் உடனடியாக உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக சென்னை, கிண்டி தொழிற்பேட்டையில் கட்டப்படும் அடுக்குமாடித் தொழிற்கூட வளாகத்தில் ஒரு புத்தொழில் உற்பத்தி மையம் (Startup manufacturing centre) நிறுவப்படும். இதில் தகுதியானவர்களுக்கு மூன்று வருட காலத்திற்கு வாடகையில் இடவசதி வழங்கப்படும்.

31. புத்தொழில் நிறுவனங்களுக்கு தேவையான வளங்களை உலகளாவிய அளவில் ஒருங்கிணைக்கும் பொருட்டு துபாயில் "புத்தொழில் ஒருங்கிணைப்பு மையம்" அமைக்கப்படும்

உலக அளவில், தமிழ்நாட்டைச் சேர்ந்த புத்தொழில் நிறுவனங்களுக்கு முதலீடு திரட்டும் வாய்ப்புகளையும், சந்தை வாய்ப்புகளையும் ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன் அயலக வாழ் தமிழர்களின் உதவியுடன் பிற நாடுகளில் புத்தொழில் ஒருங்கிணைப்பு மையங்கள் அமைக்கப்பட உள்ளன. முதல் கட்டமாக துபாயில் இம்மையம் இவ்வாண்டு அமைக்கப்படும்.

32. புத்தொழில் மற்றும் தொழில்முனைவு குறித்த தகவல்களை எளிதாகப் பெற்றுக்கொள்ளும் வகையில் இருமொழி தொலைபேசி சேவை மையம் அமைக்கப்படும்

புத்தொழில் மற்றும் தொழில்முனைவு குறித்த எவ்வித கேள்விகளுக்கும் தொலைபேசி வழியே பதில் அளிக்கும் விதமாக தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பதில் அளிக்கும் குழுவினரைக் கொண்ட இருமொழி தொலைபேசி சேவை மையம் அமைக்கப்படுகின்றது. 155343–என்ற எண்ணுக்கு அழைத்து தங்களுக்கு தேவையான தகவல்களை புத்தொழில்முனைவோர்கள் பெற்றுக்கொள்ளலாம். இந்த முன்னெடுப்பானது புத்தொழில் தொடங்க ஆர்வமாக இருப்பவர்கள், தொடக்க நிலையில் உள்ள புத்தொழில் நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், வழிகாட்டுநர்கள் என அனைவருக்கும் அவர்களது செயல்பாடுகளை எளிதாக முடிக்கவும், அவர்களுக்குத் தேவையான தகவல்களைப் பெறுவதற்கும் பேருதவியாக இருக்கும்.

33. தமிழ்நாட்டிலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனப் பொருட்கள் மற்றும் சேவைகளின் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைப்படுத்துதலை மேம்படுத்துவதற்காக மெய்நிகர் கண்காட்சியகம் (virtual pavilion) உருவாக்கப்படும்

தமிழ்நாட்டிலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்கள் இருப்பிடங்களிலிருந்தோ அல்லது அலுவலகங்களிலிருந்தோ தேசிய மற்றும் சர்வதேச அளவில் நடைபெறும் வாங்குவோர், விற்போர் சந்தை பரிவர்த்தனைகளில் எளிதாக வணிகம் புரியும் அனுபவத்தினை வழங்க ஏதுவாக FaMeTN மூலமாக மெய்நிகர் கண்காட்சியகம் அமைக்கப்படும். தமிழ்நாட்டில் நடைபெறும் அனைத்து கண்காட்சிகளோடு இம்மெய்நிகர் கண்காட்சியகமும் சந்தை சேவையினைக் கூடுதலாக வழங்கும். இம்முன்னணி தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்திக் கொள்வதன்மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் முன்னேற்றம் அடையும். முதற்கட்டமாக, தென்னை நார் பொருட்கள் இம்மெய்நிகர் கண்காட்சி தளத்தில் கொண்டு வரப்படும்.

34. தென்னை நார் தொழில் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் போட்டியினைக் கருத்தில்கொண்டு நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியினை ஊக்குவிக்கும் வகையில், தென்னை நார் தொழில் கொள்கை (Coir policy) உருவாக்கப்படும்

தமிழ்நாடு, தென்னை நார் தொழிலில் முன்னணியில் உள்ள மாநிலம். இத்தொழில் கிராமப் பொருளாதாரத்திற்குப் பங்களிப்பதோடு, மகளிர் உட்பட சமுதாயத்தில் பின்தங்கிய பலருக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது. மாற்றுப் பொருட்களின் போட்டி, சந்தை வாய்ப்பின்மை, தரக் கட்டுப்பாடு தேவை, உட்கட்டமைப்பு தேவை, தொழில்நுட்பம் மற்றும் மதிப்புக் கூட்டுதல் இன்மை, சுற்றுச்சூழல் பாதிக்காமல் இருக்க தேவையான நடவடிக்கைகள் போன்ற பல்வேறு சவால்களை எதிர்கொள்ளும் வகையில் தென்னை நார் தொழில் கொள்கையினை உருவாக்கி நீடித்த நிலையான அனைவரையும் உள்ளடக்கிய தென்னை நார் தொழில் வளர்ச்சி உறுதி செய்யப்படும்.

35. தென்னை நார் சார்ந்த உற்பத்திப் பொருட்களின் தரத்தினை உறுதி செய்ய கோயம்புத்தூரில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் பரிசோதனைக் கூடம் அமைக்கப்படும்

தென்னை நார் தொழில் நிறுவனங்களில் இருந்து உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தைக்கு, தரமான பொருட்கள் தடையின்றி வழங்கப்படுவதை உறுதி செய்ய ரூ.4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோயம்புத்தூரில் பரிசோதனைக் கூடம் அமைக்கப்படும். மதிப்புக் கூட்டப்பட்ட தென்னை நார் மற்றும் துகள் பொருட்கள், தரைவிரிப்பு, கால்மிதி, ஜியோ-டெக்ஸ்டைல்ஸ் மற்றும் தென்னை நார் கலவைப் பொருட்கள் போன்றவற்றை பரிசோதிப்பதன்மூலம் தமிழ்நாட்டில் உள்ள தென்னை நார் தொழிற்சாலைகளுக்கு தர உத்தரவாதம், மேம்படுத்தப்பட்ட தயாரிப்பு செயல்திறன், மேம்பட்ட முத்திரை நற்பெயர் (Brand) புதுமைப் பொருட்கள் கண்டுபிடிப்பதற்கான ஊக்கம், செயல்திறன் மற்றும் அதிகரித்த ஏற்றுமதி போன்ற பல நன்மைகளை அளிக்க இயலும்.

36. தென்னை நார் பொருட்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்த இயற்கைப் பொருட்கள் என உறுதியளிக்கும் வண்ணம் தென்னை நார் சார் நிறுவனங்கள், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு இணங்க உலர்த்தும் கருவிகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின்மீது செய்யப்படும் முதலீடுக்கு மூலதன மானியத் திட்டத்தின்கீழ் 25 சதவிகிதம் மானிய உதவி வழங்கப்படும்

தென்னை நார் சார் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு ஏற்ப, இயந்திரங்கள், உலர்த்திகள் மற்றும் உபகரணங்களில் செய்யப்படும் முதலீட்டிற்கு மூலதன மானியத் திட்டத்தின்கீழ் 25 சதவிகிதம் மானியம் வழங்கப்படும். இது தென்னை நார் பொருட்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்த இயற்கைப் பொருட்கள் என உறுதிப்படுத்த உதவும்.

37. தமிழ்நாட்டின் சுற்றுச்சூழலுக்கும் தென்னை நார் சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கும் பயனளிக்கும் வகையில் வன நாற்றாங்கால் பிளாஸ்டிக் பைகளுக்கு மாற்றாக ரூ.16 இலட்சம் மதிப்பிலான ஒரு இலட்சம் தென்னை நார் வளர்ப்பு பைகள் பயன்படுத்தப்படும்

சுற்றுச்சூழலுக்கு உகந்த நடைமுறைகளை நோக்கி பயணிக்கவும், வன நாற்றாங்கால்களில் பிளாஸ்டிக் பைகளின் பயன்பாட்டை படிப்படியாகக் குறைக்கும் வகையிலும் முதற்கட்டமாக பிளாஸ்டிக்

பைகளுக்கு மாற்றாக ரூ.16 இலட்சம் மதிப்பில் ஒரு இலட்சம் வன நாற்றாங்கால் தென்னை நார் சிறுதொட்டிகளில் தென்னை நார் துகள் நிரப்பப்பட்டு வனத் துறைமூலம் மரக்கன்றுகள் வளர்க்கப்படும். இவ்வாறு நடவு செய்யும்போது மரக்கன்றுகளின் வேர்கள் நீரை எளிதாக உறிஞ்சுவதோடு, தக்க வைத்தும் கொள்கின்றன.

38. காலநிலை மாற்றத்தைத் தணிக்க உதவும் விதமாக மின்சாரம் மற்றும் எரிபொருள் சேமிக்க உதவும் ஆற்றல் தணிக்கை (Energy Audit) திட்டத்தின்கீழ் ஆற்றல் சேமிப்பிற்கான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு வழங்கப்படும் மானியம் பெறுவதற்கான குறைந்தபட்ச ஆற்றல் சேமிப்பு நிபந்தனை 10 விழுக்காட்டில் இருந்து 5 விழுக்காடாகக் குறைக்கப்படும்

ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துதல் (PEACE) திட்டத்தின்கீழ் ஆற்றல் தணிக்கையின் பரிந்துரையைச் செயல்படுத்தும்போது கார்பன்-டை-ஆக்சைடு வெளியிடுவது மற்றும் உற்பத்திச் செலவு குறைகிறது. தற்போது குறைந்தபட்சம் 10 விழுக்காடு சேமிப்பு என்பதை நடைமுறையில் எய்த முடியாத காரணத்தினால் பல குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களால் இத்திட்டத்தினைப் பயன்படுத்திக்கொள்ள இயலவில்லை. எனவே, குறைந்தபட்ச சேமிப்பு 10 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாகக் குறைக்கப்படும்.

39. தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின்கீழ் உள்ள தொழில்முனைவோர்கள் மற்றும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர்களுக்கு, அனைத்து மாவட்டங்களிலும் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சிகள், 10,000 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் அளிக்கப்படும்

தமிழ்நாட்டில் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம்மூலம் புத்தாக்கச் சூழலை மேம்படுத்தவும், வலுப்படுத்தவும், அனைத்து மாவட்டங்களிலும் 18 வயதிற்கு மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின்கீழ் உள்ள தொழில்முனைவோர்கள் மற்றும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர்களுக்கு வணிக யோசனை, வணிகத் திட்டம், சந்தைப்படுத்துதல், நிதி இணைப்பு போன்ற பயிற்சிகள் அளிக்கப்படும். இந்நிதியாண்டில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் 10,000 தொழில்முனைவோர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

40. தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் பெண் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்க மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 12,000 பெண் தொழில்முனைவோர்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி ரூ.1.56 கோடி மதிப்பீட்டில் அளிக்கப்படும்

தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் பெண் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்க பயிற்சிகள் வழங்கி வருகிறது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்துடன் இணைந்து மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 12,000 பெண் தொழில்முனைவோர்களுக்கு 38 மாவட்டங்களில் 2023–2024 ஆம் ஆண்டில் ரூ.1.56 கோடி மதிப்பீட்டில் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படும். இப்பயிற்சியின் நோக்கமானது, சுய உதவிக் குழு பெண் தொழில்முனைவோர்களை வணிகத்தில் மேம்பாடு அடையச் செய்து, அவர்களைச் சிறந்த பெண் தொழில்முனைவோராக உருவாக்குவதாகும்.

41. குறு, சிறு தொழில் நிறுவனங்கள்—குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயலாக்கத்திலுள்ள குழுமங்களை வலுப்படுத்தும் வகையில் 10 குழுமங்களைச் சார்ந்த 300 உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் தொழில் பிரிவு சார்ந்த பயிற்சித் திட்டம் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் அளிக்கப்படும்

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம்மூலம் குழும உறுப்பினர்களின் திறனை வலுப்படுத்தவும், மேம்படுத்தவும், தேவை அடிப்படையிலான சந்தைப்படுத்தல் வழிகள், வணிகத் திட்டம் பற்றிய வழிகாட்டுதல்கள் மற்றும் நிறுவன செயல்பாடுகள் போன்ற பயிற்சிகள் தொழில் பிரிவு சார்ந்து வழங்கப்படும். இத்திட்டத்தின்மூலம் 2023–2024 ஆம் நிதியாண்டில், ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் குறு, சிறு தொழில் நிறுவனங்கள் குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தற்போது செயலாக்கத்திலுள்ள கம்பளி குழுமம், ஆயத்த ஆடை குழுமம், தீப்பெட்டிக் குழுமம், நூலாடை முறுக்குதல் மற்றும் குறுக்குதல் குழுமம், தங்க நகை குழுமம், ஸ்டைன்லெஸ் ஸ்டீல் பாத்திரக் குழுமம், ஜவ்வரிசி குழுமம், அறைக்கலன்கள் குழுமம், கயிறு குழுமம், விவசாய உபகரணங்கள் கட்டமைப்பு குழுமம் ஆகிய 10 குழுமங்களைச் சேர்ந்த 300 உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

42. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு நிதியளிப்பதற்காக பிரத்யேகமாக ஓசூரில் புதிய TAICO வங்கி கிளை திறக்கப்படும்

தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி (TAICO வங்கி) தற்போது தமிழ்நாடு முழுவதும் 47 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது. அதிக எண்ணிக்கையிலான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களைக் கொண்ட தமிழ்நாட்டின் முக்கிய மற்றும் வேகமாக வளரும் தொழில் துறை மையமாக ஓசூர் இருப்பதால், TAICO வங்கியின் கிளை ஓசூரில் திறக்கப்படும். இதற்கான நிதி TAICO வங்கியின் சொந்த நிதியில் இருந்து செலவு செய்யப்படும்.

43. மதுரை, சிவகாசி, வியாசர்பாடி, திருப்பூர், சேப்பாக்கம் மற்றும் சேலத்திலுள்ள TAICO வங்கிக் கிளைகளில் தங்க நகை சோதனைக்கான காரட் மீட்டர்கள் ரூ.30 இலட்சம் செலவில் நிறுவப்படும்

மதுரை, சிவகாசி, வியாசர்பாடி, திருப்பூர், சேப்பாக்கம் மற்றும் சேலம் ஆகிய 6 இடங்களிலுள்ள TAICO வங்கிக் கிளைகளில் தங்க நகை சோதனைக்கான காரட் மீட்டர்கள் ரூ.30 இலட்சம் செலவில் நிறுவப்படும். இத்தொகை TAICO வங்கியின் சொந்த நிதியில் இருந்து செலவு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தந்துள்ள வெட்டுத் தீர்மானங்களை, திரும்பப் பெற்றுக்கொண்டு, என்னுடைய மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தரும்படி கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பாரும், மிக்காரும் இல்லாத தமிழ் சமூகத்தின் தலைமகன், எங்கள் ஆருயிர் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் துயிலும் இடம் நோக்கி, என் முதல் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தொழில் துறையினுடைய வளர்ச்சிக்கு, ஒல்லும் வகையெல்லாம் உறுதுணையாக இருந்து, ஒவ்வொரு அடியிலும் எங்களை வழிநடத்தி, கடந்த இரண்டு ஆண்டுகளில் தான் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளிலேயே, அதிக அளவு நிகழ்ச்சி, 'நான் தொழில் துறை நிகழ்ச்சிகளில்தான் கலந்து கொண்டிருக்கிறேன்' என்று சொல்லி, எங்களையெல்லாம் பெருமைக்கு ஆளாக்கியிருக்கக்கூடியவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துறையை இந்த அளவிற்கு வழிநடத்தி, தமிழ்நாட்டின் தொழில் துறையை, இந்தியாவினுடைய மிகச் சிறந்த, சாலச் சிறந்த தொழில் துறையாக, இன்றைக்கு மாற்றியிருக்கக்கூடிய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, என்னுடைய பணிவான, நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2–15

பேரவையை மிகச் சிறப்பாக நடத்தக்கூடிய பேரவைத் தலைவராகிய தங்களுக்கும், மாண்புமிகு அவை முன்னவர் அண்ணன் அவர்கள் உள்ளிட்ட மூத்த அமைச்சர் பெருமக்களுக்கும், தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் மகிழத்தக்க வகையில், எங்களோடு அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கக்கூடிய அன்பிற்குரிய தம்பி திரு. உதயநிதி அவர்கள் உள்ளிட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு அரசுத் தலைமைக் கொறடா அவர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் உள்ளிட்ட சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும், நான் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் இந்தப் பேரவையிலே இடம்பெறுவதற்கான வாய்ப்பினை எனக்கு வழங்கியிருக்கக்கூடிய திருச்சுழி சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர் அண்ணன் திரு. தங்கமணி அவர்களில் துவங்கி, திரு. இரா. இராஜேந்திரன், திரு. அ. வெற்றிஅழகன், திரு. S. சதாசிவம், திரு. சபா. இராசேந்திரன், திரு. வி.பி. நாகைமாலி, திரு. கு. சின்னப்பா,

திரு. கே.ஆர். ஜெயராம் உள்ளிட்டவர்கள் தங்களுடைய மேலான கருத்துகளையெல்லாம் இங்கே எடுத்துரைத்திருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் நான் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, முன்னாள் அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. தங்கமணி அவர்கள் பேசுகிறபோது, பல்வேறு பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி, அவற்றுக்கான விளக்கங்களைக் கோரியிருக்கிறார்கள். நில வழிகாட்டி மதிப்பைப் பற்றி குறிப்பிட்டு, 'அது தொழில் முதலீடுகளைப் பாதிக்கும்' என்று சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக, நம்முடைய சந்தை மதிப்பிற்கும், வழிகாட்டி மதிப்பிற்கும் இருக்கக்கூடிய வித்தியாசத்தைப் பார்த்தோமென்றால், நிலத்தை வாங்கக்கூடியவர்கள் சந்தை மதிப்பில்தான் வாங்குகிறார்கள். ஆனால், சந்தை மதிப்பைக் காட்டிலும். வழிகாட்டி மதிப்பு குறைவாக இருக்கக்கூடிய காரணத்தால், நிலம் கையகப்படுத்துகிறபோது, பல்வேறு பிரச்சினைகள் இதிலே வருகின்றன. எனவேதான், இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, சீரானதொரு நடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டுமென்ற உணர்வோடுதான், அத்தகைய நடவடிக்கைகளை பத்திரப் பதிவுத் துறை மேற்கொண்டிருக்கிறது என்பதை அத்துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்த அவையில் தெரிவித்திருக்கிறார்கள்.

இருந்தாலும்கூட, அதற்கான Registration fee 2 விழுக்காடு குறைத்திருக்கிறார்கள் என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 'மின் கட்டண உயர்வும் தொழில் முதலீடுகளைப் பாதிக்கும்' என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தொழிற்சாலைகளுக்கான மின் கட்டணம் ரூ.6.35/–லிருந்து ரூ.6.75/– ஆக மட்டும்தான் கூடியிருக்கிறது. எனவே, அது ஒரு பெரிய பாதிப்பாக இருக்காது. ஆனால், கடந்த காலத்தில் பார்த்தால், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மின் கட்டண உயர்வு வருகிறபோது, பல தொழில்கள் TANGEDCO மூலமாகப் பெற்ற மின் கொள்முதலைக் குறைத்துக்கொள்ளக்கூடிய அளவிற்குக்கூட மின் கட்டணம் உயர்ந்திருக்கிறது என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதைப்போல, ஒற்றைச் சாளர முறை, Single Window system-ல் பல இடங்களில் பல இடர்ப்பாடுகள் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவையாவும், என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. ஆனால், நான் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உறுதியாகச் சொல்வேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'ஒற்றைச் சாளர முறையில் எந்த இடத்திலும், தாமதம் ஏற்படக்கூடாது' என்று உறுதியாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின்கீழ் 100 சேவைகளை அதிகமாகக் கொடுக்கின்ற அளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே திட்டத்தைத் துவக்கி வைத்திருக்கிறார்கள். எனவே, எந்தக் காலத்திலும், அத்தகைய தாமதங்கள் ஏற்படாதவாறு தொழில் துறை நிச்சயமாக அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Amway பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். Amway-யைப் பொறுத்தவரையில் E.D. அவர்கள்மீது எடுத்திருக்கின்ற நடவடிக்கையால் அதன் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். ஆனால், நிலக்கோட்டையில் அந்தத் தொழிற்சாலையின் உற்பத்தி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தால், அதில் வேறுவிதமான பிரச்சினைகள் ஏதும் இப்போதைக்கு இல்லை.

அதுபோல, 'Fortune 500 Companies இருக்கின்றனவா?' என்று என்னிடத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும், 24 Fortune 500 companies மூலம் ரூ.75,000 கோடி அளவிற்கு முதலீடுகள் தமிழ்நாட்டில் பெறப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்களுக்குப் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன். நான் இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒருமுறை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்து பேசுகிறபோது, 'Lucas TVS, Fortune 500 Companies இருக்கிறதா?' என்று நான் அவர்களிடத்திலே கேட்டபோது, அன்றைக்கு முதலமைச்சராக இருந்த அம்மையார் அவர்களே எழுந்து, அதற்கான பதிலைச் சொன்ன காட்சியை இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

அதைப்போல, ஆவடியில் இருக்கக்கூடிய TIDEL Park, 3-வது TIDEL Park என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 3-வதாக இருந்தாலும் சரி;

முதலாம் குலோத்துங்க சோழனாக இருந்தால் என்ன? மூன்றாம் குலோத்துங்க சோழனாக இருந்தால் என்ன? TIDEL Park-ஐ நாங்கள் சிறப்பான முறையில் அங்கே உருவாக்குவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், அதில் பாதி கட்டடப் பணிகளை முடித்துவிட்டு, அப்படியே விட்டுவிட்டார்கள். அதனை முழுமையாகக் கட்டி முடித்து, பயன்பாட்டுக்குக் கொண்டு வரவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இருப்பினும், மூன்றாவது பெரிய நகரமான மதுரையிலே அது அமைக்கப்படும் என்றுதான் சொல்லியிருக்கிறோம். எனவே, ஆவடி TIDEL Park நிச்சயமாக அமைக்கப்படும்.

பிற்பகல் 2–20

Neo TIDEL Parks-ஐப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கான தேவைகளைக் கேட்டிருக்கிறார்கள். பெருந்தொற்று, பொது முடக்கக் காலத்திற்குப் பிறகு பார்த்தால், பலர் எங்கிருந்து login செய்திருக்கிறார்கள் என்று பார்த்தால், work from home முறையில் தென் மாவட்டங்களிலிருந்துதான் system-ல் login செய்து பணியாற்றியிருக்கிறார்கள். இப்போது சிறு நகரங்கள், Tier II cities-ஐ நோக்கி இத்தகைய companies எல்லாம் வரக்கூடிய நிலைமையிருக்கிறது. அனைவரும் சென்னைக்கு வரவேண்டியதில்லை. இரண்டாம் நிலை நகரங்களை நோக்கி இந்தத் தொழில்கள் move ஆகக்கூடிய ஒரு நிலைமை இன்றைக்கு இருக்கக்கூடிய காரணத்தினால்தான், பல இடங்களில், இரண்டாம் நிலை நகரங்களில் இந்த Neo Tidel Parks உருவாக்கப்படுகின்றன என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அதேபோன்று, பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்–– Common Effluent Treatment Plants குறித்து கேட்டிருக்கிறீர்கள். நம்முடைய E. குமாரலிங்காபுரத்திலும் ஒரு சுத்திகரிப்பு நிலையத்தினை SIPCOT மூலமாக அமைத்திருக்கிறோம். அந்த முறை வரவேற்கத்தக்க முறை. தொழில் செய்யக்கூடியவர்கள் அந்தத் தொழில் செய்வதற்கு முன்வந்தார்களேயானால், நிச்சயமாக அரசு அதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சதாசிவம் அவர்கள் பேசியபோதுகூட, பின்தங்கிய மாவட்டங்களில் தொழிலுக்கு

முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அனைத்து பின்தங்கிய மாவட்டங்களுக்கும் வழங்கும்போது, நில மானியங்களாக இருந்தாலும் சரி, capital subsidy ஆக இருந்தாலும் சரி, மானிய அளவில் நில ஒதுக்கீடுகள் வழங்கப்படுகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோன்று, சேலம் மாவட்டத்திலும்கூட, மிக விரைவில் Tidel Park அமைக்கக்கூடிய பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இப்போது அங்கு SAIL plant-ஐ அவர்கள் அமைத்திருக்கிறார்கள். அங்கிருந்து 1,000 ஏக்கர் நிலத்தினை SIPCOT-க்காக எடுப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அது வந்தாலும், சேலம் மாவட்டம் மிகப் பெரிய அளவில் வளரும்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. நாகைமாலி அவர்கள், தமிழ் அகராதி குறித்து குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நமது செந்தமிழ் சொற்பிறப்பியல் அகர முதலி திட்டத்தில் தமிழ் அகராதிகள் வந்துகொண்டிருக்கின்றன. அனைவரும் அவற்றை நிச்சயம் பயன்படுத்திக் கொள்ளலாம். நீங்கள் சொன்னதுபோன்று, கலைத் துறை மற்றும் பண்பாட்டுத் துறைகள் குறித்த கோரிக்கைகளையும் அரசு கவனத்தில்கொள்ளும் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னப்பா அவர்கள், அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு நிலம் வழங்கியவர்களுக்கெல்லாம் இழப்பீடுகளை வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அரசு நிச்சயமாக, அதற்கு உறுதியாக ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு இயற்கையாகவே தொழில் வளம் நிறைந்திருக்கக்கூடிய மாநிலம் ஆகும். இந்தியாவினுடைய இரண்டாவது பெரிய பொருளாதாரம் தமிழ்நாடு ஆகும். Second largest economy in the country என்று சொன்னால், அது தமிழ்நாடாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தாலும்கூட, கடந்த இரண்டாண்டுகளில் நாடு ஒரு பொதுவான நெருக்கடியில் இருந்தது. ஒருபுறம், கொரோனா பெருந்தொற்றால் வந்திருக்கக் கூடிய முடக்கம், மறுபுறம், மேற்கு நாடுகளில் ஏற்பட்டிருக்கக்கூடிய யுத்த சூழ்நிலை. சீனாவில்

இருக்கக்கூடிய ஒரு சுமூகமற்ற சூழ்நிலை. நமக்கிருக்கக்கூடிய நிதி நெருக்கடிகள். ஆக, இத்தனை நெருக்கடியான சூழ்நிலைகள் இருக்கின்றபோது, பொதுவாக, உலக முதலீட்டுச் சூழ்நிலையைப் பாதிக்கக் கூடிய காரணிகள் இருந்தாலும்கூட, தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், இந்தத் தடைக்கற்களெல்லாம் படிக்கற்களாக மாற்றப்பட்டன; தமிழ்நாடு எப்போதும் ஒரு positive economy, growing economy. *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த economy என்பது தொடர்ந்து வளர்ந்துவரக்கூடிய ஒரு பொருளாதாரம் என்பதை நிறுவிய பெருமை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது என்பதை நான் உங்களிடத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

குறிப்பாக, சீனாவிலிருந்து இப்போது வெளியே வரக்கூடிய முதலீடுகளை இந்தியாவிற்கு ஈர்க்கக்கூடிய நிலையில், இந்தியாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு ஈர்க்கக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலையில், அவற்றிற்கான முனைப்பான நடவடிக்கைகளில் நாமும் ஈடுபட்டிருக்கிறோம். இந்த ஒட்டுமொத்த நடவடிக்கைகளின் காரணமாக, நம்முடைய மொத்த உள்நாட்டு உற்பத்தி–GSDP 13.74 சதவிகிதம் நடப்பு நிலையில் நம்முடைய தமிழ்நாடு வளர்ந்துவரக்கூடிய பொருளாதாரமாக உயர்ந்திருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், 11.04 சதவிகிதம் மதிப்புக் கூட்டலை தமிழ்நாடு செய்திருக்கிறது. நம்முடைய contribution அடிப்படையில், value addition, 11.04 சதவிகிதம் இன்றைக்கு இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நாம் அளித்திருக்கிறோம். அதேபோன்று, IIIP தொழில் உற்பத்தியைப் பொறுத்தவரையில், கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து, அக்டோபர் மாதம் வரையிலான காலகட்டத்தில், 17.7 சதவிகித அளவில், தமிழ்நாடு வளர்ந்திருக்கிறது. அகில இந்திய அளவில் பார்த்தால், 5.3 சதவிகிதமாகத்தான் இந்தத் தொழில் உற்பத்திக் குறியீடு இருக்கிறது. தமிழ்நாட்டில் 17.7 சதவிகிதம் என்றால், இந்திய வளர்ச்சியைவிட ஏறத்தாழ 3 மடங்கு தமிழ்நாடு வளர்ந்திருக்கிறதென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, உற்பத்தியைப் பொறுத்தவரையில், உள்நாட்டு உற்பத்தியில், உற்பத்தித் துறையின் மதிப்பு 30 சதவிகிதமாக இருக்க வேண்டும். அதைத்தான் ஓர் இலக்காக இந்த அரசு எடுத்துக்கொள்ள முடியும். தமிழ்நாட்டின் உற்பத்தித் துறையின்

பங்களிப்பில், தற்போது 24.47 சதவிகிதத்திற்கு நாம் வந்திருக்கிறோம். நமக்கிருக்கக்கூடிய இத்தனைப் பிரச்சினைகளுக்கு நடுவிலும், தமிழ்நாடு உற்பத்தித் துறையில் 24.47 சதவிகிதம் வந்திருக்கிறது என்பது மகத்தான சாதனை. 30 சதவிகித இலக்கை எட்டக்கூடிய அளவிற்கு நாம் முன்னேறிக்கொண்டிருக்கிறோம் என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2030 ஆம் ஆண்டிற்குள் One trillion US dollar economy-ஆக பொருளாதாரத்தில் உயர வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்திருப்பதை நாம் அனைவரும் அறிவோம். இந்த இலக்கை அடைய வேண்டுமென்றால், 2030 ஆம் ஆண்டுக்குள், ஏறத்தாழ 23 இலட்சம் கோடி ரூபாய் முதலீடுகளை நாம் பெற வேண்டும். அதேபோல, 45 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகளை நாம் உருவாக்கிட வேண்டும். எனவேதான், நாம் ஒவ்வொரு முறையும் பல தொழில் முதலீடுகளை ஈர்க்கக்கூடிய இந்தத் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம்.

பிற்பகல் 2–25

உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், தொழில் முதலீட்டாளர் மாநாடு ஒன்று இருந்தாலும்கூட, ஒவ்வொரு காலகட்டத்திலும் Investment conclaves என்று சொல்லக்கூடிய தொழில் முதலீட்டாளர்களுடைய கூட்டங்களை நடத்தி, தொழில் முதலீட்டாளர்களுடைய முதல் முகவரி தமிழ்நாடு என்று சொல்லக்கூடிய அளவிலே தொடர்ச்சியாக 2 ஆண்டுகளிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முயற்சிகளை எடுத்திருக்கிறார்கள். நாம் அந்த இலக்கை அடைய வேண்டுமென்றால், Capital intensive and high technology industry என்று சொல்லக்கூடிய அதிகமான தொழில் முதலீடுகள் நமக்கு இருக்கக்கூடிய உயர் தொழில்நுட்பம் சார்ந்திருக்கக்கூடிய, பெருமளவிலே முதலீடு செய்யக்கூடிய தொழில்கள் நமக்கு வர வேண்டும். அதைப்போல நிறைய பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய Employment Intensive தொழில்கள் வர வேண்டுமென்று நாங்கள் மிக முக்கியமாக அந்தப் பணிகளைச் செய்யக்கூடிய காரணத்தினால்தான், தமிழ்நாட்டிற்குத் தொடர்ந்து தொழில் முதலீடுகள் வந்துகொண்டிருக்கின்றன. எனவேதான் நம்முடைய Ease of doing business நாம் செய்யக்கூடிய

தொழிலை எளிதாக வணிகம் செய்யக்கூடிய வகையில் 14 ஆம் இடத்திலேயிருந்த நாம் 3 ஆம் இடத்திற்கு முன்னேறியதோடு, தொடர்ந்து அந்த இடத்தை தக்க வைத்துக்கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

குறிப்பாக, ஏற்றுமதி இதில் மிக முக்கியமான ஒரு காரணி. அதில் தமிழ்நாடு 8.96 சதவிகிதம் பங்கு வகித்து, இந்திய அளவில் நாம் 3-வது இடத்திலே இருக்கிறோம். Foreign direct investments- அந்நிய நேரடி முதலீடுகள் மிக முக்கியமானவை. இது கடந்த ஏப்ரல் 21 முதல் ஏறத்தாழ 4,567 million dollar முதலீடுகளை ஏற்று, தமிழ்நாடு இந்தியாவினுடைய முதல் 5 மாநிலங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது என்பதை மிகப் பெரிய பெருமையாக நான் தெரிவிக்க விரும்புகிறேன். 2 ஆண்டுகளிலே, 2 இலட்சத்து 70 ஆயிரத்து 20 கோடி ரூபாய் முதலீடு, 3 இலட்சத்து 90 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் 221 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதிலே, 151 திட்டங்களில், இப்போது கிட்டத்தட்ட 63 சதவிகிதம் பல்வேறு நிலைகளில் இருக்கின்றன. இதர திட்டங்களெல்லாம் ஆரம்பக்கட்ட நிலையிலேயே இருக்கின்றன. இவற்றையெல்லாம் ஒருங்கிணைக்கக்கூடிய வகையிலே 8 தொழில் கொள்கைகளை நாம் வெளியிட்டிருக்கிறோம். மிக முக்கியமானவை தொழில் கொள்கைகள். அதில், சிறப்பான கொள்கைகளாக, தமிழ்நாடு உயிர் அறிவியல் மேம்பாட்டுக் கொள்கை, தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை, தமிழ்நாடு காலணி மற்றும் தோல்பொருட்கள் கொள்கை, தமிழ்நாடு மின் வாகனக் கொள்கை, தமிழ்நாடு வான்வழி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை, தமிழ்நாடு எத்தனால் கலவைக் கொள்கை ஆகியன குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவை என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த முதலீடுகளிலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, ஏறத்தாழ 47 சதவிகித முதலீடுகள் பின்தங்கியிருக்கக்கூடிய 25 மாவட்டங்களிலே வந்திருக்கின்றன. எல்லோரும், 'சென்னையைச் சுற்றித்தான் வருகிறது, ஓசூரைச் சுற்றித்தான் வருகிறது' என்று சொல்கிறார்கள். ஆனால், அவ்வாறல்ல. பின்தங்கியிருக்கக்கூடிய வேறு பல மாவட்டங்களிலும் இந்த முதலீடுகள் வந்திருக்கின்றன. வேலைவாய்ப்புகளைப் பொறுத்தமட்டில், 37 சதவிகிதத்தை இந்த மாவட்டங்களிலே

உருவாக்க நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். முதலீடுகளை ஈர்ப்பதிலே தமிழ்நாடு அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் காட்டக்கூடிய பல்வேறு நடவடிக்கைகள்தான், இதற்குக் காரணமாக அமைந்திருக்கின்றன. இதன் காரணமாக, தமிழ்நாடு இந்தியாவினுடைய மின் வாகனத் தலைநகராக உருவாகிறது. ஒரு காலத்தில் இந்தியாவினுடைய Detroit என்று அழைக்கக்கூடிய அளவிற்கு சென்னை மாநகரம் விளங்கியது என்றால், இன்றைக்கு ஒட்டுமொத்தத் தமிழ்நாடும், இந்தியாவினுடைய மின் வாகன தலைநகராக மாறியிருக்கக்கூடிய பெருமையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய ஆட்சி உருவாக்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கெல்லாம் சிகரம் வைத்ததைப் போலத்தான், இங்கே அனைவரும் சுட்டிக்காட்டியதைப்போல, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை வரக்கூடிய ஜனவரி மாதம் 10 மற்றும் 11 ஆம் தேதிகளிலே சென்னையிலே நடத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். உலகமெங்கும் இருக்கக்கூடிய பல்வேறு முன்னணி பன்னாட்டு நிறுவனங்கள் இந்த மாநாட்டிலே கலந்துகொண்டு, தொழில் முதலீட்டிற்கான வாய்ப்புகளை, நாம் உருவாக்குவதற்கு துணை நிற்க இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில் முதலீடுகளை ஈர்க்கக்கூடிய நடவடிக்கைகள் ஒருபுறம் இருந்தாலும்கூட, அந்த தொழில் முதலீடுகள் வருகிறபோது அவர்களுக்கு நிலம் கொடுப்பது மிக முக்கியமான ஒன்று. கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் நம்முடைய SIPCOT நிறுவனத்தின் மூலமாக 4 புதிய தொழிற்பூங்காக்கள் உருவாக்கப்பட்டதன் காரணமாக, SIPCOT பூங்காக்களினுடைய எண்ணிக்கை இப்போது 28 ஆக உயர்ந்திருக்கிறது. ஏறத்தாழ 45 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நாம் SIPCOT மூலமாக ஒரு நில வங்கியை உருவாக்கினால்தான் தொழில் முதலீடுகளுக்கேற்ப நாம் அவர்களுக்கு நிலத்தைத் தர முடியும் என்கின்ற வகையில், ஓர் இலக்காக அந்தப் பணிகளை நாம் செய்திருக்கிறோம்.

பிற்பகல் 2–30

இந்த ஆண்டு நாம் புதிதாக 7 தொழிற்பூங்காக்களை சிப்காட் மூலமாக உருவாக்கயிருக்கிறோம். குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இருக்கக்கூடிய

வேலூர் மாவட்டத்தில், அவருடைய காட்பாடி தொகுதியில், TEL நிறுவனத்திற்கு முன்னால் இருக்கக்கூடிய அந்த நிலத்தில், சிப்காட் தொழிற்பூங்காவை நிச்சயமாக அரசு இந்த ஆண்டு உருவாக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் அறிவீர்கள், விருதுநகர் மாவட்டத்தில் இருக்கிற E. குமாரலிங்காபுரத்தில் ஒரு மாபெரும் ஜவுளிப் பூங்காவை PM MITRA திட்டத்தின்கீழ் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு ஒன்றிய வர்த்தகத் துறை அமைச்சர் மதிப்பிற்குரிய பியூஷ் கோயல் அவர்களும் கடந்த 22–3–2023 அன்று துவங்கி வைத்தார்கள்.

அதைப்போல, இங்கே சிப்காட்டை பொறுத்தமட்டில் நிலம் எடுப்பதிலே இருக்கக்கூடிய பல்வேறு பிரச்சினைகளை நாம் தொடர்ந்து இந்த அவையிலே விவாதித்திருக்கிறோம். குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு வேப்பனஹள்ளி சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அண்ணன் திரு. முனுசாமி அவர்கள் அந்தப் பிரச்சினை குறித்து தொடர்ச்சியாக பேசுகிறபோதும், இந்தமுறை அவர் நிதிநிலை விவாதத்திலே பேசுகிறபோதும், இந்தத் தொழிற்சாலைகளையெல்லாம் தருமபுரி பக்கத்திலே நீங்கள் கொண்டுபோனால், இந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய தொழில் வளர்ச்சி அங்கேயும் வரும், இங்கிருக்கக்கூடிய விவசாய நிலங்கள் பாதுகாக்கப்படும் என்ற ஒரு கருத்தை அவர்கள் சொன்னார்கள். அதேபோல, நம்முடைய மரியாதைக்குரிய முன்னாள் அமைச்சர் அண்ணன் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள், ‘தருமபுரி மாவட்டத்திலே நிறைய தொழில்களைக் கொண்டு வந்து, அங்கே சேருங்கள்’ என்று சொன்னார்கள். இதுதான் win–win situation என்று சொல்வது. நீங்கள், ‘இந்தத் தொழில்களை எல்லாம் தருமபுரி மாவட்டத்திற்குக் கொண்டு செல்லுங்கள்’ என்று சொல்கிறீர்கள். வரக்கூடிய தொழில்களையெல்லாம் தருமபுரி மாவட்டத்திற்குக் கொண்டு வாருங்கள் என்று அண்ணன் சொல்கிறார்கள். ஆக, இரண்டுபேருமே ஒரு நல்ல யோசனையை சொல்லியிருக்கிறீர்கள். நிச்சயமாக அதையொட்டி தருமபுரி மாவட்டத்திலே அமைக்க பரிசீலிக்கப்படும், நம்முடைய அண்ணன் மணி அவர்கள் அன்றைக்கு பேசுகிறபோதுகூட, பெண்ணாகரத்தில் ஒன்று அமைக்க வேண்டும், தருமபுரி மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி வர வேண்டுமென்று தெரிவித்திருந்தார்கள். எனவே, நிச்சயமாக அந்தப் பகுதியிலே கிருஷ்ணகிரியை ஒட்டி, தருமபுரி மாவட்டத்தில் தொழில்களைத்

துவங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஏனென்றால், தருமபுரி மாவட்டம் பாதுகாப்பு வழித்தடத்தில் ஒரு முனையமாக இருக்கிறது. எனவே, உங்களுடைய கோரிக்கைகளை ஏற்று, தருமபுரி மாவட்டத்திலே நிறைய தொழில்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மாவட்டத்தினுடைய பொறுப்பு அமைச்சர் நம்முடைய அன்பிற்குரிய மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களும், அந்தக் கருத்தை தொடர்ச்சியாக வலியுறுத்தியிருக்கிறார். எனவே, நிச்சயமாக தருமபுரிக்கு இந்த முறை முக்கியத்துவம் அளிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகளிலே வேலை பார்க்கக்கூடியவர்களுக்கு, அவர்கள் தங்குவதற்கான இடவசதி குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி அவர்கள் இன்றைக்குப் பேசினார்கள். மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அண்ணன் திரு. சு. முத்துசாமி அவர்கள் என்னிடத்தில் ஒரு கடிதம் கொடுத்திருக்கிறார்கள். எனவே, நிலம் ஒதுக்கீடு செய்யப்படும்போது, வீட்டு வசதி வாரியத்தின்மூலமாகவே அவர்களுக்கு நிலம் கொடுத்து, அவர்களுக்கு அங்கே குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்ய முடியுமா? என்று கேட்டிருக்கிறார்கள். இதுகுறித்து துறையில் இருக்கக்கூடிய உயர் அதிகாரிகளிடத்தில் நான் பேசியிருக்கிறேன். நிச்சயமாக இதுகுறித்து அரசு கவனத்திலே கொண்டு ஆவன செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

TIDCO-ஐப் பொறுத்தமட்டில் 4 ஆம் தலைமுறை தொழில் வளர்ச்சி Industry 4.0 தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப நம்முடைய இளைஞர்களுடைய திறன்களை வளர்க்கக்கூடிய மிக முக்கியமான பணி நமக்கு இருக்கிறது. எனவேதான் தொழில் துறை மூன்று முக்கியமான திறன்மிகு மையங்களை அமைத்திருக்கிறது. Dassault Systems, Siemens and GE Aviation நிறுவனங்களோடு இணைந்து, இத்தகைய திறன் மேம்பாட்டு நிறுவனங்களை நாம் உருவாக்கியிருக்கிறோம். அதுமட்டுமல்ல, நம்முடைய தொழில்நுட்பக் கல்லூரிகளிலே பயிலக்கூடியவர்கள் அனைவரும் 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலமாக பயனடையக்கூடிய வகையில் இன்றைக்கு TIDCO நிறுவனத்தின் மூலமாக தொழிற்பயிற்சிகள், திறன்பயிற்சிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டு வருகின்றன.

[திரு. தங்கம் தென்னரசு] [2023 ஏப்ரல் 6

சென்னை, நந்தம்பாக்கத்தில் 110 ஏக்கர் அளவில், 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிதிநுட்ப நகரம் அமைக்கக்கூடிய பணிகளை TIDCO நிறுவனம் மிகச் சிறப்பாக செய்து கொண்டு வருகிறது. தலைவர் கலைஞர் அவர்கள் எப்படி TIDEL park நிறுவிய பிறகு, தமிழ்நாட்டிலே தகவல் தொழில்நுட்பத்தில் ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டதோ, அதேபோல, நிதிநுட்ப நகரம் FinTech city நந்தம்பாக்கத்திலே வருகின்றபோது, இந்த நிதிநுட்பத் துறையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு, குறிப்பாக சென்னை மாநகரம் ஒரு மிகப் பெரிய இடத்தைப் பெற்று வளர்ச்சியைக் காணும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதிலே ஐயமில்லை என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

TIDEL Neo park-ஐ தமிழ்நாடு அரசு, விழுப்புரம், தூத்துக்குடி, வேலூரிலே நிறுவி, அதற்கான கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. தஞ்சை, உதகமண்டலம், சேலத்தில் இதற்கான கட்டுமானப் பணிகள் விரைவிலே துவங்கப்பட இருக்கின்றன. சென்னையில் பட்டாபிராம், மதுரையில் மாட்டுத்தாவணி ஆகிய இடங்களிலே TIDEL பூங்காக்களை நிறுவுவதற்கு TIDCO நிறுவனம் எல்லா வகையிலும் சிறப்பான நடவடிக்கை எடுத்து வருகிறது.

இன்னொன்று, நம்முடைய AMRL நாங்குநேரி. நம்முடைய சட்டப்பேரவைத் தலைவர்கூட அடிக்கடி என்னிடத்தில் நினைவுபடுத்துவார்கள். தலைவர் கலைஞர் அவர்களும், மறைந்த முன்னாள் அமைச்சர் மரியாதைக்குரிய திரு. முரசொலி மாறன் அவர்களும் உருவாக்கிய கனவுத் திட்டம், மறைந்த நீதியரசர் இரத்தினவேல் பாண்டியன் அவர்கள், தென் மாவட்டங்களினுடைய வளர்ச்சிக்காக அங்கே அமைய வேண்டுமென்று கொண்டுவந்த திட்டம். AMRL நிறுவனத்தை நாம் TIDCO-னுடைய ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தோடு ஆரம்பித்தோம். ஆனால், TIDCO நிறுவனத்திற்குத் தெரியாமலேயே அவர்கள் நிர்வாக அமைப்பிலே செய்திருக்கக்கூடிய மாறுதல்கள், அதாவது, குத்தகைக்கு எடுத்துக்கொண்டதற்குப் பிறகு, அந்த நிலங்களிலே அவர்கள் எந்தவிதமான ஒரு மேம்பாட்டையும் செய்யாத ஒரு நிலையில் அந்த இடத்தை மீண்டும் TIDCO நிறுவனமே திரும்பப்பெற்று, வருவாய்க் கணக்குகளில் அவற்றிற்கான மாறுதல்களை செய்ய வேணடுமென்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

தற்போது, அதற்கு ஓர் இடைக்காலத் தடை ஒன்றை வாங்கியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட நம்முடைய TIDCO நிறுவனம் சார்பில் அதற்கு எதிர்வாதுரை மிக விரைவில் தாக்கல் செய்து, அந்தத் தடை விலக்கப்படும். அந்த இடத்தில் ஓர் ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கிறது. To be precise, 985 ஏக்கரிலே அந்த இடத்திலே ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்குவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் TIDCO நிறுவனம் மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அந்த மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மகிழ்ச்சி. தமிழ்நாடு பாதுகாப்புத் துறை பெருவழித் தடத்தினை செவ்வனே செயல்படுத்துவதற்காக ஒன்றிய அரசுடன் இணைந்து ஆளில்லா விமான தொழிலுக்கான சோதனை வசதி-Unmanned Aerial Systems Testing Facility, மின்னணு போர்முறைக்கான சோதனை வசதிகள்-Electronic Warfare Testing Facility, மின்னனு ஒளியியல் சோதனை வசதிகள்-Electro Optics Testing facility ஆகிய புது பரிசோதனை மையங்களை நாம் நடத்தியிருக்கிறோம். அது தவிர, மூன்று பொது வசதி மையங்கள்-Common Testing Centres திருச்சிராப்பள்ளியிலே ஒரு பொது வசதி மையமும், கோயம்புத்தூரில் இரண்டு பொது வசதி மையங்களையும் நாம் உருவாக்க இருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராம் அவர்கள் அதை குறிப்பிட்டிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில்கூட, நாங்கள் அதைச் சொல்லியிருக்கிறோம். வார்ப்பு உலோக தொழிற்சாலைகளில் foundries-க்கு உதவக்கூடிய வகையில், FDF நிறுவனத்துடன் இணைந்து 30 கோடி ரூபாய் முதலீட்டில் ஒரு பொது வசதி மையம் கோவையில் அமைக்கப்படவிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

தொடர்ச்சியாக TIDCO நிறுவனத்தின் சார்பில் சுற்றுச்சூழல் மாசுபடுவதைக் குறைக்க பசுமை எரிவாயு விநியோகத்தை

மேற்கொள்ளும் ஒரு முன் முயற்சியின் பகுதியாக எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு குழாய் அமைத்தல் மற்றும் நகர எரிவாயு விநியோகத் திட்டங்களைச் செயல்படுத்தும் முகமை நிறுவனமாகவும், TIDCO செயல்படுகிறது. இதன்மூலம் 6 முதல் 8 வருடக் காலத்தில் குடியிருப்புகளுக்கு மட்டுமின்றி, தொழிலகங்களுக்கும், போக்குவரத்திற்கும் குழாய் மூலமாக பசுமையான மற்றும் சிக்கனமான இயற்கை எரிவாயு விநியோகம் மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவிக்கிறேன். இதுவரை இல்லாத அளவில், இத்தகைய நடவடிக்கையின் காரணமாக TIDCO நிறுவனம் 150 கோடி ரூபாயை நம்முடைய அரசிற்கு ஈவுத் தொகையாக வழங்கியிருக்கிறது என்பதையும் நான் இங்கே பெருமையோடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போன்று, தொழில் முதலீட்டிற்கு TIIC, பல்வேறு வகைகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கடன் உதவியை வழங்கியும், முதல் தலைமுறை தொழில் செய்பவர்களுக்கு பெரும் அளவில் கடன் உதவிகளைத் தந்தும் நம்முடைய மாநிலத்தினுடைய தொழில் வளர்ச்சிக்கு ஊக்குவிப்பாக இருக்கிறது.

TNPL-ஐப் பொறுத்தமட்டில், 6 இலட்சம் டன் அளவிற்கு காகிதம் மற்றும் காகித அட்டைகளின் உற்பத்தியை மேற்கொண்டிருக்கிறது. இந்த உற்பத்தியில் 20 சதவீதத்தை ஏறக்குறைய 35 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறோம். ஒண்டிப்பட்டியில் அந்த ஆலையை இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்கள் திருக்கரங்களால் துவக்கி வைத்திருக்கிறார்கள். இதன் முதல் 9 மாதங்களை மட்டும் நீங்கள் எடுத்துக்கொண்டீர்கள் என்று சொன்னால், 285 கோடி ரூபாய் இலாபத்தை நாம் ஈட்டியிருக்கிறோம். இன்னும் வரக்கூடிய காலங்களில் listed company ஆக இருக்கக்கூடிய காரணத்தால், வரக்கூடிய ஆண்டுகளில் audit செய்து பார்த்தோம் என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அளவிற்கு மிகப் பெரிய இலாபத்தை ஈட்டக்கூடிய நிறுவனமாக நம்முடைய TNPL நிறுவனம் வரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். TANCEM நிறுவனமும் இந்த முறை மிகப் பெரிய இலாபத்தை, 155 கோடி ரூபாய் இலாபத்தை ஈட்டியிருக்கிறது.

வலிமை சிமென்ட் பற்றி நீங்கள் சொன்னீர்கள். வலிமை சிமென்ட் market dimension-க்கு உள்ளே வந்த பிறகுதான்,

வெளி market-ல் ஒரு மூட்டை சிமெண்ட் விலை 400 ரூபாய், 450 ரூபாய் என இருந்து, இன்றைக்கு 345 ரூபாய்க்கு குறைந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) வலிமை சிமெண்ட் என்கிற ஒரு சிமெண்ட் commercial brand ஆக உள்ளே வந்திருக்கக்கூடிய காரணத்தால்தான் வலிமை சிமெண்ட், அரசு சிமெண்ட் என்று இரண்டு இருந்தாலும்கூட வலிமை சிமெண்ட்டை commercial brand ஆக நாம் உள்ளே கொண்டு வந்தால்தான், அந்த விலையை சாதாரண மக்களுக்குக் கொடுக்க முடியும் என்கிற முறையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதனைக் கொண்டு வந்தார்கள். அது இப்போது நல்ல பலனைத் தந்திருக்கிறது.

அதைப்போல நம்முடைய உப்பு நிறுவனம், "நெய்தல் உப்பு" என்கின்ற பெயரில் உப்பு கொண்டு வந்திருப்பது நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது. எனவே, தமிழ்நாடு உப்பு நிறுவனமும் ஏறத்தாழ 6½ கோடி ரூபாய்க்கு இன்றைக்கு இலாபம் ஈட்டியிருக்கிறது. ஒட்டுமொத்தமாக பார்த்தோம் என்று சொன்னால், தமிழ்நாட்டில் தொழில் துறையில், தொழில் துறைக்குக்கீழ் இருக்கக்கூடிய ஒவ்வொரு நிறுவனமும்—நான் இங்கே ஒவ்வொன்றாக சொல்லிக்கொண்டு வந்தேன். எல்லா நிறுவனங்களும் அது TIDCO நிறுவனமாக இருந்தாலும் சரி, SIPCOT நிறுவனமாக இருந்தாலும் சரி, TANCEM நிறுவனமாக இருந்தாலும் சரி, Salt Corporation நிறுவனமாக இருந்தாலும் சரி, TNPL ஆக இருந்தாலும் சரி, அனைத்து நிறுவனங்களும், ஒட்டுமொத்த நிறுவனங்களுமே இலாபம் ஈட்டக்கூடிய நிறுவனங்களாக ஒரே நேர்கோட்டில் அமைந்திருப்பது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இந்த ஆட்சியில்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பல்வேறு நிதிநெருக்கடிகள், உலகத்தில் சாதகமற்ற சூழ்நிலைகள், நம்முடைய dwindling economy என எந்த அளவிற்கு இருந்தாலும், ஒட்டுமொத்தமாக நம்முடைய தொழில் துறை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கரங்களில் பாதுகாப்பாக இருக்கிறது, அவரது வழிகாட்டுதலில் இருக்கிறது என்கிற காரணத்தினால்தான் இன்றைக்கு இத்தனை முதலீடுகள் வந்திருக்கின்றன. இவ்வளவு இலாபகரமாக நம்முடைய தொழிற்சாலைகளும் இயங்குகின்றன என்பதைப் பெருமையோடு உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–40

அடுத்து, தமிழ் வளர்ச்சித் துறையைப் பற்றிப் பேச விரும்புகிறேன். தமிழ் வளர்ச்சித் துறையைப் பொறுத்தமட்டில். . . (குறுக்கீடு) நான் திருச்சி மாவட்டத்திற்குச் சொன்னேன். நான் திருச்சிக்குச் சொல்வதை வேண்டுமென்றே நீங்கள் கேட்காமல் உங்கள் பக்கத்திலே இருக்கின்ற மாண்புமிகு அவை முன்னவர் அவர்களோடு பேசிக் கொண்டிருந்தீர்கள். அவர்கள் காட்பாடி என்று சொன்னவுடன் சுதாரித்துக் கொண்டார்கள். நீங்கள் திருச்சி என்று ** இருந்தாலும். . . (குறுக்கீடு) அது சரி, action replay என்பதைப்போல—இருந்தாலும், சற்று பொறுமையாக இருந்தால், சினிமா படத்தினுடைய கடைசிக் காட்சியில், 'சுபம்', 'வணக்கம்' என்று slide போடுவதற்கு முன்பாக உங்களுக்கு ஓர் இனிய surprise காத்திருக்கிறது. (சிரிப்பு) உங்களுக்கும் ஒரு pleasant surprise காத்திருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இங்கே பேசிய சில உறுப்பினர்கள் சொல்லியதைப் போல, தமிழ் வளர்ச்சித் துறை ஒரு முக்கியமான துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காணாத சூரியனாய், தேயாத சந்திரனாய், ஓயாத தென்றலாய், சேரனின் வில்லாய், சோழனின் நெல்லாய், பாண்டியனின் சொல்லாய், ஒவ்வொரு வினாடியும் இந்தத் தமிழ்ப் பெருங்குடி மக்களின் நலத்திற்காக உழைத்துக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சீரிய முன்னெடுப்பில், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் வளர்ச்சியில் நம்முடைய மாநிலம் மாபெரும் முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறது.

தமிழ் அறிஞர்களுடைய நூல்களையெல்லாம் நாட்டுடைமையாக்குதல், இலக்கியமாமணி விருது, சாகித்ய அகாடமி விருதைப் பெற்றிருக்கக்கூடியவர்களுக்கு கனவு இல்லம் திட்டம், தீராக் காதல் திருக்குறள், தமிழ் பரப்புரைக் கழகம், அயல் நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களிலே ஆய்வு இருக்கைகள், கப்பலோட்டிய தமிழர் பெயரிலே விருது, பாரதி நூற்றாண்டு நினைவு விருது, செம்மொழி நிறுவனத்திற்குக் கட்டடம், செம்மொழிச் சாலை, நம்முடைய மாண்புமிகு தலைவர்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கலைஞர் அவர்களுடைய பெயரில் செம்மொழி விருது என்று தொடர்ச்சியாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழுக்குச் சிறப்பு சேர்த்திருக்கிறார்கள். இந்த ஆண்டுகூட புரட்சியாளர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களுடைய நூல்களையெல்லாம் தமிழில் மொழிபெயர்ப்பதற்காக ரூ.5 கோடி மானியமாக வழங்கி, தமிழ் வளர்ச்சித் துறைக்கு மிகப் பெரிய சிறப்பினைச் செய்திருக்கிறார்கள்.

அதிலும் குறிப்பாக, மொழிப் பிரச்சினையைப் பற்றி இந்த அவையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னப்பா அவர்கள், கீழப்பழூர் சின்னசாமி அவர்கள் எப்படி தன்னுடைய தேக்குமர தேகத்தைத் தீக்கிரையாக்கிக் கொண்டார்கள் என்று சொன்னார்கள். அதைப்போல, மொழிக்குச் சிறப்பு செய்யக்கூடியவகையில், மொழிப்போர் தியாகிகளைப் பாராட்டக்கூடிய வகையில்— காரணம், நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையில் அமர்ந்திருக்கின்றார்கள். மொழிப் போராட்டக் களத்தில் ஒரு மாணவனாக களம் கண்டிருக்கக்கூடிய அவர்கள் இங்கே வீற்றிருக்கிறார்கள்; எங்களுக்கு அது பெருமையாக இருக்கிறது. அவர்கள் அந்தக் களத்தைக் காண்கிறபோது, அவருக்கு முன்னெத்தியராகச் சென்றிருக்கக்கூடிய தாளமுத்து நடராசன் அவர்களுடைய பெயரில் சென்னையில் நிச்சயமாக அவருக்கு ஒரு நினைவு மண்டபம் அமைக்கப்படும் என்ற மாபெரும், மகத்தான செய்தியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

இந்தி எதிர்ப்பு உணர்வு என்பது திராவிட இயக்க உணர்வோடு ஒட்டி வந்திருக்கக்கூடிய நம் அனைவரது உணர்விலும் கலந்திருக்கிறது. அது எந்த வடிவில், எப்படி வந்தாலும், அதை ஒட்டுமொத்தமாக எதிர்க்கக்கூடிய அந்த வரிசையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து இருக்கிறோம் என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வப்போதெல்லாம் அத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவோ, அதை முளையிலேயே கிள்ளி எறியக்கூடிய முயற்சிகளிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

எனவேதான், ஆவின் தயிர் பாக்கெட்டிலேகூட இந்தப் பிரச்சினை வருகிறபோது, ‘தஹி எங்களுக்கு நஹி’ என்று இங்கே சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் தமிழ் வளர்ச்சித்

துறையின் அமைச்சராகச் சொல்வேன், 'தஹி எங்களுக்கு நஹி', 'தயிர் எங்களுக்கு உயிர்'. (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், தயிர் என்பது வெறும் உணவல்ல; பெயர்ச் சொல் அல்ல; 'தயிர் எங்கள் உணர்வு' என்பதை நான் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சராக இந்த மாமன்றத்தில் பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உணர்வோடுதான் தயிர் என்ற வார்த்தையை நாம் இடம்பெறச் செய்வோம் என்று சொல்லி, இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதில் வெற்றி கண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்று காலையில்கூட, தமிழின் தொன்மையை நிலைநாட்டக்கூடிய 9 பல்வேறு இடங்களில் அகழாய்வுப் பணிகளை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்திருக்கிறார்கள். கீழடியில் 2 ஏக்கர் பரப்பளவில் 31,000 சதுர அடியில் கட்டடங்களை அமைத்து, ஏறத்தாழ, 18.43 கோடி ரூபாய் அளவில் அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டு, 10,000 பொருட்கள் அங்கே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து பெருமை செய்திருக்கிறார்கள். இன்றைக்கு அதில் இருக்கக்கூடிய Augmented Reality-AR-ல் இருக்கக்கூடிய அந்த செயலியையும் அவர்கள் துவக்கி வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தொடர்ச்சியாக இந்த அவையில் சொல்லி வருவதைப்போல, தமிழின் பெருமை என்பது அதன் தொன்மையில் மட்டும் கிடையாது; தமிழின் பெருமை என்பது ஈராயிரம் ஆண்டுகளாக இருக்கக்கூடிய அதன் தொடர்ச்சியில்தான் இருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக தமிழில் எழுந்த இலக்கணம் தொல்காப்பியம். தொல்காப்பியத்தில் இருக்கக்கூடிய சொற்கள், அது நிலாவாக இருந்தாலும், திங்களாக இருந்தாலும், மா மரமாக இருந்தாலும், முயலாக இருந்தாலும், குரங்காக இருந்தாலும், நெல்லாக இருந்தாலும், இன்று வரை அந்த சொற்கள் புழக்கத்தில் இருக்கின்ற சொற்கள். எந்த மொழியிலும் இரண்டாயிரம் வருடங்களாக ஒரு சொல் தொடர்ச்சியாக புழக்கத்தில் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அன்றைக்கு இலக்கணத்தில் இருக்கின்ற சொற்கள், இன்றைக்கும் நடைமுறையில் இருக்கின்றன. அது மட்டும் கிடையாது.

பிற்பகல் 2–45

தமிழ் மொழியிலே நீங்கள் பார்த்தீர்களென்று சொன்னால், ஒவ்வோர் இடத்திலும் இருக்கக்கூடிய அந்தச் சொற்கள் தொடர்ச்சியாகப் பயின்று வரப்படுகிறது. 'பைய' என்ற ஒரு சொல்லை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். பாண்டிய நாட்டில் மதுரை பக்கத்தில், இராமநாதபுரம் மாவட்டத்தில் எங்கள் ஊருக்குப் பக்கத்தில் வந்தால், ஓரிடத்திற்கு 'நீங்கள் மெதுவாகப் போங்கள்' என்று சொல்ல வேண்டுமென்றால், 'பைய பார்த்துப் போப்பா' என்றுதான் சொல்வார்கள். 'பைய' என்றுதான் அந்த வார்த்தையை நாங்கள் சொல்வோம். 'மை அணல் காளையொடு பைய இயலிப்' என்று ஐங்குறுநூறு என்ற நூலில் இந்த 'பைய' என்ற வார்த்தை வரும்.

அதற்குப் பிறகு பக்தி இலக்கியக் காலத்தில் சம்பந்தர், சோழ நாட்டிலிருந்து பாண்டிய நாட்டிற்கு வருகிறார். அங்கு அவர் தேவாரம் பாடுகிறார். மதுரைக்கு வருகிறபோது மதுரையில் இருக்கக்கூடிய பாண்டிய மன்னன், அவர்மீது வெப்ப நோயை ஏவுகிறான். மீண்டும் அந்த வெப்ப நோயை பாண்டியனுக்கே அவர் திருப்பியனுப்புகிறார். அவர் தமிழில் அதைச் சொல்லக்கூடிய காரணத்தால், தனக்கு வந்த வெப்ப நோயை பாண்டிய மன்னனுக்கு திருப்புகிறபோதுகூட, ஞானசம்பந்தருடைய தேவாரத்தில் 'பையவே சென்று, பாண்டியருக்கு ஆகவே' என்று சொன்னார். அந்த நோயைக்கூட திருப்பியனுப்புகிறபோது, தமிழ் மூலமாகக் கூறுகிறபோது, தனக்கு எதிராக ஒருவன் கெடுதல் செய்கிறான், திருப்பி அவருக்கு அனுப்புகிறபோதுகூட, 'வேகமாகப்போய் அவரைப் பற்றிக்கொள்' என்று சொல்லவில்லை. 'பைய சென்று பாண்டியனைப் பற்றிக்கொள்' என்று சொல்லக்கூடிய தமிழ், நம்முடைய தமிழ். அவர் சம்பந்தர், சோழ நாட்டில் இருந்தார். அவர் சீர்காழியின் பிள்ளை.

இன்னும் சொல்லப்போனால், இன்று 'திராவிடம், திராவிடம்' என்று கேட்கிறார்களே, ஆதிசங்கர பகவத் பாதாள் அவர்களால், 'திராவிட சிசு' என்று அழைக்கப்பட்டவர் நம்முடைய ஞானசம்பந்தர் அவர்கள். அந்த ஞானசம்பந்தர், சோழ நாட்டிலிருந்து பாண்டிய நாட்டிற்கு வருகின்றபோது, அங்கே வழக்கிலே இருந்த ஒரு சொல்லைக் கையாண்டு, 'பையவே சென்று, பாண்டியருக்கு ஆகவே' என்கிறார்.

அந்த 'பைய' என்கின்ற அந்த வார்த்தை இன்றுவரை நம்முடைய இராமநாதபுரம் மாவட்டத்திலும் தென்பாண்டி மண்டலத்தில் எல்லா இடங்களிலும் இருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதைப்போல, அந்தக் காலத்திலிருந்து நீங்கள் பார்த்தீர்கள் என்று சொன்னால், தமிழின் வரி வடிவங்கள் வேண்டுமானால் மாறியிருக்கலாம். 'தமிழி' என்றிருக்கக்கூடிய தமிழ் பிராமி எழுத்துகள் இருந்தன. வட்டெழுத்துகளாகவும் இருந்தன. 9 ஆம் நூற்றாண்டு எழுத்துகளாக இருந்தன. தொடர்ச்சியாக தமிழ் எழுத்தின் வரி வடிவம் மாறியிருக்கிறது. ஆனால் தமிழிலே வரக்கூடிய சொற்கள் மாறாமல் இருந்த காரணத்தினால்தான், தொல்காப்பியத்திலிருந்து இன்றுவரை 20 ஆம் நூற்றாண்டு, 21 ஆம் நூற்றாண்டு வரை, நான் குறிப்பிட்ட ஒன்றிரண்டை மட்டும் சொல்லி, நிறைவு செய்ய விரும்புகிறேன். அந்தச் சொற்கள் அப்படியிருக்கும்.

தொல்காப்பிய சூத்திரத்தில் சொல்லும்போது, தொல்காப்பியர் சொல்கிறார். 'எல்லா சொல்லும் பொருள் குறித்தனவே' இதற்கு நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. 'எல்லா சொல்லும் பொருள் குறித்தனவே' என்பதை நான் சொன்னால், உங்களால் அந்தப் பொருளை புரிந்துகொள்ள முடிகிறது.

புறநானூற்றுக்குப் பிறகு, சங்க இலக்கியத்தை எடுத்துக்கொண்டால்,

'நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிர் அன்றே;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால் யான் உயிர் என்பது அறிகை
வேன்மிகு தானை வேந்தர்க்குக் கடனே'.

என்று அவர் சொல்கின்றபோது, அதற்கான விளக்கத்தை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

காப்பிய காலத்தில் சிலப்பதிகாரம், 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்று சொல்கிறது. அதைச் சொல்கின்றபோது, அதற்கான விளக்கத்தை இன்றைக்கு இருக்கக்கூடிய நீங்கள் எளிதாகப் புரிந்துகொள்ள முடியும்.

பக்தி இலக்கிய காலத்திற்கு வாருங்கள்.

பொன்னார் மேனியனே புலித்
தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்
கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழ
பாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி
யாரை நினைக்கேனே.

என்று அன்றைக்கு நாவுக்கரசர் பாடினார்.

'ஆனாத செல்வத் தரம்பையர்கள் தற்குழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
தேனார்பூஞ் சோலைத் திருவேங்க டச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே'

என்று (மேசையைத் தட்டும் ஒலி) ஆழ்வார்கள் பாடினார்கள். அதற்கு இன்றைக்கும் நான் அர்த்தம் சொல்ல வேண்டியதில்லை. நான் சொல்கின்றபோது, அந்த அர்த்தத்தை உங்களால் புரிந்துகொள்ள முடியும்.

சிற்றிலக்கியக் காலத்திற்கு வாருங்கள். திருக்குற்றால குறவஞ்சியை எடுத்துக்கொள்ளுங்கள்.

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்!
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்!
கானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பர்!
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பர்!
தேன்அருவித் திரைஎழும்பி வானின்வழி ஒழுகும்!
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்!
கூனல்இளம் பிறைமுடித்த வேணி அலங்காரர்!
குற்றாலத் திரிகூடமலை எங்கள் மலையே!

என்று சொல்கின்றபோது அந்தப் பாடலுக்கான அர்த்தத்தை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை.

காலம் மாறுகிறது. ஆனால், தமிழில் உங்களுக்கு அந்தச் 'சொல்லும், பொருளும்' மாறாமல் இருக்கின்றது. தொடர்ச்சியாக

20 ஆம் நூற்றாண்டிற்கு வந்தால், பாரதி வருகிறான். 'தாயின் மணிக்கொடி பாரீர்' என்று சொல்கின்றபோது, அதற்கு நாம் விளக்கம் சொல்ல வேண்டியதில்லை.

'கொலை வாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே
குகைவாழ் ஒரு புலியே உயிர்
குணமேவிய தமிழா!'

என்று பாவேந்தர் சொன்னார். அதற்கும் விளக்கம் சொல்ல வேண்டியதில்லை.

அண்ணா எழுதினார், 'ஏ தாழ்ந்த தமிழகமே' என்று சொன்னார். நேரு அவர்களை பற்றிச் சொல்கிறபோது, 'அவர் கட்டி முடிக்கப்பட்ட கோபுரம், நான் கொட்டி வைக்கப்பட்டிருக்கக்கூடிய செங்கல்' என்று அவருடைய காலத்திலே அவர் சொன்னார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக, தமிழ் வரிசையாக வருகிறபோது, அந்தத் தமிழின் வரிசையில், இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டுமல்ல, உலகத்திலேயே தவிர்க்க முடியாத ஓர் ஆளுமை, மாண்புமிகு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், அவருடைய எழுத்துக்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

'மனோகரா'வில் அவர் எழுதியதைப் பார்த்துவிட்டு, பேராசிரியர் கல்கி அவர்கள், காங்கிரஸ் இயக்கத்தில் இருந்தவர். இன்னும் சொல்ல வேண்டுமென்றால் கடுமையாக எதிர்த்தவர். அவர் சொன்னார், 'தமிழை இவ்வளவு வன்மையாக யாராலும் கையாள முடியுமா என்று நான் உண்மையிலேயே அதிசயத்துப் போனேன்' என்று சொன்ன எழுத்துகள், கலைஞர் அவர்களுடைய எழுத்துகள்.

பிற்பகல் 2–50

மனோகராவில் ஓரிடத்தில் அவர் எழுதியிருப்பார். புருஷோத்தமர் கேட்பார்,

'உன்னை எதற்காக அழைத்து வரச் செய்திருக்கிறேன் தெரியுமா?'

'திருத்திக்கொள்ளுங்கள் தயவுசெய்து. அழைத்து வரவில்லை. இழுத்து வரச் செய்திருக்கிறீர்கள்.

'மனோகரா என் கட்டளையைத் தெரிந்து கொண்டிருப்பாய் நீ'. 'கட்டளையா இது? கரை காண முடியாத ஆசை.' பொன்னும், மணியும், மின்னும் வைரமும் பூட்டி மகிழ்ந்து, கண்ணே, முத்தே, தமிழ்ப் பெண்ணே என்றெல்லாம் குலவிக் கொஞ்சி, தந்தத்தால் ஆன கட்டிலிலே, சந்தனத் தொட்டிலிலே, வீரனே, என் விழி நிறைந்தவனே, வீரர் வழி வந்தவனே என்று யாரைச் சீராட்டி, பாராட்டினீர்களோ, அவனை, அந்த மனோகரனை சங்கிலியால் பிணைத்து சபை நடுவே நிறுத்தி சந்தோஷம் கொண்டாட வேண்டுமென்ற உங்கள் தணியாத ஆசைக்கு பெயர் கட்டளையா தந்தையே!' (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

என்று கேட்டு கலைஞர் அவர்கள் எழுதியிருப்பார்கள். இன்றைக்கும் அவை வைர வரிகளாக இருக்கின்றன. தமிழ் எழுத்துகள் மாறியிருக்கின்றன. தமிழ் உணர்வுகள் மாறவில்லை. தமிழ் ஜீவநதியாக இருக்கிறது. எனவேதான், தமிழினுடைய இளமை ஈராயிரம் ஆண்டுகளாக இருந்தாலும், மனோன்மணீயம் சுந்தரனார் அவர்கள் சொன்னதைப்போல,

"கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமுந் துளுவும்
உன்னுதரத் துதித் தெழுந்தே ஒன்றுபல வாகிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிற் தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே"
(மேசையைத் தட்டும் ஒலி)

என்று பாடினார்கள்.

செவ்வியல் இலக்கிய மொழிகளில் இன்றைக்கும் தன்னுடைய செவ்வியல் தன்மை பதினாறையும் இழக்காமல் இருக்கக்கூடிய அந்த மொழியை தொடர்ச்சியாகக் காப்பாற்றக்கூடிய அந்தப் பெருமையை நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செய்தார்கள். அது வெறும் தமிழ்த்தாய் பாடல் மட்டுமல்ல, இந்த உணர்வுமிக்க பாடல்தான் தமிழ்நாட்டின் மாநில பாடல் என்று அறிவித்திருக்கக்கூடிய பெருமை எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், இதை அடுத்த கட்டத்திற்குக் கொண்டுபோக வேண்டுமென்று, இந்த மொழி, கணினி மொழியாக, நம்முடைய கணினியிலே வரக்கூடிய மொழியாக, கணினியில் பயன்பாட்டு மொழியாக வர வேண்டுமென்பதற்காக

மாநாடுகளைக் கூட்டி, தற்போது பன்னாட்டு மாநாடுகளையும் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

எனவே, தமிழ் மொழியினுடைய வளர்ச்சிக்காக இந்தக் கழகமும், நம்முடைய ஆட்சியும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, நான் என்னுடைய உரையினை உங்களது அனுமதியோடு நிறைவு செய்து, இந்த இரண்டு துறைகள் சார்ந்த அறிவிப்புகளை தற்போது செய்ய விரும்புகிறேன்.

அறிவிப்புகள்

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை

1. தமிழ்நாட்டில் ஒரு மேம்பட்ட உற்பத்தி மையம் நிறுவப்படும்

தமிழ்நாட்டில் ஒரு மேம்பட்ட உற்பத்தி மையம் அமைத்திடுவதற்காக, வழிகாட்டி நிறுவனம். உலகப் பொருளாதார மன்றத்துடன் (World Economic Forum) ஒரு நிறுவன ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இதன் பலனாக, டாவோஸில் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்ற வருடாந்திரச் சந்திப்பிற்கு அழைப்பு வரப்பெற்று, உரையாற்றுவதற்கும் வாய்ப்பு கிடைத்தது. இந்தியா முழுவதும் உள்ள அனைத்து தொழிலகங்களும், மேம்பட்ட உற்பத்தியை நோக்கிய தங்களது வளர்ச்சியை விரைவுபடுத்திடவும், உலகளாவிய உற்பத்தி சமூகத்தினை தமிழ்நாட்டிற்கு ஈர்த்திடவும், தமிழ்நாட்டில் ஒரு மேம்பட்ட உற்பத்தி மையம் நிறுவப்படும். வழிகாட்டி நிறுவனம் இந்த மையத்தின் மேம்பட்ட உற்பத்தி மற்றும் மதிப்புச் சங்கிலி (AMVC) தளத்தின் செயல்பாட்டுப் பிரிவாக இயங்கும். உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024–ன்போது, இந்த மையத்தைத் துவக்க/செயல்படுத்த தமிழ்நாடு அரசு முயற்சிகள் மேற்கொள்ளும்.

2. ஒழுங்குமுறைச் செலவினங்களைக் குறைப்பதன்மூலம் வணிகம் புரிதல் எளிதாக்கப்படும்

வணிகம் புரிதலை எளிதாக்கும் சூழலை மேம்படுத்திட வேண்டுமெனில், ஒழுங்குமுறை இணக்கச் செலவுகளைக் குறைப்பது மிகவும் அவசியமாகிறது. நிர்வாக மற்றும் நிதிச் சுமைகளை குறைத்திடும் வகையில் இதற்கென ஒரு வழிமுறை வடிவமைக்கப்படும். ஒழுங்குமுறைச் செலவினங்களைக் குறைக்கும்

நோக்கம், செயல்முறைகளை எளிமைப்படுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில், சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். இதன்மூலம், வணிகம் புரிதலை எளிதாக்கும் தரவரிசையில் மாநிலத்தின் நிலையை மேலும் வலுப்படுத்திட இயலும்.

3. சிப்காட் சூளகிரி தொழிற்பூங்காவில் தொழிலாளர்கள் மற்றும் பயிற்சி பெறுநர்கள் பயன்பாட்டிற்காக 600 படுக்கைகள் கொண்ட தங்குமிடம் 30 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், சூளகிரி தொழிற்பூங்காவில் அமையவுள்ள தொழிற்சாலைகளின் தொழிலாளர்கள் மற்றும் திறன் மேம்பாட்டு மையத்தின் பயிற்சி பெறுநர்கள் தங்குமிட தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு, 30 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 600 படுக்கை வசதிகள் கொண்ட ஒரு தங்குமிடம் அமைக்கப்படும்.

4. சிப்காட்–இருங்காட்டுக்கோட்டை தொழிற்பூங்கா மற்றும் செய்யாறு தொழிற்பூங்காக்களில், தொழிலாளர்களின் தங்குமிட தேவையைப் பூர்த்தி செய்ய தலா 200 படுக்கை வசதிகள் கொண்ட இரண்டு தங்குமிடங்கள் மொத்தம் 20 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்

சிப்காட்–இருங்காட்டுக்கோட்டை தொழிற்பூங்கா மற்றும் செய்யாறு தொழிற்பூங்காக்களில் உள்ள தொழிலாளர்களின் தங்குமிட தேவையைப் பூர்த்தி செய்வதற்காக தலா 200 படுக்கை வசதிகள் கொண்ட இரண்டு தங்குமிடங்கள், மொத்தம் 20 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

5. சிப்காட் தொழிற்பூங்காக்களில் ஸ்மார்ட் நீர் அளவீட்டு அமைப்புகள் (Smart Water Metering System) 20 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் உருவாக்கப்படும்

சிப்காட் நிறுவனம், திருப்பெரும்புதூர் பகுதியில் அமைந்துள்ள அதன் 5 தொழிற்பூங்காக்களில், ஸ்மார்ட் நீர் அளவீட்டு மானியைப் பொருத்துதல், மென்பொருள் தொழில்நுட்பம்மூலம் கண்காணிப்பு மற்றும் பயன்பாட்டுக் கட்டணம் வசூலித்தல் போன்ற செயல்பாடுகளை உள்ளடக்கிய ஸ்மார்ட் நீர் அளவீட்டு அமைப்பை ஏற்கெனவே நிறுவியுள்ளது. சிப்காட் நிறுவனம், நீர்

பயன்பாட்டைச் சிறப்பாகக் கண்காணிக்கவும், நீர் விரயத்தைக் கட்டுப்படுத்தவும், மேலும் 14 தொழிற்பூங்காக்களில் 20 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஸ்மார்ட் நீர் அளவீட்டு அமைப்புகளை உருவாக்கும்.

6. மணப்பாறை, தேனி, திண்டிவனம் மற்றும் சூளகிரி ஆகிய சிப்காட்டின் 4 புதிய தொழிற்பூங்காக்களில் 5 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், ஒரு இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்படும்

சிப்காட் நிறுவனம், திருச்சி மாவட்டத்தில் மணப்பாறை, தேனி மாவட்டத்தில் தேனி, விழுப்புரம் மாவட்டத்தில் திண்டிவனம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சூளகிரி ஆகிய இடங்களில் 4 புதிய தொழிற்பூங்காக்களை உருவாக்கியுள்ளது. இந்த 4 தொழிற்பூங்காக்களில், பசுமை வளத்தை மேம்படுத்த 5 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஒரு இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்படும்.

7. விருதுநகர், சூளகிரி மற்றும் தேனி ஆகிய சிப்காட் தொழிற்பூங்காக்களில் 4.50 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நிருவாக அலுவலக வளாகம் கட்டப்படும்

சிப்காட் நிறுவனம், விருதுநகர், சூளகிரி மற்றும் தேனி ஆகிய புதிய தொழிற்பூங்காக்களில் 4.50 கோடி ரூபாய் மொத்த திட்ட மதிப்பீட்டில் நிருவாக அலுவலக வளாகக் கட்டடம் மற்றும் அதனைச் சார்ந்த வசதிகள் ஏற்படுத்தப்படும்.

8. மறுசுழற்சி முறையில் பெறப்படும் நீரினைக் கொண்டு ஒன்பது சிப்காட் தொழிற்பூங்காக்களின் தொழில் நீர் தேவையைப் பூர்த்தி செய்ய 1.20 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் விரிவான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படும்

சிப்காட் நிறுவனம், குமாரலிங்கபுரம், வெம்பூர், அல்லிக்குளம், தூத்துக்குடி, இலுப்பைக்குடி, ராணிப்பேட்டை, பனப்பாக்கம், மணப்பாறை மற்றும் திண்டிவனம் ஆகிய ஒன்பது தொழிற்பூங்காக்களின் தொழில் நீர் தேவையைப் பூர்த்தி செய்ய, இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினைக் கொண்டு, மூன்றாம் நிலை எதிர்சவ்வூடு பரவுதல் வாயிலாக மறுசுழற்சி முறையில் பயன்படுத்திட, 1.20 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் விரிவான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படும்.

9. சிப்காட் நிறுவனத்தில், 90 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஆவணங்களை டிஜிட்டல்மயமாக்கி, ஆவண மேலாண்மை அமைப்பு (Document Management System) ஏற்படுத்தப்படும்

*சிப்காட் நிறுவனத்தில் ஆவணங்களைத் திறம்படக் கையாளவும், துரிதமாக மீட்டெடுக்கவும், பணிமுறையினைச் சிறப்பாக்கவும், பாதுகாப்பை அதிகரிக்கவும், செலவினத்தைக் குறைக்கவும் 90 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஆவணங்களை டிஜிட்டல்மயமாக்கி, ஆவண மேலாண்மை அமைப்பு (*Document Management System*) ஏற்படுத்தப்படும்.*

10. சிப்காட் நிறுவனம், 3,000 ஏக்கர் நிலப்பரப்பிற்கு, 25 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் புவியியல் தகவல் முறைமை வரைபடம் (GIS Mapping) ஏற்படுத்தப்படும்

*சிப்காட் நிறுவனம், 21 சிப்காட் தொழிற்பூங்காக்களில் உள்ள 31,331 ஏக்கர் நிலப்பரப்பிற்கு புவியியல் தகவல் முறைமை வரைபடத்தினை (*GIS Mapping*) ஏற்கெனவே ஏற்படுத்தியுள்ளது. மேலும், 3,000 ஏக்கர் நிலப்பரப்பிற்கு, 25 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் புவியியல் தகவல் முறைமை வரைபடம் (*GIS Mapping*) ஏற்படுத்தப்படும்.*

11. திருவள்ளூர் மாவட்டம், காரணியில் சுமார் 3,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சுமார் 250 ஏக்கர் பரப்பளவில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதுகாப்புத் துறை சார்ந்த மின்னணுவியல் மற்றும் பாதுகாப்பு தொழில் பூங்கா டிட்கோ நிறுவனத்தால் அமைக்கப்படும்

*தொழில் துறையில் மேம்பட்டுள்ள தமிழ்நாட்டில், பாதுகாப்புத் துறை சார்ந்த மின்னணுவியல் (*Strategic Electronics*) மற்றும் ஆளில்லா விமானங்கள் (*Drones*) தயாரிப்பிலும் ஏற்றம்பெற ஏதுவான தொழில் சூழல் நிலவுகிறது. இதற்குக் காரணம், இங்குள்ள தொழில் நிறுவனங்கள், மின்னணு உபகரணத் தயாரிப்பு (*Electronics Manufacturing*) மற்றும் துல்லியப் பொறியியலில் (*Precision engineering*) அதிக முன்னேற்றம் கண்டுள்ளதே ஆகும். மேலும், இந்தத் துறைகள் சமீபத்திய ஆண்டுகளில் அதிவேக வளர்ச்சியடைந்து வருகின்றன.*

ஒன்றிய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) 2026 ஆம் ஆண்டிற்குள் இந்தியா இத்துறைகளில் முறையே ரூ.8 இலட்சம் கோடி மற்றும் ரூ.20,000 கோடி அளவிற்கு வளர்ச்சி அடையும் என மதிப்பிட்டுள்ளது. இந்தத் துறைகளில் தமிழ்நாடு மேலும் மேம்பட, உலகத்தரம் வாய்ந்த சோதனை வசதிகளை (Testing Facilities) நிறுவும் பணியில் டிட்கோ ஈடுபட்டுள்ளது. இதற்காக திருவள்ளூர் மாவட்டம், காரணியில், சுமார் 250 ஏக்கர் பரப்பளவில், இத்துறைகளில் ஈடுபடும் உற்பத்தியாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்களுக்கு உதவும் வகையில், தொழிற்பூங்காவை டிட்கோ அமைக்க உள்ளது. இங்கு தயாரிக்கப்படும் மின்னணு பொருட்கள் மற்றும் ஆளில்லா விமானங்களை (Drones), அருகிலேயே உள்ள வல்லம்-வடகால் தொழிற்பேட்டையில் அமைக்கப்படவுள்ள சோதனை மையங்களில் திறனாய்வு செய்ய இயலும். இத்திட்டத்தில் சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பூங்கா அமைப்பதன்மூலம், சுமார் 3,000 பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

12. நகரங்களுக்கு இடையேயான வான்வெளிப் பயணத்திற்கு ஹெலிகாப்டர்களைப் பயன்படுத்த உதவும் வகையில் தமிழ்நாடு வான்வழி இணைப்புத் திட்டத்திற்கான (TNREACH) வழிமுறை வகுக்கப்படும்

இந்தியாவிலேயே, தமிழ்நாடு மிகவும் நகரமயமாக்கப்பட்ட மாநிலமாகும். நம் மாநிலத்தின் பொருளாதார மேம்பாட்டில் வணிகப் பயணம் மற்றும் மருத்துவம், பொழுதுபோக்கு, சுற்றுலா போன்ற பயணங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. தமிழ்நாடு, நல்ல சாலை மற்றும் இரயில் இணைப்புகளைக் கொண்டிருந்தாலும், விமான இணைப்பு வசதி தற்போது, சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய 5 நகரங்களில் மட்டுமே உள்ளது.

நகரங்களுக்கு இடையேயான வான்வெளிப் பயணத்திற்கு ஹெலிகாப்டர்களைப் பயன்படுத்த உதவும் வகையில், அரசுத் துறைகள், ஹெலிபேட் ஆப்பரேட்டர்கள், ஹெலிகாப்டர் ஆப்பரேட்டர்கள் ஆகியோருக்குத் தேவையான வழிகாட்டுதல்களை (Institutional Mechanism) டிட்கோ நிறுவனம் உருவாக்கும். இந்த வழிகாட்டு முறையானது NCAP (National Civil Aviation

Policy) மற்றும் இந்திய அரசின் ஹெலிகாப்டர் கொள்கையின் கட்டமைப்பிற்குள் செயல்படும். ஹெலிகாப்டர் இயக்கத்திற்கான நிர்வாக வழிகாட்டியாக இருக்கும் “ஹெலி திஷா” (Heli Disha) மற்றும் ஹெலிகாப்டர் செயல்பாட்டிற்கு இணைய வழியில் அனுமதி வழங்குவதற்கான “ஹெலி சேவா” (Heli Sewa) இணையதளம் ஆகியவற்றின் தொடர்ச்சியாக இந்த வழிகாட்டுதல்கள் இருக்கும். இதன்மூலம், செயல்பாட்டில் இல்லாத ஹெலிபேடுகளைக் கண்டறிந்து, ஹெலிகாப்டர் ஆப்பரேட்டர்கள்மூலம் நகரங்களுக்கு இடையேயான வான்வெளி இணைப்பை மேம்படுத்த முடியும். இவ்வழிமுறையானது தமிழ்நாட்டின் வான்வெளி தொழில் துறைக்கு வலிமை சேர்ப்பதுடன், பயன்பாட்டில் இல்லாத ஹெலிபேடுகளைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவந்து, அதன்மூலம் நிதி திரட்டவும், தமிழ்நாட்டில் வான்வெளிப் போக்குவரத்தை மேம்படுத்தவும் பயன்படும்.

13. “டைசல் உயிரியின் முகவரி” என்ற பெயரில் டைசல் புத்தாக்க மையம் சுமார் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் அமைக்கப்படும்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (TIDCO) உயிரி தொழில்நுட்ப மையமான டைசல் உயிரியல் தொழில்நுட்ப நிறுவனம் (TICEL Biopark Ltd.) மூலம் “டைசல் உயிரியின் முகவரி” என்ற டைசல் புத்தாக்க மையத்தை (TICEL Innovation Hub) நிறுவி, அதன்மூலம் உயிரி தொழில்நுட்பக் கல்வி, ஆராய்ச்சி, தொழில் நிறுவனங்களின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, திறன் மேம்பாடு, புத்தாக்கம் மற்றும் புத்தொழில் முனைவு போன்ற முயற்சிகளுக்கு ஆதரவாக செயலாற்ற உயிரி தொழில்நுட்ப முதன்மைக் கருவிகள் வசதி மையத்தின் (Biotechnology Core Instrumentation Facility-BTCIF) வாயிலாக, கூட்டுத் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி (Joint Skill development program), கூட்டு ஆராய்ச்சிகள் (Joint research), செயல்முறைப் பயிற்சி வகுப்புகள் (Hands-on training programs) ஆகியவற்றை மேற்கொள்ள உள்ளது.

இந்தப் புத்தாக்க மையம், சுமார் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டைசல் நிறுவனத்தின் நிதி, மாநில மற்றும் ஒன்றிய அரசுகளின் நிதி மற்றும் தொழில் நிறுவனங்களின் நிதி பங்களிப்புடன் உருவாக்கப்படும்.

14. தொழில் துறையின்கீழ் உள்ள பொதுத் துறை நிறுவனங்களின் திட்டங்கள் விரைவாகவும், முழு செயல்திறனோடும், பொறுப்புணர்வோடும் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய தலைமைப் பொறியாளர் அல்லது கண்காணிப்புப் பொறியாளர் தலைமையில் ஒரு பிரத்யேக பொறியியல் பிரிவு உருவாக்கப்படும்

தொழில் துறையின் பொதுத் துறை நிறுவனங்களான, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் [TIDCO], டிட்கோவின் இணை நிறுவனமான டைடல் பார்க் நிறுவனம் (TIDEL PARK) மற்றும் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் (SIPCOT) தமிழ்நாடு தொழிலக வீட்டு வசதி நிறுவனம் (TNIHCL) ஆகிய நிறுவனங்கள்மூலம், நிதிநுட்ப நகரம் (Fintech City), புத்தாக்க தொழில் மையம் (Startup Hub), கனரக பொறியியல் மையம் (Heavy Engineering Hub), டைடல் பட்டாபிராம் (TIDEL Pattabiram), ஏரோ ஹப் (Aero Hub), தயார்நிலை தொழிற்கூடங்கள் (Plug-n-Play Facilities), டைடல் மதுரை (TIDEL Madurai), இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் மினி டைடல்கள் (Mini TIDELs), தொழிலாளர் தங்கும் விடுதி, பெண்கள் தங்கும் விடுதி, திறன் மேம்பாட்டு மையங்கள் போன்ற பல்வேறு திட்டங்கள் மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்காகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தொழில் துறையின்கீழ் உள்ள பொதுத் துறை நிறுவனங்களின் திட்டங்களை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் செயல்படுத்தத் தேவையான எண்ணிக்கையிலான கோட்டங்களுடன், தலைமைப் பொறியாளர் அல்லது கண்காணிப்புப் பொறியாளர் தலைமையில் ஒரு பிரத்யேக பொறியியல் பிரிவு உருவாக்கப்படும். இந்தப் பிரிவை அமைப்பதன்மூலம், திட்டங்கள் விரைவாகவும், முழு செயல்திறனோடும், பொறுப்புணர்வோடும் செயல்படுத்தப்படுவது உறுதி செய்யப்படும்.

15. திருச்சிராப்பள்ளி மற்றும் சுற்றுப் பகுதிகளில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை மேம்படுத்த 10 இலட்சம் சதுர அடியில், 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா (டைடல் பார்க்) ஒன்று நிறுவப்படும்

தமிழ்நாட்டின் மையப் பகுதியில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி மாவட்டம் மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளுக்கு

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பலன்களை எடுத்துச் செல்லும் விதமாக திருச்சிராப்பள்ளி, பஞ்சப்பூர் பகுதியில் 10 இலட்சம் சதுர அடியில் சுமார் 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று, டிட்கோ நிறுவனத்தின் இணை நிறுவனமான டைடல் பார்க் நிறுவனம்மூலம் படிப்படியாக அமைக்கப்படும். இதனால் 10,000 நபர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வேலைவாய்ப்பு உருவாக்கப்படும்.

16. சிவகங்கை மாவட்டம், காரைக்குடி மற்றும் நாமக்கல் மாவட்டம், இராசிபுரத்தில் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்படும்

தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப சூழல் அமைப்பினை விரிவுபடுத்தும் வகையில், இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் 50,000 சதுர அடி முதல் 1,00,000 சதுர அடி பரப்பளவு கொண்ட மினி டைடல் பூங்காக்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

சிவகங்கை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களைச் சார்ந்த இளைஞர்கள், தகவல் தொழில்நுட்பத் துறையில் வேலைவாய்ப்பு பெறும் வகையில், காரைக்குடி சிறப்பு நிலை நகராட்சியில் சுமார் 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மினி டைடல் பூங்கா அமைக்கப்படும். தகவல் தொழில்நுட்பம் சார்ந்த முதலீட்டை ஈர்க்கவும், இப்பகுதி, சமூக பொருளாதார வளர்ச்சி பெறவும் இத்திட்டம் வழிவகை செய்யும்.

பேருந்து மற்றும் சரக்கு வாகனங்களின் கட்டுருவாக்கம் மற்றும் கோழி வளர்ப்பு ஆகியவற்றிற்காக இந்தியா முழுவதும் பெயர்பெற்ற நாமக்கல் மாவட்டத்தில் பல புகழ்பெற்ற கல்லூரிகளும் அமையப் பெற்றிருக்கின்றன. இம்மாவட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் படித்த இளைஞர்கள் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த துறையில் வேலைவாய்ப்பு பெறும் வகையில், இராசிபுரம் வட்டத்தில் சுமார் 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மினி டைடல் பூங்கா ஒன்று அமைக்கப்படும்.

17. அரியலூர் சிமென்ட் வளாகத்தில் இயங்கும் அரசு நகர் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் (AMHSS) உயிரியல் ஆய்வகம் மற்றும் இயற்பியல் ஆய்வுக் கூடம் உட்பட நான்கு வகுப்பறைகள் 1.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்

டான்செம் 1980 ஆம் ஆண்டு முதல் அரசு நகர் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியை நடத்தி வருகிறது. குழந்தைகளுக்காக சலுகைக் கட்டணத்தில் கல்வி வழங்குவதன்மூலம் அருகிலுள்ள கிராமங்கள் பயனடைகின்றன. தற்போது, ஏசி ஷீட் கூரை கட்டடத்தில் நான்கு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், உயிரியல், இயற்பியல் ஆய்வக கட்டடம் இல்லை. ஏசி ஷீட் வகுப்பறைகளை RCC கட்டடங்களாக மாற்றி தனித் தனி அறைகளில் உயிரியல் மற்றும் இயற்பியல் ஆய்வகம் ஆகியன 1.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

18. அரியலூர் சிமென்ட் ஆலையில் இயங்கிவரும் டான்செம் மேல்நிலைப் பள்ளியில் ரூபாய் 30 இலட்சம் செலவில் உயர் தொழில்நுட்பத்துடன்கூடிய ஸ்மார்ட் வகுப்புகள் தொடங்கப்படும்

அரியலூர் ஆலையில் இயங்கும் டான்செம் மேல்நிலைப் பள்ளியில் ஒன்பது முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 30 இலட்சம் ரூபாய் செலவில் ஸ்மார்ட் வகுப்புகள் தொடங்கப்படும்.

19. அரியலூர் சிமென்ட் தொழிற்சாலை வளாகத்தைச் சுற்றி 3,400 மீட்டர் நீளம் புதிய வளாகச் சுவர் 4 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்

அரியலூர் சிமென்ட் தொழிற்சாலை வளாகச் சுவரின் மொத்த நீளம் சுமார் 5,000 மீட்டர் ஆகும். ஏறக்குறைய 1,600 மீட்டர் ஏற்கெனவே கட்டப்பட்டு, நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள 3,400 மீட்டர் வளாகச் சுவர் மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ளதால், புதிய வளாகச் சுவர் 4 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

20. அரியலூர் சிமெண்ட் ஆலையில் ஆனந்தவாடி மற்றும் கல்லங்குறிச்சி சுரங்க குத்தகை எல்லையை ஒட்டி இரும்பு முள்வேலி, மூடிய மின்சுற்று தொலைக்காட்சி கருவிகள் (சி. சி.டி.வி. கண்காணிப்பு கேமரா/கருவி) 1.50 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்

அரியலூர் சிமெண்ட் ஆலையில் ஆனந்தவாடி சுரங்கம் மற்றும் கல்லங்குறிச்சி சுரங்கம் 55.81 கிலோ மீட்டர் சுற்றளவு கொண்டுள்ளது. அனுமதியின்றி வெளிநபர் யாரும் சுரங்கத்திற்குள் நுழைந்து விபத்து நிகழ்வதைத் தடுக்கவும், சுண்ணாம்புக் கற்கள் திருடப்படுவதைத் தடுப்பதற்கும் முதற்கட்டமாக 26.63 கிலோ மீட்டர் சுரங்கக் குத்தகை எல்லையைச் சுற்றி 1.50 கோடி ரூபாயில் பாதுகாப்பு இரும்பு முள்வேலி மற்றும் மூடிய மின்சுற்று தொலைக்காட்சி கருவிகள் (சி.சி.டி.வி. கண்காணிப்பு கேமரா/கருவி) அமைக்கப்படும்.

21. டான்செம் நிறுவன வள திட்டமிடல் (ERP) 5.20 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்

*நிறுவன வள திட்டமிடல் (ERP) என்பது ஒரு வகையான மென்பொருள் அமைப்பாகும். இது நிறுவனங்களின் சிறந்த செயல்திறனுக்காக முக்கிய வணிக செயல்முறைகளை தானியங்குபடுத்தவும், நிர்வகிக்கவும் உதவுகிறது. தற்போதுள்ள (*ERP*)–*Database *(*Oracle *11g),* Oracle Application Server and Programming Language *(*Java, Servlet, JSP*) 10 ஆண்டுகளுக்கும் மேலான பழைய பதிப்பு ஆகும். எனவே, புதிய சர்வருடன் எளிய மற்றும் பாதுகாப்பான அம்சங்களுடன், சமீபத்திய அனைத்து* ERP *அம்சங்கள் மற்றும் தனிப்பயன் தேவைகளை உள்ளடக்கியதன்மூலம் புதிய பதிப்பு (*Linux, Apache, MYSQL, PHP–LAMP*) 5.20 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.*

பிற்பகல் 2–55

22. ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் 1.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விருந்தினர் மாளிகை, ஆய்வகம், விற்பனை மற்றும் கணக்குத் துறை கட்டடங்கள் மற்றும் பணியாளர் குடியிருப்பு புதுப்பிக்கப்படும்

டான்செம் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையின் விருந்தினர் மாளிகை கட்டடம் 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், ஆய்வக

அறை கட்டடம் 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், விற்பனைப் பிரிவு, கணக்குப் பிரிவு மற்றும் விற்பனை கணக்குப் பிரிவு கட்டடங்கள் 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் ஆலைப் பணியாளர் குடியிருப்புகள் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் 1.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

1. ஐந்து தமிழ் எழுத்தாளர்களின் நூல்களை நாட்டுடைமை செய்து, பரிவுத் தொகையாக ரூபாய் 45 இலட்சம் வழங்கப்படும்

இராவ் சாகேப் திரு. கு. கோதண்டபாணி பிள்ளை (ரூ.10 இலட்சம்)

முனைவர் இரா. மோகன் (ரூ.10 இலட்சம்)

திரு. கோ. முத்துப்பிள்ளை (ரூ.10 இலட்சம்)

திரு. ம.சு. சம்பந்தம் (ரூ.10 இலட்சம்)

திருமதி அம்சவேணி (ரூ.5 இலட்சம்)

2. ஒரிசா மாநிலத்திலுள்ள புவனேஸ்வர் தமிழ்ச் சங்க கட்டட விரிவாக்கப் பணிகளுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் ரூபாய் 15 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்

1992 ஆம் ஆண்டு முதல் ஒரிசா மாநிலத்தில் இயங்கிவரும் புவனேஸ்வர் தமிழ்ச் சங்கத்தில் தமிழ் மொழியைக் கற்பிக்க ஏதுவாக வகுப்பறைகள் மற்றும் கட்டட விரிவாக்கப் பணிகளுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் ரூபாய் 15 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்.

3. மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் திருவுருவச் சிலையும் மற்றும் பாவாணர் கோட்டமும் சென்னையில் அமைக்கப்படும். இதற்கென ரூபாய் 3 கோடியே 50 இலட்சம் வழங்கப்படும்

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் திருவுருவச் சிலை சென்னைப் பல்கலைக்கழக இணைவக கட்டட வளாகத்தில் அடிபீடம் மற்றும் சுற்றுத் தரைத்தளத்துடன் நிறுவப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூபாய் 50 இலட்சம் வழங்கப்படும்.

சென்னையில் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் கோட்டம் ரூபாய் 3 கோடியில் அமைக்கப்படும்.

4. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் திங்கள்தோறும் இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறை நடத்தப்படும். இதற்கென ரூபாய் 38 இலட்சம் வழங்கப்படும்

தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக தமிழ்நாட்டில் பயிலும் அனைத்துக் கல்லூரி மாணவர்களிடையே தமிழ்மொழி மீதான ஆர்வத்தையும், இலக்கியச் சிந்தனையையும் மேம்படுத்தி, அவர்களைத் தமிழ் ஆர்வலராக்கவும், அவர்களின் தன்னம்பிக்கையை மேம்படுத்தும் நோக்கிலும் தமிழறிஞர்களைக் கொண்டு ஒரு நாள் இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறை திங்கள்தோறும் மூன்று அல்லது நான்கு மாவட்டங்கள் என ஓராண்டில் அனைத்து மாவட்டங்களில் நடத்தப்பெறும்.

இத்திட்டத்திற்குத் தொடர் செலவினமாக ரூபாய் 38 இலட்சம் வழங்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய அனைத்து வெட்டுத் தீர்மானங்களையும் நான் படித்துப் பார்த்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கக்கூடிய இந்த வெட்டுத் தீர்மானங்கள், தமிழ் வளர்ச்சித் துறையில் மாத்திரம் மொத்தம் 102 வெட்டுத் தீர்மானங்கள். அதிலே துறை சார்ந்து 72. பிற துறைகள் சார்ந்து 30. 'கொள்கை பற்றி' விவாதிக்க 34. 'பிற பொருள்கள் பற்றி' விவாதிக்க 38. பிற துறைகள் சார்ந்து விவாதிக்க 30 என்றளவிலே இருக்கிறது. தொழில் துறையினுடைய வெட்டுத் தீர்மானங்கள் 126. தொழில் துறை சார்ந்தது 97. பிற துறைகள் சார்ந்தது 29. 'கொள்கை பற்றி' விவாதிக்க 35. 'புதிய தொழிற்சாலைகள் பற்றி' விவாதிக்க 27. 'பிற பொருள்கள்பற்றி' விவாதிக்க 64 என்று அவை அமைந்திருந்தன. அவற்றையெல்லாம் நான் படித்துப் பார்த்திருக்கிறேன். நிச்சயமாக அவற்றிற்கான தீர்வுகளை எதிர்காலத்திலே காண்பதற்கு இந்தத் துறையின் சார்பாக நான் முயற்சிகளை மேற்கொள்வேன் என்பதைத் தெரிவித்து, இந்த நேரம் வரை பொறுமையாக இருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியினை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. தங்கம் தென்னரசு] [2023 ஏப்ரல் 6

நம்முடைய தலைமைச் செயலாளர் மதிப்பிற்குரிய திரு. வெ. இறையன்பு, I.A.S. அவர்கள், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ச. கிருஷ்ணன், I.A.S. அவர்கள், மாண்புமிகு முதலமைச்சருடைய செயலாளர்கள் திரு. உதயச்சந்திரன், I.A.S. அவர்கள், திரு. உமாநாத், I.A.S. அவர்கள், திரு. சண்முகம், I.A.S. அவர்கள், திருமதி அனு ஜார்ஜ், I.A.S. அவர்கள், நிதித் துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. நா. முருகானந்தம், I.A.S. அவர்கள், TIIC, CMD, திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, I.A.S. அவர்கள், TNPL, CMD, திரு. சாய்குமார், I.A.S. அவர்கள், TIDCO, MD, திருமதி ஜெய்ஸ்ரீ முரளிதரன், I.A.S. அவர்கள், SIPCOT, MD, திருமதி சுந்தரவள்ளி, I.A.S. அவர்கள், Guidance, MD, திரு. விஷ்ணு, I.A.S. அவர்கள், TANCEM, MD, திரு.காமராஜ், I.A.S. அவர்கள், Tamil Nadu Salt Corporation Limited மேலாண்மை இயக்குநர், திரு. ராஜாமணி, I.A.S. அவர்கள், தமிழ் வளர்ச்சித் துறையின் செயலாளர், முனைவர் செல்வராஜ், இ.ஆ.ப. அவர்கள், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள் அவர்கள், அகர முதலி திட்ட இயக்குநர், முனைவர் விஜயராகவன் ஆகிய அனைவருக்கும் நான் என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, என்னுடைய விளக்கங்களை ஏற்று, மானியக் கோரிக்கைகளை நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டு, நன்றிகூறி அமைகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது, மாண்புமிகு அமைச்சர் ** என்று சொன்னார்கள். அந்த வார்த்தையை. . . (குறுக்கீடு) அந்த அமைச்சர் சொல்லும்போது நீங்கள் கவனிக்கவில்லை. அந்த வார்த்தையை நீக்கிவிடலாம். மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையின் மானியக் கோரிக்கைக்கு உறுதுணையாக இருந்து உதவிய* MSME *துறையினுடைய அரசுச் செயலாளர் திரு.* V. *அருண்ராய்,* I.A.S. *அவர்களுக்கும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி மட்டும் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *தொழில் ஆணையர், திருமதி சிகி தாமஸ் வைத்தியன்,* I.A.S. *அவர்களுக்கும்,* TANSI *மேலாண்மை இயக்குநர், முனைவர் ச. விஜயகுமார்,* I.A.S. *அவர்களுக்கும்,* SIDCO *மேலாண்மை இயக்குநர், திருமதி சோ. மதுமதி,* I.A.S. *அவர்களுக்கும், உயர் அலுவலர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு அமைச்சர்கள் நீண்ட நேரம் தங்களுடைய கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அதிலும், தம்பி திரு. தங்கம் தென்னரசு அவர்கள் சட்டமன்றத்திலே புலவர் கீரனைப் போல் (மேசையைத் தட்டும் ஒலி)* industry*-ஐ பற்றி நாம் நினைத்ததைவிட, தமிழ் இனித்தது. காரணம் அவரை இளம் வயதிலிருந்தே எனக்குத் தெரியும். அவர்* Engineering *படித்தாலும், தமிழை உணர்வோடு படித்தவர். ஆகையினால், தமிழறிஞருக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ள மாட்டேன். 45* minutes, *40 நிமிஷம் எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்ல மாட்டேன். அப்படிச் சொல்லவில்லை, (குறுக்கீடு) இல்லை, இல்லை. அலகாபாத்தில் ஆறு ஓடும். அதற்குப் பெயர் திரிவேணி சங்கமம் என்று பெயர். யமுனையும், கங்கையும் ஒன்றாக ஓடும். இன்னொரு ஆறு எங்கே என்று கேட்டால், அது சரஸ்வதி ஆறு, அந்த ஆறு கண்ணுக்குத் தெரியாது. இவை இரண்டுதான் தெரியும். அந்த மாதிரி இவை இரண்டுதான் தெரிந்தது.*

பிற்பகல் 3-00

திரிவேணி சங்கமத்தில்—இந்த Mines *தெரியவே இல்லை. உங்களுக்கும் தெரியவில்லை;* Mines *உண்டு என்று போட்டார்கள்*

பாருங்கள், ** யாருக்கும்—ஒரேயொரு ஆள் நம்முடைய உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் மட்டும் அதுகுறித்துப் பேசினார். ஏனென்றால், அவர் கொஞ்ச நாள் இந்தத் துறையை வைத்துக்கொண்டிருந்தார். ஏனென்றால், அவர்மட்டும்தான் பேசினார். ஆகையினால், இதில் யாரும் பேசவில்லை. பரவாயில்லை; மகிழ்ச்சி. இருந்தாலும், என்னைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 50 ஆண்டு காலத்திற்குமேலாக நான் சட்டசபையில் உட்கார்ந்திருக்கிறேன். நான், Public Works Department, Highways Department, Energy Department, Law Department, Forest Department, Personnel & Administrative Reforms Department, Vigilance Department உள்ளிட்ட இவ்வளவு இலாகாக்களையும் வகித்திருக்கிறேன். ஆனாலும், இந்த இலாகாவைப் போன்று, மூக்கணாங்கயிறு இல்லாத ஓர் இலாகாவை, Mines Department-ஐ எப்படித்தான் வைத்துக்கொண்டிருந்தார்களோ என்று தெரியவில்லை; அது இலாகா மாதிரியும் இல்லை. அதைக் கட்டிக் காப்பதே எனக்குப் பெரிய வேலையாகப் போய்விட்டது. ஆனாலும், எப்படியோ, மூக்கணாங்கயிறு போட்டு, இழுத்து, நம்முடைய Secretary போன்றவர்களெல்லாம் உடனிருந்ததனால் செய்துவிட்டேன். இத்துறையில் என்ன செய்திருக்கிறேன் என்கிற விஷயத்தை மட்டும் நான் சொல்லிவிடுகிறேன்.

இந்தத் துறையில் புவியியல் மற்றும் சுரங்கத் துறை, (Geology and Mining) என்ற ஒன்றிருக்கிறது; தமிழ்நாடு கனிம நிறுவனம், Tamil Nadu Minerals Limited (TAMIN)) என்று ஒன்றிருக்கிறது; தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம், Tamil Nadu Magnesite Limited (TANMAG) என்று ஒன்றிருக்கிறது. இந்த மூன்று பிரிவுகளை உள்ளடக்கியதுதான் இந்த இலாகா. இந்த இலாகாவில் என்ன செய்திருக்கிறோம் என்பது குறித்து விரிவாக நான் பேச வேண்டுமென்றால், இப்போது மணி 3-00 ஆகிவிட்டது; இதற்குமேல், விடமாட்டீர்கள். எனவே, short ஆகச் சொல்கிறேன். கடந்த இரண்டு வருடங்களில் மூக்கணாங்கயிறு இல்லாத இந்த இலாகாவை, மூக்கணாங்கயிறு போட்டு, இழுத்துப் பிடித்து செய்திருப்பதன் விளைவு, புவியியல் மற்றும் சுரங்கத் துறை, அதாவது Geology and Mining Department-ல் வருவாய் 2019–2020–ல் ரூ.1,392 கோடி; 2020–2021–ல் வருவாய் ரூ.1,047 கோடி; 2021–2022–ல் ரூ.1,712 கோடி; 2022–2023–ல் வருவாய் ரூ.1,572 கோடி.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அடுத்து, TAMIN-ல் என்னவென்று கேட்டீர்களென்றால், 2019–2020-ல் வருவாய் ரூ.21 கோடி; 2020–2021-ல் வருவாய் ரூ.32 கோடி; நாம் ஆட்சிக்கு வந்த பிறகு, 2021–2022-ல் வருவாய் ரூ.75 கோடி; 2022–2023-ல் ரூ.93 கோடி. (மேசையைத் தட்டும் ஒலி)

TANMAG-ல் எப்படியென்று கேட்டால், 2019–2020-ல் இழப்பு ரூ.81 கோடி; 2020–2021 இல் இழப்பு ரூ.19.51 கோடி; இப்போது தளபதி ஆட்சியில், 2021–2022 இல் ரூ.16.6 கோடி இலாபம்; (மேசையைத் தட்டும் ஒலி) 2022–2023 இல் ரூ.19.30 கோடி இலாபம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, பள்ளத்தில் இருந்ததை சமதளத்தில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறோம். அடுத்த ஐந்தாண்டுகளில் அது கோபுரமாக உயர்த்திக் காட்டப்படும் என்பது உறுதி.

பிற்பகல் 3-05

இரண்டாவது, நம்முடைய நண்பர் திரு. தங்கமணி அவர்கள் பேசியபோது, இரண்டு விஷயங்களை மட்டும் சொன்னார். அதற்கு மட்டும் பதில் சொல்லிவிடுகிறேன். விவசாயிகளுக்கும், மண்பாண்டத் தொழிலாளர்களுக்கும் மண் எடுக்க அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டார். அதற்காக நான் அவருக்குப் பதில் சொல்கிறேன். செங்கல் சூளைக்கான மண்ணை, Rule 44-ன்கீழ் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டோம். பட்டா நிலங்களில் வழங்கப்படும் செங்கல் சூளை உரிமங்களுக்காக மண் எடுக்க உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளைப் பொறுத்தவரையில் பட்டா நிலங்களில் சீர்திருத்தம் செய்வதற்காக 1.5 மீட்டர் ஆழத்திற்கு மிகாமல் இருக்கும் மண்ணை எடுக்கலாம். அதற்கு சுற்றுச்சூழல் சான்றிதழ் தேவையில்லை. உரிய உரிமக் கட்டணம் செலுத்தி, மண்ணை எடுத்து, செங்கல் சூளைப் பணிக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆக, இந்த இரண்டு பேரும் தாராளமாக மண் எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Right. செங்கல் சூளைக்கும், மண்பாண்டத் தொழிலுக்கும் மண் எடுத்துக்கொள்ள நீங்கள் அனுமதிக்கிறீர்கள்!

மாண்புமிகு திரு. துரைமுருகன்: இரண்டு பேரும் எடுத்துக்கொள்ளலாம். இதில் பெரிய பிரச்சினை ஒன்றும் இல்லை; எந்தப் பிரச்சினையும் வராது. ஏதாவது பிரச்சினை இருந்தால்

சொல்லலாம். நாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) பொறுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, ஏற்கெனவே 2011–க்கு முன்பு அந்தந்தத் தொழில் செய்பவர்கள் மாவட்ட ஆட்சியர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, மண்ணை எடுத்தார்கள். அதன்படி கிடைக்குமா என்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாவட்ட ஆட்சியர் அவர்களுடைய அனுமதியும் தேவையில்லை; வேறு licence–ம் தேவையில்லை. நேரடியாக எடுத்துக்கொள்ளலாம். அறிவிப்புகள். (குறுக்கீடு) நாங்களும் அறிவிப்பு செய்ய வேண்டுமல்லவா! உட்காருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அறிவிப்புகள்

1. கனிம ஆய்வினை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு மாநிலக் கனிம ஆய்வு நிதியம் உருவாக்கப்படும்

தமிழ்நாட்டில் படிந்துள்ள கனிமங்களின் இருப்பு, தரம், புவியமைப்பியல் ஆகியவற்றை அறியும்பொருட்டு கனிம ஆய்வு மேற்கொள்ள தமிழ்நாடு மாநிலக் கனிம ஆய்வு நிதியம் ஒன்று உருவாக்கப்படும். இந்நிதியத்திற்கு சிறுகனிம குத்தகைதாரர்கள் செலுத்தும் உரிமக் கட்டணத்தில் 2% தொகை நிதியாகப் பெறப்படும். இதனை மேற்கொள்ள தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள், 1959–ல் திருத்தம் மேற்கொள்ளப்படும். சிறுகனிம குத்தகைதாரர்களிடமிருந்து பெறப்படும் 2% உரிமத் தொகையின்மூலம் அரசுக்கு ஆண்டுதோறும் சுமார் 6 கோடி ரூபாய் வருவாய் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

2. தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு எரிவாயுவைப் பயன்படுத்தி கிராபைட் கனிமத்தை உலர்த்தும் முறை 50 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்

தமிழ்நாடு கனிம நிறுவனம், சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள கிராபைட் ஆலையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த

2023 ஏப்ரல் 6] [திரு. துரைமுருகன்]

வகையில் உற்பத்தியை மேம்படுத்த 50 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில், டீசலுக்குப் பதிலாக எரிவாயுவைப் பயன்படுத்தி கிராபைட்டை உலர்த்தும் முறை செயல்படுத்தப்படும். இதன்மூலம் கார்பன் வெளியேற்றம் குறைக்கப்பட்டு, எரிபொருள் செலவு 25 சதவிகிதம் மீதமாகும்.

3. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் ஒன்பது கிரானைட் சுரங்கங்கள் 10 கோடி ரூபாய் செலவில் மின்மயமாக்கப்படும்

தமிழ்நாடு கனிம நிறுவனம் சுரங்கப்பணிமூலம் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கும் பொருட்டும், எரிபொருள் செலவினைக் கட்டுப்படுத்தும் பொருட்டும் நிலையான சுரங்கப் பணிகளுக்காக 10 கோடி ரூபாய் செலவில் ஒன்பது கிரானைட் சுரங்கங்கள் மின்மயமாக்கப்படும். இதன்மூலம் கார்பன் உமிழ்வு (Carbon footprint) குறைக்கப்படுவதுடன் எரிபொருள் செலவு சுமார் 40 சதவிகிதம் மீதமாகும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுக்கவில்லை; கொடுத்திருந்தால் அவற்றையும் வாபஸ் வாங்கிக் கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ** என்று சொன்னார்கள். தயவுசெய்து அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.*

(அ) கோரிக்கை எண் 27–தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 27–தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,063,78,84,000/–, மூலதனக் கணக்கில் ரூ.504,30,06,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.700,23,34,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

(ஆ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.116,96,55,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

(இ) கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை,)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,349,23,93,000/–, மூலதனக் கணக்கில் ரூ.10,00,03,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.150,00,02,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை 5–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–09 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் மாலை 5–00 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.*

4. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(ஈ) கோரிக்கை எண் 12 – கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

(உ) கோரிக்கை எண் 13 - உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

(ஈ) கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4,983,37,05,000/–, மூலதனக் கணக்கில் ரூ.6,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.2,00,03,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

2023 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 154, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 213, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 251, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 310, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன்.

திரு. R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,983,37,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1735, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன்.

திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,983,37,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3493, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4765, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6659, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,983,37,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7522, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,983,37,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 369, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,983,37,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 485, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,983,37,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 504, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6243, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,983,37,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6955, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,983,37,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 686, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி.

திரு. அ. பண்ணாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,983,37,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 934, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1407, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2367, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,983,37,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2599, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2645, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3250, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.

2023 ஏப்ரல் 6]

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,983,37,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3299, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,983,37,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3345, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3534, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,983,37,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3647, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா, இருக்கையில் இல்லை.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

வெட்டுத் தீர்மானம் எண் 4551, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5989, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ்.

திரு. இ.மா. மான்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,983,37,05,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7230, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,983,37,05,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2279, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3197, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3435, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4468, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5454, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து, இருக்கையில் இல்லை.

2023 ஏப்ரல் 6] [பேரவைத் தலைவர்]

வெட்டுத் தீர்மானம் எண் 958, மாண்புமிகு உறுப்பினர் திரு. KA. பாண்டியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1029, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் உள்ள தொடக்க வேளாண்மை வங்கிக் கட்டடத்தைப் புதிதாக கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,983,37,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1508, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரேஷன் கடைகளுக்குத் தேவையான கட்டடங்களைக் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,983,37,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1605, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1881, மாண்புமிகு உறுப்பினர் திரு. KC. கருப்பணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2099, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2134, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்.

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடம் தொகுதிக்குட்பட்ட தொடக்க வேளாண்மை மற்றும் CMS சங்கத்தின்கீழ் இருக்கும் நியாய விலைக் கடைகளில் அதிகமான அட்டைகள் இருக்கும் முதன்மைக் கடைகளைப் பிரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,983,37,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2708, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.

திரு. செல்லூர் கே. ராஜூ: கூட்டுறவு வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு Rupay Card கொடுக்கப்பட்டன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். தனியார்

மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு இணையாக வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்ற வேண்டுமென்ற உன்னத நோக்கத்தில்தான் இந்தத் திட்டங்களையெல்லாம் கொண்டு வந்தோம்.

இதுதான் முக்கியமான திட்டம். குறு, சிறு விவசாயிகள் விளைபொருட்களை விளைவிக்கிறார்களென்றால், மழைக் காலங்களில் அந்த விளைபொருட்களை அவர்களுடைய வீட்டில் வைத்துக்கொள்ள முடியாது. அவர்கள் போதிய இடமில்லாமல் ஒண்டியிருக்கிறார்கள். எனவே, அவர்களுக்காக ஏறத்தாழ ரூ.533.78 கோடி மதிப்பீட்டில் 4,411 கிடங்குகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. விவசாயிகள் அந்தக் கிடங்குகளில் விளைபொருட்களை ஆறு மாதங்கள் வரையில் வைத்துக்கொள்ளலாம். ஆறு மாதங்கள் கழித்து, அந்த விளைபொருட்களை விற்றுக்கொள்ளலாம். அப்படிச் செய்யும்போது, அவர்களுக்கு விலையும் கூடுதலாகக் கிடைக்கும். அறுவடைக் காலங்களில் விலை குறைவாக இருக்கும்; அதேநேரத்தில், கிடங்குகளில் வைத்துக்கொள்ளும்பொழுது, அவர்களுக்கு 20 சதவிகிதம், 25 சதவிகிதம் விலை கூடுதலாகக் கிடைக்கும். இந்தத் திட்டத்தையும் கொண்டு வந்தது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் முதல் மாநிலக் கூட்டுறவுச் சங்கங்கள் வரையுள்ள சங்கங்கள் அபரிமிதமான வளர்ச்சியடைந்ததற்குக் காரணம், அங்கு பணியாற்றும் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் ஆவர். அவர்களுக்கு 7 சதவிகிதம் முதல் 21 சதவிகிதம் வரை சம்பள உயர்வு வழங்கியதோடு மட்டுமல்லாமல், அரசு ஊழியர்களைப்போல கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களையும் அவர்களுடைய குடும்பத்தினரையும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் இணைத்து உற்சாகப்படுத்தியதன் காரணமாக—நான் பதவியேற்கும்போது, இந்தத் துறையின் சார்பாக தமிழ்நாடு அரசுக்கு அகில இந்திய அளவில் இரண்டு ஜனாதிபதி விருதுகள் மட்டும் வழங்கப்பட்டிருந்தன. நான் அமைச்சராக இருந்த என்னுடைய பத்து ஆண்டுக் காலத்தில்—இரண்டு ஜனாதிபதி விருதுகள் உட்பட 28 விருதுகளைப் பெற்றது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய

அரசு என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாகப் பேசி உரையை முடித்துக்கொள்கிறேன். 2012 முதல் 2020 வரையிலான எங்களுடைய ஆட்சிக் காலத்தில், மாநிலம் முதல் மாவட்டம் வரையிலான ஆள் சேர்ப்பு நடவடிக்கைகளால் மட்டும் 9,560 விற்பனையாளர்களும், 1,993 கட்டுனர்களும், 7,001 உதவியாளர்களும் என ஆக மொத்தம் சுமார் 18,500 பணியிடங்கள் நிரப்பப்பட்டன. இந்த ஆட்சியில் கடந்த இரண்டு ஆண்டுகளில் வேலைவாய்ப்பு இல்லாத நிலையில், ஒரு காலிப் பணியிடம்கூட நிரப்பப்படவில்லை. விற்பனையாளர், கட்டுனர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி, அவர்களின் பணிச் சுமையைக் குறைக்கின்ற வகையிலும், மக்களுக்குத் தங்குதடையின்றி பொருட்கள் கிடைப்பதற்கு உதவி செய்யுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதுமே, போதுமே!*

திரு. செல்லூர் கே. ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 35 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி ஓய்வுபெற்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள், எங்களுக்கு ஒன்றுமேயில்லையென்றும், மாதம் ரூ.1,000/- கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அவர்களுக்கு மாதாமாதம் ரூ.1,000/- வழங்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் குறுக்கீடு வேண்டாமென்று சொன்னீர்கள். அதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னவற்றை நாங்களும் கேட்டுக் கொண்டிருந்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியவை அவைக் குறிப்பில் ஏறியிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லூர் ராஜு அவர்கள் 'நாங்கள் நிறைவேற்றினோம், நாங்கள் நிறைவேற்றினோம்' என்று குறிப்பிட்டுச் சொன்ன எல்லா திட்டங்களிலும் எந்தத்*

திட்டத்தையாவது இந்த அரசு நிறுத்தியிருக்கிறதா என்று சொல்லச் சொல்லுங்கள். அப்படி நிறுத்தியிருந்தால் அதனை நாம் புகாராக ஏற்றுக்கொள்ளலாம். இது ஒன்று.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் ஓய்வூதியம் மாதம் ரூ.1,000/– வழங்குவது போன்ற திட்டங்களைப் பற்றி தற்போது சொன்னார். இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதை அவர்களுடைய பத்து ஆண்டுக் கால சாதனையாக அவர் சொல்லிக்கொண்டிருக்கிறார். ஆனால், 10 வருடங்களாக ஆட்சிப் பொறுப்பில் இருந்துவிட்டு, ஆட்சியிலிருந்து விலகுகிற 10 நாட்களுக்கு முன்பு அவர்களுக்கு ஞானோதயம் வந்த பிறகுதான், ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அறிவிக்கப்பட்ட திட்டத்திற்கு எந்தவிதமான வழிகாட்டு நெறிமுறைகளும் இல்லை. அந்தத் திட்டத்திற்குத் தேவையான எந்த நிதியாதாரங்களையும் ஒதுக்கவில்லை. திட்டங்களை அறிவிப்பது அவர்கள்; செயல்படுத்துவது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுடைய அரசு என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே 'Petrol bunk நடத்தினோம், காய்கறிக் கடை நடத்தினோம், மளிகைக் கடை நடத்தினோம்' என பல திட்டங்களைப் பற்றி சொல்லியிருந்தார்கள். அந்தத் திட்டங்கள் அனைத்தும் தற்போதும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எங்கேயும் பூட்டைப் போட்டு தொங்கவிடவில்லை. ஆகவே, நல்ல நிலையில் இருக்கின்ற திட்டங்களைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயக் கடன் தள்ளுபடி என்ற திட்டத்தைக்கூட அவர்கள் அறிவித்தார்கள். ரூ.12,110 கோடி அளவிலான விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்த அரசு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, 'அறிவித்தது நீங்கள், செயல்படுத்துவது நாங்கள்' என்பதை மாண்புமிகு உறுப்பினர் புரிந்துகொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜு அவர்கள் அறிவித்த திட்டங்களை

நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்கள். இத்துடன் போதுமே! நன்றி சொல்லிவிடலாமே!

பிற்பகல் 5–30

திரு. செல்லூர் கே. ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறை சொல்லவில்லை, நன்றி சொல்லத்தான் முற்பட்டேன். அதற்குள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழுந்து குறுக்கிட்டு பதில் சொல்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தோம். அதாவது, 40 ஆண்டுகளாக இருந்த தங்களுடைய குறைகளை எங்களுடைய அரசிடம் முறையிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோன்று, நிதி ஆதாரத்தை உருவாக்காமல் இல்லை. எங்கள் அரசில் நிதி ஆதாரம் உருவாக்கப்பட்டது. Corpus Fund உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்தும் எவ்வளவு நிதி வழங்கப்பட வேண்டும், மாவட்ட வங்கிகளிலிருந்து எவ்வளவு நிதி வழங்கப்பட வேண்டும் என்று வரையறுக்கப்பட்டு, இந்த நிதியை வைத்து, அரசுக்கு எந்த நிதிச் சுமையும் இல்லாத அளவிற்கு Corpus Fund உருவாக்கப்பட்டது. அவ்வாறு உருவாக்கப்பட்டதன் அடிப்படையில், நபர் ஒருவருக்கு ரூ.1,000/– வழங்கப்பட்டது. இவ்வாறாக அத்திட்டம் துவக்கி வைக்கப்பட்டது. அதற்கு நன்றி. இந்த நிதி 6 மாதங்களுக்கு ஒருமுறை அல்லது 3 மாதங்களுக்கு ஒரு முறைதான் வழங்கப்படுகிறது. கடந்த 6 மாதங்களாக ஓய்வுபெற்றவர்களுக்கு இந்த நிதி வழங்கப்படாமல் உள்ளது. அதையும் வழங்க வேண்டும் என்று கேட்பதற்காகத்தான் இருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், 20 நிமிடங்கள் உரையாற்றியது போதுமே! மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலாவதாக எத்தனை நபர்களுக்கு, எத்தனை மாதங்கள் அந்த உதவித் தொகை வழங்கப்பட்டது என்பதைச் சொல்லட்டும். இரண்டாவதாக, விவசாயக் கடன் தள்ளுபடி என்று 2021 ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 5 ஆம் தேதியன்று அறிவித்தார்கள். அதன் பின்னர், 8 ஆம் தேதியன்று அதற்கான அரசாணை பிறப்பிக்கிறார்கள். அனைத்தையும் ஒரு வாரத்தில் வழங்கிச் சென்றுவிட்டார்கள். இவ்வாறு அவர்கள்

பல தவறுகள் செய்துள்ளார்கள். தவறுகள் செய்தவர்களுக்கும் அந்தத் தொகையைத் திருப்பிக் கொடுப்பதற்கான அந்த பணிகளனைத்தையும் முடித்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். ஆனால், இன்றைக்கு வங்கிகளுக்கு, கூட்டுறவு சங்கங்களுக்கான தொகை அனைத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களின் தலைமையிலான அரசுதான் ஈடுகட்டிக் கொண்டிருக்கிறது. எனவே, மீண்டும் மீண்டும் அதைச் சொல்ல வேண்டாம். நடைமுறையில் இல்லாமல் அறிவிக்கப்பட்ட திட்டத்தை நடைமுறைப்படுத்துவது நம்முடைய அரசு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், 'நன்றி சொல்வதற்குத்தான் வந்தேன், அதற்குள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழுந்துவிட்டீர்கள்' என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் நன்றியுள்ள உறுப்பினர்தான், மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி முடித்துவிடுங்கள்.*

திரு. செல்லூர் கே. ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் தவறு செய்தாலும், 'ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்' என்று பாடிய புரட்சித் தலைவர் அவர்களின் தொண்டன் நான். எனவே, ஒரு திட்டத்தைக் கொண்டுவரும்போது, அதில் யார் எந்தத் தவறு செய்தாலும், நிர்வாகக் குழு தவறு செய்தாலும், அரசு அதிகாரிகள் தவறு செய்தாலும், கூட்டுறவு நிர்வாகி தவறு செய்தாலும், அத்துறையின்கீழ் பணியாற்றும் செயலாளர் தவறு செய்தாலும், அவர்கள்மீது criminal நடவடிக்கை எடுக்கப்பட்டது எங்கள் ஆட்சியில் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும். (குறுக்கீடு) ஒரு நிமிடம். உங்கள் கோரிக்கை ஏற்கப்பட்டது. ஒரு நிமிடத்தில் உரையை முடிக்கவும்.*

திரு. செல்லூர் கே. ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31-3-2021 அன்று நிலுவையிலிருந்த ரூ.48 இலட்சம் நகைக் கடன், தள்ளுபடி என்று அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பின்மீது இன்றைக்கு பல்வேறு வகையான conditions போடப்பட்டு, ரூ.11 இலட்சமாகக் குறைக்கப்பட்டுவிட்டது. தகுதி இருந்தும் நகைக் கடன் பெற்றவர்கள், ஏறத்தாழ

1,20,000 நபர்கள் நகையை திரும்பப் பெறவும் முடியவில்லை, கடனும் கட்டப்படவில்லை. இதனால் சங்கத்திற்கும் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. இதன்மீது எந்த முடிவும் எடுக்கப்படாமல் உள்ளது. அதுமட்டுமல்ல, இதற்கு ரூ.6,000 கோடி என முதலில் அறிவிக்கப்பட்டது, இன்றைக்கு, ரூ.5,000 கோடிதான் ஒதுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும், பதிவு செய்தாகிவிட்டது.

திரு. செல்லூர் கே. ராஜூ: ஒரு நிமிடம் வாய்ப்பு கொடுங்கள், ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சரி ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

திரு. செல்லூர் கே. ராஜூ: அரசாங்கம் ஒரு திட்டத்தினை அறிவிக்கும்போது, அனைவருக்கும் இத்திட்டத்திற்கான பயன் கிடைக்கும் என்றுதான் பொதுமக்கள் நினைப்பார்கள்—கூவிக் கூவி அழைத்தார்கள், இவர்கள்தான் வைக்கச் சொன்னார்கள்— ஏற்கெனவே இவர்களது கடந்த ஆட்சியில், தொலைக்காட்சி வழங்கப்பட்டது. சில நபர்களுக்குத்தான் வழங்கப்பட்டது. ஆனால், எங்கள் ஆட்சியில் அனைவருக்கும் விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின் விசிறி ஆகியவை வழங்கப்பட்டன. யாருக்குமே இல்லையென்று சொல்லவில்லை. அனைவருக்கும் வழங்கப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. செல்லூர் கே. ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்லி உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள்தான் நன்றியைப் பதிவு செய்துவிட்டீர்களே!

திரு. செல்லூர் கே. ராஜூ: அவ்வளவுதான், நன்றி சொல்லி உரையை முடித்துக்கொள்கிறேன். முடித்துவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறுவார்கள்.

திரு. செல்லூர் கே. ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிட்டேன். இன்றைக்கு 11 இலட்சம் நபர்கள் என்பது மிகக் குறைவாக இருக்கிறது. கூடுதலாக 1 இலட்சம் நபர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அதேபோன்று 10 சதவிகித தொகை மட்டும்தான் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட வங்கிகளுக்கும், மாநில வங்கிகளுக்கும் மட்டும்தான் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு) சொல்கிறேன், இந்த நகைக் கடன் தொகையை வைத்துதான் அந்தப் பணியாளர்களுக்கு சம்பளம் அளிக்க முடியும் என்ற நிலை உள்ளது. எனவே, நகைக் கடன் வழங்குவதற்கு ஒதுக்கப்பட்ட நிதியை, முழுமையாக ஒதுக்க வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையாற்றியது போதுமா? (குறுக்கீடு) 25 நிமிடங்கள் எந்த குறுக்கீடும் இல்லாமல் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

திரு. செல்லூர் கே. ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“ஓட்டு கேக்க வந்தாங்களே சின்னாத்தா
இப்ப ஒருத்தரையும் காணலையே சின்னாத்தா
ஜெயித்து வந்ததுமே செல்லாத்தா
ஊரை சிங்கப்பூரா மாத்துவேன்னு சொன்னாத்தா
விடியல் தரப்போறேன்னு சொன்னாங்களே சின்னாத்தா
இப்ப விடியாம போயிட்டே இருக்கே செல்லாத்தா”

என்று **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். ** என்ற வார்த்தைகள் ஏதும் அவைக் குறிப்பில் ஏறாது. நீக்கிவிட்டேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2023 ஏப்ரல் 6
பிற்பகல் 5–35

திரு. செல்லூர் கே. ராஜூ: மக்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? "கண்டா வரச் சொல்லுங்க, அவரை கையோட கூட்டிட்டு வாருங்க" என்று மக்கள் கூறுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேடிக்கையாக நீங்கள் பேசினாலே, பேசிக்கொண்டே இருப்பீர்கள். நன்றி சொல்லுங்கள்.

திரு. செல்லூர் கே. ராஜூ: எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இதைக்கேட்ட மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.

***திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில், கூட்டுறவு மற்றும் உணவுத் துறை மானியங்களின்மீது பேசுகின்ற வாய்ப்பை வழங்கிய தங்களுக்கும், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் இயக்கத்தைத் தோற்றுவித்து எங்களையெல்லாம் ஆளாக்கிய பெருமைக்குரிய அறிவுலக ஆசான் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும், நவீன தமிழகத்தின் சிற்பியாக 5 முறை இந்த நாட்டை ஆண்டு, நின்ற 13 தேர்தல்களிலும் வென்ற ஒரே தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய நெஞ்சம் நிறைந்த கலைஞர் ஐயா அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தியாவின் number one முதலமைச்சர் என்ற பட்டத்தைத் தாங்கி, இந்தியாவில் number one, தமிழகம் என்ற நிலையை எடுத்து, திராவிட மாடல் ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கின்ற மாபெரும் தலைவர், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வணங்குகின்றேன். இளைஞரணியின் எழுச்சி நாயகர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணிச் செயலாளர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத்

தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாபெரும் சபையில் பேசுகின்ற வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கும், அரசுக் கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய மாலை வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மக்களோடு மிக நெருக்கமாகப் பணியாற்றுகின்ற துறைகளில் ஒன்றான கூட்டுறவுத் துறையும், உணவுத் துறையும், மிகச் சிறப்பாக சுமார் இரண்டு ஆண்டுகால, 23 மாத கால ஆட்சியில் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எடுத்த பல நடவடிக்கைகளின் காரணமாக, சிறப்பான ஒரு நிலையில் இயங்கி வருகின்றன.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் ‘கூட்டுறவே நாட்டுயர்வு! கூடி வாழ்ந்தால் கோடி நன்மை’ என்ற அடிப்படையில் நம்முடைய நெஞ்சம் நிறைந்த தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் 5-வது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலே மறைந்த விவசாயிகளின் குடும்பங்களின், வாழ்வில் ஒளியேற்ற ஒரே கையெழுத்தில் 7,000 கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்து, ஒரு மாபெரும் புரட்சியை இந்தியாவில் முதன்முதலாக உருவாக்கிய பெருமை எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களுக்கு உண்டு. அதைத் தொடர்ந்து, அந்தக் காலகட்டத்தில் கிட்டத்தட்ட 16 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் இதன்மூலம் பயனடைந்தார்கள். அதில் யார் அதிகமாகப் பயனடைந்தார்கள் என்பது எல்லோரும் அறிந்த ஒன்று.

அதைப்போலவே, 2021 ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில், ‘நாங்கள் ஆட்சிக்கு வந்தால், 5 பவுன் நகை, 5 பவுனிற்கு கீழுள்ள நகையை ஏழையெளிய மக்கள் அடகு வைத்திருந்தால், கூட்டுறவு வங்கியிலிருந்து உடனடியாக திருப்பித் தருகிறேன்’ என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தார்கள். அந்த அடிப்படையில், தமிழ்நாட்டில் 13 இலட்சத்து, 12 ஆயிரம் குடும்பங்களினுடைய, 5 பவுன் நகைக் கடன்களுக்கான 5 ஆயிரத்து 13 கோடி ரூபாயை இந்தத் துறை கொடுத்திருக்கிறது. அண்ணன் திரு. ராஜு அவர்கள்கூட எல்லோருக்கும் கொடுத்தீர்களா என்று கேட்டார்கள். எல்லோருக்கும் எப்படி கொடுக்க முடியும்? தகுதியுள்ள நபர்கள்,

ஏழையெளிய மக்களுக்குத்தான் கொடுக்கமுடியும், நாங்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லிவிட்டோம், 'ஐந்து பவுன், ஐந்து பவுனிற்கு கீழே உள்ள நகைகளை கூட்டுறவு வங்கிகளில் யார் வைத்திருந்தாலும், அவர்கள் ரசீதைக் காண்பித்தால், automatic ஆக நகை கொடுக்கப்படும். அந்த அடிப்படையில், தமிழ்நாட்டில் யாரையும் ஒதுக்காமல், அனைவருக்கும் திருப்பிக் கொடுத்த பெருமை கூட்டுறவுத் துறைக்கு உண்டு, எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உண்டு. *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல, அடுத்த தேர்தல் வாக்குறுதியாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'ஆட்சிக்கு வந்தால், மகளிர் சுய உதவிக் குழுக் கடன்கள் அனைத்தும் இரத்து செய்யப்படும்' என்று அறிவித்தார்கள். அதன்படி 1 இலட்சத்து 17 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 2,755 கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்து, கிட்டத்தட்ட 15 இலட்சத்து 88 ஆயிரம் மகளிர் உறுப்பினர்கள் இந்தத் திட்டத்தின்மூலம் பயன் பெற்றிருக்கிறார்கள்.

பிற்பகல் 5–40

அதேபோல, கூட்டுறவுச் சங்கத்தில் முதன்முறையாக பயிர்க்கடன் ரூ.10 ஆயிரம் கோடியைக் கடந்து, 2021–2022 ஆம் ஆண்டில் 10,292 கோடி ரூபாய் பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தில், 2021–2022 ஆம் ஆண்டில் ரூ.397 கோடியே 67 இலட்சமும், 2022–2023 ஆம் ஆண்டில், ரூ.476 கோடியே 38 இலட்சமும், மாண்புமிகு நம்முடைய தமிழக முதல்வர் ஆட்சியில் இந்தத் துறையின் மூலமாக எங்களுடைய மாவட்டத்தில் மட்டும் எல்லா விவசாயிகளுக்கும் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. வாங்கிய கடனை முறையாகச் செலுத்துபவர்களுக்கு வட்டியில்லாமல் கடன் வழங்கி, தொடர்ந்து அந்த வங்கிகள், சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதேபோல, நம்முடைய விவசாயத் துறையின் மூலமாக விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட குறுவை தொகுப்பான 2 மூட்டை யூரியா, 1 மூட்டை DAP, 25 கிலோ Potash ஆகியவை கூட்டுறவுத் துறையின் மூலமாக எல்லா மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, தஞ்சாவூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில், பண்ணை பசுமை அங்காடிகள் மூலமாக, காய்கறிகள் மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் 5 நகர கூட்டுறவு வங்கிகளின் மூலமாக

சிறு வணிகக் கடன், சுய உதவிக் குழு கடன், பண்ணை சாரா கடன், வீட்டு அடமானக் கடன், சிறுபான்மையினர் மற்றும் பிற்பட்டோர் நலக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு அறிவித்ததைப்பற்றி முன்னாள் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான், என்னுடைய தஞ்சாவூர் மாவட்டத்தில், 478 நபர்கள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், அது மிகக் குறைவான அளவு. பல ஆண்டுகள் இந்த கூட்டுறவுத் துறையில் பணியாற்றி, குறைந்த சம்பளத்தில் தொடர்ந்து 24 மணி நேரமும் உழைக்கின்ற ஒரு துறையாக கூட்டுறவு மற்றும் உணவுத் துறைகள் இருக்கின்றன. எனவே, அந்த ஆயிரம் ரூபாய் என அறிவித்ததை இன்னும் உயர்த்தி, எதிர்காலத்தில் அவர்களுக்கு ஓய்வூதியம் போன்ற ஒரு நல்ல திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கூட்டுறவுத் தேர்தல். என்னுடைய மாவட்டத்தில் பல கூட்டுறவுச் சங்கங்களில், abnormal ஆக 40 ஆயிரம் நபர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். உதாரணமாக, தஞ்சாவூர் Nicholson Co-operative Town Bank Limited என்று ஒரு வங்கி இருக்கிறது. அதேபோல, The Karunthatankudi Dravidian Co-operative Urban Bank என்று ஒரு வங்கி இருக்கிறது. அதேபோல, பல வங்கிகளில் பார்த்தால், அந்த ஊரில் தஞ்சாவூரில் இல்லாத நபர்கள், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, பேராவூரணி இதுபோன்ற service area-ல் இல்லாதவர்களை எல்லாம் கடந்த காலத்தில் நீங்கள் உறுப்பினர்களாகச் சேர்த்து, அந்த அடிப்படையில் தேர்தல் நடத்தினால், அது ஒரு நியாயமான தேர்தலாக அமையாது. நீங்கள் screening செய்ய வேண்டும். உறுப்பினர்களைப் பார்க்க வேண்டும். யார், யார் தகுதியுள்ள உறுப்பினர்கள் எந்த வங்கியில் இருக்கிறார்கள் என்பதை எல்லா வங்கிகளிலும் ஆராய வேண்டும். மேலும், விடுபட்ட உறுப்பினர்களையும் அவசியமாகச் சேர்த்து, ஒரு முறையான தேர்தலாக அந்தத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

[திரு. துரை. சந்திரசேகரன்] [2023 ஏப்ரல் 6

கடந்த ஐந்து ஆண்டுகளாக, இல்லையென்றால் ** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறோம். அவர் எப்படி ஜனநாயக முறைப்படி, கடந்த ஆட்சியில் தேர்தல் நடத்தினாரோ, அதே ஜனநாயக முறைப்படி (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் தேர்தல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேறு வழியே இல்லை. Screening செய்ய முடியாது. உறுப்பினரைச் சேர்க்க முடியாது அல்லது உறுப்பினரை நீக்க முடியாது என்று சொன்னால், ** என்னவென்று கேட்டால், கடந்த முறை தேர்தலின்போது, என்னுடைய மாவட்டத்தில் பல ஊர்களில் பார்த்தேன். அதே கூட்டுறவு அதிகாரிகள்தான் தற்போதும் JR ஆக இருக்கிறார்கள், DR ஆக இருக்கிறார்கள், பிற அதிகாரிகளாகவும் இருக்கிறார்கள். பல அதிகாரிகளை நாங்கள் பார்க்கவே முடியவில்லை. என்னவென்று கேட்டோம். முடிவுகள் வரும் என்று சொன்னார்கள். பிறகு, சிறிது நேரத்தில் யார் தலைவர், துணைத் தலைவர், Board member என்ற விவரங்களை Board-ல் ஒட்டினார்கள்.

** நடத்திவிட்டுப் போகலாம்; ஒன்றும் தவறில்லை. 5 வருடங்கள் நாங்கள் அதை ஏற்றுக்கொண்டோம் அல்லவா! 5 வருடங்கள் நீங்கள் Board-ல் ஒட்டியவற்றை நாங்கள் ஏற்றுக்கொண்டோம்; பணியாற்றியிருக்கிறோம். அதேபோல, இப்பொழுது வேறு வழியே இல்லை என்றால், கூட்டுறவுத் துறை தேர்தலைப் பொறுத்தவரை, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அந்த ** நீங்கள் போகலாம்.

அதேபோல, நமது தமிழ்நாட்டில் 40 வருட அரசியல் வரலாற்றில் உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்குத்தான், ஒரு சோதனையான காலகட்டமாக இருக்கும். அது எந்த ஆட்சியாக இருந்தாலும் இதே நிலைதான். ஆனால், இந்த இரண்டு ஆண்டு, 23 மாத ஆட்சிக்காலத்தில் உணவுத் துறை மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. கிட்டத்தட்ட 2 கோடியே 23 இலட்சம் குடும்ப அட்டைகள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த* Board–*ல் ஒட்டியதைக்குறித்து இந்தமாதிரி எல்லாம் பேசுவது ஆரோக்கியமான விஷயமா? அது இருக்கலாமா! அப்பொழுது உள்ளாட்சித் தேர்தலில் நடந்தவைகளைப் பற்றி நாங்களும் பேசுவோம். இல்லை, அது நியாயம் இல்லை. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குங்கள். ஆரோக்கியமாகப் போய்க் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) அப்படியெல்லாம் அல்ல. (குறுக்கீடு) அது எப்படி சரியாக இருக்கும்? (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எதைச் சொல்கிறீர்கள்? (குறுக்கீடு)*

திரு. எஸ்.பி. வேலுமணி: *இல்லை, இல்லை. அவர் தேர்தலைப் பற்றிப் பேசி, ** (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நானே ** என்பதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன் என்றுதான் சொல்லியிருக்கிறேன். நீக்கிவிட்டேன். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் முறையாக நடத்தப்படவில்லை என்று அப்பொழுது பல்வேறு வழக்குகள் நீதிமன்றம் வரை சென்று, ஏறத்தாழ 7 ஆயிரம் மனுக்கள் பெறப்பட்டு, அதில் கிட்டத்தட்ட 1,100 மனுக்கள் உயர் நீதிமன்றம் வரை சென்றிருந்தன. ஆகவே, அதுபோன்ற முறைகேடுகள் இந்த அரசிலும் இருக்கக்கூடாது. முறையாக, நேர்மையாக தேர்தலை நடத்த வேண்டுமென்றுதான் இப்போது இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்காக உத்தரவிட்டிருக்கிறார்கள்.*

பிற்பகல் 5–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்றாகத்தானே பதில் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், திரும்பவும் முறைகேடு என்று சொல்கிறார். முறைகேடுகளுக்கு ஆதாரம் இருக்கிறதா? (குறுக்கீடுகள்) அதுபோன்று நாங்களும் சொல்கிறோம். விவாதம் ஆரோக்கியமாகப் போய்க் கொண்டிருக்கும்போது, தேவையில்லாமல் உறுப்பினர் பேசுகிறார். அதேபோல், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பேசுகிறார். அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுங்கள். (குறுக்கீடு) நீங்கள் நடக்கப் போகும் தேர்தலைப் பற்றிப் பேசுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கொஞ்சம் இருங்கள், நான் சொல்கிறேன். 1,100 வழக்குகள் தொடரப்பட்டன என்றுதான் அவர் சொல்லியிருக்கிறாரே தவிர, வழக்கு தொடரவில்லை என்றால், வழக்கு தொடரவில்லை என்று சொல்லுங்கள், அவ்வளவுதானே! நடந்த விஷயம்தானே! அதைச் சொல்வதில்—நடந்த விஷயத்தைப் பதிவு செய்யக்கூடாது என எப்படிச் சொல்லலாம்? மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடந்த முறை, இதே அவையில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் கூட்டுறவுத் தேர்தலில் நடந்த முறைகேடுகளையெல்லாம் விசாரிப்பதற்காக நீதியரசர் ராஜேஸ்வரன் தலைமையில் ஆணையத்தை அமைத்தது கடந்த கால அ.இ.அ.தி.மு.க. அரசு என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல் 2006 இல் தி.மு.க. அரசு உள்ளாட்சித் தேர்தலை நடத்தியபோது, சென்னையில் நடந்த தேர்தல் இதேபோல் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று இரத்து செய்யப்பட்டது. அதுபோன்று நடந்திருக்கிறது. (குறுக்கீடு) அதேபோல்***

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கடைசியாகக் கூறியது நீக்கப்படுகிறது. மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் நடந்த தேர்தலை, குறிப்பாக மாநகராட்சித் தேர்தலைப் பற்றி, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் குறிப்பிட்டார்கள். அதில் இரண்டுவிதமான தீர்ப்புகள் வந்தன. நீங்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு தீர்ப்பில் நீதியரசர் முகோபாத்தியா 98 மாநகராட்சி உறுப்பினர்களும் வெற்றி பெற்றது செல்லும் என்ற தீர்ப்பைச் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) இல்லை, சொல்லியிருக்கிறார். நீங்கள் தீர்ப்பை படித்துப் பாருங்கள். தீர்ப்பை நான் சொல்கிறேன்ச் அடித்து சொல்கிறேன். இரண்டு தீர்ப்புகள் வந்தன. இரண்டு தீர்ப்பிற்கும் எங்கள் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்ன சொன்னார் என்றால், 'நான் மக்களைச் சந்திப்பதற்குத் தயாராக இருக்கிறேன்' என்று கூறி உடனே மறு தேர்தலை நடத்தியவர், நேர்மையான தேர்தலை நடத்தியவர் எங்களுடைய முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவுத் துறை என்பது மிக முக்கியமான காலகட்டத்தில், இன்றைக்கு தமிழகத்தில், இரண்டு கோடியே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள். அவர் பேசி முடித்த பிறகு, கடைசியாக வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) கடைசியாக வாய்ப்புத் தருகிறேன். இப்போது நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உணவுத் துறையில் 2 கோடியே 23 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு தரமான பொருட்களை இன்றைக்குத் தந்து ஒரு மாபெரும் புரட்சியை உணவுத் துறை*

செய்து வருகிறது. அதற்குக் காரணம் நமது தமிழக முதல்வர் அவர்கள் இந்தத் துறையை கண்ணும் கருத்துமாக பலமுறை ஆய்வு செய்து, அதன்மூலம் இன்றைக்குத் தரமான அரிசி வழங்கப்படுகிறது. 234 தொகுதிகளிலும் MLA-க்கள் துணிந்து தொகுதிகளுக்குப் போகலாம். எந்த ரேஷன் கடைகளிலும் பழுப்பு அரிசி, புழுத்த அரிசி, பூச்சி அரிசி என்று சொல்லாத நிலையை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 23 மாதகால ஆட்சியில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். எந்த MLA ஆனாலும், எந்த ரேஷன் கடைக்குப் போனாலும், பார்க்கலாம். வெள்ளை வெளேர் என்று பச்சரிசிபோல், புழுங்கல் அரிசி இருக்கிறது. அந்த அளவிற்கு நம்முடைய துறை மிகச் சிறப்பாக உள்ளது. இதற்குக் காரணம், தஞ்சாவூர் மாவட்டத்தில், இந்த 23 மாதகால ஆட்சிக் காலத்தில், பல இடங்களில் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன. பிள்ளையார்பட்டி கிராமத்தில் 50,000 மெட்ரிக் டன் மேற்கூரையிட்ட சேமிப்புக் கிடங்குகள் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அடிக்கல் நாட்டி திறந்து வைத்திருக்கிறார்கள். அது பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது.

தமிழகத்தில் மொத்தம் 2,86,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரையிட்ட சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதன்மூலமாக குறுவை நெல் வரலாற்றில் இல்லாத அளவில் இந்த ஆண்டு KMS 2021–2022 இல் 43.27 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றது. எல்லோரும் அறிந்த ஒன்றுதான். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார். அதேபோன்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார். கடந்த காலங்களில் தொடர்ந்து பார்த்தோம் என்றால், குறுவை வந்தால், டெல்டா மாவட்டத்தில் மறியல் நடக்காத ஊரே இருக்காது. 'எங்கள் ஊரில் நெல்லை பிடிக்கவில்லை; எங்கள் ஊரில் நெல்லை எடுக்கவில்லை' என்று போராட்டம் நடக்கும். இந்த ஓராண்டாகத்தான், தஞ்சை, டெல்டா மாவட்டத்தில் போராட்டங்கள் இல்லாமல், (மேசையைத் தட்டும் ஒலி) கிட்டத்தட்ட 43.27 இலட்சம் மெட்ரிக் டன் குறுவை நெல்லை, எந்தவித மறியலும் இல்லாமல், விவசாயிகளுக்கு எந்தவிதப் பாதகமும் இல்லாமல், மிக அற்புதமாக, இந்தத் துறை கொள்முதல் செய்து, விவசாயிகளுக்குரிய பணத்தினை உரிய நேரத்தில் வழங்கியிருக்கின்றது. கிட்டத்தட்ட 50 நேரடி நெல்

கொள்முதல் நிலையங்களை சுமார் 17 கோடி ரூபாயில் துறை கட்டி வருகிறது. இந்த எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) உரையை முடித்துவிடுகிறேன். மாவட்ட ஊராட்சியின் சார்பாக 5 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைக் கட்டி வருகிறார்கள். அதற்காக மாவட்ட ஊராட்சிக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–50

குடும்ப அட்டை பெறுவதற்கு கடந்த ஆட்சிக் காலத்தில் பெரிதாக தவம் இருக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் காரணமாக தகுதியுடையவர்களுக்கு உடனடியாக 15 நாட்களில் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தஞ்சை மாவட்டத்தில் 39,261 பேர்களுக்கு, விண்ணப்பித்த, தகுதியுள்ள அனைவருக்கும் ஒரு வார காலத்திற்குள் புதிய குடும்ப அட்டைகள், smart cards வழங்கப்பட்டிருக்கின்றன.

அதேபோன்று, செப்டம்பர் 1 ஆம் தேதிதான் கொள்முதல் செய்யக்கூடிய நிலை இருந்ததை கடந்த ஆண்டு அக்டோபர் 1 ஆம் தேதியாக இருந்தது. அக்டோபர் 1 ஆம் தேதிக்குப் பதிலாக செப்டம்பர் 1 ஆம் தேதியே கொள்முதல் செய்ய ஒன்றிய அரசிடமிருந்து ஆணையைப் பெற்று, ஏராளமான விவசாயிகள் வாழ்வில் விளக்கேற்றிய நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை டெல்டா மாவட்ட விவசாயிகள் சார்பில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம்முடைய நெஞ்சில் வாழும் தலைவர் கலைஞர் அவர்கள் உணவுத் துறையில் தொடர்ந்து மாபெரும் புரட்சியைச் செய்து மறைந்திருக்கிறார்கள். இந்தியா முழுவதும் FCI–Food Corporation of India மூலமாக விவசாயிகளிடமிருந்து உணவுப் பொருட்களை வாங்கி, விநியோகம் செய்த நிலையை இந்தியாவில் முதன்முதலாக 1972–ல் மாண்புமிகு தமிழக முதல்வராக இருந்த எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் என்ற வாணிபக் கழகத்தை உருவாக்கினார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கழகம் இன்றைக்கு பல கோடி ரூபாய்க்கு அதிபதியாகி இருக்கிறது. தஞ்சை டெல்டா விவசாயிகளுக்கு மாபெரும் உந்து சக்தியாக, பாதுகாப்பு அரணாக, விளங்குவதற்குக்

காரணம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவர்களுடைய வழியில் ஆட்சி நடத்துகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்லாண்டு வாழ வேண்டும். அவர்களுடைய திராவிட மாடல் ஆட்சி இன்னும் தொடர்ந்து பல வெற்றிகளைக் குவிக்க வேண்டுமென்று வாழ்த்தி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா அவர்கள்.*

திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்றும் நினைவில் நீங்காது, நெஞ்சில் நிறைந்திருக்கும் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். 2023–2024 ஆம் நிதியாண்டில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கையின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த கழகத் தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அரசுக் கொறடா அவர்களுக்கும், பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு முன்பாக, தாம்பரத்தை மாநகராட்சியாகத் தரம் உயர்த்தியதற்கும், தாம்பரத்தில் காவல் துறை ஆணையர் அலுவலகம் அமைத்ததற்கும், ரூ.110 கோடியில் மிகச் சிறப்பான ஒரு மருத்துவமனையை அமைக்க அடிக்கல் நாட்டியதற்கும், தாம்பரம் நெஞ்சக நோய் மருத்துவமனையில் ரூ.22 கோடி மதிப்பிலான கொரோனா சிகிச்சை மையம் ஏற்படுத்தித் தந்தமைக்கும், இந்த நேரத்தில் தாம்பரம் தொகுதி மக்களின் சார்பாக, மாநகர மக்களின் சார்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய அன்பான நன்றியை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று, அந்த நாடாளுமன்றத் தேர்தல்

முடிந்த கையோடு, 'Tejas Express' இரயில் தாம்பரத்தில் நின்று செல்ல வேண்டும் என்று ஸ்ரீபெரும்புதூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர், கழகப் பொருளாளர் திரு. டி.ஆர். பாலு அவர்கள் ஒன்றிய அரசுக்குத் தொடர்ந்து கடிதம் எழுதி, பாராளுமன்றத்தில் இதுகுறித்துப் பேசி, 4 ஆண்டுகள் கழித்து 26–2–2023 அன்றுதான் அந்த இரயில் தாம்பரம் இரயில் நிலையத்தில் நின்று செல்லக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய இரயில்வே இலாகா அமைச்சர் அவர்களுக்கும் ஆலந்தூர், தாம்பரம், பல்லாவரம் மற்றும் தென்சென்னை தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 5–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கூட்டுறவுத் துறை மற்றும் உணவுத் துறை ஆகிய முக்கியமான துறைகளின்மீதான மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். காரணம், 150 பக்கங்கள் கொண்ட இந்த கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தை, முழுமையாகப் படிப்பதற்கு 2 மணி நேரம் ஆனது. அந்த 2 மணி நேரத்தில், அரசின் கொள்கைகள் எப்படி இருக்கின்றன என்பதை நான் கூர்ந்து கவனிக்கின்ற நேரத்தில், குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, ஆதி திராவிட மக்களுக்கு, பழங்குடியின மக்களுக்கு, பட்டியலினத்து மக்களுக்கு, கைம்பெண்களுக்கு, உடல் ஊனமுற்றவர்களுக்கு, எண்ணற்ற ஏழைகள், சிறு வியாபாரிகளுக்கு, குறு, சிறு, நடுத்தரத் தொழில் செய்பவர்களுக்கு, எண்ணற்ற பல்வேறுபட்ட சாதனைகளை, வளர்ச்சிப் பணிகளைச் செய்து தொழில் வளர்ச்சியில் மிக முக்கியமான பங்கு வகித்துக்கொண்டிருக்கின்றன என்று சொன்னால், உண்மையில் கூட்டுறவுத் துறையில் இன்றைக்கு உற்று நோக்கக்கூடிய அளவிற்கு அந்தப் பணிகள் இருந்துகொண்டிருக்கின்றன.

1904 ஆம் ஆண்டுதான் கூட்டுறவுத் துறை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பிக்கப்பட்ட முதல் ஆண்டே, திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கமும், திருவல்லிக்கேணி நுகர்வோர் கூட்டுறவுச் சங்கமும் நிறுவப்பட்டன என்ற பெருமை நமக்கு உண்டு.

அதைப்போல, தமிழ்நாட்டினுடைய தலைமைக் கூட்டுறவு வங்கி, 1905–ல் துவக்கப்பட்டது, 117 ஆண்டுகளாக50 கிளைகளோடு இந்த வங்கிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன.

நான் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தைப் பார்க்கின்ற நேரத்தில், எல்லாமே எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. காரணம், 2021–2022 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில், விவசாயிகளுக்கு 10,000 கோடி ரூபாய்தான் கடன்களுக்கு ஒதுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், 10,192 கோடி ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 2022–2023 ஆம் ஆண்டு 12,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், 13,100 கோடி ரூபாய் அளவிற்குக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. சொல்லிய கடன் குறைவு, ஆனால் கொடுத்த கடன் அதிகம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தமிழ்நாட்டில், எத்தனையோ நிதிநிலை அறிக்கைகளை நாம் பார்த்திருக்கலாம். இதுவரை என் அனுபவத்தில், நான் பார்த்ததில் திரு. மன்மோகன் சிங் அவர்கள் கொடுத்த நிதிநிலை அறிக்கையை விமர்சனம் செய்வதற்கு யாருமில்லை. அதற்கடுத்து நான் பார்த்தது, நம்முடைய தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு கொடுத்த நிதிநிலை அறிக்கையை (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை விமர்சனம் செய்வதற்கு யாருமில்லாத ஒரு நிலை இருக்கிறது.

மிகப் பெரிய பொருளாதார நெருக்கடி: அந்த நெருக்கடியிலும், ஒரு சிறப்பான ஆட்சியைச் செய்து வருகிறார். இங்கே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் மரியாதைக்குரிய அண்ணன் செல்லூர் ராஜூ அவர்கள்கூட, அவர்கள் ஆட்சியில் செய்த பணிகளைச் சொன்னாரேதவிர, இப்போது, நம்முடைய ஆட்சியில் எந்த குறையுமில்லாத அளவிற்கு அவர் பேசி அமர்ந்திருக்கிறார் என்று சொன்னால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு திறமையாகச் செயல்பட்டிருக்கிறார் என்பதற்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டு எதுவும் இருக்க முடியாது.

கொரோனா காலத்தில் குறு, சிறு தொழில் செய்பவர்களுக்கு கடன் கொடுக்கப்படும் என்று தேர்தல் வாக்குறுதியில் சொன்னோம். இன்றைக்கு நம்முடைய அரசு, குறு, சிறு தொழில்

செய்பவர்களுக்கும் கடன் கொடுத்திருக்கின்றது, நடைபாதை வியாபாரம் செய்பவர்களுக்கும் கடன் கொடுத்திருக்கின்றது, கைம்பெண்களுக்கும் கடன் கொடுத்திருக்கின்றது. இப்படி நம்முடைய கூட்டுறவு வங்கிகளின் மூலமாக ஏழையெளிய மக்கள் அத்தனை பேருக்கும் கடனைக் கொடுத்திருக்கின்றார்கள் என்றால் கூட்டுறவு சங்கங்கள், நம்முடைய அரசில் அவ்வளவு சிறப்பாகச் செயல்படுகின்றன என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சி: நம்முடைய கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சி என்று சொன்னால், கூட்டுறவு வங்கி என்பது 1905-ல் ஆரம்பிக்கப்பட்டது-எனக்கு அதில் ஒரு சின்ன ஈடுபாடு என்னவென்று சொன்னால்-ஒரு காலத்தில் Indian Bank, Indian Overseas Bank and State Bank of India ஆகியவை இருந்தன. அனைவருக்கும் தெரிந்தது இவைதான். அதற்குப் பிறகுதான், Canara Bank, Punjab National Bank, Syndicate Bank, Lakshmi Vilas Bank, Karur Vysya Bank ஆகிய private banks எல்லாம் வந்தன. இன்றைக்கு multi-national banks எல்லாம் வந்திருக்கின்றன. ஆனால், மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் கூட்டுறவு வங்கிகள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் மிகப் பெரிய நகரங்கள், பெரிய தொழில் வளர்ச்சி பெற்று வருகின்றன். மகாராஷ்டிராதான் economy-ல் அதிகமென்று எல்லோரும் சொல்வார்கள். ஆனால், மகாராஷ்டிராவைவிட தொழிற்சாலைகளும், குறு, சிறு தொழில்களும் தமிழ்நாட்டில் அதிகமாக இருக்கின்றன.

பிற்பகல் 6-00

இந்தக் கொள்கை விளக்கப் புத்தகத்தில், கடன் கொடுப்பது குறித்தும், இருக்கிறது; திட்டமிடுதல் குறித்தும் விவரங்கள் இருக்கின்றன. ஆனால், எவ்வளவு deposit இருக்கிறது என்பது குறித்து நமக்கு தெரியாத சூழ்நிலை இருக்கிறது. ஏனென்று சொன்னால், அந்தக் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலே, கொரோனா காலத்தில், நகர வங்கிகள், மாவட்ட கூட்டுறவு வங்கிகள் எல்லாம் ரிசர்வ் வங்கிக்கு கட்டுப்பட்டு இயங்கிக் கொண்டிருந்தன என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்போதுதான் எனக்கு ஒரு சந்தேகம் வந்தது. என்ன சந்தேகம் என்றால்—மத்திய நிதியமைச்சர் மரியாதைக்குரிய திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள்—கொரோனா காலத்தில் 1 இலட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபாய் Reserve Bank பணத்தை, மத்திய அரசு எடுத்திருக்கிறது.

பல்வேறுபட்ட அரசியல் தலைவர்கள், பொருளாதார நிபுணர்கள் அனைவருமே எந்தக் காரணத்தைக் கொண்டும், மத்திய ரிசர்வ் வங்கியிலிருந்து பணத்தை எடுக்கவே கூடாது என்று சொன்னார்கள். ஆனால், மத்திய சர்க்கார் 1 இலட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை எடுத்தது. தற்போது நம்முடைய சர்க்கார் பொருளாதார நெருக்கடியில் இருக்கின்றது. தமிழ்நாட்டில் இவ்வளவு வளம் இருக்கிறபோது, இவ்வளவு அரசு ஊழியர்கள் நம்மிடம் இருக்கும்போது, நாம்தான் கூட்டுறவுச் சங்கங்களை வலுவூட்டவேண்டும். அதிக வட்டியைக் கொடுப்பது கூட்டுறவுச் சங்கங்கள், குறைந்த வட்டியில் கடன் கொடுப்பது கூட்டுறவுச் சங்கங்கள். எனவே, நாம் இன்னும் அதிகமான பொருளாதாரத்தை ஈட்டக்கூடிய அளவிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

என்னுடைய கருத்து என்னவென்றால், நாம் I.A.S. அதிகாரிகளை நியமிக்கின்றோம். எந்த இலாகாவைக் கொடுத்தாலும் அவர்கள் பணியாற்றுவார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு சமயம் வெளியிலே பேசும்போது, நாங்கள் எல்லாம் திட்டங்களை அறிவிக்கிறோம். ஆனால், எனக்கு மன நிறைவு தரவில்லை. காரணம், ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட திட்டங்களைச் சிறிது alteration செய்கிறோம் என்றுதான் சொன்னார்கள். ஆனால், இதுபோன்று பொருளாதாரத்தைப் பெருக்குவதற்கு தனியாக பொருளாதார expert-களையும், I.E.S. அதிகாரிகளையும் நியமித்து, தமிழ்நாட்டில் இருக்கின்ற மற்ற வங்கிகளுக்குச் செல்லக்கூடிய நிதியை நம் கூட்டுறவு வங்கிகளில் செலுத்தி, அதன் மூலமாக நாம் வெளியில் கடன் வாங்குவதைத் தவிர்த்து, நம்முடைய மக்களுடைய வரிப் பணத்திலே இன்னும் அதிகமாக வருவாய் ஈட்டக்கூடிய ஒரு வாய்ப்பை நாம் இந்த நேரத்திலே பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

தாம்பரத்தின் மையப் பகுதியில் வியாபார ஸ்தலங்கள் இருக்கக்கூடிய பகுதியில் 2 ground நிலம் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமானவை TUCS பெயரில் இருக்கிறது. அந்த இடத்தில் ஒரு Mall கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு வந்தால் கண்டிப்பாக அரசிற்கும் வருவாய் வரும்; அங்கு ஒரு supermarket வைத்தால், அதன் மூலமும் அதிக வருமானம் வரும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2023 ஏப்ரல் 6] [திரு. S.R. இராஜா]

அதேபோன்று, கிழக்குத் தாம்பரம், கம்பர் தெருவில் TUCS-க்குச் சொந்தமான 2 ground இடம், அவர்களால் பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கிறது. அதையும் இந்த அரசாங்கம் எடுத்து மிகப் பெரிய வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உணவுத் துறையைப் பொறுத்தவரை ஒரே ஒரு விஷயம். தற்போது Civil Supplies எவ்வாறு செயல்படுகிறது, அதனுடைய வளர்ச்சி என்ன என்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆனால், அதில் manpower சற்று குறைவாக உள்ளது. Manpower குறைவு என்றால் நியாய விலைக் கடைகளில் ஒரே ஒருவர்தான் இருக்கிறார், வேறு ஆட்கள் இல்லை. எனவே, கூடுதலாகப் பணியாளர்களை நியமித்து, Civil Supplies மூலமாக ரேஷன் கடைகளில் ஏழைகளுக்கு பொருட்களை உடனடியாகத் தர வேண்டும். நாங்கள் கட்டடம் உள்ளிட்டவற்றைத் தருகிறோம். ஆனால், அவற்றைப் பராமரிப்பதற்கு இயலாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்த ஓர் ஆண்டாவது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை இதற்கென பயன்படுத்த அனுமதிக்கவேண்டும். அடுத்தடுத்த ஆண்டுகளில்கூட தேவையில்லை. எங்கெங்கெல்லாம் ரேஷன் கடைகள் சரியில்லை என்ற நிலை இருக்கிறதோ, அவற்றை நிவர்த்தி செய்வதற்குண்டான பணிகளை இந்த அரசு செய்ய வேண்டும்.

குறிப்பாக, நான் கடந்த அரசிலும் பேசியிருக்கின்றேன்; அதற்கு முன்பாகவும் இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறேன். Civil Supplies-லிருந்து தாம்பரத்தில் உள்ள கடைக்கு பொருட்கள் வர வேண்டுமென்றால், பிராட்வேயில் office வைத்திருக்கிறார்கள்; தண்டையார்பேட்டையிலிருந்து வருகிறது; விருகம்பாக்கத்திலிருந்து வருகிறது. திருவான்மியூரிலிருந்து வருகிறது; நந்தனத்திலிருந்தும் வருகிறது. மத்திய சேமிப்பு கிடங்கு Warehouse தாம்பரத்தின் மையப் பகுதியில் இருக்கிறது. எனவே, தாம்பரத்தின் மையப் பகுதியில் ஒரு Godown அமைத்து, அதன் மூலமாக நீங்கள் பொருட்களை விநியோகம் செய்தால், ஏழை எளிய மக்களுக்கு இன்னும் வசதியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

தொகுதியின் சார்பாக ஒரேயொரு கோரிக்கையை மட்டும் இங்கே பதிவு செய்து, எஞ்சியவற்றை தங்களிடம் கொடுத்து பதிவு செய்ய வேண்டுமெனக் கோருகிறேன்.

தாம்பரம் தொகுதியைப்பொறுத்தவரை, 1996 ஆம் ஆண்டிலிருந்து தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் அண்ணன் தளபதி அவர்கள், தொடர்ந்து நேரடியாக பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தற்போது தாம்பரம், சென்னைக்கு அடுத்தபடியாக மிகப் பெரிய அளவில் வளர்ச்சியடைந்து மையப் பகுதியாக இருந்து கொண்டிருக்கிறது. தற்போது மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டுவிட்டது. 8 இலட்சம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். இன்னும் 2 ஆண்டுகளில் பல பஞ்சாயத்துகள் இணைக்கப்படவுள்ளன. ஆக, 14 இலட்சம் வாக்காளர்கள் உள்ள பகுதியாக மாறப் போகிறது. பக்கத்திலுள்ள வண்டலூரில் மிகப் பெரிய தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. Third Railway Terminal வந்துவிட்டது. காவல் துறை ஆணையரகம் வந்துவிட்டது. சென்னைக்கு அடுத்த பெரிய வியாபார ஸ்தலமாக இருக்கிறது. தற்போது ஒரு நாளைக்கு 10 இலட்சம் பேர் வந்துசெல்கிற மூன்றாவது நுழைவு முனையமாக இந்தப் பகுதி இருக்கிறது. ஆகவே, இதை தனி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே என்னுடைய கோரிக்கையாக நான் வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 6-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. S.R. இராஜா: தங்களிடம் தொகுதிக் கோரிக்கைகளைக் கொடுத்துவிடுகிறேன். அதை அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். எனக்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அரசுக் கொறடா அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

தாம்பரம் தொகுதி, தாம்பரம் ஜி.எஸ்.டி சாலையில் உள்ள மேம்பாலத்தின் கிழக்கு, மேற்கு, வடக்கு மற்றும் தெற்குப்

பகுதிகளை இணைக்கும் வண்ணம், இரண்டு சக்கர வாகனங்கள், பாதசாரிகள் எளிதில் கடக்கும் வண்ணம் உரிய மாற்றம் செய்திட ஆய்வுகள் மேற்கொண்டு, அதோடு சண்முகம் சாலைக்குச் செல்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

முடிச்சூர் சாலையில், (இந்து மிஷன் மருத்துவமனை ஓரம்) சர்வீஸ் சாலை அமைத்து தாம்பரம் மேம்பாலத்தை போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் நீட்டித்தும் மாற்றங்கள் செய்தும் தர வேண்டும்.

தாம்பரம் மாநகராட்சி, 60-வது வார்டு மற்றும் 62-வது வார்டு, இரும்புலியூர் பகுதியில் இரயில்வே கடவுப்பாதையும், தேசிய நெடுஞ்சாலையும் உள்ளடக்கியதால், தாம்பரம் கிழக்குப் பகுதியையும், மேற்குப் பகுதியையும் இணைக்கும் வகையில் ஒரு சுரங்கப்பாதை அமைத்துத் தர வேண்டும்.

தாம்பரம் தொகுதி, தாம்பரம் மாநகராட்சி, 32-வது வார்டு மற்றும் 33-வது வார்டு, கடப்பேரியில் அமைந்துள்ள பெரிய ஏரியின் கரையை அகலப்படுத்தி, அதில் திருநீர்மலை சாலையையும், ஜி.எஸ்.டி சாலையையும் இணைக்க புதிய சாலை அமைத்துத்தர வேண்டும்.

தாம்பரம் தொகுதி, தாம்பரம் மாநகராட்சி, 49-வது வார்டில் 34.76 ஏக்கர் பரப்பளவில் (சர்வே எண் 325, 350, 354 மற்றும் 355) அமைந்துள்ள நரேந்திர பேலஸ் என்ற இந்திய விமானப்படை குடியிருப்புப் பகுதியில் மாநில அரசுக்குச் சொந்தமானதாக உள்ள 13.76 ஏக்கர் நிலத்தினை மத்திய அரசிடமிருந்து பெற்று, தாம்பரம் மாநகராட்சிக்குப் பயன்படுத்திக்கொள்ள ஆவன செய்ய வேண்டும்.

தாம்பரம் மாநகராட்சி, 50-வது வார்டு பகுதியில் உள்ள காப்புக் காடு சர்வே எண்கள் 305 மற்றும் 306-ல், 10.32 ஏக்கர் பரப்பளவுகொண்ட இடத்தில் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வருபவர்களுக்கு வருவாய்த் துறை பதிவேடுகளில் உள்ள காப்புக் காடுகள் என்பதை நீக்கி, பட்டா வழங்க வேண்டும்.

தாம்பரம் தொகுதி, தாம்பரம் மாநகராட்சி, 54-வது வார்டு பகுதியில் இரும்புலியூரில் உள்ள புல எண்.12-வார்டு இ பிளாக் 3-நகரளவு எண் 73-ல், டி.டி.கே. நகர் சர்வீஸ்

சாலையை ஒட்டி அமைந்துள்ள சுமார் 6.38 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தினை தாம்பரம் மாநகராட்சிக்குப் பெற்று, அதில் விளையாட்டுத் திடல் அமைத்துத் தர வேண்டும்.

தாம்பரம் தொகுதி, கிழக்குத் தாம்பரம் பகுதியில் அமைந்துள்ள வேளச்சேரி பிரதான சாலையை அகலப்படுத்தித் தர வேண்டும்.

தாம்பரம் மாநகராட்சி, 5-வது மண்டலத்திற்கு உட்பட்ட இராஜகீழ்ப்பாக்கம்-மாடம்பாக்கம் சாலையை 6 வழிச் சாலையாக அகலப்படுத்தித் தர வேண்டும்.

தாம்பரம் தொகுதியில் உள்ள மதுரப்பாக்கம், முடிச்சூர், திருவஞ்சேரி மற்றும் அகரம்தென் பகுதிகளில் சாலை, குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தர சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

தாம்பரம் தொகுதியில் உள்ள நியாய விலைக் கடைகளுக்கு, விருகம்பாக்கம், திருவான்மியூர், நந்தனம் போன்ற நுகர்பொருள் வாணிபக் கிடங்குகளில் இருந்து அத்தியாவசியப் பொருட்கள் எடுத்து வரப்படுவதால், அத்தியாவசியப் பொருட்கள் வைப்பதற்கு தாம்பரம் பகுதியிலேயே ஒரு நுகர்பொருள் வாணிபக் கிடங்கு அமைக்க வேண்டும்.

தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட மார்க்கெட்டைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாகனப் போக்குவரத்து மிகவும் அதிகமாக உள்ளதால் காவல் துறை உதவியோடு போக்குவரத்தினைச் சீர்படுத்த நடவடிக்கை எடுத்து செயல்படுத்திட வேண்டும்.

தாம்பரம் தொகுதி, தாம்பரம் மாநகராட்சி, 49-வது வார்டில் உள்ள ராமகிருஷ்ணா ஐயர் தெருவில், கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான 2 கிரவுண்ட் நிலத்தில் உபயோகம் இல்லாத பாழடைந்த கட்டடத்தை அகற்றி, ஒரு சூப்பர் மார்க்கெட் அமைத்து தர வேண்டும்.

தாம்பரம் மாநகராட்சி, 48-வது வார்டில் கம்பர் தெருவில், கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான 2 கிரவுண்ட் நிலத்தில் உபயோகம் இல்லாத பாழடைந்த கட்டடத்தை அகற்றி, ஒரு சூப்பர் மார்க்கெட் அமைத்துத் தர வேண்டும்.

2023 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி அவர்கள்.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் வழியாக கிராமப்புறங்களில், விவசாயிகள், ஏழை, கூலித் தொழிலாளர்களுக்கு வசதியாக வேளாண்மை நிலங்களின் அருகில் ATM, CDM machine-களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரேஷன் கடைகளில் வழங்கப்படும் அரிசி மற்றும் சர்க்கரையை, எண்ணெய்யைப்போல பாக்கெட்டில் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். சுகாதாரமான முறையில் இதனை packing செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும்.

ரேஷன் கடைகளில் வழங்கி வரும் புழுங்கல் அரிசி, பச்சரிசி மற்றும் செறிவூட்டப்பட்ட அரிசி இந்த மூன்றையும் அங்கே கலந்து கொடுத்துவிடுகிறார்கள். அதைத் தனித்தனியாகப் பிரித்துக் கொடுத்தால், தாய்மார்கள், பெண்கள் வந்து வாங்குவதற்கு வசதியாக இருக்கும். ரேஷன் அரிசியை முழுமையாக உணவாக தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் சாப்பிடுகிறார்கள். அவை அவிகின்ற நேரம், 3 அரிசிக்கும் வேறு வேறு. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், இதை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். அவிகிற நேரம் வேறு வேறு, அரைபடுகிற நேரம். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செறிவூட்டப்பட்ட அரிசியைப்பற்றி இங்கே சொல்கிறார்கள். ஒன்றிய அரசு, இந்த செறிவூட்டப்பட்ட அரிசியை இந்தியா

முழுவதிலும் இருக்கின்ற அத்தனை மாவட்டங்களிலும், அத்தனை நியாய விலைக் கடைகளிலும், ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் 100 கிலோ அரிசிக்கு 1 கிலோ கலந்து கொடுக்க வேண்டுமென்று அறிவுரை கூறியுள்ளது. இதுகுறித்து விரிவாக என்னுடைய பதிலுரையிலே கூற இருக்கிறேன். ஏனென்றால், சட்டமன்ற உறுப்பினர்கள் நிறைய பேர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதை விளக்கிக் கூற வேண்டியது என்னுடைய கடமை.

சமீபத்திலே புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவரும், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரும் இந்த fortified rice-செறிவூட்டப்பட்ட அரிசியைச் சமைத்து, அங்கிருக்கின்ற அதிகாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் வழங்கியிருக்கிறார்கள். எனவே, ஒன்றிய அரசு அதைக் கண்டிப்பாகக் கடைபிடிக்கக் கூறியிருக்கிறது. அதிலே Vitamin B12, பயோக் அமிலம், இரும்புச் சத்து போன்ற சத்துகளெல்லாம் இருக்கின்ற காரணத்தால், இரத்தசோகை வரக்கூடாது என்பதற்காக அந்த அரிசியை வழங்கிட ஒன்றிய அரசு வலியுறுத்தி இருக்கின்றது. அதனடிப்படையில்தான் நாம் செயல்படுத்தவிருக்கிறோம். ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் செயல்படுத்த வேண்டுமென்று சொல்லியிருந்தாலும், நாம் அந்த blending machine-களையெல்லாம் இன்னும் எல்லா மில்களிலும், அரவை ஆலைகளிலும் போட முடியவில்லை. அதற்காக நாம் ஜூன் மாதம் வரையிலும் time வாங்கியிருக்கிறோம். எனவே, பொதுமக்கள் மத்தியிலே இருக்கிற அச்சத்தைப் போக்குகின்ற விதத்திலே அரசு நடவடிக்கை எடுத்து, நல்ல முறையிலே பொதுமக்கள் அந்த அரிசியை எளிமையாகப் பயன்படுத்துகின்ற விதத்திலே மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி அவர்கள்.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின்கீழ் பணிபுரியும் ரேஷன் கடை பணியாளர்களுக்கும், TNCSC ஊழியர்களைப்போன்று ஊதிய விகிதம் மற்றும் படிகள் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும். ரேஷன் கடைகளில் சிறுதானியங்களான பயறு, கேழ்வரகு, சோளம் போன்றவற்றை மானிய விலையில் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். ஏழைகளுக்கு எல்லா மாதங்களிலும் அரிசி

போன்றே கோதுமையையும் இலவசமாக வழங்க முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், பிற கூட்டுறவு அமைப்புகள் மூலமாக இந்த வருடம் ரூ.545 கோடி இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. இந்தத் தொகைக்கு மத்திய அரசு வருமான வரி விதித்துள்ளது. வருமான வரி விலக்கு பெற தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன்மூலமாக நம்மால் சில கோடி ரூபாய்களைச் சேமிக்க முடியும்; வருமான வரி விலக்குக்கு நாம் முயற்சிக்க வேண்டும்.

பிற்பகல் 6–10

கூட்டுறவு அமைப்புகள்மூலம் கிடைத்த தொகையில் 20 முதல் 50 சதவிகிதப் பணத்தை reserve fund ஆக எடுத்து, Pension Corpus Fund என ஒரு நிதி அமைப்பை உருவாக்கி, கூட்டுறவு வங்கி மற்றும் சங்கப் பணியாளர்களுக்கு pension வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்பது எனது கருத்து.

அதேபோல, பொதுமக்களுக்கு சுத்தமான, சுகாதாரமான உணவு கிடைத்திட அரிசி, எண்ணெய், இறைச்சி போன்ற உணவுப் பொருட்களை ஆய்வு செய்திட, மாவட்டங்கள்தோறும் உணவுப் பொருள் தர நிர்ணய ஆய்வகம் ஒன்றை அமைக்க வேண்டும். ஏற்கெனவே, இருக்கின்ற இந்தத் திட்டத்தை மத்திய அரசுடன் இணைந்து தமிழ்நாட்டிலும் நாம் செயல்படுத்திட முயற்சி எடுக்கலாம் என்பது எனது தாழ்மையான கருத்து.

அதேபோல, மாவட்ட அளவிலான நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம்மூலம் தரமான பொருள்களைக் கொள்முதல் செய்து, கிராமக் கூட்டுறவு, வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் வழியாக ஏழை நுகர்வோர்களுக்கு தரமான, சுத்தமான, கலப்படம் இல்லாத சுகாதாரமான பொருள்கள் கிடைத்திட அரசு ஆவன செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெறும் மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழுக் கூட்டம் ஒழுங்காக நடைபெறவும், நுகர்வோர் ஆணையர் அவர்களின் தலைமையில் நுகர்வோர் குழுக்களை அழைத்து மாதம் ஒரு முறை கூட்டம் நடத்திடவும் அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை உயர் நீதிமன்றக் கிளை, மதுரையில் சிறப்பாக இயங்குவதுபோன்று, மதுரையில் பகுதி நேரமாகச் செயல்படும் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், முழுநேரமாகச் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் NPHH (Non-Priority Household) card என்பது கிடையாது. நம்முடைய மாநிலத்தில் NPHH card-களை நாம் PHH card-களாகவும், அதைப்போன்று PHH card-களை AAY card-களாகவும் மாற்றினால் அதிகமான மற்றும் தகுதியான ஏழைகள், அரிசி மற்றும் அனைத்து மானியங்களையும் பெறலாம். மேலும், மகளிர் உரிமைத் தொகை போன்ற நிறைய மானியங்கள் கிடைக்கப்பெறும். NPHH card-ல் நிறைய ஏழைகள் இருக்கின்றனர். அவர்களைக் கண்டறிவதில் கொஞ்சம் சிரமங்கள் இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். ஆனால், correct ஆகக் கண்டறிந்து, தகுதியான எல்லோரையும் PHH-ன்கீழ் கொண்டு வந்துவிட்டு, மிகவும் ஏழைகளை AAY-ல் கொண்டு சென்றுவிட்டால், இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படும். NPHH என்ற ஒரு category அவசியமில்லாத ஒன்று; மற்ற மாநிலங்களில் இல்லாததுபோன்று, நமக்கும் அது தேவையில்லை. PHH and AAY ஆகிய இரண்டையும் follow செய்தால் அனைத்து ஏழைகளையும் cover செய்து, எல்லா மானியங்களையும் கொண்டு சேர்க்கலாம் என்பது என்னுடைய கருத்து.

அதைப்போன்று, 'ஒரு நபர் ration card'—கள் நிறைய இடங்களில், மலையோரக் கிராமங்களில், குறிப்பாக நிறைய பெண்களுக்கு விடுபட்டிருந்தது. சட்டமன்ற உறுப்பினர்கள் நிறைய பேர் கோரிக்கைகள் வைத்ததன் அடிப்படையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாக அவையெல்லாம் வழங்கப்பட்டன. அதில், இன்னும் கொஞ்சம் பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் எல்லாம் வட்டாட்சியர் உள்ளிட்ட அலுவலர்களிடம் pending-ல் இருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் தீர்வு காண்பதற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

அதைப்போல, 'ஒரே நாடு, ஒரே ration card' என்ற திட்டத்தின்கீழ், இப்போது migrant workers எல்லோருக்குமே நாம் பொருள்களை எல்லா இடங்களிலும் கைரேகை பதித்தவுடன் கொடுத்துவிடுகிறோம். ஆனால், கடைசியாக வரக்கூடிய 50 பேர், அவர்கள் migrant workers ஆக இருக்கலாம் அல்லது நமது

தமிழ் மக்களாக இருக்கலாம், சுமார் 50, 60 பேர் ஒவ்வொரு ration card-லும் பொருள் தட்டுப்பாடு என்று சொல்லி, ஒவ்வொரு மாதமும் பொருட்கள் கிடைக்கப்பெறாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. பின்னர், அடுத்த மாதம் அதையும் சேர்த்து அவர்களுக்கு நாம் கொடுக்கிறோம்; கொடுக்காமல் இல்லை. இருந்தாலும், அந்தத் தட்டுப்பாடுகளை correct ஆகக் கண்டறிந்து, கூடுதலாக உள்ள migrant workers-ஐ அதில் இணைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

அதைப்போன்று, கூட்டுறவு வங்கிகள் மற்றும் சங்க நிர்வாகிகளின் பதவிக் காலம் இப்போது முடிவடையக்கூடிய சூழ்நிலையில், உடனடியாக அவற்றின் தேர்தல்களை நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவு மற்றும் பாதுகாப்பு அலுவலர்கள் நியமனங்களை தற்போது உயர் நீதிமன்றம் இரத்து செய்திருக்கிறது. அந்த நியமனங்களைப் பொறுத்தவரை, மீண்டும் நடவடிக்கைகள் எடுத்து, புதிய நடைமுறைகளை உருவாக்கி, உணவு மற்றும் பாதுகாப்பு அலுவலர்களை நியமனம் செய்ய அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்யக்கூடிய இடங்களில் பகுதி நேர மற்றும் புதிய பொது விநியோகக் கடைகளை, ration card-களைப் பிரித்து உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். எங்களுடைய கோரிக்கைகளை உடனே ஏற்றுக்கொண்டு, கடைகளைப் பிரித்துக் கொடுப்பதற்கு நீங்கள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–15

அதைப்போன்று, தமிழ்நாடு கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலை தொழிலாளர்களிடையே pay anomaly–ஊதிய பாகுபாடு இருக்கிறது. இதைக் களைவதற்கு Thiru Rajeev Ranjan, I.A.S. அவர்கள் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு தன்னுடைய அறிக்கையைக் கொடுத்து கிட்டத்தட்ட 10 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், இன்னமும் அந்த pay anomaly தீர்வு செய்யப்படாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதில், உயர் நீதிமன்றமும்

பணியாளர்களுக்குச் சாதகமான தீர்ப்பு வழங்கியிருந்த சூழ்நிலையில், இப்போது நமது அரசு மேல்முறையீடு செய்திருக்கிறது. நம்முடைய முன்னாள் முதல்வர், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், அவர்களுடைய காலத்தில் தொ.மு.ச. பேரவை நடத்திய பேரணியில் கலந்துகொண்டு, தொ.மு.ச. கொடுத்த அணிவகுப்பு மரியாதையைப் பெற்றுக்கொண்டு, தொழிலாளர்களுக்கிடையே அவர் ஆற்றிய உரையில், 'இனிமேல் தொழிலாளர்களுக்குச் சாதகமாக வரக்கூடிய தீர்ப்புகள் எதுவாக இருந்தாலும், அந்தத் தீர்ப்புகளுக்கு மேலும் மேல்முறையீடு செய்து, அவர்களுக்கு கஷ்டங்கள் வராமல் தீர்ப்பை நாங்கள் நடைமுறைப்படுத்துகிறோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் சம்பந்தமாக சாதகமான தீர்ப்புதான் வந்திருக்கிறது. ஆகவே, இந்த ஊதிய பாகுபாட்டைக் களைந்து, இந்தத் தீர்ப்புகளை நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

அதேபோன்று, Tamil Nadu Civil Supplies Corporation உடைய நவீன அரிசி ஆலையில் பணிபுரிகின்ற 400 தொழில்நுட்ப ஊழியர்களுக்கு அரசாணை மற்றும் 3 வழக்குகளுக்கு உயர் நீதிமன்றத்தில் 16–9–2013, 7–7–2015 மற்றும் 14–12–2021 ஆகிய 3 தேதிகளில் தீர்ப்புகள் வாங்கித் தந்திருக்கிறோம். அதில் அரிசி ஆலையில் பணிபுரியும் 400 தொழில்நுட்ப ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு பரிந்துரை செய்து, positive direction வந்திருக்கிறது. அதை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இதோ முடித்துவிடுகிறேன். இன்னும் இரண்டு points தான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள்.

திரு. A.P. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி, நீங்கள் பேச ஆரம்பித்து 12 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. A.P. நந்தகுமார்: வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திருமதி S. விஜயதரணி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திருமதி S. விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்கின்ற நெல்லை 48 மணி நேரத்திற்குள் சேமிப்புக் கிடங்கிற்கு கொண்டு போக வேண்டும். ஆனால், சில காரணங்களால் அவற்றைக் கொண்டு போக முடியாத சூழ்நிலை இருக்கிற நேரத்தில், அந்தப் பணியாளர்களுடைய சம்பளத்தில் பிடித்தம் செய்யப்பட்டுவிடுகிறது. எலி, அரிசியை திருடிக் கொண்டு போய்விடுகிறது; மூட்டைகளைத் தின்று விடுகிறது; இன்னும் நிறைய சிறு சிறு தவறுகள் நடைபெறுகின்றன. அந்தப் பணியாளர்களுக்கு அந்தப் பிடிப்புத் தொகையை திருப்பியளிக்க வேண்டும். அவர்களுக்கு ஏற்கெனவே சம்பளம் மிகவும் குறைவாக உள்ளது. எனவே, அந்த இழப்பை அவர்கள் தலையில் கட்டுவதை மாற்றியமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

இன்னும் ஒரேயொரு கோரிக்கை; அதாவது Tamil Nadu Civil Supplies Corporation*-ல் தேர்தல்கள் நடைபெற்றது. அதில், தொ.மு.ச.—*Labour Progressive Federation *(*LPF*) அதிக ஓட்டுகள் பெற்று முதல் யூனியனாக* select *ஆனது. இரண்டாவது யூனியனாக காங்கிரஸ் கட்சியின்* INTUC *ஜெயித்து வந்தது. மூன்றாவது யூனியனாக அ.தி.மு.க.-வின் அண்ணா தொழிற்சங்கம் வந்தது. ஆனால், முதலாவதாக வந்த யூனியனுக்கும், மூன்றாவதாக வந்த யூனியனுக்கும்* room *கொடுத்துவிட்டார்கள். ஆனால், காங்கிரஸ் பாவம்; எங்களுக்கு* room *தரவில்லை. நாங்களும் வருடக்கணக்கில் கேட்டுக்கொண்டேயிருக்கிறோம். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள். (குறுக்கீடு)*

திருமதி S. விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். இதற்குப் பிறகு, இந்தக் கூட்டத் தொடர் முடியும் வரை நான் பேசவே போவதில்லை. இந்தக் கூட்டத் தொடர் முடிகிற வரையிலும் உட்கார்ந்து வாதத்தை கேட்கத்தான் போகிறேன்.*

ஆகையால், எனக்கு இன்றைக்கு ஒரு நிமிடம் கொடுத்துவிடுங்கள். ஆகவே, எங்களுடைய யூனியனுக்கு மாவட்ட அளவிலும், தலைமை அளவிலும் room தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, எங்களுடைய மாவட்டத்தில் முந்திரி விவசாயம் கிடையாது. அந்த விவசாயம் அந்தக் காலத்திலேயே முடிந்துவிட்டது. ஆனால், நாங்கள் முந்திரியை import செய்கிறோம். அதற்கு மத்திய அரசுக்கு இறக்குமதி வரி கட்டுகிறோம். Cess வரி போடுகிறார்கள்; அதையும் கட்டுகிறோம். தமிழ்நாட்டில் முந்திரிக் கொட்டைகளுக்கு levy இல்லையென்று சொல்லிவிட்டோம். ஆனால், அதேநேரத்தில் அதை process செய்தவுடன், அதற்கு ஒரு levy-ஐ போடுகிறார்கள். அது தமிழ்நாடு சட்டம், Section 24(1), Section 24(3)-ன்படி முரணாகத்தான் இருக்கிறது. அந்த levy 1 சதவிகிதம் என்றாலும், மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஏழைகள், பெண்கள்தான் அதில் அதிகமாக வேலை பார்க்கிறார்கள். அந்த levy இல்லையென்றால், இன்னும் 10 பெண்களுக்கு வேலை கிடைக்கும். ஆகையால், அந்த levy-ஐ கைவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, எங்களுடைய மாவட்டத்தில், முந்திரித் தொழிற்சாலைகள் நிறைய இருப்பதால், இது எல்லோருடைய பிரச்சினையாகவும் இருக்கிறது.

மார்த்தாண்டம் எனது தொகுதி; மயிலாடி எனது சொந்த ஊர். மார்த்தாண்டம் தேனுக்கும், மயிலாடி சிற்பக் கலைக்கும் தமிழக அரசு புவிசார் குறியீட்டினை பெற்றுத் தந்திருக்கிறது. அதற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை அவைக் குறிப்பில் பதிவேற்றம் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன், நன்றி.

தொகுதிக் கோரிக்கைகள்:

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மாவட்டக் குறைதீர் ஆணையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டும்.

நுகர்வோர் குறைதீர் ஆணைய உறுப்பினர்களின் மாவட்ட இட மாறுதல் நடைபெற அரசு ஆவன செய்ய வேண்டும்.

புதிய மாவட்டங்களில் குறைதீர் ஆணையங்கள் அமைக்கப்பட வேண்டும்.

தமிழகத்திலுள்ள Hotels மற்றும் lodge-களில் உள்ள தண்ணீர்த் தொட்டிகளைச் சுத்தமாக வைத்திருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திண்பண்டங்களை பாக்கெட்டுகளில் வைத்து street vendors விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

R.O. மூலமாக வழங்கப்படும் குடிநீரின் PH value-7 ஆக இருப்பதை அரசு கண்காணிக்க வேண்டும். சுகாதாரமான குடிநீர் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

மார்த்தாண்டம் சுற்று வட்டாரப் பகுதிகளில் தேனை கிலோ ஒன்றுக்கு ரூ.300/– வீதம் அரசு கொள்முதல் செய்ய வேண்டும்.

மார்த்தாண்டத்தில் தேன் ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும்.

கல்குளம், விளவங்கோடு வட்டத்தில் ரப்பரை கிலோ ஒன்றுக்கு ரூ.300/– வீதம் அரசு கொள்முதல் செய்ய வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும்.

மார்த்தாண்டத்தில் ஒரு வருவாய் கோட்டாட்சியர் அல்லது சார்–ஆட்சியர் அலுவலகம் அமைத்திட அரசு ஆவன செய்திட வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டம், தக்கலையில் உள்ள காவல் உட்கோட்ட அலுவலகம், DSP Office-ஐ பிரித்து, மார்த்தாண்டத்தில் ஒரு DSP அல்லது ASP Office உருவாக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 6–20

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்

திரு. ராஜேஷ் குமார் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி அவர்களும் பேசியபோது, முன்னுரிமையற்ற NPHH ration card-களை PHH ration card ஆக மாற்ற வேண்டும் என்று பலமுறை வலியுறுத்தினார்கள். தற்போது வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள நிறைய பேர் NPHH-ல் இருக்கிறார்கள். அதேமாதிரி NPHH ration card-ல் முன்னுரிமையற்ற அட்டைகளில், முன்னுரிமையுள்ள நிறைய பேர் மாறி மாறி இருக்கிறார்கள். கடந்த கால ஆட்சியில் இதுகுறித்து கணக்கெடுத்தார்கள். அதனை மறுசீரமைப்பு செய்ய வேண்டும். இருந்தபோதிலும், நீங்கள் வைத்த கோரிக்கையையேற்று, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் மரியாதைக்குரிய திரு. ராஜாராம், I.A.S. அவர்கள் தற்போது தமிழ்நாடு முழுவதும் அதனைக் கண்டறிந்து NPHH ration card-லிருந்து, முன்னுரிமையற்ற card-லிருந்து, PHH ration card, முன்னுரிமையுள்ள card-களாக, சுமார் 12,84,000 நபர்களை மாற்றியிருக்கிறார்கள். அதனால் சுமார் 42 இலட்சம் குடும்பங்கள் பயனடைந்திருக்கின்றன.

அதேபோல், வாங்கிய நெல்லை உடனடியாக 48 மணி நேரத்தில் அரவை ஆலைக்கு அனுப்ப வேண்டும்; இல்லாவிடில் அந்த நெல் கெட்டுவிட்டால், அங்கு வேலை பார்க்கும் பட்டியல் எழுத்தர், காவலர்களிடமிருந்து அந்தத் தொகையைப் பிடித்தம் செய்துவிடுகிறார்கள் என்று நீங்கள் சொன்னீர்கள். தற்போது, அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. விரைவில் அந்தப் பிரச்சினை வராது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு ஓர் அறிவுரை கூறியிருக்கிறார். 'வாங்கிய நெல்லை உடனடியாக அரவை ஆலைக்கு அனுப்ப வேண்டும்; அதனைத் திறந்தவெளி சேமிப்புக் கிடங்குகளுக்கு அனுப்பக்கூடாது' என்ற உத்தரவு வழங்கியதன் காரணமாக, வாங்கிய நெல்லை உடனடியாக அரவை ஆலைகளுக்கு அனுப்புகின்ற காரணத்தினால்தான், ஆலைகளில் Colour Sorter machine பொருத்தப்பட்டு, இன்றைக்கு கருப்பு, பழுப்பு இல்லாத அரிசியாக தரமான அரிசி வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, சங்கத் தேர்தல் குறித்து இங்கே பேசினீர்கள். எங்களுக்கு ஓர் அலுவலகம் வேண்டும் என்று கோரிக்கை

வைத்தீர்கள். அதனையும் துறையினுடைய செயலர், மேலாண்மை இயக்குநர் அவர்களிடம் சொல்லி, வருகின்ற காலத்தில் அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள்.

திரு. A.P. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுப் புகழ்மிக்க இந்த மாமன்றத்தில் புகழ்ச்சியே இருக்கக்கூடாது என்று உரைத்த புகழின் உச்சியாகத் திகழும் எங்கள் வரலாற்று முதல்வர் மாண்புமிகு அன்புத் தலைவர் தளபதி அவர்களுக்கு என்னுடைய வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்கள் மாவட்டத்தில் கடந்த 10 ஆண்டுகளாகக் கிடப்பில் போடப்பட்ட அனைத்துத் திட்டங்களையும், கேட்காமல் தருகின்ற மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வணக்கம். 'தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சமம்; எந்த ஆய்வுக் கூட்டமாக இருந்தாலும், உங்கள் தொகுதி மக்களின் குறையை வந்து கூறுங்கள்; ஒன்றிணைந்து மக்கள் பணியாற்றுவோம்' என்று அறிவித்த எங்களுடைய சின்னவர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வணக்கம். கேட்ட திட்டங்களையெல்லாம், என் தொகுதி மக்களுக்குத் தருகின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் மற்றும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். என்னை இரண்டாவது முறையாக அணைக்கட்டு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பிய வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[திரு. A.P. நந்தகுமார்] [2023 ஏப்ரல் 6

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய மானியக் கோரிக்கையான கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, அனைத்து மனிதர்களுக்கும் இன்றியமையாத துறைகளாகும்.

'மண் திணி ஞாலத்து
உண்டி கொடுத்தோர்
உயிர் கொடுத்தோரே'

என்று மணிமேகலையும்,

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை'

என்ற திருக்குறளும்,

'தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில், இந்த
ஜகத்தினை அழித்திடுவோம்'

என்று பாரதியும் உணவின் முக்கியத்துவத்தையும், மேன்மையையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது, உலகில் வாழும் உயிர்களுக்கெல்லாம் உணவு கொடுப்பவர்கள் உயிர் கொடுத்தவராவர் என மணிமேகலை காப்பியம் கூறுகிறது. தன்னிடம் கிடைக்கும் உணவினை மற்றவர்களுக்குக் கொடுத்து, தானும் உண்ண வேண்டும் என இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் கூறியிருக்கின்றார். உலகத்தில் பிறந்த எந்தவொரு மனிதனும் பசியால் வாடக்கூடாது; அப்படி வாடுகின்ற மக்கள் வசிக்கும் நாட்டை அழித்துவிடுவோம் என பாரதி கூறுகிறார்.

இப்படி சிறப்பு வாய்ந்த உணவுத் துறையை இந்தியாவிலுள்ள மாநிலங்களில், முதன்முதலாக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் என்ற நிறுவனத்தை உருவாக்கி, தமிழகத்திலிருக்கக்கூடிய குடும்பங்களைக் கணக்கெடுத்து, ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடும்ப அட்டை வழங்கி, அனைத்துத் தரப்பு மக்களும் பசியால் பட்டினியால் வாடக்கூடாது என்பதற்காக அரிசி உள்ளிட்ட அனைத்து உணவுப் பொருட்களையும் தரமாக, முறையாக அனைவருக்கும் வழங்கி அட்சய பாத்திரமாகத் திகழ்ந்தவர் நம்முடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6–25

இந்தியாவில் முதன்முதலாக ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கியவர்; 50 ரூபாய்க்கு தரமான 10 மளிகைப் பொருட்களை வழங்கியவர்; அரசுக்குத் தேவையான அரிசியை வெளியிலிருந்து வாங்காமல், அரசுக்குச் சொந்தமான அரவை ஆலைகளை உருவாக்கி, அரசு அரவை ஆலைகளுக்குத் தேவையான நெல்லை எந்தவிதமான இடைத்தரகர்களும் இன்றி விவசாயிகளிடமிருந்து அவர்கள் விவசாயம் செய்கின்ற பகுதிகளிலேயே நேரடியாகச் சென்று எந்தவிதப் பொருட்சேதமும், கால விரயமும் ஏற்படாமல் கொள்முதல் செய்ய Regular marketing, ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், DPC–களை உருவாக்கியவர் தலைவர் கலைஞர் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி, வேலூரிலிருந்து 50 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. அந்தப் பகுதியிலிருந்து ஏழை விவசாயிகள் தாங்கள் விளைவிக்கின்ற நெல்லை, வேலூருக்குக் கொண்டு வந்து போட வேண்டும். ஆனால், தலைவர் தளபதி அவர்களுடைய அரசு கடந்த 2021 ஆம் ஆண்டு பொறுப்பேற்றப் பிறகு, அவர்களிடம் முறையிட்டதன் காரணமாக, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியில் மட்டும் சற்றேறக்குறைய 6 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை உருவாக்கித் தந்தார். இதன் காரணமாக, இன்றைக்கு விவசாயிகளுக்கு ஒரு மூட்டை நெல்லுக்கு 50 ரூபாய் சேமிப்பு கிடைக்கக்கூடிய வகையிலே ஏற்பாடு செய்த தலைவர் தளபதி அவர்களுடைய அரசுக்கு, என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களிலே, ரேஷன் அட்டைகள் பெறுவது மிகப் பெரிய கடினம். ரேஷன் அட்டைகளை வாங்க வேண்டுமென்று சொன்னால் இரண்டு, மூன்று அலுவலகங்களுக்குச் சென்று, ரேஷன் அட்டைகள் வாங்க வேண்டும். ஆனால், தலைவர் தளபதி அவர்களுடைய அரசு, 2021–ல் பொறுப்பேற்றபோது, யாரெல்லாம் குடும்ப அட்டைகளுக்கு விண்ணப்பிக்கின்றார்களோ அவர்களுக்கு 15 நாட்களுக்குள் குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்று அறிவித்து, இன்றுவரை அனைவருக்கும் குடும்ப அட்டைகளை

வழங்கிய அரசு தலைவர் தளபதி அவர்களுடைய அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, எங்களுடைய வேலூர் மாவட்டத்தில் மட்டும் 31,641 நபர்களுக்கு கடந்த 23 மாதங்களில் உணவுத் துறையின் சார்பில் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை மிகப் பெருமையோடு நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

மேலும், மாநிலம் முழுவதும் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட நியாய விலைக் கடைகள் உள்ளன. அவற்றில் 1,000 குடும்ப அட்டைகளுக்கு மேல் இருந்தால் பகுதி நேரக் கடைகளைப் பிரித்துக் கொடுக்க வேண்டும். கடந்த ஐந்து ஆண்டுகள் நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன்; பல முறை இதுகுறித்து இந்த மாமன்றத்தில் பேசியுள்ளேன். என்னுடைய தொகுதி மக்களுக்கு பகுதி நேர நியாய விலைக் கடைகளைப் பிரித்துத் தர வேண்டும். காரணம், கிராமங்கள் நிறைந்த பகுதி. கிராமங்களில் பகுதி நேர நியாய விலைக் கடைகள் இல்லையென்று சொன்னால், சற்றேறக்குறைய 5 அல்லது 6 கிலோ மீட்டர் அளவிற்குச் செல்ல வேண்டும், வயதானவர்கள் செல்ல முடியவில்லை என்று கேட்டேன். ஆனால், கடந்த ஆட்சிக் காலத்திலே எதுவும் நடைபெறவில்லை. ஆனால், தலைவர் தளபதி அவர்களுடைய அரசு பொறுப்பேற்றவுடனே என்னுடைய அணைக்கட்டு தொகுதிக்கு மட்டும் 15 பகுதி நேர நியாய விலைக் கடைகளைத் தந்த மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குச் செல்கின்றபோது பல வயதான தாய்மார்கள், விவசாயம் செய்யக்கூடியவர்களெல்லாம் எங்களிடத்திலே Biometric முறையில் கைரேகை பதிவதில்லை என்று சொன்னார்கள். Biometric முறையைக் கொண்டு வந்தவர்கள் கடந்த ஆட்சியாளர்கள். சேற்றில் கை வைத்தால் ரேகை இருக்காது. Factory-ல் வேலை செய்தால் ரேகை இருக்காது. ஆனால், Biometric machine-ல் கையை வைக்கின்றபோது ரேகை பதியவில்லை என்றால் ரேஷன் கடைகளில் பொருட்களை வாங்க முடியாது. அப்படி வாங்க முடியாமல் திரும்பிச் சென்றார்கள். நாங்கள் கடந்த ஆட்சியில் பேசுகின்றபோது இதுகுறித்து

சொன்னோம். இதற்கு மாற்று வழி வேண்டுமென்று கேட்டோம். ஆனால், மாற்று வழியை அவர்கள் தரவில்லை. மாற்று வழியைத் தருவதற்காகத்தான் இன்றைக்கு இருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே Biometric machine-ல் ரேகை வைக்கின்றபோது, அந்த Biometric machine-ல் ரேகை பதிவாகவில்லையெனில் அவர்கள் யாரைப் பரிந்துரைக்கின்றார்களோ, அவர்களை அனுப்பினால் அவர்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கலாம் என்று அறிவித்த தலைவர் தளபதி அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நான் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு) நீங்கள் அமைச்சர் அல்ல, நீங்கள் உட்காரலாம். நான் பேசுவது குற்றச்சாட்டு அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இருங்கள். (குறுக்கீடு)*

திரு. A.P. நந்தகுமார்: *நான் நடந்ததைச் சொல்கின்றேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள், என்ன சொன்னார்கள்? ஒன்றும் சொல்லவில்லையே!*

திரு. A.P. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே மிகவும் பெருமை கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Biometric *முறையில் கைரேகை பதியவில்லையென்றாலும் மாற்று வழியில் இப்போது செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். (குறுக்கீடு) ஒன்றிய அரசின். . . (குறுக்கீடு)*

பிற்பகல் 6–30

திரு. A.P. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உண்மையைச் சொன்னேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறேன். அவர் கேட்கவில்லை. (குறுக்கீடு) ஒன்றிய அரசு கொண்டுவந்த திட்டம், உங்களுடைய ஆட்சி இருந்தபோது நடைமுறைப்படுத்தப்பட்டது, அவ்வளவுதான். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நந்தகுமார், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)*

திரு. A.P. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நானும் டெல்டாகாரன்தான் என்று நெஞ்சை நிமிர்த்தி, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தளபதி தலைவர் அவர்கள் டெல்டாகாரர்தான். காரணம், இத்தனை வருட காலம் இல்லாததைச் செய்து காட்டியவர். அதனால்தான் அவர் டெல்டாகாரர்.

விவசாயிகள் சேற்றில் கை வைத்து, நாற்று நட்டு, களை பறித்து, அறுவடை செய்து, நெல் மணிகளைக் கொண்டுவந்து சேர்க்கின்றார்கள். எப்போது மழை வருமென்று யாருக்கும் தெரியாது; திடீரென்று மழை வரும். திடீரென்று மழை வருகின்றபோது, வெளியே அட்டிகட்டி வைத்திருக்கின்ற நெல்மணிகள் மழையில் நனைந்து, முளைத்துப் போகின்ற நிலை ஏற்படும். அது முளைத்துப் போகின்ற நிலை இருக்கின்றபோதும் தார்ப்பாயை வைத்து மட்டுமே கடந்த ஆட்சியில் நெல்மணிகளை மூடினார்கள். ஆனால், தலைவர் தளபதி அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, சுமார் 238 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 2.86 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரையுடன்கூடிய நெல் கொள்முதல் சேமிப்பு நிலையங்களைக் கட்டித் தந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், அதைக் கட்டித் தந்த இடத்திற்கு, அதாவது, திருவாரூருக்கு அவரே நேரடியாகச் சென்று ஆய்வு செய்தார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இது எவருக்கும் தோன்றாதது. விவசாயிகள் எந்த வகையிலும் பாதிப்படையக் கூடாது என்பதற்காக அவர்களால் கொண்டுவரப்பட்டது அந்தத் திட்டம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. நந்தகுமாருக்கு நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ரொம்ப வேண்டியவர்தான். அதில் சந்தேகம் இல்லை. அதற்காகத்தான் பாராட்டுகிறார். ஆனால், இன்னொரு இலாகா இருக்கிறது என்பதை மறந்துவிடாதீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

2023 ஏப்ரல் 6]

திரு. A.P. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் மனசாட்சியோடுதான் இருக்கிறோம். கடந்த முறை நான் சென்று வாக்குகளைக் கேட்கின்றபோதும், மக்களை நாடி நாம் செல்கின்றபோதும், எல்லா மக்களும் 'கலர் சரியில்லை, அரிசி பழுப்பு நிற அரிசியாக இருக்கிறது' என்று சொன்னார்கள். 'இதை எப்போது மாற்றுவீர்கள், இந்த அரிசியையெல்லாம் சாப்பிட முடியவில்லை' என்று பலபேர் சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு தலைவர் தளபதி அரசு பொறுப்பேற்ற பிறகு, சற்றேறக்குறைய 350 நவீன அரிசி ஆலைகளில்* colour sorter *பொருத்தப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அரிசி தரமாக இருக்கிறது. அதை ஏன் நீங்கள் செய்யவில்லை? அதைச் செய்தது தலைவர் தளபதி அவர்களுடைய அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும். (குறுக்கீடு) நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு)*

திரு. A.P. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, உரை முடியட்டும். நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) இது முடியட்டும், நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு)*

திரு. A.P. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு) சரி, ஒன்றே ஒன்றை மட்டும் நான் சொல்கிறேன். தலைவர் தளபதி அவர்கள், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் சற்றேறக்குறைய 237 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதுகாக்கப்பட்ட ஷெட்டை அமைத்துத் தந்தார்கள். ஆனால், அவர்களுடைய ஆட்சியிலே* silo*-க்களை கட்டித் தருகிறோம் என்று, 64 கோடி ரூபாய்க்கு* silo*-க்களை மயிலாடுதுறை மாவட்டத்திலே கட்டித் தந்தார்கள். ஆனால், அவர்களுடைய ஆட்சியில் அது பயன்பெறுகின்ற நிலைமைக்கு வந்ததா என்று சொன்னால், இதுவரை அது கிடப்பில் போடப்பட்ட திட்டமாகத்தான் உள்ளது. (குறுக்கீடுகள்)*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள். (குறுக்கீடு)*

திரு. A.P. நந்தகுமார்: *தகுந்த, எந்தவொரு சரியான நடைமுறைக்கும் கொண்டுவராத காரணத்தினால். . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சிக் கொறடா பேசுகிறார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய சாதனைகளை மட்டுமே சொல்லிக் கொண்டிருந்தால் பிரச்சினை ஒன்றுமில்லை. ஆனால், இந்த ஆட்சி குறித்து நாங்கள் ஏதாவது ஒரு வார்த்தை பேசினால் உடனடியாக அதை அவைக் குறிப்பிலிருந்து நீங்கள் நீக்கிவிடுகிறீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தவறாகச் சொன்னால் நீங்கள் சொல்லுங்கள். அதை நான் அப்போதைக்கப்போது அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *குற்றச்சாட்டு சொன்னாலும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறீர்கள். எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு சொன்னாலும்—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடந்த ஆட்சியில் எல்லா பக்கமும் அரிசி சரியில்லை என்று பேசினார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எது தவறு என்று நீங்கள் பதிவு செய்யுங்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *இல்லை, அது அப்படியில்லை. அவருக்குப் பேச வாய்ப்புக் கொடுங்கள். முன்னாள் அமைச்சர் திரு. காமராஜ் அவர்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுங்கள். எங்கு பார்த்தாலும் அரிசி கருப்பாக இருந்தது என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசினார்கள். இந்தமாதிரி ஏதாவது ஒன்றை நாங்கள் சொன்னால், நீங்கள் உடனே அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறீர்கள். இதை நாங்கள் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? எதிர்க்கட்சிகள் எதுவுமே கேட்கக் கூடாது என்றால், எதற்காக நாங்கள் 5 மணிக்குமேல் இங்கு வந்து உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்லுங்கள், நான் பதிவு செய்துகொள்கிறேன். (குறுக்கீடு)

திரு. எஸ்.பி. வேலுமணி: அப்படியென்றால் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுங்கள். இல்லையென்றால், அவர் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குங்கள். பேசுவதற்கு வாய்ப்புக் கொடுங்கள் அல்லது அவைக் குறிப்பிலிருந்து நீக்குங்கள். ஏதாவது ஒன்றைச் செய்யுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்களும் உட்காருங்கள். முன்வரிசையில் இருப்பவர்கள் கேட்டவுடனே, கை தூக்கியவுடனே நான் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். எது தவறு என்று நீங்கள் சொல்லுங்கள். அதற்குப் பின்னால் இருக்கக்கூடிய உறுப்பினர்கள், இன்றைக்கு பேசக்கூடியவர்கள் எல்லோரும் கையை தூக்கினால். . . (குறுக்கீடு) இல்லை, நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள். நீங்கள் தவறு என்று சொல்லுங்கள். அதை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன் என்று சொல்கிறேன் அல்லவா! (குறுக்கீடு) எதை நீக்க வேண்டுமென்று நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நந்தகுமார், பேசி முடியுங்கள்.

பிற்பகல் 6–35

திரு. A.P. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகளில் நில அடமானம் வைத்து விவசாயிகளின். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்கார்ந்துகொண்டு எல்லாம் பேசாதீர்கள். No comments. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் ஏற்கெனவே எப்படி நடைமுறைப்படுத்தப்பட்டது என்று சொன்னால், நீங்கள் ஆட்சியில் இருந்தபோது, நாங்கள் முன்னாள் அமைச்சர்களாக எதிர்க்கட்சியில் முன்வரிசையில் உட்கார்ந்திருந்தோம். அப்போது பல நேரங்களில் எங்கள் பெயரைக் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். அப்போது, ‘ஒரு வாய்ப்புத் தாருங்கள்’ என்று நாங்கள் கேட்டபோது; ‘வாதத்திற்கு வாதம்

வைத்துக்கொண்டிருந்தோம் என்று சொன்னால், சட்டமன்றத்தை நடத்த முடியாது. அன்றன்றைக்கு யார் பேசுகிறார்களோ, அவர்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால் கேட்கலாமேயொழிய அல்லது எதிர்க்கட்சித் தலைவரோ அல்லது கொறடாவிற்கோ சந்தேகம் இருந்தால் அதை நிவர்த்தி செய்யலாம், நீக்கலாமேயொழிய, முன்னாள் அமைச்சர்களும் இங்கேயிருப்பவர்களும், மாறி, மாறி பேசிக்கொண்டிருந்தோம் என்று சொன்னால், சட்டமன்றத்தை நடத்தவே முடியாது' என்று ஏற்கெனவே அப்போதைய பேரவைத் தலைவர் கொடுத்த ruling இருக்கிறது. ஆனால், இன்றைக்கு நான் தொடர்ந்து பார்க்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஜனநாயகம் என்கிற பெயரில் யார் பேச வாய்ப்புக் கேட்டாலும் வாய்ப்புக் கொடுத்துகொண்டேயிருக்கிறீர்கள். இதனால், தினமும் நேரமும், காலமும் வீணாகிக்கொண்டிருக்கிறது. எனவே, இனி முன்வரிசையில்கூட, எதிர்க்கட்சித் தலைவரோ, துணைத் தலைவரோ அல்லது அது சம்பந்தமாக கொறடாவோ ஏதேனும் சந்தேகம் இருந்து கேட்டால், அனுமதியுங்கள். எல்லா முன்னாள் அமைச்சர்களுக்கும் நீங்கள் வாய்ப்புக் கொடுத்தீர்களென்றால், சட்டமன்றத்தை நடத்த முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நான் அப்படிக் கொடுக்கவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அண்ணன் முன்னாள் சபாநாயகர் அண்ணன் திரு. தனபால் அவர்களிடம் பலமுறை வாய்ப்புக் கேட்டு பேசியிருக்கிறார். இங்கிருப்பவர்கள் அனைவருக்கும் இது தெரியும். அதுமட்டுமல்ல, அப்போது நாங்கள் அமைச்சர்களாக இருந்தபோது, எதிர்க்கட்சியில் நீங்கள் இருந்தபோது எவ்வளவோ குற்றச்சாட்டுகளை எங்கள்மீது சுமத்தியிருக்கிறீர்கள். அவை நிறைய பதிவாகியிருக்கின்றன. இப்போது, ஒரு குற்றச்சாட்டு வைத்தாலே மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் விடுவதில்லை. குற்றச்சாட்டுகள் கூறினால், அமைச்சர்கள் குறுக்கீடு இல்லாமல் அவரே நீக்கிவிடுகிறார். எந்தக் குற்றச்சாட்டு என்றாலும் அவரே நீக்கிவிடுகிறார். யாரிடமும் கேட்பதில்லை. அமைச்சர்களுக்கு பதில் சொல்ல வாய்ப்புத் தராமல் அவரே நீக்கிவிடுகிறார். அப்படித்தான் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால், ஆளுங்கட்சியில் மாண்புமிகு

உறுப்பினர் திரு. நந்தகுமார் அவர்கள் பேசுகின்றபோது, அவரின் எல்லா குற்றச்சாட்டுகளையும் பதிவு செய்வதற்கு வாய்ப்புத் தருகிறார். இது எப்படி நியாயமாக இருக்கும்? 5 மணிக்குமேல் சட்டமன்றம் நடத்த வேண்டாம் என்றோம். நீங்கள் நடத்துகிறீர்கள். இருந்தாலும் முழுமையாக அமைச்சர்களின் உரையைக் கேட்பதற்கு நாங்கள் அவையில் இருக்கின்றோம். ஆனால், நீங்கள் ஒருசார்பாக நடந்துகொள்வது மிகவும் வருத்தமாக இருக்கிறது. ஆகவே, திரு. நந்தகுமார் அவர்கள் பேசுகின்றபோது, அரிசி சரியில்லை என்று கூறியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உட்காருங்கள். தவறாக இருந்தால் நான் நீக்குகிறேன். அதற்கு முன்னால் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். ஏதாவது ஒரு பொருள் பற்றி எல்லோருக்கும் தெரிந்திருக்காது. நீங்கள் முன்வரிசையில் இருப்பவர்கள் எழுந்து பேசமுடியவில்லையென்றால், இருக்கின்றவர்களிடம் விவரத்தை நீங்கள் கேட்டு, இப்படிச் சொன்னார்கள், இதை நீங்கள் நீக்கித் தாருங்கள் என்று சொல்லலாம். பின் பக்கத்தில் இருக்கக்கூடிய உறுப்பினர்களும் ஏதாவது இருந்தால் மாண்புமிகு அமைச்சர்களிடம் எழுதிக் கொடுக்கிறார்கள். அப்படித்தான் நீங்களும் எழுதி வாங்கி எதையாவது குறிப்பிட்டுச் சொன்னால், அதற்கு குறுக்கே நிற்பது நாங்கள் அல்ல. இப்போது debate என்பது பழைய சபாநாயகர் எப்படி பேசவிட்டார்; இப்போது உள்ளவர் எப்படி பேசவிடுகிறார் என்பது அல்ல. மானியத்தில் பேச வேண்டும். யார்மீதும் யாரும் குற்றச்சாட்டுகளை சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. மாண்புமிகு முதல்வரவர்களே எல்லா எம்.எல்.ஏ–க்களையும் அழைத்து, ‘சாதனையைச் சொல்லுங்கள், என்ன செய்யப் போகிறோம் என்பதைச் சொல்லுங்கள்’ என்றுதான் சொல்லிக் கொடுக்கிறார்கள். அதேபோலத்தான் அந்த அடிப்படையில்தான் உங்களையும் பேச அனுமதித்திருக்கிறேன். இந்த அவை நாகரிகமாக, ஜனநாயக முறையில்தான் நடக்கின்றது, விருப்பு, வெறுப்பு இல்லாமல்தான் நடக்கிறது. குறிப்பிட்டு ஏதாவது தவறான வார்த்தையைப் பதிவு செய்திருக்கிறார் என்றால், நானே நீக்கிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. A.P. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாலை 5 மணிக்குமேல் உண்மையைப் பேசக்கூடாதா என்று எனக்குத் தெரியவில்லை. அதை உங்களிடமே

விட்டுவிடுகிறேன். கூட்டுறவு வங்கிகளில் நில அடமானம் வைத்து விவசாயிகள். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: நான் என்ன சொன்னேன் என்றால், மாண்புமிகு உறுப்பினர், திரு. நந்தகுமார் அவர்கள் மூத்த உறுப்பினர்தான், இதற்கு முன்னாலும் எம்.எல்.ஏ. ஆக இருந்தவர். நான் அந்த அடிப்படையில் எதுவும் சொல்லவில்லை. 5 மணிக்கு மேலும் ஆரோக்கியமான எதிர்க்கட்சியாக நாங்கள் முழுமையாக அவையில் இருக்கின்றோம். உங்களுக்கு மட்டும் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்வதற்கு வாய்ப்புத் தருகிறார். எங்களுக்கு வாய்ப்புத் தரவில்லை என்றுதான் கேட்கிறோம். 5 மணிக்குமேல் உண்மையைப் பேசக்கூடாது என்றல்ல, எங்களுக்கான வாய்ப்பை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம்தான் கேட்கமுடியும்; அதனால் கேட்கின்றோம். உங்களுக்கு கொடுத்த வாய்ப்பை எங்களுக்குக் கொடுக்கவில்லை. இதற்கு முன்னால் அந்த மாதிரி வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவர், முன்னாள் உணவுத் துறை அமைச்சராக இருந்திருக்கிறார். அவருக்குத்தான் அந்த சப்ஜெக்ட் தெரியும். இப்போது நான் கேட்கின்றேன். எல்லா ரேஷன் கடைகளும் சரியாக இருக்கிறதா? அப்படியெல்லாம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: குற்றச்சாட்டாகப் பேசியதை நீக்குங்கள் என்றுதான் கேட்கின்றோம். வேறு எதையும் கேட்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்கும் உங்கள் கருத்துக்கு மாற்றுக் கருத்தில்லை. உங்கள் உறுப்பினர்தான் அடுத்து பேசவிருக்கிறார். எவ்வளவு கருத்துகள் என்றாலும் அவரிடம் கொடுத்து பேசச் சொல்லலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. நந்தகுமார், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. A.P. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி சார்ந்த பிரச்சினைகளை நான் இங்கே பேசுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தொகுதி சார்ந்தவைகளை என்னிடம் கொடுத்துவிடுங்கள். நீங்கள் பேசியதாகப் பதிவு செய்துகொள்கிறேன்.*

திரு. A.P. நந்தகுமார்: *இரண்டே இரண்டு கோரிக்கைகள்தான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிவிட்டு, உரையை முடியுங்கள்.*

திரு. A.P. நந்தகுமார்: *எங்கள் தொகுதியில் ஒடுகத்தூர் பகுதி மிகவும் பிரசித்திப் பெற்ற பகுதி. கொய்யா சாகுபடி செய்யக்கூடிய பகுதி. கடந்த முறையே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் கேட்டேன். கொய்யா சாகுபடி செய்கின்ற விவசாயிகளுக்கு நன்மை தரக்கூடிய வகையிலே அங்கே ஒரு பழத் தொழிற்சாலை அமைத்துத் தர வேண்டுமென்றும், மிகவும் பிரசித்திப்பெற்ற பள்ளிகொண்டா ரங்கநாதர் கோயில், விரிஞ்சிபுரம் மார்க்கபந்து ஈஸ்வரர் கோயில் ஆகிய இரண்டு கோயில்களுக்கும் குடமுழுக்கு செய்து தரவேண்டுமென்றும் கேட்டு, வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 6–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

*__மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு கோயில்களுக்கும், 2010 ஆம் ஆண்டு குடமுழுக்கு முடிந்திருக்கிறது. ஆகம விதிப்படி 12 ஆண்டுகள் கடந்த பிறகுதான், கோயில்கள் குடமுழுக்குக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இருந்தாலும், 300 ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்கள் என்பதால், தொல்லியியல் துறை வல்லுநர்களால் இப்போது கருத்துரு பெறப்பட்டிருக்கிறது. நம்முடைய அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எல்லாமே உடனடியாகக் கிடைக்க வேண்டுமென்ற ஒருவிதமான பேராசை உள்ளவர் என்பதால், அவர் பேராசைக்கேற்ப, விரைவாக இந்தத் திருப்பணியை மேற்கொண்டு, நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன் அவர்கள்.

***திரு. நிவேதா எம். முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களையும், பேரறிஞர் அண்ணா அவர்களையும் வணங்குகிறேன். நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும் வணங்குகிறேன். இந்தியாவே உற்றுநோக்கி பார்க்கக்கூடிய அளவில் பல்வேறு சாதனைகளைப் புரிந்து வருகின்ற, திராவிடர் நாயகர், கடந்த காலங்களில், அவையில் பேச வைத்து, குலுங்கி, குலுங்கிச் சிரித்ததைப்போல, இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேச வந்தாலே, அனைவரும் சிந்திக்கக்கூடிய அளவில், ஆற்றலாக அவையை வழி நடத்திக்கொண்டிருக்கின்ற, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடுத்த தலைமுறை, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், சின்னவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் உங்களுக்கு 10 நிமிடங்கள்தான். Subject–ஐ பேசுங்கள். 10 நிமிடங்கள்தான்; subject–ல் பேசி முடியுங்கள்.

திரு. நிவேதா எம். முருகன்: மயிலாடுதுறை மாவட்ட பொறுப்பு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அரசுக் கொறடா அவர்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இம்மாமன்றத்தில் மக்கள் பணியாற்றிட என்னை அனுப்பி வைத்த பூம்புகார் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் பொது விநியோகத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திட, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், 1972 ஆம் ஆண்டு, மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் உருவாக்கப்பட்டது. தமிழ்நாட்டில் நுகர்பொருள் வாணிபக் கழகம் 40,000–க்கும் மேற்பட்ட பணியாளர்களை கொண்டு, இந்தியாவிலேயே பொது விநியோகத் திட்டத்தில் மிகப் பெரிய

நிறுவனமாக வளர்ந்துள்ளது. பொது விநியோகத் திட்டத்தை முடக்க, பல்வேறு வழிகளில் கடந்த காலங்களில் ஒன்றிய அரசு முயற்சி செய்தாலும், ஏழையெளிய மக்களைக் காத்திடும் வகையில் பேரிடர் காலங்களில் நிவாரணம், பண்டிகை காலத் தொகுப்பு என அனைத்துப் பொது விநியோகத் திட்டங்களையும் சிறப்பான முறையில் கழக அரசு செயல்படுத்தி வருகிறது.

உழைக்கும் மகளிர் மற்றும் பொதுமக்கள் சிரமமின்றி ரேஷன் பொருட்களை வாங்குவதற்கு, பகுதிநேர அங்காடி என்னும் சிறப்புத் திட்டத்தைத் தந்த ஆட்சி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சி. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆட்சியில், உணவுத் துறைமூலம் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 2,23,52,879 பேர். நமது கழக ஆட்சி பொறுப்பேற்றபின், மின்னணு குடும்ப அட்டைவேண்டி விண்ணப்பித்த மனுக்களின்மீது, 15 நாட்களில் துரித நடவடிக்கை எடுத்து, 13,87,656 புதிய குடும்ப அட்டைகள் வழங்கிய, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இம்மாதம் முஸ்லிம்களுக்கு ரமலான் நோன்பு மாதமாகும். தமிழகம் முழுவதும் உள்ள பள்ளிவாசல்களில் நோன்புக் கஞ்சி தயாரித்துத் தருவதற்கு, சிறப்பு ஒதுக்கீடு மூலமாக தரமான பச்சரிசியை ரூபாய் 1 என்ற விலையில், அரசின் மானியமாக 13.53 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 6 ஆயிரம் மெட்ரிக் டன் அரிசி வழங்கப்படுகிறது. இதற்கு எனது தொகுதியைச் சார்ந்த இஸ்லாமிய மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற ஆட்சியில் ரேஷன் கடைகளில் ** (குறுக்கீடுகள்) அதுவெல்லாம் உண்மைதான். (குறுக்கீடுகள்) அதிகமான colour, அரிசியில் கிடையாது.

பிற்பகல் 6–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், குற்றச்சாட்டாக எதையும் பேச வேண்டாம். சாதனைகளைச் சொல்லுங்கள். என்ன செய்யப் போகிறோம் என்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவற்றை நீக்கியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், அதனை நீக்கியாகிவிட்டது. நீங்கள் உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. நிவேதா எம். முருகன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலுடன் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் அரிசியின் தரம் மற்றும் நிறம் கண்டறிய colour sorter machine பொருத்தப்பட்டு, தரமான அரிசி வழங்கப்படுகிறது (குறுக்கீடுகள்) ஆமாம், பளபளவென வழங்கப்படுகிறது. கடைகளில் எந்த அளவுக்கு இருக்கின்றதோ, அதைப்போல ரேஷன் கடைகளிலும் அந்த அரிசி கிடைக்கிறது. உண்மையிலேயே இது ஓர் அதிசயம்தான். கடந்த காலங்களில் அதுபோன்று பார்த்ததே கிடையாது. நாங்கள். . . (குறுக்கீடுகள்) **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள், கடந்த காலத்தில் என்று பொத்தாம் பொதுவாகச் சொன்னால், கடந்த காலத்தில் தி.மு.க. ஆட்சியும் இருந்தது, AIADMK ஆட்சியும் இருந்தது. (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) ** என்று குறிப்பிட்டதையெல்லாம் நீக்கியாகிவிட்டது. இப்பொழுதுள்ள பிரச்சினை, உங்களுடைய விஷயம் என்னவென்று நீங்கள் சொல்லுங்கள்.

திரு. நிவேதா எம். முருகன்: விவசாயிகள் மகிழ்ச்சியாக இருந்தால்தான், நாடு முன்னேறும் என்பதன் அடிப்படையில், டாக்டர் கலைஞர் அவர்களுடைய 2006–2010 ஆம் ஆண்டுகால ஆட்சியில், நெல் ஆதார விலையை வெகுவாக உயர்த்தி, நெல் கொள்முதல் ஊக்கத் தொகை வழங்கிய காரணத்தால், கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு குடிபெயர்ந்த விவசாயிகள் மீண்டும் கிராமங்களுக்கு விவசாயம் செய்வதற்காக மகிழ்ச்சியுடன் திரும்பினார்கள். அதற்குப்பின் கடந்த 10 ஆண்டுகளாக ஆட்சி செய்தவர்கள் நெல் கொள்முதலுக்கான ஊக்கத் தொகையை தரவேயில்லை. தற்போது, மீண்டும் கழக ஆட்சியில், கடந்த ஆண்டு முதல் மீண்டும் நெல்லுக்குக் கொள்முதல் ஊக்கத் தொகை வழங்கி, விவசாயத்தை ஊக்கப்படுத்திய ஆட்சி, நமது ஆட்சி; மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சி. (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

2023 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்தத் தொகை கொடுத்ததாக அடுத்து பேசவிருக்கும் உங்களுடைய கட்சி உறுப்பினரைப் பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடு) கொடுத்தார்களா, கொடுக்கவில்லையா என்பதல்ல. மாண்புமிகு உறுப்பினர் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) அப்படியில்லையென்றால், அடுத்துப் பேசவிருக்கும் உங்களுடைய உறுப்பினரிடம் எழுதிக் கொடுத்துப் பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உங்கள் உறுப்பினரைப் பேசச் சொல்லுங்கள்.*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

திரு. நிவேதா எம். முருகன்: *1947 ஆம் ஆண்டுக்குப் பிறகு, சுமார் 75 ஆண்டுகள் கழித்து, சென்ற ஆண்டு, 24–5–2022 அன்று, மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக முன்கூட்டியே தண்ணீர் திறந்து வரலாறு படைத்த காரணத்திற்காகவும், விவசாயத்திற்குக் குறுவைத் தொகுப்பு வழங்கியதாலும், (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளார்கள். கடந்த காலங்களில் விவசாயிகள் ரோட்டில் வந்து நிற்பார்கள். அனைவருக்கும் பாகுபாடில்லாமல் குறுவைத் தொகுப்பு வழங்கிய ஆட்சிதான் இந்த ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) குறுவைத் தொகுப்பு கொடுத்த ஆட்சி, நமது ஆட்சி. கடந்த ஆட்சியில் இலவச மின்சாரம் வழங்கப்படவில்லை. (குறுக்கீடு) யாருக்கும் இலவச மின்சாரம் கொடுக்கவேயில்லை. (குறுக்கீடு) அதனால், காத்திருப்போர் பட்டியலிலிருந்த சுமார் ஒன்றரை இலட்சம் விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கியதால், கடந்த ஆட்சியைவிட நெல் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டது. (குறுக்கீடுகள்) அதனால், விவசாயிகளுக்கும், நாட்டு மக்களுக்கும் நன்மை ஏற்பட்டிருக்கிறது.*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)*

திரு. நிவேதா எம். முருகன்: *ஒன்றரை இலட்சம் இணைப்புகளை நாம்தானே கொடுத்தோம். (குறுக்கீடுகள்) அவர்கள் யாருக்குக் கொடுத்தார்கள்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) என்னவென்று சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)*

திரு. நிவேதா எம். முருகன்: *அவர்கள்* Tatkal *முறையில் மட்டும்தான் மின்னிணைப்பு கொடுத்தார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு நிவேதா முருகன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் பேசட்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி, மைக் இல்லாமல் நீங்கள் பேசாதீர்கள். மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் பேசவிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயகுமார், உட்காருங்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை ஆரோக்கியமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. உங்களுடைய சாதனைகளைச் சொல்லுங்கள். திரும்பத் திரும்ப குற்றச்சாட்டுகளைச் சொல்லிக்கொண்டேயிருக்கிறார். அதனைத் தாங்கள் தொடர்ந்து பதிவு செய்துகொண்டிருக்கிறீர்கள். அதுமட்டுமல்ல, எங்களுக்குப் பேச வாய்ப்பும் கொடுப்பதில்லை. அதனால், எங்களுக்குப் பேச வாய்ப்புத் தராத காரணத்தினால், அவையைப் புறக்கணிக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் உங்களைப் பேச அனுமதித்திருக்கிறேனே! அதனால்தானே தற்போது நீங்கள் பேசியிருக்கிறீர்கள்! மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன், நீங்கள் பேசி உரையை முடியுங்கள்.*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

(மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி. அய்யப்பன் மற்றும் திரு. ஆர். வைத்திலிங்கம் ஆகியோர் அவையில் இல்லை.)

2023 ஏப்ரல் 6]

பிற்பகல் 6–50

திரு. நிவேதா எம். முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுக்கால ஆட்சியிலே தட்கல் முறையில்தான் 2 இலட்சம் பேருக்குதான் இலவச மின்சாரம் வழங்கப்பட்டது. ஆனால், ஒரே ஆண்டில் ஒன்றரை இலட்சம் பேருக்கு இலவச மின்சாரம் கொடுத்து, சாதனை படைத்த ஆட்சிதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சி, திராவிட மாடல் ஆட்சி. அதேபோன்று நமது ஆட்சியில் 1–9–2022 முதல் சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் ஊக்கத்தொகை கொடுத்ததன் பயனாகத்தான் 3,199 நெல் கொள்முதல் நிலையங்கள் வழியாக சன்ன ரகம் மற்றும் பொது ரகம் இரண்டையும் சேர்த்து, 31.46 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை 4,12,138 ஆகும். எனது மயிலாடுதுறை மாவட்டத்தில் கடைக்கோடியிலுள்ள எடமணல் என்ற பகுதியில், நெல் சேமிப்புக் கிடங்கு உள்ளது. அது மாவட்டத்தின் ஒதுக்குப்புறமாக உள்ளதால், போக்குவரத்திற்குச் சிரமமாக உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடம் இருங்கள். வாய்ப்பு தருகிறேன். (குறுக்கீடு) ஒரு நிமிடம் உட்காருங்கள். நான் வாய்ப்பு தருகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், பேசுவதற்கு வாய்ப்பு வழங்கவில்லையென்று கூறி வெளியே சென்றிருக்கின்றார்கள். அக்கட்சியின் சார்பாக முதலில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜூ அவர்களுக்கு 15 நிமிடங்கள் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 26 நிமிடங்கள் எந்தக் குறுக்கீடும் இல்லாமல் பேசுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. எந்த உறுப்பினரும், யாரும் ஒருவருக்கொருவர் குற்றச்சாட்டு சொல்லக்கூடாதென்று கூறப்பட்டிருக்கின்றது. அதனடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர், திரு. நிவேதா எம். முருகன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டு சொன்னதாக சொன்னார்கள். 'அது என்னவென்று நீங்கள் சொல்லுங்கள், நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்' என்று நான் மாண்புமிகு கொறடா அவர்களிடம் கூறினேன். அவர் எழுந்துநின்று, 'எங்களைப் பேச அனுமதிக்கவில்லை' என்றார். ஏற்கெனவே அவர் கட்சியிலிருக்கும் மற்றொரு

உறுப்பினர் பேசவிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி மரகதம் குமரவேல் அவர்கள் கடைசியாக பேசவிருக்கின்றார்கள். எப்போதுமே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுகையில் ஆரம்பமும் அவர்கள்தான், விவாதத்தின் முடிவிலும் அவர்கள்தான் கடைசியாக பேசுவார்கள். காரணம், இடையில் பேசுகின்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சியைப் பற்றி அல்லது கடந்தகால ஆட்சி குறித்து ஏதேனும் குறை குற்றங்கள் கூறினார்களேயானால், நிறைவாக அந்த உறுப்பினர் அதற்குப் பதில் சொல்வதுதான் இயல்பு. அதேபோல்தான், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது, மாண்புமிகு அமைச்சர்களிடம் 100 சதவிகிதம் பதில் இருந்தாலும்கூட, யாரும் எழுந்து பதில் சொல்வதில்லை. காரணம், அவர்கள் முழுமையாகப் பேசி முடிக்கட்டும், அவர்களை குறுக்கீடு செய்ய வேண்டாம் என்ற அடிப்படையில்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜூ அவர்கள் பேசும்போதும், 26 நிமிடங்கள் யாரும் குறுக்கீடு செய்யவில்லை. ஆகவே, அந்த அடிப்படையில்தான், ஜனநாயக முறையில்தான் இந்த அவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அவ்வாறுதான் நடைபெற வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களும் அறிவுறுத்தியதன் காரணத்தினால்தான், எதிர்க்கட்சிகளுக்கு அதிக அளவிலான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

இதற்கு முந்தைய வரவு-செலவுத் திட்டம் மற்றும் மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தின்போதும் ஏற்கெனவே நான் சொன்னதுபோன்று ஆளும்கட்சியினர் 57 மணி மற்றும் 43 நிமிடங்கள் பேசியிருக்கின்றார்கள். ஓர் உறுப்பினர் 18 நிமிடங்கள் பேசியிருக்கின்றார். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், 43 மணி 57 நிமிடங்கள் பேசியிருக்கின்றார்கள். ஓர் உறுப்பினர் சராசரியாக 32 நிமிடங்கள் பேசியிருக்கின்றார். மிக அதிகபட்சமாக 32 நிமிடங்கள் என்றால், குறைந்தபட்சம் 18 நிமிடங்கள், 20 நிமிடங்கள் என்ற அளவில்தான் பேசியிருக்கின்றார்கள். மிக அதிகபட்சமாகத்தான், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்ன விரும்பினாலும், எவ்வளவு நேரமானாலும், இதுவரையில் அந்த அடிப்படையில்தான் வாய்ப்புகள் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. யாரையும் பேச விடாமல் அவர்களுடைய குரல்வளையை நசுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வரும் சொல்லவில்லை, இந்த அவையும் நினைக்கவில்லை, நீங்களே பார்த்திருப்பீர்கள், வினாக்கள்-விடைகள் நேரத்தில்கூட, ஆளும் கட்சிக்கு, இந்தப் பக்கத்திலிருக்கின்றவர்களுக்கு ஒரு

கேள்வியென்றால், அடுத்த கேள்வி அந்தப் பகுதியிலிருக்கின்ற அனைவருக்கும் பகிர்ந்துதான் வழங்கப்படுகிறது. அதேபோன்று, பேரவை விதி 55-ன்கீழ் பேசுவதானாலும், அனைத்திற்கும் பதில்கள் பெறப்பட்டு, அவர்களுக்கு பதில்கள் அளிக்கப்பட்டு, ஜனநாயக முறையில் மக்கள் பிரச்சினைகளை முழுமையாகப் பேசுவதற்கு இந்த அவை அனுமதித்திருக்கின்றது. முன்வரிசையிலிருக்கின்ற உறுப்பினர், மாண்புமிகு கொறடா அவர்களிடம் அந்தக் கேள்விக்குரிய பதில் இல்லையென்றால், நிறைவாகப் பேசவிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் திரு. காமராஜ் அவர்களிடம் பதில் இருக்குமேயானால், அவர்களிடம் கொடுத்து, 'இந்தக் குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா முருகன் அவர்கள் கூறியிருக்கிறார்கள், அதற்கு இந்தப் பதிலை பதிவுசெய்கிறேன்' என்று சொல்வதுதான் ஜனநாயக மரபு. அதனடிப்படையில்தான், மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர்களும் அதற்கான பதில்களை நிறைவாகத்தான் சொல்கின்றார்கள். ஆகவே, அதனடிப்படையில் ஜனநாயக முறையில், இந்த அளவிலான வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கும் நேர்வில், முன் வரிசையில் இருக்கின்றவர்களுக்கு பதில் தெரியவில்லையென்றால், அதற்காக 'எங்களைப் பேச அனுமதிக்கவில்லை' என்று சொல்லி வெளிநடப்பு செய்வது விந்தையாக இருக்கின்றது. ஆகவே, ஜனநாயக முறையில் அனைவருக்கும் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் ஏதேனும் சொல்ல வேண்டுமா, சொல்லுங்கள்.

பிற்பகல் 6–55

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்னது அனைத்தும் சரிதான். மறுப்பொன்றும் இல்லை. இருந்தாலும் வெளியில் பக்கத்திலேதான் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களை அழைத்து தொடர்ந்து நிகழ்ச்சியில் கலந்துகொள்ளச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுடைய கோரிக்கையை ஏற்று, நான் அவர்களை இந்த விவாதத்திலே கலந்துகொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். தயவுசெய்து உள்ளே வந்து, மானியக் கோரிக்கை விவாதத்திலே கலந்துகொள்ள*

வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. நிவேதா எம். முருகன்: ஆகையால், நேரடி கொள்முதல் நிலையத்திற்கு அருகிலேயே நெல் சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வட்ட அளவில், Block level-ல் நெல் சேமிப்புக் கிடங்கு அமைத்தால் போக்குவரத்துச் செலவு மிச்சமாகும் மற்றும் மழை போன்ற இயற்கைச் சீற்றத்திலிருந்து நெல் வீணாகாமல் தடுக்கப்படும். மேலும், எங்கள் மயிலாடுதுறை மாவட்டத்தில் எருக்கூரில் 50 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நெல் சேமிப்புக் கிடங்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போய் கூட்டிக்கொண்டு வந்துவிடுங்கள். (குறுக்கீடு) வருகிறார்களா, நன்றி. வருகிறார்களா? நன்றி.

திரு. நிவேதா எம். முருகன்: Silo 62 கோடி ரூபாயில் சென்ற ஆட்சியில் மிகவும் தரமற்ற முறையில் அமைக்கப்பட்டதால், இன்றுவரை பயன்பாட்டிற்கு வராமல் முழு கொள்ளளவை எட்டாமல் வெறும் 3 ஆயிரம் மெட்ரிக் டன் மட்டுமே. . .

(மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ் அவர்கள் அவைக்குள் வந்தவுடன் சிரிப்பலை எழுந்ததால் அவையிலிருந்து வெளியேறினார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. A.K. செல்வராஜ், இருக்கையில் இருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் ஒரு கோரிக்கையை உங்களிடத்திலே வைத்தார்கள். நீங்களும் பெருந்தன்மையோடு ஜனநாயக உணர்வோடு, அந்தக் கோரிக்கைக்கு மதிப்பளித்து, இந்த அவையினுடைய Chair-லே உட்கார்ந்து அவர்களெல்லாம் திரும்பி வர வேண்டும். . .

(மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம் மற்றும் திரு. பால் மனோஜ் பாண்டியன் ஆகியோர் அவையினுள் வந்து அவரவர் இருக்கையில் அமர்ந்தார்கள்.)

2023 ஏப்ரல் 6] [திரு. துரைமுருகன்]

இவர்கள் வருகிறார்கள். (சிரிப்பு) நல்ல கூத்துடா! (சிரிப்பு) ஒரே கூத்தாப் போச்சு sir, உட்காருங்கள். இப்போது ஒரு சமாச்சாரம் நடைபெற்றது. அதைப் பிறகு சொல்கிறேன். (சிரிப்பு) பெருந்தன்மையோடு தாங்கள் அழைப்பு விடுத்திருக்கிறீர்கள். அந்த ஜனநாயக உணர்வை மதித்து, அவர்கள் உள்ளே வந்தால், தங்களுக்கு மரியாதை தருகிறார்கள் என்று பொருள். அவர்கள் வராவிட்டால் அந்தப் பழியை திரு. நயினார் நாகேந்திரன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

திரு. நிவேதா எம். முருகன்: இன்னும் பயன்பாட்டிற்கு வராமல், முழு கொள்ளளவை எட்டாமல் வெறும் 3 ஆயிரம் மெட்ரிக் டன்களை மட்டுமே எட்டியுள்ளது. மீதமுள்ள 47 ஆயிரம் மெட்ரிக் டன் பயன்பாட்டிற்கு வரவில்லை. இதனை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களும், மாநில திட்டக் குழு மற்றும் சட்டமன்ற மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் முனைவர் T.R.B. ராஜா மற்றும் குழு உறுப்பினர்களும் இரண்டு, மூன்று முறை நேரில் ஆய்வு செய்தார்கள். எனவே, விரைவில் குறைபாடுகளைக் களைந்து முழு கொள்ளளவு கொண்ட நெல் சேமிப்பு silo-வை பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு முன்வர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பது கூட்டுறவின் தாரக மந்திரம். அதனடிப்படையில், நெசவாளர்கள், விவசாயிகள், ஏழையெளிய மக்களின் கடனைத் தள்ளுபடி செய்து, அவர்களின் வாழ்வில் நம்பிக்கை தந்த அரசு நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அரசாகும். நமது கழக ஆட்சியில், 125 மகளிர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 86,438 உறுப்பினர்களுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அதேபோல, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கியிருந்த கடன் தொகை 2,755 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் பயனடைந்த மகளிர் சுய உதவிக் குழு பயனாளிகளின் எண்ணிக்கை 15 இலட்சத்து 88 ஆயிரத்து 309 ஆகும். வேளாண் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் வழங்கப்பட்ட பயிர்க் கடன் 12 ஆயிரத்து 486 கோடி ரூபாய்

தள்ளுபடி செய்யப்பட்டு, பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை 16 இலட்சத்து 8 ஆயிரத்து 614 பேர் ஆவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடியுங்கள்.

இரவு 7-00

திரு. நிவேதா எம். முருகன்: *நம் ஆட்சி பொறுப்பேற்றபின் கூட்டுறவு வங்கியில் வழங்கப்பட்ட நகைக் கடனை 5,013 கோடி ரூபாய் அளவிற்குத் தள்ளுபடி செய்தார்கள். பயனடைந்தவர்களின் எண்ணிக்கை 13 இலட்சத்து 12 ஆயிரத்து 713 ஆகும். நகைக் கடன், பயிர்க் கடன், மகளிர் சுய உதவிக் குழுக் கடன் என ஆக மொத்தம் 20,254 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டு, தமிழகம் முழுவதும் நமது ஆட்சி பொறுப்பேற்ற பின், 45,09,636 நபர்கள் இதன்மூலம் பயனடைந்துள்ளார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.*

திரு. நிவேதா எம். முருகன்: *நமது ஆட்சி பொறுப்பேற்ற இந்த இரண்டு ஆண்டுகளில் சங்கத்தின் மூலமாக பயிர்க் கடன் 2022–2023 ஆம் ஆண்டுகளில் ரூபாய். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, உட்காருங்கள் (குறுக்கீடு) இல்லை, எவ்வளவு தள்ளுபடி செய்துள்ளோம் என்று அமைச்சர் சொல்வார்கள். நீங்கள் நன்றி சொல்லி முடியுங்கள்.*

திரு. நிவேதா எம். முருகன்: *கடந்த காலத்தைவிட இரண்டே வருடங்களில் 23 சதவீதம் அதிகம் என்பதை நான் தெளிவுபடுத்துகிறேன். அதில் புதிய உறுப்பினர்களுக்குக் கடன் கொடுத்தது மட்டும் ரூ.3,318 கோடி. அதில் பயிர்க் கடன் வாங்கியவர்களின் எண்ணிக்கை 5,11,656. இதெல்லாம் புதியதாகக் கொடுத்ததால்தான் அதிகமான மகசூல் கிடைத்திருக்கிறது. அதிகமான நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது. (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். தொகுதிக் கோரிக்கைகளைத் தாருங்கள். நான் பதிவு செய்துகொள்கிறேன்.*

திரு. நிவேதா எம். முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய திட்டமான மாண்புமிகு முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தமிழகம் முழுவதற்கும்*

4 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. (மணியடிக்கப்பெற்றது) கடந்த காலங்களில் கிராமச் சாலைகளை. . . (குறுக்கீடு) உதாரணத்திற்கு எனது தொகுதியில் 100 ஊராட்சிகள் உள்ளன. அதில் 70 விழுக்காடு சாலைகள் சேதம் அடைந்துள்ளன. கழக ஆட்சி அமைந்தபின், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மூலமாக ஓர் ஊராட்சியில் அனைத்துத் துறைகளின் திட்டங்களையும் ஒருங்கிணைத்துச் செய்ததன் பலனாக முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக ஐந்தாண்டுகளில் அனைத்து கிராமங்களும் தன்னிறைவு பெறும் திட்டமாக மாற்றி வெற்றி கண்ட திராவிட மாடல் ஆட்சிதான் இது. இதுபோன்று இருக்கிற ஆட்சி என்பதால்தான் இன்று, சரியாக அனைத்து கிராமங்களிலும் அனைத்து வேலைகளையும் முடிக்கக்கூடிய திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. நான் தொகுதிக் கோரிக்கைகளை கொடுத்து விடுகிறேன். அதில் ஒன்றே ஒன்றை மட்டும் நான் படித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லாவற்றையும் சேர்த்தே நான் பதிவு செய்து விடுகிறேன்.*

திரு. நிவேதா எம். முருகன்: *வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள், இருக்கையில் இல்லை. பதிலுரை, மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். தமிழ்நாட்டில் தன்மானத்தை வளர்த்த தந்தை பெரியார் அவர்களையும், தமிழ்நாட்டுக்கு 'தமிழ்நாடு' என்று பெயரைச் சூட்டிய பேரறிஞர் அண்ணா அவர்களையும் வணங்குகிறேன். தமிழ்நாட்டின் சமூக, பொருளாதார முன்னேற்றத்தின் தந்தை, எங்கள் குடும்பத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா வருகின்ற ஜூன் 3-ல் கொண்டாடப்படவிருக்கின்ற நேரத்தில், அவர் துயில் கொண்டுள்ள திசை நோக்கி வணங்குகிறேன்.*

பெரியாரின் துணிவையும், அண்ணாவின் கனிவையும், கலைஞரின் உறுதியையும் தன்னகத்தே கொண்டு, தன்னை

முன்னிலைப்படுத்தாமல், தமிழ்நாட்டையும், நம்மையும், கழகத்தையும் முன்னிலைப்படுத்தி, திராவிட மாடல் ஆட்சி நடத்திடும் தமிழ் நாயகர், மாண்புமிகு அண்ணன் தளபதியார் அவர்களை வணங்குகிறேன்.

மூன்றாம் முறையாக உணவுத் துறை மானியக் கோரிக்கையை இந்த அவையில் சமர்ப்பிக்கும் வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழுங் குடி.

என்றார் திருவள்ளுவர். உலகில் உள்ள உயிர்கள் வாழ்வதற்கு மழை தேவைப்படுவது போல, ஒரு நாட்டின் குடிமக்கள் வாழ்வதற்கு நல்லாட்சி தேவைப்படுகிறது.

நம் முதல்வர் அவர்களின் நல்லாட்சியிலே, கோடைக்காலத்தில் கூட, வழக்கத்தைவிட 72 விழுக்காட்டுக்கு அதிகமாக மழை இந்த ஆண்டு பெய்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து, மாதம் மும்மாரி பொழிந்து, எல்லா உயிர்களுக்கும் தேவையான விளைச்சல், குறிப்பாக, கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு அதிகமான நெல் விளைச்சலைத் தமிழகம் கண்டுள்ளது. குறிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு, 2021–2022 இல் 45 இலட்சம் மெட்ரிக் டன், அதேமாதிரி 2022–2023 இல் 43 இலட்சம் மெட்ரிக் டன், இந்த ஆண்டு இதுவரை 32 இலட்சம் மெட்ரிக் டன், வருகின்ற செப்டம்பர் மாதம் முடிவதற்குள்ளாக, 45 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவை எய்துவோம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இது 50 ஆண்டுகால சாதனை. வானமும், மழையும், இயற்கையும் வாழ்த்திக் கொண்டிருக்கிற நம் அன்பு முதல்வர் அவர்களுக்கு உணவுத் துறையின் சார்பாகவும், என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரவு 7–05

இளைஞர்களின் இனிமை, அன்பு உடன்பிறப்பு, விளையாட்டுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் டிசம்பர் 22 ஆம் தேதி இரவு வந்துவிட்டு, அடுத்த நாள், 23 ஆம் தேதி காலையிலே 7-00 மணியவில் தன் துறையால் கையாளப்படுகின்ற விளையாட்டுத் திடலுக்குச் சென்று, அங்குள்ள விளையாட்டு மாணவர்களின் விடுதிகளையெல்லாம் பார்த்துவிட்டு, உடன் மாநகராட்சிப் பள்ளியில் காலைச் சிற்றுண்டி கொடுப்பதைப் பார்வையிட்டு, அந்த மாணவர்களுக்கெல்லாம் எப்படி உணவு சமைக்கிறார்கள் என்பதை அறிந்து, அந்த மாணவர்களோடு உணவு உண்டு, அதற்குப் பின்பாக பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு தமிழகத்தை பசுமை மாநிலமாக உருவாக்க வேண்டும்; தமிழகத்தினுடைய வனப் பரப்பை 33% உயர்த்த வேண்டுமென்று பாடுபட்டுக் கொண்டிருக்கிறார். அவருடைய கனவை நிறைவேற்றுகின்ற விதத்தில், அன்று மதியம் ஒட்டன்சத்திரம் தொகுதி, இடையகோட்டையில் சுமார் 150 ஏக்கரில் 6,40,000 மரக் கன்றுகளை இரண்டு மணி நேரத்தில் சுமார் 6,000 இளைஞர்களையும், மாணவர்களையும் வைத்து மரக் கன்றுகளை நட்டு, இறுதியாக அவரும் அந்த மரக் கன்றினை நட்டு, அந்த நிகழ்ச்சியில் பங்கெடுத்து, அந்த இளைஞர்களையும், மாணவர்களையும், அதில் ஈடுபட்ட சமூக ஆர்வலர்களையும், தொண்டு நிறுவனத்தினரையும் பாராட்டிவிட்டு, மாலையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டத்திலே கலந்துகொண்டார். முதன்முதலாக அமைச்சராகப் பொறுப்பேற்று வந்தவர், துறையின் சார்பாக ஆய்வுக் கூட்டத்தினை நடத்துகிறார்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், நான் உள்பட அந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டோம். மூத்த அமைச்சர்கள் எப்படி ஓர் ஆய்வுக் கூட்டத்தை நடத்துவார்களோ, அதைவிட மேலாக அன்றைக்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், புதிதாகப் பொறுப்பேற்றிருந்தாலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் சிறப்புத் திட்டங்கள் குறித்து ஆய்வை நடத்தியது எங்களுக்கெல்லாம் வியப்பாக இருந்தது. அந்த ஆய்வுக் கூட்டத்தினை முடித்துவிட்டு, மேலும் பல்வேறு கட்சி நிகழ்ச்சிகளை

நடத்தி முடித்துவிட்டு, இரவு சிவகங்கைச் சீமைக்குச் சென்றார். அந்தவகையில், அமைச்சராகப் பொறுப்பேற்று, முதன்முதலாக எங்கள் மாவட்டத்திற்கு வந்து பெருமை சேர்த்த இளைஞர் அணிச் செயலாளர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

1996 முதல் தொடர்ந்து என்னை 6 முறை இந்தச் சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்துக் கொண்டிருக்கின்ற ஒட்டன்சத்திரம் வாக்காளப் பெருமக்களுக்கும், என் வெற்றிக்காகப் பாடுபட்ட கழகத் தோழர்களுக்கும், கூட்டணிக் கட்சி நண்பர்களுக்கும், எளிய மனிதனாய் என்னை வளர்த்து ஆளாக்கிய என் தாய், தந்தைக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், எதிர் வரிசையில் அமர்ந்திருக்கும் சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் அனைவருக்கும், இந்த மாமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் என் அன்பு கலந்த வணக்கம்.

உணவு மானியம்: சென்ற ஆண்டு 7,500 கோடி ரூபாயை உணவு மானியமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். இந்த ஆண்டு அதை 3,000 கோடி ரூபாய் உயர்த்தி, 10,500 கோடி ரூபாயாக வழங்கியிருக்கிறார். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்: தலைவர் கலைஞர் அவர்கள் தஞ்சை தரணியில் பிறந்த காரணத்தால், 1972 ஆம் ஆண்டு காவிரி நீர்ப் பாசனப் பகுதியிலுள்ள நெல் விவசாயிகளுக்காக ஆரம்பிக்கப்பட்டதுதான் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம். அவ்வாணிபக் கழகம் தற்போது நம்முடைய முதல்வர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் 2022 இல் பொன்விழா கண்டது. அந்த பொன் விழாவின்போது, வாணிபக் கழகத்தில் வேலை பார்த்த பணியாளர்களுக்கெல்லாம் ஊக்கத் தொகை வழங்க வேண்டுமென்று சுமார் 12,177 பேர்களுக்கு தலா 1,500 ரூபாய் ஊக்கத் தொகை வழங்கினார். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் வேலை பார்த்து இறந்தவர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் 109 பேர்களுக்கு வேலைவாய்ப்பையும் வழங்கினார்.

அதேபோல், பருவகால எழுத்தர்களாக பல ஆண்டுகாலமாக வேலை பார்த்த 591 பேர்களுக்கு, அவர்கள் நிரந்தரமாகப் பணியாற்றுவதற்கு ஆணைகளும் வழங்கி கௌரவித்தார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின்போது, "மக்கள் மத்தியிலே இந்திய உணவுக் கழகத்திடமிருந்து (Food Corporation of India) பெறும் அரிசிதான் நல்ல தரமான அரிசி, நம்முடைய அரிசி நிறமில்லாத, தரமில்லாத அரிசி என்ற எண்ணத்தை மாற்றி, நம் அரிசியும் தரம் மற்றும் நிறத்தில் எந்த வகையிலும் குறைந்தது அல்ல என்பதை நிலை நாட்டிட உறுதி பூண்டுள்ளது கழக அரசு" என்று நான் குறிப்பிட்டிருந்தேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலோடு அதைச் செய்து முடித்து, தமிழ்நாடு முழுவதும் தரமான அரிசி தொடர்ந்து விநியோகிக்கப்பட்டு வருகிறது என்கிற நிலையை உருவாக்கியுள்ளோம். இதை நம்முடைய உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

நம்முடைய முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்களுக்கு அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைகளுக்கு மாதமொன்றுக்கு 1,92,000 டன் அரிசி ஒன்றிய அரசால் 1–1–2003 முதல் விலையில்லாமலும், ஈடு செய்யும் 84,000 டன் அரிசி கிலோ ரூ.8.30 என்ற விலையிலும் வழங்கப்படுகிறது. முன்னுரிமையுள்ள குடும்பங்களில் ஒரு நபர் இருந்தாலும் 12 கிலோ அரிசி வழங்குகிறோம். ஆனால், ஒன்றிய அரசு 5 கிலோதான் தருகிறது. மீதி 7 கிலோ அரிசியை நம் மாநில அரசு வழங்குகிறது. அதேபோல், இருவர் இருந்தால், 10 கிலோ அரிசி ஒன்றிய அரசு தருகிறது. நாம் 6 கிலோ அரிசியைத் தருகிறோம். இவ்வாறு அதிக விலை கொடுத்து வாங்கப்படும் அரிசியை முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்களுக்கும், சத்துணவுக்குத் தேவைப்படும் சுமார் 65 ஆயிரம் டன் அரிசியை தற்போது கிலோ ஒன்றுக்கு 35 ரூபாய் என்ற விலையிலும் ஒன்றிய அரசிடமிருந்து கொள்முதல் செய்து வழங்குகிறோம். ஆண்டொன்றிற்கு 3,500 கோடி ரூபாய்க்கு ஒன்றிய அரசிடமிருந்து பெற்று அனைவருக்கும் எந்தவித விலையும் இல்லாமல் கொடுக்கிறோம். இதனால், பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசிக்காக மட்டும் நம் அரசுக்கு ஆண்டுக்கு ரூ.3,500 கோடி செலவாகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் ஒரு வாக்குறுதியைச் சொன்னார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் குடும்ப அட்டை வேண்டி தகுதியுள்ள நபர்கள் யார் விண்ணப்பித்தாலும் 15 நாட்களில் குடும்ப அட்டை வழங்குவோம் என்று சொன்னார்கள். நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த 23 மாத கால ஆட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வண்ணமாக, கழக ஆட்சி பொறுப்பேற்ற நாள் முதல் இன்று வரை, 14 இலட்சத்து 20 ஆயிரம் பேருக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, இங்கே பேசிய மரியாதைக்குரிய சகோதரி திருமதி விஜயதரணி அவர்களும் சரி, மரியாதைக்குரிய சகோதரர் திரு. ராஜேஷ் குமார் அவர்களும் சரி, முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகளிலிருந்து தகுதியானவர்களை முன்னுரிமை குடும்ப அட்டைகளாக மாற்ற வேண்டும் என்று கூறினார்கள். 12 இலட்சத்து 84 ஆயிரம் குடும்ப அட்டைகள் முன்னுரிமையில்லா குடும்ப அட்டைகளிலிருந்து முன்னுரிமை குடும்ப அட்டைகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இதனால், 41 இலட்சத்து 68 ஆயிரத்து 292 பேர் பயன்பெற்றுள்ளனர்.

அதேபோல, தொலைந்துபோன குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக புதிய குடும்ப அட்டைகள் பெறுவதற்கான பணம் கட்டவும், குடும்ப அட்டை பெறவும், அனைவரும் வட்ட வழங்கல் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருந்தது. அதை மாற்றி, online மூலமாக குடும்ப அட்டை நகல் வேண்டி யார் விண்ணப்பித்தாலும் 20 ரூபாய் குடும்ப அட்டைக்கும், 25 ரூபாய் தபால் செலவிற்காகவும் சேர்த்து 45 ரூபாய் Net Banking மூலமாகக் கட்டினால் வீடு தேடி குடும்ப அட்டை வருவதற்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் இந்தத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களும், தபால்–தந்தித் துறை தலைமை இயக்குநர் அவர்களும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளதன்மூலம், அந்த நடைமுறை நேற்று முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இனிமேல் புதிய குடும்ப அட்டை வேண்டி

யார் விண்ணப்பித்தாலும் அவர்களுக்கும் இந்த நடைமுறை விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இனிமேல், இடைத்தரகர்கள் இல்லாமல், புதிய குடும்ப அட்டைகள் பெறலாம். ஏனென்றால், Taluk Office-க்குச் சென்றால், அங்கு எவ்வளவு கஷ்டங்கள் இருக்கும் என்பது உங்களுக்குத் தெரியும், அதேபோன்று அங்கு சென்று வர எவ்வளவு பணம் செலவாகும் என்பதும் உங்களுக்குத் தெரியும். இனிமேல் யாரும் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை. குடும்ப அட்டை நகல் பெறுவதாக இருந்தாலும் சரி, புதிய குடும்ப அட்டை பெறுவதாக இருந்தாலும் சரி, online மூலமாகவே குடும்ப அட்டைகளைப் பெறுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நியாய விலைக் கடைகளெல்லாம் நேர்த்தியாக இருக்க வேண்டும்; செம்மையாக இருக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்தார்கள். குறிப்பாக, வடசென்னையில் அவர்களுடைய தொகுதிக்குப் பலமுறை சென்று வந்த சமயத்தில், அங்குள்ள கடைகளையெல்லாம் ஆய்வு செய்துவிட்டு, தலைமைச் செயலகத்தில் ஆய்வுக் கூட்டத்தை நடத்துகின்றபோது நியாய விலைக் கடை என்றால், அதுவும் முழுநேர நியாய விலைக் கடை என்றால் இந்த மாதிரியாக இருக்க வேண்டும்; பகுதி நேர நியாய விலைக் கடை என்றால் இந்த மாதிரியாக இருக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களிடம் அறிவுறுத்தினார்கள். மேலும், தமிழ்நாட்டில் இருக்கின்ற பல்வேறு நியாய விலைக் கடைகள் பழுதடைந்திருக்கின்றன. அந்தக் கடைகளையெல்லாம் பழுதுபார்க்க வேண்டுமென்றும், சீர்செய்ய வேண்டுமென்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு அறிவுறுத்தினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே முழுநேர நியாய விலைக் கடைகளுக்கு type design-ஐ ready செய்து கொடுத்தார்கள். பகுதிநேர நியாய விலைக் கடைக்கும் model-ஐ அவர்களே எங்களுக்கு வடிவமைத்துக் கொடுத்தார்கள்.

புதுடெல்லியில் ஒன்றிய அரசின் மாண்புமிகு உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் அவர்கள் தலைமையில் நடைபெற்ற உணவுத் துறை அமைச்சர்கள்

மாநாட்டில் நானும், எங்கள் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் ராதாகிருஷ்ணன் அவர்களும் கலந்து கொண்டோம். இந்தியாவில் இருக்கின்ற பல்வேறு மாநிலங்களின் உணவுத் துறை அமைச்சர்களும், அதிகாரிகளும் அதில் கலந்துகொண்டார்கள். அப்போது, மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் அவர்கள் எங்களைப் பார்த்து, தமிழ்நாட்டில் இருக்கின்ற நியாய விலைக் கடைகள் நல்ல முறையில் நேர்த்தியாகக் கட்டப்படுவதாக நான் அறிந்தேன். அதுகுறித்து power point மூலம் presentation செய்யுங்கள் என்று சொன்னார்கள். இந்தத் துறையின் Additional Chief Secretary டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் அந்த நேரத்தில் அதை Power Point Presentation-ல் காண்பித்தார்கள். மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் அவர்கள் மற்ற மாநில அமைச்சர்களையும், அதிகாரிகளையும் பார்த்து, தமிழ்நாட்டைப் போல நியாய விலைக் கடைகளை இந்தியா முழுவதிலும் கட்ட வேண்டுமென்று அன்றைக்கு அறிவுரை கூறினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பெருமையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே சாரும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 5,744 கடைகளுக்கு ISO தரச் சான்று பெறப்பட்டுள்ளது. சுவர்களில் வண்ணம் பூசப்பட்டு, சான்றோர்களின் வாக்கியங்கள் அவற்றில் எழுதப்பட்டுள்ளன. ஒன்றிய அரசின் முன்னாள் செயலர், மரியாதைக்குரிய திரு. சுதன்சு பாண்டே அவர்கள் தமிழகத்திற்கு இரண்டு முறை அரசுப் பயணமாக வந்தார்கள். முதலில், நீலகிரி மாவட்டத்திற்கும், கோயம்புத்தூர் மாவட்டத்திற்கும் வந்தார்கள். பின்னர், இராமநாதபுரம், தஞ்சாவூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களுக்கு வருகை புரிந்தார்கள். அவ்வாறு வருகைபுரிந்த சமயத்தில் பல்வேறு இடங்களில் நியாய விலைக் கடைகளையும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகளையும் பார்த்தார்கள். நேரடி நெல் கொள்முதல் நிலையத்தையும் பார்த்தார்கள். பார்த்துவிட்டு, பெத்தாம்பாளையம் என்ற இடத்தில் 2 முறை பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்கள். சந்திக்கின்ற நேரத்தில், தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டம், சிறப்பு பொது விநியோகத் திட்டத்தில் அரிசியை மட்டும் கொடுப்பதில்லை என்றும், 2007 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் வழங்கியபடி, அரிசி, பருப்பு, பாமாயில், சர்க்கரை போன்ற பொருட்களெல்லாம் வழங்கப்படுகின்றன என்பதை

அறிந்து மகிழ்ச்சியுற்று, பாராட்டிப் பேசினார். இந்தியாவில் இருக்கின்ற மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டம் சிறப்பாகச் செயல்படுகின்றது. அதேபோல கட்டமைப்பும் சிறப்பாக இருக்கின்றது என்று பாராட்டிவிட்டுச் சென்றார் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரவு 7–15

இங்கே மாமன்ற உறுப்பினர்கள் பலபேர், அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க வேண்டுமென்றெல்லாம் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பின்பு, அரசாணை நிலை எண் 60–ன்படி, அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறப்பதற்கு, கடந்த காலத்தைப்போல் இல்லாமல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் 7 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவருடைய நேர்முக உதவியாளர் (விவசாயம்), வேளாண்மைத் துறை இணை இயக்குநர், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர், எங்களுடைய RM., SRM., விவசாய சங்கப் பிரதிநிதிகள் இருவர் என 7 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டிருக்கிறது. எங்கெங்கெல்லாம் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்க வேண்டுமென்று விவசாயிகள், பொது மக்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் என யார் சொன்னாலும், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்குவார்கள். தமிழகத்தில் இந்த ஆண்டு 3,250 நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேமாதிரி, online மூலமாகத்தான் நெல்லை வாங்க வேண்டுமென்று ஒன்றிய அரசு, சென்ற ஆண்டு வலியுறுத்தியிருந்தது. ஆனால், அந்த நேரத்தில் விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்தார்கள். விவசாயச் சங்கப் பிரதிநிதிகளும் எதிர்ப்பு தெரிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களை அழைத்து, ‘விவசாயிகளிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள். Online மூலமாக எப்படி நெல் கொள்முதல் செய்யவேண்டுமென்பது குறித்து அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய பின்பு, அதை

அவர்களிடத்தில் வலியுறுத்துங்கள். அதுவரை எளிதாக அந்த நெல்லை வாங்க வேண்டும்' என்று சொன்னார். நானும், எங்களுடைய கூடுதல் தலைமைச் செயலாளர், மேலாண்மை இயக்குநர் எல்லோரும் திருவாரூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில், விவசாய சங்கப் பிரதிநிதிகள், விவசாயிகள் அனைவரும் கலந்துகொண்ட கூட்டத்தில் காணொலி வாயிலாக online மூலமாக எப்படி நெல்லை வாங்க வேண்டுமென்று அவர்களுக்கெல்லாம் விளக்கம் தெரிவித்தோம். 'யாரும் அச்சப்படத் தேவையில்லை. ஏனென்றால், விவசாயிகளின் போர்வையில் வியாபாரிகள் நுழைந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே, உங்கள் நன்மைக்காகத்தான் இதனைக் கொண்டு வந்திருக்கிறோம்' என்று சொன்னோம். அதைப் படிப்படியாக அறிமுகப்படுத்தி, கடைசியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் பணியாளர் ஒருவரை நியமித்துவிட்டோம். ஏனென்றால், விவசாயிகளில் அதிகம்பேர் படித்தவர்கள் இல்லை. படிக்காதவர்கள் நிறைய பேர் வருவார்கள். Online மூலமாக எப்படி நெல்லை அங்கே கொண்டு வந்து விற்க வேண்டுமென்று அவர்களுக்குத் தெரியாது. அதனால், அதைத் தெரிந்துகொள்ள வேண்டிய விதத்தில், கிராம நிர்வாக அலுவலகத்தில் அடங்கலை மட்டும் வாங்கிக்கொண்டு வாருங்கள். நாங்கள் VAO அவர்களிடம் அடங்கல் சரியாக இருக்கிறதா என்பதை சரிபார்த்துவிட்டு, அந்த அடங்கல் சரியாக இருந்தால் உடனடியாக இந்த தேதி, இந்த நாள், இந்த நேரத்தில் நீங்கள் நெல்லைக் கொண்டு வாருங்கள் என்று சொல்கிறோம். ஏனென்றால், ஒரே நேரத்தில் 15 பேர், 20 பேர் நெல்லை கொண்டு வந்துவிட்டார்கள் என்றால், நெல்லை வாங்க முடியாது. அந்த நேரத்தில் மழை பெய்துவிட்டால், சிரமம். அதனால், நாளையோ, நாளை மறுநாளோ எந்த தேதியில் வரவேண்டுமென்று token கொடுத்துவிடுகிறோம். அந்த முறையில்தான் இன்றைக்கு online மூலமாக நெல் கொள்முதல் செய்யப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு, திருவாரூர் மாவட்டத்திற்குச் சென்றார். அங்கு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சென்றபோது, அங்கிருக்கின்ற விவசாய சங்கப் பிரதிநிதிகளையும், வேலை பார்க்கின்ற

தொழிலாளர் பெருமக்களையும் அழைத்துப் பேசினார். அவர்களுக்கு என்ன தேவை, என்ன பிரச்சினை என்று கேட்டார். வேலை பார்க்கின்ற தொழிலாளர் பெருமக்கள், 'எங்களுக்குச் சம்பளத்தை உயர்த்திக் கொடுங்கள்' என்று கேட்டார்கள். விவசாயிகள் தாங்கள் படும் சிரமங்களையெல்லாம் சொன்னார்கள். அதையறிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், டிசம்பர் 2021-ல் தஞ்சையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நடத்தப்பெற்ற நலத் திட்ட உதவி வழங்கும் விழாவில், ஆண்டுக்கு 83 கோடி ரூபாய் கூடுதல் செலவானாலும் பரவாயில்லை, அங்கே வேலை பார்க்கின்ற தொழிலாளர்களுக்கு மூட்டைக்கு 3 ரூபாய் 25 காசு என்பதை 10 ரூபாயாக உயர்த்தி அறிவித்தார். பட்டியல் எழுத்தர், உதவுபவர், காவலர்களுக்கு சம்பள உயர்வை உயர்த்திக் கொடுத்தார். அதேமாதிரி தினப்படியையும் உயர்த்திக் கொடுத்தார். நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் எந்தப் பிரச்சினையும் வரக்கூடாது என்பதற்காக ஆண்டுக்கு 83 கோடி ரூபாய் கூடுதல் செலவானாலும் பரவாயில்லை என்று அதை உயர்த்திக் கொடுத்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

இரவு 7-20

அதேமாதிரி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'நீங்கள் அங்கே புகார் பெட்டி வையுங்கள். அறிவிப்புப் பலகையும் வையுங்கள். எந்தத் தவறும் நடக்கக்கூடாது' என்று எங்களுக்கு அறிவுறுத்தினார். அதாவது, உழவர் உதவி மையம் கட்டணமில்லா அலைபேசி 1800 599 3540 என்ற எண்ணிற்கு அலைபேசி மூலமாக யார் வேண்டுமானாலும் தொடர்பு கொண்டு குறைகளைத் தெரிவிக்கலாம். அதற்காகவே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 10 நபர்கள் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் ஏதேனும் தவறு நடக்கிறதா என்று ஆராய்வதற்கும், வேறு ஏதாவது பிரச்சினை என்று சொன்னாலும், அதைக் களைவதற்கும் தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதன்படி, நெல் கொள்முதல் நிலையங்களில் பணிபுரிந்த சுமார் 20-க்கும் மேற்பட்டோர்மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. 15 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 5, 6 பேர்மீது துறைரீதியாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஆட்சியில், ராணிப்பேட்டை மாவட்டத்தில் நெல் கொள்முதலில் நடைபெற்ற முறைகேட்டிற்காக உயர் அலுவலர்கள்

முதற்கொண்டு பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு நடவடிக்கைகளுக்குப் பிறகும், அங்கொன்றும் இங்கொன்றுமாக முறைகேடுகள் நடப்பதாக வரும் புகார்கள்மீது உரிய விசாரணை நடத்தப்பட்டு, கைது, வழக்கு என கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, முறைகேடுகள் முற்றிலும் களையப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தொலைக்காட்சி செய்தியைப் பார்த்துவிட்டு, ஒருநாள் மாலை நேரத்தில் என்னையும், மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் மற்றும் அப்போதைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. இ. பெரியசாமி அவர்களையும் அழைத்து, 'நெல் எல்லாம் இப்படி மழையில் நனைகிறதே, இதைப் பாதுகாக்க வேண்டுமே! உடனடியாக, நாளை தலைமைச் செயலாளர் தலைமையில், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுடன் காணொளி வாயிலாக ஆய்வுக் கூட்டத்தை நடத்துங்கள்' என்று சொன்னார். மூன்று பேரும் சேர்ந்து ஆய்வுக் கூட்டத்தை நடத்தினோம். நடத்தி முடித்தவுடன், தமிழ்நாட்டிலுள்ள வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், கூட்டுறவுச் சங்கக் கட்டடங்கள், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன (Tamil Nadu Warehousing Corporation) கிடங்குகள் என 6 இலட்சத்து 90 ஆயிரத்து 350 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள சுமார் 117 கிடங்குகளைக் கண்டறிந்து, நெல் சேமித்து வைப்பதற்காக வாடகைக்கு எடுத்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சியில், கோவில்பத்து என்ற இடத்தில் ஒரு இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள godown கட்டினார்கள். அதுபற்றி, கடந்த முறையும் பேசினேன். அதேபோன்று, எருக்கூரில் 50 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள silo கட்டினார்கள். அதை 64 கோடி ரூபாயில் கட்டி 2018-ல் திறந்துவிட்டார்கள். இதுவரையில் பயன்பாட்டிற்கு வரவில்லை. கோவில்பத்தில் godown கட்டிவிட்டார்கள். ஆனால், கஜா புயலில் முற்றிலும் சேதமடைந்துவிட்டது. ஏற்கெனவே செலவு செய்ததுடன், மேலும் 59 கோடி ரூபாய் செலவழித்து மொத்தத்தில் 220 கோடி ரூபாய் செலவானது. அப்போதும் பயன்பாட்டிற்கு வரவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசு பொறுப்பேற்று, அந்தக் கிடங்கிற்கு சிமெண்ட் சாலைகள், மின்சார வசதி உள்ளிட்ட

வசதிகளை 12 கோடி ரூபாயில் செய்து கொடுத்திருக்கிறோம். அங்கு வேலை பார்க்கும் தொழிலாளர் பெருமக்களுக்கு நல்ல தண்ணீர் வசதிகூட இல்லாமலிருந்தது. அங்கு பணிபுரியும் தொழிலாளர் பெருமக்களுக்கு, தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து குடிநீர் வசதியை, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள்.

எருக்கூர் MR Mill Silo நல்ல முறையில் நடைபெறுவதற்கு 12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கித் தந்திருக்கிறோம். விரைவில் அப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, அதையும் பயன்பாட்டிற்குக் கொண்டு வரவிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆஸ்திரேலிய நாட்டினர் இங்கு வந்து, சைலோ எப்படி செயல்படுகிறது என்பதைப் பார்த்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இதை, 2018 ஆம் ஆண்டிலேயே பயன்பாட்டிற்குக் கொண்டு வந்திருந்தார்கள் என்றால் பரவாயில்லை. 64 கோடி ரூபாயில் கட்டி, 2018–ல் திறந்துவிட்டார்கள். எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன என்று பாருங்கள். ஆனால், இதுவரை பயன்பாட்டிற்கு வரவில்லை என்பதை நீங்கள் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக இதைத் தெரிவிக்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், கோவில்பத்தில் 1 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கினை பயன்பாட்டிற்குக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். 50 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட எருக்கூர் சைலோவையும் விரைவில் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு, எங்கள் துறையின் சார்பாக ஆய்வுக் கூட்டத்தை நடத்தியவுடனேயே இனிமேல் நெல்லைப் பாதுகாப்பதற்காக semi covered கிடங்கு கட்ட வேண்டுமென்று அறிவுரை கூறி, 238 கோடி ரூபாயை ஒதுக்கி, 2 இலட்சத்து 86 ஆயிரத்து 350 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட semi covered godown 213 இடங்களில் கட்டுவதற்கு அனுமதி தந்து, 10 மாவட்டங்களில் அந்த குடோன்கள் கட்டப்பட்டு, நெல்லைப் பாதுகாக்கின்ற விதத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, கொள்முதல் செய்த நெல்லை திறந்தவெளியில் open space-ல் வைத்துவிடுவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் பேசும்போது, கொள்முதல் செய்த நெல், 48 மணி நேரத்தில் கொண்டு செல்லப்படவில்லை என்றால் கெட்டுப் போய்விடும் என்று சொன்னார்கள். அத்தகைய நிலை இன்றைக்கு இல்லாத வகையில் சேமிப்பைக் குறைத்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, DPC-ல் நேரடி நெல் கொள்முதல் செய்யப்பட்டால், உடனேயே அரவை ஆலைகளுக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. உடனே அரைத்து, அந்த அரிசி Tamil Nadu Civil Supplies Corporation-ன் godown-க்குச் சென்றுவிட வேண்டும் என்ற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, 270 கோடி ரூபாயைச் சேமித்துள்ளோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரவு 7–25

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான சுமார் 256 குடோன்கள் இருக்கின்றன. அவற்றில் சுற்றுச்சுவர் இல்லை, சாலை வசதிகள் இல்லை, மேல்தளம் சேதமடைந்திருக்கிறது, கீழ்தளம் சேதமடைந்திருக்கிறது. அங்கிருக்கும் பணியாளர்களுக்கு ஓய்வறை இல்லை. அதேபோன்று கழிப்பறை வசதிகள் இல்லை. இதையெல்லாம் சீர் செய்வதற்காக, இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 90 கோடி ரூபாய் நிதியொதுக்கித் தந்திருக்கிறார்கள். விரைவிலே tender விடப்பட்டு, அத்தனை godown-களும் சீர் செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, 12 ஆண்டுகளுக்குப் பிறகு உயர்த்தப்பட்ட ஊக்கத் தொகை; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1–10–2021 முதல், விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கான மாநில அரசின் ஊக்கத் தொகையினை, சன்ன ரகத்திற்கு 70 ரூபாயிலிருந்து 100 ரூபாயாகவும், பொது ரகத்திற்கு 25 ரூபாய் உயர்த்தி 75 ரூபாயாகவும் வழங்கிட ஆணையிட்டார்கள். கடந்த ஆட்சியில் ஒருமுறைகூட ஊக்கத் தொகை உயர்த்தி வழங்கப்படவில்லை. நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு, கழக அரசு ஊக்கத் தொகையாக 774.55 கோடி ரூபாய் வழங்கியுள்ளது என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 6] [திரு. அர. சக்கரபாணி]

அதேபோன்று, எப்போதுமே மேட்டூர் அணையிலே நீர் நிறைந்தால் ஜூன் 12 ஆம் தேதிதான் அணையைத் திறப்போம். ஆனால், சென்ற ஆண்டு மே மாதம் 24 ஆம் தேதியே அணை நிரம்பிவிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக மேட்டூருக்குச் சென்று, மே மாதம் 24 ஆம் தேதியே அணையைத் திறந்தார். குறுவை சாகுபடியை டெல்டா மாவட்டங்களிலே ஆரம்பித்துவிட்டார்கள். ஆனால், அக்டோபர் மாதம்தான் நெல் கொள்முதல் செய்யப்படுகின்ற சூழ்நிலை. ஒன்றிய அரசு அப்படித்தான் அனுமதி கொடுத்திருக்கிறது. ஆனால், விவசாயிகள் கோரிக்கை வைக்காமல், விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் கோரிக்கை வைக்காமல், மக்கள் பிரதிநிதிகள் கோரிக்கை வைக்காமல், உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதி, அக்டோபர் 1 ஆம் தேதிக்குப் பதிலாக, செப்டம்பர் 1 ஆம் தேதியே நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதி அனுமதி பெற்றுத் தந்த காரணத்தால், சென்ற ஆண்டு செப்டம்பர் 1 ஆம் தேதியே நெல் கொள்முதல் ஆரம்பிக்கப்பட்டு, டெல்டா விவசாயிகள் பெரிதும் பயன்பெற்றனர்.

அதேபோன்று, இரண்டு பருவங்களில் மழை பெய்தது. கோடையிலும் இப்போது மழை பெய்கிறது. தொலைக்காட்சியில் பார்த்தால் உங்களுக்குத் தெரியும். எல்லா மாவட்டங்களிலும் தினமும் மழை பெய்கிறது. நெல்லை மாவட்டம், வறட்சியாக இருக்கிறதென்று சொல்லி பாரதிய ஜனதா சட்டமன்ற உறுப்பினர்தான் நேற்று சொன்னார்; எங்கள் பகுதிகளிலெல்லாம் dam நிரம்பிக் கிடக்கிறது. (குறுக்கீடு) உங்களுக்கு இல்லை. தாமிரபரணி பாய்கிற இடத்தில் இல்லை. ஆனால், எங்கள் மாவட்டத்தில் எல்லாம் வந்து பாருங்கள். எல்லா அணைகளும் நிரம்பியிருக்கின்றன. தண்ணீர் திறக்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறோம். அந்தளவிற்கு இன்றைக்கு வறட்சியான மாவட்டங்களில்கூட மழை பெய்திருக்கிறது. எனவே, நெல்லின் ஈரப்பத அளவினை 20 சதவிகிதமாக இரண்டு பருவங்களிலும் விவசாயிகளின் நலன் கருதி கொள்முதல் செய்ய ஒன்றிய அரசிடமிருந்து அனுமதியைப் பெற்றுத் தந்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நெல் கொள்முதல் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தொகை விவரம்: 1–9–2022 முதல் 4–4–2023 வரை 4 இலட்சத்து 12 ஆயிரத்து 138 விவசாயிகளிடமிருந்து 31.46 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு 6,510 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 7–5–2021 முதல் 31–8–2022 வரை 7 இலட்சத்து 85 ஆயிரத்து 169 விவசாயிகளிடமிருந்து, 57 இலட்சத்து 43 ஆயிரத்து 829 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, 11 ஆயிரத்து 610 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. ஆக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசு பொறுப்பேற்ற பின்னர், 11 இலட்சத்து 97 ஆயிரத்து 307 விவசாயிகளிடமிருந்து, 88 இலட்சத்து 90 ஆயிரத்து 377 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, 18 ஆயிரத்து 120 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, இங்கே பேசியவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே 376 அரவை ஆலைகள் இருந்தன. அதேபோல, 106 ஆலைகளில் மட்டும் colour sorter பொருத்தப்பட்டிருந்தன. ஒன்றிய அரசில் என்ன சொன்னார்களென்றால், colour sorter பொருத்தப்பட்டிருந்தால்தான் அரிசி அரைக்க வேண்டுமென்று சொல்லியிருந்தார்கள். ஆனால், அதை நடைமுறைப்படுத்தவே இல்லை. ஆனால், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அரவைத்திறன், அந்த ஆலைகளையும் சேர்த்து 6.11 இலட்சம் டன் ஆகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசு பொறுப்பேற்ற பிறகு, அரிசி அரவை ஆலைகளை 602 ஆலைகளாக உயர்த்தி, புதிதாக பகுதி நேர அரவை ஆலைகள் 145–யும் சேர்த்து 747 ஆலைகள் இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கின்றன. 11 இலட்சத்து 50 ஆயிரம் டன்னாக அரவைத் திறனை உயர்த்தி அனைத்து அரவை ஆலைகளிலும் colour sorter பொருத்தியிருக்கிறோம். அந்த colour sorter ஒன்றின் விலை 40 இலட்சம் ரூபாய். எல்லோரிடமும் சொல்லியிருக்கிறோம். Colour sorter பொருத்தினால்தான் licence கொடுக்கப்படும் என்று சொல்லிவிட்டோம். இல்லாவிட்டால் நெல் கொடுக்க மாட்டோமென்று சொல்லிவிட்டோம். இன்றைக்கு colour sorter பொருத்திய காரணத்தால்தான், கருப்பு, பழுப்பில்லாத அரிசியைப் பொதுமக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம், தரமான அரிசி வழங்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, கடந்த ஆட்சியிலே, அரைக்காமல் வைத்து விட்டுப் போன 17 இலட்சத்து 51 ஆயிரத்து 578 டன் நெல்லுடன், கழக ஆட்சியில் 7–5–2021 முதல் 31–3–2023 வரை நெல் கொள்முதல் செய்யப்பட்ட, 88 இலட்சத்து 20 ஆயிரத்து 196 டன் நெல்லையும் சேர்த்து, 1 கோடியே 5 இலட்சத்து 71 ஆயிரத்து 774 டன் நெல்லில் 93 இலட்சத்து 41 ஆயிரம் டன் நெல்லை அரைத்து முடித்துள்ளோம். அதனால்தான் பொதுமக்கள் மகிழும் வண்ணம் நியாய விலைக் கடைகளில் தரமான அரிசி வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லினை விரைந்து அரைத்து, தரமான அரிசியைப் பொதுமக்களுக்கு வழங்கியது, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் வரலாற்றில் மகத்தான சாதனையாகும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இரவு 7–30

அதேமாதிரி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தரமான அரிசிதான் ration கடைகளுக்குப் போக வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். அதற்காக ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்றார்கள்; அதற்காக, அரசாணையும் வெளியிடப்பட்டிருக்கிறது. அரவை ஆலையிலிருந்து அரைத்து வரப்படுகின்ற அரிசி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கிடங்கிற்கு வருகின்றபோது, அதை ஆய்வு செய்வதற்காக, மாவட்ட வழங்கல் அலுவலர்-convener; அதைப்போன்று, கூட்டுறவுச் சங்க இணைப் பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக R.M./S.R.M., தரக்கட்டுப்பாட்டு அலுவலர் ஆகிய நான்கு பேர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. பருப்பாக இருந்தாலும் சரி, oil ஆக இருந்தாலும் சரி, சர்க்கரையாக இருந்தாலும் சரி, கோதுமையாக இருந்தாலும் சரி, எந்தப் பொருளாக இருந்தாலும் சரி, பொருள்கள் தரமானதாக வந்தால்தான் குடோனில் இறக்குகிறார்கள்; இல்லாவிட்டால், திருப்பி அனுப்பிவிடுவார்கள். அதைப்போன்று, வாங்கிய உணவுப் பொருட்களை நியாய விலைக் கடைகளுக்கு அனுப்புகின்ற சமயத்திலும், தரம் பார்த்துதான் அனுப்புவோம். அதைத்தவிர, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், மாதந்தோறும், வாரத்திற்கு ஒரு முறையோ அல்லது 15 நாட்களுக்கொரு முறையோ எப்போதெல்லாம் அவர்களுக்கு time கிடைக்கிறதோ, அந்த

அதிகாரிகளை வரவழைத்து தரமான பொருள்கள் கடைகளுக்குச் செல்கின்றனவா என்பதை ஆய்வு செய்ய வேண்டும்; மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு மாதத்திற்கு, சுமார் 10 நியாய விலைக் கடைகளையாவது ஆய்வு செய்ய வேண்டும்; மாவட்ட வருவாய் அலுவலர் ஆய்வு செய்ய வேண்டும்; கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர், வட்ட வழங்கல் அலுவலர், மாவட்ட வழங்கல் அலுவலர், தாசில்தார், RDO உள்ளிட்ட ஒவ்வொருவரும் எத்தனைக் கடைகளை ஆய்வு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு ஆணை வெளியிட்டிருக்கிறார்கள். அதன்படிதான், இன்றைக்கு இந்தத் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

செறிவூட்டப்பட்ட அரிசி: இதுகுறித்து நிறையபேர் சட்டமன்றத்தில் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளனர் என்று இங்கே சொன்னார்கள். எனவே, இதுகுறித்து நான் விளக்கமாக சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

செறிவூட்டப்பட்ட அரிசி என்பது, பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கப்படும் புழுங்கல் மற்றும் பச்சரிசியுடன் இரும்புச் சத்து, ஃபோலிக் அமிலம் மற்றும் வைட்டமின் பி12 ஆகிய நுண்ணூட்டச் சத்துகளைக் கொண்ட அரிசிக் குருணையை 100-க்கு 1 என்ற விகிதத்தில் கலந்து வழங்கப்படுவதாகும்.

தமிழ்நாட்டில் முதல்கட்டமாக, அக்டோபர் 2020 முதல் மார்ச் 2022 வரை திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் மதிய உணவுத் திட்டப் பயனாளிகளுக்கும், ஒன்றிய, மாநில அரசுகளின் செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இரண்டாம் கட்டமாக, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் டிசம்பர் 2022 முதல் செறிவூட்டப்பட்ட அரிசி பொது விநியோகத் திட்டத்தில் நியாய விலைக் கடைகள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

ஒன்றிய அரசின் ஒதுக்கீடாக வழங்கப்படும் அரிசியானது செறிவூட்டப்பட்ட அரிசியாகவே 1-4-2023 முதல் வழங்கப்பட வேண்டும் என்று ஒன்றிய அரசு வலியுறுத்தியுள்ளது.

அதனால், இந்திய உணவுக் கழகம் செறிவூட்டப்பட்ட அரிசியானது உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயம் (உணவு செறிவூட்டல்) ஒழுங்குமுறைகள், 2018 (27-8-2021 ஆம் தேதியிட்ட திருத்தம்) விதி 7(4)-ல் உள்ளவாறு, தலாசிமியா (Thalassemia) என்ற மரபணு இரத்த சோகை போன்ற உடல்நலக் குறைபாடு உள்ள நபர்கள் மட்டும் மருத்துவரின் ஆலோசனையின் பேரில் இதனைப் பயன்படுத்த வேண்டும்; இது ஒன்று. அதேமாதிரி, அரிவாள் இரத்த சோகை (Sickle cell anaemia) என்ற நோயுள்ளவர்களும் இதனைப் பயன்படுத்தக் கூடாது. தமிழ்நாட்டில் இவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் 2,000 பேர்தான் இருக்கிறார்கள் என்கின்றனர். இவர்கள்மட்டும்தான் இந்த அரிசியைப் பயன்படுத்தக் கூடாது. மற்றபடி யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். நான் ஏற்கெனவே சொன்னதுபோன்று, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்ட நிறைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்த செறிவூட்டப்பட்ட அரிசியை சமைத்து, பொதுமக்களுக்கு உணவாக வழங்கி அதைத் தாங்களும் உண்டு விழிப்புணர்வு ஏற்படுத்திகொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய அரசின் உணவு மற்றும் பொது விநியோகத் துறை தனது 15-3-2022 ஆம் நாளிட்ட கடிதத்தில், செறிவூட்டப்பட்ட அரிசியின் தரம் உறுதி செய்தல் குறித்த நிலையான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. மேலும், 13-12-2022 ஆம் நாளிட்ட கடிதத்தில் செறிவூட்டப்பட்ட அரிசி உற்பத்தி, விநியோகம் தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய தரக் கட்டுப்பாடு குறித்த வழிமுறைகளைத் தெரிவித்துள்ளது. இவை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தரக் கட்டுப்பாட்டு அலுவலர்களால் பின்பற்றப்படுகின்றன.

குடும்ப அட்டைதாரர்களுக்கு குறிப்பாக, இரத்த சோகை உள்ளிட்ட குறைபாடுகள் உள்ளவர்களுக்கு செறிவூட்டப்பட்ட அரிசி எவ்வகையில் உதவுகிறது என்பது தொடர்பாக உரிய விழிப்புணர்வு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செறிவூட்டப்பட்ட அரிசியால் செய்யப்பட்ட உணவு வகைகளை உட்கொண்டும் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

உடல் நலக்கோளாறு ஏற்பட்டது தொடர்பாக நாளது தேதி வரை, எந்தப் புகாரும் பெறப்படவில்லை. மிகவும் குறைவான எண்ணிக்கையில் உள்ள மரபணு இரத்த சோகை நோயாளிகள்

அறியும்வண்ணம் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மூலமாக மாவட்ட நிருவாகத்தினால் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தி, அவர்களுக்குச் சாதாரண அரிசியும் மற்றவர்களுக்கு ஊட்டச்சத்துடன்கூடிய உணவினை உட்கொள்ளும்வண்ணம் செறிவூட்டப்பட்ட அரிசியும் வழங்கப்படும்.

குடும்ப அட்டை தரவுத் தொகுப்பிலிருந்து இறந்த, இடம் பெயர்ந்த 15 இலட்சத்து 78 ஆயிரத்து 731 நபர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. தகுதியற்ற 3 இலட்சத்து 26 ஆயிரத்து 305 குடும்ப அட்டைகளும் நீக்கப்பட்டுள்ளன.

வட்டம்தோறும் மாதத்திற்கு ஒரு முறை, குடும்ப அட்டைதாரர்களுக்கு குறைதீர்க்கும் முகாம் நடத்தப்பட்டு வருகிறது. மே 2022 முதல் மார்ச் 2023 வரை பெயர் மாற்றம், முகவரி மாற்றம், அட்டை வகை மாற்றம் போன்ற ஒரு இலட்சத்து 8 ஆயிரத்து 902 கோரிக்கைகள் இம்முகாம்கள் மூலமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன; 99.4 சதவிகிதம் தீர்வு காணப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரவு 7–35

பெரும்பாலான மாண்புமிகு உறுப்பினர்கள், கடைகளைப் பிரிக்க வேண்டும் என்று வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். 1,000 குடும்ப அட்டைகளுக்குமேல் உள்ள கடைகளைப் பிரிக்க வேண்டும். நகரப் பகுதிகளில் இடம் வேண்டும்; இடமிருந்தால் கடைகளைப் பிரித்துக் கொடுத்துவிடலாம். அதேபோன்று, நகர்ப் பகுதிகளில் தாய்க் கடையில் 800 குடும்ப அட்டைகள் இருந்தால் கிராமப் பகுதிகளில் தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருந்தால், மலைப் பகுதிகளில் தாய்க் கடையில் 400 குடும்ப அட்டைகள் இருந்தால் பிரித்துக் கொடுத்துவிடலாம். இல்லாவிட்டாலும், இங்கேயிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் சொல்லிக்கொள்வது என்னவெனில், நீங்கள், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் எந்தக் கடைகளைப் பிரிக்க வேண்டும் என்பது குறித்து கோரிக்கையினை வைத்து, அதனுடைய நகலை, எங்களுடைய Civil Supplies Commissioner Office-க்குக் கொடுத்துவிடுங்கள். எங்கே கடை வேண்டுமென்றாலும் பிரித்துத் தருவதற்கு இந்தத்

துறை தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மே 2021 முதல் 31–3–2023 வரை 311 முழு நேர நியாய விலைக் கடைகளும், 698 பகுதிநேர நியாய விலைக் கடைகளும் என மொத்தம் 1,009 நியாய விலைக் கடைகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம்: அரசு பொறுப்பேற்றபோது நம் மாநிலத்தில் மொத்தம் 6,978 நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்தன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், நமக்கு நாமே திட்டம், இப்படி பல்வேறு நிதிகளின் மூலமாகவும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலமாகவும், நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடத்தில் இல்லாத அளவிற்கு அனைத்துக் கடைகளுக்கும் படிப்படியாக சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு துறை நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நியாய விலைக் கடைகளுக்கு நேரடியாகச் சென்று பொருள்களைப் பெற இயலாத மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மனநலம் குன்றி மருத்துவ சிகிச்சை பெற்று வருபவர்கள் போன்றோர் யாராவது ஒரு பிரதிநிதியை அனுப்பினால், பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஏற்கெனவே நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். அந்தப் பொருட்களைப் பெறுவதற்கு எந்த nominee அதாவது, பிரதிநிதியை அனுப்புகிறாரோ, அவருக்கு அந்தப் பொருள்களை வழங்க வேண்டும் என்று சொல்லி, இதுவரை 3 இலட்சத்து 30 ஆயிரம் பேருக்கு அதற்கான சான்றுகள் கொடுக்கப்பட்டு, அவர்கள் பொருட்களைப் பெற்று பயன்பெற்று வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பயோமெட்ரிக் முறை குறித்து பேசினார். கிராமங்களில் விவசாயிகள் வயலுக்கு வேலைக்குச் சென்றுவிட்டு வருகிறார்கள்; அவர்களது கைரேகை அழிந்துவிடுகிறது என்றும். அவர்கள் விரலை பயோமெட்ரிக்கில் வைத்தால், ரேகை பதிவதில்லை

என்றும், பொருட்கள் கிடைப்பதில்லை என்றும், இதனால் அவர்கள் திரும்பிப் போக வேண்டிய சூழ்நிலை உள்ளதாகவும், தினசரி வேலைக்குச் சென்றுவிடுவதாகவும், ஒருநாள் விடுப்பு எடுத்து ரேஷன் கடையில் பொருள் வாங்க வேண்டுமென்று நினைத்தாலும், பயோமெட்ரிக்கில் வைத்து பொருள் வாங்க முடியாத நிலை ஏற்பட்டு, திரும்பிப் போக வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது என்றும் சொன்னார்கள். அதை மாற்றுவதற்காகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கண் கருவிழி–Iris மூலமாகப் பொருட்களைப்பெறுவதற்குநடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதியில் pilot scheme ஆக இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். அதேபோன்று, அரியலூர் மாவட்டத்தில் செந்துறை வட்டத்திற்குட்பட்ட மருவத்தூர் என்ற கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடையிலும் தொடங்கப்பட்டது. தற்போது இந்த இரண்டு கடைகளிலும் கண் கருவிழி மற்றும் பயோமெட்ரிக் ஆகிய இருமுறைகள் மூலமாகவும் பொருட்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அண்டை மாநிலங்களான ஆந்திரா, கேரளா, தெலுங்கானா, ஒடிசா, மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் பயோமெட்ரிக் முறையும் செயல்படுத்தப்பட்டு வருகிறது; கண் கருவிழி-Iris முறையும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது, தமிழ்நாட்டில் மேற்காணும் முறைகளைச் செயல்படுத்துவதற்கு அரசாணை வெளியிடப்பட்டு, டெண்டர் விடப்பட்டுவிட்டது. சுமார் 35,941 நியாய விலைக் கடைகளில் கண் கருவிழி மூலமாகவும், பயோமெட்ரிக் மூலமாகவும் விரைவில் பொருட்களைப் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், நுகர்வோர் பாதுகாப்புத் துறை மூலமாக நுகர்வோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் பற்றிப் பேசினார்கள். நுகர்வோர் பாதுகாப்புத் துறை மூலமாக நுகர்வோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், அவர் தம் உரிமைகளைப் பாதுகாத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாக மாநில அளவிலான நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாவட்ட ஆணையங்களில் காலியாக இருந்த 31 தலைவர் பணியிடங்களும், 57 உறுப்பினர் பணியிடங்களும், தற்போது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய

ஆட்சியில் நிரப்பப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாநில நுகர்வோர் ஆணையம் 91 விழுக்காடு வழக்குகளையும், மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் 94 விழுக்காடு வழக்குகளையும் தீர்த்து வைத்துள்ளன. மாநில உணவு ஆணையத்திற்கு விரைவில் தலைவர் மற்றும் 5 உறுப்பினர்கள் நியமிக்கப்பட உள்ளனர் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையானது, அரிசிக் கடத்தலைத் தடுத்தல், வெளிமாநிலங்களிலிருந்து முறைகேடாக நெல் கொண்டு வருவதைத் தடுத்தல், டீசலில் கலப்படத்தைத் தடுத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையை வலுப்படுத்திட, குற்றங்களைத் தடுப்பதற்காக ஏற்கெனவே, சென்னை மற்றும் மதுரையில்தான் காவல் கண்காணிப்பாளர்கள் தலைமையில் இரண்டு மண்டலங்கள் இருந்தன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, தற்போது திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரில் புதிதாக காவல் கண்காணிப்பாளர்கள் தலைமையில் புதிதாக இரண்டு மண்டலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட 6 மாவட்டங்களில் இந்த அலகுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். 7–5–2021 முதல் 31–3–2023 வரையிலான நமது கழக ஆட்சிக் காலத்தில், 15 கோடியே 26 இலட்சத்து 20 ஆயிரத்து 796 ரூபாய் மதிப்பிலான பொது விநியோகத் திட்டப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. மொத்தம் 15,924 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 16,096 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கடத்தலில் ஈடுபட்ட 145 நபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்; 3,521 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கடந்த ஆட்சியின் கடைசி இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது, 5,615 வழக்குகள் கூடுதலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரவு 7–40

கடத்தலில் கைப்பற்றப்பட்ட வாகனங்களை ஏலம் விடுவதில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்க அதிகாரம் பரவலாக்கப்பட்ட காரணத்தால், கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 3,894 வாகனங்கள் ஏலம் விடப்பட்டுள்ளன. இதே காலகட்டத்தில்

சென்ற ஆட்சியில் ஏலம் விடப்பட்ட 1,314 வாகனங்களுடன் ஒப்பிடும்போது இது இரண்டு மடங்கு அதிகமாகும்.

இவ்வாறு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்கள் கடத்தலைத் தடுக்க உறுதியான நடவடிக்கைகளை கழக அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்:

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், வேளாண் விளைபொருட்கள் மற்றும் அரசு சார் நிறுவனங்களின் இதர பொருட்களைச் சேமித்து வைக்க கிடங்கு வசதிகளைச் செய்து வருகிறது. 7 மண்டலங்களில், 60 இடங்களில், 269 கிட்டங்கிகள், 7.6 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவுடன் உள்ளன. மாநில அளவில் அதிக எண்ணிக்கையிலான சேமிப்புக் கிடங்குகளை கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தில் பதிவு செய்ததற்கான முதல் பரிசினை புது தில்லியில் இந்நிறுவனம் பெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற மானியக் கோரிக்கைகளில் அறிவித்தபடி, புதுக்கோட்டை, இராணிப்பேட்டை மற்றும் திருமங்கலத்தில் தலா 3,400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தால் கட்டப்பட்டு வருகின்றன.

கடந்த இரண்டாண்டுகளில் 44 அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டன. அறிவிக்கப்பட்ட 44 அறிவிப்புகளும் நிறைவேற்றப்பட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டும், செயல்முறைப்படுத்தப்பட்டும், தொடர் நடவடிக்கைகளிலும் உள்ளன என்பதை இம்மாமன்றத்தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் இரண்டு இடங்களிலும், திருவாரூர் மாவட்டத்தில் இரண்டு இடங்களிலும், கடலூர் மாவட்டத்தில் 500 மெட்ரிக் டன் அரவைத்திறன் கொண்ட ஓர் ஆலை; தேனி மாவட்டத்தில் 200 மெட்ரிக் டன் அரவைத்திறன் கொண்ட ஓர் ஆலை என தனியார் பங்களிப்புடன் 6 புதிய ஆலைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தேனி மாவட்டத்திற்குச் சென்ற சமயத்தில், அறிவிப்பு செய்தார்கள். மொத்தம், ஒரு நாளைக்கு 2,700 மெட்ரிக் டன் நெல்லை அரைக்கும் வகையில் 6 புதிய

ஆலைகளைத் தொடங்கிட அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. அவற்றிற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. விரைவில் ஒப்பந்தப்புள்ளிகள் முடிந்து பணிகள் தொடங்கப்படும்.

ஏனென்றால், ஒன்றிய அரசு 25 கிலோ வரை அரிசிக்கு GST *போடுகிறார்கள்.* Pocket*-ல் பொருட்களை வழங்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டீர்கள். இந்த ஆலைகள் அரிசியை உற்பத்தி செய்கின்ற நேரத்தில், ஒன்றிய அரசு அனுமதி அளித்தால், பொது மக்களுக்கு, ஒவ்வொரு நபருக்கு எவ்வளவு அரிசி பாக்கெட்டில் வழங்க வேண்டும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்யவிருக்கிறார்கள். ஏனென்றால், பொது விநியோகத் திட்டத்தில் விலையில்லாமல் கொடுக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கடிதத்தையேற்று, ஒன்றிய அரசு ஒப்புதல் அளிக்கின்ற நேரத்தில், இந்தப் பொருட்களெல்லாம் பைகளில் அடைத்து பொது மக்களுக்கு வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் 123 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். சிலவற்றிற்கு என்னுடைய பதிலில் விளக்கம் கொடுத்திருக்கிறேன். சிலவற்றிற்கு வருகின்ற காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, அவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்கு நான் பாடுபடுவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு புதிய அறிவிப்புகளை நான் வெளியிடுகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் 13 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

அறிவிப்புகள்

1. திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் கிடங்கு வளாகத்தில் உள்ள காலி இடத்தில் கூடுதலாக 3,400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நவீன

சேமிப்புக் கிடங்கு 2 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் கிடங்கு வளாகத்தில் 7,400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 4 கிடங்குகள் கடந்த 5 ஆண்டுகளாக 100% கொள்ளளவுடன் முழுப் பயன்பாட்டில் உள்ளன. சந்தையின் தேவை மற்றும் சேமிப்புக்கான இடவசதி தேவையைக் கருத்தில்கொண்டு பல்லடம் சேமிப்புக் கிடங்கு வளாகத்தில் காலியாக உள்ள இடத்தில் கூடுதலாக 3,400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட புதிய சேமிப்புக் கிடங்கு 2 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தால் கட்டப்படும்.

2. அரியலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்குச் சொந்தமான இடத்தில் தலா 3,400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நவீன சேமிப்புக் கிடங்குகள் மொத்தம் 7 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

அரியலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் பல்வேறு சரக்கு வைப்பாளர்களான தனியார் நூற்பாலைகள், தானிய விற்பனையாளர்கள், ஆவின், சிமென்ட் நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்கள் தொடர்ந்து கிடங்கு வசதி தேவை என வலியுறுத்தி வருவதன் காரணமாக, அரியலூர் மாவட்டம், தேலூர் கிராமத்திலும், திருப்பத்தூர் மாவட்டம், குனிச்சி கிராமத்திலும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சொந்த இடங்களில் தலா 3,400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நவீன சேமிப்புக் கிடங்குகள் மொத்தம் 7 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

3. 100 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதியின்கீழ் அமைக்கப்படும்.

விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, 100 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதியின்கீழ் தேவைப்படும் இடங்களில் அமைக்கப்படும்.

2023 ஏப்ரல் 6] [திரு. அர. சக்கரபாணி]

4. பொது விநியோகத் திட்டச் செயல்பாட்டினை வட்ட அளவில் துரிதப்படுத்துவதற்கு ஏதுவாக 3 மாவட்டங்களில் மொத்தம் 8,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 3 புதிய வட்ட செயல்முறைக் கிடங்குகள், கிடங்கு அலுவலகங்கள், சுமை தூக்குவோர் ஓய்வறைகள், சுற்றுச்சுவர்/பாதுகாப்பு வேலி மற்றும் சாலை வசதிகளுடன் 15 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் கட்டப்படும்.

பொது விநியோகத் திட்ட உணவுப்பொருள்களைச் சேமிப்பதற்கான கிடங்குகளின் தேவையினைக் கருத்தில்கொண்டு காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டத்திலும் மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்திலும் தலா 3,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட வட்ட செயல்முறைக் கிடங்குகள் தலா 5 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டத்தில் 2,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட வட்ட செயல்முறைக் கிடங்கு 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மொத்தம் 8,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 3 புதிய வட்ட செயல்முறைக் கிடங்குகள், கிடங்கு அலுவலகங்கள், சுமை தூக்குவோர் ஓய்வறைகள், சுற்றுச்சுவர்/பாதுகாப்பு வேலி மற்றும் சாலை வசதிகளுடன் 15 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் கட்டப்படும்.

5. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பொது விநியோகத் திட்டப் பொருள்களின் சேமிப்புக் கொள்ளளவினை மேம்படுத்துவதற்காக மொத்தம் 9,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 4 புதிய சேமிப்புக் கிடங்குகள் 16 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சேமிப்புக் கிடங்கு தேவையினைக் கருத்தில்கொண்டு திருவள்ளூர் மாவட்டம், இராமகிருஷ்ணராஜ்பேட்டையில் (ஆர்.கே.பேட்டை) 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு 3 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டத்தில் 2,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டையில் 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு 3 கோடியே 75

இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், கீழ்ப்பெண்ணாத்தூரில் 2,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் 9,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 4 சேமிப்புக் கிடங்குகள் அடிப்படை வசதிகளுடன் மொத்தம் 16 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

6. டெல்டா மாவட்டங்களில் 65,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன்கூடிய நெல் சேமிப்புக் கிடங்குகள் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் அமைக்கப்படும்.

தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் கடலூர் மாவட்ட விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லினை மழை மற்றும் புயல் காலங்களில் மிகவும் பாதுகாப்பான முறையில் சேமித்துப் பாதுகாத்திட 65,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன்கூடிய நெல் சேமிப்புக் கிடங்குகள் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் அமைக்கப்படும்.

7. செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் மதுரை மாவட்டங்களில் 52,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன்கூடிய நெல் சேமிப்புக் கிடங்குகள் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

டெல்டா அல்லாத மாவட்டங்களிலும் நெல் கொள்முதல் அதிகளவில் செய்யப்பட்டு வருவதால் அதனைப் பாதுகாப்பாகச் சேமிக்கும்பொருட்டு செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் மதுரை மாவட்டங்களில் மொத்தம் 52,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நெல் சேமிப்புக் கிடங்குகள் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

8. சென்னையில் கோபாலபுரம் மற்றும் அண்ணா நகரில் இயங்கிவரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் இரண்டு அமுதம் பல்பொருள் அங்காடிகள் பொதுமக்களின் வசதிக்காக 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் மேம்படுத்தப்படும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் அமுதம் பல்பொருள் அங்காடிகளைத் தரம்

உயர்த்தும் வகையில் சென்னையில் கோபாலபுரம் மற்றும் அண்ணா நகர் ஆகிய இடங்களில் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் 2 அமுதம் பல்பொருள் அங்காடிகள் பொதுமக்களின் வசதிக்காக 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு, புதுப்பொலிவுடன் மேம்படுத்தப்படும்.

9. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மதுரை மண்டல அலுவலகத்தின் பழைய கட்டடத்தை அகற்றி, அந்த இடத்தில் மண்டல அலுவலகம், அமுதம் நியாய விலைக் கடை மற்றும் அமுதம் பல்பொருள் அங்காடி ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய அடுக்குமாடிக் கட்டடம் 11 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மதுரை மண்டல அலுவலகக் கட்டடம் பாதிப்படைந்துள்ள நிலையைக் கருத்தில்கொண்டு, அதை அகற்றி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புதிய மண்டல அலுவலகம், அமுதம் நியாய விலைக் கடை மற்றும் அமுதம் பல்பொருள் அங்காடி ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய அடுக்குமாடிக் கட்டடம் 11 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

இரவு 7–45

10. 2023 ஆம் ஆண்டு ஐ.நா. சபையால் சர்வதேச சிறுதானிய ஆண்டாகக் கடைப்பிடிக்கப்படுவதனை முன்னிட்டு, பாரம்பரிய சிறுதானிய உணவு குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த அனைத்து மாவட்டங்களிலும் சிறுதானிய உணவுத் திருவிழா போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்படும்

2023 ஆம் ஆண்டு சர்வதேச சிறுதானிய ஆண்டாக ஐ.நா. சபையால் கடைப்பிடிக்கப்படுவதனை முன்னிட்டு நுகர்வோர் சத்தான உணவினை உட்கொண்டு ஆரோக்கியத்தைப் பராமரிப்பதில் சிறுதானியங்களின் பயன்பாடு குறித்து போதிய விழிப்புணர்வு வழங்குவது அவசியமாகிறது. இது தொடர்பாக கண்காட்சிகள், கலை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட சிறுதானியப் பயன்பாட்டின் விழிப்புணர்வினை ஏற்படுத்த அனைத்து மாவட்டங்களிலும் சிறுதானிய உணவுத் திருவிழா போன்ற நிகழ்ச்சிகள் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடத்தப்படும்.

11. நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் பொது விநியோகத் திட்ட இன்றியமையாப் பண்டங்களின் இயக்கம் மற்றும் விநியோகம், துரிதக் குறியீடு (QR code) உதவியுடன் கண்காணிக்கும் முறை முதற்கட்டமாக 62 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் செலவினத்தில் செயல்படுத்தப்படும்

நீலகிரி மாவட்டம், குந்தா வட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடைகளுக்குத் தற்சமயம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்கிலிருந்து அனுப்பப்படும் அரிசி, கோதுமை மற்றும் துவரம் பருப்பு ஆகிய இன்றியமையாப் பண்டங்களின் மூட்டைகளில் பண்டங்களின் அளவு, நாள், நேரம் உள்ளிட்ட விவரங்கள் கொண்ட துரிதக் குறியீட்டினை (QR code) தைத்து அனுப்பி, அதன் வாயிலாகக் கிடங்கிலிருந்து இன்றியமையாப் பண்டங்கள் நியாய விலைக் கடைகளுக்கு முறையாக நகர்வு செய்யப்படுவதையும், அந்த மாதத்திலேயே பண்டங்கள் உரிய தரத்துடன் விநியோகம் மேற்கொள்ளப்படுவதும், மாவட்ட நிர்வாகம் வாயிலாகக் கண்காணிக்கப்பட்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கான மேம்பட்ட சேவை நியாய விலைக் கடைகள்மூலம் வழங்கப்படுவது உறுதி செய்யப்பட்டு வருகின்றது. இதனை நீலகிரி மாவட்டத்தின் அனைத்து வட்டங்களில் செயல்படும் பொது விநியோகத் திட்டக் கிடங்குகளில் ஆண்டிற்கு 62 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் செலவினத்தில் விரிவுபடுத்திச் செயல்படுத்தப்படும்.

12. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 மற்றும் தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு விதிகள், 2017 தொடர்பாக பொது விநியோகத் திட்டத்தினைச் செயல்படுத்தும் அரசுத் துறை அலுவலர்களுக்கு விழிப்புணர்வுப் பயிற்சி 71 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்

தமிழ்நாட்டில் நவம்பர் 2016 முதல் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 செயல்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தின் கூறுகளைச் செயல்படுத்த தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு விதிகள், 2017 அமலில் உள்ளன. மேற்படி சட்டம் மற்றும் விதிகளின்படி முன்னுரிமை குடும்பமாக நிர்ணயம் செய்யப்பட்ட எந்தவொரு குடும்பத்திற்கும் அவர்களுக்கான உணவுப் பாதுகாப்பு முறையாக உறுதி செய்யப்பட்டு, அவர்தம் குடும்பத்திற்கான உரிம அளவின்படி உணவு தானியங்கள் விநியோகம் செய்யப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுத் துறை ஆகியவற்றின் வாயிலாக அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில், தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 மற்றும் தொடர்புடைய விதிகள், கட்டுப்பாட்டு ஆணைகள் குறித்து உரிய அலுவலர்களுக்குப் பயிற்சி வழங்குவது அவசியமாகிறது. ஆதலால், பொது விநியோகத் திட்டத்தினைச் செயல்படுத்தும் மேற்கண்ட மூன்று துறைகளைச் சார்ந்த 3,049 அலுவலர்களுக்கும் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் 71 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.

13. குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையில் வெளி முகமைமூலம் பணியமர்த்தப்படும் துப்புரவுப் பணியாளர்களுக்கு மாத ஊதியம் 6,000/– ரூபாயிலிருந்து 15,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்

தற்போது குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையில் துப்புரவுப் பணியாளர்கள் வெளி முகமை மூலமாகப் பணியமர்த்தப்பட்டு வருகின்றனர். இவ்வாறு பணியமர்த்தப்படும் துப்புரவுப் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க மாதம் ரூ.6,000/– அரசால் தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

இத்தொகை மிகவும் குறைவாக இருப்பதால், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையில் தற்போதுள்ள 38 அலகுகள், 12 சரகங்கள் மற்றும் 3 மண்டலங்கள் என மொத்தம் 53 அலுவலகங்களில் உள்ள 53 துப்புரவுப் பணியாளர்களுக்கு மாத ஊதியம் 15,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதற்கான தொடர் செலவினம் ஆண்டிற்கு 95 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் ஆகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறை செம்மையாகச் செயல்படுவதற்கு பெரிதும் உறுதுணையாக இருந்துவரும் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் ஜெ. இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களுக்கும், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத் தலைவர் மரியாதைக்குரிய திரு. ப. ரங்கநாதன், சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர் அவர்களுக்கும், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர்

பாதுகாப்புத் துறை ஆணையர் திரு. வே. ராஜாராமன், இ.ஆ.ப., அவர்களுக்கும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் முனைவர் சு. பிரபாகர், இ.ஆ.ப., அவர்களுக்கும், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு. அ. சிவஞானம், இ.ஆ.ப., அவர்களுக்கும், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை கூடுதல் காவல் துறை இயக்குநர் திரு. ஆ. அருண், இ.கா.ப., அவர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. அ. சண்முக சுந்தரம், இ.ஆ.ப., அவர்களுக்கும், கூடுதல் பதிவாளர் திரு. ஏ. சங்கர், இ.ஆ.ப., அவர்களுக்கும், ஏனைய அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்த மாநில முதல்வரும் செய்யாத கள ஆய்வின்மூலம், கோட்டையில் போடப்பட்ட ஆணைகள், களத்தில் செயல்படுத்தப்படுகிறதா என்பதை அறிந்து, தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்கும் நம் முதல்வர் அவர்களின் முயற்சியில் உணவுத் துறையின் பங்கும் முழுமையாக இருக்கும் என்று உறுதி கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா அவர்களையும், அதைப்போல, ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்று, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், தமிழ் இனத்தினுடைய வளர்ச்சிக்கும் அயராது பாடுபட்டு இன்றும் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் குடியிருக்கும் முத்தமிழறிஞர் அன்புத் தலைவர் கலைஞர் அவர்களையும் வணங்குகிறேன்.

ஒரு மொழி, செம்மொழிப் பட்டியலில் இடம்பெற வேண்டுமெனில், 11 தகுதிகள் இருக்க வேண்டும். 11 தகுதிகளும் பெற்ற ஒரே மொழியான நம்முடைய தமிழ் மொழியை செம்மொழிப் பட்டியலில் இடம்பெறச் செய்வதற்கு 12-வது தகுதியான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தேவைப்பட்டார்.

நாம் மொழியாலும், இனத்தாலும், மூத்தக் குடி என்றாலும், கங்கையை வென்று, கடாரத்தை வென்று, இமயத்தில்

வில்கொடியேற்றிய வீர வரலாறு நமக்கு உரியது என்றாலும், தொன்மையான மொழிக்கும், பண்பாட்டுக்கும், நாகரிகத்திற்கும், பழமையான இலக்கியத்திற்கும் உரியவர் நாம் என்றாலும், நம்முடைய வரலாற்றுப் பெருமையை உலகறியச் செய்வதற்கு ஒருவர் தேவைப்பட்டார். நம்முடைய வரலாற்றுப் பெருமையை உலகறிய நிலைநாட்டும் வகையில், கீழடியில் கிடைக்கப் பெற்ற பொருட்களையெல்லாம் காட்சிப்படுத்தி (மேசையைத் தட்டும் ஒலி) அருங்காட்சியகத்தை உருவாக்கி, அதை நேரில் வந்து திறந்து வைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய தொன்மையான நாகரிகங்களான நைல் நதி நாகரிகம், கிரேக்க நாகரிகம், சுமேரிய நாகரிகம், சிந்துவெளி நாகரிகம் என்ற பல நாகரிகங்களுக்கு எல்லாம் முந்தைய நாகரிகம் நம்முடைய வைகை நதி சங்க கால நாகரிகம் என்பதை வெளிக்கொணர வைத்தவர், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களின் வரலாற்றுச் சிறப்பை நிலைநாட்ட நமக்குத் தேவைப்பட்ட முதல்வர்தான், நமது முதல்வர் ஒப்பற்ற முதல்வர், (மேசையைத் தட்டும் ஒலி) ஒப்பாரும் மிக்காரும் இல்லாத முதல்வர் அண்ணன் தளபதி அவர்களை வணங்குகிறேன்.

திராவிடத் தென்றலாய், இன முழக்கமாய், இளம் முரசாய், முரசொலியாய், போர் வாளாய், தமிழ் மொழியை வளர்க்கும் எழில் மன்றமாய், உரிமை வேட்கையாய், முத்தாரமாய், குடியரசும், காஞ்சியும் கோலோச்சிய திராவிட நாட்டின் நம்பிக்கை ஒளியாய், அன்புநிதியாய், அறிவுநிதியாய், அருள்நிதியாய், தயாநிதியாய், இன்பநிதியாய் கோபாலபுரத்தின் நிதி குடும்பத்தில் தோன்றிய எங்கள் சின்னவர், என்றும் 'Win' அவர் மாண்புமிகு உதயநிதி அவர்களையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அவை முன்னவரும், நீர்வளத் துறை அமைச்சருமாகிய மாண்புமிகு அண்ணன் திரு. துரைமுருகன் அவர்கள் உள்ளிட்ட அனைத்து அமைச்சர் பெருமக்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும், பேரவைத் தலைவராகிய உங்களையும் வணங்குகிறேன். அதேபோல, எனது தாய், தந்தையரையும் வணங்கி, நான்காவது முறையும் திருப்பத்தூர் தொகுதியில் என்னை வெற்றி பெறச் செய்து இம்மன்றத்திற்கு அனுப்பிய வாக்காளப் பெருமக்களையும் வணங்கி, என்னுடைய உரையை நான் தொடங்குகிறேன்.

இரவு 7–50

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில், அரசு வழங்குகின்ற மாதாந்திர குடிமைப் பொருட்கள் மற்றும் அரசின்

பல்வேறு உதவிகளை நியாய விலைக் கடைகள்மூலம் கொண்டு சென்று பொதுமக்களுக்குச் சேர்க்கின்ற மகத்தான பணியைச் செய்கின்றது. மேலும், விவசாயிகள், மகளிர், சிறு தொழில் புரிவோர் போன்றவர்களுக்கு நிதியுதவி செய்து, வங்கிச் சேவைகளையும் இத்துடன் இணைந்து செயல்படுத்துகிறது. பண்டக சாலைகள் மூலமாக பொதுமக்களுக்குத் தரமான பொருட்கள் குறைந்த விலையில் கிடைப்பதற்கும் இத்துறை சேவை செய்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள், கூட்டுறவுத் துறையைப் பற்றி "சமூக அமைதிக்கும், பொருளாதார நீதிக்கும் பயன்படும் கூட்டுறவு, நமது நாட்டில் நன்கு பரவ வேண்டும். அதன் முழுப் பயனையும் அனைவரும் அடைய வேண்டும்" என்றார். அவர்களின் கருத்தின்படி, தமிழ்நாட்டில் உள்ள அடித்தட்டு மக்கள் அனைவரும் வாழ்வில் முன்னேற்றம் அடைய, பல மக்கள் நலத் திட்டங்களைத் தீட்டி, அவற்றைச் செயல்படுத்தி, தமிழ்நாட்டை முன்னேற்றத்திற்குக் கொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சராக அண்ணன் தளபதி அவர்கள் பொறுப்பேற்று, தமிழ்நாட்டு மக்கள் அனைவரின் துன்பங்களைப் போக்குவதற்கும், வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையிலும் பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார். மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ், கூட்டுறவுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று, இந்த மானியக் கோரிக்கையில் உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்று தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் வகுத்துத் தந்த அரசியல் இலக்கணத்தின்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ஆட்சி 'அனைவருக்கும் அனைத்தும், எல்லோருக்கும் எல்லாம்' என்ற உயர்ந்த நோக்கத்துடன் பல மக்கள் நலத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில், கூட்டுறவுத் துறை பிற அரசுத் துறைகளான வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, மீன்வளத் துறை, பால்வளத் துறை, கால்நடை வளர்ப்புத் துறை, கைத்தறி மற்றும் துணிநூல் துறை, வீட்டு வசதித் துறை உள்ளிட்ட துறைகளுக்கும்

அந்தந்தத் துறைகள் தொடர்புடைய விவசாயப் பெருங்குடி மக்கள், மீனவர்கள், நெசவாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பாலமாக இருந்து செயல்பட்டு வருகிறது. அரசு நலத் திட்டங்களைச் சிறப்பாக பயனாளிகளிடம் கொண்டுபோய்ச் சேர்க்கும் முக்கியத் துறையாக கூட்டுறவுத் துறை விளங்குகிறது.

இந்தியாவில், தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள், வங்கிகள் மிக நீண்ட வரலாற்றையும், சிறந்த பாரம்பரியத்தையும் கொண்டவையாகத் திகழ்கின்றன. இந்தியாவில் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கம் இன்றைய திருவள்ளூர் மாவட்டத்தில், 1904-ல் ஆரம்பிக்கப்பட்ட திரூரில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கமும், அதே ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட திருவல்லிக்கேணியில் உள்ள நகர கூட்டுறவுச் சங்கமும் ஆகும். எனவே, இந்தியாவில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தாய்மடி தமிழ்நாடு என்று சொன்னால் அது மிகையாகாது.

கூட்டுறவுத் துறை, தமிழ்நாட்டில் உள்ள 2.29 கோடி குடும்பங்களுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ளது. கிராமப்புற பொருளாதார வளர்ச்சிக்கும், அனைத்து பிரிவினர்களுக்குமான பொருளாதார சேவைகளை வழங்கும் துறையாக விளங்குகிறது. தமிழ்நாட்டில், 1904-ல் ஆரம்பித்த கூட்டுறவு இயக்கம், மூதறிஞர் இராஜாஜி, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் போன்ற பெருந்தலைவர்களின் பங்கேற்புடன் படிப்படியாக வளர்ந்து, இன்று ஓர் ஆல விருட்சமாகப் படர்ந்து செழிப்புற்றுள்ளது.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற பொறுப்பு கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தேர்தல் நேரத்தில் சொன்ன அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றி வருவதோடு, சொல்லாத பல்வேறு மக்கள் நலத் திட்டங்களையும் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்றவுடன், தமிழக மக்களின் வாழ்வில் புத்தொளியை ஏற்படுத்தும் வகையில், 5 முக்கியத் திட்டங்களுக்கான அரசாணைகளில் கையொப்பமிட்டார்கள். அவற்றில், கொரோனா தொற்று காரணமாக மக்களின் தொடர் இன்னல்களையும், துன்பங்களையும் போக்குவதற்கும், அவர்களின் வாழ்வாதாரத்திற்கு

உதவும் வகையிலும் கூட்டுறவுத் துறை சார்பாக அரிசி குடும்ப அட்டை வைத்துள்ள குடும்பங்கள் அனைத்திற்கும் ஆறுதல் அளிக்கும் வகையில், 4,000 ரூபாய் வழங்கப்படும் என்று அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும்விதமாக, கூட்டுறவுத் துறைமூலம் 2021, மே மற்றும் ஜூன் மாதங்களில் 2,08,24,176 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு இரண்டு தவணைகளில், ஓர் அட்டைக்கு ரூ.4,000/– என்ற வகையில் கொரோனா நிவாரண நிதி வெற்றிகரமாக வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, கொரோனா நிவாரண நடவடிக்கையாக ஜூன் 2021 முதல் ஜூலை 2021 வரை, 2,07,70,332 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு 14 வகையான மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு நியாய விலைக் கடைகள்மூலம் வழங்கப்பட்டுள்ளன.

பொங்கல் பரிசுத் தொகுப்பு: தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் பண்டிகையை தமிழக மக்கள் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையின்போது 2,14,67,500 அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழுக் கரும்புடன் ரூ.1,000/– ரொக்கத் தொகை அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டது.

இரவு 7–55

நகைக் கடன் தள்ளுபடி: இவ்வரசு தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள உறுதிமொழியை நிறைவேற்றும்வகையில், 14,51,344 எண்ணிக்கையிலான நகைக் கடன்கள் ரூ.5,013.33 கோடி அளவிற்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

பயிர்க் கடன் தள்ளுபடி: இவ்வரசு பதவியேற்றவுடன் விவசாயப் பெருமக்கள் பெற்றிருந்த 16,43,347 பயிர் கடன்கள் ரூ.12,110.74 கோடி அளவிற்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கடன் தள்ளுபடி: மகளிர் தங்கள் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்பதற்காகவும், அடித்தட்டிலிருந்து பொருளாதார முன்னேற்றத்தைக் கொண்டுவர வேண்டுமென்பதற்காகவும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் 1989 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் உருவாக்கப்பட்டதுதான் இந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள்

திட்டம். இன்று இந்திய அளவில் எல்லோரும் இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டு சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். இந்த மகளிர் சுய உதவிக் குழு திட்டத்தை, 2006–2011 காலகட்டத்தில் இன்றைய நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், அன்றைய துணை முதல்வராக இருந்து, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கி மெருகூட்டினார்கள்.

தேர்தல் அறிவிப்புகளை நிறைவேற்றுவதில் இவ்வரசு மேலும் ஒரு சாதனை படைத்துள்ளது. இத்திட்டத்தின்மூலம் கோவிட்–19 பெருந்தொற்றால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு கடனைத் திருப்பிச் செலுத்த இயலாத 1,17,617 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.2,755.99 கோடி அளவிற்கு தள்ளுபடி வழங்கப்பட்டு, 15,88,309 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயன்பெற்றுள்ளனர். தமிழ்நாடு கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்பட்டுவரும் வங்கிகள் மற்றும் நிறுவனங்கள், 17 தலைமைச் சங்கங்கள், 216 மத்திய சங்கங்கள் மற்றும் 22,690 தொடக்கச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 செயல்பாட்டு பதிவாளர்களின்கீழ் துடிப்புடன் செயல்படுகிறது.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின்கீழ் இத்துறையின் நேரடிக் கட்டுப்பாட்டில் தற்போது, மொத்தம் 7,580 கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. பணியாளர்களின் கடன் தேவைகளையும், இச்சங்கங்கள் பூர்த்திசெய்து வருகின்றன. கூட்டுறவு வங்கிகளிலும், நிறுவனங்களிலும் இதுவரை இல்லாத அளவு பொதுமக்களின் வைப்பு நிதி அதிகரித்துள்ளது. கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள், அவற்றின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து 2022–2023–ல், இந்த நடப்பாண்டில், 31–03–2023, வரை ரூ.71,955.59 கோடி அளவிற்கு வைப்பு நிதி திரட்டப்பட்டுள்ளது. மேலும், வழங்கப்படும் கடனின் அளவும் இதுவரை இல்லாத அளவாக ரூ.64,140.72 கோடியாக உயர்ந்துள்ளது. இது பொதுமக்கள் இத்துறையின்மீது வைத்துள்ள நம்பிக்கையை எடுத்துக்காட்டுகிறது.

கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக வழங்கப்படும் முக்கியமான கடன்கள்: ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு விவசாயம் முக்கியப் பங்கு வகிக்கின்றது. அந்தவகையில் தமிழ்நாட்டில் விவசாயிகளின் நலனை தன் நலமாகக் கருதும் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களின் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர், கூட்டுறவுச் சங்கங்களின் வரலாற்றில்

முதல்முறையாக பயிர்க் கடன் அளவு ரூ.10,000 கோடியைத் தாண்டி 2021–2022 ஆம் ஆண்டில் 14,84,052 விவசாயிகளுக்கு ரூ.10,292.02 கோடி அளவிற்கு பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் பயிர்க் கடன் வழங்க ரூ.12,000/– கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 31–03–2023–ன்படி, 17,43,874 விவசாயிகளுக்கு ரூ.13,443.14 கோடி அளவிற்கு பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இரவு 8–00

நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டைவிட, பயிர்க் கடன் ரூ.1,443.14 கோடி அதிகமாக வழங்கப்பட்டுள்ளது என்பதையும் இங்கே குறிப்பிடுகிறேன். மேலும், இந்த ஆண்டு அதிகபட்ச எண்ணிக்கையில், குறிப்பாக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்த விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது. 31–3–2023 வரை 1,59,049 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்த விவசாயிகளுக்கு ரூ.1,072.96 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பயிர்க் கடன் பெற்ற மொத்த விவசாயிகளில், சிறு மற்றும் குறு விவசாயிகளின் எண்ணிக்கை மட்டுமே 14,46,455 ஆகும். இது 85.39 சதவிகிதம் ஆகும். சிறு குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த பயிர்க் கடன் தொகை ரூ.10,593.52 கோடி ஆகும். இது மொத்த பயிர்க் கடனில் 81.29 சதவிகிதம் ஆகும். சிறு, குறு விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்கியதிலும், இந்த அரசு குறிப்பிடத்தக்க சாதனையைப் புரிந்துள்ளது.

குறிப்பாக, டெல்டா மாவட்டங்களில் உள்ள 697 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்மூலம், கடந்த ஆண்டு 2021–2022–ல் 2,48,869 விவசாயிகளுக்கு ரூ.1,359.98 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இதுவரை 2,81,945 விவசாயிகளுக்கு ரூ.1,832.23 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில், 2011–2012 முதல் 2020–2021 மே மாதம் வரை வழங்கப்பட்ட பயிர்க் கடன்களின் எண்ணிக்கை 1,06,98,482 ஆகும். ஆண்டு சராசரியாக 10,69,848 எண்ணிக்கை பயிர்க் கடன்கள் கடந்த ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்டன. பயிர்க் கடன்களின் தொகை 10 ஆண்டுகளுக்கு ரூ.60,646.43 கோடி ஆகும். ஆண்டு சராசரியாக ரூ.6,064.64 கோடி மட்டுமே பயிர்க் கடன் வழங்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களின் தலைமையிலான

இந்த அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் 31–3–2023 வரை 22 மாதங்களில் 32,27,926 பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டன. ஆண்டு சராசரி 17,60,686 ஆகும். இது கடந்த ஆட்சியில் வழங்கப்பட்டதை விட 70 சதவிகிதத்திற்கும் அதிகமாகும்.

அதேபோல, இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் 31–3–2023 வரை 22 மாதங்களில் ரூ.23,735.16 கோடி பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டன. ஆண்டு சராசரி ரூ.12,946.45 கோடி ஆகும். இது கடந்த ஆட்சியைவிட 100 சதவிகிதத்திற்கும் அதிகமாகும். தற்போது உழவர் கடன் அட்டை திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு ரூ.3 இலட்சம் வரை கடன் வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் கடனை உரிய காலத்திற்குள் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு, வட்டித் தொகை முழுவதும் தள்ளுபடி செய்யப்படுகிறது. இதுவரை விவசாயக் கடன்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வரும் நிலையில், 2021–2022 ஆம் ஆண்டு முதல் கால்நடை பராமரிப்பு மற்றும் அவை சார்ந்த இதர பணிகளுக்கான நடைமுறை மூலதனக் கடன் வழங்குவதும் உழவர் கடன் அட்டை திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

கூட்டுறவுத் துறையில் முதல் முறையாக ஆடு, மாடு, கோழி மற்றும் மீன் வளர்க்கும் விவசாயிகளுக்கு, வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டம், கடந்த ஆண்டு நம் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, அதன்படி, 2022–2023 ஆம் ஆண்டில் 31–3–2023 வரை 2,86,846 விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு மற்றும் அதன் தொடர்புடைய பணிகளுக்காக ரூ.1,339.88 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், உரிய காலத்தில் கடனை திருப்பிச் செலுத்தும் விவசாயிகளிடம் வட்டி ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. இந்தக் கடன், விவசாயிகள் மத்தியில் மிகப் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

கணவனை இழந்த கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோர் தங்கள் சொந்தக் காலிலேயே வாழ்க்கை நடத்துவதற்கு ஏதுவாக, அவர்களது நலனைக் கருத்தில்கொண்டு, இந்த அரசால் கடந்த ஆண்டு ஒரு புதிய அறிவிப்பு வெளியிடப்பட்டு, அவர்களுக்கு 5 சதவிகிதம் என்கிற மிகக் குறைந்த வட்டியில் கடன் வழங்குவதற்கு அறிவிப்பு வெளியிடப்பட்டது. நடப்பாண்டில் 15–3–2023 வரை 5,453 நபர்களுக்கு ரூ.10.96 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், கடந்த 2 ஆண்டுகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கூட்டுறவுத் துறைமூலம் வழங்கப்படும் கடன் உச்சவரம்பு ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன்வாயிலாக அடித்தட்டில் இருக்கக்கூடிய மக்களுக்கும் பலன் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 15–3–2023 வரை 55,191 எண்ணிக்கையிலான குழுக்களுக்கு ரூ.1,597.05 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

இரவு 8–05

தமிழ்நாடு கூட்டுறவுத் துறை, மாற்றுத் திறனாளிகளுக்கு வட்டியில்லா கடன் வழங்குவதில் தொடர்ந்து இந்தியாவில் முதலிடம் வகித்து வருகிறது. மாற்றுத் திறனாளிகள் தன்னம்பிக்கையுடன் அவர்களது வாழ்க்கையை மேற்கொள்ளவும், அவர்களின் பொருளாதாரம் மற்றும் வருமானத்தை உயர்த்தும் வகையிலும் நடப்பாண்டில் 15–03–2023 வரை 14,471 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.66.60 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இதிலும் கடந்த ஆட்சியைவிட இரண்டு மடங்கான எண்ணிக்கையில் பயனாளிகளுக்கும், இரண்டு மடங்கு எண்ணிக்கையிலான கடன் தொகையும் வழங்கி சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே மாற்றுத் திறனாளிகளுக்கு அதிக எண்ணிக்கையிலும், அதிக தொகையிலும் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களில் தமிழ்நாடு முதல் மாநிலமாகத் தொடர்ந்து திகழ்ந்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பயிர்க் கடன், கால்நடை வளர்ப்புக் கடன் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான கடன் ஆகிய மூன்று நேர்வுகளிலும் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கைத் தாண்டி சாதனை படைக்கப்பட்டுள்ளது.

பூ, காய்கறிகள், பழங்கள் வியாபாரம் செய்தல், பெட்டிக் கடை வியாபாரம், தள்ளுவண்டியில் பழங்கள், காய்கறிகள் விற்பவர்கள் போன்ற சிறு வணிகங்கள் செய்பவர்கள் தனியாரிடம் அதிக வட்டியில் கடன் பெறுவதைத் தடுத்து, கூட்டுறவுகள்மூலம் குறைந்த வட்டியில் கடன் பெற்று பயன்பெறும் வகையில், கூட்டுறவு வங்கிகளில் சிறு வணிகக் கடன் வழங்கப்படுகிறது. இவ்வாண்டில் 2022–2023 ஆம் ஆண்டில் 28–2–2023 வரை 85,568 நபர்களுக்கு ரூ.304.21 கோடி சிறு வணிகக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 6] [திரு. கேஆர். பெரியகருப்பன்]

பல்வேறு கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள்மூலம் நடுத்தர மற்றும் ஏழையெளிய மக்களின் அவசரத் தேவைக்காக, அவர்களிடம் உள்ள தங்க நகைகளுக்கு ஈடாக நகைக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. 31–3–2023 வரை 52,24,984 நகைக் கடன்களுக்கு ரூ.35,058.25 கோடி கடன் இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பல்நோக்கு சேவை மையங்களாக மாற்றுகின்ற முயற்சி: தமிழ்நாட்டில் உள்ள 4,453 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும், 25 மலைவாழ் மக்கள் பெரும் பல்நோக்குக் கூட்டுறவு கடன் சங்கங்களையும், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக் கடன் உதவியுடன் பல்நோக்கு சேவை மையங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வேளாண் விளைபொருள் விற்பனை:

தமிழகத்தில் செயல்படும் 113 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்மூலம் நடப்பு நிதியாண்டில் 31–3–2023 வரை ரூ.940.58 கோடி அளவிற்கு வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மலைவாழ் மக்களின் முன்னேற்றத்திற்காக தமிழ்நாட்டில் செயல்படும் 25 மலைவாழ் மக்கள் பெரும் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் மலைவாழ் மக்களின் விளைப் பொருட்கள் 2022–2023 ஆம் ஆண்டில் ரூ.4.57 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

பொது விநியோகத் திட்டம்: தமிழ்நாடு முழுவதும் உள்ள 34,791 நியாய விலைக் கடைகளில் 33,702 நியாய விலைக் கடைகள் கூட்டுறவுத் துறைமூலம் நடத்தப்பட்டு வருகின்றன. புதிய நியாய விலைக் கடைகள் அனைத்திலும் தற்போது புதுப்பிக்கப்படுகின்ற பணிகள் பரவலாக நடைபெற்று வருகின்றன. இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு, 31–3–2023 வரை 542 புதிய கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 164 முழு நேரக் கடைகளும், 378 பகுதி நேரக் கடைகளும் திறக்கப்பட்டிருக்கின்றன. மாநிலம் முழுவதிலுமுள்ள 12,525 கிராமப் பஞ்சாயத்துகளில். 25,904 நியாய விலைக் கடைகள் இயங்கி வருகின்றன. அதாவது ஒரு கிராமப் பஞ்சாயத்தில் குறைந்தபட்சம் சராசரியாக 2 நியாய விலைக்

கடைகள் செயல்பட்டு வருகின்றன. எனவே, அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்கு, 2 கிலோ மீட்டருக்கு மேல் பொது மக்கள் பயணிக்க வேண்டிய நிலை இல்லாமல் இருப்பதை உறுதி செய்வதை இலக்காகக்கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

தள்ளுவண்டி வியாபாரிகள், வெளிமாநிலத் தொழிலாளர்கள் ஆகியோர் நலனைக் கருத்திற்கொண்டு 5 கிலோ கிராம்/2 கிலோ கிராம் FTL சிலிண்டர்கள், கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் 6–10–2022 முதல் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

நியாய விலைக் கடைகளைப் பொலிவூட்டும் பணி: 75 ஆவது சுதந்திர தினப் பொன்விழா ஆண்டை முன்னிட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும், 75 நியாய விலைக் கடைகளை தேர்வு செய்து அவற்றைப் பொலிவூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 2,975 எண்ணிக்கையிலான கடைகள் பொலிவூட்டப்பட்டுள்ளன.

கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்படும் நியாய விலைக் கடைகளுக்கு ISO தரச் சான்றிதழ்கள் பெறப்பட்டு வருகின்றன. இதுவரை 5,784 நியாய விலைக் கடைகளுக்கு ISO தரச் சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ளன.

இரவு 8–10

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் செயல்படும் நியாய விலைக் கடைகளில் 13–10–2022 அன்று உள்ளவாறு 5,578 விற்பனையாளர்கள் காலிப் பணியிடங்களுக்கும், 925 கட்டுநர்கள் காலிப் பணியிடங்களுக்கும், ஆக மொத்தம் 6,503 காலி பணியிடங்களுக்கும் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு, தற்போது மதிப்பீடு பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது இதுகுறித்து மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை எண் 3972/2023 வழக்கில் தகுதியுள்ள நபர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்ட பின்னர், காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்ற தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதால், அதனடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தகுதியுள்ள அனைவருக்கும் பதவி உயர்வும், பணி நியமன ஆணைகளும் விரைவில் வழங்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கூட்டுறவு நிறுவனங்களைக் கணினிமயமாக்க, தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அனைத்து கூட்டுறவு நிறுவனங்களிலும் கணினிமயமாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியிலும், 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலும், மைய வங்கியியல் தீர்வு முறை (Core Bank Solutions) நடைமுறையில் உள்ளது. இந்த வங்கிகள் அனைத்திலும் Mobile Banking, RTGS, NEFT, IMPS போன்ற வசதிகள் நடைமுறையில் உள்ளன. இந்தியாவிலேயே அனைத்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலும் IMPS சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதில், தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது. தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியில் 27–9–2022 முதல் UPI Integration வசதி அறிமுகப்படுத்தப்பட்டு, அதன் மூலம் Google Pay, Paytm போன்ற வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இம்மாத இறுதிக்குள் இந்த UPI Integration வசதி அனைத்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் விரிவுபடுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நகர கூட்டுறவு வங்கிகள் அனைத்திலும் தற்பொழுது மைய வங்கியியல் தீர்வு முறை (Core Bank Solutions) நடைமுறையில் உள்ளது. பணியாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்களை கணினிமயப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, ஓரிரு மாதங்களில் நிறைவுபெற உள்ளன. தற்போது பரீட்சார்த்தமாக 10 பணியாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் 2 வாரங்களுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்டு, இது தற்போது நடைமுறையில் உள்ளது. இப்பணி படிப்படியாக அனைத்து 1,715 சங்கங்களிலும் முடிக்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள 4,453 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களையும், 25 பெரும் பலநோக்கு கூட்டுறவுக் கடன் சங்கங்களையும், 51 நகர கூட்டுறவு கடன் சங்கங்களையும், 3 இதர தொடக்கநிலை சங்கங்களையும் ஆக மொத்தம் 4,532 சங்கங்களையும், ஒன்றிய அரசின் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை கணினிமயமாக்கும் திட்டத்தின்கீழ் ஒரே கட்டத்தில் கணினிமயமாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதற்காக மாநில அரசின் பங்களிப்பாக ரூ.21.00 கோடியும், ஒன்றிய அரசின் பங்களிப்பாக ரூ.32.82 கோடியும் வழங்கப்பட்டிருக்கின்றன.

கூட்டுறவு மருந்தகங்கள்: 16-12-2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஒரே மாதிரியான வண்ணம், தனித்துவமான சின்னம் மற்றும் பெயர்ப் பலகைகளுடனான 70 புதிய கூட்டுறவு மருந்தகங்கள் மாநிலம் முழுவதும் திறந்து வைக்கப்பட்டன. தற்போது தமிழ்நாட்டில் 380 கூட்டுறவு மருந்தகங்கள் தரமான மருந்துகளை, வாடிக்கையாளர்களுக்கு 20% வரை தள்ளுபடி அளித்து விற்பனை செய்து வருகின்றன. கூட்டுறவுத் துறைமூலம் நடத்தப்படும் மருந்தகங்களுக்கு, பொது மக்களிடையே மிகப் பெரிய வரவேற்பு கிடைத்து வருகிறது.

கூட்டுறவு நிறுவனங்களில், இதுவரை 812-க்கும் மேற்பட்ட சங்கங்களில் பல்வேறு முறைகேடுகள் கண்டறியப்பட்டு, அதன் தொடர்ச்சியாக, ரூ.369.00 கோடிக்கும் அதிகமான சொத்துகள் முடக்கிவைக்கப்பட்டு, அவற்றை ஏலம் விடுவதற்கான நடவடிக்கைகளும் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. தொடர்புடைய நிர்வாகக் குழு மற்றும் பணியாளர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வரசு பொறுப்பேற்ற பிறகுதான் கடந்த வருடங்களைவிட, கூட்டுறவுத் துறைமூலம் உர விநியோகம் வலுப்பெற்றுள்ளது. நடப்பாண்டில் மாநிலத்தில் நடைபெற்றுவரும் மொத்த உர விற்பனையான 22,51,842 மெ.டன் உர விற்பனையில் 5,53,152 மெ.டன், அதாவது மாநிலத்தின் மொத்த விற்பனையில், 25 சதவிகிதம் அளவிற்கு உர விற்பனை செய்து, கூட்டுறவுத் துறை சாதனை படைத்துள்ளது. அனைத்து மாவட்ட, மத்திய கூட்டுறவு வங்கிகளும் இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில், நிகர இலாபத்தில் இயங்குகின்றன. இந்த ஆட்சியில்தான், முதன்முறையாக தொடர்ந்து 2 வருடங்களாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில்தான், அனைத்து மாவட்ட, மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், நிகர இலாபத்தில் இயங்கி வருகின்றன. இது இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை என்பதையும் நான் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் 40 கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றின்மூலம் தரமான நுகர்வோர் பொருட்கள் குறைந்த விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதன்மூலம் இதுவரை இல்லாத அளவான ரூ.1,159.74 கோடிக்கு விற்பனை நடைபெற்றுள்ளது. கடன் சங்கப் பணியாளர்களுக்கு கருணை

ஓய்வூதியம்; நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜூ அவர்கள் பேசியபோது இதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். கடந்த ஆட்சியில் இதை அறிவித்தார்கள்.ஆனால்,தற்போதுஅதைநடைமுறைப்படுத்துவதற்கு வழிமுறைகள் வகுக்கப்பட்டு, நிதி ஆதாரம் பெறப்பட்டு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/– வழங்குகிற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பயிர்க் கடன் வழங்குவதற்கு மாநில அளவிலான வழிகாட்டி நெறிமுறைகள் இப்பொழுது தயாரிக்கப்பட்டு, வகைப்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வாறு, இந்த ஆட்சிக் காலத்தில் கூட்டுறவுத் துறை முழு உத்வேகத்துடனும், எழுச்சியுடனும் பணியாற்றி, ஏழை எளிய மற்றும் விவசாய பெருங்குடி மக்களுக்கு அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மிகப்பெரும் பங்களிப்பை ஆற்றி வருகிறது.

இரவு 8–15

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கூறியபடி தனி முயற்சியைவிட, கூட்டுறவு முயற்சியே சிறந்த பலனளிக்கும். பண்டைய நாளில் முற்றும் துறந்த முனிவர்கள்கூட கூட்டு முயற்சியை மேற்கொண்டார்கள். கானகத்தே சென்று கூட்டாகக் கடவுளை வேண்டி தவம் செய்தார்கள். தனித்து தவம் இருந்தால் பலன்கிட்டாது என்று எண்ணிக் கூட்டாக வழிபட்டனர். கூட்டுறவின் சிறப்பை உணர்ந்து அவ்வாறு செயலாற்றினார்கள்.

முற்றும் துறந்த முனிவர்களே கூட்டுறவு இல்லாமல் வாழ முடியவில்லை என்றால், நம்மவர்களுக்கு இதன் அத்தியாவசியம் சொல்லவும் வேண்டுமா? (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டுறவில் ஈடுபட்டோர் நாணயம், நேர்மை, கட்டுப்பாடு ஆகிய பண்பாடுகளுடன் ஏனையோருக்கு வழிகாட்டியாய் செயலாற்ற வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

கூட்டுறவின் இலட்சியமே மக்கள் சேவையாகும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள்.

“சரித்திரம் பல கோடி கண்ட செம்மல்

சமத்துவ பூமிக்கு வித்திட்ட வள்ளல்

நீதி நிலைகுலையாத நியாயத் தராசு

ஆதிக்கப் பேய்களுக்கு அதிரடி போர் முரசு

சாதிக்க வந்திட்டசமதர்ம நாயகர்”

ஆக திகழும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு பொறுப்பேற்று எல்லாத் துறைகளிலும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. இந்தக் காலகட்டத்தில், கூட்டுறவுத் துறையின் மூலமாக தமிழகத்தில் இருக்கின்ற விவசாயிகளுக்கும், ஏழை, எளிய மக்களுக்கும் நம்முடைய அரசின் திட்டங்களை முழுமையாகக் கொண்டு சேர்ப்பதிலும், கூட்டுறவுத் துறையின் மூலமாக இந்த அரசு கொண்டு வருகின்ற அனைத்துத் திட்டங்களையும் தொய்வின்றி நிறைவேற்றுவதற்கும் நாம் அனைவரும் பாடுபடுவோம் என்று உறுதியேற்று கூட்டுறவுத் துறை தொடர்பான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிவிப்புகள்

1. சேலம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 2 புதிய வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அமைக்கப்படும்

சேலம் மாவட்டம், ஓமலூர் சரகத்தில் கொளத்தூர் மற்றும் மேட்டூர் வட்டாரத்திற்குட்பட்ட கொளத்தூர், லக்கம்பட்டி, சிங்கிரிப்பட்டி, தின்னப்பட்டி, ஆலமரத்துப்பட்டி, மூலக்காடு, சாம்பள்ளி, கருங்கல்லூர், காவேரிபுரம், கண்ணாமூச்சி, பாலமலை, நவப்பட்டி, கோல்நாயக்கன்பட்டி ஆகிய வருவாய் கிராமங்களை உள்ளடக்கி, கொளத்தூரில் புதிதாக ஒரு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைக்கப்படும்.

அதேபோல, புதுக்கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டை, குன்னாண்டார்கோவில், கந்தர்வக்கோட்டை, அன்னவாசல், விராலிமலை ஆகிய வருவாய் கிராமங்களை உள்ளடக்கி புதுக்கோட்டையில் புதிதாக ஒரு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைக்கப்படும்.

மேற்கூறிய 2 புதிய வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் கிடங்கு, உலர்களம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளுடன் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

2. மலைவாழ் மக்கள் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக புதிதாக 9 மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் துவங்கப்படும்

தமிழ்நாட்டில் தற்போது 25 மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

பழங்குடி மக்களின் நலனை முன்னிட்டு தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரி மாவட்டம், பெட்டமுகிலாளம் கிராமம், சேலம் மாவட்டம், பாலமடை மற்றும் வாழவேந்தி கிராமங்கள், கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைகட்டி மற்றும் அத்திக்கடவு கிராமங்கள், திருவண்ணாமலை மாவட்டம், பீமன்பட்டி கிராமம், கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை கிராமம், திருநெல்வேலி மாவட்டம், காணிக்குடியிருப்பு மற்றும் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி ஆகிய பகுதிகளில் 9 புதிய மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்படும்.

புதிதாக ஆரம்பிக்கப்படும் 9 மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு, ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

3. ஐந்து இதரவகைக் கூட்டுறவுச் சங்கங்கள் மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றப்படும்

ஈரோடு மாவட்டம், பர்கூர், தேனி மாவட்டம், கொட்டகுடி, சேலம் மாவட்டம் கம்மாளப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், கோயம்புத்தூர் மாவட்டம், தூணக்கடவில் உள்ள விற்பனைச் சங்கம், விருதுநகர் மாவட்டம் செண்பகத்தோப்பில் உள்ள தனிவகைச் சங்கம் ஆகிய 5 கூட்டுறவுச் சங்கங்கள் அந்தப் பகுதிகளில் வசிக்கும் மலைவாழ் மற்றும் பழங்குடியினர் நலன் கருதி மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றப்படும்.

4. வேலூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புதிய கிளை துவங்கப்படும்

வேலூர் மாவட்டம், பீஞ்சமந்தையில் செயல்பட்டுவரும் மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு பாலம்பட்டு பகுதியில் புதிய கிளை ஒன்று ஏற்படுத்தப்படும்.

அதேபோல சேலம் மாவட்டத்தில் ஏற்காடு ஒன்றியம், வாழவேந்தி கிராமத்தில் புதிதாகத் துவங்கப்படவுள்ள மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு மாரமங்கலம் பகுதியில் புதிய கிளை துவங்கப்படும். இந்த 2 புதிய கிளைகளுக்கான கட்டடம் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

5. மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு 5% என்கிற குறைந்த வட்டியில் தமிழ்நாடு தலைமைக் கூட்டுறவு வங்கியே கடனுதவி வழங்கும்

மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு 5% என்கிற குறைந்த வட்டியில் தமிழ்நாடு தலைமைக் கூட்டுறவு வங்கி கடனுதவி வழங்கும். இதனால் மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் நிதிநிலைமை செயல்திறன் மேம்படும்.

6. நீலகிரி மாவட்டத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் பந்தலூர் மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்

நீலகிரி மாவட்டத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் பந்தலூர் மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும்.

7. சேலம் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள 2 மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கட்டடங்கள் நவீனமயமாக்கப்படும்

சேலம் மாவட்டம், சின்னகல்ராயன் மற்றும் திருப்பத்தூர் மாவட்டம், ஏலகிரி ஆகிய பகுதிகளில் உள்ள 2 மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கட்டடங்கள் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.

8. பழுதடைந்த நிலையில் உள்ள 11 மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கட்டடங்களுக்குப் பதிலாக புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்

சேலம் மாவட்டம், ஏற்காடு, பச்சைமலை, பெரியகல்ராயன், தருமபுரி மாவட்டம், சிட்லிங், திருச்சி மாவட்டம், பச்சமலை,

திருவண்ணாமலை மாவட்டம், நம்மியம்பட்டு, கள்ளக்குறிச்சி மாவட்டம், வெள்ளிமலை, கிளாக்காடு, மோட்டாம்பட்டி, ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம், நீலகிரி மாவட்டம், மசினகுடி ஆகிய 11 மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கட்டடங்கள் கட்டப்பட்டு 25 ஆண்டுகளுக்கு மேலாக ஆனதாலும், தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளதாலும் இவற்றிற்கு ரூ.4.61 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

9. இராமநாதபுரம் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் புதிதாக இரண்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் துவங்கப்படும்

இராமநாதபுரம் மாவட்டத்தில் R.S மங்கலம் வட்டாரத்தில் உள்ள செவ்வாய்பேட்டை கிராமத்தில் வசிக்கும் விவசாயிகள் பயன்பெறும் பொருட்டு செவ்வாய்பேட்டை கிராமத்தில் புதிதாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்கப்படும்.

அதேபோல, பெரம்பலூர் மாவட்டம், தேவையூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தினைப் பிரித்து, புதிதாக மேட்டுப்பாளையம் பகுதியில் ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் துவங்கப்படும்.

புதிதாக ஆரம்பிக்கப்படும் இரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கும் தலா ரூ.25.00 இலட்சம் வீதம், மொத்தம் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன் ஆகியோர் தொடர்ந்து வலியுறுத்தி, நினைவூட்டியதை ஆய்வு செய்ததன் அடிப்படையில் 10-வது அறிவிப்பு.

10. கூட்டுறவுச் சங்கங்களில் வசூல் ஆகாமல் நிலுவையிலுள்ள தவணை தவறிய பண்ணைசாராக் கடன்கள் மற்றும் இதர நீண்டகால நிலுவை இனங்களுக்கு சிறப்புக் கடன் தீர்வுத் திட்டம் செயல்படுத்தப்படும்

தமிழகத்திலுள்ள 180 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், 4,453 தொடக்க வேளாண்மை

கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 116 நகரக் கூட்டுறவு கடன் சங்கங்கள், 128 நகரக் கூட்டுறவு வங்கிகள், 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு தலைமைக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றின்மூலம் பல்வேறு வகையான பண்ணை சாராக் கடன்கள் வழங்கப்பட்டு வந்தன. 112 வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், வியாபாரிகள் செலுத்த வேண்டிய தொகைக்கு ஈடாக விவசாயிகளுக்கு விவசாய விளைபொருட்களுக்கு உரிய தொகை வழங்கி வருகின்றன.

கூட்டுறவுச் சங்கங்களில் மற்றும் வங்கிகளில் அவற்றின் நிதிநிலையைப் பலப்படுத்தவும், செயல்படாத சொத்துகளின் சதவீதத்தைக் குறைத்திடவும், நீண்டகாலமாக வசூலாகாமல் நிலுவையாக இருந்த கடன்களையும், இதர நிலுவை இனங்களையும் தீர்வு செய்யும் பொருட்டு, ஒரு சிறப்பு கடன் தீர்வுத் திட்டம் கொண்டு வரப்படும். இதன்மூலம் 3,18,571 நபர்கள் பயனடைவார்கள்.

இந்தத் திட்டத்தின்மூலம் கூட்டுறவு நிறுவனங்களுக்கு தோராயமாக ரூ.1,335.51 கோடி திரும்ப கிடைக்கும் மற்றும் தொடர்புடைய சங்கங்களின் நிதிநிலைமையும் மேம்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

11. கூட்டுறவு வங்கிகளின்மூலம் வீட்டுமனை வாங்க கடனுதவி வழங்கப்படும்.

நகரமயமாக்குதல் விரைவாக நடைபெற்றுவரும் நிலையில், நடுத்தர ஏழை, எளிய குடும்பத்தினருக்கு கூட்டுறவு வங்கிகள்மூலம் அங்கீகரிக்கப்பட்ட வீட்டுமனை வாங்கும் புதிய கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலமாக மாதாந்திர ஊதியம் பெறும் பிரிவினர் பயன்பெறுவர். மற்ற வங்கிகளைவிடக் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படும்.

12. கூட்டுறவு வங்கிகளின்மூலம் நாட்டுப்புறக் கலைஞர்கள், பாரம்பரிய இசைக் கருவி மற்றும் பாரம்பரிய கலைப்பொருட்கள் தயாரிக்கும் பணியில் உள்ளவர்களுக்கு சிறப்புக் கடனுதவி வழங்கப்படும்.

நலிந்துவரும் நாட்டுப்புறக் கலைகளை மீட்டெடுக்கும் வகையில் நாட்டுப்புறக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தைக்

கருத்தில்கொண்டும், பாரம்பரிய தமிழ் மரபுக் கலைகளை பேணிப் பாதுகாக்கும் பொருட்டும், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கும், பாரம்பரிய இசைக் கருவிகள் மற்றும் கலைப்பொருட்கள் தயாரிக்கும் கலைஞர்கள், சிற்பிகள், ஓவியர்கள் உள்ளிட்டவர்களுக்கு 5% வட்டியில் கடன் வழங்கப்படும். ஏறத்தாழ 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அதில் இருக்கிறார்கள்.

13. கூட்டுறவு வங்கிகளின்மூலம் மூத்த குடிமக்களுக்கு மறு அடமானக் கடன் வழங்கப்படும்

60 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய மூத்த குடிமக்கள், அவர்கள் வசிக்கும் வீட்டின் சட்டப்பூர்வ உரிமையாளராக இருப்பின், அவ்வீட்டிற்கு ஈடாக கூட்டுறவு வங்கிகளின்மூலம் மறு அடமானக் கடன் வழங்கப்படும். வயது முதிர்ந்த காலத்தில் குடும்ப உறுப்பினர்களின் ஆதரவில்லாத நிலையில், அவர்கள் சுயமரியாதையுடன் வாழ்வதற்கும், எதிர்பாரா மருத்துவச் செலவினங்களை மேற்கொள்ளுவதற்கும், அவர்களின் இதர அத்தியாவசியத் தேவைகளுக்கும் இக்கடன் பயன்படும்.

14. கூட்டுறவு வங்கிகளின்மூலம் ஊதியம் பெறும் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு வாகனம் வாங்கக் கடன் வழங்கப்படும்

ஊதியம் பெறும் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு கூட்டுறவு வங்கிகள்மூலம் நான்கு சக்கர மற்றும் இருசக்கர வாகனம் வாங்கிட மற்ற வங்கிகளைவிடக் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படும். வாகனத்தின் விலையில் 90% கடனாக வழங்கப்படும். இதுவும் புதிய திட்டம்.

15. கூட்டுறவு வங்கிகளின்மூலம் ஊதியம் பெறும் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்கிட கடன் வழங்கப்படும்

ஊதியம் பெறும் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு கூட்டுறவு வங்கிகள்மூலம் வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்கிட, மற்ற வங்கிகளைவிடக் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படும்.

16. கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறும் உறுப்பினரின் வயது உச்சவரம்பு 60—லிருந்து 70 ஆக உயர்த்தப்படும்

கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறும் உறுப்பினர்களின் தற்போதைய வயது வரம்பு 60–லிருந்து 70 ஆக உயர்த்தப்படுகிறது.

17. பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள் மற்றும் நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ஆகியவை நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையத்தில் உறுப்பினர்களாக இணைக்கப்படும்

தமிழ்நாட்டில் 1,715 பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள் மற்றும் 116 நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் இயங்கி வருகின்றன. பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள் மற்றும் நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்கவும், அவற்றினை மேம்படுத்தவும் தமிழ்நாடு கூட்டுறவு நகர வங்கிகளின் இணையத்தின்கீழ் கொண்டு வரப்படும்.

இரவு 8–20

18. மத்தியக் கூட்டுறவு வங்கி உதவிப் பொது மேலாளர்களுக்கு பொதுப்பணி நிலைத்திறன் நடைமுறைப்படுத்தப்படும்

மத்தியக் கூட்டுறவு வங்கிப் பொது மேலாளர்களுக்கான பொதுப்பணி நிலைத்திறன் அமைப்பு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதேபோன்று, தற்போது மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் உதவிப் பொது மேலாளர்களும் பொதுப்பணி நிலைத்திறன் அமைப்பின்கீழ் கொண்டுவரப்படுவர்.

19. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் செயலாளர் பணியிடத்திற்கான நுழைவுப் பணியிடங்களையும் பொதுப்பணி நிலைத்திறன்கீழ் கொண்டுவரப்படும்

தமிழ்நாட்டில் செயல்படும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் ஏற்படும் முறைகேடுகளைத் தடுக்கவும், திறமையான பணியாளர்களைப் பணியமர்த்துவதன் மூலம் அனைத்து சங்கங்களும் சிறப்பாகச் செயல்படுவதற்கு ஏதுவாகவும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க

செயலாளர்களுக்கான பொதுப்பணி நிலைத்திறன் அமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது பொதுப்பணி நிலைத்திறன் அமைப்பினை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பணியாற்றும் உதவி செயலாளர், முதுநிலை எழுத்தர் மற்றும் எழுத்தர் போன்ற செயலாளர் பணியிடத்திற்கான நுழைவுப் பணியிடங்களும் பொதுப்பணி நிலைத்திறன்கீழ் கொண்டு வரப்படும்.

20. பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்களில் பணிபுரியும் செயலாளர்களுக்கான பணியிடங்கள் பொதுப்பணி நிலைத்திறன்கீழ் கொண்டு வரப்படும்

பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்களில் முறைகேடுகள் நிகழ்வதைத் தடுக்கவும், மாநிலத்திலுள்ள அனைத்து சங்கங்களும் செம்மையாகச் செயல்பட ஏதுவாக, அச்சங்கங்களில் திறமையான ஊழியர்கள் பணிபுரிவதை உறுதிசெய்யவும், பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்களின் செயலாளர்களுக்கான பணியிடங்கள் பொதுப்பணி நிலைத்திறன்கீழ் கொண்டு வரப்படும்.

21. தருமபுரி மற்றும் திருநெல்வேலி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் தனிநபர் பாதுகாப்புப் பெட்டகங்கள் அமைக்கப்படும்

தருமபுரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைமையகத்தில் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக வாடிக்கையாளர் பாதுகாப்புப் பெட்டகம் அமைக்கப்படும்.

திருநெல்வேலி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் வள்ளியூர், பேட்டை, கடையம், வாசுதேவநல்லூர், சிவகிரி மற்றும் கே.டி.சி. நகர் கிளைகளில் தலா ரூ.5.00 இலட்சம் வீதம் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் பாதுகாப்புப் பெட்டகங்கள் அமைக்கப்படும்.

22. திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையில் ஒரு பல்நோக்கு சிற்றரங்கம் கட்டப்படும்

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையில் ரூ.97.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு பல்நோக்கு சிற்றரங்கம் கட்டப்படும்.

23. திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் உற்பத்தி அலகு, கூடுதல் அரவை அலகு மற்றும் எடை மேடை ஆகிய கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும்

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில் தேங்காய் எண்ணெய் சோப் தயாரிக்கும் அலகு அமைக்கப்படும்.

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மல்லசமுத்திரம் கிளையில் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வேப்பம் பிண்ணாக்கு அரவை அலகு அமைக்கப்படும்.

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையில் ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவில் எடை மேடை அமைக்கப்படும்.

24. தருமபுரி மாவட்டம்—அரூர், கிருஷ்ணகிரி மாவட்டம்—ஊத்தங்கரை ஆகிய வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் உலர்களம் மற்றும் அரவை அலகு அமைக்கப்படும்

தருமபுரி மாவட்டம்—அரூர் வேளாண் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் விற்பனைச் சங்கத்தில் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் உலர்களம் அமைத்து சங்கத்தின் கட்டடத்தில் பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.32.00 இலட்சம் மதிப்பீட்டில் மல்லித்தூள் அரவை அலகு அமைக்கப்படும்.

25. இராமநாதபுரம் மாவட்டத்திற்கென தனி மாவட்டக் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையம் துவங்கப்படும்

இராமநாதபுரம் மாவட்டத்திற்கென தனியே கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையம் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் துவங்கப்படும்.

2023 ஏப்ரல் 6] [திரு. கேஆர். பெரியகருப்பன்]

26. கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையக் கட்டடங்கள் பழுதுபார்த்து அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு நவீனமயமாக்கப்படும்

தமிழ்நாட்டில் 22 கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் கற்றல், கற்பித்தல் உபகரணங்கள், கணினி வகுப்பறைகள் மற்றும் தொடர்புடைய வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

மேலும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 13 கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்களில் பழுதுபார்க்கும் மற்றும் நவீனப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

தஞ்சை சாமியப்பா கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையத்திற்கு கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும்.

தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் நாகர்கோவில் மற்றும் சாத்தூர் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்களுக்கு ரூ.29.50 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

27. மயிலாடுதுறை மாவட்டத்தில் புதிய மாவட்டக் கூட்டுறவு ஒன்றியம் அமைக்கப்படும்

மயிலாடுதுறை மாவட்டத்தில் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மாவட்டக் கூட்டுறவு ஒன்றியம் அமைக்கப்படும்.

28. மதுரை மாவட்டம், பாண்டியன் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலையில் உற்பத்தி அலகுகள் அமைக்கப்படும் மற்றும் கிடங்குகள் நவீனமயமாக்கப்படும்

மதுரை மாவட்டம், பாண்டியன் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலையின் உற்பத்தியை அதிகப்படுத்தும் விதமாக பண்டக சாலைக்குச் சொந்தமான அழகப்பன் நகர் மற்றும் எல்லீஸ் நகரில் உள்ள காலி இடங்களில் முறையே ரூ.23.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு செக்கு ஆலையும், ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் ஒரு வறுகடலை தயாரிப்பு அலகும் அமைக்கப்படும்.

மதுரை மாவட்டம், பாண்டியன் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலையின் தலைமை அலுவலகத்தில் கட்டப்பட்டுள்ள மூன்று கிடங்குகள் ரூ.47.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும். இதற்கான மொத்த செலவினம் ரூ.2.20 கோடி ஆகும்.

29. கோயம்புத்தூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலையில் உள்ள 4 கிடங்குகள் பழுது பார்த்து, புதுப்பிக்கப்படும்

கோயம்புத்தூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைக்குச் சொந்தமான 32,000 சதுர அடியில் கட்டப்பட்டுள்ள நான்கு கிடங்குகளும் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் பழுது பார்த்து, புதுப்பிக்கப்படும்.

30. நாகப்பட்டினம் பிரதம கூட்டுறவுப் பண்டக சாலை, மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலையாகத் தரம் உயர்த்தப்படும்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் செயல்பட்டுவரும் நாகப்பட்டினம் பொதுப் பணியாளர்கள் பிரதம கூட்டுறவுப் பண்டக சாலை நாகப்பட்டினம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலையாகத் தரம் உயர்த்தப்படும்.

31. திருவாரூர் மாவட்டம், பாமணியில் துத்தநாக சல்பேட் அலகு அமைக்கப்படும்

துத்தநாகம், தாவரங்களுக்கும் மனிதர்களுக்கும் இன்றியமையாத நுண்ணூட்டச் சத்து ஆகும். தமிழ்நாட்டில் 40–50% மண்ணில் துத்தநாகச் சத்து குறைவாக இருப்பதால் பயிர் உற்பத்தித் திறன் மற்றும் ஊட்டச்சத்து மதிப்பு குறைகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் இதற்கான தேவை அதிகமாக உள்ளதால் திருவாரூர் மாவட்டம், பாமணி கிராமத்தில் துத்தநாக சல்பேட் உற்பத்தி அலகு ஒன்று ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

32. திருவாரூர் மாவட்டம், பாமணி மற்றும் திண்டுக்கல் மாவட்டம், எரியோடு ஆகிய இடங்களில் இரண்டு மண்புழு உர உற்பத்தி அலகுகள் அமைக்கப்படும்

மண்புழு உரம் தயாரிக்க, திருவாரூர் மாவட்டம், பாமணி மற்றும் திண்டுக்கல் மாவட்டம், எரியோடு ஆகிய இடங்களில் தலா ரூ.1.40 கோடி வீதம் ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் 2 உற்பத்தி அலகுகள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஏப்ரல் 6] [திரு. கேஆர். பெரியகருப்பன்]

33. 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டம், கடநாடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் நியாய விலைக் கடை மற்றும் கிடங்குடன்கூடிய புதிய அலுவலகக் கட்டடம் கட்டப்படும்

'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டம், கடநாடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் ரூ.78.00 இலட்சம் மதிப்பீட்டில் நியாய விலைக் கடை மற்றும் கிடங்குடன்கூடிய புதிய அலுவலகக் கட்டடம் கட்டப்படும்.

34. கூட்டுறவு நகர வங்கி, நாணய வங்கி மற்றும் உழவர் பணி கூட்டுறவுக் கடன் சங்கங்களின் கட்டடங்கள் பழுதுபார்த்து, நவீனமயமாக்கப்படும்

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பீப்பிள்ஸ் கூட்டுறவு நகர வங்கி கட்டடம் ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள பூபதிராஜா கூட்டுறவு நாணய வங்கிக் கட்டடம் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் பழுது நீக்கப்பட்டு புதுப்பிக்கப்படும்.

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள திருப்புவனம் உழவர் பணி கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டடம் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.

35. தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கிக்கு ஐந்து புதிய கிளைகள் துவங்கப்படும்

தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியின் புதிய கிளைகள், நமது ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. எபினேசர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கொருக்குப்பேட்டை மற்றும் அம்பத்தூர், குன்றத்தூர், தாம்பரம் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் துவங்கப்படும்.

36. விருதுநகர், நாமக்கல், சேலம், திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் பாதுகாப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்

விருதுநகர், நாமக்கல், சேலம், திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் உள்ள 33 கூட்டுறவுச்

சங்கங்களில் ரூ.2.23 கோடி மதிப்பீட்டில் பாதுகாப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

37. திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள சிறுமலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் புதிய உலர்களம் அமைக்கப்படும்

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள சிறுமலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் ஓர் உலர்களம் அமைக்கப்படும்

38. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கு இரண்டு புதிய கிளைகள் துவங்கப்படும்

தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கு தாம்பரம் கிழக்கு மற்றும் சைதாப்பேட்டை பகுதிகளில் 2 புதிய கிளைகள் துவங்கப்படும்.

39. கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்பட்டுவரும் 1,500 நியாய விலைக் கடைகள் பொலிவூட்டப்படும்

கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்பட்டுவரும் 1,500 நியாய விலைக் கடைகள் பொலிவூட்டப்படும்.

40. கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்பட்டு வரும் 5,000 நியாய விலைக் கடைகளில் ISO 9001 தரச் சான்றிதழ் பெறப்படும்

கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் முழுமையான தர மேலாண்மையினை உறுதி செய்யும்பொருட்டு 5,000 நியாய விலைக் கடைகளின் தரத்தினை மேம்படுத்தி, தர மேலாண்மை தொடர்பான ISO 9001 தரச் சான்றிதழ் பெறப்படும்.

41. தொடக்கக் கூட்டுறவுப் பண்டக சாலைகள், நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களின் அலகுகளுக்கு ISO 9001 தரச் சான்றிதழ் பெறப்படும்

தமிழ்நாடு முழுவதும் செயல்படும் 40 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகள், 300 தொடக்கக் கூட்டுறவுப் பண்டக சாலைகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களின்

2023 ஏப்ரல் 6] [திரு. கேஆர். பெரியகருப்பன்]

அலகுகளான 54 பெட்ரோல் பங்குகள், 26 எரிவாயு உருளை விற்பனை நிலையங்கள், 380 கூட்டுறவு மருந்தகங்கள், 113 வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் 25 கூட்டுறவு அச்சகங்கள் ஆகியவற்றின் தரத்தினை மேம்படுத்தி ISO 9001 தரச் சான்றிதழ் பெறப்படும்.

42. திருவள்ளூர் மாவட்டம், திரூரில் ஒரு கூட்டுறவு அருங்காட்சியகம் அமைக்கப்படும்

இந்தியாவிலேயே முதல் கூட்டுறவுக் கடன் சங்கம் 1904 ஆம் ஆண்டு இன்றைய திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள திரூரில் தோற்றுவிக்கப்பட்டது.

திரூரில் கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டடம் புதுப்பிக்கப்பட்டு, அதனருகே ஒரு கூட்டுறவு அருங்காட்சியகம் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

43. நபார்டு வங்கியின் கடன் உதவியுடன் 2,000 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பல்நோக்கு சேவை மையங்களாக மாற்றப்படும்

நபார்டு வங்கியின் கடன் உதவியுடன் 2,000 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பல்நோக்கு சேவை மையங்களாக மாற்றப்படும்.

44. 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழ் திருப்பூர் மாவட்டம், செம்மாண்டம்பாளையத்திலுள்ள பழுதடைந்த நியாய விலைக் கடைக்குப் பதிலாக புதிய நியாய விலைக் கடை கட்டடம் கட்டப்படும்

'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழ் திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியம், காரிங்கராயன்பாளையம் பகுதி செம்மாண்டம்பாளையத்திலுள்ள பழுதடைந்த நியாய விலைக் கடைக்குப் பதிலாக, ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக் கடை கட்டடம் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஏறத்தாழ 171 வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களில் அவர்கள்

குறிப்பிட்டிருக்கக்கூடிய பலவற்றிற்கு நான் என்னுடைய உரையில் பதிலளித்திருக்கிறேன். எஞ்சியவற்றையும் கருத்தில்கொண்டு, வெகுவிரைவில் அவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்கான வழிவகைகளைத் துறையின் மூலமாக மேற்கொள்வோம் என்பதைச் சொல்லி, இந்தப் பதிலுரையை ஏற்று, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இத்துறை செம்மையாகவும், சிறப்பாகவும் செயல்படுவதற்குக் காரணமாக இருந்த இத்துறையின் கடைநிலை ஊழியர்கள் உட்பட அனைத்து அலுவலர்களுக்கும், துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் திரு. J. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப. அவர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. அ. சண்முக சுந்தரம், இ.ஆ.ப. அவர்களுக்கும், தலைமைச் செயலாளர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிச் செயலாளர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் அனைவருக்கும் மற்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

இரவு 8–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(ஈ) கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4,983,37,05,000/–, மூலதனக் கணக்கில் ரூ.6,000/– மற்றும்

கடன் கணக்கில் ரூ.2,00,03,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)
மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(உ) கோரிக்கை எண் 13-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.10,975,87,67,000/–, மூலதனக் கணக்கில் ரூ.301,14,09,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)
மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 10–4–2023 *(திங்கட்கிழமை)* காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 8–27 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

79. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள். [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39(2) மற்றும் 40(7) பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

147. மானியக் கோரிக்கை எண் 27–தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை (சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

148. மானியக் கோரிக்கை எண் 27–தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை (பெருந்தொழில்) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

149. மானியக் கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

150. மானியக் கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

151. மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

2023 ஏப்ரல் 6]

152. மானியக் கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

153. 'வேளாண்மை–உழவர் நலத் துறையின் சாதனைகள் 2022–2023' என்கிற சிறுநூல். (தமிழ்)

154. வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

155. கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

156. மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

157. பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-I

(127 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 27-தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பெருந்தொழில் கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024

முன்னுரை

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்."

பிறப்பினால் அனைவரும் சமம். செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு காண முடியும் என்றார் வள்ளுவப் பெருந்தகை.

2022-2023 ஆம் நிதியாண்டில், தொழில் துறை, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மாநிலத்தில் முதலீடு மேற்கொள்வோர் மற்றும் தொழில் முனைவோர்க்கான உகந்த சூழ்நிலையை உருவாக்குதல், உற்பத்தி மற்றும் தொழில் நிறுவனங்கள், வர்த்தகம் மற்றும் வணிகம் ஆகியவற்றில் முதலீடு மேற்கொள்வோர்க்கு ஆதரவுச் சேவைகளை அளித்தல் போன்றவற்றில், இத்துறை மேற்கொண்டு வரும் மேலான பணிகளை இப்பெயர் முழுவதுமாக பிரதிபலிப்பதாக உள்ளது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு அரணாக விளங்கும் தமிழ்நாடு, அகில இந்திய அளவில் இரண்டாவது பெரிய பொருளாதாரமாகவும் விளங்குகிறது. இதன்மூலம், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு மிகப் பெரிய பங்களிப்பினை தமிழ்நாடு அளித்து வருகிறது. 13.74% வளர்ச்சியுடன் (நடப்பு விலைகளில்), தமிழ்நாடு 2022-23-ல், 23.49 இலட்சம் கோடி ரூபாய் உற்பத்திக்கு வழிவகுத்து உள்ளது. 2015-19 நிதியாண்டுகளில் அடைந்த அதே வளர்ச்சி விகிதத்தை எட்டியுள்ளதுடன், 2021-22 நிதியாண்டில், 7.99% வளர்ச்சி அடைந்துள்ளதன்மூலம், கோவிட் தொற்றினால் ஏற்பட்ட சரிவை, தமிழ்நாடு தவிர்த்துள்ளது தெளிவாகிறது.

38,837 தொழிற்சாலைகள் கொண்டு, தமிழ்நாடு இந்திய அளவில் முதலிடம் வகிக்கிறது. இதன்மூலம், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 11.04% மொத்த மதிப்புக் கூட்டலை தமிழ்நாடு வழங்கியுள்ளது. உலகத்தரம் வாய்ந்த துறைமுக உட்கட்டமைப்பின் காரணமாக, அகில இந்திய அளவில், தமிழ்நாடு மூன்றாவது பெரிய ஏற்றுமதியாளராகத் திகழ்கிறது. ஏப்ரல் 2022–ஜனவரி 2023 காலகட்டத்தில், இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில், தமிழ்நாட்டின் பங்களிப்பு மட்டும் 8.96% ஆகும். கடந்த ஆண்டை விடவும், இது 7.57% வளர்ச்சி என்பது குறிப்பிடத்தக்க ஒன்று.

2030-ம் ஆண்டிற்குள், தமிழ்நாட்டினை ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்றிட வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒரு தொலைநோக்குப் பார்வையுடனான இலக்கினை நிர்ணயித்துள்ளார்கள். தெற்காசியாவிலேயே முதலீட்டாளர்களுக்கு மிகவும் உகந்த முதலீட்டு இடமாக தமிழ்நாட்டை நிலை நிறுத்த வேண்டும் என்ற நோக்கம் ஏற்கெனவே தொழில் துறையில் மிக வலுவான நிலையில் உள்ள நமது மாநிலத்தை மேலும் வலுப்படுத்துவது ஆகிய காரணங்களினால், இந்த இலக்கிற்கு அணுகுப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் கிட்டத்தட்ட நான்கில் ஒரு பங்களிக்கும் உற்பத்தித் துறை, 2030-31 ஆம் ஆண்டிற்குள் US $ 250 பில்லியன் அளவிற்கு ஏற்பட உள்ள பொருளாதார வளர்ச்சி நடவடிக்கைகளை முன்னின்று இயக்கி வருகின்றது.

அனைத்துத் துறைகளுடனும் இணைந்து பணியாற்றி, ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொண்டதன் பயனாக, முந்தைய ஆண்டு 14 ஆம் இடத்தில் இருந்த தமிழ்நாடு, 2022 ஆம் ஆண்டில் ஒரு மாபெரும் முன்னேற்றம் கண்டு, 3 ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்த “நான் முதல்வன்” திட்டமானது, தொழில் துறையில் ஏற்பட உள்ள எதிர்கால மாற்றங்களுக்கு ஏற்ப பணியாளர்களை உருவாக்குவதற்கான ஒரு பாதையை அமைத்துக் கொடுத்துள்ளது. இத்திட்டத்தில் ஏறக்குறைய 120-க்கும் மேற்பட்ட தொழிலகங்கள் இணைந்துள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு, அதாவது உற்பத்தித் துறையில் சுமார் ரூபாய்

2023 ஏப்ரல் 6]

23 இலட்சம் கோடி முதலீட்டை ஈர்த்திடவும், 46 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், இவ்வாறான நடவடிக்கைகள் எல்லாம், தொழில்களை ஈர்த்திட தேவைப்படும் கட்டமைப்புகளை அளித்து உதவுகிறது.

பொருளாதாரத்தின் செயல்பாடு, குறிப்பாக கூற வேண்டுமானால், 2022-23 ஆம் ஆண்டில், உற்பத்தித் துறையின் செயல்பாடு, 2030 ஆம் ஆண்டிற்குள் இந்த 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் இலக்கினை நாம் அடைந்திடுவோம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. அதுமட்டுமல்ல, வரவிருக்கும் ஆண்டுகளில், இத்தகைய விரைவான வளர்ச்சியை உந்துவதற்கு, வணிக சீர்திருத்தங்களை தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல், அதிக அளவில் ஆயத்தநிலை/தயார்நிலை தொழிற்சாலைகளை அமைத்தல், புத்தாக்கம் மற்றும் முதலீடுகள் போன்ற நடவடிக்கைகளால், உள்ளீடுகளை நியாயமான விலைகளில் வழங்குதல் மற்றும் தொழிலாளர்களை எதிர்காலத் தேவைக்கு ஏற்ப தயார் செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

1. கண்ணோட்டம்

தொழில் துறையின் ஆண்டு கணக்கெடுப்பில் (ASI) வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, தமிழ்நாடு தொடர்ந்து அதிக தொழில்மயமான மாநிலமாக முன்னணி இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. 2019-20 ஆம் ஆண்டிற்கான ASI-ன் சமீபத்திய அறிக்கையின்படி, தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் (38,837) மற்றும் அங்கு பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் (26.63 இலட்சம் தொழிலாளர்கள்), தமிழ்நாடு முதலாவது இடத்தைப் பிடித்துள்ளது. மொத்த உற்பத்தி (ரூ.9.27 இலட்சம் கோடி), நிகர மதிப்பு கூட்டல் (ரூ.1.32 இலட்சம் கோடி) மற்றும் முதலீட்டு மூலதனம் (ரூ.4.3 இலட்சம் கோடி) போன்ற அளவீடுகளில் மாநிலம் மூன்றாவது இடத்தில் உள்ளது. நிகர மதிப்பு மற்றும் அதிக அளவில் வேலைவாய்ப்பு ஆகிய காரணிகளுக்கு 14.3% பங்களிப்பு அளிப்பதன்மூலம், திறன் மிகுந்த பொருளாதாரம் உள்ள மாநிலமாக தமிழ்நாடு தொடர்ச்சியாக விளங்கி வருகிறது.

[2023 ஏப்ரல் 6

அட்டவணை 1 : ASI 2019-2020 இன்படி – முதல் 5 மாநிலங்கள்

(மதிப்பு புள்ளிவிவரங்கள் ரூ. இலட்சம் கோடியில் மற்றும் இதர புள்ளிவிவரங்கள் எண்ணிக்கையில்)

(நிகர மதிப்பு கூட்டப்பட்ட இறங்கு வரிசையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது)

மாநிலங்கள்	தொழிற்சாலைகள்	நிரந்தர மூலதனம்	முதலீடு செய்யப்பட்ட மூலதனம்	ஈடுபட்ட மொத்த நபர்கள்	தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம்	மொத்த உற்பத்தி	நிகர மதிப்பு உற்பத்தி	மொத்த உற்பத்திக்கான நிகர மதிப்பு சதவிகிதம்
தமிழ்நாட்டின் தரவரிசை	1	4	3	1	1	3	3	
தமிழ்நாடு	38,837	3.07	4.50	26,63,069	0.35	9.27	1.32	14.3%
குஜராத்	28,479	7.49	9.62	20,68,743	0.28	16.30	1.90	11.7%
மகாராஷ்டிரா	25,610	4.23	6.23	20,38,255	0.32	12.40	1.78	14.4%
கர்நாடகா	14,169	2.25	3.11	10,81,116	0.18	5.57	0.88	15.8%
உத்தரப்பிரதேசம்	16,184	1.53	2.48	11,30,778	0.13	5.63	0.72	12.9%

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு பல்வகைப்படுத்தப்பட்ட பொருளாதாரமாக விளங்குவதோடு மட்டுமின்றி, மோட்டார் வாகனம் மற்றும் மோட்டார் வாகன உதிரிபாகங்கள், உணவுப் பொருட்கள், ஜவுளி, ஆயத்த ஆடை, தோல் பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் பொறியியல் சாதனங்கள், மின்னணுவியல், உலோகப் பொருட்கள், இரசாயனங்கள் மற்றும் இரப்பர் பொருட்கள் போன்ற முக்கிய உற்பத்தித் துறைகளில் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. இத்துறைகள் மட்டும், தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தியில் கிட்டத்தட்ட 80% பங்களிப்பு வழங்குகின்றன.

2023 ஏப்ரல் 6]

அட்டவணை 2 : ASI 2019-2020 இல் தமிழ்நாட்டின் முன்னணித் துறைகள்

(மதிப்பு புள்ளிவிவரங்கள் ரூ. கோடியில் மற்றும் இதர புள்ளிவிவரங்கள் எண்ணிக்கையில்)

துறை	தமிழ்நாடு தரவரிசை	உற்பத்தி	தமிழ் நாட்டின் தரவரிசை (முதலீட்டு மூலதனம்)	முதலீட்டு மூலதனம்	இந்தியாவில் மூலதனத்தில் தமிழ்நாட்டின் பங்கீட்டு சதவிகிதம்
மோட்டார் வாகனம் மற்றும் மோட்டார் வாகன உதிரிபாகங்கள்	1^{st}	2,24,241.68	1^{st}	93,646	24.58
ஆயத்த ஆடைகள்	1^{st}	53,148.76	2^{nd}	20,876	31.66
தோல் மற்றும் தொடர்புடைய பொருட்கள்	1^{st}	16,607.39	2^{nd}	6,389	23.63
ஜவுளி	2^{nd}	85,823.55	2^{nd}	44,045	18.84
இயந்திரங்கள்	2^{nd}	68,815.43	2^{nd}	36,000	18.82
கணினி, மின்னணுவியல் மற்றும் ஒளியியல் தயாரிப்புகள்	2^{nd}	39,182.17	2^{nd}	10,286	17.2
கட்டுருவாக்கப்பட்ட உலோக பொருட்கள்	3^{rd}	25,790.06	2^{nd}	15,083	13.41
இரப்பர் மற்றும் பிளாஸ்டிக்	3^{rd}	35,718.54	3^{rd}	18,468	11.83
இரசாயனங்கள்	4^{th}	40,912.96	5^{th}	18,885	4.44

[2023 ஏப்ரல் 6

துறை	தமிழ்நாடு தரவரிசை	உற்பத்தி	தமிழ் நாட்டின் தரவரிசை முதலீட்டு மூலதனம்	முதலீட்டு மூலதனம்	இந்தியாவில் மூலதனத்தில் தமிழ்நாட்டின் பங்கீட்டு சதவிகிதம்
பதிவு செய்யப்பட்ட ஊடகங்களை அச்சிடுதல் மற்றும் மறுவடிவமைத்தல்	3rd	4,903.46	3rd	2,316	11.65
காகிதம் மற்றும் காகித தயாரிப்புகள்	4th	10,452.85	4th	8,291	9.82

மாநிலத்தின் மொத்த மதிப்பு கூட்டல், உற்பத்தித் துறையின் பங்களிப்பு 30% ஆக இருந்திட வேண்டும் என்ற நிலையில், 2021-22 ஆம் நிதியாண்டில், 24.47% ஆக இருக்கும் உற்பத்தித் துறையின் பங்கு, இவ்விலக்கை நோக்கி தமிழ்நாடு சீராக சென்று கொண்டிருக்கிறது என்பதை உறுதி செய்கிறது. முந்தைய ஆண்டைவிட, ரூ.2.93 இலட்சம் கோடி ஈட்டியுள்ளதன்மூலம், 2021-22-ல் 10.45% வளர்ச்சியினை உற்பத்தித் துறை பதிவு செய்துள்ளது.

மேலும், ஏப்ரல்-அக்டோபர் 2022 காலகட்டத்தில் தமிழ்நாட்டின் தொழில் உற்பத்திக் குறியீடு (IIP) 152.4 ஆக உள்ளது. சென்ற ஆண்டில் இதே காலகட்டத்தில் இருந்த அளவீடுகளை விட இது 17.7% அதிகம் ஆகும். இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், அகில இந்திய அளவில், இக்குறியீடு 134.3 மட்டுமே. அகில இந்திய தொழில் உற்பத்திக் குறியீட்டோடு ஒப்பிடுகையில், தமிழ்நாட்டின் வளர்ச்சி 5.3% ஆக உள்ளது.

இறுதியாக, பணியமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை (22,09,217) மற்றும் வழங்கப்படும் ஊதிய அளவு (34,962 கோடி ரூபாய்) ஆகிய குறியீடுகளில், தமிழ்நாடு முதலிடம் பிடித்துள்ளது. இது, சிறப்பான வாழ்க்கைத் தரம் மற்றும் சீரான வளர்ச்சியை

2023 ஏப்ரல் 6]

உறுதிப்படுத்துதல் ஆகியவற்றில், தமிழ்நாடு மிகவும் சிறந்து விளங்குவதை உறுதிப்படுத்துகிறது. மேலும், இந்தியாவிலேயே தொழிற்சாலையில் பணிபுரியும் அதிக பெண் தொழிலாளர்களைக் கொண்ட மாநிலமாகவும் தமிழ்நாடு விளங்குகிறது. அகில இந்திய அளவில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களில், 43% பங்களிப்பை தமிழ்நாடு வழங்குகின்றது.

2. முதலீடுகள்

130-க்கும் மேற்பட்ட ஃபார்ச்சூன் 500 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன. உலக அளவில் உபயோகப்படுத்தப்படும் பல பொருட்கள் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன. பி.எம்.டபிள்யூ ஹுண்டாய், டெய்ம்லர், டிவிஎஸ், ரேனால்ட் - நிஸ்ஸான், சிட்ரோன், டெல், HP, சாம்சங், மிச்செலின், எம்.ஆர்.எஃப், டான்ஃபாஸ், வெஸ்டாஸ், ஹிட்டாச்சி, L&T போன்ற உலகப் புகழ்பெற்ற நிறுவனங்கள் தங்கள் உற்பத்தி மையங்களை தமிழ்நாட்டில் நிறுவியுள்ளன. அது மட்டுமின்றி, ஆப்பிள் நிறுவனத்தின் ஒப்பந்த உற்பத்தியாளர்களான ஃபாக்ஸ்கான், பெகட்ரான் மற்றும் டாடா எலக்ட்ரானிக்ஸ் ஆகிய நிறுவனங்கள்கூட, தமிழ்நாட்டில் தனது உற்பத்தித் திட்டங்களை நிறுவியுள்ளன.

“இந்தியாவின் மின் வாகன தலைநகரம்” என்ற பெருமைமிகு அடைமொழியையும் தமிழ்நாடு பெற்றுள்ளது. ஓலா எலெக்ட்ரிக், ஏத்தர் எனர்ஜி, சிம்பிள் எனர்ஜி, ஸ்விட்ச் மொபிலிட்டி போன்ற மிகப் பெரும் மின் வாகன உற்பத்தி நிறுவனங்கள், தமிழ்நாட்டில் தனது உற்பத்தி மையங்களை நிறுவியுள்ளன. இத்துறையில் நமது நிலையை மேலும் வலுப்படுத்திக் கொள்ளவும், நமது உற்பத்தித் திறனை மேலும் அதிகரித்திடுவதற்கும் ஏதுவாக, சமீபத்தில், “பிப்ரவரி 2023 மாதத்தில் “தமிழ்நாடு மின் வாகனக் கொள்கை 2023” வெளியிடப்பட்டுள்ளது. இதன்மூலம், முதலீடுகளை பெருமளவில் ஈர்த்து, இத்துறையில் நமது முன்னணி நிலையை மேலும் வலுப்படுத்த தமிழ்நாடு விழைகிறது.

மே 2021 முதல், ரூபாய் 2,70,020 கோடி முதலீடு மற்றும் 3,89,651 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில், 221 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

[2023 ஏப்ரல் 6

அன்னிய நேரடி முதலீடுகளைப் பொறுத்தமட்டில், 2022-23 ஆம் நிதியாண்டின் முதல் அரையாண்டில் 265 திட்டங்கள் மூலமாக, 1.06 இலட்சம் கோடி முதலீடுகளை தமிழ்நாடு ஈர்த்துள்ளது என்று "ப்ராஜெக்ட்ஸ் சர்வே" நிறுவனம் தெரிவிக்கின்றது. ஏப்ரல் 2021 முதல், 34,668 கோடி ரூபாய் (அதாவது 4,567 மில்லியன் $) அளவிற்கான அன்னிய நேரடி முதலீடுகளை, தமிழ்நாடு ஈர்த்துள்ளது.

3. உள்கட்டமைப்பு

வருங்கால முதலீடுகளுக்கு தொழிற்சாலைகளுக்கு தேவையான நிலம் தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்வதற்காகவும், வரவிருக்கும் மற்றும் முன்மொழியப்பட்ட தொழில் துறை பூங்காக்களுக்காக SIPCOT நிறுவனம் 45,000 ஏக்கர் நில வங்கியை உருவாக்கி வருகிறது. தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டங்களை மையமாகக் கொண்டு நில வங்கிகள் உருவாக்கப்படுகின்றன. வரும் காலங்களுக்கு ஏற்றவாறு தொழில் பூங்காக்களை நிறுவுவதற்கு தேவையான சிறப்பு முயற்சிகளை சிப்காட் நிறுவனம், மேற்கொண்டு வருகிறது இவ்வகையில் 2022-23-ல் கணிசமான முன்னேற்றத்தையும் கண்டுள்ளது:-

- மெகா ஜவுளி பூங்கா/ஒருங்கிணைந்த ஆயத்த ஆடை பூங்கா-விருதுநகர் இ.குமாரலிங்கபுரத்தில் பிரதம மந்திரி MITRA பூங்கா அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- தூத்துக்குடியில் சர்வதேச அறைகலன் பூங்கா -பெருந்திட்டப் பணிகளுக்கான ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், 2 நிறுவனங்களுக்கு நில ஒதுக்கீடு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.
- ஒரகடத்தில் மருத்துவ சாதனங்கள் பூங்கா - EMI/EMC கட்டடம் கட்டுதல் மற்றும் உட்புற சாலைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அணுகுச் சாலை அகலப்படுத்தும் பணி கிட்டத்தட்ட முடிவடையும் தருவாயில் உள்ளது. மேலும், 15 நிறுவனங்களுக்கு நில ஒதுக்கீடு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிறுவனங்கள் விரைவில் கட்டுமானப் பணிகளைத் தொடங்க உள்ளன.

2023 ஏப்ரல் 6]

- *மணப்பாறை, திண்டிவனம் மற்றும் தேனி ஆகிய இடங்களில் மெகா உணவுப் பூங்காக்கள்- மணப்பாறை உணவுப் பூங்காவைப் பொறுத்தமட்டில், உள்கட்டமைப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன, மற்ற இரண்டு உணவுப் பூங்காக்களுக்கான பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.*

- *மின் வாகனப் பூங்கா மற்றும் வருங்கால நகர்திறன் பூங்கா - மாநல்லூரில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. சூளகிரியில் வருங்கால நகர்திறன் பூங்கா அமைப்பதற்கான கருத்தியலான பெருந்திட்டம் முடிவடைந்துள்ளது.*

- *மின்னணுவியல் உற்பத்தித் தொகுப்பு - மாநல்லூர் மற்றும் பிள்ளைப்பாக்கத்தில் உள்ள மின்னணு உற்பத்தித் தொகுப்புகள் அமைப்பதற்காக* MEITY*-ன்* EMC *2.0 திட்டத்தின்கீழ் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.*

- *மிகப்பெரும் காலணி மற்றும் துணைப் பொருட்கள் தொகுப்பு - ஒன்றிய அரசின் தொழில் வளர்ச்சி மற்றும் உள்நாட்டு வர்த்தக வளர்ச்சித் துறையின்கீழ் இந்திய காலணிகள் மற்றும் தோல் மேம்பாட்டுத் திட்டத்திற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.*

4. தேசிய அங்கீகாரம்

தேசிய மற்றும் சர்வதேச அளவில் மேற்கொள்ளப்படும் தரவரிசைகளில், தமிழ்நாடு எப்பொழுதுமே சிறந்த மற்றும் முன்னணி மாநிலமாக செயல்பட்டு வருகிறது.

- *"இந்தியா டுடே" நாளிதழ் வெளியிட்ட 2022 ஆம் ஆண்டிற்கான மாநிலங்களுக்கான தரவரிசையில், சிறப்பாக செயல்படும் மாநிலமாக தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டுள்ளது.*

- *இந்திய புத்தாக்கக் குறியீட்டின்படி, மனித மூலதன உருவாக்கம், அறிவுசார் ஊடுபரவல் (*Knowledge diffusion*) மற்றும் அறிவுசார் வெளியீடு (*Knowledge output*) போன்ற குறியீடுகளில், தமிழ்நாடு சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலமாக விளங்குகிறது.*

- ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முதலீடுகளுக்கான மையம் என்று குறிப்பிடப்படும் வகையில், தமிழ்நாடு இத்துறையில் அதிவேக வளர்ச்சியினை அடைந்து வருகின்றது. மாநிலங்களின் தரவரிசையில், தமிழ்நாடு மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளது.
- மின்னணுவியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையின் முதலீடுகளுக்கான, முதலீட்டிற்கு உகந்த இடமாக திகழ்வதன்மூலம், சென்னை முதலீட்டாளர்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றது.
- அறிவுசார் பகுப்பாய்வுக் குழு நிறுவனமான Care Ratings நிறுவனத்தின் ஒரு அங்கமான “கேர்எட்ஜ் (Care edge) நிறுவனம்”, செயல்திறன் கொண்ட மாநிலங்களின் (பெரிய மாநிலங்களில்) தரவரிசையில், 2023 ஆம் ஆண்டில், 3-வது சிறப்பாக செயல்படும் மாநிலம் என்று தமிழ்நாட்டை வகைப்படுத்தி உள்ளது.
- 2021-22 நிதியாண்டில் 1.72 இலட்சம் கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து, அகில இந்திய அளவில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தைப் பிடித்திருப்பதாக, மும்பையைச் சேர்ந்த ப்ராஜெக்ட்ஸ் டுடே நிறுவனம் தெரிவித்துள்ளது.
- பொது விவகார மையம் (Public Affairs Centre) வெளியிட்ட, பொது விவகாரங்கள் குறியீடு (Public Affairs Index) 2021-ன்படி, ஒட்டுமொத்த செயல்திறன் மற்றும் நிலைத்தன்மையின் அடிப்படையில் தமிழ்நாடு இரண்டாம் இடம் பிடித்துள்ளது.
- பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம் ஆகியவைகளுக்கான தீர்வுகள் வழங்கும் ஒரு நிறுவனமான “அவதார்” என்ற தனியார் நிறுவனம், ஆய்வு மேற்கொண்டு, 10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட நகரங்களில், பெண்கள் பணிபுரிவதற்கு உகந்த நகரங்களுக்கான தரவரிசையில், முதல் இடத்தை சென்னையும், 9-வது இடத்தை கோயம்புத்தூரும், 10-வது இடத்தை மதுரையும் பிடித்துள்ளதாகவும், 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட நகரங்களில், பெண்கள் பணிபுரிவதற்கு உகந்த நகரங்களுக்கான தரவரிசையில்,

திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, சேலம் மற்றும் திருப்பூர் ஆகிய நகரங்கள் முதல் 5 இடங்களைப் பிடித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

- நிதி ஆயோக்கின் SDG இந்தியா குறியீடு – 2021-ல், தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. இலக்கு 9 தொழில், கண்டுபிடிப்பு மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றிலும், 2-வது இடத்தைப் பெற்றுள்ளது.

5. நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG)

நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goal) என்பது ஐக்கிய நாடுகளின் புதிய முன்னெடுப்பாகும். அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய இந்த நிலையான வளர்ச்சியின் மூன்று கூறுகளாக இருப்பவை சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் பொருளாதாரம். இதனைச் சரியான முறையில் செயல்படுத்தி 2030-க்குள், 17 இலக்குகள் மற்றும் 169 குறிக்கோள்களை அடைய முற்படவேண்டும். பொருளாதார வளர்ச்சி, நிலையான தொழில்மயமாக்கல், மாநிலத்தில் வேலைவாய்ப்பினை உருவாக்குதல் ஆகியவற்றின்மூலம் நிலையான வளர்ச்சியை ஏற்படுத்துவதில் தொழில் துறையின் பெரும் பங்களிப்பு பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தொழில்கள், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் நோக்கங்களுக்கும், இலக்குகள் 8 மற்றும் 9 ஆகியவற்றுக்கும் இடையே ஒரு கருத்தியலான நேரடித் தொடர்பு உள்ளது. பெரும்பாலான மற்ற இலக்குகளுக்கு மறைமுகமான தொடர்பு உள்ளது. பன்னிரெண்டு குறிக்கோள்களைக் கொண்ட இலக்கு 8, நிலையான பொருளாதார வளர்ச்சி, உற்பத்தித்திறனை அதிகப்படுத்துதல், தொழில்நுட்ப ஆராய்ச்சி, வேலைவாய்ப்பினை உருவாக்குதல், தொழில்முனைவோரை அங்கீகரித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டது. எட்டு குறிக்கோள்களைக் கொண்ட இலக்கு 9, தொழில், புத்தாக்கம் மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றுடன் தொடர்புடையது. இந்த இலக்கு நிலையான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை அடைய முதலீடு, தொழில்நுட்ப கண்டுபிடிப்பு மற்றும் தகவல் தொடர்பு அமைப்புகளை ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டது.

தொழில்கள், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையானது, பல்வேறு வளர்ச்சி சார்ந்த கொள்கைகளை

வகுத்துள்ளது, மேலும், தற்போதுள்ள கொள்கைகளை மேம்படுத்துவதுடன், உற்பத்தி மற்றும் சேவைகள் போன்ற வரவிருக்கும் துறைகளிலும் கவனம் செலுத்துகிறது. நிலையான வளர்ச்சி இலக்குகளின் (SDG) குறியீடுகளிலும் மற்றும் பிற குறியீடுகளிலும் மாநிலம் முன்னணியில் உள்ளது. வரும் ஆண்டுகளில், நடைமுறையிலிருக்கும் திட்டங்கள், செயல்முறை உத்திகள் ஆகியன நிலையான வளர்ச்சி இலக்குகளை 2030-ல் அடைய உத்வேகம் தருவதாக இருக்கும். மாநிலத்தின் அடித்தட்டு மக்களை சென்றடையும் வகையில் பொருளாதார வளர்ச்சி சார்ந்த உத்திகள் மற்றும் செயல்படுத்தப்படும் திட்டங்கள், யாரையும் பின்தங்க விட்டுவிடாது (LNOB), அனைவருக்குமான வளர்ச்சியினை இலக்காகக் கொண்டு அமையும்.

1. வழிகாட்டி நிறுவனம்

வழிகாட்டி நிறுவனம் (முன்பு தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்), தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீட்டுத் திட்டங்களை ஈர்ப்பதற்காக 1992-ல் இலாப நோக்கமற்ற சங்கமாகத் தொடங்கப்பட்டது. நாட்டிலேயே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் ஆதரவுச் சேவைகள் அளிப்பது என்ற குறிக்கோளுடன் அமைக்கப்பட்ட முதல் நிறுவனமாக வழிகாட்டி நிறுவனம் விளங்குகிறது. இந்நிறுவனம் தொடங்கிய நாள் முதல், பல்வேறு தொழில் திட்டங்கள் வாயிலாக 6.5 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கும் மேலான முதலீடுகளை வெவ்வேறு துறைகளில் ஈர்த்துள்ளது. இவற்றுள், 2021-22 மற்றும் 2022-23 நிதியாண்டுகளில் மட்டுமே 2.7 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. முதலீடு ஊக்குவிப்பு மற்றும் ஆதரவுச் சேவைகள் அளிப்பு என்பதையும் தாண்டி, வழிகாட்டி நிறுவனம், முதலீட்டாளர்கள் நிறுவியுள்ள திட்டங்களுக்கு எந்நிலையிலும் வழிகாட்டுதல்கள் அளித்திடும் வகையில், படிப்படியாக, பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது. தொழிற்சாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களை இணைத்து வைத்து, திறன் வளர்ச்சி மற்றும் பயிற்சிகள் அளித்து, திறன்மிகு பணியாளர்களைத் தொழிலகங்கள் பணியமர்த்திக் கொள்ள வசதிகள் செய்து தரும் பணியையும் இந்நிறுவனம் மேற்கொள்கிறது.

தமிழ்நாட்டில் முதலீடுகளை ஊக்குவிப்பதிலும், ஆதரவுச் சேவைகளை அளிப்பதிலும் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த முயற்சிகளை அங்கீகரிக்கும் வகையில், 2022 ஆம் ஆண்டைய,

2023 ஏப்ரல் 6]

*வருடாந்திர முதலீட்டாளர்கள் கூட்டத்தில் (*Annual Investors Meeting-AIM *2022), "ஆசியா ஓசியானியா மண்டலத்தின் சிறந்த முதலீட்டு ஊக்குவிப்பு முகவர்" என்ற விருதை வழிகாட்டி நிறுவனம் வென்றுள்ளது.*

1.1 கொள்கை இலக்கு

மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை மேலும் மேம்படுத்தும் நோக்கத்துடனும், தொழில் முனைவோர்க்குத் தேவைப்படும் தகவல்களை அளிப்பதற்கும், முதலீட்டாளர்கள் தொழில் துவங்க தேவையான ஆதரவுச் சேவைகளை வழங்குவதற்கும் முகவாண்மை நிறுவனமாக, வழிகாட்டி நிறுவனம் நிறுவப்பட்டது. தமிழ்நாடு வணிகம் புரிதலை எளிதாக்குதல் சட்டம், 2018-ன்படி, பெரிய தொழில் நிறுவனங்களுக்கு, ஒற்றைச் சாளர முறையில் பல்வேறு துறை/நிறுவனம் சார்ந்த தொழில் அனுமதிகளைக் குறிப்பிட்ட கால வரம்பிற்குள் வழங்குவதற்கும், சிறப்பு ஊக்கத் தொகுப்புச் சலுகை வழங்குவதற்குமான முகவாண்மை நிறுவனமாகவும், வழிகாட்டி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. மாநிலத்தின் நியமிக்கப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு நிறுவனமாக விளங்கும் வழிகாட்டி நிறுவனம், முதலீடுகளை எளிதாக்குவதற்கும், வருங்கால முதலீட்டாளர்களை மாநிலத்தில் முதலீடு மேற்கொள்ள ஊக்குவிப்பதற்கும், பின்வரும் செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது:

- *முதலீட்டு ஊக்குவிப்பு*
- *முதலீடுகளுக்கான ஆதரவுச் சேவைகள் மற்றும் திட்டங்கள் அமைக்கப்பட்ட பின், வழங்கப்படும் சேவைகள்*
- *வெளிப்புற ஈடுபாடுகள்*
- *கொள்கை மற்றும் ஆராய்ச்சி*
- *பணி ஆய்வகப் பிரிவு மற்றும் சிறப்பு முன்முயற்சிகள்*
- *மண்டலங்களைச் சென்றடைதல்*
- *ஊடகம் மற்றும் தகவல் தொடர்பு*

1.2 முதலீட்டு மேம்பாடு

முதலீடுகளை ஈர்த்திடும் முகவாண்மை நிறுவனமாக செயல்படும் வழிகாட்டி நிறுவனம், முதலீட்டாளர்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு, அவர்களுக்குத் தேவையான நடைமுறை மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட ஆதரவுச் சேவைகளைத் தொடர்ச்சியாக வழங்கி வருகிறது. நாடுகளுக்கான பிரத்யேக அமைவுகள், துறைகளுக்கான அமைவுகள், முதலீட்டு மாநாடுகள் மற்றும் தேசிய மற்றும் உலகளாவிய அளவில் நடத்தப்படும் பொருளாதார மாநாடுகளில் கலந்து கொள்ளுதல்மூலம் இவ்வாறான பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை வழிகாட்டி நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

அனைத்துத் துறைகளிலும் முதலீடுகளை ஈர்த்திடுவதே, வழிகாட்டி நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள் எனினும், மோட்டார் வாகனம் மற்றும் மோட்டார் வாகன உதிரிபாகங்கள், இரசாயனங்கள், மின்னணுவியல் மற்றும் மின்னணு வன்பொருட்கள், கனரக பொறியியல், தோல், ஜவுளி, நிதிச் சேவைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம்/தகவல் தொழில்நுட்பச் சேவைகள் ஆகிய துறைகளின்மீது, சிறப்புக் கவனம் செலுத்தி, அத்துறைகளில் முதலீடுகளை ஈர்த்திட விழைகிறது.

மேற்கூறிய துறைகள் மட்டுமின்றி, வருங்காலத்தில் முதலீடு மேற்கொள்ளப்படும் துறைகளையும் அடையாளம் கண்டு, நிலைத்தன்மை மற்றும் மேம்பட்ட உற்பத்தி நடைமுறைகளைப் பின்பற்றி, முதலீடுகளை ஈர்க்கும் நடவடிக்கைகளையும் வழிகாட்டி நிறுவனம் மேற்கொள்கிறது. வான்வெளி மற்றும் பாதுகாப்பு, வேளாண் மற்றும் உணவுப் பதப்படுத்துதல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உபகரணங்கள், மின்னணுவியல் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி (ESDM), மருத்துவ சாதனங்கள், மின் வாகனம், உயிரி தொழில்நுட்பவியல், மருந்துகள், பெட்ரோலியம் மற்றும் சிறப்பு இரசாயனங்கள், தோல், தொழில்நுட்ப ஜவுளி, தகவல் தரவுமையங்கள் மற்றும் நிதிநுட்பம் ஆகிய துறைகளை வளர்ந்துவரும் துறை என வகைப்படுத்தி, அத்துறையில் கணிசமான முதலீடுகளை ஈர்த்திட முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

கடந்தகால மற்றும் தற்போதைய முதலீடுகளை ஆராய்ந்து, அதன் அடிப்படையில், வழிகாட்டி நிறுவனம், சில முக்கிய நாடுகளை அடையாளம் கண்டுள்ளது. அந்நாடுகளில் உள்ள

2023 ஏப்ரல் 6]

முதலீட்டாளர்களுடன் ஈடுபாடுகளை மேம்படுத்துவதற்காக, பிரத்யேகமாக குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1.2.1 முதலீட்டு மாநாடுகள்

*மாநிலத்தில் முதலீடுகளின் வாய்ப்புகளை அதிகரிக்கும் ஒரு வழிமுறையாக, தமிழ்நாட்டில் முதலீட்டு மாநாடுகள் (*Investment Conclaves*) மேற்கொள்ளப்படுகின்றன. 2030 ஆம் ஆண்டிற்குள்,* US *$ 1 டிரில்லியன் பொருளாதாரம் அடைந்திட வேண்டும் என்ற ஒரு மிகப் பெரிய இலக்கை நிர்ணயித்து, 2022-23 ஆம் நிதியாண்டில், பல முதலீட்டு மாநாடுகளை மேற்கொண்டு, பெருமளவில் முதலீடுகளை ஈர்த்து, அவ்விலக்கை நோக்கி மாநிலம் தனது பயணத்தை மேற்கொண்டு வருகின்றது.*

பல்வேறு துறைகளில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, பல்வேறு துறைகளை கருப்பொருளாகக் கொண்டு முதலீட்டு மாநாடுகள் நடத்தப்பட்டன. உதாரணமாக, காலணி மற்றும் தோல் பொருட்கள் முதலீட்டு மாநாடுமூலம், ஏறக்குறைய 4,000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் சுமார் 62,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டன. பிப்ரவரி 2023-ல் நடத்தப்பட்ட மோட்டார் வாகனம் மற்றும் மின்னணுவியல் மாநாடுகள்மூலம், கிட்டத்தட்ட 11,000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் ஏறக்குறைய 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், அத்துறையில் முன்னணி நிறுவனங்களின் முதலீடுகள் ஈர்க்கப்பட்டன. ஜூலை 2022-ல் நடத்தப்பட்ட முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு என்ற பொருண்மையில் நடத்தப்பட்ட மாநாட்டின்போது, 1.25 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு மற்றும் ஏறக்குறைய 75,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் 60 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆகமொத்தம், 2022-23 ஆண்டில், இவ்வாறான பல்வேறு பொருண்மை சார்ந்த முதலீட்டு மாநாடுகள் மூலமாக ஏறக்குறைய 1.67 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு மற்றும் கிட்டத்தட்ட 1.5 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் 86 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பரவலான மற்றும் சமச்சீரான வளர்ச்சி என்பதே இந்த அரசின் தலையாய குறிக்கோள். அதை உறுதிப்படுத்தும் விதமாக, “C” *வகை மாவட்டங்களில் மட்டுமே, ஏறக்குறைய*

[2023 ஏப்ரல் 6

1.1 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு ஈர்த்து, கிட்டத்தட்ட 1.17 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மொத்த முதலீடுகளில், இது கிட்டத்தட்ட 47% ஆகும். மேலும், மொத்த வேலைவாய்ப்பு உறுதியளிப்பில், 37% வேலைவாய்ப்பும் இம்மாவட்டங்களில் மேற்கொள்ள உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளும் நிறுவனங்கள், தமது திட்டங்களை செயல்படுத்தும் நிலைக்குக் கொண்டு வருவதை உறுதிப்படுத்துவதில், தமிழ்நாடு அரசு மிகுந்த கவனம் செலுத்துகிறது. அதாவது, தற்போதுள்ள மற்றும் புதிய முதலீட்டாளர்களின் திட்டங்களுக்கு தேவையான ஆதரவுச் சேவைகள் அளித்து, அவர்களின் திட்டங்களை நிறுவுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. இதன் காரணமாக முன்மொழியப்பட்ட முதலீடுகள், தமது திட்டத்தைத் துவக்கிய விகிதாச்சாரம் என்று வருகையில், தமிழ்நாடு அகில இந்திய அளவில் முன்னணி மாநிலமாக விளங்குகிறது. 2019-ம் வருடம் முதல் போடப்பட்டுள்ள 519 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், 72 சதவிகித திட்டங்கள் பல்வேறு செயல்பாட்டு நிலைகளில் உள்ளன. அதாவது, இத்திட்டங்கள் அனுமதிக்காக ஒற்றைச் சாளர இணையத்தில் விண்ணப்பம் மேற்கொண்டோ, நிலம் கையகப்படுத்தியோ, கட்டுமானப் பணிகளைத் துவக்கியோ அல்லது பகுதி/முழு உற்பத்தியோ துவங்கிய நிலைகளில் உள்ளன.

1.2.2 அயல்நாடுகளில் உயர்மட்ட முதலீட்டுக் குழு

மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் தலைமையிலான முதலீட்டுக் குழு டாவோஸில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றத்தினைச் சிறப்புற பயன்படுத்தி, தமிழ்நாட்டின் முதலீடு ஈர்த்திடும் ஆற்றலையும், தமிழ்நாடு அடைந்த வெற்றிகளையும் உலகத்திற்கு வெளிச்சமிட்டுக் காட்டியது. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டு உலகப் பொருளாதார மன்றங்களிலும், தமிழ்நாட்டுக்கென்றே, மேம்பட்ட உற்பத்தி மையம் என்ற தலைப்பில் பிரத்யேக தளங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. உலகளாவிய நிறுவனங்களின் முதன்மை அதிகாரிகள், வெளிநாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் போன்ற பலதரப்பட்ட முதலீட்டாளர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில், அத்தகு முதலீட்டாளர்களின் எதிர்காலத் திட்டங்களை அறிந்து,

2023 ஏப்ரல் 6]

அதற்கேற்றவாறு, தமிழ்நாட்டின் பன்முகத்தன்மை வாய்ந்த சூழலமைப்பினை எடுத்துரைப்பதற்கும், இத்தளம் பேருதவியாக அமைந்தது. மே 22-26, 2022 நடைபெற்ற 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்திரக் கூட்டத்தில் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் “உற்பத்திச் சூழலமைப்பு இணைப்புகள்” என்ற அமர்வில் பங்கேற்று உரையாற்றினார்கள். அதுமட்டுமின்றி, கோங்ரெஸ் “மையத்தில் நடைபெற்ற “2030 தொழில் வளர்ச்சி நிகழ்ச்சி நிரல்” என்ற நிகழ்விலும் கலந்து கொண்டார்கள். மேலும், மேம்பட்ட உற்பத்தி தொடர்பான பல அமர்வுகளிலும், சந்திப்புகளிலும் இக்குழு பங்கேற்றது. அதேபோல் ஜனவரி 16-20, 2023 நடைபெற்ற, உலகப் பொருளாதார மன்றத்தின் வருடாந்திரக் கூட்டத்தில், தமிழ்நாடு அரசு பங்கேற்றது. இந்த 2023 ஆம் ஆண்டு உலகப் பொருளாதார மன்றத்தின் வருடாந்திரக் கூட்டத்தில் மேம்பட்ட உற்பத்தி, பசுமை எரிசக்தி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகிய துறைகள் உட்பட பல்வேறு துறைகளில், தமிழ்நாட்டின் சிறப்பம்சங்களை வழிகாட்டி நிறுவனம் எடுத்துரைத்தது. மேலும், “நிலையான வளர்ச்சிக்கான மேம்பட்ட உற்பத்தி சூழல் அமைப்புகளை உருவாக்குதல்”, “புத்தாக்கத்தினை இயக்கிடும் உலகளாவிய திறன் மையங்களை மறுவடிவமைத்தல்” மற்றும் “தமிழ்நாடு-சுத்தமான எரிசக்தி விநியோகச் சங்கிலி முதலீடுகளுக்கான ஒரு பசுமை சூழலமைப்பு” என்ற அமர்வுகளிலும் பங்கேற்றது.

இந்தப் பயணத்தின்போது, தொழில், முதலீடு மேம்பாடு மற்றும் வர்த்தகத் துறையின் கூடுதல் செயலாளர் திரு ச. கிருஷ்ணன், இ.ஆ.ப அவர்கள், முன்னர் ரிசர்வ் வங்கி கவர்னர் டாக்டர் ரகுராம் ராஜன் அவர்களிடம் உரையாடல் நிகழ்த்தினார்கள். இந்தியாவின் திறன்சூழல், தமிழ்நாட்டின் சிறப்பான திறமைமிகு பணியாளர் இருப்பு போன்றவற்றைப் பற்றிக் கூறி, வேகமாக வளர்ந்து வரும் சேவைத் துறையின் மீது அரசு கவனம் செலுத்திட வேண்டியது முக்கியம் என்று எடுத்துரைத்தார்கள்.

தமிழ்நாட்டுக்கென்று உள்ள அடையாளத்தை மேம்படுத்தும் வகையில் மே 30 முதல் ஜூன் 2, 2022 வரை நடைபெற்ற, உலகின் மிகப் பெரிய தொழில் வர்த்தகக் கண்காட்சிகளில் ஒன்றான ஹானோவர் மெஸ்ஸிலும், தமிழ்நாடு தனது முத்திரையைப் பதித்துள்ளது. இக்கண்காட்சியில், மின்னணுவியல்,

நான்காம் தலைமுறை தொழில் வளர்ச்சித் திட்டங்கள், வட்டப் பொருளாதாரம் ஆகிய துறைகளைச் சார்ந்த பெரும் தொழிலகங்களை, நமது முதலீட்டுக் குழு சந்தித்தது. ஹானோவர் நகருடன், வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை மேம்படுத்தும் வகையில், அந்த மண்டலத்தின் கூட்டுப் பொருளாதார மேம்பாட்டு நிறுவனமான ஹனோவர் இம்பல்ஸ் நிறுவனத்துடன், தமிழ்நாடு அரசு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

மாறிவரும் புவிசார் அரசியல் சூழ்நிலையை பயன்படுத்திக் கொள்ளும் விதமாக, 2022 செப்டம்பரில் தோல் அல்லாத காலணித் துறை, மின்னணுவியல் மற்றும் எரிசக்தித் துறைகளில், முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஒரு முதலீட்டுக் குழு, ஜப்பான் மற்றும் தென்கொரியா நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டது. இந்தப் பயணத்தின்போது, தமிழ்நாட்டில் ஏற்கெனவே முதலீடு மேற்கொண்டுள்ள முதலீட்டாளர்களுடன் விரிவான சந்திப்புகள் மேற்கொண்டு, அவர்களின் தொடர் ஆதரவையும், விரிவாக்க/புத்தாக்க/மதிப்புக் கூட்டு திட்டங்களை எல்லாம் தமிழ்நாட்டிலேயே மேற்கொள்ளுமாறும், இக்குழு அவர்களைக் கேட்டுக் கொண்டது.

தைவான் நாட்டிலும் இவ்வாறே முதலீட்டு சந்திப்புகள் மேற்கொள்ளப்பட்டன. தொழில்நுட்ப ஜவுளி, காலணிகள் மற்றும் மின்னணுவியல் ஆகிய துறைகளில் முதலீடுகளை ஈர்த்திடும் நோக்கத்துடன், தைவான் தொழில்நுட்ப ஜவுளிகள் சங்கம் மற்றும் தைவான் மின்னணுவியல் உற்பத்தியாளர் சங்கம் (TEEMA) ஆகியவற்றுடன் வட்ட மேஜை சந்திப்புகள் நடத்தப்பட்டன.

1.2.3 முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்கல் ஆணையரகம்

2022-23 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்போது, மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதலுக்காக (ஆதரவுச் சேவைகளை வழங்குவதற்காக) தனியே ஓர் ஆணையரகம் உருவாக்கப்படும் என்று அறிவித்தார்கள். வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் & தலைமைச் செயல் அலுவலரை, அலுவல் முறை ஆணையராக அறிவித்து, இந்த ஆணையரகம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையரகத்தின் முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு:

2023 ஏப்ரல் 6]

- *தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின்கீழ் உள்ள நிறுவனங்களுக்கான மதிப்பீடு, ஒத்திசைவு மற்றும் பணம்பெறும் அலுவலகமாகச் செயல்படுதல்;*

- *சர்வதேச மற்றும் தேசிய நிகழ்வுகளில் மாநிலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துதல் மற்றும் தூதரக அலுவலகங்கள் மற்றும் தொழிற் சங்கங்களுடன் இணைந்து செயலாற்றுதல்;*

- *வணிகம் புரிதலை எளிதாக்குதல், கொள்கை வடிவமைப்பு மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு போன்றவற்றிற்காக, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை மற்றும் வழிகாட்டி நிறுவனத்துடன் இணைந்து செயலாற்றுதல்;*

- *கொள்கைகள் மற்றும் ஊக்கத் தொகைகள் குறித்த தெளிவுரை மற்றும் விளக்கங்கள் வழங்குதல்;*

- *பெருந்தொழில்களுக்கு விருதுகள் பற்றிய பரிந்துரைகளை அரசுக்கு பரிந்துரைத்தல்;*

ஆணையரகம் உருவாக்கப்பட்டுள்ளதன் காரணமாக, தமிழ்நாடு வணிகம் புரிதலை எளிதாக்குதல் சட்டம், 2018-ன்கீழ், தொழிற்சாலைகளுக்கு ஆதரவுச் சேவைகள் அளிப்பதற்காக அரசுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலுவதோடு மட்டுமின்றி, துரிதப்படுத்திடவும் இயலும்.

1.2.4 நிதிநுட்ப தொழில் ஊக்குவிப்புப் பிரிவு

புத்தாக்க நிறுவனங்கள் மற்றும் வளர்ந்துவரும் தொழில் முனைவோருக்கு, டிஜிட்டல் நிதிக் கருவிகளைப் பயன்படுத்த ஊக்குவிக்கும் வகையில், உலகளாவிய நிதி நிறுவனங்களான Pay U, Vakil Search, Vyapar, M2P *போன்ற நிறுவனங்களுடன் இணைந்து, “தமிழ்நாடு டெக்ஸ்பீரியன்ஸ்” என்ற திட்டத்தினைத் துவக்கியுள்ளது. புத்தாக்க நிறுவனங்களுக்கு, நிதிநுட்பச் சேவைகள் ஒரே தளத்தில் கிடைத்திடுமாறு இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜூலை 2022 ஆம் மாதம், புகழ்பெற்ற வென்ச்சர் கேப்பிடல் நிறுவனங்களையும்

மற்றும் புத்தொழில் முதலீட்டாளர்களையும் ஈர்ப்பதற்காக தமிழ்நாடு களவிழாவினை அறிவித்தார்கள். இதன்மூலம், 250 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, உலகளாவிய வென்ச்சர் கேப்பிடல் நிறுவனங்களில் இருந்து அமைக்கப்பட்ட நிபுணர்கள் குழுவிற்கு தங்களது திட்டத்தை விளக்கக்கூடிய 8 புத்தொழில் நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட உள்ளன.

1.2.5 ஏற்றுமதி ஊக்குவிப்புப் பிரிவு

தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை 2021-ல் அறிவித்திருந்தவாறே, ஏற்றுமதி பற்றிய நுண்ணறிவு, ஆதரவுச் சேவைகள், ஏற்றுமதியாளர்களைச் சென்றடைதல் ஆகியவற்றில் சிறப்புக் கவனம் செலுத்தும் வகையில், வழிகாட்டி நிறுவனத்தில் ஓர் ஏற்றுமதி பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பிரிவு ஏற்றுமதி சார்ந்த தொழில்களுக்கு ஆதரவுச் சேவைகள் வழங்குதல், ஏற்றுமதி தொடர்பான அவர்களின் கேள்விகளுக்கு தெளிவு வழங்குதல், ஏற்றுமதி தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், வர்த்தகக் கூட்டாளிகளை இணைத்து வைத்தல், அறிவுசார் சேவைகள், ஏற்றுமதி மேம்பாடு மற்றும் ஏற்றுமதியாளர்களைச் சென்றடைதல் நிகழ்வுகள் போன்ற சேவைகளை வழங்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.

சீர்திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டிய பகுதிகள், உள்கட்டமைப்பு இடைவெளிகளை அடையாளம் கண்டறிதல், ஏற்றுமதித் துறை மேம்பாட்டிற்கான திட்டங்களை வகுத்தல் போன்ற நோக்கங்களுக்காக, ஒருங்கிணைப்பு அறக்கட்டளையின்கீழ், இலாப நோக்கற்ற நிறுவனமான, ஃபௌண்டேஷன் ஃபார் எகனாமிக் டெவலப்மெண்ட் (Foundation for Economic Development-FED) நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதிக அளவில் வேலைவாய்ப்புகளை அளிக்கவல்ல துறைகளான உணவுப் பதப்படுத்துதல், தோல் அல்லாத காலணிப் பொருட்கள், மின்னணுவியல் ஆகிய துறைகளில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. 2022-23 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை, உணவுப் பதப்படுத்தும் துறைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு உள்ளது. பிற துறைகளுக்கான செயல்திட்டங்கள் வரும் வருடங்களில் செயல்படுத்தப்படும்.

2023 ஏப்ரல் 6]

1.3 கொள்கை கட்டமைப்பு

தொழிற் கொள்கையில் அறிவிக்கப்பட்ட ஊக்கத் தொகுப்புச் சலுகைகள், தொழில் முதலீடுகளில் உண்டாக்கும் தாக்கத்தை மதிப்பிடுவதற்காக ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஊக்கத் தொகை அளிப்பு என்பது, ஒரு மாநிலத்திற்கு முதலீடுகளை ஈர்ப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது என்பதை இந்த ஆய்வின்மூலம் அறிய முடிந்தது. தமிழ்நாட்டில், தொழில் துறையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் வகையில், 2022-23 நிதியாண்டில் பல்வேறு கொள்கைகள் வெளியிடப்பட்டன. வழிகாட்டி நிறுவனத்தில் தயாரிக்கப்பட்ட இந்தக் கொள்கைகள் அனைத்துமே, சம்பந்தப்பட்ட துறையின் இலக்கு மற்றும் வரையறை, துறை சார்ந்த கொள்கைத் தலையீடுகள் மற்றும் ஊக்கத் தொகுப்புச் சலுகை பற்றிய விவரங்களை முதலீட்டாளர்களுக்கு எடுத்துரைக்கின்றது.

1.3.1 மானியங்களின் தாக்கம் பற்றிய ஆய்வுப் பணிகள்

தமிழ்நாட்டின் தொழில் கொள்கையில், தொழிலகங்களுக்கு மானியங்கள்/ஊக்கத் தொகுப்புச் சலுகைகள் அளிப்பது என்பது ஓர் இன்றியமையாத அங்கமாக விளங்குகிறது. தமிழ்நாடு உள்ளிட்ட பல இந்திய மாநிலங்கள், தங்கள் மாநிலத்திற்கு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக, துறை சார் திட்டங்கள், புவிசார் திட்டங்கள்(அமைக்கும் மாவட்டங்கள்), வேலைவாய்ப்பு மற்றும் முதலீடு ஆகிய பல்வேறு காரணிகளின் அடிப்படையில் ஊக்கத் தொகுப்புச் சலுகைகள்/மானியங்கள் வழங்கி வருகின்றன. தமிழ்நாடு உட்பட, அனைத்து மாநிலங்களும், முதலீடுகளை ஈர்ப்பதற்கு மானியங்கள் வழங்குவதில் தொடர் கவனம் செலுத்தி வருவதால், இந்த மானியங்கள், முதலீடுகளை ஈர்ப்பதற்கும் மாநிலத்திற்கு சாதகமான தாக்கத்தையும் உண்மையில் ஏற்படுத்துகிறதா, அதன்மூலம் தேவைப்பட்ட விளைவுகள் ஏற்படுகின்றனவா என்பதை அறிந்து கொள்ள ஆய்வுகள் செய்வது இன்றியமையாததாகிறது. இவ்வாறு வழங்கப்படும் மானியங்கள்/ ஊக்கத் தொகுப்புச் சலுகைகள், தொழிலகங்கள் மேற்கொள்ளும் முதலீடுகள் மீது ஏற்படுத்தும் தாக்கம் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளும் பணியினை டெலாய்ட் டூஷே தொமாட்சு இந்தியா LLP (Deloitte Touche Tohmatsu India LLP (Deloitte) நிறுவனத்திடம் வழங்கப்பட்டது.

கடந்த பத்து ஆண்டுகளில், ஊக்கத் தொகுப்புச் சலுகைகள்/ மானியங்கள் அளிக்கப்பட்ட 43 பயனாளி நிறுவனங்களில் 30 நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து ஒரு மாதிரி கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கணக்கெடுப்பில், பயனாளர் நிறுவனங்கள் தாங்கள் உறுதி செய்திருந்த முதலீடுகளைவிடவும், அதிக அளவில் முதலீடு செய்திருப்பதும், உறுதியளித்திருந்த வேலைவாய்ப்பு எண்களை விட, ஏறக்குறைய மூன்று மடங்குக்கு மேல் வேலைவாய்ப்புகளை உருவாக்கியதும், அதிலும்கூட, கிட்டத்தட்ட 87.5% அளவிற்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த பணியாளர்களை பணியமர்த்தியுள்ளதையும் காண முடிந்தது.

அரசியல் நிலைத்தன்மை (அரசுக் கொள்கைகளின் நிலைத்தன்மை), வணிகம் புரிதலை எளிதாக்குதல், துறைமுகங்களுக்கான அணுகல்கள், தொழில் சூழலமைப்பு மற்றும் ஊக்கத் தொகுப்புச் சலுகைகள் போன்ற காரணிகள், முதலீட்டாளர்கள், தங்கள் திட்டத்தினைக் குறிப்பிட்ட மாநிலத்தில் நிறுவுவதற்கு முக்கிய காரணிகளாக விளங்குகின்றன என்பதை இந்தக் கணக்கெடுப்பு தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. சமநோக்குப் பார்வை கொண்ட கணக்கெடுப்பாக இருந்திட வேண்டும் என்ற நோக்கத்திற்காக, ஊக்கத்தொகை அளிக்கப்படாத சில நிறுவனங்களும் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. ஏறத்தாழ அனைத்து பொருண்மைகளிலும் ஒரே அளவிலான போட்டித்தன்மை உடைய மாநிலங்களுக்கிடையே முதலீடுகளுக்கான தேர்வு என்று வருகையில், ஊக்கத் தொகுப்புச் சலுகைகள்/மானியங்கள் அளிப்பது என்பது முதலீடுகளை ஈர்த்திட மிகப் பெரும் பங்கு வகிக்கிறது.

மானியங்கள் ஏற்படுத்திடும் தாக்கத்தைத் தீர்மானித்திட செலவினங்கள்-நன்மைகள் பகுப்பாய்வு முறை (Cost Benefit Analysis) பயன்படுத்தப்பட்டது. (அ) நிறுவனங்களின் விற்பனை மற்றும் கொள்முதல்மூலம் மாநிலத்திற்கு கிடைத்திடும் வரி வருவாய்; (ஆ) பணியாளர்கள் பயன்படுத்தும் பொருட்கள் மற்றும் சேவைகளிலிருந்து கிடைத்திடும் மறைமுக வரி வருவாய் மற்றும் அவர்கள் செலுத்திடும் வருமான வரியில் மாநிலத்தின் பங்கு; (இ) நீர் மற்றும் மின்சாரம் ஆகியவைகளின் பயன்பாட்டிற்காக நிறுவனங்களால் செலுத்தப்படும் தொகை மற்றும் (ஈ) நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட மூலதன செலவினங்களில் இருந்து ஈட்டப்படும் வரி வருவாய்; போன்ற

2023 ஏப்ரல் 6]

நான்கு முக்கிய காரணிகள்மூலம் அரசால் பெறப்படும் நன்மைகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

அதேபோல, செலவினங்கள் என்று எடுத்துக் கொண்டால், நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட ஊக்கத் தொகைகள் (அதாவது, மென்கடன்கள், SGST/VAT திருப்பியளிப்பு, பயிற்சி மானியம், மூலதன மானியம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான மானியம், மின் வரி திரும்ப வழங்கப்படுதல் மற்றும் ஊக்கத்தொகை கோருவதற்கான விண்ணப்பக் கட்டணம் ஆகிய காரணிகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. நிகரச் செலவு நன்மையின் அடிப்படையில், அவ்வாறு வழங்கப்படும் ஒவ்வொரு ரூபாய் ஊக்கத்தொகைக்கும், அரசுக்கு 4.95 ரூபாய் திரும்பக் கிடைக்கப் பெறுகிறது என்பதை இந்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

1.3.2 தற்போதுள்ள தொழில் கொள்கை கட்டமைப்பு

மாநிலத்தில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான சட்ட ரீதியான கட்டமைப்புகளை வணிகம் புரிதலை எளிதாக்கும் சட்டம் மற்றும் விதிகள் வழங்குகின்றன. கூடுதலாக, தமிழ்நாடு தொழில் கொள்கை 2021-னை அடித்தளமாகக் கொண்டு, தொழில் கொள்கைகளின் ஒருங்கிணைந்த கட்டமைப்பினை மாநில அரசு உருவாக்கியுள்ளது. இதன்மூலம், சம்பந்தப்பட்ட துறைகளில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான சரியான பாதையை வகுத்துத் தருவதோடு மட்டுமின்றி, தேவைப்பட்ட கொள்கை தலையீடுகளையும் வழங்கிட இயலும். இதன்பொருட்டு, தகவல் அளிப்பதில் நிலவி வரும் சமச்சீரற்ற தன்மை மற்றும் பரிவர்த்தனைச் செலவுகளை வெகுவாக குறைத்திட இயலும். தமிழ்நாடு நிதிக் கொள்கை 2021 மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை 2021 ஆகியவை இதில் அடங்கும். மின் வாகனக் கொள்கை 2019, வான்வழி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை 2019 மற்றும் மின்னணு வன்பொருள் உற்பத்திக் கொள்கை 2020 ஆகிய தொழில் கொள்கைகளும், புதிய தொழிற்கொள்கைக்கு ஏற்ப திருத்தி வடிவமைக்கப்பட்டுள்ளன.

1.3.3 2022-2023 ஆம் வருடம் வெளியிடப்பட்ட கொள்கைகள்

2022-23 ஆம் வருடம் மட்டும், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் 8 கொள்கைகள்

[*2023 ஏப்ரல் 6*

வெளியிடப்பட்டுள்ளன. இது கடந்த 10 வருடங்களில் அதிக அளவில் அளிக்கப்பட்ட கொள்கை வெளியீடுகள் ஆகும். மாநிலத்தில் சாதகமான கொள்கை கட்டமைப்பை உருவாக்குவதற்கும், உகந்த முதலீட்டுச் சூழலை உருவாக்கவும், அரசு முன்னுரிமை அளிப்பதற்கு இது சான்றாக விளங்குகிறது. கொள்கை வடிப்பு கட்டமைப்பின் அங்கமாக, கீழ்க்கண்ட கொள்கைகள் வெளியிடப்பட்டுள்ளது:

- *தமிழ்நாடு உயிர் அறிவியல் கொள்கை 2022 - மருத்துவ சாதனங்கள் மற்றும் ஜவுளி, உயிரி தொழில்நுட்பம் மற்றும் உயிர் சேவைகள், மருந்து மற்றும் ஊட்டச்சத்து ஆகிய துறைகளை உள்ளடக்கிய உயிர் அறிவியல் துறையில் முதலீடுகளை ஈர்த்திடும் விதமாகவும், உயர்தர வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நோக்கத்துடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு உயிர் அறிவியல் கொள்கை 2022 வெளியிடப்பட்டுள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில், 20,000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 50,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதை இக்கொள்கை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.*
- *தமிழ்நாடு ஆராய்ச்சி & மேம்பாட்டுக் கொள்கை 2022 - தொழில் மற்றும் சேவைத் துறைகளில், புத்தாக்க தொழில்நுட்பங்கள் மற்றும் தீர்வுகளின் வளர்ச்சிக்கு உதவிடும் வகையிலும், மாநிலத்தில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு சூழலமைப்பை மேம்படுத்தும் வகையிலும், அறிவியல் ஆராய்ச்சி & மேம்பாடு மற்றும் உலகளாவிய திறன் மையங்களில் முதலீடுகளை ஈர்ப்பது என்ற நோக்கத்துடனும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை, 2022 வெளியிடப்பட்டது. ஆராய்ச்சிப் பூங்காக்கள், திறன் மையங்கள் மற்றும் புத்தாக்க மையங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் வெளியிடப்பட்ட இக்கொள்கை, ஊக்கத் தொகுப்புச் சலுகைகள், ஒழுங்குமுறை இணக்க ஆதரவுச் சேவைகள் மற்றும் தற்போதுள்ள தொழில்கள் மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு மையங்களை மின்னணு முறையில் இணைத்து, ஆராய்ச்சியின் வரையறையை பன்மடங்கு அதிகரித்திட உதவி புரிந்திடும்.*

2023 ஏப்ரல் 6]

- தமிழ்நாடு காலணி மற்றும் தோல்பொருட்கள் கொள்கை 2022 - காலந்தொட்டே, தமிழ்நாட்டில் தோல் மற்றும் காலணித் தொழில்கள் வலுவான நிலையில் உள்ளன. குறிப்பாக பெண் தொழிலாளர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பை வழங்கிடும் துறையாகவும், ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் துறையாகவும் இத்துறை விளங்குகின்றது. இத்தொழில்களுக்கு புத்துயிர் அளித்திடும் வகையிலும், தோல் அல்லாத காலணி மற்றும் அது சார்ந்த நிறுவனங்களுக்கு, துணைத் தொழிற் சாலைகளை மேம்படுத்தும் வகையிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கை, 2022-ஐ வெளியிட்டார்கள். 2025 ஆம் ஆண்டிற்குள், இத்துறையில் 20,000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் இரண்டு இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், இக்கொள்கையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இவ்வகையான கொள்கை நாட்டிலேயே முதன்முதலாக வெளியிடப்பட்டது. தொகுப்புகள் அடிப்படையிலான வளர்ச்சிக்கு வித்திடும் வகையில், இக்கொள்கையில் சிறப்புத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு மின் வாகனக் கொள்கை 2023 - இந்தியாவின் மின்வாகனத் தலைநகரம் என அழைக்கப்படும் தமிழ்நாட்டின் நிலையை மேலும் வலுப்படுத்தவும், வணிக வாகனத் துறையில் மின்வாகனங்களின் பயன்பாட்டினை வெகுவாக ஊக்குவிக்கும் வகையிலும், பகிர்வு நகர்திறனை ஊக்கப்படுத்தும் வகையிலும், திருத்தப்பட்ட மின்வாகனக் கொள்கையினை பிப்ரவரி 2023 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். விநியோகம் தொடர்பாக, சேவை மற்றும் சரக்கு வரி திருப்பியளிப்பு மற்றும் மூலதன மானியம், தேவைப்பாடு தொடர்பான தள்ளுபடிகள், தற்போதைய விதிகளில் திருத்தம், மின்னேற்று சூழலமைப்புக்கான சிறப்பு ஆதரவு மற்றும் சூழலமைப்பு மேம்பாடு போன்ற பல சிறப்பு அம்சங்கள் இக்கொள்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 6 நகரங்களை மின் வாகன

நகரங்களாக மேம்படுத்தி, அதன்மூலம், மாநிலத்தின் வட்டப் பொருளாதாரத்தினை ஆதரித்திட இயலும்.

- தமிழ்நாடு எத்தனால் கலவைக் கொள்கை 2023 - சர்க்கரைத் தொழிலுக்கு புத்துயிர் அளிக்கும் வகையிலும், விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கிடும் வகையிலும், பசுமைப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், செலவு குறைந்த மாற்று பசுமை எரிபொருளுக்கான முதலீட்டு மையமாக தமிழ்நாட்டை நிலைநிறுத்தும் தொலைநோக்குப் பார்வையுடன், அண்மையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எத்தனால் கலவைக் கொள்கை, 2023-ஐ வெளியிட்டார்கள்.
- தொழில்நுட்ப ஜவுளிகள், மறுசுழற்சி செய்யப்பட்ட தயாரிப்புகளிலிருந்து MMF நூல், MMF துணி மற்றும் ஆடை உற்பத்தி ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் மற்றும் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக ஒரு சிறப்பு திட்டம் 2023 அறிவிக்கப்பட்டுள்ளது.
- அதுமட்டுமின்றி, டிட்கோ நிறுவனம், வான்வழி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை 2023, தமிழ்நாடு சரக்கு போக்குவரத்து கொள்கை மற்றும் ஒருங்கிணைந்த சரக்கு போக்குவரத்துத் திட்டம் 2023 மற்றும் தமிழ்நாடு நகர எரிவாயு விநியோகக் கொள்கை 2023 ஆகிய கொள்கைகளை வெளியிட்டுள்ளது.

1.4 ஆதரவுச் சேவைகள் மற்றும் திட்டங்கள் அமைக்கப்பட்டபின் வழங்கப்படும் சேவைகள்

நிலையான தலையீடுகள் மற்றும் வணிக சீர்திருத்தங்கள் மூலம் முதலீட்டுச் சூழலை மேம்படுத்தி, மாநிலத்தின் போட்டித் தன்மையை பன்மடங்கு அதிகரித்திட தமிழ்நாடு அரசு உறுதி பூண்டுள்ளது. 300-க்கும் மேற்பட்ட வணிகம் செய்வதை எளிதாக்கும் நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டு உள்ளன. 165 தேவையற்ற சட்டங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. மேலும் 200 இணக்கங்கள் அடையாளம் காணப்பட்டு, பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளன.

2023 ஏப்ரல் 6]

வழிகாட்டி நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட பல துறை சார்ந்த முயற்சிகளின் காரணமாக, உரிமம் வழங்குவதில் இருந்து வணிகங்களுக்கு மூன்று ஆண்டு விலக்கு அளிக்கத் தேவையான திருத்தங்களை நிறைவேற்ற வழிவகுக்கப்பட்டது.

மின் ஆளுமை குறித்த வழிகாட்டி நிறுவனத்தின் பணிகள், தேசிய மற்றும் சர்வதேச மாநாடுகளில் நன்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முன்பு காகிதம் சார்ந்த நிலையில் இருந்திட்ட அரசு வணிகம் தொடர்பான சேவைகளை மாற்றி, தற்போது கிளவுட் அடிப்படையிலான சேவைகளை வழங்கும் நிறுவனமாக வழிகாட்டி நிறுவனம் தன்னை மாற்றிக் கொண்டுள்ளது. அக்டோபர் 2022 ஆம் மாதம், போர்ச்சுக்கல் நாட்டில் மின்னணு ஆளுமையின் கோட்பாடு மற்றும் நடைமுறைகள் குறித்த 15-வது வருடாந்திர சர்வதேச மாநாட்டில், வழிகாட்டி நிறுவனத்தின், வணிகம் புரிதலை எளிதாக்கும் குழு ஒரு ஆய்வறிக்கை சமர்ப்பித்தது. மேலும், புதுதில்லியில் நடைபெற்ற தேசிய ஒற்றைச் சாளர முறைகளுக்கான ஆய்வுக் கூட்டத்தில் நமது மாநிலத்தின் ஒற்றைச் சாளர முறை பற்றிய விளக்கங்களும் பிற மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டன.

வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குனர் தலைமையிலான ஒரு குழு தூத்துக்குடி, திருநெல்வேலி, ஓசூர், கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், மதுரை, விருதுநகர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களுக்குச் சென்று, அங்குள்ள தொழிற்சாலைகளுடன் சந்திப்புகள் மேற்கொண்டு, அவர்களின் பிரச்சினைகளை கேட்டு அறிந்தது. மாவட்ட நிர்வாக அலுவலகங்கள் மற்றும் FaMeTN *ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து, ஒற்றைச் சாளர இணையதளம், தொழில் தோழன் (*Biz Buddy*) இணையதளம் மற்றும் அனுமதிகள் பற்றிய ஆதரவுச் சேவைகள் ஆகிய தகவல்களை முதலீட்டாளர்கள் மற்றும் முதலீட்டுச் சங்கங்களுக்கு எடுத்துரைத்தது.*

1.4.1 மின்னாளுமை முன் முயற்சிகள்

*இன்றைய காலகட்டத்தில் மின் ஆளுமை மற்றும் தரவு சார்ந்த முடிவுகளை மேற்கொள்வது ஒரு இன்றியமையாத ஒன்றாக விளங்குகிறது. செயல்பாடுகள் அதிகரித்தல், விரைவான விநியோகம் மற்றும் வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை இது வழங்குகின்றது. ஒன்றிய அரசைச் சார்ந்த தேசிய மின் ஆளுமை சேவை வழங்கல் மதிப்பீட்டின் (*National e-Governance Service Delivery Assessment NeSDA*)படி, தமிழ்நாடு தொடர்ச்சியாக*

மின்னாளுமை வழங்கும் மாநிலங்களில் முதல் மூன்று மாநிலங்களில் ஒன்றாக உள்ளது. வணிகம் புரிதலை எளிதாக்குவது, ஒப்புதல்கள்/ அனுமதிகள் வழங்கப்படுவதைக் கண்காணிப்பது மற்றும் தொழில் சூழலமைப்பிற்கு ஏற்றவாறு சேவைகள் அளிக்கப்படுவதை உறுதி செய்வது போன்ற தரவு சார் நிர்வாக முன்முயற்சிகளை மேற்கொள்ளும் முக்கிய துறையாக, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை விளங்குகிறது.

மின்மய சேவைகளை செயல்படுத்துவதில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை எப்போதுமே முன்னணி வகித்து வருகிறது. ஒற்றைச் சாளர இணையதளம், நிலத் தகவல் இணையதளம், தொழில் தோழன் மட்டுமின்றி, முதலீட்டாளர்களை மையமாகக் கொண்ட பிற அறிவுசார் டிஜிட்டல் முன்முயற்சிகளையும் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை தொடர்ச்சியாக செயல்படுத்தி வருகிறது.

1.4.1.1 ஒற்றைச் சாளர இணைய தளம் 2.0

ஒற்றைச் சாளர இணையதளம் என்பது முதலீட்டாளர்கள் தமது திட்டத்திற்கான அனுமதிகள், ஒப்புதல்கள், உரிமங்கள் மற்றும் தடையில்லா சான்றிதழ்கள் தொடர்பான சேவைகள் போன்றவற்றை ஒரே தளத்தில் பெற்றுக் கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட ஓர் அரசு - வணிக (G2B) சேவைத் தளம் ஆகும். இந்த இணையம்மூலம், 236 சேவைகள் வழங்கப்படும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, தற்போது 154 சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஒற்றைச் சாளர இணையத்தினை பன்முகப்படுத்திடும் விதமாக, இத்தளத்திற்கான அலை பேசி வடிவத்தையும் (mobile version) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்துள்ளார்கள். அளிக்கப்படும் சேவைகள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு தேவையான வகையில் எளிய முகப்பு பெட்டிகள் போன்ற சிறப்பம்சங்கள், இவ்வலைத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

முதலீட்டாளர்கள் இடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ள இந்த இணையதளத்தில், 2022ஆம் ஆண்டில் மட்டும் 12000க்கும் மேற்பட்ட பெரும் தொழில்கள் மற்றும் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை சார்ந்த அலகுகள், பல்வேறு அனுமதிகள் மற்றும் தடையில்லாச் சான்றிதழ்கள் கோரி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இவ்வாறு, பெறப்பட்ட

2023 ஏப்ரல் 6]

விண்ணப்பங்களில் 90 சதவீதத்துக்கு மேலாக அனுமதிகள் மற்றும் தடை இல்லா சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டில், அரசுத் துறைகளில், கிளவுட் அமைப்பை ஏற்றுக் கொள்வதில் சிறந்து விளங்குவதற்கான நாஸ்காம் (NASSCOM) விருதினை, ஒற்றைச்சாளர இணையதளத்தின் வடிவமைப்பு மற்றும் செயல்பாடுகளை கையாளும் கணினி ஒருங்கிணைப்பாளருக்கு வழங்கப்பட்டது.

1.4.1.2 தமிழ்நாடு நிலத் தகவல் இணையதளம்

பிப்ரவரி 2023 நிலவரப்படி, 19,505 ஹெக்டேர் நிலக் கையிருப்புடன், தொழில்களுக்கான நில வங்கி கையிருப்பில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு இரண்டாவது இடம் வகிக்கிறது. நிலங்களைக் கையகப்படுத்துவது முதலீட்டாளர்களுக்கு ஒரு மிகப் பெரும் சவாலாக உள்ளது. இதனை எளிதாக்கிடும் வண்ணம், நில வங்கிகள் கையிருப்புத் தகவலை இந்தத் தமிழ்நாடு நிலத் தகவல் இணையதளம் அளித்து வருகிறது. நிலத் தேர்வு தொடர்பான தகவல்களை வழங்குதல், நில பரிவர்த்தனைகள், நிலத் தொகுப்புகளின் சரிபார்ப்பு குறித்த மதிப்பு கூட்டப்பட்ட சட்ட ஆலோசனைகள் போன்ற தகவல்களையும் இந்த இணையதளம் வழங்குகிறது.

1.4.1.3 தொழில் நண்பன் - தொழிற்சாலைகளுக்கான உதவி மைய இணையதளம்

தொழில் தோழன் என்பது அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள், சந்தேகங்கள் குறைகள் மற்றும் தொழில் துவங்கப்பட்டதற்குப் பிந்தைய சிக்கல்கள் ஆகியவற்றை நிவர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு பன்மொழி தொழில் உதவி மைய இணையதளம் ஆகும். இதில் எழுப்பப்படும் உதவி அழைப்புகள் முகவாண்மை அலுவலர் முதல் மாண்புமிகு முதல்வர் அலுவலகம் வரை அனுப்பி வைக்கப்படுவதன்மூலம், எழுப்பப்படும் குறைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படுவது உறுதி செய்யப்படுகிறது. பிப்ரவரி 15, 2023 நிலவரப்படி, இது காறும் 306 உதவி அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றுள் 96 சதவீதம் அளவிற்கு தீர்வுகள் காணப்பட்டுள்ளன. சராசரியாக ஒவ்வொரு குறையும் ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 6

1.5 வெளிப்புற ஈடுபாடு

1.5.1 நிறுவனங்களுடன் இணைந்து சர்வதேச ஒத்துழைப்பு நடவடிக்கைகள்

இந்தியாவில் உள்ள சர்வதேச தூதரகங்கள், வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்கள், சர்வதேச தொழில்நுட்ப மற்றும் மேம்பாட்டு நிறுவனங்கள் மற்றும் உலகளாவிய புலம் பெயர்ந்தோர் சமூகத்துடன் ஒருங்கிணைந்து பணியாற்றி, அதன் மூலம், வழிகாட்டி நிறுவனம், தமிழ்நாட்டினை உலக அளவில் சிறந்த முதலீட்டு மாநிலம் என்பதை வெளிப்படுத்தி வருகிறது. ஆண்டு முழுவதும், வட்ட மேஜை விவாதங்கள், துறை மற்றும் நாடு சார்ந்த நிகழ்வுகள் நடத்தி, அதன்மூலம், உலக உற்பத்தித் துறையின் நாடித் துடிப்பைத் துல்லியமாகக் கண்டறிவதற்கும், ஆர்வம் காட்டப்படும் பகுதிகளில், எதிர்கால ஒத்துழைப்புகளுக்கு தேவையான தொடர்புகள் ஏற்படுத்துவதையும் இது உறுதி செய்கிறது.

2022-2023 ஆம் ஆண்டில் வெளிநாட்டு ஈடுபாடு குழுவின் முக்கிய ஈடுபாடுகள்:

- *ஆஸ்திரேலியா, ஜப்பான், கனடா, சுவீடன் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் இருந்து, சர்வதேச தூதரகங்கள் மற்றும் வர்த்தகப் பிரதிநிதிகளை சந்தித்து, இரு நாடுகளுக்கிடையே முதலீடு மற்றும் வர்த்தகங்களை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.*

- *இந்தியா மற்றும் ஜெர்மனி நாட்டை சேர்ந்த ஹானோவர் இடையே வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்தும் வகையில் அந்நகரத்தின் முதலீட்டு ஊக்குவிப்பு நிறுவனமான ஹானோவர் இம்பல்ஸ் நிறுவனத்துடனும், எண்டர்பிரைஸ் சிங்கப்பூர் நிறுவனத்துடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.*

- *அமெரிக்க இந்திய உத்திசார் கூட்டாண்மை மன்றம் (US India Strategic Partnership Forum – USISPF) 2022 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஒரு தொழில் உரையாடல் சந்திப்பினை நடத்தியது. இதில் தொழில்,*

2023 ஏப்ரல் 6]

முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளரும், உலகளாவிய முன்னணி நிறுவனங்களுமான ஆப்பிள், HSBC, ஆம்வே, ரோல்ஸ் ராய்ஸ், டெல், லாக்கீட் மார்ட்டின், கேட்டர்பில்லர், டெட்ரா பேக், அமேசான், ஃபர்ஸ்ட் சோலார், ஃப்ளெக்ஸ், மாஸ்டர்கார்டு, ஃபோர்டு, BAE சிஸ்டம்ஸ், ஹனிவெல், தெர்மோஃபிஷர், காக்னிசண்ட், ATC டவர் போன்ற நிறுவனங்களின் முன்னணித் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

- மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தலைமையிலான தூதுக் குழு, அமெரிக்காவில் உள்ள சான்பிரான்சிஸ்கோ மற்றும் சியாட்டில் ஆகிய நகரங்களுக்குச் சென்று, முக்கிய தகவல் தொழில்நுட்பம் மற்றும் செமிகண்டக்டர் நிறுவனங்களின் உயர் அதிகாரிகளைச் சந்தித்து, அவர்களின் முதலீடுகளை தமிழ்நாட்டில் மேற்கொள்ள வலியுறுத்தியது. மேலும், சான்பிரான்சிஸ்கோ நகரில் நடந்த செமிகான் வெஸ்ட் மாநாட்டிலும் இக்குழு கலந்து கொண்டது.
- தமிழ்நாடு மற்றும் மலேசியா இடையே வர்த்தக உறவுகளை மேம்படுத்திடவும், இரு தரப்பினரிடையே வணிக உறவுகளை வளர்த்திடுவதற்கான புதிய வழிமுறைகளை ஆராய்ந்திடவும், டிசம்பர் 2022-ல், பினாங்கு மாநிலத்தின் இரண்டாம் துணை முதல்வர் டாக்டர் பி. ராமசாமி தலைமையிலான உயர்மட்டக் குழு தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தது. அது மட்டுமின்றி, மலேசிய நாட்டின் முதலீட்டு மேம்பாட்டு மையம் மற்றும் வழிகாட்டி நிறுவனம் இடையே நிலவும் உறவுகளை விரிவுபடுத்தும் நோக்கத்துடனும், ஒத்துழைப்பு மற்றும் கூட்டு முயற்சிகளுக்கான துறைகள் பற்றி விவாதிப்பதற்கும், துணை தலைமை நிர்வாக அதிகாரி தலைமையில் ஒரு குழு தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தது.
- ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த துரிங்கியாவின் டிஜிட்டல் சொசைட்டி மற்றும் பொருளாதார அமைச்சர் தலைமையிலான ஒரு முதலீட்டுக் குழு செப்டம்பர் 2022-ல் கோயம்புத்தூருக்கு வருகை புரிந்தது. இக்குழுவில், துரிங்கியா மாகாணத்தைச்

சேர்ந்த கல்வி நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவும் அங்கம் வகித்தன. ஜெர்மனி—இந்தியா கூட்டு வட்டமேசை (Joint German—Indian Round table – GIRT) உறவுகளை வலுப்படுத்தி, தமிழ்நாட்டில் உள்ள மேற்கு மாவட்டங்களில் இருந்து வணிக வாய்ப்புகளை கண்டறிவதே இக்குழுவின் முக்கிய குறிக்கோள்.

- அக்டோபர் 2022-ல் தைவானில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்வுகளின் தொடர்ச்சியாக, தைவான் மின்சார மற்றும் மின்னணு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் (Taiwan Electrical & Electronic Manufacturers' Association – TEEMA) தலைவர் தலைமையிலான ஒரு குழு நவம்பர் 2022 இல் தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தது. தமிழ்நாட்டின் தொழில் துறை சார்ந்த முக்கிய துறைகள் மற்றும் தைவான் நிறுவனங்களுக்கான சூழலமைப்பு போன்ற பொருண்மைகளில் விவாதங்கள் மேற்கொண்டனர். அதுபோலவே, மார்ச் 2023-ல், தைவான் காலணி உற்பத்தியாளர்கள் சங்கம் (Taiwan Footwear Manufacturers' Association – TFMA) தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தது. தோல் அல்லாத காலணிகள் துறையில் வாய்ப்புகளைக் கண்டறிந்து முதலீடுகள் மேற்கொள்வதற்காக, வழிகாட்டி நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

- முக்கியமான நாடுகளுடன், தமிழ்நாடு அரசு கொண்ட நீண்டகால உறவுகளுக்காவும், அப்பிணைப்புகளை நீட்டிப்பதற்காவும் நன்றி மற்றும் பாராட்டுகளைத் தெரிவிக்கும் வகையில், டிசம்பர் 2022-ல், தமிழ்நாடு அரசு தூதரக அதிகாரிகள், சர்வதேச வர்த்தக சங்கங்கள் ஆகியவற்றுடன் ஒரு நன்றி தெரிவிப்பு சந்திப்பினை நடத்தியது.

- டென்மார்க் தொழில் மற்றும் வர்த்தகக் கூட்டமைப்பான DI இந்தியாவின் அலுவலகத்தினை சென்னையில் திறந்திட வழிகாட்டி நிறுவனம் ஆதரவுச் சேவைகள் மேற்கொண்டது. இந்தியா

TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 6]

மற்றும் டென்மார்க் நாடுகளுக்கிடையே உறவுகள் மேம்படுத்துவதற்கும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் முதலீடுகள் மற்றும் கூட்டாண்மை அதிகரிப்பதற்கும் இந்நிறுவனத்துடன் வழிகாட்டி நிறுவனம் இணைந்து பணியாற்றிடும்.

- டென்மார்க் நகரத்தின் பட்டத்து இளவரசர் மற்றும் இளவரசி தலைமையில், அமைச்சர் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் அடங்கிய ஓர் உயர்மட்டக் குழு, மார்ச் 2023-ல் வருகை புரிந்தது, தமிழ்நாடு மற்றும் டென்மார்க் நாட்டின் முன்னணி நிறுவனங்களுக்கிடைய பத்தாண்டுகளுக்கும் மேலாக நிலவும் உறவை பலப்படுத்தும்விதமாக அமைந்தது. அந்நிறுவனங்களில், சிலர், 25 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் தாங்கள் கண்ட வளர்ச்சியைக் கொண்டாடியதும் குறிப்பிடத்தக்கது.

- 12-1-2023 அன்று உலகத் தமிழ் புலம்பெயர்ந்தோர் தினம் கொண்டாடப்பட்டது. தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த தலைசிறந்த பேச்சாளர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் பல்வேறு தலைவர்கள் ஆகியோருடன், முதலீடுகள் மற்றும் இருதரப்பு பொருளாதார உறவுகள் குறித்த விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- பசுமை ஹைட்ரஜன் மற்றும் வருங்கால நகர் திறன் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு வாய்ப்புகளை கண்டறிவதற்காக, ஆராய்ச்சி அறிஞர்கள் மற்றும் கொள்கை நிபுணர்கள் அடங்கிய ஒரு குழு தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தது. வெளிநாடு காமன்வெல்த் மற்றும் மேம்பாட்டு அலுவலகம் (Foreign Commonwealth & Development Office (FCDO) நிறுவனம் ஆதரிக்கும், ஆராய்ச்சி திட்டமான காலநிலை இணக்க வளர்ச்சி (Climate Compatible Growth – CCG) யின் ஒரு பகுதியாக இந்த வருகை அமைந்திட்டது. இக்குழு, பசுமை ஹைட்ரஜன் குறித்த ஒரு பயிலரங்கத்தை நடத்துவதற்கும் வழிகாட்டி நிறுவனம் உதவி புரிந்தது.

- மேற்கு ஆஸ்திரேலிய அரசு, தனது முதலீடு மற்றும் வர்த்தக மேம்பாட்டு அலுவலகத்தை தமிழ்நாட்டில் நிறுவியுள்ளது. இதன் பொருட்டு பரஸ்பர ஒத்துழைப்புக்

கடிதம் வழிகாட்டி நிறுவனத்துடன் பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளது.

- 2023 ஆம் ஆண்டு டாவோஸில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினால் மாநிலத்திற்கு ஏற்பட்ட பலன்களை வலுப்படுத்தும் விதமாக, சுவிஸ் இந்தியன் வர்த்தக சபை (Swiss-Indian Chamber of Commerce – SICC) தமிழ்நாட்டில் நிறுவப்பட்டுள்ளது. சுவிட்சர்லாந்து முதலீடுகளை தமிழ்நாட்டில் ஈர்ப்பதற்கான மையப்புள்ளியாக இந்த வர்த்தக சபை விளங்கும்.

1.6 சிறப்பு முன்முயற்சிகள்

1.6.1 பணி ஆய்வகப் பிரிவு

தொழிற்சாலைகள்-கல்வித் துறை ஒத்துழைப்பு - அதிக மதிப்புள்ள தயாரிப்பு, மேம்பாடு, வடிவமைப்பு மற்றும் புத்தாக்கத்திற்கு ஏற்றவாறு மாநிலத்தில் உள்ள தொழில் அடித்தளம் நிலையாகவும் தொடர்ச்சியாகவும் முடுக்கி விடப்பட வேண்டுமானால், எதிர்கால தொழில் வளர்ச்சிக்கு ஏற்றவாறு நமது பணியாளர்களைத் தயார்படுத்துவது மிகவும் இன்றியமையாதது. 120 தொழிற்சாலைகளுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு, அதன்மூலம் “நான் முதல்வன்” திறன் மேம்பாட்டுத் திட்டத்திற்கு பணியாய்வகப் பிரிவு சேவை நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. மேலும். இந்தப் பணி ஆய்வகப் பிரிவு, 2022 ஆம் ஆண்டு, தொழில்நுட்ப கல்வி இயக்குநரகம் மற்றும் 40-க்கும் மேற்பட்ட தொழில் வல்லுநர்கள் ஆகியோருடன் இணைந்து, கட்டுமானவியல், இயந்திரவியல், ECE, EEE & CSE ஆகிய துறைகளில் பாலிடெக்னிக் படிப்புகளை மறுசீரமைக்க முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

தொழிலகங்களுக்கும், அரசு நிறுவனங்களான திறன் மேம்பாட்டுக் கழகம், மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகம் போன்ற நிறுவனங்களுக்குமிடையே 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம் பல்வேறு தொழில்நுட்பத் துறைகளில் பயிலும் டிப்ளமோ மாணவர்களுக்கு பணிசார் பயிற்சிகளும், திறன் மேம்படுத்துதல் ஆகிய திட்டங்களும் மேற்கொள்ளப்படும். கோயம்புத்தூர், விழுப்புரம், பெருந்துறை

2023 ஏப்ரல் 6]

மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் உள்ள கல்வி நிறுவனங்கள் இதன் மூலம் வெகுவாக பயனடையும்.

*மேலும், கல்வி மற்றும் தொழில் நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் வகையில், வழிகாட்டி நிறுவனத்திற்கும், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த வெளிநாட்டு ஒத்துழைப்பு மற்றும் நிலையான கூட்டாண்மை சங்கம் (*Overseas Technical Cooperation and Sustainable Partnerships *(*AOTS*)* *நிறுவனத்திற்குமிடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜப்பான்-இந்தியா உற்பத்திக்கான கல்வி மையங்களை அதிகரித்து, ஜப்பானிய உற்பத்திக்கேற்றவாறு தொழில்நுட்பப் பாடங்கள் மாநிலத்தில் அறிமுகப்படுத்தப்படும்.*

தொழில் திட்டங்களுக்கு வேண்டிய தொழிலாளர் / பணியாளர் தேவைகளை எளிதாக்குதல் - புதிய மற்றும் ஏற்கெனவே உள்ள முதலீட்டாளர்கள், தங்கள் பணியாளர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்திட, பணி ஆய்வகப் பிரிவு, ஆதரவுச் சேவைகள் அளித்து வருகிறது. 2022 ஆம் ஆண்டில், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், திருப்பூர் மற்றும் சென்னை ஆகிய நகரங்களில் உள்ள 30-க்கும் மேற்பட்ட பெரிய தொழிற்சாலைகளிடம் பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டு, வேலைவாய்ப்பு முகாம்களில் பங்கேற்க வைத்தது.

பயிற்சி திட்டங்கள் - ஒரு செயலை செய்வதன்மூலம் கற்றுக் கொள்வது, அச்செயலில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான சிந்தனைகளை வளர்த்திடும். அவ்வாறே, தொழிற்சாலைகளில் பயிற்சி மேற்கொள்ளும் மாணவர்களுக்கு, நடைமுறை சிந்தனை மற்றும் சிக்கல்கள் தீர்வு ஆகியவற்றைக் கற்றுக்கொள்ள பல சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன. 45 தொழிற்சாலைகளுடன் இணைந்து, 1,500 மாணவர்களுக்கு மேல் இவ்வாறான பயிற்சி வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

ஆசிரியர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்கள் - மேலும் தொழிற்சாலைகளில் பின்பற்றப்படும் நவீன உற்பத்தி செயல்முறைகள் மற்றும் தொழில்நுட்பங்களின் சமீபத்திய முன்னேற்றங்களை அறிந்து கொள்வதற்காக, முன்னணி பொறியியல் உற்பத்தி நிறுவனங்களின் ஆதரவுடன், பொறியியல் துறைகளில் 65 பேராசிரியர்களுக்கு ஆசிரியர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டது.

[2023 ஏப்ரல் 6

1.6.2 மேம்பட்ட உற்பத்தி மையம்

உலக பொருளாதார மன்றத்துடன் இணைந்து செயலாற்றி, தெற்கு ஆசியாவிலேயே முதல் மேம்பட்ட உற்பத்தி மையத்தை நிறுவ வேண்டும் என்பது தமிழ்நாடு அரசின் மிக முக்கிய திட்டங்களில் ஒன்று. இம்மையம் நிறுவும் திட்டம் சரியான பாதையில் பயணித்து வருகின்றது. இதற்காக பல துறைகளுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு, ஒரு சிறப்பான திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது. இதன் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஜூன் 2022-ல் நான்காம் தலைமுறை தொழில் தயார்நிலை ஆய்வு (Industry 4.0 Readiness Survey) ஒன்றை துவக்கி வைத்தார்கள். அதன் தொடர்ச்சியாக, வழிகாட்டி நிறுவனம், இன்போசிஸ், IIT மெட்ராஸ் மற்றும் நாட்டிங்கம் பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து ஓர் ஆய்வு மேற்கொண்டுள்ளது. நான்காம் தலைமுறை தொழில் வளர்ச்சியினை இலக்காகக் கொண்ட நடவடிக்கைகளை மதிப்பிடுவதற்கும் மேம்படுத்துவதற்கும் எதிர்கால நிறுவனங்களுக்கு இந்த அறிக்கை உதவிடும்.

1.6.3 கரையோர காற்றாலை உற்பத்தி வசதி

தமிழ்நாட்டின் கடல்சார் காற்றாலைத் திறன் கிட்டத்தட்ட 35 ஜிகாவாட் அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய காற்று எரிசக்தி நிறுவனம் (National Institute of Wind Energy (NIWE), பலதரப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து நடத்திய ஆரம்ப ஆய்வுகளின் அடிப்படையில், தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள எட்டு மண்டலங்கள் ஒன்றிய அரசால் அடையாளம் காணப்பட்டு, கடலோர காற்றாலை எரிசக்தி மண்டலங்களாக கண்டறியப்பட்டு உள்ளன. கன்னியாகுமரி மற்றும் ராமேஸ்வரம் இடையே உள்ள பகுதி, அதிக சாத்தியக்கூறுகளைக் கொண்டிருப்பதாக இந்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஒன்றிய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் (The Ministry of New and Renewable Energy – MNRE), தமிழ்நாட்டின் கடலோரத்தின் முன்மொழியப்பட்ட கடலோர காற்றாலை ஆற்றல் திட்டங்களுக்கான (Offshore Wind Energy projects) கடல்படுகை குத்தகை (Sea bed leasing) தேர்வுக்கான கோரிக்கை ஆவணத்தை வெளியிட்டுள்ளது (Request for Selection – RfS). காற்றாலை மின் திட்டங்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும்

2023 ஏப்ரல் 6]

2 ஜிகாவாட் திறன் மின்சாரம் மாநிலத்திற்கே வழங்கப்படும் என்று MNRE வெளியிட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, தென் மாநிலங்களில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக, இந்த மொத்த மின் உற்பத்தியையும் மாநிலமே வாங்கிக் கொள்வதாக, தமிழ்நாடு அரசு தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளது.

எரிசக்தி ஆதாரங்கள் மற்றும் அதன் தொடர்பான உற்பத்தி முதலீடுகள் மூலமாக, கணிசமான அளவில் பயன்பெறும் நிலையில் நமது மாநிலம் உள்ளது. சமீபத்திய ஆண்டுகளில், நார்டெக்ஸ், கமீசா, எனர்கான் மற்றும் வெஸ்டாஸ் போன்ற எரிசக்தி உபகரண உற்பத்தியாளர்கள் தமது திட்டங்களை இங்கு நிறுவியுள்ள காரணத்தால், காற்றாலை எரிசக்தி உபகரண உற்பத்திக்கான தொழில் சூழலமைப்பை மாநிலம் வெகுவாக மேம்படுத்தியுள்ளது. இதுபோலவே, வார்ப்பாலைகள், வடிவமைத்தல் மற்றும் பொது உற்பத்தி நிறுவனங்கள் வலுவாக உள்ள காரணத்தால், கியர் பாக்ஸ் உற்பத்தியாளர்கள் மற்றும் உயர் கோபுரங்கள் கட்டுபவர்கள் போன்றவர்களும், தமது திட்டங்களை தமிழ்நாட்டில் நிறுவுகின்றனர். கடலோர காற்றாலை உற்பத்தி என்பது, தற்போதுள்ள நிறுவனங்களும் புதிய முதலீட்டாளர்களும், தங்களது புதிய/விரிவாக்க/மதிப்புக் கூட்டு திட்டங்களை நிறுவிட, பல வாய்ப்புகளை வழங்குகிறது. அது மட்டுமல்லாமல், கடலோரக் காற்றாலை திட்டங்கள், தூத்துக்குடி துறைமுகம் மற்றும் இதர சிறிய துறைமுகங்களுக்கு, பணியாளர் மற்றும் கப்பல் இயக்கத்தினை மேம்படுத்தி, ஆதரவுச் சேவைகள் மற்றும் பராமரிப்பு போன்றவற்றை மேம்படுத்திடவும் உதவிடும்.

இத்துறையில் மாநிலத்தின் திறனை வெளிப்படுத்தவும், பல திட்டங்களை வகுத்திட ஏதுவாகவும், வழிகாட்டி நிறுவனம், டெலாய்ட் மற்றும் உலகளாவிய காற்றாலை எரிசக்தி கவுன்சில் (Global Wind Energy Council) ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து, ஒரு இடைவெளி பகுப்பாய்வு அறிக்கையை (gap analysis report) வெளியிட, வழிவகை செய்தது.

1.7 2023-2024 ஆம் நிதியாண்டில் செயல் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2024 ஆம் ஆண்டு ஜனவரி 10, 11 ஆகிய தேதிகளில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்படும் என்று அறிவித்துள்ளார்கள். மேலும்,

வழிகாட்டி நிறுவனம், இந்த நிகழ்வுக்குத் தேவையானதும் இன்றியமையாததும் ஆன முதலீட்டு ஊக்குவிப்பு நடவடிக்கைகளையும் அவ்வாறான திட்டங்கள் அமைக்கப்பட்ட பிறகு மேற்கொள்ள வேண்டிய ஆதரவுச் சேவைகளையும் மேற்கொள்ளும் வகையில், சில செயல்திட்டங்களை திட்டமிட்டுள்ளது.

1.7.1 முதலீட்டு ஊக்குவிப்பு

6-4-2022 அன்று, சட்டமன்ற விதி 110-ன்கீழ், உலகளாவிய முதலீட்டாளர்களை ஈர்த்திடவும், 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை அடைந்திடும் நோக்கத்துடனும், உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்படும் என்று சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். 2024 ஆம் ஆண்டு, ஜனவரி 10 மற்றும் 11 ஆகிய தேதிகளில் இந்த நிகழ்வினை நடத்திட அரசு அனுமதி அளித்துள்ளது. மேலும், இந்நிகழ்வினைச் சிறப்பாக நடத்திடுவதற்காக, 100 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் பொருட்டு, 2023-24 நிதியாண்டில், கடந்த ஆண்டில் அரசின் சாதனைகள், நாடு/நிறுவனங்கள் சார்ந்த கண்காட்சிகள், உலகளாவிய நிபுணர்களுடன் வட்ட மேசை மாநாடுகள், இந்நிகழ்விற்கான கூட்டாளி நாடுகளுடன் பல்வேறு அமர்வுகள், அரசு-வணிக சந்திப்புகள், வாங்குபவர்–விற்பவர்களுக்கான சந்திப்புகள், தொழிற்சாலைகளுக்கான சுற்றுலா, கலாச்சார மற்றும் தொடர்புப் பிணையங்கள் (Networking), நிரலோட்டங்கள் (Hackathons) மற்றும் விளக்கக் காட்சிகள் போன்ற நடவடிக்கைகள் முக்கிய நடவடிக்கைகளாக கண்டறியப்பட்டுள்ளன. இந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்துவதற்கான முன்னோட்ட நிகழ்வுகளாக, வழிகாட்டி நிறுவனத்தின் முதலீட்டு ஊக்குவிப்புக் குழு, சர்வதேச மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களை இலக்கு வைத்து, அதற்கேற்றாற்போல முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்வுகள் நடத்தும். முதலீடு ஈர்ப்பு நடவடிக்கைகளின் உத்வேகத்தை அதிகரிக்கும் வகையில், மாவட்டவாரியாக முதலீட்டு நிகழ்வுகள் நடத்தப்பட உள்ளன.

முதலீட்டு நோக்கங்களை, உண்மையான முதலீடுகளாக மாற்றி, மாநிலத்தில் நிறுவ செய்திடுவதே, இதன் நோக்கம்.

2023 ஏப்ரல் 6]

தலைப்புச் செய்திகளுக்காக மட்டும், பெரிய பெரிய திட்டங்களை ஈர்த்ததாக அறிவிப்பது, முதலீட்டாளர்கள் மனதில் ஐயத்தை விளைவிக்கும். மேலும், தமிழ்நாட்டிற்கு வெளியில் இருந்து வரும் முதலீட்டாளர்கள், தங்கள் உற்பத்தி மற்றும் இதர முதலீடுகளுக்கான தளமாக தமிழ்நாடு வழங்கிடும் வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டு, தங்களின் முதலீடுகளை உறுதி செய்வதே, இம்முயற்சிகளின் நோக்கமாகும். அதே நேரத்தில், மாநிலத்தில் உள்ள பெரிய மற்றும் சிறிய தொழில்கள், புத்தொழில்கள் உள்ளிட்ட தொழில் முனைவோர் மற்றும் இதர நிறுவனங்கள், வணிகம் செய்ய சாத்தியக்கூறு உள்ள நிறுவனங்களுடன் தங்களை இணைத்துக் கொள்ள இயலும்.

1.7.2 வணிகம் புரிதலை எளிதாக்குதல்

1.7.2.1 முதலீடுகளுக்கான ஆதரவுச் சேவைகள் மற்றும் திட்டங்கள் அமைக்கப்பட்ட பின் வழங்கப்படும் சேவைகள்

- வணிகம் புரிதலை எளிதாக்கும் குழு, 82 கூடுதல் சேவைகளை ஒற்றைச் சாளர இணையத்தில் இணைக்கும். இதன் மூலம் திட்டமிட்ட 236 சேவைகள் ஒற்றைச் சாளர இணையதளம் மூலம் வழங்குவது உறுதிப்படும்.
- ஒன்றிய அரசின் DPIIT துறையுடன் இணைந்து செயலாற்றி, ஒரு இணக்கச் சுமை குறைப்பு மதிப்பீட்டுப் பயிற்சி ஒன்று 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்னோடி திட்டங்களும் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.
- தகவல் தரவு மையங்களுக்கு ஆதரவுச் சேவைகள் வழங்கிடும் விதமாக “நில அன்பளிப்பு” தொடர்பாக 2023 ஆம் ஆண்டில் சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

1.7.2.2 ஏற்றுமதி ஊக்குவிப்புப் பிரிவு

தமிழ்நாடு ஏற்றுமதிக் கொள்கை 2021-ல் அறிவித்துள்ளபடி, சமீபத்திய ஏற்றுமதிப் போக்குகள், இணக்கங்கள், சந்தை நிலவரங்கள் ஆகியவற்றைக் கண்டுபிடிப்பதற்கும், தகவல்களை எளிதில் அணுகக் கூடிய வகையிலும், ஒரு மின்னணு தளம் வடிவமைக்கப்படும்.

[2023 ஏப்ரல் 6

1.7.3 சிறப்பு முயற்சிகள்

- மேம்பட்ட உற்பத்தி மற்றும் நான்காம் தலைமுறை தொழில் வளர்ச்சி தொடர்பாக ஒரு பிரத்யேக இணையதளம் 2023-ஆம் ஆண்டில் உருவாக்கப்படும். இத்துறை சம்பந்தப்பட்ட அனைத்து பங்குதாரர்களும் பயன்பெறும் வகையில் இது அமைக்கப்படும்.
- அறிவுசார் நகரங்கள் மற்றும் பூங்காக்கள் அமைத்தல் - ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், திறன் பயிற்சி மையங்கள் மற்றும் அறிவுசார் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து, புகழ்பெற்ற சர்வதேச பல்கலைக்கழகங்கள் நிறுவப்படுவதை மேலும் மேம்படுத்திடும் வகையில், அறிவுசார் பூங்காக்கள் மற்றும் நகரங்கள் நிறுவப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
- மேம்பட்ட உற்பத்தி மற்றும் நான்காம் தலைமுறை தொழில் வளர்ச்சி சார்ந்த தொழில்நுட்பங்களை ஏற்றுக் கொள்வதற்கு உதவிடும் வகையில், தமிழ்நாடு அரசு, ஐக்கிய நாடுகள் தொழில் மேம்பாட்டு நிறுவனத்துடன் (UNIDO) இணைந்து, முக்கியத் துறைகளில் கொள்கை வகுப்பாளர்களுக்காக திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் நடத்த முடிவெடுத்துள்ளது.

1.7.4 கொள்கை வடிவாக்கம்

- இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பை அதிகரித்தல், பசுமை எரிசக்தி வர்த்தகத்தில் ஒரு முக்கியப் பங்கு வகித்தல், குறைவான கார்பன்—பொருளாதாரத்தை நோக்கி முன்னேறுதல், குறைவான கார்பன்—உற்பத்தி நுட்பங்கள் மற்றும் விநியோகச் சங்கிலியில் முதலீடுகளை ஈர்த்தல் போன்ற இலக்குகளோடு, நைட்ரஜன்/அம்மோனியா கொள்கையை, தமிழ்நாடு அரசு வெளியிட உள்ளது.
- 2021 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தொழிற்கொள்கையின் மூலம் ஏற்பட்ட முதலீடுகள், தொழில் துறை சூழலமைப்பு போன்றவற்றில் ஏற்படுத்தப்பட்ட தாக்கம் ஆகியவை குறித்து மறுஆய்வு மேற்கொள்ளப்படும்.

2023 ஏப்ரல் 6]

2. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் நோக்கத்துடன் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) தோற்றுவிக்கப்பட்டது. சிப்காட் நிறுவனம், நிறுவப்பட்டதிலிருந்து, தமிழகத்தில் 16 மாவட்டங்களில், 6 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உட்பட, 28 தொழிற்பூங்காக்களை சுமார் 38,538 ஏக்கர் பரப்பளவில் ஏற்படுத்தியதோடல்லாமல் வளர்ச்சியடையச் செய்துள்ளது.

சிப்காட் தொழிற்பூங்காக்கள், தொழில்மயம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு இடையிலான சமநிலையை உறுதி செய்யும் வகையில், அனைத்து பகுதிகளையும் சரியானபடி இணைக்கும் வகையுடன்கூடிய தரமான நன்கு ஒளிரும் சாலைகள், மழை நீர் வடிகால் அமைப்புகள், நீர் விநியோகம் மற்றும் சேமிப்பு அமைப்புகள், அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய நிர்வாக அலுவலகங்கள், செம்மையான கண்காணிப்பு அமைப்புகள், போதுமான பசுமைச் சூழல் மேம்பாடு, நன்கு பராமரிக்கப்படும் திறந்தவெளிப் பகுதிகள் (OSR) ஆகிய அடிப்படை கட்டமைப்பு வசதிகளை கொண்டுள்ளன.

கடந்த 52 ஆண்டுகளில், சிப்காட் நிறுவனம், ஒட்டுமொத்தமாக 1.62 இலட்சம் கோடி ரூபாய் முதலீட்டுடன், 7.56 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிய 3,142 தொழில் நிறுவனங்களை உருவாக்கியும், அதன் வளர்ச்சிக்கும் இன்றியமையாத பங்களிப்பை ஆற்றியுள்ளது.

21 ஆம் நூற்றாண்டில், நான்காம் தலைமுறை தொழில் புரட்சியானது உற்பத்தி செயல்முறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அறிவார்ந்த தொழிற்சாலைகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களை நோக்கிய முன்னேற்றத்துடன், தொழில் கட்டமைப்பின் தேவைகள், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளிலிருந்து ஒருங்கிணைந்த உட்கட்டமைப்பு வசதிகளுக்கு குறிப்பிடத்தக்க வகையில் மாறியுள்ளன. சிப்காட் நிறுவனம், எப்போதும் தொழில் நிறுவனங்களில் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும்வகையில் விரிவான தொழில் சூழலை ஏற்படுத்த முனைந்து வருகிறது.

சமீப காலங்களில், சிப்காட் நிறுவனம் வளர்ந்து வரும் துறைகளான, அறைகலன்கள், மருத்துவ உபகரணங்கள், மின்னணு உற்பத்தி தொகுப்புகள், உணவுப் பதப்படுத்துதல், வருங்கால நகர்திறன், ஜவுளி மற்றும் தோல் துறைகளுக்காக மாநிலத்தில் உருவாக்கும் தனிப்பட்ட துறை சார்ந்த பூங்காக்கள் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு மணிமகுடங்களாக விளங்கும். அனுபவம் மிக்க தொழில்நுட்ப மற்றும் மேலாண்மை ஆலோசகர்கள்மூலம் குறிப்பிட்ட துறை சார்ந்த தொழில்களின் தேவைகளுக்கேற்ப, தொழில்வாரியாகவும் பல கட்டங்களாக செயல்படுத்தப்படும் வகையிலும், விரிவான தொழிற்பூங்கா பெருந்திட்டத்தினை சிப்காட் நிறுவனம் தயாரித்து வருகிறது. தனது துறை சார்ந்த தொழிற்பூங்காக்களின் மூலம் இத்துறையில் உள்ள பல்வேறு பங்குதாரர்களின் தொழிற்சூழல் அமைப்பு மதிப்புச் சங்கிலி உதவியோடு, அதிக அளவில் உற்பத்தி செய்யும் பயன்களைப் பெற சிப்காட் முயற்சி செய்து வருகிறது.

சிப்காட் நிறுவனம், தனது வணிக வசதி சேவைகளை, கோப்புகளை டிஜிட்டல் மயமாக்குதல், விரைவான ஒப்புதலுக்கான இ-அலுவலக அமைப்பு (e-office) பயன்பாடு மற்றும் தொழிற்பூங்காக்களில் இருப்பில் உள்ள நிலம் பற்றிய தகவல்களை முதலீட்டாளர்கள் மின்னணு முறையில் நேரடியாக, எளிதான முறையில் அறியும் வசதிகளுடன் புவியியல் தகவல் முறைமை வரைதளத்துடன் (GIS portal) கூடிய இ-முன்னெடுப்பு முறைக்கு மாறியுள்ளது. இணையதள நில ஒதுக்கீட்டு விண்ணப்ப முகமை, விண்ணப்பதாரர்களுக்கு எளிதான மற்றும் வெளிப்படையான சேவையை தொடர்ந்து வழங்கி வருகிறது.

சிப்காட் நிறுவனம், தொழில்மனை அளவினை எளிதாக மாற்றியமைத்தல், தொழில்மனை பயன்பாட்டினைத் தொடர் கண்காணித்தல், நிலத்தை திரும்ப ஒப்படைத்தல் மற்றும் உள் குத்தகைக் கொள்கைகளை கடைபிடிப்பதன் மூலமாக, தொழில்முனைவோர் ஒதுக்கீடு பெற்ற மனையை திறமையாகவும், முழுமையாகவும் பயன்படுத்துவதை உறுதி செய்கிறது. சிப்காட் நிறுவனத்தின் நேரடி பேச்சுவார்த்தை முறை, நிலம் கையகப்படுத்துவதை விரைவுபடுத்தியுள்ளது.

அனைவரையும் உள்ளடக்கிய நீடித்த நிலையான தொழில் வளர்ச்சி எப்போதும் சிப்காட் நிறுவனத்தின் முன்னுரிமையாக இருந்து வருகிறது. உள்கட்டமைப்பு

2023 ஏப்ரல் 6]

*மேம்பாட்டில் பங்கேற்பு திட்டத்தின் (*Participatory Infrastructure Development Program)*-கீழ், தொழிற் பூங்காக்களில் சிறப்பு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் சிறப்பு கட்டமைப்பு வசதிளை ஏற்படுத்துவதன்மூலம், சிப்காட் நிறுவனம் அதன் நில ஒதுக்கீட்டாளர்களிடையே கூட்டுப் பொறுப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. கழிவுநீரை மறுசுழற்சி செய்து பயன்படுத்துதல், நீர்நிலைகளை புத்தாக்கம் செய்தல், கார்பன் மூழ்கிகளை உருவாக்க பெருமளவில் மரம் வளர்ப்பு போன்ற செயல்கள்மூலம், சிப்காட் தனது தொழில் பூங்காக்களை பசுமையான, நிலையான சுற்றுச்சூழல் பாதுகாப்பு கொண்ட பூங்காக்களாக மாற்றி வருகிறது.*

2.1 தற்போதுள்ள தொழில் பூங்காக்கள்

சிப்காட் நிறுவனம் கீழ்க்கண்ட தனது தொழிற் பூங்காக்கள் மூலம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினை அளித்து வருகிறது.

வ. எண்	தொழிற்பூங்கா	நிலப்பரப்பு (ஏக்கரில்)
1	ராணிப்பேட்டை நிலை I & II (சிறப்புப் பொருளாதார மண்டலம் உட்பட)	1,421
2	கும்மிடிப்பூண்டி நிலை I & II (ஏற்றுமதி ஊக்குவிப்பு தொழிற்பூங்கா (EPIP) உட்பட	1,478
3	கடலூர் நிலை I, II & III	2,625
4	இருங்காட்டுக்கோட்டை	1,844
5	பிள்ளைப்பாக்கம்	1,131
6	(i) திருப்பெரும்புதூர் நிலை I, II & III (சிறப்புப் பொருளாதார மண்டலம் உட்பட)	2,185
	(ii) திருப்பெரும்புதூர் நிலை IV (மாம்பாக்கம்)	189
7	சிறுசேரி	783

வ. எண்	தொழிற்பூங்கா	நிலப்பரப்பு (ஏக்கரில்)
8	(i) ஒரகடம் நிலை I (சிறப்புப் பொருளாதார மண்டலம் உட்பட)	3,074
	(ii) ஒரகடம் நிலை II (வைப்பூர்—மாத்தூர்)	452
9	செய்யாறு நிலை I & II	2,937
10	மப்பேடு	122
11	தேர்வாய்க்கண்டிகை	1,127
12	(i) வல்லம் – வடகால் நிலை I & II	1,456
	(ii) வல்லம் – வடகால் வானூர்திப் பூங்கா	234
13	திண்டிவனம்	694
14	(i) மாநல்லூர் நிலை I	692
	(ii) மாநல்லூர் நிலை II	1,348
15	நெமிலி	229
16	திருமுடிவாக்கம்	82
17	எறையூர்	244
18	பெருந்துறை (சிறப்புப் பொருளாதார மண்டலம் உட்பட)	2,623
19	ஓசூர் நிலை I & II	2,093
20	சூளகிரி நிலை I	1,022
21	பர்கூர் (சிறப்புப் பொருளாதார மண்டலம் உட்பட)	1,379
22	குருபரப்பள்ளி நிலை I & II	196
23	புதுக்கோட்டை	421
24	மானாமதுரை	492
25	தூத்துக்குடி நிலை I & II	2,509
26	நிலக்கோட்டை	387

2023 ஏப்ரல் 6]

வ. எண்	தொழிற்பூங்கா	நிலப்பரப்பு (ஏக்கரில்)
27	கங்கைகொண்டான் (சிறப்புப் பொருளாதார மண்டலம் உட்பட)	1,992
28	மணப்பாறை	1,077
	மொத்தம்	38,538

மேற்கூறிய தொழிற்பூங்காக்களில், திருப்பெரும்புதூர் (241.64 ஏக்கர்), ஒரகடம் (295.86 ஏக்கர்), பெருந்துறை (172.34 ஏக்கர்), ராணிப்பேட்டை (133.76 ஏக்கர்), கங்கைகொண்டான் (128.27 ஏக்கர்) மற்றும் பர்கூர் (149.95 ஏக்கர்) ஆகிய சிறப்புப் பொருளாதார மண்டலங்களும் அடங்கும். திருப்பெரும்புதூரில், ஃப்ளெக்ஸ்ட்ரானிக்ஸ் டெக்னாலஜிஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் நோக்கியா இந்தியா பிரைவேட் லிமிடெட், செய்யாறு, பர்கூர் மற்றும் திண்டிவனத்தில், செய்யாறு செஸ் டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட், சிறுசேரியில் டாடா கன்சல்டன்ஸி சர்வீசஸ் லிமிடெட், சின்டல் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட், காக்னிஸன்ட் டெக்னாலஜி சொலுஷன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் ஹெக்சாவேர் டெக்னாலஜீஸ் லிமிடெட் ஆகிய தனியார் சிறப்புப் பொருளாதார மண்டலங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சிப்காட் நிறுவனம் துறை சார்ந்த தொழிற்பூங்காக்கள்மீது செலுத்தும் தனிக் கவனம், அதன் வாகன உற்பத்தி தொகுப்புகள், மின்னணு தொகுப்புகள், பொது பொறியியல் தொகுப்புகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் பிற துறைகளில், பெருந்தொழில் நிறுவனங்களின் குழுமங்கள் தங்கள் தடத்தினைப் பதித்திட முன்னோடியாக உள்ளது.

திருப்பெரும்புதூர் மண்டலத்தில், ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட், இந்தியா யமஹா மோட்டார் பிரைவேட் லிமிடெட், எய்ச்சர் மோட்டார்ஸ் லிமிடெட், ரெனால்ட் நிசான் ஆட்டோமோட்டிவ் இந்தியா பிரைவேட் லிமிடெட், டெய்ம்லர் இந்தியா கமர்ஷியல் வெஹிகிள்ஸ் பிரைவேட் லிமிடெட், மோபிஸ் இந்தியா லிமிடெட், மேண்டோ ஹெல்லா எலக்ட்ரானிக்ஸ் ஆட்டோமோடிவ் இந்தியா பிரைவேட் லிமிடெட், ச்விங் ஸ்டெட்டர் இந்தியா லிமிடெட் மற்றும் பிற

நிறுவனங்களை உள்ளடக்கிய வாகன உற்பத்தி தொகுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதால் பன்முக வளர்ச்சியைக் காணமுடிகிறது.

திருப்பெரும்புதூர் பகுதியில், எஃப்ஐஎச் இந்தியா டெவலப்பர் பிரைவேட் லிமிடெட், ஃப்ளெக்ஸ்ட்ரானிக்ஸ் டெக்னாலஜிஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சாம்சங் இந்தியா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட், டெல் இந்தியா பிரைவேட் லிமிடெட், சால்காம்ப் மேனுபாக்சரிங் இந்தியா பிரைவேட் லிமிடெட், சான்மினா எஸ்சிஐ டெக்னாலஜி இந்தியா பிரைவேட் லிமிடெட், நோக்கியா சொல்யூஷன் & நெட்வொர்க்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் பிற நிறுவனங்கள் உள்ளடக்கிய மின்னணு தொகுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், திருப்பெரும்புதூர் மண்டலம், இருங்காட்டுக்கோட்டையில் உள்ள ஆடைப்பூங்கா (123.85 ஏக்கர்) மற்றும் காலணி உபகரணங்கள் பூங்கா (52.63 ஏக்கர்), ஒரகடத்தில் உள்ள ரெனால்ட் & நிஸ்ஸான் நிறுவனத்திற்கு உபகரணங்கள் உற்பத்தி செய்வோர் பூங்கா (168.73 ஏக்கர்) (Renault & Nissan Vendors Park), பிள்ளைப்பாக்கத்தில் உள்ள ரெனால்ட் & நிஸ்ஸான் நிறுவனத்திற்கு உபகரணங்கள் விற்பனையாளர் பூங்கா (Renault & Nissan Suppliers Park) (80.00 ஏக்கர்) மற்றும் வல்லம்-வடகாலில் உள்ள இந்தியா யமஹா நிறுவனத்திற்கு உபகரணங்கள் உற்பத்தி செய்வோர் பூங்கா (67.25 ஏக்கர்) ஆகிய தயாரிப்புப் பொருள் சார்ந்த தொழிற்பூங்காக்கள் சிப்காட் நிறுவனத்தின் பன்முக வளர்ச்சியினைப் பறைசாற்றுகின்றது.

ஓசூரில், அசோக் லேலண்ட், டைட்டன் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், டெரெக்ஸ், வெக் மற்றும் பிரெஸ்டீஜ் ஆகிய நிறுவனங்களால் பொது பொறியியல் தொகுப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பெருந்துறையில், ஜே ஜே மில்ஸ் லிமிடெட், கே.பிரைவேட்ஆர் மில்ஸ், பிரீமியர் பாலிவீவ் பி லிமிடெட், ஸ்ரீ கண்ணபிரான் மில்ஸ் லிமிடெட், அமர்ஜோதி ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட் மற்றும் பிற நிறுவனங்களுடன் ஜவுளி தொகுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடலூரில், கெம்ப்ளாஸ்ட் கடலூர் வினைல்ஸ் லிமிடெட், டான்ஃபாக், டாக்ரோஸ், டாடா கெமிக்கல்ஸ் மற்றும் பிற நிறுவனங்கள் வேதியியல் தொகுப்பில் உறுதியான அடித்தளத்தை ஏற்படுத்தியுள்ளன. ராணிப்பேட்டையில் பெருமளவிலான குறு, சிறு மற்றும் நடுத்தர

2023 ஏப்ரல் 6]

தொழில் நிறுவனங்கள் (MSME Units) தோல் தொழில் தொகுப்பு (Leather Cluster) வளர்ச்சிக்கு முக்கிய பங்களித்துள்ளது.

டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் லிமிடெட், சின்டெல் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட், காக்னிஸன்ட் டெக்னாலஜி சொலுஷன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், ஹெக்ஸாவேர், ஐகேட், ஜியோ இன்ஃபோகாம் மற்றும் பிற நிறுவனங்களின் வருகையினால், சிறுசேரி தகவல் தொழில்நுட்ப தொகுப்பின் மையமாக உருப்பெற்றுள்ளது. மேலும், இந்தப் பூங்கா, நேஷனல் பேமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட், சிஃபி இன்பினிட் ஸ்பேஸ் லிமிடெட், நெக்ஸ்ட்ரா டேட்டா லிமிடெட், டிசி டெவலப்மென்ட் சென்னை பிரைவேட் லிமிடெட், டெக்னோ இன்ஃப்ரா டெவலப்பர் பிரைவேட் லிமிடெட், ஈக்வினிக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் எஸ்டிடி குளோபல் டேட்டா சென்டர்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் போன்ற நிறுவனங்கள் அமையபெற்றுள்ளதால் சிறுசேரி தகவல் தொழில்நுட்ப பூங்கா, பெரும் தரவு மையமாகவும் உருவாகி வருகிறது.

சிப்காட் தொழிற்பூங்காக்களில் அமைந்துள்ள செயின்ட் கோபெய்ன் இந்தியா பிரைவேட் லிமிடெட், அப்பல்லோ டயர்ஸ் லிமிடெட், அல்லிசன் ட்ரான்ஸ்மிஷன் இந்தியா பிரைவேட் லிமிடெட், டெல்பி ஆட்டோமோடிவ் பிரைவேட் லிமிடெட், கெபாரோ இன்ஜினியரிங் இந்தியா பிரைவேட் லிமிடெட், மிச்சலின் இந்தியா பிரைவேட் லிமிடெட், ஏடிசி டயர்ஸ் பிரைவேட் லிமிடெட், ஆம்வே இந்தியா என்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட், மஹிந்திரா அண்டு மஹிந்திரா லிமிடெட், டெல்டா எலக்ட்ரானிக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், மைலான் லேபாரட்டரீஸ், டான்ஃபாஸ் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட், ஓலா எலக்ட்ரிக் டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட், ஆட்டோலிவ் இன்ஃப்ளேட்டர்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், கிரேசிம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், பிரிட்டானியா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், அன்ஜான் ட்ரக் பிரைவேட் லிமிடெட், சுந்தரம் க்ளேடன் லிமிடெட், லூகாஸ் டி.வி.எஸ்லி மிடெட், பி.சி.பி.எல். (த.நா) லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் மாநிலத்தில் நிலையான முதலீட்டையும் வேலைவாய்ப்பையும் ஏற்படுத்தியுள்ள பிற பெரிய நிறுவனங்களாகும்.

[2023 ஏப்ரல் 6

2022-2023 ஆம் ஆண்டில், சிப்காட் நிறுவனம், சூளகிரியில், ஸ்கேஃப்ளர் இந்தியா லிட் மற்றும் மாய்வா ஃபார்மா பிரைவேட் லிட், செய்யாறில், அமர ராஜா பேட்டரீஸ் லிமிடெட் மற்றும் எம்&பி இன்ஜினியரிங் லிட், எறையூரில், ஃபீனிக்ஸ் கோத்தாரி ஃபுட்வேர் லிமிடெட், கங்கைக் கொண்டானில், டி.பி. சோலார் லிமிடெட் மற்றும் வி.எஸ்.எல். க்ரீன் பவர் பிரைவேட் லிமிடெட், தேர்வாய்கண்டிகையில் சென்சுரி ப்ளைபோர்ட்ஸ் இந்தியா லிமிடட், தூத்துக்குடியில் மேனர் & மியூஸ் பர்னிச்சர் இந்தியா பிரைவேட் லிமிடெட், பெருந்துறையில் டெக்னோ ஆக்டிவேர் பிரைவேட் லிமிடெட், பர்கூரில் ஸ்ரீசக்ரா பாலிப்ளாஸ்ட் இந்தியா பிரைவேட் லிமிடெட், திருப்பெரும்புதூரில் பாக்ஸ்கான் ஹான் ஹாய் டெக்னாலஜி இந்தியா மெகா டெவலப்மென்ட் பிரைவேட் லிமிடெட் மற்றும் பாலிஹோஸ் லாஜிஸ்டிக்ஸ் பூங்கா எல்.எல்.பி, வல்லம்-வடகால் வானூர்திப் பூங்காவில் இண்டோ எம்ஐஎம் பிரைவேட் லிமிடெட் ஆகிய புதிய நிறுவனங்களை வரவேற்று, மாநிலத்தில் தொழில் வளர்ச்சியினை வலுப்படுத்தியுள்ளது. சிப்காட் நிறுவனம், கூடுதலாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக, திண்டிவனம் மற்றும் மணப்பாறையில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (சிட்கோ) நிலம் வழங்கியுள்ளது.

2.2 நில வங்கி

வருங்கால முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்முனைவோரின் நிலத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, வரவிருக்கும் தொழிற்பூங்காக்கள் மற்றும் புதிதாக உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்பூங்காக்கள் உட்பட 45,000 ஏக்கர் அளவிலான நில வங்கியை ஐந்தாண்டுகளில் உருவாக்க சிப்காட் நிறுவனம் முனைந்து வருகிறது. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்த நில வங்கி உருவாக்கப்படும்.

2.2.1 அடுத்து வரவிருக்கும் தொழிற்பூங்காக்கள்:

தற்போதுள்ள 28 தொழிற்பூங்காக்கள் தவிர, சிப்காட் நிறுவனம் 7 புதிய தொழிற்பூங்காக்களை, மொத்தம் 6,035 ஏக்கர் நிலப்பரப்பில், உருவாக்கி வருகிறது. இவற்றிற்கான நிலம் கையகப்படுத்தும் பணி முடியும் தருவாயில் உள்ளது.

2023 ஏப்ரல் 6]

வ. எண்	தொழிற்பூங்கா/ திட்டம்	மாவட்டம்	நிலப்பரப்பு (ஏக்கரில்)
1	இ.குமாரலிங்கபுரம் நிலை-I (பிரைவேட்எம் மித்ரா பூங்கா உட்பட)	விருதுநகர்	1,500
2	அதகபாடி நிலை-I	தருமபுரி	1,733
3	பூமலைக்குண்டு	தேனி	468
4	இலுப்பைக்குடி	சிவகங்கை	776
5	வைப்பார்	தூத்துக்குடி	1,020
6	மணக்குடி	இராமநாதபுரம்	225
7	சக்கரக்கோட்டை	இராமநாதபுரம்	313
	மொத்தம்		6,035

2.2.2 புதிதாக தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்பூங்காக்கள்

மேலும், சிப்காட் நிறுவனம், தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, 11 புதிய தொழிற்பூங்காக்களை மொத்தம் 14,695 ஏக்கர் நிலப்பரப்பில் தொடங்க உத்தேசித்துள்ளது, இந்த இடங்களில் நில எடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வ எண்	தொழிற்பூங்கா/ திட்டம்	மாவட்டம்	நிலப்பரப்பு (ஏக்கரில்)
1	பனப்பாக்கம்	ராணிப்பேட்டை	1,213
2	சிலாநத்தம்	தூத்துக்குடி	394
3	அல்லிக்குளம்	தூத்துக்குடி	2,234
4	கங்கைக்கொண்டான் நிலை – II	திருநெல்வேலி	1,665
5	சூளகிரி நிலை – II	கிருஷ்ணகிரி	1,902
6	வல்லப்பாக்கம்	காஞ்சிபுரம்	118

[2023 ஏப்ரல் 6

வ எண்	தொழிற்பூங்கா/ திட்டம்	மாவட்டம்	நிலப்பரப்பு (ஏக்கரில்)
7	செய்யாறு நிலை – III (மேல்மா திட்டம்)	திருவண்ணாமலை	3,174
8	மாநல்லூர் நிலை – III	திருவள்ளூர்	2,433
9	நாகமங்கலம் நிலை—I	கிருஷ்ணகிரி	1,441
10	பாடலூர்	பெரம்பலூர்	100
11	குருபரப்பள்ளி நிலை III	கிருஷ்ணகிரி	21
	மொத்தம்		14,695

கூடுதலாக, மேலும் 18 புதிய தொழிற்பூங்காக்களை மொத்தம் சுமார் 11,095 ஏக்கர் நிலப்பரப்பில் தொடங்க சிப்காட் நிறுவனம் உத்தேசித்துள்ளது. இவற்றிற்கான நிலம் உத்தேசமாக தெரிவு செய்யப்பட்டு, மேல் நடவடிக்கையில் உள்ளது.

வ. எண்	தொழிற்பூங்கா/ திட்டம்	மாவட்டம்	நிலப்பரப்பு (ஏக்கரில்)
1	இ.வேலாயுதபுரம்	தூத்துக்குடி	355
2	நாமக்கல்	நாமக்கல்	790
3	மதுரமங்கலம்	காஞ்சிபுரம்	423
4	கொடூர்	செங்கல்பட்டு	249
5	இ.குமாரலிங்கபுரம் நிலை – II	விருதுநகர்	581
6	அதகபாடி நிலை - II	தருமபுரி	690
7	காட்டுப்பள்ளி	திருவள்ளூர்	769
8	கரூர்	கரூர்	200
9	வெம்பூர்	தூத்துக்குடி	2,814
10	மகிமண்டலம்	வேலூர்	288
11	தலைவாசல்	கள்ளக்குறிச்சி	724

2023 ஏப்ரல் 6]

வ. எண்	தொழிற்பூங்கா/ திட்டம்	மாவட்டம்	நிலப்பரப்பு (ஏக்கரில்)
12	சின்னக்கோவிலன் குளம்	தென்காசி	90
13	வண்டுவாஞ்சேரி	நாகப்பட்டினம்	250
14	நாகமங்கலம் நிலை II	கிருஷ்ணகிரி	1,593
15	ஏ. சாத்தனூர்	கள்ளக்குறிச்சி	190
16	கூலநாயக்கன்பட்டி	கோயம்புத்தூர்	90
17	தாராபடவேடு	வேலூர்	74
18	அகத்தாகுளம்	விருதுநகர்	925
	மொத்தம்		11,095

2.3 நில ஒதுக்கீட்டில் ஊக்கத்தொகை

தமிழ்நாடு அரசின் தொழில் கொள்கை 2021-ன்படி, சிப்காட் நிறுவனம், "C" பிரிவு மாவட்டங்களில் (தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்கள்) தொழில் நிறுவனங்களுக்கு செய்யப்படும் நில ஒதுக்கீட்டு மதிப்பில் 50 சதவீதம் குறைத்து முன்னரே வழங்கப்படும் (front-ended) ஊக்கத்தொகையாகவும், "A" மற்றும் "B" பிரிவு (பிற மாவட்டங்கள்) சிப்காட் தொழிற்பூங்காவில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்களுக்கு நில ஒதுக்கீட்டு மதிப்பில் 10 சதவீதம் மீளப் பெறும் (back-ended) ஊக்கத்தொகையாகவும் நில ஒதுக்கீடு செய்துவருகிறது.

2.4 குறிப்பிட்ட துறை சார்ந்த தொழிற்பூங்காக்கள்

சிப்காட் நிறுவனம், தொழில் நிறுவனங்களின் தேவைகளில் ஏற்படும் மாற்றத்திற்கேற்ப, அதன் செயல்பாடுகளை மாற்றியமைத்துக்கொள்கிறது. மேலும், சிப்காட் நிறுவனம் பல்வேறு துறை சார்ந்த தொழிற்பூங்காக்களை அந்தந்த பகுதி திறனாற்றலைக் கருத்திற்கொண்டு ஏற்படுத்தியுள்ளது.

2.4.1 மாபெரும் ஜவுளிப் பூங்கா/ஒருங்கிணைந்த ஆடைப்பூங்கா

"இந்தியாவின் நூல் களஞ்சியம்" என்று அழைக்கப்படும் தமிழ்நாடு, நூற்பு, கைத்தறி நெசவு, விசைத்தறி நெசவு,

[2023 ஏப்ரல் 6

பதப்படுத்தல், பின்னலாடை, ஆடை மற்றும் ஆடைத் தொழிலில் மிக முக்கியத்துவம் பெற்றுள்ளது. விருதுநகரில் அமையவுள்ள மாபெரும் ஜவுளிப் பூங்காவானது, ஒன்றிய அரசின் பிஎம் மித்ரா பூங்கா திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டது, தமிழ்நாட்டிற்கு கிடைத்த பெருமையாகும். முதலாவதாக விருதுநகரில் பிஎம் மித்ரா பூங்கா தொடங்குவது தொடர்பாக ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு அரசுகளுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் 22-3-2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பூங்காவிற்காக சிப்காட் நிறுவனம் 1,052 ஏக்கர் நிலம் ஒதுக்கியுள்ளது. இந்தப் பூங்கா ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் கூட்டுத் திட்டமாக, ஒன்றிய அரசின் 500 கோடி ரூபாய் மானியம் உட்பட, 2,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும். இதன்மூலம் சுமார் 2 இலட்சம் வேலைவாய்ப்பு உருவாவதுடன், இப்பூங்கா தென் மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும்.

மேலும், விருதுநகர் மாவட்டம், இ.குமாரலிங்கபுரத்தில் 1,052 ஏக்கர் பரப்பில் அமையவிருக்கும் மாபெரும் ஜவுளிப் பூங்காவில், 250 ஏக்கர் பரப்பளவில் ஒருங்கிணைந்த ஆடைப்பூங்கா உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் உற்பத்திக் கூடங்களை நவீன கலைநுட்பத்துடன் மேம்படுத்தும் வகையில் 400 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் உருவாக்க சிப்காட் முனைந்து வருகிறது.

2.4.2 சர்வதேச அறைகலன் பூங்கா

தமிழ்நாடு அரசு, அறைகலன் துறையில் முன்னோடியாகத் திகழ, நாட்டிலேயே முதலாவதாகவும், உலகத் தரத்திற்கு இணையான சிறந்த தரமான வசதிகள் மற்றும் விரிவான சுற்றுச்சூழல் அமைப்புகளை நிலைக்குறியீடாகக் கொண்டு அமைக்க திட்டமிட்டு, அத்தகைய மிகப் பெரிய அறைகலன் பூங்கா ஒன்றினை தூத்துக்குடியில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில் 1,152 ஏக்கர் பரப்பளவில், 1,000 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் படிப்படியாக உருவாக்கி வருகிறது. இப்பூங்கா நிலையானதொரு சுற்றுசூழல் அமைப்புடன்கூடிய ஏற்றுமதி சார்ந்த அறைகலன் தொழிற்கூடங்கள் அமைய ஏதுவாகும். சுமார் ரூ.4,500 கோடி அந்நிய நேரடி முதலீட்டு திறன் மற்றும் 3.50 இலட்சம் நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை இப்பூங்கா உருவாக்கும்.

2023 ஏப்ரல் 6]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 7-3-2022 அன்று இந்த சர்வதேச அறைகலன் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, 2,800 கோடி ரூபாய்க்கு மேலான முதலீட்டினை ஈர்க்கும் வகையில் 8 புரிந்துணர்வு ஒப்புந்தங்கள் கையொப்பமிடப்பட்டது. மேலும், அறைகலன் தயாரிப்பில் முன்னோடி நிறுவனமான மேனர் & மியூஸ் பர்னிச்சர் இந்தியா பிரைவேட் லிமிடெட் (29.94 ஏக்கர்) நிறுவனத்திற்கு நில ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்பட்டன.

இந்த பூங்காவிற்கான பெருந்திட்டம் புகழ்பெற்ற சர்வதேச ஆலோசகர்களான ஜுராங் கன்சல்டன்ட்ஸ் (இந்தியா) பிரைவேட் லிட். அவர்களால் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறைகலன்கள் பூங்காவிற்கான பொது உட்கட்டமைப்பு வசதிகள் SIDBI வங்கியிடமிருந்து பெறப்படும் 265.64 கோடி ரூபாய் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும். உட்புற அணுகுச்சாலைக்கான கட்டுமானப் பணி முடிக்கப்பட்டுள்ளது. வெளிப்புற அணுகுச் சாலைக்கான கட்டுமானப் பணி முடியும் தருவாயில் உள்ளது.

2.4.3 மருத்துவ உபகரணத் தொழிற்பூங்கா

தமிழ்நாடு அரசு, மருத்துவ உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத் தொடர்பான துறையை தொழில் வளர்ச்சியடையக்கூடிய துறையாகக் கண்டறிந்து, அதுபொருட்டு ஒரு விரிவான தொழில் சூழலை உருவாக்க உத்தேசித்துள்ளது.

சிப்காட் நிறுவனம், மருத்துவ உபகரண துறைக்காக தொழிற்பூங்கா ஒன்றினை பிரத்யேகமாக 350 ஏக்கர் பரப்பளவில், 400 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடத்தில் உருவாக்கி வருகிறது. இப்பூங்காவில் பொது உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ஒன்றிய அரசின் மருத்துவத் துறையின் மருத்துவ உபரகண பூங்காக்கள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் 100 கோடி ரூபாய் மானியத்திற்கு அனுமதி அளித்துள்ளது.

இந்த மருத்துவ சாதனங்கள் பூங்காவானது, ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் அமைப்புடன் சோதனை ஆய்வகங்கள், முன்மாதிரி மையம், அளவுத்திருத்த வசதிகள், திறன் மேம்பாட்டு மையம் போன்றவற்றை உள்ளடக்கியதாக அமையவுள்ளது. இதனால் உயர்தர தயாரிப்பு வசதிகளும், புதுமையாக்கம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, புதிய தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல், போன்ற செயல்பாடுகளால், இப்பூங்கா நாட்டின் மருத்துவ உபகரண மையமாக மாறும்.

இப்பூங்காவின் முதல் ஒதுக்கீட்டு ஆணை 6-7-2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஜென்யூன் பயோ சிஸ்டம் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. மேலும், 15 நிறுவனங்களுக்கு ஒதுக்கீட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது. 10-10-2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் சிப்காட் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் இடையே அண்ணா பல்கலைக்கழகத்தை தொழில்நுட்ப பங்குதாரராக நியமித்து, புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. ஒரகடம் தொழிற்பூங்காவில் நிலை II மருத்துவ உபகரணங்கள் துறை சார்ந்த தொழிற் பூங்காவை மேம்படுத்த/அமைப்பதற்காக, SIDBI வங்கி ரூ.114.00 கோடி காலக் கடனுக்கு (4-11-2022) அனுமதியளித்துள்ளது. தற்போது இப்பூங்காவிற்கான உட்புற உட்கட்டமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. EMI/EMC கட்டட கட்டுமானப் பணி மற்றும் அணுகு பாதையை அகலப்படுத்தும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

2.4.4 மின்னணு தயாரிப்பு தொகுப்புகள்

வரும் ஐந்தாண்டுகளில் 100 பில்லியன் டாலர் மதிப்பிலான மின்னணு முறை வடிவமைப்பு மற்றும் உற்பத்தித் தொழிலை எட்டவேண்டும் என்ற தனது எண்ணத்தை செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு தகுந்த நிலையில் உள்ளது. உலகளாவிய நிறுவனங்கள் மாநிலத்தின் நன்கு வளர்ந்த உற்பத்தி முறையை மேம்படுத்தி வருவதால், தமிழ்நாடு, மின்னணு சாதனங்கள் வன்பொருள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் நாட்டிலுள்ள மாநிலங்களில் முக்கியமான ஒன்றாக திகழ்கிறது. எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியை அடைந்திட சிப்காட் நிறுவனம், திருவள்ளூர் மாவட்டம், மாநல்லூர் (469.09 ஏக்கர்), காஞ்சிபுரம் மாவட்டம், பிள்ளைப்பாக்கம் (379.30 ஏக்கர்) ஆகிய இரண்டு மின்னணு தயாரிப்பு தொகுப்புகளை உருவாக்க உத்தேசித்துள்ளது. ஒன்றிய அரசின் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MEITY), மின்னணு தயாரிப்பு தொகுப்புகள் (EMC) 2.0 திட்டத்தின்கீழ் வழங்கும் நிதியுதவியுடன் இந்த மின்னணு தயாரிப்பு தொகுப்புகள் ஏற்படுத்தப்படும். இங்கு, சர்வதேச மின்னணு தயாரிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்களை ஈர்க்கும் வகையில் உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு மற்றும் பொதுவான வசதிகள் உள்ளடக்கிய

2023 ஏப்ரல் 6]

ஆயத்த தொழிற்கூடங்கள்/தயார் நிலையில் உள்ள தொழிற்கூடங்கள் உருவாக்கப்படும். ஒன்றிய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்துக்கு (MEITY) இணையதள விண்ணப்பம் முறையே, 15-09-2022 (மாநல்லூர்) மற்றும் 2-11-2022 (பிள்ளைப்பாக்கம்)-ல் சிப்காட் நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்டு, பரிசீலனையில் உள்ளது.

2.4.5 மாபெரும் உணவுப் பூங்காக்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (MSME) வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, சிப்காட் நிறுவனம், மணப்பாறை (138 ஏக்கர்), திண்டிவனம் (158 ஏக்கர்) மற்றும் தேனி (152 ஏக்கர்) ஆகிய இடங்களில் உணவுப் பூங்காக்களை உருவாக்கி வருகிறது. ஒன்றிய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில் அமைச்சகம் இந்த மூன்று உணவுப் பூங்காக்களையும் மாபெரும் உணவுப் பூங்காக்களாக அறிவித்துள்ளது.

மணப்பாறை உணவுப் பூங்கா, தேனி உணவுப் பூங்கா மற்றும் திண்டிவனம் உணவுப் பூங்கா ஆகியவற்றின் உட்கட்டமைப்பு வளர்ச்சிக்காக முறையே ரூ.110.00 கோடி, ரூ.138.80 கோடி மற்றும் ரூ.85.04 கோடி காலக்கடன்களாக வழங்க, நபார்டு வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 29-12-2022 அன்று உணவுப் பூங்கா உள்ளடக்கிய மணப்பாறை தொழிற்பூங்கா நிலை-I தொடங்கி வைக்கப்பட்டு, உணவுப் பூங்காவின் முதல் நில ஒதுக்கீட்டு ஆணை தி/ள். முரல்யா டைரி புராடக்ட்ஸ் பிரைவேட் லிட்., நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

2.4.6 வருங்கால நகர்திறன் பூங்கா மற்றும் மின் வாகன பூங்கா

தூய்மையான, பாதுகாப்பான மற்றும் நிலையான மாற்றங்களை நோக்கி நகர்திறன் அமைப்புகள் செல்லத் தொடங்கியதற்கு பெருமளவு முக்கியத்துவம் ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு சிப்காட் நிறுவனம், கிருஷ்ணகிரி மாவட்டம், சிப்காட் சூளகிரியில், 300 ஏக்கர் பரப்பளவில், 300 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஒரு தொழிற்பூங்காவினை உருவாக்க உத்தேசித்துள்ளது. இந்தப் பூங்கா, மின்சார வாகனங்கள், ட்ரோன்கள், தானியங்கி வாகனங்கள் மற்றும் அவற்றின் உதிரிப் பாகங்கள், மேம்பட்ட செல் உற்பத்தி, ஆற்றல் மின்னணுவியல், உணரிகள் மற்றும் அச்சிடப்பட்ட சர்க்யூட் போர்டுகள் (PCB), மின்சார மோட்டார்

[2023 ஏப்ரல் 6

போன்ற பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை மேம்படுத்தும் நோக்கத்தில் அமையும். வருங்கால நகர்திறன் பூங்காவின் மேம்பாட்டிற்கான கருத்தியல் பெருந்திட்டத்தை தயாரிக்க பிரிட்டிஷ் உயர் ஆணையரகம் உதவி புரிந்தது.

மேலும், மாநிலத்தில் மின் வாகனச் சுற்றுச்சூழலை உருவாக்க முற்பட்டுள்ள தமிழ்நாடு அரசின் குறிக்கோளினை எய்திட சிப்காட் நிறுவனம் அதன் மாநல்லூர் தொழிற்பூங்காவில் 300 ஏக்கர் பரப்பளவில் மின் வாகனச் பூங்கா ஒன்றை ஏற்படுத்தி வருகிறது. இந்த பூங்கா மின் வாகன துறையில் உள்ள வாகன உபகரண தயாரிப்பாளர்கள், பேட்டரி மற்றும் உதிரிப் பாகங்கள் தயாரிப்பாளர்களின் முதலீட்டினை ஈர்க்கும் வகையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2.4.7 மாபெரும் தோல் காலணி மற்றும் துணைப் பொருட்கள் தொகுப்பு

சிப்காட் நிறுவனம், ராணிப்பேட்டை மாவட்டம், பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் 300 ஏக்கர் பரப்பளவில், 275 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மாபெரும் தோல் காலணி மற்றும் துணைப் பொருட்கள் தொகுப்பினை ஏற்படுத்த உத்தேசித்துள்ளது. இந்த தொகுப்பு, ஒன்றிய அரசின் தொழில் மற்றும் உள்வர்த்தகம் மேம்பாட்டுத் துறையின் (DPIIT) இந்திய காலணி மற்றும் தோல் மேம்பாட்டு துணை திட்டமான மாபெரும் தோல் காலணி மற்றும் துணைப் பொருட்கள் தொகுப்பு மேம்பாடு (MLFACD) வழங்கும் நிதியுதவியுடன் ஏற்படுத்தப்படும். இப்பூங்காவில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மட்டுமின்றி, ஆயத்த தொழிற்கூடங்கள், சேமிப்புக் கிடங்குகள், வர்த்தக மையம், பொருள் வடிவமைப்பு மையம், பரிசோதனைக்கூடம் ஆகியவை அமையவுள்ளது. சிப்காட் நிறுவனம் இத்திட்டத்திற்கான கொள்கை அளவிலான ஒப்புதல் கோரும் முன்மொழிவினை செப்டம்பர் 2022-ல் ஒன்றிய அரசின் வர்த்தக மற்றும் வளர்ச்சித் (DPIIT) துறைக்கு சமர்ப்பித்துள்ளது.

கூடுதலாக, பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் காலணி தயாரிப்புத் துறைக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம் (SEZ) ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த சிறப்புப் பொருளாதார மண்டல அறிவிப்பிற்காக, விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது.

2023 ஏப்ரல் 6]

2.5 சிறப்பு முன்னெடுப்புகள்

நிலையான தொழில் வளர்ச்சியினை கருத்தில் கொண்டு தொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்ப சிப்காட் நிறுவனம் பல்வேறு சிறப்பு திட்டங்கள் வாயிலாக தன்னுடைய சேவையை மேற்கொண்டு வருகிறது.

2.5.1 சிப்காட் தொழில் புத்தாக்க மையம்

சிப்காட் தொழில் புத்தாக்க மையங்கள் (SIIC) ஓசூர் மற்றும் திருப்பெரும்புதூர் சிப்காட் தொழிற்பூங்காக்களில் 33.46 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழ்நாடு மாநில திட்டக் குழுவின் தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் (TANII) திட்டத்தின்கீழ் மானியமாக பெறப்பட்ட 14.20 கோடி ரூபாய் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இம்மையங்கள், தொழில் புத்தாக்கங்களும், தொழில்நுட்பங்களும் கொண்டு தொழில் முனைவோரின் இயக்கங்களை, உலகளாவிய தரத்தில் பாதுகாத்து வளர்த்து விரைவாக செயல்பட வழிவகை செய்யும் மையங்களாகக் இருந்து வருகின்றன. இம்மையங்கள் உயர் தொழில்நுட்பத் துறைசார் தொழில்களை தமிழ்நாட்டில் மேம்படுத்திட உத்தேசித்துள்ளது. மேலும், உற்பத்தித் திறனை பலப்படுத்தவும், சந்தையில் போட்டியிடும் தன்மையை மேம்படுத்தவும், இது உதவிகரமாக அமையும்.

இந்த மையங்கள் ஒவ்வொன்றும் 23,500 சதுர அடி கொண்ட கட்டடங்களாக அமைக்கப்பட்டுள்ளன. இம்மையங்களில், புதுமையாளர்கள்/தொழில் தொடங்குபவர்கள் (Start – Ups) கூட்டாகப் பணிபுரியும் இடம் மற்றும் தொழில் 4.0 உபகரணங்கள் தயாரிப்புகள் மேம்பாட்டு மையம், முன்மாதிரி தயாரிப்பு வசதி (prototyping) மற்றும் பயிற்சி நிலையம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மையங்கள் வாயிலாக 1,000-க்கும் மேற்பட்ட புதுமையான சிந்தனைகள், 200-க்கும் மேற்பட்ட முன்மாதிரி தயாரிப்பு மற்றும் 30-க்கும் மேற்பட்ட தொழில் தொடங்குபவர்களை ஊக்குவித்து தொழில் முனைவோர்களாக உருவாக்கிட சிப்காட் நிறுவனம் உத்தேசித்துள்ளது.

இப்புத்தாக்க மையங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24-6-2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ளன. கோயம்புத்தூர் இன்னோவேஷன் மற்றும் பிசினஸ் இன்குபேட்டர் (Coimbatore

Innovation and Business Incubator) நிறுவனம் தொழிநுட்ப பங்குதாரராக நியமிக்கப்பட்டு இம்மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதுவரை, ஓசூர் புத்தாக்க மையத்தில் 7 தொழில் தொடங்குபவர்களும், திருப்பெரும்புதூர் புத்தாக்க மையத்தில் 3 தொழில் தொடங்குபவர்களும், இம்மையங்களில் உள்ள வசதிகளைப் பயன்படுத்த தொடங்கியுள்ளனர்; மேலும், பல தொழில் தொடங்குபவர்களும் இந்த வசதிமீது ஆர்வம் காட்டி வருகின்றனர்.

2.5.2 நான் முதல்வன் திட்ட முன்னெடுப்பு

நான் முதல்வன் திட்ட முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, ஓசூர் மற்றும் திருப்பெரும்புதூரில் அமைந்துள்ள சிப்காட் தொழில் புத்தாக்க மையங்கள், இளைஞர்கள் 4 ஆம் தலைமுறை தொழில்நுட்ப பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு பெற்று சிறந்த வேலைவாய்ப்பினைப் பெற்றிட ஒரு தளமாக உள்ளன. மேலும் இம்மையங்கள் இளைஞர்கள் தங்களது எண்ணங்களை வெற்றிகரமான தொழில் திட்டங்களாக மாற்ற உதவுகிறது.

சிப்காட் நிறுவனம், இளைஞர்கள் அவர்கள் பகுதிகளில் அமைந்துள்ள சிப்காட் தொழிற்பூங்காக்களில் உள்ள தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிக்கான வாய்ப்பு பெற, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து செயலாற்றி வருகிறது. மேலும், சிப்காட் நிறுவனம், நான் முதல்வன் திட்ட முன்னெடுப்புகள் குறித்து அதன் தொழிற்பூங்காக்களில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்கள் அனைத்துக்கும் தெரிவித்து, அவர்களின் தொழிற்கூடங்களிலுள்ள காலிப் பணியிடங்கள்/தொழிற் பயிற்சிக்கான வாய்ப்பு குறித்த தகவல்களை நான் முதல்வன் திட்ட இணைய முகப்பில் பதிவேற்றம் செய்வதன்மூலம் அத்தொழில் நிறுவனங்களும், இளைஞர்களும் பயனடைய வழிவகை செய்துள்ளது. சிப்காட் நிறுவனத்தின் இத்தொடர் முயற்சியால், இளைஞர்கள் வாழ்வு மேம்படுவதோடு, பொருளாதார வளர்ச்சியும் ஏற்படும்.

2.5.3 தொழிலாளர் தங்குமிட வசதி

பாதுகாப்பான, தரமான, தங்குமிட வசதிகளை தொழிலாளர்களுக்கு அவர்களது சக்திக்கு உட்பட்டு வழங்குவது தொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. மேலும், கொரோனா பெருந்தொற்று இந்த தேவையின் முக்கியத்துவத்தை

அதிகரித்துள்ளது. சிப்காட் நிறுவனம் தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனத்துடன் (TNIFMC) இணைந்து தமிழ்நாடு தொழிலாளர் குடியிருப்பு நிறுவனம் என்ற பெயரில் ஒரு சிறப்பு நோக்கு முகமையினை ஏற்படுத்தி, அதன்மூலம் தொழிற்சாலைப் பணியாளர்களுக்கு நிலையான மற்றும் சக்திக்கு ஏற்ற தங்குமிட வசதிகளை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது.

தற்போது, தமிழ்நாடு தொழிலாளர் குடியிருப்பு நிறுவனம், பணிபுரியும் மகளிருக்காக, சிப்காட் சிறுசேரி தொழிற்பூங்காவில் 807 படுக்கைகளுடன்கூடிய ஒரு தங்குமிடத்தை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது. மேலும், தொழிலாளர் தங்குமிட வசதி திட்டத்தை மாநிலத்தில் பரவலாக ஏற்படுத்த ஏதுவான இடங்களை, இந்த சிறப்பு நோக்கு முகமை தேர்வு செய்யும்.

மேலும், சிப்காட் நிறுவனம் நேரடியாக வல்லம் – வடகால் தொழிற்பூங்காவில் 670 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 18,720 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் தங்குமிட வசதி ஒன்றினை ஒன்றிய அரசின் குறைந்த வாடகை வீட்டு வளாகம் (ARHC) திட்டத்தின்கீழ் வழங்கும் 37.44 கோடி ரூபாய் மானியம் மற்றும் பாரத ஸ்டேட் வங்கியிடமிருந்து பெறப்பட்ட 498 கோடி ரூபாய் காலக்கடன் கொண்டு நிறைவேற்றி வருகிறது.

13 கட்டடங்களுக்கான கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள 527.56 கோடி ரூபாய்க்கான பணி ஆணை வழங்கப்பட்டு, அனைத்து கட்டடங்களுக்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்தில் குறிப்பிடத்தக்க பணி முன்னேற்றத்தினை கண்டு, ஒன்றிய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற அலுவல்கள் அமைச்சகத்தின் குறைந்த வாடகை வீட்டு வளாகங்கள் (ARHC) திட்டம் மாதிரி 2-ன்கீழ் அதிவேகமாக செயல்பட்டமைக்கான விருதினை 19-10-2022 அன்று தமிழ்நாட்டிற்கு வழங்கியுள்ளது.

மேலும், சிப்காட் நிறுவனம், தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்காக பெருந்துறையில் 6.43 கோடி ரூபாய் திட்ட மதிப்பில் 222 படுக்கை வசதிகளுடனும், தூத்துக்குடியில் 5.88 கோடி ரூபாய் திட்ட மதிப்பில் 252 படுக்கை வசதிகளுடனும் மகளிருக்கான பிரத்யேக தங்குமிட வசதியை

அனைத்து அடிப்படை வசதிகளுடன் அமைத்து வருகிறது. இதற்கான கட்டுமானப் பணிகள் இரண்டு தங்குமிட வசதிகளில் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் நிறைவு பெற்று செப்டம்பர் 2023-ல் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

இதுவரை, சிப்காட் நிறுவனம் (i) இருங்காட்டுக்கோட்டையில் மகளிர் தங்குமிட வசதி (330 நபர்கள்) (ii) திருப்பெரும்புதூரில் ஆடவர் தங்கும் விடுதி (400 நபர்கள்) (iii) திருப்பெரும்புதூரில் மகளிர் தங்கும் விடுதி (600 நபர்கள்) ஆகிய மூன்று விடுதிகளைக் கட்டி முடித்து, அவை பயன்பாட்டில் உள்ளன.

கூடுதலாக, சிப்காட் நிறுவனத்தின் சமூகப் பொறுப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக திருப்பூர் மாவட்டத்தில் நெருப்பெரிச்சல் கிராமத்தில் 8.58 கோடி ரூபாய் மதிப்பில் மகளிர் தங்கும் விடுதியொன்றை (600 நபர்கள் ஏற்படுத்தியுள்ளது. இத்துடன் இதே இடத்தில் 10.18 கோடி ரூபாய் மதிப்பில் சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்தவர்களுக்காக 400 நபர்கள் தங்கும் வசதி கொண்ட விடுதி கட்டப்பட்டுள்ளது. இவ்விடுதியானது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 6.7.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது.

2.5.4 தண்ணீர் பாதுகாப்புத் திட்டம்

நீடித்து நிலைத்த தன்மையே, சிப்காட் நிறுவனத்தின் மேம்பாட்டு அணுகுமுறையின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாக அமைந்துள்ளது. ஒரு விரிவான தண்ணீர் பாதுகாப்பு திட்டம் நமது நீர் ஆதாரங்களைப் பாதுகாத்து செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கான விரிவான தண்ணீர் பாதுகாப்புத் திட்டம், கட்டடம் மற்றும் சுற்றுச்சூழலுக்கான மையம் (CUBE) வாயிலாக தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக தயாரிக்கப்படும் விரிவான திட்ட அறிக்கையில் (DPR) நீர்நிலைகளுக்கு புத்துயிரூட்டல், தொழிற்பூங்காக்களிலும் அதனருகாமையிலும் அமைந்துள்ள நீர்நிலைகளை மீட்டெடுத்தல் மற்றும் மழைநீர் சேமிப்பு ஆகியவை அடங்கும். 19 சிப்காட் தொழிற்பூங்காக்களில் தண்ணீர் பாதுகாப்பிற்கான கருத்துரு திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

2023 ஏப்ரல் 6]

இதன் அடிப்படையில் மாநில தொழில் நீர் கொள்கையும் உருவாக்கப்படவுள்ளது.

2.5.5 நிலையான நீர் வழங்கு அமைப்புகள்—மூன்றாம் நிலை எதிர்சவ்வூடு முறையில் சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கும் திட்டம் (TTRO Plant)

நீர்நிலைகளைப் பாதுகாப்பதுடன், நிலத்தடி நீர் குறையாமல் இருப்பதை உறுதி செய்ய, சிப்காட் நிறுவனம் மூன்றாம் நிலை எதிர்சவ்வூடு முறையில் சுத்திகரிக்கப்பட்ட நீரை (TTRO) தொழில் நிறுவனங்கள் பயன்படுத்த ஊக்குவித்து வருகிறது. அதன்படி, இருங்காட்டுக்கோட்டை, திருப்பெரும்புதூர், ஒரகடம், பிள்ளைப்பாக்கம் மற்றும் வல்லம்-வடகால் தொழிற்பூங்காக்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு, சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் கோயம்பேட்டில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஆலையின் மூலமாக சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கப்படுகிறது.

மேலும், சிப்காட் நிறுவனம், நாளொன்றுக்கு 20 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட மூன்றாம் நிலை எதிர்சவ்வூடு முறையில் சுத்திகரிக்கும் ஆலையை ஒசூரிலுள்ள கெலவரப்பள்ளியில் 182 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்து வருகின்றது. இந்த ஆலையின் வாயிலாக ஒசூர் மற்றும் சூளகிரி தொழிற்பூங்காக்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு தேவையான தண்ணீரை வழங்க இயலும். இதற்காக சிறுதொழில் மேம்பாட்டு வங்கி (SIDBI), 104.99 கோடி ரூபாய் காலக்கடனாக வழங்க ஒப்புதல் தெரிவித்துள்ளது. இத்திட்டத்தினை வடிவமைத்து கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு 20 ஆண்டுகளுக்குப் பராமரிக்க (DBO) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தேர்வுப்பெற்ற ஒப்பந்ததாரருக்கு 20-2-2023 அன்று பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2.5.6 நிலையான நீர் வழங்கல் அமைப்புகள்—கடல்நீரை நன்னீராக்கும் திட்டம்

சிப்காட் நிறுவனம் தூத்துக்குடி மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் நீர் தேவையைக் கருத்தில் கொண்டு 60 மில்லியன் லிட்டர் நாளொன்றுக்கு

கொள்திறன் கொண்ட கடல்நீரை நன்னீராக்கும் ஆலையை தூத்துக்குடி முள்ளக்காடு கிராமத்தில் அமைக்க உத்தேசித்துள்ளது. இதற்குண்டான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரித்து இத்திட்டத்தை 975.47 கோடி ரூபாய் திருத்தப்பட்ட திட்ட மதிப்பில் (Hybrid Annuity Model) HAM முறையில் 40 சதவிகிதம் சிப்காட் பங்களிப்புடனும், 60 சதவிகிதம் ஒப்பந்ததாரர் பங்களிப்புடனும் செயல்படுத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், கடலூர் சிப்காட் தொழிற்பூங்காவில் நாளொன்றுக்கு 20 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட கடல்நீரை நன்னீராக்கும் ஆலை ஒன்றினை சிப்காட் நிறுவனத்தால் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு கடலோர ஒழுங்குமுறை மண்டல ஒப்புதல் செயல்முறையில் உள்ளது.

2.5.7 தொழிற்பூங்காக்களைப் பசுமையாக்குதல்

சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில், 5.41 இலட்சம் மரக்கன்றுகள் 24.84 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிப்காட் தொழிற்பூங்காக்களில் உள்ள திறந்தவெளிப் பகுதிகளில் நடப்பட்டுள்ளன. மரக்கன்றுகள் நடும் பணியை படிப்படியாக நிறைவேற்ற திட்டமிடப்பட்டு, முதல் கட்டமாக 18 தொழிற்பூங்காக்களில் 2.65 இலட்சம் மரக் கன்றுகள் நடப்பட்டு, இரண்டாம் கட்டமாக 2.76 இலட்சம் மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன.

மேலும், முன்னோடி திட்டமாக, சிப்காட் நிறுவனம் 50,000 பனங்கன்றுகளை 1.11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள ஒசூர், பர்கூர், குருபரப்பள்ளி தொழிற்பூங்காக்களில் நடவு செய்ய திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மரக் கன்றுகள் கிருஷ்ணகிரி மாவட்ட வனத் துறையால் முன்னதாகவே வளர்க்கப்பட்டு, 7,000 பனங்கன்றுகள் நடப்பட்டுவிட்டன. இந்த முன்னோடி திட்டத்தினை ஜூன் 2023-க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2.5.8 சரக்கு வாகன நிறுத்தும் வசதிகள்

தொழிற்சாலைகளின் சரக்கு வாகனங்கள் தடையின்றி எளிதாக இயங்கிடவும் அவற்றை பிரேத்யேகமாக நிறுத்தம் செய்திடவும், சிப்காட் நிறுவனம், இருங்காட்டுக்கோட்டை,

2023 ஏப்ரல் 6]

வல்லம்-வடகால், ஒரகடம், ராணிப்பேட்டை, பெருந்துறை, திருப்பெரும்புதூர், நிலக்கோட்டை, கங்கைக்கொண்டான், பிள்ளைப்பாக்கம், கும்மிடிப்பூண்டி மற்றும் சிறுசேரி ஆகிய தொழிற்பூங்காக்களில் 66.11 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில், 1,722 சரக்கு வாகனங்கள் நிறுத்துவதற்கான வசதிகளை (Truck Parking Facilities) *உருவாக்கியுள்ளது. மேலும், தேர்வாய்கண்டிகை மற்றும் ஒசூர் தொழிற்பூங்காக்களில் இந்த வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. செய்யாறு சிப்காட் தொழிற்பூங்காவில் சரக்கு வாகன நிறுத்த வசதி உருவாக்க; 2.5 கோடி ரூபாய்க்கு பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.*

2.5.9 ஏற்றுமதிக்கான வர்த்தக வசதி மையம்

சிப்காட் சிறுசேரி தொழிற்பூங்காவில் 34.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2.16 ஏக்கர் நிலப்பரப்பில் 85,000 சதுர அடி கொண்ட கட்டுமானத்தில் ஏற்றுமதிக்கான வர்த்தக வசதி மையம் (Export Trade Facilitation Centre) *ஒன்று ஒன்றிய அரசின் ஏற்றுமதிக்கான வர்த்தக உட்கட்டமைப்பு திட்டத்தின்கீழ்* (TIES) *13.98 கோடி ரூபாய் மானியத்துடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 6-7-2022 அன்று இந்த வர்த்தக வசதி மையம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த மையமானது, உடன் பணிபுரியும் இடம்* (Co-working Spaces), *மாநாட்டு அரங்கம்* (Convention Centre), *ஆலோசனைக் கூடம்* (Conference Hall), *நிருவாக குழும கூடங்கள்* (Executive Board Rooms), *பார்வையாளர்கள் மண்டபம்* (Auditorium), *உணவகம்* (Canteen) *போன்ற வசதிகளை கொண்டுள்ளது.*

2.5.10 ஆயத்த தொழிற்கூட வசதிகள்

நவீன உற்பத்தி முறையானது உட்கட்டமைப்புகளுடன் கட்டடங்களைக் கட்டுவதிலிருந்து புதிதாக ஆயத்த நிலையிலுள்ள தொழிற்கூடங்களை ஏற்படுத்துவதில் கவனத்தை திருப்பியுள்ளது. இத்தொழிற்கூடங்கள் முன்னதாகவே கட்டப்பட்டு அடிப்படை வசதிகளுடன் உடனடியாக இயந்திரங்களை நிறுவி, வணிக உற்பத்தியைத் தொடங்க ஏதுவாக மிக விரைவில் அமைக்கப்படும். வல்லம் வடகால், பெருந்துறை மற்றும் ஒரகடம் ஆகிய மூன்று சிப்காட் தொழிற்பூங்காக்களில் முறையே 1,50,000 சதுர அடி, 50,000 சதுர அடி மற்றும் 1,00,000 சதுர அடி கொண்ட ஆயத்த

[2023 ஏப்ரல் 6

தொழிற்கூட வசதிகள் 85.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துரித தொழிற்வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் அமைக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட வசதிகள் ஒன்றிய அரசின் வணிகவியல் மற்றும் தொழில் துறையின் ஏற்றுமதிக்கான வர்த்தக உட்கட்டமைப்புத் திட்டத்தின் (TIES) கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிதியுதவியான 34.45 கோடி ரூபாய் மானியத்துடன் செயல்படுத்தப்படும்.

2.5.11 திருப்பெரும்புதூர் சிப்காட் தொழிற்பூங்காவில் வணிக வளாகம் மற்றும் உணவகம்

திருப்பெரும்புதூரில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில் 1.36 ஏக்கர் நிலப்பரப்பில் உத்தேசமாக 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இப்பூங்காவில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களின் தேவைகளுக்காக வணிக வளாகம் மற்றும் உணவகம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2.5.12 சிப்காட் தொழிற்பூங்காக்களுக்கான புவியியல் தகவல் முறைமை வரைபடம் (GIS Mapping) மற்றும் புவியியல் தகவல் முறைமைக்கான தகவலமைப்பினை (Geo Data Base) தயாரித்தல்

சிப்காட் தொழிற்பூங்காக்களில் ஆர்வமுள்ள முதலீட்டாளர்கள் எளிதாக தொழில் மனைகளை தேர்வு செய்திட, பயனீட்டாளர்கள் நட்புடன்கூடிய புவியியல் தகவல் முறைமை (GIS), செயல்பாட்டில் இருந்துவரும் சிப்காட் தொழிற்பூங்காக்கள் தொடர்பான தரவுகளைக் (Database) கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தரவு தளம் ட்ரோன் வழி நில அளவை (Drone survey), முப்பரிமாணப் படம் (3D imaging), தொலை உணர்வுத் தளம் (Remote sensing) உள்ளடக்கிய அதிநவீன தொழிநுட்பங்களைக் கொண்டு நிறுவப்பட்டுள்ளது. இத்தரவு (Database) சிப்காட் நில ஒதுக்கீட்டு வலைதளத்துடன் இணைக்கப்பட்டுள்ளதால், முதலீட்டாளர்கள் தொழிற்பூங்காக்களின் தளவமைப்புகள்/இருப்பில் உள்ள மனை விவரம் குறித்த தகவல்களை இடையூறற்ற வகையில் சீராகப் பெறுவதுடன், நில ஒதுக்கீட்டு விண்ணப்பத்தினை எளிதாக சமர்ப்பிக்க இயலும். மேலும் சிப்காட் நிறுவனம் இனி அமையவுள்ள தொழிற்பூங்காக்களுக்கும் புவியியல் தகவல் முறைமையை ஏற்படுத்தவுள்ளது.

2.6 சிப்காட் நிறுவனம்-அரசின் அமைப்பு ரீதியிலான தொகுப்பு ஊக்க நிதியுதவி வழங்குவதற்கான முகவாண்மை நிறுவனம்

பெருந்தொழில், சிறப்புப் பெருந்தொழில் மற்றும் உயர் சிறப்புப் பெருந்தொழில் நிறுவனங்களுக்கு அமைப்பு ரீதியிலான தொகுப்பு ஊக்க நிதியுதவி வழங்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு சிப்காட் நிறுவனத்தை முகவாண்மை அமைப்பாக நியமித்துள்ளது. அரசு ஒப்புதல் வழங்கியபடி சிப்காட் நிறுவனம், 31-3-2023 வரை, 45 தொழில் நிறுவனங்களுக்கு பல்வேறு ஊக்க நிதியுதவியாக 16,625.50 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. நிதியாண்டு 2022-2023-ல் 29 தொழில் நிறுவனங்களுக்கு 1,192.38 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

வ. எண்	நிதியுதவியின் வகைப்பாடு	வழங்கிய தொகை (ரூபாய் கோடியில்)	
		2008-2009 முதல் 2022-2023 வரை	நிதியாண்டு 2022-2023
1	மென்கடன்	2078.06	183.38
2	முதலீட்டு மேம்பாட்டு உதவித் தொகை	14334.90	937.87
3	மூலதன உதவித் தொகை	46.33	4.03
4	சுற்றுச்சூழல் பாதுகாப்பு – கழிவுநீர் சுத்திகரிப்பு திட்டத்திற்கான உதவித் தொகை	7.80	3.85
5	பயிற்சி உதவித் தொகை	93.34	37.32
6	முத்திரைத் தீர்வை திருப்பியளித்தல்	10.23	0.93
7	மின் உற்பத்தி வாகன உதவித் தொகை	50.00	25.00
8	மின்கட்டண வரி திருப்பியளித்தல்	2.84	-

[2023 ஏப்ரல் 6

வ. எண்	நிதியுதவியின் வகைப்பாடு	வழங்கிய தொகை (ரூபாய் கோடியில்)	
		2008-2009 முதல் 2022-2023 வரை	நிதியாண்டு 2022-2023
9	தொழில் கட்டமைப்பு பூங்கா உதவித் தொகை	2.00	-
மொத்தம்		16625.50	1192.38

வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் ஒதுக்கீடு

வ. எண்	நிதியுதவியின் வகைப்பாடு	(ரூபாய் கோடியில்)	
		திருத்த மதிப்பீடு 2022-23	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2023-24
1	மென்கடன்	250.00	300.00
2	முதலீட்டு மேம்பாட்டு உதவித் தொகை (முத்திரைத் தீர்வை திருப்பியளித்தல் உட்பட)	1400.93	1500.00
3	மூலதன உதவித் தொகை	5.00	5.00
4	சுற்றுச்சூழல் பாதுகாப்பு – கழிவுநீர் சுத்திகரிப்பு திட்டத்திற்கான உதவித் தொகை	5.00	5.00
5	பயிற்சி உதவித் தொகை	90.00	90.00

2.7 சிப்காட் நிறுவனத்தின் நிதிச் செயல்பாடு

சிப்காட் நிறுவனம், மிகச் சிறந்த நிதிச் செயல்பாட்டுடன் தமிழ்நாடு அரசுக்கு 2005-2006 முதல் தொடர்ந்து ஈவுத்தொகையை விநியோகித்து வருகிறது. 2021-2022 நிதியாண்டில், சிப்காட் நிறுவனம், 1127.55 கோடி ரூபாய்க்கு வணிகம் புரிந்து, 203.99 கோடி ரூபாய் இலாபம் ஈட்டி, தமிழ்நாடு அரசுக்கு ஈவுத்தொகையாக 61.20 கோடி ரூபாயினை (செலுத்தப்பட்ட மூலதனத்தில் 53.60 சதவீதம்) செலுத்தியுள்ளது.

2023 ஏப்ரல் 6]

3. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், (டிட்கோ) தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக 1965 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் ஒரு முதன்மையான அமைப்பாக, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின்கீழ் இயங்கி வருகிறது. தனியார் தொழில் முனைவோருடன் இணைந்து, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழில்களை மேம்படுத்தவும், கூட்டாண்மை நிறுவனங்கள் வழியாக முதலீட்டை ஈர்த்து, மாநிலத்தை உலகளாவிய தொழில் மையமாக்கும் நோக்கத்துடனும் டிட்கோ நிறுவனம், ஏற்படுத்தப்பட்டது.

தனியார் தொழில் முனைவோர் மற்றும் மாநில/ஒன்றிய அரசு நிறுவனங்களுடன் இணைந்து கூட்டாண்மை நிறுவனங்கள்மூலம் கீழ்க்கண்ட முறைகளில் பெரிய/நடுத்தர தொழில் திட்டங்களை டிட்கோ நிறுவனம் செயல்படுத்தி வருகிறது:-

- *துணை நிறுவனம் (டிட்கோவின் பங்கு முதலீடு 50%-க்கு மேல்),*
- *கூட்டு நிறுவனம் (டிட்கோவின் பங்கு முதலீடு 11%-லிருந்து 50% வரை),*
- *இணைத்துறை நிறுவனம் (டிட்கோவின் பங்கு முதலீடு 2%-லிருந்து 11% வரை),*
- *வழிநடத்தும் நிறுவனம் (டிட்கோவின் பங்கு முதலீடு 1% அல்லது டிட்கோவின் பங்கு முதலீடு இல்லை),*

டிட்கோ நிறுவனம், வெற்றிகரமாக 122 கூட்டாண்மை நிறுவனங்களை நிறுவி, உற்பத்தி, உட்கட்டமைப்பு மற்றும் சேவை போன்ற துறைகள் வளர்ச்சி அடைய வழிவகை செய்துள்ளது. மேலும், இந்நிறுவனங்களின் வாயிலாக மாநிலத்தில் பெரும் முதலீடு மற்றும் அதிக வேலைவாய்ப்புகள் உருவாக்கி, தொழில் சூழலமைப்பை மேம்படுத்தியதன்மூலம் மாநில மற்றும் மண்டல தொகுப்புகளில் ஒட்டுமொத்த சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

டிட்கோ நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட பெருமைமிகு கூட்டாண்மை நிறுவனங்களில், சில பின்வருமாறு:

[2023 ஏப்ரல் 6

டைட்டன் நிறுவனம் லிமிடெட் (கடிகாரம் மற்றும் ஆடை அலங்காரப் பொருட்கள்), ஸ்பிக் லிமிடெட் (உரத் தொழிற்சாலை), டான்பேஃக் லிமிடெட் (வேதிப்பொருட்கள்), தமிழ்நாடு பெட்ரோ ப்ராடக்ட்ஸ் (வேதிப்பொருள்), டான்ஃப்ளோரா இன்ஃப்ராஸ்ட்ரக்சர் பார்க் லிமிடெட் (கொய் மலர்களுக்கான தொழில் கூடம்), JSW ஸ்டீல்ஸ் லிமிடெட் (ஸ்டீல்) இந்தியன் ஆயில்-எல்என்ஜி பிரைவேட் லிமிடெட் (LNG), தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதை சார்ந்த சேவை துறை, ஆடை மற்றும் ஊர்தி துறைகளை மேம்படுத்த மகிந்திரா வேர்ல்டு சிட்டி SEZ, அசென்டாஸ் தகவல் தொழில்நுட்பப் பூங்கா, டைடல் பார்க் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள், டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட் (தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதை சேர்ந்த சேவை துறை), டைசல் பயோ பார்க் லிமிடெட் (உயிரி தொழில்நுட்பம்), மெரைன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் டெவலபர்ஸ் பிரைவேட் லிமிடெட் (காட்டுப்பள்ளி துறைமுகம்), எல்&டி ஷிப் பில்டிங் லிமிடெட் (கப்பல் கட்டுமானம்), சாலை மேம்பாட்டிற்காக தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை நிறுவனம், தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனம் (கண்காட்சி மற்றும் மாநாட்டு மையம்).

தொழில் துறையில் மாறிவரும் சூழலுக்கு ஏற்ப, குறிப்பாக புதிய வளர்ந்து வரும் மற்றும் அறிவு சார்ந்த துறைகளின் விரைவான வளர்ச்சி மற்றும் தேவைகளை கருத்தில் கொண்டு டிட்கோ நிறுவனம் சேவைகளை வழங்கி வருகிறது. அந்த வகையில், டிட்கோ நிறுவனத்தால் எடுக்கப்பட்ட முக்கிய முன்னெடுப்புகள் மற்றும் திட்டங்களில் சில பின்வருமாறு:

- நிதிநுட்ப நகரத்தை உருவாக்குதல்.
- இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் டைடல் நியோ பூங்காக்களை உருவாக்குதல்.
- சென்னை மற்றும் கோயம்புத்தூர் நகரங்களில் பல்முனைய சரக்கு போக்குவரத்துப் பூங்காக்களை நிறுவுதல்.
- தொழில் துறை 4.0 திறன்மிகு மையங்கள் (டான்காம், டான்சம், டாம்கோ).

2023 ஏப்ரல் 6]

- ➢ பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பூங்காக்கள் மற்றும் தமிழ்நாடு அறிவுசார் நகரத்தினை உருவாக்குதல்.
- ➢ தமிழ்நாட்டில் உருவாகும் வளர் துறை ஊக்க நிதியத்திற்கு நிதி வழங்குதல் (TNESSF).
- ➢ தமிழ்நாடு பாதுகாப்புத் தொழில் துறை பெருவழித்தடத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான முகமை நிறுவனம் (TNDIC).
- ➢ பரந்தூர் புதிய விமான நிலையம் போன்ற உத்திசார் திட்டத்தை செயல்படுத்தும் முகமை நிறுவனம்.
- ➢ இயற்கை எரிவாயு மற்றும் எண்ணெய் (PNG) குழாய் அமைப்பு மற்றும் நகர எரிவாயு விநியோக (CGD) திட்டங்களை செயல்படுத்தும் முகமை நிறுவனம்.
- ➢ சரக்கு போக்குவரத்து சார்ந்த துறைகளை ஒருங்கிணைத்து செயல்படுவதற்கு முகமை நிறுவனம்.
- ➢ மேலும், டிட்கோ நிறுவனம் கீழ்க்கண்ட தொழில் கொள்கைகளை தயாரித்துள்ளது:
- ❖ தமிழ்நாடு நகர எரிவாயு விநியோக கொள்கை, 2023.
- ❖ தமிழ்நாடு சரக்கு போக்குவரத்துக் கொள்கை மற்றும் ஒருங்கிணைந்த சரக்கு போக்குவரத்துத் திட்டம், 2023.
- ❖ தமிழ்நாடு வானூர்தி மற்றும் பாதுகாப்பு தொழில் கொள்கை, 2022.

3.1 தொழில் துறை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள்

3.1.1 நிதிநுட்ப நகரம்

சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், நந்தம்பாக்கம் கிராமத்தில் 110 ஏக்கர் நிலப்பரப்பில் “நிதிநுட்ப நகரம்” ஒன்றை சுமார் ரூ.200 கோடி முதலீட்டில் அமைப்பதற்கு டிட்கோ நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிதிநுட்ப நகரம், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் மற்றும் நிதிநுட்ப நிறுவனங்கள் தங்கள் அலுவலகப் பிரிவுகளை அமைப்பதற்கு தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய மேம்படுத்தப்பட்ட

நிலங்களை வழங்க வழிவகுக்கும். இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு, வடிவமைப்பு மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர் நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, இத்திட்டம் 56.48 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்படும். முதற்கட்ட பணிகளுக்கு உட்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, அதற்கான பணி ஆணை ரூ.82.87 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதிநுட்ப நகரத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 5 இலட்சம் சதுர அடி கட்டடப் பரப்பளவில் சர்வதேச தரத்தில் ஒரு “ஃபின்டெக் டவர்” (Fintech Tower) திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. நிதி மற்றும் நிதிநுட்ப நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளை தொடங்குவதற்கு ஏதுவாக அலுவலக இடங்கள் இங்கு வழங்கப்படும். இத்திட்டத்திற்கான மதிப்பீடு சுமார் ரூ.225 கோடி ஆகும். கட்டட வடிவமைப்பு மற்றும் விரிவான பொறியியல் பணிகளை ஆலோசகர் நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

3.1.2 மினி டைடல் பூங்காக்கள்

தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப சூழல் அமைப்பினை விரிவுபடுத்தும் வகையில் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் மினி டைடல் பூங்காக்கள் நிறுவப்பட்டு வருகின்றன. 50,000 சதுர அடி முதல் 1,00,000 சதுர அடி பரப்பளவுள்ளதாக வடிவமைக்கப்பட்டு, தற்போது ஏழு மினி டைடல் பூங்காக்கள் மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டு வருகின்றன. விழுப்புரம், திருப்பூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் இத்திட்டங்களுக்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மேலும் சந்தை தேவை மதிப்பீட்டின் அடிப்படையில் தஞ்சாவூர், தூத்துக்குடி மற்றும் சேலம் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கான கருத்துருவாக்கம் மற்றும் வடிவமைப்பு ஆகியவை தயார் செய்யப்பட்டுள்ளன. இதற்கான கட்டட ஒப்பந்ததாரர்களை தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டங்களை செயல்படுத்துவதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. உதகமண்டலம் மினி டைடல் பூங்காவின் வடிவமைப்பில் புதுமையான அம்சங்கள் இடம் பெறுவதால் அது மிகவும் விரும்பத்தக்க தகவல் தொழில்நுட்பப் பணியிடமாக விரைவில் உருவெடுக்கும்.

2023 ஏப்ரல் 6]

3.1.3 டைடல் பூங்கா, பட்டாபிராம்

*சென்னை மாநகருக்கு அருகில் அமைந்துள்ள, ஆவடி தாலுகா, பட்டாபிராமில் 11.41 ஏக்கர் நிலப்பரப்பில் தகவல் தொழில்நுட்பப் பூங்காவை, டைடல் பார்க் நிறுவனம் நிறுவி வருகிறது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக 5.57 இலட்சம் சதுர அடியில் தரைதளம் மற்றும் 21 அடுக்கு மாடிகள் கொண்ட கட்டடம் உருவாக்கப்பட்டு வருகிறது. இணைந்து பணியாற்றக்கூடிய இடவசதி (*Co-working space*), வணிக மையங்கள், மாடித் தோட்டம் போன்ற நவீன வசதிகளைக் கொண்டதாக இக்கட்டடம் உருவாக்கப்படுகிறது. தற்பொழுது, கட்டுமானப் பணிகள் மற்றும் குளிரூட்டு வசதி, தீ பாதுகாப்பு, ஒருங்கிணைந்த கட்டட மேலாண்மை அமைப்பு, மின் தூக்கி முதலான வசதிகளை நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் முதலீடுகளை ஈர்த்து, தகவல் தொழில்நுட்பத் துறையில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதோடு, இப்பகுதியில் விரைவான பொருளாதர வளர்ச்சி ஏற்படும்.*

3.1.4 டைடல் பூங்கா, மதுரை

தமிழ்நாட்டின் மூன்றாவது பெரிய நகரமான மதுரை நகரம், சிறந்த மனிதவளம் பெற்ற மற்றும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான நல்ல சாத்தியகூறுகளைக் கொண்டதாகும். தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிதிநுட்ப நிறுவனங்களுக்கு தரமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக மதுரையில் இரண்டு கட்டங்களாக டைடல் பூங்கா அமைக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார். இந்த பெருமிதம் கொள்ளத்தக்க திட்டத்தின் முதல் கட்டப் பணிக்காக மதுரை மாட்டுத்தாவணி பகுதியில் 5.60 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. கோயில் நகரமான மதுரையில் இந்த சிறப்புமிகு திட்டம் மூலமாக அதிநவீன தகவல் தொழில்நுட்ப பயன்பாட்டு அலுவலகங்கள் அமைக்கப்படும். ஓய்விடம், உணவரங்கம், மாடித் தோட்டம், குழந்தைகள் பாதுகாப்பு மையம் மற்றும் இதர நவீன வசதிகளையும் கொண்டிருக்கும். இத்திட்டத்தின் வடிவமைப்பு மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர் நியமனம் செய்வதற்கான நடவடிக்கை

[2023 ஏப்ரல் 6

எடுக்கப்பட்டு வருகிறது. வடிவமைப்பு மற்றும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டவுடன், கட்டடப் பணி மேற்கொள்ள ஒப்பந்ததாரரை நியமனம் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்படும்.

3.1.5 தயார் நிலை (Plug and Play) உற்பத்திக் கூடங்கள் – வல்லம்-வடகால்

ஸ்ரீபெரும்புதூர் தொழில் வழித்தடத்தில், பல்வேறு பெரு நிறுவனங்கள் தொழிற்சாலைகளை அமைத்து செயல்படுத்தி வருவதால், இது மிகவும் வேகமாக வளர்ந்து வரும் ஒரு முக்கிய தொழில் மண்டலமாக திகழ்கிறது. இத்தொழில் மண்டலத்தில் புதிய நிறுவனங்கள், குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) கட்டமைப்பு மற்றும் மூலதனச் செலவைக் குறைத்து, உற்பத்தி நடவடிக்கைகளை தொடங்க வாய்ப்பளிக்கும் விதமாக, வல்லம்-வடகால் பகுதியில் உட்கட்டமைப்புகளுடன் கூடிய 'பிளக்-அண்ட்-பிளே' (Plug & Play) திட்டத்தை டைடல் பார்க் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இத்திட்டம் மூலமாக 11.74 ஏக்கர் நிலத்தில், 2.55 இலட்சம் சதுர அடியில் உடனடியாக பணிகளை துவங்கும் விதமாக உற்பத்திக் கூடங்களை ஏற்படுத்தி குத்தகைக்கு விடப்படும். இதற்கான திட்ட மேலாண்மை ஆலோசகர் நியமிக்கப்பட்டு, வடிவமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

3.1.6 டைடல் பூங்கா, கோயம்புத்தூர்

கோயம்புத்தூர் டைடல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா நிறுவனம், கோயம்புத்தூரில் எல்காட் நிறுவனத்தால் நிறுவப்பட்ட சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 9.5 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவப்பட்டுள்ளது. 17 இலட்ச சதுர அடி தளப்பரப்பில், 9.14 இலட்ச சதுர அடி குத்தகை இடம் கொண்டுள்ள இப்பூங்கா, 2-8-2010 அன்று தொடங்கப்பட்டது. இப்பூங்காவில் அனைத்து வசதிகளை உள்ளடக்கிய 952 இருக்கைகளுடன்கூடிய, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர் மற்றும் புத்தாக்க நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் தயார்நிலை பணியிடங்கள் நிறுவப்பட்டுள்ளன. கொரோனா காலத்திற்குப் பிறகு, தகவல் தொழில்நுட்ப மற்றும் அதனைச் சார்ந்த சேவைகள் துறை முன்னேற்றம் கண்டுள்ளன. கடந்த ஆண்டில், பல்வேறு பெருநிறுவனங்களான Accenture

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 6]

Solutions, IBM India, LTIMindtree, Cameron, Corrohealth, Value Momertum *மற்றும்* Omega Healthcare *ஆகியவை தங்களது அலுவலகத்தை இப்பூங்காவில் அமைத்துள்ளன. தற்போது இத்தொழில்நுட்பப் பூங்கா 13,000 பணியாளர்களுடன் முழுமையான பயன்பாட்டில் உள்ளது. 2021-2022 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் டைடல் பூங்காவிலிருந்து ரூ.1,340 கோடி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா காலத்திற்குப் பிறகு, தகவல் தொழில்நுட்ப மற்றும் அதனைச் சார்ந்த பணிகளுக்கான இடத் தேவையினை கருத்திற்கொண்டு கோயம்புத்தூர் டைடல் பார்க் அதன் விரிவாக்கத்திற்கென, தொழில்நுட்ப மற்றும் பொருளாதார சாத்தியக்கூறு ஆய்வினை (*TEFS*) மேற்கொண்டுள்ளது.*

3.1.7 வானூர்தி மையம் (Aero Hub)

வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்களுக்கு தேவையான பொதுவான வசதிகளை வழங்கும் பொருட்டு, டிட்கோ நிறுவனம், டைசல் பூங்கா நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கப்பட்ட சிறப்பு நோக்க நிறுவனமான “சென்னை ஏரோஸ்பேஸ் பார்க் லிமிடெட்” மூலம் வானூர்தி மையம் அமைக்கும் திட்டத்தை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டம், சுமார் ரூ.230 கோடி மதிப்பீட்டில், 10.73 ஏக்கர் நிலப்பரப்பில் 3.04 இலட்சம் சதுர அடி கட்டட பரப்பளவில், அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வானூர்தி மையத்தின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.1.8 கனரக பொறியியல் மையம்

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் உள்ள காட்டூர் மற்றும் எப்ரஹாம்புரம் கிராமங்களில் சுமார் 655 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.700 கோடி மதிப்பீட்டில் கனரக பொறியியல் மையம் ஒன்றை டிட்கோ நிறுவனம் உருவாக்க உள்ளது. இந்த இடத்திற்கு மாநில நெடுஞ்சாலை மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள வடக்கு துறைமுக அணுகு சாலை வழியாக எண்ணூர்/ காட்டுப்பள்ளி துறைமுகங்களுடன் சாலை இணைப்பு உள்ளது.

கப்பல் கட்டும் தொழிலுக்கான ஆதரவு அலகுகள், மின்சாரம் மற்றும் வாகன உபபொருட்கள் மற்றும் பிற பொறியியல் தொழில் சார்ந்த துறைகளுக்கான ஒரு “சிறப்பு முதலீட்டுப் பகுதியாக” இம்மையம் இருக்கும். மேலும், இம்மையம், பத்து வருட கால

அளவில் சுமார் ரூ.3,000 கோடி முதலீடுகளை ஈர்க்கும் எனவும், 48,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

3.1.9 பல்முனைய சரக்கு போக்குவரத்துப் பூங்கா – சென்னை

தேசிய நெடுஞ்சாலை சரக்கு போக்குவரத்து மேலாண்மை நிறுவனம் (NHLML), சென்னை துறைமுக பொறுப்புக் கழகம் (ChPA), இரயில் விகாஸ் நிகாம் லிமிடெட் (RVNL) மற்றும் டிட்கோ நிறுவனம் இணைந்து ஒரு "சிறப்பு நோக்க நிறுவனம் (SPV)" மூலம், சென்னை அருகே திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மப்பேடு கிராமத்தில் சுமார் 182 ஏக்கர் நிலப் பரப்பில், ரூபாய் 1,423 கோடி திட்ட மதிப்பீட்டில், "பல்முனைய சரக்கு போக்குவரத்துப் பூங்காவை" அமைத்து வருகிறது. இது சென்னை, காமராஜர் மற்றும் காட்டுப்பள்ளி ஆகிய துறைமுகங்களை பயன்படுத்தும் உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு சாலை மற்றும் இரயில் இணைப்புடன்கூடிய ஒரு தடையற்ற சரக்கு போக்குவரத்து ஏற்பட வழிவகுக்கும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 12.10.2021 அன்று, தேசிய நெடுஞ்சாலை சரக்கு போக்குவரத்து மேலாண்மை நிறுவனம், சென்னை துறைமுக பொறுப்புக் கழகம் மற்றும் டிட்கோ ஆகியவை இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. மேலும், 26-5-2022 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இத்திட்டத்தினை செயல்படுத்த ஒரு தனியார் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் மூன்று நிலைகளில் செயல்படுத்தப்படும். முதல் நிலை 2024 ஆம் ஆண்டும், இரண்டாம் நிலை 2032-லும், மூன்றாம் நிலை 2037-லும் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3.1.10 பல்முனைய சரக்கு போக்குவரத்துப் பூங்கா – கோயம்புத்தூர்

கோயம்புத்தூர் மாவட்டத்தில் குறு, சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழில்கள் அதிக அளவில் இருக்கின்றன. தற்போது செயல்பாட்டிலுள்ள மற்றும் புதிதாக வரவிருக்கும் தொழிற்சாலைகளுக்கு, ஏதுவாக இரயில், சாலை மற்றும் வான்வழி சரக்கு பரிமாற்றத்தை எளிதாக்க தளவாட உட்கட்டமைப்பு

2023 ஏப்ரல் 6]

வசதிகளை ஏற்படுத்துவது மிக அவசியமான ஒன்றாகும். வளர்ந்து வரும் தொழிற்தேவைகளைக் கருத்தில்கொண்டு, சரக்கு மற்றும் கிடங்கு கட்டணங்களைக் குறைப்பதற்கும், மாசற்ற மற்றும் நெரிசல் இல்லாத மாவட்டமாக மாற்றுவதற்கும் கோயம்புத்தூரில் ஒரு பல்முனைய சரக்கு போக்குவரத்துப் பூங்கா அமைக்கப்பட உள்ளது.

தேசிய நெடுஞ்சாலை சரக்கு போக்குவரத்து மேலாண்மை நிறுவனம் (NHLML), இரயில் விகாஸ் நிகாம் லிமிடெட் (RVNL), வ.உ. சிதம்பரனார் துறைமுகம் (VOC Port), தூத்துக்குடி மற்றும் டிட்கோ நிறுவனம் இணைந்து சிறப்பு நோக்க நிறுவனம் (SPV) மூலம் இத்திட்டம் உருவாக்கப்பட உள்ளது.

இத்திட்டத்திற்காக NHLML நிறுவனமானது, கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள காரவள்ளி—மாதப்பூர் கிராமத்தில் சுமார் 220 ஏக்கர் நிலத்தினை அடையாளம் கண்டுள்ளது.

3.1.11 பாலிமர் தொழிற்பூங்கா

டிட்கோ மற்றும் சிப்காட் இணைந்து, தமிழ்நாடு பாலிமர் இண்டஸ்ட்ரீஸ் பார்க் லிமிடெட் (TPIPL), என்ற ஒரு சிறப்பு நோக்க நிறுவனம் (SPV) மூலம், திருவள்ளூர் மாவட்டத்தில், புழுதிவாக்கம் மற்றும் வாயலூர் கிராமங்களில், சுமார் 240 ஏக்கர் பரப்பளவில், ரூ.216 கோடி முதலீட்டில் ஒரு பாலிமர் தொழிற்பூங்காவினை அமைத்து வருகிறது. இத்திட்டம் இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன், முதற்கட்டமாக 180.91 ஏக்கர் பரப்பளவில் தற்போது பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அடிப்படை உட்கட்டமைப்புப் பணிகள், நிர்வாகக் கட்டடம், தொழில்நுட்ப மையம், பயிற்சி மையம் மற்றும் நிர்வாகப் பணிகளுக்கான கட்டடம் ஆகியவை கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கு, மத்திய அரசின் இரசாயன மற்றும் பெட்ரோலிய இரசாயனத் துறையானது நெகிழி பூங்கா திட்டத்தின்கீழ் ஒப்புதல் மற்றும் மானியம் வழங்கியுள்ளது. இத்தொழில் பூங்காவில் பாலிமர் பொருட்கள் தயாரிக்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழிற்பிரிவுகள் அமைக்க ஏதுவான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 6

3.1.12 சென்னை வர்த்தக மையம் விரிவாக்கத் திட்டம்

சென்னை வர்த்தக மையமானது, டிட்கோ (TIDCO) மற்றும் இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனங்களின் (ITPO) கூட்டாண்மை நிறுவனமாக தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்தால் (TNTPO) உருவாக்கப்பட்டது. சுமார் 10,560 சதுர மீட்டருக்கு கண்காட்சிக்கான இடவசதி மற்றும் 2,000 நபர்கள் அமரக்கூடிய மாநாட்டு மையம் ஆகியவற்றை இவ்வர்த்தக மையம் உள்ளடக்கியுள்ளது. தேசிய மற்றும் சர்வதேச நிகழ்வுகளை நடத்த தேவையான குறைந்தபட்ச இடவசதியான 20,000 சதுர மீட்டர் என்ற இலக்கை பூர்த்தி செய்யும் பொருட்டு மொத்தம் 83,744 சதுர மீட்டர் கட்டட பரப்பில் சென்னை வர்த்தக மையம் விரிவுபடுத்தப்படுகிறது. இந்த விரிவாக்கத் திட்டத்தில் 20,809 சதுர மீட்டர் கண்காட்சி அமைக்க இடவசதி, 4,000 இருக்கைகள் கொண்ட மாநாட்டு மையம், பல அடுக்கு வாகன நிறுத்துமிடம், மற்றும் உலகத்தரம் வாய்ந்த இதர வசதிகளையும் உள்ளடக்கி, சுமார் ரூ.308.75 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

3.1.13 தரமணியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா

டிட்கோவுடன் DLF நிறுவனம் இணைந்து, "டிஎல்எஃப் இன்ஃபோ பார்க் டெவலப்பர்ஸ் சென்னை லிமிடெட்" என்ற கூட்டாண்மை நிறுவனம்மூலம் சென்னை தரமணியில் சுமார் 27.05 ஏக்கர் நிலப்பரப்பளவில், 6.8 மில்லியன் சதுர அடி கட்டுமானப் பரப்பளவில், தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றினை சுமார் ரூ.5,000 கோடி மதிப்பீட்டில் உருவாக்கி வருகிறது. இத்திட்டம் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்படுகிறது. நிலை-I ஆனது, சுமார் 2.50 மில்லியன் சதுர அடி பரப்பளவில் ரூ.1,200 கோடி திட்ட மதிப்பீட்டில் உருவாகி வருகிறது. நிலை–I-ல் 100 சதவீத கட்டட வேலைகளும், 76 சதவீதம் பூச்சு வேலைகளும், இயந்திரவியல் மற்றும் மின்னியல் தொடர்பான வேலைகள் 69 சதவீதமும் முடிவடைந்துள்ளன.

மேலும், கூட்டாண்மை நிறுவனம் நிலை-II-ல் "ஸ்டான்டர்டு சார்ட்டர்டு குளோபல் பிசினஸ் சர்வீசஸ் (SCGBS)" என்ற நிறுவனத்துக்கு ரூ.650 கோடி மதிப்பீட்டில் சுமார் 7.7 இலட்சம் சதுர அடி பரப்பளவில் ஒரு பிரத்யேக கட்டடத்தைக் கட்டி வருகிறது. இத்திட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 14.3.2022 அன்று அடிக்கல் நாட்டினார்கள். 100 சதவீத அடித்தள

2023 ஏப்ரல் 6]

(Pilling Work) பணிகள் முடிவடைந்து, 24 சதவீதம் கட்டடப் பணிகளும் நிலை–II-ல் முடிவடைந்துள்ளன.

இத்திட்டத்தின்மூலம் 70,000-க்கும் அதிகமான “தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள்” வேலைவாய்ப்பைப் பெறுவர்.

3.1.14 கிருஷ்ணகிரி மாவட்டத்தில் டாடா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம்

டாடா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் (TEPL) சுமார் 575 ஏக்கர் நிலப்பரப்பில் “கைபேசி உதிரிப்பாகங்கள்” உற்பத்தி செய்வதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை சுமார் ரூ.5,000 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைத்து வருகிறது. TEPL ஏற்கெனவே ரூ.4,000 கோடிக்கும் அதிகமான முதலீட்டினை ஈர்த்துள்ளது. மேலும், இத்திட்டத்தில் உறுதியளித்தபடி, 15,000 நபர்களில் சுமார் 13,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கியுள்ளது. டிட்கோ நிறுவனம், இத்திட்டத்திற்கான நில மாறுதல் செய்வதற்கும் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கும் வசதி செய்து வருகிறது.

மேலும், TEPL நிறுவனம், கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், நாகமங்கலம் கிராமத்தில், சுமார் 64 ஏக்கர் நிலப்பரப்பில் TEPL பணியாளர்கள் தங்குவதற்காக தொழிலக வீட்டு வசதி திட்டத்தின்கீழ் “விடியல் ரெசிடென்சி பிரைவேட் லிமிடெட்” என்ற கூட்டு நிறுவனத்தின்மூலம் தேவையான உட்கட்டமைப்பினை ஏற்படுத்தி வருகிறது. இந்தக் கூட்டு நிறுவனத்தில் TEPL, TNSF மற்றும் டிட்கோ ஆகியோர் பங்குதாரர்கள் ஆவர். இத்திட்டத்திற்கு தேவையான கடன் வசதிகளை (Term Loan) TNSF நிறுவனம் வழங்கியுள்ளது. 6,300 பணியாளர்கள் தங்குவதற்கு ஏதுவாக, திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.1.15 தமிழ்நாட்டில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு குழாய் அமைப்பு திட்டங்கள்

சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில், பாதுகாப்பாக, திறன் வாய்ந்த முறையில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுவை, குறைந்த செலவில், தடையின்றி, தொழிற்சாலைகள், போக்குவரத்து மற்றும் வீடுகளுக்கு வழங்குவதை உறுதி செய்வதற்காக, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு குழாய் அமைக்கும்

திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தக் குழாய் அமைக்கும் திட்டங்கள், தமிழ்நாட்டில் உள்ள நகர எரிவாயு விநியோகத் திட்டங்களுக்கு இயற்கை எரிவாயு வழங்குவதற்கு மூல காரணியாக இருக்கும். மேற்படி குழாய் அமைக்கும் திட்டங்கள் இரண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு சுமார் ரூ.14,200 கோடி முதலீட்டை ஈர்க்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டில் தற்போது பெட்ரோலியம் எண்ணெய் நிறுவனங்கள் ஐந்து பெரிய பெட்ரோலியம் மற்றும் எரிவாயு குழாய் பதிக்கும் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. தமிழ்நாடு அரசின் ஆலோசனைகளின்படி, அனைத்து நிறுவனங்களும், தங்களது குழாய் பதிக்கும் திட்டங்களை, பெரும்பாலும் சாலை ஓரமாக அமைத்து வருகின்றன.

இயற்கை எரிவாயு குழாய் அமைப்பு திட்டத்தை இந்தியன் ஆயில் நிறுவனம் (IOCL) 1224 கி.மீ. நீளத்திற்கும், GAIL நிறுவனம் 319 கி.மீ. நீளத்திற்கும் மற்றும் பெட்ரோலிய பொருள்களுக்கான குழாய் அமைப்பு திட்டத்தை HPCL நிறுவனம் 82 கி.மீ. நீளத்திற்கும், BPCL நிறுவனம் 320 கி.மீ. நீளத்திற்கும், KSPPL நிறுவனம் 210 கி.மீ. நீளத்திற்கும், சுமூகமான முறையில் செயல்படுத்துவதை உறுதி செய்வதற்காக தமிழ்நாடு அரசு, டிட்கோ நிறுவனத்தினை முகமை நிறுவனமாக நியமனம் செய்துள்ளது.

இன்றுவரை, இந்தியன் ஆயில் நிறுவனம் இயற்கை எரிவாயு குழாய் அமைப்பு திட்டத்தை 99 சதவீதம் முடித்துள்ளது. அதில் இரண்டு பாகங்கள், எண்ணூர் முதல் செங்கல்பட்டு வரை (115 கி.மீ. நீளம்) மற்றும் திருவள்ளூரிலிருந்து பெங்களூர் வரை (270 கி.மீ. நீளம்) குழாய் பதிக்கும் திட்டம் 26-5-2022 அன்று நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் 2024 ஆம் ஆண்டிற்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. HPCL நிறுவனம் அதன் பெட்ரோலிய பொருள்களுக்கான குழாய் அமைப்பு திட்டத்தை முடித்ததுடன், விரைவில் செயற்படுத்த திட்டமிட்டுள்ளது. GAIL நிறுவனம் அதன் இயற்கை எரிவாயு குழாய் அமைப்பு திட்டத்தை சாலைகளின் வழியாக எடுத்துச் செல்வதன்மூலம் தனியார் நிலங்களை கையகப்படுத்துவதை வெகுவாக குறைத்துள்ளது. இந்நிறுவனம் இத்திட்டத்தை மூன்று பாகங்களாக, பாகம் 1-அத்திப்பள்ளி–கிருஷ்ணகிரி வரைக்கும், பாகம் 2-கிருஷ்ணகிரி–சேலம் வரை, பாகம் 3–சேலம்–கோயம்புத்தூர் வரை திட்டமிட்டு செயல்படுத்திவருகிறது. பாகம் 1-ல், இதுவரை

2023 ஏப்ரல் 6]

83 சதவீதம் குழாய் பதிக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன, பாகம் 2-ல் குழாய் அமைப்பதற்கான பணி ஒப்பந்ததாரர்களை 16-3-2023-ல் முடிவு செய்து பணிகள் தொடங்க உள்ளன. BPCL *நிறுவனம் அத்திப்பள்ளியிலிருந்து கோயம்புத்தூர் வரை குழாய் பதிக்கும் பணிக்காக குழாய் பாதை சீரமைப்புப் பணிகளை முடிவு செய்ததுடன், பணியினை செயல்படுத்துவதற்கு தேவையான ஒப்பந்ததாரர்களை முடிவு செய்து வருகிறது.* KSPPL *நிறுவனம், வாளையார் முதல் கோயம்புத்தூர் வரை குழாய் பதிக்கும் பணியினை செய்வதற்கு குழாய் பாதை சீரமைப்புப் பணிகளை முடிவு செய்ததுடன் கோயம்புத்தூரிலிருந்து சேலம் வரை குழாய் சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.*

3.1.16 தமிழ்நாட்டில் நகர எரிவாயு விநியோகத் திட்டம், 2023

*இயற்கை எரிவாயு என்பது, பசுமையான, பாதுகாப்பான மற்றும் சுத்தமான ஒரு எரிபொருள். தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும், தொழிற்சாலைகள், போக்குவரத்து மற்றும் வீடுகளில், இயற்கை எரிவாயு பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக, டோரண்ட் கேஸ் (*Torrent Gas*), ஏஜிஅபி (*AG&P*), ஐஓசிஎல் (*IOCL*), அதானி டோட்டல் கேஸ் (*Adani Total Gas*), மெகா இன்ஜினியரிங் (*Mega Engineering*), ஐஆர்எம் எனர்ஜி (*IRM Energy*) மற்றும் பிபிசிஎல் (*BPCL*) ஆகிய ஏழு நிறுவனங்களுக்கு, ஒன்றிய அரசானது எரிவாயுவை குழாய்மூலம் விநியோகம் செய்வதற்கான உட்கட்டமைப்பு அமைக்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்கான அனுமதி வழங்கியுள்ளது.*

*இத்திட்டத்தின்மூலம் 2,785 விற்பனை நிலையங்களில் அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (*Compressed Natural Gas*), சுமார் 2.30 கோடி வீடுகளுக்கு குழாயின்மூலம் இயற்கை எரிவாயு (*Piped Natural Gas*) ஆகியவற்றை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. சுமார் ரூ.35,000 கோடி திட்ட மதிப்பீட்டில், 8 ஆண்டுகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 27-7-2021 அன்று 25 அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு நிலையங்களையும், வள்ளூர், சென்னையில் ஒரு நகர எரிவாயு சேகரிக்கும் நிலையத்தினையும், 10-10-2022 அன்று ராணிப்பேட்டை மாவட்டத்தில் ஒரு திரவ எரிவாயு சேகரிக்கும் நிலையத்தினையும் தொடங்கி வைத்தார்கள்.

[2023 ஏப்ரல் 6

இதுவரை, தமிழ்நாட்டில் 181 அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு விற்பனை நிலையங்கள் உபயோகத்தில் உள்ளன. மேலும், 20,940 வீடுகளுக்கு எரிவாயு விநியோகம் செய்ய குழாய் பதிக்கும் பணிகள் முடிவடைந்து, 256 வீடுகளுக்கு குழாயின்மூலம் இயற்கை எரிவாயு வழங்கப்பட்டு வருகிறது.

3.1.17 டைசல் பயோ பார்க் லிமிடெட்

உயிரி தொழில்நுட்பம் மற்றும் மருந்தியல் நிறுவனங்களுக்கு ஓர் உட்கட்டமைப்பு வசதியை வழங்குவதற்காக, டிட்கோ, டைடல் பார்க் நிறுவனத்துடன் இணைந்து டைசல் உயிரி தொழில்நுட்பப் பூங்காவை உருவாக்கியுள்ளது. டைசல் உயிரி தொழில்நுட்பப் பூங்கா பகுதி–I மற்றும் பகுதி-II சென்னை தரமணியில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் முழுவதுமாக செயல்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து, மேற்கு தமிழ்நாட்டில் உயிரி தொழில்நுட்ப நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், டைசல் நிறுவனம், கோயம்புத்தூரில் 10 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.85 கோடி திட்ட மதிப்பீட்டில், 2.29 இலட்சம் சதுர அடி பரப்பளவில் டைசல் உயிரி தொழில்நுட்பப் பூங்கா பகுதி–III-ஐ உருவாக்கி, தற்போது செயல்படுத்தி வருகிறது.

ஒன்றிய அரசின் உயிரி தொழில்நுட்ப துறையும், டிட்கோவும் இணைந்து உயிரி தொழில்நுட்ப முதன்மை கருவிகள் வசதி மையத்தை (Biotechnology Core Instrumentation Facility (BTCIF) டைசல் உயிரி தொழில்நுட்பப் பூங்கா பகுதி–II-ல் ரூ.19.30 கோடி மதிப்பீட்டில் அமைத்துள்ளது. இந்த ஆய்வுக் கூடமானது, புதிய தொழில் முனைவோருக்கும், ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும், உயர்தர ஆய்வுக் கருவிகள் மற்றும் சோதனைக் கருவிகளைக் கொண்டு அறிவியல் வளர்ச்சிக்கும் துணைபுரிகிறது.

3.2 கொள்கைகள்

ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை 2030-க்குள் அடைவதற்கு தொழில் மற்றும் முதலீடு வர்த்தகத் துறை பல்வேறு கொள்கைகளை உருவாக்கியிருக்கின்றது. இந்த இலக்கை அடைவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்லும் வகையில், டிட்கோ மூன்று கொள்கைகளை உருவாக்கி இருக்கிறது.

2023 ஏப்ரல் 6]

3.2.1 தமிழ்நாடு நகர எரிவாயு விநியோக கொள்கை, 2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18-03-2023 அன்று "தமிழ்நாடு நகர எரிவாயு விநியோக கொள்கை 2023" யினை வெளியிட்டார்கள். பல்வேறு அரசுத் துறைகள், நிறுவனங்கள் மற்றும் பிற பங்குதாரர்களுடன் விரிவான ஆலோசனைகளுக்கு பின்னர், இந்த நகர எரிவாயு விநியோக திட்டத்திற்கான கொள்கையினை டிட்கோ நிறுவனம் உருவாக்கியிருந்தது. மேலும், நகர எரிவாயு விநியோக உட்கட்டமைப்பை துரிதமாக செயல்படுத்துவதற்கு, அரசின் அனுமதி பெற்றுள்ள 7 நகர எரிவாயு விநியோக நிறுவனங்களோடு டிட்கோ ஒருங்கிணைந்து செயலாற்றி வருகிறது.

3.2.2 தமிழ்நாடு சரக்கு போக்குவரத்துக் கொள்கை, 2023

2030 ஆம் ஆண்டில் பொருளாதாரமானது 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் என்ற மாநிலத்தின் இலக்கை அடைவதற்கும், வளர்ச்சிப் பாதையில் பிற மாநிலங்களோடு போட்டியிடும் திறனை உயர்த்துவதற்கும், சரக்கு போக்குவரத்துத் துறைக்கு வலுவான முக்கியத்துவம் அளிப்பதுடன், அதனைச் செயல்படுத்தும் சூழல் அமைப்பை நிறுவுதல் மிகவும் இன்றியமையாததாகும். ஆகையால், தமிழ்நாடு அரசு சரக்கு போக்குவரத்து சூழல் அமைப்பை உருவாக்குவதற்காக பல துறையிடையே ஒருங்கிணைந்த அணுகுமுறையுடன்கூடிய, 5 ஆண்டுக்கான, ஒரு சரக்கு போக்குவரத்துக் கொள்கையை உருவாக்கி உள்ளது. தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த, நம்பகமான, சிக்கனமான மற்றும் நிலையான சரக்கு போக்குவரத்து சூழல் அமைப்பை ஏற்படுத்துவது இக்கொள்கையின் நோக்கமாகும். இத்தொலைநோக்குப் பார்வையை உறுதிப்படுத்தும் விதமாக ஒழுங்குமுறை கட்டமைப்பு, ஒருங்கிணைந்த உட்கட்டமைப்பு, புதுமையான தொழில்நுட்பத்தைப் புகுத்துதல், பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு போன்றவற்றை ஏற்படுத்துதல், அதன்மூலம் தொழில் மற்றும் வர்த்தகத்திற்கு உகந்த மாநிலமாக தமிழ்நாட்டை மேலும் வலு சேர்த்திட இக்கொள்கை பெரிதும் உதவும். சரக்கு போக்குவரத்துத் துறையின் வளர்ச்சிக்காகத் தனியார் பங்களிப்பை ஊக்குவிப்பதோடு, சந்தை பங்கேற்பாளர்களுக்கு நிதி சலுகைகளையும் வழங்க இக்கொள்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.3.2023 அன்று “தமிழ்நாடு சரக்கு போக்குவரத்துக் கொள்கை மற்றும் ஒருங்கிணைந்த சரக்கு போக்குவரத்துத் திட்டம் 2023” யினை வெளியிட்டார்கள்.

3.2.3 மாநில ஒருங்கிணைந்த சரக்கு போக்குவரத்துத் திட்டம் (SILP)

அடுத்த 10 ஆண்டுகளுக்கு சரக்கு போக்குவரத்துத் துறையில் அடையாளம் கண்டறியப்பட்ட இடையூறுகளைக் களைவதும் மற்றும் மாநிலத்தில் ஏற்படும் உடனடித் தேவைகளுக்கு முன்முயற்சிகளை மேற்கொள்வதும், மாநில ஒருங்கிணைந்த சரக்கு போக்குவரத்துத் திட்டத்தின் (SILP) முக்கிய அம்சமாகும். மேலும், இது சரக்கு போக்குவரத்துத் துறையின் செயல்திறனை வெகுவாக மேம்படுத்தும்.

முக்கிய தொழில்கள் மற்றும் சரக்கு போக்குவரத்து உட்கட்டமைப்பு ஆகியவற்றிற்கு இடையே பொருட்கள் மற்றும் சரக்குகளை இறுதிப் பயனாளிகளுக்கு கொண்டு செல்ல ஒரு சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி, அனைத்து பங்குதாரர்களுக்கும் நீடித்த, நிலையான, விரைவான வளர்ச்சியை ஏற்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும். 3 சரக்கு போக்குவரத்து பெருவழித்தடங்களில் செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்களின் மதிப்பு சுமார் ரூ.63,000 கோடி என அடையாளம் காணப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 1.60 இலட்சம் நபர்கள் நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பைப் பெறுவர். இந்த ஒருங்கிணைந்த சரக்கு போக்குவரத்துத் திட்டம்மூலம் அடுத்த 10 ஆண்டுகளில் 6 முக்கியக் கருப்பொருட்களின் (Themes) மூலம், 50 திட்டங்களைச் செயல்படுத்த அடையாளம் காணப்பட்டுள்ளன. சரக்கு வாகன முனையங்களுக்கான வலுவான உட்கட்டமைப்பை ஏற்படுத்துதல், உயர்தர சேவைகள் வழங்குதல், திறன் மேம்படுத்துதல், இத்துறையில் பல்வேறு பிரிவுகளுக்கு ஊக்கமளிப்பு/நிதி ஆதரவு வழங்குதல் ஆகியவை இத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. பல்வேறு முன்மாதிரி முயற்சிகளோடு, மேற்கூறிய 50 திட்டங்களைச் செயல்படுத்த வேண்டிய துறை, அதற்கான கால நிர்ணயம், அதனால் ஏற்படும் நன்மைகள் ஆகியவற்றுடன் இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், எதிர்கால தேவைகளுக்கேற்ப, அவ்வப்போது இத்திட்டம் மேம்படுத்தப்படும்.

2023 ஏப்ரல் 6]

3.2.4 தமிழ்நாடு வானூர்தி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை, 2022

வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறைக்கான உற்பத்தி மற்றும் சேவை மையமாக தமிழ்நாட்டை மாற்றவேண்டும் என்ற நோக்கத்தோடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 8-11-2022 அன்று "தமிழ்நாடு வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில் கொள்கை 2022" (Tamil Nadu Aerospace & Defence Industrial Policy *2022) வெளியிடப்பட்டது. தமிழ்நாட்டில் வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில் துறையின் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் தொழில்நுட்ப செயலாக்கிகள் (*Technical enablers*) திறன் செயலாக்கிகள் (*Skilling enablers*), நிதி செயலாக்கிகள் (*Financial enablers*), உட்கட்டமைப்பு செயலாக்கிகள் (*Infrastructural enablers*) மற்றும் செயல்பாட்டு செயலாக்கிகள் (*Operational enablers*) போன்ற செயலாக்கிகளை உருவாக்க இக்கொள்கை வழிவகை செய்கிறது. இக்கொள்கையின்மூலம் அடுத்த 10 ஆண்டுகளில் சுமார் ரூ.75,000 கோடி முதலீட்டை ஈர்க்கவும், 1 இலட்சம் நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினை உருவாக்கவும் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

3.3 உற்பத்தித் துறையில் வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பங்களுக்கு ஏற்றவாறு திறன்மிகு மையங்கள் அமைத்தல் (Centres of Excellence)

உலகளவில் பெரிய நிறுவனங்களான Dassault Systemes, GE Aviation, *மற்றும்* Siemens *ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து மூன்று திறன்மிகு மையங்களை (*Centres of Excellence*), மொத்தம் ரூ.600 கோடி மதிப்பில் டிட்கோ, சென்னையில் அமைத்துள்ளது.*

3.3.1 தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்தி முறைக்கான திறன்மிகு மையம் (TANCAM)

டிட்கோ நிறுவனம், Dassault Systemes *உடன் இணைந்து இத்திறன்மிகு மையத்தை சுமார் 210 கோடி ரூபாய் மதிப்பில் உருவாக்கியுள்ளது. இத்திறன்மிகு மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 24-6-2022 அன்று திறந்து வைத்தார்கள். இந்த மையம் வான்வெளி மற்றும் பாதுகாப்பு* (A&D), *இயந்திர வாகனங்கள் (*Automotive*) மற்றும் மின்சார வாகனங்கள்* (Electric Vehicles) *போன்ற பல்வேறு*

தொழில் துறைகளுக்கு உதவும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. புத்தாக்க (start-ups) நிறுவனங்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு (MSME) 3D வடிவமைப்பு திறன்களை வழங்குவதன்மூலம் வணிக ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் இம்மையம் உதவி புரியும். மேலும், தற்போது "நான் முதல்வன்" திட்டத்தின் ஒரு பகுதியாக சுமார் 4,000 மாணவர்களுக்கு இம்மையத்தின் மூலம் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இந்த மையத்தின் ஒரு "துணை மையம்" சேலத்தில் நிறுவப்பட்டுள்ளது.

3.3.2 தமிழ்நாடு நுண்திறன் மற்றும் மேம்பட்ட உற்பத்தி முறைக்கான திறன்மிகு மையம் (TANSAM)

டிட்கோ நிறுவனம், Siemens Industrial Software Ltd உடன் இணைந்து இத்திறன்மிகு மையத்தை சுமார் 250 கோடி ரூபாய் மதிப்பில் உருவாக்கியுள்ளது. இத்திறன்மிகு மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 08-11-2022 அன்று திறந்து வைத்தார்கள். இந்த மையம் உற்பத்தியில் புதுமை (Product Innovation), முன்கணிப்பு பொறியியல் பகுப்பாய்வு மையம் (Center for Predictive Engineering Analytics), நுண்திறன் தொழிற்சாலை ஆராய்ச்சி மையம் (Smart Factory Research), பொருள் செயல்திறன் மேலாண்மை ஆராய்ச்சி மையம் (Centre for Asset Performance Management (IoT) research), உற்பத்தி சுழற்சி மேலாண்மைக்கான (Lifecycle Management) ஆராய்ச்சி மையம், மெய்நிகர் ஆராய்ச்சி (Virtual Reality/ Augmented Reality/ Mixed Reality) மற்றும் திறன் பயிற்சி உள்ளிட்ட ஏழு சிறப்பு பிரிவுகளை கொண்டுள்ளது. இந்த மையம், புத்தாக்க நிறுவனங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) மற்றும் பெரிய அளவிலான நிறுவனங்களுக்கு உற்பத்தி மேம்பாட்டிற்கான சேவைகளை வழங்கும். மேலும் தற்போது "நான் முதல்வன்" திட்டத்தின் ஒரு பகுதியாக TANSAM மையம் சுமார் 16,000 மாணவர்களுக்கு பயிற்சி வழங்கி வருகிறது.

3.3.3 தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்தி முறைக்கான திறன்மிகு மையம் (TAMCOE)

டிட்கோ நிறுவனம், GE Aviation உடன் இணைந்து இத்திறன்மிகு மையத்தை சுமார் ரூ.140 கோடி திட்ட மதிப்பில் உருவாக்கியுள்ளது. இத்திறன்மிகு மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்

2023 ஏப்ரல் 6]

08-11-2022 அன்று திறந்து வைத்தார்கள். விமான இயந்திரப் பாகங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் வாகனத் துறையின் துல்லியமான பாகங்கள் ஆகியவை இந்த மையத்தில் முப்பரிமாண முறையில் தயாரிக்கப்படுகின்றன. மேலும், இம்மையம், சேர்க்கை உற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்கான செயல்பாட்டிலும் ஈடுபட்டுள்ளது. இது பல்வேறு தொழில் துறைகளுக்கு சேர்க்கை உற்பத்தியில் வடிவமைப்பு (Design for Additive Manufacturing) *மேம்பட்ட முன்மாதிரி சோதனை* (Prototype development), *மறுசீரமைப்பு மற்றும் மறு பொறியியல்* (Reverse & Re-Engineering) *சேவைகளை வழங்கி வருகிறது.*

3.4 தமிழ்நாடு பாதுகாப்புத் தொழில் துறை பெருவழித்தடம் (TNDIC)

சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம் மற்றும் ஓசூர் ஆகிய ஐந்து முனையங்களை உள்ளடக்கிய “தமிழ்நாடு பாதுகாப்புத் தொழில் துறை பெருவழித்தடம் (TNDIC)” *செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த பெருவழித்தடத்தை செயல்படுத்துவதற்கான பல்வேறு உத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.*

3.4.1 பொது பரிசோதனை மையங்கள் (Common Testing Centres)

டிட்கோ நிறுவனம் பின்வரும் பொது பரிசோதனை மையங்களை தனியார் பங்களிப்புடன் செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. “பாதுகாப்பு பரிசோதனை உட்கட்டமைப்பு திட்டத்தின்” (Defence Testing Infrastructure Scheme) *கீழ், ஒன்றிய பாதுகாப்பு அமைச்சகத்தின் மானியத்துடன் இப்பரிசோதனை மையங்களை டிட்கோ அமைக்க உள்ளது,*

i) *ஆளில்லா விமான தொழிலுக்கான சோதனை வசதி* (Unmanned Aerial Systems Testing Facility)

ii) *மின்னணு போர் முறைக்கான சோதனை வசதி* (Electronic Warfare Testing Facility)

iii) *மின்னணு ஒளியியல் சோதனை வசதி* (Electro Optics Testing Facility)

EMI/EMC மற்றும் தொலைத்தொடர்புக்கான மற்றுமொரு சோதனை வசதியை சுமார் ரூ.123 கோடி மதிப்பில், மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் (MeitY) "EMC 2.0" திட்டத்தின்கீழ், ஒன்றிய அரசின் மானியத்துடனும், தனியார் பங்களிப்புடனும் டிட்கோ நிறுவ உள்ளது.

மேற்கண்ட நான்கு பொது பரிசோதனை மையங்களும் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள வல்லம் வடகாலில் நிறுவப்பட உள்ளன.

3.4.2 பொது வசதி மையங்கள் (Common Facility Centres)

வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறையின் உற்பத்தியில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (MSME) பங்களிப்பு மிக அதிகமாகும். அதனால் இந்நிறுவனங்களில் தேவைகளைக் கண்டறிந்து அதனை பூர்த்தி செய்யும் நோக்கத்துடன், டிட்கோ நிறுவனம் பொது வசதி மையங்களை நிறுவி வருகின்றது. மேலும், தொழில் நிறுவனங்களை, வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறையின் (A&D) அங்கமாக்க இம்மையங்கள் உதவி புரியும். அதன்படி "திருச்சி பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கூட்டமைப்பு" (Trichy Engineering and Technology Cluster) பொது வசதி மையத்தில் டிட்கோ ரூ.10 கோடி முதலீடு செய்துள்ளது. மேலும், கோயம்புத்தூரில் வார்ப்பு உலோகத் (இரும்பு) தொழிற்சாலைக்கு (Casting & Foundry) பவுண்ட்ரி டெவலப்மண்ட் பவுண்டேஷன் நிறுவனத்துடன் இணைந்து சுமார் ரூபாய் 30 கோடி மதிப்பில் பொது வசதி மையம் அமைக்கப்படவுள்ளது.

வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில் துறையில் உதிரிப்பாகங்களின் பிந்தைய செயல்பாடு (Post Processing) முக்கியப் பங்கு வகிக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு, டிட்கோ, GTN தொழில் நிறுவனத்துடன் இணைந்து, கோயம்புத்தூரில் அதற்கான வசதியை ஏற்படுத்தியுள்ளது. இப்பொதுவசதி மையம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் அமைந்துள்ளது.

மேலும், கோயம்புத்தூரில் தொழில் துறை பங்குதாரருடன் இணைந்து பொது பொறியியல் வசதி (Common Engineering Facility Centre) மையத்தை நிறுவவும் டிட்கோ திட்டமிட்டுள்ளது. இந்த மையம், விமான வடிவமைப்பு மற்றும் மேம்பாடு (Aero Design & Development), பராமரிப்பு, பழுதுநீக்கம் மற்றும்

2023 ஏப்ரல் 6]

சீரமைப்பு (Maintenance, Repair overall), *தொழில் துறை இயந்திரவியல் (*Industrial Robotics*), மின்சாரவியல் (*Electrical*), கலப்புப்பொருட்கள் (*Composites*), விமான மின்னணுவியல் (*Avionics*), இயந்திர மின்னணுவியல் மற்றும் பரிசோதனை (*Mechatronics & Testing*) ஆகியவற்றில் வளர்ந்து வரும் புத்தாக்க நிறுவனங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு (*MSME*) தொழில்நுட்ப ஆதரவை வழங்கும்.*

3.4.3 வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில்களுக்கான தொழில் பூங்காக்களை நிறுவுதல்

தமிழ்நாட்டில் வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறையில் முதலீட்டை ஈர்ப்பதற்கான உத்தியின் ஒரு பகுதியாக வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறையின் பல்வேறு துணை துறைகளுக்கான தொழில் பூங்காக்களை அமைக்கும் முயற்சியில் டிட்கோ ஈடுபட்டுள்ளது. ஸ்ரீபெரும்புதூரில் உள்ள வல்லம் வடகாலில் ஒரு வான்வெளி மற்றும் பாதுகாப்புப் பூங்கா செயல்பட்டு வருகிறது, மேலும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் வாரப்பட்டி மற்றும் சூலூரில் இரண்டு தொழில் பூங்காக்களை டிட்கோ நிறுவ உள்ளது.

3.4.4 விமானத்தை இயக்க பயிற்சி தரும் நிறுவனங்களை (Flying Training Organisations) அமைத்தல்

*விமானப் போக்குவரத்து, பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒன்றாகும். இந்தியாவில் விமானப் போக்குவரத்துத் துறையின் வளர்ச்சி அதிகரித்து வருவதால், அதிகளவில் பயிற்சி பெற்ற விமானிகள் தேவைப்படுகிறார்கள். இத்தகைய பயிற்சி பெற்ற விமானிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு, டிட்கோ நிறுவனம் தமிழ்நாட்டில் விமானங்களை இயக்க பயிற்சி தரும் நிறுவனங்களை (*Flying Training Organisations*) உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதன்மூலம் தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், அந்நிய செலாவணியை சேமிக்கவும் இயலும்.*

3.4.5 மதுரை மற்றும் கோவையில் ட்ரோன் விமானி பயிற்சி நிறுவனங்களை அமைத்தல்

ட்ரோன் துறையில் அதிகரித்து வரும் விமானிகளின் தேவையைக் கருத்தில் கொண்டு, ஒன்றிய அரசின் இந்திரா காந்தி

ராஷ்டிரிய யுரான் அகாடமி (IGRUA) மற்றும் தமிழ்நாட்டின் பிளானட்-எக்ஸ் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து டிட்கோ நிறுவனம், இரண்டு ட்ரோன் விமானி பயிற்சி நிறுவனங்களை மதுரை மற்றும் கோயம்புத்தூரில் நிறுவ வழிவகை செய்துள்ளது. இந்த இரண்டு ட்ரோன் விமானி பயிற்சி நிறுவனங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 8.11.2022 அன்று திறந்து வைத்தார்கள். இப்பயிற்சி நிறுவனங்கள் ஆண்டுதோறும் 2,400-க்கும் மேற்பட்ட ட்ரோன் விமானிகளுக்கு பயிற்சி அளிக்கும் திறன் கொண்டவை.

3.5 தமிழ்நாட்டில் உருவாகும் வளர் துறைகளுக்கான ஊக்க நிதியம் (Tamil Nadu Emerging Sector Seed Fund)

"தமிழ்நாட்டின் தயாரிப்பு" என்பதை ஊக்குவிப்பதற்காக, மூலதன ஊக்க நிதி அளிக்க தமிழ்நாடு அரசு ஒரு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டின் திறன் வாய்ந்த மனிதவளத்தைப் பயன்படுத்தி, புத்தாக்கம் (Innovation), ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D) மற்றும் புத்தொழில் (StartUp) கலாச்சாரத்தை மென்மேலும் ஊக்குவிக்க, தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (TNIFMC), டிட்கோ மற்றும் டைடல் பூங்கா நிறுவனங்கள் மூலமாக ரூ.500 கோடியை இதற்கென தமிழ்நாடு அரசு ஒதுக்கியுள்ளது. இந்நிதி செபியில் (SEBI) பதிவு செய்யப்பட்ட வகை I - வென்ச்சர் கேபிடல் ஃபண்ட் ஆகும். இந்நிதி தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை கழகத்தால் (TNIFMC) நிர்வகிக்கப்படுகிறது.

வான்வெளி மற்றும் பாதுகாப்பு (A&D), மேம்பட்ட உற்பத்தி (Advanced Manufacturing), புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (Renewable Energy), ESDM, தொழில்நுட்ப ஜவுளி (Technical Textile), ஆழ்தொழில்நுட்பம் (DeepTech), இயந்திரவியல் (Robotics), மின்னணு வர்த்தகம் (E-Commerce), வேளாண் மற்றும் உணவுப் பதப்படுத்துதல் தொழில்நுட்பம், மருந்து தயாரிப்பு தொழில்நுட்பம் (Pharma and Bulk Drugs), உயிரி தொழில்நுட்பம் (BioTech), மருத்துவ சாதனங்கள் (Medical Devices), நிதி தொழில்நுட்பம் (FinTech), விண்வெளி தொழில்நுட்பம் (SpaceTech) ஆகியவை இந்நிதியின் சிறப்புக் கவனம் பெறும் துறைகளுள் முக்கியமானவை ஆகும்.

2023 ஏப்ரல் 6]

இந்த மூலதன ஊக்க நிதியைப் பெறுவதற்காக தகுதிவாய்ந்த புத்தொழில் நிறுவனங்களிடம் இருந்து இணையதளம்மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு, முதலீட்டு வல்லுநர் குழுவால் புத்தொழில் நிறுவனங்கள் தேர்வு செய்யப்படுகின்றன. இந்நிதியின் முதற் சுற்றில், ஐந்து புத்தொழில் நிறுவனங்களுக்கு மொத்தத்தில் ரூ.13.4 கோடி வழங்குவதற்கான ஒப்பளிப்பு ஆணைகளை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 27.01.2023 அன்று வழங்கினார்கள்.

3.6 தொழில்களுக்கான சூழலமைப்பு நிதியம் (IEF)

தொழில் சூழல் அமைப்புடன் சிறு உட்கட்டமைப்பு திட்டங்களை ஏற்படுத்துவதற்கு உகந்த வகையில், தமிழ்நாடு அரசு ரூ.500 கோடியில் "தொழில்களுக்கான சூழல் அமைப்பு நிதியம்" ஒன்றினை உருவாக்கியுள்ளது. இந்நிதியத்தை நிர்வகிக்கும் முகமையாக செயல்பட டிட்கோ நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்நிதியம் "உயர் அதிகாரக் குழுவினால்" கண்காணிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றது. சிப்காட், டிட்கோ, தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் சார்பில், இந்நிதியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு கோரி வரும் கருத்துருக்கள் டிட்கோவால் பெறப்படும். இக்கருத்துருக்களை "உயர் அதிகாரக் குழு" பரிசீலனை செய்து, நிதி வழங்க ஒப்புதல் அளிக்கும். இதுவரை உயர் அதிகாரக் குழு 16 கருத்துருக்களுக்கு ரூ.76.71 கோடி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

3.7 தமிழ்நாடு அறிவுசார் நகரம்

கல்வியை மையமாகக் கொண்டிருக்கும் உலகத் தரத்திலான ஓர் அறிவு சூழலமைப்பாக "தமிழ்நாடு அறிவுசார் நகரை" உருவாக்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. சிறந்த பல்கலைக்கழகங்கள், கல்வி நிலையங்கள், திறன்மிகு மையங்கள் மற்றும் அறிவுசார் தொழிலகங்கள் அனைத்தும் அருகருகே இந்த நவீன நகரத்தில் அமைந்திருக்கும். இதன்மூலம், உயர்கல்வியும், மனிதவள மேம்பாடும், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சியும் ஒருங்கிணைந்து செயல்படும். பசுமையான வாழ்விட சூழலில் அடுத்த தலைமுறைக்கான புத்தாக்கத்தை உத்வேகத்துடன் ஊக்குவிக்கும் வகையில் அனைத்து வசதிகளையும் கொண்டதாக இந்நகரம் திகழும். அறிவால் முன்னெடுக்கப்படும்

பொருளாதாரமாக தமிழ்நாட்டை உயர்த்துவதற்கு இது வழிவகை செய்யும்.

தமிழ்நாட்டிலிருந்து உலகின் பிற பகுதிகளுக்கும் மற்றும் உலகின் பிற பகுதிகளிலிருந்து தமிழ்நாட்டிற்கும் அறிவு பகிர்வுக்கு ஒரு வினையூக்கியாக தமிழ்நாடு அறிவுசார் நகரம் செயலாற்றும். உயிரின அறிவியல் (Life Sciences), வேளாண் தொழில்நுட்பம் (Agri Tech), கட்டடக்கலை மற்றும் வடிவமைப்பு (Architecture & Design), குறைக் கடத்திகள் (Semiconductors), மின்னணு அமைப்புகளின் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி (Electronics System Design & Manufacturing), வான்வெளி மற்றும் பாதுகாப்பு (Aerospace & Defence), நகர்திறன் (Mobility), நிதி நுட்பம் (FinTech), தொலைத்தொடர்புகள் (Telecommunications), விண்வெளி தொழில்நுட்பம் (SpaceTech) போன்ற பிரிவுகளில் ஆராய்ச்சியையும், புத்தாக்கத்தையும் வளர்த்தெடுக்கும் பணியை தமிழ்நாடு அறிவுசார் நகரம் மேற்கொள்ளும். தமிழ்நாடு அறிவுசார் நகரத்தை உருவாக்குவதற்கான நிலம், திருவள்ளூர் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்நிலத்தை கையகப்படுத்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3.8 பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பூங்காக்கள்

தொழில் துறைக்கும், கல்வித் துறைக்கும் இடையில் ஒத்துழைப்பை உருவாக்குவது, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஏதுவாக்குவது, ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகளை வர்த்தக செயல்பாடாக மாற்றுவது, தொழில்முனைவு மேம்பாடு, புத்தாக்கம் மற்றும் அறிவுசார் சொத்துரிமை அதிகரிப்பு (Intellectual Property), மற்றும் புதுமைப் புனைவு மண்டலங்களை உருவாக்குவது (Innovation Clusters) இதன் நோக்கமாகும். உயிரி தொழில்நுட்பம் (BioTech), மீநுண் தொழில்நுட்பம் (NanoTech) மற்றும் ஆழ் தொழில்நுட்பம் (DeepTech) ஆகியவற்றில் திறன்மிகு மையங்களை (Centres of Excellence) உருவாக்கி புத்தாக்க நிறுவனங்கள் (startups) மற்றும் சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பயன்பாட்டிற்கு உதவுவதே பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பூங்காக்களின் நோக்கமாகும்.

சென்னை IIT ஆராய்ச்சிப் பூங்காவின் மாதிரியை பின்பற்றி, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி

2023 ஏப்ரல் 6]

மற்றும் காரைக்குடியில் உள்ள அரசு பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சிப் பூங்காக்களை நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காக்களை நிறுவுவதற்கான தொடர்புடைய பல பங்காளர்களின் ஒத்துழைப்போடு, ஆராய்ச்சிப் பூங்கா கட்டடம் மற்றும் தொடர்பான பணிகளை டிட்கோ நிறுவனம் மேற்கொள்ளும்.

3.9 விமான நிலையங்கள்

நமது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய காரணிகளில் ஒன்றாக வான்வழி போக்குவரத்து உள்ளது. விமானப் பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தின் தேவை தமிழ்நாட்டில் பன்மடங்கு அதிகரித்துள்ளது.

3.9.1 சென்னை அருகே புதிய விமான நிலையம்

சென்னை மாநகரம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதியின் விமானப் போக்குவரத்துத் தேவைகளை கையாண்டு வரும் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம், அதன் அதிகபட்ச பயணிகள் கையாளும் திறனை 2028-ம் ஆண்டில் எட்டிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை விமான நிலையம் கையாண்டு வந்த விமானப் போக்குவரத்தின் ஒரு குறிப்பிட்ட பங்கு, நமது அண்டை மாநிலங்களில் அமைந்துள்ள புதிய விமான நிலையங்களுக்கு சென்றுள்ளது. இதனால் இந்திய விமானப் போக்குவரத்தில், சென்னை விமான நிலையம் வகித்து வந்த 3-ம் இடத்திலிருந்து தற்போது 5-வது இடத்திற்கு சென்றுள்ளது. விமானப் போக்குவரத்தினால் தமிழ்நாடு பெற்ற வளர்ச்சியினைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளவும், எதிர்காலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமானப் போக்குவரத்தில் ஏற்படும் வளர்ச்சியினால் உருவாகும் பொருளாதார பலன்களை முழுமையாக பெறவும், மாநிலத்தின் முதலீட்டு சூழ்நிலைக்கு உறுதுணையாக இருக்கவும், சென்னையில் ஒரு புதிய விமான நிலையத்தினை அமைப்பது தற்போது இன்றியமையாதது ஆகும்.

வர்த்தகம், தொழில், சுற்றுலா போன்ற துறைகளில் தமிழ்நாடு மேலும் வளர்ச்சி அடையவும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், அதிகளவில் பயணிகள் மற்றும் சரக்குகளைக் கையாளும் திறன் கொண்ட சர்வதேச

[*2023 ஏப்ரல் 6*

தரத்திலான உட்கட்டமைப்பு மற்றும் இதர வசதிகளுடன் இப்புதிய விமான நிலையம் உருவாக்கப்படும். இப்புதிய விமான நிலையம் அமைப்பதற்கான பணிகளை மேற்கொள்ள முகமை நிறுவனமாக டிட்கோ நிறுவனத்தை தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது.

இந்திய விமான நிலைய ஆணையத்தின் சாத்தியக்கூறு அறிக்கையின் அடிப்படையில், புதிய விமான நிலையம் அமைப்பதற்கான பொருத்தமான இடமாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பரந்தூர் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அடுத்த 35 வருடங்களுக்கான எதிர்கால விமானப் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், ஆண்டுக்கு 100 மில்லியன் பயணிகளைக் கையாளும் வகையில் இந்த புதிய விமான நிலையம் அமைக்கப்படும்.

புதிய விமான நிலையம் அமைப்பதற்கான இடத்திற்கு ஒப்புதல் கோரும் விண்ணப்பத்தை, ஒன்றிய அரசின் புதிய விமான நிலையக் கொள்கை, 2008-ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளின்படி, விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின்கீழ் உள்ள குழுவிற்கு டிட்கோ நிறுவனம் சமர்ப்பித்துள்ளது. இவ்விண்ணப்பம், ஒன்றிய அரசின் அமைச்சகத்தின் பரிசீலனையில் உள்ளது.

அமையவிருக்கும் விமான நிலைய செயல்பாட்டுப் பகுதியில் உள்ள நீர்நிலைகளைப் பாதுகாப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கும், நீர்நிலைகளின் கொள்ளளவுகளைத் தொடர்ந்து பராமரிக்கவும், தீர்வுகளை உரிய ஆய்வின்படி பரிந்துரைக்கவும், வல்லுநர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் அடங்கிய ஓர் “உயர்மட்ட குழுவினை” தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது.

புதிய விமான நிலையம் அமைப்பதற்கு தேவையான விரிவான தொழில்நுட்பப் பொருளாதார அறிக்கை (DTER) *தயாரிப்பதற்காக ஓர் ஆலோசகர் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதற்கான ஒப்பந்தப்புள்ளியை டிட்கோ நிறுவனம் கோரியுள்ளது. ஆலோசகர் நிறுவனம் விரைவில் நியமிக்கப்படும்.*

3.10 தமிழ்நாட்டில் விமான நிலைய விரிவாக்கத் திட்டங்கள்

ஆறு விமான நிலையங்கள் (இவற்றில் மூன்று சர்வதேச விமான நிலையங்கள்) அமையப் பெற்ற பெருமை கொண்டது தமிழ்நாடு. இவ்விமான நிலையங்கள் மற்றும் வேலூரில்

2023 ஏப்ரல் 6]

தொடங்கப்படவுள்ள ஒரு விமான நிலையம் ஆகியவை மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது மட்டுமின்றி, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றன. முழுமையான வளர்ச்சியை நோக்கிப் பயணிக்கும் தமிழ்நாட்டிற்கு ஈடு கொடுக்கும் வகையில், விமான நிலையங்களின் விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கல் ஆகியவற்றை இந்திய விமான நிலைய ஆணையம் மேற்கொண்டுள்ளது. இதற்கு கூடுதல் நிலம் மிக முக்கியத் தேவையாகும். விரிவாக்கத்திற்கான நிலங்கள் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு (ம) வர்த்தகத் துறையால் கையகப்படுத்தப்பட்டு, இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு வழங்கப்படுகிறது.

3.10.1 சென்னை விமான நிலையம்

சென்னை விமான நிலையத்தின் மொத்த பரப்பளவு 1,318.85 ஏக்கர் ஆகும். சென்னை விமான நிலைய விரிவாக்கத்திற்காக, 67.95 ஏக்கர் பட்டா நிலங்களையும், 10.32 ஏக்கர் புறம்போக்கு நிலங்களையும் வழங்குமாறு, இந்திய விமான நிலைய ஆணையம், மாநில அரசை கோரியுள்ளது. இதில் 50.36 ஏக்கர் பட்டா நிலங்கள் இந்திய விமான நிலைய ஆணையம் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரசு நிலங்களை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான பணி நடைபெற்று வருகிறது. 21.24 ஏக்கர் பாதுகாப்புத் துறை நிலங்களுக்கான பணி அனுமதி, பாதுகாப்பு அமைச்சகத்திடம் இருந்து பெறப்பட்டுள்ளது.

3.10.2 மதுரை விமான நிலையம்

மதுரை விமான நிலையம் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களின், பயணிகள் மற்றும் சரக்கு விமானப் போக்குவரத்து தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு முக்கிய விமான நிலையமாகும். மதுரை விமான நிலையத்தின் மொத்த பரப்பளவு 502.19 ஏக்கர் ஆகும். மதுரை விமான நிலையத்தின் வளர்ச்சி வீதத்தை கருத்தில்கொண்டு, இவ்விமான நிலையத்தை விரிவாக்கம் செய்ய இந்திய விமான நிலைய ஆணையம் முடிவு செய்து, இதற்கென, 462.35 ஏக்கர் பட்டா நிலங்கள் மற்றும் 171.09 ஏக்கர் புறம்போக்கு நிலங்களை மாநில அரசிடம் வழங்க கோரியுள்ளது. சுமார் 460.38 ஏக்கர் பட்டா நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு இந்திய

விமான நிலைய ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விமான நிலைய விரிவாக்கத்திற்கு தேவையான 171.01 ஏக்கர் புறம்போக்கு நிலங்களில், 84.85 ஏக்கர் புறம்போக்கு நிலங்கள் ஏற்கெனவே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மதுரை பகுதி மக்களின் தொடர் கோரிக்கைகள் மற்றும் விருப்பத்தை கருத்தில்கொண்டு, மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக அறிவிக்க வேண்டும் என தமிழ்நாடு அரசு, இந்திய விமானப் போக்குவரத்து அமைச்சகத்தை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

3.10.3 கோயம்புத்தூர் விமான நிலையம்

கோயம்புத்தூர் விமான நிலையத்தின் மொத்த பரப்பளவு 420.32 ஏக்கர் ஆகும். இவ்விமான நிலைய விரிவாக்கத்திற்காக 468.80 ஏக்கர் பட்டா நிலங்களும், 28.86 ஏக்கர் புறம்போக்கு நிலங்களும், 151.77 ஏக்கர் பாதுகாப்புத் துறை நிலங்களும், 3.15 ஏக்கர் ரயில்வே மற்றும் பிற துறை நிலங்களும் வழங்குமாறு இந்திய விமான நிலைய ஆணையம் கோரியுள்ளது. ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்ட 395.07 ஏக்கர் பட்டா நிலங்களும், 20.58 ஏக்கர் புறம்போக்கு நிலங்களும் விரைவில் இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு குத்தகை முறையில் வழங்கப்படும். விமான நிலைய விரிவாக்கத்திற்காக 148.39 ஏக்கர் பாதுகாப்புத் துறை நிலங்களுக்கான பணி அனுமதியை பாதுகாப்பு அமைச்சகம் வழங்கியுள்ளது. மீதமுள்ள நிலங்களை கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

3.10.4 திருச்சிராப்பள்ளி விமான நிலையம்

திருச்சிராப்பள்ளி விமான நிலையத்தின் மொத்த பரப்பளவு 1702.53 ஏக்கர் ஆகும். விமான நிலைய விரிவாக்கத்திற்காக 302.92 ஏக்கர் பட்டா நிலங்கள், 34.16 ஏக்கர் புறம்போக்கு நிலங்கள் மற்றும் 133.96 ஏக்கர் பாதுகாப்புத் துறை நிலங்களை இந்திய விமான நிலைய ஆணையம் கோரியுள்ளது. இதுவரை 62.19 ஏக்கர் பட்டா நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. 166.97 ஏக்கர் பாதுகாப்புத் துறை நிலங்களுக்கான பணி அனுமதி, பாதுகாப்பு அமைச்சகத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 6]

3.10.5 சேலம் விமான நிலையம்

சேலம் விமான நிலையத்தின் மொத்த பரப்பளவு 128.81 ஏக்கர் ஆகும். விமான நிலைய விரிவாக்கத்திற்காக 629.74 ஏக்கர் பட்டா நிலங்களையும் 55.32 ஏக்கர் புறம்போக்கு நிலங்களையும் இந்திய விமான நிலைய ஆணையம் கோரியுள்ளது. பட்டா நிலங்களை கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

3.10.6 தூத்துக்குடி விமான நிலையம்

தூத்துக்குடி விமான நிலையத்தின் மொத்த பரப்பளவு 188.64 ஏக்கர் ஆகும். தூத்துக்குடி விமான நிலைய விரிவாக்கத்திற்காக இந்திய விமான நிலைய ஆணையம் 727.15 ஏக்கர் பட்டா நிலங்களையும், 5.76 ஏக்கர் புறம்போக்கு நிலங்களையும் வழங்கக் கோரியுள்ளது. சுமார் 601.20 ஏக்கர் பட்டா நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு இந்திய விமான நிலைய ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

3.10.7 வேலூர் விமான நிலையம்

வேலூர் விமான நிலையத்தின் மொத்த பரப்பளவு 46.03 ஏக்கர் ஆகும். விமான ஓடுதள பாதை, டாக்சிவே (taxiway), *ஏப்ரான்* (apron) *வசதி மற்றும் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக் கோபுரம் போன்ற உள்கட்டமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன. விமான நிலையம் செயல்படுவதற்கான உரிமம்* (License to operate), *விமான போக்குவரத்துத் துறை இயக்குநரகத்திடமிருந்து* (DGCA) *பெற வேண்டியுள்ளது. வேலூர் விமான நிலைய விரிவாக்கத்திற்காக இந்திய விமான நிலைய ஆணையம் 11.02 ஏக்கர் பட்டா நிலங்களையும், 53.36 ஏக்கர் புறம்போக்கு நிலங்களையும் வழங்குமாறு கோரியுள்ளது. இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.*

3.10.8 சென்னை – பினாங்கு விமான போக்குவரத்து

தமிழ் மக்களின் கோரிக்கை மற்றும் எதிர்பார்ப்பிற்கிணங்க, சென்னைக்கும் பினாங்குக்கும் (மலேசியா) இடையே நேரடி விமானப் போக்குவரத்து தொடங்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களை கேட்டுக்கொண்டுள்ளார். இது குறித்து, தமிழ்நாடு அரசு விமான நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டுள்ளது.

[2023 ஏப்ரல் 6

3.11 டிட்கோ நிதிச்செயல்பாடு

டிட்கோ நிறுவனம், 2021-22 ஆம் நிதி ஆண்டில் வரிக்கு பிந்தைய நிகர இலாபமாக 252.17 கோடி ரூபாய் ஈட்டி, அரசுக்கு பங்கு ஈவு தொகையாக (Dividend) 150 கோடி ரூபாய் (59.48%) 2022-23 ஆம் நிதியாண்டில் அளித்துள்ளது.

4. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்காக 1949 ஆம் ஆண்டில் இந்திய கம்பெனிகள் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட முன்னோடி மேம்பாட்டு நிதி நிறுவனமாகும். இக்கழகம் குறு, சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கி வருகிறது. முக்கியமாக, முதல் தலைமுறை தொழில் முனைவோர்களை ஊக்குவிப்பதில் இக்கழகம் முன்னோடியாக திகழ்கிறது. இக்கழகத்தின் மொத்த நிதி உதவியில் 90 விழுக்காடுக்கு மேலாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும், 40 விழுக்காடு முதல் தலைமுறை தொழில் முனைவோர்களுக்குமாக வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிறுவனம் 31.03.2023 வரை 1,30,472 நிறுவனங்களுக்கு ரூபாய் 23,021.21 கோடி அளவிற்கு கடன் அனுமதி வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு தொடர்ந்து வழங்கி வரும் ஆதரவினாலும் வழிகாட்டுதலாலும், இக்கழகம் 2003-04 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து கடந்த 21 வருடங்களாக நிகர இலாபம் ஈட்டி வருகிறது. இந்த வகையில் 2022-23 ஆம் நிதியாண்டில், முதன்முதலாக அதிகப்படியான நிகர இலாபம் ரூபாய் 105 கோடியை (தற்காலிக) எட்டியுள்ளது.

இக்கழகம், தற்போது கடன் வழங்கல் சூழலுக்கு ஏற்றவாறு மாநிலத்தில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு அனைத்து விதமான உதவிகளையும் வழங்கும் வகையில் செயல்பட்டுவருவதன் விளைவாக, இதனுடைய 2021-22 ஆம் ஆண்டின் செயல்பாட்டில் மிகப் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டு, இதனுடைய நிர்வாக கடன் நிலுவைத் தொகை ரூபாய் 2,032 கோடியாக உயர்ந்துள்ளது. இதன் விளைவாக, இந்நிறுவனத்தின் தரம் “BBB+” இல் இருந்து “A” ஆக முன்னேறியுள்ளது. இந்நிறுவனம், இதே வளர்ச்சி உத்வேகத்துடன் செயல்பட்டு 23.24% வளர்ச்சி விகிதத்துடன் 2022-23 ஆம் நிதியாண்டில் உயர்மட்ட

2023 ஏப்ரல் 6]

மொத்த கடன் நிலுவைத் தொகையான ரூபாய் 2526.77 கோடியை எட்டியுள்ளது.

மேலும், இக்கழகம் 2015-16 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஈவுத்தொகை வழங்கி வருகிறது. கடந்த 2021-22 ஆம் நிதியாண்டின் ஈவுத் தொகையான ரூபாய் 9.11 கோடியினை தமிழ்நாடு அரசிடம் இக்கழகம் வழங்கியுள்ளது.

4.1. கடன் தொகுப்பு தொகை

இந்நிறுவனத்தின் மொத்த கடன் தொகுப்பு தொகை 31-03-2023-ன்படி ரூபாய் 2526.77 கோடியாக உள்ளது. இதன் தொழில் வாரியான சதவிகிதம் பின்வருமாறு: பொறியியல் – 22.05%, பிளாஸ்டிக்- 10.09%, உணவுப் பதப்படுத்துதல் - 10.93%, ஜவுளி - 5.41%, மின் இயந்திரங்கள் – 19.99%, மற்றவை – 31.53%.

4.2. நடைமுறையில் உள்ள திட்டங்கள்

தொழில் முனைவோரின் பல்வேறு நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கீழ்க்கண்ட திட்டங்களை ஏற்கெனவே செயல்படுத்தி வருகிறது:-

4.2.1 பொது காலக்கடன் (General Term Loan)

இக்கழகம், உற்பத்தி மற்றும் சேவை துறைகளில் புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும், தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலைகளை விரிவாக்குவதற்கும், நவீனமாக்குவதற்கும், உற்பத்தியைப் பன்முனைப்படுத்துவதற்கும், இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்குகிறது.

பொது/தனி நிறுவனங்களுக்கு காலக்கடன் ரூபாய் 41 கோடி வரையிலும், தனி உரிம நிறுவனங்கள் கூட்டு நிறுவனங்கள்/வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டு நிறுவனங்களுக்கு காலக்கடன் ரூபாய் 27 கோடி வரையிலும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2022-23 ஆம் ஆண்டில், 204 தொழில் முனைவோருக்கு ரூபாய் 287.40 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 6

4.2.2 இயந்திர நிதியுதவித் திட்டம் (Equipment Finance Scheme)

ஏற்கெனவே திறம்பட செயல்பட்டு வரும் நிறுவனங்களுக்கு, இயந்திரம் வாங்குவதற்கு இத்திட்டத்தின்கீழ் தொழில் முனைவோரின் சொந்த முதலீடு 15 சதவிகிதத்தில் கடனுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2022-23 ஆம் நிதியாண்டில், 97 நிறுவனங்களுக்கு ரூபாய் 119.18 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

4.2.3 இயந்திர நிதியுதவித் திட்டம் - துரித சேவை (Equipment Finance Scheme-Fast Track)

ஏற்கெனவே நன்கு செயல்பட்டுக் கொண்டிருக்கும் நிறுவனங்கள் தங்களது தொழிலை விரிவாக்கம்/பன்முகப்படுத்துதல்/ நவீனமயமாக்கம் செய்யத் தேவையான இயந்திரங்களை வாங்க தொழில் முனைவோரின் மூலதனமின்றி 100% நிதியுதவி வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தில் வைப்புநிதி பிணையமாக ஏற்றுக்கொள்ளப்படும். இத்திட்டத்தின்கீழ் 2022-23 ஆம் நிதியாண்டில், 90 முனைவோருக்கு ரூபாய் 66.84 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

4.2.4 எளிய நடைமுறை மூலதனத் திட்டம் (Flexi Working Capital Term Loan)

உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் நிறுவனங்களின் நடைமுறை/ கூடுதல் நடைமுறை மூலதனத் தேவைகளை, பூர்த்தி செய்யும் விதமாக இந்த எளிய நடைமுறைக் காலக் கடன் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அதிகபட்சமாக ஒரு நிறுவனத்திற்கு ரூபாய் 4 கோடி வரை கடனுதவி வழங்கப்படுகிறது. மேலும் கடன் பெற்ற நிறுவனங்கள் மேற்படி கடனை ஒரு வருடத்திற்குப் பிறகு கடனைத் திருப்பிச் செலுத்தவோ அல்லது புதுப்பிப்பதற்கோ வசதி உள்ளது. இத்திட்டத்தின்கீழ், 2022-23 ஆம் நிதியாண்டில், 35 தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 22.01 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 6]

4.2.5 எளிய நடைமுறை மூலதனத் திட்டத்தின்கீழ் தற்காலிக நடைமுறை கடன் வரம்புத் திட்டம் (Adhoc Working Capital limit under Flexi Working Capital Term Loan Scheme)

கோவிட் தொற்று காலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு ஏற்பட்ட பாதிப்பைக் கருத்தில்கொண்டு, அவைகளின் உடனடி நிதித் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் "எளிய நடைமுறை மூலதனத் திட்டத்தின்கீழ் தற்காலிக நடைமுறை கடன் வரம்புத் திட்டம்" என்ற சிறப்புத் திட்டத்தை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் நடைமுறைபடுத்தியுள்ளது. இத்திட்டத்தின்மூலம், இக்கழகத்தில் ஏற்கெனவே கடன் பெற்ற மற்றும் கடன் பெறாத உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த தொழில் நிறுவனங்கள் கடன் பெற்று பயனடையலாம். இத்திட்டத்தின்கீழ், 2022-23 ஆம் நிதியாண்டில், 84 தொழில் முனைவோருக்கு ரூபாய் 62.60 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

4.2.6 சிறப்பு வாடிக்கையாளர் திட்டம் (Privileged Customer Scheme)

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் நிதியுதவி பெற்று நடைமுறையில் சிறப்பாக செயல்படும் நிறுவனங்களுக்கு, அவர்களது அவசர மற்றும் தொழில் ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணம் தொழில் முனைவோரின் சொந்த மூலதனம் இன்றி இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2022-23 ஆம் நிதியாண்டில், 261 தொழில் முனைவோருக்கு ரூபாய் 119.45 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

4.2.7 வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (Unemployed Youth Employment Generation Programme Scheme)

மாநிலத்தில் உள்ள படித்த வேலையற்ற இளைஞர்கள் சுய தொழில் தொடங்க ஊக்குவிக்கும் வகையில் அவர்களிடையே தொழில்முனையும் ஆர்வத்தை ஏற்படுத்தும் பொருட்டு மாநில அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி உள்ளது. இதன்படி இளைஞர்களுக்கு வருமானம் ஈட்ட வழிசெய்யும் வகையில் அவர்கள் ஆரம்பிக்கும் உற்பத்தி சார்ந்த குறுந்தொழில்கள் ஆரம்பிப்பதற்கு இக்கழகம் கடன் வழங்குகிறது.

[2023 ஏப்ரல் 6

4.2.8 புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (New Entrepreneur cum Enterprise Development Scheme - NEEDS)

படித்த இளைஞர்கள், முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவெடுக்க உதவுவதைக் குறிக்கோளாகக் கொண்டு தமிழ்நாடு அரசின் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் (NEEDS) திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இக்கழகம் பெரும் பங்கு வகிக்கிறது. இத்திட்டத்தின்கீழ், தொழில் முனைவோருக்கு, தொழில் திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் அதிகபட்சமாக ரூபாய் 75 இலட்சம் வரை மூலதன மானியமாக மாநில அரசால் வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் கடன்களுக்கு 3 சதவீதம் வட்டி மானியமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தொழில் முனைவோரின் சொந்த மூலதனமாக, சிறப்புப் பிரிவினருக்கு, அதாவது மகளிர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், மாற்றுத் திறனாளி தொழில் முனைவோர்களுக்கு 5 சதவீதமாகவும், மற்ற பிரிவினருக்கு 10 சதவீதமாகவும் இருப்பது, இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இத்திட்டத்தின்கீழ் 31.03.2023 வரை 1,039 முதல் தலைமுறை தொழில் முனைவோருக்கு 74.28 கோடி ரூபாய் மூலதன மானியத்துடன் ரூபாய் 599.02 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2022-23 ஆம் நிதியாண்டில், 87 தொழில் முனைவோருக்கு 16.40 கோடி ரூபாய் மூலதன மானியத்துடன் ரூபாய் 61.82 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

4.2.9 மருத்துவர்கள் திட்டம் (Medical Practitioners Scheme)

தகுதியுள்ள மருத்துவப் பயிற்சியாளர்களுக்கு மருத்துவம் மற்றும் அது சார்ந்த உபகரணங்கள் வாங்குவதற்கு, வைப்பு நிதியை பிணையமாக வைத்து விரைவில் நிதி வழங்கிட வேண்டி, இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதியுதவியின் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வரம்பு முறையே ரூபாய் 10 இலட்சம் மற்றும் ரூபாய் 2 கோடி ஆகும்.

2023 ஏப்ரல் 6]

4.2.10 தொழில் உள்கட்டமைப்பு முன்னெடுப்புத் திட்டம் (Industrial Infrastructure Initiative Scheme)

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சிட்கோ தொழிற்பேட்டையில் அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டடங்களை வாங்குவதற்கு தேவையான நிதி உதவி அளித்திடும் வகையில், சிட்கோ நிறுவனத்துடன் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதன் பொருட்டு தொழில் உள்கட்டமைப்பு முன்னெடுப்புத் திட்டம் என்ற சிறப்புத் திட்டத்தை இந்நிறுவனம் செயல்படுத்தி உள்ளது. இத்திட்டத்தின் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தங்களது தொழில் அபிவிருத்திக்காக, சிட்கோ/சிப்காட் நிறுவனங்களிடமிருந்து தொழில்கூடங்களுக்கான நிலம் வாங்க கடன் உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2022-23 ஆம் நிதியாண்டில், 87 தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 121.95 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

4.2.11 தொடக்க நிலை நிறுவனத் திட்டம் (Start Ups scheme)

புதிய தொழில்நுட்பத்தை ஊக்குவிக்கும் தமிழ்நாடு அரசின் குறிக்கோளுக்கு இணங்க, இந்நிறுவனம் இரண்டு புதிய திட்டங்களை இவ்வாண்டு அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி, ஆரம்ப நிலையில் உள்ள நிறுவனங்களுக்கு நிதியளிக்க ப்ரோட்டோ லோன் என்ற திட்டமும், ஆரம்ப நிலையைக் கடந்து வணிகரீதியான செயல்பாட்டுக்கு தேவையான, அசையா சொத்துகள் மற்றும் நடைமுறை மூலதனத்திற்கு தேவையான நிதியை வழங்குவதற்காக, ப்ரோபெல் லோன் என்ற திட்டமும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

4.2.12 காற்றாலை /சூரிய சக்தி திட்டம் (Wind / Solar Power Project)

தொழில் நிறுவனங்கள் தங்களுக்கு தேவையான மின்சாரத்தை தாங்களே உற்பத்தி செய்யும் பொருட்டு காற்றாலை மற்றும் சூரிய சக்திமூலம் மின்சாரம் உற்பத்தி செய்து தங்களது சுய தேவைகளுக்கு பயன்படுத்திக் கொள்வதோடு அல்லாமல், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திடம் விற்பனை செய்யவும் இத்திட்டத்தில் நிதியுதவி வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் நிலமதிப்பிற்கும், காற்றாலை/சூரிய சக்தி

சார் மின் உற்பத்தி கருவிகள் வாங்குவதற்கும், காற்றாலைகள் நிறுவுவதற்கும் கடன் வழங்கப்படுகிறது

4.2.13 பட்டி நிதியுதவித் திட்டம் (Bill Financing Scheme)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழக நிறுவனம், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியவற்றின் வழங்குநர்கள்/ஒப்பந்ததாரர்களுக்கு பட்டி நிதியுதவித் திட்டத்தின்மூலம் பிணையில்லா கடன் உதவி வழங்கப்பட்டு வருகிறது. 2022-23 நிதியாண்டில், 108 ஒப்பந்ததாரர்களுக்கு ரூபாய் 576.04 கோடி நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

4.3 மானியம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்மூலம் கடன் பெற்று நிறுவப்பட்ட நிறுவனங்களுக்கு, இக்கழகம் அரசு வழங்கும் பல்வேறு மானியங்களுக்கான முகவராக செயல்பட்டு வருகிறது:

4.3.1 பின்தங்கிய பகுதிகள் மற்றும் சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்களுக்கான சிறப்பு மூலதன மானியம்

மாநிலத்தின் பின்தங்கிய ஒன்றியங்கள் மற்றும் சிப்காட்/சிட்கோ தொழிற்பேட்டைகளில் அமைக்கப்படும் நிறுவனங்களுக்கும், முன்னுரிமை உற்பத்தி நிறுவனங்களுக்கும், இயந்திர மதிப்பீட்டில் 25 சதவீதம், அதிகபட்சமாக ரூபாய் 150 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது. 2022-23 ஆம் நிதியாண்டில், இக்கழகம் மாநில மூலதன மானியமாக (State Capital Subsidy) 30.48 கோடி ரூபாய் 188 பயனாளிகளுக்கு வழங்கியுள்ளது.

4.3.2 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வட்டி மானியத் திட்டம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து கடன் பெறும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் பெறும் பொருட்டு 3% வட்டி மானிய திட்டத்தை, தமிழ்நாடு அரசு 2012 ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், இந்நிறுவனம் இதுவரை ரூபாய் 2763.51 கோடி கடன் அனுமதி அளித்துள்ளது. இதற்கான வட்டி

2023 ஏப்ரல் 6]

மானியமாக மாநில அரசு 31.03.2023 வரை ரூபாய் 142.42 கோடி வழங்கியுள்ளது.

இதனைத் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டில் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு வட்டி மானியத்தை 3%-லிருந்து 6% ஆக உயர்த்தி 01.04.2019 முதல் அமல்படுத்த மாநில அரசு ஆணை பிறப்பித்தது. இதன்படி 6 சதவிகித வட்டி மானிய சலுகையின்கீழ் இதுவரை ரூபாய் 1569.33 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டு, இதற்கான வட்டி மானியமாக 31.03.2023 வரை ரூபாய் 55.95 கோடி தமிழக அரசு வழங்கியுள்ளது.

இந்த வட்டி மானியத் திட்டம், அரசால் ஒவ்வொரு மூன்றாண்டிற்கும் நீட்டித்து வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில், தற்போது இத்திட்டம் 01.04.2022 முதல் 31.03.2023 வரை ஓராண்டிற்கு சில நிபந்தனைகளுடன் நீட்டிக்கப்பட்டுள்ளது.

4.4 செயல்பாடு

இக்கழகத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான செயல்பாடுகள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

(ரூபாய் கோடியில்)

விவரம்	2018-19	2019-20	2020-21	2021-22	2022-23 (தற்காலிகம்)
கடன் அனுமதி தொகை	697.43	858.86	1305.33	1802.23	1774.70
கடன் வழங்கிய தொகை	512.16	352.61	849.78	1520.36	1705.57
கடன் நிலுவைத் தொகை	1097.41	1047.37	1298.23	2032.03	2526.77
மொத்த வாரா கடன் (%)	6.17%	8.71%	1.91%	1.93%	1.95%
இயக்க இலாபம்	76.25	71.38	109.08	122.70	130.00
நிகர இலாபம்	36.53	30.19	50.44	82.94	105.00

[2023 ஏப்ரல் 6

4.5 2023-24 ஆம் ஆண்டுகளுக்கான இலக்கு

(ரூபாய் கோடியில்)

வருடம்	கடன் அனுமதி தொகை	வழங்கக்கூடிய தொகை	கடன் தொகுப்பு
2023-24	2244	1740	3192

4.6 டிக் - தமிழ்நாட்டின் வளர்ச்சி ஊக்கி

டிக் 1.0 என்ற அளவில், கடந்த 73 ஆண்டுகளாக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு முக்கியப் பங்கு வகித்து, இதுவரை 1,30,000-க்கும் மேற்பட்ட தொழில்முனைவோர்களின் கனவுகளை நனவாக்கி உள்ளது.

தற்போது இந்நிறுவனம் டிக் 2.0 எனும் சீர் மாற்றத்துடன் மாநிலத்தின் வளர்ச்சி ஊக்கியாக தன்னை நிலைநிறுத்தி, தொழில்நுட்பத்தை மேம்படுத்தவும், மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் தொடர்புடைய பல்வேறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் செய்துள்ளது. இதன்மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தற்போது வளர்ந்து வரும் தொழில்களை அடையாளம் காணவும், தற்போதைய நவீன தொழில்நுட்பத்தைப் பின்பற்றவும, புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கவும், உரிய நேரத்தில் நடைமுறை மூலதனம் பெறுவதை உறுதிசெய்யவும் வழிவகை செய்யப்படுகிறது.

இந்நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் அவர்கள், மாநில அளவிலான நிதி மற்றும் முதலீட்டு நிறுவனங்களின் தேசிய கூட்டமைப்பாகிய, இந்திய மாநில தொழில் வளர்ச்சி மற்றும் முதலீட்டு கழகங்களின் கவுன்சிலின் (COSIDICI) தலைவராக 2023-24 நிதியாண்டிற்கு இரண்டாவது தடவையாக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்த வாய்ப்பின் மூலமாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களின் திறமையை வெளிப்படுத்தவும், தற்போதைய தொழில்நுட்பத்தைப் பின்பற்றுவதற்கும் ஏதுவாக அமையும். மேலும் தேசிய அளவில் தமிழகத்தை ஒரு சிந்தனை மற்றும் தொழில்நுட்ப தலைமை மாநிலமாக வெளிப்படுத்துவதுடன் மாண்புமிகு தமிழக முதல்வர்

2023 ஏப்ரல் 6]

அவர்களின் தொலைநோக்குப் பார்வையான 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை 2030 ஆம் ஆண்டுக்குள் அடைவதற்கு உறுதுணையாக இருக்கும்.

இந்நிறுவனம், ஒவ்வோர் ஆண்டும், கிளை மற்றும் மண்டல அளவில் பல்வேறு தொழிற்சங்கங்களின் ஒத்துழைப்புடன், தொழிற்கடன் விழாக்கள் நடத்தி வருகிறது. இதன்மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு இக்கழகத்தால் வழங்கப்பட்டு வரும் கடன் திட்டங்கள், மாநில மற்றும் ஒன்றிய அரசுகளால் வழங்கப்படும் சலுகைகள் பற்றிய விவரங்கள் எடுத்துரைக்கப்பட்டு நிறைய பயனாளிகளை இந்நிறுவனம் ஈர்த்து வருகிறது.

5. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தை, கரும்புச் சக்கையை முக்கிய மூலப்பொருளாகக் கொண்டு செய்தித்தாள், அச்சு மற்றும் எழுது காகிதம் தயாரிக்க, 1979 ஆம் ஆண்டு நிறுவியது. இந்த ஆலையின் உற்பத்தி, ஆண்டொன்றுக்கு 90,000 டன் காகித உற்பத்தி திறனுடன், 1985 ஆம் ஆண்டு கரூர் மாவட்டம், புகளூரில் துவக்கப்பட்டது (அலகு-I). தற்போது ஆலையின் காகித உற்பத்தித் திறன், நான்கு கட்டங்களில் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன்னாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆலையின் செயல்முறை மேம்பாட்டின் மூலமாக உற்பத்தி திறன் ஆண்டொன்றுக்கு 4.4 இலட்சம் டன்னாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப ஆலையின் காகித கூழ் உற்பத்தியும், நாளொன்றுக்கு 250 டன்னிலிருந்து, பல்வேறு கட்டங்களில் 1,180 டன் உற்பத்தி திறனுடையதாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனம், ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் டன் திறன் கொண்ட, இருபுறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை, தயாரிக்கும் ஆலையை (அலகு-II) 2016 ஆம் ஆண்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் நிறுவியது. இந்நிறுவனத்தின் காகிதம் மற்றும் அடுக்கு காகித அட்டையின் மொத்த உற்பத்தி ஆண்டொன்றுக்கு 6,40,000 டன் ஆகும். இதன்மூலம், இந்திய அளவில் மொத்த உற்பத்தியில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், மூன்றாம் இடம் வகிக்கிறது.

[2023 ஏப்ரல் 6

பயனாளர்களின் தேவைகளுக்கேற்ப உயர்ரக காகிதங்கள் மற்றும் அடுக்கு காகித அட்டைகளை இந்நிறுவனம் தயாரித்து வருகிறது. இந்நிறுவனம், தனது உற்பத்திப் பொருள்களை, இந்தியா முழுவதும் விற்பனை செய்து வருவதோடு, தனது காகித உற்பத்தியில் சுமார் 20 சதவீதத்தை, உலகளவில் சுமார் 35 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. இந்நிறுவனம் அச்சு மற்றும் எழுது காகிதம் ஏற்றுமதியில், இந்திய அளவில் முதன்மையாகத் திகழ்கிறது.

காகித தயாரிப்பின்போது உருவாகும் திடக் கழிவுகளான சுண்ணாம்பு மற்றும் எரிசாம்பலைப் பயன்படுத்தி, இந்நிறுவனம் நாளொன்றுக்கு 900 டன் உற்பத்தித் திறன் கொண்ட, சிமெண்ட் தொழிற்சாலையை நிறுவியுள்ளது.

தனது மரக்கூழ் உற்பத்திக்கு தேவைப்படும், கூழ் மரங்களின் சுய தேவையைப் பூர்த்தி செய்வதற்கு, பண்ணைக் காடுகள் மற்றும் மூலதனக் காடுகள் வளர்ப்புத் திட்டங்களை, இந்நிறுவனம் துவக்கியுள்ளது. இந்தத் திட்டங்கள் விவசாயிகளின் பங்கேற்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் மூலம் 2022 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 30-வது நாளது வரையில், தமிழகம் முழுவதும், 2,25,632 ஏக்கர் நிலப்பரப்பில் கூழ் மரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளன. மேலும் இத்திட்டத்தில் 43,943 விவசாயிகள் பங்கு பெற்றுள்ளார்கள்.

இந்நிறுவனம், மின் உற்பத்தியில் தன்னிறைவினைப் பெற்றுள்ளது. ஆலையின் சுய தேவைக்காக, 103.62 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்திப் பிரிவினை காகித ஆலையின் வளாகத்திலும் மற்றும் 50 மெகாவாட் மின் உற்பத்திப் பிரிவினை அடுக்கு காகித அட்டை வளாகத்திலும் நிறுவியுள்ளது. மேலும், 35.5 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு காற்றாலைப் பிரிவுகளை திருநெல்வேலி மாவட்டத்தில் நிறுவியுள்ளது. ஆலையின் தேவைக்குப்பின், மீதமுள்ள உபரி மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்நிறுவனத்தில், தமிழக அரசு 35.32 விழுக்காடு பங்கும், தமிழக அரசு சார்ந்த நிறுவனங்கள் 4.28 விழுக்காடு பங்கும் வைத்துள்ளன. மீதமுள்ள பங்குகள் வெளிநாட்டு நிதி முதலீட்டாளர்கள், இந்திய நிதி நிறுவனங்கள், பரஸ்பர நிதிகள், கூட்டாண்மை அமைப்புகள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் வசம் உள்ளது.

2023 ஏப்ரல் 6]

5.1 உற்பத்தி மற்றும் பயன்பாட்டளவு (டிசம்பர் 31, 2022-ல் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கானது)

காகித உற்பத்தி	:	3,11,833 டன்
பயன்பாட்டளவு	:	104 சதவீதம்
காகித அட்டை உற்பத்தி	:	1,27,592 டன்
பயன்பாட்டளவு	:	85 சதவீதம்
சிமெண்ட் உற்பத்தி	:	1,72,708 டன்
பயன்பாட்டளவு	:	77.53 சதவீதம்

2022-23 ஆம் நிதியாண்டில் டிசம்பர் 31, 2022 இல் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான காலத்தில் 3,03,821 டன் காகிதம் மற்றும் 1,26,205 டன் காகித அட்டையும் விற்பனை செய்துள்ளது.

5.2 ஆண்டுக்கான மொத்த வருவாய் மற்றும் இலாபம்

2022-23 ஆம் நிதி ஆண்டில் டிசம்பர் 31, 2022-ல் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான மொத்த வருவாய் ரூ.3,785 கோடியாகும். டிசம்பர் 31, 2022 இல் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான வரிக்கு முந்தைய இலாபம் ரூ.440 கோடி மற்றும் வரிக்குப் பிந்தைய இலாபம் ரூ.285 கோடியாகும். இந்நிறுவனத்தின் 2021-2022 ஆம் நிதியாண்டில் வரிக்குப் பிந்தைய இலாபம் ரூ.14.32 கோடியாகும்.

5.3 ஈவுத்தொகை

இந்நிறுவனம் 2020-21 ஆம் நிதியாண்டிற்கான ஈவுத் தொகையாக, 40 விழுக்காடு, பங்குதாரர்களுக்கு வழங்கியுள்ளது. இதன்படி, இந்நிறுவனம், 2021-22 ஆம் ஆண்டு, தமிழக அரசுக்கு ஈவுத் தொகையாக ரூ.9.78 கோடியினை வழங்கியுள்ளது.

5.4 ஏற்றுமதி

2022-23 ஆம் நிதியாண்டில் டிசம்பர் 31, 2022-ல் முடிவடைந்த ஒன்பது மாதங்களில், இந்நிறுவனம் 55,264 டன் காகிதத்தையும் மற்றும் 6,303 டன் காகித அட்டைகளையும் ஏற்றுமதி செய்துள்ளது.

5.5 வேலைவாய்ப்பு

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சுமார் 2,440 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பினையும், ஏறத்தாழ 3,000 நபர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பினையும் அளித்து வருகிறது.

[2023 ஏப்ரல் 6

5.6 செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் –

5.6.1 நிறுவனத்தின் அலகு#2 – ஆலை விரிவாக்கத் திட்டம்

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், அலகு#2 திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் உள்ள அடுக்கு காகித அட்டை ஆலையின் உற்பத்தித் திறனை அதிகரிக்க, ஆலை விரிவாக்கத் திட்டத்தை ரூபாய் 2,520 கோடி முதலீட்டில் இரண்டு கட்டங்களாக செயல்படுத்த திட்டமிட்டது. முதல் கட்டமாக ரூபாய் 1,385 கோடி முதலீட்டில், நாள் ஒன்றுக்கு 400 மெட்ரிக் டன் திறன்கொண்ட மரக்கூழ் தயாரிக்கும் பிரிவு, இரசாயன மீட்பு கொதிகலன் பிரிவு மற்றும் 20 மெகா வாட் திறன் கொண்ட மின் ஆக்கி பிரிவு ஆகியவைகளாகும். இயந்திரங்கள் நிறுவும் பணிகள் நிறைவு பெற்று, மரக்கூழ் தயாரிக்கும் உற்பத்திக்கான ஓட்டங்கள் துவக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 29-12-2022 அன்று தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் அலகு 2 ஆலை விரிவாக்கத் திட்டத்தின் முதற்கட்ட திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

புதிய காகித அட்டை தயாரிக்கும் இயந்திரம்/புதிய காகிதம் தயாரிக்கும் இயந்திரம் மற்றும் மின்ஆக்கியை நிறுவும் திட்டம் ஆகியவைகள், நிதி ஆதாரங்களைப் பெற்ற பின் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின்மூலம், சுமார் 2,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கும்.

5.7 சமூக நல நடவடிக்கைகள்

- நிறுவனத்தின் முந்தைய 3 ஆண்டுகளின் வரிக்கு முன் வரக்கூடிய சராசரி இலாபத்தில் சுமார் 2 சதவீத இலாபத் தொகையினை சமுதாய நலப் பணிகளுக்காக நடப்பு ஆண்டில் செலவழித்து வருகிறது. கல்வி, சுகாதாரம், கட்டுமானம், பொருளாதார மேம்பாடு, சுற்றுச்சூழல், குடிநீர் வசதி, கலாச்சாரம் மற்றும் மரபுகள் மேம்பாடு போன்ற சமுதாயப் பணிகளை, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், தவறாமல் செயல்படுத்தி வருகிறது.

- இந்நிறுவனம் 2021-22-ல் பல்வேறு சமுதாய நடவடிக்கைகளுக்காக ரூ.3.48 கோடி செலவழித்து உள்ளது. 2022-23 ஆம் ஆண்டில் சமுதாய நலப் பணிகளுக்காக சுமார் ரூ.2.50 கோடி செலவழிக்க இலக்கு வைத்துள்ளது.

5.8 சுற்றுச்சூழல் பொறுப்பு

இந்நிறுவனம் 2021-22-ல் பல்வேறு சுற்றுச்சூழல் நடவடிக்கைகளுக்காக கல்வி, சுகாதாரம், பொருளாதார மேம்பாடு, கலாச்சாரம், மரங்கள் நடவு போன்ற பணிகளுக்காக ரூ.37 இலட்சம் செலவழித்து உள்ளது. இந்நிறுவனம் 2022-23 ஆம் ஆண்டில் ரூபாய் 42 இலட்சம் செலவிட்டுள்ளது.

5.9 விருதுகள்

- இயக்குநர்கள் இன்ஸ்டிடியூட், புது டெல்லி (Institute of Directors, New Delhi), தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு, சமூகநல நடவடிக்கைகளுக்கான, தங்க மயில் தேசிய விருதை ஜூன் 10, 2021-ல், வழங்கியுள்ளது.

- தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு, சமுதாய நலப் பணிகளில், கொரோனா பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான பிரிவில், '8-வது CSR இந்திய விருது 2021' என்ற தேசிய விருதை, கிரீன் டெக் பவுண்டேசன் நிறுவனம், புது டெல்லி, நவம்பர் 2021-ல், வழங்கி உள்ளது.

- இந்திய பொறியாளர்கள் நிறுவனம், கொல்கத்தா, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு, "சிறந்த நிறுவனத்திற்கான சிறப்பு விருது 2021" என்ற விருதை டிசம்பர் 2021-ல் வழங்கியுள்ளது.

- தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின், அலகு-2-க்கு, 2021 ஆம் ஆண்டிற்கான பசுமை முதன்மையாளர் விருதினை, ஜூன் 2022 இல் வழங்கியுள்ளது. இந்த விருது மொண்டிப்பட்டி கிராமத்தில் சுமார் 273 ஹெக்டேர் நிலப்பரப்பில் உருவாக்கியுள்ள பல்லுயிர் பாதுகாப்பு மண்டலம் மற்றும் அழிந்து வரும் இனங்களைப் பாதுகாத்தல் குறிப்பாக அரிய வகை இனமான

சாம்பல் நிற தேவாங்குகளை (Slender Loris) பாதுகாத்து வருவதற்காக வழங்கப்பட்டுள்ளது.

- 22-வது ஆண்டிற்கான தேசிய விருதை "பசுமை தொழில்நுட்ப சுற்றுச்சூழல் விருது 2022, புது டெல்லி, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் பாதுகாத்தல் என்ற தலைப்பின்கீழ், இந்த தேசிய முதன்மையாளர் விருதை, கவுகாத்தியில் ஆகஸ்ட் 2022—ல், வழங்கியுள்ளது.

- 16-வது "சிறந்த நீர் மேலாண்மை மற்றும் திறமையாகப் பயன்படுத்தி செயல்படுத்தியமைக்கான தேசிய விருது 2022", என்ற விருதை, இந்திய தொழில் கூட்டமைப்பு மற்றும் டிரிவேனி நீர் மேலாண்மை நிறுவனம், புது டெல்லியில் 2022 ஆம் ஆண்டிற்கான விருதை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு செப்டம்பர் 2022-ல் வழங்கியுள்ளது.

- இந்திய தொழில் கூட்டமைப்பு சிறந்த சுற்றுப்புற திட்டங்களைச் செயல்படுத்தியமைக்காக "சிறந்த புதுமையான உத்திகளை செயல்படுத்தி சுற்றுச்சூழல் பாதுகாத்தல் நடைமுறைகளுக்கான 2022 ஆம் ஆண்டிற்கான விருது" தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு (அலகு 2) செப்டம்பர் 2022-ல் வழங்கப்பட்டது.

- டிசம்பர் 07, 2022 அன்று சென்னையில் நடந்த உலக உற்பத்திக் காங்கிரஸ் மற்றும் விருதுகள், 2022 ஆம் ஆண்டிற்கான "சிறந்த உற்பத்தி நிறுவன விருது, தமிழ்நாடு", என்ற விருதை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு வழங்கியது.

6. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்) 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் நாள் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகத்திற்கு (டிட்கோ) முற்றிலும் சொந்தமான ஒரு துணை நிறுவனமாக துவக்கப்பட்டது. டிட்கோ நிறுவனம் அதனிடம் வைத்திருந்த மூலதனப் பங்குகளை அரசுக்கு மாற்றிவிட்டதைத் தொடர்ந்து,

2023 ஏப்ரல் 6]

31-12-1994 முதல் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் அரசு நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஆலங்குளத்தில் ஆண்டு ஒன்றிற்கு 2 இலட்சம் மெ.டன் உற்பத்தித்திறன் கொண்ட சிமெண்ட் ஆலை ஒன்றையும், அரியலூர் மாவட்டத்தில் ஆண்டு ஒன்றிற்கு 5 இலட்சம் மெ.டன் உற்பத்தித்திறன் கொண்ட சிமெண்ட் ஆலை ஒன்றையும் இயக்கி வந்தது. மேலும், டான்செம் ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் மெ.டன் உற்பத்தித்திறன் கொண்ட புதிய நவீன சிமெண்ட் ஆலை ஒன்றை அரியலூரில் நிறுவி, அவ்வாலையின் உற்பத்தி 2019 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதன்மூலம் டான்செம் நிறுவனத்தின் மொத்த சிமெண்ட் உற்பத்தித் திறன் உயர்ந்துள்ளது.

டான்செம் நிறுவனத்தின் சிமெண்ட் ஆலைகள் உற்பத்தித் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டங்களான அரியலூர் மற்றும் விருதுநகரில் அமைந்துள்ளதால், அப்பகுதியில் உள்ள மக்களுக்குப் பெருமளவில் வேலைவாய்ப்புகளை வழங்கி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. தற்பொழுது டான்செம் 1,170 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்புகளையும், 3,000 நபர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்புகளையும் வழங்கி வருகிறது. மேலும், டான்செம் அம்மா சிமெண்ட் விற்பனை திட்டத்தினை மாநில முகமையாக இருந்து செயல்படுத்தி வருகிறது.

டான்செம் வெளிச்சந்தைகளில் மற்ற தனியார் நிறுவன சிமெண்ட் விலையை விட குறைந்த விலையில் சிமெண்ட் விற்பனை செய்து வருகிறது. இது சிமெண்ட் விலையை கட்டுக்குள் வைக்க காரணியாக உள்ளது. தற்பொழுது டான்செம் "வலிமை" என்ற உயர்தர சிமெண்ட் மற்றும் "அரசு" என்ற இரண்டு ப்ராண்ட் சிமெண்டினை விற்பனை செய்து வருகிறது.

6.1 வெளிச்சந்தையில் சிமெண்ட் விற்பனை

டான்செம் 2018–19, 2019-20, 2020-21, நிதியாண்டுகளில் வெளிச்சந்தையில் 1.42 இலட்சம் மெ.டன், 1.22 இலட்சம் மெ.டன் மற்றும் 4.71 இலட்சம் மெ.டன் சிமெண்ட் விற்பனை செய்துள்ளது, மேலும் 2021 – 2022 ஆம் ஆண்டில் 12.23 இலட்சம் மெ.டன் மற்றும் 2022-2023 ஆம் நிதியாண்டில் 13.18 இலட்சம் மெ.டன் என்ற அளவிற்கு கணிசமாக வெளிச்சந்தையில் சிமெண்ட் விற்பனையை அதிகரித்துள்ளது. டான்செம் வெளிச்சந்தையில் தனியார்

சிமெண்ட் நிறுவனங்களைவிட குறைவான விலையில் சிமெண்ட் விற்பனை செய்து வருவதால், வெளிச்சந்தையில் சிமெண்ட் விலையேற்றத்தை கட்டுக்குள் வைப்பதில் டான்செம் முக்கிய காரணியாக இருக்கிறது. சுமார் 8% சந்தைப் பங்கைக் கொண்ட தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் இருப்பு, சந்தையில் சிமெண்ட் விலையினைக் கட்டுப்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. ஜூன் 2021-ல் PPC மூட்டை ரூ.470/- முதல் ரூ.490/- வரை விற்பனை செய்து வந்த தனியார் சிமெண்ட் உற்பத்தியாளர்கள் வெளிச்சந்தையில் டான்செம் சிமெண்ட் விற்பனை அதிகரிப்பின் காரணமாக தற்பொழுது விலையைக் குறைத்துள்ளனர். இதனால் பொதுமக்கள் பெருமளவில் பயனடைந்துள்ளனர்.

டான்செம் விற்பனையை அதிகரிக்கவும் மற்றும் சந்தையில் தனது பங்களிப்பை மேம்படுத்தவும் கீழ்க்காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

- 2022-2023 ஆம் ஆண்டில், கூடுதலாக 415 விநியோகஸ்தர்கள்/பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை நியமித்து செயல்படுத்துதல்.
- வலிமை சிமெண்டின் விற்பனையை மாநிலம் முழுவதும் கணிசமாக அதிகரித்தல்.
- சிமெண்ட் விற்பனை முகவர்களை ஊக்கப்படுத்துவதற்கு சந்தை நிலவரத்திற்கேற்ற விலை சலுகைகளை மாற்றியமைக்கும் முறையை நடைமுறைப்படுத்துதல்.

6.2 வலிமை சிமெண்ட் (PPC)

டான்செம் நிறுவனத்தின் உற்பத்தி செய்யப்பட்ட முதல்தர சிமெண்ட் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 16-11-2021 அன்று "வலிமை சிமெண்ட்" என்ற பெயரில் பொது மக்களுக்கு குறைந்த விலையில் கிடைக்க அறிமுகப்படுத்தப்பட்டது. வலிமை சிமெண்ட் மேம்படுத்தப்பட்ட கையாளும் திறன், நீடித்த பயன்பாட்டு காலம் உழைப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட கட்டுறுதியும் கொண்டுள்ளது. மேலும் குறைவான இறுகும் தன்மை மற்றும் குளோரைடு, சல்பேட் மற்றும் இதர வேதிப்பொருள்களிலிருந்து கூடுதல் பாதுகாப்பு அளிக்கிறது.

2023 ஏப்ரல் 6]

6.3 வலிமை சிமெண்ட் விற்பனை

வெளிச்சந்தையில் வலிமை சிமெண்டின் தனித்துவம் மற்றும் பொதுமக்களின் சிமெண்ட் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கம் பற்றி தெரிவிக்கும் வகையில் மாநிலம் முழுவதும் பல்வேறு விளம்பர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அவையாவன:

- சுவர் விளம்பரம்
- வலிமை சிமெண்ட் விளம்பரக் குடைகள் தெரு வியாபாரிகளுக்கு விநியோகம் செய்தல்
- விளம்பரத்திற்காக வர்த்தக கண்காட்சிகளில் பங்கு பெறுதல்
- விற்பனை கடைகளில் விளம்பர பலகை
- துணை விற்பனையாளர்களுக்கு சிறு விளம்பர பலகை
- விற்பனையாளர்களுக்கு வலிமை விளம்பர சுவரொட்டிகள்
- தார்ப்பாய் விளம்பர ஒட்டிகள்
- வலிமை விளம்பர கையேடுகள்
- வானொலி/பண்பலை மற்றும் திரையரங்கங்கள் மூலம் விளம்பரம் செய்தல்
- கொத்தனார் மற்றும் கட்டட பொறியாளர் கூட்டம்
- விற்பனையாளர் கூட்டம்
- கட்டட நிறுவனங்களின் கண்காட்சி
- LED திரை (சதுரங்க ஒலிம்பியாட்/புத்தக கண்காட்சி)
- சிமெண்ட் விற்பனையகம் தொடங்க தொடர்புகொள்ள கட்டணமில்லா தொலைபேசி எண்கள்
 - 1800 599 7635 (பதிவு அலுவலகம்)
 - 1800 123 4847 (அரியலூர் சிமெண்ட் ஆலை)
 - 1800 425 7898 (ஆலங்குளம் சிமெண்ட் ஆலை)

வலிமை சிமெண்ட் விற்பனை 16.11.2021-லிருந்து தொடங்கியுள்ளது. டான்செம் நிறுவனம் 2022-2023 ஆம் நிதியாண்டில் 10,01,049 மெட்ரிக் டன் விற்பனை செய்துள்ளது.

6.4 அரசு துறைகளுக்கு போர்ட்லேண்ட் பொசலோனா சிமெண்ட் (PPC) விற்பனை

டான்செம் நிறுவனம் பல்வேறு அரசுத் துறைகளின் சிமெண்ட் தேவையை பூர்த்தி செய்வதோடு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைகளுக்கு தரமான சிமெண்ட்டை நியாயமான விலையில் கீழ்க்கண்டவாறு வழங்கி வருகிறது:

ஆண்டு	PPC சிமெண்ட் வழங்கப்பட்ட அளவு (மெ. டன்னில்)
2018-19	4,06,918
2019-20	3,39,436
2020-21	3,36,575
2021-22	2,61,572
2022-23	4,79,128

6.5 சுரங்க நிலை

டான்செம் ஆலைகளுக்கு தடையின்றி சுண்ணாம்புக்கல் வழங்குவதை உறுதி செய்வதற்கான நடவடிக்கையாக, பின்வரும் நீண்ட கால திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன:

- டான்செம் நிறுவனத்திற்கு சொந்தமான சுண்ணாம்புக்கல் சுரங்க குத்தகை 1513.33 ஹெக்டேர் நிலப்பரப்பிற்கு பெறப்பட்டுள்ளது, இதில் அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு சொந்தமாக 611.57 ஹெக்டேர் மற்றும் ஆலங்குளம் சிமெண்ட் ஆலைக்கு சொந்தமாக 901.76 ஹெக்டேர் நிலமும் உள்ளது.
- அரியலூர் ஆலையில் 110.68.5 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட ஆனந்தவாடி சுரங்கத்தின் சுண்ணாம்புக்கல் உற்பத்தியை வருடத்திற்கு 2.6 இலட்சம் டன்னில் இருந்து

15 இலட்சம் டன்னாக உயர்த்துவதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

- 194.16.5 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட கல்லங்குறிச்சி சுரங்கத்தில் இருந்து வருடத்திற்கு 13.40 இலட்சம் டன் உற்பத்தி செய்வதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட்டுள்ளது.
- அரியலூர் ஆலையில் 306.72.5 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட சுரங்க குத்தகைக்கும் மற்றும் ஆலங்குளம் ஆலையில் 901.76 ஹெக்டேர் பரப்பளவு உள்ள சுரங்க குத்தகைக்கும் சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- மேற்கூறிய சுரங்க குத்தகையில் 90.43.5 ஹெக்டேர் நிலப்பரப்பில் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு மாநில சுற்றுச்சுழல் மதிப்பீட்டு குழு, சென்னை பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (அரியலூர் மற்றும் ஆலங்குளம்)
- அரியலூர் ஆலைக்கு சொந்தமான சுண்ணாம்புக்கல் சுரங்க நிலங்களில் துளையிட்டு மறுஆய்வு செய்து, 63.37 மில்லியன் டன் சுண்ணாம்புக்கல் இருப்பு உள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த சுண்ணாம்புக்கல் இருப்பு கொண்டு அடுத்து வரும் 39 ஆண்டுகளுக்கு அரியலூர் ஆலையை தடையின்றி இயக்குவதற்கு உறுதுணையாக இருக்கும்.

6.6 அம்மா சிமெண்ட் வழங்கும் திட்டம்

ஊரக, நகர்ப்புற பகுதிகளில் சொந்த வீடு கட்டும் ஏழை மற்றும் நடுத்தர மக்களின் சிரமங்களை குறைக்கும் பொருட்டு "அம்மா சிமெண்ட் வழங்கும் திட்டம்" 05-01-2015 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஏழு தனியார் சிமெண்ட் உற்பத்தியாளர்களிடம் இருந்து சிமெண்ட் கொள்முதல் செய்யப்பட்டு, 11-12-2020 முதல் மூட்டை ஒன்றுக்கு ரூ.216/- என்ற விலையில் 501 கிட்டங்கிகள்மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஒரு பயனாளிக்கு 100 சதுர அடிக்கு 50 மூட்டைகள் வீதம், அதிகபட்சமாக 1,500 சதுர அடிக்கு 750 மூட்டைகள் வரை வழங்கப்படுகிறது. புதிய வீடு கட்ட விண்ணப்பிக்கும்

பயனாளியின் தனி நபர் ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும். இருந்தபொழுதிலும் பிரதம மந்திரி குடியிருப்பு (ஊரகம் மற்றும் நகர்புறம்) திட்டத்திற்கு இது பொருந்தாது. மேலும், பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிக்கு பயனாளர் ஒருவருக்கு 10 மூட்டைகள் முதல் 25 மூட்டைகள் வரை வழங்கப்பட்டு வருகிறது.

திட்டம் ஆரம்பம் முதல் அம்மா சிமெண்ட் 56,36,000.75 மெ.டன் (11,27,20,015 மூட்டைகள்) வரை விற்பனை செய்யப்பட்டு, அத்துடன் 19,06,409 பயனாளிகள் அம்மா சிமெண்ட் விற்பனை திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

6.7 2023-2024 ஆண்டிற்கான திட்டம்

6.7.1 பசுமை/கலப்பு சிமெண்ட் அறிமுகம் (Green/Composite Cement)

டான்செம் நிறுவனம் (2023-2024) ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை கருத்தில் கொண்டு உலகளாவிய தேவையைப் பூர்த்தி செய்யவும் பசுமை/கலப்பு சிமெண்ட் (குறைந்த கார்பன் வெளியிடும் கலவை சிமெண்ட்) உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. குறைந்த கார்பன் வெளியிடும் சிமெண்ட் உற்பத்தி காலத்தின் மிக முக்கியத் தேவையாகும் மற்றும் தற்போதைய சூழ்நிலையில் குறைந்த கார்பன் வெளியிடும் சிமெண்ட் உற்பத்தி மிகவும் ஊக்குவிக்கப்படுகிறது. பசுமை/கலப்பு சிமெண்டைத் தயாரிப்பது சுற்றுச்சூழலில் CO_2 தாக்கத்தை குறைக்கும், தொழிற்சாலை கழிவுகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் இவ்வகை சிமெண்ட் கிளிங்கர் தேவையைக் குறைக்கிறது, இதன் மூலம் வளங்களைச் சேமிக்க உதவுகிறது. மேலும் பசுமை/கலப்பு சிமெண்ட் கான்கிரீட்டிற்கு அதிக வலிமை அளிப்பதுடன் நீண்ட கால சிமெண்ட் உற்பத்தியை உறுதி செய்கிறது. பசுமை/கலப்பு சிமெண்ட் என்பது கிளிங்கர் (35% முதல் 65%), சாம்பல் (15% முதல் 35%), இரும்பு உலை துகள்கள் (20% முதல் 50%) மற்றும் ஜிப்சம் (3% முதல் 5% வரை) ஆகியவற்றின் கலவையாகும்.

6.8 சாதனைகள்

டான்செம் ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் மெ.டன் உற்பத்தித் திறன் கொண்ட புதிய நவீன சிமெண்ட் ஆலை ஒன்றை

2023 ஏப்ரல் 6]

நிறுவியதன்மூலம், டான்செம் நிறுவனத்தின் உற்பத்தித் திறன் உயர்ந்துள்ளது. டான்செமின் சிமெண்ட் தற்பொழுது பெருமளவில் வெளிச்சந்தையில் விற்கப்பட்டு வரும் நிலையில் இந்த உற்பத்தி அதிகரிப்பின்மூலம் மக்களுக்கு நியாயமான விலையில் அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. 2022-23 ஆம் நிதியாண்டில் 18.06 இலட்சம் மெ.டன் உயர்தர சிமெண்ட் உற்பத்தி செய்யப்பட்டு, 17.97 இலட்சம் மெ.டன் சிமெண்ட் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

6.9 2022-23 ஆம் ஆண்டின் செயல்திறன்

டான்செம் நிறுவனம், 2022–23 ஆம் நிதியாண்டில் 18.06 இலட்சம் மெ.டன் சிமெண்ட் உற்பத்தி செய்து, 17.97 இலட்சம் மெ.டன் விற்பனை செய்து, ரூ.154.65 கோடி (தற்காலிகம்) இலாபம் ஈட்டியுள்ளது.

2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டின் உற்பத்தி மற்றும் நிதிச் செயல்திறன்

(ரூ. இலட்சம்)

ஆலையின் பெயர்	2021—22			2022–23 (தற்காலிகம்)		
	உற்பத்தி (மெ.டன்)	விற்பனை (மெ.டன்)	நிகர இலாபம்/ நட்டம்	உற்பத்தி (மெ.டன்)	விற்பனை (மெ.டன்)	நிகர இலாபம்/ நட்டம்
அரியலூர் சிமெண்ட் ஆலை – பழைய ஆலை	4,69,230	4,71,970	2,886.04	4,88,636	4,85,844	4,081.92
அரியலூர் சிமெண்ட் ஆலை – புதிய ஆலை	7,29,997	7,32,895	7,338.39	9,62,685	9,59,618	8,306.68

ஆலையின் பெயர்	2021—22			2022–23 (தற்காலிகம்)		
	உற்பத்தி (மெ.டன்)	விற்பனை (மெடன்)	நிகர இலாபம்/ நட்டம்	உற்பத்தி (மெ.டன்)	விற்பனை (மெ.டன்)	நிகர இலாபம்/ நட்டம்
ஆலங்குளம் சிமெண்ட் ஆலை	2,76,100	2,79,826	1,656.97	3,55,160	3,51,934	3,105.39
ஆலங்குளம் கல்நார் தகடு ஆலை	-	-	-11.87	-	-	-22.25
விருத்தாசலம் கற்குழாய் ஆலை	-	-	-36.63	-	-	-38.98
அம்மா சிமெண்ட் வழங்கும் திட்டம்	2,55,415	2,55,586	-63.54	2,80,485	2,80,159	33.13
மொத்தம்			11,769.36			15,465.89

6.10 ISO தர சான்றிதழ்

டான்செம் நிறுவனம், தரத்திற்காக வழங்கப்படும் ISO: 9001–2015 தர சான்றிதழை பதிவு அலுவலகத்திற்கு 13-09-2022 அன்றும், அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு 10-1-2023 அன்றும் மற்றும் ஆலங்குளம் சிமெண்ட் ஆலைக்கு 2-2-2023 அன்றும் பெற்றுள்ளது. இதன்மூலம் சிமெண்டின் தரம் உறுதி செய்யப்படுவதுடன், திறந்த வெளிச்சந்தையில் டான்செம் நிறுவனத்தின் மதிப்பு உயர்ந்துள்ளது.

7. தமிழ்நாடு உப்பு நிறுவனம்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கி, அவர்களின் சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்திடும் நோக்கில் 1974 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய செயல்பாடுகள், உப்பு மற்றும் உப்பின் உடன் விளை பொருட்களை உற்பத்தி செய்து நியாயமான விலையில்

2023 ஏப்ரல் 6]

விற்பனை செய்வது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் ஒன்று மட்டுமே இந்திய அளவில் மாநில அரசுக்கு சொந்தமான உப்பு மற்றும் உப்பு சார்ந்த உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அரசு நிறுவனமாகும். தமிழ்நாடு அரசு, இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டத்தில் உள்ள வாலிநோக்கம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களைச் சார்ந்த 5,236 ஏக்கர் நிலம் மற்றும் கூடுதலாக செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டத்தில் 3,010 ஏக்கர் நிலத்தினை 2019 ஆம் ஆண்டில் நீண்ட கால குத்தகைக்கு தமிழ்நாடு உப்பு நிறுவனத்திற்கு வழங்கியது.

இந்நிறுவனம், 1978 ஆம் ஆண்டு முதல், இராமநாதபுரம் மாவட்டத்தில் வணிக அடிப்படையில் உப்பு உற்பத்தியினைத் துவங்கியது. இதில் தொழிலக தரமுடைய உப்பு, அயோடின் உப்பு, இரும்பு மற்றும் அயோடின் கலந்த உப்பு ஆகியவை அடங்கும்.

7.1 நிறுவனத்தின் செயல்பாடுகள்

7.1.1 தொழிலக தரமுடைய உப்பு உற்பத்தி

அ) மாரியூர்-வாலிநோக்கம் உப்பு வளாகம், இராமநாதபுரம் மாவட்டம்

2022-23 ஆம் ஆண்டு 1,30,870 டன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. வாலிநோக்கம் உப்பு வளாகத்தில் 2023-24 ஆம் ஆண்டில் 1.60 இலட்சம் டன் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

ஆ) திருப்போரூர் உப்பு உற்பத்தி, செங்கல்பட்டு மாவட்டம்

தமிழ்நாடு அரசு திருப்போரூர் பகுதியில் 3,010 ஏக்கர் நிலத்தினை தமிழ்நாடு உப்பு நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ளது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் முதல் கட்டமாக 500 ஏக்கர் பரப்பளவில் உப்பு தொழிற்சாலை நிறுவி உள்ளது. உப்பு உற்பத்தி 2022 ஆண்டு ஜூன் மாதம் முதல் துவங்கப்பட்டுள்ளது. எனினும், பருவம் தவறிய மழை மற்றும் தொடர் மழையினால் உப்பு உற்பத்தி தொடர முடியவில்லை. 2023-24 ஆம் ஆண்டிற்கான உப்பு உற்பத்திக்கான ஆயத்த பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[*2023 ஏப்ரல் 6*

7.1.2 செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்தி

மாரியூர்–வாலிநோக்கம் உப்பு வளாகத்தில் செறிவூட்டப்பட்ட உணவு உப்பு வகைகளான அயோடின் கலந்த கல் உப்பு, சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் சரியான அளவில் செறிவூட்டப்பட்ட அயோடின் உப்பு IS 7224:2006 தரப்படி தயாரித்து நியாயமான விலையில் பொது விநியோகத் திட்டத்தில் வழங்கி வருகிறது. மொத்த உற்பத்தியில் சுமார் 30 விழுக்காடு உப்பு, பொது விநியோகத் திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படுகின்றது. 2022-23 ஆம் ஆண்டில் 23,716 டன் உப்பு, பொது விநியோகத் திட்டம் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் இரும்பு மற்றும் அயோடின் பற்றாக்குறையுடைய சிறார்களுக்கு இரும்பு மற்றும் அயோடின் கலந்த இருவித செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்தி செய்து, பள்ளி மதிய உணவுத் திட்டத்திற்கும், அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்குகிறது. 2022-23 ஆம் ஆண்டில் 1,794 டன் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு, பள்ளி மதிய உணவுத் திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

7.1.3 இயந்திரம் மூலம் உப்பு உற்பத்தி

உப்பு உற்பத்தியைப் பெருக்க, மனித உழைப்பின் மூலம் உப்பு உற்பத்தி செய்வதுடன், இயந்திரங்களைக் கொண்டு உப்பு அறுவடை செய்யும் முறை 2020–21 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. முதற்கட்டமாக 30 ஏக்கரில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2021–22 ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்பின்படி, மேலும் 80 ஏக்கரில் இயந்திரங்களைக் கொண்டு உப்பு அறுவடை செய்யும் பணி வாலிநோக்கம் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. 2022-23 ஆம் ஆண்டு இந்நிறுவனம் இயந்திரம் மூலம் உப்பு உற்பத்தி செய்யும் முறையில் வாலிநோக்கத்தில் 15,836 டன் உப்பு உற்பத்தி செய்துள்ளது. இதேமுறை திருப்போரூர் உப்பு தொழிற்சாலையிலும் பின்பற்றப்படும்.

7.1.4 உப்பு சுத்திகரிப்பு நிலைய செயல்பாடு

2017 ஆம் ஆண்டில் டாடா அறக்கட்டளையின் சமூக கூட்டாண்மை பொறுப்புணர்வு திட்ட நிதி உதவியுடன் புதிய

2023 ஏப்ரல் 6]

உப்பு சுத்திகரிப்பு நிலையத்தினை தமிழ்நாடு உப்பு நிறுவனம் அமைத்துள்ளது. 2022-23 ஆம் ஆண்டு இச்சுத்திகரிப்பு நிலையத்தின்மூலம் 6,288 டன் செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையில் தர நிர்ணயத்தின்படி, தரமான உப்பு உற்பத்தி செய்யப்படுகின்றது.

7.2 தமிழ்நாடு உப்பு நிறுவன தரச் சான்றிதழ்கள்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், அயோடின் உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பினை IS *7224: 2006 மற்றும்* IS *16232: 2014 ஆகிய தரத்தின்படி உற்பத்தி செய்ய தரச்சான்றிதழ் பெற்றுள்ளது.* ISO *9001 : 2015 தரச்சான்று பெற்ற நிறுவனமாக தமிழ்நாடு உப்பு நிறுவனம் விளங்குகின்றது. அதே போல அயோடின் உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவற்றை உற்பத்தி செய்ய இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் சான்றிதழினையும் பெற்றுள்ளது.*

7.3 2022-23 ஆம் ஆண்டின் விற்பனை நடவடிக்கை

வ. எண்	விவரம்	விற்பனை (டன்னில்)
1	தொழிலக தரமுடைய உப்பு	1,00,810
2	அயோடின் கலந்த கல் உப்பு	19,796
3	சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு	4,257
4	சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலக்காத தூள் உப்பு	241
5	இருவித செறிவூட்டப்பட்ட உப்பு	1,794

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 2022–23 ஆம் ஆண்டில் தோராயமாக ரூ.40.70 கோடி விற்றுமுதல் எய்திட உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

7.4 2022-23 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை செயல்பாடுகள் (தற்காலிகம்)

வ. எண்	விவரம்	ரூபாய் இலட்சத்தில்
	வரவு	
1	இயக்க பணிமூலம் கிடைத்த வருவாய்	4051.00
2	இதர வருவாய்	27.82
3	உப்பு மற்றும் பண்டகசாலை இருப்பு மதிப்பு	113.98
	மொத்தம்	4192.80
	செலவு	
	இயக்க பணிக்கான செலவுகள்	3335.96
	செயல்பாட்டு இலாபம்	856.84
	தேய்மானம்	221.65
	நிகர இலாபம்	635.19

7.5 வெளிச்சந்தையில் நெய்தல் உப்பு விற்பனை துவக்கம்

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பின்படி தமிழ்நாடு உப்பு நிறுவனம் அயோடின் கலந்த கல் உப்பு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு ஆகியவற்றை “நெய்தல் உப்பு” என்ற புதிய வணிகப் பெயரில் வெளிச்சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்நிறுவனம் சென்னை மற்றும் பிற மாவட்டங்களில் மொத்த விற்பனையாளர்களை நியமித்து விற்பனையினை துவக்கியுள்ளது. நெய்தல் உப்பு விற்பனையை மேம்படுத்த தமிழ்நாடு உப்பு நிறுவனம் மாவட்டங்களில் நியமித்துள்ள விற்பனை மேம்பாட்டாளர்களின் மூலமாகவும் தொடர் முயற்சி எடுத்து வருகிறது. கூட்டுறவுத் துறையால் நடத்தப்படும் அமுதம் போன்ற அங்காடிகளிலும் நெய்தல் உப்பு விற்பனை செய்யப்படுகின்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 6]

7.6 வேலைவாய்ப்பு

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1,250 நபர்களுக்கு நேரடியாகவும், 500 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை வழங்கி வருகின்றது. இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கம் கிராமத்தை சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமிழ்நாடு உப்பு நிறுவனம் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

7.7 தொழிலாளர்களுக்கான நலத் திட்டம் மற்றும் அடிப்படை வசதிகள்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், தொழிலாளர்களுக்கான நலத் திட்டம் மற்றும் அடிப்படை வசதிகளைப் வழங்கி வருகின்றது.

- அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச ஊதியம், போனஸ் மற்றும் பஞ்சப்படி.
- சட்டபூர்வமாக கிடைக்க வேண்டிய நன்மைகளான ஊதியத்துடன்கூடிய விடுப்பு, பணிக்கொடை, ஊழியர் வருங்கால வைப்பு நிதி போன்றவை.
- தொழிலாளர்கள் பணிக் காலத்தில் மரணமடைந்தால் வாரிசுதாரருக்கு இழப்பீட்டு தொகையாக ரூ.1 இலட்சம்.
- தொழிலாளர் பாதுகாப்பிற்காக கருப்பு நிற மூக்குக்கண்ணாடிகள், காலணிகள் மற்றும் மேல்துண்டு.
- குறிப்பிட்ட கால இடைவெளியில் மருத்துவ முகாம்கள் மற்றும் மருந்தக வசதி.
- சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள்.

7.8 தமிழ்நாடு உப்பு நிறுவனம் - மாநில அளவிலான ஒருங்கிணைப்பு அமைப்பு

உப்பு உற்பத்தி தொடர்பான பிரச்சினைகள் குறித்து கவனித்திடவும், உப்பு தொழிலில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் முகமையாகவும் தமிழ்நாடு உப்பு நிறுவனத்தினை, தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. தமிழ்நாட்டில் ஆண்டிற்கு 24 இலட்சம் டன் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் 9 கடலோர

மாவட்டங்களில் உப்பு உற்பத்தி நடைபெறுகின்றது. மாநிலத்தில் மொத்தம் 4,100-க்கும் மேற்பட்ட சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான உப்பு உற்பத்தியாளர்கள் இதில் ஈடுபட்டுள்ளனர். மாநிலத்தில் 48,000 ஏக்கருக்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் நிலங்கள் உப்பு உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படுகிறது.

7.9 உப்பளத் தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு மழைக்கால நிவாரணம் வழங்கும் திட்டம்

உப்பளத் தொழில் ஒரு பருவ கால தொழிலாகும். உப்பளத் தொழிலாளர்களுக்கு ஓராண்டில் 9 மாதங்கள் மட்டுமே வேலைவாய்ப்பு கிடைக்கும். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் உப்பளத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மழைக்கால நிவாரணமாக ஆண்டிற்கு ரூ.5,000/- வழங்கப்படும் என்று அறிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இத்திட்டத்தினை 12.08.2022 அன்று துவக்கி வைத்தார்கள். தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தில் பதிவு செய்த 6,472 உப்பளத் தொழிலாளர் குடும்பங்களுக்கு ரூ.3.23 கோடி நிவாரணத் தொகையினை 2021-22 ஆம் ஆண்டிலும் மற்றும் 6,370 உப்பளத் தொழிலாளர் குடும்பங்களுக்கு ரூ.3.18 கோடியும் 2022-2023 ஆம் ஆண்டிற்கும் வழங்கப்பட்டுள்ளது.

7.10 2023-24 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்:

(i) உற்பத்தி

அ) வாலிநோக்கம் திட்டம் – 1,55,000 டன்

ஆ) திருப்போரூர் திட்டம் – 5,000 டன்

2023 ஏப்ரல் 6]

(ii) விற்பனை

வ. எண்	விவரம்	விற்பனை (டன்)
1	தொழிலக தரமுடைய உப்பு	1,17,000
2	அயோடின் கலந்த கல் உப்பு	28,000
3	சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு	12,000
4	இருவித செறிவூட்டப்பட்ட உப்பு	3,000
	மொத்தம்	1,60,000

இதன்மூலம் 2023-24 ஆம் ஆண்டில் ரூ.50 கோடி விற்றுமுதல் எய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

முடிவுரை

தமிழ்நாடு, தனது ஜனநாயக மற்றும் சமூக நீதி சார்ந்த பொதுநல ஆட்சி முறையின் மூலம், அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார மற்றும் அரசியலமைப்புகளை உருவாக்கி, அதை நிலை நிறுத்தியும் வருகிறது. வருங்கால மாற்றங்களுக்கு ஏற்றவாறு தொழில்களை உருவாக்கி நிலைநிறுத்துவதற்காக, மனித மூலதன வளத்தை விரிவுபடுத்துதல், புத்தாக்கங்களையும், புதுமையான உத்திகளையும் உறுதி செய்தல், புதிய சந்தை வாய்ப்புகளின் வளர்ச்சியை ஆதரித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறான இலக்குகளை அடைவதற்கான தொலைநோக்குப் பார்வையும், இலக்குகளை அடைதலும், பொருளாதார மையம் என்ற தமிழ்நாட்டின் நிலையை மேலும் வலுப்படுத்தியதோடு மட்டுமின்றி, உலகளாவிய வர்த்தகத்துடன், நமது மாநிலத்தை மிக ஆழமாக இணைத்துள்ளது. அதுபோலவே, மாநிலத்தில் செயல்படுத்தப்படும் தொழில் கொள்கைகளின்மூலம், பசுமைத் தொழில்நுட்பம் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுவோர்க்கு ஊக்கத்தொகுப்புச் சலுகைகள் அளித்து, அந்நடைமுறைகள்

[2023 ஏப்ரல் 6

பின்பற்றுவதை உறுதி செய்வதன்மூலம், தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேம்பாட்டில் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது.

தொழில் துறையில் பின்பற்றப்படும் பல்வேறு தொடர் நடவடிக்கைகளின் மூலம், மாநிலம் தனது இரட்டை இலக்குகளான 2030 ஆம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் மற்றும் இந்திய அளவில் மட்டுமின்றி தென்கிழக்கு ஆசியாவில் முதலீட்டுக்கான மிகச் சிறந்த இடமாக உருவாகின்ற நிலையினை நிச்சயம் எய்தும்.

பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களின் தேவைகளைப் புரிந்து, தொடர்ந்து செயல்பட தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இதை மேலும் வலுப்படுத்தும் வகையில், சமூக ஆளுமைத் துறையில் உள்ள முன்னணி முகமைகள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து செயலாற்றி, புதுமையான உத்திகளும் தீர்வுகளும் அடையாளம் காணப்பட்டு, அவற்றின் மூலமாக தொழில் பணியாளர்கள்/ஊழியர்கள் வாழ்க்கைத் தரம், உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியவற்றை மேம்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இறுதியாக, புதுமையான சிந்தனைகளையும் தீர்வுகளையும் ஏற்று அவற்றினை செயல்படுத்துவது, மாநிலத்தின் எதிர்கால தொழில் வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மைக்கு இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. இதன் பொருட்டு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், புத்தொழில்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு இடையே இணைப்புகளை உருவாக்கும் வகையில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு உலகளாவிய மற்றும் உள்நாட்டு அறிவுசார் விற்பன்னர்களுடன் இணைந்து செயல்திறனுடைய சமூகத்தை உருவாக்குதல் மற்றும் இவற்றை நிலைநிறுத்தும் நிறுவன செயல்முறைகள் மேம்பட்ட உற்பத்திக்கான மாநிலத்தின் முக்கிய கவனம் செலுத்தும் பகுதியாக விளங்கும்.

2023 ஏப்ரல் 6]

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

1. புவியியல் மற்றும் சுரங்கத் துறை

கனிமங்கள், மனித செயல்பாடுகள் அனைத்திலும் இருப்பதோடு ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. பூமியில் காணப்படும் கனிமங்கள் பல முக்கியமான தொழில்களுக்கு அடிப்படை ஆதாரங்களாக உள்ளன மற்றும் மாநிலத்தின் பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சிக்கு கணிசமாக பங்களிக்கின்றன. தொழில் வகை கனிமங்களான லிக்னைட், சுண்ணாம்புக்கல், மேக்னசைட் போன்ற ஏராளமான கனிமங்கள் மற்றும் கருப்பு மற்றும் பல வண்ண கிரானைட் உள்ளிட்ட சிறு வகை கனிமங்களை அதிக அளவில் அமையப்பெற்றுள்ளதாக தமிழ்நாடு அறியப்படுகிறது. கனிம வளங்கள் குறைந்து மீளப் பெற இயலாததாக இருப்பதால், கனிமங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, அவற்றினை முறையாகவும், அறிவியல் ரீதியாகவும் வெட்டி எடுக்க பயனுள்ள மற்றும் நிலையான கனிம நிர்வாகம் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

புவியியல் மற்றும் சுரங்கத் துறை 1983 ஆம் ஆண்டில் சுரங்க நடவடிக்கைகளை சுற்றுச்சூழல் அடிப்படையில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கனிமங்களை ஆராய்ந்து, பயனுள்ள மற்றும் திறமையான கனிம நிர்வாகம்மூலம் அரசுக்கு கூடுதல் வருவாய் ஈட்டும் பொருட்டு உருவாக்கப்பட்டது. அதன்படி, திறன்மிக்க கனிம நிர்வாகத்தின்மூலம், கனிம வளங்களைப் பாதுகாத்து, நீடித்த நிலையான சுரங்கப் பணிகளை மேற்கொண்டு மாநில அரசுக்கு கணிசமான வருவாயினை ஈட்டித் தருவது, இத்துறையின் முதன்மை இலக்கு ஆகும்.

நிலையான மற்றும் முறையான முயற்சிகளால் கனிம வளங்கள்மூலம், கிடைத்திடும் வருவாய் 2020-21-ல் ரூ.1,047.01 கோடியிலிருந்து 2021-22 ஆம் ஆண்டில் ரூ.1,212.87 கோடியாகவும், 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.1,572.84 கோடியாகவும் அதிகரித்துள்ளது.

சுரங்க நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் நலனுக்காக நீலகிரி மாவட்டத்தை தவிர, இதர அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியை அரசு நிறுவியுள்ளது, மேற்படி மாவட்ட கனிம அறக்கட்டளை நிதி மூலம் உள்கட்டமைப்பு, கல்வி, குடிநீர், சுகாதாரம், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலன், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன், திறன் மேம்பாடு, சுற்றுச்சூழல் மற்றும் மாசு கட்டுப்பாடு மற்றும் நீர்ப்பாசனத் துறை என பல பிரிவுகளில் அதிகமான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதுவரை மாவட்ட கனிம அறக்கட்டளை நிதி மூலம் பிப்ரவரி 2023 வரை 2,709 திட்டங்கள் ரூ.845.75 கோடியில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

கனிமங்களை சட்டவிரோதமாக வெட்டி எடுத்தல் மற்றும் கடத்துதலைக் கட்டுப்படுத்துவது மிகப் பெரிய சவாலாக இருந்து வருகிறது. இந்த சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் மாநில அரசால் டிஃபெரன்ஷியல் குளோபல் பொசிஷனிங் சிஸ்டம் (DGPS) மற்றும் ஆளில்லா விமான தொழில்நுட்பம் (Drone Technology) போன்ற நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி குவாரிகளில் எடுக்கப்பட்ட கனிமங்களின் அளவு கண்டறியப்படும். மேலும், முன்னறிவிப்பு இல்லாமல் குவாரிகளில் ஆய்வுகள் மேற்கொள்வதற்கு அரசால் மாவட்ட ஆட்சியர்களுக்கும் மற்றும் கீழ்நிலை அதிகாரிகளுக்கும் மாதாந்திர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சுண்ணாம்புக்கல் தொகுதிகளையும் மற்றும் கலப்பு உரிமத் தொகுதிகளையும் (composite license blocks) முதன்முறையாக ஏலத்திற்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் முன்னேற்றத்தில் உள்ளது. இதன் மூலம் அரசுக்கு கணிசமான வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசு நிலங்களில் கிரானைட் குவாரிகளுக்கு ஏலம் விடப்பட்டு, கிரானைட் தொழிலுக்கு புத்துயிர் அளிக்க அரசு தீவிரம் காட்டி வருகிறது.

1.1 நோக்கம் மற்றும் குறிக்கோள்

"கனிமவள மேலாண்மையில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக உருவாக்குதல்" என்பது நோக்கமாகவும் "தொழில்,

2023 ஏப்ரல் 6]

சுற்றுசூழல் மற்றும் பொது மக்களுக்கு உகந்த கொள்கை கட்டமைப்புடன், அறிவியல்பூர்வமாக கனிமங்களை அகழ்ந்தெடுத்தல், அதிகளவில் முறையான கனிம உற்பத்தி, கனிம வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் கனிம வளத் துறையில் வருவாயினை அதிகரித்தல" ஆகியவை குறிக்கோளாகவும் உள்ளது.

1.2 குறிக்கோள்கள்

i. *நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நிலையான அடிப்படையில் கனிம வளங்களை ஆய்வு செய்தல் மற்றும் வெட்டியெடுத்தல்.*

ii. *பயனுள்ள மற்றும் திறமையான கனிம நிர்வாகம் மற்றும் கனிம சலுகைகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் கனிம வருவாயை மேம்படுத்துதல்.*

iii. வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.

iv. *புதிய தொழில்நுட்பங்களை (ஆளில்லா விமானம், டிஜிபிஎஸ்) பயன்படுத்தி சட்டவிரோதமாக கனிமங்கள் எடுத்தல் மற்றும் கொண்டு செல்வதைத் தடுத்தல்.*

v. *சுற்றுச்சூழலை முறையாக பாதுகாத்து நீடித்த பயன்பாட்டிற்கு கனிமங்களை பொருளாதார ரீதியில் அகழ்ந்தெடுத்தலை உறுதி செய்தல்.*

vi. *மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியினை பயன்படுத்தி நலத் திட்டங்களை சுரங்கப் பணிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பகுதிகளுக்கும் செயல்படுத்துதல்.*

1.3 பணிகள்

i. *தேசிய கனிம ஆய்வு அறக்கட்டளை நிதியைப் பயன்படுத்தி புதிய கனிமத் தொகுதிகள் புவியியல் மற்றும் சுரங்கத் துறையால் ஆய்வு செய்யப்படும். இதுவரை கனிம ஆய்வுப் பிரிவினையும், ஆய்வக வசதிகளையும் வலுப்படுத்துவதற்கு இந்த அறக்கட்டளையில் ரூ.4.99 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (TANCEM), தமிழ்நாடு கனிம நிறுவனம் (TAMIN) மற்றும் தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் (TANMAG) ஆகிய நிறுவனங்களும் புதிய கனிமப் படிமங்களை கண்டறிய ஆய்வு செய்யலாம்.*

ii. சிறு மற்றும் பெருங்கனிமத்திற்கான உரிமங்கள் வழங்குதல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் கண்காணித்தல், பெருங்கனிம/ சிறுகனிம குத்தகைதாரர்களிடமிருந்து ராயல்டி/உரிமத்தொகை, வருடாந்திர இழப்பீடு, முடக்கு வரி, பரப்பு வரி, செங்கல் உற்பத்திக்கான ஆண்டுக் கனிமக் கட்டணம், மாவட்ட கனிம அறக்கட்டளை நிதி, தேசிய கனிம ஆய்வு அறக்கட்டளை நிதி, பசுமை நிதி முதலியனவற்றை வசூல் செய்து அரசு கருவூலத்திற்கு வருவாய் ஈட்டுதல்.

iii. சட்டவிரோத சுரங்க/குவாரிப் பணிகள், கனிம கடத்தல், கனிமம் சேமித்தல் ஆகியவற்றைத் தடுக்க பல்வேறு அமலாக்க நடவடிக்கைகளை எடுத்தல்.

iv. நீலகிரி மாவட்டத்தில் புவியியல் மற்றும் சுரங்கத் துறை மற்றும் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள கொடைக்கானல் புவிதொழில்நுட்ப மையம் மூலம் நிலச்சரிவு ஏற்படக்கூடிய பலவீனமான இடங்களைக் கண்டறிந்து, இயற்கை இடர்பாடுகளைத் தடுக்க மாவட்ட நிர்வாகத்திற்கு முன்னெச்சரிக்கை நிவாரண நடவடிக்கைகளை பரிந்துரைத்தல் மற்றும் மலைப் பகுதிகளில் கட்டுமானப் பணிகளுக்கான தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்கைகளை வழங்குதல்.

1.4 பெருங்கனிம / சிறுகனிம குத்தகை விவரங்கள்

வ. எண்	கனிமங்கள்	செயல்படும் குத்தகைகள்	
		எண்ணிக்கை	பரப்பு (ஹெக்டேரில்)
பெருங்கனிமங்கள்			
1.	பழுப்பு நிலக்கரி	1	25900.00.0
2.	எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு	12	23178.00.0
3.	சுண்ணாம்புக்கல்	64	3404.19.6
4.	மேக்னசைட்	2	96.52.0

2023 ஏப்ரல் 6]

5.	கிராஃபைட்	1	237.39.5
6.	தாது மணல் கனிமங்கள்	2	148.28.7
மொத்தம்		82	52964.39.8
சிறுகனிமங்கள்			
1.	சாதாரண கற்கள்	1308	2511.39.5
2.	பல வண்ண கிரானைட்	67	185.69.7
3.	கருப்பு கிரானைட்	32	199.18.0
4.	மண்	61	998.15.6
5.	கிராவல்/செம்மண்	66	150.61.8
6.	கூழாங்கற்கள்	2	3.39.0
7.	லைம் கன்கர்	9	718.63.9
8.	குவார்ட்ஸ் மற்றும் பெல்ஸ்பார்	19	36.76.7
9.	தீக்களிமண்	6	19.83.6
10.	சிலிக்கா மணல்	1	4.38.5
11.	கால்சைட்	1	1.94.5
மொத்தம்		1572	4830.00.8
ஆகமொத்தம்		1654	57794.40.6

1.5 கனிம வளம்

பெருங்கனிமங்கள், எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு மற்றும் சிறு கனிமங்கள் ஆகிய கனிம வளங்களை தமிழ்நாடு பெற்றுள்ளது. கனிமங்கள் குறித்து கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

(அ) பெருங்கனிமங்கள்

(i) பழுப்பு நிலக்கரி



இதன் வேதிப் பொருள் கார்பன் ஆகும். இது எரிபொருள் வகையைச் சார்ந்த கனிமமாகும். இக்கனிமம் நெய்வேலி, மன்னார்குடி மற்றும் இராமநாதபுரம்


ஆகிய பகுதிகளில் கிடைக்கிறது. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், கடலூர் மாவட்டத்திலுள்ள நெய்வேலியில் 25,900.00 ஹெக்டேர் பரப்பில் இக்கனிமத்தினை வெட்டி எடுத்து வருகிறது. பழுப்பு நிலக்கரியின் மொத்த இருப்பு 34,764 மில்லியன் டன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

(ii) எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு



இவை ஹைட்ரோகார்பன் வேதிப்பொருள் அடிப்படையாகக் கொண்ட கரிமங்கள் ஆகும். எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகம் (ONGC) கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, மயிலாடுதுறை, அரியலூர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவினை உற்பத்தி செய்து வருகிறது.

(iii) சுண்ணாம்புக்கல்



சுண்ணாம்புக்கல்லின் வேதிப் பொருட்கள் கால்சியம் கார்பனேட் ஆகும். இது சுண்ணாம்பு பவுடர், சிமெண்ட், இரசாயனங்கள், உரங்கள் உற்பத்தியிலும் மற்றும் உலோகத் தொழிற்சாலைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. சுண்ணாம்புக்கல் இரண்டு வகைப்படும். அவையாவன:

(a) படிக சுண்ணாம்புக்கல்

படிக சுண்ணாம்புக்கல் பெரும்பாலும் கால்சியம் கார்பனேட்டால் ஆகிய கால்சைட் அல்லது அரகோனைட் கனிமமாகும். இவை சேலம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயம்புத்தூர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கிடைக்கின்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 6]

(b) படிவ சுண்ணாம்புக்கல் அல்லது தொல்லுயிர் சுண்ணாம்புக்கல்

தொல்லுயிர் சுண்ணாம்புக்கல் அரியலூர், பெரம்பலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி மாவட்டங்களில் அதிகளவில் கிடைக்கின்றன.



(iv) மார்ல்




இதன் வேதிப் பொருள் கார்பனேட் கொண்ட கலவையான படிவு பாறை ஆகும். இது கார்பனேட் கனிமங்கள், களிமண் மற்றும் வண்டல் ஆகியவை நிறைந்த பாறை ஆகும். உரங்கள் மற்றும் சிமெண்ட் தயாரிக்க இது பயன்படுத்தப்படுகிறது. அரியலூர் மாவட்டத்தில் புதைப்படிவ சுண்ணாம்புக்கல்லுடன் இணைந்து வண்டல் படிவு பாறையாக கிடைக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(v) மேக்னசைட்

இதன் வேதிப் பொருட்கள் $MgCo_3$ மெக்னீசியம் கார்பனேட் கனிமம் ஆகும். இவை வெப்பந்தாங்கி கற்களாகவும், உருக்காலையில் இளக்கியாகவும், வெப்ப கட்டுப்படுத்தி, செராமிக் ஃபில்டர்ஸ் மற்றும் உராய்வு பொருட்கள் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.



[2023 ஏப்ரல் 6

சேலம் மாவட்டத்தில் உள்ள சுண்ணாம்பு மலைகள் உலகின் சிறந்த மேக்னசைட் வளத்தைக் கொண்டுள்ளது.

(vi) பாக்சைட்



பாக்சைட்டின் வேதிப்பொருட்கள் $Al_2O_3.H_2O$ ஆகும். இக்கனிமத்திலிருந்து அலுமினிய உலோகம் பிரித்தெடுக்கப்படுகிறது. பாக்சைட் கனிமம் வெப்பம் தாங்கிக் கற்களாகவும், சிமெண்ட், இரசாயனங்கள் மற்றும் வர்ணம் தயாரிக்கும் தொழிற்சாலைகளிலும் மற்றும் பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலைகளிலும் பயன்படுகிறது. நாமக்கல் மற்றும் சேலம் மாவட்டங்களில் உள்ள கொல்லி மற்றும் சேர்வராயன் மலைகளில் பாக்சைட்டின் செறிவான படிவுகள் அமைந்துள்ளன.

(vii) கிராஃபைட்



இயற்கையிலேயே கிடைக்கும் இப்படிக நிலை கார்பன், உலோக உலை, மின்தடுப்பான், எலக்ட்ரோடு, அணு உலை மற்றும் வார்ப்பாலை ஆகிய தொழிற்சாலைகளில் பயன்படுகிறது. கிராஃபைட் கனிமம் மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் கிடைக்கிறது.

(viii) அணுவகை கனிமங்கள்

அணு வகைக் கனிமங்களான மோனோசைட், கார்னெட், இல்மனைட், ரூட்டைல், சிலிமனைட், சிர்கான் மற்றும் லூக்காக்சின் ஆகியவை திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள கடற்கரை மணலில் கிடைக்கின்றன. இக்கனிமங்கள் உராய்வுப் பொருட்கள், குறைக்கடத்திகள் மற்றும் அணு உலைகளில் பயன்படுகின்றன. இக்கனிமங்களை,

2023 ஏப்ரல் 6]

இந்திய அறுமணல் கழகம் (IREL) கன்னியாகுமரி மாவட்டத்தில் எடுத்து வருகிறது. கார்னெட் கனிமமானது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் படிம நிலையிலும் மற்றும் மதுரை மாவட்டத்தில் பாறைகளிலும் கிடைக்கின்றன.



கார்னெட்




சிலிமனைட்




ரூட்டைல்



சிர்கான்



மோனோசைட்




இல்மனைட்

ஒன்றிய அரசின் சுரங்க அமைச்சகம் 01.03.2019 நாளிட்ட அறிவிப்பின்படி கடற்கரை மணல் மற்றும் இதர இடங்களில் கிடைக்கும் அணுசக்திவகை கனிம மணலில் உள்ள மோனோசைட் கனிமத்தின் செறிவினை 0.00% என நிர்ணயம் செய்துள்ளது. எனவே, இனிவரும் காலங்களில் அணுசக்திவகை கனிமங்களின் சுரங்கக் குத்தகையானது அணுசக்திக் கனிமங்களின் சலுகை விதிகள், 2016-ன்படி அரசு நிறுவனம் அல்லது அரசிற்குச் சொந்தமான அல்லது அரசு கட்டுப்பாட்டிலுள்ள பொதுநிறுவனம் ஆகியவற்றிற்கு மட்டுமே வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(ix) வெர்மிகுலைட்

இக்கனிமம் திருப்பத்தூர் மாவட்டத்தில் கிடைக்கிறது. இது மஞ்சள் பழுப்பு நிறத்துடன் கூடிய மைக்கா வகையைச் சேர்ந்த கனிமமாகும். இவை வெர்மிடைல்ஸ் தயாரிக்கவும் மற்றும் மின்தடுப்பானாகவும் பயன்படுகிறது.




(x) மாலிப்டினம்



மாலிப்டினம் என்பது "Mo" என்ற குறியீட்டைக் கொண்ட ஒரு வேதியியல் தனிமம் ஆகும். மாலிப்டினம் முக்கியமாக தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் காணப்படுகிறது. மாலிப்டினம் உலோகக்கலவைகளை உருவாக்கப் பயன்படுகிறது. வலிமை, கடினத்தன்மை, மின் கடத்துத்திறன், அரிப்பு மற்றும் தேய்மானத்தை எதிர்க்கும் திறன் அதிகரிக்க இது எஃகு கலவைகளில் பயன்படுத்தப்படுகிறது.


(xi) டங்ஸ்டன்

டங்ஸ்டன் என்பது W குறியீட்டைக் கொண்ட ஒரு தனிமம் ஆகும். மதுரை மாவட்டத்தில் டங்ஸ்டன் கிடைக்கிறது. டங்ஸ்டன் என்பது பூமியில் இயற்கையாக பிற உலோகங்களுடன் கூட்டுப் பொருளாக காணப்படும் ஓர் அரிய உலோகமாகும். டங்ஸ்டன் பொதுவாக அதிவேக எஃகு போன்ற கனரக உலோகக் கலவைகளில் பயன்படுத்தப்படுகிறது. அதில் இருந்து வெட்டும் கருவிகள் தயாரிக்கப்படுகின்றன. டங்ஸ்டன் மின்முனைகள், வெப்பமூட்டும் கூறுகள், புல உமிழ்ப்பான்கள் மற்றும் ஒளி விளக்குகள் மற்றும் கேத்தோடு கதிர் குழாய்களில் இழைகளாகப் பயன்படுத்தப்படுகிறது.



2023 ஏப்ரல் 6]


(xii) பிளாட்டினம் குழு தனிமங்கள் (PGE)



பிளாட்டினம் குழு தனிமங்கள் ஆஸ்மியம், இரிடியம், ருத்தேனியம், ரோடியம், பிளாட்டினம் மற்றும் பல்லேடியம் ஆகும். பிளாட்டினம் குழு தனிமங்கள் நாமக்கல் மாவட்டத்தில் காணப்படுகின்றன. பிளாட்டினம் குழு தனிமங்களின் மிகவும் பிரபலமான உறுப்பு பிளாட்டினம் (Pt) ஆகும். பிளாட்டினம் குழு உலோகங்கள் ஆறு கட்டமைப்பு மற்றும் வேதியியல் ஒத்த கூறுகளைக் கொண்ட தொகுதியாகும். அவை தொழில் துறை, மருத்துவம் மற்றும் மின்னணு பயன்பாடுகளுக்கு பயன்படுத்துவதன்மூலம் பரந்த அளவில் மிகவும் மதிப்பு மிக்கவையாக உள்ளன. ஆபரணங்களில் பயன்படுத்தப்படுவதால் பிளாட்டினம் நன்கு அறியப்படுகிறது. இது வினையூக்கி தயாரிப்பில் முக்கியமாகப் பயன்படுகிறது.


(ஆ) சிறுகனிமங்கள்

(i) கிரானைட்



வெட்டி மெருகூட்டத் தகுதி வாய்ந்த கடினமான படிக வகைப் பாறைகள் கிரானைட் என அழைக்கப்படுகிறது. செறிவு மிக்க கிரானைட் இருப்புகள் தமிழகத்தில் காணப்பெறுகின்றன. 1970-களில் இந்திய அளவில் கிரானைட் உற்பத்தியில் தமிழகம் முன்னோடியாகத் திகழ்ந்தது. கிரானைட் கற்களை பல்வேறு அளவுகளில் நினைவுச் சின்னங்களாகவும் ஓடுகளாகவும் வெட்டி மெருகூட்டப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால் கணிசமான அந்நிய செலாவணியை அரசுக்கு ஈட்டித் தருகிறது. பலவண்ண கிரானைட் கிருஷ்ணகிரி, மதுரை, விருதுநகர், சேலம் மற்றும் திண்டுக்கல் முதலிய மாவட்டங்களில் கிடைக்கின்றது. குன்னம் பிளாக்,

[2023 ஏப்ரல் 6



பாரடைசோ, ஜீப்ரா ஒயிட், ரெட்வேவ், டைகர்ஸ்கின், காஷ்மீர் ஒயிட் மற்றும் டெசர்ட் பிரவுன் ஆகியவை வணிக ரீதியாக தமிழகத்தில் கிடைக்கும் மிகவும் பெயர் பெற்ற கிரானைட் வகைகளாகும். கருப்பு நிற கிரானைட் கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் கிடைக்கிறது.

(ii) குவார்ட்ஸ்

குவார்ட்ஸின் வேதிப்பொருள் SiO_2 ஆகும். இக்கனிமம் சேலம், கரூர், திருப்பூர், நாமக்கல், திண்டுக்கல் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் அதிக அளவில் கிடைக்கின்றது. இது கண்ணாடி, வெப்பந்தாங்கி கற்கள், உராய்ப்பான் மற்றும் மின்சாதன தொழிற்சாலைகளில் பயன்படுகிறது.



(iii) ஃபெல்ஸ்பார்


ஃபெல்ஸ்பார் அலுமினிய டெக்டோசிலிகேட் தாதுக்களின் குழுவாகும். மேலும், சோடியம், கால்சியம், பொட்டாசியம் அல்லது பேரியம் போன்ற பிற கேட்டயான்களையும் கொண்டுள்ளது. இக்கனிமம் சேலம், திண்டுக்கல், கரூர், திருப்பூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் கிடைக்கின்றது. வார்ப்பாலை, வண்ணம் மற்றும் பீங்கான் தொழிற்சாலைகளில் பயன்படுகிறது.



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 6]

(iv) தீக்களிமண்




தீக்களிமண்ணின் வேதிப் பொருட்கள் ஹைட்ரஸ் அலுமினியம் சிலிக்கேட் ஆகும். இத்துடன் இரும்பு ஆக்சைடுகள், சுண்ணாம்பு, மக்னீசியா, அல்கலி மற்றும் சிலிக்கா போன்ற பல்வேறு அசுத்தங்கள் இதில் காணப்படும். இக்களிமண் வெப்பந்தாங்கிக் கற்கள், சிமெண்ட் தொழிற்சாலைகள், பீங்கான் பொருட்கள் மற்றும் அலங்கார ஓடுகள் தயாரிக்கவும் பயன்படுகிறது. இது பெரம்பலூர், அரியலூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் கிடைக்கின்றது.

(v) சிலிக்கா மணல்

சிலிக்கா மணலின் வேதிப்பொருள் சிலிக்கன் டைஆக்சைட் ஆகும். இது முக்கியமாக கண்ணாடித் தொழிற்சாலைகளிலும், ஃபவுண்டரிகளிலும் மோல்டிங் வினையூக்கியாகப் பயன்படுத்தப்படுகிறது. இவை நாகப்பட்டினம், விழுப்புரம், கடலூர், திருவாரூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் கிடைக்கிறது.






(vi) ஜிப்சம்

ஜிப்சமின் வேதிப்பொருள் $CaSO_4.2H_2O$, கால்சியம் சல்பைட் டைஹைட்ரேட் ஆகும். இக்கனிமம் பிளாஸ்டர் ஆப் பாரீஸ் தயாரிப்பிலும் மற்றும் சிமெண்ட், உரம், பூச்சிக்கொல்லி

[2023 ஏப்ரல் 6

மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளிலும் பயன்படுகிறது. இக்கனிமம் பெரம்பலூர், கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் கிடைக்கின்றது.

(vii) சோப்ஸ்டோன்



சோப்ஸ்டோன் அல்ட்ராமாஃபிக் புரோட்டோலித்களின் உருமாற்றம் (டியூனைட் அல்லது சர்பெண்டினைட்) மற்றும் சிலிசியஸ் டோலமைட்டுகளின் உருமாற்றம் ஆகியவற்றால் உருவாகிறது. நிறை அடிப்படையில், "தூய" ஸ்டீடைட் தோராயமாக 63.37% சிலிக்கா, 31.88% மக்னீசியா மற்றும் 4.74% நீர் ஆகியவற்றை உள்ளடக்கியது. இது பொதுவாக சிறிய அளவிலான CaO அல்லது Al_2O_3 போன்ற மற்ற ஆக்சைடுகளைக் கொண்டுள்ளது. இக்கனிமம் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் கிடைக்கின்றது. இக்கனிமம் டால்கம் பவுடர் மற்றும் அலங்காரப் பொருட்கள் தயாரிக்கப் பயன்படுகிறது.

1.6 கனிம உற்பத்தி

தமிழ்நாட்டில் ஏப்ரல் 2022 முதல் மார்ச் 2023 வரை உற்பத்தி செய்யப்பட்ட பெருங்கனிமங்கள், எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு, சிறு கனிமங்கள் பற்றிய விவரங்கள் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 6]

பெருங்கனிமங்களின் உற்பத்தி – 2022-23

வ. எண்	கனிமங்கள்	உற்பத்தி (மெட்ரிக் டன்னில்)	வருவாய் (ரூ. கோடியில்)
1.	பழுப்பு நிலக்கரி	21566089.87	278.23
2.	சுண்ணாம்புக்கல்	23388248.36	179.41
3.	மேக்னசைட்	38100	0.58
4.	வெர்மிகுலைட்	36	0.0005
5.	கிராஃபைட்	49018.64	0.13
6.	மார்ல்	2363191.68	30.47
7.	தாது மணல் கனிமங்கள்	641985	5.30
	மொத்தம்		494.12

எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு உற்பத்தி 2022-23

வ. எண்	கனிமங்கள்	உற்பத்தி	வருவாய் (ரூ. கோடியில்)
1.	கச்சா எண்ணெய்	313794.624 மெ.டன்	263.63
2.	இயற்கை எரிவாயு	1065405612 க.மீ	223.23
	மொத்தம்		486.86

சிறுகனிமங்களின் உற்பத்தி-2022-23

வ. எண்	கனிமங்கள்	உற்பத்தி	வருவாய் (ரூ. கோடியில்)
1.	பல வண்ண கிரானைட் (க.மீ)	94388.20	22.01
2.	கருப்பு கிரானைட் (க.மீ)	26210.431	11.38

[2023 ஏப்ரல் 6

வ. எண்	கனிமங்கள்	உற்பத்தி	வருவாய் (ரூ. கோடியில்)
3.	சாதாரண கற்கள்(க.மீ)	43743334.467	261.58
4.	கிராவல் (க.மீ)	6824825.864	37.06
5.	மண் (க.மீ)	6354084.362	64.09
6.	கூழாங்கற்கள் (க.மீ)	5084	0.09
7.	குவார்ட்ஸ் (மெ.டன்)	25361	0.43
8.	பெல்ஸ்பார் (மெ.டன்)	112482	1.29
9.	சிலிக்கா மணல் (மெ.டன்)	670	0.01
10	லைம்கன்கர் (மெ.டன்)	437530.7	3.31
11	தீக்களிமண் (மெ.டன்)	274688	0.89
12	கால்சைட் (மெ.டன்)	4000	0.03
13	குவார்ட்ஸ்சைட் (மெ.டன்)	4058	0.03
14	களிமண்(மெ.டன்)	47000	0.09
	மொத்தம்		402.29


1.7 கனிம வருவாய்

கனிம வளங்கள்மூலம் கடந்த மூன்று நிதியாண்டுகளில் ஈட்டிய வருவாய் விவரம் கீழ்வருமாறு:

வ. எண்	நிதியாண்டு	வருவாய் (ரூ. கோடியில்)
1.	2020-21	1047.01
2.	2021-22	1212.87
3.	2022-23 (தற்காலிகமாக)	1572.84

2022-2023 ஆம் ஆண்டில் பெருங்கனிமங்கள், சிறுகனிமங்கள் மற்றும் எண்ணெய் கனிமங்களின் வருவாய் பங்களிப்பு கீழே வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது:

2023 ஏப்ரல் 6]



இத்துறையினால் மேற்கொள்ளப்பட்ட முனைப்பான தடுப்பு நடவடிக்கையின் காரணமாக, 2022-23 ஆம் நிதியாண்டில் மார்ச் 2023 வரை உரிய அனுமதியின்றி கனிமங்களை கடத்திய 4,799 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அபராதமாக ரூ.41 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டில் அபராதமாக வசூல் செய்யப்பட்ட தொகையான ரூ.1.13 கோடியை விட அதிகமாகும். மேலும் 3,785 குற்றவியல் வழக்குகள்/முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கனிம கடத்தலில் தொடர்ந்து ஈடுபட்ட 4 நபர்கள் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1.8 மாவட்டக் கனிம அறக்கட்டளை

நீலகிரி மாவட்டம் நீங்கலாக இதர மாவட்டங்களில் 2017 ஆம் ஆண்டு மாவட்ட கனிம அறக்கட்டளை நிறுவப்பட்டுள்ளது. 12.01.2015 தேதிக்கு முன் உரிமம் பெற்ற பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களைச் சார்ந்த சுரங்கம்/குவாரி குத்தகைதாரர்கள் அரசுக்குச் செலுத்தும் ராயல்டி / உரிமக்கட்டணத் தொகையில் 30 சதவீதமும் மற்றும் அதற்குப் பின்னர் உரிமம் பெற்றவர்கள் 10 சதவீதமும் மாவட்டக் கனிம அறக்கட்டளை நிதிக்கு செலுத்தி வருகிறார்கள். இந்நிதியானது,

பிரதம மந்திரி கனிஜ் ஷேத்ர கல்யாண் யோஜனா (PMKKKY) மற்றும் இதர நலத் திட்டங்கள்மூலம் குவாரிகளினால் பாதிப்பிற்குள்ளான பகுதிகளின் மேம்பாட்டிற்கான நலத் திட்டங்களை செயல்படுத்த பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த அறக்கட்டளை தொடங்கிய 2017-ம் ஆண்டிலிருந்து 28-02-2023 வரை சுரங்கம் மற்றும் குவாரி குத்தகைதாரர்களால் ரூ.1,203.49 கோடி கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக அரசுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிதியில் குறைந்தபட்சமாக 60% நிதியை உயர்முக்கியத்துவம் வாய்ந்த துறைகளான சுகாதாரம், குடிநீர் வழங்குதல், கல்வி, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலம், வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலன், திறன் மேம்பாடு, உட்கட்டமைப்பு, துப்புரவுப் பணிகள், சுற்றுச்சூழல் பாதுகாத்தல் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

எஞ்சிய தொகையினை இதர முக்கியத்துவம் வாய்ந்த துறைகளான நீர்ப்பாசன மேம்பாடு, எரிசக்தி, நீர்வடிப் பகுதி மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாத்தல் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.


இந்நிதியிலிருந்து 28.02.2023 வரை 2,709 திட்டங்கள் ரூ.845.75 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதில், 1811 திட்டங்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. உயர் முக்கியத்துவம் மற்றும் இதர முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களின்கீழ் செயல்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் திட்டமதிப்பீடு தொடர்பான விவரங்கள் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளன:

(i) மாவட்ட கனிம அறக்கட்டளை நிதிமூலம் செயல்படுத்தப்படும் உயர்முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள்

வ. எண்	துறைகள்	திட்டங்களின் எண்ணிக்கை	திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்)
1	குடிநீர் வழங்குதல்	483	299.19
2	உள்கட்டமைப்பு	712	184.18

2023 ஏப்ரல் 6]

3	சுகாதாரம்	578	71.15
4	கல்வி	437	56.41
5	துப்புரவு பணிகள்	165	11.48
6	பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன்	67	5.75
7	சுற்றுச்சூழல் மற்றும் மாசு கட்டுப்பாடு	22	5.38
8	திறன் மேம்பாடு	26	3.10
9	வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் நலன்	112	1.54
	மொத்தம்	2602	638.18




TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 6

(ii) மாவட்ட கனிம அறக்கட்டளை நிதி மூலம் செயல்படுத்தப்படும் இதர முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள்

வ. எண்	துறைகள்	திட்டங்களின் எண்ணிக்கை	திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்)
1	எரிசக்தி மற்றும் நீர்வடிப் பகுதி மேலாண்மை	41	12.36
2	நீர்ப்பாசன மேம்பாடு	53	192.40
3	மற்றவை	13	2.81
	மொத்தம்	107	207.57



2023 ஏப்ரல் 6]

1.9 தேசியக் கனிம ஆய்வு அறக்கட்டளை

தேசியக் கனிம ஆய்வு அறக்கட்டளையானது 2015 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. பெருங்கனிம குத்தகைதாரர்கள் அரசுக்கு செலுத்தும் ராயல்டி தொகையில், 2% தொகையினை இந்நிதிக்காக செலுத்தி வருகிறார்கள். இந்த அறக்கட்டளைக்கு 31-12-2022 வரை ரூ.72.466 கோடி நிதியாக செலுத்தப்பட்டுள்ளது.

1.10 முன்முயற்சிகள்

(i) பயனற்ற/பழைய சுரங்கம் மற்றும் குவாரிகளை பொதுமக்களுக்குப் பயனுள்ள அமைப்புகளாக மாற்றுதல்



மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் 2021 ஆம் ஆண்டிற்கான அறிவிப்பின்படி தமிழ்நாட்டில் உள்ள பயன்பாட்டில் இல்லாத பழைய குவாரிகளை பொது மக்கள் பயன்பாட்டிற்கு மழைநீர் சேகரிப்பு மையங்களாகவும், கட்டுமானம் மற்றும் இடிப்புக்கழிவுகளை கொட்டுவதற்காகவும், மீன் வளர்ப்பிற்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம், சிக்கராயப்புரம் கிராமத்தில் உள்ள கைவிடப்பட்ட குவாரிகள் மழைநீர் சேகரிப்பு மையங்களாகவும் குடிநீர் பற்றாக்குறை காலத்தில் சென்னை மக்களுக்கு உயிர்நாடியாகவும் செயல்பட்டது. குவாரிகளில் சேமிக்கப்படும் தண்ணீர் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்மூலம் சுத்திகரிக்கப்பட்டு சென்னை மாநகரின் குடிநீர் தேவைக்காக வழங்கப்பட்டு வருகிறது. கன்னியாகுமரியிலுள்ள குவாரிகள் மீன் வளர்ப்புக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. விருதுநகர் மற்றும் திண்டுக்கல்லில் உள்ள குவாரிகள் மழைநீர் சேகரிப்பு மையங்களாக பயன்படுத்தப்படுகின்றன. கோயம்புத்தூரில் திடக்கழிவு மேலாண்மைக்காக குவாரிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மார்ச் 2023 வரை ரூ.45.27 கோடி பசுமை நிதி வசூல் செய்யப்பட்டுள்ளது மற்றும் இந்நிதி கைவிடப்பட்ட குவாரி பகுதியில் காடு வளர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், பயன்பாடற்ற கைவிடப்பட்ட குவாரி பகுதிகளில் மரம் நடுவதற்கும், நீர் சேகரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் பயன்படுத்தப்படுகிறது.

(ii) டிஃபெரன்ஷியல் குளோபல் பொசிஷனிங் சிஸ்டம் (DGPS)

டிஜிபிஎஸ் என்பது ஜிபிஎஸ் (குளோபல் பொசிஷனிங் சிஸ்டம்) இருப்பிட அளவீடுகளின் துல்லியத்தை மேம்படுத்தப் பயன்படும் ஒரு தொழில்நுட்பமாகும். பூமியின் மேற்பரப்பில் ஒரு பயனரின் இருப்பிடத்தை செயற்கைக்கோள்களின் சமிக்ஞைகளைப் பயன்படுத்தி துல்லியமாக நிர்ணயிக்க இயலும். எனவே, மேற்படி தொழில்நுட்பங்களை பயன்படுத்தி குவாரிகள் மற்றும் சுரங்கப் பகுதிகளின் எல்லைகளை நிர்ணயம் செய்ய 23 முகமைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதுவரை 599 குவாரிகளில் டிஜிபிஎஸ் ஆய்வு முடிக்கப்பட்டுள்ளது.

(iii) சட்டவிரோத சுரங்கம்/குவாரிகளைத் தடுக்க ஆண்டொன்றுக்கு ரூ.25 கோடி மதிப்பீட்டில் ஆளில்லா விமானத் தொழில்நுட்பம் செயல்படுத்தப்படும்

2021-22 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, தற்போதுள்ள சுரங்கங்கள் மற்றும் குவாரிகள் ஆண்டுக்கு இருமுறை சிறிய ரக ஆளில்லா விமானம் (ட்ரோன்) மூலம் அளவிடப்பட்டு, குவாரி செய்யப்பட்ட கனிமங்களின் சரியான அளவைக் கண்டறிந்து, அளவு வேறுபாடு இருப்பின் அதற்குரிய சீனியரேஜ் கட்டணம் வசூலிக்கப்படும். ஆளில்லா விமானத் தொழில்நுட்பத்தை செயல்படுத்த ஆண்டொன்றுக்கு ரூ.25 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. ஆளில்லா விமானத்



தொழில்நுட்பம்மூலம் ஆய்வு செய்வதற்காக முகமைகள் தேர்வு

2023 ஏப்ரல் 6]

செய்யப்பட்டுள்ளன. ஆளில்லா விமானத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஆய்வு நடத்துவதன்மூலம், சட்டவிரோத சுரங்கங்கள் மற்றும் குவாரிகள் கண்டறியப்பட்டு வருவாய் இழப்பு மதிப்பீடு செய்யப்பட்டு அபராதம் விதிப்பதன்மூலம் அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பு ஈடுசெய்யப்படும். அனைத்து குவாரிகளையும் கண்காணிக்க பொதுவான ஒற்றை மென்பொருள் இயங்குதள வசதியும் உருவாக்கப்படும்.

(iv) மின்னணு நிர்வாகம் மற்றும் நடைச்சீட்டு

சிறு கனிமங்களுக்கு குத்தகை வழங்கும் நடைமுறையினை எளிமைப்படுத்துவதற்காக விண்ணப்பங்கள் பெறுவதிலிருந்து, கனிமங்களை எடுத்துச்செல்ல நடைச்சீட்டு வழங்குதல் மற்றும் குத்தகைக் காலம் முடியும் வரை அனைத்து நடவடிக்கைகளும் மின்னணு சுரங்க நிர்வாகத்தின்கீழ் கணிணிமயமாக்க இத்துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் விண்ணப்பதாரரால் தன்னுடைய விண்ணப்பத்தின் நிலையை அறிந்து கொள்ள இயலும். மின்னணு சுரங்க நிர்வாகத்தினை செயல்படுத்தும் பணி தமிழ்நாடு மின் ஆளுமை முகமையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதேபோல், இணையதளம்மூலம் கனிமங்களைக் கொண்டு செல்லப் போக்குவரத்து அனுமதி வழங்குவதற்கான இ-பெர்மிட் அமைப்புக்கான மென்பொருள் இத்துறையால் உருவாக்கப்பட்டுள்ளது. இ-பெர்மிட் என்பது இசைவாணை மற்றும் கனிமங்களை கொண்டு செல்ல அனுப்புகை சீட்டை இணையதளம் மூலம் வழங்குவதற்கான ஒரு பயன்பாடாகும் மற்றும் இது சட்டவிரோத கனிம கடத்தலைக் கட்டுப்படுத்தவும், குவாரிகளிலிருந்து எடுக்கப்பட்ட கனிமங்களின் சரியான அளவை உறுதிப்படுத்தவும் அதன் மூலம் வருவாயை அதிகரிக்கவும் உதவும்.

(v) வாகனங்களைக் கண்காணிக்கும் அமைப்பு


2022-23 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பில், "சட்டவிரோத கனிமக் கடத்தலை தடுக்கும்பொருட்டு, கனிமங்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கு ஜிபிஎஸ் கருவி பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என அறிவிப்பு வெளியிடப்பட்டது. எனவே குத்தகைதாரர்கள் மற்றும் வாகன உரிமையாளர்கள் செலவில் வாகனங்களுக்கு ஜிபிஎஸ் கருவி பொருத்துதல் கட்டாயமாக்கப்படும்.

[2023 ஏப்ரல் 6

ஜிபிஎஸ் நிறுவப்பட்ட வாகனக் கண்காணிப்பு அமைப்பு என்பது சிறுகனிமங்கள் மற்றும் இ-பெர்மிட் தொகுப்பிற்கான மின்னணு சுரங்க நிர்வாகத்தின் தொடர்ச்சியான செயல்முறையாகும். கனிமங்களைக் கொண்டுசெல்லும் அனைத்து வாகனங்களும் புவியியல் மற்றும் சுரங்கத் துறையிடம் பதிவு செய்யப்பட வேண்டும் மற்றும் AIS-140 தரநிலை அல்லது உயர் தரமான ஜிபிஎஸ்-ஐ நிறுவ வேண்டும். சட்டவிரோத கனிம கடத்தலை தடுக்கும்பொருட்டு ஜிபிஎஸ் பொருத்தப்பட்ட அனைத்து வாகனங்களும் கண்காணிக்கப்படும். சட்டவிரோத கனிம கடத்தலை கட்டுப்படுத்தும் வகையில் வாகனக் கண்காணிப்பு அமைப்பை உருவாக்குவதற்கான மென்பொருள் உருவாக்கப்படும்.

இது தொடர்பாக, அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும், அனைத்து புவியியல் மற்றும் சுரங்கத் துறை அலுவலர்களுக்கும் உரிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

(vi) புவியியல் பூங்கா



புவி வரலாற்றில் உலகளவில் புவியியல் ஆராய்ச்சிக்குத் தனித்துவமான இயற்கைத் தளமாக புவியியல் பூங்கா விளங்குகிறது. புதைப்படிவ மரம் என்பது விழுப்புரம் மாவட்டத்தில் அமைந்துள்ள திருவக்கரை கிராமத்தில் காணப்படும் தொல் மரப்படிவத்தை குறிக்கிறது. சுமார் 100 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, இப்பகுதி காடுகளால் சூழப்பட்டிருந்த கிரெட்டேசியஸ் (Cretaceous) காலத்தில் மரஇனங்கள் நீரில் புதையுண்டு உருமாறி மண், மணல், சிலிக்கா ஆகியவற்றால் இறுகி உரு அமைப்பு மாறாமல் புதைப்படிவ மரம் உருவானதாக நம்பப்படுகிறது. கரிமப் பொருளான மரம் புதைக்கப்பட்டு, காலப்போக்கில் தாதுக்களால் மாற்றப்படும்போது புதைப்படிவ மரம் உருவாகிறது, இதன் விளைவாக அசல் பொருளின் புதைப்படிவ வடிவம் ஏற்படுகிறது.

திருவக்கரை பகுதியில் புதைப்படிவ மரப் பூங்கா உள்ளது, இது பல்வேறு புதைப்படிவ மர மாதிரிகளைக் காட்சிப்படுத்துகிறது மற்றும் அப்பகுதியின் புவியியல் வரலாறு பற்றிய தகவல்களை

2023 ஏப்ரல் 6]



வழங்குகிறது. சுமார் 20 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பாக காடுகளில் இருந்து ஆற்றின்மூலம் அடித்துவரப்பட்ட மரங்கள் மற்றும் அதன் கிளைகள் மணற்பாங்கான படிவங்களுடன் புதையுண்டு, நிலத்தடி நீரில் கரைந்த சிலிக்கா துகள்கள் மரத்துண்டுகளில் உட்புகுந்து உயிர்துகள்களை இடமாற்றம் செய்து மரங்களின் உண்மையான அமைப்புகளான வளையங்கள் மற்றும் மரத்தின் தண்டு முனைகள் மாறாமல் நாளடைவில் கல்மரங்களாக உருமாற்றம் பெற்றன.

இவ்வுன்னதமான இயற்கைப் படிமங்களைப் பேணிப் பாதுகாத்து புவியின் கடந்த கால உருமாற்றங்களை மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் நேரில் அறிந்துகொள்ள ஏதுவாக மேற்கண்ட படிமங்கள் அமைந்துள்ள திருவக்கரையில் பூங்கா அமைக்க அரசால் ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, புதைப்படிவ மரப் புவியியல் பூங்கா அருங்காட்சியகம் கட்டப்பட்டு வருகிறது.

(vii) தொல்லுயிர் படிம புவியியல் பகுதி (Geo-Hotspot)



அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் உள்ள புதைப்படிவப் பகுதிகளில் பல விஞ்ஞானிகள் மேற்கொண்ட அறிவியல் ஆய்வில் பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த உலகம் பற்றிய மிகவும் பயனுள்ள தகவல்கள் வெளியாகியுள்ளன. தேசிய கல்மரப் பூங்கா மற்றும் தேசிய புவிசார் பாரம்பரிய நினைவுச் சின்னம் பெரம்பலூர் மாவட்டம், சாத்தனூர் கிராமத்தில் உள்ளது. இப்பகுதியில் உள்ள புதைப்படிவ மரம் 12 கோடி ஆண்டுகள் பழமையானது என புவியியல் ஆய்வுகள்

தெரிவிக்கின்றன. ஆறுகளால் அடித்துவரப்பட்ட மரங்கள் மற்றும் கடற்கரையில் செழித்து வளர்ந்த சில மரங்கள் புதையுண்டதால் காலப்போக்கில் கல்மரங்கள் உருவாயின.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள இந்த அரிய பழங்கால களஞ்சியத்தைப் பாதுகாக்க, அரசால் ரூ.8.52 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.7.89 கோடி பொதுப் பணித் துறைக்கு புவியியல் பூங்கா அமைக்க மாற்றம் செய்யப்பட்டது மற்றும் ரூ.0.63 கோடி நிலம் கையகப்படுத்த மாவட்ட நிர்வாகத்திற்கு மாற்றம் செய்யப்படும்.

(viii) எம். சாண்ட் கொள்கை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 9.3.2023 அன்று எம். சாண்ட் கொள்கை 2023-ஐ வெளியிட்டார். அதன் நோக்கம்:

i. ஆற்று மணலைப் பாதுகாப்பான முறையில் பயன்படுத்துவதன் மூலம் ஆற்றின் சுற்றுச்சூழலுக்கு சேதம் ஏற்படுவதைத் தடுப்பது.

ii. இந்திய தரக் கட்டுப்பாட்டு நிறுவனத்தால் (BIS) பரிந்துரைக்கப்பட்ட தரத்தை ஒட்டி அதிக வலிமை மற்றும் செலவு குறைந்த, ஆற்று மணலுக்கு மாற்று கட்டுமானப் பொருளாக, தரமான செயற்கை மணல்/ அரவை மணலின் பயன்பாட்டை ஊக்குவித்தல்.

iii. தமிழ்நாட்டில் உள்ள செயற்கை மணல்/அரவை மணல் உற்பத்தி தொழிற்சாலைகள் தொடர்புடைய சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளை முறையாக பின்பற்றச் செய்தல்.

iv. செயற்கை மணல்/அரவை மணல் உற்பத்தி தொழிற்சாலைகளின் ஒப்புதலுக்கான நடைமுறையை முறைப்படுத்துதல்.

v. கல் குவாரிகளை மட்டுமே நம்பியிருக்கும் மண் அரைக்கும் மற்றும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு தேவையான மூலப்பொருட்களைப் பெறுவதற்கு வழிவகை செய்தல்.

2023 ஏப்ரல் 6]

vi. *கட்டடங்கள்/கான்கிரீட் கட்டமைப்புகள் மற்றும் குவாரி கழிவுகள் கட்டுமான மற்றும் இடிப்பு கழிவுகளை நேர்த்தியான முறையில் மறுசுழற்சி செய்வதை ஊக்குவித்தல்.*

vii. *மாநிலத்தில் கழிவு அற்ற (Zero Waste) சுரங்கம் மற்றும் குவாரிகளை ஊக்குவித்தல்.*

2. தமிழ்நாடு கனிம நிறுவனம்

டாமின் என்று அறியப்படும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏப்ரல் 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் கிரானைட் கற்கள், கிரானைட் உபபொருட்கள், பெரும்/சிறு கனிமங்கள் மற்றும் கனிமம் சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தவும் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு கனிம நிறுவனம், உலகின் மிகச் சிறந்த கருப்பு கிரானைட் மற்றும் பலவண்ண கிரானைட் கற்துண்டங்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்கிறது. இந்தியாவில், இயற்கையான கிராபைட் செதில்களின் மிகப் பெரிய உற்பத்தியாளராகவும் டாமின் உள்ளது. இந்தியாவில் உள்ள ஒவ்வொரு சிமென்ட் ஆலைக்கும் சிமெண்டின் தரத்தினைப் பரிசோதிக்க பயன்படுத்தப்படும், எண்ணூர் மணல் என்று பிரபலமாக அறியப்படும் இந்தியத் தர மணலின் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர், தமிழ்நாடு கனிம நிறுவனமாகும். மேலும், டாமின் நிறுவனம் சுண்ணாம்புக்கல், குவார்ட்ஸ் மற்றும் வெர்மிகுலைட் மற்றும் பிற கனிமங்களை வெட்டியெடுத்து விற்பனை செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனம் முந்தைய நிதியாண்டான 2021-2022-ல் அடைந்த விற்பனை அளவான ரூ.75 கோடியுடன் ஒப்பிடுகையில், 2022-2023 ஆம் நிதியாண்டில் ஈட்டிய விற்பனை அளவு ரூ.92 கோடி (தணிக்கை செய்யப்படாதது) ஆகும். இருப்பினும் வரும் 2023-2024 ஆம் நிதியாண்டில் குறிப்பிடத்தக்க வகையில் நிதிநிலை செயல்பாட்டினை அதிகரிக்க டாமின் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

2.1 நோக்கம்

ஒரு நிலையான மாதிரி சுரங்க நிறுவனமாக இத்துறையில் இருத்தல்.

2.2 குறிக்கோள்


- தொடர்ந்து புதிய கனிமவளப் பகுதிகளைக் கண்டறிதல்.
- சுரங்க செயல்பாடுகளில் நவீன தொழில்நுட்பங்களைக் கையாள்வதன்மூலம் பாதுகாப்பான முறையில் தரமான கனிம உற்பத்தி மற்றும் விற்பனையை மேற்கொள்ளுதல்.
- இலாபகரமான வேலைவாய்ப்பை உருவாக்குதல்.
- நிலையான சுரங்க செயல்பாட்டிற்கு ஒரு முன்மாதிரியாக இருத்தல்.

2.3 கிரானைட்

டாமின் நிறுவனம், 2022-2023-ல் 9,084 க.மீ. கிரானைட் கற்களை உற்பத்தி செய்தது. இது முந்தைய ஆண்டு உற்பத்தியான 4,886 க.மீ.-ஐவிட 86% அதிகமாகும். இதே போல், கடந்த நிதியாண்டில் விற்பனை வருவாய் ரூ.39.91 கோடியைவிட 30% அதிகமாக ரூ.51.94 கோடி விற்பனை வருவாய் ஈட்டியுள்ளது. டாமின் 2022-2023-ல் 17 கிரானைட் குவாரிகளை இயக்கியுள்ளது, இதை வரும் 2023-2024-ல் 30 குவாரிகளாக அதிகரிக்க திட்டமிட்டுள்ளது.




2.4 கிராபைட்



டாமின் நிறுவனம் 2021-2022-ல் உற்பத்தி செய்த 5,857 மெ.டன் கிராபைட் செதில்களுடன் ஒப்பிடும்போது 2022-2023 ஆம் நிதியாண்டில் 6,177 மெ.டன் கிராபைட் செதில்களை உற்பத்தி செய்துள்ளது. கடந்த 2021-2022 ஆம் நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் கிராபைட் தாது உற்பத்தியும் 29% அதிகரித்துள்ளது.

2023 ஏப்ரல் 6]

2.5 கடற்கரை மணல்


Red sediments, Sattankulam, TN

தமிழ்நாட்டில் அரிய தாது மணல் கடற்கரை பகுதிகளில் உள்ளன. கடற்கரை மணல் கனிமங்களை பிரித்தெடுப்பதற்கும், சந்தைப்படுத்துவதற்கும் ஒரு கூட்டு தொழில் நிறுவனத்தை அமைப்பதற்காக ஐ.ஆர்.இ.எல் (இந்தியா) லிமிடெட் நிறுவனத்துடன் டாமின் நிறுவனம் 09.01.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் முன்னிலையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

2.6 சிலிக்கா மணல்

தொழிற்சாலைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு, இந்தியத் தர மணலை உற்பத்தி செய்ய, என்.எல்.சி-யிலிருந்து சிலிக்கா மணல் வாங்குவதன்மூலம், டாமின் நிறுவனம் அதன் உற்பத்தித் திறனை இரட்டிப்பாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. இந்தியத் தர மணலை இந்தியாவில் உள்ள அனைத்து சிமெண்ட் ஆலைகளுக்கும் வழங்குவதற்கு இந்தியத் தர நிர்ணய ஆணையத்தால் (Bureau of Indian Standards) அனுமதியளிக்கப்பட்டுள்ள ஒரே தயாரிப்பு நிறுவனம், தமிழ்நாடு கனிம நிறுவனமாகும்.

2.7 செயல்பாட்டில் உள்ள சுரங்க குத்தகைகளின் விவரம்

வ. எண்	கனிம வகைகள்	செயல்பாட்டில் உள்ள குத்தகைகளின் எண்ணிக்கை	பரப்பளவு (ஹெக்டேரில்)
1	கருப்பு கிரானைட்	12	315.45.3
2	பலவண்ண கிரானைட்	02	25.35.5
3	சிறு கனிமங்கள் (கிரானைட் நீங்கலாக)	01	6.84.0
4	பெருங்கனிமங்கள்	02	246.79.3
	மொத்தம்	17	594.44.1

2.8 உற்பத்தி மற்றும் விற்பனை விவரம் 2022–2023 (தணிக்கைக்கு உட்படாதது)

கனிமங்களின் விவரம்			உற்பத்தி அளவு	விற்பனை அளவு	மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்)
I.	**கிரானைட் — பாறைகள்**				
1.	கருப்பு கிரானைட் கற்கள்	க.மீ.	6,594.02	6,070.55	4,634.11
2.	பலவண்ண கிரானைட் கற்கள்	க.மீ.	2,389.71	2,724.90	559.57
II.	**கிரானைட் — மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள்**				
1.	கிரானைட்	ச.மீ.	-	7,032.39	38.85
III.	**கனிமங்கள் — தாது**				
1.	வெர்மிகுலைட், சிலிக்கா மணல், கிராபைட் தாது.	மெ. டன்	52,332.41	120.91	21.49
IV	**கனிமங்கள் — மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள்**				
1.	கிராபைட் செதில் கள்	மெ. டன்	6,177.00	5,100.00	1,942.73
2.	இந்தியதர மணல், விரிவாக்கப்பட்ட வெர்மிகுலைட்	மெ. டன்	2,229.50	1,424.81	947.87
3.	சுண்ணாம்புக்கல்	மெ. டன்	1,09,244.00	89,244.00	946.52

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 6]

கனிமங்களின் விவரம்			உற்பத்தி அளவு	விற்பனை அளவு	மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்)
4.	மற்றவை - கிராபிபேவர்ஸ், சான் பிளாக்ஸ், டெய்லிங்ஸ் வேஸ்ட் மற்றும் எண்ட் பிட்கள்	எண்ணிக்கை	–	-	125.59
				மொத்தம்	9,216.73

தமிழ்நாடு கனிம நிறுவனம் 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.207 கோடிக்கு விற்பனையும், அதில் ரூ.21 கோடி இலாபம் ஈட்டவும் திட்டமிட்டுள்ளது.

2.9 சாதனைகள் மற்றும் புதிய முயற்சிகள்

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் கடற்கரை தாது மணல் கனிமங்களை பிரித்தெடுத்து சந்தைப்படுத்த ஐ.ஆர்.இ.எல் (இந்தியா) நிறுவனத்துடன் டாமின் நிறுவனம் 9.1.2023 அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. டாமின், ஐ.ஆர்.இ.எல் உடன் இணைந்து ஒரு கூட்டு நிறுவனத்தை உருவாக்கி, கனிமங்களைப் பிரித்தெடுக்கும் தொழிற்சாலைகள் இரண்டை அமைக்கும். இதன்மூலம் இறுதியில் ஆண்டுக்கு ரூ.3,000 கோடி விற்பனை வருவாய் ஈட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

- ரூ.120 கோடி மதிப்பீட்டில் கிராபைட் செதில்களின் உற்பத்தியை தற்போதைய செயல்திறனான 6,000 மெட்ரிக் டன்னில் இருந்து 25,000 மெட்ரிக் டன்னாக உயர்த்தி, கிராபைட் வணிகத்தை விரிவுபடுத்துவதற்கு டாமின் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. அதன்படி, டாமின் நிறுவனம் பிரைஸ் வாட்டர்ஹவுஸ் கூப்பர்ஸ் (PwC), கொல்கத்தா நிறுவனத்தை தொழில்நுட்ப ஆலோசகராக நியமித்து கிராபைட் வணிகத்தில் தொழில்நுட்ப ஆய்வு மேற்கொள்ளவும், 99.99% தூய்மையான கிராபைட்

செதில்களை உற்பத்தி செய்து,கோளவடிவ கிராபைட்டாக (ஸ்பெரிகல் கிராபைட்) மாற்றுவதற்கு தேவையான தொழில்நுட்பம் வழங்குபவர்களை அடையாளம் காணவும் கேட்டுள்ளது. இறுதி அறிக்கை ஜூன் 2023-க்குள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

➢ டாமின், என்.எல்.சி-யை அணுகி, அவற்றின் சுரங்க நடவடிக்கையின் போது ஒரு இணை கனிமமாக எடுக்கப்படும் சிலிக்கா மணல் மாதிரியை சேகரித்து, ஹரியானாவில் உள்ள சிமெண்ட் மற்றும் கட்டடப் பொருட்களுக்கான தேசிய கவுன்சில் (NCB) ஆய்வகத்தில் சோதனைகள் நடத்தப்பட்டு, சோதனை முடிவுகள் IS: 650-1991-ன்படி இந்திய தர மணல் உற்பத்திக்கு இந்த மணல் ஏற்றது என்று தெரியவந்துள்ளது. என்.எல்.சி-யிலிருந்து இந்த கச்சா சிலிக்கா மணலை பெற சோதனை முடிவுகள் பி.ஐ.எஸ்-க்கு அனுப்பப்பட்டன. கச்சா சிலிக்கா மணலைக் கொள்முதல் செய்வதற்காக என்.எல்.சி. உடன் கையெழுத்திடுவதற்கு டாமின் ஒரு வரைவு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தயாரித்து என்.எல்.சி உடன் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது.



➢ தமிழ்நாடு கனிம நிறுவனம் 21.03.2022 முதல் தலைமை அலுவலகத்திலும், 19.5.2022 முதல் அனைத்து கோட்ட அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகளிலும் மின்னாளுமை அலுவலக (e-office) நடைமுறையினை முழுமையாக செயல்பாட்டில் கொண்டு வந்துள்ளது.

2023 ஏப்ரல் 6]



➢ *உலகின் மிகப் பெரிய கிரானைட் கண்காட்சியில் ஒன்றான மர்மோமேக், வரோனா, இத்தாலியில் டாமின் நிறுவனம் பங்கேற்று சர்வதேச சந்தையில் தனது முத்திரையை பதித்துள்ளது.*

➢ **சுரங்க விருதுகள்**



*2022-2023 ஆம் ஆண்டில் மாசு இல்லாத, தூய்மையான சுற்றுச்சூழல் மற்றும் அறிவியல் ரீதியான பராமரிப்பு போன்ற பல்வேறு அம்சங்களுக்காக சுரங்கப் பாதுகாப்பு வார விழாவின் போது டாமினுக்கு 9 முதல் பரிசுகளும், 10 இரண்டாம் பரிசுகளும், ஒட்டு மொத்த செயல் திறனுக்கான ஒரு பரிசும் சுரங்கப் பாதுகாப்பு தலைமை இயக்குநரால் (*Director General of Mines Safety*) வழங்கப்பட்டுள்ளன.*

➢ *நிலையான சுரங்க மேலாண்மை கொண்ட ஒரு முன்மாதிரி நிறுவனமாக விளங்க, தமிழ்நாடு கனிம நிறுவனம் 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.112 இலட்சங்கள் செலவழித்து சுற்றுச்சூழல் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டது. மேலும் 2023-2024 ஆம் ஆண்டில் ரூ.200 இலட்சங்களில் சுற்றுச்சூழல் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள உள்ளது. மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் 28.09.2022 அன்று வேலூர் மாவட்டம், மகிமண்டலம் குவாரியில் 5,000 மரக் கன்றுகள் நடும் நிகழ்ச்சியினை தொடங்கி வைத்தார்.*

[*2023 ஏப்ரல் 6*

3. தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம்

மேக்னசைட் கனிமம் உருக்கு ஆலைகளுக்கு தேவைப்படும் வெப்பம் தாங்கி கற்கள் தயாரிக்கப் பயன்படும் மிக முக்கியமான மூலப்பொருள் ஆகும். உலகில் மேக்னசைட் உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியா 9-வது இடத்தை வகிக்கிறது. 2019-2020 ஆம் ஆண்டு இந்தியாவின் மொத்த உற்பத்தியில் தமிழ்நாடு தொடர்ந்து அதிக பங்களிப்பாக 47% உற்பத்தி செய்துள்ளது. சேலம் மேக்னசைட் அதன் வடிவமைப்பில் வெப்பம் தாங்கி கற்கள் தயாரிக்க பிரபலமானது ஆகும். மேக்னசைட் கனிமத்தின் பாதுகாப்பு மற்றும் இக்கனிமத்தை எடுக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில்கொண்டு, ஜனவரி மாதம் 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தை (டேன்மேக்) தமிழ்நாடு அரசு நிறுவியது.

இந்நிறுவனம் ISO *9001-2008 (தர மேலாண்மை அமைப்பு) மற்றும்* ISO *14001-2004 (சுற்றுச் சூழல் மேலாண்மை அமைப்பு) ஆகிய தரச் சான்றிதழ்களைப் பெற்ற நிறுவனமாகும்.*

3.1 பிரிவுகள்

*இந்நிறுவனம், சுரங்கப் பிரிவு (*Mines Division*), சுழற்சூளைப் பிரிவு (*Rotary Kiln Division*) மற்றும் நிலைச்சூளைப் பிரிவு (*Shaft Kiln Division*) என மூன்று பிரிவுகளைக் கொண்டு இயங்கி வருகிறது.*

3.2 சுரங்கப் பிரிவு

சேலம் மாவட்டத்தில் குரும்பப்பட்டி கிராமத்தில் 96.34 ஹெக்டேர் (238 ஏக்கர்) பரப்பளவில் 12.8.2008 முதல் ஆண்டுக்கு சுமார் 1,33,000 மெட்ரிக் டன் மேக்னசைட் மற்றும் 1,07,377 மெட்ரிக் டன் டூனைட் உற்பத்தி செய்யும் வீதம் 20 ஆண்டுகளுக்கு சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறையிடம் குத்தகையாகப் பெற்று டேன்மேக் நிறுவனம் சுரங்கத்தினை இயக்கி வருகிறது.

*கச்சா மேக்னசைட் தயாரித்தல் என்பது, இடத்தை தேர்வு செய்தல், துளை இடுதல், வெடித்தல், வரிசைப்படி அடுக்குதல், பிரித்தெடுத்தல் மற்றும் கழிவை அகற்றுதல் ஆகியவை அடங்கும். இயந்திரங்கள் மற்றும் சுரங்கப் பணியாளர்களைப் பயன்படுத்தி (*Semi-Mechanised*) திறந்தவெளி முறையில் சுரங்கப் பணிகளை*

2023 ஏப்ரல் 6]

டேன்மேக் நிறுவனம் செய்து வருகிறது. வெடித்த கனிம மண்ணிலிருந்து 15-ல் ஒரு பங்கு மேக்னசைட் கிடைக்கிறது.

3.3 சுழற்சூளைப் பிரிவு (Rotary Kiln Division)

தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் கச்சா மேக்னசைட்டிலிருந்து உலை எண்ணெயைக் (Furnace oil) கொண்டு தனது சுழற்சூளைப் பிரிவில், முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட்டை (DBM) உற்பத்தி செய்கின்றது. நிறுவப்பட்ட உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 30,000 மெட்ரிக் டன் ஆகும். மேக்னசைட் தாது அதிக அளவு வெப்பமான 1750 டிகிரி செல்சியசில் வெப்பப்படுத்தப்பட்டு முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் தயாரிக்கப்படுகின்றது. ஒரு மெட்ரிக் டன் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் தயாரிக்க சுமார் 2.7 மெட்ரிக் டன் கச்சா மேக்னசைட்டும், 220 லிட்டர் உலை எண்ணெயும் தேவைப்படுகிறது.

இது உருக்கு ஆலைகளுக்குத் தேவைப்படும் வெப்பம் தாங்கி கற்கள் (Refractory Bricks) மற்றும் மோனோலித்திக்ஸ் (MONOLITHICS) போன்றவை தயாரிக்கப் பயன்படுகிறது.

3.4 நிலைச்சூளைப் பிரிவு (Shaft Kiln Division)

தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் கச்சா மேக்னசைட்டைக் கொண்டு தனது 5 செங்குத்தான சூளைமூலம், நிலைச்சூளைப் பிரிவில் மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் (LCM) உற்பத்தி செய்கின்றது. நிறுவப்பட்ட உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 19,500 மெட்ரிக் டன் ஆகும். மேக்னசைட் தாது 1,000 டிகிரி செல்சியஸ் முதல் 1,100 டிகிரி செல்சியஸ் வரையிலான வெப்பத்தில் வெப்பமயமாக்கப்பட்டு இரசாயன எதிர்வினைமூலம் மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் தயாரிக்கப்படுகிறது. ஒரு டன் மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் தயாரிக்க சுமார் 2.2 மெட்ரிக் டன் கச்சா மேக்னசைட்டும், 140 லிட்டர் உலை எண்ணெயும் தேவைப்படுகின்றது.

மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் கோதுமை அரைப்பதற்கு பயன்படும் அரவைக் கற்கள், மேக்னசைட் இரசாயனங்கள், கால்நடைத் தீவனம், கிரானைட் மெருகூட்ட தேவைப்படும் மெருகு கற்கள், ரேயான் மற்றும் காகித ஆலைகள் போன்றவற்றிற்கு பயன்படுகிறது.

[*2023 ஏப்ரல் 6*

3.5 பங்கு முதலீடு

ஒவ்வொன்றும் ரூ.100/- மதிப்புள்ள 50 இலட்சம் பங்குகளுடன் இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.50 கோடி ஆகும். ரூ.100/- மதிப்புள்ள 16.65 இலட்சம் பங்குகளுடன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.16.65 கோடி ஆகும்.

3.6 2022-23 மற்றும் 2023-24 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம்

டேன்மேக் நிறுவனம் பிரத்யேகமாக "அரசு மேக்னசைட் சுரங்கம்" எனும் சொந்த பயன்பாட்டிற்கான சுரங்கத்தை கொண்டுள்ளது. இதன் சுரங்கப் பணிகள் 2018 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் ஒப்புதல் வேண்டி தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டது. பின்பு 2021 நவம்பர் மாதம் சுற்றுச்சூழல் அனுமதி பெற்று சுரங்கப் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டது. டேன்மேக் தொடர்ந்து இலாபம் ஈட்டும் நிறுவனமாக உள்ளது. சென்ற ஆண்டு (2021-2022) ஈட்டப்பட்ட இலாபம் ரூ.16.67 கோடியாகும். இதே போன்ற இலாபம் 2022-2023 ஆண்டுக்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சுரங்கத்தில் உள்ள சுமார் 24.64 இலட்சம் மெட்ரிக் டன் மேக்னசைட் மற்றும் 22.57 இலட்சம் மெட்ரிக் டன் டூனைட் கனிமங்கள் இருப்பு உள்ளதால், 20 ஆண்டுகளுக்கு இச்சுரங்கத்தினை தொடர்ந்து நடத்திட முடியும். சுரங்கப் பணிகள் மீண்டும் துவக்கப்பட்டுள்ளதால், 319 தொழிலாளர்கள் நேரடியாகவும், 2,000 தொழிலாளர்கள் மறைமுகமாகவும் பயனடைந்து வருகின்றனர். இது உள்ளூர் பொருளாதாரத்தை அதிகரிப்பதுடன், மேக்னசைட் இறக்குமதியையும் குறைக்க ஏதுவாக உள்ளது.

டேன்மேக் நிறுவனத்தின் செயல்திறனை மேம்படுத்தும் வகையில் ஒப்பந்தம் மற்றும் கொள்முதல் முறையினை ஒழுங்குபடுத்த முழு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் வகையில் ஏற்கெனவே உள்ள பல்வேறு ஒப்பந்தங்கள் உள்ள முறையினை ஒரே ஒப்பந்தமாக மாற்றியமைக்கப்படவுள்ளது.

மேலும் வருவாயைப் பெருக்கும் நோக்கத்தில், ஏற்கெனவே குவித்து வைக்கப்பட்டுள்ள கழிவுகளிலிருந்து மேக்னசைட் மற்றும் டூனைட் கனிமங்களைப் பிரித்தெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 6]

இதன்மூலம் சுமார் 15 சதவிகித அளவில் மீட்டெடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2022-23 மற்றும் 2023-24 ஆம் ஆண்டுகளுக்கான உத்தேசமான உற்பத்தி மற்றும் விற்பனை இலக்குகள் பின்வருமாறு:

விவரங்கள்	திருத்தப்பட்ட மதிப்பீடு 2022-23 (மெட்ரிக் டன்னில்)		வரவு செலவு திட்ட மதிப்பீடு 2023-24 (மெட்ரிக் டன்னில்)	
	உற்பத்தி	விற்பனை	உற்பத்தி	விற்பனை
கச்சா மேக்னசைட் *	27,184	-	66,000	-
முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட்	5,984	5,927	21,000	21,000
மித எரியூட்டப்பட்ட மேக்னசைட்	3,855	3,897	9,570	9,500
டூனைட்	54,201	48,819	1,06,000	1,00,000

* சொந்த பயன்பாட்டிற்கு

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-II

(127 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 46-தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024

முன்னுரை

ஒரு மொழியே அந்த மொழிக்குரிய இனத்தின் நாகரிகம், பண்பாடு, வரலாறு ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் அடித்தளமாகின்றது. மொழியின்றி மனிதன் இல்லை என்பது மட்டுமல்ல, அந்த மனிதனுக்கு சமூக உறவும், முன்னேற்றமும் இல்லாமற் போய் விடுகிறது. இதை மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் அவர்கள்,

"ஒரு நாட்டுச் செல்வங்களுள் மொழியும் ஒன்றாகும். மொழித் துணை இன்றி ஒரு நாட்டார் நாகரிகமாகவும் வசதியாகவும் வாழ்வது அரிது. முன்னோர் அரும்பாடுபட்டு ஈட்டிய அறிவுச்செல்வம் எல்லாம் மொழி வாயிலாகவே போற்றப்பட்டு வருகின்றன" என்கிறார்.

இன்றுவரை மானுட இனத்தின் அறிவியல்சார் கண்டுபிடிப்புகளில் மொழியே மிகச் சிறந்த கருவியாகத் திகழ்கிறது. மனித இனத்தின் தொடக்கக் காலத்தில் மொழி என்பது கருத்தறிவிக்கும் கருவியாக மட்டுமே கருதப்பட்ட நிலையில், காலக் கடிகாரத்தின் ஓட்டத்தில் மொழியானது ஒலி வடிவமாகவும், வரி வடிவமாகவும் பரிணாமம் பெற்று இன்று மொழி ஓர் இனத்தின் பண்பாடாகவும், அடையாளமாகவும் திகழ்கிறது.

மனிதன் தோன்றிய காலத்தே உடன் பிறந்த தமிழ், இன்றளவும் இளமை குன்றாது பல இலக்கிய, இலக்கண நூல்களை அணிகலன்களாகப் பெற்று இடையறவுபடாமல் பேச்சு மொழியாகவும் எழுத்து மொழியாகவும் உயர்ந்தோங்கி நிற்கிறது.

2023 ஏப்ரல் 6]

தமிழ்நாட்டின் ஆட்சி மொழியாக விளங்கும் தமிழ், இன்று உலகின் மொழிகளுக்கெல்லாம் மூத்த மொழி என்றும், பல மொழிகளின் தாய்மொழி என்றும் ஆய்வுகள் உணர்த்துகின்றன.

'என்றும் உள செந்தமிழ்', 'வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வண்மொழி', 'என்று பிறந்தவள் என்று உணராத இயல்பினை உடைய தமிழ்' என்றெல்லாம் புலவர் பெருமக்கள் உரைகளில் போற்றிப் புகழ்வதன் மூலம், தமிழ் மொழியின் பிறப்பு அது தோன்றிய காலம் கண்டுணர முடியாத ஒன்றாக உள்ளதை உட்பொருளாகச் சுட்டப்படுவதை உணரலாம்.

தமிழ் மிகுந்த வளர்ச்சி பெற்று உயர்ந்திருந்த காலத்தில் உருவாகிய தமிழ் மொழியின் கட்டமைப்பையும் தமிழரின் பண்பாட்டையும் எடுத்தியம்பிய நூல் ஒல்காப் புகழ்த் தொல்காப்பியம் என்பது பேருண்மை. இத்தகைய நூலை உருவாக்கும் அளவுக்கு அக்காலத்திலேயே தரவுகளைப் பெற்றிருந்த மொழி தமிழ் என்பதன்மூலம் தமிழின் தொன்மையினையும் வளத்தினையும் அறிய முடியும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், நம் தாய்மொழியாம் தமிழைப் பற்றிக் கூறும்போது,

"நமக்குக் கிடைத்திருக்கின்ற தாய் மொழி பிற மொழிகளுடன், ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில் மொழியாளர்கள் எல்லாம் பார்த்து இவ்வளவு எழிலுள்ள மொழியா உங்களுடையது? இவ்வளவு ஏற்றம் படைத்த இலக்கியமா உங்களிடத்தில் உள்ளது? இவ்வளவு சிறந்த இலக்கணத்தையா நீங்கள் பெற்றுள்ளீர்கள்? ஈராயிரமாண்டுக் காலமாகவா மொழி சிதையாமல் சீர்குலையாமல் இருந்து வருகிறது? ஆவலுடன் சிலரும் ஆயாசத்துடன் பலரும், பொறாமையோடு சிலரும், பொச்சரிப்பாலே பலரும் கேட்கத்தக்க நல்ல நிலையிலேதான் தமிழ் மொழி இருக்கின்றது" எனப் பெருமிதத்தோடு குறிப்பிடுகிறார்.

மொழியின் வாழ்நிலை, அதன் காலம் எனக் கணக்கிட்டால் தமிழின் தோற்றம் என்பது, ஏறத்தாழ பேச்சு வழக்கில் ஐந்தாயிரம் ஆண்டுகளையும், எழுத்து வழக்கில் மூவாயிரம் ஆண்டுகளையும் கடந்து வாழும் மொழி என்பதை உணர இயலும்.

[2023 ஏப்ரல் 6

தமிழில் பல்துறை வளங்களைச் செழிக்கச் செய்வதற்கான திட்டங்களைத் தீட்டிப் பொன்னாகப் பொலியச் செய்வதுமான பணிகளைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டுள்ளது. இப்பணிகளுக்காக இத்துறை வகுத்து அமைத்துக் கொண்டுள்ள கொள்கைகள் உரைக்கப் பெறுகின்றன.

இயல்—1

தமிழ் வளர்ச்சித் துறை

1. ஆட்சிமொழிச் செயலாக்கம்

1.1.1. ஆய்வு

தமிழ்நாடு மாநிலத்தில் அலுவல் முறை வாயிலாகத் தமிழ் மொழியை ஏற்று 'தமிழ் ஆட்சிமொழிச் சட்டம்' 27-12-1956-ல் நிறைவேற்றப்பட்டது.

இச்சட்டத்தின்படி, தமிழ்நாட்டின் அனைத்துத் துறைகள், வாரியங்கள், கழகங்கள், தன்னாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் செயற்பாடுகளில் தமிழ்மொழி பயன்படுத்துவதை உறுதிசெய்திடப் பின்வரும் வகையில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன:

1.1.2. ஆட்சிமொழிப் பயிலரங்கம் - கருத்தரங்கம்

ஆட்சிமொழித் திட்டத்தைச் சிறப்பாகச் செயற்படுத்திடும் வகையில், அரசுப் பணியாளர்களுக்கு அரசு அலுவலகங்களில் தமிழ்மொழியை முழுமையாகவும், மிகுதியாகவும் பயன்படுத்திடப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெறுகின்றன. பயிற்சி வகுப்பில் அலுவலகக் குறிப்புகள், வரைவுகளில் பிழை நீக்கி எழுதுதல், ஆட்சிமொழி வரலாறு சட்டம்; ஆட்சிமொழிச் செயலாக்க அரசாணைகள் மற்றும் ஆட்சிமொழித் திட்டச் செயற்பாட்டில் ஏற்படும் இடர்பாடுகளைக் களைதல்; கணினியில் தமிழ் ஒருங்குறிப் பயன்பாடு எனப் பன்முகப் பாங்கில் மின்காட்சியுரையுடன் 38 மாவட்டங்களிலும் அரசுப் பணியாளர்களுக்கு பயிலரங்கம் நடத்தப்பெறுகிறது.

மேலும், மொழி வல்லுநர்கள் வாயிலாக ஆட்சிமொழித் திட்டப் பயிற்சி குறித்த கருத்தரங்கம் 38 மாவட்டங்களில் நடத்தப்பெறுகின்றன. ஆண்டுதோறும் இரு நிகழ்வுகளுக்கும்

2023 ஏப்ரல் 6]

சேர்த்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.70,000/- வீதம் 38 மாவட்டங்களுக்கும் நிதி வழங்கப்பெறுகிறது.

1.1.3. ஆட்சிமொழிச் சட்ட வாரம்

தமிழ்நாட்டின் அலுவல் மொழியாகத் தமிழை நடைமுறைப்படுத்திட 'தமிழ் ஆட்சிமொழிச் சட்டம்' நிறைவேற்றப்பட்ட 27-12-1956 ஆம் நாளினை நினைவுகூரும் வகையில் ஆட்சிமொழிச் சட்டத்தை நினைவூட்டவும் நடைமுறைப்படுத்த வலியுறுத்தவும், விழிப்புணர்வூட்டவும் மாவட்டங்கள்தோறும் ஆட்சிமொழிச் சட்ட வாரம் கீழ்க்காணும் தலைப்புகளில் ஒரு வாரம் நடத்தப்பெறுகிறது. அதற்கென ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ரூ.38 இலட்சம் வழங்கப்படுகிறது.

முதல் நாள்	1. கணினித் தமிழ் விழிப்புணர்வுக் கருத்தரங்கம் 2. ஒருங்குறி பயன்பாடு குறித்துப் பயிற்சி அளித்தல்.
இரண்டாம் நாள்	ஆட்சிமொழிச் சட்டம்/வரலாறு உள்ளிட்ட மின்காட்சியுரை நடத்துதல்
மூன்றாம் நாள்	தமிழில் வரைவுகள், குறிப்புகள் எழுதுவதற்கான பயிற்சி வகுப்பு
நான்காம் நாள்	வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப்பலகை வைப்பதற்கான வணிக நிறுவன உரிமையாளர்களுடன் கலந்துரையாடல் கூட்டம்.
ஐந்தாம் நாள்	ஆட்சிமொழிப் பட்டிமன்றம் நடத்துதல்
ஆறாம் நாள்	ஒன்றியம், வட்டம், மாவட்டம் அளவிலான ஆட்சிமொழித் திட்ட விளக்கக் கூட்டம் நடத்துதல்.
ஏழாம் நாள்	மாவட்ட ஆட்சியர் தலைமையில் தமிழ் அமைப்புகள் பள்ளி, கல்லூரி மாணவர்களுடன் இணைந்து தமிழ் மரபு சார்ந்த கலை நிகழ்ச்சிகளுடன் விழிப்புணர்வுப் பேரணி நடத்துதல்.

1.1.4. அரசுப் பணியாளர்களுக்கு ஆட்சிமொழித் திட்டப் பயிற்சி (சென்னை மாவட்டம்)

சென்னை மாவட்டத்தில் மட்டும் அமைந்துள்ள அரசுத் துறைகள், வாரியங்கள், கழகங்கள், தன்னாட்சி நிறுவனங்கள்

ஆகியவற்றின் தலைமை அலுவலகங்கள் மற்றும் அதன் சார்நிலை அலுவலகங்களில் பணிபுரியும் அரசுப் பணியாளர்களுக்குத் துறை வாரியாக ஓராண்டுக்கு ஐந்து தமிழ் ஆட்சிமொழித் திட்டப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெற்று வருகின்றன.

இத்திட்டப் பயிற்சியில் பங்கு பெறுபவர்களுக்கு ஆட்சிமொழிச் சட்டம்/வரலாறு, ஆட்சிமொழிச் செயலாக்கமும் அரசாணைகளும், கலைச் சொல்லாக்கமும் மொழிபெயர்ப்பும், மொழிப்பயிற்சி, அலுவலகக் குறிப்புகள், வரைவுகள், செயல்முறை ஆணைகள் தயாரித்தல், தமிழ் ஆட்சிமொழி ஆய்வும் குறைகளைவு நடவடிக்கைகளும் என விரிவான முறையில் இரண்டு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஆண்டுதோறும் ஒரு பயிற்சி வகுப்பிற்கு ரூ.30,000/-வீதம் ஐந்து பயிற்சி வகுப்புகளுக்கும் ரூ.1,50,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2022-2023 ஆம் நிதியாண்டில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெற்றன.

1.1.5. சிறந்த குறிப்புகள், வரைவுகள் எழுதும் அரசுப் பணியாளர்களுக்குப் பரிசுகள்

அரசு மற்றும் அரசு சார்ந்த பணியாளர்கள் தமிழில் குறிப்புகள், வரைவுகள் சிறந்த முறையிலும் எளிய நடையிலும் எழுதுவதை ஊக்கப்படுத்தும் வகையில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட நிலை, சார்நிலை, உள்ளாட்சி நிலை, தன்னாட்சி நிலை ஆகிய நான்கு நிலைகளிலும் சிறந்த முறையில் வரைவுகள், குறிப்புகள் எழுதும் பணியாளர்கள் தெரிவு செய்யப்பெற்று அவர்களுக்கு முதற் பரிசாக ரூ.3,000/-, இரண்டாம் பரிசாக ரூ.2,000/-, மூன்றாம் பரிசாக ரூ.1,000/- எனப் பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வகையில் 2007-2008 முதல் நாளிது வரை ஐம்பத்தாறு பேர் முதற்பரிசும் (ரூ.3,000/-), நாற்பத்தைந்து பேர் இரண்டாம் பரிசும் (ரூ.2,000/-), முப்பத்திரெண்டு பேர் மூன்றாம் பரிசும் (ரூ.1,000/-) பெற்றுள்ளனர்.

1.1.6. அரசு அலுவலகங்களுக்குக் கேடயம்

ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தின் முழக்கமான ‘எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!’ என்னும் இலக்கை எய்திய

2023 ஏப்ரல் 6]

அரசு அலுவலகங்களைப் பாராட்டும் வகையில் அவற்றிற்குக் கேடயமும் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன. அரசுத் துறை, வாரியங்கள், கழகங்கள் ஆகியவற்றின் துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்ட நிலை அலுவலகங்கள் என்ற வகைப்பாடுகளின் அடிப்படையில் ஆட்சிமொழித் திட்டத்தைச் சிறப்பாகச் செயற்படுத்திவரும் அலுவலகங்கள் தெரிவு செய்யப்பட்டுச் சென்ற ஆண்டில் 38 மாவட்டங்களுக்கும் கேடயங்கள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

1.2. விழாக்கள்

1.2.1. திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மலர் தூவிச் சிறப்புச் செய்தல்

தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும், தமிழ்ப் படைப்பாற்றலையும், தமிழ்த் தொண்டினையும் நினைவுகூரும் வகையில் பின்வரும் அறிஞர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்தும், அவர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர் வணக்கமும் செய்யப்படுகிறது.

1	திருவள்ளுவர் சிலை	வள்ளுவர் கோட்டம்	தை – 2 ஆம் நாள் (திருவள்ளுவர் திருநாள்)
2	தமிழ்த் தாத்தா உ.வே.சா. சிலை	மாநிலக் கல்லூரி	பிப்ரவரி – 19 (உ.வே.சா. பிறந்தநாள்)
3	தமிழ் மூதாட்டி ஔவையார் சிலை	மெரினா கடற்கரை	மார்ச் – 08 (உலக மகளிர் நாள்)
4	கவிச்சக்கரவர்த்தி கம்பர் சிலை	அண்ணா சதுக்கம்	மார்ச் – 24 (கம்பர் திருநாள்)
5	இளங்கோவடிகள் சிலை	அண்ணா சதுக்கம்	ஏப்ரல் – 24 (இளங்கோவடிகள் திருநாள்)
6	தமிழறிஞர் இராபர்ட் கால்டுவெல் சிலை	மெரினா கடற்கரை	மே – 7 (இராபர்ட் கால்டுவெல் பிறந்தநாள்)

7	தனித்தமிழ் இயக்ககத்தின் தந்தை மறைமலை யடிகளார் சிலை	பல்லவபுரம், செங்கல்பட்டு மாவட்டம்	ஜூலை – 15 (மறைமலையடிகள் பிறந்தநாள்)
8	தமிழ்த்தென்றல் திரு.வி.க. சிலை	துண்டலம், திருவள்ளூர் மாவட்டம்	ஆகஸ்டு – 26 (திரு.வி.க பிறந்தநாள்)
9	தொல்காப்பியர் சிலை	1) சென்னைப் பல்கலைக் கழக மெரினா வளாகம். 2) காப்பியக் காடு, கன்னியாகுமரி மாவட்டம்.	மே - 05

1.2.2. சங்கப் புலவர்களின் நினைவுத் தூண்களுக்குச் சிறப்புச் செய்தல்

தமிழ்நாடு அரசால், சங்கக்காலப் புலவர்களை நினைவுகூரும் வகையில் நிறுவப்பட்டுள்ள கீழ்க்குறிப்பிட்டுள்ள நான்கு நினைவுத் தூண்களுக்கும் ஆண்டுதோறும் ஏப்ரல் 29 ஆம் நாளான தமிழ்க் கவிஞர் நாளில் மலர் மாலை அணிவித்து மலர் வணக்கம் செய்யப்பட்டு வருகிறது:

வ. எண்	புலவர்கள் பெயர்	நிறுவப்பட்டுள்ள இடம்	மாவட்டம்
1	ஒக்கூர் மாசாத்தியார்	ஒக்கூர்	சிவகங்கை
2	நல்லூர் நத்தத்தனார்	இடைக்கழிநாடு	செங்கற்பட்டு
3	மாங்குடி மருதனார்	மாங்குடி	தென்காசி
4	கருவூர் புலவர்கள் பன்னிருவர்	கரூர்	கரூர்

தற்போது புதிதாக கணியன் பூங்குன்றனாருக்கு சிவகங்கை மாவட்டம் மகிபாலன்பட்டியிலும், கபிலருக்கு கள்ளக்குறிச்சி

2023 ஏப்ரல் 6]

மாவட்டம் திருக்கோவிலூரிலும் நினைவுத்தூண்கள் நிறுவப்பட்டு திறக்கப்படவுள்ளன.

மேலும், நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் வல்வில் ஓரிக்கு நினைவுத்தூணும், திருச்சிராப்பள்ளியில் சங்ககாலப் பெண்பாற்புலவர்கள் 40 பேருக்கு சேர்த்து ஒரு நினைவுத்தூணும், மதுரை மாவட்டம், திருமங்கலம் திரளி கிராமத்தில் நக்கீரருக்கு நினைவுத்தூணும்,சிவகங்கை மாவட்டம்,நாட்டரசன்கோட்டையில் கவிச்சக்கரவர்த்தி கம்பருக்கு ஒரு நினைவுத்தூணும் நிறுவிட நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, நினைவுத்தூண்களுக்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்நினைவுத்தூண்கள் பூம்புகார் நிறுவனத்தின் வாயிலாக நிறுவப்படவுள்ளன.

1.2.3. தமிழ்க் கவிஞர் நாள் விழா

புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாளைத் தமிழ்க் கவிஞர் நாளாகத் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் ஏப்ரல் 29 ஆம் நாளில் கொண்டாடி வருகிறது. கடந்த 29.04.2022-ல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற தமிழ்க் கவிஞர் நாள் விழாவில் பாவேந்தரைப் போற்றும் வண்ணம் கருத்தரங்கு நடத்தப்பெற்றது.

மேலும், அரசு கவின் கலைக் கல்லூரி மாணவர்களைக் கொண்டு சங்க இலக்கிய நூல்களிலுள்ள வாழ்வியல் தத்துவங்கள், கருத்துகள் அடங்கிய ஓவியங்கள் வரையப்பட்டு வண்ணமயமான நூலாகத் தயாரித்து வெளியிடப்பெற்றது.

1.2.4. தமிழ்நாடு நாள் விழா (ஜூலை திங்கள் 18 ஆம் நாள்)

மெட்ராஸ் மாகாணம் என்று இருந்த நிருவாக நிலப்பரப்பு, அறிஞர் அண்ணா அவர்களால் 1967 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் நாள் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றித் "தமிழ்நாடு" என்று பெயர் சூட்டப்பட்ட நாளைத்தான் "தமிழ்நாடு நாள்" என்று கொண்டாடப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 31-10-2021 அன்று தாய்த் தமிழ்நாட்டிற்குத் "தமிழ்நாடு" என பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய ஜூலை 18 ஆம் நாளே "தமிழ்நாடு நாளாகக் கொண்டாடப்படும்" என அறிவித்தார்கள். அதன்படி, 18-07-2022-ல் தமிழ்நாடு அரசால் சென்னை கலைவாணர் அரங்கத்தில் தமிழ்நாடு

நாள் விழா கொண்டாடப்பட்டது. அதில், தமிழ்நாடு நாள் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. மேலும், மாவட்ட/மாநில அளவில் கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவர்களுக்குப் பரிசுகள் கீழ்க்காணுமாறு வழங்கப்பட்டன:

வகைப்பாடு	பரிசு / விவரங்கள்	தொகை (ரூபாயில்)
மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்குக் கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளுக்கு வழங்கப்பட்ட பரிசுத் தொகை	முதற் பரிசு	10,000
	இரண்டாம் பரிசு	7,000
	மூன்றாம் பரிசு	5,000
மாநில அளவில் பள்ளி மாணவர்களுக்குக் கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளுக்கு வழங்கப்பட்ட பரிசுத் தொகை	முதற் பரிசு	50,000
	இரண்டாம் பரிசு	30,000
	மூன்றாம் பரிசு	20,000

1.2.5. இலக்கியச் சங்கமம்

நாட்டுப்புறக்கலை விழாவான ‘நம்ம ஊரு திருவிழா’வின் சென்னைச் சங்கமத்தின் ஓர் அங்கமாகத் தமிழ் இலக்கியச் சங்கமம் என்னும் நிகழ்ச்சி சென்னை அடையாறு, இராஜரத்தினம் அரங்கம், முத்தமிழ்ப் பேரவையில் 14-01-2023 முதல் 17-01-2023 வரை ரூபாய் 12,45,000/- செலவில் நடத்தப்பட்டது.

1.2.6. உலகத் தாய்மொழி நாள் விழா

ஐக்கிய நாட்டுக் கல்வி மற்றும் கலைப் பண்பாட்டு அவை, பிப்ரவரி திங்கள் 21 ஆம் நாளை உலகத் தாய்மொழி நாளாகக் கடைப்பிடிக்க அறிவித்தது. அதன்படி, தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் உலகத் தாய்மொழி நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

அவ்வகையில் 2022-2023 ஆம் நிதியாண்டில் 21.02.2023 அன்று சென்னையிலுள்ள நீதிபதி பஷீர் அஹ்மத் சயீத் மகளிர் கல்லூரியில் பட்டிமன்றம், பாட்டரங்கம், இளையோர் அரங்கம் ஆகியவை நடத்தப்பட்டன.

2023 ஏப்ரல் 6]

1.3. விருதுகள்

தமிழ்மொழியின் தொன்மை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை அனைவரும் உணரும் வண்ணம் தமிழின் பெருமையைத் தளராது உயர்த்திப் பிடித்து வரும் தமிழறிஞர்களுக்கு விருதுகள் வழங்குவதைத் தூய தமிழ்த் தொண்டாகக் கருதி அரசு செயன்மையாற்றி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 14-03-2022 ஆம் நாளன்று தமிழ் வளர்ச்சித் துறை, உலகத் தமிழ்ச் சங்கம் மற்றும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் ஆகியவற்றின் வாயிலாக 39 விருதுகள் வழங்கப்பட்டன. இவ்விருதுகளுக்குரிய விருதுத் தொகை ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூபாய் இரண்டு இலட்சமாக உயர்த்தப்பெற்றது.

1.3.1. பாவேந்தர் பாரதிதாசன் விருது

தமிழியக்கம் கண்ட புரட்சிக் கவிஞர் பாவேந்தரின் கவி மரபினைப் போற்றும் வகையில், அவர்தம் மரபில் படைப்புகளை வழங்கும் சிறந்த கவிஞர் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டிற்கான பாவேந்தர் பாரதிதாசன் விருது திரு. வாலாசா வல்லவன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 86 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

1.3.2. தமிழ்த் தென்றல் திரு.வி.க.விருது

தமிழுக்கு பன்முகத்தான் தொண்டாற்றி வரும் சிறப்பு வாய்ந்த தமிழ் இலக்கியப் படைப்பாளர் ஒருவருக்குத் 'தமிழ்த்தென்றல் திரு.வி.க.விருது' வழங்கப்பட்டு வருகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டிற்கான 'திரு.வி.க. விருது' நாமக்கல் திரு பொ.வேல்சாமி அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 43 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 6

1.3.3. திருவள்ளுவர் விருது

மானுடமறையாகிய திருக்குறளில் அறிவுறுத்தப்பட்டுள்ள அறநெறிகளைப் போற்றியும், திருவள்ளுவத்தின் பெருமையை உலகோர் அனைவருக்கும் உணர்த்தும் வகையிலும் பல்வேறு பணிகளில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு செயலாற்றி வரும் தமிழறிஞர் ஒருவருக்கு திருவள்ளுவர் திருநாள் அன்று திருவள்ளுவர் விருது வழங்கப்பெற்று வருகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருது இரணியன் நா.கு.பொன்னுசாமி அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 38 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

1.3.4. மகாகவி பாரதியார் விருது

பாட்டுக்கொரு புலவராம் மகாகவி பாரதியாரின் கவிதைகளையும், கட்டுரைகளையும், படைப்புகளையும் பொதுமக்கள் உணர்ந்து பயன்பெறும் வகையில் தொண்டாற்றும் சிறந்த தமிழ்ப் பெருமக்களுக்கு, மகாகவி பாரதியார் விருது அளிக்கப்பட்டு வருகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டிற்கான மகாகவி பாரதியார் விருது முனைவர் ஆ.இரா. வேங்கடாசலபதி அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 25 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

1.3.5. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது

முத்தமிழ்க் காவலர் நெறியில், தமிழ்த் தொண்டாற்றும் தமிழ் அறிஞர் ஒருவர்க்கு, ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவவை வழங்கப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டிற்கான முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது முனைவர் முகமது மேத்தா அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 21 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 6]

1.3.6. பேரறிஞர் அண்ணா விருது

அல்லும் பகலும் அயராது உழைத்து, அருந்தமிழ்நாட்டை உயர்த்தி வளர்த்த பெருமகனார் பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழ்ச் சமுதாயம் எத்திக்கிலும் வளர்ச்சி பெற்றுத் தழைத்தோங்க வேண்டும் என்று தம் வாழ்நாள் முழுவதும் கனவு கண்டவர் ஆவார். அவரது சீரிய சிந்தனைச் செயலாக்கத்தைத் தம் உள்ளத்தில் பதித்துக்கொண்டு, மக்கள் நலப் பணியில் மக்களோடு இணைந்து சமுதாய முன்னேற்றத்திற்குப் பாடுபட்டுவரும் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டிற்கான பேரறிஞர் அண்ணா விருது திரு. உபயதுல்லா அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 17 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

1.3.7. பெருந்தலைவர் காமராசர் விருது

பெருந்தலைவர் காமராசர் அடிச்சுவட்டில், அவர்தம் கொள்கை நெறியில், தமிழ்நாட்டு மக்களுக்காகச் சேவை புரிந்துவரும் ஒருவருக்கு, ஆண்டுதோறும், இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டிற்கான பெருந்தலைவர் காமராசர் விருது திரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 17 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

1.3.8. கபிலர் விருது

"குறிஞ்சிக்கோர் கபிலர்" எனப் புகழப்பட்ட சங்கத்தமிழ்க் கவிஞர் கபிலரின் பெயரால், பழந்தமிழர், தொன்மை, வரலாறு, நாகரிகம், பண்பாடு முதலியன புலப்படும் வகையிலும் தமிழுக்கு அணிசேர்க்கும் வகையிலும் மரபுச்செய்யுள்/கவிதைப் படைப்புகளைப் புனைந்து வழங்கும் தமிழறிஞருக்குக் கபிலர் விருது வழங்கப்படுகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டிற்கான கபிலர் விருது பாவலர் கருமலைத் தமிழாழன் (எ)

கி. நரேந்திரன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 10 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

1.3.9. உ.வே.சா. விருது

இன்று அச்சு வடிவில் நாம் பெற்று, படித்து இன்புறுகின்ற பல நூல்களைத் தம் கடின உழைப்பால், ஓலைச்சுவடிகளிலிருந்து திரட்டித் தந்தவர் தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள். சங்க இலக்கியங்களைத் தமிழ்த்தாயின் திருவடிகளுக்குச் சிலம்பாக அணிவித்து, உலகெங்கும் ஓலைச் சுவடிகளைத் திரட்டி அவை அச்சுப் பதிப்பாக வெளிவருவதற்கு அரும்பணியாற்றியவர். தமிழ்ப்பெருமைகளை விளங்கச் செய்தவர் தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்தம் நெறியில் கல்வெட்டுகள், அகழாய்வு, ஓலைச் சுவடிகள் எனக் கண்டறிந்து, ஆய்ந்து நூலாக்கம் செய்யும் ஆற்றல் மிக்க அறிஞருக்கு, ஆண்டுதோறும் உ.வே.சா. விருது வழங்கப்படுகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டிற்கான உ.வே.சா. விருது மரு. இரா. கலைக்கோவன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 10 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

1.3.10. கம்பர் விருது

'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்ற கூற்று நாம் அறிந்ததே. கம்பரை பற்றி திறனாய்வு செய்வோர், கம்பர் படைப்புகளை ஆய்வு செய்வோர் மற்றும் கவிச்சக்கரவர்த்தி கம்பரின் உயர் தனிச் செம்மொழி நடையில், காவியங்கள் படைத்து வரும் நற்றமிழ் அறிஞர் ஒருவர்க்கு, ஆண்டுதோறும் 'கம்பர் விருது' வழங்கப்படுகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டிற்கான கம்பர் விருது திருமதி பாரதி பாஸ்கர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 9 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

1.3.11. சொல்லின் செல்வர் விருது

நற்றமிழால் நாடெங்கும் தமிழ் நாகரிகத்தையும் பண்பாட்டையும் மக்கள் மனங்கவரும் வகையிலும் தமிழினப் பெருமையைப் பறைசாற்றும் வகையிலும்

2023 ஏப்ரல் 6]

சொற்பொழிவாற்றக்கூடிய ஆற்றலுடன் தன் நாவன்மையால் மக்களிடத்தில் சொற்பொழிவுகள், உரைவீச்சுகள் மூலம் தமிழைக் கொண்டு செல்லும் வகையில் உழைப்பினை ஈந்துவரும் ஒருவருக்கு 'சொல்லின் செல்வர் விருது' வழங்கப்படுகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டிற்கான சொல்லின் செல்வர் விருது திரு. சூர்யாசேவியர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 9 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

1.3.12. முதலமைச்சர் கணினித் தமிழ் விருது

உலகெலாம் நம் தாய்மொழியான தமிழ் மொழியைக் கணினியில் கருத்துமொழியாக ஆக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையுடன் கணினித் தொழில்நுட்பத்தில், தமிழ் வளர்ச்சிக்காக மிகச் சிறந்த மென்பொருளை உருவாக்கித் தருபவர்களுக்கு ஆர்வமூட்டும் வகையிலும், கண்டுபிடிப்புகளைப் பாராட்டும் வகையிலும் 'முதலமைச்சர் கணினித் தமிழ் விருது' வழங்கப்பட்டு வருகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கணினித் தமிழ் விருது முனைவர் வ. தனலட்சுமி அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 8 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

1.3.13. உமறுப்புலவர் விருது

தமிழ்க் காப்பியங்களில் சிறந்த காப்பியமான 'சீறாப்புராணத்தை' யாத்துள்ள உமறுப்புலவரின் காவியத் தமிழ்த் தொண்டைப் போற்றி அவர்தம் கொள்கை நெறி சார்ந்து, தமிழ் இலக்கியத்திற்குப் பங்களித்து வரும் தமிழறிஞருக்கு இவ்விருது வழங்கப்பெறுகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டிற்கான உமறுப்புலவர் விருது திரு. நா. மம்மது அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 8 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

1.3.14. ஜி.யு.போப் விருது

அயல்நாட்டு அறிஞரான ஜி.யு. போப் அவர்கள், தமிழ் மொழியைக் கற்று, திருக்குறளின் விழுமியக் கருத்தினால் ஈர்க்கப்பட்டு, அதனைத் தம் மொழியான ஆங்கில மொழியில் மொழி பெயர்த்தும், தமிழ் மொழியின்பால் தாம் கொண்டிருந்த தீராக் காதலையும் வெளிப்படுத்திய பெருமகனாவார். அவரது தமிழ்ப் பணியைச் சிறப்பிக்கும் வகையில், அயல்நாட்டு மொழிகளில் தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்க்கும் சிறந்த தமிழ் மொழிபெயர்ப்பாளருக்கு இவ்விருது வழங்கப்பெறுகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டிற்கான ஜி.யு.போப் விருது திரு. அ.சு. பன்னீர்செல்வன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 8 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

1.3.15. இளங்கோவடிகள் விருது

இந்தியாவின் இணையிலா தேசியக் காப்பியமாக போற்றப்படும் காப்பியம் சிலப்பதிகாரமாகும். தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்த்து வரும் ஐம்பெருங் காப்பியங்களுள் முதன்மையான சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகளின் நடையையொட்டி புதிய காப்பியங்களைப் படைக்கும் ஆற்றல் பெற்றவர்க்கு சிலப்பதிகாரத்தின் புகழை உலகெங்கும் பரவச் செய்கின்ற விதத்தில் உழைப்பைச் செலுத்தி வரும் அறிஞருக்கு இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டிற்கான இளங்கோவடிகள் விருது திரு. நெல்லைக் கண்ணன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 7 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

1.3.16. தமிழ்ச் செம்மல் விருது

தமிழ்நாட்டில் தனியாகவும், தமிழமைப்பு வைத்தும் 38 மாவட்டங்களில், தமிழுக்குப் பாடுபடும் தமிழ்ச் சான்றோர் பெருமக்களைச் சிறப்புச் செய்யும் வகையில், 'தமிழ்ச் செம்மல் விருது' ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டத்திற்கு ஒருவர் என்ற முறையில், 'தமிழ்ச் செம்மல்

2023 ஏப்ரல் 6]

விருது' பெறும் ஒவ்வொருவருக்கும் விருதுத் தொகையாக ரூபாய் இருபத்தைந்தாயிரமும், தகுதியுரையுடன் பொன்னாடையும் அணிவிக்கப்பட்டு சிறப்பு செய்யப்படுகிறது. 2021 ஆம் ஆண்டு வரை 241 தமிழ்ச் சான்றோர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

1.3.17. சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்ற பாரதியின் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில், பிறமொழிப் படைப்புகளைச் சிறந்த முறையில் தமிழாக்கம் செய்யும் மொழிபெயர்ப்பாளர்களுள் 10 பேரை ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்து, 'சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது' வழங்கப்படுகிறது. விருதாளருக்கு விருதுத்தொகையாக ரூ.2.00 இலட்சம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டுவரை 60 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

1.3.18. 'சிந்தனைச் சிற்பி' சிங்காரவேலர் விருது

சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் ஏழை எளிய தொழிலாளர்களுக்காகவும் பாடுபட்டு தன் படைப்புகளை நூலாக வகுத்தளித்து வாழ்ந்த சிங்காரவேலர் வழியில், தமிழில் அறிவியல் கருத்துகளை நூலாக எழுதுபவர்களிலும் சமுதாய முன்னேற்றத்திற்காகவும் சமத்துவக் கொள்கைக்காகவும் தொழிலாளர் நலனுக்காகவும் போராடுபவர்களிலும் சிறந்த வகையில் பாடுபடும் ஒருவருக்கு, இவ்விருது வழங்கப் பெறுகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டிற்கான சிங்காரவேலர் விருது கவிஞர் மதுக்கூர் இராமலிங்கம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 4 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

1.3.19. அயோத்திதாசப் பண்டிதர் விருது

சமத்துவம், பொதுவுடைமை, தமிழியல் ஆகியவற்றில் தனக்கெனத் தனி முத்திரை பதித்த தகைமையாளர் தமிழறிஞர் அயோத்திதாசப் பண்டிதர் பெயரில் அவர்தம் இலட்சிய நோக்கோடு செயலாற்றும் ஒருவருக்கு அயோத்திதாசப் பண்டிதர் விருது வழங்கப்படுகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக

ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டிற்கான அயோத்திதாசப் பண்டிதர் விருது திரு. ஞான அலாய்சியஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 3 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

1.3.20. மறைமலையடிகளார் விருது

தனித் தமிழில் படைப்புகள் அருகிவரும் நிலையில், தனித் தமிழில் படைப்புகளை உருவாக்கும் படைப்பாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில், தமிழறிஞர் ஒருவருக்கு ஆண்டுதோறும் மறைமலையடிகளார் விருது வழங்கப்படுகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டிற்கான மறைமலையடிகளார் விருது திரு. சுகி. சிவம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 3 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

1.3.21. அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது

சமரச நெறிகளால் ஆன்மிகத் தொண்டாற்றும் ஒருவருக்கு ஆண்டுதோறும் ‘அருட்பெருஞ்சோதி வள்ளலார்’ விருது வழங்கப்படுகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டிற்கான அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது முனைவர் இரா. சஞ்சீவிராயர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 2 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

1.3.22. தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் விருது

தமிழ்மொழியில் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் போற்றியும், பிறமொழிக் கலப்பின்றி எழுதியும் வெளியிடப்பட்டு வரும் நாளிதழ், வார இதழ் மற்றும் திங்களிதழ் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் ஓர் இதழைத் தெரிவு செய்து ‘தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் நாளிதழ் விருது’, ‘தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் வாரஇதழ் விருது’, ‘தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் திங்களிதழ் விருது’ என்ற பெயரில் சிற்றிதழ்ப் பரிசுகள் வழங்கப்படும். விருதாளர்களுக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், தகுதியுரை,

பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டிற்கான சி.பா. ஆதித்தனார் திங்களிதழ் விருது 'உயிர்மை' திங்களிதழுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 4 இதழாசியர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

1.3.23. இலக்கிய மாமணி விருது

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97 ஆவது பிறந்தநாளை முன்னிட்டுத் தமிழ் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்திச் சிறப்பிக்கும் வகையில் 'இலக்கிய மாமணி விருது' உருவாக்கப்பட்டு, ஆண்டுதோறும் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் எழுத்தாளர்கள் மூன்று பேருக்கு இந்த விருது வழங்கப்படும் என அறிவித்தார்கள். இவ்விருதாளர்களுக்கு விருதுத் தொகையாக ரூ.5.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப் பதக்கம், தகுதியுரையும் பொன்னாடையும் வழங்கப்படுகிறது. 2021 ஆம் ஆண்டிற்குரிய இலக்கிய மாமணி விருதுகள் 18.07.2022 அன்று நடைபெற்ற தமிழ்நாடு திருநாள் விழாவில் திரு. கு. சின்னப்ப பாரதி, பேராசிரியர் கலியபெருமாள், திரு. கோணங்கி ஆகியோருக்கு வழங்கப்பெற்றன.

மகளிரைப் போற்றும் தனிநிலை விருதுகள்

1.3.24. அம்மா இலக்கிய விருது

பெண்ணிய எழுச்சியை உருவாக்கும் வகையில், பல தளங்களில் செயற்பட்டுக் கருத்தாழமிக்க படைப்புகளை அளித்துவரும், பெண் படைப்பாளி ஒருவருக்கு, 'அம்மா இலக்கிய விருது' வழங்கப்பட்டு வருகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டிற்கான அம்மா இலக்கிய விருது முனைவர் மு. சற்குணவதி அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 6 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

1.3.25. காரைக்கால் அம்மையார் விருது

காரைக்கால் அம்மையாரின் படைப்பிலக்கிய நெறிகளில் தமிழ்த் தொண்டாற்றி வரும் மகளிர் ஒருவருக்கு 'காரைக்கால் அம்மையார்' விருது ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டிற்கான காரைக்கால் அம்மையார் விருது முனைவர் இரா.திலகவதி சண்முகசுந்தரம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 2 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

இலக்கிய அமைப்புகளைப் போற்றும் தனி விருது

1.3.26. தமிழ்த்தாய் விருது

தமிழ்மொழியின் தொன்மையையும் பண்பாட்டுப் பார்வைகளையும் நாகரிக நெறிகளையும் பரப்பும் வண்ணம் தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும் தமிழமைப்புகளை நிறுவி தமிழ்த்தொண்டாற்றும் சீரிய அமைப்புக்கு தமிழ்த்தாய் விருது வழங்கப்படுகிறது. விருதுபெறும் தமிழ் அமைப்புக்கு விருதுத் தொகையாக ரூ.5 இலட்சம் மற்றும் தகுதியுரையுடன் கூடிய பாராட்டுக் கேடயமும் வழங்கப்பட்டு வருகிறது. 2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்த்தாய் விருது மலேசியாவிலுள்ள மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கு வழங்கப்பட்டது. இதுவரை 10 அமைப்புகள் இவ்விருதினைப் பெற்றுள்ளன.

1.4. தமிழ் வளர்ச்சித் துறையால் செயற்படுத்தப்படும் திட்டங்கள்

1.4.1. கனவு இல்லம்

இந்தியப் பெருநாட்டில் வேறு எந்த மாநிலத்திலும் உள்ள எழுத்தாளர்களுக்கு இதுவரையிலும் வழங்கப்படாத சிறப்பினைத் தமிழ் உலகத்திற்கு வழங்கும் பெருமிதமான திட்டம்தான் கனவு இல்லத் திட்டமாகும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசால் 'கனவு இல்லத் திட்டம்' அறிவிக்கப்பட்டது.

இவ்வறிவிப்பின்படி, சாகித்திய அகாடமி விருது, ஞானபீட விருது, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தொல்காப்பியர் விருது, கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது மற்றும் உலக அளவிலான நோபல் பரிசு (தமிழ் இலக்கியத்திற்கு)

2023 ஏப்ரல் 6]

ஆகிய விருதுகளில் ஏதேனும் ஒன்றைப் பெற்ற, பெறும் விருதாளர்களுக்குத் தமிழ்நாட்டிற்குள் வீட்டு வசதி வாரியத்தில் உயர்வருவாய்க் குடியிருப்பு வழங்கப்படும். ஒவ்வொரு நிதியாண்டிலும் அதிக அளவாக 10 விருதாளர்கள் அரசால் தெரிவு செய்யப்படுவர். அதன்படி 2021-2022 மற்றும் 2022-2023 ஆகிய நிதியாண்டுகளுக்கு 20 விருதாளர்களைப் பயனாளிகளாகத் தேர்வு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

1.4.2. தீராக்காதல் திருக்குறள்

தீராக் காதல் திருக்குறள் திட்டத்தில் திருக்குறளின் கருத்துகளை விளக்கும் வகையில் குறளோவியம் ஓவியப் போட்டி நடத்தப்பட்டு, அதில் சிறப்பாக வரையப்பட்ட ஓவியங்கள் நாட்காட்டியாக அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. மேலும், திருக்குறளில் கூறப்பட்டுள்ள வாழ்வியல் நெறிகளைத் திருவள்ளுவரே நேரில் தோன்றி மாணவனுக்கு எடுத்தியம்பும் வகையில் 'குறள் இனிது' என்ற நாட்டிய நாடகம் 21-12-2022 அன்று சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் நடத்தப்பட்டது.

1.4.3. தமிழ்ப் பரப்புரைக் கழகம்

அயல்நாடு மற்றும் வெளிமாநிலங்களில் வாழும் தமிழர்களுக்கு தமிழ்மொழிக் கல்வியையும் தமிழர் பண்பாட்டையும் வழங்குவதற்கான பல திட்டங்கள் தமிழ்ப் பரப்புரைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்க் கல்வி, 'அகரம் முதல் சிகரம் வரை' என 5 நிலைகளில் (1-12 வகுப்பு) வழங்கப்படவுள்ளது. இணையவழியில் தமிழ் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. பண் முறையில் இசைக்கோர்ப்புடன் தேவாரம், திருவாசகப் பாடல்கள், அவை பாடப்பெற்ற தலங்களுடன் காணொலிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. தன்னார்வலர்களுக்கான தமிழாசிரியர் பட்டயப் பயிற்சி என்ற கல்வித் திட்டத்தை வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ் கற்பிக்க, அயலக நாடுகளுக்கு நேரடி ஆசிரியர் அனுப்பும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

1.4.4. சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு

தனித்துவம் மிக்க நம் தமிழ்மொழியில் சிறந்த நூல்கள் வெளிவருவதை ஊக்கப்படுத்தும் வகையில் 33 வகைப்பாடுகளில்

வரப்பெற்ற சிறந்த படைப்புகளை அளித்த நூலாசிரியர்களுக்கும் வெளியிடும் பதிப்பகத்தாரர்களுக்கும் ஆண்டுதோறும் காசோலை/ சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

பேராசிரியர்கள், தமிழறிஞர்களைக் கொண்டு மதிப்பீடு செய்து ஒவ்வொரு வகைப்பாட்டிலும் ஒரு நூலைத் தெரிவு செய்து அந்நூலை எழுதிய நூலாசிரியர்க்கு ரூ.30,000/- பரிசுத் தொகையுடன் சான்றிதழும், அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்திற்கு ரூ.10,000/- பரிசுத் தொகையுடன் சான்றிதழும் வழங்கிச் சிறப்பிக்கப்படுகின்றன.

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுக்கான பரிசுகள் 29-04-2022 ஆம் நாளன்று நடைபெற்ற தமிழ்க் கவிஞர் நாளிலும், 2019 ஆம் ஆண்டுக்கான பரிசுகள் 21-02-2023 ஆம் நாளன்று நடைபெற்ற உலகத் தாய்மொழி நாள் விழாவிலும் வழங்கப்பட்டுள்ளன.

1.4.5. தமிழ் வளர்ச்சிக்கான நூல்வெளியிட நிதியுதவித் திட்டம் (சிறந்த நூல்கள் / அரிய நூல்கள்/ மொழிபெயர்ப்பு நூல்கள்)

சிறந்த நூல்களை வெளியிடுவதற்கும்/அரிய நூல்களை மறுபதிப்பாக அச்சிடுவதற்கும்/பிறமொழி நூல்களை மொழிபெயர்த்து வெளியிடுவதற்கும்/ஆய்வு நூல்களுக்கும் என நூல்களின் சிறப்புத் தன்மையைக் கருத்திற் கொண்டு சிறந்த நூல்களை வெளியிடுவதற்கான நிதியுதவித் திட்டம் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக 1966 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படுகிறது.

எழுதுபொருள் அச்சுத் துறையால் மதிப்பீடு செய்து தெரிவிக்கப்பெறும் தொகை அல்லது உயர் அளவாக ரூ.50,000/- வரை என மேற்குறித்த நூல்களை அச்சிட்டு வெளியிட நிதியுதவி எழுத்தாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

1.4.6. குறள் பரிசு

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2000 ஆம் ஆண்டு முதல் 1330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்யும் அனைத்து மாணவர்களுக்கும் குறள் பரிசு வழங்கும் திட்டம் தோற்றுவிக்கப்பட்டது.

TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 6]

இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் 1,330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்யும் மாணவ/மாணவியர்கள் ஒருவருக்கு ரூ.10,000/- வீதம் 70 நபர்களுக்கு குறள் பரிசுத் தொகையாகவும் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வந்தது.

2021–2022 ஆம் ஆண்டு முதல் ஓராண்டுக்கு 70 நபர்கள் என்ற உச்சவரம்பு நீக்கப்பட்டும், 2022-2023 ஆம் ஆண்டு முதல் 1330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்யும் அனைத்து மாணவ/மாணவியர்களுக்கும் பரிசுத்தொகை ரூ.10,000/-த்திலிருந்து ரூ.15,000/- ஆக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

1.4.7. பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கு கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள்

மாணவப் பருவத்திலேயே தமிழில் பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் கவிதை எழுதும் திறனை வளர்க்கவும் மற்றும் தமிழ்ப்பற்றை மேம்படுத்தும் நோக்கிலும் 2003-2004 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்பெற்று, பரிசுத்தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை விவரம்:

வகைப்பாடு	பரிசு விவரங்கள்	தொகை (ரூபாயில்)
மாவட்ட அளவில் பள்ளி/ கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை	முதற் பரிசு	10,000
	இரண்டாம் பரிசு	7,000
	மூன்றாம் பரிசு	5,000
மாநில அளவில் பள்ளி/ கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை	முதற் பரிசு	15,000
	இரண்டாம் பரிசு	12,000
	மூன்றாம் பரிசு	10,000

[2023 ஏப்ரல் 6

1.4.8. தலைவர்களின் பிறந்த நாளில் ஆறாம் வகுப்பு முதல் கல்லூரி மாணவர்கள் வரை மாவட்ட அளவில் பேச்சுப் போட்டி நடத்துதல்

நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களான மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கருத்துகளையும் சமூகச் சிந்தனைகளையும் இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையில் ஆண்டுதோறும் அவர்களது பிறந்த நாளில் மாவட்ட அளவில் கல்லூரி, பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடத்தி, பரிசும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

பேச்சுப் போட்டியில் அரசுப் பள்ளி மாணவர்களுக்காக தனியே சிறப்புப் பரிசு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கென தொடர் செலவினமாக ரூ.81,60,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2022-2023 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் பிறந்த நாளில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுத்தொகைகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பெற்றன.

பேச்சுப் போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை விவரம்:

வகைப்பாடு	பரிசு விவரங்கள்	தொகை (ரூபாயில்)
மாவட்ட அளவில் பள்ளி/ கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை	முதற் பரிசு	5,000
	இரண்டாம் பரிசு	3,000
	மூன்றாம் பரிசு	2,000
அரசுப் பள்ளி மாணவர்கள் 2 பேருக்குச் சிறப்புப் பரிசுத் தொகை	2X2,000=ரூ.4,000	

1.4.9. பதினோராம் வகுப்புப் பள்ளி மாணவர்களுக்குத் திறனறி தேர்வு

பள்ளி மாணவ, மாணவியர்கள் அறிவியல், கணிதம் சார்ந்த ஒலிம்பியாட் (Olympiad) தேர்வுகளுக்கு பெருமளவில் தயாராகி கலந்து கொள்வதைப் போன்று தமிழ்மொழி இலக்கியத் திறனை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் தமிழில் 'திறனறித் தேர்வு' நடத்தப்பெறுகிறது.

ஆண்டுதோறும் 1,500 மாணவர்கள் தெரிவு செய்யப்பெற்று அவர்களுக்கு மாதம் ரூ.1,500/- வீதம் இருபத்திரண்டு திங்கள்களுக்கு வழங்கப்பெறும் என்ற அறிவிப்பிற்கிணங்க, அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் முதன்முறையாக 15-10-2022 அன்று திறனறி தேர்வு நடத்தப்பெற்றது. இதனைத் தொடர்ந்து தேர்வு முடிவுகள் 01-12-2022 அன்று www.dge.tn.gov.in என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது. ஊக்கத்தொகை பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்ட 1,500 மாணாக்கர்களின் விவரப் பட்டியலும் மேற்கண்ட இணையதளத்திலேயே வெளியிடப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட 1,500 பள்ளி மாணவர்களுக்கு ரூ.2,47,50,000/- வழங்குவதற்காக பள்ளிக் கல்வித் துறைக்கு, தமிழ் வளர்ச்சித் துறையால் இத்தொகை வழங்கப்பெற்றது.

1.4.10. பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கு கையெழுத்துப் போட்டி

பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுள் தமிழ் மொழியை அழகாக எழுதுபவர்களை ஊக்கப்படுத்தும் வண்ணம் கையெழுத்துப் போட்டிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படவுள்ளது.

இதன்வழியாக பிற மாணவர்களுக்கும் தமிழில் அழகாக எழுதும் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டுதோறும் பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கு தமிழ் கையெழுத்துப் போட்டிகள் நடத்தி பரிசும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெறும். இப்போட்டிகளை நடத்துவதற்காக பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு ரூ.8,36,000/-மும், கல்லூரிக் கல்வி இயக்ககத்திற்கு ரூ.8,36,000/-மும், என மொத்தம் ரூ.16.72 இலட்சம் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக வழங்கப்பட்டுள்ளது.

1.4.11. மாணவர் தமிழ் மன்றங்கள் அமைத்தல்

தமிழ்நாட்டில் இயங்கிவரும் அரசு கலை/அறிவியல் கல்லூரிகள், பொறியியல்/ மருத்துவக் கல்லூரிகளில் "மாணவர் தமிழ் மன்றங்கள்" தோற்றுவித்தல்.

மாணவர்களின் தமிழ் ஆர்வத்தை அதிகரிக்க, தெரிவு செய்யப்பட்ட 100 கல்லூரிகளில் தமிழ் மன்றங்கள் அமைத்து மாணவர்களிடையே தமிழ் சார்ந்த போட்டிகள் நடத்திட ஒரு கல்லூரிக்கு ரூ.5 இலட்சம் என 100 கல்லூரிகளுக்கு வைப்புத் தொகை ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் கிடைக்கும் வட்டித்தொகையை வைத்து அடுத்த ஆண்டு முதல் மாணவர் மன்றங்களில் தமிழ் சார்ந்த போட்டிகள் ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்படும். நடப்பு ஆண்டுக்கான செலவினத் தொகை ரூ.36 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வைப்புத் தொகை மற்றும் ஒதுக்கீட்டுத் தொகை என மொத்தம் ரூபாய் ஐந்து கோடியே முப்பத்தாறு இலட்சத்தினை கல்லூரிக் கல்வி (76 கல்லூரிகள்) இயக்ககத்திற்கு ரூ.4,07,36,000/-, தொழில்நுட்பக் கல்வி (12 கல்லூரிகள்) இயக்ககத்திற்கு ரூ.64,32,000/-, பொறியியல் கல்லூரி (12 கல்லூரிகள்) இயக்ககத்திற்கு ரூ.64,32,000/- என வழங்கப்பட்டுள்ளது.

1.4.12. அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் தமிழ் மன்றத்தை மேம்படுத்துதல்

தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 6,218 அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ் மன்றத்தை மேம்படுத்தி, தமிழ் மொழியின் தொன்மையை அறியவும் இலக்கண இலக்கியங்கள்மீது பற்றும் ஆர்வமும் ஏற்படும் வகையிலும் தமிழுக்கு தொண்டாற்றிய தமிழறிஞர்களைப் பற்றி அறிந்துகொள்ளும் வகையிலும் ஆண்டுக்கு மூன்று 'தமிழ்க் கூடல்' நடத்திட, ஆண்டுதோறும் ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.9,000/- வீதம் மொத்தம் ரூ.5,59,62,000/- தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு வழங்கப்பெற்றது.

1.4.13. இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை

தமிழ் வளர்ச்சித் துறையால் நடத்தப்பெற்ற பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற கல்லூரி மாணவர்கள் 200 பேருக்கு

2023 ஏப்ரல் 6]

பல்துறை வல்லுநர்களைக் கொண்டு நுட்பமான பயிற்சி பட்டறை ஒரு வார காலம் நடத்தப்பெறுகிறது.

இப்பயிற்சிப் பட்டறையில் முப்பத்தாறு தலைப்புகளில் நுண்மான் நுழைபுலமிக்க தமிழ் சான்றோர்களைக் கொண்டு பயிற்சிப் பட்டறை வாயிலாக இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கி பட்டைத்தீட்டிய வைரங்களாக மிளிரச்செய்ய பெறுகிறார்கள்.

2022-2023 ஆம் ஆண்டிற்கு 15-03-2023 முதல் 21-03-2023 வரை ஏழு நாள்கள் மதுரை மூதூரில் உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் இலக்கியப் பயிற்சிப் பட்டறை சீரும் சிறப்புமாக நடத்தப்பட்டது.

மாணவர்களுக்காக தமிழ் வளர்ச்சித் துறை நடத்தும் இளந்தமிழர் இலக்கியர் பயிற்சிப் பட்டறையில் ஆழ்ந்த இலக்கியப் பொருண்மைகளை நுட்பமான முறையில் வினாக்களை எழுப்பி உடனுக்குடன் விடைகளை பெறுகின்ற இலக்கிய வினாடி-வினா நிகழ்ச்சி நடத்தப்பெறுகிறது. இந்நிகழ்ச்சியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு முதற் பரிசாக ரூ.5,000/- வீதம் மூன்று பேருக்கும், இரண்டாம் பரிசாக ரூ.3,000/- வீதம் மூன்று பேருக்கும், மூன்றாம் பரிசாக ரூ.2,000/- வீதம் மூன்று பேருக்கும் வழங்கப்பெறுகின்றன.

1.4.14. இலக்கியக் கூட்டங்கள் நடத்துதல்

புகழ் பெற்ற தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரின் பிறந்த நாளில் அவர்களின் தமிழ் இலக்கியப் பணி, தமிழ்த் தொண்டு, தமிழ்மொழிக்கான பங்களிப்பு ஆகியவற்றை நினைவுகூரும் வகையில், ஒரு திங்களுக்கு ஓர் இலக்கியக் கூட்டம் என்ற வகையில் உள்ளூர் இலக்கிய அமைப்புகள் மூலம், ஆண்டுதோறும் சுழற்சி முறையில் 12 இலக்கியக் கூட்டங்களும், இதனையொட்டி பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டிகள் நடத்திட ரூ.15,00,000/- நிதி ஒப்பளிப்பும் செய்யப்படுகிறது. இதற்கென ஒரு மாவட்டத்திற்கு ரூ.1,25,000/- ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

1.4.15. நூல்கள் நாட்டுடைமை

தமிழறிஞர்களின் படைப்புகள் எளிய முறையிலும் விலை குறைவாகவும் உலக மக்கள் அனைவரிடமும் சென்று சேர வேண்டும் என்ற உயரிய நோக்கத்திலும், தமிழ்நாடு அரசால்

[2023 ஏப்ரல் 6

தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில் இதுவரை 173 அறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல் பின்வரும் அறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன:-

வ. எண்	பெயர்	தொகை ரூ.	நாட்டுடைமை செய்யப்பட்ட நாள்
1.	சிலம்பொலி சு. செல்லப்பன்	15 இலட்சம்	08-12-2021
2.	முனைவர் தொ. பரமசிவன்	15 இலட்சம்	
3.	புலவர் இளங்குமரனார்	15 இலட்சம்	
4.	திரு. முருகேச பாகவதர்	10 இலட்சம்	
5.	திரு. சங்கரவள்ளி நாயகம்	10 இலட்சம்	
6.	புலவர் செ. இராசு	15 இலட்சம்	
7.	பேராசிரியர் க. அன்பழகன்	25 இலட்சம்	19-12-2021
8.	முனைவர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்	25 இலட்சம்	26-12-2021
9.	திரு. நெல்லை செ.திவான்	15 இலட்சம்	21-12-2022
10.	விடுதலை இராஜேந்திரன்	15 இலட்சம்	
11.	திரு. நா. மம்மது	15 இலட்சம்	
12.	திரு. நெல்லை கண்ணன்	15 இலட்சம்	
13.	திரு. கந்தர்வன் என்கிற நாகலிங்கம்	10 இலட்சம்	
14.	திரு. சோமலெ	10 இலட்சம்	
15.	முனைவர் ந. இராசையா	10 இலட்சம்	
16.	தஞ்சை திரு. பிரகாஷ்	10 இலட்சம்	

2023 ஏப்ரல் 6]

1.4.16. தமிழுக்குத் தொண்டு செய்தோர்க்கு உதவித்தொகை

1.4.16.1. அகவை முதிர்ந்த தமிழறிஞர்/மரபுரிமையர்களுக்கு உதவித்தொகை

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் 1978 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. முதுமைக் காலத்தில் வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு திங்கள்தோறும் உதவித்தொகை வழங்கப்பெறுகிறது. இந்த உதவித்தொகை அவர்களின் வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது. உதவித்தொகை பெறும் தமிழறிஞரின் மறைவுக்குப்பின், அவரின் மரபுரிமையருக்கு வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது திங்கள்தோறும் உதவித்தொகை ரூ.3,500/- மற்றும் மருத்துவப்படி ரூ.500/- வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 1,234 அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

திங்கள்தோறும் உதவித்தொகை பெற்று வந்த அகவை முதிர்ந்த தமிழறிஞரின் மறைவுக்குப்பின் மரபுரிமையருக்கு ரூ.2,500/- மற்றும் மருத்துவப்படி ரூபாய் 500/- வழங்கப்படுகிறது.

இதுவரை 70 அகவை முதிர்ந்த தமிழறிஞரின் மரபுரிமையர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

1.4.16.2. எல்லைக் காவலர்கள்/மரபுரிமையர்களுக்கு உதவித்தொகை

இந்தியா விடுதலை பெற்ற பின்பு 1956 ஆம் ஆண்டு மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. அவ்வகையில் சென்னை மாகாணம் தனி மாநிலமாக (தமிழ்நாடு) 01-11-1956 ஆம் நாள் உருவானது. தமிழ்நாட்டில் தமிழர்கள் அதிகம் வாழும் சில பகுதிகள் (கன்னியாகுமரி, திருத்தணி, பீர்மேடு, கூடலூர், தேவிகுளம்) அண்டை மாநிலங்களுடன் சேர்க்கப்பட்டபோது மீண்டும் அப்பகுதிகளைத் தமிழ்நாட்டோடு சேர்க்க பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன.

அவ்வாறான எல்லைப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்ற தியாகிகளுக்கு தமிழ்நாடு அரசு, அவர்களின் வாழ்நாள் முழுவதும் உதவித்தொகையாக திங்கள்தோறும் ரூ.5,500/- மற்றும்

மருத்துவப்படி ரூ.500/- வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை எல்லைக் காவலர்கள் 404 பேருக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

எல்லைப் போராட்டத்தில் பங்கேற்று உதவித்தொகை பெற்று வந்த எல்லைக் காவலரின் மறைவிற்குப்பின் அவருடைய மரபுரிமையருக்குத் திங்கள்தோறும் வாழ்நாள் முழுவதும் உதவித்தொகையாக ரூ.3,000/- மற்றும் மருத்துவப்படி ரூ.500/- வழங்கப்படுகிறது.

இதுவரை எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்கள் 267 பேருக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

1.4.16.3. தமிழறிஞர்/மரபுரிமையர்களுக்கு உதவித்தொகை

தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், தமிழ், தமிழ்ப் பண்பாடு, மொழி ஆகியவற்றைப் பாதுகாக்க தொண்டு செய்தவர்களுக்கு அவர்களின் வாழ்நாள் முழுவதும் உதவித்தொகையாக திங்கள்தோறும் ரூ.4,500/- மற்றும் மருத்துவப் படி ரூ.500/- வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 1,105 தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

திங்கள்தோறும் உதவித்தொகை பெற்று வந்த தமிழறிஞர்கள் மறைவுக்குப்பின், அவர்களின் மரபுரிமையர்க்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது. அவ்வகையில் திங்கள்தோறும் உதவித்தொகையாக ரூ.2,500/- மற்றும் மருத்துவப் படி ரூ.500/- வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை தமிழறிஞர்களின் மரபுரிமையர்கள் 999 பேருக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

1.4.16.4. தமிழறிஞர்கள்/எல்லைக் காவலர்களுக்கு ஈமச் சடங்குத் தொகை

தமிழறிஞர்கள்/எல்லைக் காவலர்கள் இறப்பின்போது ஏற்படும் ஈமச்சடங்கு செலவுக்காக அவர்களின் மரபுரிமையரிடம் ஈமச்சடங்குத் தொகையாக ரூ.5000/- வழங்கப்படுகிறது. 2021-2022 ஆம் ஆண்டு வரை 41 பேருக்கும் 2022-2023 ஆம் ஆண்டில் புதிதாக 28 பேர் என மொத்தம் 69 பேருக்கு ஈமச்சடங்குத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 6]

1.5. தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக நிதியுதவி வழங்கப்பெறும் திட்டங்கள்

1.5.1. சங்க இலக்கிய நூல்களை சந்தி பிரித்து, எளிமைப் பதிப்பாக வெளியிடுதல் மற்றும் தமிழ்ச் செவ்வியல் 41 இலக்கிய நூல்களை உரையுடன் வெளியிடுதல்

சங்க இலக்கிய நூல்களை சந்தி பிரித்து, எளிமை பதிப்பாக வெளியிடுதல் மற்றும் தமிழ்ச் செவ்வியல் 41 இலக்கிய நூல்களை உரையுடன் வெளியிடுதல் ஆகிய இரண்டையும் ஒருங்கிணைத்து எளிய உரைகளுடனான தொகுப்பு நூலாக உருவாக்கவும், இதற்குரிய வல்லுநர் குழுச் செலவினப் பணிக்காகவும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திற்கு 2021-2022 ஆம் ஆண்டில் தொடராச் செலவினமாக ரூ.10,00,000/- வழங்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக பத்துப்பாட்டு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இவ்வாறு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் உருவாக்கப்பெறும் சங்க இலக்கியத் தொகுப்பு நூல்களை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வாயிலாக அச்சிட்டு, தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் கூட்டு வெளியீடாக வெளியிட அனுமதி அளித்து, இப்பணிக்காக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு 2021-2022 ஆம் ஆண்டு முதல் தொடர் செலவினமாக ரூ.10,00,000/- நிதி வழங்கப்படுகிறது.

1.5.2. தந்தை பெரியாரின் சிந்தனைகள் – தொகுப்பு நூல் நிதியுதவி

தந்தை பெரியாரின் சிந்தனைகள் அடங்கிய தொகுப்பு, தமிழ் மற்றும் 21 இந்திய, உலக மொழிகளில் அச்சு நூல்களாகவும் மின்னூல் பதிப்புகளாகவும் ரூபாய் ஐந்து கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் வாயிலாக வெளியிட நிருவாக அனுமதி அளித்தும், 2022-2023 ஆம் நிதியாண்டிற்கு ரூ.29,05,000/- ஒப்பளிப்பு செய்யப்பட்டும் தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன.

1.5.3. அண்ணா பல்கலைக்கழகத்தின் பொறியியல் தொழில்நுட்பத் தமிழ் வளர்ச்சி மையத்தில் பயிலரங்கம்

அண்ணா பல்கலைக்கழகத்தின் பொறியியல் தொழில்நுட்பத் தமிழ் வளர்ச்சி மையத்தில் பயிலரங்கம் நடத்திடவும், மண்டல

அளவிலும் மாநில அளவிலும், தமிழில் பொறியியல், தொழில்நுட்பப் போட்டிகளையும் மற்றும் அறிவியல் போட்டிகளையும் நடத்திட ரூ.16 இலட்சம் வழங்கி ஆணையிடப்பட்டது. முதற்கட்டமாக பயிலரங்கம் நடத்திட ரூபாய் ஆறு இலட்சம் அண்ணா பல்கலைக்கழகப் பொறியியல் தொழில்நுட்பத் தமிழ் வளர்ச்சி மைய இயக்குநருக்கு வழங்கப்பட்டது.

1.6. நல்கைகள்

1.6.1. தமிழ்நாட்டில் வழங்கப்படும் நல்கைகள்

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம், சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் ஆகிய நிறுவனங்கள் மேற்கொண்டு வரும் தமிழ் பணிகளில் தொய்வு ஏற்படாமல் தொடர்ந்து சீரிய முறையில் செயல்படவும், அவற்றில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊதியம், பிற திட்ட பணிகளுக்காகவும் ஆண்டுதோறும் நல்கைகள் வழங்கப் பெறுகின்றன.

1.6.2. பிற மாநில பல்கலைக்கழகங்களில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குதல்

இந்தியாவிலுள்ள பிற மாநில பல்கலைக்கழகங்களில் தமிழ் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் ஆந்திர மாநிலத்திலுள்ள குப்பம் திராவிடப் பல்கலைக்கழகம், அஸ்ஸாம் மாநிலத்திலுள்ள குவகாத்தி பல்கலைக்கழகம், உத்தரப்பிரதேச மாநிலத்திலுள்ள வாரணாசி இந்து பல்கலைக்கழகம் ஆகியவற்றிற்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தில் 2021-2022 ஆம் ஆண்டில் தமிழ் பயின்ற மாணவர்களுக்கு 2023 ஆம் ஆண்டில் கல்வி உதவித்தொகையாக ரூ.3,27,900/- வழங்கப்பட்டுள்ளது.

1.6.3. பிற மாநில பல்கலைக்கழகங்களில் பேராசிரியர் பணியிடங்களுக்கு நிதியுதவி வழங்குதல்

தமிழ்நாடு அரசின் நல்கையால் பிற மாநில பல்கலைக்கழகங்களில் பேராசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் குப்பம் திராவிடப்

பல்கலைக்கழகத்தில் 2008 ஆம் ஆண்டு ஒரு பேராசிரியர், ஒரு இணைப் பேராசிரியர், இரண்டு உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு நல்கை வழங்கப்பட்டு வருகிறது. குவகாத்தி பல்கலைக்கழகம், வாரணாசி இந்து பல்கலைக்கழகம் ஆகியவற்றில் இயங்கிவரும் தென்னிந்திய மொழிகள் துறைகளில், முறையே ஓர் உதவிப் பேராசிரியர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு, அவற்றிற்கு 2019-2020 ஆம் ஆண்டில் முறையே ரூ.1,42,488/- (குவகாத்தி), ரூ.1,55,360/- (வாரணாசி) நல்கையாக வழங்கப்பட்டுள்ளது.

1.6.4. குவகாத்தி பல்கலைக்கழக தமிழ்த் துறைக்கு கணினி மற்றும் நூலகம் அமைத்திட நிதியுதவி

தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் குவகாத்தி பல்கலைக்கழக தமிழ்த் துறையில் ரூ.2.90 இலட்சம் செலவில் தமிழ்க் கணினியும், தமிழ் நூல்கள் வைக்க நிலைப் பேழையும் வழங்கப்பட்டு, தமிழ் நூலகமும் அமைக்கப்பட்டு, செயற்பட்டு வருகிறது.

1.6.5. வாரணாசி-பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் மொழி ஆய்வுக் கூடம்

தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்டிராதவர்கள் எளிதாகவும் விரைவாகவும் தமிழ் கற்பிக்கும் வகையில் 2019-2020 ஆம் ஆண்டில் வாரணாசி பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் மொழி ஆய்வுக்கூடம் தொடங்குவதற்கு ரூ.8,00,000/- வழங்கப்பட்டு, மொழி ஆய்வுக்கூடம் செயற்பட்டு வருகிறது.

1.6.6. பிற மாநிலங்களில் தமிழ் அமைப்புகள்/சங்கங்களுக்கு நிதியுதவி வழங்குதல்

இந்தியாவின் பிற மாநிலங்களில் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்கள் தமிழ்ப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் நோக்கில் அம்மாநிலங்களில் தமிழ்ப் பண்பாட்டை பரப்பிடும் வகையிலும் தமிழ் அமைப்பு/சங்கங்கள் நிறுவி செயற்படுத்தி வருகின்றனர். அவர்களின் தமிழ் உணர்வை ஊக்கப்படுத்தும் பொருட்டு, கோரிக்கையின் அடிப்படையில், தமிழ்நாடு அரசால் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம், பெங்களூரு தமிழ்ச் சங்கம், நவி மும்பைத் தமிழ்ச் சங்கம், புவனேஸ்வர்

[2023 ஏப்ரல் 6

தமிழ்ச் சங்கம், புதுதில்லி தமிழ்ச் சங்கம் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டுள்ளன.

1.6.7. பிற மாநிலங்கள்/அயல்நாட்டு பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கை நிறுவுதல்

பிற மாநிலங்கள், அயல்நாட்டு பல்கலைக்கழகங்களில் தமிழ்நாடு அரசால் தமிழ் இருக்கை அமைத்து தமிழை பாரெங்கும் பரப்பிடும் வகையில் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ் இருக்கை அமைப்பதன்மூலம் தமிழ் இலக்கியம், இலக்கணம், பண்பாடு போன்றவை தொடர்பான ஆய்வுகள் மேம்படும். அங்குள்ள நூலகங்களிலும் ஆவணக் காப்பகங்களிலும் உள்ள தமிழ் தொடர்பான நூல்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன், அரிய நூல்களைப் பதிப்பிக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

ஜெர்மனியிலுள்ள கொலோன் பல்கலைக்கழகத்தில் இந்தியவியல், தமிழியல் துறை 1963 இல் தொடங்கப்பட்டது. நிதிப் பற்றாக்குறையால் செப்டம்பர் 2020-ல் தமிழ்த் துறையை மூடுவதாக பல்கலைக்கழக நிருவாகம் அறிவித்தது. தற்போது தமிழ்த் துறை தொடர்ந்து தொய்வின்றிச் செயற்பட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.1.25 கோடி நிதியுதவி வழங்கப்படுமென 07-07-2021 ஆம் நாளன்று அறிவிக்கப்பட்டு, 12-07-2021 ஆம் நாளில் தொகையும் வழங்கப்பட்டது.

புதுதில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் ‘தமிழ் இலக்கியவியல்’ என்னும் தனித் துறை உருவாக்கிடும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 21-12-2022 ஆம் நாளன்று ரூ.5 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவிட தமிழ்நாடு அரசின் கூடுதல் நிதியுதவியாக 15-11-2022 ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 3 இலட்சம் அமெரிக்க டாலருக்கு நிகராக ரூ.2,44,41,750/- வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் கீழ்க்காணும் நிறுவனம்/ பல்கலைக்கழகங்களில், தமிழ் ஆய்விருக்கை/இருக்கைகள் நிறுவப்பட்டுள்ள விவரம்:

2023 ஏப்ரல் 6]

வ. எண்	நிறுவனம்	ஆண்டு	வைப்புத் தொகை (ரூபாய்)
அயல்நாடு/இந்தியாவில் பிற மாநிலம்/தமிழ்நாடு			
1.	ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி	2000, 2003	50,00,000/-
2.	உத்கல் பண்பாட்டு பல்கலைக்கழகம், ஒடிசா	1999	10,00,000/-
3.	இந்து பல்கலைக்கழகம், வாரணாசி	1972-1977	3,00,000/-
4.	தொல்காப்பியர் ஆய்விருக்கை, சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்	2013	50,00,000/-
5.	புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் கலை மற்றும் சமூகவியல் மேம்பாட்டு ஆய்விருக்கை, சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்	2018	1,00,00,000/-
6.	இராபர்ட் கால்டுவெல் ஆய்விருக்கை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்	2019	1,00,00,000/-
7.	ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி. (தமிழ் இலக்கியவியல் என்னும் தனித்துறை உருவாக்கிட)	2022	5,00,00,000/-
அயல்நாடு			
8.	மகாத்மா காந்தி நிறுவனம், மொரிசியஸ்	2010	1,00,00,000/-
9.	ஹார்வர்டு பல்கலைக்கழகம், அமெரிக்கா	2017	10,00,00,000/-

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 6

10.	ஹுஸ்டன் பல்கலைக்கழகம், அமெரிக்கா	2019	1,00,00,000/-
10.	டொராண்டோ பல்கலைக்கழகம், கனடா	2021	1,00,00,000/-
12.	கொலோன் பல்கலைக்கழகம், ஜெர்மனி	2021	1,25,00,000/-
13.	ஹுஸ்டன் பல்கலைக்கழகம், அமெரிக்கா	2022	2,44,41,750-

1.6.8. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தம் சந்ததியினர் மொழி வரலாறு குறித்து அறிந்துகொள்ளும் வகையில், அங்குள்ள நூலகங்களுக்கு தமிழ் நூல்கள், நிலைப்பேழைகள் வழங்குதல்

புலம் பெயர்ந்து அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் அவர்களின் குழந்தைகளுக்குத் தமிழ் கற்றுக் கொடுப்பதற்கும், அவர்களின் சந்ததியினர் தமிழ்மொழியை மறக்காமல் பயின்று அறிந்துகொள்ள ஏதுவாகவும், தமிழ்நாடு அரசு அவர்களுக்கு அடிப்படைத் தமிழ் இலக்கியம், இலக்கணம், தமிழ் பண்பாடு மற்றும் மொழி வரலாறு குறித்த நூல்கள் வழங்கப்படுகின்றன. அவ்வகையில் இந்த ஆண்டு ஜெர்மனியில் உள்ள முன்சென் தமிழ்ச் சங்கத்திற்கும், பிரான்சில் உள்ள பாரிசு நகரில் செயற்பட்டு வரும் பாரிசு பன்னாட்டு உயர் கல்வி நிறுவனத்திற்கும், தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழ் நூல்கள் மற்றும் நிலைப்பேழைகள் வழங்கப்பட்டுள்ளன.

இயல் - 2

மொழிபெயர்ப்புப் பிரிவு

வேங்கட மலைக்கு வடமேற்கு நிலப்பரப்பைக் கடந்து விட்டாலே 'மொழிபெயர் தேயம்' தொடங்கி விடுகிறது என்று சங்ககாலப் புலவர் மாமூலனார் குறிப்பிடுகிறார்.

பனிபடு சோலை வேங்கடத்து உம்பர்
மொழிபெயர்தேயத்தர் ஆயினும் நல்குவர்

என்ற அகநானூற்றுப் பாடலின் (எண் 211) அடிப்படையில் 'மொழிபெயர்ப்பு' என்ற சொல் உருவாகி இருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது.

2023 ஏப்ரல் 6]

ஒரு மொழியின் வளமைக்கும், வளர்ச்சிக்கும் மொழியாக்கம் மிகவும் இன்றியமையாதது என்பதை,

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்

சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்

என்னும் மகாகவியின் வைர வரிகள் உலகிற்கு உணர்த்துகின்றன.

மொழிபெயர்ப்பு அறிவு சார்ந்த பயிற்சி மட்டுமன்று, ஒரு மொழியில் ஏற்படும் புதுமைகளை வேற்று மொழிக்குக் கொண்டுவரும் அரும்பெருங் கலையே மொழிபெயர்ப்புக் கலை ஆகும்.

மொழிபெயர்ப்பின்றி அணுவும் அசையாது என்று சொல்லுமளவுக்கு, அலுவலக நடைமுறைகளில் மிகவும் இன்றியமையாத அங்கமாக மொழிபெயர்ப்பு விளங்கி வருகிறது.

இவ்வகையில், தலைமைச் செயலகத் துறைகளின் அலுவல்சார் மொழியாக்கப் பணிகள் அனைத்தையும் உரிய காலத்தில் நிறைவேற்றி தலைமைச் செயலகத் துறைகளின் சிறப்பான செயற்பாட்டிற்கு உற்ற துணையாகத் தோள் கொடுத்து வருகிறது தலைமைச் செயலக மொழிபெயர்ப்புப் பிரிவு. இப்பிரிவில் தமிழ், ஆங்கிலம் மட்டுமல்லாது மலையாளம், தெலுங்கு மற்றும் இந்தி மொழிகளில் வரப்பெறும் கோப்புகள்/கடிதங்களின் அலுவல்சார் மொழிபெயர்ப்புப் பணிகளனைத்தையும் கணினிவழித் தட்டச்சு செய்து உரிய துறைகளுக்கு அனுப்பி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

மொழியாக்கப் பொருண்மைகள்

- தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் அறிவிக்கைகள்
- சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படும் ஏடுகள்
- மாண்புமிகு ஆளுநரின் உரை
- நிதிநிலை அறிக்கை உரை
- நிதித் துறை வெள்ளையறிக்கை
- அரசு செய்தி வெளியீடுகள்

- ❖ பல்வேறு விசாரணை ஆணையங்களின் அறிக்கைகள்
- ❖ மாநில தகவல் ஆணையத்தின் ஆண்டறிக்கை
- ❖ மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கை
- ❖ மாநில விழிப்புப் பணி ஆணையத்தின் ஆண்டறிக்கை
- ❖ தேர்தல் கையேடுகள்
- ❖ கொள்கை விளக்கக் குறிப்புகள்
- ❖ பொதுக் கணக்குக் குழு / பொது நிறுவனங்கள் குழுவின் தணிக்கை அறிக்கைகள் போன்றவை

ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம்

தலைமைச் செயலகத் துறைகளால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டு, தமிழாக்கம் வேண்டி மொழிபெயர்ப்புப் பிரிவுக்கு அனுப்பப்படும் அரசாணைகள் உடனுக்குடன் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு உரிய துறைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இவ்வகையில், தலைமைச் செயலகத்தில் தமிழ் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்திற்கும் உறுதுணையாய் மொழிபெயர்ப்புப் பிரிவு தொடர்ந்து செயலாற்றி வருகிறது.

இயல் - 3

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

3.1. தோற்றம்:

"தனிமைச் சுவையுடைய சொல்லை - எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாம் கண்டதில்லை!"

- பாவேந்தர் பாரதிதாசன்

இலக்கிய-இலக்கண வளங்கள் நிறைந்த, பேச்சு மொழியாகவும், எழுத்து மொழியாகவும் இன்றளவும் உயிர்ப்புடன் இருக்கின்ற செந்தமிழ் மொழிக்குச் "செம்மொழித் தகுதி" கிடைப்பதற்கு முகாமையான பங்காற்றிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மொழிப்பற்றின் விளைவாக, 1974 ஆம் ஆண்டு

2023 ஏப்ரல் 6]
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் தொடங்கப்பெற்றது.

முத்தமிழறிஞரின் வழியில், தமிழ்மொழி மற்றும் தமிழர் நலனுக்காக நல்ல பல திட்டங்களை செயற்படுத்தி வரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், “தமிழ் தொன்மையான மொழி என்பது உலகம் முழுவதும் இருக்கும் மொழியியல் அறிஞர்களும், இனவியல் அறிஞர்களும், தொல்பொருள் ஆய்வாளர்களும் ஏற்றுக்கொண்ட மாபெரும் உண்மை இது“ என்று குறிப்பிட்டுள்ளார்.

இத்தகு சிறப்பு வாய்ந்த தமிழ் மொழியின் சொல்வளத்தைப் பாதுகாத்தல், கலைச்சொல் வளத்தை பெருக்குதல் ஆகிய இலக்கோடு மொழிக்காப்புப் பணியை இவ்வியக்ககம் செய்துவருகிறது.

3.2. நோக்கம்:

தொன்மை வாய்ந்த தமிழ்மொழியின் சொல்வளத்தை அகராதிகளில் பதிந்து, பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்கு வழங்கி வருவதோடு, காலத்திற்கேற்ப பலதுறை சார்ந்த தமிழ்க் கலைச்சொற்களை வடிவமைத்து உலக மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கி வருகிறது செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம். மொழி காலந்தோறும் வளர்நிலைக்கு உட்பட்டது என்பதனால், மொழி உள்ளவரை அகராதிப் பணியும், மொழிபெயர்ப்பு உயிர்ப்புடன் அமைய கலைச்சொல்லாக்கமும் இன்றியமையாதது என்பதனால், சொல்லாக்கப் பணியும் இடையறாது நடைபெறவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

3.3. இயக்ககச் செயற்பாடுகள்

3.3.1. வெளியீடுகள்:

இவ்வியக்ககம், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் 31 தொகுதிகளை வெளியிட்டு, அவற்றை எண்மியமாக்கித் (Digitize) தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் வலைதளத்தில் பதிவேற்றம் செய்துள்ளது. சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் சுருக்கப் பதிப்பு, தமிழ் வினைச்சொல் அகரமுதலி ஆகியனவும் அச்சிடப்பட்டுள்ளன. மேலும், 1 முதல்

[*2023 ஏப்ரல் 6*

5 ஆம் வகுப்பு வரையில் பயிலும் பள்ளி மாணவர்களுக்கு வண்ணப்படங்களுடன் கூடிய 'நற்றமிழ் அறிவோம்' என்னும் தூய தமிழ் அகரமுதலி, மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 'வேர்ச்சொல் சுவடி' ஆகியன அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன.

நடைமுறைத் தமிழ் அகரமுதலி, மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலி, அயற்சொல் அகராதி, தமிழ்-தமிழ் பையடக்க அகராதி, மயங்கொலிச் சொல்லகராதி, ஒருபொருட் பன்மொழி அகராதி, தமிழ் மரபுத்தொடர் அகராதி ஆகியவை வெளியிடப்பட்டுள்ளன. ஆட்சிச்சொல்லகராதி திருந்திய பதிப்பு, துறைவாரியான ஆட்சிச்சொல்லகராதி குறுநூல் ஆகியவை அச்சில் உள்ளன. இவ்வியக்ககப் படைப்புகள் அனைத்தும் விக்சனரி பொதுத்தளம், சொற்குவை.காம் (sorkuvai.com) *எனும் இவ்வியக்கக வலைதளத்தின் வழியாக மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகின்றன.*

3.3.2. தமிழ்க் கலைக் கழகம்

மக்களின் பயன்பாட்டிலும், சமூக ஊடகங்களிலும் உள்ள பிறமொழிச் சொற்களைத் தொகுத்து, அவற்றிற்கான தமிழ்க் கலைச்சொற்களை இயக்ககத்தின் வழியே உருவாக்கி, வல்லுநர் குழுவைக் கொண்டு செம்மைப்படுத்திச் சொற்குவை வலைதளத்தில் வெளியிடுவதுடன், இப்புதிய தமிழ்க் கலைச்சொற்கள் அரசாணை வாயிலாக வெளியிடப்பட்டு வருகின்றன. திங்களுக்கு இரண்டு வல்லுநர் குழுக் கூட்டங்கள் என்ற வகையில் தொடர்ந்து தமிழ்க் கலைக் கழகம் செயற்பட்டு வருகிறது.

தமிழ்க் கலைக் கழகச் சொற்கள் தேவையான இடங்களில் படங்களுடன் இவ்வியக்ககத்தின் சொற்குவை வலைதளத்தின் (sorkuvai.com) *வழியாகவும், முகநூல்* (Facebook), *புலனம்* (Whatsapp), *சுட்டுரை* (Twitter), *படவரி* (Instagram), *சொல்வயல் திங்கள் மின்னிதழ் வாயிலாகவும் பொதுமக்கள், மாணவர்கள், அரசு அலுவலர்கள், ஆய்வறிஞர்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை சொல்லாய்வு வல்லுநர்களால், 42,926 சொற்கள் ஏற்பளிக்கப்பட்டுள்ளன.*

2023 ஏப்ரல் 6]

3.3.3. சொற்குவை வலைதளம் (www.sorkuvai.com)

“உலகுக்குத் தமிழ்மொழியின்
உயர்வுதனைக் காட்டுவது சொற்பெருக்காம்!“

- பாவேந்தர் பாரதிதாசன்

*தமிழ் மொழியிலுள்ள அனைத்துச் சொற்களையும் ஒரே தளத்தின்கீழ் ஒருங்கு தொகுத்து உலக மக்களின் பயன்பாட்டுக்கு வழங்கும் நோக்கில், சொற்குவை வலைதளம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. சொற்குவை வலைதளத்தில் (*sorkuvai.com*) தற்போது வரை 9,57,399 பல துறை சார்ந்த தமிழ்ச் சொற்கள் பதிவேற்றம் செய்யப் பெற்றுள்ளன. இயக்ககத்தின் பதிப்பாசிரியர், உதவிப் பதிப்பாசிரியர், தொகுப்பாளர்களால் வடிவமைக்கப்பட்டு, தமிழ்க் கலைக் கழகத்தில் ஏற்பு பெறும் கலைச்சொற்கள், இவ்வியக்ககம் நடத்தும் துறைசார் வல்லுநர் குழுக் கூட்டங்கள், சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சித் திட்டம், களப்பணி போன்றவற்றின் மூலம் கிடைக்கும் கலைச்சொற்கள், இணையவழி பன்னாட்டுக் கலைச்சொல்லாக்கப் பயிலரங்கம் வழியாக தமிழறிஞர்கள், தமிழார்வலர்கள் உள்ளிட்டோர் வழங்கும் பல்வேறு துறை சார்ந்த புதிய தமிழ்க் கலைச்சொற்கள் ஆகியவை வல்லுநர் குழுவின் ஏற்புக்குப் பின் சொற்குவை வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன.*

3.3.4. தமிழ் அகராதியியல் நாள் விழா

“தமிழ் அகராதியியலின் தந்தை” என்று போற்றப்படும் வீரமாமுனிவரின் தமிழ்த் தொண்டைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் நவம்பர் 8 ஆம் நாள் ‘தமிழ் அகராதியியல் நாளாக’ கொண்டாடப்பட்டும் மற்றும் இரண்டு நாட்கள் பன்னாட்டுக் கருத்தரங்கமும் நடத்தப்படுகிறது. இதற்கென ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூ.10 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்படுகிறது. இவ்விழாவில், தூய தமிழிலேயே பேசுகின்ற மூவருக்கு தூய தமிழ்ப்பற்றாளர் சான்றிதழுடன் ஐந்தாயிரம் ரூபாய் பரிசுத்தொகையும், பள்ளி மாணவர்களுக்கான மாநில அளவிலான சொல்லாக்கம் மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டு, இரண்டு போட்டிகளிலும் முறையே முதல் பரிசாக ரூ.10,000/- மும், இரண்டாம் பரிசாக ரூ.5,000/- மும் வழங்கப்பட்டு வருகின்றன. ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கிய ‘அகராதி ஆய்வு மலர்’ அச்சிடப்பட்டு விலையின்றி வழங்கப்பட்டு வருகிறது.

[2023 ஏப்ரல் 6

இவ்விழாவில், இவ்வியக்ககம் சார்பில் 5 வகையான விருதுகள், 43 பேருக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

3.4. விருதுகள்

(1) தேவநேயப் பாவாணர் விருது

அகராதித் துறையில் சிறந்த பங்களிப்பை நல்கிவரும் தகுதி வாய்ந்த உள்நாட்டு அகராதியியல் அறிஞர் ஒருவருக்கு தேவநேயப் பாவாணர் விருதும், விருதுத் தொகையாக ரூ.2 இலட்சமும் 1 சவரன் தங்கப் பதக்கமும் தகுதியுரையும் மற்றும் பொன்னாடை வழங்கப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டுக்கான தேவநேயப் பாவாணர் விருதினை 16-01-2023 ஆம் நாள் நடைபெற்ற விழாவில், முனைவர் இரா. மதிவாணன் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தம் பொற்கரங்களால் வழங்கிச் சிறப்பித்தார்.

(2) வீரமாமுனிவர் விருது

அகராதித் துறையில் சிறந்த பங்களிப்பை நல்கிவரும், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத, பிறப்பால் வெளிநாட்டைச் சார்ந்த, தகுதி வாய்ந்த அகராதியியல் அறிஞர் ஒருவருக்கு வீரமாமுனிவர் விருது வழங்கப்பட்டு வருகின்றது. விருதுத் தொகையாக ரூ.2 இலட்சமும் 1 சவரன் தங்கப் பதக்கமும், பொன்னாடை, தகுதியுரையும் வழங்கப்படுகின்றன.

(3) தூயதமிழ்ப் பற்றாளர் விருது

அன்றாட நடைமுறையில் பிறமொழிக் கலப்பின்றி தூயதமிழ் பேசுவோரை ஊக்கப்படுத்த மாவட்டந்தோறும் ஒருவருக்கு ‘தூயதமிழ்ப் பற்றாளர் விருதும்’, விருதுத் தொகையாக ரூ.20,000/- மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

(4) தூயதமிழ் ஊடக விருது

தூய தமிழைப் பயன்படுத்தும் காட்சி ஊடகங்களையும், அச்சு ஊடகங்களையும் பாராட்டி ஊக்கமளிக்கும் வகையில், ஆண்டுதோறும் ஒரு காட்சி ஊடகம் மற்றும் ஓர் அச்சு ஊடகத்திற்கு ‘தூயதமிழ் ஊடக விருதும்’, விருதுத் தொகையாக ரூ.50,000/-மும் தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

(5) நற்றமிழ்ப் பாவலர் விருது

தம் கவியாக்கங்களில் பிறமொழியின்றி தூயதமிழ்ச் சொற்களையும் புதிய தமிழ்க் கலைச்சொற்களையும் பயன்படுத்தும் கவிஞர்களுள் மரபுக் கவிஞர் ஒருவருக்கும், புதுக்கவிஞர் ஒருவருக்கும் 'நற்றமிழ்ப் பாவலர் விருதும்', விருதுத் தொகையாக வகை ஒன்றுக்கு ரூ.50,000/-மும், தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

3.5. 'சொல் வயல்' திங்கள் மின்னிதழ்

சொல்லாய்வுகள், துறைசார் கலைச்சொற்கள், கலைச்சொல்லாக்கம், அகராதியியல், மொழியியல் சார்ந்த கருத்துக்கள், தமிழ்மொழி குறித்த கருத்தாக்கங்கள், இயக்ககச் செயற்பாடுகள் உள்ளிட்ட செய்திகளைத் தாங்கி "சொல்வயல்" மின்னிதழ் 'சொற்குவை வலைதளத்தில்' (sorkuvai.com) *2020-ஜூன் திங்களிலிருந்து திங்கள்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது. 2023 மார்ச் வரை 34 இதழ்கள் வெளிவந்துள்ளன.*

3.6.சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சித் திட்டம்

கல்லூரி மாணவர்களிடையே கலைச் சொல்லாக்கத் திறனை வளர்த்தெடுத்து, அவர்களின் தனித்தமிழ்ப் பற்றினை ஊக்கப்படுத்தும் வகையில் 'சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சித் திட்டம்' நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் 26 கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் பயிற்சி அளிக்கப்பட்டதில் இத்திட்டத்தில் 8,200-க்கும் மேற்பட்ட மாணவ–மாணவியர் பங்கேற்று பயனடைந்துள்ளனர்.

3.7. சொற்குவை வல்லுநர் குழுக் கூட்டம்

சொற்குவையை வளப்படுத்தும் வகையில், பல துறைகளில் காலத்திற்கேற்ப புழங்கிவரும் கலைச்சொற்களை தொகுத்து, சொற்குவையில் சேர்க்கும் வண்ணம் மூன்று திங்களுக்கு ஒருமுறை என்ற வகையில் ஆண்டுக்கு நான்குமுறை துறைசார் வல்லுநர் குழுக் கூட்டம் நடத்தப்பட்டு வருகின்றன. அவ்வகையில், 15-07-2022 அன்று சேலத்தில் நெசவுத் துறை மற்றும் பட்டு வளர்ச்சித் துறையிலும், 09-08-2022 அன்று சென்னையில் கால்நடைத் துறையிலும், 15-09-2022 அன்று கோயம்புத்தூரில் வேளாண்மைத் துறையிலும், துறைசார் வல்லுநர் குழுக்

[2023 ஏப்ரல் 6

கூட்டங்கள் நடத்தப்பெற்று மொத்தம் 3,591 கலைச்சொற்கள் பெறப்பட்டுள்ளன.

3.8.வட்டார வழக்குச் சொற்பொருள் அகராதி:

தமிழ்நாட்டின் பகுதிகளை சென்னை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மதுரை, கோவை என 6 மண்டலங்களாகப் பகுத்து, 6 மண்டலங்களுக்கும் தனித்தனியே ஒருங்கிணைப்பாளர்கள் அமர்த்தப்பட்டு, அப்பகுதிகளுக்கு நேரில் சென்று கள ஆய்வு செய்து, அப்பகுதிகளில் வழங்கும் வட்டார வழக்குச் சொற்கள், பொருளுடன் தொகுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கென 2022-2023 ஆம் நிதியாண்டிற்கு ரூ.8,25,400/- நிதி ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. 2023 பிப்ரவரி திங்கள் வரை 18,369 சொற்கள் திரட்டப்பெற்றுள்ளன. 2023 ஆம் ஆண்டிற்குள் இவ்வகராதி வெளியிடப்படவுள்ளது.

3.9. அரசுத் துறைகளில் புதிய கலைச்சொற்கள்

"செயல் செய்வாய் தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும் சீறிவந்தே"

என்றார் பாவேந்தர் பாரதிதாசன். அரசுத் துறைகளில் புழங்கும் பிறமொழிக் கலைச்சொற்களுக்கு நிகரான தமிழ்க் கலைச்சொற்களை வடிவமைத்துப் புழக்கத்திற்குக் கொண்டுவருவதென்பது, ஆட்சிமொழிச் செயலாக்கத்திற்கு பெரிதும் உதவியாக அமையும்.

அந்த வகையில், நீர்வளத் துறை, கட்டடம் (ம) பராமரிப்புத் துறை, வேளாண்மைத் துறை, நகராட்சி நிருவாக ஆணையர் அலுவலகம், சமூக நலன் (ம) மகளிர் உரிமைத் துறை, சென்னைக் குடிநீர் (ம) வடிகால் வாரியம், தோட்டக்கலை (ம) பயிர்கள் துறை, வேலைவாய்ப்பு (ம) பயிற்சித் துறை, எழுதுபொருள் (ம) அச்சுத் துறை, பழங்குடியினர் நல இயக்குநரகம், பிற்படுத்தப்பட்டோர் (ம) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம், போக்குவரத்துத் துறை ஆணையரகம், நிலச் சீர்திருத்தத் துறை, நகர்ப்புற நில உச்சவரம்பு (ம) நகர்ப்புற நிலவரி ஆணையரகம், ஆதி திராவிடர் நல இயக்குநரகம், வணிக வரித் துறை, நில அளவைத் துறை ஆகிய அரசுத் துறைகளில் வல்லுநர்களைக் கொண்டு ஆய்வு செய்து, 5,661 கலைச்சொற்கள் பெறப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 6]

3.10. பன்மொழி அகராதி-தமிழ் கற்பிக்கும் குறுஞ்செயலி

தெலுங்கு, கன்னடம், மலையாளம் உள்ளிட்ட திராவிட மொழிகளிலும், ஆங்கிலம், இந்தி உள்ளிட்ட பிறமொழிகளிலும், தமிழ்மொழியை இலகுவாகக் கற்கும் வகையில் அந்தந்த மொழிகளில் புலமை வாய்ந்த வல்லுநர்களைக் கொண்டு பாடத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு பாடநூலும், பன்மொழி அகராதியும் உள்ளடக்கிய, தமிழ் கற்கும் திறன்மிகு குறுஞ்செயலி உருவாக்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டுக்குள் பன்மொழி அகராதியும், தமிழ் கற்பிக்கும் குறுஞ்செயலியும் மக்களின் பயன்பாட்டுக்கு வெளியிடப்படவுள்ளன. இத்திட்டத்திற்கென 2022-2023 ஆம் நிதியாண்டிற்கு ரூ.33,56,000/- நிதி ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

3.11. சொல் தொகுப்பி

2022-2023 ஆம் ஆண்டு சட்டப்பேரவை அறிவிப்பிற்கிணங்க, தமிழறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தமிழார்வலர்கள் மற்றும் அயல்நாடுவாழ் தமிழர்கள் உள்ளிட்ட அனைவரும் இணையதளம் வழியாக ஆங்கிலத்திற்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை தாமே உள்ளீடு செய்யும் வகையில், "கலைச்சொல் தொகுப்பி" உருவாக்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. 2023 ஆம் ஆண்டுக்குள் "சொல் தொகுப்பி" உலக மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்திற்கென 2022-2023 ஆம் நிதியாண்டிற்கு ரூ.10,00,000/- நிதி ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

3.12. துறைசார் கலைச்சொல் அகராதிகள்

"2022-2023 ஆம் ஆண்டு சட்டப்பேரவை அறிவிப்பின்போது, மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் போன்ற துறைகளில் பயன்படுத்தப்படும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான புதிய கலைச்சொற்களை உருவாக்கம் செய்வதற்கு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்துடன் இணைந்து, துறைசார் வல்லுநர் குழுக்கள் அமைக்கப்பட்டு புதிய கலைச்சொல் அகராதிகள் உருவாக்கப்படும்" என்ற அறிவிப்பிற்கிணங்க, நடப்பாண்டில் முதற்கட்டமாக 'மருத்துவக் கலைச்சொல் அகராதி' உருவாக்க பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்திற்கென

[2023 ஏப்ரல் 6

2022-2023 ஆம் நிதியாண்டிற்கு ரூ.12,15,490/- நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இவ்வகராதிக்கான சொற்களை திரட்டுவது தொடர்பாக சென்னை மற்றும் தஞ்சாவூரில் மருத்துவக் கலைச்சொல் அகராதி சீராய்வுக் கூட்டங்கள் நடத்தப்பெற்றன. 04-03-2023 அன்று சென்னையில் 30 மருத்துவ அறிஞர்கள் பங்கேற்ற மருத்துவக் கலைச்சொல் அகராதித் தொகுப்பு திட்டப் பயிலரங்கம் நடத்தப்பெற்றது. கோயம்புத்தூர் பூ.சா.கோ. மருத்துவக் கல்லூரி (ம) மருத்துவ நிறுவனத்திலும், அரசுத் தேனி மருத்துவக் கல்லூரியிலும், மதுரை அரசு மருத்துவமனை (ம) மருத்துவக் கல்லூரியிலும் மருத்துவக் கலைச்சொல் அகராதித் தொகுப்பு திட்டக் கருத்தரங்குகள் நடத்தப்பெற்றுள்ளன. 2023 மார்ச் முடிய 27,018 சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் மருத்துவக் கலைச் சொல்லகராதி அச்சிட்டு வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3.13. மக்களை நோக்கி அகராதிகள்

சொற்குவையின் சொற்கள், தமிழ் மின் நூல்கள், அரசுத் தளங்களின் உள்ளடக்கங்கள் போன்றவை படைப்பாக்கப் பொது உரிமத்தில் வெளியிடப்பெறும் என்ற 2021-2022 ஆம் ஆண்டு சட்டப்பேரவை அறிவிப்பிற்கிணங்க, இவ்வியக்கக வெளியீடுகள் விக்கிப்பீடியா, விக்கிமூலத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

ஒன்றிய அரசின் “விகாசுபீடியா“ (vikaspedia) இணைய தளத்தில், தமிழ்நாடு அரசு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் “சொற்குவை“ வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும் “சொல்வயல்“ மின்னிதழில் இடம்பெறும் துறைசார் கலைச்சொற்கள் எடுத்தாளப்பட்டு, பொதுத்தளப் பயன்பாட்டுப் பரவலாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

3.14. இணையவழிப் பன்னாட்டுக் கலைச்சொல்லாக்கப் பயிலரங்கம்

“சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்!

என்ற மகாகவி பாரதியாரின் வாய்மொழிக்கேற்ப புறநிலையில் உள்ள பலதுறை அறிஞர்களிடமிருந்தும் தமிழ்க் கலைச்சொற்களைப்

2023 ஏப்ரல் 6]

பெற்று, சொற்குவை வலைதளத்தில் பதிவேற்றம் செய்யும் நோக்கில் 01.10.2021 ஆம் நாளிலிருந்து வெள்ளிதோறும் இணையவழி பன்னாட்டுக் கலைச்சொல்லாக்கப் பயிலரங்கம் நடத்தப்பெற்று வருகிறது. இதுவரையிலான அமர்வுகளில், பாரிஸ், நார்வே, மலேசியா, கனடா, அமெரிக்கா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, ஜெர்மனி, தாய்லாந்து, மொரிசியஸ், இலங்கை, நியூசிலாந்து, கொரியா, ஜப்பான், துபாய், ஓமன், குவைத், தைவான், பின்லாந்து, மியான்மர், அயர்லாந்து, ஹாங்காங், ஸ்வீடன், சவுதி அரேபியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 219 அயலக அறிஞர்களும், தமிழ்நாடு உட்பட 143 உள்நாட்டு அறிஞர்களும் பங்கேற்று 7,692 தமிழ்க் கலைச்சொற்களை வழங்கியுள்ளனர். வல்லுநர்களின் ஆய்வுக்குப் பின் அவை சொற்குவையில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வமர்வுகளில் 4,500-க்கும் மேற்பட்டோர் பார்வையாளர்களாக பங்கேற்றும், கலைச்சொல்லாக்கங்கள் குறித்த தங்கள் கருத்துக்களை தெரிவித்தும் பயன்பெற்றுள்ளனர். அமர்வில் பங்கேற்கும் அறிஞர்களுக்கும், பார்வையாளர்களுக்கும் இயக்ககத்தின் சார்பில் மின்சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

> *குலமெனப் படுவதும் தமிழே! கோவெனப் படுவதும்*
> *தமிழே! நலமெனப் படுவதும் தமிழே! நாடெனப்*
> *படுவதும் தமிழே!"*

என்ற மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் தமிழ் முழக்கத்தை நிறைவேற்றும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செம்மாந்த நெறியாளுகையின்கீழ் தமிழ்நாடு அரசின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் தமிழ்மொழிக்கான ஆக்கப் பணியில் சீரிய முறையில் செயலாற்றி வருகிறது.

இயல்—4

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

4.1. தோற்றம்

சென்னையில் 1968 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில், மேனாள்

தமிழ்நாடு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிரெஞ்சு மொழிக் கலைக் கழகத்தைப் போன்று, தமிழ் உயராய்வுக்கென்று ஒரு நிறுவனத்தை சென்னையில் தொடங்க வேண்டும் எனக் கூறியதற்கிணங்க, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1970 ஆம் ஆண்டு மேனாள் தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்டது.

4.2. நோக்கம்

- ❖ ஆய்வுக்கு உகந்த கல்விச் சூழலை உருவாக்குதல்;
- ❖ இன்றைய தேவைக்கேற்ப ஆராய்ச்சியாளர்களுக்கு பயிற்சியளித்தல்;
- ❖ பிறநாட்டு அறிஞர்களுள் ஆர்வமுடையவர்களுடன் தமிழாய்வுத் தொடர்பான தகவல்களை பகிர்ந்து கொள்ளுதல்;
- ❖ உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் பிற கல்வி நிறுவனங்கள், அரசு அமைப்புகள், பிறநாட்டு அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தனியார் ஆகியோருடன் இணைந்து உயர் தமிழாய்வுப் பணிகளை மேற்கொள்ளுதல்.
- ❖ உயராய்வு நூலகத்தை மேம்படுத்திப் பயன் அடைதல்.

4.3. ஆளுகைக் குழு

தலைவர் - மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு அமைச்சர் அவர்கள்.

துணைத் தலைவர்கள் – அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள்.

உறுப்பினர்கள் – நிதித் துறை செயலாளர், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்ற (ஐ.ஏ.டி.ஆர்.) பிரதிநிதி ஒருவர், மைசூர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவன இயக்குநர் மற்றும் உறுப்பினர்-செயலராக உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் ஆகியோரைக் கொண்ட ஆளுகைக் குழுவின் வழிகாட்டுதலோடு தன்னாட்சி நிறுவனமாக இந்நிறுவனம் இயங்கி வருகிறது.

2023 ஏப்ரல் 6]

4.4. நிறுவன அமைப்பு முறை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் கல்வி மற்றும் நிருவாகம் என இருவேறு பிரிவுகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை செவ்வனே மேற்கொள்ள இயக்குநர் தலைமையில் நிருவாகம் மற்றும் கல்விப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

4.5. புலங்கள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில்

1. தமிழ் இலக்கியம் மற்றும் சுவடிப்புலம்
2. தமிழ் மொழி மற்றும் மொழியியல் புலம்
3. சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப்புலம்
4. அயல்நாட்டுத் தமிழர் புலம்

ஆகிய புலங்கள் செயற்பட்டு வருகின்றன.

நிகழ்த்தப்படும் உயர் தமிழாய்வுப் பணிகள்

❖ தமிழ்மொழி இலக்கணம், தமிழ் இலக்கியம், சமுதாய மொழி இலக்கண ஆய்வுகளை நிகழ்த்துதல் மற்றும் மொழி கற்பித்தல்;

❖ கலைச் சொல்லாக்கம், மொழிபெயர்ப்பு ஆகிய மொழியியல் களங்களை ஆய்வு செய்தல்;

❖ நிறுவனத்திலுள்ள பதிப்பிக்கப்படாத சுவடிகளைப் படியெடுத்து ஆய்வுப் பதிப்புகளாகக் கொண்டு வருதல்;

❖ பிற நிறுவனங்களோடு இணைந்து தமிழியல் ஆய்வை வளப்படுத்துதல்;

❖ தமிழ்க் கலைகள், தமிழர் பண்பாடு குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளுதல்;

❖ பழங்குடிகளின் இனவரைவியல் ஆய்வுகளை மேற்கொள்ளுதல்;

❖ அயல்நாட்டுத் தமிழறிஞர்கள் பற்றிய தகவல்களை கொண்ட ஆளுமை தரவுதளத்தை உருவாக்குதல்;

- ❖ உலகெங்கும் வாழும் தமிழர்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளுதல்;
- ❖ புகழ்பெற்ற உலக இலக்கியங்களை தமிழ்மொழியில் மொழிபெயர்த்து வெளியிடுதல்;

4.6. கல்விப் பணிகள்

ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வு வகுப்புகள் தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் சென்னைப் பல்கலைக்கழக இணைவுடன் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 247 மாணவர்கள் முனைவர் பட்டமும், 388 மாணவர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்டமும் பெற்றுள்ளனர்.

2022-2023 ஆம் ஆண்டில் 34 மாணவர்கள் முனைவர் பட்ட வகுப்பிலும், 9 மாணவர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்ட வகுப்பிலும் பயின்று வருகின்றனர்.

தமிழ்நாடு அரசின் நிதியுதவியோடு முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொள்ளும் மாணவர்களுள் தெரிவின் அடிப்படையில் 8 மாணவர்களுக்கு ரூ.5,000/- வீதம் திங்கள் ஆய்வு உதவித் தொகை ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ் முதுகலைப் பட்ட வகுப்பு மற்றும் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த தமிழ் முதுகலைப் பட்ட வகுப்பு ஆகியன தமிழ்ப் பல்கலைக்கழக இணைவுடன் நடத்தப்பட்டு வருகின்றன.

2022-2023 ஆம் ஆண்டு முதுகலை வகுப்பில் 20 மாணவர்கள் மற்றும் ஒருங்கிணைந்த முதுகலை வகுப்பில் 14 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

தமிழ்நாடு அரசின் நிதியுதவியோடு தமிழ் முதுகலை பயிலும் 15 முதலாம் ஆண்டு மாணவர்கள் மற்றும் 15 இரண்டாம் ஆண்டு மாணவர்கள் என 30 மாணவர்களுக்கு திங்கள்தோறும் கல்வி உதவித் தொகையாக ரூ.2,000/- வீதம் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தமிழ் இலக்கியம் மற்றும் சுவடிப் புலத்தின் சார்பில், தமிழ்ச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டய வகுப்பும், திருக்குறள் ஓவியக் காட்சிக்கூட ஒருங்கிணைப்புடன் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் ஆகிய ஓராண்டுப் பட்டய வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 6]

இதுவரை சுவடிப் பட்டய வகுப்பில் 116 மாணவர்களும், கல்வெட்டியல் பட்டய வகுப்பில் 841 மாணவர்களும் பயின்றுள்ளனர். 2022-2023 ஆம் ஆண்டில் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டய வகுப்பு, கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் பட்டய வகுப்பு ஆகியவற்றில் 360 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

தமிழ்நாடு அரசின் நிதியுதவியோடு தமிழ்ச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டய வகுப்பில் பயிலும் மாணவர்களுள் தெரிவு செய்யப்படும் 10 மாணவர்களுக்குத் திங்கள்தோறும் ரூ.3,000/- வீதம் கல்வி உதவித் தொகை ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

4.7. ஆய்வுத் துணைப் பணிகள்

நிறுவனத்தால் ஆண்டுதோறும் பன்னாட்டு/தேசியக் கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் ஆகியன நடத்தப்பட்டு வருகின்றன. இவை மட்டுமன்றி பல்வேறு பொருண்மைகளில் தமிழாய்வுத் திட்டப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், தமிழ்நாடு அரசு வழங்கிய ரூபாய் ஆறு இலட்சம் நிதியுதவியோடு 2022-2023 ஆம் ஆண்டில் தமிழ்மொழி மற்றும் மொழியியல் புலவழி 'தமிழியல் முன் ஆய்வுத் தொகுப்பு' என்னும் தலைப்பிலும், அயல்நாட்டுத் தமிழர் புலவழி 'சங்கத் தமிழர் அறம்' என்னும் தலைப்பிலும், சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப் புலவழி, 'தமிழ்நாட்டின் பழங்குடிகளின் வாழ்வியலும் மொழித்திறன் மற்றும் இன வரைவியல்' என்னும் தலைப்பிலும், தமிழ் இலக்கியம் மற்றும் சுவடியியல் புலவழி, 'ஐவர் ராசாக்கள் கதைச்சுவடி - பதிப்பும் ஆய்வும்' ஆகிய தலைப்புகளில் ஓராண்டுத் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.8. அயல்நாட்டவர்க்கும் தமிழ் அறியாத பிற மாநிலத்தவர்க்கும் தமிழ்மொழி கற்பித்தல்

உலகின் தொன்மை வாய்ந்த செம்மொழியான தமிழ்மொழியின் மீது கொண்ட ஈர்ப்பால், அதனைக் கற்க விழையும், இந்தியாவின் பிற மாநிலத்தவரும், பிற நாட்டவரும் கற்பதற்கான ஏற்ற சூழலைக் கொண்டுள்ள இந்நிறுவன மொழிப்பயிற்சி ஆய்வுக் கூடத்தில் தமிழ்மொழி கற்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 3 திங்கள் கால அளவு கொண்ட அறிமுக நிலை வகுப்பு,

[2023 ஏப்ரல் 6

6 திங்கள் கால அளவு கொண்ட சிறப்பு நிலை வகுப்பு என இரு பிரிவுகளில் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்தும், உலக நாடுகளான அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, கனடா, தென் ஆப்பிரிக்கா, சுவீடன், சீனா, கொரியா, ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளிலிருந்தும் 1975 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டுவரை ஏறத்தாழ 625 பேர் நிறுவனத்தின் வழி தமிழ்மொழி பயின்றுள்ளனர்.

4.9. திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்தில் சுமார் 2,500 சதுர அடி பரப்பளவில் திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடம் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இக்காட்சிக் கூடத்தில் உலகப் பொதுமறையாம் திருக்குறள் மற்றும் திருவள்ளுவர் தொடர்பான அரிய புகைப்படங்கள், ஓவியங்கள், திருக்குறள் தொடர்பான நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இக்காட்சிக்கூடத்தை நாள்தோறும் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கண்டுகளித்து வருகின்றனர். இதுவரை ஏறத்தாழ 15,000 பார்வையாளர்கள் பார்வையிட்டுள்ளனர்.

4.10. திருக்குறள் ஓவியப் போட்டி

திருக்குறளில் அமைந்த அறநெறிக் கருத்துகள், பொதுமக்கள் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு எளிதில் சென்றடையும் வகையில், தமிழ்நாடு அரசின் நிதியுதவியோடு ஆண்டுதோறும் திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடம் வழியாக திருக்குறள் ஓவியப் போட்டி நடத்தப்பட்டு வருகின்றது. இதில் தெரிவு செய்யப்படும் சிறந்த 15 ஓவியங்களுக்கு ரூபாய் நாற்பதாயிரம் வீதம் பரிசுத்தொகை வழங்கப்படுகின்றது. தெரிவு செய்யப்படும் ஓவியங்கள் இக்காட்சிக்கூடத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

4.11. உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம்

அயலகத் தமிழர் தொடர்பான அனைத்துத் தகவல்களையும், அயலகத் தமிழ் அறிஞர்களுடன் தொடர்புகொண்டு,

பெற்று, ஒருங்கே கிடைக்கும் வண்ணம் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன், நிறுவனத்தில் "உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம்" தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இம்மையத்தின் வழியாக ஆண்டுதோறும் பன்னாட்டுக் கருத்தரங்கம், பயிலரங்கம், அயல்நாட்டுத் தமிழறிஞர்களைக் கொண்டு சிறப்புச் சொற்பொழிவுகள், பயிற்சிப் பட்டறைகள் ஆகியன தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

4.12. ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம்

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே, முன் தோன்றிய மூத்த மொழி நம் தமிழ் மொழியாகும். ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட சங்க இலக்கண நூல்களான தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள் மற்றும் சங்க இலக்கிய நூல்களான பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ்க்கணக்கு போன்ற அறிவுக் களஞ்சியங்கள் நமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன என்றால் அதற்கு முதற்காரணம் ஓலைச்சுவடிகளே ஆகும். இத்தகைய அரிய ஓலைச்சுவடிகளை பாதுகாத்துப் பதிப்பிப்பது நமது கடமை என்பதை நன்குணர்ந்ததால், நிறுவனத்தில் ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இம்மையத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவம், இலக்கணம், இலக்கியம், செய்யுள், காலக்கணிதம், காலச்சுவடுகள், தனிப்பாடல்கள், தனிக் குறிப்புகள் போன்ற தலைப்புகளில் ஓலைச்சுவடிக் கட்டுகளும், நூற்றுக்கும் மேற்பட்ட தாள் சுவடிகளும் திரட்டிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இங்குள்ள அனைத்து சுவடிக் கட்டுகளுக்கும் விரிவான விளக்க அட்டவணை உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை 600 சுவடிக் கட்டுகள் இம்மையத்தால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மேலும், ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசு வழங்கும் ரூபாய் ஐந்து இலட்சம் நிதி நல்கையைக் கொண்டு, தமிழ்நாட்டிலும் மற்றும் பிற இடங்களிலும் உள்ள அறியப்படாத சுவடிகளை களப்பணி வாயிலாக அடையாளங்கண்டு அவற்றை எண்மியம் செய்து இம்மையத்தில் வைக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு 46,450 தாள்சுவடிகள் அடையாளங்கண்டு எண்மியப்படுத்தப்பட்டுள்ளன.

[2023 ஏப்ரல் 6

4.13. பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்

உலகின் தொல்குடிகளாகவும், அனைத்துத் துறைகளிலும் அகிலம் போற்றும் வண்ணம் தமது திறமையால் உலக மக்களுக்கு வழிகாட்டியாகவும் விளங்கிய நம் பழந்தமிழர்களின் சிறப்புகளையும், அறிவியல் நுட்பங்களையும், ஆற்றல்களையும் உலகிற்கு பறைசாற்றும் வண்ணம் கற்சிற்பங்கள், உலோகச் சிற்பங்கள், மரச் சிற்பங்கள், அணிகலன்கள், புடைப்பு ஓவியங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம் தமிழ்நாடு அரசு வழங்கிய ரூ.346 இலட்சம் சிறப்பு நிதியைக் கொண்டு நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இக்காட்சிக்கூடத்தை நாள்தோறும் பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமன்றி பொதுமக்களும், வெளிநாட்டவரும் கட்டணமின்றி கண்டு வருகின்றனர். இக்காட்சிக்கூடம் விடுமுறையின்றி காலை 10.30 மணி முதல் மாலை 5 மணி வரை பொதுமக்களுக்காக இயங்கி வருகிறது. இதுவரை ஏறத்தாழ 50,000 பார்வையாளர்கள் பார்வையிட்டுள்ளனர்.

தமிழ்நாடு அரசு நிதியுதவியோடு தயாரிக்கப்பட்டுள்ள 1. பழந்தமிழர் வாழ்வியல், 2. தமிழ் மருத்துவம், 3. நீர்மேலாண்மை, 4. போரியல், 5. ஆட்சித்திறன், 6. பழந்தமிழர் நெசவுத் தொழில்நுட்பம், 7. பழந்தமிழர் கட்டடக்கலை நுட்பம், 8. பழந்தமிழர் ஐந்திணை வாழ்வியல், 9. பழந்தமிழர் வேளாண்மை, 10. தமிழர் மரபுக் கலைகள் ஆகிய தலைப்புகளில் குறும்படங்கள் இக்காட்சிக்கூடத்தில் திரையிடப்பட்டு வருகின்றன.

4.14. அறக்கட்டளைகள்

தமிழ்ச் சான்றோர்களை போற்றும் வகையில் அவர்தம் பெயரில் தனியார் மற்றும் தமிழ்நாடு அரசு நிதியுதவியோடு இதுவரை நிறுவனத்தில் 53 அறக்கட்டளைகள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் வழியாக சிறப்பு பொழிவுகள் நடத்தப்பட்டு அப்பொழிவுகள் நூல்களாகவும் வெளியிடப்பட்டு வருகின்றன. இதுவரை 606 சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. 2022-2023 ஆம் ஆண்டில் மூன்று சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

4.15. நூல் வெளியீடுகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சிறப்புகளுள் மிகவும் குறிப்பிடத்தக்கது இதன் வெளியீடுகளாகும். கருத்தரங்கக்

2023 ஏப்ரல் 6]

கட்டுரை தொகுப்புகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், சுவடிப்பதிப்புகள், மொழிபெயர்ப்புகள், அரியநூல்கள் மறுபதிப்பு ஆகிய வகைப்பாடுகளில் பல நூல்கள், தமிழறிஞர்களும், தமிழாய்வு மேற்கொள்ளும் மாணவர்களும் பயன்பெறும் வகையில் நிறுவனத்தால் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன.

வெளியிடப்படும் நூல்கள் இலக்கணம், இலக்கியம், தமிழாய்வு, மொழிபெயர்ப்பு, தமிழ் மருத்துவம், காலக்கணிதம் ஆகிய பொருண்மைகளில் அமைந்துள்ளன. இதுவரை 1,291 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. 1,309 நூல்கள் வெளியீட்டிற்கு அணியமாக உள்ளன.

4.16. தமிழியல்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உருவாவதற்குக் களம் அமைத்துக் கொடுத்த சேவியர் தனிநாயகம் அடிகளாரால் 'Journal of Tamil Studies' (JOTS) *எனும் ஆங்கில இதழ் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விதழ் தற்போது "தமிழியல்" எனும் பெயரில் ஆங்கிலம் மற்றும் தமிழ் என இருமொழிகளில் காலாண்டு இதழாக 50 ஆண்டுகளைக் கடந்து 115-ஆவது இதழ் வெளிவந்துள்ளது. தமிழியல் இதழில் ஆராய்ச்சிக் கட்டுரைகள், நூல் மதிப்புரைகள், நிறுவன வெளியீடுகளின் அறிமுகம் ஆகியவை இடம்பெற்று வருகின்றன.*

4.17. ஆய்வு நூலகம்

அறிவை வளர்க்கும் நூல்கள் சங்கமிக்கும் ஒரே இடம் நூலகமாகும். நிறுவனத்தில் 1970 ஆம் ஆண்டு சுமார் 100 நூல்களுடன் தொடங்கப்பட்ட நூலகம், இப்போது 1,34,000 நூல்களுடன் ஆராய்ச்சி நூலகமாக இயங்கி வருகிறது. ஆய்வுப் பணிகளை செவ்வனே மேற்கொள்ள இந்நூலகம் பெரிதும் பயன்படுகிறது. கல்வியாளர்கள், ஆய்வாளர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், இந்திய ஆட்சிப் பணித் தேர்வுக்கு பயில்வோர் என பலரும் இந்நூலகத்தால் பயனடைந்து வருகின்றனர்.

4.18. விரிவுரையாளர்/ஆராய்ச்சிக்கான தகுதித் தேர்வுகள் பயிற்சி

மாணவர்களுக்கான உயராய்வு உதவித்தொகை பெறுவதற்கும் கல்லூரி/பல்கலைக்கழகங்களில் வேலை வாய்ப்பினை பெறுவதற்கும், அடிப்படைத் தகுதிகளை

அறுதியிட பல்கலைக்கழக நல்கைக் குழுவால் நடத்தப்பெறும் விரிவுரையாளர்/ஆராய்ச்சியாளர் தகுதித் தேர்வுக்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நிறுவனத்தில் கட்டணமின்றி ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன. இவ்வகுப்பில் நிறுவன மாணவர்கள் மட்டுமன்றி பிற கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களும் சேர்ந்து பயனடைந்து வருகின்றனர். இதுவரை ஏறக்குறைய 500 மாணவர்கள் இவ்வகுப்பின் மூலம் பயனடைந்துள்ளனர்.

4.19. நிறுவன நிகழ்வுகள்

நிறுவனத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள பாரதிதாசன் இருக்கை வழியாக 27-04-2022 அன்று பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளை (29-04-2022) முன்னிட்டு ‘புரட்சிக் கவிஞர் வாழ்கிறார்’ என்ற பொருண்மையில் சிறப்புச் சொற்பொழிவு நடத்தப்பட்டது.

தேசிய நூலக நாள் (ஏப்ரல் - 23) விழா 28-04-2022 அன்று ரூபாய் இருபதாயிரம் அரசு நிதியுதவியுடன் நிறுவனத்தில் கொண்டாடப்பட்டது.

03-06-2022 அன்று முத்தமிழறிஞர் கலைஞரின் 99 ஆவது பிறந்த நாளை சிறப்பிக்கும் வகையில் ‘முத்தமிழறிஞர் கலைஞர் - நினைவுகள்’ என்னும் பொருண்மையில் நிறுவனத்தில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.

- தமிழ்நாடு அரசு வழங்கிய ரூ.2.00 இலட்சம் நிதியுதவியில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன மாணவர்களுக்கு 20-06-2022 முதல் 09-07-2022 வரை கல்வெட்டியல் மற்றும் சுவடியியல் தொடர்பான கோடைக்கால பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோற்றுவிக்க முழுமுதற் காரணமாகயிருந்த, மாண்புமிகு தமிழ்நாடு மேனாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 15-09-2022 அன்று ரூபாய் ஐம்பதாயிரம் அரசு நிதியுதவியுடன் நிறுவனர் நாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.
- உலக மொழிபெயர்ப்பு நாளான 30-09-2022 அன்று ரூபாய் இருபதாயிரம் அரசு நிதியுதவியுடன் நிறுவனத்தில் மொழிபெயர்ப்பு நாள் கொண்டாடப்பட்டது.

2023 ஏப்ரல் 6]

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோற்றுவிக்கப்பட்ட நாளான 21-10-1970-ஐ போற்றும் வகையில், 21-10-2022 அன்று ரூபாய் இருபதாயிரம் அரசு நிதியுதவியுடன் நிறுவன நாள் விழா கொண்டாடப்பட்டது.

- 23-12-2022 அன்று தமிழ்நாடு அரசு நிதி நல்கையுடன் திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடத்தின் வாயிலாக 2021-2022 ஆம் ஆண்டுக்கான திருக்குறள் நெறிபோற்றும் ஓவியப் போட்டி நடத்தப்பட்டு, அதில் வெற்றி பெற்ற 15 ஓவியர்கள் ஒவ்வொருவருக்கும் பரிசாக ரூபாய் நாற்பதாயிரமும், பாராட்டுப் பட்டயமும் வழங்கப்பட்டன.

- 11-01-2023 அன்று தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம் சார்பில் நடத்தப்பட்ட அயலகத் தமிழர் நாளில் உலகெங்கும் தமிழ்மொழியில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளையும், தமிழ்மொழி கற்பிக்கப்பட்டு வரும் நிலைகளையும், இன்றைய அயலகத் தமிழர்களுக்கு எடுத்தியம்பும் முறையில் "அயலகத் தமிழர்களால் பல்வேறு நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள தமிழ் ஆய்வுகளும் போக்குகளும்" என்னும் தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நிறுவன ஒருங்கிணைப்பில் நடத்தப்பெற்றது.

4.20. பெருந்திட்டப்பணிகள்

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டத்தின்கீழ் பிறநாட்டு இலக்கியங்களை தமிழ் மொழியில் மொழிபெயர்த்து நிறுவனம் மூலமாக அச்சிட்டு வெளியிடும் வகையில், கிரேக்க காப்பியங்களான ஓமரின் 'இலியட்' மற்றும் 'ஒடிசி' ஆகிய நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு திட்டம் நிறைவடையும் நிலையில் உள்ளது.

- சங்க இலக்கிய நூல்களை சந்தி பிரித்து எளிமை பதிப்பாக வெளியிடுதல், தமிழ் செவ்வியல் இலக்கிய நூல்களை உரையுடன் தொகுத்து வெளியிடுதல், திராவிடக் களஞ்சியம் எனும் தொகுப்பு நூல் வெளியிடுதல் ஆகியவை தொடர்பான ஆயத்தப் பணிகள்

தமிழ்நாடு பாடநூல் கல்வியல் பணிகள் கழகம் மூலம் முடிக்கப்பட்டு, நிறுவனத்தின் வாயிலாக சங்க இலக்கிய நூல்களைச் சந்தி பிரித்து வெளியிடுதலின் நூல் அச்சாக்கப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மூலம் அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நூல்கள், செம்பதிப்புகளாக தமிழில் மொத்தம் 17 தொகுதிகளாக உலகத் தரத்துடன் வெளியிடுவதற்கு முதற்கட்டமாக 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.41,55,000/- அரசால் நிதி வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அண்ணல் அம்பேத்கர் அவர்களால் எழுதப்பட்ட “The Annihilation of caste” மற்றும் “Riddles in Hinduism” ஆகிய இரு நூல்களுக்கான மொழிபெயர்ப்புப் பணிகள் தேசிய மொழிபெயர்ப்புத் திட்டம் (National Translation Mission) மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இயல்—5

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

5.1. தோற்றம்

தமிழ் வாழ்கின்ற நாட்டிற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாள் 1981 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது. திராவிடத் தமிழன் அண்ணா அவர்களின் புகழ்பூத்த ‘த’, ‘மி’, ‘ழ்’, ‘நா’, ‘டு’ என்ற எழுத்துகளால் தனித்தனிக் கட்டடங்கள் உருவாக்கப்பட்டன.

‘த’- கலைப்புலம், ‘மி’- அறிவியல் புலம், ‘ழ்’- மொழிப்புலம், ‘நா’-சுவடிப்புலம், ‘டு’- வளர்தமிழ்ப்புலம் என்ற ஐந்து எழுத்துகளில் ஐந்து புலங்கள் உருவாக்கப்பட்டன. ஐந்து புலங்களுக்குக் கீழான அதன் மையப் பொருண்மையை அடிப்படையாகக் கொண்டு 26 துறைகள் உருவாக்கப்பட்டன. தமிழ் மொழி, இனம், பண்பாடு மற்றும் வரலாறு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. பிற பல்கலைக்கழகங்களைப் போல் தமிழ்ப் பல்கலைக்கழகம் இல்லாமல் இது உயராய்வு ஆய்வுகளை மையப்படுத்தி தனித்துவமாக செயலாற்றிக் கொண்டிருக்கிறது. ஆரோக்கியமான பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட

2023 ஏப்ரல் 6]

மாணவர்களை உருவாக்கும் மிகச் சிறந்த பணியை தமிழ்ப் பல்கலைக்கழகம் செய்துகொண்டு வருகிறது.

5.2. குறிக்கோள்கள்

- *தமிழ் மொழியிலேயே அறிவியல் பட்டங்களுக்கான பாடங்களை உருவாக்குதல். அறிவியல் தொழில்நுட்பம், மருத்துவம், சட்டம், மொழியியல் என பல்வேறு பட்டங்களுக்கு பாடங்களை உருவாக்குதல். இந்த பாடங்களை மாணவர்கள் தமிழிலேயே படிப்பதற்கு வழிவகை செய்தல்.*
- *தமிழின் பழைமையை பிற மொழியாளர்களுக்கு உணர்த்துதல்.*
- *பிற மொழிகளோடு தமிழ்மொழியை ஒப்பிட்டு ஆராய்தல்.*
- *அழிந்து கொண்டிருக்கும் நம்முடைய பழைமை பண்பாட்டு மரபுகளை ஆவணப்படுத்துதல்.*
- *தமிழரின் அடையாளங்களான கலைகளை மீட்டெடுத்தல், பயிற்சி அளித்தல்.*
- *மரபுசார்ந்த மருத்துவத்தையும், பண்பாட்டையும் சமரசமின்றி அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லுதல்.*
- *தொல்லியல் எச்சங்களைக் கண்டறிதல்.*
- *ஓலைச்சுவடிகளில் உள்ள இலக்கியங்களை மின்னாக்கம் செய்வதன் மூலம் நமது பண்டைய இலக்கியங்களைக் காத்தல்.*

5.3. மாணவர்கள் நேரடி சேர்க்கை விவரம்

2022-2023 ஆம் கல்வியாண்டில் முனைவர் பட்டப்படிப்பில் 36 மாணவர்களும் ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்பில் 17 மாணவர்களும், முதுநிலைப் பட்டப் படிப்பில் 267 மாணவர்களும் ஒருங்கிணைந்த முதுநிலைப் பட்டப் படிப்பில் 324 மாணவர்களும் இளங்கல்வியியல் பட்டப் படிப்பில் 200 மாணவர்களும் கல்வியியல் நிறைஞர் பட்டப் படிப்பில் 2 மாணவர்களும் பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளில் 259 மாணவர்களும் சேர்க்கை

பெற்றுள்ளனர். தற்போது பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை 1,105 ஆக உள்ளது.

5.4. செயற்பாடுகள்

தமிழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் கற்பித்தல் பணிகளோடு பெருந்திட்ட/குறுந்திட்ட ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

- சென்னையில் நடைபெற்ற குடியரசு நாள் விழா அணிவகுப்பில் தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்டனர்.
- தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் உள்ள 87 அறக்கட்டளைகள் மூலம் கருத்தரங்குகள் மற்றும் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன.
- சித்த மருத்துவத் துறைப் பேராசிரியர்களைக் கொண்டு பொதுமக்களுக்கு பல்வேறு நோய்களுக்கு மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.
- தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் 1,89,454 நூல்கள் உள்ளன. இவற்றை மாணவர்கள், ஆய்வாளர்கள், பொது மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

5.5. நடைபெற்று வரும் திட்டங்கள்

5.5.1. தமிழ்ப் பண்பாட்டு மரபுகள், தமிழ் மண்ணின் மரபுகளை ஆவணப்படுத்துதல், மரபுக் கலைகளை மீட்டுருவாக்கம் செய்தல்

தமிழ்ப் பண்பாட்டு மரபுகள், தமிழ் மண்ணின் மரபுக் கலைகளை மீட்டெடுத்தல், நாட்டுப்புறவியல் துறையை மேம்படுத்துதல், நாட்டுப்புறவியல் அருங்காட்சியகம் அமைத்தல், சிலப்பதிகாரம் காட்டும் இசை, ஆடல் அமைதிகளை மீட்டுருவாக்கி ஆவணப்படுத்துதல், கல்வெட்டுகள் காட்டும் தமிழ்க் கலைப் பண்பாடு குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளுதல், கைவினைப் பொருள்கள் தயாரித்திட பயிற்சி அளித்தல், நூல்கள் வெளியிடுதல், கருத்தரங்கு நடத்துதல் ஆகிய திட்டப் பணிகள் ரூ.2.11 கோடி மதிப்பீட்டில் 3 ஆண்டுகளில் மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 6]

5.5.2 யோகா பயிற்சி மையம் செயற்படுதல்

தமிழ்ப் பல்கலைக்கழக மெய்யியல் துறையின் வழி யோகா பயிற்சி மையம் செயற்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென 2022-2023 ஆம் நிதியாண்டிற்கு ரூ.1,50,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் இரு யோகா பயிற்றுநர்கள் நியமனம் செய்யப்பெற்று யோகா பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

5.5.3. தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் மறு மதிப்பீட்டிற்கு உட்படுத்தி உயர் புள்ளிகள் பெறுதல்

தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் மறு மதிப்பீட்டிற்கு உட்படுத்தித் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு உயர் புள்ளிகள் பெற அலுவலகக் கட்டடம், நூலகம், கூத்துக்களரி வளாகம் உள்ளிட்டவற்றின் கட்டமைப்புகளுக்கு சிறப்புச் சீர்க் காப்புப் பணிகள், மற்றும் பேராசிரியர்களின் ஆய்வுக்கான அடிப்படை நிதி (seed money) முதலான பணிகளுக்கு நல்கை ரூபாய் இரண்டு கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.5.4. இணையவழிக் கருத்தரங்கம்

"கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. 150" என்ற தலைப்பில் வ.உ.சிதம்பரனார் அவர்கள் குறித்த இணையவழிக் கருத்தரங்கு 17.03.2022 அன்று தொடங்கி 15.04.2022 வரை 30 நாள்கள் நடத்தப் பெற்றது. பேராசிரியர்களும் அறிஞர்களும் ஆற்றிய கருத்தரங்க உரைகள் நூலாக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

5.5.5. தமிழ் இலக்கியங்கள் உலக மொழிகளில் மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிடுதல்

தமிழ் இலக்கியங்களை உலக மொழிகளில் மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிடுவதற்கு ரூபாய் பன்னிரெண்டு இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. முத்தமிழறிஞர் கலைஞரின் சங்கத்தமிழ் நூலினை பிரெஞ்சு மற்றும் ஜெர்மன் மொழியில் மொழியாக்கம் செய்வதற்கு முடிவாற்றப்பட்டது. இந்நூலின் வெளியீட்டாளர் தமிழ்க்கனி பதிப்பக உரிமையாளரிடம் ஒப்புதல் பெறப்பட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 'சங்கத் தமிழ்' நூலை மொழிபெயர்ப்பாளர்கள் திரு. சச்சிதானந்தம் பிரெஞ்சு மொழியிலும், திரு.சுசீந்திரன் ஜெர்மன் மொழியிலும், மொழிபெயர்ப்பு பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.

[2023 ஏப்ரல் 6

5.5.6. தமிழறிஞர் இராபர்ட் கால்டுவெல் ஆய்விருக்கை

தமிழறிஞர் இராபர்ட் கால்டுவெல் தமிழ் ஆய்விருக்கையில் ஓய்வுபெற்ற மொழியியல் துறை பேராசிரியர், ஆய்வறிஞராக நியமிக்கப்பட்டு, "அறிஞர் இராபர்ட் கால்டுவெல்லுக்குப் பின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண ஆய்வுகள்" எனும் தலைப்பில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5.6. தமிழ்ப் பண்பாட்டு மையம்/தமிழ் வளர் மையம்

தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் வழி இசை, பரத நாட்டியம் மற்றும் மரபுக்கலைகளுக்குரிய சான்றிதழ் மற்றும் பட்டய வகுப்புகள் நடத்துவதற்கு உள்நாடு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் என இதுவரை 58 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, மாணவர்கள் சேர்க்கை செய்யப்பெற்று வருகின்றது. உள்நாட்டில் இதுவரை 2,274 மாணவர்கள், வெளிநாட்டில் 438 மாணவர்கள் என மொத்தம் 2,712 மாணவர்கள் சேர்க்கப் பெற்று நேரடி பயிற்சி வகுப்புகள் மையங்களின் வழி நடைபெற்று வருகின்றன.

தமிழ் வளர் மையத்தின்வழி, தமிழ்மொழி சான்றிதழ், பட்டயம் மற்றும் இளங்கலை, முதுகலை பட்டப்படிப்பு வகுப்புகள் நடத்துவதற்கு உள்நாட்டிலும் மற்றும் வெளிநாட்டிலும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, மாணவர்கள் சேர்க்கப் பெற்று மையங்களில் நேரடி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இயல்—6

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

6.1. தோற்றம்

"வீறுடைய செம்மொழி தமிழ்மொழி! உலகம் வேரூன்றிய நாள் முதல் உயிர்மொழி!" என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களால் போற்றப்பட்ட சிறப்பிற்குரியது தமிழ்மொழி. உயர்தனிச் செம்மொழியான தமிழ்மொழியை உலகெங்கும் தழைத்தோங்கச் செய்யும் உலகத் தமிழர்களையும் உலகத் தமிழ் அமைப்புகளையும் ஒருங்கிணைத்து, ஒரு குடையின்கீழ் கொண்டு

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 6]

வருவதை முதன்மையான நோக்கமாகக் கொண்டு சீரிய முறையில் தமிழ் பணியாற்றிவரும் உலகத் தமிழ்ச் சங்கம் 1986 இல் தொடங்கப்பெற்று சீரிய முறையில் செயலாற்றி வருகிறது.

'நான்மாடக் கூடல்', 'தூங்கா நகரம்', 'கோயில் நகரம்', 'ஆலவாய்', 'விழாமலி மூதூர்', 'மணமதுரை', 'கடம்பவனம்', 'கூடல் மாநகர்' மற்றும் 'கிழக்கு நாடுகளின் ஏதென்ஸ்' என்றெல்லாம் பலவாறு புகழப்பட்ட பெருமைக்குரியது மதுரை மாநகரம். இத்தகு சிறப்புகளைத் தாங்கி நிற்கும் மதுரைக்கு மேலும் சிறப்பு சேர்க்கக்கூடியதாக திகழ்வது 'உலகத் தமிழ்ச் சங்கம் - மதுரை'. வானளாவிய கட்டடத்தில் அமைந்துள்ள உலகத் தமிழ்ச் சங்கத்தில் கலையரங்கம், கூட்ட அரங்கங்கள், நிருவாகப் பிரிவு, ஆய்வுப் பிரிவு, நூலகம், வகுப்பறைகள், கருத்தரங்க அறை, குழுக்கூட்ட அரங்கம் மற்றும் விருந்தினர் தங்கும் அறைகள் உள்ளிட்டவை அமைக்கப்பட்டுள்ளன. முன்பக்க சுற்றுச்சுவர் ஐயன் வள்ளுவனின் 1,330 குறள்களையும் தாங்கி நிற்கின்றது.

உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழறிஞர்களும், ஆய்வு மாணவர்களும் பயன்பெறும் வகையில் 26,000-க்கும் மேற்பட்ட நூல்களுடன் குளிரூட்டப்பட்ட வசதியுடன் காற்றோட்டமான நூலகம் செயற்பட்டு வருகின்றது. தற்போது ரூபாய் 21 இலட்சம் மதிப்பீட்டில் நூலகம் புனரமைக்கப்பட்டுள்ளது.

சீர்மிகு உலகத் தமிழ்ச் சங்கத்தினை பார்வையிடுவதற்காகவும், இங்கு நடைபெறுகின்ற இலக்கியக் கருத்தரங்க நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காகவும் அயல்நாட்டுத் தமிழறிஞர்கள், பிற மாநிலத் தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் ஆர்வத்தோடு வருகைதந்தும், கண்டும் பெருமிதம் அடைகின்றனர்.

6.2. நோக்கம்

- *உலகமெல்லாம் பரவி வாழும் தமிழர்கள், தாங்கள் வாழும் நாடுகளில் தமிழ்ச் சங்கங்கள், அமைப்புகள், நிறுவனங்கள், தமிழ் ஆய்வு மையங்கள் ஆகியவற்றைத் தோற்றுவித்து தமிழ் வளர்த்து வருகின்றனர். இத்தகு தமிழ் வளர்க்கும் நிறுவனங்களின் விவரங்களை தொகுத்தல் மற்றும் பதிவு செய்தல்;*

- தமிழ் அமைப்புகள் அனைத்தையும் ஒருகுடையின்கீழ் பதிவு செய்து, ஒருங்கிணைத்துக் கூட்டமைப்பு ஒன்றினை உருவாக்கி தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு உதவுதல்;

- இலக்கியம், பண்பாடு, தமிழ்மொழி பற்றிய செய்திகளை உலக நாடுகளிலெல்லாம் பரவச் செய்தல்;

- உலக நாடுகளில் வாழும் தமிழர்களின் வாழ்க்கை முறை, இலக்கியப் பணி ஆகியவற்றை தொகுத்து வழங்குதல்;

- உலகத் தமிழர் பற்றிய களஞ்சியம் தயாரித்து வெளியிடுதல்;

- பொருளாதாரம் மற்றும் வாழ்வியல் காரணங்களால் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் குடியேறிய நாடுகளான மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, தென் ஆப்பிரிக்கா, பிஜி, மொரிசியசு, பிரெஞ்சு கயானா மற்றும் தற்போது குடியேறிய நாடுகளான அமெரிக்கா, பிரான்சு, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, குவைத் ஆகிய நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு மொழி, இலக்கியம் மற்றும் பண்பாட்டு அடிப்படையிலான உதவிகளை அளித்தல்;

- தமிழர் இலக்கியங்கள் மற்றும் பண்பாட்டு அடையாளங்களை அயல்நாடுகளில் உள்ள தமிழர்கள் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல்.

- உலக நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள், தமிழ்மொழி பற்றி ஆராய்ச்சி மையம் அமைக்க உலகத் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாக நடவடிக்கைகள் மேற்கொள்ளல்;

- உலக நாடுகளில் தமிழர் வாழும் இரண்டு நாடுகளை, ஒவ்வோர் ஆண்டும் தேர்வு செய்து அந்நாடுகளில் ஆய்வரங்கங்கள், கருத்தரங்குகள் நடத்த ஏற்பாடுகள் செய்தல்;

- தமிழ்நாட்டின் பழம்பெரும் கலைகளான சிற்பங்கள், நுட்பம் வாய்ந்த ஓவியங்கள், நாடகங்கள், நாட்டுப்புறக் கலைகள் ஆகியவற்றை அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் உய்த்துணர உரிய வாய்ப்புகளை சங்கத்தின் வாயிலாக ஏற்படுத்தித் தருதல்;

2023 ஏப்ரல் 6]

6.3. சங்கத் தமிழரின் மாண்பினை உணர்த்தும் 'சங்கத் தமிழ்க் காட்சிக்கூடம்'

உலகத்தின் பார்வையை தமிழனின் பக்கம் திரும்ப செய்த மதுரையில், சங்கத் தமிழரின் காதல், வீரம், அறத்தின்பாற்பட்ட வாழ்க்கைமுறைகளை எடுத்துரைக்கும் சங்க இலக்கியப் பாடல் காட்சிகள் இன்றைய தலைமுறையினரும் உலகினரும், அறிந்து தெளியும் வண்ணம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

சங்கத் தமிழரின் பண்பாட்டையும், பெருமையையும் அறிந்து வியக்கும் வண்ணம் ஓவியங்கள், சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள், கற்சிற்பங்கள், பழந்தமிழர் வாழ்வியல் பற்றிய கல்வெட்டுகளின் புகைப்படங்கள் என கலைப்பொருள்களை தன்னகத்தே கொண்டு சங்கத் தமிழ்க் காட்சிக்கூடம் காண்போரின் கருத்தைக் கவரும் வகையில் அமையப்பெற்றுள்ளது.

இந்தக் காட்சிக்கூடத்தில் அண்மையில் வரலாற்றுத் துறை மாணவர்களுக்கு படிப்பிடைப் பயிற்சி வழங்கும்விதமாக, சங்கத்தமிழரின் வாழ்வியலையும், பண்பாட்டுச் சிறப்புகளையும் எடுத்துக் கூறும் வகையில், சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்தப்பெற்று வருகின்றன. அவ்வகையில் கருமாத்தூர் அருள் ஆனந்தர் கல்லூரி, திண்டுக்கல் எம்.வி.முத்தையா மகளிர் அரசு கலைக் கல்லூரி ஆகியவற்றில் நடத்தப் பெற்ற சொற்பொழிவுகளில் வரலாற்றுத் துறை மாணவர்கள் பங்கேற்றுப் பயன் பெற்றனர்.

6.4. தமிழோடு கலக்கும் தமிழ்க்கூடல்

இரு நதிகள் சங்கமிக்கும் இடத்தை கூடல் என்பர். உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழாய்ந்து கூறும் அறிஞரோடு தமிழை நாடும் உள்ளங்கள் ஒன்று கூடும் நிகழ்வு 'தமிழ்க்கூடல்' என்னும் பெயரில் வாரந்தோறும் நடத்தப்பெற்று வருகின்றது. இங்கு சங்க இலக்கியம் முதல் தற்கால இலக்கியங்கள் வரை சங்கமிக்கின்றன. இத்திட்டத்திற்கென 2022-2023 ஆம் நிதியாண்டிற்கு ரூ.3,50,000/- நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

6.5. அரங்கேற்றம் காணும் நூல்கள்

நூல்களை இயற்றுவோர், தாம் படைத்த நூல்களை அனைவரின் முன்னிலையிலும் அரங்கேற்றம் செய்வது தமிழரின் தொல்மரபு. அந்த மரபைத் தொடரும் வகையில், உலகத் தமிழ்ச்

சங்கத்தில் நல்ல தமிழ் நூல்கள் திங்கள்தோறும் அரங்கேற்றம் காண்கின்றன. மதிப்புரை வழங்குவதோடு, பாராட்டுச் சான்றிதழும் நூலாசிரியர்களுக்கு வழங்கி சிறப்பிக்கப்படுகின்றது. இந்த ஆண்டில் இதுவரை 21 நூல்கள் அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கென 2022-2023 ஆம் நிதியாண்டிற்கு ரூ.64,000/- நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

6.6. 'தமிழால் முடியும்...!' பயிற்சித் திட்டம்

இளந்தமிழர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டுவதற்கு பயிற்சியளிக்கும் விதமாக 'தமிழால் முடியும்...!' என்ற பயிற்சி நடத்தப்பெற்றது. தமிழ் எவ்வகையில் எல்லாம் நம்மை வழிநடத்தும், வாழ வைக்கும், செம்மை மனிதராய் திகழச் செய்யும் என்பதை உணர்த்தும் நோக்கில் நடத்தப்பெற்ற 'தமிழால் முடியும்...!' என்ற வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சி, பயிற்றுநர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்டு மூன்று நாள்கள் நடத்துவதற்கு 2022-2023 ஆம் நிதியாண்டிற்கு ரூ.15,55,000/- நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதில் 38 மாவட்டங்களில் இருந்து வந்த 200 மாணவர்கள் பங்குபெற்று பயனடைந்தனர். பல்துறை அறிஞர்கள் பங்கேற்று மாணவர்களை நெறிப்படுத்தினர்.

6.7. புலம்பெயர் தமிழர்களை அறிந்து தெளிதல்

இயற்கை, போர், தொழில், கல்வி, திருமணம் என பல்வேறு காரணங்களுக்காக புலம்பெயர்ந்து உலகெங்கும் பரவி வாழும் தமிழர்களின் வாழ்வியலை அறிந்து தெளிய 'ஐயை உலகத் தமிழ் மகளிர் மன்றத்துடன்' இணைந்து 'உலகத் தமிழ் இலக்கிய விழா'வில் 'புலம்பெயர் தமிழர்களின் வாழ்வியல்' என்ற பன்னாட்டுக் கருத்தரங்கமும், 'பெண் சக்தி' என்னும் பன்னாட்டுக் கவியரங்கமும் மற்றும் 'தமிழர் பண்பாடும் நாகரிகமும் இன்று வளர்கிறதா தேய்கிறதா' என்ற வாழ்வியல் பட்டிமன்றமும் நடத்தப்பெற்றன.

6.8. சேரரைப் போற்றும் தேசியக் கருத்தரங்கம்

கேரள திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து மூவேந்தர்களில் சேரர்களின் பணிகளையும், இலக்கியப் பங்களிப்புகளையும் நினைவுகூரும் வகையில் 'செந்தமிழும் சேரநாடும்' என்ற தலைப்பில் தேசியக் கருத்தரங்கம் நடத்தப்பெற்று நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 6]

6.9 இலக்கியம், இலக்கணம் அறிவோம் - பயிற்சி

தமிழ் மொழியின் எல்லை என்பது அதன் இலக்கிய வளத்தால் காலந்தோறும் விரிவடைந்து வருகின்றது. தமிழ் மொழியின் இலக்கிய செழுமையையும் இலக்கண வளமையையும் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் 100-க்கும் மேற்பட்டோருக்கு 15 நாட்கள் 'இலக்கியம், இலக்கணம் அறிவோம்...!' என்னும் கட்டணமில்லா பயிற்சி அளிக்கப்பெற்றது. சங்க இலக்கியம் முதல் தற்கால இலக்கியம் வரை, இலக்கணம் மற்றும் படைப்பாக்கப் பயிற்சி என அனைத்து வகையிலும் பங்கேற்றோரை பயனடையச் செய்வதாக இந்தப் பயிற்சி வழங்கப்பெற்றது.

6.10. நிறுவனர் நாள்

உயரிய நோக்குடன் உலகத் தமிழ்ச் சங்கத்தின் தோற்றுவாய்க்கு வித்திட்ட மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களின் பிறந்தநாளான ஜனவரி 17 ஆம் நாள், ஆண்டுதோறும் நிறுவனர் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்கென ஆண்டுதோறும் ரூ.1,30,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

6.11. அயலகத் தமிழ்ப் படைப்பாளர்களின் நூல் வெளியீடு

அயலகத் தமிழ் இலக்கியம் என்பது இன்று அனைவராலும் விரும்பத்தக்க வகையில் வளர்ச்சியடைந்து வருகின்றது. அதிலொரு சிறு பங்களிப்பினை வழங்கும் நோக்கில், மலேசியா, இயல் பதிப்பகத்துடன் இணைந்து மலேசிய தமிழ்ப் படைப்பாளர்களின் 5 நூல்கள் வெளியிடப்பட்டன.

6.12. அயலகத் தமிழறிஞர்களின் பணிகளுக்குப் பெருமை சேர்த்தல்

உலகத் தமிழர்கள் பல இடர்ப்பாடுகளைக் கடந்து, தமிழ் வளர்ச்சிக்கென தங்களது பங்களிப்பினை செலுத்தி சாதனைகள் புரிந்து வருகின்றனர். அவர்களின் நிகரில்லாப் பணிகளை அங்கீகரிக்கும் நோக்கிலும், அவர்களின் சாதனைகளை வெளிக்கொணரும் நோக்கிலும் ஆண்டுதோறும் இலக்கியம், இலக்கணம், மொழியியல் ஆகிய துறைகளில் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

[2023 ஏப்ரல் 6

6.13. அணி சேர்க்கும் அறக்கட்டளைகள்

தமிழுக்குத் தொண்டு செய்யும் உன்னத நோக்கத்தில் உலகத் தமிழ்ச் சங்கத்தில் ஐந்து அறக்கட்டளைகள் நிறுவப்பெற்றுள்ளன. அவை,

- சீனக்கவிஞர் யூசி - திருக்குறள் அறக்கட்டளை
- சிந்தனைக் கவிஞர் கவிதாசன் - நூற்பதிப்புச் செம்மல் வைரவன் அறக்கட்டளை
- ஆஸ்திரேலியா, சிட்னி தமிழ்க் கலை மற்றும் பண்பாட்டுக் கழக அறக்கட்டளை
- சிங்கப்பூர் முனைவர் ஆ.ரா. சிவகுமாரன் - தேன்மொழி அறக்கட்டளை
- தமிழ் மரபினர் பண்பாட்டுச் சங்க அறக்கட்டளை.

இந்த அறக்கட்டளைகளின் சார்பில் ஆண்டுதோறும் நிகழ்வுகள் நடத்தப்பெற்று வருகின்றன. அவ்வகையில் சிங்கப்பூர், முனைவர் ஆ.ரா. சிவகுமாரன் - தேன்மொழி அறக்கட்டளையின் சார்பில் சொற்பொழிவு நடத்தப்பெற்றது. மேலும், சிந்தனைக் கவிஞர் கவிதாசன் - நூற்பதிப்புச் செம்மல் வைரவன் அறக்கட்டளையின் சார்பில் சொற்பொழிவு நடத்தப்பெற்றது. அந்நிகழ்வில், இதழியலாளர் சமஸ் அவர்கள் பங்கேற்று பொழிவுரை வழங்கினார். கல்லூரி மாணவர்கள் பங்குபெற்ற குறுங்கதைப் போட்டி நடத்தப்பெற்று ரூபாய் 5,000/-, ரூபாய் 3,000/-, ரூபாய் 2,000/- என மூன்று பரிசுகள் வழங்கப்பெற்றன.

6.14. உயரும் உறுப்பினர் சேர்க்கை

தமிழ் சார்ந்த கூட்டமைப்பை உருவாக்கும் நோக்கில் தமிழறிஞர்களும் தமிழ் ஆர்வலர்களும் உலகத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு வருகின்றனர். உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையில் இதுநாள்வரை 2500-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

6.15. அயலகத் தமிழ்ப் புத்தகப் பூங்கா

அயலகத் தமிழர்களின் படைப்புகளுக்காக 'அயலகத் தமிழ்ப் புத்தகப் பூங்கா' என்ற சிறப்புப் பிரிவு அமைக்கப் பெற்றுள்ளது.

2023 ஏப்ரல் 6]

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, பிரான்சு, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா உள்ளிட்ட பல நாடுகளில் வாழும் தமிழர்களின் படைப்புகளையும் அங்குப் பதிப்பிக்கப்படும் தமிழ் நூல்களையும் காட்சிப்படுத்துவதற்கும், விற்பனை செய்வதற்கும் நிலையாக உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகத்தில் 'அயலகத் தமிழ்ப் புத்தகப் பூங்கா' அமைக்கப் பெற்றுள்ளது. இத்திட்டத்திற்கெனத் தொடர் செலவினமாக ரூ.5,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6.16. உள்ளக்கிடக்கையை உரைக்கும் அயலகத் தமிழ் இதழ்கள்

அயலகத்தில் வாழும் தமிழர்கள் தங்களின் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தவும் பரிமாறிக்கொள்ளவும் துணை நிற்பவை இதழ்களாகும். புலம்பெயர் தமிழர்களால் பல்வேறு சிக்கல்களுக்கிடையே நடத்தப்பெற்று வரும் இதழ்களும், மின்னிதழ்களும் கண்டறிந்து வகைப்படுத்தப்பட்டு உலகத் தமிழ்ச் சங்கத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் விவரங்கள் அடங்கிய களஞ்சியம் தயாரிக்கும் பணியும் நடைபெற்று வருகின்றது.

6.17. வெளியீடுகளின் அணிவரிசை

உலகத் தமிழ்ச் சங்கம் சார்பில் நடைபெற்ற கருத்தரங்குகளின் கட்டுரைகள் தொகுக்கப்பெற்று நூலாக்கம் செய்யப்பெற்றுள்ளன. அதில் 27 நூல்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அவற்றில், 'உலகத் தமிழ் அமைப்புகள் - தொகுதி 2', 'புலம்பெயர் தமிழர்களின் வாழ்வியல்', 'பொன்மனச் செம்மல் - ஒரு பன்முகப் பார்வை', 'செந்தமிழும் சேரநாடும்' ஆகிய நூல்கள் இந்த ஆண்டு வெளியிடப் பெற்றுள்ளன. இவை தவிர, மகாகவி பாரதியாரின் நினைவு நூற்றாண்டினைப் போற்றும் வகையில் நடத்தப்பெற்ற இணையவழிக் கருத்தரங்கத்தின் கட்டுரைகள் தொகுக்கப்பெற்று 'பாரெங்கும் பாரதி' என்ற ஆய்வுக்கோவையாகவும், நிறுவனர் நாள் விழா நூலும் வெளியிடப்பட்டுள்ளன.

6.18. 'உலகத் தமிழ்' பன்னாட்டு மின் ஆய்விதழ்

உலகத் தமிழர்களை இணைக்கும் கருவியாக உலகத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் 'உலகத் தமிழ்' பன்னாட்டு மின் ஆய்விதழ் காலாண்டிற்கொருமுறை வெளியிடப்பெற்று வருகிறது.

[2023 ஏப்ரல் 6

இதுநாள் வரை 18 காலாண்டிதழ்கள் வெளிவந்துள்ளன. இதனுடன் அனைவரும் படித்து மகிழும் வகையில் பல்சுவை இதழாக திங்கள்தோறும் மின்னிதழாகவும் வெளிவருகின்றது. இத்திட்டத்திற்கென 2022-2023 ஆம் நிதியாண்டிற்கு ரூ.2,20,000/- நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

6.19. உலகத் தமிழமைப்புகளின் விவரம்

உலகத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினராக இணைந்துள்ள 257 தமிழ்ச் சங்கங்களின் விவரங்கள் உலகத் தமிழ்ச் சங்க வலைதளத்தில் (www.utsmdu.org) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

இயல் -7

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் (Central Institute of Classical Tamil) தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக ஒன்றியக் கல்வி அமைச்சகத்தின் மொழிப் பிரிவின் கீழ் செயல்பட்டுவரும் ஒரு தன்னாட்சி நிறுவனமாகும். இந்நிறுவனம் 2004 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் நாள் தமிழ் மொழியை செம்மொழியாக ஒன்றிய அரசு அறிவித்த பின்னர் ஏற்படுத்தப்பட்டதாகும்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்காக சென்னை பெரும்பாக்கத்தில் தமிழக அரசால் வழங்கப்பட்ட (16.58 ஏக்கர்) இடத்தில் புதிய கட்டடம் கட்டுவதற்கு 2017 ஆம் ஆண்டு மத்திய அரசு ரூ.24,65,47,000/- ஒதுக்கீடு செய்தது. புதிய கட்டடக் கட்டுமானப் பணி ஒன்றிய பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், பணிகள் அனைத்தும் முடிவடைந்ததும் கடந்த ஜனவரி 12 ஆம் நாள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களால் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்நிறுவனத்தின் தலைவராக செயலாற்றி வருகிறார். ஆட்சிக் குழு, நிதிக் குழு மற்றும் கல்விக் குழுவால் நிறுவனத்தின் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 6]

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், கி.பி. 600-க்கு முந்தைய காலத்தை செவ்வியல் காலமாகக் கொண்டு பண்டைத் தமிழ்ச் சமூகம் பற்றிய ஆய்வை நிகழ்த்தும் வகையில் செயல்பட்டு வருகிறது. பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் எல்லாக் கூறுகளையும் ஆவணப்படுத்தி பாதுகாப்பதை இந்நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழின் தொன்மை, தனித்தன்மை, தமிழர்களின் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றின் சிறப்புகளைக் கவனத்தில் கொண்டு பின்வருவனவற்றை முதன்மையான குறிக்கோளாக இந்நிறுவனம் கொண்டுள்ளது:

- ❖ இந்தியப் பண்பாட்டின் பன்முக இயல்பு பற்றியும், இந்தியப் பண்பாட்டிலும் மரபிலும் தமிழியக் கூறுகளின் பங்களிப்புப் பற்றியும் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்கு ஊக்கமளித்து மேம்படுத்துதல்.
- ❖ பல்துறை சார்ந்த அறிஞர்களை ஒருங்கிணைத்து தமிழின் தொன்மை குறித்து ஆராய்தல்.
- ❖ தமிழ் பிற திராவிட மொழிகள் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம் குறித்து ஆய்வு செய்தல்.
- ❖ திராவிட மொழிகளின் வரலாற்று ஒப்பாய்வையும், வரலாற்று முறையில் தமிழ் வழக்காறுகள் குறித்த ஆய்வையும் மேற்கொள்ளுதல்.
- ❖ 41 செவ்வியல் தமிழ் நூல்களையும் உலக மொழிகளிலும், இந்திய மொழிகளிலும் மொழி பெயர்த்து வெளியிடுதல்.
- ❖ செவ்வியல் காலத்திற்குட்பட்ட 41நூல்களையும் சுவடிகள், பழம்பதிப்புகள், உரைமேற்கோள்கள் கொண்டு ஒப்பிட்டு மரபுவழி மூலபாடச் செம்பதிப்புகளை உருவாக்குதல்.
- ❖ முதுகலை, முனைவர், முனைவர் பட்ட மேலாய்வு உள்ளிட்ட பட்டப் படிப்புகளில் செம்மொழித் தமிழைக் கற்கவும், ஆராய்ச்சி மேற்கொள்ளவும் வாய்ப்பை உருவாக்குதல்.
- ❖ கல்வி நிறுவனங்களிடமிருந்தும், தனிநபர்களிட மிருந்தும் செம்மொழித் தமிழாய்வு தொடர்பாக பெறப்படும் ஆய்வுத் திட்டங்களுக்கு நிதியுதவி அளித்தல்.

[2023 ஏப்ரல் 6

- ❖ செம்மொழித் தமிழின் சிறப்புகளை வெளிப்படுத்தும் வகையில் தேசிய, பன்னாட்டு கருத்தரங்குகள், பயிலரங்குகள், பணியரங்குகளை நடத்துதல், தகுதி வாய்ந்த கல்வி நிறுவனங்களுக்கு அவற்றை நடத்துவதற்குத் தேவையான நிதியுதவி அளித்தல்.
- ❖ செம்மொழித் தமிழின் சிறப்புகளை வெளிப்படுத்தும் ஆய்வு நூல்களைப் பதிப்பிக்க உதவி செய்தல்.
- ❖ செம்மொழித் தமிழில் முனைவர் பட்டமும், முனைவர் பட்ட மேலாய்வும் மேற்கொள்வோருக்கு உதவித்தொகை வழங்குதல்.
- ❖ செம்மொழித் தமிழாய்வில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு நல்கியோர்க்கு விருதுகள் வழங்கிச் சிறப்பு செய்தல்.
- ❖ செம்மொழித் தமிழ்க் கல்வியை இந்தியாவிலும் அயல்நாட்டிலும் மேம்படுத்துதல்.
- ❖ செவ்வியல் நூல்கள் சார்ந்த பழஞ்சுவடிகளையும் பதிப்புகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாத்தல்.
- ❖ தமிழ்ச் செவ்விலக்கியங்களில் பயின்றுவரும் மொழியாட்சியைப் புரிந்து கொள்ளுதல், விளக்குதல், நயம்பாராட்டுதல் ஆகிய திறன்களைக் கற்போர் அடைய உதவுதல் என்பதனை நோக்கமாகக் கொண்டு இணையவழிச் செம்மொழிக் கல்வித் திட்டத்தை நிறைவேற்றுதல்.
- ❖ 41 செவ்வியல் நூல்களுக்கான தரவகம் உருவாக்குதல், இலக்கண, இலக்கியக் கல்வி, இயற்கை மொழி ஆகியவற்றிற்கு பயன்படும் மென்பொருள்களை உருவாக்குதல்.
- ❖ செம்மொழித் தமிழ் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் வழங்கும் மையமாகச் செயல்படுதல்.

சாதனைகள்

- ❖ பல்வேறு சங்க இலக்கிய நூல்கள், ஆய்வு நூல்கள் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 6]

- உலகப் பொதுமறையாம் திருக்குறள் ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், மணிப்புரி, குஜராத்தி, பஞ்சாபி, இந்தி, சமஸ்கிருதம், ஒடியா, உருது, அரபு, மலையாளம், மராத்தி, வாக்ரிபோலி, நேபாளி, படுகு, கெமர், பெர்சியன் ஆகிய 19 உலக மற்றும் இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- தொல்காப்பியம், நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், முத்தொள்ளாயிரம், இறையனார் களவியல் உரை ஆகிய நூல்கள் ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- சங்க இலக்கியம் முழுவதும் கன்னட மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- தொல்காப்பியம் இந்தி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- இறையனார் களவியல் உரை, ஐங்குறுநூறு ஆகிய நூல்கள் செம்பதிப்புகளாக வெளியிடப்பட்டுள்ளன.
- 60 ஆய்வு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.
- 267 முனைவர் பட்ட மாணவர்களுக்கும் 43 முனைவர் பட்ட மேலாய்வாளர்களுக்கும் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளன.
- திருவாரூர் மத்திய பல்கலைக்கழகத்தில் செம்மொழித் தமிழ் பயிலும் மாணவர்களுக்குத் திங்கள்தோறும் ரூ.3,000/- உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.
- 39 செம்மொழிப் பயிலரங்குகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.
- திருக்குறள், முத்தொள்ளாயிரம், நானாற்பது, தொல்காப்பியம் ஆகிய நூல்கள் அலைபேசி செயலிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

செம்மொழித் தமிழாய்வு நிறுவன விருதுகள்

இந்திய அறிஞர் ஒருவருக்கு ரூபாய் 5 இலட்சம் பரிசுத் தொகையுடன் தொல்காப்பியர் விருது வழங்கப்படுகிறது.

❖ *வெளிநாட்டினர் ஒருவருக்கும், வெளிநாடுவாழ் இந்தியர் ஒருவருக்கும் ரூபாய் 5 இலட்சம் பரிசுத் தொகையுடன் குறள்பீட விருதுகள் வழங்கப்படுகின்றன.*

❖ *இந்திய இளம் அறிஞருக்கு ரூபாய் ஒரு இலட்சம் பரிசுத் தொகையுடன் இளம் அறிஞர் விருது வழங்கப்படுகிறது.*

கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழாய்வு அறக்கட்டளை

- ❖ *செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2008 ஆம் ஆண்டு ரூபாய் ஒரு கோடி வைப்புத் தொகையுடன் கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழாய்வு அறக்கட்டளை நிறுவப்பட்டது.*

- ❖ *இவ்வறக்கட்டளையின்மூலம் செம்மொழித் தமிழுக்கு குறிப்பிட்ட வரைமுறைகளின் கீழ் தொண்டாற்றிய தமிழறிஞர் அல்லது நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் பத்து இலட்சம் பரிசுத் தொகையுடன் கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது வழங்கப்படும். அவ்வகையில் 2009 ஆம் ஆண்டு முதல் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. 2020, 2021, 2022 ஆகிய மூன்று ஆண்டுகளுக்குரிய விருதுகள் 22.08.2022 ஆம் நாளன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் வழங்கப்பட்டன.*

செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள்

- ❖ *மணிமேகலை மொழி பெயர்ப்புத் திட்டம் (20 மொழிகள்)*

- ❖ *தொல்காப்பியம் மொழிபெயர்ப்புத் திட்டம் (20 மொழிகள்)*

- ❖ *திருக்குறள் கிரியோல், மலாய், டேனிஷ், ஜப்பானிஸ், பர்மீஸ், சிங்களம், துளு, அஸ்ஸாமி, கொரகா, காஸ்மீரி, மைதிலி, அவதி, கொடவா, டோக்ரி, போஜ்புரி, போடோ ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு விரைவில் வெளியிடப்படும்.*

2023 ஏப்ரல் 6]

- ❖ செவ்விலக்கிய நூல்களின் மொழிபெயர்ப்புத் திட்டம் (5 மொழிகள்)

- ❖ புகழும், புலமையும் வாய்ந்த பேராசிரியர்களைக் கொண்டு செவ்விலக்கிய சிறப்புகளைக் காட்சிப்படுத்தி வலையொளி (YouTube) மூலம் பரவச்செய்யும் திட்டம்

- ❖ பார்வை மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் 46 தமிழ்ச் செவ்வியல் நூல்களையும் சந்தி பிரித்து எளிய உரையுடன் பிரெய்லி நூல்களாக விரைவில் வெளியிடப்படும்.

- ❖ இணையவழிச் செம்மொழித் தமிழ்க் கல்வித் திட்டம்.

இயல்-8

தமிழ் வளர்ச்சித் துறையின்

நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்

இன்று தமிழர்கள் உலகின் பல நாடுகளில் வாழ்ந்துவரினும், அவர்களை உள்ளத்தாலும் உணர்வாலும் ஒன்றிணைப்பது தாய்மொழியாம் நம் தமிழ் மொழியே. அவ்வகையில் உலகளாவிய நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு தமிழ்மொழி, பண்பாடு, கலை சார்ந்த உதவிகளை அளித்து, உலகமெலாம் தமிழோசை பரவ வழிவகை செய்தல்.

தமிழ் இலக்கியங்களை, உலக மொழிகளில் மொழிபெயர்த்து, தமிழின் கருத்து வளத்தையும், பண்பாட்டுத் தளங்களையும் உலகறியச் செய்தல்

தமிழ் வளர்ச்சி தொடர்பான அரசின் செயற்பாட்டு அமைப்புகளை, மேலும் வலிமையாக்கி பணிகளை ஊக்குவித்து மேம்படுத்துதல்

அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழி செயலாக்கத்தை முழுமையான அளவில் செயற்படுத்த ஏதுவாக அரசுப் பணியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஆட்சிமொழித்

[2023 ஏப்ரல் 6

திட்டம் தொடர்பான பயிற்சி திட்டத்தை விரிவாக்கி அனைத்துப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கும் திட்டம் வகுத்து செயற்படுத்துதல்.

சொற்குவை வலைதளத்தில், நவீன அறிவியல் உலகத்தில் தோன்றும் புதிய புதிய பிற மொழிச் சொற்களுக்கு இணையான தமிழ் கலைச் சொற்கள் பதிவேற்றம் செய்வதும் மற்றும் தமிழ் கலைச் சொல் தொடர்பான பொதுமக்களின் ஐயங்களை தீர்ப்பதும், தமிழறிஞர்கள் தமிழார்வலர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து புதிய கலைச் சொற்களைத் திரட்டி ஒருங்கே தொகுத்து சீரிய முறையில் அகரமுதலித் திட்ட இயக்ககம் வாயிலாக பதிவேற்றம் செய்து பொதுமக்கள் பயன்பெறச் செய்தல்

துறை வாரியான செயற்பாடுகளில் தமிழ் வளர்ச்சிக்கு தனிக் கவனம் செலுத்தி, உரிய புதிய திட்டங்களை வகுத்து செயற்படுத்துதல் ஆகியவற்றை நீடித்த நிலையான வளர்ச்சிக் குறிக்கோள்களாகக் கொண்டு துறை செயலாற்றி வருகிறது.

நிறைவுரை

"தமிழுண்டு தமிழ்மக்களுண்டு – இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு"

என்னும் பாவேந்தரின் வாக்கிற்கேற்ப, தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக ஒல்லும் வகையெல்லாம் தமிழ் வளர்ச்சிப் பணிகளில் ஓய்வின்றி ஈடுபட்டு வருகிறது.

மொழியின் வளர்ச்சியும், பயன்பாடும் நம்மோடு நின்றுவிடாமல், அடுத்துவரும் தலைமுறைக்கு நாம் அளிக்கும் பெருஞ் செல்வமாக விளங்க வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு, தமிழ் வளர்ச்சி இயக்ககம், மொழிபெயர்ப்புத் துறை, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழ்ப் பல்கலைக்கழகம், உலகத் தமிழ்ச் சங்கம் ஆகியவை காலத்திற்கேற்ற மாற்றங்களுடன் சீரார்ந்த பணிகளை மேற்கொண்டு செயலாற்றி வருகின்றன.

2023 ஏப்ரல் 6]

வரவு - செலவுத் திட்ட மதிப்பீடு 2023-2024

வ. எண்	துறை	2023-2024 வரவு - செலவு மதிப்பீடு (ரூபாய் ஆயிரத்தில்)
1	தமிழ் வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம்	12,95,87
2	தமிழ் வளர்ச்சி இயக்ககம்	57,88,33
3	செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்	4,41,40
4	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை	10,76,11
5	தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்	29,47,29
6	உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை	1,87,55
மொத்தம்		117,36,55

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-III

(128 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

1. முகவுரை

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (MSMEs) இந்தியப் பொருளாதாரத்தின் முக்கியப் பங்காற்றுவதோடு வேலைவாய்ப்பை உருவாக்குவதில் வேளாண்மைக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடம் வகிக்கிறது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அவற்றின் எண்ணிக்கையாலும் பரந்து விரிந்து அனைத்துப் பகுதிகளிலும் காணப்படுவதாலும், நாட்டின் தொழில் துறையில் ஆதிக்கம் செலுத்துகின்றன. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பொருளாதார வளர்ச்சியின் உந்து சக்திகளாக திகழ்கின்றன. உலகளவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் 90 விழுக்காடு வணிகங்களையும், 50 விழுக்காட்டிற்கும் அதிகமான வேலைவாய்ப்புகளையும் வழங்குகிறது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாடு முழுமைக்கும் பலதரப்பட்ட துறைகளில் வேலை வாய்ப்புகளை வழங்கவும் பின்தங்கிய நலிவுற்ற மற்றும் ஊரகப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் வழிவகைகள் செய்கின்றன.

இந்தியாவில், சுமார் 6.3 கோடி குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், உற்பத்தித் துறையில் 45 விழுக்காடும், ஏற்றுமதியில் 45 விழுக்காட்டிற்கு மேலும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 28 விழுக்காட்டிற்கு மேலும் பங்களிப்பு செய்து, நாடு முழுவதும் சுமார் 11 கோடி பேருக்கு வேலைவாய்ப்பையும் வழங்குகின்றன.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வரையறையை முதலீடுகள் மற்றும் விற்றுமுதல் (ஏற்றுமதியிலிருந்து வரும் வருவாய் தவிர்த்து) ஆகியவற்றின் ஒருங்கிணைந்த

2023 ஏப்ரல் 6]

அளவுகோல்களை இணைத்து, ஒன்றிய அரசு ஜூலை 1, 2020 முதல் திருத்தியமைத்துள்ளது. திருத்தப்பட்ட வரையறை பின்வருமாறு:

நிறுவனங்களின் வகைப்பாடு	இயந்திர மற்றும் தளவாடங்களின் முதலீடு (தொகைக்கு மிகாமல்)	ஆண்டு விற்றுமுதல் (தொகைக்கு மிகாமல்)*
குறு நிறுவனங்கள்	ரூ.1 கோடி	ரூ.5 கோடி
சிறு நிறுவனங்கள்	ரூ.10 கோடி	ரூ.50 கோடி
நடுத்தர நிறுவனங்கள்	ரூ.50 கோடி	ரூ.250 கோடி

*ஏற்றுமதி விற்றுமுதல் வருவாய் நீங்கலாக

மொத்தம் மற்றும் சில்லறை வணிக நிறுவனங்கள் முன்னுரிமை அடிப்படையில் கடன் பெறும் நோக்கத்திற்காக மட்டும் ஜூலை 2, 2021 முதல் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வரையறைக்குள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

1.1 தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

தொழில்முனைவோர் மற்றும் தொழில் துறை நடவடிக்கைகளில் தமிழ்நாடு, ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையான நீண்ட வரலாற்றைக் கொண்ட மாநிலமாகும். மேலும் ஜவுளி, உலோக வேலைகள், மட்பாண்டங்கள், கப்பல் கட்டுமானம் போன்றவற்றுக்கு பிரபலமானது. இந்தியாவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் எண்ணிக்கையில் தமிழ்நாடு 3-வது இடம் வகிக்கிறது. தமிழ்நாட்டில், 49.48 இலட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இருப்பதாக 73-வது தேசிய மாதிரி கணக்கெடுப்பு 2015–16 இன்படி மதிப்பிடப்பட்டுள்ளது. (நாட்டிலுள்ள மொத்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையில் 7.8 விழுக்காடு). மாநிலத்தில் உள்ள இந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் 99 விழுக்காட்டுக்கும் அதிகமானவை குறு நிறுவனங்கள், 0.42 விழுக்காடு சிறு நிறுவனங்கள் மற்றும் 0.003 விழுக்காடு மட்டுமே நடுத்தர நிறுவனங்களாகும். இது தவிர குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் 51.25 விழுக்காட்டுக்கும்

அதிகமானவை ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ளன. உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்காக, பல்வேறு துறைகளில் பல்வேறு வகையான பல்லாயிரக்கணக்கான பொருட்களை இந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்கின்றன.

தோல் பொருட்கள், பொறியியல் பொருட்கள், வாகன உதிரிபாகங்கள், உலோக வார்ப்புகள், பம்புகள் மற்றும் ஆயத்த ஆடைகள் போன்ற முக்கிய உற்பத்தித் துறைகளில் தமிழ்நாடு முக்கியப் பங்கு வகிக்கிறது. மின் வாகனங்கள், நிதித் தொழில்நுட்பம்-மென்பொருள் சேவைகள் மற்றும் புத்தொழில் போன்ற பல வளர்ந்து வரும் துறைகளுக்கான மையமாகவும் தமிழ்நாடு உருவாகி வருகிறது.

1.2 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கட்டமைப்பு

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள அமைப்புகள் மற்றும் அவற்றின் பொறுப்புகள் பின்வருமாறு:

1.2.1 தொழில் வணிக ஆணையரகம்

அ. தொழில் கொள்கையை உருவாக்குவதில் உதவுதல் மற்றும் கொள்கையை பங்குதாரர்களிடையே நுணுக்கமாக கொண்டு செல்லுதல்.

ஆ. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான மாநில வியூகத்தை செயல்படுத்துதல் மற்றும் சுயவேலைவாய்ப்பினை ஊக்கப்படுத்திடவும், மாநிலம் முழுவதும் சமச்சீரான தொழில் வளர்ச்சிக்காகவும் மானியங்கள் வழங்குதல்.

இ. வட்டார அளவிலான வங்கியாளர்கள் குழு கூட்டங்கள் மற்றும் மாநில அளவிலான வங்கியாளர்கள் குழு கூட்டங்கள்மூலம் நிதித் தேவைகள் உட்பட குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் குறிப்பிட்ட தேவைகளை பெற வழிவகை செய்தல்.

ஈ. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம், 2006-இன்கீழ் குறு, சிறு மற்றும்

2023 ஏப்ரல் 6]

நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் காலதாமதமாகப் பணம் பெறுவதைக் குறு மற்றும் சிறு நிறுவனங்களின் வசதிக்காக குழுக்கள் (MSEFCs)மூலம் விரைந்து பெற்றிட உதவுதல்.

உ. தமிழ்நாடு வணிக நடைமுறைகள் எளிதாக்கும் சட்டம், 2018 மற்றும் விதிகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஒற்றைச் சாளர இணையதளத்தில் பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு தீர்வு காண்பதை எளிதாக்குதல்.

ஊ. தொழிற்கூட்டுறவு நிறுவனங்களை மேற்பார்வையிடுதல்.

எ. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட தொழில் மையங்களின்மூலம் தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுதல்.

ஏ. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களைப் பதிவு செய்திட உதவுதல்.

ஐ. ஏற்றுமதியை ஊக்குவித்தல்.

ஒ. ஆற்றல் தணிக்கை, தரச் சான்றிதழ் மற்றும் அறிவுசார் சொத்து உரிமை போன்றவற்றை ஊக்குவிப்பதன் மூலம் இந்நிறுவனங்களின் தரத்தை மேம்படுத்துவதை ஊக்குவித்தல்.

1.2.2 தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TANSIDCO)

அ. தொழிற்பேட்டைகளை நிறுவி பராமரித்தல் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான தொழில் மனைகள் மற்றும் தொழிற்கூடங்கள் வழங்குதல்.

ஆ. தொழில் குழுமங்கள் மற்றும் பொதுவசதி மையங்களை நிறுவுதல் மற்றும் ஊக்குவித்தல்.

இ. புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நலனுக்காக தொழிலாளர் விடுதிகளை நிறுவுதல்.

ஈ. தொழில்களின் நவீன தேவைகளுக்கு ஏற்ப உடனடியாக தொழில் துவங்குவதற்கு ஏதுவான தொழிற்கூட வசதிகள் (Plug and Play) ஏற்படுத்துதல்.

1.2.3 தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (TANSI)

அ. மாநில அரசு துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு மர மற்றும் எஃகு அறைகலன்கள் தயாரித்து வழங்குதல்

ஆ. தனியாருக்கு மலிவு விலையில் தரமான மரச் சாமான்களை வழங்குதல்

1.2.4. தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII–TN)

அ. மாநிலம் முழுவதும் தொழில் முனைவோர் கல்வி மற்றும் சுயவேலைவாய்ப்பை ஊக்குவித்தல்.

ஆ. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே புத்தாக்கத்தினை ஊக்குவித்தல்.

1.2.5 தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வசதியாக்கல் நிறுவனம் (FaMeTN)

கடன், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகள், முதலீடு, திறன், நிலைத்தன்மை மற்றும் துறை சார்ந்த முன்முயற்சிகளை அணுகுவதில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உதவுதல்.

1.2.6 தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (TANSIM)

அ. மாநிலத்தில் உள்ள புத்தொழில்களை செயல்படுத்த உகந்த சூழலை உருவாக்குதல்

ஆ. புத்தொழில்களுக்கும் வளர்-காப்பகங்களுக்கும் தேவைப்படும் நிதி உதவி வழங்குதல் மற்றும் நிதி பெற வசதி செய்தல்

இ. பரவலான சமச்சீரான புத்தொழில் வளர்ச்சியினை உறுதி செய்தல்

ஈ. புத்தொழில்களை வழிகாட்டிகளுடன் (Mentors) தொடர்பு ஏற்படுத்தி பயன் பெற வழிவகுத்தல்

2. தொழில் வணிக ஆணையரகம்

தொழில் வணிக ஆணையரகம், பின்வரும் 4 முக்கிய செயல்பாடுகளை வழி நடத்துகிறது.

அ. மாவட்டத் தொழில் மையங்கள் (DICs)

ஆ. தொழிற்துறை கூட்டுறவு நிறுவனங்கள்,

i) தமிழ்நாடு சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் கூட்டமைப்பு (INDCOSERVE)

ii) சேலம் ஸ்டார்ச் மற்றும் சேகோ உற்பத்தியாளர்களின் சேவை தொழிற்கூட்டுறவு சங்கம் (SAGOSERVE)

iii) தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கி (TAICO Bank)

iv) பிற தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்

இ. ஆய்வகங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்கள்

i) மத்திய மின் சோதனை ஆய்வகம் (CETL)

ii) இரசாயன ஆய்வகங்கள்

iii) பயிற்சி நிறுவனங்கள்

ஈ. தன்னாட்சி அமைப்புகள்,

i) தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வசதியாக்கல் நிறுவனம் (FaMeTN)

ii) தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம் (TANCOIR)

iii) தமிழ்நாடு உணவுப் பதப்படுத்துதல் மற்றும் வேளாண்மை ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (TNAPEx)

2.1. மாவட்டத் தொழில் மையங்கள்

2.1.1 மாவட்டத் தொழில் மையங்களின் அலுவலகங்கள்

மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டத் தொழில் மையங்கள் (DICs) செயல்படுகின்றன. மாவட்டத் தொழில் மையங்கள் ஒவ்வொன்றும் ஒரு பொது மேலாளர் தலைமையில் இயங்குகிறது. மாவட்டத் தொழில் மையங்கள் தொழில் முனைவோருக்கு சாத்தியமான திட்டங்களைக் கண்டறிதல், திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல், பல்வேறு

அனுமதிகள் மற்றும் உரிமங்களைப் பெறுவதற்கு உதவுதல் மற்றும் தொழில்முனைவோருக்கு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவியை எளிதாக்குதல் போன்ற பணிகள் மேற்கொள்கின்றன. சுயவேலைவாய்ப்புத் திட்டங்கள், முதலீட்டு ஆதரவு திட்டங்கள் மற்றும் பிற முன்முயற்சிகள் ஆகிய மூன்று முக்கிய வகையான திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகளை செயல்படுத்துகின்றன. ஆணையரகத்தின் நிதி வசதி முன் முயற்சிகள் FaMeTN மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இதுகுறித்து FaMeTN கொள்கை குறிப்பின்கீழ் கூறப்பட்டுள்ளது.

2.2 சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள்

2.2.1. புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS)

புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) என்ற மாநில நிதியுதவித் திட்டமானது, படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோராக உருவாகுவதற்கு வழிகாட்டவும், ஆதரவளிக்கவும் உதவுகிறது. பொதுப் பிரிவு பயனாளிகள் 21-35 வயதுக்குள்ளும், சிறப்புப் பிரிவு பயனாளிகள் 21-45 வயதுக்குள்ளும் இருக்க வேண்டும் (SC/ ST/ BC/ MBC/ சிறுபான்மையினர் / திருநங்கைகள்/ மாற்றுத்திறனாளிகள் / முன்னாள் இராணுவத்தினர் மற்றும் மகளிர் ஆகியோர் சிறப்புப் பிரிவினர்). இத்திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச கல்வித் தகுதி பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி ஆகும். பட்டம்/பட்டயப் படிப்பு/ஐடிஐ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் தொழில் பயிற்சி பெற்ற விண்ணப்பதாரர்களும் இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்க தகுதியானவர் ஆவார். இந்தத் திட்டத்தில் 50% மகளிர் தொழில்முனைவோர் பயன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII-TN)மூலம் 15 நாட்கள் இணைய வழிமூலம் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டப் பயிற்சி அளிக்கப்படுகிறது. வங்கிகள்/தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC)மூலம் நிதியுதவி பெற உதவி செய்வதுடன், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (Tamilnadu Small

2023 ஏப்ரல் 6]

Industries Development Corporation Limited) தொழிற்பேட்டைகளில் மனைகள்/தொழிற்கூடங்கள் முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு பெறவும், வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் திட்ட மதிப்பீட்டில் 25% (ரூ.75 இலட்சத்திற்கு மிகாமல்), தனிநபர் அடிப்படையிலான மூலதன மானியமும், முழுக் கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரை 3% வட்டி மானியமும் அரசால் வழங்கப்படுகிறது. பட்டியல் இனத்தோர் (SC/ST)/ மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு திட்ட மதிப்பீட்டில் 10% கூடுதல் மூலதன மானியம் 2021-22 ஆண்டு முதல் அரசால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன் பெற குறைந்தபட்சம் திட்ட மதிப்பீடு ரூ.10 இலட்சம் மற்றும் அதிகபட்ச திட்ட மதிப்பீடு ரூ.5 கோடி வரை இருக்க வேண்டும். பயனாளியின் பங்களிப்புத் திட்ட மதிப்பீட்டில் பொதுப் பிரிவு பயனாளிகளுக்கு 10% மற்றும் சிறப்புப் பிரிவு பயனாளிகளுக்கு 5% ஆகும்.

2022-23 நிதியாண்டில், தனிநபர் அடிப்படையிலான முதலீட்டு மானியம் ரூ.183.66 கோடியுடன், 939 இறுதி கடன் ஒப்பளிப்பு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. தனிநபர் அடிப்படையிலான மானியமாக ரூ.129.79 கோடியும், வட்டி மானியமாக ரூ.10.28 கோடியும், இந்த காலக்கட்டத்தில் தகுதியான பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2.2.2 வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP)

வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) சுயவேலைவாய்ப்புமூலம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்காக, குறிப்பாக சமூகத்தின் விளிம்பு நிலை பிரிவினர் பயன்பெறும் வண்ணம் 2010-11 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ், படித்த வேலையற்ற இளைஞர்கள் புதிய உற்பத்தி சார்ந்த தொழில் துவங்க ரூ.15 இலட்சம் வரையிலான திட்டங்களுக்கும், சேவைகள் மற்றும் வணிகம் சார்ந்த தொழில்களுக்கு ரூ.5 இலட்சம் வரையிலான திட்டங்களுக்கும் மானியத்துடன்கூடிய கடன் பெற நிதி நிறுவனங்கள் மூலம் உதவி செய்யப்படுகிறது. பயனாளியின் பங்களிப்புத்

திட்ட மதிப்பீட்டில் பொதுப் பிரிவு பயனாளிகளுக்கு 10% மற்றும் சிறப்புப் பிரிவு பயனாளிகளுக்கு 5% ஆகும். இத்திட்டத்தின்கீழ் திட்ட மதிப்பீட்டில் 25% அரசு மானியமாக (ரூ.2.5 இலட்சம் வரை) வழங்கப்படுகிறது.

எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 18 வயது முடிந்த தனிநபர்கள் இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்க தகுதி உடையவர்கள் ஆவார்கள். பொதுப் பிரிவினருக்கு அதிகபட்ச வயது வரம்பு 35 வயதும், சிறப்புப் பிரிவினருக்கு 45 வயதும் ஆகும்.

2022-23 ஆம் நிதியாண்டில், 2,612 பயனாளிகளுக்கு ரூ.2,527.79 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

2.2.3 பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)

ஒன்றிய அரசின் திட்டமான பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் (PMEGP), உற்பத்தி தொழில்களுக்கு அதிகபட்சம் ரூ.50 இலட்சம் வரையிலும், சேவைத் தொழில்களுக்கு அதிகபட்சம் ரூ.20 இலட்சம் வரையிலும் திட்ட மதிப்பீட்டில் வங்கிகள்மூலம் கடன் உதவி வழங்கப்படுகிறது:

பயனாளியின் பங்களிப்பு பொதுப் பிரிவினருக்கு திட்ட மதிப்பீட்டில் 10% மற்றும் சிறப்புப் பிரிவினருக்கு திட்ட மதிப்பீட்டில் 5% ஆகும். ஒன்றிய அரசானது திட்ட மதிப்பீட்டில் கீழ்க்கண்ட விகிதங்களில் மானியங்களை வழங்குகிறது:

பிரிவு	திட்ட மதிப்பீட்டில் மானிய விழுக்காடு	
	நகர்ப்புறம்	ஊரகப்பகுதி
பொதுப் பிரிவு	15%	25%
சிறப்புப் பிரிவு (பட்டியல் இனம்/ பழங்குடியினர்/ இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சிறுபான்மையினர்/ மகளிர்/ முன்னாள் இராணுவத்தினர்/ மாற்றுத்திறனாளிகள்)	25%	35%

2023 ஏப்ரல் 6]

மொத்த திட்ட மதிப்பீட்டில் மீதித் தொகை நிதி நிறுவனங்களால் கடனாக வழங்கப்படுகிறது.

2022-23 ஆம் ஆண்டில், 3,850 பயனாளிகளுக்கு ரூ.9,638.23 இலட்சம் விளிம்புத்தொகை உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

2.2.4. பிரதம மந்திரி உணவுப் பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் (PMFME)

உணவுப் பதப்படுத்தும் குறு நிறுவனங்கள் எதிர் கொள்ளும் சவால்களைத் திறம்பட கையாளவும், நன்கு செயல்படும் குழுக்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புகள் உணவுப் பதப்படுத்தும் நிறுவனங்களை அமைக்கவும், அவற்றை மேம்படுத்துவதற்காகவும், "பிரதம மந்திரி உணவுப் பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம்", ஒன்றிய அரசு 60 விழுக்காடு மற்றும் மாநில அரசு 40 விழுக்காடு நிதிப் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 5 ஆண்டு காலத்திற்குள் (2024–25-க்குள்) ரூ.502.67 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் மொத்தம் 12,000 தனிநபர் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய கூறுகள் பின்வருமாறு:

1. தனி நபர் மற்றும் குழு சார்ந்த நிறுவனங்கள்

இத்திட்டத்தின்கீழ் 35 விழுக்காடு மானியமாக அதிகபட்சம் ரூ.10 இலட்சம் வரையிலான மானியத் தொகையுடன் கடனுதவி வழங்கப்படுகிறது. தகுதியான திட்ட மதிப்பீட்டில் இயந்திர தளவாடங்கள் மற்றும் தொழில்நுட்ப கட்டுமானங்கள் ஆகியவை அடங்கும். தொழில்நுட்ப கட்டுமானங்களின் மதிப்பு திட்ட மதிப்பீட்டில் 30 விழுக்காட்டிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். தனிநபர், சுய உதவிக் குழுக்கள் (SHGs), உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPOs) மற்றும் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனங்கள் (Co-operatives) அரசு சாரா நிறுவனங்கள், தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறலாம்.

2. பொதுவான உட்கட்டமைப்பு வசதிகள்

- இத்திட்டத்தின்கீழ் பொது கட்டமைப்பு வசதிகளை உருவாக்க வேளாண் உற்பத்தி அமைப்புகள் / வேளாண் உற்பத்தி நிறுவனங்களுக்கு ரூ.3 கோடி வரையிலான திட்டங்களுக்கு 35 விழுக்காடு மானியத்துடன் இணைந்த கடன் வழங்கப்படுகிறது. தகுதியான திட்ட மதிப்பீட்டில் இயந்திர தளவாடங்கள் மற்றும் தொழில்நுட்ப கட்டுமானங்கள் ஆகியவை அடங்கும். தொழில்நுட்ப கட்டுமானங்களின் மதிப்பு திட்ட மதிப்பீட்டில் 30 விழுக்காட்டிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். பொது கட்டமைப்புகளான உணவுப் பதப்படுத்தும் பொது வசதி மையம், ஆய்வகங்கள், அடைகாப்பான்கள், சேமிப்பு கிடங்குகள், குளிர்பதன கிடங்குகள் போன்றவற்றிற்கான திட்ட மதிப்பீடு ரூ.10 கோடிக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
- உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், கூட்டுறவு அமைப்புகள் மற்றும் அரசு நிறுவனங்கள் இத்திட்டத்தின்மூலம் கடன் உதவி பெற்று பயன் பெறலாம்.

3. வர்த்தக முத்திரை மற்றும் சந்தைப்படுத்துதல்

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், சுயஉதவிக் குழுக்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு பொதுவான வர்த்தக முத்திரை (Brand), தரநிலைப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகியவைக்காக திட்ட மதிப்பீட்டில் 50% வரை மானியமாக வழங்கப்படும். திட்ட மதிப்பீடு உத்தேசிக்கும் ஆண்டு விற்றுமுதலை விட 3 மடங்கு இருக்கலாம்.

4. ஆதார மூலதனம்

சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு சிறு கருவிகள் மற்றும் மூலப்பொருட்கள் வாங்குவதற்காக மானியமாக தலா ரூ.40,000 சுழல் நிதியாக வழங்கப்படுகிறது.

5. திறன் மேம்பாட்டுப் பயிற்சி

இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் அனைத்து பயனாளிகளுக்கும் தொழில்முனைவோர் திறன் மேம்பாட்டுப்

2023 ஏப்ரல் 6]

பயிற்சி மற்றும் உணவுத் தொழில்நுட்பம் சார்ந்த தொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தினை தமிழ்நாட்டில் செயல்படுத்திட தொழில் வணிக ஆணையரகம் மாநில முகமை நிறுவனமாகவும், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்கள் மாவட்ட முகமை அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2022-23 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் 3,722 உணவுப் பதப்படுத்தும் நிறுவனங்களுக்கு ரூ.77.05 கோடி மானியத்துடன் கடன் வழங்கப்பட்டுள்ளது.

2.2.5 அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின தொழில்முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வண்ணம், 2023-24 ஆம் நிதியாண்டிலிருந்து "அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்" என்னும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் இயந்திரங்களையும், கருவிகளையும் கொள்முதல் செய்வதற்காக, 35 விழுக்காடு மூலதன மானியமும், 6 விழுக்காடு வட்டி மானியமும் வழங்கப்படும். 2023-24 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்காக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.3 முதலீட்டு ஊக்குவிப்பு

2.3.1 முதலீட்டு மானியம்

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு முதலீட்டை மேம்படுத்தவும், ஊக்குவிக்கவும் அரசு மூலதன மானியம் வழங்கி வருகிறது. தொழில் துறையில் பின்தங்கிய 254 வட்டாரங்களை அரசு கண்டறிந்து, தமிழகத்தில் சமச் சீரான வளர்ச்சியை உறுதி செய்வதற்காக மூலதன மானியம் வழங்குகிறது. மேலும், வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதிக்கு வாய்ப்புள்ள துறைகளுக்கும், மின்சார வாகனங்கள், பாதுகாப்பு மற்றும் விண்வெளி, தொழில் துறை 4.0 போன்ற புதிய வளர்ந்து வரும் துறைகளுக்கும் அதிக உத்வேகத்தை வழங்க, தமிழ்நாட்டில் அனைத்து பகுதிகளிலும் தொடங்கப்படும் மேற்குறிப்பிட்ட துறைகள் சார்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தர

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தொழில் நிறுவனங்களுக்கு சிறப்பு மூலதன மானியம் வழங்கப்படுகிறது. உலகளாவிய போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கு இந்தத் துறைகளுக்கு மேலும் ஊக்கமளிப்பதாக இந்த மானியம் அமையும்.

திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

- தகுதியான இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 25 விழுக்காடு முதலீட்டு மானியம், அதிகபட்சமாக ரூ.150 இலட்சம் வரை வழங்கப்படும்.

- குறு நிறுவனங்களுக்கு இயந்திர தளவாடங்களின் மதிப்பில் கூடுதலாக 10 விழுக்காடு முதலீட்டு மானியம், அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வரை வழங்கப்படும்.

- மகளிர், ஆதி திராவிடர்/பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் ஆகியோர் தொழில் முனைவோராக உள்ள தொழில் நிறுவனங்களில் தகுதியான இயந்திர தளவாடங்களின் மீதான முதலீட்டில் 5 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.5 இலட்சம் வரை கூடுதல் முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

- மாசற்ற மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் சான்றின் பேரில் அந்நிறுவனங்களுக்கு தகுதியான இயந்திர தளவாடங்கள் மீதான முதலீட்டின் மதிப்பில் 25 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.10 இலட்சம் வரை கூடுதல் முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

- இயங்கிவரும் குறு மற்றும் சிறு தொழில் உற்பத்தி நிறுவனங்கள், விரிவாக்கம்/ பல்வகைப்படுத்துதலால், சிறு அல்லது நடுத்தர தொழில் நிறுவனங்களாக வளர்ச்சி அடைந்தால், அந்நிறுவனங்களின் இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 5 விழுக்காடு கூடுதல் முதலீட்டு மானியம், அதிகபட்சமாக ரூ.25 இலட்சம் வரை வழங்கப்படும். இது விரிவாக்கம் / பல்வகைப்படுத்தலுக்கான மானியத்துடன் கூடுதலாக வழங்கப்படும்.

2023 ஏப்ரல் 6]

பின்வரும் நிறுவனங்கள் மூலதன மானியத்திற்கு தகுதியுடையவை:

- மாநிலத்தின் எப்பகுதியிலும் நிறுவப்படும், அனைத்து புதிய குறு உற்பத்தி நிறுவனங்கள்
- மாநிலத்தின் தொழில் துறையில் பின்தங்கிய 254 வட்டாரங்களில் ஏதேனும் ஒன்றில் நிறுவப்படும் அனைத்து புதிய சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள்.
- மாநிலத்தின் 388 வட்டாரங்களில் அமைக்கப்படும் புதிய சிறு மற்றும் நடுத்தர வேளாண்சார் உற்பத்தி தொழில் நிறுவனங்கள்.
- சிறப்பு வகை மூலதன மானியம் (Thrust Sector): தமிழ்நாட்டின் எப்பகுதியிலும் அமைக்கப்படும் கீழ்க்கண்ட 25 சிறப்பு வகை சிறு மற்றும் நடுத்தர உற்பத்தித் தொழில் நிறுவனங்கள்.

1. மின் மற்றும் மின்னணு பொருட்கள்
2. தோல் மற்றும் தோல்பொருட்கள்
3. வாகன உதிரி பாகங்கள்
4. மருந்து மற்றும் மருத்துவப் பொருட்கள் மற்றும் ஊட்டச்சத்து மருந்துகள்
5. சூரிய சக்தி பயன்பாட்டு உபகரணங்கள்
6. ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைர நகைகள்
7. மாசுக் கட்டுப்பாட்டு கருவிகள்
8. விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உதிரிபாகங்கள்
9. சிக்கன விலை கட்டுமானப் பொருட்கள்
10. ஆயத்த ஆடைகள்
11. உணவுப் பதப்படுத்துதல்
12. நெகிழி (ஒரு முறை மட்டும் பயன்படுத்தும் நெகிழி மற்றும் தூக்கி எறியப்படும் நெகிழி நீங்கலாக)
13. இரப்பர் உற்பத்தி நிறுவனங்கள்

[2023 ஏப்ரல் 6

14. 'ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழி பொருட்களுக்கு' பதிலான மாற்று பொருட்கள்

15. மின்வாகன பாகங்கள், மின்னேற்ற உற்பத்தி கட்டமைப்புகள் மற்றும் பாகங்கள்.

16. மருத்துவ உபகரணங்கள் கருவிகள் மற்றும் பாகங்கள்

17. தொழில்நுட்ப ஜவுளி மற்றும் மருத்துவ ஜவுளி

18. விண்வெளி, பாதுகாப்பு பயன்பாடுகள் மற்றும் பாகங்கள்

19. மின்னணு அமைப்பு, வடிவமைப்பு மற்றும் உற்பத்தி

20. உயிரி தொழில்நுட்பம்

21. பெட்ரோலிய இரசாயனம் மற்றும் சிறப்பு இரசாயனங்கள்

22. தொழில்கள் 4.0

23. மின்னணு கழிவு மறுசுழற்சி

24. பாரம்பரிய தொழில்கள்

25. வீட்டு உபயோக ஜவுளிகள்

- மேற்கூறிய அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள், தற்போதுள்ள செயல்பாடுகளில் கணிசமான விரிவாக்கம்/ பல்வகைப்படுத்தலை மேற்கொள்ளும் நிறுவனங்கள்.

2022-23 ஆம் நிதி ஆண்டில் ரூ.24,117.18 இலட்சம் மூலதன மானியம் 1,908 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2.3.2 கோவிட் உதவி மற்றும் தொழில்முனைவோருக்கான நிவாரணத் திட்டம் (CARE)

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் கோவிட்-19 தொற்றுநோயால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் இழப்புகள் மற்றும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு, கோவிட்-19 ஆல் பாதிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு பின்வருவனவற்றிற்கு மானியத்துடன்கூடிய கடன் வழங்குவதற்காக, கோவிட் உதவி மற்றும்

2023 ஏப்ரல் 6]

*தொழில்முனைவோருக்கான நிவாரணத் திட்டம் (*Covid Assistance and Relief to Entrepreneurs–CARE*) 12.07.2022 அன்று தொடங்கப்பட்டது:*

1. கோவிட்-19 தொற்றுநோயின் காலக்கட்டத்தில் நிறுவனத்தை மூடியிருந்தால், அந்நிறுவனங்களின் செயல்பாட்டினை மீண்டும் தொடங்குதல் அல்லது புதிய நிறுவனத்தைத் தொடங்குதல்; அல்லது

2. வணிக உற்பத்தித் திறனை மேம்படுத்த தொழில்நுட்ப மேம்பாடு அல்லது நவீனமயமாக்கலை மேற்கொள்ளும் நிறுவனங்கள்.

CARE-I *திட்டத்தின்கீழ், தொழில்முனைவோர் தங்களுடைய நிறுவனங்களின் செயல்பாட்டினை மீண்டும் தொடங்க அல்லது தாங்களாகவோ அல்லது அவர்களின் சட்ட பூர்வ வாரிசு மூலமாகவோ புதிய நிறுவனத்தைத் தொடங்க மானியத்துடன் இணைந்த கடனுதவி வழங்கப்படுகிறது. ரூ.5 கோடி வரையிலான திட்டங்களுக்கு திட்ட மதிப்பீட்டில் 25 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.25 இலட்சம் வரை மானியம் வழங்கப்படும். இதேபோல், கோவிட்-19 தொற்றுநோயின் காரணமாக பாதிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள், தொழில்நுட்ப மேம்படுத்தல்/நவீனமயமாக்கல் மேற்கொள்ளும்போது இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மதிப்பில் 25 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.25 இலட்சம் வரை மூலதன மானியம்* CARE-II *திட்டக்கூறுகளின்கீழ் வழங்கப்படுகிறது.*

2022-23 ஆம் ஆண்டில் CARE *திட்டத்தின்கீழ் 47 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ரூ.415.43 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.*

2.4 பிற முன்னெடுப்புகள்

2.4.1 உத்யம் பதிவு

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை முறைப்படுத்துவது ஆணையரகத்தின் ஒரு முக்கிய செயல்பாடாகும். ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சகத்தின்கீழ் இந்தியாவில் செயல்படும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான பதிவு

சான்றிதழான உத்யம் பதிவினை மேற்கொள்வதற்கு மாவட்ட தொழில் மையங்கள் உதவுகின்றன. உத்யம் என்பது முழுக்க முழுக்க இணையவழி, தன்னார்வ மற்றும் காகிதம் இல்லாத சுய சான்றிதழை அடிப்படையாகக் கொண்ட பதிவு ஆகும்.

உத்யம் பதிவு அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து, 1-7-2020 முதல் 24.3.2023 வரையிலான காலக்கட்டத்தில் தமிழ்நாட்டில் 14,92,933 தொழில்முனைவோர்கள் உத்யத்தின்கீழ் பதிவு செய்துள்ளனர். இந்த நிறுவனங்கள் 1,15,18,492 நபர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகின்றன. நாட்டிலேயே உத்யம் பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் எண்ணிக்கையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.

2.4.2. குறைந்தழுத்த மின் மானியம்

எந்தவொரு புதிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனத்திற்கும், முதல் 3 ஆண்டுகள் முக்கியமானதாக இருக்கும், ஏனெனில் அவை ஏற்கெனவே உள்ள நிறுவனங்களுடன் போட்டியிட வேண்டும். இதனை எதிர்கொள்ளும் வகையில், அனைத்து புதிய குறு உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் தொழில் விரிவாக்கம் மேற்கொள்ள நடைமுறையில் உள்ள குறு நிறுவனங்களுக்கு 36 மாதங்களுக்கு குறைந்த அழுத்த மின் கட்டணத்தில் 20 விழுக்காடு குறைந்தழுத்த மின் மானியமாக வழங்கப்படுகிறது.

2022-2023 ஆம் ஆண்டில், 820 குறுந்தொழில் நிறுவனங்களுக்கு ரூ.839.43 இலட்சம் குறைந்தழுத்த மின் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

2.4.3. ஊதியப் பட்டியல் மானியம் (Pay Roll Subsidy)

20 ஊழியர்களுக்கு மேல் பணியமர்த்தியுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு, ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி (EPF)-க்கு நிறுவனத்தின் பங்களிப்புக்கு ஈடான தொகை ஆண்டொன்றுக்கு ஓர் ஊழியருக்கு அதிக பட்சமாக ரூ.24,000/- வரை ஊதியப் பட்டியல் மானியமாக (Pay Roll Subsidy) முதல் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 6]

அடிப்படைத் தகுதிகள்

- *மாநிலத்தின் எப்பகுதியிலும் நிறுவப்படும், அனைத்து புதிய குறுந்தொழில் உற்பத்தி நிறுவனங்கள்*
- *தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய வட்டாரங்கள் மற்றும் சென்னையிலிருந்து 50 கி.மீ. தொலைவிற்கு அப்பால் உள்ள தொழிற்பேட்டைகளில் அமைக்கப்படும் சிறு மற்றும் நடுத்தர உற்பத்தித் தொழில் நிறுவனங்கள்*
- *மாநிலத்தின் 388 வட்டாரங்களில் அமைக்கப்படும் புதிய சிறு மற்றும் நடுத்தர வேளாண்சார் மற்றும் உணவுப் பதப்படுத்துதல் தொழில் நிறுவனங்கள்.*

2022-2023 ஆம் ஆண்டில், 76 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ரூ.174.34 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2.4.4. பின்முனை வட்டி மானியம் (BEIS)

நீடித்த வளர்ச்சிக்கு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அவ்வப்போது தொழில்நுட்பத்தின் அடிப்படையில் தங்களை மேம்படுத்திக்கொள்ள வேண்டும். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் உற்பத்தி நிறுவனங்கள், தொழில் நுட்ப மேம்பாடு மற்றும் நவீனப்படுத்துதலை மேற்கொள்ள ரூ.5 கோடி வரையிலான கடன்களுக்கான வட்டியில் 5 ஆண்டுகளுக்கு 5 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.25.00 இலட்சம் வரை, குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு பின்முனை வட்டி மானியம் வழங்கப்படுகிறது. அதேபோன்று, கடன் உத்தரவாத நிதி ஆதாரத் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட ரூ.2 கோடி வரையிலான கடன்களுக்கான வட்டியில் 5 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை, குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு 5 ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுகிறது.

2022-2023 ஆம் ஆண்டில், 660 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு ரூ.238.46 இலட்சம் பின்முனை வட்டி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

2.4.5 ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துதல் திட்டம் (PEACE)

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செலவுகளைக் குறைக்கவும், உலகளாவிய

சந்தைகளில் போட்டித்தன்மையை மேம்படுத்தவும் தங்களது தயாரிப்பு முறைகளில் ஆற்றல் செயல்திறனை ஊக்குவிக்க வேண்டிய அவசியம் உள்ளது. இத்திட்டத்தின்கீழ், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஆற்றல் தணிக்கை செலவில் 75 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.1 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது. மேலும் ஆற்றல் தணிக்கையின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதை ஊக்கப்படுத்திட ஆற்றல் திறனை மேம்படுத்தும் நோக்கத்திற்காக கொள்முதல் செய்யும் மாற்று இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், பின் மாற்று பொருத்திகள் (Retrofitting) மற்றும் தொழில்நுட்பத்திற்காக செய்த செலவினங்களில் 50 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு மானியமாக வழங்கப்படுகிறது.

2022-2023 ஆம் ஆண்டில், 224 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.202.99 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

2.4.6. தரச் சான்றிதழ் மானியம் (Q-cert)

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளின் நம்பகத்தன்மை, நீடித்த உழைப்பு மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்கு தர மேலாண்மை உதவுகிறது. தரமான செயல்முறை மற்றும் பொருட்களை உருவாக்குவதற்கான தரச் சான்றிதழ்களான ISO 9000/ISO 9001/ISO 14001/ISO 22000, HACCP நல்ல சுகாதார நடைமுறைகள் சான்றிதழ் (GHP), நல்ல உற்பத்தி நடைமுறைகள் சான்றிதழ் (GMP), இந்திய தரச் சான்றிதழ் (BIS), பூஜ்ஜிய குறைபாடு மற்றும் பூஜ்ஜிய விளைவுச் சான்றிதழ் (ZED) அல்லது இந்தியாவில் தகுதிவாய்ந்த நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பன்னாட்டு தரச் சான்றிதழ்களைப் பெறுவதற்கு, மாநிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பதே Q-Cert திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்படி, தரச் சான்றிதழ்களைப் பெறுவதற்காக ஆலோசனை மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிறுவனங்களுக்கு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் செலுத்திய கட்டணத்தில் 100 விழுக்காடு தேசிய தரச் சான்றிதழ் பெறுவதற்கு அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரையிலும் மற்றும் சர்வதேச தரச் சான்றிதழ் பெறுவதற்கு அதிகபட்சமாக ரூ.10 இலட்சம்

2023 ஏப்ரல் 6]

வரையிலும் மானியமாக வழங்கப்படுகிறது. தோல் உற்பத்தித் தரங்களுக்கான தோல் பணிக் குழு (LWG), நிலையான ஜவுளி, தோல் உற்பத்திக்கான OEKO-TEX, 10 பசுமை அளவுருக்களில் நிறுவனங்களை மதிப்பிடுவதற்கான GreenCo மதிப்பீடு மற்றும் தேயிலை துறைக்கான Trustea ஆகியவை தரச் சான்றிதழ் பட்டியலில் 2022-23 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டுள்ள புதிய சான்றிதழ் வகைகள் ஆகும்.

2022-2023 ஆம் ஆண்டில், தரச் சான்றிதழ்களைப் பெற்ற 164 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ரூ.148.37 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

2.4.7. மூலதன சந்தைகளில் இருந்து நிதி திரட்டுவதற்கான மானியம்

மாநிலத்தில் அதிக வளர்ச்சிக்கு சாத்தியமுள்ள உற்பத்தி மற்றும் சேவை தொழில்களில் ஈடுபட்டுள்ள சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஆரம்ப பொது வெளியீடு (IPOs) மூலம் சமபங்கு மூலதனத்தை திரட்ட SME பங்குச் சந்தையில் பட்டியலிடுவதற்கு செய்யப்பட்ட செலவில் 75 விழுக்காடு அதிகபட்சம் ரூ.30 இலட்சம் வரை அந்நிறுவனங்களுக்கு மானியமாக வழங்கப்படுகிறது.

2022-2023 ஆம் ஆண்டில், 3 சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ரூ.67.00 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

2.4.8. காப்புரிமை பதிவு/வர்த்தக முத்திரைப் பதிவு/ புவிசார் குறியீடுகள் பதிவுக்கான ஊக்கத்தொகை

தொழில்முனைவோர் தங்கள் தயாரிப்புகளுக்கான காப்புரிமைகள், வர்த்தக முத்திரைகள் மற்றும் பிற அறிவுசார் சொத்துரிமைகளைப் பெறுவதை ஊக்குவிப்பதற்காக, தமிழ்நாட்டில் எப்பகுதியிலும் அமைந்துள்ள அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு பதிவு செய்யப்பட்ட காப்புரிமை பெறுவதற்கான செலவினங்களில் 75 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.3 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது. 2022-23 ஆம் ஆண்டு முதல், காப்புரிமைப் பதிவுக்கான ஆதாரத்தை மட்டும் சமர்ப்பித்தால், வேறு எந்த ஆவணமும் இல்லாமல் இந்தத் திட்டத்தின்கீழ்

ரூ.1 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. இதேபோல், வர்த்தக முத்திரை மற்றும் பதிவு செய்யப்பட்ட புவிசார் குறியீடுகள் பெறுவதற்கு ஆகும் செலவினங்களில் 50 விழுக்காடு அதிகபட்சம் ரூ.25,000 வரை மானியமாக வழங்கப்படுகிறது.

2022-2023 ஆம் ஆண்டில், காப்புரிமை மற்றும் வர்த்தக முத்திரை பதிவுக்காக 53 தொழில் நிறுவனங்களுக்கு ரூ.18.05 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

2.4.9. முத்திரை வரி மற்றும் பதிவுக் கட்டணங்களை திரும்ப வழங்குதல்

மாநிலம் முழுவதும் சமச்சீரான வளர்ச்சியை உறுதி செய்யும் விதமாக, பின் தங்கிய வட்டாரங்களில் தொடங்கப்படும் அனைத்து புதிய குறு மற்றும் சிறு நிறுவனங்களை நிறுவ தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் வகையில், தொழிற் பயன்பாட்டிற்காக நிலம் வாங்கும்பட்சத்தில் பதிவுத் துறைக்கு செலுத்தப்பட்ட முத்திரைத் தொகை மற்றும் பதிவுக் கட்டணங்களில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது.

2022-23 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் 38 நிறுவனங்களுக்கு ரூ.9.35 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

2.4.10 தரக் கட்டுப்பாடு ஆணைகள் (1981, 1997 & 2003) செயல்படுத்துதல்

உள்நாட்டில் பயன்படுத்தப்படும் மின்சாரப் பொருட்களின் தரம் மற்றும் பாதுகாப்பைக் கண்டறிய, அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள சில மின் தயாரிப்புகள் குறிப்பிட்ட தர நிலைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக தரக் கட்டுப்பாட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. வீட்டு மின் உபகரணங்கள் (தரக் கட்டுப்பாடு) ஆணை 1981, எண்ணெய் அழுத்த அடுப்புகள் (தரக்கட்டுப்பாடு) ஆணை 1997 மற்றும் மின் கம்பிகள் (Electric Wires), கம்பி வடம் (cable), உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு கருவிகள் மற்றும் துணைக் கருவிகள் (தரக்கட்டுப்பாடு) ஆணை 2003 ஆகியவற்றை செயல்படுத்த மாவட்டத் தொழில் மைய பொது மேலாளர்கள்/ மண்டல இணை இயக்குநர், சென்னை ஆகியோருக்கு "உரிய அதிகாரம்" வழங்கப்பட்டு, தரமான மின் பொருட்களை பயன்படுத்த நுகர்வோர் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

2023 ஏப்ரல் 6]

2.4.11 ஒற்றைச் சாளரத் தீர்வு (Single Window Clearance)

தொழில் தொடங்கி நடத்துவதற்கான வழிமுறைகளையும், சட்டபூர்வமான நடவடிக்கைகளையும் எளிதாக்கும் வண்ணம் தமிழ்நாடு வணிக நடைமுறைகள் எளிதாக்கும் சட்டம் மற்றும் விதிகள் 2018-ஐ தமிழ்நாடு அரசு இயற்றியுள்ளது. இதனைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் புதிய தொழில் நிறுவனங்களைத் தொடங்கவும், செயல்படும் தொழில் நிறுவனங்களை விரிவுபடுத்தவும், தொழில் நிறுவனங்களைத் தொடர்ந்து நடத்தவும் சட்டமுறைப்படி தேவையான ஒப்புதல்கள், இசைவுகள் மற்றும் உரிமம் பெறுதல் ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களை ஒரு முனையில் பெறும் வகையில் ஒற்றைச் சாளர தகவு தொடங்கப்பட்டுள்ளது.

இணையதளம் வாயிலாக ஒரு முனையில் 154 சேவைகளைப் பெறுவதற்கான விண்ணப்பங்களைப் பெற்று, அதனை மின்னணு முறையில் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி ஒப்புதல்கள் பெறும் வகையில் ஒற்றைச் சாளரத் தகவு இயங்குகிறது. இம்முறையில் வரும் விண்ணப்பங்கள், தொடர்புடைய சம்பந்தப்பட்ட துறைகளை நேரடியாக அணுகாமல், காகிதமற்ற, தொடர்பற்ற முறையில் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் ஒப்புதல் அளிக்கப்பட்டு, வெளிப்படைத்தன்மையை உறுதி செய்கிறது. இப்பணியை மேற்கொள்ள அனைத்து மாவட்ட தொழில் மைய அலுவலகங்களில் தொழில் வழிகாட்டி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அனைத்து மாவட்டங்களிலும் இணைய வழியில் விண்ணப்பங்களைப் பதிவு செய்வதற்கான பயிற்சிகள் "கைடன்ஸ் தமிழ்நாடு (Guidance Tamil Nadu)" நிறுவனத்துடன் இணைந்து நடத்தப்பட்டு வருகிறது. தொழில்களைத் தொடங்குவதற்கான குறிப்பிட்ட உரிமங்கள்/அனுமதிகள் பெறுவதற்காக காத்திருக்காமல் உடனடியாக தொழில் தொடங்கிடும் வகையில், தமிழ்நாடு வணிக நடைமுறைகள் வசதியாக்கும் சட்டத்தை மேலும் எளிதாக்குவதற்கு சட்டத்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான விதிகள் விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. இதன் மூலம் தொழில்முனைவோர் மூன்று வருட காலத்திற்குள் அந்த உரிமங்கள்/அனுமதிகள் பெற்றுக் கொண்டால் போதுமானது.

2022-23 ஆம் ஆண்டில், 11,176 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 9,956 விண்ணப்பங்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

2.4.12 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் வசதியாக்கக் குழுக்கள் (MSEFC)

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம்-2006-இன்படி தமிழ்நாடு அரசு, சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மண்டலங்களில் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான வசதியாக்கக் குழுக்களை அமைத்துள்ளது. இந்த குழுக்கள், குறு மற்றும் சிறு நிறுவனங்களால் விற்பனை செய்யப்பட்ட பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான பட்டியல் தொகையை விரைந்து பெறுவதில் ஏற்படும் சிக்கல்களுக்கு தீர்வு காணும் வகையில் செயல்பட்டு வருகிறது.

2022-23 ஆம் நிதியாண்டில், 63 வசதியாக்கக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, ரூ.142.03 கோடி மதிப்பிலான 836 வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளன.

2.4.13 தொழில்முனைவோர்கள் மற்றும் வங்கிகளுக்கான விருதுகள் (Awards)

உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளில் போட்டித்தன்மையுடன் இருக்க ஆக்கபூர்வமான மற்றும் புதுமையான நடவடிக்கைகள்மூலம் முன்னேற்றங்களைக் கண்டுள்ள தமிழ்நாட்டில் உள்ள தொழில்முனைவோர்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன விருதுகள் வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டு, விருதுகளுக்கான தகுதியான விண்ணப்பங்களைப் பரிந்துரைத்தல், விண்ணப்பித்தல் மற்றும் இறுதிப் பட்டியலிடல் ஆகிய முழு செயல்முறையும் மின்னணு முறையில் செய்யப்பட்டது. 2022-23 ஆம் ஆண்டில் பின்வரும் விருதுகள் வழங்கப்பட்டன.

1. *மாநில அளவிலான சிறந்த தொழில்முனைவோர் விருது*
2. *மாநில அளவிலான சிறந்த மகளிர் தொழில்முனைவோர் விருது*
3. *மாநில அளவிலான வேளாண் சார்ந்த தொழில்களுக்கான சிறந்த தொழில்முனைவோர் விருது*

4. *மாநில அளவிலான தரம் மற்றும் ஏற்றுமதிக்கான சிறந்த தொழில்முனைவோர் விருது*

5. *மாநில அளவிலான சிறந்த சிறப்பு பிரிவினர் தொழில்முனைவோர் விருது*

6. *மாநிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு அதிக அளவில் கடன் வழங்கும் முதல் மூன்று வங்கிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் விருது*

7. *மாவட்ட அளவிலான சிறந்த தொழில்முனைவோர் விருதுகள்*

2.5. தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்

துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் 289 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், 1983 இன்படி, தொழில் வணிக ஆணையர், இச்சங்கங்களின் மாநில பதிவாளர் ஆவார். இந்த சங்கங்கள், தென்னை நார், தொழிலாளர் ஒப்பந்தம், அச்சிடுதல், தேயிலை, கைவினைப் பொருட்கள், தொழிற்பேட்டைகள் போன்ற பிற வணிகங்களில் ஈடுபட்டுள்ளன. இந்தச் சங்கங்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவை இண்ட்கோசர்வ், சேகோசர்வ் மற்றும் தாய்கோ வங்கி ஆகியனவாகும். மேலும், பல்வேறு மருந்து தயாரிக்கும் நிறுவனங்களுக்கு பரிசோதனை வசதிகளை வழங்கும் சென்னை தொழிற்கூட்டுறவு பகுப்பாய்வகம் (MICAL) மற்றும் பரம்பரையாக கொண்டுள்ள பாரம்பரியத் திறன்களைப் பயன்படுத்தி, பாம்புகளிடமிருந்து விஷத்தைப் பிரித்தெடுக்கும் நபர்களை உறுப்பினர்களாகக் கொண்ட, செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள இருளர் பாம்பு பிடிப்போர் தொழிற்கூட்டுறவுச் சங்கம் போன்ற பிற சிறப்புச் சங்கங்களும் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகின்றன. தொழிற்கூட்டுறவுச் சங்கங்களின் விவரம் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன:

[2023 ஏப்ரல் 6

வ. எண்.	வணிகம்	சங்கங்களின் எண்ணிக்கை	ஆண்டு விற்றுமுதல் (ரூ.கோடியில்)
1	சேகோ	2	486.25
2	தொழிலாளர் ஒப்பந்த சேவை	31	314.28
3	தேயிலை	18	140.11
4	அச்சு	30	45.56
5	கயிறு	64	25.64
6	ஆட்டோ மற்றும் டாக்ஸி	23	22.54
7	தையல்	14	3.06
8	பொறியியல்	16	12.04
9	பாலிதீன்	5	2.28
10	தீப்பெட்டி	6	2.52
11	கைவினைப்பொருட்கள்	14	2.54
12	உலோகம்	8	1.55
13	செங்கல்	7	1.35
14	தொழிற்பேட்டைகள்	11	0.89
15	தோல்	2	0.07
16	மற்றவை	38	46.80
	மொத்தம்	289	1107.48

2022-23 ஆம் ஆண்டில், தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் ரூ.1107.48 கோடி விற்பனையை எய்துள்ளது. 289 சங்கங்களில், 228 சங்கங்கள் இலாபம் ஈட்டுகின்றன. இந்த ஆண்டில் அனைத்து சங்கங்களிலும் உள்ள 10,027 தொழிலாளர்களுக்கு ஊதியமாக ரூ.296.65 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 6]

2.6 இன்ட்கோசர்வ்

25,000-க்கும் மேற்பட்ட உறுப்பினர்களுடன் 16 தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளை (ICTFs) *உள்ளடக்கி, 1961 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட* INDCOSERVE *என பிரபலமாக அறியப்படும், தமிழ்நாடு சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் கூட்டமைப்பு நாட்டின் மிகப் பெரிய தேயிலை கூட்டுறவு அமைப்பாகும். இண்ட்கோசர்வ் என்பது, இந்தியாவில் "நியாயமான வர்த்தக"* (Fair Trade) *சான்றிதழைப் பெற்ற முதல் தேயிலை கூட்டுறவு நிறுவனமாகும். நம்பகமான, வெளிப்படையான மற்றும் அளவிடக்கூடிய அளவுகோல்களின்படி உற்பத்தியான தேயிலையை, தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் வாங்குபவர்கள் பெறுவதற்கு ஏற்ற வகையில், தேயிலை தொழிலுக்கான நிலைத்தன்மை குறியீடு மற்றும் சரிபார்ப்பு முறையான "*Trustea*" சான்றிதழை மூன்று தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் பெற்றுள்ளன.*

இண்ட்கோசர்வ் ஆனது குன்னூர், துடியலூர் (கோயம்புத்தூர்) மற்றும் கொச்சி (கேரளா) ஆகிய இடங்களில் உள்ள தன்னுடைய கிடங்குகள்மூலம், தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் மற்றும் டான்டீமூலம் உற்பத்தி செய்யப்படும் தேயிலைக்கு, கிடங்கு வசதிகளை வழங்கி, அதன்மூலம் ரூ.0.93 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. 2022-23 ஆம் ஆண்டில், தமிழ்நாடு முழுவதும் உள்ள பொது விநியோகத் திட்ட கடைகளுக்கு, இண்ட்கோசர்வ் 2,161 மெட்ரிக் டன் தேயிலைத் தூளை வழங்கி, அதன்மூலம் ரூ.42.26 கோடி வருமானம் ஈட்டி, ரூ.3.48 கோடி இலாபம் அடைந்துள்ளது.

இந்நிறுவனமானது 2021-22-இல் "ஊட்டி டீ"யின் விற்பனை வருமானத்தில் ரூ.6.40 கோடியை 16 தேயிலை தொழிற்சாலைகளின் உறுப்பினர்களான சிறு தேயிலை விவசாயிகள் பயன்பெறும் வகையில் மானியமாக வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு சிறு தேயிலை விவசாயிகள் பயன்பெற 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.5 கோடி மானியமாக வழங்கியுள்ளது.

சுற்றுச்சூழலுக்கு உகந்த தூய்மையான ஆற்றலை நோக்கிய முன்முயற்சியாக, இண்ட்கோசர்வானது, கார்பன் நியூட்ரல் தேயிலை தூளை உற்பத்தி செய்ய முன்வந்து, இதற்காக,

கைகாட்டி இண்ட்கோ தேயிலை தொழிற்சாலையில் 250 KWA கிரிட் இணைக்கப்பட்ட மேற்கூரை சூரிய ஒளி சக்தி நிலையத்தை நிறுவுவதற்கு, சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.2.36 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஜூன் 2023-க்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இண்ட்கோசர்வ், சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.3.29 கோடி நிதியுதவியுடன், ஊட்டி தேயிலை உற்பத்தியை அதிகரிக்க நவீனமயமாக்கப்பட்ட இயந்திரங்களுடன், புதிய தேயிலை பிளன்டிங் மற்றும் பேக்கிங் பிரிவை நிறுவுகிறது. இண்ட்கோசர்வானது, நபார்டு வங்கி நிதி உதவியுடன் ரூ.67.74 கோடி திட்ட மதிப்பீட்டில், அதன் 15 தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளை, இரண்டு கட்டங்களாக நவீனமயமாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

மின்னணு ஏலம் மூலம் தேயிலை விற்பனையில் வெளிப்படைத்தன்மையை வழங்கவும், இடைத்தரகர்களை ஒழிக்கவும், சிறந்த தேயிலை விலையை உறுதி செய்யவும், தேயிலை உற்பத்தியாளர்கள் சேவை தொழிற்கூட்டுறவு சங்கம் (டீசர்வ்) 2003 முதல் செயல்பட்டு வருகிறது. டீசர்வ் 2022-2023 ஆம் ஆண்டில், ஏலத்தில் ரூ.53.21 கோடி மதிப்பிலான 6036 மெட்ரிக் டன் தேயிலைத் தூளை விற்பனை செய்து ரூ.20 இலட்சம் நிகர லாபம் ஈட்டியுள்ளது.

2022-23 ஆம் ஆண்டில், 16 தேயிலை தொழிற்சாலைகள், தங்கள் உறுப்பினர்களிடமிருந்து 40,148 மெட்ரிக் டன் பசுந்தேயிலையை கொள்முதல் செய்து, 10,549 மெட்ரிக் டன் தேயிலையை உற்பத்தி செய்து ரூ.94.63 கோடிக்கு விற்பனை எய்தியுள்ளன.

2.7 சேகோசர்வ்

1981 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட, “சேகோசர்வ்” எனப்படும் சேலம் ஸ்டார்ச் மற்றும் சேகோ உற்பத்தியாளர்கள் சேவை தொழிற்கூட்டுறவுச் சங்கம், மரவள்ளிக்கிழங்கு பயிரிடும் மாவட்டங்களில் உள்ள சேகோ மற்றும் ஸ்டார்ச் உற்பத்தியாளர்கள், நேரடியாக, தங்கள் தயாரிப்புகளைச் சந்தைப்படுத்த உதவுகிறது. இதன்மூலம், இடைத்தரகர்களை நீக்கி, அவர்களுக்கு

2023 ஏப்ரல் 6]

நியாயமான மற்றும் இலாபகரமான விலையை உறுதி செய்கிறது. சேகோசர்வ், அதன் உறுப்பினர்களுக்கு, நிதி உதவியை எளிதாக்கி, கிடங்கு வசதிகளையும் ஏற்படுத்தி தருகிறது.

ஜவ்வரிசியில் கலப்படத்தை தடுத்திடவும், இரசாயனமில்லாத ஜவ்வரிசி தயாரிப்பினை ஊக்குவிப்பதற்காகவும், நல்ல உற்பத்தி நடைமுறைகள் மற்றும் மரவள்ளிக்கிழங்கு ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியில் தீங்கு விளைவிக்கும் பொருட்களைப் பகுப்பாய்தல் மற்றும் சிக்கலான கட்டுப்பாட்டு மையம் (HACCP)*-க்கான ஒரு நிலைத்த செயல்பாட்டு முறையை உருவாக்கிட, 09.11.2022 அன்று சேகோசர்வ் மற்றும்* ICAR-CTCRI *(இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகம்-மத்திய கிழங்கு பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம், திருவனந்தபுரம்) ஆகியவற்றுக்கு இடையே, ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் (*MoU*) கையெழுத்தானது. இதனை ரூ.29.50 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்திட கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிதியின்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது. நிலையான இயக்க முறை உருவாக்கப்பட்டு (*SOP*) மற்றும்* HACCP *சான்றிதழ் பெறப்பட்ட பின், இரசாயனமற்ற ஜவ்வரிசிக்கு, ஒரு தனி வர்த்தக முத்திரை உருவாக்கப்படும். இரசாயனம் இல்லாத ஜவ்வரிசியின், புதிய வர்த்தக முத்திரை தேவையைப் பூர்த்தி செய்ய, ரூ.4 கோடி செலவில் சேகோசர்வ் சோதனை ஆய்வகத்தை மேம்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. சேகோசர்வின் சேவைகளைப் பெறுவதற்கு, மரவள்ளிக்கிழங்கு விவசாயிகளை அதன் இணை உறுப்பினர்களாக சேர்க்க சேகோசர்வ் முயற்சிகளை எடுத்து வருகிறது.*

ஜவ்வரிசியில் கலப்படத்தைத் தடுக்க, மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் மரவள்ளிக்கிழங்கு முக்கிய வணிகப் பயிராகப் பயிரிடப்படும் 7 மாவட்டங்களில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 2022-23 ஆம் ஆண்டில், சேகோசர்வ் ரூ.485.95 கோடி விற்பனை எய்தி ரூ.3.80 கோடி நிகர இலாபத்தை ஈட்டியுள்ளது.

2.8 தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கி (TAICO BANK)

தொழிற்கூட்டுறவு சங்கங்களுக்கு போதுமான நிதி வசதிகளை வழங்குவதற்காக, தாய்கோ வங்கி என பிரபலமாக அறியப்படும் தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கி, 1961 ஆம் ஆண்டு

நிறுவப்பட்டது. தாய்கோ வங்கி, தனிநபர்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்கு, அனைத்து வகையான கடன்கள் வழங்கி, வங்கிச் செயல்பாடுகளை விரிவுபடுத்தியது. இதனுடன், பொதுமக்களிடமிருந்து வைப்புகளை ஏற்றுக்கொள்வதுடன், அவர்களுக்கான நடப்புக் கணக்குகளையும், சேமிப்புக் கணக்குகளையும் இயக்குகிறது.

தாய்கோ வங்கிக்கு மாநிலம் முழுவதும் 47 கிளைகள் உள்ளன. அனைத்து கிளைகளும், மைய வங்கியியல் தீர்வில் (Core Banking Solution) உள்ளன. RTGS, NEFT மற்றும் மொபைல் வங்கி சேவைகளும் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், தாய்கோ வங்கி ரூ.1,069.70 கோடி அளவுக்கு வைப்புகளைத் திரட்டி, கடன்கள் மற்றும் முன்பணமாக ரூ.564.27 கோடிக்கு வழங்கி, 2022-23 ஆம் ஆண்டில் ரூ.10.37 கோடி நிகர இலாபத்தை ஈட்டியுள்ளது (தணிக்கை செய்யப்படாதது).

தாய்கோ வங்கி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதில் தனிக்கவனம் செலுத்துகிறது. மேலும், தாய்கோ வங்கியின் FLY MSME திட்டத்தின் மூலம் சிட்கோ தொழிற்பேட்டை பயனாளிகளுக்கு நிதி உதவி வழங்குவதற்கு தாய்கோ வங்கிக்கும், தமிழ்நாடு சிட்கோவிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தானது. தாய்கோ வங்கி குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு, தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டத்தின் (TNCGS) கீழ், கடன்களையும் வழங்குகிறது.

வியாசர்பாடி, நெய்வேலி மற்றும் சேப்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள தாய்கோ வங்கிக் கிளைகளை நவீனமயமாக்கும் பணி, தற்போது நடைபெற்று வருகிறது. வங்கி வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்படும் நகைகளின் தூய்மை மற்றும் நம்பகத்தன்மையைக் கண்டறிய, கேரட்டோமீட்டர்கள் வாங்கப்பட்டு, தாய்கோ வங்கியின் 6 கிளைகளில் நிறுவப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 6]

2.9 சென்னை தொழிற்கூட்டுறவு பகுப்பாய்வகம் (MICAL), சென்னை

அலோபதி, ஆயுர்வேதா, சித்தா மற்றும் யுனானி மருந்து உற்பத்தியாளர்களால் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் மற்றும் தயாரிக்கப்படும் மருந்துப்பொருட்களின், பகுப்பாய்வு மற்றும் சோதனைகளை மேற்கொள்வதற்காகவும், அவை பரிந்துரைக்கப்பட்ட தரங்களுக்கு பொருந்தியுள்ளனவா? எனச் சான்றளிக்கவும், கூட்டுறவு அமைப்பில் நிறுவப்பட்ட ஓர் ஆய்வகம், சென்னை தொழிற்கூட்டுறவு பகுப்பாய்வகம் லிமிடெட் (மைக்கால்) ஆகும். இதன் தலைமையகம் சென்னையில் உள்ளது, மேலும், இதன் ISO சான்றளிக்கப்பட்ட கிளை ஒன்று குன்னூரில் உள்ளது. மைக்கால் 2022-23-ல் 3,328 மாதிரிகளை பரிசோதித்து, ரூ.23.07 இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளது.

ரூ.95 இலட்சம் செலவில், மைக்கால் ஆய்வகத்தின் கட்டடம் புதுப்பிக்கப்பட்டு, புதிய இயந்திரங்கள் மற்றும் பகுப்பாய்வுக் கருவிகள் நிறுவப்பட்டு, ஆய்வகம் நவீனமயமாக்கப்பட்டுள்ளது.

2.10. ஆய்வகங்கள்

2.10.1 மத்திய மின்பொருள் சோதனைக் கூடம், காக்களூர்

திருவள்ளூர் மாவட்டம், காக்களூரில் அமைந்துள்ள மத்திய மின்பொருள் சோதனைக் கூடமானது 1973 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு, இந்திய தர நிர்ணய அளவீட்டின்படி பல்வேறு வகையான மின் பொருட்களை சோதனை செய்யும் வசதிகளை அளித்து வருகிறது. இச்சோதனைக் கூடமானது, சோதனை மற்றும் அளவொப்புமை ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார குழுமம் (NABL) மற்றும் இந்திய தர நிர்ணய நிறுவனம் (BIS) ஆகியவற்றின் அங்கீகாரம் பெற்றுள்ளது. இந்த அங்கீகார நிலையைத் தொடர்ந்து பேணுவதற்கு, மத்திய மின்பொருள் சோதனைக் கூடமானது அவ்வப்போது பலப்படுத்தப்பட்டு வருகின்றது.

மத்திய மின்பொருள் சோதனைக் கூடத்தில், மின் பொருட்களைச் சோதனை செய்வதற்கான இரண்டு நாள் பயிற்சியும் வழங்கப்படுகிறது. காக்களூரில் உள்ள மத்திய மின்பொருள் சோதனைக் கூடத்தால் வழங்கப்பட்ட பயிற்சியின் மூலம் இதுவரை பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த 468 பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

[2023 ஏப்ரல் 6

சிறப்பு வகை ஆய்வகக் கட்டடம் கட்டப்பட்டது மற்றும் ஜெர்மனியில் இருந்து வாங்கப்பட்ட சிறப்பு உபகரணங்கள் ஆகியவை மொத்தம் ரூ.6.95 கோடி செலவில் எல்.இ.டி. விளக்குகள் மற்றும் பொருத்திகள் சோதனை 2022-ல் சேர்க்கப்பட்டன. மத்திய மின் சோதனைக் கூடத்தின் வசதிகளை மேலும் அதிகரிக்கும் பொருட்டு ரூ.1.32 கோடி மதிப்பிலான உபகரணங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மத்திய மின்பொருள் சோதனைக் கூடமானது 2022-23-ல் 1,874 மாதிரிகளைப் பரிசோதனை செய்து ரூ.48.26 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

2.10.2 இரசாயன ஆய்வகங்கள்

தொழில் வணிக ஆணையரகத்தின்கீழ் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் அமைந்துள்ள 5 மண்டல பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், பொதுப் பணித் துறை மற்றும் இரயில்வே உள்ளிட்ட அரசுத் துறைகள் மற்றும் தனியார் வாடிக்கையாளர்களின் மூலப்பொருட்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட பொருட்களை சோதனை செய்வதற்கான சோதனை வசதிகளை வழங்குகின்றன. இந்த ஆய்வகங்களில் அதிநுட்ப செயற்கருவிகளான ஆப்டிகல் எமிஷன் ஸ்பெக்ட்ரோமீட்டர், அட்டாமிக் அப்சார்ப்ஷன் ஸ்பெக்ட்ரோமீட்டர் மற்றும் இதர செயற்கருவிகளைக் கொண்டு கட்டுமானத் தொழில்களில் பயன்படுத்தப்படும் பொருட்களான இரும்புக்கம்பிகள், சிமெண்ட், தண்ணீர், மணல், கருங்கல் ஜல்லி, பிட்டுமின், மண் போன்ற பொருட்களை சோதிக்கும் பொருட்டு இந்த செயற்கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

2.11. தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனங்கள்

பின்வரும் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனங்கள் ஆணையரகத்தின்கீழ் செயல்படுகின்றன:

I. பீங்கான் தொழில்நுட்பவியலில் மூன்றரை ஆண்டு பட்டயப் பயிற்சி வழங்கும் பீங்கான் தொழில்நுட்பக் கல்லூரி, விருத்தாசலம்

II. கருவி, அச்சு பொறியியல், குளிர்சாதனம் மற்றும் காற்று பதன பொறியியலில் மூன்றாண்டு பட்டயப் பயிற்சி

2023 ஏப்ரல் 6]

வழங்கும் அரசு தொழில்நுட்பப் பயிற்சி மையம், கிண்டி, சென்னை

III. கருவி மற்றும் அச்சு பொறியியலில் மூன்றாண்டு பட்டயப் பயிற்சி வழங்கும் கருவி பொறியியல் பயிலகம், திண்டுக்கல்,

IV. கண்ணாடி ஊதும் செயல்முறை பயிற்சி வழங்கும் அரசினர் அறிவியல் கண்ணாடி கருவிகள் பயிற்சி மையம், கோயம்புத்தூர்

V. ஆய்வக கண்ணாடி பொருட்களைத் தயாரித்து வரும் அரசு அறிவியல் கண்ணாடி கருவிகள் உற்பத்தி மையம், கோயம்புத்தூர்.

2.12. குறுந்தொழில் குழும மேம்பாட்டுத் திட்டம்

மாநிலம் முழுவதும் உள்ள பல்வேறு துறை சார்ந்த குறுந்தொழில் குழுமங்களுக்கு பொது வசதி மையங்களை ஏற்படுத்திட 2022-23 ஆம் ஆண்டில் குறுந்தொழில் குழும மேம்பாட்டுத் திட்டம் அரசால் தொடங்கப்பட்டு, தொழில் ஆணையரகம் மற்றும் சிட்கோ நிறுவனத்தினால் சேர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறுந்தொழில் குழும மேம்பாட்டுத் திட்டம் கிராமப்புற வேலைவாய்ப்பை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல், பாலினம் மற்றும் சமூக வளர்ச்சி குறியீட்டையும் மேம்படுத்த உதவுகிறது. காஞ்சிபுரம் நரிக்குறவர்கள் பாசிமணி குழுமம், கோவில்பட்டி பார்வை குன்றியோர் குழுமம் மற்றும் தூத்துக்குடி ஆகாயதாமரை குழுமம் போன்ற குறு குழுமங்கள் முற்றிலும் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய வகுப்பினரை உள்ளடக்கியது.

இதுவரை ரூ.138.14 கோடி திட்ட மதிப்பீட்டில் 25 குறு குழுமங்களுக்கான பிரேரணைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, பல்வேறு நிலைகளில் செயல்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் விவரங்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன:

[2023 ஏப்ரல் 6

(ரூ. கோடியில்)

வ. எண்	குழுமத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு	அரசு மானியம்
1	பொள்ளாச்சி கயிறு குழுமம், கோயம்புத்தூர் மாவட்டம்	8.80	6.60
2	உடுமலைப்பேட்டை கயிறு குழுமம், திருப்பூர் மாவட்டம்	6.92	6.23
3	அலுமினிய அச்சு வார்ப்பு குழுமம், கோயம்புத்தூர் மாவட்டம்	5.73	4.30
4	முந்திரி பதப்படுத்துதல் குழுமம், பண்ருட்டி, கடலூர் மாவட்டம்	2.16	1.81
5	விளாச்சேரி பொம்மை குழுமம், மதுரை மாவட்டம்	4.03	3.63
6	தூத்துக்குடி ஆகாயத் தாமரை குழுமம், தூத்துக்குடி மாவட்டம்	2.02	2.02
7	மகளிர் நெசவாளர் குழுமம், இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம்	3.77	3.39
8	நரிக்குறவர் பாசி மணி குழுமம், காஞ்சிபுரம் மாவட்டம்	1.80	1.80
9	அகர்பத்தி குழுமம், திருப்பத்தூர் மாவட்டம்	7.50	6.03
10	பேராவூரணி கயிறு குழுமம், தஞ்சாவூர் மாவட்டம்	7.29	5.84
11	இராமநாதபுரம் நகை உற்பத்தியாளர் கூட்டமைப்பு குழுமம், இராமநாதபுரம் மாவட்டம்	6.71	6.08

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	குழுமத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு	அரசு மானியம்
12	அமராவதி காகித அட்டை குழுமம், கரூர் மாவட்டம்	7.03	5.29
13	சேலம் நுண்ணூட்ட சத்து குழுமம், சேலம் மாவட்டம்	7.14	5.35
14	மஞ்சள் பதப்படுத்துதல் குழுமம், ஈரோடு மாவட்டம்	7.39	5.54
15	உப்பு குழுமம், தூத்துக்குடி மாவட்டம்	4.26	3.84
16	இணைய வலை அச்சுக் குழுமம், மதுரை மாவட்டம்	6.53	4.89
17	மகளிர் ஆயத்த ஆடை குழுமம், மதுரை மாவட்டம்	3.91	3.52
18	மகளிர் உணவு பல்பொருள் குழுமம், கன்னியாகுமரி மாவட்டம்	6.65	5.99
19	உணவுப் பதப்படுத்துதல் குழுமம், நாமக்கல்	8.20	6.56
20	கோவில்பட்டி கண் பார்வையற்றோர் ஊதுபத்தி, பினாயில் குறுந்தொழில் குழுமம், தூத்துக்குடி மாவட்டம்	0.35	0.35
21	நெல்லை சமையல் பாத்திர குழுமம், திருநெல்வேலி மாவட்டம்	6.05	4.55
22	பவானி ஜமுக்காளம் குழுமம், ஈரோடு மாவட்டம்	6.89	6.20

வ. எண்	குழுமத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு	அரசு மானியம்
23	நவீன பல வண்ண அச்சுக் குழுமம், விழுப்புரம் மாவட்டம்	6.66	4.99
24	நவீன புகைப்படக் குழுமம், செங்கல்பட்டு மாவட்டம்	6.25	4.69
25	தம்மம்பட்டி மரவேலைப்பாடு குழுமம், சேலம் மாவட்டம்	4.10	3.69
	மொத்தம்	138.14	113.18

2.13. தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம் (TANCOIR)

தமிழ்நாட்டில் தென்னை நார் தொழிலை மேம்படுத்தவும், நிலவளைப் பொருட்கள் (ஜியோ டெக்ஸ்டைல்ஸ்) மற்றும் தென்னை நார் துகள் கட்டி (Coir Pith) *போன்ற மதிப்பு கூட்டப்பட்ட தென்னை நார் சார்ந்த பொருட்களை உள்நாடு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் பிரபலப்படுத்தவும், கோயம்புத்தூரில் இலாபநோக்கமற்ற நிறுவனமாக தமிழ்நாடு தென்னை கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனத்தை* (TANCOIR) *அரசு அமைத்துள்ளது. முதற்கட்டமாக ரூ.5 கோடி விதை மூலதனமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு, 25.8.22 அன்று கோயம்புத்தூரில் தொடங்கி வைக்கப்பட்டது.*

TANCOIR *5 தென்னை நார் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் குழுமங்கள் செயலாக்கப்படுத்துவதன் மூலம் தென்னை நார் தொழிலுக்கு புத்துயிர் அளிக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. தென்னை நார் துறைக்கான* CARE *மற்றும்* TNCGS *திட்டங்கள் உட்பட சிறப்பு நிதியுதவித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.*

ஈரோடு மாவட்டம், சீனாபுரம் கிராமத்தில் 1,200 அடி அளவுள்ள குளத்திற்கு நிலவளைப் பொருட்கள் (ஜியோ டெக்ஸ்டைல்ஸ்) பதிக்கும் பணி ஊரக வளர்ச்சித் துறை மூலம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. தேனி மாவட்டம், மஞ்சளார் அணையின் சரிவில் 49,000 சதுர மீட்டர் பரப்பளவில் பொதுப் பணித் துறையின் மூலம் நிலவளைப் பொருட்கள் (ஜியோ டெக்ஸ்டைல்ஸ்) பதிக்கும் பணி நிறைவுற்றது.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 6]

தமிழ்நாடு தென்னை கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம்மூலம் தென்னை நார் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு சந்தை வாய்ப்பினை மேம்படுத்த வாங்குவோர் விற்போர் சந்திப்பு நடத்துதல், தென்னை நார் துகள் கொண்டு மாடித் தோட்டங்கள் அமைக்க முயற்சி மேற்கொள்ளுதல், ஏற்றுமதி சந்தையினை மேம்படுத்த வெளிநாட்டு சந்தை கண்காட்சிகளில் நிறுவனங்கள் பங்கு கொள்ள வழி வகுத்தல், மதிப்புக் கூட்டுப் பொருட்கள் உற்பத்தி மேற்கொள்ளும் குறு குழுமங்கள் துவக்க ஏற்பாடு செய்தல், நிறுவனங்கள் உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்த உதவுதல், புதிய மூலதனம் திரட்டுதல் போன்ற பணிகளையும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

2.14. தமிழ்நாடு உணவுப் பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் (TNAPEx)

தமிழ்நாடு அரசு 2022-23 ஆம் ஆண்டில் உணவுப் பதப்படுத்துதல் தொடர்பான திட்டங்கள் மற்றும் நிறுவனங்களை வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையிலிருந்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறைக்கு மாற்றியுள்ளது.

உணவுப் பதப்படுத்துதல் மற்றும் விவசாய ஏற்றுமதி துறைகளுக்குப் புத்துயிர் அளிக்கவும், பண்ணைப் பொருட்களுக்கு மதிப்புக் கூட்டுதல் மற்றும் ஏற்றுமதிக்கு வழிவகுக்கும் மதிப்புச்சங்கிலிகளை உருவாக்குதல் போன்ற உத்வேகத்தை அளிக்க, தமிழ்நாடு உணவுப் பதப்படுத்துதல் மற்றும் வேளாண்மை ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் (TNAPEx) இலாபநோக்கமற்ற நிறுவனமாக உருவாக்கப்பட்டுள்ளது. துறை மாற்றத்திற்குப் பிறகு, தொழில் துறை ஆணையர் அதன் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிறுவனத்திற்கு 21 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணியமர்த்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. டெல்டா மாவட்டங்களை உள்ளடக்கிய ”வேளாண் தொழில் பெருவழித்தடம்” திட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ள திட்டங்களை இந்நிறுவனம் செயல்படுத்தும். இதற்கான விரிவான செயல் திட்டம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

[2023 ஏப்ரல் 6

2.15. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலட்சியங்கள் (SDGs)

ஐக்கிய நாடுகள் சபையின் 17 நீடித்த நிலையான இலட்சியங்கள், சமூக, பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பரிமாணங்களில் 169 இலக்குகளைக் கொண்டுள்ளது. இந்த நீடித்த நிலையான வளர்ச்சிக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். குறு. சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுடன் மக்களை வறுமையில் இருந்து மீட்டெடுத்து, சமத்துவமின்மையைக் குறைக்கின்றன. இந்நிறுவனங்கள் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கி சமூகம் மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்துகின்றன. பல குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மகளிர் மற்றும் பின்தங்கிய வகுப்பினரால் நடத்தப்படுகின்றன. இந்நிறுவனங்கள் அதிக ஆற்றல் திறன் கொண்டு சமச்சீர் வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன.

நீடித்த நிலையான இலட்சியம் 8 ஆனது உள்ளடக்கிய நிலையான பொருளாதார வளர்ச்சி, முழு மற்றும் திறன் வாய்ந்த வேலைவாய்ப்பு மற்றும் கண்ணியமான வேலைவாய்ப்பினைக் கொண்டதாகும்.

கீழ்க்கண்ட குறியீடுகள் மூலம் நீடித்த நிலையான இலட்சியம் 8 இன் செயல்திறன் கணக்கிடப்படுகிறது.

- உத்யம் பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை
- ஒன்றிய அரசால் நிதி உதவி வழங்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை
- தமிழக அரசால் நிதி உதவி வழங்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை

3. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (தமிழ்நாடு சிட்கோ)

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (தமிழ்நாடு சிட்கோ) மாநிலத்தில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு பல உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய தொழில்மனைகள் மற்றும் வணிக

2023 ஏப்ரல் 6]

பயன்பாடு மனைகளை வழங்கி உதவும் முக்கிய நோக்கத்துடன் தமிழ்நாடு அரசால் 23.03.1970-ல் நிறுவப்பட்டது. புதிய தொழிற்பேட்டைகள் மற்றும் தொழில் முனைவோர்கள் உடனடியாக தொழில் துவங்க ஏதுவான வசதிகளை உள்ளடக்கிய அடுக்குமாடி தொழில் வளாகங்கள் உருவாக்குதல், இயங்கிவரும் தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி பராமரித்தல், தனியார் தொழிற்பேட்டைகள் உருவாக்க உதவி செய்தல் மற்றும் அவற்றை நகருக்கு வெளியே மாற்றி அமைத்தலில் உதவுதல், பொது வசதி மையங்கள் மற்றும் பொது உற்பத்தி உட்கட்டமைப்பு மையங்களை அமைப்பதனை ஊக்குவித்தலின்மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான குழுமங்களை மேம்படுத்துதல், புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காக பணியாளர்கள் தங்கும் விடுதி உருவாக்குதல் ஆகியவை தமிழ்நாடு சிட்கோவின் முக்கிய செயல்பாடுகளாகும்.

3.1 தொழிற்பேட்டைகள்

மாநிலத்தின் பல்வேறு இடங்களில், 8,453.13 ஏக்கரில் 14,983 மேம்படுத்தப்பட்ட தொழில்மனைகள்/தொழிற்கூடங்கள் மட்டுமல்லாது கிண்டி, அம்பத்தூர் மற்றும் திருமழிசை தொழிற்பேட்டைகளில் உள்ள அடுக்குமாடி தொழில் வளாகங்களுடன் 41 அரசு தொழிற்பேட்டைகள் மற்றும் 86 தமிழ்நாடு சிட்கோ தொழிற்பேட்டைகள் ஆகியவற்றின் செயல்பாட்டினை தமிழ்நாடு சிட்கோ கண்காணித்து வருகிறது. மேலும், 8 மாவட்டங்களில் 537.72 ஏக்கரில் 8 புதிய தொழிற்பேட்டைகள் ரூ.263.82 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டு வருகின்றன.

127 தொழிற்பேட்டைகளின் விவரங்கள் இணைப்பு-1-ல் கொடுக்கப்பட்டுள்ளது, இவற்றில் மே 2021-க்கு பிறகு 186.04 ஏக்கரில் 549 தொழில்மனைகளுடன், ஐந்து மாவட்டங்களில் உருவாக்கப்பட்ட கீழ்குறிப்பிட்ட ஐந்து தொழிற்பேட்டைகளும் அடங்கும்:

[2023 ஏப்ரல் 6

வ. எண்	மாவட்டம்	தொழிற் பேட்டையின் பெயர்	மேம்படுத்தப்பட்ட பரப்பு (ஏக்கரில்)	மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள்
1	செங்கல்பட்டு	ஆலத்தூர் பகுதி-2	67.96	192
2	நாமக்கல்	இராசம்பாளையம்	18.37	82
3	சேலம்	பெரிய சீரகப்பாடி	26.86	53
4	புதுக்கோட்டை	ஆலங்குடி	15.67	51
5	திருவண்ணா மலை	பெரிய கோளப்பாடி	57.18	171
		மொத்தம்	186.04	549

சமச்சீர் சுற்று சூழலை உருவாக்க, தொழிற்பேட்டைகளில் தகுந்த சாலைவசதி, மழை நீர் வடிகால் வசதி, சிறு பாலங்கள், முறையான நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வசதி, தெரு விளக்குகள், பசுமை பகுதி, பூங்கா மற்றும் தேவையான பிற வசதிகள் உள்ளடக்கிய தொழிற்சாலைகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை தமிழ்நாடு சிட்கோ ஏற்படுத்தி தருகிறது.

தமிழ்நாடு சிட்கோ நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.45 கோடி மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.25.14 கோடி ஆகும். இந்நிறுவனத்தால் 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.83.61 கோடி விற்றுமுதல் செய்து ரூ.32.07 கோடி இலாபம் ஈட்டப்பட்டுள்ளது மற்றும் 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.109.83 கோடி விற்றுமுதல் செய்து ரூ.28.03 கோடி இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. (தணிக்கை செய்யப்படாதது)

3.2 மகளிருக்கான பிரத்யேக தொழிற் பூங்காக்கள்

தமிழ்நாடு சிட்கோவினால் 1,226 தொழில்மனைகளுடன் கூடிய கீழ்க்கண்ட 5 மகளிர் தொழிற் பூங்காக்கள் உருவாக்கப்பட்டுள்ளன:

2023 ஏப்ரல் 6]

1. திருமுல்லைவாயல் (திருவள்ளூர் மாவட்டம்)
2. திருமுடிவாக்கம் (காஞ்சிபுரம் மாவட்டம்)
3. கருப்பூர் (சேலம் மாவட்டம்)
4. வாழவந்தான் கோட்டை (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) மற்றும்
5. கப்பலூர் (மதுரை மாவட்டம்)

3.3 புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்குதல்

உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய 8 புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கும் பணிகள் பின்வரும் 8 மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன:

வ. எண்	மாவட்டம்	தொழிற்பேட்டையின் பெயர்	மேம்படுத்தப்பட்ட பரப்பு (ஏக்கரில்)	திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்)
1	சேலம்	உமையாள்புரம்	20.07	4.00
2	செங்கல்பட்டு	கொடூர்	99.13	45.94
3	திருச்சி	மணப்பாறை	133.32	85.00
4	மதுரை	சக்கிமங்கலம்	31.88	22.28
5	திருவள்ளூர்	காவேரிராஜபுரம்	146.00	65.00
6	திருவாரூர்	வண்டம்பாளை	18.71	8.40
7	தூத்துக்குடி	லிங்கம்பட்டி	60.00	20.20
8	கடலூர்	காடாம்புலியூர்	28.61	13.00
		மொத்தம்	537.72	263.82

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

[2023 ஏப்ரல் 6

3.4 தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

தமிழ்நாடு சிட்கோ, "குறு, சிறு நிறுவனங்கள் குழும வளர்ச்சி திட்டத்தின்"கீழ் 14 தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மொத்தம் ரூ.29.64 கோடி திட்ட மதிப்பீட்டில் மேம்படுத்தியுள்ளது.

2021-2022 ஆம் நிதி ஆண்டில் கீழ்க்காணும் 5 தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மொத்தம் ரூ.18.40 கோடி திட்ட மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

வ. எண்	மாவட்டம்	தொழிற் பேட்டையின் பெயர்	பரப்பு (ஏக்கரில்)	திட்ட மதிப்பீடு (ரூ. கோடி)	ஒன்றிய அரசின் மானியம் (ரூ. கோடி)	மாநில அரசின் மானியம் (ரூ. கோடி)
1	மதுரை	கே. புதூர்	56.05	5.20	2.19	2.48
2	தஞ்சாவூர்	நாஞ்சிக்கோட்டை	26.30	2.85	1.05	1.51
3	கிருஷ்ணகிரி	ஓசூர் (புதியது)	24.41	4.00	1.39	2.20
4	திண்டுக்கல்	திண்டுக்கல்	39.91	4.05	1.92	1.72
5	ஈரோடு	நஞ்சை ஊத்துக்குளி	13.05	2.30	0.94	1.12
		மொத்தம்	159.72	18.40	7.49	9.03

மேலும், கீழ்காணும் 4 தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் ரூ.24.45 கோடி மொத்த திட்ட மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன:

2023 ஏப்ரல் 6]

வ. எண்	மாவட்டம்	தொழிற் பேட்டையின் பெயர்	பரப்பு (ஏக்கரில்)	திட்ட மதிப்பீடு (ரூ. கோடி)	ஒன்றிய அரசின் மானியம் (ரூ. கோடி)	மாநில அரசின் மானியம் (ரூ. கோடி)
1	இராணிப்பேட்டை	இராணிப் பேட்டை	113.44	9.55	3.42	5.17
2	மதுரை	உரங்கான்பட்டி	69.84	9.55	5.73	2.86
3	கன்னியாகுமரி	கோணம்	20.70	1.43	0.86	0.57
4	விருதுநகர்	விருதுநகர்	45.65	3.92	2.35	1.57
		மொத்தம்	249.63	24.45	12.36	10.17

3.5. தனியார் தொழிற்பேட்டைகளை உருவாக்குதல்

தமிழ்நாடு அரசு, நகருக்கு வெளியே புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்க முன்வரும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன கூட்டமைப்புகளுக்கு, அதன் மொத்தத் திட்ட மதிப்பில் 50 விழுக்காடு என்ற அளவில் ரூ.15 கோடிக்கு மிகாத மானியத்துடன் புதிய தொழிற்பேட்டைகள் அமைத்திட உதவி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், கோயம்புத்தூர் மாவட்டம், மோரிபாளையத்தில் கொடிசியா தொழிற்பூங்கா உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.76.31 கோடி திட்ட மதிப்பீட்டில் ரூ.35.85 கோடி மானியத்துடன் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் 4 தனியார் தொழிற்பேட்டைகளை உருவாக்க ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2023 ஏப்ரல் 6

பணிகள் நடைபெற்று வருகின்ற 4 திட்டங்களின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு:

(ரூ. கோடியில்)

வ. எண்	மாவட்டம்	தொழிற் பேட்டையின் பெயர்	பரப்பு (ஏக்கரில்)	திட்ட மதிப்பீடு	மாநில அரசின் மானியம்
1	மதுரை	தி/ள். மதுரை பொறியியல் குழுமம் (பி) லிமிடெட், மேலவளவு கிராமம்	54.00	13.64	6.82
2	கோயம்புத்தூர்	தி/ள். கொடீசியா இண்டஸ்ரியல் பார்க் (பி) லிமிடெட், கள்ளப்பாளையம் கிராமம்	116.24	20.00	10.00
3	கோயம்புத்தூர்	தி/ள். கொசிமா இண்டஸ்ரியல் பார்க் (பி) லிமிடெட், சொலவம்பாளையம் கிராமம்	42.42	18.06	9.03
4	கோயம்புத்தூர்	தி/ள். அறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டை லிமிடெட், கிட்டாம்பாளையம் கிராமம்	316.04	24.61	10.00
		மொத்தம்	528.70	76.31	35.85

3.6 தனியார் தொழிற்கூடங்களை நகர்/ பெருநகரங்களுக்கு வெளியே இடம் பெயரச் செய்தல்

தனியார் தொழில்முனைவோர் அமைப்புகள், நகர்ப்பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்கூடங்களை நகருக்கு வெளியே மாற்றி அமைக்க முன்வரும்பட்சத்தில், சாலை, மின்சாரம் மற்றும் தண்ணீர் வழங்குதல், கருத்தரங்கக்

2023 ஏப்ரல் 6]

கூடங்கள் முதலிய அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் பொதுவசதிகளை ஏற்படுத்த 75 விழுக்காடு அரசு மானியம் என்ற அளவில் அதிகபட்சமாக ரூ.20 கோடி வரை மாநில அரசால் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், நாமக்கல் மாவட்டத்தில், நாமக்கல் கனரக வாகன கட்டமைப்பு குழுமம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் தேயிலை குழுமம் ஆகியன நகரத்திற்கு வெளியே மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதேபோன்று, விருதுநகர் மாவட்டத்தில் தென்மாவட்ட ஜவுளி செயல்முறைப்படுத்தும் குழுமத்தினை ரூ.12.17 கோடி திட்ட மதிப்பீட்டில் ரூ.9.13 கோடி மாநில அரசின் மானியத்துடன் இடம்பெயரச் செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

2022-23 ஆம் நிதியாண்டில், கடலூர் மாவட்டம், மருதாடு கிராமத்தில் ஈஸ்ட் கோஸ்ட் ஆட்டோமொபைல் (பி) லிமிடெட் நிறுவனத்தால் ரூ.4.39 கோடி திட்ட மதிப்பீட்டில் ரூ.3.29 கோடி மாநில அரசு மானியத்துடன் புதிய தொழிற்பேட்டை அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

பணிகள் நடைபெற்று வருகின்ற 2 திட்டங்களின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு:

(ரூ. கோடியில்)

வ எண்	மாவட்டம்	தொழிற்பேட்டையின் பெயர்	பரப்பு (ஏக்கரில்)	திட்ட மதிப்பீடு	மாநில அரசின் மானியம்
1	விருதுநகர்	தி/ள். சதர்ன் டிஸ்டிரிக்ட் டெக்ஸ்டைல் பிராஸஸிங் குழுமம், காரியாப்பட்டி கிராமம்	100.46	12.17	9.13

வ எண்	மாவட்டம்	தொழிற்பேட்டையின் பெயர்	பரப்பு (ஏக்கரில்)	திட்ட மதிப்பீடு	மாநில அரசின் மானியம்
2	கடலூர்	தி/ள். ஈஸ்ட் கோஸ்ட் ஆட்டோ மொபைல் (பி) லிமிடெட், மருதாடு கிராமம்	11.41	4.39	3.29
		மொத்தம்	111.87	16.56	12.42

3.7 உடனடியாக தொழில் துவங்க தேவையான வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி தொழில் வளாகங்கள்

தமிழ்நாடு சிட்கோ, திருமழிசை தொழிற்பேட்டையில் 97,036 சதுர அடி கட்டட பரப்பளவுடன் உடனடியாக தொழில் தொடங்க தேவையான வசதிகளுடன் 79 தொழிற்கூடங்களை கட்டியுள்ளது. இவை முழுகிரைய விலை/வாடகை/ தவணை முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றது.

கிண்டி தொழிற்பேட்டையில் ரூ.90.13 கோடி மதிப்பில் 1,97,024 சதுர அடி பரப்பில் அடித்தளம், தரைதளம் மற்றும் 6 தளங்களுடன் 152 தொழிற்கூட அலகுகள் கொண்ட அடுக்குமாடி தொழில் வளாக கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், அம்பத்தூர் தொழிற்பேட்டையில் ரூ.60.55 கோடி மதிப்பில் 1,31,427 சதுர அடி பரப்பில் தரைதளம் மற்றும் 4 தளங்களுடன் 112 தொழிற்கூட அலகுகள் கொண்ட அடுக்குமாடி தொழில் வளாக கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2023 ஏப்ரல் 6]

வ. எண்	தொழிற்பேட்டை	தளங்களின் எண்ணிக்கை	தொழிற்கூட அலகுகளின் எண்ணிக்கை	கட்டட பரப்பு (சதுர அடியில்)	திட்ட மதிப்பீடு (ரூ.கோடி)
1	கிண்டி	அடித்தளம், தரைதளம் + 6	152	197024	90.13
2	அம்பத்தூர்	தரைதளம் + 4	112	131427	60.55
		மொத்தம்	264	328451	150.68

மேலும், இவ்வாண்டில் சேலம் மாவட்டத்திலுள்ள கொலுசு உற்பத்தியாளர்களுக்கு தேவையான பணியிட வசதியினை ஏற்படுத்தித் தரும் வகையில் சேலம் மாவட்டம், அரியகவுண்டம்பட்டியில் 1.20 ஏக்கரில் ரூ.24.5 கோடி திட்ட மதிப்பில் 100 அலகுகளை கொண்ட உடனடியாக தொழில் துவங்க தேவையான வசதிகளுடன் தரைதளம் மற்றும் 3 தளங்களுடன் கூடிய அடுக்குமாடி தொழில் வளாகம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.8 தொழில்மனைகள் / தொழிற்கூடங்கள் ஒதுக்கீட்டுக் கொள்கை

தொழிற்பேட்டைகளில் ஒதுக்கீட்டிற்கு தயாராக உள்ள மேம்படுத்தப்பட்ட மனைகள்/ தொழிற்கூடங்கள் குறித்த விவரங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்து, விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு முழுகிரைய விற்பனை/ குத்தகை/வாடகை அடிப்படையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. விண்ணப்பங்கள் பெறப்பட்டு தகுதியான விண்ணப்பதாரர்களை தேர்வு செய்ய தேர்வுக் குழுவினரைக் கொண்டு நேர்காணல் நடத்தப்படுகிறது. தகுதியான விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை காலியாக உள்ள தொழில்மனைகள்/ தொழிற்கூடங்களின் எண்ணிக்கையைவிட அதிகமாக இருக்கும்பட்சத்தில்

விண்ணப்பதாரர்களின் முன்னிலையில் குலுக்கல் முறையில் ஒதுக்கீட்டாளர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்களது உற்பத்தியினை விரைந்து தொடங்கும் பொருட்டு தமிழ்நாடு சிட்கோவின் தொழில்மனைகள்/தொழிற்கூடங்களை தாமதமின்றி பெற்றுக்கொள்ள ஏதுவாக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் (TIIC) தொழில் உட்கட்டமைப்பு முன்னெடுப்புத் திட்டம் (IIIS) மற்றும் தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கியின் (TAICO) Flexi Loan for Your MSME-FLY (MSME) என்ற திட்டங்களின் மூலம் இடைக்கால கடன் வழங்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கியின் Flexi Loan for Your MSME-FLY(MSME) திட்டத்தின் மூலம், 14 ஒதுக்கீட்டாளர்கள் ரூ.2.39 கோடி கடன் பெற்று பயனடைந்துள்ளனர்.

3.9 ஒன்றிய அரசின் குறு, சிறு தொழில் நிறுவனங்கள்—குழும வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பொது வசதி மையங்கள் அமைத்தல்

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் உற்பத்தி மற்றும் போட்டித் திறனை மேம்படுத்தும் நோக்கில் குழும வளர்ச்சி திட்டத்தின்கீழ் மாநிலம் மற்றும் ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் பொது வசதி மையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சிட்கோ, தற்பொழுது வரை ஒப்புதல் பெறப்பட்ட 43 திட்டங்களில் ரூ.148.25 கோடி மொத்த திட்ட மதிப்பீட்டிலான 28 திட்டங்களுக்கு ஒன்றிய அரசின் மானியம் ரூ.101.42 கோடி மற்றும் மாநில அரசின் மானியம் ரூ.12.38 கோடியினை பெற்று, அப்பணிகளை முழுமையாக நிறைவேற்றி, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக திகழ்கிறது. மேலும், ரூ.207.20 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒன்றிய அரசின் மானியம் ரூ.139.81 கோடி மற்றும் மாநில அரசு மானியம் ரூ.24.37 கோடியுடன் 15 பொது வசதி மையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுமட்டுமின்றி, ரூ.134.09 கோடி திட்ட மதிப்பீட்டில் 8 புதிய திட்டங்கள் அமைக்க கருத்துரு ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 6]

பொது வசதி மைய திட்டங்களின் ஒட்டுமொத்த நிலை

(ரூ. கோடியில்)

வ. எண்	நிலை	எண்ணிக்கை	திட்ட மதிப்பீடு	ஒன்றிய அரசின் மானியம்	மாநில அரசின் மானியம்
1	நிறைவுற்ற திட்டங்கள்	28	148.25	101.42	12.38
2	செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள்	15	207.20	139.81	24.37
3	ஒன்றிய அரசிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள புதிய திட்டங்கள்	8	134.09	100.38	13.20
	மொத்தம்	51	489.54	341.61	49.95

மேலே குறிப்பிடப்பட்டுள்ள, ஒன்றிய அரசின் குறு, சிறு தொழில் நிறுவனங்கள்-குழும வளர்ச்சி திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் பொது வசதி மைய திட்டங்களின் விவரங்கள் முறையே இணைப்பு-2, இணைப்பு-3 மற்றும் இணைப்பு-4-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

3.10 பொது உற்பத்தி உட்கட்டமைப்பு

குறுந்தொழில் நிறுவனங்களுக்கு உதவும் வகையில் குறுந்தொழில் முனைவோர்களுக்காக மாநில அரசினால் பொது உற்பத்தி உட்கட்டமைப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், அரசினால் 9 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, 3 திட்டங்கள் ரூ.10.40 கோடி திட்ட மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், ரூ.26.58 கோடி திட்ட மதிப்பீட்டில் ரூ.13.96 கோடி மானியத்துடன் 6 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

பொது உற்பத்தி உட்கட்டமைப்புத் திட்டங்களின் ஒட்டுமொத்த நிலை

(ரூ. கோடியில்)

வ. எண்	நிலை	எண்ணிக்கை	திட்ட மதிப்பீடு	மாநில அரசு மானியம்
1	நிறைவுற்ற திட்டங்கள்	3	10.40	6.75
2	செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள்	6	26.58	13.96
	மொத்தம்	9	36.98	20.71

மேலே குறிப்பிடப்பட்டுள்ள, பொது வசதி உட்கட்டமைப்பு திட்டங்களின் விவரங்கள் இணைப்பு-5-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

3.11 மூலப்பொருட்கள் விநியோகம்

பாரஃபின் மெழுகு மற்றும் தமிழ்நாடு காகிதத்தாள் நிறுவனத்தின் காகிதம் ஆகிய மூலப்பொருட்களை மாநிலம் முழுவதும் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தேவையின் அடிப்படையில் தமிழ்நாடு சிட்கோவினால் கொள்முதல் செய்யப்பட்டு, 20 கிளை அலுவலகங்கள் மற்றும் கிடங்குகள் மூலமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மூலப்பொருட்கள் உதவித் திட்டத்தின்கீழ், நடப்பு நிதியாண்டில் தமிழ்நாடு சிட்கோ 883 மெட்ரிக் டன் அளவிலான ரூ.10.11 கோடி மதிப்புடைய பாரஃபின் மெழுகு மற்றும் காகிதம் ஆகியவற்றை விற்பனை செய்துள்ளது.

3.12 மின் ஆளுமை

தமிழ்நாடு சிட்கோவின் ஒதுக்கீட்டாளர்கள் எளிய வழியில் பயன்படுத்தும் வகையிலும், திட்டங்கள் மற்றும் பணிகளை தெளிவாக புரிந்துகொள்ளும் வகையிலும், தனது வலைதள சேவையை (www.tansidco.tn.gov.in) வடிவமைத்து, இணைய வழி விண்ணப்பிக்கும் சேவையினை, தமிழ்நாடு ஒற்றைச் சாளர இணைய வசதியுடன் ஒன்றிணைத்து வழங்கி வருகிறது.

2023 ஏப்ரல் 6]

தமிழ்நாடு சிட்கோவின் புவியியல் தகவல் தொகுப்பு அமைப்பானது இந்திய அரசின் "இந்திய தொழில் தகவல் அமைப்பு (IIS)"-இந்திய தொழில் நில வங்கி (IILB) இணைய முகப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது, கீழ்க்கண்ட சேவைகள் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன:

1. ஒதுக்கீட்டிற்கு தயாராக உள்ள தொழில் மனைகளின் விவரங்களை இணையதள வசதி மூலம் பார்வையிடல்
2. புவியியல் தகவல் அமைப்பு (GIS) மூலம் தொழிற்பேட்டை வரைபடம் பார்வையிடல்
3. தொழில்மனைகள்/ தொழிற்கூடங்கள்/ அடுக்குமாடி தொழிலகங்கள் வேண்டி இணைய வழியில் விண்ணப்பித்தல் மற்றும் விண்ணப்ப நிலையினை அறிதல்
4. விண்ணப்பக் கட்டணங்களை மின்னணு முறையில் செலுத்துதல்
5. குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல்மூலம் உரிய தகவல்களை தெரிவித்தல்
6. ஒதுக்கீட்டு ஆணையை எந்நேரத்திலும், எங்கிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதி.

மேற்கண்ட சேவைகளுடன், தமிழ்நாடு சிட்கோ தனது ஒதுக்கீட்டாளர்களுக்கு கடந்த நிதியாண்டிலிருந்து கீழ்க்கண்ட சேவைகளை இணையதளம் மூலம் கூடுதலாக வழங்கி வருகிறது:

1. நிதி உதவி பெறுவதற்காக வங்கிகள்/நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் தடையில்லா சான்று
2. மனைத் தொகை செலுத்துவதற்கு கால நீட்டிப்பு வழங்குதல்
3. மின்சார வசதி பெறுவதற்காக தடையில்லா சான்று வழங்குதல்
4. நீர் இணைப்பு பெற விண்ணப்பித்தல்
5. ஒப்படைக்கப்பட்ட மனையில் தொழில் துவங்க கால நீட்டிப்பு வழங்குதல்

6. விற்பனைப் பத்திரம் வழங்குதல்

7. தொழில்மனை/ தொழிற்கூடத்திற்கான உரிமை மாற்றம்

8. தொழில்மனை/ தொழிற்கூடங்களை நிறுவனங்களுக்கு குத்தகைக்கு விட தடையில்லா சான்று வழங்குதல்

9. தொழில் நிறுவனத்தின் நிர்வாகிகள் மாற்றத்திற்கான ஒப்புதல் வழங்குதல்

10. தொழில் நிறுவனத்தின் பெயர் மாற்றத்திற்கான ஒப்புதல் வழங்குதல்

11. தொழில் நிறுவனத்தின் உற்பத்தி வகை மாற்றத்திற்கு ஒப்புதல் வழங்குதல்

12. தொழில்மனை/ தொழிற்கூடங்களின் உரிமை மாற்றம் செய்ய தடையில்லா சான்று வழங்குதல்

ஒதுக்கீட்டாளர்கள் தங்களுக்குரிய தனித்துவமான கடவுச்சொல் மற்றும் பயனாளி அடையாள எண் ஆகியவற்றை உள்ளீடு செய்து மனைத் தொகை செலுத்துதல், மனைத் தொகை நிலுவை மற்றும் அதனை செலுத்துவதற்கான கால அவகாசம் ஆகியனவற்றை தெரிந்து கொள்ள இணையதள முகப்பு வசதி அளிக்கப்பட்டுள்ளது.

ஒதுக்கீட்டாளர்கள் மற்றும் தொழிற்பேட்டை சங்கத்தினர் தங்களது தொழிற்பேட்டை சார்ந்த கோரிக்கைகளை தெரிவித்து தாமதமின்றி தீர்வு காணும் பொருட்டு கோரிக்கைகளுக்கான பிரத்யேக மின்னஞ்சல் (grievanceredressal@tansidco.org உருவாக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய சேவைகளை அளிப்பதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாடு சிட்கோவினால், தற்பொழுது கீழ்க்குறிப்பிட்ட இணைய வழி சேவைகளுக்கான மென்பொருள் உருவாக்கப்பட்டு, விரைவில் நடைமுறைக்கு கொண்டு வரப்படவுள்ளது:

1. இணைய வழிமூலம் மூலப்பொருட்கள் (பாரஃபின் மெழுகு) விநியோகம் செய்தல், மற்றும் இதனை ஒற்றைச் சாளர இணையத்துடன் ஒருங்கிணைத்தல்.

2. தணிக்கைச் சோதனையுடன்கூடிய கணக்கியல் மென்பொருள் உருவாக்குதல்.

2023 ஏப்ரல் 6]

3.13 பெருங்குழுமங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தமது உலகளாவிய தரம் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், வளர்ந்து வரும் தொழில் பிரிவுகளுக்குள் நுழைய வழிவகை செய்யவும், ஒளிரும் துறைகளில் பெரும் குழுமங்கள் அமைக்கப்படும் என தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது.

3.13.1 மருந்துப் பொருட்கள் பெருங்குழுமம்

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் சிப்காட் தொழில் பூங்காவில் மருந்து உற்பத்தியாளர்கள் கூட்டமைப்புகளுடன் இணைந்து, மருந்து பொருட்கள் பெருங்குழுமத்தினை ரூ.155.01 கோடி மதிப்பில் அமைப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பெருங்குழுமத்தின் மூலம் மருந்துப் பொருட்கள் உருவாக்கத்தில் (formulation) ஈடுபட்டுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு பொது பரிசோதனை மையம், ஆலை கழிவுநீர் சுத்திகரிப்பு பொதுவசதி (CETP), கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை (STP) மற்றும் தேவையான பொது வசதிகள் உருவாக்கப்படும். இத்திட்டத்திற்காக, திண்டிவனத்தில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில் 113 ஏக்கர் பரப்பிலான நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 05.01.2023 அன்று பெறப்பட்டுள்ளது.

நிதி ஆதாரம்:

(ரூ. கோடியில்)

ஒப்புதல் ஆணை	திட்ட மதிப்பீடு	ஒன்றிய அரசின் மானியம்	மாநில அரசின் மானியம்	குழுமத்தின் பங்களிப்பு
அரசாணை எண் 54 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (சி) துறை, நாள். 20-07-2022	155.01	20.00	51.56	83.45

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

3.13.2. துல்லிய உற்பத்திப் பெருங்குழுமம்

தானியங்கி வாகனங்கள், இயந்திரங்கள், மின் மற்றும் மின்னணு உபகரணங்களில் பயன்படுத்தப்படும் துல்லிய பொறியியல் பாகங்களை உருவாக்கும் மையமாக (Hub) கருதப்படும் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களை உள்ளடக்கிய சென்னை மண்டலத்தில் உள்ள காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கம் தொழிற்பேட்டையில் நிலம் கண்டறியப்பட்டு, தொழில்முனைவோர் கூட்டமைப்பினர்களுடன் இணைந்து ரூ.47.62 கோடி திட்ட மதிப்பில் துல்லிய உற்பத்தி பெருங்குழுமம் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன் மூலம், புதிய பொருட்கள் உருவாக்குவதற்கான வடிவமைப்பு மற்றும் மேம்பாடு, பொதுவான நவீன பரிசோதனை வசதிகள் மற்றும் பொது உற்பத்தி வசதிகள் போன்றவை ஏற்படுத்தித் தரப்படும்.

நிதி ஆதாரம்:

(ரூ. கோடியில்)

ஒப்புதல் ஆணை	திட்ட மதிப்பீடு	மாநில அரசின் மானியம்	குழுமத்தின் பங்களிப்பு
அரசாணை எண்.53 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (சி) துறை, நாள் 20-07-2022	47.62	33.33	14.29

3.14 பணியாளர்கள் தங்கும் விடுதி

தமிழ்நாடு சிட்கோவின் புதிய முயற்சியாக, தொழிலாளர்களுக்கு குறைந்த வாடகையில் தரமான தங்குமிட வசதியினை தேவைப்படும் தொழிற்பேட்டைகளில் அமைக்க தீர்மானிக்கப்பட்டு சென்னை, அம்பத்தூர் தொழிற்பேட்டை மற்றும் கோயம்புத்தூர், குறிச்சி தொழிற்பேட்டை ஆகியவற்றில்

2023 ஏப்ரல் 6]

பணியாளர்கள் தங்கும் விடுதிகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.14.1 அம்பத்தூர் தொழிற்பேட்டையில் பணியாளர் தங்கும் விடுதி

சென்னை, அம்பத்தூர் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 800 பணியாளர்கள் தங்குவதற்காக 1.212 ஏக்கர் நிலப்பரப்பில் 5 தளங்களுடன்கூடிய பணியாளர் தங்கும் விடுதியின் கட்டுமானப் பணிகள் ரூ.29.47 கோடி திட்ட மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. மேலும், SIDBI *நிறுவனத்தின் குழும மேம்பாட்டு நிதியின் (*SIDBI Cluster Development Fund*) மூலம் ரூ.26.52 கோடி கடனாகப் பெற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.*

3.14.2 குறிச்சி தொழிற்பேட்டையில் பணியாளர் தங்கும் விடுதி

கோயம்புத்தூர் மாவட்டம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குத் தங்குமிட வசதி அளிக்கும்பொருட்டு, குறிச்சி தொழிற்பேட்டையில் 510 பணியாளர்கள் தங்குவதற்காக 1.49 ஏக்கர் நிலப்பரப்பில் 3 தளங்களுடன்கூடிய பணியாளர் தங்கும் விடுதி அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, கட்டுமானப் பணிகள் ரூ.22 கோடி திட்ட மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. மேலும், SIDBI *நிறுவனத்தின் குழும மேம்பாட்டு நிதியின் (*SIDBI Cluster Development Fund*) மூலம் ரூ.18 கோடி கடனாகப் பெற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.*

3.15. தொழில் மனைகளுக்கான பட்டா

நீண்டநாள் கோரிக்கையான, சிட்கோ தொழிற்பேட்டைகளில் அமையப் பெற்றுள்ள, அரசுப் புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ள தொழிற்மனைகளுக்கு பட்டா வழங்கிட ஏதுவாக, இந்நிலங்களை இரயத்துவாரி மனையாக மாற்றம் செய்ய, அதிகாரம் பெற்ற குழு அரசாணை எண் 72, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை நாள் 30-11-2021 வாயிலாக அமைக்கப்பட்டது. கடந்த 09-02-2022 மற்றும் 19-09-2022 ஆகிய தேதிகளில் நடைபெற்ற இக்குழுவின் முதலாவது மற்றும் இரண்டாவது கூட்டத்தில்,

32 தொழிற்பேட்டைகளில் உள்ள 1,542.24 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்திற்கு வகைப்பாடு மாற்றம் செய்ய ஒப்புதல் அளித்து, அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இவ்வரசாணைகளின்படி, தற்போது வரை 21 தொழிற்பேட்டைகளுக்கான 1,022.61 ஏக்கர் நிலத்திற்கு தமிழ்நாடு சிட்கோ பெயரில் பட்டா பெறப்பட்டுள்ளது.

3.16 இயங்கிவரும் தொழிற்பேட்டைகளில் ஒருமுறை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல்

இயங்கிவரும் தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டினை, தகுந்த கால இடைவெளியில், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள்-குழும வளர்ச்சித் திட்டத்தின் மூலம் செயல்படுத்த வழிவகையில்லாத நிலையில், சிறப்பு முயற்சியாக, தமிழ்நாடு சிட்கோ தனது சொந்த நிதியினைப் பயன்படுத்தி, மேம்பாட்டுப் பணிகள் அவசியம் தேவைப்படும் 53 தொழிற்பேட்டைகளில் ரூ.12.38 கோடி மதிப்பில் ஒருமுறை மேம்படுத்தும் திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது முடிவுற்றுள்ளன.

3.17 திருநெல்வேலி மாவட்டத்தில் மெகா உணவுப் பூங்கா அமைத்தல்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் (TNSAMB) மூலம் திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் சிப்காட் தொழில் வளாகத்தில் மெகா உணவுப் பூங்கா நிறுவப்பட்டு வருகின்றது. இந்த உணவுப் பூங்காவில் உணவுப் பதப்படுத்தும் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் வகையில் தொழில்மனைகள் உருவாக்கப்பட்டுள்ளன. உணவுப் பதப்படுத்தப்படும் பிரிவு சார்ந்த தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்ய, மேற்படி வாரியத்திற்கு (TNSAMB) தமிழ்நாடு சிட்கோ உதவி வருகிறது.

4. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி)

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) எஃகு மற்றும் மர அறைகலன்களை தயாரித்து அரசுத் துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கி வருகிறது. டான்சி 1965 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் தற்போது கீழ்க்கண்டுள்ளவாறு 20 தொழிற்கூடங்களும்

மற்றும் சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் இரு காட்சியகங்களும் உள்ளன:

- பொறியியல் தொழிற்கூடங்கள் –3
- மர அறைகலன் தொழிற்கூடங்கள் –14
- சிறப்பு வகை தொழிற்கூடங்கள் –3

மொத்தம் –20

4.1. உற்பத்திப் பொருட்கள்

டான்சி கீழ்க்கண்ட பொருட்களை உற்பத்தி செய்கிறது:

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குத் தேவையான மின்கடத்தி பொருட்கள்
- பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் விடுதிகளுக்குத் தேவையான வகுப்பறை அறைகலன்கள்
- வீடுகள் மற்றும் அலுவலகப் பயன்பாட்டிற்கான அறைகலன்கள்
- தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்திற்கு (TNMSC) தேவையான சர்ஜிகல் ஸ்பிரிட்டை அடிப்படையாகக் கொண்ட பொருட்கள்
- ஸ்பிரிட்டை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் தொழில் பொருட்களான காஸ்கெட் ஷெல்லாக், பிரென்ச் பாலிஷ், தின்னர் மற்றும் கிருமி நாசினி கரைசல்களான லைசால், பினாயில்
- இந்தியா மார்க்-II கைப்பம்புகள் மற்றும் குழந்தைகள் எடை போடும் கருவி
- எனாமல் மற்றும் சாலை குறியீடு வர்ணங்கள்

4.2. 2022-23 ஆம் ஆண்டில் முடிக்கப்பெற்ற குறிப்பிடத்தக்க பணி ஆணைகள் (ரூ.50 இலட்சத்திற்கு மேல்)

- பள்ளி கல்வித் துறைக்கு வழங்கப்பட்ட Foundational Literacy and Numeracy (FLN) Kits–ரூ.21.66 கோடி

[2023 ஏப்ரல் 6

- பள்ளி கல்வித் துறைக்கு வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள்–ரூ.15.21 கோடி
- உயர் கல்வித் துறைக்குத் வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள் (பகுதி II, III)–ரூ.21.05 கோடி
- பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட எஃகு மாடுலர் கலர் டெஸ்க் மற்றும் பெஞ்சுகள் (பகுதி I, II)–ரூ.13.96 கோடி
- பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட துத்தநாக உலோக கச்சித தொட்டிகள் (பகுதி I, II)–ரூ.3.91 கோடி
- பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள் (நாடாளுமன்ற உறுப்பினர் நிதி)–ரூ.1.00 கோடி
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு வழங்கப்பட்ட எஃகு மாடுலர் கலர் டெஸ்க் மற்றும் பெஞ்சுகள் (பகுதி I, II)–ரூ.6.82 கோடி
- வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைக்கு வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள்–ரூ.1.50 கோடி
- பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறைக்கு வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள்-ரூ.1.15 கோடி
- இந்திய தொழில்நுட்பக் கழகத்திற்கு வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள்–ரூ.61.00 இலட்சம்

4.3. 2022-23 ஆம் நிதி ஆண்டில் உற்பத்தியில் உள்ள பணி ஆணைகள் (ரூ.50 இலட்சத்திற்கு மேல்)

- பள்ளி கல்வித் துறைக்கு வழங்கப்பட்ட Foundational Literacy and Numeracy (FLN) Kits–ரூ.4.00 கோடி
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு வழங்கப்பட்ட எஃகு மாடுலர் கலர் டெஸ்க் மற்றும் பெஞ்சுகள்–ரூ.8.38 கோடி

- மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள்–ரூ.4.15 கோடி
- தோட்டக்கலைத் துறைக்கு வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள்–ரூ.1.36 கோடி
- தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்திற்கு வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள்–ரூ.1.23 கோடி
- திருநெல்வேலி மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட துத்தநாக உலோக கச்சித தொட்டிகள்–ரூ.78.00 இலட்சம்
- சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள்-ரூ.72.00 இலட்சம்

4.4. மீண்டும் புதுப்பிக்கப்பெற்ற தொழிற்கூடங்கள்

2022-23 ஆம் ஆண்டில், டான்சி ஈரோட்டில் உள்ள மூடப்பட்ட தொழிற்கூடத்தை புதுப்பித்து மீண்டும் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

4.5. காட்சியகம் மற்றும் நிகழ்நிலை மின் வணிக இணைய முகப்பு

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, சென்னை நகரில் டான்சியின் ஒரு பிரத்யேக காட்சியகம் (Showroom cum Sales Center) மற்றும் நிகழ்நிலை மின் வணிக இணைய முகப்பு (e-Commerce online sales portal) (www.tansismart.tn.gov.in) நிறுவப்பெற்று 8.2.2023 அன்று மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களால் திறக்கப்பெற்று செயல்படுகிறது.

4.6. அரசு இ-விற்பனை முகமை

டான்சி நிறுவனம் கடந்த டிசம்பர், 2022 முதல் அரசு இ-விற்பனை முகமையில் (GeM Portal) பதிவு செய்து கொள்முதல் மற்றும் விற்பனை சேவைகளை மேற்கொண்டுள்ளது.

[2023 ஏப்ரல் 6

4.7. நிறுவன வள திட்டமிடல்

இந்நிறுவனம் தனது தனித்துவமான நிறுவன வள திட்டமிடல் (ERP) மூலம் நிர்வாகம், மனித வளம், பொருள் மேலாண்மை, நிதி/கணக்கு, சந்தைப்படுத்துதல், முதலியன உள்ளிட்ட தனது தினசரி நடவடிக்கைகளை 2022-23 ஆம் நிதி ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

4.8.நிறுவன சமூகப் பொறுப்பு திட்டத்தின்கீழ் பங்களிப்பு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட "நம்ம ஸ்கூல்" திட்டத்திற்கு டான்சி நிறுவனம் ரூ.4 கோடியினை (நிறுவன சமூக பொறுப்பு திட்டத்தின்கீழ்) அளித்துள்ளது.

4.9. 2022-23 ஆம் ஆண்டு டான்சி நிறுவனத்தின் இலக்கு ரூ.125 கோடி மற்றும் செயல்பாடுகள்

2022-23 ஆம் ஆண்டு டான்சியின் செயல்பாடுகள் பின்வருமாறு:

விவரம்	ரூ. கோடியில் (மார்ச், 2023 வரை) (தணிக்கைக்கு முன்)
உற்பத்தி	137.70
விற்பனை	155.05
நிகர இலாபம்	9.42
செயல்முறை இலாபம்	7.09

5. தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII-TN)

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமானது (EDII-TN) மாநிலத்தில், தொழில் முனைவோர் கல்வி மற்றும் புத்தாக்க ஊக்குவிப்பு துறையில் ஒரு சிறந்த நிறுவனமாகும். இந்நிறுவனமானது, தமிழக அரசால் 2001 ஆம் ஆண்டில், இலாப நோக்கமற்ற அமைப்பாக உருவாக்கப்பட்டு, தமிழக அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின்கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 6]

தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், புத்தாக்கம் மற்றும் தொழில்முனைதல் சூழல்களை உருவாக்கி வளர்ப்பதற்கு, வளரும் மற்றும் ஏற்கெனவே உள்ள தொழில்முனைவோர், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் குழுமங்கள், புத்தொழில் புரிபவர்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரி மாணவர்களுக்குப் பயிற்சிகளும் மற்றும் தொழில் வளர் காப்பகங்களை நிறுவுதல் போன்ற பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது. இதுவரையில், இந்நிறுவனத்தின்மூலம் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், ஆர்வமுள்ள மற்றும் ஏற்கெனவே உள்ள தொழில்முனைவோர் உட்பட 10.51 இலட்சம் நபர்கள் பயன் பெற்றுள்ளனர்.

நோக்கம்

தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமானது, தமிழகத்தில், கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி பற்றிய தொழில்முனைவு மற்றும் புத்தாக்க கண்டுபிடிப்பு கலாச்சாரத்தினை மாநிலம் முழுவதும் பரப்புதல் போன்றவற்றினை நோக்கமாகக் கொண்டு மாநில வள மையமாக செயல்பட்டு வருகிறது.

உத்திகள்

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமானது பின்வரும் உத்திகளைக் கொண்டு தமிழ்நாட்டில் உள்ள ஆர்வமுள்ள தொழில்முனைவு மற்றும் புத்தாக்க கலாச்சாரத்தை ஊக்குவிக்கிறது:

- ஆர்வமுள்ள இளைஞர்கள் மற்றும் தொழில்முனைவோர்களின் தொழில்முனைவு திறன்களை வளர்த்தல்.
- தொழில்நுட்பங்கள் உட்பட புத்தொழிலுக்கான சூழல்களை உருவாக்க, தொழில்முனைவோர்களுக்கு உதவுதல்.
- முறையான கல்வி முறையின்மூலம், தொழில் முனைவோர் கல்வியை உட்புகுத்துதல்.
- தொழில்முனைவு மற்றும் புத்தாக்கம் பற்றிய ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள்.

- தொழில்முனைவு மற்றும் புத்தாக்க கண்டுபிடிப்பு சூழல்களை உருவாக்க அனைத்து அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்துதல்.

தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைப்புத்திட்டம்,குழுமங்கள்வலுப்படுத்தும்திட்டம்மற்றும் வழிகாட்டுதல் திட்டம் ஆகியவற்றின் மூலம் தொழில் முனைவோர் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம், புத்தாக்கம் மற்றும் தொழில் வளர் காப்பகங்கள் திட்டம், புத்தாக்க பற்றுச்சீட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் புத்தாக்க ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப திட்டம் மூலம் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வு மேற்கொள்ளப்படுகிறது.

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின்கீழ் பல்வேறு துறை சார்ந்த 376 வல்லுநர்கள், பல்வேறு திட்டங்களுக்கு பயிற்சி மற்றும் உதவி வழங்குவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

5.1. தொழில்முனைவோர் ஊக்குவிப்பு (Entrepreneurship Promotion)

5.1.1 தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள்

வாழ்க்கைச் சுழற்சி அணுகுமுறை மற்றும் செயல்முறை அடிப்படையிலான மாதிரி வடிவமைப்பு, ஆர்வமுள்ள மற்றும் ஏற்கெனவே உள்ள தொழில்முனைவோர்களுக்கு தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது. இவ்வடிவம் முன் அனுமதி நிலை மற்றும் பிந்தைய அனுமதி நிலை என வகைப்படுத்தப்பட்டுள்ளது. முன் அனுமதி நிலையிலுள்ள கட்டம்–I மற்றும் கட்டம்–II பங்கேற்பாளர்களுக்கு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி அனுமதி பெற ஒரு சாத்தியமான வணிகத் திட்டத்தினை தயாரிக்க பயிற்சி அளிக்கப்படுகிறது. கட்டம்-III இன் மூலம் பங்கேற்பாளர்கள் தங்கள் வணிகத்தை எவ்வாறு தொடங்குவது மற்றும் நிர்வகிப்பது

2023 ஏப்ரல் 6]

என்பதை கற்றுக்கொள்வார்கள். கட்டம்-IV இன்மூலம், தங்கள் திட்டங்களை மேம்படுத்திடவும் வெற்றிகரமாக செயல்படுத்தவும் இத்திட்டம் உதவும். மேலும் பின்வரும் தலைப்புகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோர்களுக்கு கட்டணப் பயிற்சிகளும் நடத்தப்பட்டுள்ளன:

- *நிதி மேலாண்மை, நிதி சுழற்சி மற்றும் செயல்பாட்டு மூலதன மேலாண்மை*
- *சிறு நிறுவனங்களுக்கான வரி திட்டமிடல் மற்றும் இடர் மேலாண்மை*
- *இறக்குமதி, ஏற்றுமதி வாய்ப்பு வழிமுறை*
- *மின்னணு சந்தைப்படுத்துதல்*
- *விற்பனை & சந்தைப்படுத்தல்*
- *மாற்று ஆற்றல் பயன்படுத்தல்*
- *தரமான தரநிலைகள் மற்றும் சிக்கன உற்பத்தி (*Lean Manufacturing*)*
- *சரக்கு மற்றும் சேவை வரி, மின்வழி ரசீது (*E-Way bill*) மற்றும் வருமான வரி தாக்கல்*

2022-23 ஆம் நிதியாண்டில் நடத்தப்பட்ட தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

வ. எண்	விவரங்கள்	நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	பயனாளிகளின் எண்ணிக்கை
1	கருத்துரு நிலை	38	5506
2	வணிக திட்டமிடல் நிலை	33	1114
3	வணிகம் தொடங்கும் நிலை	13	358

வ. எண்	விவரங்கள்	நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	பயனாளிகளின் எண்ணிக்கை
4	ஏற்கெனவே தொழில் புரியும் நிறுவனங்களுக்கு உதவுதல் (நிதி மேலாண்மையை உள்ளடக்கிய கட்டணப் பயிற்சி)	30	1271
	மொத்தம்	114	8249

5.1.2 ஒருங்கிணைப்புத் திட்டம்

தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டமானது, தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரகம், தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம், தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப கல்வி நிறுவனம் ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து செயல்படுத்தப்படுகிறது. இந்நிதியாண்டு 2022-23-ல், மேற்கண்ட திட்டங்களின் மூலம் 12,246 தொழில்முனைவோர்கள் பயனடைந்துள்ளனர்.

அ) தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்

இந்நிறுவனத்துடன் இணைந்து பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பயனாளிகளுக்கு 7 நாட்களுக்கு அனைத்து மாவட்டங்களிலும் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. 2022-23 ஆம் நிதியாண்டில் 1,240 பயனாளிகள் இப்பயிற்சிகளின் மூலம் பயனடைந்துள்ளனர்.

ஆ) தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரகம்

வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் (UYEGP) 2,412 வேலையற்ற இளைஞர்களுக்கு

2023 ஏப்ரல் 6]

பயிற்சிகளும், புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (NEEDS) 850 தொழில்முனைவோர்கள் பயனடையும் வகையில் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சிகளும் மேற்கண்ட இயக்குநரகத்துடன் இணைந்து இணையதளம் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

இ) வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படும் திட்டமாகும். தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்துடன் இணைந்து, திட்டப் பகுதிகளில் உள்ள நிறுவன சமூக வல்லுநர்கள் (ECPs) மற்றும் நுண் தொழில்முனைவோர்களை (Nano Entrepreneurs) வலுப்படுத்த பயிற்சி வழங்கி வருகிறது. தொழில் வாய்ப்புகளை அடையாளம் காணுதல், சந்தை பகுப்பாய்வு, வணிகத் திட்டம் மற்றும் வணிக மாதிரி, பலம், பலவீனங்கள், வாய்ப்புகள் மற்றும் சவால் பகுப்பாய்வு, இடர் மேலாண்மை மற்றும் சட்ட நிறுவனம் போன்ற பல்வேறு தலைப்புகளில் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. பயிற்சி முடிந்த பிறகு, தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமானது ஒவ்வொரு திட்டப் பகுதிக்கும் முதன்மை சமூக வல்லுநர்களைத் தேர்வு செய்ய உதவுகிறது. இதுவரை, 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.52.00 இலட்சம் மதிப்பீட்டில் 3,744 நிறுவன சமூக வல்லுநர்கள் மற்றும் நுண் தொழில்முனைவோர்கள் இப்பயிற்சியினை பெற்றுள்ளனர்.

ஈ) தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம்

இந்நிறுவனத்துடன் இணைந்து, ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புகளை மேம்படுத்த இணையதளம் மூலம் பயிற்சி வழங்கப்படுகிறது. முதல் இரண்டு கட்டத்தில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்கள் தங்கள் சொந்த நிறுவனங்களைத் தொடங்குவதற்கு மூன்றாம் கட்டத்தில் வழிகாட்டுதல் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2022-23 ஆம் நிதியாண்டில், 4,000 ஆர்வமுள்ள இளைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2022-23 ஆம் நிதியாண்டில் 20,495 ஆர்வமுள்ள மற்றும் ஏற்கெனவே உள்ள தொழில்முனைவோர்கள் ரூ.93.39 இலட்சம் மதிப்பீட்டில் பயனடைந்துள்ளனர்.

5.1.3. குழுமங்கள் வலுப்படுத்தும் திட்டம் (Cluster Strengthening Program)

குறு, சிறு தொழில் நிறுவனங்கள் குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயலாக்கத்திலுள்ள குழுமங்களை வலுப்படுத்த, தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் உதவுகிறது. குழுமங்களின் கட்டமைப்பு மற்றும் மேலாண்மை குறித்த தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டிற்காக அரசு உதவி, சந்தைப்படுத்துதல் வழிகள் மற்றும் வணிகத் திட்டம் பற்றிய வழிகாட்டுதல்கள், சிறு குழுமங்களின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன. 2022-23 ஆம் நிதியாண்டில், 15 சிறு குழுமங்களில் உள்ள 318 உறுப்பினர்கள் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் மூலம் பயிற்சிகள் பெற்றுள்ளனர்.

5.1.4. வழிகாட்டுதல் திட்டம் (Mentorship Programme)

ஆர்வமுள்ள மற்றும் ஏற்கெனவே உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், வணிக இலக்குகளை அடைய, வெற்றிகரமான தொழில்முனைவோர் மற்றும் வழிகாட்டி வல்லுநர்களைக் கொண்டு வழிகாட்டுதல் திட்டம் வழங்கப்படுகிறது. 2022-23 ஆம் நிதியாண்டில், 625 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தொழில்முனைவோர்கள் பயனடைந்துள்ளனர்.

5.2. புத்தாக்க ஊக்குவிப்பு (Innovation Promotion)

5.2.1 உயர்கல்வி நிறுவனங்களில் புத்தாக்கம் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (IEDP)

கல்லூரிகள், பல்தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழில்துறை பயிற்சி நிறுவனங்களுக்கான தொழில் முனைவோர் மற்றும் புத்தாக்க சூழல் மேம்பாடு, விரிவுரையாளர் மற்றும் மாணவர் தொழில்முனைவோர் திறன் மேம்பாடு, விரிவுரையாளர் மற்றும் மாணவர் புத்தாக்க மேம்பாடு போன்ற நோக்கங்களைக்

2023 ஏப்ரல் 6]

கொண்ட விரிவான பயிற்சித் திட்டம் இளைஞர்களுக்காக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் "மைய கல்லூரிகள் மற்றும் உறுப்பு கல்லூரிகள்" (Hub & Spoke) மூலம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தரமான பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் மையங்களாக (Hubs) அங்கீகரிக்கப்பட்டு, 30-50 கல்லூரிகளுக்கு உதவுகிறது. 1,772 உறுப்பு கல்லூரிகளைக் கொண்ட 31 மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் தொழில்முனைவோர் மையங்களை (E-Cells) உறுப்புக் கல்லூரிகளில் அமைப்பதற்கு ஊக்குவிக்கிறது. மேலும் 1,003 தொழில்முனைவோர் மையங்கள் உருவாக்கப்பட்டு, விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு தொழில்முனைவுத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளது. தொழில்முனைவோர் மையங்களின் செயல்பாடுகள்:

- பயிற்றுவித்தல் மற்றும் ஊக்கப்படுத்துதல்,
- வாய்ப்புகளை மதிப்பீடு செய்தல்,
- தொழில்முனைவோர் வளாகத்தைத் தொடங்குதல்,
- வணிகத் திட்டமிடல் மற்றும் கருத்துப்பட்டறைகள்,
- வணிகமயமாக்கலுக்கான முன்மாதிரி-வரைவு தயாரித்தல்,
- சந்தை பகுப்பாய்வு,
- குழு கட்டமைத்தல்,
- நிதி மேலாண்மை/தொழில்முனைவோருக்கான நிதி,
- உள்ளூர் பகுதிகளில் சமூக தொழில்முனைவோர்களை உருவாக்குதல்.

உயர்கல்வி நிறுவனங்களில் விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களின் திறனை மேம்படுத்தும் வகையில், தொழில் முனைவோர் மேம்பாடு குறித்த விழிப்புணர்வு மற்றும் பயிற்சி வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தின்கீழ் 2022-23 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பல்வேறு திட்டங்களின் விவரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன:-

வ. எண்	விவரங்கள்	நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	பயனாளிகளின் எண்ணிக்கை
1	உயர்நிலை நிர்வாகிகளுக்கான கூட்டம்	6	227 கல்லூரிகள்
2	தொழில்முனைவோர் விழிப்புணர்வு	408	48000
3	விரிவுரையாளர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி	27	1080
	மொத்தம்	441	49307

2022-23 ஆம் நிதியாண்டில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்-கோயம்புத்தூர், மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்- தூத்துக்குடி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்-சென்னை, மெட்ராஸ் ஸ்கூல் ஆப் சோசியல் ஒர்க்-சென்னை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம்–வேலூர், தொழில் துறை பயிற்சி நிறுவனம்-சென்னை, ஆகிய 6 இடங்களில் புதிய மையங்கள் உருவாக்கப்பட்டு, உயர்நிலை நிர்வாகிகளுக்கான கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. மேலும் இந்த நிதியாண்டில் 42 உறுப்புக் கல்லூரிகளில், மாணவர்களின் புத்தாக்க கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்க 975 மாணவர்களை கொண்டு வடிவமைப்பு சிந்தனைப் பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளன.

5.2.2. தமிழ்நாடு மாணவர் புத்தாக்க கண்டுபிடிப்பாளர்கள் (TNSI)

தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின், முதன்மைத் திட்டமான தமிழ்நாடு மாணவர் புத்தாக்க கண்டுபிடிப்பாளர்கள் திட்டம், மாணவர் கண்டுபிடிப்பாளர்களைக் கண்டறிந்து, அவர்களின் புத்தாக்க சிந்தனைகளை ஒரு முன்மாதிரியாக மாற்றுவதற்கு குறைந்தபட்ச சாத்தியமான தயாரிப்பை உருவாக்கவும், அவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடனும், ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்படுகிறது. தமிழ்நாடு மாணவர் புத்தாக்க கண்டுபிடிப்பாளர்கள் திட்டத்தின்கீழ், அது சார்ந்த

2023 ஏப்ரல் 6]

விழிப்புணர்வு, சிந்தனை உருவாக்கம், துவக்க முகாம்கள் மற்றும் இறுதிப்போட்டிகள் நடத்தப்பட்டு, மாநில அளவில் தேர்வு செய்யப்படும் சிறந்த 25 அணிகளுக்கு தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 25 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில், 298 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, 44,844 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். உறுப்புக் கல்லூரி மாணவர்களிடமிருந்து 7,867 புத்தாக்க சிந்தனைகள் பெறப்பட்டு, சிறந்த 25 அணிகளைத் தேர்வு செய்ய மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது. 2022-23 ஆம் நிதியாண்டில், மேற்கண்ட திட்டங்களுக்காக, தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மூலம் ரூ.224.63 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

5.2.3. பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் (SIDP)

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறை மற்றும் ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகள் அவசர நிதியம் (UNICEF) ஆகியவற்றுடன் இணைந்து 2022-23 ஆம் கல்வி ஆண்டில் பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்துகிறது.

நோக்கங்கள்

- *மாணவர்களிடையே புதிய தொழில் கண்டு பிடிப்புகளை ஊக்குவித்தல் மற்றும் தொழில்முனைவோர் கலாச்சாரத்தை வளர்த்தல்.*
- *மாணவர்கள், தலைமைத்துவ தொழில்முனைவோர் திறன்களை பெறுவதற்கான முறையான எளிய புத்தாக்கம் மற்றும் வடிவமைப்பு சிந்தனையைப் பயன்படுத்தி வாழ்க்கை பிரச்சினைகளைத் தீர்க்க அவர்களை ஊக்கப்படுத்துதல்.*
- *பள்ளிகளில் தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்க கலாச்சாரத்தினை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகிக்கும் ஆசிரியர் சமூகத்தின் கற்பிக்கும் திறனை வளர்த்தல் மற்றும் புதிய சிந்தனைகளுக்கு வழிகாட்டியாக இருத்தல்.*

[2023 ஏப்ரல் 6

தமிழ்நாட்டில், 38 மாவட்டங்களில் உள்ள 4,356 அரசு மற்றும் அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்களுக்காக பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகள் அவசர நிதியம், பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான அறிவுசார் பங்குநிறுவனமாக செயல்பட்டு, ஆசிரியர்கள் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் கள ஒருங்கிணைப்பாளர்கள் உட்பட, அனைத்து பங்குதாரர்களுக்கும் திறன் வளர்ப்பு பயிற்சியுடன் கூடிய புத்தாக்க சிந்தனைக்கான தொழில்நுட்ப உதவி, காணொளி அடிப்படையிலான பாடத் திட்டங்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வழங்கப்படுகிறது.

சாதனைகள்:

- மொத்தம் 4.78 இலட்சம் பள்ளி மாணவர்கள் பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.

- ஆசிரியர்கள் மற்றும் மாணவர் அணிகளுக்கு புத்தாக்க சிந்தனையை மேம்படுத்துவதற்காக காணொளி அடிப்படையிலான கற்றல் தொகுதிகள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.

- சிறந்த புத்தாக்க சிந்தனைகளைக் கொண்ட 400 மாணவர் அணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 2,661 மாணவர்களை உள்ளடக்கிய மண்டல துவக்க முகாம்கள் நடத்தப்பட்டன.

- இறுதிப் போட்டிக்கு, முதல் 40 அணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூ.25,000 முதல் ரூபாய் ஒரு இலட்சம் வரை ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும்.

இத்திட்டத்திற்காக 2022-23 ஆம் நிதியாண்டில், தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தால் ரூ.62.74 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 6]

5.2.4. புத்தாக்கப் பற்றுச் சீட்டுத் திட்டம் (IVP)

மாநில அரசின் தனித்துவமான முயற்சியாக, புத்தாக்கப் பற்றுச் சீட்டுத் திட்டம் விவசாயம், தோட்டக்கலை, கால்நடை மருத்துவம், மீன்வளம், பொறியியல், திடக்கழிவு மேலாண்மை, சுகாதாரம், வாகனம், நுண்தொழில்நுட்பம், மின்னணுவியல் மற்றும் இதர துறைகளிலிருந்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தாக்க நிறுவனங்களின் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க கண்டுபிடிப்புகள் ஊக்குவிக்கப்படுகிறது. மாநில அளவிலான தேர்வுக் குழுவின் மூலம் புத்தாக்க கண்டுபிடிப்புக்கள் தேர்வு செய்யப்பட்டு, அதை மாதிரியாக மாற்றுவதற்கு மானியமாக, பற்றுச்சீட்டு அ-இன்கீழ் ரூ.2 இலட்சமும் மற்றும் கண்டுபிடிப்பினைச் சந்தைப்படுத்துவதற்காக பற்றுச்சீட்டு ஆ-இன்கீழ் ரூ.5 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. 2022-23 ஆம் நிதியாண்டில், 150 கண்டுபிடிப்பாளர்களுக்கு ரூ.332.62 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ.9.41 கோடி மதிப்பீட்டில், வேளாண்மை, சுகாதாரம், உற்பத்தி, உணவு, அறிவியல் போன்ற துறைகளில் 350 புத்தாக்க கண்டுபிடிப்பாளர்கள் பயனடைந்துள்ளனர்.

5.2.5 தொழில் வளர் காப்பகங்கள்-தமிழ்நாடு உற்பத்தித் தொழில் வளர் காப்பகங்கள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் முக்கிய கவனம் செலுத்தும் பகுதிகளில் ஒன்று தொழில்நுட்ப அடிப்படையிலான தொழில்முனைவோரை உயர்த்துவதாகும். தொழில் செய்ய இடவசதி, கருத்தரங்குகள், விழிப்புணர்வு முகாம்கள், ஆதார நிதி, பிணைய இணைப்பு மற்றும் ஆலோசனை சேவைகள், அறிவுசார் சொத்துரிமைக்கான உதவி போன்ற பல்வேறு சேவைகள் தொழில் வளர் காப்பகங்களில் வழங்கப்படுகின்றன. தொழில் வளர் காப்பகங்கள் மூலம், பல்வேறு துறைகளில் உள்ள 545 வளர் காப்பாளர்கள் உதவி பெற்றுள்ளனர். 945 விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் பயிற்சிகளின் மூலம் 62,156 தொழில்முனைவோர்கள் பயனடைந்துள்ளனர். 9 தொழில் வளர் காப்பகங்கள் மூலம் ரூ.201.46 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. தொழில் வளர் காப்பகங்களின் விவரம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

வ. எண்	தொழில் வளர் காப்பகத்தின் பெயர்	துறை
1	கால்நடை தொழில் வளர் காப்பக அமைப்பு, சென்னை மாவட்டம்	கால்நடை
2	பெரியகுளம் தோட்டக்கலை தொழில் வளர் காப்பக மையம், பெரியகுளம், தேனி மாவட்டம்	தோட்டக்கலை
3	கிள்ளிக்குளம் வேளாண் தொழில் வளர் காப்பக மையம், கிள்ளிக்குளம், தூத்துக்குடி மாவட்டம்	வேளாண்மை
4	திருச்சிராப்பள்ளி வேளாண் தொழில் வளர் காப்பக மையம், திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்	வேளாண்மை
5	மேட்டுப்பாளையம் வேளாண் காடுகள் தொழில் வளர் காப்பக மையம், மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்	வேளாண் காடுகள்
6	கடல்சார் உணவுப் பொருட்கள் தொழில் வளர் காப்பக மையம், தூத்துக்குடி, தூத்துக்குடி மாவட்டம்	மீன்வளம்
7	அண்ணா தொழில் வளர் காப்பக மற்றும் ஆராய்ச்சி அமைப்பு, திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்	மருந்தியல்
8	பெரியார் பல்கலைக்கழக தொழில்வளர் காப்பக கூட்டமைப்பு, சேலம், சேலம் மாவட்டம்	உணவு மற்றும் ஊட்டச்சத்து
9	அண்ணாமலை புத்தாக்க மற்றும் தொழில் வளர் காப்பக ஆராய்ச்சி அறக்கட்டளை, சிதம்பரம், கடலூர் மாவட்டம்	மேம்படுத்தப்பட்ட உற்பத்தி

2023 ஏப்ரல் 6]

5.3. தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம்

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்கத் திட்டத்தின்கீழ் நடத்தப்படும் பயிற்சிகளின் தகவல் தொடர்புகளை பரப்புவதற்காக சமூக ஊடகம், அச்சு ஊடகம், மின்னணு ஊடகம் போன்ற தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. தொழில்முனைவு மற்றும் புத்தாக்கச் சூழலை மேம்படுத்துவதற்காக கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. கல்லூரி மாணவர்கள் மற்றும் தொழில் வளர் காப்பாளர்கள் உருவாக்கிய புத்தாக்க கண்டுபிடிப்புகளைக் காட்சிப்படுத்த கண்காட்சி (Demo Day) நடத்தப்பட்டது. 1,225 கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற இந்நிகழ்வில் சிறந்த கண்டுபிடிப்பாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. பயிற்சி கையேடுகளை புதுப்பிக்க மற்றும் பயிற்சிக்குத் தேவையான பாடத் திட்டங்களைத் தயாரிக்க, துறை சார்ந்த கள வல்லுநர்களைக் கொண்டு 8 எழுத்துப் பட்டறைகள் திறம்பட நடத்தப்பட்டது. 2022-23 ஆம் நிதியாண்டில், தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மூலம் பரவலான விழிப்புணர்வை ஏற்படுத்த ரூ.13.44 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

6. தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வசதியாக்கல் நிறுவனம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு, [M-TIPB], குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின்கீழ், 2019 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு தன்னாட்சி அமைப்பாகும். இது FaMeTN என்ற புதிய பெயரில் [தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வசதியாக்கல் நிறுவனம்] "தோள்கொடுப்போம் தொழில்களுக்கு" என்ற முழக்கத்துடன், 25-8-2022 நாளிலிருந்து செயல்பட்டு வருகிறது. 2022-23 ஆம் ஆண்டில், FaMeTN நிறுவனம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு, விரிவான வசதியாக்க உதவிகளை வழங்கியது. மேலும் தொழில் ஆணையர் அலுவலகம் மூலம் வழங்கப்படும் மானியங்கள் மற்றும் பல்வேறு திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்த உதவியுள்ளது.

[2023 ஏப்ரல் 6

6.1. 2022-23 ஆம் ஆண்டில் FaMe TN நிறுவனத்தின் செயல்பாடுகள்

6.1.1. தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம் (TNCGS)

- *தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம் என்ற தமிழ்நாடு மாநிலம் சார்ந்த கடன் பிணையத் திட்டத்தினை வகுத்து செயல்படுத்துவதற்காக, தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசின் குறு மற்றும் சிறு நிறுவனங்கள் கடன் பிணைய டிரஸ்ட்டுடன் (*CGTMSE*), 16-03-2022 அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது.*

- *இத்திட்டம் 25.08.2022 அன்று, மாதிரி முறையில் (*Pilot Mode*) துவங்கப்பட்டது.* CGTMSE *நிறுவனத்துடன் இணைந்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது, சொத்துப் பிணையமில்லாத ரூ.40 இலட்சம் வரையிலான கடன்களுக்கு வழங்கப்படும் உத்தரவாதத்தினை 75 விழுக்காட்டிலிருந்து 90 விழுக்காடாகவும், ரூ.40 இலட்சங்களுக்கு மேல், ரூ.2 கோடி வரையிலான கடன்களுக்கு உத்தரவாதத்தினை, 75 விழுக்காட்டிலிருந்து, 80 விழுக்காடாகவும், உயர்த்தி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.* CGTMSE *நிறுவனத்தின் துணையில்லாது, தனியாக செயல்படும்பொழுது சொத்துப் பிணையமில்லாத ரூ.40 இலட்சம் வரையிலான கடன்களுக்கு, 90 விழுக்காடு கடன் உத்தரவாதத்தினை* TNCGS *வழங்குகிறது.*

- *இதுவரை, பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் கனரா வங்கிகளின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன வாடிக்கையாளர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் ரூ.20 கோடிக்கு மேல் கடன்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் வரும் நிதியாண்டில், சிறு நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்களுக்கும் (*NBFCs*) விரிவுபடுத்தப்படும்.*

2023 ஏப்ரல் 6]

6.1.2. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான கடன் மதிப்பெண்

- *குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், நிதி நிறுவனங்களிடமிருந்து குறைந்த வட்டி விகிதத்தில் சுலபமாக கடன் பெறுவதை நோக்கமாகக்கொண்டு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான கடன் மதிப்பெண் முறை உருவாக்கப்பட்டு வருகிறது.*

- *அந்நிறுவனங்கள், தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டத்தின்கீழ் கடன் பெற தேவையான தகுதியை மதிப்பீடு செய்ய, இந்த கடன் மதிப்பெண் முறை உதவும்.*

- *இந்த முறையானது,* IIM *அகமதாபாத் கல்வி நிறுவனத்துடன் இணைந்து, மேலும் திறன் வாய்ந்ததாக உருவாக்கப்படும்.*

6.1.3. தமிழ்நாடு வர்த்தக வரவுகள் தள்ளுபடி முறை (TN TReDS)

- *குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தற்போது எதிர்கொள்ளும் முக்கியப் பிரச்சினைகளில் ஒன்று 'தாமதப்படுத்தப்பட்ட விற்பனைத் தொகை, (*Delayed Payments*) ஆகும். இது, அந்நிறுவனங்கள் தங்கள் நடைமுறை மூலதனத் தேவைகளை சரியான நேரத்தில் பெற முடியாமல் தடை ஏற்படுகிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அந்நிறுவனங்கள், தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அரசு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான தங்களது தொகையினை விரைந்து பெறும் வகையில்,* TN TReDS *எனப்படும் திட்டம் துவங்கப்பட்டுள்ளது.* TN TReDS *வலைதளத்தில், இதுநாள் வரை 87 பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் அதிக எண்ணிக்கையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன விற்பனையாளர்கள் இணைந்துள்ளனர்.*

- *இத்தள்ளுபடி முறை மூலம் விற்பனைத் தொகையினை தள்ளுபடி செய்ய, 14 வங்கிகள், ரூ.2,120 கோடியை இலக்காக அறிவித்துள்ளன. ரூ.200 கோடி அளவிலான பட்டியல்கள் (*Invoices*), இந்த* TN TReDS *வலைதளம்*

வாயிலாக குறைவான வட்டி விகிதத்தில், தள்ளுபடி செய்யப்பட்டு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் விற்பனைத் தொகையைப் பெற்றுப் பயனடைந்துள்ளன.

6.1.4. நிதிக் கருத்தரங்குகள் மற்றும் கடன் வசதியாக்கல் பணிகள்

- கடந்த 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல், அரசு வழங்கும் மானியத்துடன்கூடிய வங்கிக் கடன் வசதிகளைப் பற்றிய நிதிக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.
- தூத்துக்குடி மற்றும் தேனி மாவட்டங்களில் 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், இரண்டு கடன் வசதியாக்கல் கூட்டங்கள் நடத்தப்பட்டு முறையே, ரூ.20 கோடி மற்றும் ரூ.30 கோடி அளவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கடன் வசதியாக்கல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

6.1.5. சந்தைப்படுத்துதல்

இன்றைய தொழில்நுட்பம் சார்ந்த சூழ்நிலையில், வர்த்தகம் நேரடியாகவும், நிகழ்நிலையிலும் மேற்கொள்ளப்படுகிறது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு, சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில் பின்வரும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(i) மின் வணிகம் (e-Commerce) மூலம் சந்தை இணைப்புகள்

2022 ஆம் ஆண்டில் Flipkart மற்றும் ONDC போன்ற மின் வணிக நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு மாவட்டங்களில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை மின் வணிகத் தளங்களில் உள்ளேற்றம் செய்வதற்கான விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

(ii) உள்நாட்டு விற்பனை மூலம் சந்தை இணைப்புகள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உள்நாட்டு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

2023 ஏப்ரல் 6]

- *ஹைதராபாத் நகரில் நடந்த உணவுப் பதப்படுத்துதல் கண்காட்சியில் பங்கேற்பு*
- *சென்னையில் நடைபெற்ற மின்னணுவியல் கண்காட்சியில் பங்கேற்பு.*
- *ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன மேம்பாடு மற்றும் வசதியாக்கல் அலுவலகத்துடன் இணைந்து சென்னையில், 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 'விற்பனையாளர் மேம்பாட்டு நிகழ்வு' நடத்தப்பட்டது.*
- *அதேபோல், சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டினைக் கொண்டாடும் வகையில், 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், மதுரையில் 'சிறுதானிய விழா மற்றும் கண்காட்சி' நடத்தப்பட்டது.*

(iii) சந்தை இணைப்புகள்—சர்வதேச விற்பனை

- *குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சிறந்த வணிக நடைமுறைகளைக் கற்றுக்கொள்ளும் வகையில், உதவிக்கொள்கை சீரமைக்கப்பட்டு, அதன் விளைவாக 2022-23 ஆம் ஆண்டில், 45 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்று, ரூ.63 இலட்சம் நிதியுதவி பெற்றுப் பயனடைந்தன.*
- *வர்த்தக அமைப்புகளுடன் இணைந்து 'செக் குடியரசு' நாட்டிற்கான சர்வதேச பயணம் மேற்கொள்ளப்பட்டது.*
- *உலகின் பல்வேறு நாடுகளுக்கான 10 இந்திய தூதர்கள் மற்றும் உயர் ஆணையர்களுடனான கலந்துரையாடல் கூட்டம் நடத்தப்பட்டது. அதன் விளைவாக, கரூரில் இருந்த வீட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள், ஐஸ்லாந்தில் உள்ள வாங்குபவர்களுடன் இணைக்கப்பட்டனர். பிஜி நாட்டில் உள்ள வாங்குபவர்கள், காஞ்சிபுரத்தில் உள்ள பட்டு உற்பத்தியாளர்களுடன் இணைக்கப்பட்டனர்.*

6.1.6. மாவட்ட ஏற்றுமதி ஊக்குவிப்பு மையங்கள்

- *ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில் மாவட்டத் தொழில் மையங்களில் பணியாற்றும் வர்த்தக மேம்பாட்டு அலுவலர்கள் (BFOs) மற்றும் உதவிப்*

பொறியாளர்களுக்கு, இந்திய ஏற்றுமதி அமைப்பின் கூட்டமைப்பு (FIEO) மற்றும் வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் (DGFT) உடன் இணைந்து பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக 28.03.2023 அன்று அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஏற்றுமதி ஊக்குவிப்பு மையங்கள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

6.1.7. முதலீட்டாளர் வசதியாக்கல் மற்றும் ஒற்றை சாளர சேவைகள்

- வழிகாட்டுதல் நிறுவனத்துடன் இணைந்து 6 மாவட்டங்களில் ஒற்றைச் சாளர தகவின் உபயோகம் மற்றும் பயன்பாட்டினைப் பிரபலப்படுத்துவதற்கான கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. வெளிநாட்டு முதலீட்டாளர்களின் தேவைகளுக்கேற்ப செயல்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வகையில் இந்தோ ஜெர்மன் வர்த்தக சபையுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பிற நாடுகளுடன் அத்தகைய ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.
- வழிகாட்டுதல் நிறுவனத்துடன் இணைந்து மாநிலத்தின் 38 மாவட்டங்களிலும் ஒற்றைச் சாளர தகவு குறித்த கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

6.1.8. திறனாக்குதல் (Skilling)

- மின் வாகன (EV) சங்கத்துடன் இணைந்து, மின் வாகனம் பற்றிய பாடங்களை, பட்டயத் தொழில்நுட்பக் கல்லூரிகளின் பாடத் திட்டத்தில் கொண்டுவரும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- மின் வாகனங்கள் சங்கம், ஃபோர்ஜ் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தொழிற் சிறப்பு மையங்களான TANSAM, TANCAM மற்றும் TAMCoE ஆகியவற்றுடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இணைந்து செயல்பட உதவிகள் செய்யப்படுகின்றன.
- தொழில் நிறுவனங்கள் மற்றும் கல்வியாளர்களிடையே ஒத்துழைப்பை உருவாக்க, வழிகாட்டுதல் நிறுவனத்தின் பணி ஆய்வகங்களுடன் (Work Labs) மாவட்ட

தொழில் மையங்கள் மூலமாக ஒருங்கிணைந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இந்தோ அமெரிக்கன் வர்த்தக சபையுடன் இணைந்து 'தொழில் 4.0' என்ற புதிய தொழில்நுட்பத்தைப் பற்றிய இரண்டு கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

6.1.9. நிலைத் தன்மை (Sustainability)

- மாநிலம் முழுவதும் 'பூஜ்ஜிய குறைபாடு மற்றும் பூஜ்ஜிய விளைவுச் சான்றிதழ்' (ZED) குறித்த 22 விழிப்புணர்வுக் கூட்டங்கள் பல்வேறு மாவட்டங்களில் நடத்தப்பட்டுள்ளன.
- ஆற்றல் செலவுகளைக் குறைப்பதற்கான வழிமுறைகள் குறித்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஆற்றல் திறன் விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

6.1.10. வேளாண் தொழில் வழித்தடம் மற்றும் இதர தொழில் பிரிவு (Sector wise) சார்ந்த முயற்சிகள்

- வேளாண் தொழில் வழித்தடம், மின்வாகன பொது வசதி மையம், விண்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில்கள் பொது வசதி மையம் ஆகியவற்றை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கைகளை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- வேளாண் மற்றும் உணவுப் பதப்படுத்தும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்புகள், சந்தை இணைப்புகள், ஏற்றுமதி வாய்ப்புகள் மற்றும் மானியங்கள் உள்ளிட்ட வசதிகளை அளித்திடும் வகையில் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய 5 மாவட்டங்களை உள்ளடக்கிய வேளாண் தொழில் வழித்தடம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6.1.11. ஒருங்கிணைந்த தலையீடுகள்

பல்வேறு துறைகள் மற்றும் அமைச்சகங்கள் வாயிலாக உத்யம் பதிவுகள் மற்றும் GST தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

[2023 ஏப்ரல் 6

- 'குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான பல்துறை திட்டங்கள் பற்றிய தொகுப்பு', 'தொழில் தொடங்குவது எப்படி' மற்றும் 'குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் ஏற்றுமதியாளர்களின் கையேடு' ஆகிய தலைப்புகளில் 3 புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் செயல்திறனை உயர்த்துதல் மற்றும் விரைவுபடுத்துவதற்கான RAMP திட்டத்தின் செயல் முதலீடு யுக்தியை தயாரிப்பதற்கு FaMeTN நிறுவனம் மாநிலத்தின் முகமை (Nodal Agency) ஆகும்.

7. தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (டான்சிம்)

தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கமானது, மாநிலத்தில் புத்தொழில் மற்றும் புத்தாக்க தொழில்முனைவு செயல்பாடுகளில் தனிக்கவனம் செலுத்தி புத்தொழில் சூழமைவினை வலுப்படுத்தும் நோக்கத்தில், தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்ட நிறுவனம் ஆகும். இது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின்கீழ் இலாப நோக்கமற்ற நிறுவனமாக இயங்கி வருகின்றது. இந்நிறுவனம் StartupTN என்ற பெயரில் விளம்பரப்படுத்தப்படுகின்றது. தமிழ்நாட்டினை உலகளாவிய அளவில் புத்தொழில் நிறுவனங்கள் இயங்குவதற்கு உகந்த தலைசிறந்த இடங்களில் ஒன்றாக மாற்ற வேண்டும் என்ற நீண்டகால இலக்கினை முன்வைத்து, புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவாக துணிகர முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கித் தருவது, உலகத்தரம் வாய்ந்த தொழில்வளர் காப்பகங்களை வடிவமைப்பது, தொழில் விரைவாக்க பயிற்சிகள் அளிப்பது, சந்தைத் தொடர்புகளை ஏற்படுத்துவது, தொழில் முனைவு சார்ந்த பல்வேறு செயல்பாடுகளை ஊக்குவிப்பது போன்ற பலவகையான செயல்திட்டங்களை வகுத்து இயங்கி வருகின்றது இந்த நிறுவனம்.

7.1. நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் மற்றும் முன்னெடுப்புகள்:

- 2026 ஆம் ஆண்டுக்குள் மாநிலத்தில் குறைந்தது 10,000 புதிய புத்தொழில் நிறுவனங்கள் உருவாவதற்கு ஏற்ற சூழமைவினை கட்டமைத்தல்

2023 ஏப்ரல் 6]

- வாழ்விடம், பாலினம், சாதி என அனைத்து வேறுபாடுகளையும் கடந்து அனைவரையும் உள்ளடக்கிய தொழில் முனைவு வளர்ச்சிக்கு தேவையான கொள்கைகளை வகுத்தல் மற்றும் அதனை முறையாக செயல்படுத்துதல்.

- பல்வேறு துறைகளுக்கு இடையேயான சமமான வளர்ச்சியினை ஊக்குவிக்கும் விதமாக துறைசார் அணுகுமுறைகளை செயல்படுத்துதல்.

- மாநிலத்தில் புத்தொழில் பண்பாட்டை பரவலாக்கும் விதமாக அதிக அளவில் வட்டார புத்தொழில் மையங்களை கட்டமைத்தல் மற்றும் புத்தொழில் சமூகக் குழுக்களை உருவாக்குதல்.

- மாணவ மாணவியர் மற்றும் இளைய சமூகத்தினர் இடையே "வேலை தேடுதல்" என்பதில் இருந்து "வேலை வழங்குதல்" என்ற மனநிலை மாற்றத்தினை உருவாக்கும் விதமாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தல்.

- தமிழ்நாட்டில் இயங்கும் புத்தொழில் நிறுவனங்களுக்கு உலக அளவிலான சந்தை அணுகல், முதலீடு திரட்டுதல் மற்றும் வழிகாட்டுதல்களை பெறும் வாய்ப்புகளை வழங்குதல்.

- பிரம்மாண்டமாக வளர்ந்து, அதிக சந்தை மதிப்பீட்டை உருவாக்கக்கூடிய நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் அதே வேளையில், அடித்தட்டு மக்களின் வாழ்வாதார மேம்பாடு சார்ந்த சமூக தொழில்முனைவு நிறுவனங்களும் வளர்ச்சி பெறத்தேவையான உத்திகளை செயல்படுத்துதல்.

- ஒன்றிய அளவிலும், உலக அளவிலும் புத்தொழில் செயல்பாடுகளில் முதன்மை மாநிலம் என்ற நிலையினை எட்டத் தேவையான புதுமையான திட்டங்களை செயல்படுத்துதல்.

7.2. வட்டார புத்தொழில் மையங்கள்

மதுரை, திருநெல்வேலி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் மாவட்ட நிர்வாகம் மற்றும் தொழில்முனைவு சார்ந்த பல்வேறு

செயல்பாட்டாளர்கள் ஆதரவுடன் வட்டார புத்தொழில் மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அவ்வட்டாரப் பகுதிகளில் இயங்கும் புத்தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான ஆதரவுகளை வழங்கும் விதமாகவும் தொழில்முனைவு மேம்பாட்டை வலுப்படுத்தும் வளங்களை ஒருங்கிணைக்கும் இணைப்புப் பாலமாகவும் இம்மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

2022-23 ஆம் நிதி ஆண்டில், மேற்கண்ட 3 வட்டார புத்தொழில் மையங்கள் தொடங்கப்பட்டு, அவற்றின் வாயிலாக 150-க்கும் மேற்பட்ட நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கின்றன. 25,000-க்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்கள், தொழில் முனைவு ஆர்வலர்கள், மாணவர்கள் கலந்துகொண்டு பயனடைந்துள்ளனர். அடுத்த கட்டங்களில் மேலும் சில மாவட்டங்களில் வட்டாரப் புத்தொழில் மையங்கள் நிறுவப்பட உள்ளன.

7.3. தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதி (டான்சீட்)

தொடக்க நிலையில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவு அளிக்கும் விதமாக, ரூ.10 இலட்சம் ஆதார நிதியாக வழங்கும் தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதித் திட்டம் ஒரு முக்கிய முன்னெடுப்பாகும். 2022-23 ஆம் நிதி ஆண்டில், டான்சீட் திட்டத்தின் மூன்றாம் மற்றும் நான்காம் பதிப்புகள் மூலமாக 56 புத்தொழில் நிறுவனங்களுக்கு ரூ.5.6 கோடி மானியமாக வழங்கப்பட்டது.

மேலும், 25 புத்தொழில் நிறுவனங்கள், டான்சிட் நான்காம் பதிப்பில் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இந்நிறுவனங்களுக்கு ரூ.2.5 கோடி விரைவில் வழங்கப்படும்.

டான்சீட் 5 ஆம் பதிப்பு அறிவிக்கப்பட்டு, பிப்ரவரி 23, 2023-லிருந்து விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன, இப்பதிப்பில் மேலும் 50 புத்தொழில் நிறுவனங்களுக்கு ரூ.5 கோடி நிதி வழங்கப்படும்.

7.4. புத்தொழில் விரைவாக்க பயிற்சித் திட்டம்

புத்தொழில் முனைவோர்கள் தங்கள் தொழிலில் விரைவாகவும், செறிவாகவும் வளர்ச்சி அடையத் தேவையான தொழில்நுட்பம் மற்றும் அணுகுமுறைகளை கற்றுத் தரும்

2023 ஏப்ரல் 6]

விதமாக உயர்தர பயிற்சிப் பட்டறைகள் இத்திட்டத்தின்கீழ் ஒருங்கிணைக்கப்படுகின்றன. 2022-23 ஆம் நிதி ஆண்டில் வேளாண் தொழில்நுட்பம், உற்பத்தித் தொழில்நுட்பம், மென்பொருள் சேவைகள், சமூக மாற்றம், பன்னாட்டு வணிகம் ஆகிய 5 வேறுபட்ட துறைகளின்கீழ் 100 புத்தொழில் நிறுவனங்களுக்கு தொழில் விரைவாக்க பயிற்சிகள் தொடங்கப்பட்டன.

7.5. நவீன பொறியியல் புனைவகம் கட்டமைத்தல்

தமிழ்நாட்டில் உள்ள மூன்று அரசு பொறியியல் கல்லூரிகளில் தொழில்நுட்ப கல்வி இயக்குநரகத்தின் மேற்பார்வையில் செயல்படும் விதமாக நவீன பொறியியல் புனைவகங்களை அமைப்பதற்கான செயல்பாடுகளை தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் தொடங்கியுள்ளது. திருநெல்வேலி, சேலம் மற்றும் திருச்சி நகரங்களில் உள்ள அரசு பொறியியல் கல்லூரிகளில், கல்லூரிக்கு ஒன்று வீதம் மூன்று நவீன பொறியியல் புனைவக நிலையங்களை ரூ.2.2 கோடி மதிப்பில் அமைப்பதற்கான பணிகள் நிறைவு பெறும் தருவாயில் உள்ளன.

இதில் ஒரு பகுதியாக, மாணவர்கள் தங்களது தொழில் சிந்தனைகளை, மாதிரி திட்டமாக உருவாக்கிக் கொள்ள பயனளிக்கும் விதத்தில் Protosem *என்ற ஒரு மதிப்புறு பயிற்சி பிரிவு சேர்க்கப்படும். இந்த நவீன பொறியியல் புனைவகங்களை மாணவர்கள் மட்டுமின்றி அவை அமைந்திருக்கும் பகுதிகளை சேர்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களும் புத்தாக்க நிறுவனங்களும் பயன்படுத்திக் கொள்ளலாம்.*

7.6. தொழில் வளர் காப்பக மேலாண்மை பயிற்சி

தமிழ்நாட்டில் இயங்கும் தொழில் வளர் காப்பகங்களின் திறனை மேம்படுத்தும் விதமாக அதன் தலைமை செயல் அலுவலர்கள் மற்றும் மேலாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கும் விதமாக இத்திட்டம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. 2022-23 ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாட்டில் செயல்படும் 59 தொழில் வளர் காப்பகங்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட்டது. அவர்களில் சிறப்பாக செயல்படும் 13 தொழில் வளர் காப்பகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்த ஆதரவளிக்கும் வண்ணம், தலா மூன்று இலட்சம் வீதம் ரூ.39 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 5 தொழில்

[2023 ஏப்ரல் 6

வளர் காப்பகங்கள் இஸ்ரேல் நாட்டில் இயங்கும் தொழில் வளர் காப்பகங்களின் சிறந்த செயல்பாடுகளை அறிந்து கொள்ள உதவும் வண்ணம் அந்த நாட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

7.7. வழிகாட்டி மென்பொருள்

புதுயுக தொழில் முனைவுப் பயணத்தில் தொழில்முனைவோர்களுக்கு துறைசார் அறிவும், அனுபவமும் கொண்ட அறிவுரைஞர்களின் வழிகாட்டுதல்களைப் பெறுதல் அவசியம். இதன் அடிப்படையில் பல்வேறு துறை சார்ந்தும், தொழில் முனைவு சார்ந்தும் வழிகாட்டுதல்களை வழங்க தயாராக இருக்கும் அறிவுரைஞர்களையும், தொழில் முனைவோர்களையும் இணைக்கும் வகையில், பிரத்யேகமான இணையமுகப்பு MentorTN என்ற பெயரில் தொடங்கப்பட்டுள்ளது. இதுவரையில் 90 வழிகாட்டுநர்கள் இத்தளத்தில் இணைந்துள்ளனர்.

7.8. உலகத் தமிழ் ஏஞ்சல் முதலீட்டாளர்கள் இணைப்புத்தளம்

உலக அளவிலான தமிழ் ஏஞ்சல் முதலீட்டாளர்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அவர்களது முதலீடுகளை சரியான திட்டத்தில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இயங்கும் உலகத் தமிழ் ஏஞ்சல் முதலீட்டாளர்கள் இணைய தளம் தொடங்கப்பட்டுள்ளது. புத்தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்யத் தயாராக இருக்கும் ஏஞ்சல் முதலீட்டாளர்களையும், முதலீடுகள் தேவைப்படுகின்ற தகுந்த புத்தொழில் நிறுவனங்களையும் இணைக்கும் தளமாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

7.9. சமூகத் தொழில் முனைவுகளுக்கான ஊக்குவிப்பு

சமூகத்தில் நன்மாற்றங்களை விளைவிக்கும் விதமாக இயங்கும் புத்தொழில் நிறுவனங்களுக்கென இதுவரை டான்சீட் மானியத் திட்டத்தின்மூலம் 29 புத்தொழில் நிறுவனங்களுக்கு, ரூ.2.9 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் அந்நிறுவனங்களுக்கு தொழில் விரைவாக்க பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் ஊரக வாழ்வாதார மேம்பாடு சார்ந்து இயங்கும் புத்தொழில் நிறுவனங்களுக்கு சிறப்பு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஊரக வாழ்வாதார மேம்பாடு என்பது வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கிராமப்புற சிறு

2023 ஏப்ரல் 6]

தொழிற்சாலைகள் என பல செயல்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது. பாரம்பரிய தொழில் முறைகளை நவீன தொழில்நுட்பங்களின் துணையுடன் மேம்படுத்துவதன்மூலம், பெரும்பான்மையான இளைஞர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்கி, அவர்கள் ஊரகப் பகுதிகளிலிருந்து நகர்ப்புற பகுதிகளுக்கு இடம்பெயர்வதைத் தடுக்க இயலும். வறுமை ஒழிப்பு என்பது மட்டுமல்லாமல், ஒருங்கிணைந்த வளர்ச்சி, சமமான வளர்ச்சி, நிலைத்த நீடித்த வளர்ச்சி ஆகியவையும் இத்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும். டான்சீட் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் ரூ.10 இலட்சம் நிதியானது, ஊரக வாழ்வாதார மேம்பாடு சார்ந்து இயங்கும் நிறுவனங்களுக்கு ரூ.15 இலட்சம் ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் ஒரு நிதியாண்டில் டான்சீட் திட்டத்தின்கீழ் பயன்பெறும் நிறுவனங்களில் 10 சதவீதம் ஊரக வாழ்வாதார மேம்பாடு சார்ந்து இயங்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

7.10. மகளிரை முதன்மை பங்குதாரர்களாகக் கொண்டிருக்கும் புத்தொழில் நிறுவனங்களுக்கான சிறப்பு சலுகை

தமிழ்நாடு, பாலின சமத்துவத்தை வலியுறுத்தும் திட்டங்களை செயல்படுத்துவதில் முன்னணி மாநிலமாக நீண்டகாலமாக இருந்து வருகிறது. இம்மரபில், பெண்களால் நடத்தப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு தகுந்த களமாக தமிழ்நாடு திகழ வேண்டும் என்ற அடிப்படையில், சிறப்பு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. மகளிரை முதன்மை பங்குதாரர்களாகக்கொண்டு இயங்கும் புத்தொழில் நிறுவனங்களுக்கு டான்சிட் நிதி ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.15 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், ஒரு நிதியாண்டில் டான்சீட் திட்டத்தில் பயன்பெற தேர்ந்தெடுக்கப்படும் நிறுவனங்களில் 25 சதவீதம் மகளிர்களை முதன்மை பங்குதாரர்களாக கொண்டிருக்கும் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் உதவியுடன் இயங்கிவரும் தொழில் வளர் காப்பகங்களில் மகளிரால் நடத்தப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு உறுப்பினர் கட்டணம் மற்றும் ஓராண்டுக்கான வாடகை கட்டணத்தினை (ரூ.2 இலட்சம் வரை) அரசே ஏற்றுக்கொள்ளும். மேலும் மகளிர் நலன் சார்ந்த தயாரிப்புகள் சேவைகளை வழங்கும் ஃபெம்டெக் (Femtech) நிறுவனங்கள் மற்றும் மகளிரால் நடத்தப்படும்

புத்தொழில் நிறுவனங்களுக்கு, சிறப்பு தொழில் விரைவாக்க பயிற்சிகள் வழங்குதல், தமிழ் ஏஞ்சல் முதலீட்டாளர் தளத்தின் வழியே முதலீடு திரட்டுவதற்கான உதவிகள் வழங்குதல் என பல சிறப்புத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. மகளிருக்கான இந்த சிறப்பு சலுகைகளைப் பெற, நிறுவனத்தின் 75 சதவீத பங்கு மகளிர்களுக்கு உரியதாக இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

7.11. பசுமை தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனங்களுக்கான சிறப்பு சலுகை

புவி சந்தித்துக் கொண்டிருக்கும் சூழலியல் அழுத்தங்களுக்கு தீர்வு காண வேண்டிய அவசிய சூழலில் இருக்கின்றோம். எனவே, காலநிலை மாற்ற மேலாண்மை, நிலைத்த நீடித்த வளர்ச்சி, சுழற்சி பொருளாதாரம் சார்ந்து இயங்கும் புத்தாக்க நிறுவனங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டியது அவசியம். இதன் அடிப்படையில், பசுமை தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனங்களுக்கு சிறப்பு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளது. டான்சீட் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் ரூ.10 இலட்சம் நிதியானது, பசுமை தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு ரூ.15 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், வணிக ரீதியில் பயனளிக்கும் விதமான பசுமை தொழில்நுட்பத் திட்டங்களுக்கு பசுமை காலநிலை நிதியத்தின் மூலமாக முதலீடு வழங்க பரிந்துரைக்கப்படும். பசுமை தொழில்நுட்ப தயாரிப்புகளை/சேவைகளை அரசு கொள்முதல் செய்ய ஏதுவாக, அரசு கொள்முதல் உதவி மையமானது தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் சென்னை மற்றும் மதுரை அலுவலகங்களில் அமைக்கப்படும். இம்மையங்களின் வாயிலாக ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் தங்களது பசுமை தொழில்நுட்பத் தயாரிப்புகளின் செயல்பாட்டினை பரிசோதித்துப் பார்க்க அரசு பொதுத் துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகளின் வாயிலாக வழிவகை செய்யப்படும்.

7.12. தமிழ்நாடு பட்டியலினத்தவர்/பழங்குடியினர் புத்தொழில் நிதி

புதுயுகத் தொழில்முனைவில் அனைத்து சமூகத்தினரையும் உள்ளடக்கிய வளர்ச்சியினை அடைவதற்காக 2022-23 ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாடு பட்டியலினத்தவர்/பழங்குடியினர்

2023 ஏப்ரல் 6]

புத்தொழில் நிதித் திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்தப் பிரிவுகளை சார்ந்த தொழில்முனைவோர்களால் தொடங்கி நடத்தப்பட்டுவரும் புத்தொழில் நிறுவனங்களுக்கு பங்கு முதலீடு அல்லது பிணையில்லா கடனாக நிதி வழங்க ரூ.30 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. 2022-23ஆம் நிதி ஆண்டில் இதுவரை 14 புத்தொழில் நிறுவனங்களில் ரூ.18.8 கோடி முதலீடு உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் வழியாக நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்தின் வழியாக இப்பிரிவுகளைச் சார்ந்த இன்னும் பலர் பயன்பெறும் வகையில் மேலும் பல விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன. அரசே முதலீடு செய்வதன் வாயிலாக இந்நிறுவனங்களுக்கு புதிய சந்தை வாய்ப்புகள் பெருகும்.

7.13. தனித்த வணிக அடையாளங்களை உருவாக்க உதவுதல் மற்றும் புத்தாக்க தயாரிப்புகளை அறிமுகப்படுத்துதல்

புத்தொழில் நிறுவனங்கள் சந்தையில் தமக்கென தனித்த வணிக அடையாளங்களை உருவாக்கிக் கொள்ள தேவையான திறன்களை கற்றுத் தருதல் மற்றும் தங்களது தயாரிப்புகள்/ சேவைகளை அறிமுகப்படுத்தும் வாய்ப்புகளை வழங்குதல் ஆகியவற்றிற்காக தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் வழியாக பிராண்ட் லேப்ஸ் (Brand labs)*, லான்ச்பேட்* (Launchpad) *ஆகிய நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன.*

பிராண்ட்லேப்ஸ் என்பது புத்தொழில் நிறுவனர்கள், தொழில்முனைவு ஆர்வலர்கள், மாணவர்கள், வெற்றியடைந்த தொழில் ஆளுமைகள், தொழில்முனைவு வல்லுநர்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கும் களமாகும். தமிழ்நாட்டில் பல புத்தொழில் நிறுவனங்கள் புதுமையான தயாரிப்புகளை உற்பத்தி செய்தாலும், சந்தைப்படுத்துதலிலும் வணிகச் சந்தையில் தனித்துவமான ஓர் இடத்தை அடைவதிலும் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். இதற்கான தீர்வு காணும் விதமாக பல நிகழ்வுகள் இத்தளத்தின் வாயிலாக ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன. லான்ச் பேட் என்பது புத்தொழில் நிறுவனங்கள் தங்களது தயாரிப்புகளை அறிமுகப்படுத்தும் நிகழ்வாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 6

சென்னை, மதுரை, திருநெல்வேலி, திருச்சி, ஈரோடு ஆகிய இடங்களில் இந்நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இதுவரை 106 தயாரிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

7.14. நிரல் போட்டி (Hackathon)

அரசு, சமூகம் மற்றும் தொழில் துறைகளில் நீண்டகாலமாக நிலவும் சிக்கல்களுக்கு புத்தாக்க தீர்வுகளைக் காணும் நோக்கத்தில் நிரல் போட்டிகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையுடன் இணைந்து வேளாண் நிரல் போட்டி நடத்தப்பட்டது. சிறந்த தீர்வுகளை வழங்கும் புத்தொழில் நிறுவனங்கள்/விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு டான்சீட் நிதி வழங்க பரிசீலனையில் உள்ளது. மேலும் மருத்துவத் தொழில்நுட்பம், நிலைத்த நீடித்த வளர்ச்சி, ஆடை உற்பத்தி, அரசுத்துறைக்கான தொழில்நுட்பத் தேவைகள் என பல பிரிவுகளுக்கான நிரல் போட்டிகள் வடிவமைத்து நடத்தப்பட்டு வருகின்றன.

இணைப்பு–1

தமிழ்நாடு சிட்கோ நிறுவனத்தால் தற்போது பராமரிக்கப்படும் 127 தொழிற்பேட்டைகள்

வ.எண்	மாவட்டம்	வ.எண்	அமைவிடம்	அரசு/சிட்கோ	துவங்கப்பட்ட ஆண்டு	மொத்த பரப்பளவு (ஏக்கரில்)
1	சென்னை	1	கிண்டி	அரசு	1958	404.08
		2	அரும்பாக்கம்	சிட்கோ	1979	3.92
		3	வில்லிவாக்கம்	சிட்கோ	1979	2.04
		4	கொடுங்கையூர்	சிட்கோ	1979	7.88
		5	பெருங்குடி	அரசு	1974	112.55

2023 ஏப்ரல் 6]

வ.எண்	மாவட்டம்	வ.எண்	அமைவிடம்	அரசு/சிட்கோ	துவங்கப்பட்ட ஆண்டு	மொத்த பரப்பளவு (ஏக்கரில்)
		6	திருவான்மியூர்	அரசு	1967	28.91
		7	அம்பத்தூர்	அரசு	1963	1167.00
2	திருவள்ளூர்	8	காக்களூர்	அரசு	1988	328.13
		9	திருமழிசை	சிட்கோ	1988	160.85
		10	கும்மிடிப்பூண்டி	சிட்கோ	1988	25.24
		11	ஆர்.கே.பேட்டை	சிட்கோ	1996	8.15
		12	விச்சூர்	சிட்கோ	1994	59.16
		13	திருமுல்லைவாயல் (ம.தொ.பூ)	சிட்கோ	2001	246.07
		14	செங்கரை	சிட்கோ	2017	36.25
3	செங்கல்பட்டு	15	மறைமலைநகர்	சிட்கோ	1981	39.50
		16	ஆலத்தூர் (பார்மா)	சிட்கோ	1984	150.49
		17	ஆலத்தூர் (பகுதி-2)	சிட்கோ	2022	67.96
		18	தண்டரை	சிட்கோ	2017	44.30
4	காஞ்சிபுரம்	19	காஞ்சிபுரம்	அரசு	1968	37.95
		20	திருமுடிவாக்கம் (முதன்மை)	சிட்கோ	1993	201.11
		21	திருமுடிவாக்கம் (குறு)	சிட்கோ	2013	5.262
		22	திருமுடிவாக்கம் (ம.தொ.பூ)	சிட்கோ	2002	11.48

[2023 ஏப்ரல் 6

வ.எண்	மாவட்டம்	வ.எண்	அமைவிடம்	அரசு/சிட்கோ	துவங்கப்பட்ட ஆண்டு	மொத்த பரப்பளவு (ஏக்கரில்)
		23	திருமுடிவாக்கம் பகுதி-2	சிட்கோ	2017	22.44
5	ராணிப் பேட்டை	24	அரக்கோணம்	அரசு	1968	51.74
		25	ராணிப்பேட்டை	சிட்கோ	1972	113.44
		26	முகுந்தராயபுரம்	சிட்கோ	1980	86.19
		27	வன்னிவேடு	சிட்கோ	1987	16.44
		28	முள்ளுவாடி & நாகலேரி	சிட்கோ	2020	20.00
6	திருப்பத்தூர்	29	விண்ணமங்கலம்	சிட்கோ	2009	10.49
		30	வாணியம்பாடி	சிட்கோ	2013	7.08
		31	மின்னூர்	சிட்கோ	2014	10.00
7	வேலூர்	32	காட்பாடி	அரசு	1968	19.48
8	திருவண்ணாமலை	33	திருவண்ணாமலை	அரசு	1968	15.56
		34	பெரியகோளப்பாடி	சிட்கோ	2022	57.18
9	கிருஷ்ணகிரி	35	கிருஷ்ணகிரி	அரசு	1965	41.86
		36	ஊத்தங்கரை	சிட்கோ	1995	41.28
		37	ஓசூர்	அரசு	1974	12.34
		38	ஓசூர் (சிப்காட்)	சிட்கோ	1976	95.15
		39	ஓசூர் (புதியது)	சிட்கோ	1999	24.41
		40	பர்கூர்	சிட்கோ	1995	31.64
		41	போலுப்பள்ளி	சிட்கோ	2009	60.96

2023 ஏப்ரல் 6]

வ.எண்	மாவட்டம்	வ.எண்	அமைவிடம்	அரசு/சிட்கோ	துவங்கப்பட்ட ஆண்டு	மொத்த பரப்பளவு (ஏக்கரில்)
10	தருமபுரி	42	தருமபுரி	அரசு	1965	20.28
		43	கடகத்தூர்	சிட்கோ	2009	7.02
		44	பர்வதனஹள்ளி	சிட்கோ	2014	29.89
		45	ஈச்சம்பாடி	சிட்கோ	2017	50.46
11	சேலம்	46	சேலம்	அரசு	1967	19.55
		47	மேட்டூர்	அரசு	1967	184.38
		48	கருப்பூர் (ம.தொ.பூ)	சிட்கோ	2004	51.24
		49	வீரபாண்டி	சிட்கோ	1993	9.79
		50	கோரணம்பட்டி	சிட்கோ	2017	16.61
		51	சூரமங்களம்	அரசு	1986	27.50
		52	பெரியசீரகப்பாடி	சிட்கோ	2022	26.86
12	நாமக்கல்	53	நாமக்கல்	சிட்கோ	1977	10.09
		54	திருச்செங்கோடு	சிட்கோ	1980	9.18
		55	வேட்டம்பாடி	சிட்கோ	2014	15.34
		56	இராசம்பாளையம்	சிட்கோ	2022	18.37
13	ஈரோடு	57	ஈரோடு	அரசு	1959	25.13
		58	நஞ்சைஊத்துக்குளி	சிட்கோ	1995	13.05
		59	பெருந்துறை	சிட்கோ	2017	49.47
14	கோயம்புத்தூர்	60	குறிச்சி	அரசு	1972	88.43
		61	மலுமிச்சம்பட்டி	சிட்கோ	1994	36.14
		62	காளப்பட்டி	அரசு	1972	13.46

வ.எண்	மாவட்டம்	வ.எண்	அமைவிடம்	அரசு/சிட்கோ	துவங்கப்பட்ட ஆண்டு	மொத்த பரப்பளவு (ஏக்கரில்)
15	திருப்பூர்	63	கணபதிபாளையம்	சிட்கோ	1993	17.10
		64	திருப்பூர்	சிட்கோ	1978	10.14
		65	குடிமங்கலம்	சிட்கோ	1992	6.74
		66	ராசாத்தவலசு	சிட்கோ	2011	51.80
16	நீலகிரி	67	ஊட்டி	சிட்கோ	1981	10.65
17	கடலூர்	68	கடலூர்	அரசு	1971	15.60
		69	வடலூர்	அரசு	1972	26.22
		70	பெரியநெசலூர்	சிட்கோ	2015	90.80
		71	விருதாச்சலம்	அரசு	1961	41.53
18	விழுப்புரம்	72	பட்டணம்	சிட்கோ	2014	60.57
		73	வெண்மணியாத்தூர்	சிட்கோ	2011	36.82
19	கள்ளக் குறிச்சி	74	காட்டுவன்னஞ்சூர்	சிட்கோ	2014	42.00
		75	ஆசனூர் பகுதி I&II	சிட்கோ	2009 & 2015	212.83
20	பெரம்பலூர்	76	எலம்பலூர்	சிட்கோ	2009	44.48
21	அரியலூர்	77	மல்லூர்	சிட்கோ	2014	25.34
22	தஞ்சாவூர்	78	தஞ்சாவூர்	அரசு	1968	21.94
		79	கும்பகோணம்	அரசு	1968	32.30
		80	பிள்ளையார்பட்டி	சிட்கோ	1974	10.96
		81	நாஞ்சிக்கோட்டை	சிட்கோ	1996	26.30
		82	பாளையப்பட்டி	சிட்கோ	2012	104.37

வ.எண்	மாவட்டம்	வ.எண்	அமைவிடம்	அரசு/சிட்கோ	துவங்கப்பட்ட ஆண்டு	மொத்த பரப்பளவு (ஏக்கரில்)
23	நாகப் பட்டினம்	83	நாகப்பட்டினம்	அரசு	1966	20.97
24	மயிலாடு துறை	84	மயிலாடுதுறை	சிட்கோ	2009	12.56
25	திருச்சி	85	துவாக்குடி	அரசு	1974	478.38
		86	திருவெறும்பூர்	அரசு	1974	74.50
		87	அரியமங்கலம்	அரசு	1974	17.64
		88	கும்பக்குடி	சிட்கோ	2009	24.46
		89	வாழவந்தான் கோட்டை (ம.தொ. பூ)	சிட்கோ	2003	51.70
		90	வாழவந்தான் கோட்டை	சிட்கோ	2008	179.02
26	கரூர்	91	கரூர் (வெள்ளாளப்பட்டி)	அரசு	1974	26.63
		92	கரூர் (ஆத்தூர்)	சிட்கோ	1993	36.29
		93	புஞ்சைகாளக் குறிச்சி	சிட்கோ	2016	52.076
27	புதுக் கோட்டை	94	புதுக்கோட்டை	அரசு	1974	23.18
		95	புதுக்கோட்டை (சிப்காட்)	சிட்கோ	1988	51.45
		96	மாத்தூர்	சிட்கோ	1975	26.00
		97	மாத்தூர்(புதியது)	சிட்கோ	2013	19.92

வ.எண்	மாவட்டம்	வ.எண்	அமைவிடம்	அரசு/சிட்கோ	துவங்கப்பட்ட ஆண்டு	மொத்த பரப்பளவு (ஏக்கரில்)
		98	ஆலங்குடி	சிட்கோ	2022	15.67
28	தேனி	99	தேனி	அரசு	1963	26.59
		100	ஆண்டிப்பட்டி	சிட்கோ	1994	22.34
		101	மரிக்குண்டு	சிட்கோ	2017	79.40
29	திண்டுக்கல்	102	திண்டுக்கல்	அரசு	1965	39.91
		103	வத்தல குண்டு	அரசு	1965	16.26
30	மதுரை	104	கே.புதூர்	அரசு	1960	56.05
		105	கப்பலூர்	அரசு	1966	535.64
		106	கப்பலூர்(ம.தொ.பே)	சிட்கோ	2008	35.37
31	இராமநாதபுரம்	107	பரமக்குடி	சிட்கோ	1976	10.00
		108	கீழநாகாச்சி	சிட்கோ	1993	10.00
		109	உரப்புளி	சிட்கோ	1993	12.14
		110	சக்கரக்கோட்டை	சிட்கோ	2017	100.00
32	சிவகங்கை	111	காரைக்குடி	அரசு	1966	180.19
		112	சிவகங்கை	அரசு	1966	70.61
		113	கிருங்காக்கோட்டை	சிட்கோ	1993	21.85
33	விருதுநகர்	114	விருதுநகர்	அரசு	1958	45.65
		115	ராசபாளையம்	சிட்கோ	1995	41.13
		116	விருதுநகர் (நகர்புறம்)	சிட்கோ	2013	37.54
34	தென்காசி	117	கடையநல்லூர்	சிட்கோ	1992	10.00
		118	குருக்கள்பட்டி	சிட்கோ	2019	68.80

2023 ஏப்ரல் 6]

வ.எண்	மாவட்டம்	வ.எண்	அமைவிடம்	அரசு/சிட்கோ	துவங்கப்பட்ட ஆண்டு	மொத்த பரப்பளவு (ஏக்கரில்)
35	திருநெல்வேலி	119	பேட்டை	அரசு	1959	50.55
		120	வள்ளியூர்	சிட்கோ	2005	39.91
		121	கங்கைகொண்டான்	சிட்கோ	2020	89.92
36	தூத்துக்குடி	122	கோவில்பட்டி	அரசு	1962	85.54
		123	தூத்துக்குடி– பகுதி 1	சிட்கோ	1988	9.72
		124	தூத்துக்குடி–பகுதி 2	சிட்கோ	2003	14.46
		125	பிடாநேரி	சிட்கோ	2016	108.23
37	கன்னியாகுமரி	126	கோணம்	அரசு	1964	20.70
		127	மார்த்தாண்டம்	அரசு	1964	7.50
			மொத்தம்			8453.13

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 6

இணைப்பு—2

ஒன்றிய அரசின் குறு, சிறு தொழில் நிறுவனங்கள்-குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்ட பொது வசதி மைய திட்டங்கள்-28

(ரூபாய் கோடியில்)

வ. எண்	குழுமத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு	ஒன்றிய அரசின் மானியம்	மாநில அரசு மானியம்	சிறப்பு நோக்க அமைப்பின் பங்கு	வங்கிக் கடன்
1	மாவு அரவை இயந்திரம் தயாரிக்கும் குழுமம், கோயம்புத்தூர்	2.88	0.99	0.17	1.73	0.00
2	ஜவ்வரிசி குழுமம், சேலம்	0.92	0.73	0.00	0.19	0.00
3	தீப்பெட்டிக் குழுமம், குடியாத்தம்	1.56	0.86	0.11	0.25	0.35
4	தீப்பெட்டிக் குழுமம், விருதுநகர்	1.56	0.86	0.11	0.25	0.35
5	தீப்பெட்டிக் குழுமம், வில்லிபுத்துர்	1.56	0.86	0.11	0.25	0.35
6	தீப்பெட்டிக் குழுமம், சாத்துர்	1.56	0.86	0.11	0.25	0.35
7	தீப்பெட்டிக் குழுமம், கழுகுமலை	1.56	0.86	0.11	0.25	0.35

2023 ஏப்ரல் 6]

வ. எண்	குழுமத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு	ஒன்றிய அரசின் மானியம்	மாநில அரசு மானியம்	சிறப்பு நோக்க அமைப்பின் பங்கு	வங்கிக் கடன்
8	தீப்பெட்டிக் குழுமம், கோவில்பட்டி	1.56	0.86	0.11	0.25	0.35
9	பீங்கான் குழுமம், விருதாச்சலம்	0.83	0.43	0.10	0.18	0.11
10	கயிறு குழுமம், சிவகங்கை	6.59	5.00	0.66	0.93	0.00
11	அரிசி ஆலைக் குழுமம், கீழப்பாவூர்	6.91	4.66	0.69	1.46	0.10
12	தானியங்கி உதிரி பாகங்கள் குழுமம், ஓசூர்	6.91	4.39	0.71	1.05	0.75
13	அச்சு குழுமம், கிருஷ்ணகிரி	11.73	9.64	1.00	1.08	0.00
14	அரிசி ஆலைக் குழுமம், ஆலங்குளம்	7.87	5.50	0.79	0.84	0.74
15	ஸ்டைன்லெஸ் ஸ்டீல் பேப்ரி-கேஷன்ஸ் குழுமம், சேலம்	16.33	12.78	1.00	2.55	0.00
16	அரிசி மில் குழுமம், தஞ்சாவூர்	2.12	1.00	0.40	0.21	0.50

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	குழுமத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு	ஒன்றிய அரசின் மானியம்	மாநில அரசு மானியம்	சிறப்பு நோக்க அமைப்பின் பங்கு	வங்கிக் கடன்
17	பிளாஸ்டிக் குழுமம், காஞ்சிபுரம்	14.85	10.27	1.00	2.58	1.00
18	அச்சுக் குழுமம், சிவகாசி	13.15	7.68	0.91	1.80	2.76
19	தங்க நகைக் குழுமம், மதுரை	3.56	2.56	0.29	0.40	0.31
20	பொறியியல் குழுமம், பரமக்குடி	4.99	3.74	0.23	0.54	0.48
21	ஸ்டைன்லெஸ் ஸ்டீல் பாத்திரக் குழுமம், கும்பகோணம்	1.26	0.99	0.08	0.20	0.00
22	ஆயுத்த ஆடை குழுமம் (பெண்கள்), தளவாய்புரம்	1.04	0.74	0.09	0.21	0.00
23	கயிறு குழுமம், ஈரோடு	5.92	4.04	0.48	0.60	0.79
24	பொறியியல் குழுமம், அம்பத்தூர்	11.24	8.05	0.54	1.15	1.50
25	தங்க நகைக் குழுமம், திருச்சி	3.60	2.88	0.36	0.36	0.00

2023 ஏப்ரல் 6]

வ. எண்	குழுமத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு	ஒன்றிய அரசின் மானியம்	மாநில அரசு மானியம்	சிறப்பு நோக்க அமைப்பின் பங்கு	வங்கிக் கடன்
26	பொறியியல் குழுமம், ராணிப் பேட்டை,	9.27	6.16	0.97	1.09	1.04
27	கேட் & கிரில் குழுமம், திருமுல்லை-வாயில், திருவள்ளூர் மாவட்டம்	3.45	1.98	0.90	0.57	0.00
28	தீப்பெட்டிக் குழுமம், ஓ.மேட்டுப்-பட்டி, விருதுநகர் மாவட்டம்	3.47	2.05	0.36	0.43	0.64
	மொத்தம்	**148.25**	**101.42**	**12.38**	**21.65**	**12.82**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 6

இணைப்பு—3

குறு, சிறு தொழில் நிறுவனங்கள்-குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயலாக்கத்தில் உள்ள பொது வசதி மைய திட்டங்கள்-15

(ரூ. கோடியில்)

வ. எண்	குழுமத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு	ஒன்றிய அரசின் மானியம்	மாநில அரசு மானியம்	சிறப்பு நோக்க அமைப்பின் பங்கு	வங்கிக் கடன்
1	தானியங்கி மற்றும் விசைத்தறி குழுமம், சேலம் மாவட்டம்	*13.34*	*8.86*	*0.99*	*1.62*	*1.87*
2	பின்னலாடைக் குழுமம், திருப்பூர் மாவட்டம்	*15.34*	*8.34*	*3.00*	*4.00*	*0.00*
3	அறைகலன்கள் குழுமம், சேலம் மாவட்டம்	*14.46*	*10.67*	*1.89*	*1.89*	*0.00*
4	கனரக வாகன கட்டுமானக் குழுமம், நாமக்கல் மாவட்டம்	*16.53*	*12.82*	*1.86*	*1.86*	*0.00*
5	ஆயத்த ஆடை குழுமம், திருப்பூர் மாவட்டம்	*16.25*	*8.57*	*3.00*	*4.68*	*0.00*

2023 ஏப்ரல் 6]

வ. எண்	குழுமத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு	ஒன்றிய அரசின் மானியம்	மாநில அரசு மானியம்	சிறப்பு நோக்க அமைப்பின் பங்கு	வங்கிக் கடன்
6	அச்சு மற்றும் அட்டைப் பெட்டி குழுமம், ஓசூர் கிருஷ்ணகிரி மாவட்டம்	13.95	11.04	1.39	1.52	00.00
7	விவசாய உபகரணங்கள் கட்டமைப்பு குழுமம், எலம்பலூர், பெரம்பலூர் மாவட்டம்	12.19	9.31	1.22	1.26	0.40
8	நெசவு குழுமம், பெருந்துறை, ஈரோடு மாவட்டம்	18.68	9.63	1.87	7.18	0.00
9	விசைத்தறி குழுமம், இராசிபுரம், நாமக்கல் மாவட்டம்	20.09	11.99	2.51	5.59	0.00
10	வடிவமைப்புக் குழுமம், திருப்பூர் மாவட்டம்	14.67	9.79	1.47	3.41	0.00

வ. எண்	குழுமத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு	ஒன்றிய அரசின் மானியம்	மாநில அரசு மானியம்	சிறப்பு நோக்க அமைப்பின் பங்கு	வங்கிக் கடன்
11	கம்பளி குழுமம், குன்னூர், நீலகிரி மாவட்டம்	2.84	2.27	0.28	0.28	0.00
12	விசைத்தறி குழுமம், பல்லடம், திருப்பூர் மாவட்டம்	17.59	11.52	1.76	4.31	0.00
13	அச்சுக் குழுமம், சேலம் மாவட்டம்	13.47	10.76	1.35	1.35	0.00
14	தங்க நகை குழுமம், திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம்	7.48	5.99	0.75	0.75	0.00
15	தங்க நகை குழுமம், சென்னை மாவட்டம்	10.32	8.25	1.03	1.03	0.00
	மொத்தம்	207.20	139.81	24.37	40.73	2.27

2023 ஏப்ரல் 6]

இணைப்பு—4

குறு, சிறு தொழில் நிறுவனங்கள்-குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒன்றிய அரசிற்கு பரிந்துரைக்கப்பட்ட பொது வசதி மைய திட்டங்கள்-8

(ரூ. கோடியில்)

வ. எண்	குழுமத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு	ஒன்றிய அரசின் மானியம்	மாநில அரசு மானியம்	சிறப்பு நோக்க அமைப்பின் பங்கு
1	தங்க நகை குழுமம், கோயம்புத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம்	*15.30*	*11.81*	*1.53*	*1.96*
2	பசுமை ஏலக்காய் குழுமம், தேனி, தேனி மாவட்டம்	*14.26*	*11.28*	*1.43*	*1.55*
3	தோல் குழுமம், குரோம்பேட்டை, செங்கல்பட்டு மாவட்டம்	*20.00*	*16.00*	*2.00*	*2.00*
4	அச்சு குழுமம், ஆற்காடு, ராணிப்பேட்டை மாவட்டம்	*12.45*	*9.37*	*1.41*	*1.67*
5	அட்டைப் பெட்டி அச்சு குழுமம், திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்	*13.58*	*10.72*	*1.36*	*1.51*

[2023 ஏப்ரல் 6

வ. எண்	குழுமத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு	ஒன்றிய அரசின் மானியம்	மாநில அரசு மானியம்	சிறப்பு நோக்க அமைப்பின் பங்கு
6	கயிறு குழுமம் திண்டுக்கல், திண்டுக்கல் மாவட்டம்	18.68	14.33	1.86	2.48
7	கயிறு குழுமம் பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம்.	23.73	14.00	2.00	7.73
8	துல்லிய கருவி பொறியியல் குழுமம், ஓசூர்	16.09	12.87	1.61	1.61
	மொத்தம்	134.09	100.38	13.20	20.51

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 6]

இணைப்பு—5

குறுந்தொழில் குழுமங்களுக்கான (CPI) பொது உற்பத்தி உட்கட்டமைப்பு திட்டத்தின்கீழ் முடிவடைந்த திட்டங்கள்-3

(ரூ. கோடியில்)

வ. எண்	குழுமத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு	மாநில அரசு மானியம்	சிறப்பு நோக்க அமைப்பின் பங்கு
1	அட்டைப் பெட்டி குழுமம், கவுண்டம்பாளையம், திருப்பூர் மாவட்டம்.	*3.90*	*2.50*	*1.40*
2	வெள்ளி கொலுசு குழுமம், சிவதாபுரம், சேலம் மாவட்டம்.	*2.50*	*1.75*	*0.75*
3	நெகிழி மறுசுழற்சி குழுமம், அப்பநாயக்கன்பட்டி புதூர், சூலூர் வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.	*4.00*	*2.50*	*1.50*
	மொத்தம்	*10.40*	*6.75*	*3.65*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 6

குறுந்தொழில் குழுமங்களுக்கான (CPI) பொது உற்பத்தி உட்கட்டமைப்பு திட்டத்தின்கீழ் நடைமுறையில் உள்ள திட்டங்கள் - 6

(ரூ. கோடியில்)

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு	மாநில அரசு மானியம்	சிறப்பு நோக்க அமைப்பின் பங்கு
1.	பொது வசதி மையம் உருவாக்குதல், ஈரோடு தொழிற்பேட்டை, ஈரோடு மாவட்டம்.	6.52	2.33	4.19
2.	பொது வசதி மையம் உருவாக்குதல், காக்களூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கம், திருவள்ளூர் மாவட்டம்.	4.64	2.33	2.31*
3.	திருமுடிவாக்கம் தொழிற்பேட்டை பகுதி–I தொழிற்சாலை ஆலைக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், காஞ்சிபுரம் மாவட்டம்.	2.60	1.80	0.80
4.	வார்ப்புக் குழுமம், வெள்ளனூர் கோயம்புத்துர் மாவட்டம்.	4.44	2.50	1.94

2023 ஏப்ரல் 6]

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு	மாநில அரசு மானியம்	சிறப்பு நோக்க அமைப்பின் பங்கு
5.	துல்லிய பொறியியல் குழுமம், மதுக்கரை, கோயம்புத்தூர் மாவட்டம்.	4.76	2.50	2.26
6.	தீப்பெட்டி குழுமம், குடியாத்தம். வேலூர் மாவட்டம்.	3.62	2.50	1.12
	மொத்தம்	26.58	13.96	12.62

* சிறப்பு நோக்க அமைப்பிற்கு பதிலாக சிட்கோவின் பங்களிப்பு

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

கோரிக்கை எண் 44

(ரூபாய் ஆயிரத்தில்)

கணக்குத் தலைப்புகள்	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2022–2023	திருத்திய மதிப்பீடு 2022–2023	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2023–2024
2425–கூட்டுறவு	0	3250	0
2851–கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும்	7685241	7601481	12735141
2852–தொழில்கள்	1185521	698218	685942
3451–தலைமைச் செயலகம்–பொருளாதாரப் பணிகள்	51571	62163	71311

[2023 ஏப்ரல் 6

கணக்குத் தலைப்புகள்	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2022–2023	திருத்திய மதிப்பீடு 2022–2023	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2023–2024
4408–உணவுபொருள் சேமிப்பு மற்றும் கிடங்கு வசதி குறித்த மூலதன செலவு	*0*	*0*	*50000*
4851–கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் குறித்த மூலதனச் செலவு	*50002*	*50002*	*50003*
6851–கிராமத் தொழில்கள், சிறு தொழில்களுக்கான கடன்கள்	*142685*	*632928*	*1500001*
6860–நுகர்வோர் தொழில்களுக்கான கடன்கள்	*0*	*313800*	*0*
7610–அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள்	*1*	*1*	*1*
மொத்தம்	*9115021*	*9361843*	*15092399*

———

இணைப்பு-IV

(301 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 12-கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

இயல் 1

முன்னுரை

1.1. கூட்டுறவு என்பது, தங்களது பொதுவான பொருளாதார, சமூக மற்றும் கலாச்சாரத் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தாமாக சேர்ந்த நபர்களின் தன்னாட்சி பெற்ற கூட்டமைப்பு ஆகும். தமிழ்நாட்டில் சேவைகளை வழங்குதல், வேலைவாய்ப்பு மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகளை முன்னெடுத்தல் ஆகியவற்றில் கூட்டுறவுக்கு நிரூபிக்கப்பட்ட பங்கு உண்டு. கூட்டுறவுச் சங்கங்கள் கிராமப்புற பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்குவதோடு, கிராம மற்றும் நகர்ப்புறங்களில் கடன் பெறுவதற்கான வாய்ப்பு வழங்குகிறது.

1.2. இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடியாக தமிழ்நாடு போற்றப்படுகிறது. கூட்டுறவுக் கடன் சங்கச் சட்டம் 1904 ஆம் ஆண்டிலேயே மாநிலத்தில் இயற்றப்பட்டது. இந்தியாவின் முதல் கூட்டுறவுக் கடன் சங்கம் 1904 ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டம், திரூரில் தொடங்கப்பட்டது. இதுபோன்று பல முதன்மைகள் மாநிலத்தில் உள்ளன. ஆண்டாண்டுகாலமாக, கூட்டுறவு அமைப்பு படிப்படியாக வளர்ச்சியடைந்து, தற்போது 17 தலைமைச் சங்கங்கள், 216 மத்தியச் சங்கங்கள் மற்றும் 22,690 தொடக்கச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 செயல்பாட்டு பதிவாளர்களின்கீழ் துடிப்புடன் செயல்படுகிறது. அதன் விவரங்களை கீழே உள்ள அட்டவணையில் காணலாம்:

வ. எண்	பதிவாளர் / செயற்பதிவாளர்கள்	சங்கங்களின் மொத்த எண்ணிக்கை	தொடக்கச் சங்கங்கள்	மத்தியச் சங்கங்கள்	தலைமைச் சங்கங்கள்
1	கூட்டுறவுச் சங்கங்ளின் பதிவாளர்	7,580	7,446	127	7
	இதர செயற் பதிவாளர்கள்				
2	ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால்வள மேம்பாட்டுத் துறை	10,211	10,185	25	1
3	ஆணையர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை	1,413	1,400	12	1
4	இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை	1,380	1,357	20	3
5	கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், வீட்டுவசதித் துறை	736	735	0	1
6	தலைமை நிர்வாக அதிகாரி, பனைபொருட்கள் மேம்பாட்டு வாரியம்	729	720	8	1
7	தொழில் துறை ஆணையர் மற்றும் தொழில் மற்றும் வர்த்தக இயக்குநர்	334	321	11	2
8	தலைமை நிர்வாக அதிகாரி, காதி மற்றும் கிராமத் தொழில் துறை	164	163	1	0

2023 ஏப்ரல் 6]

வ. எண்	பதிவாளர் / செயற்பதிவாளர்கள்	சங்கங்களின் மொத்த எண்ணிக்கை	தொடக்கச் சங்கங்கள்	மத்தியச் சங்கங்கள்	தலைமைச் சங்கங்கள்
9	இயக்குனர், கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை சேவைகள் துறை	107	107	0	0
10	இயக்குநர், வேளாண்மைத் துறை	102	92	10	0
11	இயக்குநர், சமூக நலன் மற்றும் மகளிர் மேம்பாட்டுத் துறை	99	98	1	0
12	இயக்குநர், பட்டு வளர்ப்புத் துறை	26	25	0	1
13	ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள் துறை	25	25	0	0
14	இயக்குநர், சர்க்கரைத் துறை	17	16	0	1
	மொத்தம்	22,923	22,690	216	17

1.3. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின்கீழ் இத்துறையின் நேரடி கட்டுப்பாட்டில் தற்போது, மொத்தம் 7,580 கூட்டுறவுச் சங்கங்கள் (7,446 தொடக்க, 127 மத்திய மற்றும் 7 தலைமைச் சங்கங்கள்) தமிழ்நாடு மாநிலம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளை நிர்வகிப்பதற்காக தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் - 1983 மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள்-1988 ஆகியவற்றை தமிழ்நாடு அரசு இயற்றியுள்ளது.

[2023 ஏப்ரல் 6

1.4. நோக்கங்கள்:

- ❖ கூட்டுறவு கட்டமைப்பை, குறிப்பாக விவசாயக் கடன் கூட்டுறவு அமைப்பை புத்துயிர் பெறச் செய்தல்.
- ❖ கூட்டுறவில் வளர்ச்சி குறைவான பகுதிகளில் உள்ள சங்கங்களுக்கு உதவும் நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்.
- ❖ கூட்டுறவு கல்வி, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் மனிதவள மேலாண்மையை வலுப்படுத்துதல், கூட்டுறவு நிறுவனங்களின் நிர்வாகத்தை தொழில்மயமாக்குதல்.
- ❖ கூட்டுறவு நிறுவனங்களின் நிர்வாகத்தில் உறுப்பினர்களின் கூடுதல் பங்கேற்பு
- ❖ பொதுக் குழுக் கூட்டம், தேர்தல் மற்றும் தணிக்கை ஆகியவை சரியான நேரத்தில் நடத்தப்படுவதை உறுதி செய்வதற்காக கூட்டுறவுச் சட்டத்தில் உள்ளமைக்கப்பட்ட நெறிமுறையிலான அமைப்பை உருவாக்குதல்;
- ❖ கூட்டுறவுச் சங்கங்களின் பலன்கள் சமுதாயத்தின் ஏழ்மையான பிரிவினரைச் சென்றடைவதை உறுதி செய்தல் மற்றும் கூட்டுறவு நிர்வாகத்தில் ஆதி திராவிடர்/பழங்குடியினர்/பெண்கள் போன்ற சமூகத்தின் நலிந்த பிரிவினரின் பங்களிப்பை ஊக்குவித்தல்.

1.5. தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் கீழ்க்கண்டவாறு ஐந்து பெரும் பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன.

(i) கூட்டுறவுக் கடன் சங்கங்கள்;

(ii) வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்;

(iii) நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்;

2023 ஏப்ரல் 6]

(iv) சிறப்பு நோக்கக் கூட்டுறவுச் சங்கங்கள்; மற்றும்

(v) கூட்டுறவுக் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி

1.6. கூட்டுறவு அமைப்புகளில், கூட்டுறவு அச்சகங்கள், பணியாளர்கள் கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடன் சங்கங்கள் மற்றும் தொழிலாளர் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை சிறப்பு கூட்டுறவுச் சங்கங்கள் ஆகும்.

1.7. கூட்டுறவுப் பணிகள்-விவசாயிகளுக்கு பயிர்க் கடன்/ விவசாயக் கடன்/விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளுக்கு கடன்/ நகர்ப்புறங்களுக்கு விவசாயம் அல்லாத கடன்/பொது மக்களுக்கு நகைக் கடன்/உரம், விதைகள் போன்ற இடுபொருட்கள் மற்றும் விவசாயக் கருவிகள் போன்றவற்றை விவசாயிகளுக்கு வழங்குதல்/ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பெண்கள், தொழில்முனைவோர் மற்றும் சமூகத்தின் நலிவடைந்த பிரிவினருக்கு கடன் மற்றும் பங்கு மூலதன மானியம்/ பழங்குடியினருக்கு அவர்களின் விளைபொருட்களை நியாயமான மற்றும் இலாபகரமான விலையில் சந்தைப்படுத்த உதவுதல் மற்றும் பல சேவைகளை வழங்குதல்.

1.8. பொது மக்களுக்கு மலிவு/கட்டுப்படுத்தப்பட்ட விலையில் தரமான காய்கறிகள் மற்றும் பழங்களை வழங்குவதற்காக கூட்டுறவு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் பண்ணை பசுமை சில்லறை விற்பனை நிலையங்களை நடத்தி வருகின்றன. தற்போது, மலிவு விலையில் பொருட்களை வழங்குவதற்காக, நகரும் பண்ணை பசுமை விற்பனை நிலையங்கள், நகரும் நியாய விலைக் கடைகள் மற்றும் கூட்டுறவு மருந்தகங்கள் ஆகியவை கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. தமிழகத்தில் 95% நியாய விலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகின்றன. இது இந்திய அளவில் ஒரு தனித்துவமான அம்சமாகும்.

1.9. கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பற்றி அடுத்த அத்தியாயத்தில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது. மற்ற கூட்டுறவு மற்றும் நிறுவனங்களின் விவரங்கள் மற்றும் செயல்பாடுகள் சுருக்கமாக கீழே காணலாம்:-

[2023 ஏப்ரல் 6

வ. எண்	கூட்டுறவு நிறுவனங்களின் வகைகள்	எண்ணிக்கை
1	வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்	112
2	மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்	25
3	கூட்டுறவு அச்சகம்	26
4	கூட்டுறவு எரிபொருள் விற்பனை நிலையம்	67
5	கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம்	22
6	கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (திண்டுக்கல்)	1
7	உயர் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம் (சென்னை மற்றும் மதுரை)	2
8	வேளாண் கூட்டுறவு பணியாளர் பயிற்சி நிறுவனம் (ACSTI) – சென்னை	1
9	நியாய விலைக் கடைகள்	33,702
10	எரிவாயு விற்பனை நிலையம்	28
11	தொழிற்பயிற்சி நிலையம் (2) மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரி (1)	3

1.10. தற்போதுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களை (PACCS) வலுப்படுத்துவதற்கான சிறப்பான திட்டத்தைக் கொண்டு, மாநில அரசின் முழுமையான அணுகுமுறையையும் பயன்படுத்தி, உறுப்பினர்களின் சமூக-பொருளாதார மேம்பாடு மற்றும் மேம்பாட்டிற்கான மையமாக கூட்டுறவினை மாற்றுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 6]

இயல் – 2

கூட்டுறவுக் கடன் அமைப்பு

2.1. கிராமப்புற விவசாயிகள் மற்றும் கைவினைஞர்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் கடன்களை வழங்குவதில் கடன் கூட்டுறவு அமைப்புகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டில், பயிர்க் கடன்கள், அதைச் சார்ந்த விவசாய நடவடிக்கைகளுக்கான கடன்கள் மற்றும் இதரக் கடன்களை அனைத்து கிராமங்கள் மற்றும் குக்கிராமங்களுக்கும் வழங்கும் கடன் கட்டமைப்புகள் இவை மட்டுமே. இம்முதன்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விவசாயிகளுக்கு கட்சி சார்பற்ற மற்றும் சுரண்டல் இன்றி அனைத்து ஏழை மக்களுக்கும் உரிய நேரத்தில் கடன் கிடைப்பதை உறுதி செய்து, கந்து வட்டிக்காரரர்களிடமிருந்து விவசாயிகள் மற்றும் பொது மக்கள் கடன் பெறுவதைத் தவிர்ப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

*2.2. கூட்டுறவு இயக்கம் 1844 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் உள்ள ரோச்டேல் சமபங்கு முன்னோடி சங்கம் (*Rochdale Equitable Pioneers Society*) ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து தொடங்கப்பட்டதாக இருப்பினும், முதல் கடன் கூட்டுறவு நிறுவனங்கள் 1862-ல் ஜெர்மனியில் ரைஃபிசென் மற்றும் ஷுல்ட்ஸ்-டெலிட்ச் (*Raiffeisen and Schultz-Delitsch*) ஆகியோரால் உருவாக்கப்பட்டது. அன்று முதல் இம்மாதிரி கடன் கூட்டுறவுச் சங்கங்கள் வளர்ந்து, உலகம் முழுவதும் நிதி சார்ந்த கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சிக்கு வழிவகுத்தது. இந்தியாவிலேயே முதல் கூட்டுறவுச் சங்கம் 1904 ஆம் ஆண்டு இன்றைய திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள திரூரில் தோற்றுவிக்கப்பட்டது.*

2.3. கடன் கூட்டுறவுகள் மக்களின் வாழ்க்கை மற்றும் பொருளாதார வாழ்நிலைகளை மேம்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன, ஏனெனில் அவை பொது மக்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய எளிதில் அணுகக்கூடிய அமைப்புகளாகத் திகழ்கின்றன. இந்நிறுவனங்கள், விவசாயம் மற்றும் அவை சார்ந்த துறைகள், உட்கட்டமைப்பு, தொழில்கள், சேவைகள் போன்ற துறைகளில் கிராமப்புற மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக்கு உதவுகின்றன. கடன் கூட்டுறவு அமைப்புகள்

[2023 ஏப்ரல் 6

பரந்து விரிந்த கட்டமைப்பை கொண்டுள்ளதாலும், அவற்றின் உறுப்பினர்களுக்கு எளிதில் அணுக வசதியாகவும், மக்களாட்சி முறையில் கட்டுப்படுத்தப்படுவதாலும், மக்களுக்கு தேவையான கடன்களை எளிதாகவும், திறம்படவும் வழங்கும் அமைப்புகளாக உள்ளன.

2.4. கடன் கூட்டுறவுகள், வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனங்கள், கூட்டு பங்கு நிறுவனங்கள் மற்றும் தனியார்/ அரசுக்கு சொந்தமான வங்கிகளில் இருந்து வேறுபட்டவை. இவை சேவை நோக்குடன் செயல்பட்டு உறுப்பினர்களால் மக்களாட்சி முறையில் கட்டுப்படுத்தப்படுகின்றன. கடன் கூட்டுறவுச் சங்கங்கள், மாநில அரசால் தனிச் சட்டத்தின்மூலம் அதாவது, 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் மற்றும் வங்கியியல் உரிமம் பெற்ற கூட்டுறவு நிறுவனங்களான மாநில கூட்டுறவு வங்கி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றை பொறுத்தவரை கூடுதலாக வங்கியியல் ஒழுங்குமுறை சட்டம், 1949 ஆகிய சட்டங்கள் மூலம் நெறிப்படுத்தப்படுகின்றன.

2.5. கூட்டுறவுக் கடன் அமைப்புகள் கிராமப்புறக் கூட்டுறவுகள் மற்றும் நகர்ப்புறக் கூட்டுறவுகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. கிராமக் கூட்டுறவுகள் மேலும் குறுகிய காலக் கூட்டுறவு கடன் அமைப்பு மற்றும் நீண்ட காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு என வகைப்படுத்தப்பட்டுள்ளது. நகர்ப்புறக் கூட்டுறவுகள், நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை உள்ளடக்கியது. இவை நகரம் மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள மக்களின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. இவைமட்டுமின்றி, பணியாளர் கூட்டுறவுச் சிக்கன நாணய மற்றும் கடன் சங்கங்கள், அரசு/பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் பணியாளர்களின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. கடன் கூட்டுறவுகளின் விவரங்களை பின்வரும் அட்டவணையிலிருந்து அறிந்துக் கொள்ளலாம்:-

2023 ஏப்ரல் 6]

சங்கங்கள் வகை	எண்ணிக்கை	கிளைகள்
தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி (TNSACB)	1	47
மத்தியக் கூட்டுறவு வங்கிகள் (CCB)	23	924
தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் (PACCS)	4,453	151
தமிழ்நாடு மாநில நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையம்	1	-
நகரக் கூட்டுறவு வங்கிகள் (UCB)	128	191
தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (TNCSADRB)	1	-
தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (PCARDB)	180	-
பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள் (ECS)	1,715	14
நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் (UCCS)	116	27

குறுகிய கால கூட்டுறவுக் கடன் அமைப்பு

2.6. குறுகிய கால கூட்டுறவுக் கடன் அமைப்பானது, கிராம அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும், மத்திய அளவில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும், மாநில அளவில் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியையும் கொண்ட மூன்றடுக்கு அமைப்பாகும். இச்சங்கங்கள் மற்றும் வங்கிகள் முக்கியமாக சிறு, குறு

விவசாயிகள் மற்றும் இதர விவசாயம் அல்லாத பெருமக்களுக்கு தேவையான முதன்மை கடன்களை வழங்குவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இந்த பரந்த கூட்டுறவு கடன் நிறுவன அமைப்பு, விவசாயிகள் தவிர, பெண்கள், மாற்றுத்திறனாளிகள், விதவைகள், ஆதரவற்ற பெண்கள் போன்ற நலிந்த பிரிவினருக்கும் சேவை வழங்குகின்றன.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

2.7. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், ஊரகப் பகுதிகளில் மக்களுக்கு வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாரா நடவடிக்கைகளுக்காக கடன் வழங்கும் கிராமப்புற அளவிலான கூட்டுறவுக் கடன் அமைப்புகள் ஆகும். அனைத்து கிராமப்புற மக்களுக்கும் கடன் வழங்கும் பணியுடன் பல்வேறு சேவைகளை வழங்குவதன்மூலம் கூட்டுறவு இயக்கத்தின் அடையாள முகமாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் திகழ்கின்றன. தமிழ்நாட்டில் மொத்தம் 4,453 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 151 கிளைகளுடன் 12,525 கிராம ஊராட்சிகளில் பரந்து விரிந்த கட்டமைப்புடன் செயல்பட்டு வருகின்றன.


2.8. இவை சங்க உறுப்பினர்களைக் கூட்டுறவுகளின் நிறுவனக்கடன் வழங்கும் அமைப்புடன் இணைத்து மக்களாட்சி தத்துவத்தின் அடிப்படையில் செயல்படுகின்றன. இத்தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் நலிவுற்ற பிரிவினருக்கு முக்கியமாக சிறு, குறு விவசாயிகள் மற்றும் பட்டியலின/பழங்குடியின விவசாயிகளுக்கு அவர்களின் கடன் தேவையைப் பூர்த்தி செய்வதில் கவனம் செலுத்தி வருகின்றன.

2.9. இச்சங்கங்களின் நடைமுறை மூலதனமானது, உறுப்பினர்கள் பங்குத்தொகை, வைப்புகள், கடன்கள், அரசு மானியம் மற்றும் இதர வழிகளில் பெறப்படுகின்றன. இச்சங்கங்கள் தங்களுக்கு தேவையான கடன்களை அதிகளவில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் இருந்து பெற்று வருகின்றன. கடன் வழங்கும் சேவைகளுடன், நியாய விலைக் கடைகள், மருந்தகங்கள், பெட்ரோல் விற்பனை நிலையம் போன்றவற்றை நடத்துவது மட்டுமின்றி, பொதுச் சேவை மையங்கள் மூலம் பொதுமக்களுக்கு அரசின் சேவைகளை வழங்குதல், உரங்களின்

2023 ஏப்ரல் 6]

ரொக்க விற்பனை, வாடிக்கையாளர் பாதுகாப்பு பெட்டக வசதிகள் போன்ற கடன் அல்லாத சேவைகளையும் இச்சங்கங்கள் வழங்கி வருகின்றன.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடு



[*2023 ஏப்ரல் 6*

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை பல்சேவை மையங்களாக மாற்றுதல்

2.10. கிராம மக்களின் பல்வேறு தேவைகளையும் ஒரே கூரையின்கீழ் பூர்த்திசெய்யும் வகையில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், கடன் அல்லாத பிற சேவைகளையும் வழங்குவதன்மூலம் பல்சேவை மையங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகளின் விவரம் பின்வருமாறு:-

- *வேளாண் சேவை மையங்கள், உழவு இயந்திரங்கள் (*Tractor*), சிறு உழவு இயந்திரங்கள் (*Power Tiller*), ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரங்கள், வைக்கோல் கட்டும் இயந்திரங்கள், தானியங்களை பிரித்தெடுக்கும் இயந்திரங்கள், பூச்சிக் கொல்லி மருந்து தெளிப்பான் (*Sprayer*), இடுபொருட்களை ஏற்றிச் செல்ல சுமையுந்துகள் (*Logistic Vehicles*) போன்ற விவசாயக் கருவிகளை விவசாயிகளுக்கு நியாயமான வாடகைக்கு வழங்கி வருகின்றன,*
- *வேளாண் மருத்துவ மையங்கள், மண் மற்றும் நீர் தர பரிசோதனை, மண்ணுக்கு உகந்த ஊட்டச்சத்துகள் மற்றும் மண்ணில் விளைவிக்க தகுந்த பயிர்களின் விவரங்களைப் பரிந்துரைப்பது போன்ற சேவைகளை விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றன,*
- *விவசாய இடுபொருட்களான உரங்கள், விதைகள் போன்றவற்றை விநியோகம் மற்றும் விற்பனை செய்து வருகின்றன,*
- *விவசாயப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான தளவாட வசதிகள்,*
- *அறுவடைக்கு முந்தைய மற்றும் பிந்தைய உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை வழங்குதல்,*
- *விவசாய விளைபொருட்களுக்கு அறிவியல் சார்ந்த கிடங்கு வசதிகளை வழங்குதல்,*
- *புதிய பொது சேவை மையங்களை உருவாக்குதல் மற்றும் தற்போதுள்ள மையங்களை நவீனமயமாக்குதல்,*
- *பொதுச் சேவை மையங்கள், குடிமக்களுக்கு அரசு*


2023 ஏப்ரல் 6]

வழங்கும் சேவைகளை குறிப்பாக வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், ஆதரவற்ற விதவைச் சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ், நிலப் பதிவேடுகள் மற்றும் சமூக நலத் துறையின் சேவைகள் போன்றவற்றை இணைய வழியில் வழங்கி வருகின்றன, மற்றும்

- நியாய விலைக் கடைகளை கிராமப்புற சந்தைகளாக மாற்றுதல்.

2.11. இத்திட்டத்தினைச் செயல்படுத்த, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிலிருந்து (நபார்டு) மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் (4%) நிதி உதவி பெறப்படுகிறது. இதில் 3% வட்டி மானியம் இந்திய அரசின் வேளாண் உட்கட்டமைப்பு நிதியின் (AIF) கீழ் வழங்கப்படுகிறது. 10-3-2023 வரை, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் ரூ.192.08 கோடி மதிப்புள்ள 2,043 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

2.12. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் கடந்த மூன்று ஆண்டுகள் மற்றும் நடப்பு நிதியாண்டு 2022-23-இல் 28-2-2023 வரையிலான செயல்பாடுகள் பின்வருமாறு:-



மத்தியக் கூட்டுறவு வங்கிகள்

2.13. மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தமது செயற்பாட்டுப் பகுதிக்குட்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை உள்ளடக்கிய குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பில் மத்திய அளவிலான கூட்டமைப்பு ஆகும். தமிழ்நாட்டில் 23 மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் நிகர இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன. இவை பங்கு மூலதனம், வைப்புகள் மற்றும் இதர காப்பு நிதிகளை உள்ளடக்கிய சொந்த நிதியிலிருந்தும், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் மூலம் நபார்டு வழங்கும் மறுநிதி உதவியிலிருந்தும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு நிதி உதவி அளித்து வருகின்றன. இவை தவிர, தமது செயற்பாட்டுப் பகுதியில் செயல்பட்டு வரும் அனைத்து கூட்டுறவு நிறுவனங்களுக்கும் நிதியுதவி அளித்து வருகின்றன.

2.14. இந்த 23 மத்திய கூட்டுறவு வங்கிகள் 924 கிளைகளுடன் பொது மக்களுக்கு பல்வேறு வங்கிச் சேவைகளை வழங்குகின்றன. தமிழ்நாட்டில், சேலம் மத்திய கூட்டுறவு வங்கி 6-1-1909 இல் தொடங்கப்பட்ட முதல் மத்திய கூட்டுறவு வங்கி ஆகும். மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அட்டவணைப்படுத்தப்பட்ட வணிக வங்கிகளுக்கு இணையாக பின்வரும் நவீன வங்கியியல் வசதிகளை வழங்குகின்றன:

1. *மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவை* (CORE Banking Solutions)
2. *பணப்பரிமாற்ற வசதிகள் - நிகழ்நேர மொத்த தீர்வு மற்றும் தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம்* (RTGS / NEFT).
3. *காசோலை சரிபார்ப்பு முறை* (Cheque Truncation System)
4. *தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள்* (ATM)
5. *நடமாடும் ஏடிஎம்கள்* (Mobile ATM)
6. *நடமாடும் வங்கியியல் சேவை* (Bank on Wheels)
7. *ரூபே பற்று அட்டைகள் மற்றும் ரூபே உழவர் கடன் அட்டைகள்*
8. *அலைபேசி வங்கியியல் சேவை* (Mobile Banking)

2023 ஏப்ரல் 6]

9. உடனடி கட்டண சேவை (IMPS) (அனைத்து மத்திய கூட்டுறவு வங்கிகளில்)

10. ஆதார் கட்டண இணைப்பு முறை (Aadhaar Payment Bridge System)


11. சிறிய தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் மூலம் சேவை (Micro ATMs)

12. ஆதார் அடிப்படையிலான பணம் வழங்குச் சேவைகள் (Aadhaar enabled Payment System)

13. ஒருங்கிணைந்த கட்டண முறை (UPI)-கோயம்புத்தூர் மத்தியக் கூட்டுறவு வங்கியில் மட்டும்

14. விரைவு தகவல் குறியீடு (QR code) அடிப்படையிலான பணப் பரிமாற்ற சேவை

2.15. மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கடந்த மூன்று ஆண்டுகள் மற்றும் நடப்பு நிதியாண்டு 2022-23 இல் 28.2.2023 வரையிலான செயல்பாடுகள் பின்வருமாறு:-



	2019-20	2020-21	2021-22
உறுப்பினர் பங்குமூலதனம்	1489	1677.04	1720.81
மாநில அரசின் பங்கு	70.04	62.56	61.81
வைப்புகள்	30316	31922.52	35759.06
கடன்கள்	8478.87	6401.35	12354.48

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 6

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி

2.16. நாட்டிலேயே மிகவும் பழமையான வங்கிகளில் ஒன்றாக தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியானது 1905 ஆம் ஆண்டு கூட்டுறவு வங்கியாக செயல்படத் துவங்கியது. இவ்வங்கி மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியாக வளர்ந்து, வேளாண்மை மற்றும் வேளாண் சாராக் கடன்களை வழங்குவதில் முக்கியப் பங்காற்றி மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பாகவும் உள்ளது. இவ்வங்கியானது நபார்டு வங்கியிடமிருந்து மறுநிதியுதவி பெற்று, மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு குறுகிய பருவகால வேளாண்மை நடவடிக்கைகளுக்கான கடன்கள், மத்திய கால வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த முதலீட்டுக் கடன்கள் மற்றும் நெசவாளர் கடன்களை வழங்கி வருகின்றது. இது மட்டுமின்றி, மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு பொதுவான வியாபாரத்திற்கும், நடைமுறை மூலதனத்திற்கும், சர்க்கரை ஆலைகளுக்கும் காசுக்கடன் வழங்கி வருகின்றது.

2.17. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மற்றும் "கோ-ஆப்டெக்ஸ்" உள்ளிட்ட தலைமைக் கூட்டுறவு நிறுவனங்களின் பொதுவான வங்கியியல் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு நேரடி நிதி உதவியினை இவ்வங்கி அளித்து வருகிறது.

2.18. தமிழ்நாடு மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கி, கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு மற்ற மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுடன் இணைந்து கூட்டமைப்பு அடிப்படையில் கடன் வசதிகளை வழங்குகின்றது. இந்திய ரிசர்வ் வங்கியால் அனுமதிக்கப்பட்ட பாரத ஸ்டேட் வங்கியை தலைமை வங்கியாகக் கொண்ட தேசிய உணவுக் கடன் கூட்டமைப்புத் திட்டத்தில் பங்கேற்பதோடு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு ரூ.1,000 கோடி கடன் வசதியினை வழங்கி உள்ளது.

2.19. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி பின்வரும் நவீன வங்கியியல் சேவைகளை வழங்குகிறது:-

1. மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவை (CORE Banking Solutions)

2. பணப்பரிமாற்ற வசதிகள் - நிகழ்நேர மொத்த தீர்வு மற்றும் தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம் (RTGS / NEFT).

3. காசோலை சரிபார்ப்பு முறை (Cheque Truncation System)

4. தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் (ATM)

5. நடமாடும் வங்கியியல் சேவை (Bank on Wheels)

6. ரூபே பற்று அட்டைகள்

7. இணைய வங்கியியல் சேவை (Internet Banking)

8. அலைபேசி வங்கியியல் சேவை (Mobile Banking)

9. உடனடி கட்டண சேவை (IMPS)

10. பொது நிதி மேலாண்மை அமைப்பு (Public Financial Management System)

11. ஆதார் கட்டண இணைப்பு முறை (Aadhaar Payment Bridge System)

12. சிறிய தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் மூலம் சேவை (micro ATMs)

13. ஆதார் அடிப்படையிலான பணம் வழங்குச் சேவைகள் (Aadhaar enabled Payment System)


14. ஒருங்கிணைந்த கட்டண முறை (UPI)

15. பாரத் கட்டணம் செலுத்தும் முறை (Bharath Bill Payment System)

16. விரைவு தகவல் குறியீடு (QR code) அடிப்படையிலான பணப் பரிமாற்ற சேவை

2.20. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் கடந்த மூன்று ஆண்டுகள் மற்றும் நடப்பு நிதியாண்டு 2022-23 இல் 28.2.2023 வரையிலான செயல்பாடுகள் பின்வருமாறு:-

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் செயல்பாடுகள்



	2019-20	2020-21	2021-22	2022-23 (28.02.2023 வரை) (தோராயமாக)
உறுப்பினர் பங்கு மூலதனம்	314.52	363.56	493.84	544.39
மாநில அரசு பங்கு	20.26	20.26	20.26	20.26
ஒதுக்கீடுகள் மற்றும் உபரி	622.70	960.77	1141.00	1194.68
வைப்புகள்	11081.93	10679.41	12819.62	11522.99
கடன்கள்	4199.40	9567.30	13530.12	14433.18
நிகர இலாபம்	82.15	147.78	229.23	143.99

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

2.21. உழவர் கடன் அட்டை திட்டம் – பயிர்க்கடன்

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை."


கலைஞர் உரை: *பல தொழில்களைச் செய்து சுழன்று கொண்டிருக்கும் இந்த உலகம், ஏர்த் தொழிலின் பின்னேதான் சுற்ற வேண்டியிருக்கிறது. எனவே, எவ்வளவுதான் துன்பம் இருப்பினும் உழவுத் தொழிலே சிறந்தது.*

(குறள்-1031)

2023 ஏப்ரல் 6]

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விவசாயிகளுக்கு உழவர் கடன் அட்டை திட்டத்தின்கீழ் 7% வட்டி விகிதத்தில் குறுகிய காலப் பயிர்க்கடன்களை வழங்கி வருகின்றன. இப்பயிர்க்கடன்கள் குத்தகை விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாய தொழிலாளர்களுக்கும் வழங்கப்படுகின்றன. உரிய தவணை காலத்திற்குள் கடனை திருப்பி செலுத்தும் விவசாயிகள் கடனுக்கான வட்டித் தொகையினை செலுத்தத் தேவையில்லை. அரசு, இவ்வட்டிச் சுமையினை ஏற்றுக்கொண்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு விவசாயிகள் சார்பாக வழங்குகிறது. வெவ்வேறு வகையான பயிர்களுக்கு, சாகுபடி பரப்பளவிற்கேற்ப மாநில தொழில்நுட்ப குழுவால் அங்கீகரிக்கப்பட்ட அளவிற்கு பயிர்க் கடன் வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் பயிர்க் கடன்களுக்கு இந்திய ரிசர்வ் வங்கி விதிமுறைகளின்படி ரூ.1.60 இலட்சம் வரை எவ்வித பிணையமும் இன்றியும், ரூ.1.60 இலட்சத்துக்கு மேற்பட்டு பிணையத்தின் பேரிலும் கடன்கள் வழங்கப்படுகின்றன. பயிர்க் கடன் ரொக்கப் பகுதி மற்றும் பொருள் பகுதிகளை அதாவது ரொக்கத்துடன் சேர்த்து விதைகள், உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை உள்ளடக்கியதாகும்.

2.22. தமிழ்நாடு கூட்டுறவுத் துறையின் வரலாற்றில் முதன்முறையாக 2021-22 ஆம் ஆண்டில் பயிர்க் கடன் வழங்குதலில் ரூ.10,000 கோடி எனும் இலக்கைத் தாண்டி ரூ.10,292.02 கோடி அளவிற்கு பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டில் 4,430 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 47 நகர கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 22 பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. நிகழாண்டில் 24-3-2023 முடிய, ஆண்டுக் குறியீடான ரூ.12,000 கோடியை கடந்து ரூ.13,119.12 கோடி 17.05 இலட்சம் விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்மூலம் வழங்கப்பட்டு இச்சாதனை முந்தப்பட்டுள்ளது.



	2012-13	2013-14	2014-15	2015-16	2016-17	2017-18	2018-19	2019-20	2020-21	2021-22	2022-23 (15.03.2023)
மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை	1020845	1046839	1036859	1074419	762772	1063821	1237393	1302412	1237448	1484052	1669364
மொத்த பயிர்க்கடன்	406944	471616	527991	586831	422798	622027	812768	935213	950413	1029202	1283521
மொத்த பயிர்க்கடனில் புதிய உறுப்பினர்கள் எண்ணிக்கை	204184	203344	177780	141309	106918	163365	195650	142725	157448	280525	227967
மொத்த பயிர்க்கடனில் புதிய உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட தொகை	80486	90830	85632	74081	59450	89923	119612	97289	112468	173062	159649

2.23. காவிரி டெல்டா மாவட்டங்களில், 2021-22 ஆம் ஆண்டில், 2,39,338 விவசாயிகள் ரூ.1,439.60 கோடி கடன் பெற்று பயனடைந்துள்ளனர். 2022-23 ஆம் ஆண்டில் 2,77,036 விவசாயிகளுக்கு ரூ.1,799.13 கோடி அளவிற்கு 24.3.2023 வரை கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. பயிர்க்கடன் வழங்குவதில் மாவட்டங்களுக்கு இடையேயான மற்றும் மாவட்டத்திற்கு உள்ளேயே ஏற்படும் முரண்பாடுகளைக் களைய முதல் முறையாக மாநிலம் முழுவதற்கும் பயிர்க் கடன் வழங்குவதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 6]

உழவர் கடன் அட்டை திட்டம் - கால்நடை வளர்ப்புக் கடன்

2.24. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் 2021 ஆம் ஆண்டிலிருந்து உழவர் கடன் அட்டை திட்டத்தின் கீழ் விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளுக்காக, கால்நடை வளர்ப்போரின் நடைமுறை மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, 7% வட்டி விகிதத்தில், கால்நடை பராமரிப்பு கடனை வழங்கி வருகின்றன. பெற்ற கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளிடமிருந்து வட்டி ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. இந்த வட்டி இழப்பானது அரசால் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு ஈடு செய்யப்படுகின்றது. உழவர் கடன் அட்டை திட்டத்தின்கீழ் வட்டி ஊக்கத் தொகை பெறுவதற்கான உச்சபட்ச கடன் வரம்பாக ரூ.3.00 இலட்சத்திற்குட்பட்டு, கால்நடை வளர்ப்புக் கடனாக ரூ.2.00 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. 2021-22 ஆம் ஆண்டில், 44,531 விவசாயிகள் ரூ.218.09 கோடி அளவிற்கு கடன் பெற்று பயனடைந்துள்ளனர். 2022-23 ஆம் ஆண்டில் 24.3.2023 வரை 2,74,899 விவசாயிகளுக்கு ரூ.1,272.23 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

தானிய ஈட்டுக் கடன்

2.25. தமிழ்நாட்டில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் 4,14,100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 3,883 கிடங்குகளைக் கொண்டுள்ளது. அவற்றில் 1,050 கிடங்குகள் ஏற்கெனவே கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தின் அங்கீகாரம் பெற்று பதிவு செய்யப்பட்டுள்ளன. கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டும் விவசாய விளைபொருட்களுக்கு நல்ல விலையினை பெற்றுத் தரவும் சிறு, குறு விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக தானிய ஈட்டுக் கடன்களை வழங்கி வருகின்றன. இது விவசாயிகள் தங்களின் விளைபொருட்களை வைத்து கடன் பெறுவதற்கும், அதே நேரத்தில் விவசாய விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும் போது அவற்றை விற்றுப் பயனடைவதற்கும் உதவுகிறது.

2021-22 ஆம் ஆண்டில் ரூ.270.87 கோடி அளவிற்கு கடன் பெற்று 8,054 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும் 2022-23 ஆம் ஆண்டில் 28-2-2023 வரை 6,203

விவசாயிகளுக்கு ரூ.252.11 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

நலிவடைந்தவர்களை முன்னேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

சுய உதவிக்குழுக் கடன்

2.26. சுய உதவிக் குழு இயக்கமானது ஏழை மக்களுக்கு நிதி உதவி வழங்குவதிலிருந்து, சமூக முன்னேற்றத்திற்கான இயக்கமாக வளர்ந்துள்ளது. முக்கியமாக ஊரகப் பெண்களின் வறுமையை ஒழிக்கும் அரசின் கொள்கை முடிவுகளில் ஒரு முக்கியப் பகுதியாக விளங்குகிறது. 2021-22 ஆம் ஆண்டில் ரூ.681.65 கோடி அளவிற்கு 19,296 சுய உதவிக் குழுக்கள் கடன் பெற்றுள்ளனர்.

சுய உதவிக் குழு கடன் வரம்பினை அதிகரிக்கும் பொருட்டு, 2020-21 ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சத்திலிருந்து ரூ.12.00 இலட்சமாகவும் மற்றும் 2021-22 ஆம் ஆண்டில் ரூ.12.00 இலட்சத்திலிருந்து ரூ.20.00 இலட்சமாகவும் சுய உதவிக் குழு கடன் உச்சவரம்பு உயர்த்தப்பட்டுள்ளதன்மூலம் கடன் வரம்பு இரண்டு மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. 2022-23 ஆம் ஆண்டில் 28-2-2023 வரை ரூ.1,505.36 கோடி அளவிற்கு 40,838 சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு வழங்கப்படும் கடன்கள்

2.27. பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதில் முன்னேற்றம் இருந்தபோதிலும் சமூக இழிவு மற்றும் ஆணாதிக்க சமூக விதிமுறைகள் காரணமாக, கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், சொத்துகளின் உரிமையை அணுகுவதில் இன்னல்களை எதிர்கொள்கின்றனர். இதனால் அவர்கள் வறுமை மற்றும் சமூகப் புறந்தள்ளப்படுதலுக்கு ஆளாகின்றனர். கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் சமூகப் பொருளாதார நலனை மேம்படுத்துதல், நிதிச் சுதந்திரம் அளித்தல் மற்றும் சுய சார்படையச் செய்தல் போன்றவற்றைக் கருத்தில்கொண்டு குறைந்த வட்டி விகிதத்தில் அதாவது, ஆண்டிற்கு 5% வட்டி விகிதத்தில் இக்கடன் வழங்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 6]

2021-22 ஆம் ஆண்டில் 2,436 கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ரூ.4.36 கோடி அளவிற்கு கடன் பெற்றுள்ளனர். 2022-23 ஆம் ஆண்டில் 28-2-2023 வரை 5,366 கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு ரூ.10.77 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

மாற்றுத் திறனாளிகளுக்கான கடன்

2.28. மாற்றுத்திறனாளிகளின் நிலையை மேம்படுத்தும் பொருட்டு கடன் கூட்டுறவு நிறுவனங்கள் வட்டி இல்லாக்கடன் (அதாவது உரிய காலத்தில் கடனைத் திருப்பி செலுத்துபவரிடம் வட்டி வசூலிப்பதில்லை) வழங்கி வருகின்றன. இது மாற்றுத்திறன் குறைபாடுகளின் விளைவுகளைக் குறைத்து அவர்களின் சமூக மற்றும் உளவியல் மறுவாழ்விற்கு உதவும். மேலும், அவர்களின் பொருளாதாரத் திறனை மேம்படுத்தும்.

2.29. மாற்றுத் திறனாளிகளுக்கு கடன் வழங்குவதில் சிறப்பாக செயல்பட்டதற்காக தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி 'சிறந்த கடன் வழங்கும் நிறுவனம்' (Best Channelising Agency) *என்ற ஒன்றிய அரசின் விருதினை 2005-06 ஆம் ஆண்டிலிருந்து ஐந்து முறை பெற்றுள்ளது.*

2021-22 ஆம் ஆண்டில் 7,348 மாற்றுத் திறனாளிகள் ரூ.34.59 கோடி அளவிற்கு கடன் பெற்றுள்ளனர். 2022-23 ஆம் ஆண்டில் 28.2.2023 வரை ரூ.65.30 கோடி கடன் பெற்று 14,209 மாற்றுத் திறனாளிகள் பயனடைந்துள்ளனர். கடந்த ஆண்டைவிட நடப்பாண்டில் பயனாளிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ இரு மடங்காக அதிகரித்துள்ளது.

பயிர்க் காப்பீடு

2.30. விவசாயிகள் சாகுபடி செய்த பயிர்களுக்கு எதிர்பாராத நிகழ்வுகளால் சேதம் ஏற்படும்போது இழப்பீட்டுத் தொகை வழங்கி, விவசாயிகளின் நிலையான வருமானத்திற்கு வழிவகை செய்யும் வகையில் மாநிலத்தில் 'பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம்' (PMFBY) *2016 ஆம் ஆண்டு ரபி பருவம் முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம் காரீஃப் 2020 பருவம் முதல் திருத்தப்பட்ட பிரதம மந்திரி பயிர்க் காப்பீடு திட்டமாக* (RPMFBY) *சில திருத்தங்களுடன் கூட்டுறவு வங்கிகள் மற்றும் வணிக வங்கிகள்மூலம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.*

2021-22 ஆம் ஆண்டில், 3,26,007 விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக சேர்க்கப்பட்டு, ரூ.32.32 கோடி காப்பீட்டுக் கட்டணம் வசூலிக்கப்பட்டு தொடர்புடைய காப்பீட்டு நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில், 28-02-2023 வரை 3,36,229 விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக சேர்க்கப்பட்டு, ரூ.20.60 கோடி காப்பீட்டுக் கட்டணம் வசூலிக்கப்பட்டு தொடர்புடைய காப்பீட்டு நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

2016-17 ஆம் ஆண்டு முதல் பயிர்க் காப்பீடு செய்த விவசாயிகளுள் 28.02.2023 வரை 30,59,954 விவசாயிகளுக்கு ரூ.6,117.94 கோடி மகசூல் இழப்புக்கான இழப்பீட்டுத் தொகை கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை கணினிமயமாக்கல்

2.31. இந்திய அரசு திட்டத்தின்கீழ் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் கணினிமயமாக்கல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து 4,453 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும் ஒரே கட்டமாக கணினிமயமாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்திய அரசும், தமிழக அரசும் நிதி ஒதுக்கீடு செய்தவுடன், இத்திட்டம் செயல்படுத்தப்படும். கணினிமயமாக்கலால், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் செயல்பாடுகள் வலுப்பெறுவதுடன், பயனுள்ள வெளிப்படைத் தன்மையான செயல்பாட்டையும், கண்காணிப்பையும் கொண்டு, பொது மக்களுக்குப் பெரிய அளவில் பயன்படும் விதமாகவும் அமையும்.

பொது நகைக் கடன் தள்ளுபடித் திட்டம் 2021

2.32. மாநில அரசு ரூ.6,000 கோடி (தோராயமாக) பொது நகைக் கடனைத் தள்ளுபடி செய்துள்ளது. இதுவரை ரூ.4,818.88 கோடி மதிப்பிலான நகைக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. நகைக் கடன் தள்ளுபடி கோரிக்கைக்காக கூட்டுறவு நிறுவனங்களுக்கு அரசு இதுவரை ரூ.2,215.58 கோடியை வழங்கியுள்ளது.

2023 ஏப்ரல் 6]

சுயஉதவிக் குழுக் கடன் தள்ளுபடித் திட்டம் 2021

2.33. மாநில அரசு, மகளிர் சுயஉதவி குழுக்களுக்கான கடன் தொகை ரூ.2,755.99 கோடியை (தோராயமாக) தள்ளுபடி செய்ததன்மூலம் 1,17,617 குழுக்களில் உள்ள 15,88,309 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர். அரசு, தள்ளுபடித் தொகையில் கூட்டுறவு நிறுவனங்களுக்கு இதுவரை ரூ.1,200 கோடி வழங்கியுள்ளது.

நீண்டகால கூட்டுறவுக் கடன் அமைப்பு

2.34. நீண்டகாலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு, மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியும், வட்ட/வட்டார அளவில் 180 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளையும் உள்ளடக்கியதாகும்.

2.34.1. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி: தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி 12-11-1929-இல் துவக்கப்பட்டு, மாநிலம் முழுவதும் 21 மண்டல அலுவலகங்கள் மற்றும் 8 விரிவாக்கக் கிளைகளுடன் செயல்பட்டு வருகின்றன. 28-02-2023-இல், வங்கியின் பங்கு மூலதனம் ரூ.53.28 கோடி ஆகும். மேலும் 2022-23 ஆம் ஆண்டில், 28-02-2023 வரை ரூ.196.01 கோடி அளவிற்கு வைப்புகள் சேகரிக்கப்பட்டு, ரூ.390.14 கோடி அளவிற்கு நகைக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

28-02-2023 தேதியில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் செயல்பாடுகள்

(ரூ. கோடியில்)

உறுப்பினர் எண்ணிக்கை	வைப்புத் தொகை நிலுவை	கடன் நிலுவை
182	201.61	924.38

2.34.2. தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்: மாநிலத்தில் 180 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. 28.1.1925 இல் மாநிலத்தின் முதல் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியாக

[*2023 ஏப்ரல் 6*

காஞ்சிபுரம் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி பதிவு செய்யப்பட்டது. இவ்வங்கிகள் தற்போது, தங்களிடம் உள்ள சொந்த நிதியிலிருந்தும், தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதியுதவி பெற்றும், நகைக் கடன்களை வழங்கி வருகின்றன. இவ்வங்கிகளால் 2022-23 ஆம் ஆண்டில் 28.02.2023 வரை ரூ.1,236.33 கோடி அளவிற்கு நகைக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

28-02-2023 தேதியில் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் செயல்பாடுகள்

(ரூ. கோடியில்)

உறுப்பினர் எண்ணிக்கை	பங்குத் தொகை	வைப்புத் தொகை நிலுவை	கடன் நிலுவை
14,26,519	*62.96*	*81.80*	*935.44*

நகரக் கூட்டுறவு கடன் அமைப்பு

2.35. மாநிலத்தில் நகரக் கூட்டுறவு கடன் அமைப்பு, மாநில அளவில் தமிழ்நாடு நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையத்தையும், நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் செயல்படும் 128 கூட்டுறவு நகர வங்கிகள் மற்றும் 116 நகரக் கூட்டுறவு கடன் சங்கங்களையும் உள்ளடக்கியதாகும்.

2.35.1. தமிழ்நாடு நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையம்: *மாநிலத்தில் நகரக் கூட்டுறவுக் கடன் இயக்கத்தின் வளர்ச்சியினை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாகவும், நகர்ப்புற மக்களின் கடன் தேவைகளை நிறைவு செய்யும் பணியில் நகரக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழிகாட்டியாகவும், தமிழ்நாடு நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையம் 1988 முதல் செயல்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையம் நகரக் கூட்டுறவு வங்கிகளுக்கு, நிர்வாகம், பணியாளர்களுக்குப் பயிற்சியளித்தல் மற்றும் வங்கிகள் நவீன வங்கியியல் தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றில் உதவி புரிந்து வருகிறது. தமிழ்நாடு மாநில நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையம், அனைத்து நகரக் கூட்டுறவு வங்கிகளும் இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி செயல்படுவதை வழிநடத்தும் அமைப்பாக திகழ்கிறது.*

2023 ஏப்ரல் 6]

இந்த இணையமானது நகரக் கூட்டுறவு வங்கிகளில், மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவையினை நடைமுறைப்படுத்துவதை ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருகிறது. நகரக் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பங்களிப்பாக பெறப்படும் தொகையைக் கொண்டு நகரக் கூட்டுறவு வங்கிகளின் வளர்ச்சி நிதி ஏற்படுத்தப்பட்டு, இந்நிதியை இணையம் பராமரித்து வருகிறது. இந்நிதியின்மூலம் நலிவுற்ற நகரக் கூட்டுறவு வங்கிகள், போதுமான நிதி மூலதனத்தை பேணுவதற்கு நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையம் உதவுகிறது.

2.35.2. நகரக் கூட்டுறவு வங்கிகள்: *நகரக் கூட்டுறவு வங்கிகள், நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வங்கிச் சேவைகள் மற்றும் கடன் வசதிகளை அளித்து வருகின்றன. மாநிலத்தில் தற்போது 128 நகரக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் பெரிய காஞ்சிபுரம் நகரக் கூட்டுறவு வங்கி 8-10-1904 இல் பதிவு செய்யப்பட்ட முதல் நகரக் கூட்டுறவு வங்கியாகும்.*

இவ்வங்கிகள், பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, வீடு கட்டுதல், வணிகம் மற்றும் உறுப்பினர்களின் அவசர மற்றும் சொந்த தேவைகளுக்காக நகைக் கடன் உள்ளிட்ட இதர பண்ணை சாரா காரியங்களுக்காக கடன் வசதிகளை அளித்து வருகின்றன.

வாடிக்கையாளர்களுக்கு நவீன வங்கியியல் சேவையினை அளிப்பதற்காக நகரக் கூட்டுறவு வங்கிகளில், மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வங்கிகளால் 2021-22 ஆம் ஆண்டில் 5,71,400 உறுப்பினர்களுக்கு ரூ.7,258.44 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. 2022-23 ஆம் ஆண்டில் 28-02-2023 வரை 7,06,127 உறுப்பினர்களுக்கு ரூ.6,258.95 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இக்கடன், 14,855 சிறு வணிகர்களுக்கு வழங்கப்பட்ட ரூ.40.13 கோடியையும் உள்ளடக்கியதாகும். இதன்மூலம், அதிக வட்டியில் கடன் வழங்கும் தனியாரிடமிருந்து பல சிறு வணிகர்கள் கடன் பெறுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 6

நகரக் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகள்

(ரூ. கோடியில்)

நிதி ஆண்டு	உறுப்பினர்கள்	பங்கு மூலதனம்	வைப்புகள் நிலுவை	கடன் நிலுவை
2022-23 (28-02-2023 வரை)	20,50,797	326.24	6,994.92	4,453.22

2.36. நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்: தமிழ்நாட்டில் துரிதமான நகரமயமாக்கலால், நகர்ப்புறங்களில் செயல்பட்டு வந்த சில தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக்கடன் சங்கங்கள், வேளாண் சார்ந்த கடன்களின்மூலம் பெறப்படும் வருவாய் குறைவை எதிர்கொள்வதால், நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களாக மாற்றம் செய்யப்பட்டு தொடர்ந்து அப்பகுதியில் வசிக்கும் உறுப்பினர்களுக்கு கடன் வழங்கி வருகின்றன. நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் 116 நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தூத்துக்குடி மாவட்டத்தில் செயல்பட்டுவரும் குலசேகரப்பட்டினம் நகரக் கூட்டுறவுக் கடன் சங்கம் 5-2-1922 இல் பதிவு செய்யப்பட்ட முதல் நகரக் கூட்டுறவுக் கடன் சங்கமாகும்.

இச்சங்கங்கள், பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, சிறு வணிகர்கள், கைவினைக் கலைஞர்கள் மற்றும் நடுத்தர வருவாய் பிரிவினருக்கு, வீட்டுவசதிக் கடன், வணிகக்கடன் மற்றும் இதர பண்ணைசாராக் கடன்களை வழங்கி வருகின்றன.

இச்சங்கங்களால் 2021-22 ஆம் ஆண்டில் 1,44,629 உறுப்பினர்களுக்கு ரூ.1,163.13 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. 2022-23 ஆம் ஆண்டில் 28-02-2023 வரை 2,23,553 உறுப்பினர்களுக்கு ரூ.1,648.74 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களால் நகர்ப்புறத்திலுள்ள சிறு வணிகர்களுக்கு ரூ.6.29 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. 51 நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பயிர் கடன் வழங்கி வருகின்றன.

2023 ஏப்ரல் 6]

நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் செயல்பாடுகள்

(ரூ. கோடியில்)

நிதி ஆண்டு	உறுப்பினர்கள்	பங்கு மூலதனம்	வைப்புகள் நிலுவை	கடன் நிலுவை
2022-23 (28-02-2023 வரை)	5,01,853	44.98	1,637.03	1,438.36

2.37. பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள்: *தமிழ்நாட்டில் 1,715 பணியாளர் கூட்டுறவுச் சிக்கன மற்றும் கடன் சங்கங்கள் மாநில மற்றும் மத்திய அரசுப் பணியாளர்கள், அரசு சார்ந்த மற்றும் தனியார் நிறுவனங்களின் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் முதன்மை நோக்கங்கள் பணியாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை உருவாக்குவதும் நியாயமான வட்டி விகிதத்தில் அவர்களுக்கு கடன்கள் வழங்குவதும் ஆகும். இச்சங்கங்கள் 28.02.2023 அன்றுள்ளபடி ரூ.1,923.82 கோடி உறுப்பினர் பங்குத்தொகை மற்றும் ரூ.14,248.30 கோடி நடைமுறை மூலதனத்துடனும் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களால் 2022-23 ஆம் ஆண்டில் 28.02.2023 வரை ரூ.10,583.76 கோடி அளவிற்கு 2,16,352 உறுப்பினர்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இச்சங்கங்களில் முழுமையான கணினிமயமாக்கல்* (End-to-end computerization) *முன்னோட்ட செயலாக்கம் முடிக்கப்பட்டுள்ளது. இது விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.*

பணியாளர் கூட்டுறவு சிக்கன நாணயச் சங்கங்களின் செயல்பாடுகள்

(ரூ. கோடியில்)

நிதி ஆண்டு	உறுப்பினர்கள்	வைப்புத் தொகை	கடன் நிலுவை
2022-23 (28-02-2023 வரை)	10,21,216	5,561.24	16,277.54

[2023 ஏப்ரல் 6

இயல் – 3

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

முன்னுரை

3.1. தமிழ்நாட்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் அமைப்பு இரண்டடுக்கு அமைப்பாக உள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மாநில அளவிலான தலைமைச் சங்கமாகச் செயல்பட்டு வருகிறது. 113 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வட்ட அளவில் செயல்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய டெல்டா மாவட்டங்களிலுள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு மண்டல அளவிலான இணையமாக செயல்பட்டு வருகிறது. நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் நீலகிரி மாவட்ட விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்வதோடு இதர சேவைகளையும் வழங்கி வருகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (TANFED)

3.2. 1959-ல் துவக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் செயல் எல்லையாக கொண்ட, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், 18 மண்டல அலுவலகங்களுடன் செயல்பட்டு வருகிறது. உரம் மற்றும் இதர இடுபொருட்களின் விநியோகத்தினை, வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மேற்கொண்டு வருகிறது.

3.3. **உரங்கள்:** *கலப்பு உர அலகு 1971 ஆம் ஆண்டு திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அருகிலுள்ள பாமணியில் நிறுவப்பட்டது. இதில் குருணை வடிவிலான கலப்பு உரங்கள் தயாரிக்கப்பட்டு "பாமணி" என்ற வர்த்தக பெயரில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சராசரியாக நாள் ஒன்றுக்கு 150 மெ.டன் கலப்பு உரம் தயாரிக்கப்படுகிறது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் கலப்பு உர அலகுகள் மதுரை, வேலூர், திருச்சி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் அமைந்துள்ளன.*

2023 ஏப்ரல் 6]

பாமணி உட்பட இத்தயாரிப்பு அலகுகளின் ஒட்டுமொத்த ஆண்டு உற்பத்தி 4,62,100 மெ.டன் மற்றும் புரள் வணிகம் ரூ.943.96 கோடி ஆகும்.

3.4. பயிர்களில் ஏற்படும் நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளை களைந்து உற்பத்தித்திறனை அதிகரிக்க, 2021 ஆம் ஆண்டில் திண்டுக்கல் மாவட்டம், எரியோடில் புதிய உரக் கலவை ஆலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவைகளில் தயாரிக்கப்படும் கலவை உரம் 'பாமணி' என்ற பெயரிலேயே விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது, உர விற்பனையில் கூட்டுறவின் பங்கு 25% ஆகும்.

3.5. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் உர விநியோகம் மற்றும் விற்பனையை 2% விளிம்புத் தொகையில் மட்டுமே மேற்கொண்டு வருகிறது. குறைந்த அளவு இலாபம் இருந்தபோதிலும் விவசாயிகள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கவும் உர விற்பனை சந்தையில் விவசாயிகளுக்கு சாதகமான சூழ்நிலையை உறுதிபடுத்தவும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் உர விற்பனையில் ஈடுபட்டு வருகிறது.

(மெ.டன்னில்)
(ரூ. கோடியில்)

வருடம்	யூரியா	டிஏபி	எம்ஓபி	காம்ப்ளக்ஸ்	மற்றவை	மொத்த மதிப்பு
2017-18	110801	70805	47251	76548	26652	442.60
2018-19	114403	78692	54536	86778	23131	583.72
2019-20	139708	68756	45518	88445	21812	558.00
2020-21	145739	82299	53471	106738	35122	648.32
2021-22	128415	70824	51125	161027	25371	821.59
2022-23 (28-02-2023 வரை)	169805	100364	39521	130761	21649	943.96

3.6. வேப்பந்தூள், வேப்பம்பிண்ணாக்கு, நுண்ணூட்டச்சத்து கலவைகள், உயிரி பூச்சிக்கொல்லிகள் மற்றும் உயிரி உரங்கள் ஆகியவை உற்பத்தி செய்து விற்பனையும் மேற்கொண்டு

வருகிறது. இவற்றை தவிர, தொழு உரத்தினை பெரு நகர சென்னை மாநகராட்சியிடமிருந்தும், மண்புழு தொழு உரத்தினை கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிடமிருந்தும் கொள்முதல் செய்து, விவசாயிகளுக்கு இணையம் விநியோகம் செய்து வருகிறது. பயிர்களுக்குத் தேவையான நுண்ணூட்டச் சத்துகளை திண்டுக்கல் மாவட்டத்தில் எரியோட்டில் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் விவரம் பின்வருமாறு:—

நுண்ணூட்டச் சத்துக் கலவை	பயிர்களின் பெயர்
பாமினி மேக்ஸ் – கோகோமின்	தேங்காய்
பாமினி மேக்ஸ் - வெஜ்மின்	காய்கறி
பாமினி மேக்ஸ் - நெல்மின்	நெல்
பாமினி மேக்ஸ் - சுகர்மின்	கரும்பு
பாமினி மேக்ஸ் - பனானாமின்	வாழை

3.7. சந்தைப்படுத்துதல்:- தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், அரசின் விவசாய விளைபொருட்களுக்கான ஆதார விலை திட்டத்தில் தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை இணையத்தின் முகவராக தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகிறது. 2022-23 ஆம் ஆண்டில், ஆதார விலை திட்டத்தின்கீழ் அரவைக் கொப்பரை 1,083 மெ.டன் மதிப்பு ரூ.12.04 கோடிக்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

3.8. வேளாண் விளைபொருட்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுடன் கூட்டு முயற்சிமூலம் இணைந்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. போளூர் மற்றும் செஞ்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்களிலிருந்து நெல், திருமயம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திடமிருந்து கருப்பு கவுனி, பழனி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திடமிருந்து கருப்பு உளுந்து, பவானி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திலிருந்து மசூர் பருப்பு,

2023 ஏப்ரல் 6]

உடுமலைப்பேட்டை மற்றும் சத்தியமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிலிருந்து கொள்ளு, உடுமலைப்பேட்டை மற்றும் தாராபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிலிருந்து பச்சைப் பயறு ஆகியவை நாளது தேதிவரை ரூ.80.00 இலட்சம் மதிப்பிலான வேளாண் விளைபொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

3.9. **உரிமம்/சான்றிதழ்:** இவ்விணையம்மூலம் ஏற்றுமதி/இறக்குமதி வாய்ப்பினைப் பயன்படுத்தும் நோக்கில் IEC, ISO 2015, APEDA, Spices Board சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ளன. கருப்பு கவுனி அரிசி விநியோகம் செய்வதற்கு FSSAI தரச் சான்றிதழும் பெறப்பட்டுள்ளது.


3.10. **கிடங்குகள்:** சென்னையில் 3,460 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இரண்டு குளிர்பதனக் கிடங்குகள் மற்றும் 36,140 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 45 கிடங்குகளும் இவ்விணையத்திற்கு சொந்தமாக உள்ளன. தற்போதைய நிதி ஆண்டில் இந்த 45 கிடங்குகளின் பயன்பாடு 51% ஆகும். பேசின்பிரிட்ஜ் மற்றும் கோயம்பேட்டில் அமைந்துள்ள குளிர்பதன கிடங்குகளின் பயன்பாடு முறையே 48% மற்றும் 22% ஆகும்.

3.11. **இதர செயல்பாடுகள்:** 8 பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை அலகுகள், இந்திய எண்ணெய் கழகத்துடன் இணைந்து இவ்விணையம் நடத்தி வருகிறது. அனைத்து மையங்களும் இலாபத்தில் இயங்கி வருகின்றன.

3.12. **புதிய முயற்சிகள்:** புதிய முயற்சியாக கூட்டுறவுச் சங்கங்களின் அனைத்து தயாரிப்புகளையும் விற்பனை செய்வதற்கு மாநில அளவிலான பொதுவான கைபேசி செயலி (Mobile App) உருவாக்கிட இணையம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இவ்விணையம் இ-காமர்ஸ் வலைதளம் ஒன்றினை உருவாக்கிட திட்டமிட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் இணையத்தின் புரள் வணிகம் கீழ்க்கண்டவாறு:-

[2023 ஏப்ரல் 6



3.13. நடப்பு ஆண்டில் உர வணிகத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கினை உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், விதை விற்பனை, உர விற்பனை ஆகியவற்றினை கணிசமாக உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த 3 வருடங்களாக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் தொடர்ந்து நிகர இலாபத்தில் இயங்கி வருகிறது.

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் (TCMF)

3.14. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் 1941 இல் ஆரம்பிக்கப்பட்டு தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள 7 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் இணையமாக செயல்பட்டு வருகிறது. உரம் மற்றும் வேளாண் இடுபொருள் விற்பனையை முதன்மை நோக்குடன் செய்துவரும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 6]

இவ்விணையம், உறுப்பினர்களுக்கு நகைக் கடனும் வழங்கி வருகிறது.

3.15. குறுவை தொகுப்புத் திட்டம்: நடப்பு நிதியாண்டில் மேட்டூர் அணையிலிருந்து வழக்கமாக திறக்கப்படும் ஜுன் 12 ஆம் தேதிக்கு முன்னரே தண்ணீர் திறந்துவிடப்பட்டது. விவசாயிகள் குறுவை சாகுபடிக்கென விவசாய நிலத்தினை தயார் செய்திட ஏதுவாக 24.5.2022 அன்று தண்ணீர் திறந்துவிடப்பட்டது. சென்ற ஆண்டைப் போலவே இவ்வாண்டும் குறுவை தொகுப்புத் திட்டம் கூட்டுறவுகள்மூலம் நடைமுறைப்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இக்குறுவைத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் 8,515.31 மெ.டன் யூரியா, 9,466.02 மெ.டன் டிஏபி, 4,728.14 மெ.டன் எம்ஓபி, 2,02,386 விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது.


(மெ.டன்)

மாவட்டம்	யூரியா	டிஏபி	எம்ஓபி	மொத்தம்
கடலூர்	764.24	849.86	424.26	2038.36
திருச்சி	256.54	285.05	142.53	684.12
தஞ்சாவூர்	2611.88	2903.39	1450.18	6965.44
திருவாரூர்	2217.26	2464.67	1231.40	5913.34
நாகப்பட்டினம்	273.09	304.15	151.41	728.65
அரியலூர்	134.99	150.12	74.92	360.03
மயிலாடுதுறை	2257.31	2508.78	1253.45	6019.54
மொத்தம்	8515.31	9466.02	4728.15	22709.48

3.16. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையத்திற்குச் சொந்தமாக 6,600 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 11 கிடங்குகள் உள்ளன. 2022-23 ஆம் ஆண்டில் (28-02-2023 வரை) இக்கிடங்குகளின் பயன்பாடு 23% ஆகும்.

கடந்த 5 ஆண்டுகளில் இணையத்தின் புரள் வணிகம் கீழ்க்கண்டவாறு:

[2023 ஏப்ரல் 6



3.17. நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் (NCMS): நீலகிரி மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியை செயல் எல்லையாகக் கொண்டு நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் 1935 முதல் இயங்கி வருகிறது. உதகமண்டலத்தில் இச்சங்கத்தின் தலைமை அலுவலகம் உள்ளது. இச்சங்கம் 17 சில்லறை விற்பனை நிலையங்களையும் நடத்தி வருகிறது. விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்களை வழங்குவதும், அவர்களால் விளைவிக்கப்படும் விளைபொருட்களை ஆதாய விலைக்கு விற்பனை செய்வதும், இச்சங்கத்தின் முதன்மை நோக்கங்கள் ஆகும்.

3.18. **உரம்:** நீலகிரி மாவட்டத்தின் மொத்த உரத் தேவையில் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் 60% பூர்த்தி செய்கிறது.

2023 ஏப்ரல் 6]

நீலகிரியில் விளையும் பயிர்களின் தேவைகளுக்கேற்ப உரக்கலவை தயாரிக்கும் மையம் நாளொன்றுக்கு 200 மெ.டன் கலவை திறனுடன்கூடிய இரண்டு உரக்கலவை இயந்திரங்களுடன் இயங்கி வருகிறது. இவை 17 நேரடி விற்பனை நிலையம், 74 தொடக்க கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 3 பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் விநியோகம் செய்யப்படுகிறது.


3.19. **விற்பனை:** *உருளைக்கிழங்கு, மலை காய்கறிகள் மற்றும் பூண்டு ஆகிய விவசாய விளைபொருட்கள் தினசரி ஏலம் மூலம் மேட்டுப்பாளையத்தில் உள்ள ஏல மையத்தில் விற்பனை செய்யப்படுகிறது. இது தவிர உதகை நகராட்சி சந்தையில், காய்கறி ஏல மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.*

3.20. **கிடங்குகள்:** *விவசாய இடுபொருட்கள் மற்றும் விவசாய விளைபொருட்களைச் சேமித்து வைப்பதற்காக மொத்தம் 14,575 மெட்ரிக் டன்கள் கொள்ளளவு கொண்ட 16 கிடங்குகள் இச்சங்கத்திற்கு உள்ளன. 28-02-2023 முடிய இக்கிடங்குகளின் பயன்பாடு 80% ஆகும்.*

3.21. **இதர செயல்பாடுகள்:** *இண்டேன் எரிவாயு* (Indane LPG) *விநியோகத்திற்கான உரிமம் பெறப்பட்டு, மலைப் பகுதிகளில் உள்ள 11,090 நுகர்வோர் பயனடையும் வகையில் செயல்பட்டு வருகிறது.*

3.22. மேலும், கோத்தகிரி மற்றும் உதகமண்டலத்தில் இச்சங்கத்திற்கு திருமண மண்டபங்களும் உள்ளன. இத்திருமண மண்டபங்கள்மூலம் 2022-23 (28-02-2023 முடிய) இச்சங்கம் 3.86 இலட்சம் வருவாய் ஈட்டி உள்ளது. மேலும் விவசாயிகளின் விளைபொருட்களைக் குறைந்த கட்டணத்தில் எடையிட ஏதுவாக 60 மெட்ரிக் டன் திறன் கொண்ட கணினிமயமாக்கப்பட்ட எடை மேடை உதகையின் மையப்பகுதியான சேரிங்கிராஸில் செயல்பட்டு வருகிறது. சங்க தலைமையக வளாகத்திலுள்ள 2 ஏக்கர் நிலம் 2017-18-ல் ரூ.2.00 கோடி செலவில் புனரமைக்கப்பட்டு, சுற்றுலாப் பயணிகளின் வாகனம் நிறுத்துமிடமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. 2022-23 (28-2-2023 முடிய) வாகன நிறுத்துமிடம் மூலம் ரூ.40.09 இலட்சம் வருவாய் ஈட்டி உள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் சங்கத்தின் புரள் வணிகம் கீழ்க்கண்டவாறு:

[2023 ஏப்ரல் 6



வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

3.23. வேளாண் விளைபொருள், உரம் மற்றும் இதர வேளாண் இடுபொருட்கள் விற்பனை ஆகியவற்றை முதன்மை நோக்கங்களாகக் கொண்டு 113 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், செயல்பட்டு வருகின்றன. 1928 ஆம் ஆண்டில் கள்ளக்குறிச்சியில் முதல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைக்கப்பட்டது. விளைபொருட்களின் மீது தானிய ஈட்டுக் கடன் வழங்குதல், வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்தி,

2023 ஏப்ரல் 6]

மதிப்பு கூட்டுதல், விவசாயிகளின் அவசரத் தேவைகளுக்காக வேளாண் விளைபொருட்களை மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்வதைத் தவிர்ப்பதை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உறுதி செய்வதுடன், விவசாயிகளின் கடன் தேவைகளையும் பூர்த்தி செய்கின்றன. வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் 12 பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்கள், 106 கூட்டுறவு மருந்தகங்கள் மற்றும் 2,581 பொது விநியோகத் திட்ட நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன. சில சங்கங்கள் குடிமைப்பொருட்களின் நகர்வு பணியை மேற்கொள்ளும் முதன்மைச் சங்கங்களாகவும் செயல்பட்டு வருகின்றன.

3.23.1. **பயிற்சி:** *விற்பனை, பதப்படுத்துதல் மற்றும் சேமித்தல் ஆகியவற்றில் தரக் கட்டுப்பாடு உறுதி செய்தல் மற்றும் தர மேலாண்மை ஆகியவற்றிற்கான* ISO *தரச் சான்றிதழ் பெறுவது குறித்து அனைத்து வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டன. இந்திய தர நிர்ணய பணியக வல்லுநரைக் கொண்டு 113 வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு பிரத்யேக பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில்* ISO *தரச் சான்றிதழ், தர நிர்ணயம் செய்தல் தொடர்பாக எடுத்துரைக்கப்பட்டது. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் முதன் முதலில்* ISO *தரச் சான்றிதழ் பெற்றுள்ளது. 7 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்* FSSAI *சான்றிதழ் பெற்றுள்ளன. அனைத்து வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கும்* ISO *மற்றும்* FSSAI *தரச் சான்றிதழ் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த 5 ஆண்டுகளில் அனைத்து வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் புரள் வணிகம் கீழ்க்கண்டவாறு:*



வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் செயல்பாடுகள்

3.24. **வேளாண் விளைபொருள் விற்பனை:** *வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாய உறுப்பினர்களின் வேளாண் விளைபொருட்களை இலாபகரமான விலைக்கு விற்பனை செய்ய ஏதுவாக ஏல விற்பனைக் களங்கள், உலர்களங்கள் மற்றும் கிடங்குகள் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தருகின்றன. பெருந்துறை, ஈரோடு, திருச்செங்கோடு, ராசிபுரம், அவிநாசி, சேலம் மற்றும் ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் மின்னணு வர்த்தக வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2021-22 ஆம் ஆண்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ.938.75 கோடி அளவிற்கு வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்துள்ளன. 2022-23 ஆம் ஆண்டில் (28-02-2023 வரை) ரூ.855.06 கோடி மதிப்பிலான வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.*

2023 ஏப்ரல் 6]

3.24.1. விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்: தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களின் கடன் பெற்ற உறுப்பினர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்க்கப்படுகின்றனர். இதனால், தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களின் கடன் தொகை வசூல் செய்யப்படுவதோடு, உறுப்பினர்களின் விளைபொருட்களை ஆதாய விலைக்கு விற்பனை செய்வதற்கும் இச்சங்கங்கள் பெரிதும் உதவுகின்றன. 2021-22 ஆம் ஆண்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் ரூ.3.70 கோடி அளவிற்கு கடன் வசூலிக்கப்பட்டுள்ளது. 2022-23 ஆம் ஆண்டில் (28.02.2023 வரை) கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் ரூ.4.07 கோடி அளவிற்கு கடன் வசூலிக்கப்பட்டுள்ளது.

3.24.2. **விற்பனையுடன் இணைந்த நுகர்வோர் கூட்டுறவு:** விவசாயிகளின் விளைபொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு, பதப்படுத்தி, மதிப்புக் கூட்டப்பட்டு, கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், விற்பனை செய்கின்றன. இதனால் தரமான பொருட்கள் நியாயமான விலையில் பண்டகசாலைகளால் விற்பனை செய்யப்படுவதோடு விவசாயிகளுக்கு ஆதாய விலை கிடைக்கவும் வாய்ப்பாக அமைகிறது. உணவுப் பொருட்களான கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், மஞ்சள் மற்றும் மசாலா தூள் ஆகியவை தயாரிக்கப்பட்டு, பதப்படுத்தி, சுகாதாரமான முறையில் கலப்படமின்றி பொட்டலமிடப்படுகிறது. இதனால் இப்பொருட்களின் தரம் உறுதி செய்யப்பட்டு ஆதாய விலையில் நுகர்வோருக்கு கிடைக்கிறது. 2021-22 ஆம் ஆண்டில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் நுகர்வோர் கூட்டுறவுடன் இணைந்து ரூ.81.44 கோடி மதிப்பிலான மதிப்புக் கூட்டப்பட்ட வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்துள்ளன. 2022-23 ஆம் ஆண்டில் (28-02-2023 வரை) ரூ.88.53 கோடி மதிப்பிலான மதிப்புக் கூட்டப்பட்ட வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

3.24.3. தானிய ஈட்டுக் கடன் வழங்குதல்: விவசாயிகள் தங்களின் வேளாண் விளைபொருட்களை மிகக் குறைந்த

விலைக்கு விற்பனை செய்வதிலிருந்து பாதுகாத்திட, விவசாயிகளின் விளைபொருட்களின் சந்தை மதிப்பில் 60 முதல் 80 சதவிகிதம் வரை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தானிய ஈட்டுக்கடன் வழங்கி வருகின்றன. இத்திட்டத்தின்மூலம், விவசாயிகளின் பணத்தேவை உடன் பூர்த்தி செய்யப்படுவதோடு, வேளாண் விளைபொருட்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கக் கிடங்குகளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு, அவற்றிற்கு நல்ல விலை கிடைக்கும்போது விற்பனை செய்ய உதவுகிறது. 2021-22 ஆம் ஆண்டில் ரூ.82.13 கோடி மதிப்பிலான தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளன. 2022-23 ஆம் ஆண்டில் (28.02.2023 வரை) ரூ.80.11 கோடி மதிப்பிலான தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளன.

3.24.4. **தரமான விதைகள் விற்பனை:** காய்கறிகள், சிறுதானியங்கள், எண்ணெய் வித்துகள், பருப்பு வகைகள் மற்றும் நெல் ஆகியவற்றின் தரமான விதைகளைக் கொள்முதல் செய்து, விவசாயிகளுக்கு கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விற்பனைச் செய்து வருகின்றன. இதனால் விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைக்கச் செய்ய வழிவகுக்கிறது. 2021-22 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ.4.39 கோடி அளவிற்கு தரமான விதைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 2022-23 ஆம் ஆண்டில் (28.02.2023 வரை) ரூ.3.70 கோடி அளவிற்கு தரமான விதைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மாநிலத்தின் மொத்த விதை விற்பனையில் 98% தனியார் வர்த்தகர்கள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. இதில் கூட்டுறவுகளின் பங்கு மிகக் குறைவாக உள்ளது. தற்போது கூட்டுறவுகள்மூலம் விதை உற்பத்தி மற்றும் விற்பனை அதிக அளவில் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

3.24.5. **உர விநியோகம்:** வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாயிகளுக்கு வேளாண் உற்பத்தியை அதிகரித்திடும் பொருட்டு, உரங்களை விநியோகம் செய்து வருகின்றன. பயிர்க்கடனில் ஒரு பகுதியாகவும் ரொக்கத்திற்கும் இச்சங்கங்கள் விவசாயிகளுக்கு உரங்களை விற்பனை செய்து வருகின்றன. நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும்

2023 ஏப்ரல் 6]

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் ஆகியவை கூட்டுறவுச் சங்கங்களுக்கான மொத்த உர விற்பனை முகவர்களாக செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவுகள் மொத்த உர சந்தை தேவையில் 25 சதவீதத்தை கூட்டுறவுச் சங்கங்கள் பூர்த்தி செய்கின்றன. 2021-22 ஆம் ஆண்டில் குறுவை மற்றும் சம்பா பருவங்களில் 1,20,634 மெ.டன் அளவிலான யூரியா விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகள் உயிரி உரம் மற்றும் உயிரி பூச்சிக் கொல்லிகளை அதிகளவில் பயன்படுத்தி இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் பொருட்டு புதிய முயற்சியாக கூட்டுறவுகள்மூலம் உயிரி உரங்கள் மற்றும் வேப்பம்பிண்ணாக்கு உற்பத்தி துவக்கப்பட்டுள்ளது. 239 மெ.டன் தொழுஉரத்தினை பெரு நகர சென்னை மாநகராட்சியிடமிருந்தும், 500 மெ.டன் மண்புழு தொழு உரத்தினை கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிடமிருந்தும் கொள்முதல் செய்து தமிழ்நாடு முழுவதுமுள்ள விவசாயிகளுக்கு ஆதாய விலையில் விநியோகம் செய்து வருகிறது. பயிர்களின் மகசூல் அதிகரிக்க வழிவகை செய்யும் வகையில் நீரில் கரையும் உரங்கள் IPL மூலமாக இறக்குமதி செய்யப்பட்டு, இணையத்தின் பெயரில் வணிகப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் உர விநியோகம் செய்யப்பட்ட விவரம் கீழ்க்கண்டவாறு:

வருடம்	அளவு மெ.டன்னில்	மதிப்பு ரூ. இலட்சத்தில்
2018-19	406922.00	62977.17
2019-20	421212.00	61437.57
2020-21	486830.00	70920.35
2021-22	512224.260	91928.20
2022-23 (28-02-2023) வரை	548936.80	108172.00

3.24.6. **பதனிடுதல் மற்றும் வேளாண் விளைபொருட்களுக்கு மதிப்புக் கூட்டுதல்:** வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்தி, அவற்றின் மதிப்பைக் கூட்ட, சில வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

பதனிடும் அலகுகளை நடத்தி வருகின்றன. இந்த விற்பனைச் சங்கங்கள் இவ்வலகுகள்மூலம் நியாயமான விலையில் வேளாண் உறுப்பினர்களின் விவசாயப் பொருட்களைப் பதப்படுத்தித் தரும் பணியை செய்கின்றன. திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் "அர்த்தநாரீஸ்வரா" என்ற வணிக பெயரிலும், ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் "மங்களம்" என்ற வர்த்தக பெயரிலும், சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் "அமிர்தம்" என்ற வர்த்தக பெயரிலும், பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் "பசுமை" என்ற வர்த்தக பெயரிலும், சைதாப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் "மருதம்" என்ற வர்த்தக பெயரிலும் அரிசி, பருப்பு வகைகள், மஞ்சள் தூள், மசாலா வகைகள் மற்றும் எண்ணெய் வகைகளைத் தயாரித்து விற்பனை செய்து வருகின்றன.

ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மங்களம் தயாரிப்புகளுக்கான விற்பனை அலகு பிரத்யேக வண்ணம் மற்றும் பெயர் பலகையுடன் உள்ளது. அனைத்து வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கும் இது நடைமுறைப்படுத்தப்படும். பதப்படுத்துதலில் மொத்த திறனை (180 மெ.டன்) எய்தியுள்ள ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தால் அருகிலுள்ள நஞ்சக்கவுண்டன்பாளையத்தில் ரூ.5.50 இலட்ச மதிப்பீட்டில் கூடுதலாக பதனிடும் அலகு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் IEC உரிமம் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் எண்ணெய் பிழியும் அலகினை நவீனப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் சோப்பு தயாரிக்கும் அலகு 28-7-2022 அன்று தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. 28-02-2023 முடிய 4,11,911 சோப்புகள் ரூ.181.24 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 6]

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் சர்வோ ஆயில் மற்றும் டாடா டிஸ்கான் ஸ்டீல் அதிக அளவில் விற்பனை செய்ததற்காக தேசிய அளவிலான விருது பெற்றுள்ளது. மாநிலத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் 71 பதனிடும் அலகுகள் செயல்பட்டு வருகின்றன. 28-02-2023 வரை இப்பதனிடும் அலகுகள் மூலம் 3,990 மெ.டன் மொத்த வியாபாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3.24.7. **ஊரகப் பகுதிகளில் சேமிப்புக் கிடங்கு வசதியினை மேம்படுத்துதல்:** *கிராமப்புற விவசாயிகள் அறுவடைக் காலங்களில் தங்களின் விளைபொருட்களைக் குறைந்த விலையில் விற்பனை செய்வதை தவிர்த்து, அதனை ஆதாயமான விலை கிடைக்கும் வரை சேமித்து வைத்து விற்பனை செய்திடவும், அப்பொருட்களின் மீது தானிய ஈட்டுக் கடன் வசதி பெறவும், தமிழ்நாட்டில் சேமிப்புக் கிடங்கு வசதியினை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டது.*

3.24.8. தொலைநோக்குப் பார்வையுடன் கிடங்குகள் கட்ட 2010 ஆம் ஆண்டிலேயே திட்டமிடப்பட்டு, நபார்டின் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி மற்றும் கிடங்கு உள்கட்டமைப்பு நிதியின்கீழ் 5,47,100 மெ.டன் கொள்ளளவு கொண்ட 4,044 கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மாநில அரசு, கிடங்குகள் கட்ட 100% நிதி உதவியினை மானியமாக வழங்கியுள்ளது. 2011 முதல் 2019 வரையிலான காலத்தில், ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின்கீழ் 2,87,700 மெ.டன் கொள்ளளவு கொண்ட 2,273 கிடங்குகளும், கிடங்கு உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின்கீழ் 2,59,400 மெ.டன் கொள்ளளவு கொண்ட 1,771 கிடங்குகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி மற்றும் கிடங்கு மேம்பாட்டு வளர்ச்சி நிதியுதவியுடன் கட்டப்பட்ட கிடங்குகள்			
திட்டத்தின் பெயர்	கட்டப்பட்ட ஆண்டு	கிடங்குகளின் எண்ணிக்கை	மொத்த கொள்ளளவு (மெ.டன்னில்)
RIDF XVII	2011-12	1,166	155300
RIDF XVIII	2012-13	1,104	129400

திட்டத்தின் பெயர்	கட்டப்பட்ட ஆண்டு	கிடங்குகளின் எண்ணிக்கை	மொத்த கொள்ளளவு (மெ.டன்னில்)
WIF	2013-14	1,044	124100
RIDF-FERTILIZERS GODOWN	2013-14	3	3000
WIF	2014-15	562	98800
WIF	2018-19	165	36500
மொத்தம்		4,044	547100

3.24.9. மேலும் 2021-22 ஆம் ஆண்டின் சட்டமன்ற அறிவிப்பின்படி தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (NADP) ஒரத்தநாடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 500 மெ.டன் கிடங்கும் புதூர்நாடு பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், ஏலகிரி பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கங்களில் தலா 100 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இக்கிடங்குகளில் 2021-22 ஆம் ஆண்டில், 5,608 விவசாயிகள் ரூ.29.20 கோடி மதிப்பிலான 88,127 மெட்ரிக் டன் வேளாண் விளைபொருட்களை ஈடாக வைத்து ரூ.17.63 கோடி தானிய ஈட்டுக் கடன் பெற்றுள்ளனர். 2022-23 ஆம் ஆண்டில் (28-02-2023 வரை), 4,090 விவசாயிகள் ரூ.30.36 கோடி மதிப்பிலான 67,307 மெட்ரிக் டன் வேளாண் விளைபொருட்களை ஈடாக வைத்து ரூ.15.87 கோடி தானிய ஈட்டுக் கடன் பெற்றுள்ளனர். 7% வட்டியில் தானிய ஈட்டுக்கடன், சிறு மற்றும் குறு விவசாயிகள் பெற்று பயனடையும் வகையில், 28-02-2023 வரை தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் நேர்மறை மதிப்புடைய 1,102 கிடங்குகள் இந்திய அரசின் கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்திடம் (WDRA) பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே, அதிக எண்ணிக்கையிலான கூட்டுறவுச் சங்க கிடங்குகள் WDRA ஆணையத்திடம் பதிவு செய்யப்பட்டு தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

2023 ஏப்ரல் 6]

3.24.10. மேலும், கூட்டுறவுச் சங்கங்களுக்கு சொந்தமான கிடங்குகளைக் கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்திடம் பதிவு செய்வது குறித்த பயிற்சி முகாம் WDRA ஆணைய அலுவலர்களால் மத்தியக் கூட்டுறவு வங்கி அலுவலர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு சென்னையில் நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து, நேர்மறை மதிப்பு இல்லாத இதர கிடங்குகளையும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் ஈடான உத்தரவாதத்தின் பேரில் கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்திடம் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் கோரிக்கையின் அடிப்படையில், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்புத்தொகை ரூ.10.00 இலட்சத்தினை செலுத்துவதிலிருந்து WDRA விலக்கு அளித்துள்ளது.

புதுடெல்லியில் 31-10-2022 அன்று நடைபெற்ற கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தின் (WDRA) தோற்றுவிக்கப்பட்ட நாள் (Foundation Day) விழாவின்போது, அதிக எண்ணிக்கையிலான கூட்டுறவுச் சங்கங்களின் கிடங்குகளை WDRA ஆணையத்தில் பதிவு செய்ததற்காக, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், இந்திய அரசின் WDRA ஆணையத்தால் கௌரவிக்கப்பட்டார்.

3.24.11. விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை தேசிய அளவில் விற்பனை செய்வதற்கும், குறைந்த வட்டி விகிதத்தில் தானிய ஈட்டுக் கடன் பெறுவதற்கும், தாங்கள் உறுப்பினராக உள்ள சங்கம் மற்றும் பிற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்தும் குறைந்த வட்டி விகிதத்தில் தானிய ஈட்டுக்கடன் பெறுவதற்கு ஏதுவாக, கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையம் மாற்றுமுறை கிடங்கு மின்னணு ரசீது (e-NWR) வழங்கும் முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தியாவிலேயே முதன்முறையாக, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் e-NWR வழங்கும் திட்டம் முறையாக தமிழ்நாட்டில் துவங்கப்பட்டு, e-NWR மூலம் தானிய ஈட்டுக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

இயல் – 4

நுகர்வோர் கூட்டுறவுகள்

4.1. இந்தியாவில் முதல் நுகர்வோர் கூட்டுறவு சங்கமான திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம் 1904 ஆம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் தேதி தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது. நுகர்வோர் கூட்டுறவுகள் தரமான நுகர்வுப் பொருட்களை நியாயமான விலையில் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றன. நுகர்வோர் கூட்டுறவுகள் சந்தை குறுக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் வெளிச்சந்தையில் உள்ள நுகர்வுப் பொருட்களின் விலை உயர்வினைக் கட்டுப்படுத்துவதில் பெரும்பங்காற்றுவதன் மூலம் பொதுமக்களுக்கு சேவை செய்து வருகின்றன. நுகர்வோர் கூட்டுறவுகள் கூட்டுறவு இயக்கத்தில் முன்னோடியாக விளங்கி, பொதுமக்களின் வாங்கும் திறனுக்கும் பொருட்களின் விலைக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதன் மூலம் வறுமையைக் குறைக்கின்றன. எனவே, பெருமளவில் (Macro level), நுகர்வோர் கூட்டுறவுகள் ஒரு சமூக மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளன.

4.2 தமிழ்நாட்டில், நுகர்வோர் கூட்டுறவு அமைப்பானது மூன்றடுக்கு அமைப்பினைக் கொண்டுள்ளது.

மாநில அளவில்
தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்

↓

மாவட்ட அளவில்
மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை (40)

↓


தொடக்க நிலை
தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலை (363)

2023 ஏப்ரல் 6]

4.3. செயல்பாடுகள்

4.3.1. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் (TNCCF): தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் 1996 ஆம் ஆண்டு ஜூலை 30 ஆம் தேதி தொடங்கப்பட்டது. இது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. அதிகமாக விற்பனையாகக் கூடிய (FMCG) நுகர்பொருட்கள், காகிதம் மற்றும் எழுதுபொருட்கள் உள்ளிட்ட பொருட்களை மொத்தமாகக் கொள்முதல் செய்து தேவைக்கேற்ப இணைப்புச் சங்கங்களுக்கு விற்பனை செய்து வருகின்றது. கூட்டுறவு நிறுவனங்களின் பட்டாசு கொள்முதல் பணியினையும் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் ஒருங்கிணைத்து செயல்படுகிறது. மேலும், இரண்டு பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்களையும் நடத்தி வருகின்றது. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் முதன் முறையாக பிப்ரவரி 2022 முதல் மைய மருந்து கொள்முதல் நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது. மேலும், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளுக்கென அதிகமாக விற்பனையாகக்கூடிய நுகர்பொருட்களைக் (FMCG) கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக, ஜூலை 2009 முதல் இந்துஸ்தான் யூனிலீவர் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுவதன் மூலம் இந்நிறுவன தயாரிப்புகளுக்கு MRP விலையில் 13% வரை தள்ளுபடி பெற்று வருகின்றன. FMCG பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக இந்துஸ்தான் யூனிலீவர் லிமிடெட் போன்ற இந்திய அளவில் பிரபலமான (Pan India) பல நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதற்கு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. இது தமிழ்நாட்டில் செயல்படும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் நிதிநிலையை மேலும் வலுப்படுத்த ஏதுவாக இருக்கும். 2022-2023 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2023 வரை தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் ரூ.76.99 கோடி அளவிற்கு மொத்த வியாபாரம் எய்தியுள்ளது.

தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணைய
கட்டுப்பாடற்ற பொருட்களின் விற்பனை விவரம்



4.3.2. மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள்: *தமிழ்நாட்டில் தற்போது 40 மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், மாவட்ட அளவில் செயல்படுகின்றன. மாநிலம் முழுவதும் விரிந்துள்ள 40 மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு விற்பனை பண்டகசாலைகளால், 17 பல்பொருள் அங்காடிகள், 48 சிறுபல்பொருள் அங்காடிகள், 61 சில்லறை விற்பனை நிலையங்கள், 55 சுயசேவை பிரிவுகள், 133 கூட்டுறவு மருந்தகங்கள், 37 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள், 25 பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்கள், 26 சமையல் எரிவாயு உருளை விநியோக அலகுகள், 3,461 நியாய விலைக் கடைகள் மற்றும் 81 மண்ணெண்ணெய் வழங்கும் மையங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.*

2023 ஏப்ரல் 6]


திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களில் பழமையான ஒன்றாகும். 1904-ல் துவங்கப்பட்ட இந்நுகர்வோர் கூட்டுறவு நிறுவனம் பொது மக்களின் நுகர்வுத் தேவைகளை நிறைவு செய்வதில் முன்னோடியாக விளங்குகிறது.

மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் தயாரிப்பு நிறுவனங்கள், உற்பத்தி மையங்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் கூட்டுக் கொள்முதல் குழுமூலம் மளிகைப்பொருட்கள், தானியங்கள், பருப்பு வகைகள் மற்றும் மசாலாப் பொருட்களை மொத்தமாகவும், நேரடியாகவும் கொள்முதல் செய்து நியாயமான விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்து வருகின்றன.

சென்னையில் ஒரு மத்திய கூட்டுக்கொள்முதல் குழு மற்றும் மண்டலங்களில் 4 கூட்டுக்கொள்முதல் குழுக்கள், சென்னை, மதுரை, சேலம் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்கள் மொத்தக் கொள்முதல் செய்வதன் மூலம் இலாபகரமான விலையின் பயனை (Attractive price advantage) உறுப்பினர்களுக்கு வழங்குவதற்காக செயல்பட்டு வருகின்றன. மத்திய கூட்டுக்கொள்முதல் குழு துவரம் பருப்பு, பாசிப் பருப்பு, உளுந்தம் பருப்பு (உருட்டு), வெள்ளை உளுந்தம் பருப்பு (உடைத்தது), கருப்பு உளுந்தம் பருப்பு (உடைத்தது), கடலைப் பருப்பு, சீரகம், மிளகு மற்றும் ஏலக்காய் ஆகிய 9 பொருட்களை கொள்முதல் செய்து தருகிறது. மேலும், 4 மண்டல கூட்டுக்கொள்முதல் குழுக்கள் மூலம் சுமார் 70 வகையான மளிகைப்பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன. மண்டல கூட்டுக்கொள்முதல் குழுக்கள் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக செயல்பட்டு வருகின்றன. மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் முதன்மைச் சங்கங்கள் மற்றும் சுயநகர்வு சங்கங்களாக செயல்பட்டு அத்தியாவசியப் பொருட்களை நியாய விலைக் கடைகளுக்கு விநியோகம் செய்து, பொது விநியோகத் திட்டத்தினைச் சிறப்பான முறையில் செயல்படுத்துவதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

[2023 ஏப்ரல் 6

2022-2023 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2023 வரை, அனைத்து நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மூலம் ரூ.1,159.74 கோடி அளவிற்கு வியாபாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



4.3.3. தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள்: *1919 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கொடைக்கானல் கூட்டுறவு பண்டகசாலை தமிழ்நாட்டில் தொடங்கப்பட்ட முதல் கூட்டுறவு பண்டகசாலை ஆகும். தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள் தொடக்க நிலையில் செயல்பட்டு, அத்தியாவசிய நுகர்வுப்பொருட்களை நியாயமான விலையில் பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றன. இவை சில்லறை விற்பனை அங்காடிகள், பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்கள், மாவு அரவை அலகுகள், மசாலப்பொருட்கள்*

2023 ஏப்ரல் 6]

அரவை அலகுகள், சீகைக்காய் அரவை அலகுகள் மற்றும் நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன. தமிழ்நாட்டில் 363 தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள், 54 கூட்டுறவு மருந்தகங்கள், 18 பசுமை பண்ணை நுகர்வோர் கடைகள் மற்றும் 4 பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்கள் ஆகியவற்றை நடத்தி வருகின்றன.

4.4. நுகர்வோர் கூட்டுறவுகளின் விற்பனை செயல்பாடுகள்

(ரூ.கோடியில்)


வ. எண்	கூட்டுறவு நிறுவனத்தின் வகை	கட்டுப்பாட்டுப் பொருட்களின் விற்பனை மதிப்பு ரூ.		கட்டுப்பாடற்ற பொருட்களின் விற்பனை மதிப்பு ரூ.		மொத்த விற்பனை மதிப்பு ரூ.	
		2021-22	2022-23 (பிப்ரவரி' 23 வரை)	2021-22	2022-23 (பிப்ரவரி' 23 வரை)	2021-22	2022-23 (பிப்ரவரி '23 வரை)
1	மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள்	870.21	811.83	1054.21	1159.74	1,924.42	1,971.57
2	தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள்	165.59	138.84	293.56	272.17	459.15	411.01

4.5. கூட்டுறவு மருந்தகங்கள்: தமிழ்நாடு அரசு தரமான மருந்துகளை குறைவான விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்காக மாநிலம் முழுவதும் முக்கியமான இடங்களில் கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் கூட்டுறவு மருந்தகங்களை தொடங்கியுள்ளது.

4.5.1. தற்போது தமிழ்நாட்டில் 380 மருந்தகங்கள் செயல்படுகின்றன. இம்மருந்தகங்கள்மூலம் 2022-2023 ஆம் ஆண்டு பிப்ரவரி 2023 வரை, ரூ.156.61 கோடி மதிப்பிலான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில், ஒரே மாதிரியான வண்ணம், தனித்துவமான

[2023 ஏப்ரல் 6

சின்னம் மற்றும் பெயர் பலகைகளுடனான 70 புதிய கூட்டுறவு மருந்தகங்கள் 16.12.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. கூட்டுறவு மருந்தகங்களில் வாடிக்கையாளர்களுக்கு 20% வரை தள்ளுபடி வழங்கப்படுகிறது. நடப்பு நிதியாண்டில் இதுவரை ரூ.25.84 கோடி மதிப்பில் 31,55,482 வாடிக்கையாளர்களுக்கு தள்ளுபடி வழங்கப்பட்டுள்ளது. 70 புதிய கூட்டுறவு மருந்தகங்கள்மூலம் 2022-23 ஆம் ஆண்டு பிப்ரவரி 2023 வரை ரூ.13.64 கோடிக்கு மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.



4.6. மைய மருந்து கொள்முதல்: கூட்டுறவு மருந்தகங்கள் நடத்தும் கூட்டுறவு நிறுவனங்கள் மருந்துப் பொருட்களை கொள்முதல் செய்யும்பொழுது அதிக விளிம்புத்தொகை கிடைக்கப்பெறுவதற்கு ஏதுவாக மைய மருந்து கொள்முதல் ஒரு புதிய முயற்சியாக தமிழ்நாடு முழுவதும் அமல்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மைய மருந்து கொள்முதலுக்கு தலைமை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு

2023 ஏப்ரல் 6]

இணையமானது, Sun Pharma, Cipla, Ajanta, Apex, USV, Torrent, Glenmark, Dr.Reddy's, FDC pharma, LINUX மற்றும் Servier ஆகிய 11 மருந்து நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு இந்நிறுவன மருந்துகளை நேரடியாகக் கொள்முதல் செய்வதால் MRP விலையிலிருந்து குறைந்தபட்சம் 38% தள்ளுபடி வழங்குகின்றன. கூட்டுறவு மருந்தகங்களுக்கு இதனால் கிடைக்கும் கூடுதல் விளிம்புத்தொகை மதிப்புக் கூட்டப்பட்ட சேவைகள் (Value Added Services) மற்றும் மருந்தாளுநர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படுகிறது.

மையமருந்து கொள்முதல் திட்டத்தின்மூலம் பிப்ரவரி 2023 வரை தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் ரூ.3.16 கோடி மதிப்பிற்கு மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

4.7. சந்தை குறுக்கீடு நடவடிக்கை: அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கான சூழல் மற்றும் தேவை ஏற்படும்போது நுகர்வோர் கூட்டுறவுகள் சந்தை குறுக்கீடு நடவடிக்கையில் ஈடுபடுகின்றன. 2022-2023 ஆம் நிதி ஆண்டில் தக்காளியின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த கூட்டுறவுத் துறையால் இரண்டு முறை சந்தை குறுக்கீடு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4.7.1. மே மற்றும் ஜுன் 2022 மாதங்களில் ஆந்திரா மற்றும் கர்நாடகாவில் பெய்த கனமழையால் தக்காளி வரத்து குறைந்து வெளிச்சந்தையில் விலை அதிகரித்தது. இதனையடுத்து சந்தை குறுக்கீட்டு நடவடிக்கைமூலம் 89 மெட்ரிக் டன் தக்காளி ரூ.0.64 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டது.

4.7.2. மேலும், செப்டம்பர் 2022 ஆம் ஆண்டு பெய்த தென்மேற்கு பருவமழை காரணமாக அண்டை மாநிலங்களில் இருந்து தக்காளி வரத்து குறைந்து, விலை அதிகரித்தது. சந்தை குறுக்கீட்டு நடவடிக்கை மூலம் ரூ.0.13 கோடி அளவுக்கு 37 மெட்ரிக் டன் தக்காளி பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டது. இதன் மூலம் 3 வார காலத்திற்குள் தக்காளியின் வெளிச்சந்தை விலை கிலோ ஒன்றிற்கு ரூ.120-ரூ.150-லிருந்து ரூ.40-ரூ.50 ஆக குறைந்தது.

4.8. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்: அரசு தொடக்கப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு சத்தான காலை உணவு வழங்கும் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 15.09.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டதின்கீழ் பிப்ரவரி 2023 வரை, ரூ.143.46 இலட்சம் மதிப்பிலான ரவை, கோதுமை ரவை மற்றும் சேமியா உள்ளிட்ட பொருட்கள் 965 மதிய உணவு மையங்களுக்கு 16 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள்மூலம் வழங்கப்பட்டுள்ளது.

4.9. 2kg மற்றும் 5kg FTL எரிவாயு உருளை விற்பனை: கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் 2 கிலோ மற்றும் 5 கிலோ FTL எரிவாயு உருளை விற்பனை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் 06.10.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. 19.03.2023 வரை 2கி. சிலிண்டர்கள் மற்றும் 5கி. சிலிண்டர்கள் முறையே ரூ.25,125/- மற்றும் ரூ.5,94,135/- மதிப்பிற்கு நடைபாதை, தள்ளுவண்டி வியாபாரிகள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு 11 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள்மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. வாடிக்கையாளரின் முகவரி ஆவணங்கள் இன்றி அடையாள அட்டையின் அடிப்படையில் இந்த எரிவாயு உருளை வழங்கப்படும் என்பது இதன் சிறப்பம்சமாகும்.

4.10. இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கான கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை: இந்து சமய அறநிலையத் துறை ஆணையரை கூட்டுறவுத் துறை கேட்டுக்கொண்டதை அடுத்து, திருக்கோவில் அன்னதானத் திட்டத்தின்கீழ் உள்ள அனைத்து கோயில்களுக்கும் நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலைகளால் மளிகைப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், அன்னதானத் திட்டத்திற்குத் தேவையான அனைத்து மளிகைப் பொருட்களையும் கூட்டுறவு பண்டகசாலைகள்மூலம், மட்டுமே கொள்முதல் செய்ய இந்து சமய அறநிலையத் துறையின் ஆணையர் அறிவுறுத்தியுள்ளார். இது கூட்டுறவு பண்டகசாலைகளின் வியாபாரத்தை மேலும் அதிகரிக்க வாய்ப்பாக அமையும். 2022-2023 ஆம் ஆண்டில் பிப்ரவரி

2023 ஏப்ரல் 6]

2023 வரை, 531 திருக்கோயில்களுக்கு ரூ.30.81 கோடி மதிப்பில் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

4.11. **நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளின் அசையா சொத்துகளைப் பயன்படுத்துதல்:** *தற்போதுள்ள அசையா சொத்துகளைத் திறம்பட பயன்படுத்தும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமான காலி இடங்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம், பூங்காநகர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, திருவண்ணாமலை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, மதுரை பாண்டியன் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, பொள்ளாச்சி கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை மற்றும் திண்டுக்கல் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை ஆகியவற்றிற்கு இவற்றின் வியாபார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் புதிய கட்டடங்களை கட்டுவதற்கு/நவீனமயமாக்குவதற்கு ரூ.654 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. இனிவருங்காலங்களிலும் நவீனமயமாக்கல் நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.*

4.12. நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளின் வியாபாரத்தை விரிவுபடுத்துதல்: *வியாபாரத்தை விரிவுபடுத்தும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம் தேனாம்பேட்டையில் தற்போதுள்ள மண்டபத்தை பல்நோக்கு மண்டபமாக மாற்றியுள்ளது. இப்புதிய பல்நோக்கு மண்டபம் ஆகஸ்ட் 2022 முதல் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. இதன்மூலம் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம் இதுவரை ரூ.11.55 இலட்சம் வருமானத்தை ஈட்டியுள்ளது.*

இயல் — 5

சிறப்பு நோக்கங்களுக்கான கூட்டுறவு நிறுவனங்கள்

5.1. சிறப்பு வகை சங்கங்களான பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், தொழிலாளர்கள் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கங்கள், சலவைத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்,

வழக்குரைஞர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு அருந்தகங்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பொறியாளர்கள் கட்டுமான கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளிட்ட இதர சங்கங்கள் விவசாயிகள், மலைவாழ்மக்கள் மற்றும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் ஏழை எளிய மக்களுக்கு சேவைகள் வழங்கும்பொருட்டு செயல்பட்டு வருகின்றன.

5.2. மாநில அளவிலான பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் இணையம்: தமிழகத்திலுள்ள பழங்குடியின மக்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு திட்டமிடவும், அதிக வருமானம் மற்றும் அதிக வேலைவாய்ப்புகளை உறுதி செய்யவும், சிறு வனப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்தவும், பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பல்வேறு செயல்பாடுகளை ஒருங்கிணைக்கவும், 25 பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பினர்களாகக் கொண்ட மாநில அளவிலான பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் இணையம் துவக்கப்பட்டது. இவ்விணையம் 03-08-2022 அன்று பதிவு செய்யப்பட்டு, 01-11-2022 முதல் செயல்பட்டு வருகிறது.

5.3. பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்: தமிழகத்தில் 25 பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மலைவாழ் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு செயல்பட்டு வருகின்றன. மலைவாழ் மக்களின் வேளாண் உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பை அதிகரித்தல், வேளாண் விளைபொருள் கொள்முதல் குறிப்பாக சிறுதானியங்கள், ஒருங்கிணைந்த கடன் வசதிகள்மூலம் வருவாய் அதிகரித்தல், மலைவாழ் மக்கள் உள்ளிட்ட அனைவருக்குமான பொதுவிநியோகத் திட்டத்தின்கீழ் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்தல் ஆகியவை பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதான நோக்கங்களாகும். நகைக்கடன் வழங்குதல், சுய உதவிக் குழு கடன் வழங்குதல், பயிர்க் கடன் வழங்குதல், நுகர்வோர் கடன் வழங்குதல், வேளாண் இடுபொருள் விநியோகம், வேளாண் விளைபொருள் விற்பனை, சிறுவனப் பொருட்கள் சேகரிப்பு மற்றும் விற்பனை போன்ற பணிகளையும் இச்சங்கங்கள் மேற்கொண்டு வருகின்றன. பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் கொள்முதல் செய்யப்பட்டு பதப்படுத்தப்படும் பொருட்களில் சத்தியமங்கலம் பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் முல்லைத்

2023 ஏப்ரல் 6]

தேன், கொல்லிமலை பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஓரிலேண்ட் காபி ஆகியவை பிரபலமான பொருட்கள் ஆகும். 1958 ஆம் ஆண்டில் முதல் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்தில் அமைக்கப்பட்டது. இதுவே தமிழ்நாட்டில் மிகப் பெரிய பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கமாகும்.

2021-22 ஆம் ஆண்டில் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ரூ.178.15 கோடி அளவிற்கு புரள் வணிகம் செய்துள்ளன. 2022-23 ஆம் ஆண்டில் (28.02.2023 வரை) பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ரூ.256.08 கோடி அளவிற்கு புரள் வணிகம் செய்துள்ளன. சுய உதவிக் குழுக் கடன் மற்றும் மத்தியக் காலக் கடன் வட்டி மானியம் மற்றும் பங்குத் தொகை மானியம் ஆகியவற்றிற்கு அரசு ஆண்டுதோறும் ரூ.90.00 இலட்சம், பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி வருகின்றது.

5.4. தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்: *ஒப்பந்தப் பணிகளை வழங்கி பட்டியலின மக்கள் மற்றும் பழங்குடியின உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பினை உறுதி செய்வதும், வாழ்வாதாரத்தை உயர்த்துவதும் தொழிலாளர் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கங்களின் பிரதான நோக்கங்களாகும். தற்போது தமிழ்நாட்டில் 59 தொழில் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கங்கள் 24,295 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன. ஈரோடு மாவட்டத்தில், பெண்கள் மற்றும் ஆண்களுக்கென தலா ஒரு தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம் என இரு தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் முறையே 04-03-2022 மற்றும் 29-09-2022 ஆகிய தேதிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. பெண்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கிடவும், பணிபுரியும் பெண்களுக்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் சேவைகளை வழங்கிட ஏதுவாகவும் சிறப்பினமாக ஈரோடு மாவட்ட பெண் ஒப்பந்தப் பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் முதலாவதாக துவக்கப்பட்டுள்ளது.*

5.5. துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் லிட்., (TUCAS): *கோயம்புத்தூர் மாவட்டத்தில் துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் (TUCAS) 1955 ஆம் ஆண்டு முதல் சிறப்பினமான தொடக்க விவசாய கூட்டுறவுச் சங்கமாக செயல்பட்டு வருகிறது. வேளாண் இடுபொருள்கள், தரமான*

விதைகள், உரம், பூச்சிகொல்லி மருந்து, வேளாண் கருவிகள் மற்றும் கடன் வழங்குதல் ஆகியவற்றை ஒரே கூரையின்கீழ் வழங்குவதே துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனத்தின் பிரதான நோக்கமாகும். இந்நிறுவனம் வேளாண் இடுபொருட்கள், வேப்பம் பிண்ணாக்கு, நுண்ணூட்டச் சத்து, விதைகள் மற்றும் வேளாண் கருவிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்து விற்பனை மேற்கொண்டு வருகிறது. கலப்பு உரங்கள் தயாரிக்கப்பட்டு, 'அசோகா' என்ற வர்த்தக பெயரில் தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சிறு வணிகக் கடன், தொழில் முனைவோர் கடன், தனிநபர் கடன், நகைக் கடன், அடமானக் கடன், பயிர்க் கடன் போன்ற கடன்களை விவசாய உறுப்பினர்களுக்கு வழங்கி வருகிறது.

5.5.1. மரபியல் தூய்மை மற்றும் அதிகமான முளைப்புத்திறன் சதவிகிதம் கொண்ட தரமான விதைகள் ஆதாய விலையில் விவசாயப் பெருமக்களுக்கு வழங்கிட விதைகள் பலமடங்கு பெருக்கும் திட்டம் 1978 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் நெல், பருத்தி மற்றும் காய்கறி விதைகள் ஆகியவையும் உற்பத்தி செய்யப்படுகின்றன. சான்றளிக்கப்பட்ட நெல் விதைகள் "கோவை விதைகள்" என்ற வர்த்தக பெயரில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

5.5.2. வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளைப் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணி மேற்கொள்ளுதல், அச்சகங்கள், பொதுச் சேவை மையங்கள், ஆவின் மையங்கள் ஆகிய பணிகளையும் துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் மேற்கொண்டு வருகிறது.

5.5.3. கூட்டுறவுச் சங்கங்களிலேயே துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் ஓர் அரிய வகை சங்கமாகும். இச்சங்கம் தொடங்கப்பட்ட 1968 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருகிறது. 1998 ஆம் ஆண்டு முதல் துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் தொடர்ந்து 20% ஈவுத்தொகையை உறுப்பினர்களுக்கு வழங்கி வருகிறது. இந்தியாவில் செயல்பட்டுவரும் தொடக்க கூட்டுறவுச் சங்கங்களில், உறுப்பினர்களுக்கு அதிகமான ஈவுத்தொகை வழங்கும் சங்கங்களில் துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனமும் ஒன்றாகும்.

2023 ஏப்ரல் 6]

5.5.4. கடந்த 5 ஆண்டுகளில் விதைகள், உரக் கலவை மற்றும் வேளாண் கருவிகள் விநியோகம் மற்றும் விற்பனை மேற்கொண்ட விவரம் கீழ்க்கண்டவாறு:-

(ரூ இலட்சத்தில்)

வருடம்	விதைகள்	உரக் கலவைகள்	வேளாண் கருவிகள்
2017-18	125.82	656.94	44.42
2018-19	69.59	536.21	39.79
2019-20	108.70	1417.34	57.07
2020-21	78.30	902.18	25.23
2021-22	113.24	1281.97	53.45

5.5.5. 2022-23 ஆம் ஆண்டில் (28.02.2023 வரை) ரூ.120.82 இலட்சம் மதிப்பிலான விதைகள், ரூ.1,257.37 இலட்சம் மதிப்பிலான உரக் கலவைகள் மற்றும் ரூ.231.57 இலட்சம் மதிப்பிலான வேளாண் கருவிகள் விவசாயிகளுக்கு விற்பனை செய்துள்ளது.

5.6. கூட்டுறவு அச்சகங்கள்: தற்போது, தமிழ்நாட்டில் 11,797 உறுப்பினர்களுடனும் ரூ.2.70 கோடி பங்குத் தொகையுடனும் மாவட்ட அளவில் 26 கூட்டுறவு அச்சகங்கள் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவு அச்சகங்கள் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களின் அச்சுத் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், அருகிலுள்ள மாவட்டங்களில் கூட்டுறவு அச்சகம் இல்லாத நேர்வில் அம்மாவட்டங்களின் அச்சுத் தேவைகளையும் பூர்த்தி செய்து வருகின்றன. தனியார் அச்சகங்களுக்கு இணையாக 14 கூட்டுறவு அச்சகங்களில் நவீன இயந்திரங்கள் நிறுவப்பட்டு அச்சுப் பணி மேம்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக அச்சுப் பணி ஆணைகள் அரசு, அரசு சார்பு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தனியார்களிடமிருந்து பெறப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.

மேலும், காஞ்சிபுரம் மாவட்டக் கூட்டுறவு அச்சகத்தினை நவீனமயமாக்க கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியின்கீழ் ரூ.42.15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இக்கூட்டுறவு அச்சகங்கள் 2021-22 ஆம் ஆண்டில், ரூ.53.31 கோடி அளவிற்கு புரள் வணிகம் செய்துள்ளன. 2022–23 ஆம் ஆண்டில் (28-02-2023 வரை) கூட்டுறவு அச்சகங்களின் புரள் வணிகம் ரூ.59.59 கோடியாக உள்ளது. பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, கூட்டுறவு அச்சகங்களில் கணினி, எழுதுபொருள் மற்றும் அச்சிடப்பட்ட படிவங்கள் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இயல் – 6

பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவு

6.1. இந்தியாவிலுள்ள மாநிலங்களில் தமிழ்நாட்டில் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தப்படுவதால், பொதுமக்கள் அனைவருக்கும் குறிப்பாக, நலிவுற்ற மற்றும் ஏழை மக்களுக்கு உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்வதில் இது முக்கியப் பங்கு வகிக்கின்றது. பொது மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் சரியான நேரத்தில் மற்றும் முறையாக விநியோகிக்கப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு, கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலம் முழுவதும் 24,058 முழு நேர மற்றும் 9,644 பகுதி நேர நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் பரவலான விநியோக தொடரமைப்பை கொண்டுள்ளன மற்றும் மாநிலத்தில் உள்ள மொத்த நியாய விலைக் கடைகளில் 96.87% நியாய விலைக் கடைகளை கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தி வருகின்றன.

6.2. தமிழ்நாட்டில் 27 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், 57 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், 10 பிரதம கூட்டுறவு பண்டகசாலைகள் மற்றும் 2 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் உள்ளிட்ட 96 முதன்மைச் சங்கங்கள் மூலம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு அரிசி, சர்க்கரை மற்றும் கோதுமை ஆகிய அத்தியாவசியப் பொருட்கள் நகர்வு செய்யப்படுகின்றன. இந்த முதன்மைச் சங்கங்கள் 4,155 இணைப்புச் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப்

2023 ஏப்ரல் 6]

பொருட்களை நகர்வு செய்து வருகின்றன. இதைத் தவிர, 9 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளும், 31 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், 144 பிரதம கூட்டுறவு பண்டகசாலைகளும், 120 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும், 7 பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், 16 நகர கூட்டுறவுக் கடன் சங்கங்களும் மற்றும் 3 இதர வகை கூட்டுறவுச் சங்கங்களும், ஆக மொத்தம் 330 கூட்டுறவுச் சங்கங்கள் சுயஎடுப்பு சங்கங்களாக செயல்பட்டு வருகின்றன.

6.3. கூட்டுறவு நியாய விலைக் கடைகள்: *நியாய விலைக் கடைகளில் அரிசி, கோதுமை மற்றும் சர்க்கரை ஆகிய பொது விநியோகத் திட்டப் பொருட்களும், துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகிய சிறப்புப் பொது விநியோகத் திட்டப் பொருட்களும் அரசு வழங்கும் மானிய விலையிலும் மற்றும் இதனுடன் ஊட்டி டீ, அரசு உப்பு, பனை வெல்லம், சிறுதானியங்கள், 5 கி.கி./2கி.கி.* FTL *சிலிண்டர்கள் ஆகிய கட்டுப்பாடற்ற பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன. மாநிலத்திலுள்ள 2,07,20,636 குடும்ப அட்டைதாரர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களினால் நடத்தப்படும் 33,702 நியாய விலைக் கடைகளின் மூலம் அத்தியாவசிய மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. மாநிலத்திலுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்தப்பட்டு வரும் 244 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் மூலம் மண்ணெண்ணெய் வழங்கப்படுகின்றது.*

6.4. நகரும் நியாய விலைக் கடைகள்: *மலைப் பகுதிகள் மற்றும் தொலைதூரக் கிராமப்புறங்களில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கே சென்று அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு, இப்பகுதிகளில் நகரும் நியாய விலைக் கடைகள் செயல்படுகின்றன. தற்போது மாநிலம் முழுவதும், பழங்குடியினர் வசிக்கும் மலை மற்றும் தொலைதூரப் பகுதிகளில் மொத்தம் 58 வாகனங்கள் நகரும் நியாய விலைக் கடைகளாக செயல்பட்டு வருகின்றன.*

[2023 ஏப்ரல் 6

வ. எண்	மண்டலம்	நகரும் நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை	எத்தனை குக்கிராமங்களை உள்ளடக்கி செயல்படுகிறது	இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை	நியாயவிலைக் கடையிலிருந்து நகரும் வாகனம் குக்கிராமத்திற்கு அதிகபட்சம் செல்லும் தூரம் கி.மீ.
1	கோயம்புத்தூர்	4	11	352	5 கி.மீ.
2	தருமபுரி	1	26	1641	12 கி.மீ.
3	ஈரோடு	11	27	1805	32 கி.மீ.
4	நாமக்கல்	2	71	3747	17 கி.மீ.
5	நீலகிரி	23	54	2841	18 கி.மீ.
6	சேலம்	2	27	1543	7 கி.மீ.
7	திருச்சிராப்பள்ளி	2	3	171	9 கி.மீ.
8	திருநெல்வேலி	7	7	886	6 கி.மீ.
9	திருப்பூர்	1	2	151	65 கி.மீ.
10	திருவண்ணாமலை	1	17	972	9 கி.மீ.
11	திருப்பத்தூர்	1	9	501	6 கி.மீ.
12	கள்ளக்குறிச்சி	3	54	4368	12 கி.மீ.
	மொத்தம்	58	308	18,978	

6.4.1. தருமபுரி, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் தொலைதூரப் பகுதிகளிலும், வாகனங்கள் செல்ல இயலாத மலைப்பாங்கான பகுதிகளிலும் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு மட்டக் குதிரைகள் மற்றும் கோவேறு கழுதைகள் ஈடுபடுத்தப்படுகின்றன.

2023 ஏப்ரல் 6]

6.5. **மட்டக் குதிரைகள் மற்றும் கோவேறு கழுதைகள் ஈடுபடுத்தப்படும் நகரும் நியாய விலைக் கடைகளின் விவரம் (வாகனங்கள் செல்ல இயலாத மலைப் பாங்கான பகுதிகள்):**

வ. எண்	நகரும் நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வரும் கிராமங்கள்	பஞ்சாயத்து / தாலுகா	நகரும் நியாய விலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படும் குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை	தாய் நியாய விலை கடைக்கும், கிராமத்திற்கும் இடையே உள்ள தூரம்
திண்டுக்கல்				
1	எல்.மலையூர்	லிங்கவாடி / நத்தம்	125	32 கி.மீ.
2	எல்.மலையூர்	லிங்கவாடி / நத்தம்	59	8 கி.மீ.
தருமபுரி				
3	எரிமலை	பாலக்கோடு	97	8 கி.மீ.
4	கோட்டூர்மலை	பாலக்கோடு	101	4 கி.மீ.
தேனி				
5	பனங்கோடை	அகமலை	4	9 கி.மீ.
6	முதுவாக்குடி	கொட்டக்குடி	25	7 கி.மீ.
7	சொக்கன் அலை	அகமலை	58	3 கி.மீ.
	மொத்தம்		469	

6.5.1. இது தவிர, நியாய விலைக் கடைகளிலிருந்து வெகு தொலைவில் அல்லது இயற்கை தடைகளான ஆறுகள், மலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளால் தனிமைப்படுத்தப்பட்ட குடியிருப்புகளில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதற்காக மாநிலத்தின் நகர மற்றும் கிராமப்புறங்களில் சுமார் 3,000 நகரும் நியாய விலைக் கடைகள் செயல்படுகின்றன.

[2023 ஏப்ரல் 6

வ. எண்	மண்டலம்	மாவட்டங்கள் தோறும் செயல்படும் நகரும் நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை	இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை
1	அரியலூர்	41	6,587
2	சென்னை 1	5	475
3	சென்னை 2	200	47,098
4	கோயம்புத்தூர்	33	3,703
5	கடலூர்	70	14,879
6	தருமபுரி	118	13,609
7	திண்டுக்கல்	135	23,840
8	ஈரோடு	51	7,061
9	காஞ்சிபுரம்	37	8,051
10	செங்கல்பட்டு	65	12,494
11	கன்னியாகுமரி	26	4,772
12	கரூர்	141	16,302
13	கிருஷ்ணகிரி	168	20,788
14	மதுரை	101	14,765
15	நாகப்பட்டினம்	31	13,912
16	மயிலாடுதுறை	83	20,802
17	நாமக்கல்	115	12,983
18	நீலகிரி	11	1,583
19	பெரம்பலூர்	20	3,960
20	புதுக்கோட்டை	100	13,724
21	இராமநாதபுரம்	70	11,223
22	சேலம்	101	12,836
23	சிவகங்கை	70	12,228
24	தஞ்சாவூர்	147	13,137

2023 ஏப்ரல் 6]

வ. எண்	மண்டலம்	மாவட்டங்கள் தோறும் செயல்படும் நகரும் நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை	இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை
25	தேனி	77	13,659
26	திருச்சிராப்பள்ளி	100	14,883
27	திருநெல்வேலி	57	7,162
28	தென்காசி	43	6,194
29	திருப்பூர்	77	8,566
30	திருவள்ளூர்	118	23,125
31	திருவண்ணாமலை	210	27,045
32	திருவாரூர்	125	16,073
33	தூத்துக்குடி	84	12,135
34	வேலூர்	28	4,573
35	திருப்பத்தூர்	49	7,543
36	ராணிப்பேட்டை	32	6,087
37	விழுப்புரம்	55	11,624
38	கள்ளக்குறிச்சி	16	3,570
39	விருதுநகர்	64	8,133
	மொத்தம்	3,074	4,81,184

6.6. நியாய விலைக் கடைகளின் செயல்பாட்டைக் கண்காணித்தல்: பொது விநியோகத் திட்டம் கணினிமயமாக்கப்பட்டுள்ளதால், பொது விநியோகத் திட்ட செயல்பாடுகளை நிகழ்நேர அடிப்படையில் கண்காணிப்பது எளிதாகிறது. கிடங்குகளிலிருந்து சரக்குகள் அனுப்பப்படுவது முதல் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்படுவது வரையிலான பொது விநியோகச் சங்கிலியில் உள்ள அனைத்து பரிவர்த்தனைகளும், மாநிலத்திலுள்ள ஒவ்வொரு நியாய விலைக் கடையிலும் உள்ள விற்பனை முனையக் கருவிகளில் (POS) பதிவு செய்யப்படுகின்றன. இணைய அடிப்படையிலான வலைப்பக்கம்மூலம் இப்பரிவர்த்தனைகள் நிகழ்நேர அடிப்படையில் கண்காணிக்கப்படுகின்றன. ஏறத்தாழ

99% பரிவர்த்தனைகள் கைவிரல் ரேகைப் பதிவு முறையில் மேற்கொள்ளப்படுவதால், போலியாக பட்டிகள் தயாரிப்பது மற்றும் களவு போன்ற முறைகேடுகள் நடைபெறாமல் கட்டுப்படுத்தப்படுகின்றன.

6.7. இதர பொருட்களின் விற்பனை விவரம்

அ. ஊட்டி தேயிலை விற்பனை: தேயிலை விலை வீழ்ச்சியால், நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். சிறு தேயிலை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை சிறிதளவாவது மேம்படுத்தும் நோக்கத்தோடு அவர்கள் உற்பத்தி செய்யும் தேயிலையினை "இண்ட்கோசர்வ்" நிறுவனம் (The Tamilnadu Small Tea Growers' Industrial Cooperative Tea Factories Federation Ltd.) கொள்முதல் செய்து, நியாய விலைக் கடைகள்மூலம் "ஊட்டி டீ" என்ற வியாபார பெயரில் (Brand Name) பொதுமக்களுக்கு விற்பனை செய்து வருகின்றது. 2001-02 முதல் 2022-23 (28-02-2023) வரை 58,741 மெட்ரிக் டன் ஊட்டி டீ கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளின் வழியாக விற்பனை செய்யப்பட்டுள்ளது.

ஆ. அரசு உப்பு விற்பனை: அயோடின் பற்றாக்குறையினால் ஏற்படும் குறைபாடுகளிலிருந்து பொது மக்களைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு, தமிழ்நாடு உப்பு நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படும் அயோடின் கலந்த உப்பு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது. 2000-01 முதல் 2022-23 (28-02-2023) வரை 5,10,364 மெட்ரிக் டன் உப்பு, கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இ. பனைவெல்லம் விற்பனை: 2021-22 ஆம் ஆண்டு வேளாண் துறைக்கான நிதிநிலை அறிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, காதி மற்றும் கிராமத் தொழில் வாரியத்தால் கொள்முதல் செய்யப்படும் பனை வெல்லம் மாநிலம் முழுவதும் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட நியாய விலைக் கடைகளில், விற்பனை செய்யப்படுகின்றது. கூட்டுறவுச் சங்கங்கள்/தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினால் நடத்தப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட நியாய விலைக் கடைகள்/சில்லறை விற்பனை நிலையங்களில் பனைவெல்லம் "கற்பகம்" என்ற

2023 ஏப்ரல் 6]

வணிகப் பெயரில் விற்பனை செய்யப்படுகின்றது. அக்டோபர் 2021 முதல் பிப்ரவரி 2023 வரை ரூ.102.38 இலட்சம் மதிப்பிலான பனை வெல்லம் நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.


ஈ. சிறுதானியங்கள் விற்பனை: *2021-22 ஆம் ஆண்டு வேளாண் துறைக்கான நிதிநிலை அறிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, கேழ்வரகு, கம்பு, தினை, குதிரைவாலி, சாமை மற்றும் வரகு ஆகிய சிறுதானியங்கள், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் தொழிற்துறை ஆணையரகத்தின்கீழ் செயல்பட்டு வரும் உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்புகளினால் (FPOs) கொள்முதல் செய்யப்பட்டு, சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்களில் கூட்டுறவுகள்/தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நடத்தப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட நியாய விலைக் கடைகள்/சில்லறை விற்பனை நிலையங்களில், விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. சிறுதானியங்களில் ஊட்டச்சத்துகள் நிறைந்திருப்பதால், பொதுமக்களுக்கு ஊட்டச்சத்து பாதுகாப்பினை இவை உறுதிசெய்கின்றன. ஜுன் 2022 முதல் பிப்ரவரி 2023 வரை ரூ.26.4 இலட்சம் மதிப்பிலான சிறுதானியங்கள் நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.*

உ. 5 கி.கி./2கி.கி. FTL சிலிண்டர்கள் விற்பனை: *புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் தள்ளுவண்டி விற்பனையாளர்கள் ஆகியோரின் வசதிக்காக, இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் (IOC)/இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேசன் லிமிடெட் (HPCL) நிறுவனங்கள் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு நியாய விலைக் கடைகளில் 5கிகி/2கிகி FTL சிலிண்டர்களின் சில்லறை விற்பனை தொடங்கப்பட்டுள்ளது. FTL சிலிண்டர் பெறுவதற்கு குடியிருப்பிற்கான சான்றிதழ் அளிக்கப்பட வேண்டிய அவசியமில்லை. அக்டோபர் 2022 முதல் பிப்ரவரி 2023 வரை ரூ.6.23 இலட்சம் மதிப்புள்ள சிலிண்டர்கள் நியாய விலைக் கடைகளின் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன.*

6.8. கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் தர மேலாண்மை

அ. நியாய விலைக் கடைகளுக்கு ISO தரச் சான்றிதழ்: *நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு*

சிறந்த சேவை வழங்கப்படுவதை உறுதி செய்யும்பொருட்டு, கூட்டுறவுத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வரும் நியாய விலைக் கடைகளுக்கு தரக் கட்டுப்பாடு தொடர்பான (Quality Management System) ISO:9001 தரச் சான்றிதழினையும், Security in Supply Chain Management and Storage-க்கான ISO:28000 தரச் சான்றிதழினையும் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை 3,712 நியாய விலைக் கடைகளுக்கு ISO:9001 சான்றிதழும், 12 நியாய விலைக் கடைகளுக்கு ISO:28000 சான்றிதழும் பெறப்பட்டுள்ளன. 2,019 நியாய விலைக் கடைகளுக்கு இரண்டு சான்றிதழ்களும் பெறப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 5,743 நியாய விலைக் கடைகளுக்கு மதிப்புமிக்க ஐஎஸ்ஓ தரச்சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. படிப்படியாக, அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் ஐஎஸ்ஓ தரச் சான்றிதழினைப் பெறுவதற்கும் மற்றும் பெறப்பட்ட ஐஎஸ்ஓ தரச் சான்றிதழ்கள் உரிய காலத்தில் புதுப்பிக்கப்படவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



ஆ. நியாய விலைக் கடைகளை நவீனமயமாக்குதல்: 75-வது சுதந்திர தினத்தைப் பிரதிபலிக்கும் வகையில் (75-வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா) ஒவ்வொரு மாவட்டத்திலும், குறைந்தபட்சமாக 75 நியாய விலைக் கடைகளை தேர்ந்தெடுத்து முன்மாதிரி நியாய விலைக் கடைகளாக மாற்றம் செய்திடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை 2,965 நியாய விலைக் கடைகளை நவீனமயமாக்குதல் பணி நிறைவுபெற்றுள்ளது.

2023 ஏப்ரல் 6]

6.9. காலிக்கோணிகளை எம்.எஸ்.டி.சி. (MSTC) நிறுவனம் வழியாக மின்னணு ஏலம் (e-auction) மூலம் விற்பனை செய்தல்: *காலி சணல் கோணிகள், MSTC (Metal Scrap Trading Corporation Ltd.) இணையதளத்தின் மின்னணு-ஏல தளம் மூலம் விற்பனை செய்யப்படுவதால், காலி சணல் கோணிகளின் விற்பனையில் வெளிப்படைத்தன்மை மற்றும் காலி சணல் கோணிகளுக்கு சிறந்த விலை கிடைக்கப்படுவதை உறுதிசெய்ய உதவுகின்றது. காலி சணல் கோணிகளின் விவரங்கள் MSTC இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றது மற்றும் மின்னணு-ஏலம் வெளிப்படையான முறையில் நடைபெறுகின்றது. MSTC-யின் மின்னணு-ஏல தளத்தின் வாயிலாக 28-02-2023 வரை மொத்தம் 32,85,79,240 காலி சணல் கோணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.*

6.10. புதிய நியாய விலைக் கடைகளைத் திறத்தல்: *பொது மக்களுக்கு உரிய காலத்தில் மற்றும் சீரான முறையில் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்வதற்கும் மற்றும் மக்களின் உண்மையான மற்றும் வளர்ந்துவரும் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், மாநிலம் முழுவதும் மே 2021 முதல் பிப்ரவரி 2023 வரை 183 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 514 பகுதி நேர நியாய விலைக் கடைகள் உட்பட மொத்தம் 697 புதிய நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.*

6.11. திட்டங்களை ஒருங்கிணைத்து நியாய விலைக் கடைகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல்: *தமிழ்நாடு அரசின் கொள்கையினை நடைமுறைப்படுத்தும் விதமாக, மாநிலம் முழுவதும், கூட்டுறவுத் துறையின்கீழ் தனியார் வாடகை கட்டடங்களில் இயங்கிவரும் 6,970 நியாய விலைக் கடைகளுக்கு இலவசமாக நிலம் கிடைக்கும் இடங்களில் புதிய கட்டடங்கள் கட்ட முடிவு செய்யப்பட்டு, படிப்படியாக சொந்தக் கட்டடங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. நியாய விலைக் கடைகளுக்கு கட்டடம் கட்ட அடையாளம் காணப்பட்டுள்ள மொத்தமுள்ள 1,041 இடங்களில், 652 இடங்களுக்கு அனுமதியின் பேரில் உள்ளிட அனுமதியும், (Enter upon permission) 430 இடங்களுக்கு நிர்வாக அனுமதியும் (Administrative Sanction) சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களால் அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 28 நியாய விலைக் கடைகளுக்கு கட்டடம் முழுவதுமாக*

கட்டி முடிக்கப்பட்டுள்ளது மற்றும் இதர 249 இடங்களில் கட்டுமானப் பணி தொடங்கப்பட்டு, பல்வேறு நிலைகளில் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

6.11.1. மாநிலம் முழுவதும், மே 2021 முதல் பிப்ரவரி 2023 வரை, 74 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 41 பகுதி நேர நியாய விலைக் கடைகள் ஆக மொத்தம் 115 நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

6.12. புதிய நியாய விலைக் கடைகளை சீரான வடிவமைப்பில் கட்டுதல்: மாநிலம் முழுவதும், புதிய நியாய விலைக் கடைகள் கட்டுவதற்கு, இரண்டு தனித்துவமான கட்டட வடிவமைப்புகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

1. 500-க்கும் குறைவான குடும்ப அட்டைகளுடன் இயங்கும் நியாய விலைக் கடைகளுக்கு 440 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டடங்கள் 7.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவும்,

2. 500-க்கும் கூடுதலான குடும்ப அட்டைகளுடன் இயங்கும் நியாய விலைக் கடைகளுக்கு 550 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டடங்கள் 10.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவும்.

6.12.1. மத்திய அரசின் திட்டங்களை ஒருங்கிணைத்து மற்றும் சங்கங்களின் சொந்த நிதியைப் பயன்படுத்தி சாத்தியப்படும் இடங்களில், புதிய நியாய விலைக் கடைகளுக்கான கட்டுமானப் பணிகள் கீழ்கண்டவாறு மேற்கொள்ளப்படுகின்றன:

28-02-2023 அன்று வரையிலான முன்னேற்ற விவரம்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்/ பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்	-	398
மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம் (MGNREGA)	-	117
உள்ளாட்சி அமைப்புகள்	-	198

2023 ஏப்ரல் 6]

SSS/நமக்கு நாமே	-	16
தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் பன்னோக்கு சேவை மையம் (PACCS as MSCs)	-	65
மொத்தம்	-	794

6.13. நியாய விலைக் கடைகளை பொருளாதார ரீதியாக மேம்படுத்த முன்னெடுக்கப்படும் முயற்சிகள்: *நியாய விலைக் கடைகளைப் பொருளாதார ரீதியாக மேம்படுத்த பின்வரும் கட்டுப்பாடற்ற பொருட்களை நியாய விலைக் கடைகளின் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது:*

- ஊட்டி டீ, அரசு உப்பு
- கூட்டுறவில் தயாரிக்கப்பட்ட பொருட்கள்
- பிராண்டட் நுகர்பொருட்கள் (FMCGs)
- 5கி.கி./2கி.கி. FTL சிலிண்டர்கள்

6.14. அனைத்து வகையான இ—சேவைகளையும் நியாய விலைக் கடைகளின்மூலம் ஒரே இடத்தில் வழங்கிடும் முயற்சிகள்: *நியாய விலைக் கடைகளின் மூலம் பொது மக்களுக்கு பின்வரும் சேவைகளை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

- கடவுச்சீட்டு பெற விண்ணப்பித்தல்:
- ஆதார் தொடர்பான சேவைகள்
- மின் கட்டணம் செலுத்துதல்
- சொத்து வரி செலுத்துதல்
- செல்பேசிகளுக்கு ரீசார்ஜ் செய்தல்
- தொலைபேசிக் கட்டணம் செலுத்துதல்

6.15. நியாய விலைக் கடைகளில் பணமில்லா பரிவர்த்தனைகளுக்கான கட்டண நுழைவாயில் (Payment Gateway) வசதிகளை உறுதி செய்தல்: *அனைத்து நியாய விலைக் கடைகளிலும்,* GPay, Paytm, BHIM, PhonePe *போன்ற ஒருங்கிணைந்த பரிவர்த்தனை இடைச் செயலிகள்மூலம் ரொக்கமற்ற பரிவர்த்தனை சேவைகளை படிப்படியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

6.16. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை பல்சேவை மையங்களாக மாற்றும் (PACCS as MSC) திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடைகளைப் புதுப்பித்தல் மற்றும் புதிய கட்டடங்கள் கட்டுதல்: *தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களைப் பல்சேவை மையங்களாக மாற்றும் திட்டத்தின்கீழ் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன:*

- *நியாய விலைக் கடைகளைப் பழுதுபார்த்தல்*
- *நியாய விலைக் கடைகளைப் புதுப்பித்தல்*
- *நியாய விலைக் கடைகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல்*
- *உணவு தானியங்களைச் சேமித்து வைப்பதற்காக சிறிய கிடங்குகளைக் கட்டுதல்*
- *உணவு தானியங்களை அடுக்கி வைப்பதற்கு தட்டுகளை (Pallets) பயன்படுத்துதல்*
- *உணவு தானியங்களைச் சேமித்து வைப்பதற்கும் மற்றும் விநியோகம் செய்வதற்கும் துருப்பிடிக்காத எஃகு கொள்கலன்களைப் பயன்படுத்துதல்*
- *நியாய விலைக் கடைகளில் பொது சேவை மையங்களைத் தொடங்குதல்*

6.17. நியாய விலைக் கடைகளை நடத்தும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அரசு மானியம்: *கூட்டுறவுச் சங்கங்கள் இலாப நோக்கின்றி குடும்ப அட்டைதாரர்களுக்கு சேவை செய்யும் மனப்பான்மையுடன் நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன. குடும்ப அட்டைதாரர்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அத்தியாவசிய மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டப் பொருட்களை விலையில்லாமல் அல்லது அரசால் நிர்ணயிக்கப்பட்ட மானிய விலையில் விநியோகம் செய்து வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் நியாய விலைக் கடைகளை நடத்துவதில் ஏற்படும் நட்டத்தை ஈடு செய்யும் வகையில் அரசு மானிய வடிவில் நிதியுதவியினை வழங்குகிறது. 2021-2022 ஆம் நிதி ஆண்டில் ரூ.600.81 கோடியும், 2022-2023 ஆம் நிதி ஆண்டில் இதுவரை ரூ.345.18 கோடியும் ஆக மொத்தம் ரூ.945.99 கோடியினை நியாய*

2023 ஏப்ரல் 6]

விலைக் கடைகள் நடத்துவதால் நட்டம் அடைந்த கூட்டுறவு நிறுவனங்களுக்கான நிதியுதவியினை பொது விநியோகத் திட்ட மானியமாக விடுவித்து, அரசு ஆணையிட்டுள்ளது.

6.18. கூட்டுறவுகளின் மூலமாக நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை அடைதல்: உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதிலும், ஏழைகள் மற்றும் நலிவுற்ற மக்களின் நீடித்த நிலையான வளர்ச்சிக்கு தேவையான உதவிகளை வழங்குவதிலும் பொது விநியோகத் திட்டம் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறது. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான 17 இலக்குகளில் இலக்கு எண் 1. வறுமையின்மை, இலக்கு எண் 2. பசியின்மை மற்றும் இலக்கு எண் 3. நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு ஆகிய மூன்று இலக்குகளை அடைவதில் தமிழ்நாடு அரசின் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் பெரும் பங்காற்றுகிறது.

இயல் — 7

கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

முன்னுரை

7.1. கூட்டுறவுக் கல்வி, பயிற்சி, விளம்பரம் மற்றும் விழிப்புணர்வின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டு மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும், மாவட்ட அளவில் 37 மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும் செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவு இயக்கத்தின் நோக்கத்தை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், உறுப்பினர் கல்வித் திட்டங்கள், பொருட்காட்சிகள், கருத்தரங்குகள், கூட்டுறவு வார விழாக்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி ஆகியவற்றை இந்நிறுவனங்கள் நடத்தி வருகின்றன.

7.1.1. தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுத் துறை அலுவலர்களின் செயல்திறனை மேம்படுத்தும்பொருட்டும், இதர மாநிலங்களில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளை அறிந்துகொள்ளும் பொருட்டும், தமிழ்நாட்டில் பணிபுரியும் கூடுதல் பதிவாளர், இணைப்பதிவாளர் மற்றும்

துணைப்பதிவாளர் நிலையில் உள்ள அலுவலர்கள் Vaikunth Mehta National Institute of Cooperative Management (VAMNICOM), பூனே, மஹாராஷ்ட்ரா; Institute of Rural Management (IRMA) Anand, குஜராத்; Indian Institute of Management (IIM), பெங்களூரு, லக்னோ, கொல்கத்தா; National Institute of Financial Management (NIFM), பரிதாபாத், அரியானா; National Institute of Secretariat Training & Development (NISTD), புது டெல்லி ஆகிய கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களுக்குப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.

7.1.2. மேலும், கூட்டுறவுத் துறைக்கு தொகுதி-I பணிக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட துணைப்பதிவாளர்களும், Institute of Rural Management Anand (IRMA), Gujarat உட்பட இதர மாநிலங்களில் செயல்படும் பல்வேறு நிறுவனங்களுக்குப் பயிற்சிக்கு அனுப்பப்படுகின்றனர். கேரள மாநிலம், கொச்சியில் 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டுறவு கண்காட்சியில் தமிழ்நாடு கூட்டுறவுத் துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் கலந்துகொண்டனர். தேசிய அளவிலான கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தை ரூ.126.00 கோடி மதிப்பீட்டில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென அரசால் 7.5 ஏக்கர் நிலம் கொடைக்கானல் அருகில் உள்ள மனவனூர் கிராமத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

7.1.3. தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில் பணியாற்றும் அலுவலர்கள், பணியாளர்கள், தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகக் குழு பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு முறையான கூட்டுறவுப் பயிற்சி அளிக்கும்பொருட்டு ஒருங்கிணைந்த கூட்டுறவு பயிற்சிக் கொள்கை உருவாக்க திட்டமிடப்பட்டு, இறுதியாக்கம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டில் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூரில் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி 2022-23 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு, 5 பாடப் பிரிவுகளின்கீழ் 263 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இக்கல்லூரிக்கு ரூ.75.75 கோடி மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் கட்டும் பணி துவங்கப்பட்டு, நடைபெற்று வருகிறது.

2023 ஏப்ரல் 6]

7.2. கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள்: *தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின்கீழ் 22 கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் மாணவர்களுக்கு 36 வார முழுநேர கூட்டுறவுப் பட்டயப் பயிற்சியை நடத்துவதுடன், வகுப்பறை பயிற்சி பெற இயலாத கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கு அஞ்சல் வழிக்கல்வி மூலம் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சியினை அளித்து வருகின்றன. இந்நிறுவனங்கள் கூட்டுறவுத் துறை அலுவலர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு குறுகியகாலப் பயிற்சிகளையும் நடத்தி வருகின்றன. சமையல் கலை கைவினைஞர்களை உருவாக்கும் பொருட்டு, 7 கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்களில் சான்றிதழுடன்கூடிய "சமையல் கலை கைவினைஞர் (பொது)" பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.*

2022-23 ஆம் ஆண்டில், 5,391 மாணவர்கள் முழு நேரக் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சியிலும், 2,088 மாணவர்கள் அஞ்சல் வழி பயிற்சியிலும் பயின்று வருகின்றனர்.

7.3. தொழிற்கல்வி: *இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்பை உருவாக்கும் பொருட்டு, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தலா ஒரு கூட்டுறவு தொழிற்பயிற்சி நிறுவனத்தை தருமபுரி மாவட்டம், பர்கூரிலும், தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையிலும் நடத்தி வருகிறது. இக்கூட்டுறவு தொழிற்பயிற்சி நிலையங்களில் கணினி தொழில்நுட்ப உதவியாளர் பயிற்சி, நகை மதிப்பீட்டாளர் பயிற்சி, தையற்கலை, மின் பழுதுபார்த்தல், சமையல் கலை கைவினைஞர் (பொது) பயிற்சி ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 2022-23 ஆம் ஆண்டில் மேற்கண்ட இரு தொழிற்பயிற்சி நிறுவனங்களில் 224 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.*

ஏழை, எளிய மாணவர்களுக்கு இலவசமாக தொழிற்கல்வி வழங்குவதற்காக, கூட்டுறவு தொழிற்கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு 2021-22 ஆம் ஆண்டில் அரசு ரூ.19.05 இலட்சம் நிதி உதவி வழங்கி உள்ளது.

மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடியில் ஒரு கூட்டுறவுத் தொழில்நுட்பக் கல்லூரியும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் நடத்தப்பட்டு வருகிறது. இத்தொழில்நுட்பக்

கல்லூரியில், இயந்திரவியல், கணினி பொறியியல், மின்சாரம் மற்றும் மின்னணுவியல் ஆகிய மூன்று பட்டயப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2022-23 ஆம் ஆண்டில் மேற்காணும் பட்டயப் பயிற்சிகளில் 168 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

2021-22 ஆம் ஆண்டில், தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை கூட்டுறவு தொழிற்பயிற்சி நிலைய மாணவி ஸ்ரீகிருத்திகா, அகில இந்திய தொழிற் தேர்வில் இந்திய அளவில் மூன்றாவது இடம் பிடித்து வெற்றி பெற்றுள்ளார்.

7.4. கூட்டுறவு மேலாண்மை தொடர்பான உயர் பட்டயப் பயிற்சி மற்றும் குறுகியகாலப் பயிற்சி: தேசிய கூட்டுறவு பயிற்சிக் குழுமத்தால் (புதுடெல்லி), சென்னை மற்றும் மதுரையில் நடத்தப்பட்டு வரும் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் நிதி உதவி வழங்கி வருகிறது. இவ்விரு நிலையங்களில் கூட்டுறவு மேலாண்மை உயர் பட்டயப்பயிற்சி நடத்தப்பட்டு வருவதுடன் வணிக மேலாண்மையியல் முதுகலைப் பட்டப்படிப்பும் (MBA) நடத்தப்பட்டு வருகிறது. கூட்டுறவுத் துறை மற்றும் கூட்டுறவு நிறுவனப் பணியாளர்களுக்கு குறுகியகாலப் பயிற்சிகளும் இப்பயிற்சி நிலையங்களில் நடத்தப்படுகின்றன.

7.4.1. 2022-23 ஆம் ஆண்டில் (28.02.2023 முடிய) நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலையம், சென்னையில் 130 குறுகிய காலப் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இதில் 7,465 பணியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். கூட்டுறவு மேலாண்மை நிலையம், மதுரையில் 61 குறுகியகாலப் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இதில் 1,704 பணியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

7.5. பல்கலைக்கழகங்களில் கூட்டுறவு ஆராய்ச்சி: தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம் மற்றும் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம் ஆகிய ஒவ்வொன்றிலும் ரூ.5.00 இலட்சத்தினை நிதி மூலதனமாக வைத்து கூட்டுறவில் ஆராய்ச்சி மேற்கொள்ளும் மாணவர்களை ஊக்குவித்து வருகிறது. கூட்டுறவு மற்றும் அதன் தொடர்புடைய இனங்களில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு இதிலிருந்து கிடைக்கும் வட்டித்

2023 ஏப்ரல் 6]

தொகைமூலம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதுவரை ரூ.21.25 இலட்சம் உதவித் தொகையாக 25 ஆராய்ச்சித் திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

7.6. தேசிய அளவிலான கூட்டுறவு மேலாண்மைப் படிப்பு, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் அமைத்தல்: *கூட்டுறவு கல்விக்கென பிரத்யேகமாக தேசிய அளவிலான உயர்கல்வி நிறுவனம் ஒன்றினை தொடங்கி அகில இந்திய அளவில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. இதற்கென அரசு 7.5 ஏக்கர் நிலத்தினை கொடைக்கானல் தாலுகா, மனவனூர் கிராமத்தில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது. இந்நிறுவனம், குறிப்பிட்ட கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து பங்களிப்பு பெற்று ரூ.126.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளது. இந்நிறுவனம் கூட்டுறவுத் துறை மற்றும் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு உள்ளிருப்பு பயிற்சிகளை வழங்குவதுடன் ஆராய்ச்சி மேற்கொள்வதற்கான வசதிகளையும் ஏற்படுத்தித் தரும்.*

7.7. கலை மற்றும் அறிவியல் கல்லூரி: *திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் 2022-23 கல்வியாண்டில் ஒரு புதிய கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி 2-9-2022–ல் தொடங்கப்பட்டு, 5 பிரிவுகளில் 263 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இக்கல்லூரிக்கு ரூ.75.75 கோடி மதிப்பீட்டில் சொந்தக்கட்டடம் கட்டப்படும். இதர கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைப் போல் அல்லாமல், கட்டப்படவுள்ள கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தனித்துவத்துடனும், நேர்த்தியான வடிவமைப்புடனும் திகழும். கல்லூரிக்கான கட்டடம் கட்டி முடிக்கப்படும்போது, இது 14,890 சதுர மீட்டர் பரப்பளவில் 40 வகுப்பறைகள், 15 சோதனைக் கூடங்கள், 200 இருக்கைகள் கொண்ட திறந்தவெளி கூட்ட அரங்கம், 620 இருக்கைகள் கொண்ட முழுமையாக குளிரூட்டப்பட்ட கூட்ட அரங்கம், 200 இருக்கைகள் கொண்ட நூலகம் போன்றவற்றைக் கொண்டிருக்கும். இக்கல்லூரி புதிய கட்டடத்தில் செயல்படத் துவங்கும்போது 10 வகையான பாடப்பிரிவுகளில் பயிலும் இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களையும் சேர்த்து அதிகபட்சமாக 2,000 மாணவர்கள் கல்வி பயில வழிவகுக்கும்.*

[2023 ஏப்ரல் 6

7.8. கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியின் பயன்பாடு: கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் நிகர இலாபத்தில் 3 விழுக்காடு தொகையை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக்கு அளிக்கின்றன. இந்நிதியிலிருந்து, கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கென நிதி மானியமாகவும், வட்டியில்லாக் கடனாகவும், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக் குழுவின் ஒப்புதலுடன் விடுவிக்கப்படுகிறது.

2022-23 ஆம் ஆண்டில் 28.02.2023 முடிய இந்நிதியிலிருந்து ரூ.6.21 கோடி மானியமாகவும், ரூ.27.73 கோடி வட்டியில்லாக் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

7.9. கூட்டுறவுக் கல்வி நிதியின் பயன்பாடு: கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் நிகர இலாபத்தில் 2 விழுக்காடு தொகையை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவுக் கல்வி நிதிக்கு வழங்குகின்றன. இந்நிதியிலிருந்து, கூட்டுறவு கல்வி மற்றும் பயிற்சி, கூட்டுறவு பிரச்சாரம், கூட்டுறவு விளம்பரம் ஆகியவற்றிற்கு கூட்டுறவு, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக் குழுவின் ஒப்புதலுடன் நிதியுதவி வழங்கப்படுகிறது.

7.9.1. மேலும், கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் துறை அலுவலர்களுக்கு குறுகிய காலப் பயிற்சிகள் நடத்துவதற்கும், மாவட்டங்களில் உறுப்பினர் கல்வித் திட்டம், இளைஞர் ஈர்ப்பு முகாம்கள் நடத்துவதற்கும் மற்றும் அகில இந்திய கூட்டுறவு வார விழாக்கள் கொண்டாடுவதற்கும் இந்நிதி பயன்படுத்தப்படுகிறது.

இயல்-8

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

8.1. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் என்பது ஒரு மாவட்டத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு நிறுவனங்களின் முழுமையான வளர்ச்சிக்காக செயல்படுத்தப்படும் பிரத்யேகமான திட்டம் ஆகும். இத்திட்டம் மாநில அரசு மற்றும் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் நிதியுதவியுடன்

2023 ஏப்ரல் 6]

செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாட்டை மேம்படுத்த தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கித் தருவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பல்வகை கூட்டுறவுச் சங்கங்களின் வியாபார வளர்ச்சிக்காக, பங்கு மூலதனம் மற்றும் நடைமுறை மூலதனத்தை அதிகரிக்கவும் இத்திட்டத்தின் மூலம் நிதி உதவி அளிக்கப்படுகிறது. கூட்டுறவு சங்கப் பணியாளர்களின் நிர்வாகம் மற்றும் மேலாண்மை செயல்திறனை ஊக்குவிக்க, பல்வேறு பயிற்சிகளும் இத்திட்டத்தின் வாயிலாக அளிக்கப்படுகின்றது.

8.2. தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் 1989-ல் தொடங்கப்பட்டு, இதுவரை 37 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு உள்ளது. இந்த 37 மாவட்டங்களில், ரூ.646.57 கோடி, கூட்டுறவுச் சங்கங்களின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. தற்போது, சென்னை மண்டலத்தில் ரூ.172.18 கோடி மதிப்பீட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் மேம்பாட்டிற்காக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது

8.3. கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், பால் கூட்டுறவுச் சங்கங்கள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திக் கொள்ளவும், நடைமுறை மூலதனத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளவும் தமிழ்நாடு அரசு, கடன், பங்குத் தொகை மற்றும் மானியமாக நிதி உதவி வழங்கி, பின்னர் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து மறுநிதியாக பெறுகிறது.

8.4. உட்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்திடும் வகையில் புதிய கிடங்கு மற்றும் அலுவலக கட்டடம் கட்டுதல், பழைய கட்டடங்களைப் புனரமைத்தல் மற்றும் மின்னணு எடை இயந்திரம், இருப்பு பெட்டகம், பணப்பெட்டி, பாதுகாப்பு பெட்டகம், பணம் எண்ணும் இயந்திரம் மற்றும் நவீன வங்கி அமைப்பு ஆகியவற்றினைக் கொள்முதல் செய்து அமைத்திடவும் நிதியுதவியானது கடனாகவும், பங்குத் தொகையாகவும், மானியமாகவும் அளிக்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களில் வியாபார வளர்ச்சியை மேம்படுத்தவும், கடன் வாங்கும்

திறனை அதிகரிக்கவும் பங்கு மூலதனமாக விளிம்புத்தொகை வழங்கப்படுகிறது.

8.5. புதுப்பிக்கத்தக்க பசுமை ஆற்றலை ஊக்குவிக்கவும், படிமம் சார்ந்த ஆற்றலை நம்பி இருப்பதைக் குறைக்கவும், வேலூர், கரூர், திண்டுக்கல், நாகப்பட்டினம், சிவகங்கை, திருவள்ளூர், கன்னியாகுமரி மற்றும் நாமக்கல் ஆகிய 8 மாவட்டங்களில் உள்ள 266 கூட்டுறவுச் சங்கக் கட்டடங்களில், ரூ.7.46 கோடி செலவில், ஒரு கிலோ வாட் முதல் ஐந்து கிலோ வாட் வரை உற்பத்தித் திறன் கொண்ட ஒளி மின் அழுத்த சூரிய ஒளி வாங்கிகள் அமைக்கப்பட்டன. இச்சூரிய ஒளி வாங்கிகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தடையற்ற மின்சாரத்தை வழங்கி, மின்கட்டண செலவையும் வெகுவாகக் குறைத்துள்ளது.

8.6. கடலூர், தருமபுரி, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, ராமநாதபுரம், திருப்பூர், திருவண்ணாமலை, விழுப்புரம், விருதுநகர் ஆகிய 9 மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் இரண்டாம் கட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலே கூறப்பட்ட 9 மாவட்டங்களுக்கான திட்ட மதிப்பீட்டுத் தொகை பின்வருமாறு:

(ரூ.கோடியில்)

வ. எண்	ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் மாவட்டத்தின் பெயர்	தொகை
1	விழுப்புரம்	123.52
2	கடலூர்	143.62
3	திருப்பூர்	160.84
4	திருவண்ணாமலை	159.11
5	விருதுநகர்	111.29
6	கிருஷ்ணகிரி	78.28
7	இராமநாதபுரம்	51.79
8	தருமபுரி	35.64
9	காஞ்சிபுரம்	134.12
	கூடுதல்	998.22

2023 ஏப்ரல் 6]

இயல் - 9

கூட்டுறவுத் தேர்தல்

9.1. இந்திய அரசியலமைப்பு (97-வது திருத்த) சட்டம், 2011 மூலம் இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் புதியதாக சேர்க்கப்பட்ட பகுதி IX-B-ல் உள்ள இந்திய அரசியலமைப்பு சட்டப் பிரிவு 243 ZK-ன்படி கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலை நடத்திட 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கப்பட்ட புதிய சட்டப் பிரிவு 33-Aன்கீழ் தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் உருவாக்கப்பட்டது.

9.2. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 33(11) (b)-ன்படி ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் தேர்தல் அட்டவணை தயாரித்தல், அனைத்து தேர்தல் நடத்தப்படுவதைக் கண்காணித்தல் போன்றவற்றை கூட்டுறவுச் சங்கத் தேர்தல் ஆணையம் மேற்கொள்கிறது.

9.2.1. 2013 ஆம் ஆண்டில், 97-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், 2011-ன்படி, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், 1983-ல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, பெண்களுக்கு அதிகாரம் அளிக்கவும், சமூக நீதிக்கு உத்தரவாதம் அளிக்கவும், கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுவில் 18% பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கும் மற்றும் 30% பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.

9.2.2. தமிழ்நாட்டில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 செயற்பதிவாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள 22,552 சங்கங்களுக்கு 2013 ஆம் ஆண்டு தேர்தல் நடத்தப்பட்டு, 2,04,889 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

9.3. 2013 ஆம் ஆண்டு தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்களின் ஐந்தாண்டு பதவிக் காலம் ஏப்ரல் 2018 ஆம் ஆண்டு முடிவடைந்துவிட்ட நிலையில், தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தால் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 செயற்பதிவாளர்கள்

[*2023 ஏப்ரல் 6*

கட்டுப்பாட்டிலுள்ள 18,805 கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் நான்கு கட்டங்களாக நடத்த அறிவிக்கப்பட்டது.

9.4. 18,805 கூட்டுறவுச் சங்கங்களில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டிலுள்ள 7,101 கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல்கள் நடத்தப்பட்டன. இதில் 77,204 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொறுப்பு ஏற்றுக்கொண்டனர். அவர்களில் 7,049 நபர்கள் தலைவர்களாகவும் மற்றும் 7,047 நபர்கள் துணைத்தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொறுப்பு ஏற்றுக் கொண்டனர்.

9.5. தற்போது, 28.02.2023 அன்றுள்ளபடி, தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள சங்கங்களையும் சேர்த்து சுமார் 7,628 கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், இச்சங்கங்களுக்கு 2023 ஆம் ஆண்டில் தேர்தல்கள் நடத்திட வேண்டியுள்ளது.

இயல் - 10

முடிவுரை

கூட்டுறவு அடிப்படையிலான பொருளாதார வளர்ச்சி மாதிரியை புதுப்பித்தல், ஊக்குவித்தல் மற்றும் வளரச்செய்தல், மாநிலத்தில் பல்வேறு துறைகளில் கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்துதல் மற்றும் அடித்தட்டு வரை அது சென்றடைய செய்தல் ஆகியவற்றின் மூலம் "கூட்டுறவின் மூலம் செழுமை" என்ற தொலைநோக்கை நனவாக்க நமது மாநிலம் முனைப்பாக உள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள், அவற்றிடம் உள்ள வைப்புத்தொகையை ஆற்றலுடன் பயன்படுத்திடவும், அவ்வைப்புத் தொகைகளிலிருந்து பல்வேறு வகையான கடன்களை அதிகளவில் வழங்கிடவும், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (நபார்டு) மறுநிதி மற்றும் பிற திட்டங்களை சரியான முறையில் பயன்படுத்திடவும் ஊக்குவிக்கப்படுகின்றன. முந்தைய அத்தியாயங்களில் தெரிவித்துள்ளவாறு பின்வரும் இலக்குகளை எய்திட கூட்டுறவுத் துறை உறுதிபூண்டுள்ளது:

2023 ஏப்ரல் 6]

1. ஒவ்வொரு கிராமத்திலும்/பஞ்சாயத்திலும் இதர நிலையான செயல்பாடுகளை மேற்கொள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தை ஊக்குவித்தல்: தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம், அடுத்த ஐந்தாண்டுகளில் கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்துதல் மற்றும் ஒவ்வொரு பஞ்சாயத்து/ கிராமத்திலும் அடிமட்ட அளவில் சென்றடைய திட்டமிடப்பட்டுள்ளது.

2. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை (PACCS) கணினிமயமாக்கல்: செயல்பாட்டில் உள்ள 4,000-க்கும் மேற்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை ERP (எண்டர்பிரைஸ் ரிசோர்ஸ் பிளானிங்) அடிப்படையிலான பொதுவான தேசிய மென்பொருளில் உள்ளடக்கிய கணினிமயமாக்கல் நடைமுறைப்படுத்துதல்.

3. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் வாழ்திறனை மேம்படுத்திட அவற்றை பொது சேவை மையங்களாகச் செயல்பட செய்தல், அவற்றின் நம்பகத்தன்மையை மேம்படுத்துதல், கிராம அளவில் இ-சேவைகளை வழங்குதல் மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்குதல் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை இதர வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்தல்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் நபார்டு ஆகியவற்றின் உதவி கொண்டு, விவசாயிகள் அவர்தம் விளைபொருட்களைச் சேமித்து, உரிய நேரத்தில் நல்ல விலைக்கு விற்க ஏதுவாக, பரவலாக்கப்பட்ட கிடங்கு வசதிகளை ஏற்படுத்த ஊக்குவித்தல்.

5. மாநில அரசு திட்டங்கள் மற்றும் இந்திய அரசின் திட்டங்களுள் மாநிலத்திற்குப் பொருந்தக்கூடிய திட்டங்கள் மற்றும் 14 செயல்பாட்டுப் பதிவாளர்களின்கீழ் இயங்கும் சங்கங்களுக்குப் புத்துயிர்

[2023 ஏப்ரல் 6

அளிக்கும் நபார்டு திட்டங்களைப் பயன்படுத்திட ஏதுவாக, அடுத்த 5 ஆண்டுகளில் கூட்டுறவால் உள்ளடக்கப்படாத பகுதிகள் மற்றும் கிராமங்களில், தேவையின் அடிப்படையில் அந்தந்தத் துறைகளின் கூட்டுறவுச் சங்கங்களை கூடுதலாக அமைப்பதை ஊக்குவித்தல்.

6. கூட்டுறவு தரவுத்தளத்தை புதுப்பித்தல்: மாநிலத்தில் கொள்கை உருவாக்கம் மற்றும் செயல்படுத்துதலில் தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் வசதியாக, நம்பகமான மற்றும் புதுப்பிக்கப்பட்ட கூட்டுறவு தரவு களஞ்சியத்தை உருவாக்குதல்.

இவ்வாறாக, மாநிலத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்கள், தமது வலிமையைப் பங்களித்து, மாநிலத்தின் நிலையான சமூகப் பொருளாதார வளர்ச்சியின் மையமாகத் திகழத் தயாராகி செயல்பட்டு வருகின்றன.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-V

(302 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 13-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

இயல் -1

முன்னுரை

ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்

திருவள்ளுவர்

1.1 தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற தமிழ்நாடு அரசின் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் இந்திய துணைக் கண்ட அளவில் தனித்தன்மைமிக்கது. தமிழ்நாட்டில் வாழும் குடிமக்கள் அனைவரும் பாதுகாப்பான, ஊட்டச்சத்து நிறைந்த உணவினை எளிதில் போதிய அளவில் பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு அரசு முக்கியப் பங்காற்றுகிறது.

1.2 தமிழ்நாடு அரசின் உணவுக் கொள்கை உணவுப் பாதுகாப்பை உறுதி செய்திடும் நோக்கில் உணவு தானியக் கொள்முதல், பாதுகாப்பான சிறந்த முறையில் சேமிப்பு, முறையான அங்கீகாரம் மூலம் சீரிய முறையில் இன்றியமையாப் பண்டங்களை அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் மூலம் வழங்குதல் மற்றும் இன்றியமையாப் பண்டங்களின் விலையேற்றத் தடுப்பு நடவடிக்கைகளை உரிய நேரத்தில் மேற்கொள்ளல் ஆகியவற்றை முதன்மையாகக் கொண்டுள்ளது.

1.3 நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளில் இருந்து நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவதைத் தடுப்பது இத்துறையின் மற்றொரு முக்கியமான செயல்பாடாகும். நுகர்வோர்கள்

மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மாநில மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்கள் மூலம் பயனுள்ள சட்டத் தீர்வுகளை வழங்குதல் ஆகியவை அரசின் நுகர்வோர் நலக் கொள்கையில் முக்கியமானவையாகும்.

1.4 பொது விநியோகத் திட்டம்: மாண்பமை இந்திய உச்ச நீதிமன்றம் 2001 ஆம் ஆண்டில், இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஒவ்வொரு குடிமகனுக்கும் உணவு பெறும் உரிமையை அளிக்கின்றது என்று பிறப்பித்த தீர்ப்பிற்கும் அதன் தொடர்ச்சியாக, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 அறிமுகப்படுத்தப்படுவதற்கும் முன்பாகவே உணவுப் பற்றாக்குறை மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாட்டைத் தடுக்க, கடந்த 50 ஆண்டுகளாக அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது.

1.5 தமிழ்நாடு அரசின் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம், பொருளாதார மற்றும் சமூக வேற்றுமையின்றி ஊட்டச்சத்துடன்கூடிய உணவுப் பாதுகாப்பை அனைவருக்கும் வழங்கியுள்ளது. குடும்ப அட்டைதாரர்களுக்கு, வழக்கமாக வழங்கப்படும் உணவு தானியங்களான அரிசி மற்றும் கோதுமையுடன் சர்க்கரை, துவரம் பருப்பு, பாமொலின் எண்ணெய் ஆகியவையும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வருகின்றன. தருமபுரி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஒரு குடும்ப அட்டைதாரருக்கு 2 கிலோ வீதம் அரிசிக்குப் பதிலாக கேழ்வரகு விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1.6 நியாய விலைக் கடைகள்: பொது விநியோகத் திட்டத்தின்கீழ், வழங்கப்படும் இன்றியமையாப் பண்டங்களைச் சேமிக்க குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்வதில், நியாய விலைக் கடைகள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டில் நியாய விலைக் கடைகள் மற்ற மாநிலங்களைப் போல தனியாரால் நடத்தப்படாமல் பொது அமைப்புகளால் நடத்தப்பட்டு வருகின்றன. பெரும்பாலான நியாய விலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாகவும் நடத்தப்படுகின்றன. சமவெளிப் பகுதியில் வசிப்பவர்கள் தங்கள் இருப்பிடத்திலிருந்து 1.5 கிலோ மீட்டருக்கு மிகாமலும், மலைப்பாங்கான பகுதிகளில் வசிப்பவர்கள் 1 கிலோ மீட்டருக்கு மிகாமலும் சென்று பொருட்கள் வாங்கும்

வகையில் நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக தொலைதூர மற்றும் அணுக முடியாத மலைப்பாங்கான பகுதிகளில் வசிக்கும் மக்கள் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இன்றியமையாப் பண்டங்களின் தேவையைப் பூர்த்தி செய்ய சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது. குடும்ப அட்டைதாரர்கள் தங்களுக்குரிய இன்றியமையாப் பண்டங்களை எளிதில் பெறுவதை உறுதி செய்யத் தேவையான இடங்களில் பகுதிநேர மற்றும் நகரும் நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தப்பட்டுச் செயல்பாட்டில் உள்ளன.

1.7 மாநிலத்தில் 28.2.2023 அன்று உள்ளபடி நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை விவரம்:

வ. எண்	நிறுவனம்	முழுநேரம்	பகுதிநேரம்	மொத்தம்
1.	கூட்டுறவு நிறுவனங்கள் (கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் உள்ளவை)	24,058	9,644	33,702
2.	இதர கூட்டுறவு நிறுவனங்கள்	272	26	298
3.	தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்	1,247	228	1,475
4.	மகளிர் சுய உதவிக் குழுக்கள்	441	25	466
	மொத்தம்	26,018	9,923	35,941

1.8 மேற்கண்ட நியாய விலைக் கடைகளில், 3,670 கடைகள் சொந்தக் கட்டடங்களிலும், 24,139 கடைகள் வாடகையில்லாக் கட்டடங்களிலும் மற்றும் 8,132 கடைகள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. வாடகைக் கட்டடங்களில் செயல்படும் கடைகளைப் பல்வேறு அரசுத் திட்டங்களின்கீழ்

கட்டப்படும் புதிய கட்டடங்களிலும், சொந்தக் கட்டடங்களிலும் அரசு அமைத்திட உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1.9 முன்மாதிரி நியாய விலைக் கடைகள்: 75 ஆம் ஆண்டு விடுதலை நாள் விழாவின் அடையாளமாக குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் நியாய விலைக் கடைப் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையிலும், நியாய விலைக் கடைகளின் உட்புற மற்றும் வெளிச்சூழலை மேம்படுத்தவும் ஒவ்வொரு மாவட்டத்திலும், 75 நியாய விலைக் கடைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றின் தோற்றம் பொலிவுபடுத்தப்பட்டு, சுவர்களில் சான்றோர்களின் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. உணவுப் பண்டங்கள் பெற்றிட வருகை தரும் குடும்ப அட்டைதாரர்கள் இளைப்பாற ஏதுவாக நிழற்கூரைகள் மற்றும் இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. உணவுப் பொருட்களைப் பாதுகாப்பாக இருப்பு வைத்து எளிதில் விநியோகிக்க ஏதுவாக எவர்சில்வர் கொள்கலன்கள் வழங்கப்பட்டதுடன், மூட்டைகளில் உள்ள உணவு தானியங்கள் நனையாமல் இருக்கும் பொருட்டு, அடுக்குச் சட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன. முதற்கட்டமாக, இதுவரை 2,965 நியாய விலைக் கடைகளில் மேற்குறிப்பிட்ட பணிகள் முடிவடைந்துள்ளன. எஞ்சியுள்ள நியாய விலைக் கடைகளில் 18 மாதங்களுக்குள் இப்பணியினை முடித்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இதுவரையில் 5,743 நியாய விலைக் கடைகள் ISO தரச் சான்றினைப் பெற்றுள்ளன. இதில் 3,712 நியாய விலைக் கடைகள் ISO:9001 தரச் சான்றிதழையும், 2,019 நியாய விலைக் கடைகள் ISO:9001 & ISO:28000 தரச் சான்றிதழ்களையும் மற்றும் 12 நியாய விலைக் கடைகள் ISO:28000 தரச் சான்றிதழை மட்டும் பெற்றுள்ளன. [ISO:9001 சான்று தர மேலாண்மைக்காகவும், ISO:28000 பாதுகாப்பான உணவு விநியோகச் சங்கிலி மற்றும் சேமிப்பு முறைக்காகவும் வழங்கப்படுகிறது]

1.10 மின்னணு குடும்ப அட்டைகள்: குடும்ப அட்டைதாரர்கள் நியாய விலைக் கடைகளில் உள்ள விற்பனை முனைய இயந்திரத்தின் மூலம் தங்களுக்கான இன்றியமையாப் பண்டங்களைப் பெறுவதற்கு வசதியாக, துரித குறியீடுடன்கூடிய (QR code) மின்னணு குடும்ப

2023 ஏப்ரல் 6]

அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மே 2021 முதல் பிப்ரவரி 2023 வரை, 13,87,656 புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

1.11 போலி குடும்ப அட்டைகளைத் தடுக்கும் வகையிலும், உண்மையான பயனாளிகளுக்கு குடும்ப அட்டைகள் வழங்கும் வகையிலும் குடும்ப அட்டை தரவில் ஒவ்வொரு பயனாளியின் ஆதார் எண் பெறப்பட்டுச் சேமித்து வைக்கப்படுகிறது. எனினும், ஆதார் எண் எடுக்க இயலாத வயது முதிர்ந்தோர், உடல் நலம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆதார் எண் உள்ளீடின்றியும் பயனாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

1.12 மின்னணு குடும்ப அட்டைகளின் வகைகள்: *தமிழ்நாட்டில் குடும்ப அட்டைதாரர்களின் விருப்பத்தின் அடிப்படையிலும், தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-ல் உள்ள வரையறைகளின்படியும் மின்னணு குடும்ப அட்டைகள் ஐந்து வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. 28-02-2023 நிலவரப்படி, குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை பின்வருமாறு உள்ளது:*

வ. எண்	குடும்ப அட்டையின் வகை	வழங்கப்படும் இன்றியமையாப் பண்டங்கள்	குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை
1.	முன்னுரிமை குடும்ப அட்டைகள் (PHH)	அரிசி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும்	96,06,259
2.	முன்னுரிமை குடும்ப அட்டைகள் – அந்தியோதயா அன்னயோஜனா (PHH—AAY)	35 கிலோ அரிசி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும்	18,65,460
3.	முன்னுரிமை யற்ற குடும்ப அட்டைகள் (NPHH)	அரிசி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும்	1,04,37,007

வ. எண்	குடும்ப அட்டையின் வகை	வழங்கப்படும் இன்றியமையாப் பண்டங்கள்	குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை
4.	முன்னுரிமை யற்ற குடும்ப அட்டைகள் – சர்க்கரை (NPHH—S)	சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைகள் (அரிசி தவிர பிற பொருட்கள்)	3,82,713
5.	முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் – எப்பொருளும் இல்லாதவை (NPHH—NC)	எப்பொருளும் இல்லாதவை	61,434
மொத்த மின்னணு குடும்ப அட்டைகள்			2,23,52,873

1.13 அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைகள்: *இந்திய அரசின் வழிகாட்டுதல்களின்படி ஏழைகளில் ஏழை என வகைப்படுத்தப்பட்டு தங்களின் அன்றாட உணவுத் தேவைகளுக்காக பொது விநியோகத் திட்டத்தை மட்டுமே சார்ந்து இருக்கும் பயனாளிகள் அந்தியோதயா அன்ன யோஜனா குடும்பங்களாக வகைப்படுத்தப்பட்டு ஒரு குடும்பத்திற்கு மாதந்தோறும் 35 கிலோ உணவு தானியங்கள் விலையின்றி வழங்கப்படுகின்றன. கூடுதலாக, இதர இன்றியமையாப் பண்டங்களும் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. 28-02-2023 நிலவரப்படி, அந்தியோதயா அன்னயோஜனா பயனாளிகளின் எண்ணிக்கை 18,65,460 ஆகும்.*

1.14 காவல், சிறை மற்றும் வனத் துறை பணியாளர்களுக்கான குடும்ப அட்டைகள்: *சீருடைப் பணியாளர்களின் நலன் கருதி நியாய விலைக் கடைகள் மூலம் துவரம் பருப்பு, சர்க்கரை மற்றும் பாமொலின் எண்ணெய் பொது விநியோகத் திட்ட விலையில் 50 விழுக்காடு குறைத்து கீழ்க்கண்ட விலைகளிலும், இதர இன்றியமையாப் பண்டங்கள் வழக்கமான விலையிலும் வழங்கப்படுகின்றன:-*

2023 ஏப்ரல் 6]

சர்க்கரை	:	*ரூ.12.50/கி.கிராம்*
துவரம் பருப்பு/ கனடா மஞ்சள் பருப்பு	:	*ரூ.15.00/கி.கிராம்*
பாமொலின் எண்ணெய்	:	*ரூ.12.50/லிட்டர்*

இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரையிலான சீருடைப் பணியாளர்கள், வனக் காவலர் முதல் வனச் சரகர் வரையிலான வனத் துறைப் பணியாளர்கள் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர் முதல் துணை ஜெயிலர் வரையிலான சிறைப் பணியாளர்களுக்கு முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் “காவல் குடும்ப அட்டைகள்” என நியாய விலைக் கடை விற்பனை முனைய இயந்திரத்தில் வகைப்படுத்தப்பட்டு, இன்றியமையாப் பண்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 28-02-2023 நிலவரப்படி, 63,651 காவலர் குடும்ப அட்டைகள் உள்ளன.

1.15 அன்னபூர்ணா திட்ட மற்றும் முதியோர் ஓய்வூதியத் திட்டப் பயனாளிகள்: *மாநிலத்தில் வசித்து வரும் 6,033 அன்னபூர்ணா திட்டப் பயனாளிகள் மற்றும் 3,44,128 முதியோர் உதவித் தொகை பெறுவோருக்கும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மாதமொன்றிற்கு முறையே தலா 10 கிலோ மற்றும் 5 கிலோ விலையில்லா அரிசி வழங்கப்பட்டு வருகிறது.*

1.16 பொது விநியோகத் திட்டத்தின்கீழ் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் அளவு: *பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய் ஆகிய இன்றியமையாப் பண்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. துவரம் பருப்பு மற்றும் பாமொலின் எண்ணெய் ஆகியவை சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மானிய விலையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. குடும்ப அட்டைதாரர்கள் மொத்தமாக எல்லா பொருட்களையும் ஒன்றாகப் பெறலாம் அல்லது அவர்களின் விருப்பப்படி அவ்வப்போதும் பொருட்களை வாங்கலாம். பொது விநியோகத் திட்டத்தின்கீழ் பொருட்களின் வழங்கல் அளவு மற்றும் அவற்றின் விற்பனை விலை விவரம் பின்வருமாறு:*

[*2023 ஏப்ரல் 6*

வ. எண்	பொருட்கள்	விற்பனை விலை (கிலோ / லிட்டர் ஒன்றுக்கு)	விநியோக அளவு
1	அரிசி	விலையில்லை	*01-11-2016* முதல் தமிழ்நாட்டில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், *2013*, நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. அத்துடன் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தில் எவ்வித மாற்றமுமின்றி செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி அரிசி குடும்ப அட்டைதாரர்களில் நபர் ஒருவருக்கு (சிறுவர் உட்பட) மாதம் ஒன்றுக்கு *5* கிலோ அரிசி பெறுவதற்குத் தகுதியுண்டு. இந்நேர்வில், புதிய திட்டத்தின் காரணமாக அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அட்டைதாரர் பெற்று வந்த உணவு தானிய அளவு குறைவில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு குடும்ப அட்டையில் ஒரே

<table>
<tr><th>வ. எண்</th><th>பொருட்கள்</th><th>விற்பனை விலை (கிலோ / லிட்டர் ஒன்றுக்கு)</th><th>விநியோக அளவு</th></tr>
<tr><td></td><td></td><td></td><td>நபர் மட்டுமே இருப்பாராயின் அக்குடும்ப அட்டைக்குத் தகுதியான 12 கிலோ அரிசி வழங்கப்பட்டு வருகிறது.
<table>
<tr><td>1 யூனிட்</td><td>12 கிலோ</td></tr>
<tr><td>1½ யூனிட்கள்</td><td>14 கிலோ</td></tr>
<tr><td>2 யூனிட்கள்</td><td>16 கிலோ</td></tr>
<tr><td>2½ யூனிட்கள்</td><td>18 கிலோ</td></tr>
<tr><td>3 மற்றும் 4 யூனிட்கள்</td><td>20 கிலோ</td></tr>
</table>
5 யூனிட்கள் மற்றும் அதற்கு மேல் கூடுதலாக உள்ள ஒவ்வொரு நபருக்கும், தலா 5 கிலோ வீதம் அதிகப்படுத்தி வழங்கப்படுகிறது. அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைதாரர்களுக்கு குடும்ப அட்டை ஒன்றுக்கு 35 கிலோ அரிசி விலையில்லாமல் வழங்கப்படுகிறது.</td></tr>
</table>

[2023 ஏப்ரல் 6

வ. எண்	பொருட்கள்	விற்பனை விலை (கிலோ / லிட்டர் ஒன்றுக்கு)	விநியோக அளவு
2.	கோதுமை	விலையில்லை	வழங்கப்படுகிறது. சென்னை நகரம் மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் ஒரு குடும்ப அட்டைக்கு10 கிலோ வீதமும் ஏனைய பகுதிகளில் குடும்ப அட்டை ஒன்றுக்கு 5 கிலோ வீதமும் அரிசிக்குப் பதிலாக கோதுமை வழங்கப்படுகிறது.
3.	சர்க்கரை	அந்தியோதயா அன்னயோஜனா பயனாளிகளுக்கு கிலோ ரூ.13.50 மற்ற பயனாளிகளுக்கு கிலோ ரூ.25.00	அரிசி விருப்ப குடும்ப அட்டைகளுக்கு நபர் ஒன்றுக்கு 500 கிராம் வீதம் அதிகபட்சமாக ஒரு அட்டைக்கு 2 கிலோவும், சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைதாரர்களுக்கு குடும்ப அட்டை ஒன்றுக்கு அரிசிக்குப் பதிலாக கூடுதலாக 3 கிலோ சர்க்கரையும் அதிகபட்சமாக 5 கிலோவும் வழங்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2023 ஏப்ரல் 6]

வ. எண்	பொருட்கள்	விற்பனை விலை (கிலோ / லிட்டர் ஒன்றுக்கு)	விநியோக அளவு
4.	மண்ணெண்ணெய்	லிட்டர் ஒன்றுக்கு ரூ.15.00 முதல் ரூ.16.50 வரை	குடும்ப அட்டைதாரர்களின் இருப்பிடம் மற்றும் பெற்றுள்ள எரிவாயு இணைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.
5.	துவரம் பருப்பு	கிலோ ஒன்றுக்கு ரூ.30/-	ஒரு குடும்ப அட்டைக்கு தலா ஒரு கிலோ.
6.	பாமொலின் எண்ணெய்	லிட்டர் ஒன்றுக்கு ரூ.25/-	ஒரு குடும்ப அட்டைக்கு தலா ஒரு லிட்டர்.

1.16.1 அரிசி: தமிழ்நாட்டில் வசிக்கும் குடும்பங்களுக்கு அரிசியே முதன்மையான உணவாகும். பொது விநியோகத் திட்டத்திற்கான அரிசி மத்திய தொகுப்பு ஒதுக்கீட்டிலிருந்து, இந்திய உணவுக் கழகம் மூலமாக பெறப்படுகிறது. ஒன்றிய அரசின் தற்போதைய மாதாந்திர அரிசி ஒதுக்கீடு மற்றும் விலை விவரம் பின்வருமாறு:

வ. எண்	வகை	மாத ஒதுக்கீடு (மெ. டன்)	வழங்கல் விலை (கிலோ ஒன்று)
1	அந்தியோதயா அன்னயோஜனா (AAY)	62,508.180	விலையில்லை (01-01-2023 முதல்)
2	முன்னுரிமை குடும்பங்கள் (Priority Households)	1,41,376.420	விலையில்லை (01-01-2023 முதல்)
3	ஈடுசெய் ஒதுக்கீடு (Tide Over)	92,691.875	ரூ. 8.30
	மொத்தம்	2,96,576.475	

[2023 ஏப்ரல் 6

மேலும், முன்னுரிமையற்ற குடும்ப அட்டைதாரர்களுக்கு (NPHH அட்டைதாரர்கள்) வழங்குவதற்காக அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின்கீழ் ஒரு மாதத்திற்கு 1 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்குரிய செலவு மாநில அரசால் முழுமையாக ஏற்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட மொத்த ஒதுக்கீட்டில் சராசரியாக மாதாந்திர அரிசி நுகர்வு 3.40 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும்.

1.16.2 சர்க்கரை: பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யத் தேவைப்படும் சர்க்கரையை தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை இணையம் மூலமாகவும், வெளிச்சந்தை மூலமாகவும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் செய்கிறது. முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்கள், முன்னுரிமையற்ற குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் சர்க்கரை குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்ய தேவைப்படும் சர்க்கரையின் அளவு மாதத்திற்கு 34,066 மெட்ரிக் டன் ஆகும். இதில் அந்தியோதயா. அன்னயோஜனா பயனாளிகளுக்காக 1,864 மெ.டன் அளவிற்கு ஒன்றிய அரசால் கிலோ ஒன்றிற்கு ரூ.18.50 என்று மானிய விலையில் வழங்கப்படுகிறது. அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழ் (AAY) உள்ள குடும்ப அட்டை பயனாளிகளுக்கு கிலோ ஒன்றிற்கு ரூ.13.50 என்ற விலையிலும் இதர குடும்ப அட்டைகளுக்கு ரூ.25/- என்ற விலையிலும் வழங்கப்படுகிறது. இதன் வித்தியாசத் தொகையைத் தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொள்கிறது

1.16.3 கோதுமை: ஒன்றிய அரசு, மாநிலத்தின் மாதாந்திர கோதுமை ஒதுக்கீட்டை முன்னுரிமை PHH மற்றும் முன்னுரிமை AAY குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டும் வழங்கும் வகையில், ஜூன் 2022 முதல் 8,532.354 மெட்ரிக் டன் ஆகக் குறைத்துள்ளது. எனினும், குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்களுடைய உணவு தானிய உரிம அளவில் ஒரு பகுதி அரிசிக்குப் பதிலாக விலையின்றி கோதுமை வழங்கப்படுவதால், கூடுதல் தேவையை ஈடுசெய்ய இந்திய உணவுக் கழகத்தால் செயல்படுத்தப்படும் வெளிச் சந்தை விநியோகத் திட்டத்தின்கீழ் (உள்நாடு) கோதுமையினைப் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 6]

1.16.4 மண்ணெண்ணெய்: *ஒன்றிய அரசால் மாதாந்திர மண்ணெண்ணெய் ஒதுக்கீடு படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகிறது. எரிவாயு இணைப்பு இல்லாத குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் ஒரு எரிவாயு இணைப்புள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு விளக்கெரிக்கவும், சமையல் செய்வதற்கும் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த தேவையினை நிறைவு செய்வதற்கு மாதம் 38,165 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. ஏப்ரல் 2022 முதல் ஒன்றிய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் மண்ணெண்ணெய் 4,520 கிலோ லிட்டராக குறைக்கப்பட்டுள்ளது. இவ்வொதுக்கீடானது மாநிலத்தின் தேவையில் 12 விழுக்காடு மட்டுமே பூர்த்தி செய்கிறது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படும் மண்ணெண்ணெய் தேவையினை நிறைவு செய்யும் பொருட்டு கூடுதலாக மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்ய ஒன்றிய அரசிடம் தொடர்ந்து கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகிறது.*

1.16.5 சிறப்புப் பொது விநியோகத் திட்டம்: *வெளிச்சந்தையில் விற்கப்படும் பருப்பு மற்றும் சமையல் எண்ணெயின் விலையினைக் கட்டுப்பாட்டில் வைக்கவும், சாதாரண மக்களும் ஊட்டச்சத்து மிகுந்த உணவினைப் பெற ஏதுவாகவும், 2007 ஆம் ஆண்டு அன்றைய முதல்வர் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சிறப்புப் பொது விநியோகத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ துவரம் பருப்பு, ஒரு லிட்டர் சமையல் எண்ணெய் முறையே ஒரு கிலோ ரூ.30/- மற்றும் ஒரு லிட்டர் ரூ.25/- என்ற மானிய விலையில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாதமும் தோராயமாக 20,000 மெட்ரிக் டன் துவரம் பருப்பு, 2 கோடி லிட்டர் பாமொலின் எண்ணெய் கொள்முதல் செய்யப்பட்டு, அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. சிறப்புப் பொது விநியோகத் திட்டத்திற்கு தேவைப்படும் நிதி முழுவதையும் தமிழ்நாடு அரசு வழங்கி வருகின்றது.*

1.16.6 ரமலான் மாதத்தில் இஸ்லாமியர்களுக்கு அரிசி வழங்குதல்: *"ரமலான்" மாதத்தில் நோன்பு நோற்கும் இஸ்லாமியர்கள், "நோன்புக் கஞ்சி" தயார் செய்வதற்காக அரிசி கிலோ ஒன்றிற்கு*

ரூ.1/- என்ற மானிய விலையில், மாநிலம் முழுவதும், சிறப்பு ஒதுக்கீடாக மசூதிகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. 2022 ஆம் ஆண்டில் இதற்காக 6,291.679 மெட்ரிக் டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2023 ஆம் ஆண்டு நடப்பு ரமலான் மாதத்திலும் அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

1.17 செறிவூட்டப்பட்ட அரிசி: இரத்த சோகை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக, ஒன்றிய அரசு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. அரிசி செறிவூட்டல் என்பது இரும்புச்சத்து, ஃபோலிக் அமிலம் மற்றும் வைட்டமின் பி12 போன்ற நுண்ணூட்டச் சத்துகளை அரிசியில் சேர்த்து, அதன் ஊட்டச்சத்தினை அதிகரிக்கும் முறையாகும். செறிவூட்டப்பட்ட அரிசி என்பது செறிவூட்டப்பட்ட அரிசி மற்றும் பட்டை தீட்டப்பட்ட பச்சரிசி/புழுங்கல் அரிசி ஆகியவை 1:100 என்ற விகிதத்தில் அடங்கிய கலவையாகும். இத்திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள அனைத்து முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்களுக்கும் 01-12-2022 முதல் செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

1.18 தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 அமலாக்கம்: தமிழ்நாடு அரசு 01.11.2016 முதல் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-ஐ நடைமுறைப்படுத்தி வருகிறது. இச்சட்டத்தின்கீழ் மாதம் ஒன்றுக்கு அந்தியோதயா அன்னயோஜனா குடும்பங்கள் 35 கிலோ உணவு தானியங்களும், முன்னுரிமைக் குடும்பங்களின் ஒவ்வொரு குடும்ப உறுப்பினரும் தலா 5 கிலோ உணவு தானியங்களும் பெறத் தகுதியுடைவர்கள் ஆவர். தமிழ்நாடு அரசு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினைச் செயல்படுத்துவதால் அனைத்து அரிசி விருப்ப குடும்ப அட்டைதாரர்களுக்கும் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 அமல்படுத்துவதற்கு முந்தைய உரிம அளவு உணவு தானியங்கள் அல்லது ஒரு நபருக்கு 5 கிலோ உரிம அளவு உணவு தானியங்கள் இவற்றில் எது அதிகமோ, அந்த அளவு உணவு தானியங்களை விலையில்லாமல் வழங்கி வருகிறது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம்,

2023 ஏப்ரல் 6]

2013-இன்கீழ் வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு விதிகள் 2017-இல் உள்ள வழிகாட்டுதலின்படி, முன்னுரிமைக் குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு, அவ்விவரங்கள் www.tnpds.gov.in *என்ற வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. விளிம்புநிலை/எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்கள்/சமூகப் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ளவர்கள் ஆகியோர் முன்னுரிமை குடும்பப் பயனாளிகளாகத் தேர்வு செய்யப்படுகின்றனர்.*

1.18.1 குறைதீர் அமைப்பு முறை: *தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013-இன்படி, பொது மக்களின் குறைகளை நிவர்த்தி செய்திடும் பொருட்டும், பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாடுகளைக் கண்காணிக்கும் பொருட்டும், மாவட்ட வருவாய் அலுவலர்கள்/துணை ஆணையாளர்கள், மாவட்ட குறைதீர் அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட எந்தவொரு நபரும் மாவட்ட குறைதீர் அலுவலரிடமோ அல்லது அவரால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட நபரிடமோ தனது குறைகளை எழுத்துப் பூர்வமாகவோ அல்லது குடும்ப அட்டைதாரர்கள் தமது குறைகளை நியாய விலைக் கடைகளில் பராமரிக்கப்பட்டு வரும் புகார் பதிவேட்டில் பதிவு செய்வதுடன், 1967 மற்றும் 1800-425-5901 ஆகிய கட்டணமில்லா தொலைபேசி வாயிலாகவும்,* “www.tnpds.gov.in” *என்ற வலைதள வழியாகவும் தெரிவிக்கலாம்.*

1.18.2 கண்காணிப்புக் குழுக்கள்: *பொது விநியோகத் திட்டத்தினை முறையாகவும் வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுத்திடவும், அமல்படுத்தும் அலுவலர்களுக்கான பொறுப்பினை உறுதி செய்திடவும், தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு விதிகள் 2017-இன்படி, மாநில, மாவட்ட, வட்ட மற்றும் நியாய விலைக் கடை அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குழுக்களின் கூட்டங்கள் உரிய கால இடைவெளியில் நடத்தப்பட்டு, இத்திட்டம் பயனுள்ள வகையில் செயல்படுவது மற்றும் பொது விநியோகத் திட்டக் குறைபாடுகளைக் களைவதும் உறுதி செய்யப்படுகிறது.*

1.18.3 மாநில உணவு ஆணையம்: *தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் 2013-இன்படி தமிழ்நாட்டில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் முறையாக அமலாக்கப்படுவதைக் கண்காணிக்கும் பொருட்டு, மாநில உணவு ஆணையம் பிப்ரவரி*

[2023 ஏப்ரல் 6

2018-இல் அமைக்கப்பட்டது. அவ்வாணையத்தின் ஐந்து ஆண்டு பதவிக் காலம் பிப்ரவரி 2023-இல் முடிவடைந்தது. மாநில உணவு ஆணையத்திற்குத் தலைவர் மற்றும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

1.19 பொது விநியோகத் திட்டத்தை முழுவதும் கணினிமயமாக்கல்: பொது விநியோகத் திட்டம் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டு அனைத்துப் பரிவர்த்தனைகளும் நிகழ்நிலையில் அதற்கென உருவாக்கப்பட்ட மென்பொருள் வழியாக பதிவு, பரிசீலனை, கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன. மேலும், புதிய குடும்ப அட்டைகளுக்கான கோரிக்கைகள், நடைமுறையில் உள்ள குடும்ப அட்டைகளில் திருத்தங்கள் மற்றும் குடும்ப அட்டைகள் வழங்குவது தொடர்பான பிற சேவைகள் அனைத்தும் முழுமையாகக் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மறுபுறம், பொது விநியோகச் சங்கிலி மேலாண்மையின் மூலம், கிடங்குகள் முதல் நியாய விலைக் கடை வரை பொருட்களின் நகர்வு முழுவதும் கணினிமயமாக்கப்பட்டு, ஒவ்வொரு நியாய விலைக் கடைக்கான பொருட்களின் சரியான ஒதுக்கீடு, அதன் முறையான இயக்கம் மற்றும் விநியோகம் ஆகியவை உறுதி செய்யப்பட்டு உள்ளது. ஒவ்வொரு நியாய விலைக் கடையில் நிறுவப்பட்டுள்ள விற்பனை முனைய இயந்திரத்தைப் பயன்படுத்தி, பயோ மெட்ரிக் பதிவு (Biometric) மூலம் அடையாளம் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்கள் விநியோகம் செய்யப்படுகிறது. இதன் மூலம் உண்மையான பயனாளிகளுக்கு முறைகேடுகள் இன்றி பொருட்கள் வழங்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பின்வருவன அடங்கும்:

- பொதுமக்கள் புதிய குடும்ப அட்டைகளுக்கு நிகழ்நிலையில் விண்ணப்பம், குடும்ப அட்டைகளில் மாற்றம்/விவரங்கள் புதுப்பிப்பு, விண்ணப்பம் மற்றும் விண்ணப்பங்களின் நிலையைக் கண்காணித்தல் போன்ற சேவைகள்.

- குடும்ப அட்டைகள் / பயனாளிகளின் விவரங்களை முழுமையாகக் கணினிமயமாக்குதல்.

- கணினிமயமாக்கப்பட்ட பொது விநியோகத் திட்டச் சங்கிலி மேலாண்மை.

2023 ஏப்ரல் 6]

- *நியாய விலைக் கடைகளுக்குப் பொருட்கள் நிகழ் நிலையில் ஒதுக்கீடு செய்தல்.*
- *கிடங்குகள் மற்றும் நியாய விலைக் கடைகளில் பொருட்களின் நகர்வினை நிகழ்நிலையில் கண்காணித்தல்.*
- *குடும்ப அட்டைதாரர்கள் தங்களது குடும்ப அட்டை இணைக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடையின் பொருட்கள் இருப்பினை வலைதளம் வாயிலாக காணலாம்.*
- *ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண்களுக்குப் பரிவர்த்தனை விவரங்கள் குறுஞ்செய்திமூலம் தெரிவிக்கப்படுவதால் நியாய விலைக் கடைகளில் போலிப் பட்டியலிடுவது தடுக்கப்படுகிறது*
- *குடும்ப அட்டைதாரர்களின் குறை தீர்க்கும் சேவைகள்*
- *பல்வேறு காரணங்களால், விரல் ரேகையில் ஏற்படும் மாற்றங்களால், கைவிரல் ரேகை மூலம் ஆதார் அங்கீகாரம் மேற்கொள்ள முடியாத மூத்த குடிமக்கள்/ இதர நபர்களின் நலனுக்காக 2023—2024 ஆம் ஆண்டில் அனைத்து நியாய விலைக் கடைகளிலும் கருவிழி அடிப்படையிலான ஆதார் அங்கீகாரத்தை கூடுதல் வசதியாக அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.*

1.19.1 பயோ மெட்ரிக் பதிவு (Biometric) முறையில் பொது விநியோகத் திட்டம்: *தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 ஆதார் தரவுத் தொகுப்பினைப் பயன்படுத்திப் பயனாளிகளை அங்கீகரிப்பதன்மூலம் பொது விநியோகத் திட்டத்தின் பயன்கள் உண்மையான பயனாளிகளைச் சென்றடைவதை வலியுறுத்துகின்றது. ஆதலால் குடும்ப அட்டை கோரி விண்ணப்பிக்கும் போதே குடும்ப உறுப்பினர்களின் ஆதார் எண்கள் பெறப்பட்டுத் தகுதியான அனைவருக்கும் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. பிப்ரவரி 2023 வரை, 99.2% பயனாளிகள் தங்களது ஆதார் எண்ணை மின்னணு குடும்ப அட்டையுடன் இணைத்துள்ளனர். பயோ மெட்ரிக் பதிவுமூலம் குடும்ப உறுப்பினர்களுக்குப் பொருட்கள் வழங்கப்படுவதுடன் தகுதியான பயனாளிகளுக்கு*

இன்றியமையாப் பண்டங்கள் சென்றடைவதை உறுதி செய்யவும், எந்த நிலையிலும் முறைகேடுகளைத் தவிர்க்கவும் இம்முறை உதவுகிறது. பயோ மெட்ரிக்மூலம் அங்கீகாரம் பதிவாகாத நிலையில் தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்குப் பதிலி (Proxy) முறையில் இன்றியமையாப் பண்டம் விநியோகம் செய்வதன் மூலம் அனைவருக்குமான உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. கருவிழி சரிபார்ப்பின் மூலம் இன்றியமையாப் பண்டம் வழங்கும் நடைமுறை சோதனை அடிப்படையில் சென்னை மற்றும் அரியலூர் மாவட்டங்களில் தலா ஒரு நியாய விலைக் கடையில் 17.10.2022 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இது தவிர, மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் தாங்கள் அனுமதிக்கும் நபர்கள் வாயிலாக நியாய விலைக் கடைகளில் இன்றியமையாப் பண்டங்கள் பெற விரும்பினால், அதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போது சராசரியாக 98 விழுக்காடு முதல் 98.5 விழுக்காடு வரை பரிவர்த்தனைகள் பயோமெட்ரிக் அங்கீகார முறையில் நடைபெற்று வருகின்றன.

1.20 பொது விநியோகத் திட்டத்தின் ஒருங்கிணைந்த மேலாண்மை: "ஒரே நாடு ஒரே அட்டை திட்டம்" அக்டோபர் 2020 முதல் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டத்தின்கீழ் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-இன்படி, வேறு எந்த மாநிலத்தைச் சேர்ந்த முன்னுரிமை அட்டைதாரர்களும் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்புக்கோ வேறு காரணத்திற்கோ வந்து தங்கியிருக்கும்போது தாங்கள் விரும்பும் நியாய விலைக் கடையில் உணவு தானியங்களை பயோமெட்ரிக் அங்கீகார அடிப்படையில் பெறலாம். தமிழ்நாட்டிற்குள் வாழ்வோரும் இடம்பெயர்வு காரணமாக வெளியூர்களுக்குச் செல்லும்போது எந்தவொரு அட்டை வைத்திருப்பவரும் பயோமெட்ரிக் அங்கீகாரம் மேற்கொண்டு, அவர்கள் விரும்பும் நியாய விலைக் கடைகளில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் தங்களுக்குரிய பொருட்களைப் பெறலாம்.

1.21 பொங்கல் பரிசுத் தொகுப்பு: 2023 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையைக் கொண்டாடும் வகையில், அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கும் ரூ.1000/-, ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீள கரும்பு ஆகியவற்றை அரசு வழங்கியது.

2023 ஏப்ரல் 6]

இத்திட்டத்திற்கு ரூ.2,429.05 கோடி அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2.14 கோடி குடும்ப அட்டைதாரர்கள் பயனடைந்துள்ளனர்.

1.22 உணவு மானியம்: அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி மற்றும் கோதுமை விலையில்லாமல் வழங்கப்படுகிறது. சிறப்பு பொது விநியோகத் திட்டப் பொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இன்றியமையாப் பண்டங்கள் கொள்முதல் மற்றும் விநியோகத்திற்காக ஒவ்வோர் ஆண்டும் உணவு மானியமாக மாநில அரசு பெரும் செலவினம் மேற்கொள்கிறது. 2023-2024 ஆண்டிற்கு உணவு மானியத்திற்காக அரசு ரூ.10,500 கோடி ஒதுக்கியுள்ளது.

1.23 குடும்ப அட்டை தரவுத் தொகுப்பு தூய்மை: குடும்ப அட்டை தரவுகளைப் புதுப்பிக்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. மே 2021 முதல் பிப்ரவரி 2023 வரை, இறப்பு, இடம் பெயர்வு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் 3,26,305 குடும்ப அட்டைகளும், 15,78,731 குடும்ப உறுப்பினர் விவரங்களும் குடும்ப அட்டைத் தரவுகளில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளன.

1.24 நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள்

1.24.1. "பட்டினியின்மை": அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி, கோதுமை, சர்க்கரை, துவரம் பருப்பு, பாமொலின் எண்ணெய் மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய இன்றியமையாப் பொருட்கள் மானிய விலையில் அனைத்துக் குடிமக்களுக்கும் வழங்குவதன் மூலம் மாநில அரசு அனைத்து குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்துள்ளதால், உணவுப் பாதுகாப்பு, மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து மற்றும் பட்டினியின்மை நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

1.24.2 "கட்டுப்படியான விலையில் தூய்மையான எரிபொருள்": சமையலுக்குத் தூய்மையான எரிபொருள் அனைத்துக் குடும்பங்களும் கட்டுப்படியான விலையில் பெற்றுப் பயன்படுத்தும் வகையில், சமையல் எரிவாயு (LPG) இணைப்பினை 90 விழுக்காடு குடும்பங்களுக்குச் சேர்த்திட தமிழ்நாடு அரசு வழிவகை ஏற்படுத்தியுள்ளது.

2006 ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசு 28,94,295 குடும்பங்களுக்கு விலையில்லா எரிவாயு அடுப்புகளும், எரிவாயு உருளைகளுக்கான முன்தொகைகளையும் செலுத்தி, எரிவாயு இணைப்புகள் கிடைக்க உதவியது.

இயல் - 2

நுகர்வோர் பாதுகாப்பு

2.1 அரசின் நுகர்வோர் பாதுகாப்புக் கொள்கை, நுகர்வோர்கள் தங்கள் தேர்வுகள் குறித்து நன்கு அறிந்த முடிவுகளை எடுப்பதற்கு அவர்களைத் தகுதிப்படுத்துவதையும், நுகர்வோர்கள் குறைதீர் அமைப்புகளை எளிதாக அணுகக்கூடிய வகையில் செயல்படுத்துவதையும், நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கென இத்துறை பின்வருவனவற்றைச் செயல்படுத்தி வருகிறது:

i. *நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019 விதிகள் மற்றும் வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம், டிஜிட்டல் உலகில் நுகர்வோர் எதிர்கொள்ளும் சவால்களுக்கு ஏற்ப நியாயமான, சரிசமமான மற்றும் உறுதியான தீர்வுகளை நுகர்வோர் பெற வழிவகை செய்தல்.*

ii. *சுரண்டப்படுவதிலிருந்து நுகர்வோர்களைப் பாதுகாக்க, நுகர்வோர் குறைதீர் ஆணையங்களை அணுகாமலே மாற்று வழி மூலம் அவர்களின் குறைகளைத் தீர்வு செய்தல்.*

iii. *நுகர்வோர்களுக்குச் சேவைகள் வழங்கக்கூடிய அரசுத் துறைகளை மேம்படுத்துவதற்குரிய பரிந்துரைகள் வழங்குதல்.*

இந்த நோக்கத்தை அடைய, பின்வரும் இனங்களில் தொடர்ச்சியான பல்வேறு நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டு வருகிறது:

2.2 குடிமக்கள் நுகர்வோர் மன்றம்: *மாணவர்களுக்கு நுகர்வோர் நலன் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வினை மேம்படுத்த ஏற்படுத்தப்பட்ட செயல்திறன் மிக்க முறைசாரா அமைப்பாகும்.*

2023 ஏப்ரல் 6]

தமிழ்நாட்டில் பள்ளி/கல்லூரிகளில் 50 உறுப்பினர்களைக் கொண்ட குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, தற்போது 2,000 குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. தன்னார்வ நுகர்வோர் அமைப்பின் உறுப்பினர்களையும், பள்ளி/கல்லூரி ஆசிரியர்களையும் ஒருங்கிணைப்பாளர்களாகக் கொண்டு குடிமக்கள் நுகர்வோர் மன்றத்தின் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.3 மாநில நுகர்வோர் சேவை மையம்: *மாநில நுகர்வோர் சேவை மையம் 02.11.2009 முதல் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் செயல்பட்டு வருகிறது. நுகர்வோர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட சேவை மற்றும் பொருளில் ஏதேனும் குறைபாடு இருந்தால், அது பற்றியும் ஏமாற்றப்பட்ட நேர்வுகள் ஏதும் இருப்பின், அவை குறித்தும் தெரிவித்திடவும், அதற்குத் தீர்வு காணவும் ஒரு மாற்று குறைதீர் அமைப்பாக மாநில நுகர்வோர் சேவை மையம் அரசால் ஏற்படுத்தப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இச்சேவை மையத்தினைக் கீழ்க்கண்டவாறு தொடர்பு கொள்ளலாம்:*

தொலைபேசி எண்	மின்னஞ்சல் முகவரி	வலைதள முகவரி
044 – 2859 2828	consumer@tn.gov.in	www.consumer.tn.gov.in

2.4 நுகர்வோர் பாதுகாப்பு வலைதளம்: *நுகர்வோர்களுக்கென்றே தனியாக உருவாக்கப்பட்ட* www.consumer.tn.gov.in *என்ற வலைதளத்தில் நுகர்வோரின் கடமைகள், பொறுப்புகள், வரையறைகள் போன்ற தகவல்கள் தேசிய தகவல் மையத்தின் உதவியுடன் பராமரிக்கப்பட்டு வருகின்றன. வலைதளத்தில் நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்த அனைத்து திட்டங்களின் விவரங்களும், நுகர்வோர் உரிமை மீறல் தொடர்பான புகார்களைப் பதிவு செய்யும் விவரங்களும் துறையின் வெளியீடு தொடர்பான தகவல்களும் உள்ளன. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையால் வழங்கப்படும் பிற சேவைகள் தொடர்பான தகவல்களையும் இதில் காணலாம்.*

2.5 தமிழ்நாடு நுகர்வோர் கவசம்: *நுகர்வோரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட நுகர்வோர் பாதுகாப்புத் துறை*

'தமிழ்நாடு நுகர்வோர் கவசம்' என்ற மாத இதழை வெளியிட்டு வருகிறது. இந்த இதழ் பொதுமக்கள்/நுகர்வோர் இடையே நேரடி தொடர்பில் உள்ள அரசுத் துறைகள், குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள், தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் மற்றும் அனைத்து மாவட்ட நூலகங்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

2.6 தேசிய நுகர்வோர் தினம் மற்றும் உலக நுகர்வோர் உரிமைகள் தினம் கொண்டாடுதல்: ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 15 ஆம் நாளை உலக நுகர்வோர் உரிமைகள் நாளாக கொண்டாடுவதற்கும், டிசம்பர் 24 ஆம் நாளை தேசிய நுகர்வோர் பாதுகாப்பு நாளாக கொண்டாடுவதற்கும், அரசால் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

2.7 தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதி (TNSCWF): ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் தலா ரூ.50 இலட்சம் (50:50) பங்களிப்புடன் ஒரு கோடி ரூபாய் நிதியில் தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதித் தொகுப்பினை நுகர்வோர்களுக்காக உருவாக்கியுள்ளது. மாநில/மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் வசூலிக்கப்படும் அபராதத் தொகையும் கட்டணத் தொகையும் இந்நிதித் தொகுப்பில் செலுத்தப்படுகின்றன. ஒன்றிய அரசு தொகுப்பு நிதி ஒன்றினை உருவாக்கி, அதில் ஒன்றிய மாநில அரசுகளின் பங்களிப்புத் தொகையாக 75:25 என்ற விகிதத்தில் ரூபாய் 10 கோடி (ஒன்றிய அரசு ரூ.7.5 கோடி மற்றும் மாநில அரசு ரூ.2.5 கோடி) ஒதுக்கீடு செய்து, அவை வைப்புத் தொகையாக தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரச் சங்கத்தின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, அதற்குரிய வட்டித்தொகை தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதி தொகுப்பிற்குச் செலுத்தப்பட்டு வருகிறது. தற்போது அத்தொகையானது ரூ.20 கோடியாக உயர்த்தப்பட்டு, அதில் மாநில அரசின் பங்களிப்புத் தொகையாக ரூ.2.5 கோடி மற்றும் ஒன்றிய அரசின் பங்களிப்புத் தொகையாக ரூ.7.5 கோடி நிதியானது, தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரச் சங்கத்தின் வங்கிக்கணக்கில் வைப்புத் தொகையாக வரவு வைக்கப்பட்டுள்ளது. நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு தொடர்பான நடவடிக்கைகள் அனைத்தும் மேற்குறிப்பிட்ட நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 6]

2.7.1 தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரச் சங்கம் (TANSSCOPE): *நுகர்வோர் நலன் சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளைத் திறம்பட செயல்படுத்திட உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரைத் தலைவராகவும், அரசு மற்றும் அரசு சாரா துறைகளில் உள்ளவர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு செயல்படக்கூடிய வகையில் தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரச் சங்கம் எனும் அமைப்பு, 2009 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. நுகர்வோர் பாதுகாப்பு, நுகர்வோர் விழிப்புணர்வு, நுகர்வோர் கல்வி மற்றும் இதர நுகர்வோர் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளும் இதன்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

2.8 நுகர்வோர் குறைகளுக்கான சட்டப்படியான தீர்வுகள்: *2019 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தேசிய, மாநில மற்றும் மாவட்ட நிலைகளில் கீழ்க்கண்ட நீதிமுறைச் சார்புடைய 3 அடுக்கு குறைதீர் ஆணையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன:*

- *தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்*
- *மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்*
- *மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்*

2.8.1 தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்: *மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையங்களுக்குத் தலைமை அமைப்பாக தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் புது தில்லியில் செயல்பட்டு வருகிறது. நுகர்வோர் வாங்கிய/பெற்ற பொருளின் மதிப்பு/சேவையின் மதிப்பு ரூபாய் 2 கோடிக்கு மேல் இருந்து, அதில் ஏதேனும் குறைபாடிருப்பின், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் முறையிடலாம். மேலும் அனைத்து மாநில ஆணையங்களில் முடிவுற்ற வழக்குகளின் மேல்முறையீடுகளுக்குத் தீர்ப்பளிக்கும் அதிகாரம் மற்றும் மாநில ஆணையங்களின் ஆணைகளைச் சீராய்வு செய்யும் அதிகாரமும் படைத்ததாகும்.*

2.8.2 மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்: *மாவட்ட நுகர்வோர் ஆணையங்களுக்குத் தலைமை அமைப்பாக மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் சென்னையில் செயல்பட்டு*

வருகிறது. நுகர்வோர் வாங்கிய/பெற்ற பொருளின்/சேவையின் மதிப்பு ரூபாய் 50 இலட்சத்திற்கு மேல் ரூபாய் 2-கோடி வரை இருந்து அதில் ஏதும் குறைபாடு இருப்பின், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் முறையிடலாம். இவ்வாணையம் ஓய்வு பெற்ற/பணியிலிருக்கும் உயர் நீதிமன்ற நீதிபதியைத் தலைவராகவும், இரண்டு நீதிமுறை சார் உறுப்பினர்களையும், இரண்டு நீதிமுறை சாரா உறுப்பினர்களையும் (குறைந்தபட்சம் ஒரு பெண் உறுப்பினர் இருக்க வேண்டும்) கொண்ட அமைப்பாகும். மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளை போன்று 13 தென் மாவட்டங்களை உள்ளடக்கிய மாநில ஆணையத்தின் மதுரை சுற்றுக்கிளை 11-08-2012 முதல் மதுரையில் செயல்பட்டு வருகிறது. பிப்ரவரி 2023 வரை 31,877 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அதில் 29,047 வழக்குகள் (91 விழுக்காடு) முடிக்கப்பட்டுள்ளன. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை மற்றும் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மதுரை சுற்றுக் கிளை ஆகியவை மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களின் தீர்ப்புகளின் மேல் எழும் மேல்முறையீடு மற்றும் சீராய்வு மனுக்களைத் தீர்வு செய்யும் அதிகாரம் கொண்டதாகும்.

2.8.3 மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்கள்: எந்த ஒரு நுகர்வோர் தான் வாங்கிய/பெற்ற பொருள் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின், அப்பொருளின்/சேவையின் மதிப்பு ரூபாய் 50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும்பட்சத்தில், மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் நிவர்த்தி மனு தாக்கல் செய்யலாம். நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019—இன்படி, ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் இருக்க வேண்டும். இவ்வாணையம் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி/வழக்குரைஞரைத் தலைவராகவும் மற்றும் இரண்டு உறுப்பினர்களையும் (குறைந்தபட்சம் ஒரு பெண் உறுப்பினர் இருக்க வேண்டும்) கொண்ட அமைப்பாகும். மாவட்ட ஆணையங்கள் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து பிப்ரவரி 2023 வரை 1,32,723 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, அதில் 1,24,866 வழக்குகள் (94 விழுக்காடு) முடிக்கப்பட்டுள்ளன.

2.8.4 வழக்குகளைத் திறம்பட தீர்த்தல்: நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019-இன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின்படி

2023 ஏப்ரல் 6]

மாநில/மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் காலியாக இருந்த 32 தலைவர் மற்றும் 55 உறுப்பினர் பணியிடங்கள் தமிழ்நாடு அரசால் கடந்த ஓராண்டில் நிரப்பப்பட்டுள்ளன. மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு முறையே, அரசு இணைச் செயலாளர் மற்றும் அரசு துணைச் செயலாளர் நிலையில் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக, மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில், உறுப்பினர்கள் தனியாக தீர்ப்புகளை வழங்க உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் உள்ள தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணிகள், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மாண்புமிகு தலைவர் அவர்களால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, நுகர்வோர் வழக்குகளை விரைந்து முடிப்பதற்கு ஏதுவாக உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இயல்- 3

விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

3.1 உணவுப் பொருள் வழங்கல் ஆணையரின் நேரடிக் கட்டுப்பாட்டில் "விலைக் கண்காணிப்புப் பிரிவு" இயங்கி வருகிறது. அரிசி, கோதுமை, பருப்பு, சர்க்கரை, எண்ணெய் வகைகள் மற்றும் காய்கறிகள் உள்ளிட்ட தெரிவு செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் சில்லரை மற்றும் மொத்த விலைகளை வெளிச்சந்தையில் தினசரி இப்பிரிவு கண்காணித்து வருகிறது. வெளிச்சந்தையில் உணவு தானியங்கள் மற்றும் காய்கறிகளின் விலை திடீரென்று உயரும் போது தகுந்த விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்வதற்கு ஏதுவாக உரிய அறிக்கைகளை உயர் அலுவலர்களுக்கு இப்பிரிவு சமர்ப்பிக்கிறது.

3.2 தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் விலை கண்காணிப்புக் குழு (Price Monitoring Committee) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் இன்றியமையாப் பண்டங்கள் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மே 2022-இல் ஏற்பட்ட தக்காளி விலையேற்றத்தின்போது,*

[2023 ஏப்ரல் 6

அரசு துரித நடவடிக்கை மேற்கொண்டு பண்ணை பசுமைக் கடைகள், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மற்றும் தேர்வு செய்யப்பட்ட நியாய விலைக் கடைகளின் மூலமாக மலிவு விலையில் தக்காளி விநியோகம் செய்து விலையேற்றத்தினைக் கட்டுப்படுத்தியது. நுகர்வோரின் நலனைப் பாதுகாக்கும் வகையில் வெளிச்சந்தையில் இன்றியமையாப் பண்டங்கள் விலையேற்றத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக ரூ.100 கோடி நிதியில் விலைக் கட்டுப்பாட்டு நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேவைப்படும் நேர்வுகளில், நுகர்வோர் பாதுகாப்புத் துறை வெளிச்சந்தையில் பொருட்களின் விலையேற்றத்தினைக் கட்டுப்படுத்த இந்நிதியினைப் பயன்படுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இயல் 4

அமலாக்கம் - குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை

4.1: நியாய விலைக் கடைகள் மூலம் பொருட்களை வழங்கி, அனைத்துக் குடிமக்களுக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நியாய விலைக் கடைகள்மூலம் விநியோகிக்கப்படும் பொருட்கள் சில நேர்வுகளில் சமூக விரோதிகளால் கடத்தப்பட்டு பதுக்கப்படுகின்றன. இந்த பதுக்கல் / கடத்தலைத் தடுப்பதற்கு, மாநிலத்தின் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பொருட்களின் கடத்தலைக் கட்டுப்படுத்துவதற்கு உறுதுணையாக இருக்கும் சட்டங்களான,

(i) இன்றியமையாப் பண்டங்கள் சட்டம், 1955

(ii) கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டம், 1980 ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் அவ்வப்போது அறிவிக்கும் பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளையும் இத்துறை அமல்படுத்தி வருகிறது.

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை, கூடுதல் காவல் துறை இயக்குநர் தலைமையில் 4 காவல்

2023 ஏப்ரல் 6]

கண்காணிப்பாளர்களையும் (சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மண்டலங்கள்), 12 காவல் துணைக் கண்காணிப்பாளர்களையும், ஆய்வாளர்கள், சார்பு ஆய்வாளர்கள் மற்றும் காவலர்களைக் கொண்டு 40 அலகுகளுடன் செயல்பட்டு வருகிறது. இவை தவிர, எல்லையோரப் பகுதிகளில் நடைபெறும் பொது விநியோகத் திட்ட பொருட்களின் கடத்தலைத் தடுப்பதற்காக 8 சிறப்பு சுற்றுக் காவல் படைகளும் இயங்கி வருகின்றன. இந்த அரசு அமைந்த மே 2021-க்குப் பிறகு 2 காவல் கண்காணிப்பாளர்கள், 8 துணை காவல் கண்காணிப்பாளர்கள், 6 சார்பு ஆய்வாளர்கள், 24 இதர காவலர்கள், 1 கண்காணிப்பாளர், 1 உதவியாளர், 2 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 1 தட்டச்சர் ஆகிய பணியிடங்கள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மேலும், மறு பகிர்வு முறையில் 3 புதிய சுற்றுக் காவல் படைகளான பொள்ளாச்சி, திருவள்ளூர் மற்றும் உத்தமபாளையம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

4.2 குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் செயல்பாடுகள்: 01.01.2022 முதல் 31-12-2022 வரையிலான காலகட்டத்தில் மொத்தம் 9,325 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேற்கூறிய வழக்குகளில் 67,511 குவிண்டால் பொது விநியோகத் திட்ட அரிசி, 15,217 லிட்டர் பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய், மற்றும் 1,492 சமையல் எரிவாயு உருளைகள் (வணிக ரீதியாக பயன்படுத்தியமை) ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன. மேலும், 2,53,034 லிட்டர் கலப்பட டீசல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு ரூ.6,60,74,492/- ஆகும். மேலும், கடத்தல்/பதுக்கலில் ஈடுபட்ட 9,242 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 2,040 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டத்தின்கீழ் 80 முக்கிய குற்றவாளிகள் தடுப்புக் காவலில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜூன் 17, 2019 முதல் மே 6, 2021 வரையிலான காலகட்டம் மற்றும் மே 7, 2021 முதல் மார்ச் 27, 2023 வரையிலான காலகட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய ஒப்பீட்டை அட்டவணையில் காணலாம்.

TRUTH ALONE TRIUMPHS

17-06-2019 முதல் 06-05-2021 வரையிலும் மற்றும் 07-05-2021 முதல் 27-03-2023 வரையிலான கால கட்டத்தில் இத்துறையின் சாதனைகள்

வ. எண்	விபரம்	17-06-2019 முதல் 06-05-2021 வரை	07-05-2021 முதல் 27-03-2023 வரை
1	இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் 1955–ன்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்	10,810	15,867
2	கைது செயப்ப்பட்டவர்களின் எண்ணிக்கை	9,826	16,030
3	கைப்பற்றப்பட்ட மொத்த வாகனங்கள்	2,105	3,437
4	தடுப்புக் காவல் சட்டம் 1980-ன்கீழ் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை	72	142
5	மொத்தக் கைப்பற்றுகையின் மதிப்பு (ரூபாயில்)	6,91,21,612	15,24,03,096
டீசல் வழக்கு சுருக்கம்			
6	வழக்குகளின் எண்ணிக்கை	24	71
7	கைப்பற்றுகை அளவு (லிட்டர்)	2,02,727	8,18,180
8	கைப்பற்றப்பட்ட மொத்த வாகனங்கள்	28	73

2023 ஏப்ரல் 6]


இயல்-5

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

5.1. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1972 ஆம் ஆண்டு அன்றைய முதல்வர் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்நிறுவனம் பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான இன்றியமையாப் பொருட்களைக் கொள்முதல் செய்து, சேமித்து, விநியோகிக்கும் உன்னதப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனம் 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம், சட்டப்பிரிவு 25-ன்கீழ் (நிறுவனங்கள் சட்டம், 2013 சட்டப் பிரிவு 8) 01-04-2010 அன்று பதிவு செய்யப்பட்டு, "ஆதாயம் இல்லை இழப்பு இல்லை" என்ற கோட்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

5.2 நிறுவனத்தின் கட்டமைப்பு: *தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 11 இயக்குநர்களைக் கொண்ட குழுமக் குழு தலைமையின்கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. குழுமக் குழுவின் தலைவராக அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) அவர்கள் செயலாற்றி வருகிறார். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 7,623 நிரந்தரப் பணியாளர்கள், தலைமை அலுவலகம், மண்டல அலுவலகங்கள், கிடங்குகள், நவீன அரிசி ஆலைகள், அமுதம் நியாய விலைக் கடைகள் மற்றும் அமுதம் பல்பொருள் அங்காடிகளில் பணியாற்றுகின்றனர். 5,272 பருவகால பணியாளர்கள் நேரடி கொள்முதல் நிலையங்களில் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களன்றி 4,685 சுமைதூக்கும் தொழிலாளர்களும் 33,259 பருவ கால சுமைதூக்கும் தொழிலாளர்களும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் உள்ள கிடங்குகள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மற்றும் நவீன அரிசி ஆலைகளில் பணியாற்றி வருகின்றனர்.*

[2023 ஏப்ரல் 6



TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 6]

5.3 நிறுவனத்தின் செயல்பாடுகள்: *தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முக்கிய செயல்பாடுகள்.*

அ) பரவலாக்கப்பட்ட கொள்முதல் முறையின்கீழ் இந்திய உணவுக் கழகத்தின் முகவராக தமிழ்நாடு விவசாயிகளிடமிருந்து நெல் மற்றும் கேழ்வரகு கொள்முதல் செய்தல்.

(ஆ) அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம் பருப்பு, பாமொலின் எண்ணெய் மற்றும் மண்ணெண்ணெய் கொள்முதல் செய்து சேமித்து, உரிய நியாய விலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்தல்.

(இ) தமிழ்நாடு அரசால் அவ்வப்பொழுது அறிவிக்கப்படுகிற மக்கள் நலத் திட்டங்களுக்கு உணவு மற்றும் இதர பொருட்களைக் கொள்முதல் செய்து சேமித்து விநியோகம் செய்தல்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்கீழ் செயல்படும் பல்வேறு அலகுகள்:

i. *16.06 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 308 கிடங்குகள்*

ii. *1,475 நியாய விலைக் கடைகள் (1,247 முழு நேர மற்றும் 228 பகுதி நேர நியாய விலைக் கடைகள்)*

iii. *21 நவீன அரிசி ஆலைகள்*

iv. *90 அமுதம் பல்பொருள் அங்காடிகள்*

v. *3 பெட்ரோல் / டீசல் வழங்கும் நிலையங்கள்*

vi. *36 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள்*

vii. *4 சமையல் எரிவாயு விநியோகிக்கும் முனையங்கள்*

viii. *3,199 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் (26.03.2023 வரை)*

ix. *2.86 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 18 மேற்கூரை அமைப்புடன்கூடிய நெல் சேமிப்பு மையங்கள்.*

5.4 விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்தல்: பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தில் தமிழ்நாட்டின் முகவராக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 01-10-2002 முதல் நெல் கொள்முதல் செய்து வருகிறது. டெல்டா அல்லாத மாவட்டங்களில் நேரடியாக நெல் கொள்முதல் செய்திட கூட்டுறவுச் சங்கங்களும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

அனைத்து மண்டலங்களிலும் விவசாயிகளிடம் இருந்து பெறப்படும் கோரிக்கையின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்று நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன. தமிழ்நாடு அரசு கொள்முதல் நடைமுறை, சேமிப்பு மற்றும் நெல் இயக்கம் ஆகியவை சீராக செயல்படுவதற்கு வழிகாட்டு நெறிமுறைகளை 2021 ஆம் ஆண்டு வெளியிட்டு நேரடி கொள்முதல் நிலையங்களின் ஒட்டுமொத்த செயல்பாட்டைக் கண்காணிக்க கீழ்க்கண்டவாறு மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு அமைக்கவும் ஆணையிட்டது.

1. மாவட்ட ஆட்சியர்–தலைவர்
2. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை)–கூட்டுநர்
3. இணை இயக்குநர், வேளாண்மை–உறுப்பினர்
4. முதுநிலை மண்டல மேலாளர்/மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் - உறுப்பினர்
5. கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் – உறுப்பினர்
6. விவசாயிகளின் பிரதிநிதிகள்-இருவர்.

மேற்காணும் குழு நேரடி கொள்முதல் நிலையங்கள் அமைப்பதற்கான நாள் மற்றும் இடத்தினைத் தேவைக்கேற்ப முடிவு செய்கிறது. மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு அந்தந்த மாவட்டங்களில் பெறப்படும் விவசாயிகளின் கோரிக்கைகளை உடனுக்குடன் பரிசீலித்து நேரடி கொள்முதல் மையங்களின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துகிறது.

2023 ஏப்ரல் 6]

5.5 உழவர் உதவி மையம்: உழவர்கள் நெல் கொள்முதல் நிலையங்கள் பற்றிய குறைகளைத் தெரிவிக்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைமை அலுவலகத்தில் உழவர் உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் நெல் விற்பனை தொடர்பான குறைகளை விவசாயிகள் பதிவு செய்யலாம். தமிழ்நாட்டில் எந்தப் பகுதியிலும் உள்ள உழவர்கள், தங்களது குறைகளை உழவர் மைய கட்டணமில்லா தொலைபேசி 1800 599 3540 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவித்து உரிய பதில் பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

5.6 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்: நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அமைக்க அரசு உறுதி எடுத்துள்ளது. நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கான நிரந்தர கட்டமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 589 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ஏற்கெனவே சொந்த கட்டடங்களில் இயங்கி வருகின்றன. நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் மொத்தம் ரூ.50 கோடி செலவில் தலா 250 மெட்ரிக் டன் சேமிப்புத் திறன் கொண்ட 80 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டப்பட உள்ளன. மற்ற அரசுத் துறைகளின் பல்வேறு திட்டங்களின்கீழ் ரூ.17 கோடி செலவில் 50 நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்படவுள்ளன. உலர்த்தும் களங்கள், கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் ஈரப்பதத்தை அளவிற்குள் கொண்டுவர இன்றியமையாத உள்கட்டமைப்புகளில் ஒன்றாகும். இதுவரை 433 உலர்த்தும் களங்கள் கட்டப்பட்டுள்ளன. கே.எம்.எஸ் 2021-2022 ஆம் பருவத்தில் 43.27 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

5.7 குறைந்தபட்ச ஆதார விலை: ஒன்றிய அரசு காரிஃப் சந்தைப் பருவம் (கே.எம்.எஸ்) 2022-2023-க்கு நிர்ணயம் செய்துள்ள குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் மாநில அரசு வழங்கும் ஊக்கத் தொகையுடன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

நெல் ரகம்	ஒன்றிய அரசின் குறைந்தபட்ச ஆதார விலை (குவிண்டால் ஒன்றிற்கு)	தமிழ்நாடு அரசு வழங்கும் ஊக்கத் தொகை (குவிண்டால் ஒன்றிற்கு)	விவசாயிகளுக்கு வழங்கப்படும் கொள்முதல் தொகை (குவிண்டால் ஒன்றிற்கு)
சன்ன ரகம்	2,060/-	100/-	2,160/-
பொது ரகம்	2,040/-	75/-	2,115/-

கடந்த ஆண்டுகளில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் ஊக்கத்தொகை விவரம்:

(ஒரு குவிண்டால் ரூபாயில்)

வ. எண்	கே.எம். எஸ்	குறைந்தபட்ச ஆதார விலை (ரூபாய்)		மாநில அரசு ஊக்க தொகை (ரூபாய்)		மொத்தம் (ரூபாய்)	
		சன்ன ரகம்	பொது ரகம்	சன்ன ரகம்	பொது ரகம்	சன்ன ரகம்	பொது ரகம்
1	2011-2012	1110	1080	70	50	1180	1130
2	2012-2013	1280	1250	70	50	1350	1300
3	2013-2014	1345	1310	70	50	1415	1360
4	2014-2015	1400	1360	70	50	1470	1410
5	2015-2016	1450	1410	70	50	1520	1460
6	2016-2017	1510	1470	70	50	1580	1520
7	2017-2018	1590	1550	70	50	1660	1600
8	2018-2019	1770	1750	70	50	1840	1800
9	2019-2020	1835	1815	70	50	1905	1865
10	2020-2021	1888	1868	70	50	1958	1918
11	2021-2022	1960	1940	100	75	2060	2015

2023 ஏப்ரல் 6]

5.8 கே.எம்.எஸ். 2022-2023 நெல் கொள்முதல் விவரம்: *நடைமுறையில் ஆண்டுதோறும் கே.எம்.எஸ் பருவமானது அக்டோபர் மாதம் 1 ஆம் தேதி முதல் தொடங்கி அடுத்த ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதியுடன் முடிவடைகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் தமிழ்நாட்டில் கே.எம்.எஸ். 2022-2023 பருவத்தில் 01.09.2022 முதல் நெல் கொள்முதல் பணியினை தொடங்க ஒன்றிய அரசு அனுமதி வழங்கியது.*

01-09-2022 முதல் 26-03-2023 வரை மாவட்ட வாரியாக நெல் கொள்முதல் செய்யப்பட்ட விவரம்:-

வ.எண்	மாவட்டத்தின் பெயர்	திறக்கப்பட்ட நெல்கொள்முதல் நிலையங்கள் எண்ணிக்கை	பயனாளிகள் எண்ணிக்கை	சன்ன ரகம்	பொது ரகம்	மொத்தம்
1	அரியலூர்	56	7760	19710.400	21306.120	41016.520
2	செங்கல்பட்டு	116	6343	52097.560	3731.480	55829.040
3	கோயம்புத்தூர்	2	239	1735.160	620.360	2355.520
4	கடலூர்	221	21968	68589.840	75905.400	144495.240
5	திண்டுக்கல்	14	967	6945.840	227.120	7172.960
6	ஈரோடு	71	10604	49132.360	29013.320	78145.680
7	கள்ளக்குறிச்சி	28	2416	9890.600	5002.080	14892.680
8	காஞ்சிபுரம்	95	4083	32887.880	3089.080	35976.960
9	கன்னியாகுமரி	10	892	16.680	5108.480	5125.160
10	கரூர்	19	1973	6391.400	3892.040	10283.440

வ.எண்	மாவட்டத்தின் பெயர்	திறக்கப்பட்ட நெல்கொள்முதல் நிலையங்கள் எண்ணிக்கை	பயனாளிகள் எண்ணிக்கை	சன்ன ரகம்	பொது ரகம்	மொத்தம்
11	மதுரை	143	9967	69278.880	3737.120	73016.000
12	மயிலாடுதுறை	173	29369	271444.880	7880.680	279325.560
13	நாகப்பட்டினம்	171	39561	187777.560	79781.040	267558.600
14	நாமக்கல்	2	143	783.480	0.000	783.480
15	பெரம்பலூர்	25	2150	6150.640	403.760	6554.400
16	புதுக்கோட்டை	189	15543	37923.760	63398.040	101321.800
17	இராமநாதபுரம்	101	1488	13673.080	48.600	13721.680
18	ராணிப்பேட்டை	37	3497	30498.920	618.520	31117.440
19	சேலம்	12	760	3825.840	12.920	3838.760
20	சிவகங்கை	65	10821	52353.080	371.920	52725.000
21	தென்காசி	42	2789	21255.360	2603.200	23858.560
22	தஞ்சாவூர்	608	93861	442082.440	272876.720	714959.160
23	தேனி	16	760	4659.400	213.680	4873.080
24	திருச்சிராப்பள்ளி	110	10995	44228.640	20022.200	64250.840
25	திருநெல்வேலி	72	3619	23116.840	5460.280	28577.120
26	திருவள்ளூர்	73	6879	57069.120	5257.280	62326.400
27	திருவண்ணாமலை	55	6133	19055.360	5645.280	24700.640

2023 ஏப்ரல் 6]

வ.எண்	மாவட்டத்தின் பெயர்	திறக்கப்பட்ட நெல்கொள்முதல் நிலையங்கள் எண்ணிக்கை	பயனாளிகள் எண்ணிக்கை	சன்ன ரகம்	பொது ரகம்	மொத்தம்
28	திருவாரூர்	522	87115	442170.320	281185.560	723355.880
29	தூத்துக்குடி	16	417	2138.120	362.760	2500.880
30	திருப்பூர்	18	911	5333.160	794.240	6127.400
31	வேலூர்	12	1477	20249.240	166.520	20415.760
32	விழுப்புரம்	68	3312	15805.160	7665.400	23470.560
33	விருதுநகர்	37	3754	18335.320	2598.720	20934.040
	மொத்தம்	3199	392566	2036606.320	908999.920	2945606.240

நடப்பு பருவத்தில் 26-03-2023 வரை 3,92,566 விவசாயிகளுக்கு ரூ.6,321.60 கோடி வழங்கப்பட்டுள்ளது. நெல் கொள்முதல் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

5.9 கொள்முதல் செய்யப்படும் இன்றியமையாப் பொருட்கள்

5.9.1 அரிசி: தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம், 2013-இன் கீழ் மத்திய தொகுப்பு ஒதுக்கீட்டிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் அரிசியினை இந்திய உணவுக் கழகத்தின் மூலம் பெற்றும், அரவை செய்து பெறப்படும் கண்டுமுதல் அரிசியினைப் பெற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொது விநியோகத் திட்டத்திற்கும் வழங்கி வருகிறது. தமிழ்நாட்டின் பொது விநியோகத் திட்டத்திற்கும் இதர அரசு நலத் திட்டங்களுக்கும் மாதத்திற்குச் சராசரியாக 3.40 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி தேவைப்படுகிறது. பொது விநியோகத் திட்டத்திற்கு ஒன்றிய அரசு ஒதுக்கிடும் அரிசி

போக, தமிழ்நாட்டின் பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவைப்படும் அரிசியை இந்திய உணவுக் கழகத்திடமிருந்து வெளிச்சந்தை விற்பனைத் திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்யப்படுகிறது. இரத்த சோகை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாட்டைப் போக்க இரும்புச்சத்து, ஃபோலிக் அமிலம் மற்றும் வைட்டமின் பி12 ஆகிய நுண்ணூட்டச் சத்துகளை உள்ளடக்கிய செறிவூட்டப்பட்ட அரிசியைப் பொது விநியோகத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டம், மதிய உணவுத் திட்டம் மற்றும் பிற நலத் திட்டங்களின்கீழ் படிப்படியாக விநியோகிக்க ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. முதற்கட்டமாக சோதனை அடிப்படையில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டம், மதிய உணவுத் திட்டம் மற்றும் பிற நலத் திட்டங்களுக்கு 01.10.2020 முதல் 31.03.2022 வரை செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகிக்கப்பட்டது. இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் 01.12.2022 முதல் செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகிக்கப்படுகிறது.

5.9.2 கோதுமை: சென்னை மற்றும் மாவட்டத் தலைமை இடங்களில் அரிசி பெறும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் 10 கிலோ வீதமும், ஏனைய பகுதிகளில் 5 கிலோ வீதமும், நியாய விலைக் கடைகளில் அரிசிக்குப் பதிலாக கோதுமை விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-இன்படி ஒன்றிய அரசு 8,532.354 மெட்ரிக் டன் என்ற அளவில் தமிழ்நாட்டிற்கு மாதந்தோறும் கோதுமை ஒதுக்கீடு செய்து வருகிறது.

5.9.3. கேழ்வரகு: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் சிறு மற்றும் குறு விவசாயிகளிடமிருந்து மட்டும் கேழ்வரகினைக் கொள்முதல் செய்து வருகிறது. நடப்பு காரிஃப் சந்தை பருவத்தில், ஜனவரி-2023 முதல் ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஆதார விலையில், கிலோ ஒன்றுக்கு ரூ35.78 என கொள்முதல் செய்யப்பட்டு, முதற்கட்டமாக நீலகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் வாழ்கின்ற அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு விருப்பத்தின் அடிப்படையில் அரிசிக்குப் பதிலாக 2 கிலோ கேழ்வரகு விநியோகிக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

கே.எம்.எஸ். 2022-23-ல் கேழ்வரகு கொள்முதல் விவரம்.

2023 ஏப்ரல் 6]

கே.எம்.எஸ்	திறக்கப்பட்ட நேரடி கொள்முதல் நிலையங்களின் எண்ணிக்கை	கொள்முதல் செய்யப்பட்ட ராகி அளவு(மெ. டன்னில்)	ஒரு கிலோவிலை (ரூபாயில்)	பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை	மொத்த தொகை வழங்கப்பட்டது (ரூபாயில்)
2022-23 (21-03-2023 வரை)	9	442.650	35.78	281	1,58,38,017

5.9.4 சர்க்கரை: தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை இணையம் வாயிலாகவும் கூடுதல் தேவை இருப்பின் திறந்த வெளிச்சந்தையில் இருந்தும், தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998 மற்றும் விதிகள், 2000-இன்படி சர்க்கரையைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் செய்து வருகிறது. பொது விநியோகத் திட்டத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றிற்கு 34,066 மெட்ரிக் டன் சர்க்கரை வழங்கப்படுகிறது. அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் சர்க்கரை கிலோ ஒன்றுக்கு ரூ.13.50 எனவும், பிற குடும்ப அட்டைதாரர்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.25/- என்ற மானிய விலையிலும் விற்பனை செய்யப்படுகிறது.

5.9.5 சிறப்புப் பொது விநியோகத் திட்டம்: வெளிச்சந்தையில் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும், ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கிடும் நோக்குடனும் 14.04.2007 முதல் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் துவரம் பருப்பு மற்றும் செறிவூட்டப்பட்ட பாமொலின் எண்ணெய் ஆகியவை அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

குடும்ப அட்டைதாரர்களுக்குச் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் துவரம் பருப்பின் மாதத் தேவை 20,000 மெட்ரிக் டன், பாமொலின் எண்ணெய் மாதத் தேவை 2 கோடி லிட்டர். அதன்படி, தேவைப்படும் பருப்பு மற்றும் பாமொலின் எண்ணெய் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற

[2023 ஏப்ரல் 6

ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998 மற்றும் விதிகள், 2000-இன்படி இணையதள வழியில் ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்முதல் செய்யப்படுகிறது. ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் தலா ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.30/- என்ற விலையிலும், பாமொலின் எண்ணெய் ஒரு லிட்டர் ரூ.25/- என்ற விலையிலும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. விற்பனை விலை போக கூடுதலாக ஏற்படும் செலவினத்தை தமிழ்நாடு அரசு மானியமாக வழங்குகிறது.

விவரம்	மாதாந்திர ஒதுக்கீடு பருப்பு (மெ. டன்னில்) மற்றும் பாமொலின் (பாக்கெட்டுகளில்)	குடும்ப அட்டைதாரர் களுக்கு வழங்கப்படும் அளவு	விற்பனை விலை பருப்பு / கிலோ மற்றும் பாமொலின் பாக்கெட் / லிட்டர்
துவரம் பருப்பு	20,000	1 கிலோ	ரூ.30/-
செறிவூட்டப்பட்ட பாமொலின் எண்ணெய்	2,00,00,000	1 லிட்டர் (910 கிராம்)	ரூ.25/-

5.10 நவீன அரிசி ஆலைகள்: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான 21 நவீன அரிசி ஆலைகளின் மாதாந்திர அரவைத் திறன் 52,500 மெட்ரிக் டன் ஆகும். 15 நவீன அரிசி ஆலைகளில் புழுங்கல் அரிசியும், 6 நவீன அரிசி ஆலைகளில் பச்சரிசியும் அரவை செய்யப்படுகிறது. நவீன அரிசி ஆலைகளில் தரமான அரிசியினை உற்பத்தி செய்வதற்கு, கருப்பு அரிசி பிரிக்கும் இயந்திரம் (கலர் சார்ட்டெர் மெஷின்) அனைத்து நவீன அரிசி ஆலைகளிலும் நிறுவப்பட்டுள்ளது.

புழுங்கல் அரிசி உற்பத்தி செய்யப்படும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான நவீன அரிசி ஆலைகளின் உற்பத்தி திறன் விவரம்:

2023 ஏப்ரல் 6]

வ. எண்	மண்டலங்கள்	நவீன அரிசி ஆலைகளின் எண்ணிக்கை	மாதாந்திர உற்பத்தித் திறன் (மெ.டன்)
1	தஞ்சாவூர்	3	7500
2	திருவாரூர்	2	5000
3	மயிலாடுதுறை	3	7500
4	கடலூர்	1	2500
5	திருச்சிராப்பள்ளி	1	2500
6	மதுரை	1	2500
7	சிவகங்கை	1	2500
8	திருநெல்வேலி	1	2500
9	திருவண்ணாமலை	1	2500
10	செங்கல்பட்டு	1	2500

பச்சரிசி உற்பத்தி செய்யப்படும் நவீன அரிசி ஆலைகளின் உற்பத்தித் திறன் விவரம்:

வ. எண்	மண்டலங்கள்	நவீன அரிசி ஆலைகளின் எண்ணிக்கை	மாதாந்திர உற்பத்தித் திறன் (மெ.டன்)
1	மயிலாடுதுறை	1	2500
2	கடலூர்	1	2500
3	கோயம்புத்தூர்	1	2500
4	திருவண்ணாமலை	1	2500
5	கள்ளக்குறிச்சி	1	2500
6	விழுப்புரம்	1	2500

5.11 அரவை ஆலை முகவர்களின் அரவைத் திறன்: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 21 அரவை ஆலைகளின்

[2023 ஏப்ரல் 6

மாத அரவைத்திறன் 52,500 மெட்ரிக் டன்; 602 அரவை ஆலை முகவர்களின் மாதாந்திர அரவைத் திறன் 9,74,991 மெட்ரிக் டன்; 140 பகுதி நேர அரவை ஆலை முகவர்களின் அரவைத் திறன் 1,45,840 மெட்ரிக் டன். அரிசியின் தரத்தை மேம்படுத்தும் வகையில், அனைத்து நவீன அரிசி ஆலைகளிலும் கலர் சார்ட்டர் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

அரவை ஆலை முகவர்களின் அரவைத் திறன் விவரம் பின்வருமாறு:

விவரம்	அரவை முகவர்களின் எண்ணிக்கை			அரவைத் திறன் (மெட்ரிக் டன்)		
	புழுங்கல் அரிசி	பச்சரிசி	மொத்தம்	புழுங்கல் அரிசி	பச்சரிசி	மொத்தம்
நிரந்தர அரவை முகவர்கள்	375	227	602	598756	376235	974991
பகுதி நேர அரவை முகவர்கள்	140	-	140	145840	-	145840
மொத்தம்	515	227	742	744596	376235	1120831

மண்டலவாரியாக அரவை ஆலை முகவர்கள் மற்றும் அவர்களின் அரவைத் திறன் விவரம் பின்வருமாறு:

வ. எண்	மண்டலங்கள்	தனியார் அரவை ஆலை முகவர்களின் எண்ணிக்கை	அரவைத் திறன் (மெ.டன்)
		மொத்தம்	மொத்தம்
1	அரியலூர்	3	7200
2	செங்கல்பட்டு	8	11900
3	சென்னை (வடக்கு)	26	64100
4	கோயம்புத்தூர்	4	2920

2023 ஏப்ரல் 6]

வ. எண்	மண்டலங்கள்	தனியார் அரவை ஆலை முகவர்களின் எண்ணிக்கை	அரவைத் திறன் (மெ.டன்)
		மொத்தம்	மொத்தம்
5	கடலூர்	8	17100
6	தருமபுரி	75	86050
7	திண்டுக்கல்	3	3900
8	ஈரோடு	32	46015
9	கள்ளக்குறிச்சி	19	27575
10	காஞ்சிபுரம்	13	24900
11	கரூர்	3	6900
12	கிருஷ்ணகிரி	55	78200
13	மதுரை	19	33075
14	மயிலாடுதுறை	4	6600
15	நாகப்பட்டினம்	6	9950
16	நாமக்கல்	1	3000
17	பெரம்பலூர்	2	10000
18	புதுக்கோட்டை	32	46250
19	இராணிப்பேட்டை	17	24750
20	சேலம்	3	3500
21	சிவகங்கை	17	20500
22	தென்காசி	23	19400
23	தஞ்சாவூர்	38	86371

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மண்டலங்கள்	தனியார் அரவை ஆலை முகவர்களின் எண்ணிக்கை	அரவைத் திறன் (மெ.டன்)
		மொத்தம்	மொத்தம்
24	தேனி	1	1000
25	திருநெல்வேலி	8	8000
26	திருப்பூர்	29	29605
27	திருவள்ளூர்	51	103130
28	திருவண்ணாமலை	10	19050
29	திருவாரூர்	26	66340
30	திருச்சிராப்பள்ளி	38	68810
31	தூத்துக்குடி	2	1800
32	வேலூர்	5	9975
33	விழுப்புரம்	10	10925
34	விருதுநகர்	11	16200
	மொத்தம்	602	974991

5.12 உள்கட்டமைப்பு மேம்படுத்துதல்

5.12.1 கிடங்குகள்: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் மொத்தம் 308 சேமிப்புக் கிடங்குகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், 14.37 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 269 கிடங்குகள் கழகத்திற்குச் சொந்தமானதாகும். மீதமுள்ள 1.69 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 39 கிடங்குகள் வாடகை அடிப்படையில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து பயன்படுத்தப்படுகிறது. பொது விநியோகத் திட்டப் பொருட்களைப் பாதுகாப்பாக சேமித்து வைப்பதை உறுதிப்படுத்தவும், அதன் சேமிப்புக் கொள்ளளவினை மேம்படுத்தவும், அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 6]

மேலும் 8 மாவட்டங்களில் வட்ட செயல்முறைக் கிடங்குகளின் கொள்ளளவை மேம்படுத்தும் வகையில், 28,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 12 புதிய வட்ட செயல்முறைக் கிடங்குகளை ரூ.54 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பயன்பாட்டில் உள்ள கிடங்குகளின் விவரம்:

வ. எண்	விவரம்	செயல்முறைக் கிடங்குகள்		கூடுதல் கிடங்குகள்		மொத்த கிடங்குகள்	
		எண்ணிக்கை	கொள்ளளவு (மெ.டன்)	எண்ணிக்கை	கொள்ளளவு (மெ.டன்)	எண்ணிக்கை	கொள்ளளவு (மெ.டன்)
1	சொந்தக் கட்டடம்	217	764318	52	673555	269	1437873
2	வாடகைக் கட்டடம் (தனியார்)	12	25450	-	-	12	25450
3	வாடகைக் கட்டடம் (கூட்டுறவுத்துறை)	4	11694	1	2500	5	14194
4	வாடகைக் கட்டடம் (த.நா. சேமிப்பு கிடங்கு)	15	46646	5	33950	20	80596
5	வாடகைக் கட்டடம் (அரசுத் துறை)	-	-	1	8500	1	8500
6	வாடகைக் கட்டடம் (மத்திய சேமிப்புக் கிடங்கு)	-	-	1	40000	1	40000
மொத்தம்		248	848108	60	758505	308	1606613

5.12.2 நெல் சேமிப்புக் கிடங்குகள்: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 2021 ஆம் ஆண்டு மே மாதம் முதல் மத்திய சேமிப்பு நிறுவனம், தமிழ்நாடு சேமிப்பு நிறுவனம்,

வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், கூட்டுறவுத் துறை மற்றும் சர்க்கரை ஆலைகளுக்குச் சொந்தமான 6.90 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 117 கிடங்குகள் வாடகை அடிப்படையில் நெல் சேமிப்பிற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

விவரம்	கிடங்குகளின் எண்ணிக்கை	கொள்ளளவு (மெ.டன்)
நெல்சேமிப்புக் கிடங்கு வாடகை அடிப்படையில்	117	6,90,525

5.12.3 மேற்கூரை அமைப்புடன்கூடிய நெல் சேமிப்பு மையம்: கொள்முதல் செய்யப்படும் நெல்லை இயற்கை இடர்ப்பாடுகளிலிருந்து பாதுகாக்க மேற்கூரை அமைப்புடன்கூடிய நெல் சேமிப்பு மையங்களை அமைத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். அதன்படி தமிழ்நாட்டில் 10 மாவட்டங்களில் 18 இடங்களில் ரூ.238.08 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் நிதியுதவியைப் பெற்று, 2,86,350 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன.

மேற்கூரை அமைப்புடன்கூடிய நெல் சேமிப்பு மையங்கள் பற்றிய விவரங்கள்

வ. எண்	மண்டலங்கள்	இடம்	மெட்ரிக் டன் கொள்ளளவு	மதிப்பிடப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்)
1	தஞ்சாவூர்	சென்னம்பட்டி	2500	2.24
		திட்டக்குடி	6000	5.60
		பிள்ளையார்பட்டி	50000	27.27
2	திருவாரூர்	திருவாரூர்	7250	4.38
		புதுக்குடி	4500	4.69
		முடிகொண்டான்	7000	7.68
3	அரியலூர்	தேலூர்	15000	13.62

2023 ஏப்ரல் 6]

வ. எண்	மண்டலங்கள்	இடம்	மெட்ரிக் டன் கொள்ளளவு	மதிப்பிடப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்)
4	புதுக்கோட்டை	அலியாநிலை	40000	35.90
		துளையானூர்	12500	11.10
5	மதுரை	கப்பலூர்	18000	13.20
6	சிவகங்கை	பள்ளத்தூர்	39600	29.18
		ஏனாத்தி	6000	6.34
		சிப்காட் (மானாமதுரை)	15000	16.25
7	திருச்சிராப்பள்ளி	இருங்களூர்	10000	5.55
		அடவத்தூர்	14000	7.11
8	தூத்துக்குடி	மீளாவிட்டன்	4000	4.18
9	மயிலாடுதுறை	இடமனல்	25000	31.25
10	திருவள்ளூர்	ஊத்துக்கோட்டை (குருபுரம்)	10000	12.50
மொத்தம்			286350	238.08

5.13 நியாய விலைக் கடைகள்: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் 1,475 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இதில் 51 கடைகள் சொந்தக் கட்டடங்களிலும், 709 கடைகள் தனியார் வாடகைக் கட்டடங்களிலும், 715 கடைகள் பிற அரசுத் துறைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்கீழ் மண்டல வாரியாகச் செயல்படுகின்ற நியாய விலைக் கடைகள் விவரம்:—

வ. எண்	மண்டலங்கள்	நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை		
		முழு நேரக் கடைகள்	பகுதி நேரக் கடைகள்	மொத்தம்
1	அரியலூர்	2	-	2
2	சென்னை (வடக்கு)	324	-	324

[2023 ஏப்ரல் 6

வ. எண்	மண்டலங்கள்	நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை		
		முழு நேரக் கடைகள்	பகுதி நேரக் கடைகள்	மொத்தம்
3	சென்னை (தெற்கு)	143	-	143
4	கோயம்புத்தூர்	54	-	54
5	தருமபுரி	32	11	43
6	திண்டுக்கல்	19	-	19
7	ஈரோடு	14	1	15
8	காஞ்சிபுரம்	32	-	32
9	செங்கல்பட்டு	2	-	2
10	கன்னியாகுமரி	102	41	143
11	கரூர்	2	-	2
12	கிருஷ்ணகிரி	34	2	36
13	மதுரை	29	-	29
14	நாமக்கல்	44	1	45
15	நீலகிரி	23	5	28
16	பெரம்பலூர்	1	-	1
17	புதுக்கோட்டை	17	3	20
18	இராமநாதபுரம்	19	-	19
19	சிவகங்கை	23	-	23
20	தென்காசி	79	87	166
21	திருநெல்வேலி	46	48	94
22	திருவள்ளூர்	6	-	6
23	திருவண்ணாமலை	3	-	3
24	திருப்பத்தூர்	22	-	22

2023 ஏப்ரல் 6]

வ. எண்	மண்டலங்கள்	நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை		
		முழு நேரக் கடைகள்	பகுதி நேரக் கடைகள்	மொத்தம்
25	திருப்பூர்	6	-	6
26	திருச்சிராப்பள்ளி	20	-	20
27	தூத்துக்குடி	82	26	108
28	வேலூர்	36	-	36
29	விருதுநகர்	31	3	34
	மொத்தம்	1247	228	1475

5.14 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வழங்கும் பிற சேவைகள்

5.14.1 அமுதம் பல்பொருள் அங்காடிகள்: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் அன்றாடம் தேவைப்படும் நுகர்பொருட்களை நியாயமான விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்யும் நோக்குடன் 90 அமுதம் பல்பொருள் அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன.

5.14.2 பெட்ரோல்/டீசல் விற்பனை நிலையங்கள்: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கடலூர் மண்டலத்தில் நெய்வேலியிலும், திருப்பத்தூர் மண்டலத்தில் திருப்பத்தூரிலும், தஞ்சாவூர் மண்டலத்தில் பட்டுக்கோட்டையிலும் பெட்ரோல்/டீசல் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது.

5.14.3 சமையல் எரிவாயு விநியோக நிலையங்கள்: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், திருச்சிராப்பள்ளியிலும், திருவண்ணாமலை மண்டலத்தில் ஆரணியிலும், இராமநாதபுரம் மண்டலத்தில் இராமேஸ்வரம் மற்றும் மண்டபத்திலும் சமையல் எரிவாயு விநியோக நிலையங்களை நடத்தி வருகிறது.

5.14.4 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள்: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்கீழ் 36 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் பொது விநியோகத் திட்டத்திற்காக செயல்பட்டு வருகின்றன.

வ. எண்	மண்ணெண்ணெய் வழங்கும் நிலைய விவரம்	எண்ணிக்கை
1.	மொத்த விற்பனை நிலையம்	02
2.	மொத்த /சில்லரை விற்பனை நிலையம்	05
3.	சில்லரை விற்பனை நிலையம்	29
மொத்தம்		36

5.14.5 அம்மா உணவகத்திற்கு உணவுப் பொருட்கள் வழங்குதல்: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் அம்மா உணவகங்களுக்கு அரிசியும், சென்னை மாவட்டத்தில் செயல்படும் அம்மா உணவகங்களுக்கு அரிசி மற்றும் கோதுமையும் விநியோகித்து வருகிறது.

வ. எண்	ஆண்டு	அரிசி (மெ.டன்)	கோதுமை (மெ.டன்)
1	2022-2023 பிப்ரவரி 2023 வரை	5782.233	735.980

5.15 இதர சேவைகள்

5.15.1 அரசு உப்பு விற்பனை: பொது மக்களின் பயன்பாட்டிற்குச் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு (RFF Salt) மற்றும் அயோடின் கலந்த கல் உப்பு (CIS Salt) ஆகிய இரண்டு வகையான உப்புகள் தமிழ்நாடு உப்பு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நியாய விலைக் கடைகளில் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு (RFF Salt) ஒரு கிலோ பாக்கெட் ரூ.10/-க்கும், அயோடின் கலந்த கல் உப்பு (CIS Salt) ஒரு கிலோ பாக்கெட் ரூ.8/-க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

5.15.2 ஊட்டித் தேயிலை மற்றும் டான் டீ: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள் மற்றும் அமுதம் பல்பொருள் அங்காடிகளில் ஊட்டித் தேயிலைத் தூள்

2023 ஏப்ரல் 6]

100 கிராம் பாக்கெட் ஒன்று ரூ.22/- என்ற விலையிலும், டான்டீ தூள் 100 கிராம் பாக்கெட் ஒன்று ரூ.21/- என்ற விலையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

5.15.3 ஆவின் நெய் விற்பனை: *தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள் மற்றும் அமுதம் பல்பொருள் அங்காடிகளில் ஆவின் நெய் ரூ.75/- (100 மி.லி) என்ற விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.*

5.16 தரக் கட்டுப்பாட்டுப் பிரிவு: *உணவுப் பொருட்களின் தரத்ினை மிகுந்த கவனமுடன் கண்காணித்து விநியோகிக்கப்படுகிறது. அரசின் தர நிர்ணயப்படி அனைத்து நிலைகளிலும் பகுப்பாய்வு செய்து, கொள்முதல் செய்யும் பொருட்களின் தரம் உறுதி செய்யப்படுகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளில் நெல், அரிசி, கோதுமை, சர்க்கரை, கேழ்வரகு, துவரம் பருப்பு, மற்றும் பாமொலின் எண்ணெய் ஆகியவை முறைப்படி சேமிக்கப்படுகிறது. மேலும், அரசின் வழிகாட்டுதல்படி, கிடங்கில் பெறப்படும் பச்சரிசியின் கால அளவை ஆய்வு முறையில் கண்டறிந்து, புதியதாக அரவை செய்யப்பட்ட பச்சரிசியை மட்டும் கிடங்கினில் இறக்கம் செய்ய அனுமதிக்கப்படுகிறது. அக்மார்க் தர நிர்ணயத்தில் கொள்முதல் செய்யப்பட்ட துவரம் பருப்பு மட்டுமே கிடங்கில் இறக்கப்பட்டு, பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது.*

இயல் - 6

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

6.1 தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் அறிவியல் முறையில் சிறந்த கட்டுமானத்தை ஏற்படுத்தி வேளாண் பொருட்களின் தரம் மற்றும் அளவினைப் பாதுகாத்திடும் பொருட்டு, விவசாயிகள் மற்றும் விவசாயத்தைச் சார்ந்த வர்த்தக நிறுவனங்களும் பயன்பெறும் வகையில் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது 02-05-1958 முதல் விவசாய உற்பத்திச் சட்டம் 1956-இன்படி தோற்றுவிக்கப்பட்டு, தற்பொழுது சேமிப்புக் கிடங்குகள் சட்டம் 1962-இன்படி

[2023 ஏப்ரல் 6

செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் முறையே 50 விழுக்காடு பங்குகளைக் கொண்ட இரு பங்குதாரர்கள் ஆவர்.

6.2 நிறுவன அமைப்பு: தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் முக்கிய முடிவுகள் அனைத்தும் மாநில அரசின் சார்பில் அதன் தலைவர் உள்ளிட்ட 6 பிரதிநிதிகளும், ஒன்றிய அரசின் சார்பில் 5 பிரதிநிதிகளும் அடங்கிய இயக்குநர் குழுவால் எடுக்கப்படுகின்றன. மண்டல மேலாளர்களின் கண்காணிப்பின்கீழ் ஒவ்வொரு சேமிப்புக் கிடங்கும், சேமிப்புக் கிடங்கு மேலாளர்களின் கட்டுப்பாட்டின்கீழ் துணைப் பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. மேட்டுப்பாளையம், காஞ்சிபுரம், கடலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகியவற்றைத் தலைமையிடமாகக் கொண்டு 7 மண்டல அலுவலகங்கள் மூலம் அந்தப் பகுதியில் உள்ள சேமிப்புக் கிடங்குகள் நிர்வகிக்கப்படுகின்றன. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன மேலாண்மை இயக்குநரின் கண்காணிப்பின்கீழ் சேமிப்புக் கிடங்குகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்துச் செயல்படுத்திட, 7 மூத்த நிலை உதவிப் பொது மேலாளர்கள் தலைமை அலுவலகத்தில் உள்ளார்கள். தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் 269 கிடங்குகள் 60 இடங்களில் 656 பணியாளர்களைக் கொண்டு நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

6.3 கிடங்குகளின் கொள்ளளவு: இந்நிறுவனக் கிடங்குகளில், விவசாயிகள்/வியாபாரிகளின் விவசாய விளைபொருட்கள், விதைகள், உரங்கள் மற்றும் அரசு நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களால் சேமிக்கப்படும் பொருட்களை இருப்பில் வைத்திட தற்சமயம் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது 7.60 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவில் 60 இடங்களில் 269 சொந்த சேமிப்புக் கிடங்குகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது கடந்த 2021-22 ஆம் நிதியாண்டில் சராசரியாக 84 விழுக்காடு பயனீட்டு அளவில் ரூ.84.52 கோடி வருமானம் ஈட்டியுள்ளது. மேலும் நடப்பு நிதியாண்டில் பிப்ரவரி 2023 வரை, இந்நிறுவனத்தின் மாதாந்திர சராசரி பயனீட்டு அளவு 77 விழுக்காடு அளவே இருப்பினும், ரூ.85.71 கோடி வருமானம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், தொடர்ந்து அனைத்து சேமிப்புக்

2023 ஏப்ரல் 6]

கிடங்குகளிலும் பயனீட்டு அளவை அதிகரிக்கும் பொருட்டு சேமிப்புக் கட்டணத்தில் அரசு நிறுவனங்கள், அரசுக் கழகங்கள் மற்றும் முக்கிய தனியார் சரக்கு வைப்பாளர்களுக்குத் தள்ளுபடி சலுகை தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது.

6.4 தரக் கட்டுப்பாடு நடவடிக்கைகள்: *தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது சேமிப்பு மற்றும் சரக்குகளின் தரத்தினை முறையாகப் பாதுகாத்துச் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் நீண்ட அனுபவத்துடன் நவீன தொழில்நுட்பமுறை மூலம் அறிவியல் முறையில் சரக்குகளைப் பாதுகாத்திட, தடுப்பு முறை மூலம் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. விவசாயப் பொருட்களில் சரக்கு இழப்பு மிகவும் குறைவாக இருக்கும் வகையில் பராமரித்திடவும், இந்நிறுவனம் பணியாளர்களுக்குப் பூச்சி மருந்துகளைப் பயன்படுத்துவது குறித்தும் உரிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் தொடர்ந்து காலமுறைப்படி சரக்குகளைக் கண்காணித்து, பூச்சிகள் தாக்காத வண்ணம் பராமரித்ததன் பயனாக, கடந்த 2022-23 ஆம் நிதியாண்டில் சேமிப்பு இழப்பானது அனுமதிக்கப்பட்ட இழப்பான 0.5 விழுக்காட்டினைக் காட்டிலும் குறைந்தபட்ச அளவான 0.03 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.*

6.5 பூச்சித் தடுப்பு நடவடிக்கைகள்: *தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், பிற நிறுவனங்களிலும் பூச்சித் தடுப்புச் சேவைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனம் பூச்சிக் கட்டுப்பாடுச் சேவைகளான எலித் தொல்லை, கரையான் தொல்லை, கொசுத் தொல்லை மற்றும் கட்டுமானப் பணிக்கு முந்தைய மற்றும் பிந்தைய கரையான் பூச்சித் தடுப்பு பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. 2022-2023 ஆம் நிதியாண்டில் இந்நிறுவனம் ரூ.66.51 இலட்சம் மதிப்பிற்குப் பூச்சித் தடுப்புப் பணி மேற்கொண்டுள்ளது. அத்தொகையில் ரூ.30.14 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஈட்டிய வருமானத்தில் இந்நிறுவனத்தின் நிகர வருவாய் ரூ.13.26 இலட்சமாகும்.*

6.6 நிதிநிலை செயலாக்கம்: *2021-2022 ஆம் நிதியாண்டில் இந்நிறுவனத்தின் மொத்த நிகர இலாபம் ரூ.22.23 கோடியாகும். தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது தமது இரு பங்குதாரர்களான தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனத்திற்கு நிகர இலாபத்தில் 30 விழுக்காட்டில் 50 விழுக்காடு தொகையை 2021-2022 ஆம் நிதியாண்டிற்கான*

ஆதாயப் பங்கின் முன்தொகையாக ரூ.3.33 கோடி வழங்கப்பட்டுள்ளது.

6.7 மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு இரசீதுகள் மூலம் கடன் வழங்குதல்: தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்குச் சொந்தமான 60 சேமிப்புக் கிடங்குகளில் வேளாண் பொருட்களைச் சேமிக்கும் 58 சேமிப்புக் கிடங்குகள் அனைத்தும் சேமிப்புக் கிடங்கு வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது, மாநில அளவில் அதிக எண்ணிக்கையிலான சேமிப்புக் கிடங்குகளைக் கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்திடம் பதிவு செய்ததற்காக முதல் பரிசைப் பெற்றுள்ளது. இந்நிறுவனம் விவசாயிகளிடையே மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு இரசீதுகளின் பயன்பாடு மற்றும் கடன் பெறும் வசதி குறித்துப் பெரிய அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தி உள்ளது. 2022-2023 ஆம் நிதியாண்டில் இந்நிறுவனம் பல்வேறு சரக்கு வைப்பாளர்களுக்கு, 50 மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு இரசீதுகளை வழங்கி அதனை வங்கிகளில் அடமானம் வைத்ததன் மூலமாக வைப்பாளர்கள் ரூ.16.71 கோடி கடன் பெற்றுப் பயன்பெற்றுள்ளனர்.

6.8 கட்டுமானம்: தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் கிடங்கு செயல்திறனை அதிகரிக்கும் வகையில் நடப்பு நிதியாண்டில் (2022-2023) நவீன கட்டுமானத்தில் மூன்று புதிய 3400 மெ.டன் கொள்ளளவு கொண்ட கூடுதல் கிடங்குகள் முறையே ஒவ்வொன்றும் ரூ.2.4 கோடி செலவில் புதுக்கோட்டை, திருமங்கலம் மற்றும் இராணிப்பேட்டை சேமிப்புக் கிடங்கு வளாகத்தில் கட்டப்பட்டு வருகின்றன.

6.9 2022-2023 ஆம் ஆண்டின் சாதனைகள்:

i. புது தில்லியில் உள்ள கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையம், தேசிய அளவில் அனைத்து மாநில சேமிப்புக் கிடங்கு நிறுவனங்களில் கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தின்கீழ் அதிக எண்ணிக்கையிலான சேமிப்புக் கிடங்குகளைப் பதிவு செய்ததற்காக தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கு முதல் பரிசை வழங்கியது.

ii. *கணினிமயமாக்கல் மூலம் கணக்கியல் உள்ளீடுகள் மற்றும் மின்-ஆளுமை நடைமுறை தலைமை அலுவலகம், மண்டல அலுவலகங்கள் மற்றும் அனைத்து சேமிப்புக் கிடங்குகளிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.*

முடிவுரை

அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் அனைத்து மக்களுக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ததோடு, தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கும் உறுதுணை புரிந்துள்ளது. அனைவருக்கும் மேலும் சத்தான உணவை வழங்கிட ஏதுவாக அரிசி மற்றும் துவரம் பருப்புடன், சிறுதானியங்களைக் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கிட அரசு முயற்சிகளை மேற்கொள்ளும். சர்வதேச சிறுதானிய ஆண்டாக 2023 அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் சிறுதானியங்களில் ஒன்றான கேழ்வரகு தருமபுரி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் குடும்ப அட்டைதாரர்களுக்குத் தலா இரண்டு கிலோ அரிசிக்குப் பதிலாக விநியோகிக்கப்படும். பொது விநியோகத் திட்ட அங்காடிகளின் தோற்றத்தைப் பொலிவுள்ளதாக்கி, அதன் வசதிகளைப் பெருக்கி, குடும்ப அட்டைதாரர்களை மகிழ்ச்சிக்குள்ளாக்கும் வகையில் சேவைகள் மேம்படுத்தப்படும். ஊட்டச்சத்து மற்றும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்து, தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்குத் தொடர்ந்து பாடுபடுவதில் நமது அரசும், துறையும் முனைப்பாக உள்ளன.

———

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the
Tamil Nadu Legislative Assembly Rules and
printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.